# ராமோஜியம்

இரா. முருகன்

நாவல்

# ராமோஜியம்

## இரா. முருகன்

# இரா. முருகன்

இரா. முருகன், 1953 ஆகஸ்ட் 28 அன்று பிறந்தார். தந்தை என்.எஸ்.ராமசாமி, தாய் மீனாட்சி. இரா. முருகனின் முதல் கவிதை 1977ஆம் ஆண்டும், முதல் சிறுகதை 1984ஆம் ஆண்டும் கணையாழியில் வெளியானது. தொடர்ந்து நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், ஐந்து நாவல்கள், ஒரு கவிதைத் தொகுப்பு, தகவல் தொழில்நுட்பம் குறித்த இரண்டு புத்தகங்கள், இரண்டு தொகுப்பு நூல்கள் மற்றும் ஏராளமான கட்டுரைகள் எழுதியுள்ளார். மலையாளத்தில் இருந்து தமிழுக்குக் குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகளை செய்துள்ளார். இவரது பல படைப்புகள், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கதா விருது, இலக்கியச் சிந்தனை விருது, திருப்பூர் தமிழ்ச் சங்கம் விருது, லில்லி தேவசிகாமணி விருது உள்பட பல்வேறு விருதுகள் பெற்றுள்ளார். ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்து அண்மையில் ஓய்வு பெற்ற முருகன், தற்போது சென்னையில் வசித்து வருகிறார்.

email id: eramurukan@gmail.com

சமர்ப்பணம்

# என் நண்பர் கிரேசி மோகனுக்கு

# உள்ளே


முன்னுரை

1. யட்சன் வந்த மதறாஸ் – 1940

2. ராமோஜி ஏ.ஆர்.பி வார்டனான 1941 மதறாஸ்

3. ராமோஜி நகர் நீங்காத 1942 மதறாஸ்

4. ராமோஜி தெலக்ஸ் புவனாளை தரிசித்த 1942 சென்னை

5. ஜப்பான் விமானம் குண்டு போட்ட இரவு– 1943 மதறாஸ்

6. ராமோஜியின் திருப்பதி பாத யாத்திரை – 1944 மதறாஸ்

7. ராமோஜியும் ரத்னாவும் டெல்லி பயணம் – 1944

8. பீமாராவ் வீட்டில் விருந்து வந்த ராமோஜி – 1944 டில்லி

9. ராமோஜி, ரத்னா காதல் அரும்பிய 1935 கும்பகோணம்

10. ராமோஜி–ரத்னா கல்யாணம் – 1937 மதறாஸ்

11. ஆறாம் ஜார்ஜ் மன்னருக்கு விட்டோபா லிகிதம் – 1945

12. மதறாஸ் ரேடியோவுக்கு ராமோஜி கடிதம் – 1945

13. ராமோஜி, ரத்னா திருக்கருகாவூர் யாத்திரை – 1945

14. சகலநேசனில் தகவல் வந்த 1946 மதறாஸ்

15. ராமோஜி ஆங்கரே – சுவர்ணதுர்க்கம் – 1698

16. காரைக்கால் புவனியின் அற்புத சரித்திரம் – 1698

17. ராமோஜி ஆங்கரே – எலிப்பொறிச் சத்திரம் – 1707

18. துபாஷ் ராமோசி ராயன் 1745 புதுச்சேரி – சில குறிப்புகள்

19. ராமோஜி கண்ட ‘இது முடிவு இல்லை’ – கும்பகோணம் 1947

20. பின்கதை

அருஞ்சொற்பொருள்

# முன்னுரை

பொடி என்று ஒரு சிறுகதை எழுதினேன். இதை எழுதுகிற தேதிக்கு ஏழெட்டு மாதங்களுக்கு முன் எழுதியது அது. ஏன் எப்படி என்றெல்லாம் தெரியாது. 1930-களின் சென்னை. அங்கே, ராமோஜி என்ற தஞ்சாவூர் மராட்டா இளைஞன். அவன் கல்யாணம் செய்துகொள்ளும் ரத்னா பாய் என்ற அதிரூப சுந்தரி. ரத்னாவின் மூக்குப்பொடி பழக்கம், பொடி டப்பாவைத் தேடிய முதலிரவு என்று அந்தக்கதை தானே வளர்ந்து சமர்த்தாக, ஆபீஸ் விடுமுறை அறிவிக்கப்பட்ட ஒரு பகலில் கச்சிதமாக முடிவடைந்தது.

கதை 'தி ஹிந்து' பத்திரிகையின் தமிழ்ப் பதிப்பு வெளியிட்ட பொங்கல் மலர் ஜனவரி 2020-ல் பிரசுரமாகிப் பரவலாக வாசிக்கப்பட்டது.

என் நண்பரும், அஷோக் நகரில் அடுத்த தெருக்காரரும், ஓய்வு பெற்ற சென்னை விவேகானந்தா கல்லூரி முதல்வருமான டாக்டர் வ.வே.சு கதையைப் படித்துவிட்டு என்னிடம் கேட்டார் - மீதி அத்தியாயம் எல்லாம் எங்கே சார்?

புரிந்தது. ராமோஜி சிறுகதைக்குள் வைத்து அடைக்க வேண்டிய கதாபாத்திரம் இல்லை. ஒரு நாவல் பரப்பில் நீள நெடுக நடை போட வேண்டியவன். ராமோஜியும், ரத்னாபாயும் காலங்கள் தோறும் பிறந்து வருவதும் நிறை குறைகளோடு முழு வாழ்க்கை வாழ்வதும் மடிவதும் பிறந்து எழுவதும் விரிவாக, ஒரு நாவலின் தளத்தில் நிகழ்த்த வேண்டியவை என்பதை உணர்ந்தேன்.

ராமோஜியம் நாவலின் தலைக்காவேரி பொடி என்ற சிறுகதை ஆனது இந்த விதமாகத்தான். எழுத ஆரம்பித்தபோது என் நிரந்தரமான மயக்கவெளியான 1930-1940 கால கட்டத்தை பெரும்பாலான நாவல் பகுதிகள் நிகழும் காலமாகவும், சென்னையை, நிகழும் களமாகவும் ஏற்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தேன். பழைய கல்கி வார இதழ்களும், கல்கியின் புனைவு, அபுனைவு, தேவனின் துப்பறியும் சாம்பு, ராஜத்தின் மனோரதம் போன்ற புதினங்களும், புதுமைப்பித்தனின் சிறுகதைகளும் காட்டும் சமீபமான ஆனால் தொலைவில் இருப்பதாக மயங்க வைக்கும் காலமும் களனும் அது.

பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டுகளிலும் ராமோஜியும் ரத்னாவும் அந்தந்தக் காலத்து ஆசாபாசங்களோடு ஜீவித்து இருந்திருப்பார்கள் என்பதையும் சொல்ல நினைத்தேன். ராமோஜி இணையற்ற கடற்படைத் தலைவன் கனோஜி ஆங்கரேயின் கப்பல் படையில் சேர்ந்து மேற்குக் கடற்கரையில் சுவர்ணதுர்க்கத்தில் ராமோஜி ஆங்கரே ஆவது அப்படித்தான். அடுத்த நூற்றாண்டில் புதுச்சேரியில் துபாஷ் ஆனந்தரங்கம் பிள்ளையின் பிரியத்துக்கு உரியவனாக, பிரஞ்சு கவர்னர் தியூப்ளேயை பரிச்சயம் செய்து கொள்வதும், ஒரு நாட்டிய நாடகத்தை அரங்கேற்ற முனைந்து செயல்படுவதும் சுபாவமாக நாவலுக்குள் வந்தன.

இருபதாம் நூற்றாண்டு மதறாஸோடு, இரண்டாவது உலக மகா யுத்த காலமும் இந்த வாழ்க்கை இழைகளில் கலந்து வருகின்றது. சென்னையோடு கும்பகோணமும் கதையில் அவ்வப்போது களனாகிறது. ஏன், தி.ஜானகிராமனின் மோகமுள் கதாபாத்திரங்களின் சாயலில் சிலவும் வந்து போகின்றன. எல்லாம் சேர்ந்ததுதான் என் கனவுக் காலம். ராமோஜியம் காலம்.

என் நாவல்களில் பெரும்பாலும் விரிவாகக் கையாளப்படும் மாந்திரீக யதார்த்தம் ராமோஜியத்தில் கொஞ்சம் போல மட்டும் வரும். நேரடியான, சிக்கலில்லாத நடையில், கிட்டத்தட்ட பயோ பிக்ஷன் போல, எனினும் புனைவு மிக அதிகமும், கதைவெளியை சிருஷ்டிக்கவும், அசல் போல் புனைவைச் சித்தரிக்கவும் கொஞ்சம் வரலாறும் கலக்கிறது. எங்கே வரலாறு முடிந்து கதை தொடங்குகிறது அல்லது தொடர்கிறது என்பது விடை கிட்டாத கேள்வியாகவே இருக்கட்டும்.

ராமோஜியோடும் ரத்னாவோடும் நானும் அந்தக் காலக் கும்பகோணத்திலும், சென்னைத் தெருக்களிலும், இருநூறு வருடம் முந்திய புதுவை வீதிகளிலும், முன்னூறு ஆண்டு முன், மரக்கலங்கள் கூட்டமாகப் பயணப்பட்ட அரபிக்கடல் பெருநீர்ப் பரப்பிலும் அலைந்து திரிந்தேன். படிக்கும் வாசகர்களும் அதையெல்லாம் உணர்ந்து ரசிக்க அழைக்கிறேன். உங்கள் இலக்கியப் பசிக்கு ‘போன் அபிதெ’ சொல்லி ராமோஜியம் சமர்ப்பிக்கப் படுகிறது.

கிருஷ்ணார்ப்பணம்.

இரா.முருகன்
சென்னை
ஜூன் 6, 2020

ஒன்று

# யட்சன் வந்த மதறாஸ் – 1940

நா வல் மரத்தின் கிளையில் உட்கார்ந்திருந்த யட்சன் ‘இந்தக் கதையை எழுதிவிட்டு வேறே வேலை பார்’ என்று சொன்னான். நான் மரத்தடியில் பழம் கிடக்கிறதா என்று பார்க்கப் போனபோது அவன் லாலலா என்று கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்கியபடி என்னை அழைத்தான் – ‘ராமோஜி, ஓ ராமோஜி! சற்றுக் கவனி.’

‘எனக்குத் தமிழ் சரியாகப் பேசவே தெரியாதபோது என்னத்தை எழுத?’, என்று கேட்டேன் தரையில் உதிர்ந்து விழுந்த நாவல் பழத்தைப் பொறுக்கியபடி.

‘எல்லாம் செய்யலாம், நான் உதவி செய்யறேன், எழுது’, என்றான் யட்சன். நாவல் பழத்தின் இனிப்பு வாயில் கரைந்து துவர்ப்பு நாக்கில் படிய மென்றபடி, ‘சரி’ என்றேன்.

எங்கள் வம்சத்தில் தடுக்கி விழுந்தால் ஒரு ராமோஜி வருவதைப் பார்க்கலாம். ஒவ்வொரு இருபது வருஷத்திலும் தம்பதி யாராவது தடுக்கிப் படுக்கையில் ஜோடியாக விழுந்து ஒரு ராமோஜி பிறக்காமல் இருந்ததில்லை. சிரமமில்லாமல் அடையாளம் கண்டுகொள்ள ஒவ்வொரு ராமோஜிக்கும் ஏதாவது விசேஷமாகப் பெயரோடு வரும். நான் பொடி ராமோஜி.

அநேகமாக எல்லா ராமோஜிக்கும் தகப்பன் பெயர் பத்துஜி என்ற பத்மநாபராவ் ஆக இருப்பதும் வாடிக்கை. பொடி ராமோஜி ராவான என்னுடைய ஆசைப் பெண்டாட்டி ரத்னா பாய். அவள் ராத்திரி ஒன்பதரை மணிக்குத் தொடங்கி ஏகதேசம் நடுராத்திரிவரை என் அருகிலிருந்து சல்லாபமாக வார்த்தை சொல்வதில் ஆச்சரியம் எதுவும் இருக்க முடியாதுதான். பேசி, விளையாடி முடித்துக் களைத்து, நாலு இலவம்பஞ்சுத் தலகாணியும் பஞ்சு மெத்தையுமான ரெட்டைக் கட்டில் படுக்கையில் உறங்கப் போவோம்.

அவள் சுகமாக நித்திரை போக மூக்கு அடைப்பு இடைஞ்சல் செய்தது. அது நிவர்த்தியாக, ரத்னாவின் தீர்க்கமான எள்ளுப்பூ நாசியில் உறிஞ்சிட நான்

ஜார்ஜ் டவுனில் பட்டணம் பொடி வாங்கி வந்ததை யாரோ விஷமக்காரன் அகடவிகடமான கதையாக எழுதப்போய் ஊரோடு பெரிய ஜனக்கூட்டம் ராமோஜி கதையை முழுசாகக் கேட்கிறது என்பதை யட்சன் சொல்லாமலேயே அறிவேன். எழுத எழுத ஊற்று மாதிரி இது ஊறி வரலாம்.

இருநூறு வருஷத்தில் பத்து ராமோஜிகளாவது பிறந்து சுவாசித்திருக்கலாம். அடுத்த ராமோஜிகள் வந்துகொண்டிருக்கலாம். எல்லோருடைய ராமோஜி கதைகளும் ஒன்றாக, இது என் ராமோஜியம்.

நான் கேட்டது, பார்த்தது, கேட்டவர்களும் பார்த்தவர்களும் சொல்லக் கேட்டது என்று கலந்து வரும் இந்த ராமோஜியம். சரித்திரப் புத்தகம் மாதிரி காலம் 1859, 1894, 1921, 1935 என்று வரிசையாகக் கடந்து போகும் வருஷங்களாக நம்பர் போட்டு வராது. முன்னே பின்னே வர சாத்தியமுண்டு. கூறியது கூறலும் ஏற்படலாம்.

இதை நம்புவதும் நம்பாததும் அவரவர் இஷ்டம். நடந்ததும் நடக்காததும் எதெல்லாம் என என்னிடம் கேட்டால் எதுவும் தீர்மானமாகச் சொல்லமுடியாது. ஆனாலும் ஆரம்பம் முதல் கடைசி வரை ஒரு ராமோஜி உண்டு.

நான் என் முப்பதாம் வயதில் இதை எழுதுகிறேன். இப்போது நடப்பது உலகமகா யுத்தக் காலம். இரண்டாவது உலகமகா யுத்தம் இது.

‘இதற்கப்புறம் நகரும் கதையை உத்தேசித்தால் சொல்லலாம்தானே’, யட்சன் கேட்டான்.

‘எதிர்காலம் ரொம்ப வேண்டாமே, அது தெரிந்தால் என்ன சுவாரசியம்’, என்றேன்.

எழுதும்போது அது இறந்த காலமாகியிருக்கும் என்றபடி நாவல் மரம்விட்டுப் பறந்தான் யட்சன்.

பெருமாள் செட்டி கடையில் காகிதம், நோட்டுப் புத்தகம் வாங்கினேன். கட்டைப் பேனா ரெண்டும் மசிக்கூடும், நீல மசிப்பொடியும் ப்ராட்வே சுப்பராயுலு நாயக்கர் கடையில் வாங்கினேன். ராமாமிர்தம் சீவல் கடையில் ஒரு பெரிய கிளாஸ் ரோஸ்மில்க் குடித்து சிரம பரிகாரம் செய்துகொண்டேன்.

லட்சுமண ஆசாரியாரிடம், முன்னே வைத்து சம்மணம் கொட்டி இருந்து எழுத ஒரு கணக்கப்பிள்ளை மேஜை பண்ணித் தரச் சொன்னேன். தேக்கில் வேணுமா, தேவதாரு மரமா, பல மரம் கலந்து வேணுமா என்று ஆசாரியார் கேட்க, என்னத்தை சொல்ல? மேஜைக்குள் காகிதம் வைக்க, பாதுகாப்பாகப் பணம் பூட்டி வைக்க, மசிப்புட்டி, விசிறி வைக்க என்றெல்லாம் ஏற்படுத்தி முன்னும் பின்னும் நகரும் தடுப்பு வேண்டியிருக்குமா என்றும் அவர் விசாரித்தார். கணக்கப்பிள்ளை மேஜையில் இத்தனை சூட்சுமம் இருக்குமென்று தெரியாமல் போனதே.

ரத்னா பாயிடம் கேட்டபோது எழுத மட்டுமான மேஜை போதும் என்று சொல்லிவிட்டாள். மேலும் தேக்கு செலவு பிடிக்கும் என்றாள். பொடி டப்பா அடைத்து சூரத்தில் இருந்து வந்த ஏழெட்டு லேசான மரப் பெட்டிகள் வீட்டு சேந்தியில் உண்டு. அதை எல்லாம் உபயோகித்து லேசான, அழகான கணக்குப்பிள்ளை மேஜை ஒன்றில்லை, ரெண்டு செய்யலாம் என்றாள் அவள்.

பார்க்க அத்தனை நேர்த்தியாக இருக்காதே, இருந்துகொண்டு எழுத சௌகரியப்படாதே, பொடி வாடை அடிக்குமே என்றேன். ரத்னா பாய் கேட்டாள் –

‘வாடை அடித்தால் என்ன போச்சு? நேர்த்தியாக இல்லை என்றால்தான் என்ன போச்சு? கணக்கப்பிள்ளை ஆள் அழகாக இருக்கிறாரா என்று பார்த்தா செட்டிமார் கடையில் கணக்கெழுத வேலைக்கு வைக்கிறார்கள்? மேஜை நேர்த்திக்கு யார் சர்ட்டிபிகேட் தரணும்? சௌகர்யப்பட என்ன இருக்கு? மேஜைமேல் குப்புறப்படுத்து யாரும் தூங்கப் போறதில்லே. முன்னால் உட்கார்ந்து காகிதம் வைத்து எழுத இடம் இருந்தால் போதும். அதுக்கு எதுக்கு தேவைக்கு அதிகமா செலவு செய்யணும்?’

அதுவும் சரிதான் என்று பட, லட்சுமண ஆசாரியாரிடம் சொன்னேன். முன்கூலி ஐந்து ரூபாயும் தந்தேன். பொடி அடைத்து வந்த காலி மரப்பெட்டிகளும் ஏழெட்டு நீண்ட ஆணிகளும் அவருடைய வாள்பட்டறைக்கு எடுத்துப் போகப்பட்டன. கொடுத்து ஒரு மாதம் நடையாய் நடந்து ஒரு வழியாக மேஜை வந்தது. மேஜைகள் வந்தன.

சும்மா சொல்லக் கூடாது. சௌகரியமான மேஜைதான். ரத்னா பாய் பட்டணம் பொடியோடு உட்கார்ந்து நூறு பக்க நோட்டில் முதல் பக்கம் முழுக்க ஸ்ரீராமஜெயமும் மற்ற ஸ்லோகங்களும் எழுதி ஆரம்பித்துத்தர, அடுத்த பக்கத்திலிருந்து எழுத ஆரம்பித்து விட்டேன்.

★★★

இரண்டு

# ராமோஜி ஏ.ஆர்.பி. வார்டனான 1941 மதறாஸ்

வி டிந்தபோதே ஒரே சத்தம்.

நான், இதேதடா மனுஷரை உறங்க விடமாட்டேன் என்று சேர்ந்து வந்து தொந்தரவுபடுத்துகிறார்களே என்று அலுத்தபடி எழுந்து, வாசல் பக்கம் ஜாக்கிரதையாக நகர்ந்தேன்.

வண்ணாரப்பேட்டையிலிருந்து சொந்த வீட்டுக்கு புரசைவாக்கத்தில் வந்து குடியேறியது சப்த ரூபமான தொந்தரவுகளும் கொசுவும் குறைவாக இருக்குமே என்பதால்தான். இங்கேயும் அது ரேஷனில்தான் கிட்டுமோ.

கதவைத் திறக்காமல் ஜன்னலில் கறுப்புக் காகிதம் ஒட்டியது லேசாகக் கிழிந்திருந்த இடைவெளியில் வெளியே பார்த்தேன். மத்தள நாராயண ராவும், பூதலிங்க முதலியார் வகையில் பட்ட சுபாங்கி அம்மாள், சோமசுந்தரம் பிள்ளை மருமகன், இன்னும் பரிச்சயமில்லாத ரெண்டு இளந்தாரிப் பையன்களும், அடுத்த தெருக்காரர்களான பெரியவர்கள் ஏழெட்டுப் பேரும் வாசலில் வந்து பாடிக்கொண்டும் வாத்தியம் வாசித்துக்கொண்டும் இருந்தார்கள்.

எப்படி இந்த இருட்டு விலகாத நேரத்தில் அதி சுறுசுறுப்பாக இத்தனை பேர் திரிந்துகொண்டிருக்கிறார்கள்? இவர்களுக்கு வாய்த்தது வேறே மாதிரி மணி காட்டும் கடியாரமா?

‘எனக்கு சள்ளைக்கடுப்பு... ஜூரம் என்று சொல்லி அவங்களை அனுப்பிவிடு’ என்று சாத்வீகமாகச் சொன்னேன், குளித்துவிட்டு பூஜைக்கு எடுத்த பூச்சரத்தோடு வந்த ரத்னா பாயிடம்.

‘எம்பாவாய் பாடாம சூனிய மாசத்துலே இப்படி வழிச்சுக்கொண்டு தூங்கினா ஜப்பான்காரன் குண்டு போட்டுவிட்டுப் போவான். எழுந்து அவங்களோடு போய் ஹரி ஹரின்னு ஹரிநாமம் கோஷித்தபடி நாலு வீதி சுற்றி வந்தா அடுத்த ஜன்மம் இல்லை; நேரே சுவர்க்கம்தான்’ என்றாள் அவள்.

‘ஜப்பான்காரர்களோடு சிப்ளா கட்டை சகிதம் ஹரி நாமம் சொல்லியபடி நாலு வீதி உலா வருவது கொஞ்சம் சிரமமான காரியம்’ என்றேன்.

‘எகத்தாளமா? இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை’ என்றபடி வாசல் கதவைத் திறந்தாள் அவள். நான் அதை எப்படியோ எதிர்பார்த்துக் கொல்லைப்பக்கம் வேகமாக நகர்ந்திருந்தேன் அப்போது.

அந்த கோஷ்டி வீட்டுக்குள் சகல சுதந்திரத்தோடும் பிரவேசித்து மத்தளமும் கஞ்சிராவும் டோலக்கும் ஹார்மோனியமும் ஏக காலத்தில் வாசித்து கோஷிக்க நான் அவசரமாக விசர்ஜனம் பூர்த்தியாக்கினேன், என்றால், காலைக் கடன் முடித்தேன்

கொல்லையில் அவரைப் பந்தலுக்குப் பக்கமாக பித்தளை அண்டாவில் நிரப்பியிருந்த குளிர்ந்த நீரில் இருந்து மொண்டுவிட்டுக்கொண்டு, சுதேசி சோப்பை நாலு இழுப்பு ஜலத்தோடு மேலே தேய்த்து இழுக்க, திரி திரியாக நெஞ்சிலும் கம்புக்கூட்டிலும் வந்தது.

திராபையாக சோப்பு உற்பத்தி செய்துவிட்டு, சுதேசி என்று போட்டு ரெண்டு காதிலும் பூ வைத்த காந்தி பக்த மகாஜனங்களிடம் கூடுதல் காசை வாங்கிக்கொண்டு விற்க வேண்டியது. அந்தப் ப்ரக்ருதிகளும் இந்த சோப்பைத் தேய்த்துக் குளித்தால் சுதந்திரம் ரெண்டு நாள் முன்னால் கிடைக்கும் என்று உத்வேகத்தோடு தேய்த்துக் குளிக்க வேண்டியது. அப்புறம் என்ன, இவ்வளவுதான் நுரை வரும். இப்படித்தான் அது கரையாமல் மேலே தங்கி அரிக்கும். உடம்பு முழுக்கத் திரித்திரியாக அப்பும். வெள்ளைக்காரனை தேசம் முழுக்க எதிர்ப்படும் உடம்பு வாடை தாங்காமல் விரட்டியடிக்க இந்த சோப்பை இந்திய மகாஜனங்கள் எல்லோரும் உபயோகித்தாலே போதும்.

ஆனால் இதை எல்லாம் கருத நேரமில்லை. பக்தஜன கோஷ்டி இன்னும் உரக்கப் பாடி சமையல் அறை ஓரமாக நடந்து கொல்லைப் பக்கம் வந்துவிடக் கூடும்.

காந்தி பெயரை உரக்கச் சொல்லி அவசரமாக நீராடி முடித்து நவராத்திரிக்கு கொலுப்படியில் விரித்தபின் துவைத்து இஸ்திரி போட்ட ஜரிகை வேஷ்டி, முழுக்கை பாப்ளின் மில்துணி சட்டை, கதர்த் துண்டு என்று கோலாகலமாக அணிந்து கோபி சந்தனம் ரத்னா பாய் இட்டுவிட நெற்றியில் வாசனையாகத் தரித்து கோஷ்டியில் கலந்திட விரைந்தேன்.

கைத்தாளம் போட்டபடி அருகில் வந்த ரத்னா பாய் காதில் சொன்னது – ‘ஹரி ஹரி... ஜன்னல்லே கருப்பு காகிதம் ஒரு வாரமா கிழிஞ்சிருக்கு... இன்னிக்காவது புதுசு வாங்கி வந்து ஒட்டுங்க... இல்லேன்னா ஏஆர்பி வார்டன் சத்தம் போடலாம்... அபராதம் விதிக்க ஏற்பாடு பண்ணலாம்... ஜெர்மன்காரனும் ஜப்பான்காரனும் நம்ம வீட்டு வெளிச்சத்தை காகிதக் கிழிசல் வழியாகப் பார்த்து, சென்னைப் பட்டணத்தை அடையாளம் கண்டு, ஏராப்ளேன்லே இருந்து குண்டு போடுவாங்க. ஜாக்கிரதை... ஹரி ஹரி...’

சரி என்று தலையசைத்து ராதே ராதே ராதே ராதே என்று கோஷ்டி கானம் பாடிப் புரசைவாக்கம் தெரு முழுக்க விழுந்து கிடந்த சாணத்தை மிதிக்காமல் கூட்டத்தோடு சேர்ந்து நடந்தேன்.

ஆளுக்கொரு பொத்தல் மிருதங்கத்தைத் தட்டிக்கொண்டுவந்த புதுப் பையன்களிடம் யார் அவர்கள் என்று பூர்வோத்திரம் விசாரித்தபடி கூடப் பாடியபோது, மலையாள உச்சரிப்பில், திருவனந்தபுரத் திலிருந்து மதறாஸ் வந்ததாக அறிந்தேன். தாய்மாமான், கச்சேரிக்கு மிருதங்கம் வாசிக்கிறவராம். பெயர் கேட்டேன். பிரபலமான இடந்தலை மிருதங்க வித்வானான வேலப்ப நாயக்கர் பெயர் சொன்னார்கள். ரெண்டு தெரு தள்ளித்தான் அவர் வீடு. நல்ல சிநேகிதர். வீட்டில் பத்து மிருதங்கம் அடுக்கி வைத்திருந்ததில் ரெண்டை இங்கே பஜனைக்கு எடுத்து வந்ததாகவும் அந்தப் பிள்ளைகள் சொன்னார்கள்.

ஆக, இது எம்பாவாய் கூட்டமில்லை. பஜனை கோஷ்டிதான் என்ற நிதானம் வந்தபோது பாட்டுப் பாட வேண்டியது எனக்கு வாய்த்தது. உத்தேசமாக பரிபாலித முசுகுந்தா என்று ஆரம்பித்தேன். எடுத்துப்பாட ஆளில்லாமல் போனது. பல்லவியில் ஆரம்பிக்காமல் நட்ட நடுவே சரணத்தில் தொடங்கினால் யார் கூடக் குரல் கொடுப்பார்கள்? ஆனால் எனக்கே பல்லவி மறந்து போய்விட்டது.

சட்டென்று எல்லோருக்கும் தெரிந்த சரணம் நினைவு வர நிறுத்தி நிதானமாக நந்த நந்தன நந்தன முனிதன என்றபோது பத்து குரல் குஷியாக ‘வந்துட்டோம் வாத்தியாரே’ என்று கூடவந்தது. அப்புறம் அவர்களே பாட்டை மேலே எடுத்துப் போனார்கள். நான் சும்மா பின்பாட்டு பாடினேன்.

நாங்கள் பாடியபடி நடக்க, குறுக்கே மறித்து ஒரு கைரிக்ஷாவை எலும்பான் ஒருத்தன் இழுத்துக்கொண்டுவந்து நிறுத்தினான். அதில் வந்து இறங்கிய வேலப்ப நாயக்கர் தோளில் மாட்டிய மிருதங்கம் சுநாதமாகச் சத்தமிடத்

தட்டியபடி கோஷ்டியில் சேர்ந்தார். வாசித்தபடியே மருமகப் பிள்ளைகளைப் பாசத்தோடு பார்த்துச் சொன்னார் –

‘நான் தூங்கிட்டிருந்தா என்ன? எழுப்பி கேட்டா தர மாட்டேன்னா சொல்லப் போறேன்? தோல் தப்பின மிருதங்கத்தை வாசிக்க எடுத்தாந்தா, ரத்தின நாயக்கன் வம்சத்திலே காதும் கையும் தாளமும் நாதமும் கைவிட்டுப் போயாச்சான்னு கேட்க மாட்டாங்க? ரிப்பேர் பண்ண வச்சிருந்த வாத்தியத்தைத் தூக்கிட்டு வந்துட்டீங்களே… பேரு ரிப்பேர் ஆகியிருக்கும்.’

பிடுங்காத குறையாக அவர்கள் தோளிலிருந்து மிருதங்கங்களை வாங்கி தான் வந்த ரிக்‌ஷாவிலேயே அனுப்பிவிட்டு எங்களோடு நடந்தார் அவர்.

‘கணேச சரணம் சரணம் கணேசா’, புதுப் பாட்டு ஆரம்பிக்க, நாயக்கர் திடீரென்று என் சட்டையைக் காலரில் தொட்டுப் பார்த்தார்.

‘ஆபீசுக்கும் போட்டுக்கலாம்… உஞ்சவிருத்திக்கும் மாட்டிக்கலாம்…’, ஏதோ புதுசாகக் கண்டுபிடித்ததுபோல் அவர் கூறினார்.

‘எல்லா சட்டையும் அப்படித்தான்’, என்றேன்.

‘என்கிட்டே இருக்கறதெல்லாம் கச்சேரி வாசிக்கப் போட்டுக்கற ஜிப்பாதான்.’

நாயக்கர் தன் ஜிப்பாவைக் காட்டினார். பிறந்ததிலிருந்து ஜிப்பா போட்டிருப்பார் என்று நினைக்கத்தக்க விதத்தில் அந்த காவி ஜிப்பா அவர் உடம்போடு ஒட்டி வழிந்தது.

‘பாடுங்கோ சார்.’

மத்தளநாராயண ராவ் கஞ்சிரா வாசித்தபடி பக்கத்தில் வந்து ரெண்டு பேரையும் உற்சாகப்படுத்த, நாயக்கரின் மிருதங்கம் பேச ஆரம்பித்தது.

நான் ராவின் கஞ்சிராவை ஒரு நிமிடம் வாங்கி வாசித்ததை நாயக்கர் ரசித்தார். ‘ஏது டேப் வாசிக்க வரும்போல’ என்றார் அவர்.

‘எல்லாம் தேர்ந்த கைதான்… அவங்க அப்பா மராட்டி அபங் பாடினா, ஆஹா’ என்றபடி மத்தளநாராயண ராவ்ஜி கஞ்சிராவை என்னிடமிருந்து திரும்ப வாங்கிக்கொண்டு முன்னால் போனார்.

கூட்டமே இல்லாத சொர்க்கத்தில் ஏதோ ஓர் உத்தியானவனத்தில் பெயிண்ட் காயாத பெஞ்ச் ஒன்றில் ஆரோகணித்து ‘மஜே மாகரு பண்டரி’ என்று

மராட்டி அபங்க் எனச் சொல்லப்படும் பக்தி கானம் பாடிக்கொண்டிருந்த என் பாபாஜி பத்மநாப ராவ்ஜியை ஒரு நொடி நினைத்துக்கொண்டேன்.

‘பிரம்மம் ஒகடே பர பிரம்மம் ஒகடெ’ என்று சுபாங்கி அம்மாள் பலமாக எடுக்க பஜனை கோஷ்டி சுறுசுறுப்பானது. ‘தந்தநாந அஹி தந்தநாந புரி தந்தநாந பல தந்தநாந’ என்று சந்தோஷமான கோரஸ் உயர்ந்தது. அம்மாள் ஆட வயதான மற்ற கோபிகைகளும் கோபர்களும் பரவசமாகக் குதித்து ஆடினார்கள். ரத்னா இங்கே இருந்திருக்க வேணும்.

இளைய தலைமுறையாகக் கைத்தாளம் போட்ட அந்தப் பையன் களைப் பார்த்து நான் புன்சிரிக்க அவர்களோ லட்சியமே செய்யாமல் தெருவில் குனிந்து வாசலில் மார்கழி மாதக் கோலம் போட்டுக்கொண்டு வரிசையாக வீடு தோறும் நின்ற பெண்களின் முகங்களை உன்னிப்பாகப் பார்த்தபடி வந்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

வக்கீல் குமஸ்தர் காகர்லா பக்தவத்சலம் வீட்டு வாசலில் வடிவாக நின்ற இரண்டு இளம் வயசுப் பெண்கள், பஜனை கோஷ்டியைக் கண்டு விருட்டென்று ஓரமாக ஒதுங்கி நின்று கோலத்தைப் பார்க்கிறதோடு, கள்ளக் கண்போட்டு மேற்படி பையன்களையும் பார்த்துக்கொண்டிருக்க, எனக்கு விஷயம் விளங்கிப் போனது.

பொத்தையோ பத்தையோ, காலைப் பொழுதில் தாள வாத்தியத்தைத் தூக்கிச் சுமந்து கொட்டிக்கொண்டு போக இந்த மலையாளக் கரைப் பையன்களைத் தூண்டிய உன்னதமான தரிசன அரம்பையர் அந்த இருவரும். ரத்னா பாய் கல்யாணமான புதுசில் இருந்த மாதிரி வெகு அமைதியான அழகு அது. ரத்னாவின் தற்போதைய அதிரூப செளந்தர்யத்தை வர்ணிக்க என்னிடம் வார்த்தை இல்லை.

முசுகுந்த சக்கரவர்த்தியை மற்றவர்கள் கரிசனமாகக் கவனித்துப் சரணத்தின் மேல் சரணமாகப் பாடிக் கௌரவிக்க, நாயக்கர் என்னையும் தள்ளிக்கொண்டு கடைசி வரிசைக்கு வந்தபடி தாளம் பிடித்தார்.

‘நம்மளையும் கௌரவிச்சிருக்காங்கபோல.’

சொல்லியபடி, காவிப்பல் தெரிய சிரித்தார் அவர். எனக்குத் தலையும் வாலும் புரியவில்லை. போல என்றால் என்ன என்று தெரியவில்லை. மேலும், யார் கௌரவித்தது, யாரை, என்ன கௌரவம் என்ற தகவலோடு

இந்த நம்மளை என்பது நாயக்கர் மட்டுமா நானும் கூடவா என்றும் தெரிந்துகொண்டாலே தக்கபடி பேச முடியும்.

‘ஏஆர்பி வார்டன் புது லிஸ்டுலே நம்ம ரெண்டு பேரோட பேரும் இருக்காம். நாளைக்கு தபால் வருமாம்’, மெய்சிலிர்த்துச் சொன்னார் நாயக்கர்.

எனக்கும் ஒரு வினாடி தரைக்கு மேலே பறக்கிற மாதிரி இருந்தது.

ஏர் ரைட் வார்டன்!

ஜெர்மானியனோ, ஜப்பான்காரனோ விமானத்தில் வந்து மெட்றாஸில் குண்டு வீசித் தாக்கினால் உயிர் அபாயம் சற்றும் இல்லாமல் அல்லது ஆகக் குறைவாக இருக்க நடவடிக்கை எடுக்கிற கௌரவ வேலை. நாயக்கர் சொன்ன மாதிரி, பதவி உருவத்தில் கௌரவம் தேடி வந்திருக்கிறது!

பஜனை, கல்யாண மண்டபத்து காம்பவுண்டில் முடிய, தயாராக சர்க்கரைப் பொங்கலும் வெண்பொங்கலும் கிண்டிக் காத்திருந்த யாரோ பூவரச இலை தொன்னையில் விளம்பித் தந்தார்கள்.

ரெண்டு கையிலும் தொன்னையோடு நான் வீட்டுக்குள் நுழைய, ‘இதென்ன ஜதையாக எதையோ தாங்குகிற மோஸ்தர்லே ரெண்டு கையையும் விரிச்சுத் தூக்கிக்கிட்டு?’ என்று கேட்டு ரத்னா சிரித்தாள்.

அவள் மனசில் ஓடிய குறும்பு எனக்கும் ஒரு நிமிஷத்தில் தட்டுப்பட, ‘உஷ், பஜனை பிரசாதம். துஷ்ட நினைவு ஏதும் வேணாம்’ என்று நானும் சிரித்தேன்.

மதர்த்த ஆரணங்குகள் நடமாடும் தெரு நீள இப்படியே கையை வைத்துக்கொண்டு நடந்துவந்திருக்கிறேன் என்று நினைக்க வெட்கம் பிடுங்கித் தின்றது. நாலு பேர் பார்க்க ஏர் ஹாரன் பாம் பாம் என்று முழக்கிக் கார் ஓட்டிப் போகிற சங்கடமோ சந்தோஷமோபோல இது.

அப்படித்தானே என்று சந்தேக நிவர்த்திக்காக ரத்னாவிடம் கேட்க குறுகுறுவென்று என்னையே பார்த்தாள்.

அவள் தேவையில்லாமல் கண் சிமிட்டினாள். அதுவும் சரியென்று வெண்பொங்கலில் ஒரு தேக்கரண்டி வாயில் இட்டு மென்றபடி எழுந்துபோய் வாசல் கதவை ஜாக்கிரதையாக மூடிவிட்டு வந்தேன்.

‘இதெதுக்கு இப்போ கதவடைச்சு பகல்லே ப்ளாக் அவுட்? இலவசம்னா எந்த நேரத்திலேயும் கேட்குமா?’

அவள் என்னைத் தள்ளிவிட்டு ஊஞ்சலில் உட்கார்ந்து பக்கத்தில் அடுக்கி வைத்திருந்த பத்திரிகைக் குவியலில் மேலே இருந்த தினப் பத்திரிகையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். அவளுடைய தமிழ் வாசிப்பு நாளுக்கு நாள் முன்னேறி வருவதைக் கவனித்தேன்.

‘கர்னல் அமெரி துரை, பிரிட்டிஷ் துருப்புகள் இந்தியாவில் நிரந்தரமாக இருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.’

அமெரி துரையை காலராகொண்டுபோக என்றபடி பத்திரிகையைத் தரையில் வீசினாள் ரத்னா. இளைத்துப்போன ஒரு வாரப் பத்திரிகையைக் கையில் எடுத்தபடி ஊஞ்சலில் அசைந்தாள்.

நான் எச்சில் கையோடு ஊஞ்சலில் அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன். பொங்கலில் உப்பு தூக்கலா இருக்குமே என்றாள் துப்பறியும் நிபுணன் ஷெர்லாக் ஹோம்ஸ் ஸ்டைலில்.

வாஸ்தவம்தான். தானம் வந்த பொங்கல் என்றாலும் உப்பு உரைப்பு சரி பார்க்கத் தோன்றாதோ. நாலு கவளம் விழுங்கிக் கூடுதல் உப்பேறிய இதைச் சாப்பிடும் சிரமத்திலிருந்து ரத்னாபாயை விடுவிக்கப் பார்த்தேன். அவளோ பொங்கல் வாடையை முகர்ந்தே அது எந்த விதத்தில் வித்தியாசமானது என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

எல்லாம் அவள் தொடர்ந்து உபயோகிக்கும் நாசிகா சூரணமான ஆஃபீசர்ஸ் பட்டணம் பொடியின் மகிமை என்று நினைக்க வெகு சந்தோஷமாக இருந்தது.

என்ன படித்துக்கொண்டிருக்கே? கேட்டபடி அவள் தோளுக்கு மேலே தாடையை இருந்தி வைத்துப் பார்த்தேன். வியாசர் அமுதத்தில் கீசக வதம்.

ஆச்சாரியார் வியாசர் அமுதத்தை இன்னும் முப்பது வருஷம் வாராவாரம் கிண்டிக் கிளறிக் கடைந்து பரிமாறினாலும் ரத்னா பாய் பயபக்தியோடு தினம் குளித்து, ராபின் நீலம் போட்டுத் துவைத்துத் தூவெண்மையான வாயில் சேலை உடுத்தி காலை சாப்பாட்டுக்கு முன் பக்திப் பரவசம் எய்தி ஊஞ்சலிலோ, இல்லை, சமையலறை சிமிட்டித் தரையில் மனைப் பலகை இட்டோ பத்திரிகையோடு உட்கார்ந்து படிக்கத் தவற மாட்டாள்.

‘ஆச்சாரியார் சாத்வீகமான சாது மனுஷர். நீ சுந்தரியான, சாத்வீகமும் சாந்தமும் கொண்ட குல ஸ்திரி. இருட்டில் ஒரு ஜீவனை வதம் செய்வதைத் தத்ரூபமாக விவரிக்கும் இந்தக் கொலைச் சிந்து வகை கீசக வதம் உப கதையில் உங்களுக்கு அப்படியென்ன ஓர் ஈர்ப்பு?’

நான் அவள் இடுப்பை வளைத்தபடி கேட்க, அழகாக அழகு காட்டியபடி நகர்ந்து உட்காரப் பார்த்தாள். அவள் தலையில் செருகியிருந்த கொண்டை ஊசி தளர்ந்து என் கையில் விழுந்தது.

அதுவும் நல்லது தானென்று எடுத்து உடனே காது குடைய ஆரம்பித்தேன். அப்போதுதான் இவளிடம் சொல்லவேண்டிய தலை போகிற தகவல் இருக்க அதைச் சொல்லாமல் இத்தையும் அத்தையும் சொத்தையாக இவளிடம் பகிர்ந்து கொள்கிறோமே என்று நினைப்பு வந்து அந்த வினாடியே செயல்படச் சொல்லி புத்தி விரட்டியது.

‘ரத்னா, ப்ரிய சகி, விஷயம் தெரியுமோ’ என்று ஆவலுடன் விசாரிக்க, ‘என்ன விஷயம்? பெங்கால் கெமிக்கல்ஸ் கொண்டை ஊசி பண்ணுவதை நிறுத்திக்கொண்டார்களா?’ என்று பதில் கேள்வி கேட்டாள் ஆரணங்கு.

பெங்கால் கெமிக்கல் கம்பெனி, கொண்டை ஊசி உற்பத்தி செய்கிறார்கள் என்ற தகவலே எனக்குப் புதுசு. பின்னி துணியாலையைக்கொண்டு முழுக்க முழுக்க காக்கித் துணி மட்டும் உண்டாக்கி ராணுவத்துக்கு அனுப்பி வைக்கிற சர்க்கார், ஏதோ காரணத்துக்காக பெங்கால் கெமிக்கல்ஸை இதுவரை கொண்டை ஊசி மட்டும் உருவாக்க வைத்திருக்கலாம்.

யுத்த காலமாச்சே. யார் என்ன செய்யணும் என்று சர்க்கார் சொன்னால் ஏன், எதற்கு என்றெல்லாம் கேட்காமல், அதன்படி நடக்க வேண்டியதுதான்.

பெங்கால் கெமிக்கல்ஸும் கொண்டை ஊசியும் இருக்கட்டும். ரத்னாவை இன்னும் நெருங்கி வனப்பான காது மடலில் மினுமினுப்போடு படிந்திருந்த கூந்தல் தைல நறுமணம் நுகர்ந்தபடி, ‘நானும் ஏஆர்பி வார்டன் ஆனேன்’ என்று பெருமையோடு அறிவித்தேன்.

என் கையில் இருந்து கொண்டை ஊசியைப் பிடுங்கி பக்கத்தில் வைத்தாள். இடுப்பில் செருகியிருந்த அட்டையிலிருந்து இன்னொரு கொண்டை ஊசி எடுத்துத் தலையில் செருகிக்கொண்டு, ‘ஏஆர்பி வார்டன்னா குறுக்கே வார் வச்ச காக்கி ட்ரவுசரும் வாயிலே விசிலுமா சதா

இருப்பீங்களா' என்று கிண்டலாகக் கேட்டாள். மாட்டேன் என்றேன் நிச்சயமில்லாமல்.

'இங்கே சுத்து வட்டாரத்துலே வார்டனா நிஜாரோட சுத்திட்டிருந்தா, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை சர்க்கார் உத்தியோகத்துக்கு எப்படி போவீங்க?'

அவள் கேட்டது நியாயமான கேள்விதான். சகல உரிமையோடும் உத்தேசமாக அவள் தோளை இறுகப்பற்றி விவரம் சொல்ல ஆரம்பித்தேன்.

'கொஞ்சம் இருங்க. அடுப்பிலே ரசம் ஈயச் சட்டியில் பொங்கிடும். அணைச்சுட்டு வரேன். கை விலகலாம். இது தோள் இல்லே.'

ரத்னா பாய் ஓட்ட ஓட்டமாக சமையல் கட்டுக்கு ஓடித் திரும்பி வந்தாள்.

'இது கௌரவ உத்தியோகம். கோட்டையிலே குமாஸ்தா வேலை மாதிரி இல்லே. நீ உன் சிநேகிதிகள் நாலு பேர் கிட்டே பெருமையோட சொல்லலாம். அந்தஸ்து அபரிமிதமா கூடிவிடும்.'

ஐந்து நிமிஷம் ஏர் ரெய்ட் ப்ரிகாஷன்ஸ் வார்டன் என்ற ஏஆர்பி வார்டனின் உத்தியோகம்பற்றி சுருக்கமாக அவளுக்கு வகுப்பெடுத்தேன்.

வாரம் நாலு ராத்திரி, காக்கி நிஜாரும், அரைக்கை காக்கிச் சட்டையும், கையில் மூணு பேட்டரி அடைத்த டார்ச் லைட்டும், வாயில் ஊய்ய்ய் என்று எதிரொலித்து ஒலிக்கும் விசிலும், இன்னும் முடிந்தால் லைசன்ஸ் வாங்கிய துப்பாக்கி சகிதம் தெருவை, பேட்டையை ரோந்து சுற்றி வர வேண்டும். எதிரி விமானம் வருவதாகத் தெரிந்தால் ஏஆர்பி சைரன் ஒலிக்குமில்லையோ. அப்போது, தெரு முனையில் தோண்டிவைத்த பாதுகாப்பு ஷெல்டர்களில் ஜனங்களை இடம் பெயர வைத்து பாதுகாப்பாக உட்காரச் சொல்லவேண்டும். அதற்கு அப்புறம் அரை மணியோ முக்கால் மணியோ கழிந்து எதிரி விமான அபாயம் இல்லாமல் போக, எல்லாம் சரியாச்சு என்ற 'ஆல் க்ளியர்' கூவலாக நீளமாக சைரன் ஊதி எல்லோரையும் வீட்டுக்கு அனுப்ப வேணும். இப்படி ஏகப்பட்ட கௌரவமான வேலைகளோடு வார்டன் பதவி.

'நீயே பார்த்து பார்த்து தெரிஞ்சுக்கலாம் ஏஆர்பி வார்டன் வேலை எதெல்லாம்னு. உத்தரவு நாளை, மறுநாள் வர்றது வரட்டும். அதுக்கு மிந்தி, இன்னிக்கு ராத்திரி முன்னோட்டமா நானும் நாயக்கரும் ரவுண்ட்ஸ் போகலாம்னு இருக்கோம். என்னோட யோசனைதான்' என்றேன்.

புருஷன் யுக புருஷனானதில் குபீரெனப் பொங்கிப் பிரவகித்து ஏற்பட்ட முகமும் அகமும் கொள்ளாத சந்தோஷத்தோடு என் பிடியிலிருந்து விலகி மறுபடியும் சமையல்கட்டுக்கு ஓடினாள்.

பத்து நிமிடத்தில் திரும்புவதற்குள் அவள் படித்துக்கொண்டிருந்த வாரப் பத்திரிகையைப் புரட்டினேன். சிசுக்களின் ஈரல் குலைக்கட்டி குணமாக ஜம்மியின் லிவர் க்யூர், தரமான நரசூஸ் காப்பி, நடிகை சோபனா சமரத் சதா உபயோகிக்கும் தெலக்ஸ் சோப், கண்ட்ரோல் விலைக்கு சர்ஜிக்கல் எஃகில் உருவாக்கிய விட்டா பிளேடு, பழைய சாக்குப் பைகள் நியாயமான விலைக்கு விற்க கன்னி ட்ரேடிங் கோ, ஆதியப்ப நாயக்கன் தெரு, சென்னை என்று லௌகீகமான விளம்பர மயம். பழைய சாக்குப்பையை நியாயமான விலைக்கு வாங்கி என்ன செய்யணும்?

‘இன்னும் சாதம் வடிச்சாகலியா?’ நான் ஊஞ்சலைவிட்டு எழுந்தபடி கேட்க, திரும்பிய ரத்னா பாய் தரைக்கு இழுத்து சுவரில் மரப்பாச்சி மாதிரி என்னைச் சார்த்தி வைத்து அவளும் பக்கத்தில் உட்கார்ந்து, ‘அது ஆச்சு… இப்போ பாயசம் காய்ச்ச ஏற்பாடு பண்ணிட்டு வந்தேன்’ என்றாள்.

இந்த பாயசம் காய்ச்சுவது அவளுடைய மராட்டித் தமிழில் கொஞ்சம் நாராசமாக ஒலிப்பது. ரத்னா பிறந்து வளர்ந்ததெல்லாம் மராட்டிய மண்ணில், கோலாப்பூர் ஜில்லாவில், தமிழ் பேசாத இச்சல்கரஞ்சி எனும் நகரத்தில்தான். அவள் வீட்டுக்குள் நூறு வருடம் புராதனமான தமிழ் புழங்கியது. நான் அவளைக் கல்யாணம் செய்தபோது மூக்குப் பொடியோடு அந்தத் தமிழும் இங்கே நுழைந்தது. இப்போதெல்லாம் பண்டிகை, நல்ல நாள், திருநாளுக்கு நானும் பாயசம் காய்ச்சத்தான் சொல்கிறேன்.

‘என்ன விசேஷம், இன்றைக்கு பாயசம் காய்ச்ச?’

நான் விசாரிக்க, ‘நீங்க சொன்னதுதான். கௌரவம் வந்து சேர்ந்ததே’ என்றாள்.

மல்லிப்பூ போல சாதம், கிள்ளிப்போட்ட இஞ்சியும், பறித்துப் போட்ட கொத்தமல்லியும் அரிந்துபோட்ட பச்சை மிளகாயும் துருவிப் போட்ட தேங்காயுமாக துவையல், முருங்கைக்காய் சாம்பார், தக்காளி ரசம், பால் பாயசம், கெட்டித் தயிர், பப்படம், அவியல், உருளைக்கிழங்கு பொடிமாஸ், நல்லெண்ணெயில் பொரித்த கிடாரங்காய் ஊறுகாய், என்று கோலாகலமாகப் பசியாறினேன்.

முருங்கைக்காய் வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தேன். ரத்னா பாய் கேட்கிற வழியாக இல்லை. ஏஆர்பி வார்டனை அது ஒன்றும் செய்யாது என்ற நம்பிக்கையாக இருக்கலாம். ஏதும் செய்தால்தான் என்ன என்ற வீம்பாகவும், என்ன ஆகுமோ அதையும் எதிர்பார்த்து, வரும்போது சமாளிக்கும் வீராப்பாகவும் இருக்கக்கூடும்.

ஞாயிற்றுக்கிழமைக்கான பகல் சாப்பாடு முடித்து சுடச்சுட ஒரு பெரிய தில்லி டம்ளர் நிறையப் பால் பாயசமும் குடித்து வயிற்றைக் கழற்றி வைக்க முடியுமா என்ற யோஜனையோடு எழுந்தேன். ரத்னா முன் ஜாக்கிரதையாக கொழுந்து வெற்றிலையில் குல்கந்து வைத்துச் சுருட்டி கிராம்பு செருகி வைத்திருந்த பீடா நாலைந்து மென்றிட, வயிறு கனம் கம்மியாச்சு.

நான் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை லைப்ரரியில் படித்த இங்க்லீஷ் நாசுக்கு, நாகரிகங்கள்பற்றிய புத்தகம் நினைவுக்கு வர, சமையலறை வெளியே நிலைப்படி தலையில் இடிக்காமல் குனிந்து, கதவுக்கு அந்தப் பக்கம் கையில் ஊறுகாய் ஜாடியோடு நின்ற ரத்னா பாயிடம், ஆறு சுவையும் கலந்து மணக்க மணக்க ஆக்கிய போஜனத்துக்காக சாங்கோபாங்கமான நன்றி சொன்னேன்.

‘தன்னந்தனியாக இத்தனையும் அருமையாக சமைச்சிருக்கே. இதுக்கெல்லாம் எப்படி நன்றி சொல்லப் போறேன்னு தெரியலே. உன் கைக்கு சாவகாசமா தங்க வளையல் போடலாம். இப்போதைக்கு ஒரு தேங்க் யூ சொல்லிக்கறேன். வளை, கடையிலே பத்திரமா இருக்கட்டும்’ என்றபடி அவள் கையைப் பிடித்துக் குலுக்கி முந்தானையைத் தள்ளி வளமான மார்பில் முத்தம் கொடுத்தேன். ‘வளை போடுற இடம் இல்லே அது’ என்றாள். ஆமா என்று இன்னொரு முத்தத்தோடு ஆமோதித்தேன்.

எப்படியும் அடுத்த மாதம் அவளுடைய ஜன்ம தினத்துக்கு இங்க்லீஷ் பாணியில் ஒரு பவுன் நெளி மோதிரமோ பொன் வளையலோ போடத் திட்டமுண்டு. அவளிடம் இப்போது சொல்லக்கூடாது. திடீர் சந்தோஷமாக வரவேண்டியது அது.

‘பாயசத்துக்கு நன்றி எல்லாம் கிடையாதா?’

அவள் மாடப்பிறையில் இருந்து பொடிமட்டையை எடுத்து ஒரு சிட்டிகை அள்ளி உறிஞ்சிவிட்டுக் கண் கலங்க என்னைக் கேட்டாள்.

‘அமிர்தம்’ என்றபடி, ஈரமான அவள் மூக்கைத் தோள் துண்டில் துடைத்துவிட்டு, முத்தமிடப் போனேன். ‘அந்தப் பெண்பிள்ளையை நீங்க மறக்க மாட்டீங்களே’ என்று கையைத் தள்ளினாள் ரத்னா பாய்.

அமிர்தா பாய் என் முறைப்பெண். என்னை விட ஐந்து வயசு பெரியவள். தெலுங்கு பேசும் வாராங்கல் பிரதேசத்து ஹனம்கொண்டாவில் அழுக்கு கோட்டு தரித்த ஒரு டெபுடி தாசில்தாரின் பெண்டாட்டியாக, மூன்று பெண்களுக்குத் தாயாக மூச்சுவிட்டுக்கொண்டிருக்கிறாள்.

இருதயமே இல்லாததுபோல், அந்த அடுத்தவன் பெண்டாட்டியை எனக்கு மனசு, சரீர ரீதியாக நெருக்கமாக்கி சக்காளத்தி என்று நெடிலாக நொடிப்பாள் ரத்னா, அமிர்தா பாய் பற்றிய பிரஸ்தாபம் கேட்க நேர்ந்தால்.

இத்தனை தள்ளி இருந்தாலும் அமிர்தா அவ்வப்போது safe ஸேஃப் என்று ஓரத்தில் எழுதி போஸ்ட் கார்ட் போட்டு அது வந்து சேர்ந்த இரண்டாம் நாள் கிழிபட்டுக் குப்பைக்குப் போய்விடும். ரத்னா பாய் கைவேலை அல்லாமல் வேறு என்ன?

அமிர்தா பாய் ‘போன வாரம் முழுக்க எனக்கும் இவருக்கும் வயிற்றில் வாயுத் தொந்தரவு அதிகமாகித் தொடர்ந்து வாயுப் பிரிந்து கஷ்டப்பட்டோம்’ என்று போஸ்ட் கார்டில் எழுதி, நடுராத்திரியில் சத்தமான அதிர்வேட்டு போட்டியில் ஈடுபடும் சதி–பதி விஷயம் தெரிவித்தால், மூக்கைப் பிடித்தபடி அந்தத் தபால் அட்டையைக் கிழித்துப் போடாமல் வேறு என்ன செய்ய என்பாள் ரத்னா.

ஊஞ்சலில் படுத்தபடி பத்திரிகையைப் புரட்டினேன். ஏதென்ஸில் தேச பக்த கிரேக்க இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். நேச நாடான இங்கிலாந்தின் படையைத் துப்பாக்கியை உயர்த்த வைத்து, பிரதமர் சர்ச்சில் கிரேக்க உயிர் வாங்கிய அந்த அட்டூழியத்தைப் படித்துக்கொண்டிருந்தபோது சுகமாகப் பகல் உறக்கம் தழுவிக் கொண்டது.

எழுந்தபோது நடுப்பகலுக்கு மேல் ஒரு மணி ஆகியிருந்தது.

‘ஞாயிற்றுக்கிழமைதான் அதற்காக இப்படியா ஒரு ராட்சசத் தூக்கம்?’

ரத்னா பாய் ஊஞ்சலை ஆட்டியபடி என் தொடையில் கிள்ளிப் போனாள். வாசலில் ஏதோ சத்தம்.

வாசலைப் பார்க்க, காலையில் மங்கலமான தாள வாத்தியம் முழக்கி என்னை எழுப்பிய திருவனந்தபுரம் பிள்ளையாண்டான்கள் ரெண்டு பேரும் உள்ளே வந்தார்கள். அப்போதுதான் கவனித்தேன், அவர்கள் கிட்டத்தட்ட ஒரே மாதிரி உருவம் அமைந்த ரெட்டைப் பிறவிகள் என்று.

என்ன விஷயமாக வந்தார்கள் என்று தெரியாமல் அவர்களை வரவேற்று உட்காரச் சொன்னேன்.

‘இன்னொரு நாள் சாவகாசமாக வறோம். சினிமா போகற பரிபாடி.’ அந்த பரிபாடி, காட்பாடிக்கு அடுத்து இருக்கும் ஊராக இருக்கலாம்.

திருவல்லிக்கேணி ஸ்டார் தியேட்டரில் இன்னும் ஒரு மணி நேரத்தில் பகல் காட்சியாக ‘பெஹன்.’ நல்ல நல்ல பாட்டுக்கள் இருக்காம். பார்க்கணுமாம்.

என்னை தியேட்டரில் டிக்கெட்டுக்கு சிபாரிசு செய்யச் சொல்றாங்களா? சினிமா டிக்கெட் என்ன ரேஷன் கொண்டு வர வேண்டிய வஸ்துவா?

கேட்டே விட்டேன். என் அறியாமைக்குச் சிரித்தார்கள். ‘ஷேக் முக்தார் கேட்டிருக்கீங்களா? ஹீரோ.’ அவர்கள் விசாரிக்க தெரியாது என்றேன்.

‘மிஸ் நளினி தெரியுமா, ஹீரோயின்?’ தீவிரமாக சினிமா பார்க்கிற வழக்கம் இல்லாததால் இந்த மாதிரி தகவல் எல்லாம் பிரயத்தனப்பட்டு கிரகித்து மனசில் சேர்த்து வைப்பதில்லை என்று அதையும் கடந்து போனேன்.

அப்படித்தான் சொல்லணும். தோளழகி ராஜீவலோசனா, இடுப்பழகி திலோத்தமா, உதட்டழகி சந்திராள், வேறே ஏதோ அழகி ஸ்வர்க்கசீமா, கும்மாளம், ஜல்சா என்று எப்போதாவது ஆபீசில் ஒளித்துப் படிக்கக் கிடைக்கும் சினிமாபற்றிய சிருங்கார வம்பு தும்பு அச்சடித்து வரும் பத்திரிகைகளைப்பற்றி மூச்சு விடக்கூடாது.

‘ஆளுக்கு ஒரு டம்ளர் சுடச்சுட காப்பி சேர்க்கச் சொல்லட்டா?’

நான் உபசாரமாக விசாரிக்க, ரத்னா பாய் சமையல்கட்டில் இருந்து சுட்டெரிப்பதுபோல் பார்த்ததை ஒரு வினாடி கண்டேன். அவள் சைகை கண்டு உடனே போனேன்.

‘பாயசம் காய்ச்சி பால் நிறையச் செலவாச்சு. சாயந்திர காப்பிக்கும் ராத்திரி குடிக்கவும் அரைப்படி வச்சிருக்கேன். அவ்வளவுதான். இனி நாளைக்குக் காலையிலே வைக்கோல் கன்னுக்குட்டியோடு பால்காரன் மாட்டை ஓட்டி வந்து கறந்தால்தான் உண்டு.’

சொல்லியபடி ரத்னா பாய் ‘மெழுகுசீலை தலகாணி’ வைத்து சமையல் கட்டுத் தரையில் குட்டித் தூக்கத்துக்காகப் படுத்துக்கொண்டாள். அந்த தார்பாலின் தலையணையின் வாடையே பகல் தூக்கத்துக்கு மட்டுமானது.

‘எங்க மாமனுக்கும் ஏஆர்பி வார்டனாக கௌரவ உத்தியோகம் வந்திருக்கு இல்லியா? அவர்கிட்டே உத்தியோக உடுப்பா எதுவும் இல்லே. வித்வான் ஆச்சே, வேட்டி, ஜிப்பாதான்’,

ஏற்கெனவே வேலப்ப நாயக்கர் என்னிடம் கோடி காட்டியதை இரட்டையரில் ஒருத்தர் பாதியும் மற்றவர் மீதியுமாகச் சொல்லி என் முகத்தைப் பார்த்தார்கள். சின்னதோ பெரிசோ பிரச்னைதான். இதுக்கு ராமோஜியும் ரத்னா பாயும் என்ன மாதிரி தீர்வு காண வேணும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்ற யோசனையில் ‘இதோ வர்றேன்’ என்று சமையல் கட்டுக்கு நடந்தேன்.

என்னையும் வேட்டி கட்டிக்கொண்டு ஏஆர்பி-யாக ரோந்து வரச்சொல்லிக் கோரிக்கையா நாயக்கர் தரப்பிலிருந்து?

‘ஏஆர்பி வார்டன் யூனிபாரம்’ என்று நான் ஆரம்பிக்க, ‘அப்படி ஒண்ணு இங்கே மட்டுமில்லே, இதுக்கெல்லாம் ஊற்றுக்கண் ஆன இங்கிலாந்துலேகூட இல்லே’ என்று ஒரே குரலில் முழங்கினார்கள்.

நான் காக்கி யூனிபாரம்பற்றி ரத்னாவிடம் சொன்னது நினைவில் வந்தது. போகட்டும். கேட்டால் வேறு ஏதாவது, நெளி மோதிரம், மக்ரனெட் பேக்கரி சாக்லெட் கிரீம் கேக், பண்ருட்டி பலாப்பழம் இப்படி ஏதாவது வாக்குத்தத்தம் செய்து சமாளிக்கலாம்.

‘மாமன் கிட்டத்தட்ட உங்க உயரம், பருமன். சுமார் புதுசா உங்க பேண்ட், சட்டை ஒரு ஜதை கொடுத்தீங்கன்னா... அதுக்கு பர்த்தியா ஒரு கஞ்சிரா உங்களுக்குத் தர அவர் தயாரா இருக்கார். அவரே கேட்டிருப்பார். லஜ்ஜை. வேறு ஒண்ணுமில்லே. ஓர் இடுப்பு வாரும் கொடுத்தா நல்லா இருக்கும்.’

நான் ரொம்ப நாளாக பஜனை கோஷ்டி தளவாடங்களில் கைத்தாளம், கஞ்சிரா என்று வாங்கி வைத்துக்கொள்ள பிரயத்னப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்பாஜி ஹார்மோனியம் வாசித்ததாக அம்மா சொல்லியிருந்தாள். அது எங்கே போனதோ.

ரெண்டு வருஷம் முந்தி, மோர்சிங்க் ஒன்று ரொம்பப் புராதனமானதாகக் கிடைத்தது. ‘ஊர் எச்சில் எல்லாம் தலைமுறை தலைமுறையா சேர்ந்து

ஊறியிருக்கும். அதை வாயிலே வச்சு குஷியாக ஞ்ஜஞ்ஜஞ்ஜ என்று வாசிச்சுட்டு என்னோட படுக்க வர வேணாம்.' நிர்த்தாட்சண்யமாக ரத்னா பாய் சொன்னதால் மோர்சிங்க் கனவுகள் கரைந்து போயின.

அற்ப விலையில் ஜால்ரா வாங்க நினைத்தபோது ஊரிலிருந்து வந்திருந்த என் மாமனார் 'அதான் கல்யாணமான எல்லா ஆண்களும் பெண்டாட்டிக்கு அடிக்கிற ஜிங்சிங் இருக்கும்போது இன்னொரு ஜால்ரா எதுக்கு என்று எகத்தாளம் பண்ண என் மாமியாரால் சுட்டெரிக்கப்பட்டு அவருடைய தாலியின் பலத்தால் மறு உயிர் பெற்றார். அதெல்லாம் கடந்து இப்போது ஒரு கஞ்சிரா என் கையில் தவழ சந்தர்ப்பம்.

நான் மறுபடி உள்ளேபோய் எட்டிப் பார்க்க, ரத்னா பாய் சௌக்கியமாக நித்திரை போயிருந்தாள்.

நல்ல சமயம் நழுவ விடக்கூடாது என்று அடிமேல் அடியெடுத்துப் போய் மர அலமாரியைத் திறந்து போன தீபாவளிக்குத் தைத்ததில் ஒரு ஜதை உத்தியோக உடுப்பை எடுத்து வந்து முந்தாநாள் சுதேசமித்திரனில் 'காங்கிரஸ் யூனியன்களில் கம்யூனிஸ்ட்களை சேர்க்கக்கூடாது' என்று சொல்லும் பக்கத்தில் மடித்து மூடித் தானம் செய்தேன். தானம் என்ன, கஞ்சிரா வந்தால் பண்ட மாற்று.

உடுப்பை நாயக்கர் அம்மாவனிடம் கொடுத்துவிட்டு, ஈவினிங் ஷோ பக்த மாலி பார்த்துவிட்டு, உடுப்பி லாட்ஜில் பசியாறி, ராத்திரி காட்சிக்கு வெலிங்டன் தியேட்டரில் சாந்தா ஆப்தே நடித்த இந்திப் படம் காதம்பரி கண்டு களித்து நாளைக் காலையில் திருச்சிபோய் ஒரு வாரத்தில் திரும்பும் திட்டம் ரெட்டையர்களுக்கு உண்டு என்று அறிந்தேன்.

என்னமாக துடிப்பாக சஞ்சரிக்கிறார்கள்! திருச்சியில் என்ன ஜோலியோ? பள்ளிக்கூட அரங்கில் நவாப் ராஜமாணிக்கம் நாடகமாம். ஐயப்பன். நாயக்கர் மருமகன்கள் அவ்வப்போது நாடகக் கம்பெனி டேரா போடும் ஊருக்குப் போய் நடித்துக் கொடுக்கிற வழக்கமுண்டாம்.

இந்த நடித்துக் கொடுத்தல், நடத்திக் கொடுத்தல் எல்லாம் கொஞ்சம் கூடுதல் கம்பீரமானவை. நடித்தேன் என்றால் போனேன், நடித்துவிட்டு வந்தேன் அது மட்டும்தான். நடித்துக் கொடுத்தேன் என்றால், நாடகக் கம்பெனி, ரசிகர்கள் எல்லோரும் 'நீங்க வந்து நடித்தால்தான் நாடகம் சோபிக்கும்' என்று வேண்டி, விரும்பி, கெஞ்சி, கொஞ்சி வரவேற்று,

நடித்த பிறகு ஏகோபித்துப் பாராட்டிப் பிரியாவிடை கொடுக்கும் தோதில் இருக்குமோ.

அவர்கள் வாசல் படி இறங்கும்போது என்ன கதாபாத்திரமாக நடிப்பீர்கள் என்று கேட்டேன். ஒரு தகவலுக்காகத்தான்.

'ஐயப்பன் புலிமேல் வரும்போது நாங்களும் வருவோம்'

'புலி மேலேயா?'

'இல்லை, தெருவிலே ஓடுவோம். பயந்த முகபாவம் காட்டணும். ஓடியும் ஆகணும். ரொம்ப ஓடினா மேடைக்குக் கீழே விழுந்துடுவோம். ஒவ்வொரு ஊர்லே ஒவ்வொரு விதமா ஸ்டேஜ். கவனமா இருக்கணும்.'

பிரமாதம் என்று வழி அனுப்பும்போது இவர்களை நம்பி குமஸ்தன் காகர்லா பக்தவத்சலம் வீட்டுக் கன்னியர் பார்வை தானம், சொல் தானம், வாழ்க்கை தானம் என்று ஏதும் அவசரப்பட்டு ஈயக்கூடாதே என்று கவலை உண்டானது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கோட்டையில் சர்க்கார் உத்யோகஸ்தன் ராமோஜி வீட்டில் வெங்காய, வாழைக்காய் பஜ்ஜி சிற்றுண்டியாகக் கடந்து போவது வாடிக்கை. இப்போது என்னமோ வாழை இலையில் இனிப்போடு உபசாரம் ஆரம்பமானது.

குளுகுளுவென்று மஞ்சள் பூத்த சிவப்பு நிறத்தில், நெய் மினுமினுத்து, வறுத்துக் கலந்த முந்திரிப் பருப்பும், உலர்ந்த திராட்சையும் கண் முழித்துப் பார்க்க, அளவாக சர்க்கரை சேர்த்து அற்புதமாக ரத்னா பாய் கிண்டிச் சுடச்சுட பரிமாறிய ரவாகேசரி அது. தொடர்ந்து பஜ்ஜி தினுசுகளோடு அவல் உப்புமாவும் ஒரு கிண்ணத்தில் இருந்தது.

இத்தனையும் தின்று ராத்திரி என்னத்தை ரவுண்ட் போகிற வேலை பார்க்கிறது? அப்புறம், பிற்பகல் டிஃபனுக்கு அது என்ன மூணு ஐட்டம்?

'ரெண்டு உத்தியோகமாச்சே. அதான் மூணு பலகாரம்' என்றாள்.

★

'யுத்தம் முடியும்வரை, இந்தியர்களே பங்குபெறும் சர்க்கார் கண்டிப்பாக கிடையாது' என்று வைஸ்ராய் லின்லித்கோ பிரபு சொன்னதாக ராத்திரி ஏழேகால் மணிக்கு ரேடியோவில் நியூஸ் படித்து முடிந்த பிறகு,

ரேடியோவை அணைத்துவிட்டு, ஏஆர்பி வார்டன் வேஷம் கட்டத் தயாரானேன்.

சாப்பிட்டுவிட்டுப் படி இறங்கலாம் என்று ரத்னா பாய் தடுப்பாள். அவள் வார்த்தைக்கு இன்றைக்கு மட்டுமாவது தலை வணங்க வேண்டாம் என்று முடிவு செய்தேன். இல்லாவிட்டாலும் இன்றைக்கு வாயைத் திறந்தது எல்லாம் ஆகாரத்துக்கு என்றானதால் கொஞ்சம் ஓய்வு வயிற்றுக்குத் தரவும் தீர்மானம் செய்தேன்.

ஆபீஸுக்கு நாளை உடுத்திப் போக ட்வீட் பேண்ட் வைத்திருந்தேன். வழக்கம்போல் ஞாயிற்றுக்கிழமை துவைத்து இஸ்திரி போட்டு ஐந்து செட் ரெடி பண்ணி வைத்திருப்பாள் ரத்னா பாய். சனிக்கிழமை மட்டும் தழையத் தழைய வேட்டி உடுத்தி உத்தியோகத்துக்குப் போவது வழக்கம்.

ராத்திரி ஏஆர்பி ரோந்து போக பேண்ட் போட்டுக்கொள்ள வேண்டாமா? போனால் மிடுக்காக இருக்கும். ஆனால் ஆபீஸுக்கு உடுத்திப் போக என்ன செய்ய? தினசரி ஏஆர்பி வார்டன் ரவுண்ட்ஸ் போனால் ஆபீஸ் உடுதுணி இருப்பு கணிசமாக அடி வாங்குமே.

வித்வானுக்கு ஒரு செட் துணி கொடுத்ததால் நடைமுறையில் மேலும் வித்தியாசம் கொண்டுவர வேண்டி இருக்கும். இரண்டு நாள் வேட்டி கட்டிப் போக வேண்டி வரும். அல்லது ஒரே பேண்டை கசங்கியிருந் தாலும் பரவாயில்லை என்று தொடர்ந்து இரண்டு நாள் போட்டுக்கொண்டு போகலாம். ரத்னா பாயின் கண்ணுக்கு இந்த விஷயம் தெரியாமல் போகாது. கேட்பாள். ஏதாவது சமாளிக்க வேணும்.

நாளை தூங்கி விழித்து முதல் காரியமாக பாரீஸ் கார்னரில் ஜோனஸ் சேட் கடைக்குப்போய் புதுசாக ரெண்டு ஜதை உத்தியோக உடுப்பு தைத்துக்கொள்ளலாமா? இந்த மாதம் இன்னும் பதினைந்து நாள் இருக்க, துணியில் பணம் முடக்க நினைப்பது அறிவீனம் அன்றோ.

உடுப்புபற்றி நினைத்து ஊஞ்சலண்டை உறைந்துபோய் நின்றபோது வெளியே இருந்து மான் குட்டிபோல் குதித்து படி கடந்து உள்ளே வந்தாள் ரத்னா. தோளில் துண்டாகத் துவண்டு, என்ன என்று பார்க்க, துணி.

எல்லாம் நான் கடந்த ரெண்டு வருஷமாக ஆபீஸுக்குப் போட்டு பழசாக்கி, தெருவில் எவர்சில்வர் பாத்திரக்காரன் வரும்போது தூக்கிப் போட்டு, ரெண்டு

ஸ்பூனோ சின்னக் கிண்ணமோ வாங்க ரத்னா பாய் உத்தேசித்து, பத்திரமாக பீரோ கீழ்த் தட்டில் சலவை செய்து, மடித்து வைத்திருந்தது.

‘என் பழந்துணிகளை என்ன செய்தாய் பெண்ணே?’

‘அதான் இது. பாத்திரக்காரன் வரும்போது பார்த்துக்கலாம். என் ஜரிகைப் புடவை இருக்கு. போட்டுட்டு பால் காய்ச்ச ஒரு வாலாம்பு வாங்கிடலாம்னு இருக்கேன்.’

நான் வாலும் தலையும் புரியாமல் பார்த்தேன்.

‘எப்படியும் நீங்க ஏஆர்பி வார்டனா வலம் வர இடுப்பிலே துணி வேணும். அது உடனே வேறே வேண்டியிருக்கும். என்ன செய்யலாம்னு மதியம் நீங்க தூங்கறபோது யோசிச்சேன். சட்டுனு தோணிச்சு. குருசாமி டெய்லர்கிட்டே சொல்லி இது ரெண்டு. போட்டுப் பாருங்க.’

அவள் கொடுத்த இரண்டும் அரை நிஜார்கள். என் பழைய பேண்ட்களை நேர்த்தியாக பாதியாக வெட்டி கீழே அகலமான பட்டியாக மடித்துத் தைத்து ஏஆர்பி அரைக்கால் நிஜார் தயார். பழைய கைத்தறிச் சட்டையும் டக்கு பிடித்து இறுக்கமாகத் தைத்து உடுத்த ரெடியாக அவளது மென்தோளில் என் கை போல் விழுந்து கிடந்தது.

ரத்னாகொண்டுவந்த உடுப்புகளை உள்ளேபோய்ப் போட்டுப் பார்த்தேன். கன கச்சிதமாக இருந்தது. பத்து வயசுப் பையன் மாதிரி வேறே தோன்றியது.

‘சரியா இருக்கா?’

சகதர்மிணி உள்ளே வந்து சுவாதீனமாக டிராயரை கீழே கை வைத்து இழுத்து முழங்கால் மூட வைத்தபடி கேட்க, சரி எனக் கூறினேன். வேறே ஏதாவது வேணுமா என்று கரிசனத்தோடு அவள் விசாரிக்க ஆரஞ்சு மிட்டாய் என்றேன். அந்த உடுப்புக்கு அதுதான் நினைவு வந்தது.

நான் கிளம்பலாமா என்று சட்டைப் பொத்தான்களைப் போட்டபடி அவளைக் கேட்டேன். ஊஞ்சலுக்கு அருகே சின்ன மேஜையில் ஒரு பிரம்பு இருந்ததை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டேன். அது என் மாமனார் வந்திருந்தபோது காலையில் லாந்தப் போகும் நேரம் நாய் மேலே விழுந்து பிடுங்காமல் செங்கோலாக அசைத்துப் போவது.

‘மாந்த்ரீகன்போல பிரம்பு எதுக்கு? கௌரவமா டிராயர் போதாதோ’ என்றபடி செங்கோலைப் பிடுங்கிக்கொண்டு, என்னைப் பிடித்து ஊஞ்சலில்

உட்கார்த்திவிட்டு உள்ளே போனாள் ரத்னா பாய்.

‘வெறும் வயிற்றோடு போக வேணாம். சொன்னா கேளுங்க. புனர்பாகமா நிறைய நீர்விட்டு கொதிக்கவிட்டு சாதம் பண்ணியிருக்கேன். மோர் கலந்து கரைச்சுத் தரேன். ரெண்டே ரெண்டு டம்ளர் குடிச்சுட்டு போங்க. புளிச்ச ஏப்பம், உப்புசம்னு ஒரு கண்றாவியும் வராது... வயித்துக்கு இதமா இருக்கும்.’

சாதக் கரைசலும் தொட்டுக்கொள்ள நார்த்தங்காயும், காய்ந்த எலுமிச்சைத் துண்டங்களுமாக நாலு டம்ளர் குடித்ததும் தெம்பாகப் பாதரட்சையைத் துடைக்கக் குனிந்தால் அது பாலீஷ் வாசனையோடு மின்னிக்கொண்டிருந்தது. நிமிர்ந்து பார்க்க ரத்னா பாய் புன்சிரித்தாள்.

‘எதுக்கு நீ செருப்பை பாலீஷ் போட்டிருக்கே?’ என்று கண்கள் பனிக்கப் பரவசப்பட்டு அவளைக் கேட்க, ‘நான் எங்கே போட்டேன்’ என்று என் காலைப் பார்த்தாள்.

‘ஹோய்... அது என் புதுச் செருப்பாக்கும். கடிக்கறதை குறைக்க நார்த்தங்கா ஊறின உப்புத் தண்ணி போட்டு வச்சிருந்தேன். உங்களுக்கு ஊறுகாய். செருப்புக்கு ஊறுகாய்த் தண்ணி. கால்லே இருந்து கழட்டுங்க.’

கழற்றி மரியாதையாக எடுத்து மடியில் வைத்துக்கொள்ள, பிடுங்கித் தரையில் போட்டாள். நல்லவேளை, போட்டுப் போயிருந்தால் தெருவெல்லாம் ஊறுகாய் மணம் பரப்பி ஜப்பான் விமானத்துக்கு கம்மென்று வாடைத் துப்பு கொடுத்து வரவழைத்திருப்பேன்.

‘உத்தியோக சின்னம் வேறே ஏதாவது உண்டா?’

ரத்னா சிரிப்பு மாறாமல் பார்த்து வினவினாள் அடுத்து.

‘புஜத்திலே கட்டிக்க ஏஆர்பின்னு போட்ட பட்டி ஒண்ணு கிடைக்கும். தலையில் கவுத்து மாட்டிக்க ஒரு ஹெல்மெட் தருவாங்க. டபிள்யூ அப்படீன்னு ஒற்றை எழுத்து எழுதி பக்கத்திலேயே நாலு சின்ன ஓட்டை போட்டிருக்கும். ஊர்க்காவல் உத்தியோகத்துக்கானது, யுத்தத்துக்கு போட்டுக்க லாயக்கு இல்லேன்னு அந்த நாலு துளையோட தாத்பரியம்.’

இல்லாத ஹெல்மெட்டை தலையில் வைத்துக் கற்பனை செய்து நிலைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டேன். கொஞ்சம் தொந்தி போட்டிருக்கோ.

இருந்தாலும் வார்டன் களை இருப்பதாக கண்ணாடி உத்தேசமாகச் சொன்னது.

‘அந்த கவசம் வரும்போது வரட்டும். இது நாம போன வருஷம் பண்டரிபுரம் போனபோது வாங்கின காந்தி குல்லா. மாட்டிக்கிட்டுப் போங்க’ என்று பீரோவில் இருந்து எடுத்துக்கொடுத்தாள் ரத்னா.

நான் காந்தி மித்ரன்தான். ஆனாலும் இந்த ஏஆர்பி வேலை கவர்மெண்ட் சங்கதி. ராத்திரியில் நான் காங்கிரஸ்காரனாக காந்தி குல்லாவோடு சுற்றி வந்து சர்க்காருக்கு சங்கடம் கொடுக்க மாட்டேன். மற்றபடி என் தேச பக்தி மற்ற யாருடைய மேற்படி பக்திக்கும் கிஞ்சித்தும் குறைந்ததில்லையே.

வேண்டுமானால் ஒரு நாள் முழுக்க காந்தி குல்லாய் தரித்து வீட்டுக்குள் சுற்றி வருகிறேன். சந்தேகப்படும் சபாபதிகள் வந்து பார்த்துக்கொள்ளலாம்.

‘கதவை பத்திரமா உள்ளே தாழ்ப்பாள் போடாம பூட்டிக்கோ. நான் ஒரு சாவி எடுத்துப் போறேன். நடு ராத்திரி கழிஞ்சு திறந்துக்கிட்டு உள்ளே வந்துடறேன்.’

நான் சொல்லி முடிப்பதற்குள் ரத்னா வாசலில் நின்றாள்.

‘வெட்டியா இங்கே படுத்து உருண்டுக்கிட்டு இருக்காம, இன்னிக்கு நானும் உங்ககூட ரவுண்ட்ஸ் வரேன். அஸ்து பாட வேண்டாம். முதல் நாள். வாங்க, போகலாம். நம்ம தெரு, அடுத்தது, எதிர்த்ததுலே இருக்கப்பட்டது, பேட்டையிலே மத்த முக்கிய வீதி... இங்கே எல்லாம் குண்டு குழி எங்கேன்னு உங்களுக்குத் தெரியாது. எனக்குத் தெரியும். மசமசன்னு நிக்காம வாங்க.’

ஆக, கையில் நியமன உத்தரவு வந்து சேராமலேயே எங்கள் வீட்டிலிருந்து இரண்டு கௌரவ ஊர்க்காவல் உத்தியோகஸ்தர்கள் ஞாயிறு முன்னிரவில் ரோந்துப் பணிக்குப் புறப்பட்டாகி விட்டது. லண்டனில் ஏஆர்பி வார்டன்கள் ரெண்டுரெண்டு பேராகத்தான் சுற்றி வருவார்கள் என்று எங்கோ படித்த நினைவு. அவர்களில் எத்தனை பேர் தம்பதி சமேதராக வலம் வருகிறார்கள்?

தினசரி ராத்திரி எட்டு மணிக்கு ஏஆர்பி நபர்கள் எங்கள் முத்தியால் நாயக்கன் தெருவுக்கு அடுத்த விநாயகர் கோவில் தெரு ஹைஸ்கூல் காம்பவுண்டில் கூடி இருந்து, அன்றைக்கான ‘யார் எந்த எந்தத்

தெருக்களில் உலா வர வேணும்' என்ற ட்யூட்டி ரோஸ்டர் முடிவாகும் என்று கேட்டிருந்ததால் என் ராலே சைக்கிளில் ஸ்கூலுக்குப் போனேன்.

ஊர் வேடிக்கை பார்க்க வந்த டி.ஆர்.ராஜகுமாரி மாதிரி ரத்னா பாய் நாலு திசையும் சுவாரசியமாகக் கண்டு களித்தபடி சைக்கிள் பின்னால் கேரியரில் புஷ்டியும் சந்துஷ்டியுமாக ஆரோகணித்து வந்தாள்.

டிராயர் அணிந்து, பள்ளிக்கூட மரபெஞ்சில் உட்கார, எப்போதோ எழுதவிட்டுப்போன வீட்டுப் பாடம் நினைவு வந்தது. வழக்கமான ஸ்கூல் அம்சம் எதுவும் குறைவு படாது கால் ஆடும் பெஞ்ச், டெஸ்கில் இங்க் கறை, கமர்கெட் உறை, சாக்பீஸ் தூசி, அழித்து சுத்தமான கரும்பலகை என்று இருந்த பள்ளி.

'வாய்யா ராமோஜி. ஏர் ரைட் வார்டன் உத்தியோகம் இப்போ ஜோடி ஜோடியா கொடுத்து அனுப்பிடறாங்களா?'

ரிடையர்ட் ஹெட் மாஸ்டர் ரத்னா பாய் தலையில் கை வைத்து ஆசிர்வாதம் செய்துவிட்டுக் கேட்டார்.

'சார், இன்னும் உத்தரவு வரலே... நான் சும்மாகாச்சிக்கும் கலந்துக்கலாமா? நாள் நல்லா இருக்குன்னு என் சம்சாரம் சொல்றா.'

'பேஷா சேர்ந்துக்க. தாலுக்கா ஆபீசிலே உன் பெயரும் ததிங்கிணதோம் நாயக்கர் பேரும் நேத்தே ஒட்டி வச்சிட்டாங்க. ஆக நீங்க ரெண்டு பேரும் ட்யூட்டியிலே இருக்கறமாதிரிதான். ஏற்கெனவே ரெண்டு வார்டன்கள் வயோதிகம், கால்வலின்னு சுருண்டுட்டாங்க. ஆள் இல்லாம சிரமப்பட்டோம். வரேங்கறீங்க. நல்லா வாங்க. நாயக்கர் அரைக் கிழம்னாலும் நீ இளந்தாரி.'

'சார், நான் என்ன எல்லாம் செய்யணும்?', மரியாதையோடு கேட்டேன்.

'இந்தப் பேட்டைக்கு நான்தான் முழுநேர வார்டன். ஆக, ஸ்கூல்லே படிச்சபோது நான் சொன்னதைக் கேட்ட மாதிரி இப்பவும் அப்படியே கேட்டு சிறப்பாக வேலை பார்த்து, சர்ச்சிலுக்கும், ரூஸ்வெல்டுக்கும், ஸ்டாலினுக்கும் ஆதரவா யுத்தத்தை நடத்தித் தந்து ஹிட்லர் பயலையும் முசோலினி பயலையும் ஜப்பான் ராஜாவையும் வாயையும் சூவையும் பொத்திக்கிட்டு ஓட வைக்கணும். வாரத்திலே நாலு நாள் வேலை. மற்ற நாளும் வர்றது உன் இஷ்டம். அது கடமைன்னு நினைச்சா உனக்கு அனந்தகோடி நமஸ்காரம். வைஸ்ராய் லின்லித்கோ பிரபு சார்பிலே.'

இந்த சேவைக்காக எனக்கு வாரம் ஒருதடவை இரண்டு ரூபாய் ஆக மாதத்துக்கு எட்டு ரூபாய் கௌரவ சம்பளம் கிடைக்கும் என்றும் அவர் சிபாரிசு செய்தால் ரத்னா பாய்க்கும் வார்டன் உத்தியோகமாகி, அதேபோல் கிடைக்கலாம் என்றும் சொன்னார் ரிடையர்ட் ஹெட் மாஸ்டர்.

‘அப்புறம் இன்னொண்ணு... ரெண்டனா சில்லறைக் காசாக் கொடு’ ஹெட்மாஸ்டர் கேட்டார். ஏஆர்பி யூனியன் சந்தாவா? இல்லையாம்.

அவர் மேஜைக்குள் இருந்து ஏஆர்பி என்று பெயர் போட்ட இங்க்லீஷ் வாரப் பத்திரிகை ஒன்றை எடுத்து என் கையில் கொடுத்தார். முதல் இதழாம்.

புரட்டிப் பார்த்தேன். மெட்றாஸ் கவர்னர் ஆர்தர் ஹோப் துரையும் ஏஆர்பி ஜோலிக்காகவே நேர்ந்துவிடப்பட்ட அதிகாரி ஹெச்.பி.லாதம் துரையும் பத்திரிகையை வாழ்த்தி ஆசிர்வாதச் செய்திகள் அனுப்பியது முதல், ரெண்டாம் பக்கத்தில் வந்திருந்தது. மற்ற பிரமுகர்களும் அடுத்தடுத்த பக்கங்களில் ஆசி மழை பொழிந்திருந்தார்கள்.

ராத்திரி ஒன்பது மணிக்கு ரெண்டணா கொடுத்து வாங்கிப் படிக்க அது தலை போகிற பெரிய விஷயம் இல்லையே. நாளைக்கு பத்திரிகை வாங்கிக்கறேன் சார் என்று ஜகா வாங்கினேன்.

‘ஆர்மி கேண்டீன்லே கான்வாஸ் ஷூவும் மிலிட்டரி ஷூவும் தள்ளுபடி விலைக்குக் கிடைக்கும். ஏஆர்பி வார்டன்னு நான் சர்ட்டிபிகேட் தரணும். வாங்கறதுன்னா சொல்லு. நாளைக்கே தரேன்... கட்டாயம் இல்லை...’ என்றார் அவர். அடுத்த மாதம் வாங்கிக்கறேன் என்று சொல்ல வேண்டி வந்தது. உடனே ஷூவில் ஐம்பது நூறு என்று பணத்தைப் போட முடியுமா என்ன?

‘அவருக்கு முழுநேர வார்டனா எம்புட்டு கிடைக்குது?’ ரத்னா என் காதில் கேட்டாள். ஐம்பது ரூபாய் இருக்கலாம் என்று எங்கேயோ கேட்ட தகவலை அவளிடம் பகிர்ந்துகொண்டேன். ‘பரவாயில்லே, வயசான காலத்துலே சும்மா வீட்டுலே இருக்கறதுக்கு இது நல்ல வருமானம்’ என்றாள் குரல் எழுப்பாமல்.

மிருதங்கம் வேலப்ப நாயக்கர் தடாலென்று காக்கி நிஜாரும் மிலிட்டரி சட்டையுமாக ஆளே அடையாளம் தெரியாத யுத்தகாலக் கோலத்தில் உள்ளே நுழைந்தார். என் பேண்ட் எங்கே? என் கஞ்சிரா எங்கே?

‘அதுவா, புத்தம் புது பேண்டை இடுப்பிலே கட்ட மனசு வரலே. லஜ்ஜையைவிட்டு வேறே என்ன மார்க்கம்னு எட்மாஸ்டர் சார் கிட்டே கேட்டேன். ஏன் கேக்கறீங்க? தையல்கடை தோத்துது. வீடு முழுக்க ஊர்க்காவல் ரோந்துக்கார உடுப்புதான் குவிச்சு வச்சிருக்கார். சப்ளை காண்ட்ராக்ட் எடுத்திருக்காராம். நானும் ஒரு ஜதை வாங்கிக்கிட்டேன். ஏஆர்பி இல்லேன்னாலும் வேலைக்காவறதா ஏதோ ஒரு யூனிபார்ம்…’

பெருமையோடு தன் நிஜாரை இழுத்துவிட்டுக்கொண்டு புன்சிரித்தார்.

என் கஞ்சிரா கனவுகள் கரைய, விடிகாலை பஜனையில் அரை நிஜாரோடு டேப் அடித்துப் பாடிப் போகும் ரிடயர்ட் ஹெட்மாஸ்டர் ஒரு கணம் மனதில் வந்து போனார். அது வெறும் இஞ்ச் டேப்தான். நுணுக்கமாகச் செய்து வந்த கஞ்சிரா இல்லை என்பதில் ஒரு சின்ன ஆசுவாசம் எனக்கு.

‘நம்ம வீட்டுலேயும் வரச் சொல்லியிருக்கேன்’ என்று பொதுவாக அவர் சொன்னார். அவருடைய பெண்டாட்டியையும் ரோந்து போகக் கூட வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்று புரிந்துகொண்டேன்.

ஹெட்மாஸ்டர் எனக்கு எங்கள் தெருவுக்கு மேற்கே வரிசையாக மூன்று தெருவும், தென்மேற்கே ஒன்றுமாக இன்றைக்கு ரோந்து போக டியூட்டி கொடுத்தார்.

பூட்டி வைத்திருந்த மேஜையைத் திறந்து எனக்கும் நாயக்கருக்கும் நீளமாக ஆளுக்கொரு பிகிலும் எடுத்துக்கொடுத்தார்.

நான் வெளியே வந்து இருட்டில் நின்று ஆசை தீர விசில் ஊதினேன்.

இதுக்காகவே யுத்தம் ஓயாமல் இருக்கட்டும் என்று அல்பமான ஆசை மனதில் படர்ந்தது. ரத்னா குரல் மெல்லிசாக, பக்கத்தில் எங்கோ கேட்டது –

‘வார்டரே, இருட்டுலே பூச்சி பொட்டு ஏதும் கண்ட இடத்திலேயும் கடிச்சுதுன்னா வீங்கிடும். உம்மாலே ரோந்து வர முடியாது. உள்ளே வாங்க.’

‘குறிப்பா என்ன மாதிரி ரோந்து ட்யூட்டி பார்க்கணும்?’ ஹெட்மாஸ்டரைக் கேட்டார் மிருதங்க நாயக்கர்.

‘என்ன, தெருவிலே யார் வீட்டுக்கு உள்ளே இருந்தாவது வெளிச்சம் தெரிஞ்சா, விளக்கை அணையுங்கன்னு சத்தம் போடணும். பிகில் ஊதணும். அப்படியும் அணைக்கலேன்னா, வீட்டுக்கு உள்ளேபோய்

எச்சரிக்கை செய்யணும். இன்னொரு தடவை லைட் போட்டு இருந்தா, போலீஸ்காரரை கூட்டி வருவோம்னு இதமா பதமா சொல்லணும். ஜன்னல்லே கருப்பு காகிதம் கிழிசல் இல்லாம ஒட்டியிருக்கான்னு அங்கங்கே செக் பண்ணனும். கிழிஞ்சாலும் கதை க்ளோஸ்தான். சத்தம் போடணும். சந்தேகத்துக்கு இடமானபடி நடமாடறது, தெரு ஓரமாக குத்த வைக்கிறது இப்படி கண்ணுலே பட்டா போலீஸ் மாதிரி விசாரிக்கணும்... எச்சரிக்கணும்... அப்புறம், ஜப்பான் ப்ளேன் குண்டு போட வந்தா சைரன் சங்கு பிடிச்சு... அதை நாளைக்கு சாவகாசமா சொல்றேன். ஜப்பான்காரன், ஞாயித்துக் கிழமை இன்னிக்கு ஒருநாள் பிள்ளைகுட்டி, பெண்ஜாதியோடு சுகமா இருந்துட்டுப் போகட்டும்.'

வேலை விவரங்கள் உபதேசிக்கப்பட்டு, சைக்கிளில் ரவுண்ட்ஸ் புறப்பட்டோம்.

ரத்னா பாய் முதலில் தென்மேற்கு திசைத் தெருவில் ஆரம்பிக்கலாம் என்றாள். அவளுடைய சிநேகிதி ஒருத்தி அங்கே உண்டாம். நல்ல டீ போடுவாள் அவள் என்று உபரி தகவலும் தந்தாள்.

★

தென்மேற்கு திசைத் தெருவுக்கு அதேபடிக்குத்தான் பெயர் இருக்கும்.

ஜம்பமாக ரத்னாபாயிடம் சொல்லிவிட்டு சைக்கிளில் இரண்டு பேரும் ஏறிக்கொண்டு முன்நோக்கி ஊர, தென்மேற்கிலே கிடக்கும் தெருவுக்கு இந்த ராத்திரி விடிவதற்குள் போய்ச்சேருவோம் என்றே தோன்றவில்லை. குளிர் சன்னமாகக் கூட வர நீண்ட பாதை.

மேலே அட்டை ஷேடு வைத்து அடைத்த பெட்ரோமாக்ஸ் விளக்கோடு யாரோ சைக்கிளில் எதிரே வர என் வாகனத்தை நிறுத்தினேன்.

கேரியரில் பெட்ரோமாக்ஸ் விளக்கோடு சைக்கிள் மிதித்து நகர்ந்து போக யுத்தகால பிளாக் அவுட் தடை எதுவும் இல்லையா? இருக்கும்.

இல்லாவிட்டால்தான் என்ன, புதுசாக சேர்த்துக்கொள்ள வேண்டியது தான். ஜெர்மன் விமானம் பெட்ரோமாக்ஸைத் துல்லியமாக இனம் கண்டு விடும். ஜாக்கிரதை தேவை.

'அண்ணா, முப்பது வருஷம் முந்தி எம்டன் மெட்றாஸ் ஆர்பர்லே குண்டு போட்டபோது எங்கே இருந்தீங்க?' என்று வந்தவனைக் கேட்டேன். பேச்சை

இப்படித்தான் சுபாவமாக ஆரம்பிக்கவேண்டும்.

‘ஏன் சார் ராத்திரி வழி மறிச்சு கேட்க இது என்ன ராஜாங்க ரகசியமா, இங்கேதான் இருந்தேன்.’

அவன் பெட்ரோமாக்ஸை கேரியரில் இன்னும் நேராகக் கட்டி வைத்தபடி சொன்னான். பேச்சு முடிந்து கிளம்ப ஏதோ அவசரம் தெரிந்தது. அவனுக்கு எல்லாம் அவசரம், எனக்குச் சகலமும் சாவகாசம்.

‘எம்டன் குண்டு தெரியும். ஆனா ப்ளாக் அவுட் நேரத்திலே கையிலே விளக்கோட திரியக்கூடாதுன்னு தெரியாது போச்சு, அப்படித்தானே?’

அடுத்த தர்க்கபூர்வமான கேள்வியை எடுத்தேன்.

‘அப்போ எங்க ஆத்தா இடுப்பிலே சுமந்து போனதாலே ப்ளாக் அவுட் எல்லாம் கவனிச்சிருக்க மாட்டேன். ரெண்டு வயசு இருப்பேனா?’

என்னைக் கேட்டா? அவனிடம் கேட்க வாயைத் திறந்தபோது, வந்தவன் என் வயசுக்காரன்தான் என்று மனசில் பட்டது. அவனுடைய முழு வழுக்கைத் தலை வயசான தோற்றத்தைக் கொடுத்ததோ என்னமோ.

விசாரிக்கவேண்டும். பெட்ரோமாக்ஸ் விளக்கைத் திருடிக்கொண்டு போகிற ஆளாக இருக்கலாம். அதைக் கொளுத்தி வைத்து ஏன் கொண்டு போகவேண்டும்?

மனம் கேட்க புத்தி உடனே பதில் சொன்னது – கொளுத்திய விளக்கைத் திருடிப் போகிற அவசரமாக இருக்கலாம். விசாரி. ஏஆர்பி வார்டனாக செயல்படு.

விசாரித்தேன். ஆள் அடையாளம், ஊர், தெரு எல்லாம் சொன்னான். பெட்ரோமாக்ஸ் திருடனாக இருக்கமாட்டான்.

‘பெட்ரோமாக்ஸ் லைட்டோட, கொளுத்தாம இருந்தால்கூட, யுத்தகால ராத்திரியிலே வெளியே போறது தப்பாச்சே. இனிமே போகாதீங்க’ என்று பொறுப்பான சர்க்கார் உத்தியோகஸ்தனாகப் புத்திமதி சொல்ல, ரத்னா பாய் சரிதான் என்று தலையசைத்து ஆதரவு தருவாள் என்று எதிர்பார்த்தேன்.

‘பெட்ரோமாக்ஸ் விளக்கு கொளுத்தாமல் கூட எடுத்துப் போகக்கூடாதுன்னு எந்தச் சட்டத்திலே எழுதி இருக்கு?’

அவள் ஆர்வமாகக் கேட்க, அதானே என்றபடி என்னைப் புழுப்போல் பார்த்து அவன் சைக்கிளை ஓங்கி மிதித்து என்னைக் கடந்து போனான். வெறுத்துப் போனது. என் செய?

நான் ஒன்றும் பேசாமல் சைக்கிள் மிதித்து உத்தேசமாக ஊர்ந்து வந்த பாதி இருட்டுத் தெருவாகத்தான் இருக்கவேண்டும், நாங்கள் தேடிப் போய்க்கொண்டிருக்கும் தென்மேற்கில் அமைந்த தெரு.

முதல் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த பெரியம்மாவிடம் 'அவ்வா, இது என்ன தெரு?' என்று கேட்டாள் ரத்னா பாய்.

'ஏன் கண்ணு, என்ன சந்தேகம், இது கிழக்குத் தெருவேதான்' என்றாள் கிழவி.

தென்மேற்கு திசைத் தெருவுக்குக் கிழக்குத் தெரு என்று பெயர் சூட்டியவர்கள் யாராக இருந்தாலும் சரி, ஒரு மைக், நாலு ஒலிபெருக்கி, ஜவ்வந்திப் பூ மாலை, சோடா கலர், ஜரிகைத் துண்டு, நாலு பேச்சாளர்கள், ஒரு தலைவர் என்று ஏற்படுத்தி மீட்டிங் போட்டு அவர்களின் அபரிமிதமான அறிவைப் பாராட்டியே ஆகவேண்டும் – லோக்கல் கவர்மெண்ட் மற்றும் உணவு இலாகா அனுமதி கொடுத்தால். ஆமா, அது ரொம்ப முக்கியம்.

அந்தத் தெருவில் கடைசிக்கு முந்தைய வீடு ரத்னா சிநேகிதி இருப்பது என்று அதற்குள் பத்து தடவை சொல்லிவிட்டாள் அவள்.

சைக்கிளை அந்த வீட்டு ஆளோடியில் நிறுத்திப் பூட்டினேன். தம்பதி சமேதராக, அடைத்திருந்த வாசல் கதவுக்கு அருகே போகும்போது, வீட்டில் குழந்தைகள், பெரியவர்கள் இருக்கலாம், வெறுங்கையோடு வந்திருக்கோமே என்று பட, ரஸ்க் வாங்கிக்கொண்டு அப்புறம் வரலாமா என்று ரத்னாவைக் கேட்டேன்.

'ரோந்து போறபோது இதெல்லாம் பார்த்தா தினம் சைக்கிள் கேரியர்லே பெட்டியைக் கட்டி வச்சு, பேக்கரிக்காரன் மாதிரி ரொட்டி, பன், பிஸ்கட் அடைச்சுக்கிட்டுத்தான் கிளம்பி வரணும்', என்றாள் அவள்.

வாசல் ஓரமாகச் சுருண்டு படுத்திருந்த ஒரு சோனி நாய் குரைக்க, தொலைவில் எங்கேயோ அதை ஏற்று வாங்கி இன்னும் இரண்டு அலற, வாசல் கதவைத் திறந்தபடி வந்து நின்ற பெண்ணை ஊர்மிளா என்று அன்போடு விளித்தாள் ரத்னா.

சௌக்கியமா இருக்கியாடி என்று ராத்திரி எட்டு மணி சொச்சத்துக்கு பொதுவாக நலம் விசாரிக்க, அந்தப் பெண் சகலரும் சௌக்கியம் என்று நற்சொல் இயம்பி எங்கள் இரண்டு பேரையும் வரவேற்று உள்ளே கூட்டிப் போனாள்.

ரொம்ப நாள் ஆச்சு பார்த்து என்று அவர்கள் மாறிமாறிச் சொல்லிக்கொண்டிருக்க, சும்மா புன்சிரித்தபடி வீட்டைச் சுற்றிக் கண்ணை ஓடவிட்டு வார்டனாகப் பார்த்தேன்.

ஜன்னலில் கருப்புக் காகிதம், குறைந்த பட்ச விளக்குகள் எரியும் வீட்டு ஹால், இருட்டில் சமையல்கட்டு, சத்தம் குறைத்து வைத்த ரேடியோ என்று பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஆதரவான யுத்தகால நடுவாந்திர வர்க்கத்தின் வீடு அது.

ரேடியோவுக்கு முன்னால் ஈசிசேர் போட்டு உட்கார்ந்து ஊர்மிளா மணாளன் என்று சொல்லத்தக்க என் வயசுக்காரன் கச்சேரியில் முழுகி இருந்தான்.

ராத்திரி எட்டு முதல் ஒன்பது மணி இருபது நிமிடம்வரையான கச்சேரியில் மதுரை மணி ஐயர் சுஸ்வரமான சங்கீதம் பொழிந்து கொண்டிருந்தார். நானும் ரேடியோ பக்கம் போய் நின்றேன்.

‘பிள்ளைங்க பாட்டி வீட்டுக்கு, அதான் என் பிறந்த வீட்டுக்குப் போயிருக்காங்க’ என்றாள் ஊர்மிளா என்னும் பெண் பொதுவாக.

தலையசைத்துச் சிரித்து வைத்தேன். அடடா என்றாள் ரத்னா பாய் குழந்தை இல்லாததுபற்றிய கவலையைச் சற்றே வெளிப்படுத்தி. எங்களுக்கு அந்தப் பாக்கியம் இல்லாததற்கும் சேர்த்துத்தான் அது. அதெல்லாம் இருக்கட்டும்.

சார், உக்காருங்க என்று ஊர்மிளா ஒரு மர முக்காலியைப் போட அவள் புருஷன் அதில் உட்கார்ந்து என்னை ஈசிசேரில் உட்காரச் சொல்லிக் கண்ணால் விண்ணப்பித்துக்கொண்டான்.

‘தாயே யசோதா உந்தன் ஆயர் குலத்துதித்த…’

ரேடியோவில் மணி அய்யர் தோடி உருப்படியை எடுத்து இனிமையைக் குழைத்து பெருக விட்டபடி இருந்தார்.

‘காலினில் சலங்கை கொஞ்ச’ என்ற அடிக்கு வந்தார் அவர். அங்கே சர்க்கரை மண்டபத்தில் உட்கார்த்தித் தேன் ஒரு கோப்பை நிறையக்

கொடுத்ததுபோல் சரம் சரமாக நிரவல் செய்து அவர் குரல் கொஞ்சி, கெஞ்சி யசோதாவிடம் கண்ணனைப்பற்றி நிறுத்தாமல் புகார் சொன்னது.

தோடி ராகம் முடியாமல் தொடர்ந்து போகட்டும் என்று மனம் கோரிக்கை விடப் பாட்டைக் காதில் வாங்கிக் கண்ணை மூடி அது வெளியே போகாமல் மனதில் தேக்கி அதில் அமிழ்ந்தேன்.

இப்படி நாலு கச்சேரி வாரம் முழுக்கக் கேட்கக் கிடைத்தால், வைஸ்ராய் லின்லித்கோ, மகாத்மாவை தனிநபர் சத்யாகிரஹம் தொடங்கியதற் காக ஜெயிலில் போட்டிருக்க மாட்டார். கஸ்தூரிபாவும், தீரர் சத்தியமூர்த்தியும் வீட்டில் இருந்திருப்பார்கள். நேதாஜி பிரிட்டிஷ் சர்க்காரிடமிருந்து தப்பித்து ஜெர்மனியில் ஹிட்லரைச் சந்திக்க விமானத்தில் போயிருக்க மாட்டார். ஹிட்லர் அடங்காமல் ஆட மாட்டான். ஜின்னா, தேசத்தைத் துண்டாடச் சொல்லிக் கேட்காமல் காந்தியோடு பேச்சு வார்த்தைக்கு சம்மதித்திருப்பார். உலகமே சீராக இயங்கிக்கொண்டிருக்கும்.

ரேடியோவோடு சேர்த்து பக்கத்தில் இசைத்தட்டு கேட்கும் ரேடியோ கிராம் வசதியும் இருந்ததைக் கவனித்தேன். பிலிப்ஸ் கம்பெனி தயாரிப்பு. என்னுடையதுபோல் உள்ளூர் சரக்கு இல்லை.

தோடியோடு கச்சேரி முடிய சரியாக ஒன்பது மணி இருபது நிமிஷம்.

இதென்ன ராத்திரி விஜயம் என்ற ஊர்மிளாவின் நியாயமான கேள்விக்கு திருப்தியோடு ரத்னா பாய் ஏஆர்பி வார்டன் நியமனம்பற்றிய பெருமையை தன் அன்புச் சிநேகிதியிடம் பகிர்ந்து கொண்டாள்.

‘பாம்பே ஹல்வா ஹவுஸ் ஜிலேபி கொடுத்துச் சொல்லவேண்டிய சந்தோஷ சமாசாரம் இது. பரவாயில்லே நாளைக்கு ஸ்வீட் கொண்டு வா’ என்று சலுகை காட்டினாள் ஊர்மிளா.

ஊர்மிளா வீட்டுக்காரன் நான் எதிர்பார்த்தபடி மத்திய சர்க்கார், லோகல் கவர்மெண்ட், பஞ்சாயத்து போர்ட் என்று எங்கும் உத்தியோகஸ்தனாக இல்லை. ப்ரசிடென்சி காலேஜில் இங்கிலீஷ் லெக்சரர் ஆக இருக்கிறானாம். ஊர்மிளாவும் சௌகார்பேட்டை பெண்கள் பள்ளியில் எஸ்எஸ்எல்சிக்கு அல்ஜீப்ராவும் ஜாமெட்ரியும் போதிக்கிற கணக்கு வாத்தியாரம்மாளாம். உள்ளே தூங்கிக்கொண்டிருக்கிற ப்ரபசரின் அப்பா ஆப்பிரிக்க நாட்டில் பள்ளிக்கூட வாத்தியாராக இருந்து ரிடையர் ஆகி ஊரோடு ஒதுங்கி ஒரு வருடம்தான் ஆகிறதாம்.

கற்றோர் அவை அந்த வீடு. அங்கே எனக்கும் ரத்னாவுக்கும் என்ன வேலை என்று மனசு விசாரித்தது. அதுவும் ஏஆர்பி வார்டனாக முதல் ரோந்து போகும் தினத்தில்.

‘உங்களுக்கு ரிகார்டுலே மியூசிக் கேக்கற விருப்பம் உண்டா?’

ப்ரபசர் கேட்டார். ரிக்கார்டிலே மூன்று நிமிஷத்தில் ‘சிவலோக நாதனைக் கண்டு சேவித்திடுவோம் வாரீர்’ என்று அடித்துப் புடைத்து தரிசனம் செய்ய என்னால் ஆகாது என்று அவரிடம் சொன்னேன்.

மாயாமாளவ கௌளம் காலில் வென்னீரைக் கொட்டிக்கொண்ட பதைபதைப்போடு பாடி முடிக்கிற ராகமா என்ன?

‘எனக்கு ரேடியோ –ரேடியோகிராம் சரிப்பட்டு வரலே சார். அது ரிப்பேர் ஆச்சுன்னா ரேடியோவிலே முள்ளு திருப்ப முடியாம, திருச்சி ஸ்டேஷன்லே போய் நின்னுடுது’ என்று என் டேர்ன் டேபிள் ரேடியோகிராம்பற்றிய புகாரையும் பகிர்ந்துகொண்டேன்.

‘இந்த மாதிரி உருப்படி கேட்கறதுக்கு பதில் திருச்சி ரேடியோவிலே பிரசங்கம் கேட்கலாம். இதுவும் தோடிதான். கேளுங்க’

ப்ரபசர் ஒரு ரிக்கார்டை எடுத்து, ஈசிசேரில் தலைக்குப் பின்னால் விரித்துப் பரத்தி இருந்த குற்றாலத் துண்டில் துடைத்துவிட்டு அதை டர்ன் டேபிள் ரேடியோகிராமில் வைத்து சுழலவிட்டார்.

‘உண்டு குலதெய்வம் ராமன்’ என்று அவசரமாக ஒரு குரல். தோடியில் இன்னுமொரு உருப்படி. சரசரவென்று வழுக்கிக்கொண்டுவந்து ‘கோதண்டபாணி என்னும் தீன சரண்யன்’ என்ற அடி. நிரவல் செய்கிறேன் பேர்வழி என்று கோவோடு முறித்து தண்ட பாணி என்னும் தீன சரண்யன் என்று கோதண்டபாணியை கோ–தண்ட–பாணியாகக் காலை உடைக்கிற கொடுமை தீர ரிகார்ட் சுழன்று நின்றது.

‘பயங்கரம்’ என்றார் ப்ரபசர். ‘ஆமா’ என்றேன். நிச்சயமாக அப்படித்தான்.

‘பால் காய வைச்சு சூடா ஒரு டீ போடறேன். குடிச்சுட்டு ரெண்டு பேரும் ரேடியோகிராம் வித்வானை கரிச்சுக் கொட்டுங்க’ என்றாள் ஊர்மிளா.

‘இன்னொரு நாள் வரோம். ட்யூட்டியிலே இருக்கோம்’ என்று சட்டென்று எழுந்தாள் ரத்னா பாய்.

அங்கே போன காரியமும் நான் உத்தியோகம் பார்க்கிற நேரத்தில் பாட்டு கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்ற அவலமும் மனதில் மேலெழுந்து வர, நானும் உடனே வெளியே போக அவசரப்பட்டேன்.

‘அப்ப வெதுவெதுன்னு பால்லே காப்பி தரேன். டிகாஷன் இப்பத்தான் போட்டு வச்சேன். குடிச்சுட்டு தெம்பா ரோந்துபோய் ஜெர்மன் ப்ளேனை விசில் ஊதி விரட்டுங்க’ என்று ஊர்மிளா இருண்ட சமையல்கட்டுக்குப் போக ரத்னா அவளைப் பின் தொடர்ந்தாள்.

அவள் ரெண்டு நிமிஷத்தில் கொண்டுவந்த லேசான சூடு காப்பியில் எல்லாம் இருந்தும் ஏதோ குறைந்ததாகத் தோன்றியது. அதை மேலே எடுக்க வேண்டாமென்று, சாவகாசமாக ஒருநாள் வந்து சங்கீதம்பற்றிப் பேசறேன் என்று ப்ரபசரிடம் பிரியாவிடை பெற்றேன்.

விசிலை நீளமாக ஊதிக்கொண்டு சைக்கிள்விட்டுப்போக, சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டீஷ் சாம்ராஜ்யத்துக்கு ரெண்டாவது உலக மகா யுத்தத்தில் ஜெயம் ஜெயம் என்று ராப்பறவை ஒன்று தலைக்கு மேல் மெல்ல சத்தம் போட்டுச் சொல்லிப் போனது. ஏஆர்பி விசிலூதினேன்.

‘திருடன்... திருடன் வந்திருக்கான்’

என் ஏஆர்பி வார்டன் விசில் சத்தத்தை மீறி இரைச்சலாக யாரோ சத்தம் போட்டார்கள். கிழக்குத் தெருமுனை வீட்டுத் திண்ணையில் கிழவி சுருண்டு படுத்திருக்க வாசல் கதவு திறந்து முண்டாசும் வலை பனியனுமாக யாரோ.

‘புத்தம்புது சைக்கிளை தூக்கிட்டு போயிட்டானே எவனோ.’

அவர் குரல்விட்டுக்கொண்டு எங்களைப் பார்த்தார். ‘தீஃப் சார்’ என்றார். சோர் சோர் என்று அடுத்து இந்துஸ்தானியிலும் அறிவித்தார். நான் பார்த்துக்கொண்டு நின்றேன். விசில் ஊதினேன். வேறே என்ன செய்ய?

ஆக பெட்ரோமாக்ஸ் விளக்கு இல்லை களவு போனது.

‘ஜாக்கிரதையா இருக்கணும். யுத்த காலத்திலே சைக்கிள் போன்ற தளவாடங்களை பத்திரமா வச்சுக்கணும். வீண் செலவைத் தடுக்கணும். முடிஞ்சா வீட்டுக்குள்ளேயே நிப்பாட்டி வச்சுக்கலாம்.’

சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் சீரியஸாகப் புத்திமதி சொல்லிவிட்டுப் புறப்பட்டோம். வீடு திரும்பலாம் என்றாள் ரத்னா பாய். சரி என்றேன்.

வண்டி நகர, அவள் நிறுத்தச் சொன்னாள். கொஞ்சம் பொறுங்க என்றபடி தெரு முனையில் குந்தி அமர்ந்தாள் பாவை.

‘ஊர்மிளா நம்ம அவசரத்துலே குழம்பிப்போய் உறைகுத்தி வச்ச பால்லே காப்பி போட்டுக் கொடுத்திட்டா.’

முதல்நாள் ஏஆர்பி வார்டன் வேலை ஒரு மணி நேரம் அரட்டை, பத்து நிமிஷம் ட்யூட்டி என்று விசில் நாலு தடவை ஊதியது, பத்து நிமிஷம் ஓரமாக இருந்து வாந்தி எடுத்தல் என்று கடந்துபோனது.

வீட்டுக்குத் திரும்பியபோது பத்து மணி அடித்தது. நாளைக்கு உத்தரவு கைக்குக் கிடைத்ததும் வார்டனாக இருக்கத் தொடங்கலாம், யார் வீட்டுக்கும் போக வேணாம் என்றபடி ரத்னா பாய் கதவடைத்து வந்தாள்.

சந்தனம் மணக்கும் அவள் தேக சூட்டுக்குள் பத்திரமாக ஐக்கியமான போது வெளியே நீளமாக ஏர் ரைட் வார்டனின் விசில். ஜன்னலில் தட்தட்டென்று தட்டும் ஒலி. கேட்டபடி கண்ணை மூடிக் கொண்டேன்.

நாளைக்காவது ப்ளாக் அவுட்டுக்கான கருப்புக் காகிதம் புதிதாக வாங்கிவந்து வாசல் ஜன்னலில் பத்திரமாக ஒட்டவேண்டும்.

★★★

மூன்று

# ராமோஜி நகர் நீங்காத 1942 மதறாஸ்

கொட்டக் கொட்ட முழித்துக்கொண்டு எங்கள் வீட்டில் நானும் ரத்னா பாயும். தெருவில் முதல் வீட்டிலும், கடைசி வீட்டிலும் சேர்த்து நாலைந்து பேர்வழிகள் உண்டு. மற்ற வீடெல்லாம் கதவடைத்துப் பூட்டி திண்டுக்கல் பூட்டு தொங்கிக்கொண்டிருக்கிறது.

பேட்டை முழுக்க ஆள் நடமாட்டம் உள்ள வீடுகளைவிட பூட்டிய வீடுகள் அதிகமாகத் தட்டுப்படுகின்றன. பலசரக்குக்கடை, பெட்டிக்கடை, காப்பிக்கடை என்று வீடுகள் உள்வாங்க, வீட்டு வாசலில், திண்ணையில் தடுப்பு எழுப்பி வைத்துப் பரபரப்பாக வியாபாரம் நடக்கும் சின்னச் சின்னக் கடைகளையும் அடைத்துப் பூட்டியானது.

தெருக்கோடியில் உட்கார்ந்து ரப்பர் வளையல் போட்ட கையால் முழம் போட்டு மல்லிகைப்பூ விற்கும் பூக்காரியும் நேற்றிலிருந்து காணாமல் போனாள்.

இன்று தமிழ் வருஷப் பிறப்பு. பண்டிகைக்கு அடையாளமாக ஒரே ஒரு வீட்டில் முகப்பில் மாக்கோலம் கண்ணில் படுகிறது. நாலு இழை திடமாக இழுத்து ரத்னா பாய்தான் வீட்டு வாசலில் கோலம் போட்டிருக்கிறாள். கோலத்தைச் சுற்றி செம்மண்ணைப் பட்டையாகத் தீற்றவும் மறக்கவில்லை அவள்.

தினசரி பேப்பர் திண்ணைக்கும் ரேழிக்கும் குறுக்கே கதவோரமாகக் கிடக்கிறது... நாளை பேப்பர் வருமோ என்று தெரியவில்லை. வந்தாலும் யுத்தச் செய்தி தவிரப் புதுசாகப் படிக்க அதில் ஏதுமிருக்காது. யுத்தத்துக்கு அடுத்த முக்கியமான விஷயமான ரேஷன் பற்றியும் புதுசாக ஏதும் வராது.

உப்பு, புளி தவிர சகலமானதுக்கும் ரேஷன் ஏற்கெனவே அமுலில் இருப்பதால் ரேஷனில் புதுசாகச் சேர்க்க ஓர் உருப்படியும் கிடையாது. அடுப்பெரிக்க விறகுக்கு ரேஷன் வரப் போகிறதாக ரொம்ப நாளாக வதந்தி.

சர்க்கார் விறகுக்கடை, அடுப்புக்கரிக்கடை, கும்முட்டி அடுப்பு விற்கிற கடை என்று நடத்தினால் எப்படி இருக்கும் தெரியவில்லை.

ரேடியோ, நாள் முழுக்க ‘மெட்றாஸை காலி செய்துவிட்டு வெளியேறிப் போங்கள்’ என்று சகலரையும் வேண்டிக் கொண்டிருக்கிற செய்திதான் பத்திரிகையிலும் அச்சடித்து வந்திருக்கும். ரேடியோவில், அறிவித்த பிறகு நிலைய வித்வான் சோகம் கவிய கோட்டு வாத்தியம் வாசிப்பார்.

பேப்பரில் அந்தத் தொடர் மிரட்டல் இல்லை. என்னத்தைச் சொல்ல? யுத்தம் லண்டன், பெர்லின், மாஸ்கோ. பாரீஸ், டோக்யோ என்று சுற்றிவிட்டு இப்போது சென்னைப் பட்டணத்தைக் குசலம் விசாரிக்க நெருங்கி வந்தேவிட்டது.

எல்லாம் ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமையான போன வாரம் ஐந்தாம் தேதி, கொழும்பு துறைமுகத்தை ஜப்பான் விமானப்படையின் எழுபது சொச்சம் விமானங்கள் பப்படமாக நொறுக்கி கிட்டத்தட்ட ஐம்பது பேரைக் காவு கொண்டதில் தொடங்கியது. பிரிட்டீஷ் சமுத்திர சேனையின் ஒரு விமானம் தாங்கிக் கப்பலும், இரண்டு யுத்தக் கப்பல்களும் ஜப்பான் தாக்குதலில் சிதறியதாகத் தெரிய வந்தது.

இப்படி ஆள் சேதம், பொருள் சேதம் என்று கணிசமாக ஏற்பட்டாலும், வருத்தப்பட ஒண்ணுமில்லே என்று இங்க்லீஷ்கார இலங்கை கவர்னர், நம்பிக்கை கொடுத்துப் பேசியதாகச் செய்தி. அதுவும் தமிழில் பேசினாராம். கொழும்பில் இறந்த பலரும் தமிழர்கள் என்றும் தெரிய வந்தது.

கவர்னர் தமிழில் பேசியதற்காக நாலு பேர் சந்தோஷப்படலாம். என்றாலும் ‘ஐம்பது பேர் பரலோகம் போனதெல்லாம் ஒரு விஷயமே இல்லை, லண்டனில் தினம் தினம் போக்குவரத்து விபத்துகளில் இறந்து போகிறவர்களின் எண்ணிக்கை அது’ என்று அவர் பிரிட்டீஷ் சர்க்காரின் அசமஞ்சத்தனத்துக்குச் சப்பைக்கட்டு கட்டிப் பேசியது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாச்சு.

சகுந்தலா, மீராபாய் என்று ஏதாவது புனைபெயர் வைத்துக்கொண்டு இந்த ஏகடிய அதிகப்பிரசங்கம்பற்றி ‘தி ஹிந்து’ பத்திரிகைக்கு ஆசிரியருக்குக் கடிதம் எழுதினாலென்ன என்று யோசித்தேன்.

பத்திரிகை படிப்பதில் ஏற்படும் களைப்புக்கு கொஞ்சமும் குறையாத ஒன்று, அதற்குக் கடிதாசு எழுதணும் என்றதுமே வந்து சேர்கிற அலுப்பு.

இப்படி ஒருத்தர் மனுஷத்தன்மை இல்லாமல் பேசிவிட்டுப் போனது பற்றிய கடிதாசு வன்மையாகக் கண்டிக்கும் அல்லது ஓவென்று கட்டிப் பிடித்து

அழும் தொனியில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பு இருக்கிறதே.

என் இங்க்லீஷ் அதெல்லாம் செய்யாது. வேண்டுமானால் தொப்பியைக் கழற்றும். யாருக்கு எதுக்கு ஹாட்ஸ் ஆஃப்?

ஏப்ரல் ஆறாந்தேதி காக்கிநாடாவிலும், விசாகப்பட்டணத்திலும் ஜப்பான் விமானத் தாக்குதல் எனறு தகவல் வந்தபோது மெட்ராஸுக்கு தொடை நடுங்க ஆரம்பித்தது.

ஏப்ரல் ஏழாம் தேதி ஏதோ பொத்தானை எங்கேயோ யாரோ தவறாக அழுத்தி, சென்னைக்கு மேல் ஜப்பானிய விமானப்படை தாக்குதல் நடத்தப் போவதாக விடிகாலை நாலே முக்கால் மணிக்கு சைரன் அலற, பட்டணம் உச்ச பட்ச பிராண பயத்தில் கதவடைத்து வீட்டுக்குள் மத்தியானம்வரை அடைந்து கிடந்தது.

அப்புறம் பகல் சாப்பாட்டுக்காக அசைய நகர நிற்க உட்கார வேண்டிப் போனது. உயிர்ப் பயம் என்பதால் வாய்க்கு ருசியாகச் சாப்பிடாமல் இருக்க முடியுமா என்ன?

ஐந்து லட்சம் பேர். மெட்ராஸின் பாதி ஜனத்தொகை. இந்த ஜனக்கூட்டம் உயிருக்குப் பயந்து பட்டணத்தில் இருந்து வெளியேறிக்கொண்டிருக்கிறது.

ரயிலில், பஸ்ஸில், மாட்டு வண்டியில் காணும் பொங்கலுக்கு உசிர்க் காலேஜ், செத்த காலேஜ், கடற்கரை பார்க்கப் போகிற மாதிரி குடும்பம் குடும்பமாகப் பயணமாகிக்கொண்டிருக்கிறார்கள்.

எவாகுவேஷன் என்ற வார்த்தை எல்லார் நாக்கிலும் சரளமாகப் புரள ஆரம்பித்து விட்டது.

எழும்பூர் ரயில்வே ஜங்ஷனும் சென்ட்ரல் ஸ்டேஷனும் நித்திய கல்யாண உற்சவம்மாதிரி நாள் முழுக்க, ராத்திரி முழுக்க ஜனநெரிசலில் திணறுகின்றன. ஜனங்களை ஏற்றிக்கொண்டு மெட்ராஸ்விட்டு ஓடும் ரயில்கள் இலவச சேவையாகத்தான் பிரயாணப்படுகின்றன. யாரும் எங்கே போகவும் டிக்கெட் எடுக்க வேண்டியதில்லை. டிக்கெட் வாங்கணும் என்று வைத்தாலும், யார் டிக்கெட் கொடுக்க, யார் வாங்கின விஷயம் சோதிக்க?

மிச்ச சொச்சம் இல்லாமல் மெட்ராஸ் காலியாக வகை செய்யும் நல்ல நோக்கத்தோடு, முந்தாநாள், ஏப்ரல் பனிரெண்டாம் தேதி, ஞாயிற்றுக்கிழமை மதறாஸ் சர்க்கார் அதிகார பூர்வமான ஓர் அறிவிப்பை வெளியிட்டது.

அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது யாதெனில் – ‘மதறாஸ் பட்டணத்தைப் பயமுறுத்தும் போர் அபாயம் முன்னிருந்ததை விடத் தற்போது அதிகமாகி இருக்கிறது. எனவே அத்தியாவசியமான பணிகளைச் செய்ய மதறாஸில் இருக்கவேண்டியவர்களைத் தவிர மற்ற நகரவாசிகள் இன்னும் சில நாட்களுக்குள் பட்டணத்தைவிட்டு உடனே குடிபெயர வேண்டும். போக்கிடம் இல்லாதவர்கள் பக்கத்து கிராமங்களில் சர்க்கார் ஏற்படுத்தி இருக்கும் முகாம்களில் போய்ச் சேர வேண்டும்.’

உலகம் அழியப் போகிறது என்று சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் கவர்மெண்ட் முக்காடு போட்டு மூலையில் குந்தி உட்கார்ந்து அல்லல்பட்டு அழுது அலறுகிற பரிதாபம். உள்ளூரார்களை ஊரைவிட்டு விரட்டவா இந்த வெள்ளை மூஞ்சித் தடியன்களை சீமையிலிருந்து வரவழைத்து பக்கப் பதிய உட்கார்த்தியது?

‘தற்காலிகமாக நகரக் குடிமக்கள் சென்னையைவிட்டு வெளியேறு வதை சர்க்கார் விரும்புகிறது. அதி விரைவில் இந்த நிலைமை மாறி, அனைவரும் மீண்டும் அவரவர் இருப்பிடத்துக்கும், வேலை செய்யுமிடத்துக்கும் திரும்பி வருவதை சர்க்கார் எதிர்பார்க்கிறது. அதற்காக அரசாங்கம் பாடுபடும். இதை நடப்பாக்க எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவும் கவர்மெண்ட் தயங்காது.’

கவர்மெண்ட் அறிவிப்பு எழுதுகிற வேலை என்னுடையதாக இருந்தால் நான் இப்படித்தான் நம்பிக்கை தரும்படி எழுதி இருப்பேன். ரத்னா பாய் இன்னும் ஒரு வீசை கூடுதல் நம்பிக்கையைக் கசப்பு தூக்கலான காப்பியில் அஸ்கா ஜீனியைக் கரைத்து தித்திப்பாக்கியது போல் எழுதியிருக்கக்கூடும். அவளுக்குத் தமிழ் இன்னும் நன்றாகத் தெரிந்திருந்தால் என்று சேர்த்துக்கொள்வதில் வருத்தமில்லை.

இன்றைக்கு ஏப்ரல் 14. செவ்வாய்க்கிழமை. தமிழ் வருஷப் பிறப்பு. பண்டிகை கொண்டாடும் சந்தோஷமும் குதூகலமும் எங்கேயும் தெரியவில்லை. கூட்டம் கூட்டமாகத் தெருவில் போவோர் வருவாரும், கோவில்களில் புது வேஷ்டியும், முழுக்கால் சட்டை, அரைக்கால் சட்டையும், புதுப் புடவை, பாவாடை தாவணியுமாக ஒரு நிமிடம் வந்து சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டுப் போகிறவர்களும் ஆகக் குறைவு என்பதில் சந்தேகமில்லை.

பகல் சாப்பாட்டுக்கு களைகட்டும்படியாக பாயசம் இலையில் இட்டு உண்டும், குவளையில் பருகியும் களிப்படைவதுபற்றிய எதிர்பார்ப்போடு வீடு

போகிறவர்களாக யாரையும் நான் பார்க்கவில்லை. வேப்பம்பூ தூவிய இனிப்பு மாங்காய்ப் பச்சடியும் யாரெல்லாம் செய்து கொண்டாடினரோ.

வருடம் தவறாமல் காளிகாம்பாள் கோவிலுக்கும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலுக்கும் வருஷப் பிறப்பன்று காலையிலேயே போய் சண்டை, சச்சரவு, யுத்தம் எதுவும் தொடராமல் நின்று, எல்லாரும் சௌக்கியமாக இருக்க வேண்டுதலோடு அர்ச்சனை செய்து வருவது என் வழக்கம்.

வருஷப் பிறப்பன்று சாயந்திரம் மயிலை கற்பகாம்பாள் கோவிலில் இதேபோல, யுத்தம் தீர அர்ச்சனை செய்வேன். அங்கே புது வருஷ பஞ்சாங்கம் வாசிப்பதைக் கொஞ்ச நேரம் கேட்டுக்கொண்டிருந்து விட்டு ரேடியோவில் நியூஸ் நேரத்துக்கு வீடு திரும்புவேன்.

எங்கும் போகாமல் சைக்கிளைத் துடைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன் இப்போது.

‘கோவிலுக்குப் போயிட்டு வரலாமே, வாங்க’, ரத்னா பாய் கட்டாயப்படுத்தி என்னைக் கூட வரச் சொன்னதால் வெய்யில் தாழ மயிலாப்பூர் கிளம்பினேன்.

தோளில் மாட்டிய ஜோலா துணிப்பையில் பிளாஸ்திரி, டார்ச் லைட், டிங்க்சர், அயோடின், வலைத்துணி, பஞ்சு என்று எடுத்து வைத்துக்கொண்டேன். ஜப்பான்காரன் ரகசியமாக மெட்ராஸில் புகுந்து எங்களைக் குறி வைத்துக் கல்லெறிந்து, பாம் போட்டுக் காயம் உண்டாக்கினால் உடனடி சிகிச்சைக்கு இதெல்லாம்.

எல்லாம் இல்லை. டார்ச் லைட், தேவையானபோது கொஞ்சம் அடித்து, வந்த வெளிச்சத்தில் பாதையை அனுமானம் செய்து ஓடி ரட்சைப்பட.

ட்ராம் கிடைக்குமாவென்று அரை மணி நேரம் நின்றதில், யானைக்கவுனி போகிற ட்ராம் ஒன்றுக்கு ரெண்டாக வந்து போக, கண்டக்டரையும் டிரைவரையும் தவிர யாருமே சவாரி போகவில்லை.

‘சரி ஆனைக்கவுனி போய் அங்கே இருந்து திருவொற்றியூர் இல்லைன்னா, சௌகார்பேட்டையிலே நிமிஷாம்பாள் கோவிலுக்குப் போகலாம்’ என்றாள் செல்லப் பெண்டாட்டி.

‘நிச்சயம் பராசக்தி நிமிஷாம்பாள் அம்பாளை தரிசிச்சு லோக ஷேமத்துக்காக பிரார்த்தனை செய்யணும். ஆனாலும், கற்பகாம்பா கிட்டே இன்னிக்கு வரேன்னு சொல்லிட்டு நிமிஷாம்பா கோவிலுக்குப் போகலாமா? நாளைக்கு சீக்கிரம் ஆபீசிலே இருந்து வந்துடறேன். சௌகார்பேட்டை கோவில் ஒண்ணு விடாம போவோம். இப்போ மயிலாப்பூர்.’

நான் என் பங்கு நியாயத்தைச் சொன்னேன். சௌகார்பேட்டை போய்த் திரும்ப மெத்த நேரம் பிடிக்கும்.

யுத்த காலத்தில், அதுவும் கல்லென இருட்டின பிறகு, வடிவான இவளையும் வாடி பொண்ணே என்று கூட்டிக்கொண்டு தூரந்தொலைவில் அலைந்து திரிய மனசு கேட்க மாட்டேன் என்கிறது.

‘சௌகார்பேட்டையிலே ஒரு ஏகாம்பரேஸ்வரர் கோவிலும் இருக்காம். சுபாங்கி அம்மா சொன்னாங்க. மறந்துடாதீங்க. நாளைக்கு போயே ஆகணும்.’

நான் ரத்னாவை ஆச்சரியத்தோடு பார்த்தேன். ஊரோடு காலி செய்துகொண்டு மெட்றாஸைவிட்டு ஓடுகிறார்கள். இங்கே இன்றைக்கு இருப்பது ராத்திரிவரை நிச்சயம்; நாளை இருப்பது நாளைக்குத்தான் தெரியவரும் என்று அவரவர்களே தலையில் எழுதிக்கொண்டுவிட்டார்கள்.

இந்தப் பெண்ணரசியானால், நாளைக்கு மறந்துவிடாமல் சௌகார் பேட்டையில் கோபுர தரிசனத்துக்குப் போய்வர வேண்டும் என்கிறாள்.

‘உன்னோட திடமான நல்ல மனசுக்காக சௌகார்பேட்டை என்ன, நேரம் இருந்தா நாளைக்கு திருவொற்றியூர் கூடப் போவோம்.’

நான் சொல்லி முடிக்கும் முன் எழும்பூர் போகிற ட்ராம் லோத்ரா மகளிர் டானிக் விளம்பரத்தைச் சுமந்தபடி வந்து நின்றது. ஏறிக்கொண்டோம்.

‘மூக்குத்தூள் டப்பாவை எடுத்துட்டு வரலியே.’

ரத்னா பாய் ஓடும் டிராமில் இருந்து குதிக்கிற தயாரில் இருந்தாள்.

குதித்தாலும் ஒன்றும் ஆகாதுதான். அவ்வளவு மெதுவாகப் போகிற வாகனம். க்ளங்க் க்ளங்க் என்று சங்கிலிகள் சத்தம் போடுவது மட்டும் இன்னும் அடங்கி இருந்தால், ட்ராம் வருவதும் போவதும் தெரியாத பூனை நடையாக இருக்கலாம்.

‘இந்த மூக்குப்பொடி விவகாரத்தை இன்றைக்கு, தமிழ் வருஷப் பிறப்பு தினத்திலாவது கொஞ்சம் குறைத்துக்கொள்ளலாமே’ என்று அவளிடம் ஆளில்லாத ட்ராமில் உட்கார்ந்து மன்றாடினேன். ரத்னா விடாமல் கைப்பையில் இருந்து சின்னஞ்சிறியதாக ஒரு வாழை மட்டைச் சுருளை எடுத்துத் திறந்து ஒரு சிட்டிகை பொடியை விரலில் வைத்து இழுக்க, ட்ராம் டிரைவர் தும்மியது கேட்டது.

‘பொடியால் எந்தப் பிரயோஜனமும் இல்லை, உடம்பு ஆரோக்யத்துக்கு கெடுதல்–னு டாக்டர்கள் சொல்றாங்க’ என்று பொத்தாம்பொதுவாகக் குறிப்பிட்டேன். பொடி போடுகிற டாக்டரை நான் பார்த்ததில்லை. சிகரெட் குடிப்பவர்கள் உண்டுதான்.

‘கொஞ்சம் சும்மா இருங்களேன். சகல வலிமையும் கொண்ட பிரிட்டிஷ் சக்கரவர்த்தி ஆறாம் ஜார்ஜ் கோமகன் தினசரி பிடிக்கிற சிகரெட் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது என் நாசிகா சூரணம் உடம்புக்குள் போய்க் கெடுதல் உண்டாக்குவது கம்மிதான். அவரும் சிகரெட்டை விட்டொழித்து பட்டணம் பொடி உறிஞ்சினால் திக்குவாய் போய் சரளமாகப் பேசுவார்’ என்றாள் ரத்னா. இதெல்லாம் எங்கே படித்திருப்பாள்?

சந்தேகமென்ன? நாலு பக்கம் ஹரி ஹரி என்று ஹரி நாமம் சொல்கிற புராணம், தொடர்ந்து பல்லவனையும், சேர சோழ பாண்டியரையும் குதிரை ஏற்றிவிட்டு இன்னும் இறங்கவே விடாமல் கதைக்கும் கதா பிரவாகம், அப்புறம் முதலிலும் கடைசி நாலு பக்கத்திலும் காந்தி பஜனை. ரெண்டு பக்கம் உலக வியவகாரங்கள், பட்டணம் பொடி, சிகரெட் விளம்பரங்கள். ரேடியோ கச்சேரி முழுக்கக் கேட்டோ, கேட்காமலேயோ அலாதியான பிர்க்கா சாரீரம், போஷித்து வாசிப்பு என்று சங்கீத விமர்சனம். இப்படிக் கலந்துகட்டியாக அச்சுப் போடும் தமிழ் தின, வார, மாதப் பத்திரிகைகளில் சில அவள் வாசிப்பது.

அதில் ஒரு பத்திரிகையில் போன மாதம் கோகிலப் பூங்கோதை கச்சேரி விமர்சனத்தில் பூங்கோதைக்கு சுகமான சரீரம் என்று அடித்து வந்திருந்தது. நான் அந்தப் பத்திரிகையில் படித்த முதல் நிஜம் அதுவாக இருக்கக் கூடும்.

பூங்கோதை விஷயத்தில் குறில் நெடில் எல்லாம் பார்க்கக் கூடாது என்று மனசாரச் சொன்னால், ரத்னா இன்னொரு தடவை ட்ராமில் இருந்து குதிக்க முயற்சி செய்யக்கூடும். பூங்கோதை சங்கீதம் இருக்கட்டும். ரத்னா பொடி போடாமல் இருக்க அது ஒரு சுக்குவும் உபகாரம் செய்யாது.

யுத்தகாலம் என்பதால் அச்சடிக்க காகிதத்துக்கு கட்டுப்பாடு வைத்து சர்க்காரே விநியோகிக்க முறையீடு செய்து வாங்கி அச்சடித்து வெளியிட பக்கம் கம்மியாகி இளைத்துப் போனாலும், இந்தப் பத்திரிகைகள் எதுவும் விலையைக் கம்மி பண்ணுவதில்லை. விளம்பரங்களையும் குறைப்பதில்லை.

தொடர்ந்து இவற்றைப் படித்தால் சிகரெட்டும் பட்டணம் பொடியும் உடம்புக்கு கெடுதல் செய்யாது என்ற தப்பான அபிப்ராயம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

சிகரெட் மென்மையான நாகரிக வஸ்து, பொடி நாசுக்கானது என்று புகையிலை வம்சத்துக்கு சிம்மாசனம் அளிக்கவும் சந்தாதாரர்கள் தயங்க மாட்டார்கள். அந்த வாசக வரிசையில், சந்தேகமென்ன, ரத்னா முதலில் இருப்பாள்.

‘ஏம்பா ராமோஜி, மயிலாப்பூர் எறங்கணும்னு சொன்னியே, இல்லியா?’, ட்ராம் ட்ரைவர் என்னை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தபடி காத்திருந்தார்.

அது என்னமோ பட்டண ட்ராம் சர்வீஸில் கிட்டத்தட்ட அரைவாசி ட்ராம் கண்டக்டர்களும், அதே எண்ணிக்கையில் ட்ராம் ட்ரைவர்களும் எனக்கு சிநேகிதர்கள். ராமோஜி என்ற என் பெயர் சொல்லவும் மனசில் வைத்திருக்கவும் எளிமையானதாக இருப்பதால் அவர்களுக்கு மறப்பதே இல்லை.

இப்படி ஒரு செளகரியம் ஏற்படுத்திக் கொடுத்ததற்கு என் அப்பாஜி பத்துஜி சாருக்குத்தான் நன்றி பாராட்ட வேண்டும். அவரை அவ்வப்போது நினைப்பதே அவருக்குச் செய்கிற மரியாதை.

ரத்னாவிடம் இதைச் சொல்லியபடி நடக்க, அவள் கலகலவென நகைத்தாள். ‘அப்பாஜியை உங்கம்மா நினைவு வச்சிருந்ததே வேறே மாதிரி’ என்றாள்.

எப்படி என்றேன். கோவிலுக்குப் போகிறபோது அது எதுக்கு என்று மறுபடியும் சிரித்தாள்.

‘ஐந்து நிமிஷமாவது ஆகும் கபாலீஸ்வரரைத் தரிசிக்க. அதற்குள் எல்லாம் பேசி சிரிச்சு வைச்சுடலாம்’, என்று ஆர்வத்தோடு கேட்டேன்.

‘சரி, பக்கத்துலே இன்னும் நெருங்கி நடங்க!’ என்றாள்.

இதேது கேட்காமலேயே கிடைக்கிற அபரிமிதமான சலுகை என்று வியந்து கிட்டத்தட்ட பாதி உடலை அவளுக்கு ஈந்த மாதிரி கையைக் கோர்த்துக்கொண்டு நடக்க ஆரம்பிக்க, வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள்.

இத்தனைக்கும் ஆள் அரவம் ஒழிந்த வீதி. இருட்டு வேறு இந்தோ அந்தோ என்று பம்மிப் பம்மிக் கவிந்துகொண்டிருந்தது.

‘உங்கப்பாவுக்கு வாயுத் தொல்லை உண்டாமே, அம்மாஜி சொன்னாங்க.’

‘ஆமா, அவர் காலத்திலே நம்ம வீட்டுலே ரேடியோப் பெட்டி கிடையாது… அப்பாஜி ராத்திரி ஏழேகால் மணிக்கு பார்க் ரேடியோவிலே ந்யூஸ் கேட்டுட்டுத்தான் வீட்டுக்கு வர்ற வழக்கம். வரும்போதே ஆரம்பிச்சு ராத்திரி பதினொரு மணிக்கு தூங்கறவரைக்கும் டர்ர்ர்தான்… ராத்திரி அவரோட தூக்கத்திலே குறட்டை உண்டோ என்னமோ, வாயு மெத்த உண்டு பெண்ணே’, என்றேன்.

‘அப்பாஜியோட பழைய போர்வை ஒண்ணு… அம்மாஜி மடிச்சு மரப்பெட்டியிலே வச்சிருக்காங்களே அந்தப் போர்வைதான்… ஒரு நாள் அதை துவைச்சுக் காயவைச்சு மடியாக வைக்கணும்னு தோணிச்சு. அப்பாஜி சிரார்த்தத்துலே அவருக்கு பொடி கொடுக்கும்போது அதைக் கீழே விரிச்சுப் படைக்கலாமே… அவருக்கு பிடிச்ச வஸ்துவாச்சே… அந்தப் போர்வையை துவைக்கப் போனா அம்மாஜி வேணாம்னுட்டாங்க. சொல்றாங்க…’

‘என்னன்னு?’

கோவில் வாசலில் செருப்பு விடும் இடத்தில் வேறே பாதுகை எதுவும் காணோம். ரத்னாவானால் மறுபடி சிரிக்க ஆரம்பித்திருந்தாள்.

சொல்லிட்டு சிரி பெண்ணே.

‘அப்பாஜி இந்தப் போர்வையை போர்த்திக்கிட்டுத்தான் வாயு ஸ்தம்பனம் நடத்தினது. அவர் போய் மூணு வருஷமாச்சு. போர்வையிலே அவரோட வாயு வாசனை இன்னும் பத்து வருஷத்துக்கு வரும். அதுக்குள்ளே நான் போயிடுவேன். போர்வையை அப்படியே. வச்சிருப்போம். எனக்கு அப்பப்போ ஆறுதல் இந்தப் போர்வை தான…’ அம்மாஜி சொன்னாங்க’பா…’

அவள் சொல்லி முடிக்க, ஆளுக்கு ஒரு பக்கம் திரும்பிக் குனிந்து சிரித்தோம். ஊரோடு எவாகுவேஷன் என்று வெளியேறவில்லை என்றால்

புருஷன் பெண்ஜாதி போகடாத்தனமாக இப்படி வழிச்சுக்கொண்டு சிரிக்கற காரியம் என்னவாக இருக்கும் என்று வேடிக்கை பார்க்க மாட வீதி, லஸ், மந்தவெளி எல்லாம் அறுபத்து மூவர் உற்சவம் மாதிரி ஜனம் கூடியிருக்கும்.

‘பாவம் அதுக்கு ரெண்டு மாசத்துலே போய்ச் சேர்ந்துட்டாங்க... சொர்க்கத்திலே மாமனாரோடு சேர்ந்து நல்லா இருக்கட்டும்’ ரத்னா கைகூப்பியபடி சொன்னாள்.

கோவிலுக்குள் போனோம்.

வரிசையாக தீபம் ஏற்றி இருக்கும் நடையில் ஒற்றை விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. அறுபத்துமூவர் சிற்பங்கள் அழுக்கு வேட்டி அலங்காரமில்லாமல் அந்த வெளிச்சம் ஏற்படுத்திய கருப்பு வனப்பில் வெகு அழகாகத் தெரிந்தன.

நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். கற்பகாம்பாள் சந்நிதியிலிருந்து பெரிய குருக்கள் கையில் தீபாராதனைத் தட்டோடு வெளியே வந்தார்.

‘வாரும் ஓய் ராமோஜி. என்ன தேடிண்டிருக்கீர்?’ அவர் கேட்டார்.

‘இங்கே வெடவெடன்னு ஒரு சின்ன வயசுக் குருக்கள் நாயன்மாருக்கெல்லாம் தினசரி உடுத்தி விடுவாரே, இருக்காரான்னு பார்க்கறேன்... அழுக்கு வேஷ்டி இல்லேயேன்னு அறுபத்து மூணு நாயன்மார்கள்... சரி மூணு பெண் நாயன்மார்களை விட்டுடலாம்... அறுபது நாயன்மார்கள் ஒன்னு அழறாங்க.’ நான் நமுட்டுச் சிரிப்போடு விசாரித்தேன்.

‘இதானே வேணாங்கறது... உடுத்தி விடற குருக்களா? யாரு நம்ம மிருத்யுஞ்ஜெயனா? ரெண்டு நாளா ஆப்செஸ்ஸ் வித்தவுட் லீவ்... அவோல்... ஆளே காணோம். அவா ஏரியாவுலே குண்டு விழுந்ததாமே?’

பெரிய குருக்கள் யாரோ பரப்பிய பரபரப்பான வதந்தி நியூஸை என்னிடம் எடுத்துவிட்டார்.

‘அவர் என்ன லண்டன் பக்கத்திலே இருக்காரா சாமிகளே, ஜெர்மன்காரன் குண்டுபோட்டு சேதமாகி குத்த வச்சு உக்காந்திருக்க? மேல மாம்பலத்துலே தானே ஜாகை? கவலைப்படாதேயும்... அங்கே ஜப்பான்காரன் வரமாட்டான், கோழிக்குஞ்சு சைஸ்லே கொசு இருக்கே, அது பறந்து வந்து ப்ளேனை எல்லாம் ஓட ஓட விரட்டியடிச்சுடாது?’

நான் சிரித்துக்கொண்டே கேட்டேன்.

‘நீர் இப்படியே விகடம் பண்ணிண்டிரும். அவா மாம்பலம், உம்ம புரசவாக்கம், நான் இருக்கப்பட்ட மந்தவெளி இப்படி எல்லாத்தையும் ஒரு ராத்திரி அலாரம் வச்சு எழுந்திருந்து பந்து மித்ராள் சகிதமா புஷ்பக விமானத்திலே கிளம்பி வந்து ஒரு வழி பண்ணப்போறான் ஜப்பான்காரன்…’ என்றார் பெரிய குருக்கள்.

‘நீங்க எவாகுவேஷன் பண்ணிப் போகல்லியா குருக்களைய்யா?’ ரத்னா அவரை விசாரித்தாள். இந்தக் கேள்வி சம்பிரதாயமானதாக மாறி ஒரு வாரமாகி விட்டது.

‘ஏண்டி பொண்ணே, எல்லோரும் போயிட்டா கபாலியையும் கற்பகத்தையும் யார் வேளைக்கு ஸ்நானம் பண்ண வச்சு, உடுத்தி விட்டு, ஆகாரம் கொடுக்கறது? வயசான அம்மாவும் அப்பாவும் இந்த ஆத்திலே இருக்கா… அவாளை விட்டுட்டு போக முடியுமா?’

அவர் கர்ப்பகிருஹத்துக்குள் உரிமையோடு கைகாட்டிச் சொன்னபடி உள்ளே போனார்.

குருக்கள் ஒற்றைக் கற்பூரத்தை ஏற்றித் தீபம் காட்டினார். நானும் ரத்னா பாயும் அந்த ஒரு நிமிட பிரகாசத்தில் அம்மாவின் கடாக்ஷத்தில் கரைந்து லோக ஷேமத்துக்காகவும் யுத்தம் நிற்கவும் வேண்டிப் பிரார்த்தித்து உருகினோம்.

எப்போதும் சேர்ந்து கைகூப்பிக் கண் மூடி நின்று பிரார்த்தித்துக் குழந்தை வரம் கேட்போம். இன்றைக்கு ரெண்டு பேரும் அதை இன்னொருநாள் சாவகாசமாக இந்தப் பெரிசுகளிடம் பேசிக்கலாம் என்று வைத்துவிட்டோம்.

‘என்னைக் கேக்கறேளே, பட்டணமே பாதிக்கு மேலே காலியாயிடுத்தே… நீங்க என்ன பண்றேள்?’

நான் அர்ச்சனைத் தட்டில் போட்ட ஐந்து ரூபாயை எடுத்து வைத்துக் கொண்டபடி குருக்கள் சிரித்தார்…

‘ஸ்வாமிகளே, ரிடையர்ட் கவர்மெண்ட் உத்தியோகஸ்தர்களோட பென்ஷன் மாசாமாசம் கணக்குப் பண்ணி கூப்பிட்டுக் கொடுக்கற வேலைக்கு என்னை மாற்றிட்டாங்க. ஜப்பானியன் வந்தாலும் ஜெர்மன்காரன் வந்தாலும், பிரிட்டிஷ் ராஜ் வேலைக்காரன் நான். ட்யூட்டிக்குப் போயாகணும்.’

‘எசன்ஷியல் சர்வீஸஸ். அதுதானே? கெசட்டட் ரேங்க்லேயும் அது உண்டா? வார் டைம் ஆச்சு பாருங்க... வார் ஃப்ரண்ட்லே எக்கச்சக்கமா ஜாப் இருக்கும்... டென் ஏ ஒன் போஸ்டிங்குக்கும் எசன்ஷியல், நானெஸன்ஷியல்னு கேடகரைஸ் பண்ணி அனுப்பிடடலாம்னு வைஸ்ராய் யோஜிக்கறாராம்.’ குருக்கள் பொழிந்தார்.

‘அடியேன் கெசட்டட் இல்லே ஸ்வாமி..’ என்றேன் தன்னிலை விளக்கமாக.

‘என் ஜி ஓ ஆக இருந்தா என்ன, ஃபோர்ட் செயிண்ட் ஜார்ஜ் அபீஷியல் ஆச்சே... பத்து கெஸட்டட் ஆபீசர்களுக்கு சமானம்...’ என்று விடாமல் பிடித்தார் பெரிய குருக்கள்.

அதிகார வர்க்கம், அதன் அமைப்பு, தோற்றம், வளர்ச்சி, மற்றும் அதன் செயல்முறைபற்றி விரிவாகப் பேச, அலசி ஆராயத் தேவையான அறிவு அவரிடம் உண்டு என்று எனக்குத் தெரியும்.

நான் பார்த்தவரை நூல்காரர்கள் பலருக்கும் தேவையோ தேவையில்லையோ சகலவிதமான அறிவையும் எங்கே எங்கே என்று தேடிப் போய் வாங்கி மூளையில் சேர்த்து வைத்துக்கொள்வது தவிர்க்க முடியாத பழக்கமாகி விட்டிருக்கிறது.

கோயில் சுயம்பாகி என்ற மடைப்பள்ளி சமையல்காரர் ஒருத்தர், என்னமோ ஆர்வம் தூண்ட, டைப்ரைட்டிங் வகுப்புக்கு வந்து கொண்டிருந்ததை அடுத்த தெருவில் பார்த்திருக்கிறேன். அவரிடம் யாரோ சுதந்திரம் கிடைத்ததும் டைப் அடிக்கத் தெரிந்த எல்லோருக்கும் சர்க்கார் டைப்பிஸ்ட் வேலை கொடுக்கப் போகிறார்கள் என்று சொன்னதாகக் கேள்வி.

அந்த சுயம்பாகி இருக்கிறாரா என்று குருக்களை விசாரித்தேன்.

‘அதை ஏன் கேக்கறேள். முதல்லே போனவன் சுயம்பாகி கோவிந்தன் தான். சாமியைப் பட்டினி போடலாமா? தெரிஞ்சவரைக்கும் நானே பிரசாதம் பண்ணி நைவேத்தியம் செஞ்சுண்டிருக்கேன்... என்ன பாருங்கோ... எனக்குத் தெரிஞ்ச சமையல் வெண்பொங்கல்தான்... தினம் அதைத்தான் சுவாமியும் அம்பாளும் சாப்பிடறா... அலுத்துப் போய், பிராணதார்த்தி, என்னைத்தான்... நாங்க மாடவீதி மெஸ்ஸுலே கோதுமைத் தோசை சாப்பிட்டுக்கறோம்னு எழுந்து போய்ட்டு வரப்போறா ரெண்டு பெரியவாளும்.’

ப்ராணதார்த்தி குருக்களோடு சேர்ந்து நாங்களும் சிரித்தோம்.

‘குருக்களய்யா, நான் தினம் ஒரு வேளை நைவேத்தியத்துக்கு வீட்டிலே பிரசாதம் செஞ்சு எடுத்து வரட்டா?’

ரத்னா அவரிடம் அவசரக் கோரிக்கை வைத்தாள்.

ஒரு சங்கடமான மௌனம் நிலவியது.

‘இப்போதைக்கு வேணாம்... அப்புறம் தேவைன்னா சொல்றேன்.’

குருக்கள் அவசரமாகச் சொல்லி சுவாமி சந்நிதிக்குள் நடந்தார். ரத்னாவும் நானும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்தபடி வெளிப் பிரகாரத்துக்கு நடந்தோம். கேட்டிருக்கக்கூடாதோ என்று என் முகத்தைப் பார்த்தாள் ரத்னா. சிரித்தேன்.

நாங்கள் ட்ராம் நிற்கும் இடத்துக்கு நடக்க ஆரம்பித்தபோது தெருவிளக்குகள் ஒன்று இரண்டு தவிர மற்ற எதுவும் எரியவில்லை. ஒரு நிமிடம் நின்றோம்.

கோவில் குளத்துப் பக்கம் நடந்துபோய் அங்கிருந்து கோபுரத்தைத் தரிசித்துக் கன்னத்தில் போட்டுக்கொண்டு வருவதில் ரத்னாவுக்கு ஏகப் பிரியம் உண்டு. போகலாம் என்றாள் அவள்.

‘இந்த முக்கால் இருட்டுலே குளத்துக்குப் பக்கம் போகணுமா? பூச்சி பொட்டு ஊர்ந்துக்கிட்டிருக்கும். செயினைப் பறிக்க இருட்டில் எவனாவது நிற்பான். மிருகக் காட்சிசாலையில் இருந்து முதலை ஏதாவது தப்பி வந்து குளத்தில் மறைஞ்சு இருந்து நீயும் நானும் போகிறபோது காலைக் கவ்வி இழுக்கும். முதலை என்ன, ஜூவில் இருந்து தப்பிச்சு சிங்கம் புலி கூட ஊர்லே திரியறதுன்னு கேள்வி. அதெல்லாம் கூண்டைவிட்டு வெளியே வந்தா?’

நான் மெதுவாகச் சொன்னேன். சொல்லும்போது நானே அதை எல்லாம் நம்ப ஆரம்பித்துவிட்டேன். ரத்னா பாய் ஒரு வினாடி யோசனையில் நின்றாள்.

‘சரி வேணாம், இங்கே பக்கத்திலே ஏதாவது மெஸ் திறந்திருந்தால், ரெண்டு இட்லி தின்னுட்டுப் போகலாமா?’, ரத்னா பாய் மெல்லிய குரலில் கேட்டாள்.

ஆச்சரியப்பட்டுப்போய் அவளைப் பார்த்தேன். என்னிடம் வெளியிடத்தில் சாப்பிடலாமா என்று அவள் கேட்டது இதுதான் முதல் தடவை.

மாடவீதியில் தெரு ஓரம் வைத்து விற்கும் ஒன்றிரண்டு இட்லிக் கடைகள் திறந்திருக்கும். அங்கே ஒரு பின் தெருவில் மத்தள ராயர் மெஸ் என்று வீட்டுச் சாப்பாடு போடும் இடம் இருக்கிற ஞாபகம்.

எவாகுவேஷன் நேரத்தில் இட்லி அவித்து விற்க யார் மெனக்கெடுவார்கள்?

என்னோடுகூட போட்டி போட்டு வேகமாக நடக்கிற ரத்னா பாய் இன்றைக்கு என்னமோ கொஞ்சம் நடை தளர்ந்து மெல்ல நடந்து வந்தாள். அவள் பக்கத்தில் நடக்கிற நினைப்பில் நான் பேசிக்கொண்டே வந்து சட்டென்று நின்றால் கொஞ்சம் பின்னாடி அவள் வந்து கொண்டிருந்ததைக் கவனித்தேன்.

‘என்னாச்சும்மா, இருட்டிலே நடக்கக் கஷ்டமா இருக்கா? ஜட்கா, கை ரிக்ஷா ஏதாவது வருதா பார்க்கட்டுமா?’

ஆதரவாகக் கேட்டேன். உடம்பு அனுபவிக்கும் வாதனை ஏதோ உண்டென்று கோடி காட்டுவதுபோல் அவள் முகம் சுருங்கியது. மெல்ல எழுந்து உள்ளே பரவி உயரும் ஏதோ வலியைப் பொறுத்தபடி இடுப்பில் கை வைத்து நின்றவள் என் கையை மெல்லப்பற்றியபடி பார்த்தாள். எனக்கு உடம்பு முழுக்க ஓர் அதிர்ச்சி பரவி ஓடியது. என்ன ஆச்சு என் ரத்னா பாய்க்கு?

‘ஒண்ணும் இல்லேங்க. கொஞ்சம் வயத்து வலி மாதிரி.’

அவள் கொஞ்சம் என்றாலும் முகக்குறிப்பு அதிகமாக வலியைச் சொன்னது. தெரு என்றும் பார்க்காது அவள் வயிற்றில் கை வைத்து மெல்லத் தடவினேன். தோளில் முகம் புதைக்க வைத்து தலையை வருடினேன்.

சட்டென்று சைரன் சத்தம். குண்டு வீசித் தாக்கும் எதிரி விமானங்கள் வந்து கொண்டிருக்கின்றன, உயிருக்கு அபாயம் என்று சங்கு ஊதி சர்க்கார் தரும் எச்சரிக்கை. தெருவில் நடக்காமல், வண்டி ஏறிப் போகாமல் அங்கங்கே பள்ளம் பறித்துக் கட்டியிருக்கும் தங்குமிடங்களுக்கு உடனடியாகப் போய்ச் சேர வேண்டும்.

நான் ரத்னாவை இரண்டு கையையும் ஏந்திக் கட்டித் தூக்கிக்கொண்டு பக்கத்தில் இருக்கும் ஷெல்டருக்கு அவசரமாக நகர்ந்தேன்.

தெரு இருட்டில் கிடந்தது. சைக்கிளில் இருட்டில் முட்டி மோதி வந்த ஏஆர்பி வார்டன் பிகில் எடுத்து ஊதி ‘சீக்கிரம்… சீக்கிரம்… ஏன்

அவங்களை தூக்கிட்டு போறீங்க... நடத்தி கூட்டிப் போங்க. இன்னும் ரெண்டு நிமிஷத்துலே ஷெல்டர்லே இருக்கணும். குண்டு போட ஆரம்பிச்சு உசிரு போச்சுன்னா என்னைக் கேட்காதீங்க'– அவன் தரப்பு நியாயத்தை எடுத்துரைத்தான்.

'நானும் எங்க பேட்டையிலே ஏஆர்பி வார்டன்தான்' என்றேன் பொறுமை இழந்து.

'அப்போ நீங்களாவே குழிக்குள்ளே போயிருக்கணும்' என்று வருஷப் பிறப்பும் அதுவுமாக அவச்சொல் சொன்னான்.

ஷெல்டருக்குள் இறங்க ரத்னா பாய் கொஞ்சம் சிரமப்பட்டாள். ஆச்சா ஆச்சா என்று ஏஆர்பி வார்டன் தடியன் மேலே இருந்து எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ராமோஜியும் ரத்னாபாயும் இன்றைய இலக்கு. அவர்களை மெட்ராஸில் எங்கே இருந்தாலும் தேடிக் கண்டுபிடித்து தலையில் குண்டு போடு என்று ஜப்பான் அரசாங்கமும் ஜெர்மனி கவர்மெண்டும் அவரவர் விமானப்படையை அனுப்பி இருப்பார்கள். இதை ஹிட்லரோ, கோயபெல்ஸோ, வேறே யாரோ அவனிடம் சொல்லி இருக்க வேண்டும்.

'ஆல் க்ளியர் சைரன் சத்தம் வர்ற வரைக்கும் அங்கேயே இருங்க' என்று எங்களுக்கு உத்தரவிட்டபடி அவன் நகர்ந்து போனான்.

நானும் ரத்னா பாயும் ஷெல்டரில் போட்டிருந்த மர பெஞ்சில் உட்கார்ந்திருந்தோம். அவளால் அசைய முடியவில்லை. வயிற்றைக் கையால் பற்றியபடி இன்னொரு கையால் என் தோளில் கைவைத்து அலைபாய்ந்தாள்.

நான் மெல்ல பெஞ்சில் அவளைப் படுக்க வைத்தேன். தலைமாட்டில் உட்கார்ந்தபடி வானத்தை நிமிர்ந்து பார்த்தேன். அவள் முகத்தில் டார்ச் அடித்தேன்.

பேட்டரி லைட் வெளிச்சத்தில் அவள் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள். அவளுடைய ஆல் க்ளியர் சிக்னல் அது. எல்லாம் சரியாகப் போய்விடும் என்று எனக்கு தைரியம் கொடுத்தபடி சற்றே கண் மூடினாள்.

டார்ச் லைட்டை வானத்தை நோக்கி அடித்தேன். ராஜாங்க விரோதக் காரியம்தான். கை இருட்டில் சும்மா இருக்காமல் ஏதாவது செய்கிறதால்

இப்படி விபரீதம். எதிரி விமானம், வேறே கிரகத்திலிருந்து யாராவது விநோதப் பிறவி, ஏதாவது ராப்பறவை, ஒரு யந்திரம், வகைப்படுத்த முடியாத உயிரினம் என் நாலு பேட்டரி எவரெடி பிராண்ட் டார்ச் வெளிச்சத்தை அடையாளம் கண்டு என் பக்கம் திரும்புகிறதோ. எதுவுமில்லை.

மங்கலாக மின்னிக்கொண்டிருந்த நாலைந்து நட்சத்திரங்களும் ஒரு ராப்பறவையையுமாக ஆகாசப் பரப்பு கிடந்தது. நான் போர் விமானங்கள் எந்த வினாடியும் எங்கள் தலைக்கு மேலே பறந்து கம்பளம் விரித்தது போல் நெருக்கமாக எங்களைச் சுற்றிக் குண்டு வீசும் என்று எதிர்பார்த்து, ஷெல்டருக்குள், ரத்னா தோளில் தலை சாய்ந்திருந்தேன். ஒரு சத்தமும் இல்லை. ஒரு விமானமும் பறந்து போகவில்லை.

அரைமணி நேரத்தில் விமானத் தாக்குதல் இல்லை என்று அறிவிக்கும் ஆல் க்ளியர் சைரன் கேவல் இன்றி நீண்டு தீர்க்கமாக ஒலித்தது.

ரத்னா பாய் மெல்ல எழுந்து பெஞ்சில் உட்கார்ந்தாள்.

எதுக்கு இங்கே உட்கார்ந்திருக்கோம்? அவள் என்னை உலுக்கி எழுப்பிக் கேட்டாள்.

‘வீட்டுக்குப் போக வேண்டியதுதான்... வா போகலாம்.’

நான் கை தவறிக் கீழே விழுந்த டார்ச் லைட்டை எடுத்துத் தோளில் தொங்கிய பையில் போட்டுக்கொண்டு கிளம்ப அவசரம் காட்டினேன்.

இன்னொரு தடவை குண்டு வீச்சு வருவதாக எச்சரிக்கும் சைரன் முழங்கினால், இங்கே இன்னொரு அரை மணி, ஒரு மணி நேரம் தங்க முடியாது. ரத்னாவைக் கைத்தாங்கலாகவாவது பிடித்துக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குப் போக வேண்டும்.

கதவை வாசல் கதவையும், ரேழி கடந்து ஹாலுக்குள் வரும் கம்பிகள் வரிசையாகப் போட்ட அழிக்கதவையும் அடைத்துப் பூட்டி சாவிக்கொத்தை படுக்கையில் தலகாணிக்குக் கீழே வைத்துவிட்டு ரத்னாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு நித்திரை போகவேண்டும்.

ராத்திரியில் சைரன் சத்தம் கேட்டால் ஜன்னலில் கருப்புத் துணி மறைப்பையும், வீட்டில் விளக்கு எரியாததையும் உறுதி செய்து கொண்டு, சைரன் ஒலி நிற்கும்வரை எல்லா எதிரி விமானங்களையும் கற்பனை

செய்துகொண்டு, குண்டு போட எந்த நிமிடமும் அவர்கள் தயாராகத் தாழப் பறக்கப் போகிறார்கள் என்று பதைபதைத்து, கட்டிலில் உட்கார்ந்தபடி காது கொடுத்துச் சின்னச் சின்ன சப்தங்களையும் மனசில் வாங்கிக்கொண்டு நேரம் போக்கவேண்டும்.

இன்னும் ஒருமுறை சைரன் ஒலித்து எச்சரிக்கை விலக்கிக் கொள்ளப்பட்டதாக அறிவித்ததும் என்ன செய்யவேண்டும்?

வேறே ஒன்றுமில்லை. ரத்னாவோடு ரமிக்க அதுதான் நேரம்.

அடுத்த சைரன் கேவிக் கேவி ஓலமிட்டாலும் என்ன போச்சு? பட்டணம் பொடி வாசனையோடு காத்திரமான அந்த சுகம் அனுபவிப்பதுபோல் வேறென்ன உண்டு?

இந்த ராத்திரிக்கு அது வேண்டாம். அந்த அறியாப் பெண் நிம்மதியாக உறங்கட்டும்.

நாங்கள் நடக்கத் தொடங்க கச்சேரி ரோடில் அபூர்வமாக டாக்சி ஒன்று கிட்டியது. கூலி பேசாமல் ஏறி உட்கார்ந்தோம். வீடு போனால் போதும்.

★

ஜப்பான்காரனுக்கும் ஜெர்மனியனுக்கும் பயப்படாமல் இன்னொரு பொழுது விடிந்தது. ரத்னாபாயைத் தொந்தரவு செய்யாமல் காப்பி சேர்த்து அவளையும் எழுப்பிக் குடிக்க வைத்தேன்.

நேற்றைக்கு டிகாஷன் பெரிய பில்டரில் போட்டு வைத்திருந்ததாலும், ஓவல்டின் டப்பா நிறைய ஒன்றிரண்டு எறும்போடு சர்க்கரை எடுத்து வைத்திருந்ததாலும், காப்பி சேர்ப்பது சுலபமாகிவிட்டது.

பெரீஸ் பிஸ்கட் டின்னையும் அலமாரியில் மேல் அடுக்கில் அஞ்சறைப் பெட்டிக்குப் பின்னால் இருந்து எக்கி எடுத்தேன்.

ஞாயிற்றுக்கிழமை விடியும்போது பிஸ்கட் டின் காணாமல் போய்விடும். வீட்டில் டாய்லெட்டும் பாத்ரூமும் தவிர எங்கெங்கோ மறைவில் அதை இருத்துவது ரத்னாதான்.

ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருந்தால் அதுவும் பகலுக்கு அப்புறம் ராகுகாலத்தோடு ஒட்டி நாலரை மணியிலிருந்து ஆறுவரை நான் வீட்டுக்குள் சுற்றிவந்து போகவரத் தின்று வயிற்றில் உப்புசம் கண்டு

திங்கள்கிழமை விடிந்து ஆபீசுக்குப் போக இடைஞ்சலாகித் திண்டாடுவது அடிக்கடி நடப்பதால் ஞாயிற்றுக்கிழமை பிஸ்கட்டுகள் என் கண் பார்வையிலிருந்து மறைந்துவிடும் வழக்கம்.

நேற்று தமிழ் வருஷப் பிறப்புக்காக ரஜா என்பதால், ஞாயிற்றுக் கிழமைபோல பிஸ்கட்டுகள் காணாமல் போயிருந்தன.

கடிக்க சிரமமான ரஸ்க்குகள் மட்டும் தினசரிப் பேப்பரில் மடித்து சமையல்கட்டில் சுலபமாகக் கைக்கு அகப்படும்.

ஒரு தடவை இந்துநேசனில் மடித்து வந்த ரஸ்க் சாப்பிடக் கிடைத்தது. இடுப்பு அழகி அம்புலுவின் அட்டகாசம் என்று திருநெல்வேலி வட்டாரத்தில் ஒரு ரெட்டைத் தெரு அம்புலு தினசரி ஒரு மைனரோடு அடங்காமல் ஆடுகிறதாக நியூஸ், அதற்கான சிருங்கார சேர்மானங்களோடு லகரியான நடையில் எழுதப்பட்டுக் கிடைத்தது. அதிலிருந்து எப்போது ரஸ்க் வாங்கி வந்தாலும் அம்புலுவைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

அதென்னமோ பத்திரிகை விளம்பரம் கொடுப்பதுபோல உசிலம்பட்டி பெரீஸ் பிஸ்கோத்தும் காலைக் காப்பியும் இணை பிரியாத ஜோடியாக இதுவரை இருந்து வருகின்றன.

காலையில் பிஸ்கட்டைத் தோய்த்து சூடான காப்பி குடிக்கும்போது உலக மகா யுத்தமும் ஜப்பான் குண்டு வீசித் தாக்கும் அபாயமும் ஹிட்லரின் கம்பளிப்பூச்சி மீசையும் அவ்வளவு பயமுறுத்துவதில்லை. ஊரோடு காலி செய்துகொண்டு போனாலும், இன்னும் கொஞ்சம் நாள் தாக்குப் பிடிக்கலாம் என்று ஒரு வினாடி தோன்றுகிறது.

பாரிஸ் ஸ்வீட்ஸ் கம்பெனியாரின் தேங்காய் துருவிப் போட்ட மெல்லிசுத் தட்டைச் சாக்லெட்களையும் முரமுரவென்ற பெரீஸ் வெண்ணெய் பிஸ்கட்களையும் ரத்னா மூக்குத் தூளுக்கு அடுத்தபடி நேசிக்கிறாள்.

பாலில் தோய்த்தால் விநோதமாக சீரக வாடை அடிக்கக் குழைந்து போகும் மில்க் ரஸ்க் கூட அவளுக்கு இஷ்டம்தான். வாராவாரம் வெள்ளிக்கிழமை ஆபீசில் இருந்து வரும்போது பிராட்வே பேக்கரிக்கடையில் இந்த உருப்படிகளை வாங்காமல் வருவதில்லை.

இப்போதெல்லாம் ராயர் நெய்மிட்டாய்க் கடைக்குப் போவதில்லை. கடை அடைத்து வைத்திருக்கிறது. ஊர்பற்றி எரியும்போது, அல்வாவும்,

குலோப்ஜாமுனும். ஜாங்கிரியும், பாதுஷாவும் யார் கிண்டிக் கிளறிச் சாப்பிட விற்கிறார்கள்?

ராயர் குடும்பத்தோடு உடுப்பி போய்விட்டதாக கடையில் உலோகத் தராசில் பூந்தி நிறுத்துக் கொடுத்த கோபிகிருஷ்ண ராவ் சொன்னான்.

‘பரியாயம் முடிஞ்சுதான்’ வருவாராம். கன்னட பூமியில் மாத்வ மடாதிபதி நிர்வாக நியமனத்துக்கும் மதறாஸ் சௌகார்ப்பேட்டையில் ராயர் மிட்டாய்க்கடை கதவு திறந்து மைசூர்பாகு விற்பதற்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை.

கோபி இப்போது கோட்டை காண்டீனில் தலை எண்ணி, கலந்த சாதம் பண்ண காண்டீன்கார பஞ்சாபகேச அய்யருக்குத் தோராயமாகக் கணக்கு தருகிறான். ரேஷன் கடையில் போய் கேண்டீனுக்கான கோதுமையும் அரிசியும் வாங்கித் தலையில் வைத்துக்கொண்டு வருகிறான். அரசாங்கச் செலவில் தினசரி காலையில் டீ போட்டு உத்தியோகஸ்தர்களின் மேஜைக்கு எடுத்துப்போய்த் தருகிறான்.

வெள்ளிக்கிழமை மதியம் பிஸ்கட் வாங்கவோ, செவ்வாய்க்கிழமை தோறும் சாயந்திரம் தமிழ்ப் பத்திரிகை வாங்கவோ இப்போதெல்லாம் வேலைப் பளு காரணமாக எனக்கு அநேகமாக முடியாமல் போகும்போது அவன்தான் அதெல்லாம் பிற்பகலில் போய் வாங்கி வந்து என் மேஜைக்கு வலது ஓரம் பையோடு வைத்துவிடுகிறான்.

வேலையைப் பொறுத்து அவனுக்கு ஒவ்வொரு ஏவலுக்கும் காசு. சில்லறைத் தட்டுப்பாட்டுக் காலம் என்பதால் தனித்தனியாகத் தரக் கஷ்டமாக இருக்கிறது.

பெரிய ஓட்டல்களே சில்லறைத் தட்டுப்பாட்டில் தத்தளிக்க, ரிசர்வ் பேங்க் வாராவாரம் கியூ நிறுத்தி அவர்களுக்குக் கணிசமாகச் சில்லறை விநியோகிக்கிறது. கோபிக்குச் சில்லறை தர ரிசர்வ் பேங்குக்குப் போக முடியாது.

மாதம் ஒரு கணிசமான தொகை கொடுத்து இப்படியான குற்றேவல் பணி எல்லாம் ஒட்டுமொத்தமாகச் செய்ய வைக்கலாம் என்று யோசனையோடு அவனைக் கேட்க, தத்துவார்த்தமாக கோபி சொன்னது –

‘ராமோஜி ஸ்வாமின், மாதம் பிறந்து சம்பளம் மாதிரி வாங்கலாம்தான். ஆனால் நாளைக்கு விடிந்து நானிருப்பேனா தெரியாது. மதறாஸ்

இருக்குமா, லண்டன் இருக்குமா, கல்கத்தாவும் டெல்லியும் இருக்குமா அறியோம். அடுத்த மாசம்வரை உசிரோடு நாம் இருப்போமா, கோட்டையில் இந்த ஆபீஸ் இருக்குமா, கோட்டை இருக்குமா, டீ போட பால் கறக்க எருமை இருக்குமா, கேண்டீனுக்கு பாலும், ரேஷன் ஆபிஸ் பெர்மிட்டோடு அரிசியும் இனியும் வருமா தெரியாது. இத்தனை தெரியாதுகள் இருக்கறபோது மாசச் சம்பளம் பேசி என்ன பிரயோஜனம்? அப்பப்ப முடிச்சு வாங்கிக்கறேன். நீங்க மறந்து போனாலும் என்ன போச்சு? அடுத்து இன்னொரு வேலை வரும்போது அதோடு சேர்த்து வாங்கிக்கறேன். பெரீஸ் பிஸ்கட்டுலே உப்பு பிஸ்கட் டிமாண்ட் நிறைய இருக்கு. உங்களுக்கு எடுத்து வைக்கச் சொல்லியிருக்கேன். யார் இருந்தாலும் போனாலும் பெரீஸ் பிஸ்கோத்து அன்னிக்கு கண்டமேனிக்கு அழிவில்லாம என்றும் இருக்கும்... வாராந்திர ரெஸ்ட் எடுத்து திங்கள்கிழமை ஆபீஸ் வரும்போது புதுப் பையும் பிஸ்கட்டுக்கு ரெண்டு ரூபாயும் மாமிகிட்டே நான் சொன்னேன்னு கேட்டு வாங்கிண்டு வாங்கோ...' என்று கோபி சொல்லி அனுப்பியிருந்தது நினைவு வர ரத்னாவைப் பார்த்தேன்.

அவள் மறுபடி உறங்கப் போயிருந்தாள்.

கடந்து போன ராத்திரியில் ரத்னாவுக்கு மறுபடியும் வயிற்று வலி கண்டது. லேசாகத்தான் என்றாள். அதற்காக சும்மாவிட்டுவிட முடியுமா? வலி மட்டுப்பட உமியைத் துணியில் கட்டி, அவள் வாராவாரம் எண்ணெய் தேய்த்துக் குளித்து கூந்தலுக்கு தூபம் போடும் சின்னக் குமுட்டி அடுப்பை ஹாலுக்கு நகர்த்தி, அந்த நெருப்பில் உமி மூட்டையை வாட்டி அவள் அடிவயிற்றில் இதமாக வைத்துப் புரட்டியபடி இருந்தேன்.

'உங்களுக்கு ஏன் இடைஞ்சல், போய்ப் படுங்க' என்று அவள் பிடிவாதமாக என்னை விலக்கப் பார்த்தாலும் அவள் தேகம் படும் வாதனையை அவளால் மறைக்க முடியவில்லை.

விடிகாலையில் கொஞ்சம் உறங்கியிருக்கிறாள். நான் சேர்த்த காப்பியை அரைகுறை பிரக்ஞையோடு கையணைத்து வாங்கி, சீப்பிக் குடித்துவிட்டு ராத்திரி கண்விழிப்புக்கு கொஞ்சமாவது ஈடுகட்டும் உறக்கம் அது.

ஒரு பிஸ்கட்டும் காப்பியுமாக ஹால் தரையில் உட்கார்ந்தபோது என் தலையைக் குறி வைத்து சுதேசமித்திரனும் ஹிந்து பத்திரிகையும் வாசலில் இருந்து வந்து விழுந்தன.

அதிரடியாக நேற்று ராத்திரி சகலருக்கும் நல்ல புத்தி வந்து சகலமான போர்முனைகளிலும் யுத்தம் முடிவுக்கு வந்தது என்று நியூஸ் வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். ஒருநாள் ஆபீசுக்கு லீவு சொல்லிவிட்டு ஊர் முழுக்க ட்ராமிலும் பஸ்ஸிலும் ஏறி இறங்கிக் கால்போனபடி சுற்றி அதைக் கொண்டாடலாம். இன்றைக்கு முடியாது.

ரத்னாவுக்கு இப்போது வலி தணிந்தாலும் இன்னும் உள்ளே ஏதோ குழப்பம் இருந்துகொண்டிருக்கிறது.

அவளைக் கூட்டிக்கொண்டு மீசை நாயர் டாக்டரைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று தீர்மானம் செய்துகொண்டேன்.

டாக்டர் நாயர், ஜஸ்டிஸ் கட்சிக்காரர். சும்மா வகைதொகை இல்லாமல், மகாத்மாவைக் கேலி செய்வார். அதற்குப் பார்த்தால் முடியாது. நமக்கு உடம்பு ஸ்வஸ்தம் ஆக வேணுமே. மீசை நாயர் டாக்டரின் அரசியல் பிரசங்கத்தை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில்விட்டுவிட்டு வரவேண்டியதுதான்.

புரசைவாக்கத்திலிருந்து ஸ்பர்டாங்க் ரோடு வழியாக கிழக்கு மாம்பலம் போனால் அவருடைய கிளினிக்கில் கூட்டம் அலை மோதும். அங்கே போக வேண்டாமல் இப்போது புரசைவாக்கம் டவுட்டனிலும் டிஸ்பென்சரி வைத்து தினம் நாலு மணி நேரம் வருகிறார். அது மதியம் ரெண்டு மணி தொடங்கி சாயந்திரம் ஆறு மணி வரை.

இன்று சில ரிடையர்ட் உத்தியோகஸ்தர்களுக்கு தாமதமாக பெங்களூரில் இருந்து சாங்க்ஷன் ஆகி வந்த பென்ஷனைப் பட்டுவாடா செய்யவேண்டும். ஆபீஸ் போய் பகலுக்குள் அதை முடித்து, மதியம் அரை நாள் லீவு சொல்லிவிட்டு வந்து ரத்னாவை டாக்டரிடம் அழைத்துச் செல்ல முடிவு செய்தேன்.

பரபரவென்று சாதம், வற்றல் குழம்பு, சுட்ட அப்பளம் என்று மதியச் சாப்பாட்டுக்குத் தயார் செய்து வைக்க உத்தேசம்.

வற்றல் குழம்புக்கான கரைசல் திடப்படுத்தப்பட்டு பாட்டிலில் அடைத்து வருகிறது. மெட்றாஸில் ஐயர் ஓட்டல்காரர்களும், கும்பகோணத்தில் டிஎஸ்ஆர் கம்பெனியும், ‘உடனே இட்லி’, ‘உடனே உப்புமா’ என்று யுத்த காலத்தில் நூதனமான ஆகாரங்களை விற்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

டிஎஸ்ஆர் வற்றல் குழம்பு கரைசல் பாட்டில் பூஜை அறையில் கிருஷ்ணன் விக்ரகத்துக்குப் பின்னால் கிடைத்தது.

‘ஞாயிற்றுக்கிழமை பிஸ்கோத்து முழுங்கறதோட இந்த உடனே உடனுக்குடன் ஆகாரம் வேறே உங்களுக்கு மஹா இஷ்டம்... வாயிலே கன்னுக்குட்டிக்கு வைக்கற மாதிரி வைக்கோல் மூடி போட வேண்டிய விஷயம். வெங்கலப்பானை நிறைய சாதம் வடிச்சு வச்சதை ஒரு பத்து நிமிஷம் அடுத்த வீட்டுக்குப் போய்ட்டு வரதுக்குள்ளே புளியோதரை கரைசல் ஊத்திக் கலந்து முழுங்கி வச்சிருக்கீங்க. வயறு என்னத்துக்கு ஆகும்? வாரம் ஏழு நாளும் ஆபீஸ் வைக்கக் கூடாதா’ என்று போனவாரம்தான் ரத்னா பிரலாபித்தாள்.

நேற்று வருஷப் பிறப்பு விடுமுறை என்று டிஎஸ்ஆர் பாட்டிலும் கிருஷ்ண விக்கிரகத்துக்குப் பின்னால் போய் உட்கார்ந்துவிட்டது.

குளித்துவிட்டு அரை மணி நேரத்தில் சமையல் முடித்தேன். வெள்ளிக்கிழமை வாங்கிவந்த பாக்கி ரொட்டி இருந்ததைக் கவனித்தேன். உதிர்த்துப் போட்டு பச்சை மிளகாய், இஞ்சி, மிளகாய்ப்பொடி, நல்லெண்ணெய் கலந்து கடாயில் உப்புமா செய்து ரத்னாவுக்குக் கொஞ்சம் ஊட்டலாமா என்று பார்த்தால் அவள் வேண்டாம் என்று சொன்னது மட்டுமில்லை, அதிரடியாக எழுந்து உட்கார்ந்து சமைக்கப் போவதாக அறிவித்தாள்.

ஒருநாள் ஓய்வு கொண்டாடிவிட்டுச் சமைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொல்லி, மதியச் சாப்பாட்டு பதார்த்தங்களை சமையல்கட்டில் அணைத்த அடுப்பு மேல் தாம்பாளம் இட்டு வைத்துவிட்டு ஆபீஸ் கிளம்பினேன்.

ரத்னா வாரப் பத்திரிகையைப் படித்தபடி எனக்கு விடைகொடுத்தது ஆசுவாசமாக இருந்தது. திரும்ப உறங்கப் போயிருந்தால் அந்தக் கோலத்தில் விட்டுவிட்டு ஆபீஸ் போக மனம் இருந்திருக்காது.

ட்ராமில் போவதா, சைக்கிள் மிதித்து ஆபீஸ் போவதா என்று யோசித்து, ட்ராமே சரிப்படும் என்று முடிவு செய்தேன்.

ராத்தூக்கம் சீராக இல்லாமல், தலை கிறுகிறுத்து, உடம்பு சமநிலை தவறி ஒரு பக்கமாகக்கொண்டுபோய்த் தள்ளுகிற அயர்ச்சி அவ்வப்போது

தலைகாட்டிக்கொண்டிருந்தது. அதோடு நீளநெடுக சைக்கிள் மிதித்து ஆபீஸ் போய்த் திரும்ப சிரமமாக இருக்கும்.

ட்ராம் என்னதான் மெல்ல ஊர்ந்தாலும் ஒன்பதரை மணிக்கு கோட்டைக்குள் நான் நுழையும்படியாகச் சேர்ப்பித்துவிட்டது.

ஒரு சிறிய கூட்டம் எதிர்பார்ப்போடு எனக்காகக் காத்திருந்தது.

'ராமோஜி சார் வந்தாச்சு' – யாரோ அறிவித்தார்கள். யாரோ 'வாங்க தம்பி', என்றார்கள்.

மேஜை டிராயரைத் திறந்துகொண்டே எல்லோரையும் நமஸ்கரித்தேன்.

'ஏன் தம்பி, உத்தியோகத்திலே இருக்கப்பட்டவங்க எவாகுவேஷன்லே மெட்றாஸைவிட்டு ஓடிப்போக கவர்மெண்ட் பயணப்படி தருதாமே?' வேறு யாரோ கேட்டார்கள்.

'வாஸ்தவம்தான்...' என்றேன். அதை வாங்க ரெண்டு நாளாக கூட்டம் அலைமோதுகிறது இவர்களுக்குத் தெரியாதிருக்கலாம்.

'அலவன்ஸ் கைக்கு வந்த அப்புறம் எவாகுவேஷன் செஞ்சா போதும்' என்று சில பிடிவாதமான உத்தியோகஸ்தர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

'பென்ஷனர்களுக்கு கிடையாதா அது மாதிரி அலவன்ஸ்?'

ஒரு பெரியவர் முகத்தைத் துண்டால் அழுத்தத் துடைத்தபடி கேட்டார். பாவம் எத்தனை மைல் கடந்து பென்ஷன் வாங்க வருகிறாரோ.

'கிடையாது சார்... இனி வருமான்னு தெரியலே' உள்ளபடிக்கே வருத்தத்தோடு சொன்னேன்.

'மெல்ல வரட்டும்... என் வண்டி அதுக்குள்ளே வந்துடும்...' என்ற வரைப் பார்ப்பதைத் தவிர்த்தேன். இந்த முதியவர்களுக்கு ஓர் ஐம்பது ரூபாய் ஒரே ஒரு தடவை பயணப்படியாகக் கொடுத்தால் என்ன? முப்பது முப்பத்தைந்து வருஷம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்காக இங்கே கிடந்து உழைத்தவர்கள்.

'ரிடையர் ஆனதும் தூக்கிப் போட்டுட வேண்டிய பிரயோஜனமில்லாத குப்பை செத்தை நாம எல்லாம்'

யாரோ சொல்ல நான் மேஜை உள்ளே இருந்து ஃபைல்களை எடுத்து வெளியே வைத்தேன். எல்லோரும் அதையே பார்த்தபடி மௌனமாக இருந்தார்கள்.

மரமேஜை, நாற்காலி, ஃபைல் கட்டு என்று வாழ்க்கையில் பெரிய பகுதியைச் செலவழித்தவர்கள் அந்த லகான்கள் இல்லாமல் நடக்க முயன்று தடுமாறுகிறார்கள்.

'சர்க்கார் உத்தியோகம் ஒரு வசதி இல்லை, மனநிலை. வாழ்க்கை முறை.'

முந்திய கவர்னர் துரை ஏதோ கொண்டாட்டத்தில் பேசியபோது சொன்னார். வாஸ்தவம்தான்.

இந்த முதியவர்களிடம் யுத்தகால டெம்பரரி உத்தியோகஸ்தராக கால் சம்பளத்தில் வேலை செய்கிறீர்களா என்று கேட்டால் ஆட்சேபணையே இன்றி வந்து விடுவார்கள். காலையில் ஒன்பது மணிக்கு ஆபீஸ் போகிற சந்தோஷத்துக்காகக் காசு வாங்காமல்கூட வேலை செய்வார்கள்.

ஏக்கத்தோடு என் மேஜையை அவர்கள் பார்ப்பதாகத் தோன்ற 'அப்புறம், எப்படி சார் இருக்கீங்க எல்லோரும்...' என்று பொதுவாகப் பார்த்து விசாரித்தேன்.

'என்ஜிஓக்களுக்கு தனியா எவாகுவேஷன் ரயில் ஓட்டப் போறாங்களாமே' என்று ஒருத்தர் கேட்க, 'அதெல்லாம் கப்சா, இலவச ரயில் சேவை போறாதுன்னு அலவன்ஸும் கொடுத்து அதுவும் போதாம ஸ்பெஷல் இலவச ரயிலா? சரிதான்' என்றார் மற்றவர். எல்லோரும் சிரிக்கிற ஓசை.

இவர்கள் எல்லாம் சாப்பிட்டார்களோ? இல்லை என்றால் கோபியிடம் சொல்லி ஆளுக்கு ரெண்டு இட்லி கேண்டீனில் வாங்கித் தரலாம்.

என் அப்பாஜி இருபது உருவங்களாக எனக்காகக் காத்திருக்கிறார். இவர்கள் எல்லாருக்கும் இங்கே காலை ஆகாரமும் காப்பியும் கொடுக்க முடியுமானால் பஞ்சாங்கக்காரரோ ஸ்வஜாதி புரோகிதரோ நடத்தித் தரும் வருடாந்திரக் காரியம் எல்லாம் உபரி புண்ணியம் தேடும் உபாயங்கள்தானே?

இருபது பென்ஷன்தாரர்களுக்கும் ஏற்கெனவே வவுச்சர் போட்டு தனித்தனி பழுப்பு உறைகளில் பென்ஷன் பணத்தைப் போட்டு வைத்திருந்தேன்.

ஒவ்வொருத்தராகக் கூப்பிட்டு ரெண்டு நிமிடம் குசலம் விசாரித்து விட்டுப் பணம் கொடுப்பது இந்த டிபார்ட்மெண்ட் வந்து, இரண்டு மாதமாக

வாடிக்கை.

அவர்கள் ஒவ்வொருத்தருக்குப் பின்னாலும் ஆளுக்கொரு பெரிய வாழ்க்கைக் கதை இருப்பதை அறிவேன். நோயும், முதுமையும் அவர்களை அலைக்கழித்து அல்லல்படுத்துவதோடு சர்க்கார் வேறே ஒவ்வொரு மாதமும் நேரில் வந்து பென்ஷன் வாங்கிக்கொண்டு போக வேண்டும் என்று விதிமுறை உண்டாக்கித் தன் பங்குக்கு சிரமப்படுத்துகிறது.

ஜார்ஜ் டவுனிலிருந்து ரெண்டு மைல் குதிரை வண்டிப் பிரயாணம் செய்து பென்ஷன் வாங்க வருகிறவரிலிருந்து, கிட்டத்தட்ட ஐம்பது மைல் அரக்கோணத்திலிருந்து ரயில் வண்டியேறி வருகிறவரும் இதிலுண்டு.

எல்லாரும் வாங்கிக்கொண்டு இருமலும் உடம்பு நோவுமாக கை கூப்பிப் போக, நான் சீக்கிரம் இதை ஏறக்கட்டி வைத்துவிட்டு வீடு திரும்பி ரத்னா பாயை டாக்டரிடம் கூட்டிப் போவதிலேயே மனசு செலுத்தி இருந்தேன். அப்படியே சற்றுக் கண்ணயர்ந்து விட்டேன் என்பதையும் சொல்லியாகவேண்டும். நேற்று ராத்திரி கண் விழித்தது எப்படியெல்லாம் படுத்துகிறது!

இதென்ன, எல்லோரும் பணம் வாங்கியும் மேஜை ஓரமாக இன்னும் ஒரு கவர் பாக்கி இருக்கே. அது இப்போதுதான் கண்ணில் பட்டது. பட்டுவாடா புத்தகத்தில் பார்க்க, ராமச்சந்திர ராவ் இன்னும் பென்ஷன் வாங்கவில்லை என்று தெரிந்தது. எங்கே போயிருப்பார்? இன்றைக்கு வந்திருக்கிறாரா?

மற்ற பென்ஷனர்கள் எல்லாம் பென்ஷன் வாங்கிக்கொண்டுபோய் விட்டிருந்தார்கள் என்பதால் அவர்களைக் கேட்கவும் வழியில்லை.

எதுவும் செய்யத் தோன்றாமல் மணியை அடித்து பரபரப்பானேன்.

பியூன் வீரையா என்ன என்று கேட்டபடி வந்து நான்தான் மணி அடித்தேன் என்று தெரிந்து சுவாரசியம் குறைந்து போய்த் திரும்ப வெளியேற உத்தேசித்தபோது அவசரமாகக் கேட்டேன் –

‘ராமச்சந்திர ராவ்னு ஒரு பெரியவர், ஆவடியிலே இருந்து வரப்பட்டவர், இதுவரை பென்ஷன் வாங்க வரலியே, வந்தாரான்னு தெரியுமா?’

என்னை, அதாவது பென்ஷன் இலாகா சீனியர் கிளார்க்கைச் சந்திக்க யார் வந்தாலும் வீரையாவுக்குத் தெரியாமல் போகாது. பென்ஷனர்களை அவன்

பார்த்துப் பார்த்துப் பரஸ்பரம் நல்ல பழக்கம். அவர்களின் பூர்வ ஜன்மம்கூட வீரையாவுக்கு அத்துப்படி.

ஆனால், வீரையாவைக் கெல்லித் தகவல் வாங்குவதும், கல் சுவரில் ஆணி அடிப்பதும் ஒரே மாதிரி கணிசமாக வியர்த்தமாகும் காரியமாகும்.

பௌர்ணமி ராத்திரிகளில் ஏழுகிணற்றில் தன் காரைவீட்டு வாசல் வேப்ப மரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடி, தெலுங்கில் சிருங்காரம் கொஞ்சும் பாட்டுகள் பாடுவதில் ஈடுபாடுள்ள வீரையா அப்பபடியான தோதில் ஒரு பாடலை சத்தமில்லாமல் பாடியபடி தனக்குத் தெரியாது என்று கைவிரித்து அபிநயம் பிடித்தான்.

பொழுது போகாத நேரங்களில் என் சீட்டுக்கு வந்து எதிரே நின்று பௌர்ணமி ஊஞ்சலாட்டம், பாட்டு, காரைவீட்டுக்குள் கூட்டிப் போன பெண்களின் லாவண்யம், உள்ளே நடந்தேறிய சேஷ்டைகளின் விவரம் என்று தெலுங்குத் தமிழில் பொழிந்து, இங்கே பலரையும் பொறாமைப்பட வைக்கிறவன் வீரையா.

‘நேனு பட்டுகுன்னானு’ என்று அவன் ராகம் இழுத்ததை நிறுத்தி, ‘அதை எல்லாம் அப்புறம் பிடிச்சுக்கலாம்... ராமச்சந்திர ராவ் விஷயம் தெரிஞ்சா சொல்லு.’ என்று நான் மன்றாட, சட்டென்று மனம் மாறி விஷயத்துக்கு வந்துவிட்டான் அவன்.

ராமச்சந்திர ராவ் அடைத்துப் பூட்டி வைத்த கட்டிடப் பகுதிகள் ஓரமாக மெல்ல நடந்து போய்க்கொண்டிருந்ததை இரண்டு மணி நேரம் முன்னால் வீரையா பார்த்திருக்கிறான். அப்புறம்?

கொஞ்சம் இருங்க, வரேன் என்று போய் வாய் நிறைய சோற்றை அடைத்து மென்றபடி இருந்த இன்னொருத்தரைக் கூட்டி வந்தான் வீரையா.

டஃப்திரி உன்னித்தான் என்று அடையாளம் சொல்லப்பட்ட அந்த மெலிந்த மனுஷர் பக்கவாட்டில் ஷேக்ஸ்பியர் மாதிரி இருந்தார். அவர் கேண்டீன் வடையைக் கடித்தபடி யோசித்தார். கோட்டை வாசலில் மேற்கண்ட ராமச்சந்திர ராவ் கைத்தடி ஊன்றி நடந்து போனதைப் பார்த்ததாகச் சொன்னார்.

அது ஒரு மணி நேரத்துக்கு முந்தி இருக்கலாமாம்.

‘ஊணு கழிக்க விடமாட்டீங்களே… தலை போகிற காரியமா இது?’ என்று சாடிவிட்டுப் போனார் ஷேக்ஸ்பியர்.

போனமாதம் ராமச்சந்திர ராவ் பென்ஷன் வாங்கிக்கொண்டது நினைவு வந்தது. மகனோ யாரோ அவரைக் காலையிலேயேகொண்டுவந்து விட்டுவிட்டு சாயந்திரம் வரை வரவேயில்லை.

பம்பாயில் மத்திய சர்க்கார் ஆபீசில் முப்பத்தைந்து வருஷத்துக்கு மேல் சீனியர் க்ளார்க் ஆக உத்தியோகம் பார்த்து ரிடையர் ஆனவர். மகனுக்கு மெட்றாஸில் உத்தியோகம் கிடைக்க, குடும்பத்தோடு குடிபெயர்ந்து, இங்கே சமீபத்தில் பென்ஷன் மாற்றிக்கொண்ட ராவுக்கு தமிழ் சுத்தமாகத் தெரியாது.

போன மாதம் மதியச் சாப்பாட்டுக்குக்கூட யாரும் கேண்டீனுக்கு வழிகாட்டாமல் என் ஆபீஸ் அறை ஓரம் வைத்திருந்த பானைத் தண்ணீரை மணி நேரத்துக்கு ஒரு டம்ளர் குடித்தபடி என் பார்வையில் பட்டார் ராவ்.

மராட்டியில் பேசி அவர் யார் என்று தெரிந்துகொண்டு, கேண்டீனில் அப்போது போட்டிருந்த கோதுமைக் கத்தரிக்காய் என்ற வினோதமான உணவுப் பண்டத்தை ரெண்டு ப்ளேட் வாங்கி அவரோடு சாப்பிட்டேன்.

வாங்கிபாத் செய்ய அரிசி இல்லாததால் கோதுமை வேகவைத்து கத்தரிக்காய் வதக்கிப் போட்டு ஒரு யுத்த கால உணவு. ராவ் நல்ல பசியில் இருந்ததாலோ என்னமோ ருசித்து சாப்பிட்டார். எனக்கும் பசி வந்து அந்த வடக்கத்தி வாங்கிபாத்தை நேசிக்க ஆரம்பித்தேன் அன்று.

அன்றைக்குச் சாயந்திரம் வந்தான் அவர் மகன்.

‘ஆபீஸ் போற அவசரத்துலே அப்பா கையிலே காசு கொடுக்க மறந்து போயிட்டேன். அதான் பென்ஷன் வருதே… அதுலே இருந்து எடுத்து சாப்பிடலாமே… அவருக்கு எதுவும் தனக்காகத் தெரியாது… சொன்னா செய்வார்… அம்புட்டுத்தான்.’

நொட்டைச்சொல் சொன்னபடி, நான் பார்த்துக்கொண்டிருக்க, பென்ஷன் பணத்தை சாவதானமாக எண்ணி, நாலு ஐந்து ரூபாய் நோட்டுகளை மட்டும் தன் அப்பாஜியிடம் கொடுத்து மிச்சத்தை சட்டைப் பையில் வைத்துக்கொண்டான்.

தம்புசெட்டி தெருவில் ஏதோ பிரைவேட் கம்பெனியில் சேல்ஸ் மேனேஜராக இருக்கிறானாம். கோணலாக டபுள்நாட் முடிச்சு போட்ட டை கட்டியிருந்தான் சேல்ஸ் மேனேஜர்.

அந்தப் பெரியவர் அன்றைக்கு இருமத் தொடங்க, அவசரமாக அதை நிறுத்தி என்னைப் பார்த்துச் சிரித்தார். என் அப்பாஜிக்கு சுருட்டும் மூக்குத் தூளும் படைக்காமல் ஒரு பாட்டில் பெப்ஸு இருமல் மாத்திரைகளைப் படைத்து அவர் மூலம் இந்த ராமச்சந்திர ராவுக்கு இருமல் சுவஸ்தமாக்கலாம் என்று கிறுக்குத்தனமாக அன்று தோன்றியது.

இருமிக்கொண்டே ராவ் இன்றைக்கு எங்கே போனாரோ.

பகல் ஒரு மணிவரை அவருக்காகக் காத்திருந்து ஆளைக் காணோம். அவருக்குச் சேர வேண்டிய இந்த மாதப் பென்ஷன் பணத்தை வவுச்சர் போட்டு இரும்புப் பெட்டியில் வைக்கவேண்டியதுதான்.

ஆனால் இதில் ஒரு சிக்கல் உண்டே. வவுச்சரில் இரண்டாம் கையெழுத்து போட ஹெட் க்ளார்க் வேண்டுமே. இன்றைக்கு என்று ஹெட் கிளார்க் லீவு எடுத்திருக்கிறார்.

சூப்பரிண்டெண்ட்டெண்ட் சாரிடம் போகலாம் என்றால் காலையிலேயே கவர்னரின் காரியதரிசியோடு ஏதோ மீட்டிங் என்று உள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இன்னும் எழுகிற வழியாக இல்லை.

சாப்பிடாவிட்டால் கூடப் பரவாயில்லை. டாக்டரைப் போய்ப் பார்க்க வேண்டும். நேற்றைக்கு சாயந்திரம் அபாயச் சங்கு ஊதிய நேரத்தில் விமானத் தாக்குதல் ஷெல்டரில் அவள் பட்ட துன்பம் கொடிது.

ராமச்சந்திர ராவ் பென்ஷன் பணத்தை என் வசமே வைத்திருந்து பிற்பகல் நாலு மணியைப்போல் கோட்டைக்குத் திரும்பி வந்து அவரிடம் கொடுக்க முடிவு செய்தேன். இங்கேதான் எங்கேயாவது கக்கூஸ் எங்கே இருக்கு என்று அபிநயம் பிடித்து அவசரமாக அலைபாய்ந்து கொண்டிருப்பார். பென்ஷன் வாங்காமல் போக மாட்டார். அவர் விட்டாலும் டை கட்டிய அவருடைய மகன் சும்மா விடமாட்டான்.

நல்ல வேளை நான் கிளம்பிய வேளையில் கோட்டைக்கு வெளியே புரசைவாக்கம் போகும் ட்ராம் ஊர்ந்து வந்துகொண்டிருந்தது. ஏறி உட்கார்ந்து முக்கால் மணி நேரத்தில் வீட்டுக்கு வந்தாகிவிட்டது. அதுவரை

இருப்புக்கொள்ளவில்லை. சைக்கிள் எடுத்து வந்திருந்தால் இன்னும் சீக்கிரமாகப் போயிருக்கலாம். பரவாயில்லை. போய்ச் சேர்ந்தால் சரி.

வீடு பூட்டி இருந்தது.

என்ன ஆச்சு? புருஷன் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று என்னை திராட்டில்விட்டு அவள் மட்டும் பட்டணத்திலிருந்து வெளியேற முடிவு செய்து, இச்சல்கரஞ்சியில் அம்மா வீட்டுக்குக் கிளம்பியிருப்பாளோ.

சே, என்ன மட்டமான நினைப்பு. அவளுக்குச் சொல்லிக் கொடுத்தாலும் விளையாட்டுக்குச் செய்து பார்க்கலாம் என்று மனதில் தோன்றாதே.

ஹனம்கொண்டாவில் அமிர்தாபாய் வீட்டுக்கு 'சக்காளத்தி சண்டை' போடக் கிளம்பிப் போயிருப்பாளா? உலக மகாயுத்தமென்று எங்கள் தெருவிலே துப்பாக்கி எடுத்துச் சுட்டுக்கொண்டு ராணுவம் ஓடினாலும், சண்டையோ, சமாதானமோ, அமிர்தா வீட்டுக்கு அவள் போகமாட்டாளே. வாயுத்தொல்லை மிகுந்த பூமியாச்சே அது.

கஸ்தூரிபா மாதர் சங்க வேலையாக காரியதரிசியைப் பார்க்கப் போயிருப்பாள் என்று முடிவு செய்தேன். தெருவில் முதல்வீடு. இன்னும் காலி செய்யபடாத, பூதலிங்க முதலியார் வகையில் பட்ட சுபாங்கி அம்மாளுடைய வெங்கடேச க்ருஹம் என்று காம்பவுண்ட் சுவரில் கொத்தி வைத்த வீடு.

நான் ஓடிப்போய் அங்கே நிற்க, பெரிய பலாப்பழத்தை உரித்துக் கொண்டிருந்த முதலியாரின் பேரனும் அவருடைய மனைவி சுபா என்ற சுபாங்கி அம்மாளும் உடனே ஒரு பத்து சுளையை எடுத்துப் போகச் சொல்லி வற்புறுத்தினார்கள். நீங்களும் வாயாற சாப்பிடுங்க என்று கோரிக்கைவேறு.

வரிப்பலா... ரத்னாளுக்கு ரொம்ப பிடிக்கும் என்று சுபாங்கி அம்மாள் கூடுதல் சிபாரிசு.

வரிப்பலாவோ வரிக்குதிரைப் பலாவோ, ரத்னா ஆசைப்பட்டதை சாப்பிடட்டும். ஆனால் சாப்பிட அவள் எங்கே?

மாதர் சங்கம் இனி அடுத்த கூட்டம் நாளை மறுநாள்தான் என்றாள் சுபாங்கி அம்மாள். எங்கே போயிருப்பாள் என் தேவதை?

'ஒரே ஒரு சுளையாவது தின்னுட்டுப் போங்க... தேன் தடவி வச்சிருக்கு' என்று தம்பதி சமேதராக உபசரிக்க, வேண்டாம் என்று மரியாதையும்

பிரியமுமாக மறுத்தபடி வெளியேறினேன்.

மதறாஸிலிருந்து இச்சல்கரஞ்சிக்கு நேரடி ரயில் கிடையாது. கோலாப்பூர் வழியாகத்தான் போகவேண்டும். போயிருப்பாளோ.

எதற்கும் சென்ட்ரல் ஸ்டேஷனில் கோலாப்பூர் போகும் ரயில் எப்போது கிளம்புகிறது என்று பார்த்து வந்தால் என்ன? கிளம்பத் தயாராக இருந்தால், அவசர அவசரமாக ஒவ்வொரு கம்பார்ட்மெண்டாக ரத்னா ரத்னா என்று ஓங்கி அழைத்துக்கொண்டு தேடினால் என்ன?

ரயில் கிளம்பும்போது ஏறி அவள் உள்ளே இருந்தால் இருக்குமிடம் கண்டுபிடித்தால் என்ன? அவளோடு மராட்டிய பூமிக்குப் போனால் என்ன?

எவாகுவேஷன் என்பதால் ரயிலுக்கு டிக்கெட் வாங்கவேண்டாம்.

ஆபீசில் சாவதானமாக லீவு சொல்லிக்கலாம். அடுத்த மாதம் பென்ஷன் போடுவதற்குள் வந்தால் போதும்.

ரத்னா சென்ட்ரலுக்கு எல்லாம் தனியாகப் போக மாட்டாள். அதுவும் கோலாப்பூருக்கு ரயில் பிடிக்க.

எவாகுவேஷன் பெருங்கும்பல் எல்லா ரயிலிலும் புளிமூட்டை போல அடைந்து மெட்றாஸைவிட்டு ஓடிக்கொண்டிருக்கும் வேளை இது. ரத்னா கூட்டத்தைப் பார்த்தால் சங்கடப்படுவாள். ரயிலில் எங்கே போக?

என்னைத் தேடிக்கொண்டு கோட்டைக்கே என் ஆபிசுக்குப் போயிருப்பாளோ. தமிழும் தெலுங்கும் இங்கிலீஷும் மராட்டியும் இந்துஸ்தானியும் சரளமாகப் பேசக்கூடிய என் ரத்னா பாய் ஒரு வினாடியில் என் ஆபீசைக் கண்டுபிடித்து, பிடித்துவிடுவாள்தான். கண்டு பிடித்து?

செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வந்து சேர என்ன மாதிரி அவசரம், அவசியம் அவளுக்கு?

ஜப்பான்காரன் எங்கள் வீட்டு வாசலில் போர் விமானத்தைக்கொண்டுவந்து நிறுத்தி ரேடியேட்டருக்கு தண்ணீர் கேட்டிருந்தாலே ஒழிய உடனே என்னிடம் சொல்ல என்ன விஷயம்?

இனியும் ஓடிக்கொண்டிருக்க முடியாது. காலில் வலு இல்லை. வீட்டுக்குப் பாய்ந்துபோய் என் சைக்கிளை எடுத்துக்கொண்டு பேப்பர் போடுகிற பையன்களைப்போல் கண்ணுமண்ணு தெரியாத வேகத்தில் மிதித்து

டவுட்டன்வரை வந்து விட்டேன். பக்கத்தில் வெள்ளாளர் தெருவில்தான் மீசை டாக்டர் நாயர் டிஸ்பென்சரி வைத்து நடத்துவது.

ரத்னா, டாக்டரைத் தேடி வந்திருந்தால்? நான் பாட்டுக்கு உப்புமா கிண்டி வைத்துவிட்டு, டிஎஸ்ஆர் புளிப்பசையை வைத்து திடீர் வத்தல்குழம்பு செய்து ஒப்பேற்றிச் சோறும் வடித்துவிட்டுக் கிளம்பி விட்டேன். அவளுக்கு உடம்பு மறுபடி முடியாமல் போய் வயிற்று வேதனை திரும்ப ஏற்பட்டிருந்தால்?

ரத்னாவுக்கும் டாக்டர் மீசை நாயர் டிஸ்பென்சரி தெரியும். ரெண்டு பேரும் குழந்தைப் பேற்றுக்காக மருந்து சாப்பிட்டு செக் அப் செய்துகொள்ள வரும் இடம்தான்.

வரும்போது, டவுட்டனில் ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போகிற வழக்கம் என்பதால் ரத்னா டாக்டரைப் பார்க்கப் போகும் சமயங்களை ஆவலுடன் நோக்கியிருக்கும் வழக்கம் உண்டு.

தாடையில் வழியவிட்டுக்கொண்டு, விரலில் கொஞ்சம்போல் பிசுபிசுப்பு தட்டுப்பட யாருக்குத்தான் ஐஸ்கிரீம் சாப்பிடப் பிடிக்காது?

சைக்கிள் ராக்சி தியேட்டர் பக்கம் ஓடித் திரும்ப உயர்த்திப் பிடித்த கருப்புக் குடையோடு ரத்னா பாய். கூடவே இன்னொரு குடை. பென்ஷனர் ராமச்சந்திர ராவ் அது.

ரத்னாவும் ராவும் கையில் கைத்தறிப் பைகளைச் சுமந்து வருகிறார்கள். இரண்டு பேரும் அப்பா, மகள்போல அந்நியோன்யமாகப் பேசிக்கொண்டு வேறே வருகிறார்கள். யுத்தகால உலகம் எப்படி எல்லாம் வடிவம் கொள்கிறது!

இப்போது ஒரு சைரன் ஒலித்து இந்த நல்ல நிமிஷத்தைப் பாழாக்கி விடக்கூடாது என்று பாலாஜியை வேண்டினேன்.

ஆனாலும் இந்த அபத்தமான காட்சியை களைத்துப் போன மனம் உண்டாக்கிக் காட்டியிருக்கலாம் என்றது செயிண்ட் ஜார்ஜ் கோட்டை கிளார்க்கனின் அறிவு.

ரத்னாவின் வயிற்றில் வலி, பென்ஷன் வாங்காமல் போன ராவ் என்று இரண்டு கவலைகளையும் ஒன்றாக்கி அந்தப் பூரணத்தில் கொழுக்கட்டை பிடித்து வேகவைத்து அனுபவிக்கத் தந்திருக்கும் அது.

கனவோ பிரமையோ, எதிரே ரத்னா வந்துகொண்டிருக்கிறாள். அவளோடு பேசுவதே நான் செய்ய வேண்டியது. மாய உருவம் மற்றதெல்லாம் தானே புரிந்து போகும்.

நான் சைக்கிளில் கால் ஊன்றி நிறுத்தி ரத்னாவின் கையில் இருந்து ஒரு சாக்குப்பையை வாங்கி கேரியரில் வைத்தேன்.

'டாக்டரைப் பார்க்கப் போனேன். அவர் சிம்லா போயிட்டாராம். வெய்யில் காலம் முடிஞ்சுதான் வருவாராம்... வேறே டாக்டரைத் தேடணும். டௌட்டன்லே மாசாந்திர ஐஸ்கிரீமும் இல்லாமப் போகலாம்' என்றாள் ரத்னா சிரித்துக்கொண்டு.

'உன் வயிற்று வலி என்ன ஆச்சு?' நான் பதைபதைத்துக் கேட்க அவள் கனிவாகச் சிரித்தாள்.

'வயிற்று வலியா? சரியாச் சொன்னா அடிவயிற்று வலி. காலையிலே நீங்க போட்டுக்கொடுத்த காப்பியைக் குடிச்சதும் மாயமா போயே போச்சு.'

அவள் குரலும் காத்திரமாக இருந்தது ஆசுவாசமான ஒன்று.

'எதுக்கும் டாக்டரை நீங்க வர்றதுக்கு முன்னாலே பார்த்துட்டா, எப்படியும் நீங்க மதியத்துக்கு அப்புறம் லீவுதானே, மவுண்ட் ரோடில் போய் தர்பார் ஓட்டல்லே பெரிய கிளாஸ் நிறைய புதுசா ஐஸ்கிரீம் வந்திருக்காம்... ஃபலூடான்னோ என்னமோ பேரு...'

சரி, கையில் என்ன பாதி மெட்றாஸை வளைத்துப் போட்ட மாதிரி சாக்குப்பை?

'அதுவா? இன்னிக்கு ரேஷன்லே கூட்டமே இல்லே. எவாகுவேஷன்லே இது ஒரு சௌகரியமுங்க... போய் ரெண்டே நிமிஷம் க்யூவில் நின்னு அஸ்கா சர்க்கரையும், ரவையும் வாங்கினேன். கூடவே பாப்ளின் சட்டைத் துணியும், பத்தரை அணா விலைக்கு அழுத்தமான கைத்தறி வேட்டியும் வேறே. ரேஷன் கடை எப்படியோ நடக்கறதுங்கறதே பெரிய விஷயம் இல்லையா? கவர்னர் ஹோப் துரைக்கு நன்றி சொல்லணுமோ என்னமோ, மேயர் சக்கரை செட்டியாருக்கு வாயிலே பிடிப்பிடியா சர்க்கரை போட்டு தேங்க்ஸ் கட்டாயம் சொல்லணும்' என்றாள்.

ஜவுளி விலைக்கட்டுப்பாடும் அரிசி, அஸ்கா, பருப்பு என்று சகலமானதும் கிடைக்காத ரேஷன் காலத்தில் ஏதாவது ரேஷன் கடையில் போடுகிறார்கள்

என்று தகவல் வந்தால், தேவை இருக்கோ இல்லையோ வாங்கி வீட்டில் ஸ்டாக்கில் வைக்கிறது சகஜம்தானே? அதுவும் ஊரே காலி ஆகிறபோது.

‘எல்லாம் சரிதான்... வீட்டுலே இருக்கற வேட்டிக்கு கணக்கு இல்லே... புதுசா வேறே எதுக்கு?’ என்று பலகீனமான எதிர்ப்பைத் தெரிவித்தேன்.

‘கொஞ்சம் அஸ்து கொட்டாம இருக்கீங்களா? அழுத்தமா கைத்தறி வேஷ்டி.’

‘அது ஏன் கைத்தறி வேட்டின்னு கேக்கறேன்’ விடாமல் பிடித்தேன்.

‘நீங்க வேட்டி கட்டினா ரெண்டே நாள்லே உட்கார்ற இடத்துலே டர்ருனு கிழிச்சுக்கிட்டு வரீங்க... உங்க இடுப்புக்கு கைத்தறிதான் சரிப்படும்.’ மறுபடி சிரித்தாள். நல்லவேளை ராவுக்குத் தமிழ் தெரியாது.

வெய்யில் நேரத்தில் அவள் சிரிப்பு பார்க்க ரம்மியமாக இருந்தது. தெருவாக இல்லாமல் இருந்து ராமச்சந்திர ராவ் பக்கத்தில் நிற்காவிட்டால் அவள் சிரிப்புக்கு அந்தரங்கமான தண்டனை உடனே நிறைவேற்றியிருப்பேன்...

‘ரேஷன்லே என்ன போடறாங்கன்னு உனக்கு எப்படி தெரியும்?’

‘சுபாங்கி அம்மா ரேஷன்லே எப்போ என்ன போட்டாலும் உடனே தெரிஞ்சுக்கிட்டு வந்து சொல்லிடும். இன்னிக்கும் அவங்க தகவல்தான்.’

அவள் சொல்ல நான் புன்சிரிப்போடு தலையசைத்தேன். சுபாங்கி அம்மாள் வீட்டில் பூண்டு புழங்குவதில்லை என்றாலும் ரேஷனில் கட்டுப்பாட்டு விலைக்குக் கிட்டியதால் அதை வாங்கி பரணில் பெட்டி வைத்துச் சேமித்து வீடே பூண்டு நெடியடிக்கப் பண்ணியதை மறக்க முடியுமா?

பிராந்தி கூட ரேஷனில் அபூர்வமாகக் கிடைக்கிறது. ரத்னா பாய்க்கு அதெல்லாம் அண்டக்கூடாது என்பதால் அந்தப் பக்கமே நான் போவதில்லை. அவ்வளவுதான். விறகுக்குக் கட்டுப்பாடு வந்து கொண்டிருக்கு என்று தகவல்.

‘அடுத்த வாரம் நமக்கு கல்யாணமாகி அஞ்சு வருஷம் பூர்த்தியாறாதே. ஞாபகம் இருக்கில்லியா? பெரிசா ஒண்ணும் இல்லாட்டாலும் ரவாகேசரி இனிப்பு செஞ்சு, புதுத்துணி உடுத்தி, ப்ராட்வேயிலே பாரீஸ் சாக்லெட்டும் மவுண்ட் ரோடு மெக்ரனெட் பேக்கரியிலே கேக்கும் வாங்கி நறுக்கிக் கொண்டாடணும். அதான் வெள்ளைக்காரன் பழக்கம்னு சொல்வீங்களே.

ரவையும் அஸ்காவும் சட்டைத் துணியும் வாங்கி ஆரம்பிச்சு வைக்க இங்கே வந்தேன்.'

நான் அவளை நிறுத்தினேன். புருஷன் பெண்ஜாதி சந்தோஷமாகப் பேசுகிறார்களா, கோபமான வார்த்தைப் பிரயோகங்களோடு ஊடலா என்று எங்கள் தமிழ்ப் பேச்சுவார்த்தையிலிருந்து முடிவு செய்ய முடியாத குழப்பத்தில் பென்ஷனர் ராமச்சந்திரராவ் நிற்பதைக் கவனித்தேன்.

'என்ன சார், நீங்க எப்படி இங்கே? ரத்னாவை எப்படித் தெரியும்?'

இதையும் அவசரத்தில் நான் தமிழிலேயே விசாரிக்க ராவ்ஜி முழுக் குழப்பத்தில் ஆழ்ந்து போனார்.

உடனடியாக ரத்னா பாய் மராட்டியில் அடி எடுத்துக் கொடுத்தாள். நானும் தவறை உணர்ந்து மராட்டியும் இந்துஸ்தானியுமாக நாக்பூர் ரயில்வே ஜங்ஷனில் ஆரஞ்சு விற்பவன்போல பேச ஆரம்பிக்க ராவ் சமாதானமடைந்தார்.

ராமச்சந்திர ராவ் கையில் இருந்து பாப்ளின் துணிப்பொட்டலத்தைப் பெற்றுக்கொண்டு கையில் தூக்கி வந்ததற்காக அவருக்கு நன்றி சொன்னேன். அடுத்து அவர் கதைச் சுருக்கம் சொல்லவேண்டிய வேளை.

ராவ்ஜி நான் இன்று ஆபீஸ் வருவதற்கு முன் கோட்டைக்கு வந்திருக்கிறார். அவரை மகனோ வேறு யாருமோ கூட்டிக்கொண்டுவந்து விடவில்லை.

'ரயில்லே போன ஞாபகம் இருக்கில்லே... தெரியலேன்னா செயிண்ட் ஜார்ஜ் கோட்டை எங்கேன்னு விசாரிச்சுப் போய் பென்ஷனை வாங்கிட்டு அங்கேயே இருங்க. சாயந்திரம் வரப் பாக்கறேன்' என்று மகன் சொல்லி எலக்ட்ரிக் ட்ரெயினுக்கு மட்டும் வருகிறதாக ஐந்து ரூபாய் கைச்செலவுக்குக் கொடுத்து அனுப்பியிருக்கிறான்.

காலையில் ஒன்பது மணிக்கே ஆபீசுக்கு வந்துவிட்டார் ராமச்சந்திர ராவ். இன்றைக்கு நான் பென்ஷன் பட்டுவாடா செய்ய இருந்த இருபது பேரில் ஆக முதலில் வந்தவர் அவர்தான்.

கடைநிலை சேவகர்கள் ஆபீஸ் வாசல் படியில் உட்கார்ந்து வம்பு பேசி புகையிலை அதக்கும் நேரம் அது. அவர்களிடம் இவர் ராமோஜி ராவ் எப்போ வருவார் என்று என் வருகைபற்றிக் கேட்டிருக்கார்.

குடும்ப பென்ஷன் பிரிவில் ராம்ஜி ராவ் என்று ஓர் ஆரணி பிள்ளையாண்டன் இருக்கிறான். அவன் உடம்புக்கு சுகக்கேடு என்று அறிவித்துவிட்டு, ஒரு மாதம் லீவில் போயிருக்கிறான். நேற்று வந்து, எந்த சுகக்கேடும் இன்றி ஆறு மணி நேரம் காத்திருந்து எவாகுவேஷன் அலவன்ஸ் வாங்கிக்கொண்டதாகக் கேள்வி.

ராமோஜி இன்னும் ஒரு மாசம் வரமாட்டார் என்று டவாலிகளில் யாரோ தவறுதலாக செய்தி தர, விதிர்விதித்துப்போய் 'அப்போ பென்ஷன் எல்லாம் யார் போடுவாங்க?' என்று பரிதாபமாகக் கேட்டிருக்கிறார் ராமச்சந்திர ராவ்.

'ஏன் சார், ஊரோடு ஓடிட்டு இருக்காங்க. ஆபீஸே பாதி இல்லே. பென்ஷன் எங்கே வரும்? ராம்ஜி சார் லீவு முடிஞ்சு வந்ததும் உங்களுக்கும் பட்டுவாடா பண்ணுவாராயிருக்கும்' என்ற அதிரடியான விளக்கம் வேறே.

கொஞ்ச நாழி அங்கேயே காத்திருந்துவிட்டு, ப்ராதல் கழிந்து விஸ்தாரமாக முறுக்கிக்கொண்டுவந்த, என்றால் காலை ஆகாரம் முடித்து வெற்றிலை பாக்கு தாம்பூலம் மென்றபடி வந்த டஃப்த்ரி உன்னித்தானிடம் கெஞ்சிக் கூத்தாடி புரசைவாக்கம் ராமோஜி ராவ் என்ற என் தோராயமான விலாசம் வாங்கித் தேடிக் கிளம்பி இருக்கிறார். எதுக்கா?

என்னை வேண்டிக் கும்பிட்டு இந்த மாத பென்ஷனை எப்படியாவது போட வைக்க அவர் உத்தேசம். பென்ஷன் அவருக்காகக் காத்திருந்தது தெரியாமல் புரசைவாக்கத்துக்கு ட்ராம் பிடித்துப் போய் வெறும் வயிற்றோடு களைத்து அலைந்த அந்த நல்ல மனுஷர் பார்வையில் நல்லவேளையாக டாக்டர் டிஸ்பென்சரியில் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்த ரத்னா பட்டிருக்கிறாள்.

அவளுடைய மராட்டி மேதாவிலாசம், ராவ்ஜியை வெகுவாக ஆசுவாசப்படுத்தியிருக்கிறது. தன் வீட்டு விலாசத்தைத் தன்னிடமே கேட்கிற பெரியவர் யாரென்று தெரிந்து கூடவே கூட்டிக்கொண்டு டியூசிஸ் போய் ரேஷன் வாங்கி டவுட்டனில் அவருக்கும் தனக்கும் பன் பட்டர் ஜாம் வாங்கிப் பசியாற வைத்து, அருமையாக மசாலா போட்டு சாயாவும் மலாயோடு குடித்துவிட்டு அப்பா, சித்தப்பா என்று நெருங்கிய சொந்தம்போல அவரோடு நடந்து வரும்போது நான் போய்ச் சேர எல்லாம் சுபம்.

ராவும் அவளோடு ரேஷன் கடை, ரொட்டிக்கடை என்று பையைத் தூக்கிக்கொண்டு போவதை ரசித்து அனுபவித்திருக்கிறார். இப்படிச் செய்ய

வேண்டிய காரியங்களை உரிமையோடு பகிர்ந்துகொண்டு, சின்னச் சின்ன சந்தோஷத்தைப் பங்கு வைக்க அவர் வீட்டில் யாருமில்லாத குறையோ என்னமோ.

‘ராமோஜி, என் பென்ஷன் கிடைக்குமா?’ அவர் பரிதாபமாகக் கேட்டார். நான் என் சட்டைப்பையைத் தொட்டுக் காட்டி எல்லாம் வெகு பத்திரமாக இருக்கிறது, இன்றைக்கே வாங்கிக்கொண்டு போகலாம் என்று அவர் மனசில் பால் வார்த்தேன், அப்படி என்றால் என்ன என்று தெரியாமலே.

வீட்டில் நுழைந்ததும் புடவையை வரிந்து இடுப்பில் செருகிக்கொண்டு ரத்னா சமையல்கட்டுக்குப்போய் என் சமையல் நிலவரத்தை ஸ்டாக் எடுத்தாள்.

போதாது என்றுபட, இன்னும் சாதமும், கொட்டு ரசமும், கோதுமை வாங்கிபாத்தும், வாட்டிய மசாலா அப்பளமும், வீட்டுத் தோட்டத்தில் பறித்த வெண்டைக்காய் வதக்கலுமாகச் சமையலை முடித்தாள்.

என் வத்தல் குழம்பு பிரமாதம் என்று முகர்ந்து பார்த்து பாராட்டுப் பத்திரம் வழங்கியபடி ரத்னா அதைச் சாப்பிடத் தகுந்த பதார்த்தங்களின் பட்டியலில் சேர்க்க அனுமதித்தாள். பிற்பகல் மூணரைக்குச் சாப்பிட உட்கார்ந்தோம்.

ராமச்சந்திர ராவ்ஜி நிறைவாகச் சாப்பிட்டார். சாப்பாட்டைவிட ரத்னா காட்டிய வாத்சல்யம் அவரை மனசுருகி வாழ்த்த வைத்தது.

சாப்பிட்டுவிட்டு பென்ஷனை அவருக்குப் பட்டுவாடா செய்த பிறகு ஊஞ்சலில் படுத்து ஒரு மணி நேரம் நித்திரை போனார். என் அப்பாஜி வந்து உண்டு, உறங்கி ஓய்வெடுக்க வழி செய்து கொடுத்த சந்தோஷம் எனக்கும் ரத்னாவுக்கும்.

அவர் எழுந்திருக்கும்போது ரவாகேசரி கிண்டி தயாராக வைத்திருந்தாள். இரண்டு கரண்டி சாப்பிட்டு அவள் தலையில் கை வைத்து ஆசிர்வதித்தார்.

கிழக்கு பார்த்து நிற்க வைத்து நானும் ரத்னாவும் அவர் காலில் தம்பதி சமேதராக விழுந்து நமஸ்கரித்தோம்.

அந்த வினாடி விமானத் தாக்குதல் எச்சரிக்கை சைரன் மெல்ல ஆரம்பித்து உச்சத்தில் முழங்கியது. ‘ஒத்திகை’ என்று கஸ்தூரிபா மாதர் சங்கத் தலைவி யார் மூலமோ வந்த தகவல் சொன்னாள். இல்லையென்றாலும் ஷெல்டருக்கு ஓடுகிற தீர்மானத்தில் யாரும் இல்லை.

ஒரே நிமிடத்தில், ஆபத்து தீர்ந்தது என ஆல் க்ளியர் சைரன் முழங்கிக் கொண்டிருக்க ராமச்சந்திர ராவ் எங்களுக்கு புத்ர பாக்கியம் சீக்கிரம் லபிக்க மனசொப்பிக் கைகூப்பி பிரார்த்தித்தார்.

நான் தரையில் நமஸ்கரித்துக் கிடந்தபடி ஜன்னல் வழியே வானத்தைப் பார்த்தேன். விமானம் எதுவும் தட்டுப்படவில்லை.

அவரை புரசைவாக்கம் டிராம் ஷெட்டுக்கு மேற்கே ட்ராம் ஸ்டாப்பில் வண்டி ஏற்றி விட்டபோது, சாயந்திரம் படி ஏறி வந்து கொண்டிருந்தது.

★★★

நான்கு

# ராமோஜி தெலக்ஸ் புவனாளை தரிசித்த 1942 சென்னை

ரா மோஜியான நான் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைந்த என் ஆபீஸில், எனக்கான உத்தியோகபூர்வமான நாற்காலியில் இருந்து பென்ஷன் கணக்குகளைப் பார்த்தபடி பென்சிலை வாயில் கடித்துக்கொண்டிருந்தபோது சூப்பரிண்டெண்ட்டெண்ட் பந்துலு என் கீகடமான இருப்பிடத்திலிட்ட மேஜைப் பக்கம் வந்துவிட்டார்.

‘ஏமி ஐயா ராமோஜி, இதென்ன பென்சில் கடிக்கற பழக்கம்? என் பிள்ளை சத்யா இருக்கானே, தேர்ட் ஃபாரம் படிக்கறவன்... சீமந்த புத்ரன்... அவன் வச்சு எழுதின பென்சிலைவிட பல்லாலே துருவித் துருவித் தின்னதுதான் அதிகம். பென்சில்லே என்ன சர்க்கரை தடவி இருக்காரா பெருமாள் செட்டி?’

நான் எழுந்தபடி பென்சிலைப் பார்த்தேன். பெருமாள் செட்டி கடை ஹெச் பி பென்சில்தான். இவருக்கு எல்லாம் தெரியும்.

‘பென்ஷன் கணக்கு ஒரு ரூபா ஓர் அணா ஒரு காசு ஒதைக்கறது... பாத்துட்டிருக்கேன்... சொல்லுங்க சார், பென்சில் வேணுமா?’ என்றேன்.

‘ஐயே, எச்சப் பண்ணின பென்சில் எனக்கெதுக்கு... நீரே வச்சுக்கும்... இப்போ வீட்டுக்கு கிளம்பும்... வேலை எல்லாம் அப்படியே இருக்கட்டும்... நாளைக்கு வந்து பார்க்கலாம்...’

அவர் என்னை போ என்று சைகை செய்தார். நான் சுவரில் தொங்கிய பழைய கடியாரத்தில் நேரம் பார்த்தேன். மணி பிற்பகல் நாலுதான் ஆகிறது. இன்னும் இரண்டு மணி நேரம் ஆபீஸ் நேரம் பாக்கி உண்டு.

‘சார், இப்போ டைம்...’ என்று அவரை கடியாரத்தைப் பார்க்க வைக்க எடுத்த முயற்சிகள் வீணாக பந்துலு என் மேஜை மேல் உட்கார்ந்தபடி சொன்னார் –

‘இனிமேல்கொண்டு, உம்மை தினசரி நாலு மணிக்கு வீட்டுக்கு அனுப்பச் சொல்லி கவர்மெண்ட் உத்தரவு போட்டிருக்கு. அதான் தாமதிக்க

வேண்டாம்னு அனுப்பி வைக்க நேர்லே வந்துட்டேன்.’

அவர் இறங்கி வந்த கடவுளின் அவதாரம்போல் பெருந்தன்மையோடு சொல்லிப் புன்னகைத்தார். ஒற்றைவாடை தியேட்டரில் கன்னையா கம்பெனி நடிக்கும் தசாவதாரம் நாடகத்தில் கிருஷ்ணன்போல் முக ஜாடை அவருக்கு.

ரத்னாவை தசாவதாரம் பார்க்கக் கூட்டிப் போனபோது கூர்மாவதாரத்திலேயே அவள் தூங்கிவிட்டாள். சர்ப்ப நடனம், தேவ சபை நடனம் என்று நாடகத்துக்குள் வரும் நடனக் காட்சிகளைக் கூடப் பார்க்கவில்லை.

அதற்கு அப்புறம் கன்னையா கம்பெனி சிலோனில் ஆடப் போய் விட்டது. ஒற்றைவாடை தியேட்டரில் அப்புறம் நாடகம் பார்க்க என்று நானும் போகவில்லை.

அங்கே இப்போது என்ன நாடகம் ஆடுது என்று பேப்பரில் படித்ததை நினைவு படுத்தப் பார்த்தேன். ராமசாமி நடிக்கும் மனோகராதான் என்று புத்தி சொன்னது. என்ன ஓர் ஞாபக சக்தி எனக்கு!

‘கிளம்புமய்யா’ பந்துலு பொறுமை இழக்கிறார். இன்னும் நின்றால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவார்.

ரத்னா நான் போனதும் பசியாற சாயந்திர டிஃபன் பண்ணிக் கொண்டிருப்பாள். இந்த நேரத்தில் வீட்டுக்குப் போனால் ஆபீசுக்குப் போய் வேலை பார்த்துவிட்டு வருகிறேன் என்றே நம்பமாட்டாள்.

‘அது ஏன் சார் என் மேலே சர்க்காருக்கு ஸ்பெஷல் அக்கறை?’ பந்துலு சாரை விடாமல் கேட்டேன்.

‘நீர் ஏஆர்பி வார்டன்தானே உங்க வார்டுக்கு? எல்லா வார்டன்களையும் அவங்க அவங்க ஆபீசிலே, அது கவர்மெண்ட் ஆபீசோ, பிரைவேட் கம்பெனியோ. இன்னிலே இருந்து பிரதி தினம் நாலு மணிக்கே வீட்டுக்கு அனுப்பச் சொல்லி ஆர்டர்... கிளம்பும்’ என்று உத்தரவிட்டபடி ஆபீஸின் குறுக்கே நடந்து போனார்.

இன்றைக்கு ஆகஸ்ட் மாதம் முதல் வெள்ளிக்கிழமை. ஒவ்வொரு வெள்ளியும் சாயந்திரம் ஐந்து மணிக்கு ஆபீஸில் பூஜை நடத்தி பிரசாதமாக தேங்காய்ப் பத்தையும், வாழைப்பழமும் கேண்டீன் ஸ்வீட்டும் கிடைக்கும். பாதி ஆபீஸ் செலவு, மீதி எங்கள் டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்கள்

செலவு என்று அமோகமாக நடக்கும் அந்த வாராந்திர பூஜையில் இன்றைக்கு பாதுஷா ஸ்வீட் விநியோகிக்கப்படும்போது எனக்குக் கிடைக்காது. ரொம்ப கஷ்டம்.

‘ஏன் சார் இந்த அவசரம்? ஜப்பான் ப்ளேன் குண்டு போட வந்துட்டிருக்கா?’ சூப்பர்நியூமரெரி ஆராவமுதன் பக்கத்தில் வந்து ரகசியம்போல் கேட்டார்.

என்னைக் கேட்டால்? ஜப்பான்காரன் என்னிடம் சொல்லிக்கொண்டா கிளம்பி வருகிறான்? சாயந்திரம் குண்டு போடப் போகிறான் என்றால் வீட்டுக்குத் திரும்பப்போய் மொறுமொறுவென்று எண்ணெய் மின்னும் அடையும் பீர்க்கங்காய்த் துவையலும் மதியத்துக்குச் செய்ததில் மீந்த முருங்கைக்காய் சாம்பாரும் சாப்பிட நேரம் இருக்காது. உயிர் முக்கியமா, அடை வகையறா சாப்பிடுவதா?

ஏஆர்பி சீஃப் வார்டன் என்று நாங்கள் வம்பு பேசும்போது எங்களுக்குள் நியமித்த ரிடையர்ட் ஹெட்மாஸ்டரைப் போகிற வழியில் பார்த்து என்ன சமாசாரம் என்று விசாரித்துவிட்டு, வீட்டுக்குப் போகலாம் என்று தீர்மானித்தேன்.

ஏப்ரல் முதல் வாரத்தில் இப்படித்தான் நாலு மணிக்கு வீட்டுக்குப் போக அறிவிப்பு வரும், பின்னாடியே ஜப்பான் விமானத் தாக்குதல் வரும் என்றார்கள். வரவில்லை. இப்போது ஆகஸ்ட். அறிவிப்பு வந்திருக்கிறதாம். என்ன ஆகுமோ. என்னமோ ஆகட்டும், சூப்பரிண்டெண்ட்டெண்ட் பந்துலு சார், வீட்டுக்குப் போகச் சொன்னால் போகவேண்டியதுதான்.

இரண்டு நாளுக்கு முன் காந்திஜி வெள்ளையனே வெளியேறு போராட்டம் ஆரம்பித்திருக்கிறார். செய் அல்லது செத்து மடி என்று ஒற்றை வரி செயல்முறை வேறே. காங்கிரஸ் தலைவர்கள் போராட்டம் நடத்தி கொத்துக்கொத்தாகக் கைதாகிறார்கள்.

அவர்களை ஒடுக்க ஏஆர்பியைப் பயன்படுத்தப் போகிறார்களோ. அது போலீஸ் வேலை ஆச்சே. அதுக்கு நாலு மணிக்கு நான் ஏன் வீட்டுக்குப் போக வேண்டும்?

ஏர் ரெய்டு வார்டனுக்கும் காந்தி பக்தர்களுக்கும் என்ன சம்பந்தம்?

எனக்கென்னமோ லண்டனை ஒரு மாறுதலுக்காக விட்டுவிட்டு, ஜெர்மன் விமானங்கள் இவ்வளவு தொலைவு பறந்து வந்து, மெட்றாஸில்

பிளிட்ஸ்கிர்க் என்ற அதிரடித் தாக்குதல் நடத்தத் திட்டம் போட்டு, அது வெளியே கசிந்துவிட்டதோ என்று தோன்றியது.

ஆனால் ஜனங்கள் இப்போது கொஞ்சம்போல் துணிச்சல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஏப்ரலில் ஜப்பான் விமானம் மதறாஸை நொறுக்கித் தூசாக்கப் போகிறது என்று பட்டணத்தைக் காலி செய்துகொண்டு ஓடியது அநாவசியம் என்று இப்போது தெரிகிறது.

இனி ஜெர்மனியோ ஜப்பானோ வாசலில் வந்து நின்றாலும், வேலை இருக்கு, போய்ட்டு அப்புறம் வா என்று அனுப்பி வைக்கக் கூடியவர்கள் ஆகி விட்டார்கள் நம் பொதுஜனம்.

ஹெட்மாஸ்டர், வீட்டில் சாவகாசமாக ஈசிசேரில் சாய்ந்து ஆனந்த விகடன் படித்துக்கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் ஓரமாக இருந்த இந்துநேசனை அவசரமாக மறைத்தார். வீட்டில் யாருமில்லை என்றால் இந்துநேசன் கேட்கிறதா இவருக்கு? எப்படி கிடைத்தது?

'ஆபீஸ் போகலியா ராமோஜி?'

...

இனி இந்தக் கேள்விக்கு வீட்டுக்குள் போகும்வரை யார்யாருக்கோ பதில் சொல்லிக்கொண்டு போக வேண்டும். ஆபீஸ் உத்தியோகஸ்தன் அலுவலக நேரங்களில் வெளியே சுற்றித் திரிந்தால் சர்க்கார் மானம் போகும்.

'சார் இன்னிக்கு நாலு மணிக்கே ஏஆர்பி ட்யூட்டி பார்க்கறவங்க வீட்டுக்குப் போகலாம்னு அனுப்பிட்டாங்க... இன்னியிலேயிருந்து.'

'அது ஏப்ரல்லே இல்லே...?'

ஹெட்மாஸ்டருக்கு, நான் ஏதோ மாயாஜாலம் செய்து, இறந்த காலத்தில் நாலு மாதம் முந்திய தேதிக்குப் போயிருப்பதாக நினைப்பு போல. ஆனால் அவருக்கு அவ்வளவு கற்பனை வளம் எந்தக் காலத்திலும் கைகூடி வந்திருக்காது.

'எப்பவும்போல ராத்திரி எட்டு மணிக்கு வந்து ரோந்து சுத்தினா போதுமா?' என்று எல்லோருக்கும் புரிகிற மாதிரி கேட்டேன்.

'எட்டு மணிக்கு முந்தி ஜப்பான்காரன் போர் விமானத்தில் வந்தால் யார் ஏர் ரைட் வார்டன் டியூட்டி பாக்கறது?' என்று எதிர்க் கேள்வி கேட்டார் அவர்.

‘அப்போ இன்னிக்கு அட்டாக் இருக்குமா?’

‘அப்படி நான் எங்கே சொன்னேன்?’

‘எட்டு மணிக்கு முன்னால் ஜப்பான் காரன் குண்டு போட்டால் யார் ரோந்து வர்றதுன்னு கேட்டீங்களே?’

‘நாலு மணிக்கு வந்தா உடனே ரோந்து ஆரம்பிக்க வேணும்னு நீ எப்படி எதிர்பார்த்தே?’

இவரிடம் மாட்டிக்கொண்டால் வெறும் நாளிலேயே உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவார். இப்போது ஜப்பான் விஷயம் வேறே.

அடை சாப்பிடும் உத்தேசத்தோடு வீட்டுக்கு நடக்க ஆரம்பிக்க அவர் பின்னால் இருந்து கூவினார் –

‘இன்னிக்கு ராத்திரி நம்ம வார்ட்லே போலீஸ், ஏஆர்பி காவல் ரோந்து எப்படி இருக்குன்னு பார்க்க மெட்றாஸ் கார்ப்பரேஷன் மேயர் சக்கரை செட்டியார் வருவார்னு ஹேஷ்யம்.’

இதை முன்னாலேயே சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா?

வீட்டுக்கு நடக்கும்போதுதான் பத்திரிகையில் பார்த்த விளம்பரம் நினைவு வந்தது. இன்றைக்கு எம்விஎம் கம்பேனி எடுத்த சினிமா, டி டி ராமச்சந்திரனும் தெலக்ஸ் புவனாவும் நடித்த தசாபதி, பாரகன் தியேட்டரில் வெளியாகிறதாமே.

இன்று காலையிலேயே இப்படி நாலு மணிக்கு வீட்டுக்குப் போகலாம் என்பது தெரிந்திருந்தால், தியேட்டர் மேனேஜர் ரெட்டியாரிடம் ரெண்டு டிக்கெட் எடுத்து வைக்கச் சொல்லியிருப்பேன். ரத்னாவும் நானும் சேர்ந்து போய்ச் சினிமா பார்த்து நாளாகிவிட்டது. அதுவும் தசாபதி போல காமெடி படங்கள். இப்படி திட்டமிட முடிந்திருந்தால், இன்றைக்கு ராத்திரி ரோந்து போக லீவு சொல்லியும் இருப்பேன்.

வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது ராத்திரி சாப்பாடு வேண்டாம் என்று தீர்மானமாக ரத்னாவிடம் சொல்லிவிட நினைத்துக்கொண்டேன். ராத்திரி மேயர் சக்கரை செட்டியார் வரும்போது வயிற்றைத் தள்ளிக்கொண்டு அபூரண கர்ப்பிணி மாதிரி நிற்கக் கூடாது.

‘அடை நாளைக்கு செய்யலாம்னு வச்சுட்டேங்க… பீர்க்கங்காய் சரியா இல்லே… புதுசா நாளைக்கு வாங்கிக்கலாம்… இன்னிக்கு கும்மாயம்தான் செஞ்சிருக்கேன்… கூட சாபுதானா வடை… எடுத்து வரட்டா?’

இரண்டு கரண்டி கும்மாயமும், இரண்டு ஜவ்வரிசி வடையும் சாப்பிட எடுத்து வந்த ரத்னாவிடம் இன்றைக்கு ராத்திரி சாப்பாடு வேணாம் பிரியசகி, மேயர் சக்கரை செட்டியார் வரப் போகிறார் என்று குழப்பமாக அறிவித்தேன்.

‘மேயர் நம் வீட்டுக்கு வராரா? வெல்கம். அவர்சைவமா அசைவமா?’

‘அவர் சைவமா அசைவமா தெரியாது. நம்ம வீட்டுக்கு சாப்பிட வரலே. நம்ம வார்ட்லே ஏஆர்பி டியூட்டி எல்லாம் எப்படிப் போயிட்டிருக்குன்னு பார்க்க வராராம். நான் அவரோட கைகுலுக்கும்போது புளி ஏப்பம் வரக்கூடாது.’

‘நீங்க ராத்திரி சாப்பிடலேன்னா பசி ஏப்பம் வரும், பரவாயில்லையா?’

கையில் பத்திரிகையோடு நின்றாள். சரி, ராத்திரி கரைச்சுக் குடிச்சுடறேன் என்று ஒரே ஒரு சாபுதானா வடையோடு எழுந்தேன். அதை பிழைச்சுக் கிடந்தால் நாளைக்கும் சாப்பிடலாம். வதக் வதக் என்று அப்படியே இருக்கும்.

ராத்திரி எட்டு மணிக்கு அரை நிஜாரும், ஏஆர்பி ஹெல்மெட்டுமாக டியூட்டிக்குக் கிளம்பியபோது ரத்னா நானும் வரட்டுமா என்று கேட்டாள்.

வேணாம், ஜப்பான்காரன் குண்டு போடலாம் என்று சொல்ல நினைத்துக் கைவிட்டேன். வேறே வினையே வேண்டாம். ஜப்பான்காரன் தாக்கினால் வீட்டில் நான் தனியாக உட்கார்ந்து என்ன பண்ணப் போகிறேன் என்று கூடவே தொத்துக்குட்டியாகக் கிளம்பி விடுவாள் என் அப்சரஸ்.

நான் தெருக்கோடிக்குப் போனபோது கடைசி ட்ராம் நடுவழியில் நின்றுகொண்டிருந்தது. புரசைவாக்கத்திலிருந்து வால்டாக்ஸ் ரோடு வழியாக பாரீஸ் கார்னர் போகும் வண்டி அது.

ட்ராமைச் சுற்றி பத்து பதினைந்து பேர். குடித்துவிட்டு யாராவது ட்ராம் பாதையில் படுத்திருந்து அவர்களை அகற்றுகிற சம்பவம்போல.

ஆனால் சச்சரவு சத்தம் கேட்கிறதே என்று ட்ராம் பாதையைப் பார்த்தேன். ஒரு குறுக்கீடும் இல்லை. எல்லோரும் ஏக காலத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

டிரைவரும் கண்டக்டரும் ட்ராம் காரின் முகப்பில் நின்று கொண்டிருந்தார்கள். பக்கத்திலேயே ஏஆர்பி சீஃப் வார்டன் என்று நாங்கள் நாமகரணம் செய்திருந்த ரிடையர்ட் ஹெட்மாஸ்டர்.

ட்ராம் டிரைவரும் அவரும் ஏதோ வாக்குவாதத்தில் இருப்பது தெரிய விலக்கிவிடலாம் என்று நானும் அங்கே சைக்கிளைச் செலுத்தினேன்.

‘போலீஸ்காரங்க ஒண்ணு சொல்றாங்க, நீங்க இன்னொண்ணு சொல்றீங்க... உங்க ரெண்டு கோஷ்டிக்குள்ளும் ஒரே அபிப்ராயம் இல்லாட்ட தேசத்துலே எப்படி ஒற்றுமை வந்து சுதந்திரம் கிடைக்கும்?’ என்று ட்ராம் ட்ரைவர் நாளைக்கே சுதந்திரத்தை வழங்க தட்டில் எடுத்துக்கொண்டு பிரிட்டிஷ் பிரதமர் தெரு ஓரத்தில் நிற்கிறதுபோல் அரையிருட்டில் பிரசங்கம் செய்தார்.

‘ட்ராம் ஓட்டும்போது வண்டிக்குள்ளே விளக்கு எரியக்கூடாதுன்னா எரியக் கூடாதுதான்... ப்ளாக் அவுட் நடவடிக்கை அது... எங்க கையேட்டுலே இருக்கு’ என்றார் ஹெட்மாஸ்டர்.

நான் இதைப் படித்த நினைவில்லை. என்றாலும் ஹெச் எம் சொன்னால் ஆண்டவனே சொன்ன மாதிரி. என்னை பாஸ் போட்டு ஸ்கூல் ஃபைனல் வரைகொண்டுவந்து விட்டவர் அவர்தான். எஸ்எஸ்எல்சியில் புத்தி வந்து நானும் நன்றாகப் படித்தேன் என்பது வேறு கதை.

‘என்ன சார் ஆச்சு?’ சைக்கிளில் இருந்தபடியே கால் ஊன்றிக் கேட்டேன்.

என் தலையைப் பார்த்ததும் ட்ராம் கண்டக்டரும் எங்கள் தெருவாசியுமான கண்ணாயிரம் உற்சாகமாகச் சொன்னார் –

‘ராமோஜி சார், நீங்களே பாருங்க... ட்ராம்லே லைட் போட்டு ஓட்டிப்போனா, இப்போ ஹெட்மாஸ்டர் சார் சொன்னபடி, ப்ளாக் அவுட் நேரத்திலே விளக்கை எல்லாம் அணைச்சுட்டு ஓட்டிப் போகணும்னு ஏஆர்பி சொல்றீங்க... விளக்கை போட்டுக்கிட்டு ஓட்டணும்னு போலீஸ் சொல்லுது... நாங்க என்ன பண்ணுவோம் சொல்லுங்க’, என்றார் அவர்.

நாலு பேர் ஏஆர்பி சொன்னது சரியென்று சொல்ல, இன்னும் நாலு பேர் போலீஸ் சொல்வதுதான் கரெக்ட் என்று திடமாக வாக்கு உதிர்க்க, வாக்குவாதம் வளர்ந்துகொண்டு போனது.

ட்ராமில் இருந்த நாலைந்து பிரயாணிகள் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு இறங்கி நடந்தார்கள். கடைசியாக ஜாக்கிரதையாக நாலு

திசையும் பார்த்தபடி இறங்கியவர் எதிர்வீட்டுக் கேளப்பன்.

கண்ணாயிரம் அவரிடமும் சச்சரவுக்கான காரணத்தைச் சொல்ல, புன்னகையோடு கேளப்பன் சொன்ன பதில் அட்சர லட்சம் பெறும் –

‘அரை மணி நேரம் ட்ராமுக்குள்ளே லைட்டை ஓஃப் பண்ணுங்க... அடுத்த அரை மணி நேரம் லைட்டைப் போட்டு வையுங்க... இப்படியே மாறி மாறிச் செஞ்சுக்கிட்டு ட்யூட்டி முடிச்சு சௌக்கியமா வீட்டுக்குப் போங்க.’

சிரித்துக்கொண்டே அந்தக் கூட்டம் கலைய ஆரம்பித்தபோது ஒரு ப்ளஷர் கார் வந்து நின்றது. மோரிஸ் மைனர், கருப்பு நிறம். உள்ளே இருந்து இறங்கினவரைப் பார்த்ததும் கேளப்பன் சத்தமாகச் சொன்னார் – ‘சகாவு சக்கரை செட்டியார் ஜிந்தாபாத்.’

அப்போதுதான் கவனித்தேன் மேயர் வந்திறங்கி இருக்கிறார் என்று.

பக்கத்தில் போய் பெயர் சொல்லி அறிமுகப் படுத்திக்கொண்டேன். புன்சிரிப்போடு கை குலுக்கினார் மேயர். ஒரு பார்வைக்கு பாதிரியார் மாதிரியும் மற்றொரு பார்வைக்கு தொழிற்சங்க பிரமுகர் மாதிரியும் அவர் இருந்ததாகத் தோன்றியது.

சட்டென்று அவர் முகம் மலர்ந்து புன்னகை சிந்தியது. நான் என் பின்னால் திரும்பிப் பார்க்க, ரத்னா நின்றுகொண்டிருந்தாள். என்னை அனுப்பி வைத்துவிட்டுப் பின்னாலேயே வந்திருக்கிறாள். சாப்பிட்டாளோ என்னமோ.

‘என் ஒய்ஃப் சார், ரத்னா’ என்றேன். செட்டியார் புன்முறுவலோடு கைகூப்பினார். நான் ரத்னாவின் மகாராஷ்ட்ர பின்னணிபற்றி அறிமுகப்படுத்தினேன்.

‘சார், கடவுளை அறிவது ஞானம் இல்லே... அனுபவம்னு நீங்க சொன்னதா பத்திரிகையிலே படிச்சேன். ரொம்ப அருமையா இருந்தது. நீங்க கிறிஸ்துவரா இருந்தாலும் மத்தவங்களுக்கும் இது பிடித்துப் போனது’ என்று ரத்னா சொல்ல அவர் சந்தோஷத்தின் உச்சிக்கே போய்விட்டார்.

‘ஓய் ராமோஜி, மராட்டா ஸ்திரி கும்டா, அதான் பர்தா மாதிரி துணியை சேலைக்கு மேலே மூடி உடுத்திப்பாங்களே... அதை போடாம, ராத்திரி வெளியே வரக்கூடாதுன்னு நான் உங்க வயசிலே இருந்தபோது கட்டுப்பாடு. அதையும் மீறி எங்க ஊர் வெங்கல்–லே அவங்க தெருவில் நடந்துபோய், பள்ளிக்கூடத்திலே சாயந்திர க்ளாஸ்லே கலந்துக்க ஏற்பாடு செஞ்சிருந்தேன்.

உங்க ஓய்ஃப் புது யுகப் பெண். படிக்கறதை மறக்கறது இல்லே போலே இருக்கு. நலமா இருங்க, தேவனால் எப்பொழுதும் ஆசிர்வதிக்கப்பட்டு இருங்க.’

அப்புறம் சக்கரைச் செட்டியார் எங்கள் பேட்டை வார்டுகளைப் பார்வையிட்டபோது நானும் ரத்னாவும் அவரோடு அவர் காரில் போனோம். என் சைக்கிளை கேளப்பன் சேட்டனிடம் கொடுத்து அனுப்பிவிட்டு மேயரோடு பயணம் தொடங்கினேன்.

‘நீங்க எங்கே உத்தியோகம் பார்க்கறீங்க?’ என்று என்னைக் கேட்டார். செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் சர்க்கார் ஊழியன் என்று சொன்னதும் கொஞ்சம் ஆச்சரியத்தோடு பார்த்தார்.

‘அபூர்வமான வர்க்கம் நீங்க... கவர்மெண்ட் டிபார்ட்மெண்டை எல்லாம் ஜப்பான்காரன் குண்டு போடப் போறான்னு மெட்றாஸிலே இருந்து வேறே எங்கெங்கேயோ இடம் மாத்திட்டாங்க. எப்படி அவங்களோட ஒத்துழைப்பு இல்லாம இங்கே மெட்றாஸ் கார்ப்பரேஷன் வேலை செய்யும்? அதுவும் இப்போ எவாகுவேஷன் எல்லாம் முடிஞ்சு நம்ம ஜனங்கள் திரும்பி வந்துக்கிட்டிருக்காங்க. அவங்களை தவிக்க விடலாமா?’ என்று கேட்டார்.

‘நிச்சயமா முடியாது, சார். ஆபீஸ் இடம் மாத்தினதுபற்றி சொன்னீங்களே... போர்ட் ட்ரஸ்ட் ஆபீசை ஊட்டிக்கு மாற்றிட்டாங்கன்னு பத்திரிகையிலே படிச்சேன். ஊட்டியிலே எந்தக் கடல் இருக்குன்னு அங்கே போனாங்களோ.’

ரத்னா எடுத்துக் கொடுக்க, இன்னொரு பத்து நிமிடம்போல சின்னஞ்சிறு ஜப்பானிய போர் விமானத்துக்குப் பயப்படும் போர்க் கால சர்க்கார்பற்றியும், முக்கியமாக மதறாஸ் மாகாண சர்க்கார் பற்றியும், அவர் தலைமையில் கார்ப்பரேஷன் செய்யத் திட்டமிட்டிருக்கும் நல்ல காரியங்கள்பற்றியும் பேச்சு மழை பொழிந்தார். காந்திஜிபற்றி மிக உயர்வாகச் சொன்னபடியே வந்தார் மேயர் சக்கரை செட்டியார்.

அவரை எங்கள் வீட்டுக்கு வந்து போகச் சொல்லிக் கேட்டுக் கொண்டேன். ரத்னாவும் என்னோடு சேர்ந்து அன்போடு அழைத்தாள்.

‘நிச்சயம் வரேன். இன்னிக்கு ரொம்ப நேரமாயிடுச்சு. சாவகாசமா, மெட்றாஸ் பழைய நிலைமைக்கு திரும்பினதும் ஒரு நாள் வரேன்’ என்றார் வெங்கல் சக்கரை செட்டியார் எங்களை இறக்கி விடும்போது.

அவருடைய மேயர் பதவி முடிவடைவதற்குள் யுத்தம் முடிந்து விட வேண்டுமே என்று சௌகார்பேட்டையில் கோயில் கொண்ட நிமிஷாம்பாளை வேண்டினேன்.

நேரம் ராத்திரி பத்து மணி ஆகிவிட்டிருந்த படியால், நாளைக்கு ஏஆர்பி ரோந்து போகலாம்; இப்ப வீட்டுக்குள்ளே போகலாம் என்றாள் ரத்னா. தூக்கம் வருதா என்று கேட்டுத் திட்டு வாங்கினேன் அவளிடம்.

வீட்டு வாசல் இருட்டாக இருந்தது குறித்து சந்தோஷப்பட்டேன் ரத்னாவிடம். ஏஆர்பி வார்டன் வீட்டு வாசல் ப்ளாக் அவுட் நேரத்தில் அப்படித்தானே இருக்கவேண்டும் என்று சொல்ல ஆரம்பித்தவளை அந்த இருட்டில் அணைத்து இதழ் கலந்தேன். பட்டணம் பொடி வாசனைக்குப் பதிலாக கிராம்பு வாசனை கிறுகிறுக்க வைத்தது.

காம்பவுண்ட் இருட்டுக்குள்ளே இருந்து யாரோ வேகமாக வாசலுக்குப் போன மாதிரி இருந்தது. அவசரமாக விலகினோம்.

‘உங்க சைக்கிளை வச்சுட்டுப் போகலாம்னு வந்தேன்... இல்லேன்னா எனக்கு தூக்கமே வராது.’ கேளப்பன்தான்.

ரத்னா மெல்லச் சிரிக்கும் சத்தம். ‘அப்போ வரேன்’ என்று கேளப்பன் விடை பெற்றுப்போய் ரொம்ப நாழி சிரித்துக்கொண்டிருந்தோம் நாங்கள்.

அடுத்த நாள் மாலை நாலு மணிக்கு ஆபீசில் இருந்து வெளியே வந்ததுமே நேரம் கடத்தாமல் வீட்டுக்குப் போய்விட்டேன். அன்றைக்கு ரோந்து தினம் இல்லை எனக்கு. சொன்னேனே, வாரத்தில் நாலு நாள் வேலை அது.

சாயந்திர டிபன், காபி முடித்து நானும் ரத்னாவும் ட்ராம் ஏறி திருவல்லிக்கேணி வாலாஜா ரோடில் பாரகன் தியேட்டருக்கு, தசாபதி சினிமாப்படம் பார்க்கப் போனோம்.

தியேட்டரில் கூட்டம் நிறைந்து வழிந்தது. என் நண்பன் இங்கே தியேட்டர் மேனேஜராக இருக்கிறான். அவனைக் கேட்கலாம் என்று ஆபீஸ் போனபோது அவன் வந்திருக்கவில்லை. ஆனால், யாரோ ஒரு கனவான் ரெண்டு பர்ஸ்ட் க்ளாஸ் டிக்கெட்களைத் திருப்பித்தர வந்திருந்தார். டிக்கெட்களும் பணமும் கைமாறி, பிரச்னை சுமுகமாக முடிய, உள்ளே போனோம்.

அடுத்த நிமிஷம் பிரிட்டிஷ் யுத்தப் பிரச்சாரப் படம். அப்புறம் சிக்கனம் பேணுவோம் என்று ஒரு சர்க்கார் விளம்பரப்படம். எல்லாம் முடிந்து தசாபதி.

படம் என்னை குப்புற விழுத்தாட்டியது.

நான் தசாபதியை நாடகமாக ஒற்றைவாடை டிராமா கொட்டகையில் சின்ன வயசில் அப்பாஜி கையைப் பிடித்துக்கொண்டுபோய்ப் பார்த்திருக்கிறேன்.

எல்லோரும் ஹோஹோவென்று சிரிக்க எனக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை என்றாலும் அப்பா அவ்வப்போது பெரிய பையன்கள் கழுத்தில் மாட்டிய தகரத் தட்டில் வைத்து நொறுக்குத்தீனி, கடலை உருண்டை, பிஸ்கட் என்று நாடகக் கொட்டகைக்குள் விற்றுக்கொண்டு போனதை வாங்கித் தர, சந்தோஷமாக சாப்பிட்டுக்கொண்டிருந்ததால் கதை புரியாததை சட்டை செய்யவே இல்லை. எல்லாம் சாப்பிட்டு அலுக்க ஒரு மணி நேரம் ஆக வேண்டி இருந்தது.

அப்புறம் வீட்டுக்குப் போகலாம் என்று பாதி நாடகத்தில் அழுது அப்பாஜியிடம் திட்டு வாங்கிக்கொண்டு அவரும் முழுதும் பார்க்காமல் வீட்டுக்குத் திரும்பினோம்.

அதே தசாபதியை இப்போது எம்விஎம் செட்டியார் ஃபிலிம் ஆக்கி, காளிங்க ரத்தினத்தையும் ராமசந்தரையும் நடிக்க வைத்திருக்கிறார். தற்போது ஊரெல்லாம் பேச ஆரம்பித்திருக்கும் மருதூர் கோபாலன் ராமச்சந்தர் இல்லை இவர். டி டி ராமசந்தர்.

தசாபதி பார்க்கத் தொடங்கி, முதலிலிருந்தே ரத்னா கையைப்பற்றிக் கொண்டு சிரித்துச் சிரித்துப் புரை ஏறிவிட்டது. எல்லாம் சிரிப்பாகப் போய்க்கொண்டிருக்க, வந்தாளே கள்ளியங்காட்டு யட்சி.

நாலு சீன் கடந்து, ஹீரோயினாக புவனா வந்து என்னை ஸ்தம்பித்துப் போக வைத்தாள். வெறும் புவனா இல்லை. தெலக்ஸ் சோப் விளம்பரத்தில் பத்திரிகை ஒன்று விடாமல் சிரித்துக்கொண்டிருக்கும் தெலக்ஸ் புவனா.

இப்படி ஒரு பேரழகை நான் சத்தியமாக இதுவரை பார்த்ததில்லை. ரத்னா குடத்துக்குள் இட்ட விளக்குபோல அடக்கமான அழகு. ஆனால் புவனாவோ, லைட் ஹவுஸில் வைத்த மகாதீபம் போல ஒரு பெரும் கூட்டத்தையே ஏங்க வைக்கிற அழகு.

கும்பகோணத்தில் என் நண்பன் கோபு சொல்வான், காதல் செய்ய இல்லை, ஆராதிக்கவென்றேயான அழகு. அது தெலக்ஸ் புவனாதான். ஏன் காதல் செய்யக் கூடாது? ஆராதித்து அணைத்துக்கொள்ளலாம்.

கொஞ்சம்போல் பூஞ்சை சரீரம்தான். ஆனாலும் அந்த நளினமும், முகம் கொள்ளாத சிரிப்பும். ரத்னா சிரித்தால் முகத்துக்கு ஒளி ஏற்றுவாள். தெலக்ஸ் புவனா சிரித்தால் அந்த இடமே பளிச்சென்றாகும்.

என்ன குரல் என்ன குரல். ரத்னா குரல் எனக்கு கனவிலும் வருவது. காதில் ஒலிப்பதோடு மனதிலும் ஒலித்துக்கொண்டே இருப்பது. அந்தரங்கமான நேரத்தில் அந்தக் குரல் உடம்பில் ஒவ்வொரு திசுவுக்குள்ளும் கேட்டு எதிரொலிக்க அவளில் ஒடுங்கிக் கிடக்கவல்லாமல் வேறேதும் செய்யேன்.

தெலக்ஸ் புவனா குரல் கொஞ்சம் கிரீச்சிடும். கொஞ்சம் கட்டைக் குரலாக ஜாலம் காட்டும். அந்தக் கண்களின் குறுகுறுப்போடு புவனா குரல் இழைந்து வரும்போது, செய்துகொண்டிருந்த காரியம் எதுவாக இருந்தாலும் தூக்கிப் போட்டுவிட்டு பார்த்துக்கொண்டே இருக்க வைக்கும்.

‘எவ்வளவு அழகா இருக்கா இந்த புவனாப் பொண்ணு, பார்த்தியா அன்பே.’

நான் ரத்னா காதில் ஓத, அவள் வெடுக்கென்று கையை உதறிக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். கண்ணை மூடிக்கொண்டு தூங்குவதாகப் பாவனை செய்தாள். விழித்து என் காதில் சொன்னாள் –

‘ரொம்ப போரடிக்குது... நான் தூங்கிக்கறேன்... நீங்க நல்லா புவனா தரிசனம் பண்ணிக்குங்க... போற வழிக்கு புண்ணியம்.’

என் நினைவெல்லாம் தெலக்ஸ் புவனா ஆக்ரமித்துக்கொள்ள கும்பகோணத்தில் என் நண்பன் கோபுவோடு மானசீகமாகப் பேசினேன் –

‘என் ஆராதனைக்கு உரிய அழகை நானும் கண்டேன். இதோ இந்த வெள்ளித் திரையில் மனம் கொள்ளை கொள்ளும் அழகு அது. கட்டாயம் தசாபதி பார்.’

புவனா வந்த காட்சிகளில் எல்லாம் ஆர்வம் காட்டி, நாற்காலியின் முனைக்கே போய் உட்கார்ந்து படத்தில் ஆழ்ந்தேன்.

ஒரு சீனில் புவனா ‘நீ இங்கே வருவாயோ’ என்று ஹிருதயத்தைக் கவ்விப் பிடித்துப் பாட்டுப் பாடி, சதிர்க் கச்சேரியாக ஆடும்போது, வந்தேன் என்று

திரைக்குள் மானசீகமாகப் போய், புவனா ஆடும் வீட்டுக்குள், வீடு என்று போட்ட செட்டுக்குள் புகுந்து, வெகு அருகே, மிக அருகே, அந்த முகத்தையே பார்த்துத் தியானித்தபடி இருந்தேன்.

சீக்கிரம் படம் முடிந்து விடுமே என்று மனது அங்கலாய்க்க, அருகே ரத்னா தன் அலுப்பைப் போக்கத் தந்தச் சிமிழைக் கைப்பையில் இருந்து எடுத்து கள்ளத்தனமாகத் திறந்து கிர்ரென்று சத்தம் இன்றி நாசுக்காகப் பொடி போட்டாள். அதற்கு தெலக்ஸ் புவனா கூந்தலில் சூட்டியிருந்த ஜாதிப்பூ வாசனை.

மனம் நான் கேட்பதற்குள் முந்திக்கொண்டது. இல்லை, தெலக்ஸ் புவனா பொடி போடுவாளாக இருக்க முடியாது. ஆந்திரப் பெண் போல உடம்பு வாகு, லாகவம், சௌந்தர்யம். ஆந்திரப் பெண்போல சுருட்டு வேணுமானால் பற்ற வைத்து தீ எரியும் முனையை வாய்க்குள் வைத்துப் புகைப்பாளாக இருக்கும்.

என்னையும் மீறி சுருட்டோடு தெலக்ஸ் புவனாவைக் கற்பனை செய்ய, ‘நாம் கடற்கரையில் யுத்தம் புரிவோம், நாம் தெருக்களில் யுத்தம் புரிவோம்’ என்று அதிகாரத்தோடு சொல்லி சுருட்டுப் புகை விட்டபடி வின்ஸ்டண்ட் சர்ச்சில் மனதின் ஒரு மூலையில் இருந்து மற்றதற்கு மெல்ல நடந்து போனார்.

கல்யாணக் காட்சியில் கணீரென்று பி.ஏ.அகிலாண்டநாயகி அழகாக ஒரு தமிழ்க் கீர்த்தனை பாட, ரத்னா சட்டென்று கண் விழித்து ஆஹா என்றாள்.

அகிலாண்டமும் அழகிதான். ஏன், சமையல்காரியும் புவனாவின் உற்ற தோழியுமாக வரும் சந்திரகாந்தமும் அதே ரீதியில்தான். ஆனாலும் புவனாவைப் பார்த்த கண்கள் வேறொன்றும் காணாதே என்று ரத்னாவிடம் சொல்ல நினைக்க அவள் அகிலாண்டத்தின் கல்யாணி ராக கானம் முடிந்தபிறகு பலமாகக் கை தட்டினாள்.

அவளுடைய கைதட்டல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தில் ஒவ்வொருவராகத் தமிழிசைக்குக் கைதட்ட அடுத்த ஐந்தாம் நிமிடம் ரத்னா உற்சாகமானாள்.

‘தசாபதி அந்தப் பொம்மனாட்டியைக் கட்டிக்கிட்டு என்ன கஷ்டப்படப் போறானோ’ என்று ரத்னா என் காதில் விழும்படி சொன்னது பின்னால் யார் காதிலோ விழுந்து, ‘ஒரு கஷ்டமும் இல்லே, பழகிடும்’ என்று பதில் வந்தது.

விலாசினி டைப்பிஸ்ட் குரல் அது.

பின்னால் திரும்பிப் பார்த்தேன். கேளப்பன் கம்பளிப்பூச்சி மீசைக்கு நடுவில் கொஞ்சமாகப் புன்னகைத்தார். கையில் குடையை பீமசேனன் கதாயுதத்தை ஊன்றியிருப்பதுபோல் ஊன்றிப் பிடித்திருந்தார்.

ரத்னா விலாசினியிடம், 'இங்கே ஒரு புவனா பைத்தியம் இருக்கு' என்று என்னைக் காட்டிச் சொன்னதை நானும் கேட்டேன். இந்த ஷணமே புவனாவை நேரில் பார்த்து, ஒரு வார்த்தை, ரெண்டு வார்த்தை பேசிவிட்டு வரவேண்டும் என்று மனசு தர்க்கரீதியில் அல்லாமல் பிடிவாதம் பிடித்தது.

வேணாம், இப்போது ரத்னா கோபித்துக்கொண்டுபோய்விட்டால் ரெண்டு பெருங்கஷ்டம். ஒண்ணு அவள் தனியாக இருட்டில் வீட்டுக்குப் போகத் துணிவாள். ஜப்பான் விமான குண்டு வீச்சோ, உள்ளூர் திருடன், கொள்ளையர்கள் நடமாட்டமோ இருட்டுத் தெருவிலிருந்தால் வேறு வினையே வேண்டாம்.

நானும் மீதிக் கொஞ்சூண்டு ஓடி முடிய இருக்கும் படத்தில் புவனாவைப் பார்க்க முடியாமல், ரத்னா பின்னாலேயே ஓட வேண்டி வரும். அது பின்னும் கஷ்டம் பெருங்கஷ்டம்.

தசாபதி பிர பரீட்சை கொடுத்து அதில் பாஸ் ஆவதாக மங்கலகரமாகப் படம் முடிய வெளியே நடக்க ஆரம்பித்தோம். ஹவுஸ்புல் ஆன காட்சி அது.

விலாசினி என்னைவிட்டுவிட்டு ரத்னாவிடம் படம் எப்படி இருந்துதுன்னு கேட்டாள். அது எனக்குமான கேள்விதானென்று தெரியும். ரத்னா என்ன பதில் சொல்கிறாள் என்று ஒரு வினாடி ஒன்றும் பேசாமல் அவளைப் பார்த்தேன்.

'படம் நல்லா இருக்குதான். ஆனா ஹீரோயின்தான் சகிக்கலே. ஒட்டடைக்குச்சிக்கு புடவை சுத்திவிட்ட மாதிரி ஓர் உடம்பு... அதுலே என்னதான் கண்டாங்களோ ஆம்பளைங்க எல்லாம்.' ரத்னா சொன்னாள்.

'எல்லோரும் இல்லே... எனக்கு ஸ்கூல் வாத்தியாரா வரும் சக்ரபாணியை ரொம்ப பிடிச்சிருந்தது.'

கேளப்பன் படு சீரியஸ் ஆகச் சொல்ல நான் ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தேன். சக்ரபாணி நடிப்பு பிடித்திருந்தால் அது சரிதான். அவரைப் பார்த்து கேளப்பன் காமுற முகாந்திரம் யாதும் இல்லையே.

‘அவரை விட பரண்லே உட்கார்ந்து பலகாரம் திங்கற அவர் வீட்டம்மா நல்லா துருதுருன்னு இருந்தது. பார்க்கவும் லட்சணமான சுந்தரி பெண்குட்டி.’ கேளப்பன் உற்சாகமாகத் தொடர்ந்தார்.

இருக்கலாம். புவனாவோடு ஒப்பிட்டால் ஹாலிவுட் பேரழகி என்று போற்றப்படும் ரீட்டா ஹேவொர்த் கூடப் பேரழகி இல்லை.

வீட்டுக்குப் போக ரிக்ஷா கிடைத்தது. எங்கேயும் நர வாகனமான கை ரிக்ஷாவில் போகக் கூடாது என்று தீர்மானம் செய்திருந்தது அந்த ராத்திரி பயணத்தால் மீறப்பட்டது.

தெலக்ஸ் புவனா வேறே மனம் முழுக்க, புத்தி முழுக்க நிறைந்து, இன்னும் தசாபதி படம் எனக்கு ஓயவில்லை. இதை ரத்னாவிடம் இனியும் சொன்னால் வீண் சண்டை, இல்லை, அது ஊடல், ஏற்படும்.

ஜப்பான் குண்டு வீசித் தாக்குதலோ, வீட்டில் ஊடலோ, அல்லது இரண்டுமோ நான் சந்திக்க வேண்டி இருக்கும். அதற்குள் வீட்டுக்கு நடக்க முடியாது.

ரத்னாவோடு ஏப்ரல் 14-ந்தேதி தமிழ் புதுவருஷப் பிறப்பன்று மைலாப்பூர் வந்துவிட்டு ஏக சிரமமாகி விட்டது. நானே பயந்து போன முன்னிரவு அது.

வீட்டுக்குப் போய்விட்டால் எந்தப் பிரச்னையையும் ஒரு மாதிரி சமாளிக்கலாம். போனோம்.

நாலைந்து பாத்திரங்களை சமையல்கட்டில் இருந்து எடுத்து வந்தாள் ரத்னா. பெரிய விருந்துதான் என்று தீர்மானித்தேன். இது ஒண்ணு இவளிடம், சண்டை போட்டாலும் வயிற்றுக்கு குறை வைக்க மாட்டாள்.

எலுமிச்சம்பழ சேவை, தேங்காய் சேவை, மிளகு சேவை, புளி சேவை, தயிர் சேவை என்று அட்டகாசமாக ராச்சாப்பாடு. தேங்காய்ப் பாலும் துண்டு மாங்காய் ஊறுகாயும், தக்காளி ரச வண்டலும் கூட்டணி.

‘அதென்ன சேவை? இடியாப்பம்னு சொல்லுங்க’ என்று கல்யாணமான புதிதில் ரத்னா என்னைத் திருத்த முற்பட்டது நினைவு வந்தது. நான் அப்போது அழுத்தந் திருத்தமாகச் சொன்னது -

‘வேக வைத்து அப்படியே சாப்பிட்டால் இடியாப்பம். உதிர்த்து சாப்பிட்டால் சேவை.’

‘என்ன ரொம்ப சேவை மனப்பான்மையிலே இருக்கறாப்பல இருக்கு’ என்று கேணைத்தனமாக ஆரம்பித்தேன். அவள் இந்த மாதிரி சந்தர்ப்பங்களுக்கு வைத்திருக்கும் நொடிப்போ, நல்ல ரொமாண்டிக் மனநிலையில் இருந்தால் பொங்கும் சிரிப்புமோ இல்லாமல், ராத்திரி கடை அடைக்கும் நேரத்தில் வந்த கஸ்டமருக்கு கேட்டதைக்கொண்டுவந்து வைக்கும் ஓட்டல்காரர்போல சேவையைத் தட்டில் போட்டுப் போனாள். அது இடியாப்பமாக இருந்தால் வீசியிருப்பாள்.

புவனா இன்னும் என் மனதிலும் அவள் மனதிலும் நிழலாடிக் கொண்டிருப்பது தெளிவாகப் புரிந்தது. என்றாலும், நான் புவனா மீது பித்தாகிப் போனது என்னமோ நிமிஷத்துக்கு நிமிஷம் கூடிக்கொண்டு இருக்கிறதே தவிர குறையவில்லை.

படுக்கையில் சுமுகமான இரண்டு விலங்குகளாக ரத்னாவும் நானும் காதல் பரிமாறிக்கொண்டோம். எல்லாம் முடிந்து உறக்கத்தில் நழுவும்போது தெலக்ஸ் புவனாவின் சிரிப்பு என்னைச் சுற்றிச் சுழன்றது. கொடிமின்னல் வெட்டிப் பளிச்சிடும் ஒளியோடு அலையும் ஓர் அழகான பிசாசாக புவனா என் விழிகளுக்குள் மின்னி வர நான் எப்போது உறங்கினேன் தெரியாது.

சினிமா படம் பார்த்து பயந்தது உண்டு. இன்விசிபில் கோஸ்ட், கிங்க் ஆஃப் த ஸோம்பீஸ் போன்ற இங்க்லீஷ் படங்களில் பிசாசு வரப் பார்த்து ராத்திரி முழுக்க இனம் புரியாத பிசாசு பயம் தூக்கம் கெடுக்க காலை எழுந்ததும் அதெல்லாம் போயிருக்கும்.

ஆனால் தெலக்ஸ் புவனா அப்படி இல்லை. மனதில் அழுத்தமாகப் பதிந்து போயிருக்கும் நினைவும் யட்சிக் கனவும் அந்த வெண் சிறகுத் தேவதை.

காலையில் குளித்துவிட்டு பூஜை அலமாரிக்கு முன் நின்று ஐந்து நிமிடம் வீட்டுக்கும் தேசத்துக்கும் உலகத்துக்கும் நல்லது நடக்கப் பிரார்த்திப்பேன்.

குளித்துவிட்டு தட்டுச் சுற்று வேட்டி உடுத்து நாற்காலியில் உட்கார்ந்தால் கலகலவென்று சிரிப்புச் சத்தம். அறைக்குள் தெலக்ஸ் புவனாவின் சாந்நித்யம் முழுக்க நிரம்பி வழிகிறதாக ஒரு பிரமை.

ருசியாக பெசரெட் தோசை செய்து காலை ஆகாரம் கொடுத்தாள் ரத்னா. அந்த ருசி நாக்கில் பரவி மனம் தோய்ந்தபோது மறுபடி புவனா உயிரில் கலந்து நிறைந்து நிற்க, மிரள மிரள நாலு திசையும் பார்த்தேன்.

ரத்னா பதறிப்போய் ‘என்னாச்சுங்க... என்ன ஆச்சு?’ என்று சத்தமாகக் கேட்டு சமையலறைத் தரையில் என் அருகே இருந்து என் தலையை ஆதரவாகத் தன் மார்புக்கு நடுவே புதைத்துக் கொண்டாள். நான் இருக்கிறேன் உனக்கு என்று அதிக பட்ச பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கை அது.

ஒரு நிமிடம் குடிகூரா பவுடரும் மஞ்சள் பொடியும், மைசூர் சாண்டல் சோப்பும், நிறைந்த வியர்வை நறுமணமுமாக நான் ரத்னாவோடு நெருங்கி கட்டுண்டு மயங்கிக் கிடந்தேன்.

அடுத்த நிமிடம் புவனா பாடிக்கொண்டே குறும்புப் பார்வை பார்த்தபடி என் தலையைத் தடவினாள். இது ஆராதிக்க வேண்டிய அழகு என்றால் உயரத்தில் இருந்து அருள் செய்ய வேண்டியதுதானே. ஏன் கீழே இறங்கி என் அந்தரங்க நொடியில் குறுக்கே புக வேண்டும்?

‘நல்ல பிசாசு இல்லையா?’

நான் ரத்னாவிடம் சந்தேகம் தெளிவு பெறக் கேட்டேன். அவள் மேலும் பதறி, ‘நிமிஷாம்பா, இவருக்கு மோகினிப் பிசாசு பிடிச்சிருக்கே. காப்பாத்து... கற்பகாம்பா... காப்பாத்து’ என்று மனம் ஒப்பிக் கை கூப்பிக் கண்மூடித் தொழுதாள்.

நான் அதற்குள் சாப்பிடுவதாகப் பெயர் பண்ணி பெசரட்டை அங்கே கொஞ்சம் இங்கே கொஞ்சம் பிய்த்துத் தின்றுவிட்டு எழுந்தேன்.

ஒவ்வொரு தடவை ரத்னா கைச்சாப்பாட்டை ருசிக்கும்போதும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையும் அது எப்படி ருசியும் பிரியமும் சூடும் சுவையுமாக இருந்தது என்பதை அவளிடம் சொல்லாமல் கை கழுவப் போகமாட்டேன். இன்றைக்கு எழுந்து ஒன்றும் பேசாமல் கை கழுவ, பக்கத்தில் நின்று அவள் கண் கலங்கினாள்.

‘என்ன ஆச்சு உங்களுக்கு? உடம்பு சரியில்லைன்னா ஆபீஸ் போக வேணாம். ஒரு நாள் லீவு சொல்லிடுங்க.’

அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நான் உத்தியோக உடுப்பு தரித்து ஆபீசுக்குக் கிளம்பினேன். ஒரு நிம்மதியான புன்சிரிப்போடு, ‘பார்த்துப் போயிட்டு வாங்க’ என்று வாசல்வரை வந்து அனுப்பி வைத்தாள் ரத்னா.

அட்டெண்டென்ஸில் கையெழுத்துப் போட்டு உள்ளே போகும்போது சூப்பரிண்டெண்ட்டெண்ட் பந்துலு சார் கூப்பிட்டார் –

'ராமோஜி இது என்ன உம் கையெழுத்து போடாம லக்ஸ்னு என்னமோ எழுதியிருக்கீர்... அது லக்ஸம்பர்க் ஸ்ட்ரோக் ஆச்சே... ஷார்ட் ஹேண்ட் படிக்க ஆரம்பிச்சிருக்கீரா?'

சுதாரித்துக்கொண்டேன்.

'பிட்மென் ஷார்ட்ஹாண்ட் புக் செகண்ட் ஹேண்ட் காப்பி மூர்மார்க்கெட்டுலே கிடைச்சது... நானே பழக ஆரம்பிச்சிருக்கேன் சார்' என்றேன்.

'இந்த ஷார்ட் ஹாண்டே இப்படித்தான்... பழக ஆரம்பிச்சா மனசுலே ஷார்ட்டா ஆக எல்லாத்தையும் குறுக்கி அதை ஸ்ட்ரோக்காக கன்வெர்ட் பண்ணும்... எனக்கு ரொம்ப பிடிச்சது கல்பீட்டர் – க்ளியோபாட்ரா...'

எனக்கு ஷார்ட் ஹேண்ட் இல்லே... ப்ராட் ஸ்மைல்ஸ்... தெலக்ஸ் புவனா. லக்ஸ் ஸ்ட்ரோக் போட்டா லக்ஸம்பர்க் இல்லே ..தெலக்ஸ் புவனா... என் கல்பீட்டர்...

வீட்டுக்கு ரத்னா. மனசிலே அசோகா பாக்கு மாதிரி அசை போட்டபடி ஆபீசில் வேலை பார்க்க புவனா.

ஆபீஸ் மேஜையில் எனக்கு எதிரே தொடுக்கி உட்கார்ந்து என்னையே பார்த்தபடி தெலக்ஸ் புவனா.

பென்ஷன் கணக்குகளை லெட்ஜரில் இருந்து சப்ளிமெண்டரிகளில் பெயர்த்தெழுதி, வகைப்படுத்தி, ட்ரஷரியில் இருந்து வந்த தொகையை டாலி பண்ணிக்கொண்டிருந்தபோது, பென்சிலைப் பிடுங்கி, லெட்ஜரை மூடி வைத்து, மேஜையின் மேல் அவள் நாட்டியமாடுவதைப் பார்க்கச் சொல்லி என்னை நச்சரித்தவள் அவள்.

நேற்றைக்கெல்லாம் ஆராதிக்க வேண்டியவளாகத் தெரிந்த புவனா இப்போது அணைத்து முத்தமழை பொழிந்து நெஞ்சோடு இறுக்கிக்கொள்ள வேண்டியவளாக மாறிப் போனாள்.

நான் புவனாவின் ஆட்டத்தில் மனம் பறிகொடுத்து, தியாகராஜ பாகவதராக பைரவி ராகத்தில் எதிர்ப்பாட்டு பாடத் தூண்டப்பட்டேன் –

‘உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ.’

‘சார் உடம்பு சரியில்லையா?’

ப்யூன் வீரையா என் பக்கத்தில் வந்து நெற்றியில் கைவைத்துப் பார்க்க தெலக்ஸ் புவனா மேஜையைவிட்டு இறங்கி மறைந்து போனாள்.

‘உடம்புக்கு ஒண்ணும் இல்லே வீரையா... நீ விடிகாலையிலேயே கோங்குரா சட்னி சாப்பிட்டு வருவியா? வாசனை தூக்குதே’

‘அது ராத்திரி சாப்பிட்டது சார், கை சரியா கழுவலே.’

வீரையாவின் லீலைகள் எந்த நிலையிலே இருக்கு? ஆபீஸ் நேரத்தில் வம்பு பேசமாட்டேன். அதுவும் இந்துநேசன் தனமானவை. இப்போது கதைக்கச் சொல்கிறது மனம்.

அதை ஏன் கேக்கறீங்க என்றபடி உற்சாகமாக என் மேஜைக்கு முன் வந்து நின்றான் அவன். யாருமே வரக்கூடிய சாத்தியம் இல்லை என்றால் அங்கே உட்காரவும் தயங்க மாட்டான் அவன். ‘தோஸ்த் சார் ஹம் தோனோ’ என்று ஹிந்தியில் எல்லாம் பெருந்தன்மை காட்டியிருக்கிறான் வீரையா.

அவன் சற்று விந்தி விந்தி நடந்துகொண்டிருந்தான்.

‘என்ன கால்லே கட்டுப் போட்டிருக்கே?’, அவனைக் கேட்டேன்.

‘என்னத்த சொல்ல, போன வாரம் பௌர்ணமிக்கு மரத்தடியிலே ஊஞ்சல் கட்டி ஆடும்போது விளுந்துட்டேன் சார்... நொண்டிக்கிட்டே போய் நானே மருந்து போட்டுக்கிட்டேன்’ என்றான் வீரையா.

‘வீட்டுலே யாரும் இல்லையா?’

‘பௌர்ணமி ராத்திரி ஆச்சே... வீட்டுக்குள்ளே எப்படி கூப்பிடறது? தெரு முழுக்க தெரிஞ்சுடுமே... அமாவாசையா, நாலு குட்டிங்களை ஒண்ணொண்ணா கூப்பிட்டுவிட்டு...’

அவன் அமாவாசைக்கு கொஞ்சம் முன்னால் சுறுசுறுப்பாவான், தெரியும்.

‘எப்படி இத்தனை அஃபயர் கையாளறே வீரையா? ஒவ்வொண்ணும் ஒண்ணொண்ணு கேட்குமே... டென்ஷன் ஆக மாட்டியா? மனசு இதிலேயே சுத்திச் சுத்தி வராதா?’

தெலக்ஸ் அடியெடுத்து கொடுக்க, தெலுங்கில் அவனைத் துணிந்து கேட்டே விட்டேன்.

'அபயர்னா, தீ பத்திக்கறதா?' அவனும் தெலுங்கில் வந்தான்.

'ஆமா, வேறே மாதிரி தீ பத்த வைக்கறது... ஒரே நேரத்திலே இத்தனை பொண்ணுங்களை...'

'ஓ கசமுசாவா... ஒரு பிரச்னையும் இல்லே சார்... மங்கா வந்தாளா... வாடி மங்கா... மனசுலே கௌக்கு மூலையிலே உக்காரு... அங்கே இருந்து எழுந்திருக்காதே... ஆட, பாட, சிரிக்க, அழ, என்னோட சரசம் பண்ண இதுதான் உன்னோட இடம்... தனம்... நீ வடக்கு வசத்திலே இரு... இந்தா ஒரு முத்தா... ராணி, உதட்டை கடிக்காதே... இந்த ஓரமா உக்காரு... சின்னி, நீ என்ன பண்றே பின்னலை முன்னாடி போட்டுக்கிட்டு மேற்கு பாத்து... ஆளாளுக்கு மனசிலே இடத்தை பகிர்ந்து வச்சுட்டா, ஒருத்தியோட இருக்கறபோது இன்னொருத்தி தலை காட்டறது, ஒருத்தி நினைவிலே இருக்கும்போது வேறே ஒருத்தி மூக்கை நுழைக்கிறது எதுவும் இல்லே சார்... எனக்கு சுதந்திரம் எல்லாம் காந்தி வாங்கித் தரவேணாம்... நானே வாங்கிட்டேன்.'

'நானும்' என்றபடி அந்த குருதேவனை மனசில் கை கூப்பித் தொழுதேன். அப்புறம் மனசில் யாருமே வராமல் முழு மனமும் புத்தியும் ஆபீஸ் வேலை என்றானேன்.

நாலு மணிக்கு வீட்டுக்குப் போகிறேனா என்று பார்க்க சூப்பரிண்டெண்ட்டெண்ட் பந்துலு சார் சீட்டுக்கு வந்துவிட்டார்.

'இதோ போறேன் சார்' என்று அவசரம் காட்டி சாப்பாட்டுப் பையில் ஸ்பூனைத் தேடி எடுத்து மறுபடி உள்ளே போட்டேன். நெய் வாசனை அடிக்க இன்னும் ரெண்டு கரண்டி அவல் கேசரி, ரத்னா கை கிண்டிய அமிர்தம் உள்ளே பாக்கி இருந்ததை போகிற வழிக்குப் புண்ணியமாகத் தின்றபடி கிளம்ப உத்தேசம்.

'நானும் இன்னிக்கு சீக்கிரமே கிளம்பறேன்... இன்னிக்கு எங்க அத்தங்கா வீட்டுக்குப் போகவேண்டியிருக்கு' என்றார்.

அத்தங்கா என்றால்?

அத்தை பெண் என்று விளக்கம் சொன்னார் அவர்.

‘தமிழ் பிராமின்ஸ் – அரவ வாடுஸ் சொல்ற மாதிரி இருக்கே சார்.’

‘தமிழேதான்.’

‘நீங்க தெலுங்கு ஆச்சே.’

‘என்ன பண்ண? நாலு தலைமுறையா இங்கேயே இருந்து தெலுங்கு மறந்து போயிடுத்து. அதான் தமிழ்லே சொல்லிட்டு ஒரு காரு சேர்த்துப்போம்.’

அத்தங்கா காரு. அம்மாஞ்சி காரு என்று வாயைத் திறக்காமல் சொல்லிப் பார்த்தேன். திராபையாக இருந்தது.

‘தசாபதி சினிமா பார்த்துட்டீரா? போடு போடுன்னு போடுறதாமே?’

பந்துலு சார் விசாரிக்க தெலக்ஸ் மனதில் இருந்து வெளியே வரவா என்றாள். இப்போ வேணாம்.

அட, சூப்பரின்டெண்ட்டெண்ட்கூட சினிமா பார்ப்பாராமே. சூப்பரிண்டெண்ட்டுக்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு என்று அடையாளம் தெரியாத யாரோ ஒரு பெண் கண்ணை அகல விரித்துத் தெலுங்கில் சொன்னாள். புன்சிரிப்போடு ஃபைல் எடுத்து வந்த வீரையா மனசில் இருந்து ‘நேனு சின்னி’ என்று எட்டிப் பார்த்தவள் அவள்.

‘ரொம்ப நல்லா இருக்கு சார் படம்.’

பாராட்டு நல்கினேன். அருமையான நடிப்பு வேறே என்று ஆரம்பித்து நிறுத்தி, சக்ரபாணியோட பெண்ஜாதியா பரண்லே உக்காந்து பலகாரம் சாப்பிடற பொண்ணு என்று முடித்தேன்.

‘உமக்கு ரசனையே இல்லை அய்யா… என் அத்தங்கா உசிரைக் கொடுத்து நடிச்சிருக்கா அது உம்ம கண்ணுலே படலியா?’

பந்துலுவுக்குக் கோபம் வந்து இதுவரை பார்த்ததில்லை. காது மடல் குண்டூர் மிளகாய் போல சிவந்து வந்தது. பின்பலகை நீக்கிய மண்டை வால்வ் ரேடியோ போல காட்சி அளித்தார் அவர்.

‘உங்க அத்தங்கா மாதிரி வருமா? யார் சார் தசாபதியிலே அந்த பொண்ணு?’

‘நாசமாப் போச்சு… ஹீரோயினே அவதான்… தெலக்ஸ் புவனா.’

என் கண்ணுக்குள் புவனா திரும்ப ஆட ஆரம்பித்து மனதில் எல்லா அறைகளிலும் நுழைய ரத்னா தன் இடத்தில் கதவை சத்தமெழ அடைத்துக்கொண்டு உறங்கப் போனாள். இருக்க இடம் பத்தாமல் தெலக்ஸ் புவனா பந்துலு மனம், வீரையா இன்னும் குடித்தனம் விடாத வெற்று மன இடம் என்று ஆக்கிரமிக்க யத்தனித்தாள்.

‘சார், புவனா உங்க அத்தங்கா காருவா?’

‘பின்னே இல்லியா?’

‘சார், கண்ணே பட்டுடும்... அதான் முன்னாடி சொல்லல்லே... புவனாவை பார்க்க இன்னும் நூறு தடவை தசாபதி பார்ப்பேன்.’

நான் புவனா தாசனாக நெக்குருகி நின்றேன்.

பந்துலு சந்தோஷமடைந்து பெருந்தெய்வத்தின் ஆராதகனான சிறு தெய்வமாக வாய் மலர்ந்தார் –

‘உம்மை ஒரு தடவை அத்தங்கா வீட்டுக்குக் கூட்டிப் போறேன்...’

நான் கன்னத்தில் போட்டுக்கொண்டு அவரைத் தொழவோ புவனாவை அவரில் கண்டு முத்தமிட்டு அணைக்கவோ செய்யாமல் நன்றி சொல்லி ஆபீஸ் வாசலுக்கு வந்தேன். ட்ராம் எனக்கென வந்ததுபோல் நின்றது.

சாயந்திர வெய்யில் மஞ்சள் பூச எங்கள் தெரு அழகாகத் தெரிந்தது. இதற்கு முன்னால் இத்தனை அழகாகத் தெரிந்தது ரத்னா என்னைக் கல்யாணம் செய்துகொண்டு குதிரை வண்டியில் இங்கே வந்து இறங்கிய மாலை நேரத்தில்தான். புரசைவாக்கமே கூடி வரவேற்ற மாதிரி தெருவில் உற்சாகம்.

தெரு பரபரப்பாக இருந்த மாலை நேரம். மேற்கிலிருந்து இளம் பெண்கள் ஓரிருவராக கையில் சுருட்டிப் பிடித்த வெள்ளைக் காகிதங்களோடு அன்னநடை நடந்து வந்தார்கள். மீசை அரும்ப ஆரம்பித்த, அரும்பிய பையன்கள், கிழக்கிலிருந்து மேற்காக பேப்பரோடு நடந்து போனார்கள்.

ராமய்யங்கார் டைப் ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் சுபாங்கி அம்மாள் வீட்டுக்கு எதிரே வந்ததிலிருந்து இந்தக் கூட்டம் குறைவதே இல்லை.

என்னைப் பார்த்துப் புன்னகைத்தபடி வந்தவர்கள் வக்கீல் குமாஸ்தா காகர்லா பக்தவத்சலத்தின் இரட்டையர்களான புத்ரிகள். வரும்போதே என்ன

அவசரமோ, சிரிப்போடு கடக்கும்போது, அவர்கள் பிடித்திருந்த காகிதங்களில் இருந்து ஒன்று நழுவி விழுந்தது.

காற்றில் அது பறந்துபோக முகத்தில் ஏமாற்றத்தோடு, 'ராமா அண்ணா ரத்னாக்கா இன்னிக்கு என்ன டிபன் செஞ்சிருக்காம்? கமகமன்னு வெங்காய வாடை இங்கே வரைக்கும் வருதே' என்று சொல்லிப் போனார்கள்.

நான் அந்தக் காகிதத்தைப் பாய்ந்து எடுத்து நிமிர்ந்தபோது இடந்தலை மிருதங்க வித்வான் வேலப்ப நாயக்கர் மருமகன்கள் மேல் மோதிக்கொண்டேன். அவர்கள் எனக்குப் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். சாரி சார் என்று ஒரே நேரத்தில் சொன்ன அவர்கள் முகத்திலும் கொஞ்சம் ஏமாற்றம் தெரிந்ததைக் கவனிக்கத் தவறவில்லை.

கையில் பிடித்த பேப்பரைப் பார்த்தேன். 'The quick brown fox jumps over the lazy dog' என்று இம்போசிஷன் எழுதின மாதிரி டைப் அடித்திருந்த காகிதம் அது.

ரெண்டு பக்கத்திலும் அந்த நரி சோம்பேறி நாய் மேல் பாய்ந்து கொண்டிருந்ததுதான் டைப்ரைட்டிங் என்றால் நான் நரி மேய்க்கக் கற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஏதோ சொல்ல மனதிலிருந்து எட்டிப் பார்த்த தெலக்ஸ் புவனாவை அவளுடைய அறைக்குள் வைத்துப் பூட்டினேன். மனமெல்லாம் இப்போது ரத்னாதான்.

ரத்னாவிடம், ஏதோ சாதனை செய்த மாதிரி, கையில் பிடித்திருந்த காகிதத்தை நீட்டினேன்.

'இது எதுக்கு எனக்கு டைப் அடித்த காகிதம்? தெலக்ஸ் புவனாவை வச்சுக்க என் சம்மதம் கேக்கறீங்களா?' என்று கேட்கவில்லை. என் சிரிப்பைப் பார்த்து அவளும் சிரித்தாள். 'தெருவிலே கிடக்கிற காகிதத்தை எல்லாம் ஏஆர்பி வார்டன் பொறுக்கி எடுக்கணுமா என்ன?' என்றாள்.

'சாப்பிட என்ன பண்ணியிருக்கே அன்பே, வயிறு இரையுது' என முறையிட்டேன். உப்புமா குழக்கட்டையும் புளிச் சட்டினியுமாம்.

அவள் சொல்லி முடிக்கும் முன் கை கூடக் கழுவி வராமல் சமையல்கட்டு சுவரில் சாய்ந்து தரையில் உட்கார்ந்து, அவசரமாக ஓடிக்கொண்டிருந்த

எறும்பைப் போகவிட்டு ரத்னாவை இழுத்துத் தரையில் சாய்த்து முத்தமிட்டேன்.

ஊறுகாய் ஜாடிகள் பார்த்துக்கொண்டிருக்க தரையில் உருண்டோம் ஒரு நிமிடம். நேரம் காலமே கிடையாதா என்று தப்பி எழுந்து, தலைமுடியை நேர்த்தியாக ஒதுக்கிக்கொண்டு உட்கார்ந்தாள் ரத்னா.

நான் எதிர்பாராதவிதமாக என்னை வாரி எடுத்து மடியில் போட்டுக்கொண்டு முகம் முழுவதும் முத்தமிட்டாள் அவள். இன்னும் மயங்கிக் கிடந்தால் ராச்சாப்பாடே இங்கே ஆகிவிடலாம் என்று தோன்ற நான் அவள் தோளைப் பிடித்தபடி எழுந்து பின்னால் போனேன்.

கை அலம்பி வந்தபோது அவள் மாடப்புரையில் வைத்த சந்தனப் பேழையிலிருந்து எடுத்த சிமிட்டா பட்டணம் பொடியை ஆழ முகர்ந்து புத்துணர்ச்சி பெற்று நின்றாள்.

வேகமான நரி துரத்தும் சோம்பேறி நாயின் காகிதமூலம் சொன்னேன்.

‘உங்க பின்னாடி மிருதங்க ரெட்டையர்கள் வந்தாங்களா?’ நேரே பார்த்த மாதிரி கேட்டாள் ரத்னா.

‘எப்படி தெரியும் உனக்கு?’

‘அவங்க லவ் பண்றாங்க.’

‘யாரை யார்?’

‘ஒரு பொண்ணை ஒரு ஆண்... ரெண்டு ஜோடி இருக்கு அங்கே’ என்றாள் நமுட்டுச் சிரிப்போடு. நானும் சிரித்தபடி ஓர் உப்புமா குழக்கட்டையை அவளுக்கு ஊட்டி பாதியில் விண்டு வாயில் போட்டுக்கொண்டேன்.

‘அந்த நரி பாயற சோம்பேறி நாய் பத்தி காகிதத்திலே மாஞ்சு மாஞ்சு டைப் அடிச்சு வச்சிருக்கறது என்ன ரகசியமான காதல் சங்கேதமா?’

‘அய்யே, ஐயங்கார் இன்ஸ்டிட்யூட்லே டைப் அடிச்சா லவ் லெட்டர் அனுப்புவாங்க? அந்த வாக்கியத்திலே ஏயிலே இருந்து இஜட் வரை இருபத்தாறு இங்க்லீஷ் எழுத்தும் வர்றதாலே எல்லா எழுத்துக்கும் விரல் பயிற்சி... தெரியுதா? கையை எடுங்க... நான் டைப் ரைட்டர் இல்லே.’

‘இதென்ன உப்புமா குழக்கட்டை தித்திப்பா இருக்கு?’ என்று விசாரித்தேன்.

‘சும்மா புருடா எல்லாம் விட வேணாம்’, என்றாள் ரத்னா.

‘அப்போ, நீ புருடா இல்லாத சமாச்சாரம் சொல்லு.’

‘வேலப்ப நாயக்கர் மெட்றாஸ்லே கோழி முட்டை மொத்த விற்பனை காண்ட்ராக்ட் எடுத்திருக்காராம்... சுபாம்மா சொல்லிச்சு... தட்டித் தட்டி மிருதங்கம் வாசிச்சு ஒரு வருமானம், முட்டை வித்து இன்னொண்ணு...’ ரத்னா தகவல் அறிவித்தாள்.

நரி – நாய் டைப் அடித்த காகிதத்தை என் கைப்பையில் வைத்தேன். அந்தப் பெண்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். அல்லது அந்தப் பையன்களிடம்.

காபி எடுத்து வந்தபோது ‘உடனே கிளம்பு, பார்க் போகலாம்’ என்றேன். போகலாமே என்றாள் ரத்னா, முகம் மலர்ந்து.

அவள் காலையில் நான் நடந்துகொண்டதை மறந்து எப்போதும் போல் ஆகியிருந்தாள்.

‘இந்த டைப் இன்ஸ்டிட்யூட் பத்தி எதிர்வீட்டு விலு என்ன சொன்னா தெரியுமா?’

விலுவாமே. ஜாக்கிரதையா இருக்கணும். இவ சொல்றாளேன்னு நானும் விலுன்னு சொன்னா, நேர்லே போய் கொஞ்சுங்க என்று படாரென்று முகத்தில் அறைந்ததுபோல் சொல்லிவிட்டுப் போயே போய் விடுவாள்.

‘என்ன சொன்னாங்க அந்த பரதேவதை விலாசினியம்மா?’

இது பரவாயில்லை, மரியாதை, கிண்டல் எல்லாம் உள்ளது. ரத்னாவுக்கு ரசிக்கும்.

‘பகல் மூணு டூ நாலு பேட்ச், பொண்ணுங்க மட்டும்தான் டைப் பழக. நாலு மணிக்கு பசங்க கூட்டம் அலை மோதும். ஏன் தெரியுமான்னு கேட்டா விலு.’

‘ஏனாம்?’ நான் பின்பாட்டு பாடினேன்.

‘பொண்ணுங்க ஒரு மணி நேரம் டைப் பழகிட்டு ஸ்டூலைவிட்டு எழுந்து போன உடனே அதுலே உக்கார்ற பசங்களுக்கு, அந்த ஸ்டூல்லே பொண்ணுங்களோட உடம்புச்சூடு மிச்சம் இருக்குமே, அதை

அனுபவிக்கறது சின்னச் சின்ன சந்தோஷமாம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஸ்டூல்...'

எனக்கே தெரியாத விஷயம் இது. பசங்க என்ன என்ன எல்லாம் கண்டுபிடிக்கிறான்கள். சூடு சமாசாரமாக விஷய ஞானம் கைவரப் பெற்ற பிறகு கொஞ்சம் தைரியம் வந்து தொடர்ந்து கேட்டேன்.

'எனக்கு ஒரு சந்தேகம், செல்லம்மா.'

'என்னப்பா, என் ராஜா?'

'என்னன்னா எப்படி அந்த மிருதங்க வீட்டு ரெட்டையர்களும் இந்த குமாஸ்தா காகர்லா பக்தவத்சலம் வீட்டு ரெட்டைப் பொண்ணுங்களும் அவங்க அவங்க ஜதையைக் கண்டு பிடிப்பாங்க?'

'எதுக்கு கண்டுபிடிக்கணும்?'

ஓவென்று விஷமப் பார்வையோடு சிரித்து அவள் ஓடினாள். பத்தே நிமிடத்தில் பளிச் என்று கைத்தறிப் புடவையில் கிராமத்து தேவதையாகத் திரும்பி வந்தாள்.

'இன்னிக்கு ஏஆர்பி டியூட்டி இல்லைதானே?'

எங்கே நான் மறந்துவிட்டேனோ என்று நினைவுபடுத்திக் கேட்டாள். இல்லை என்றேன். இந்த வாரத்துக்கான நாலு இரவு ரோந்தும் நான் முடித்திருக்கிறேன்.

பார்க் போய்விட்டு வரும்போது சுபாங்கி அம்மாள் வீட்டு வாசலில் இருந்து ரத்னாவைப் பார்த்துக் கேட்டாள் –

'ஏண்டி பொண்ணே, ரேஷன்லே உளுத்தம்பருப்பு நாளைக்கு போடறாங்களாம். போகலாமா?'

ஏதோ ரேஷனில் ஆளுக்கு ஒரு பவுன் மோதிரம் வெகுமதியாகக் கொடுப்பதுபோல் இரண்டு பெண்மணிகளும் வெகுவாக சந்தோஷப்பட்டார்கள்.

'வீரப்பன் நாளை மறுநாள் வெறகு வரும்னார்... நேரே அவங்க தொட்டியிலேதான் வருதாம்... அரிவாளோட யாரையாவது அனுப்பி வைக்கப் பாரு.'

‘தோட்டக்காரரை ஏற்பாடு பண்ணி வச்சிருக்கு அம்மா’

‘தம்பிக்குத்தான் இதெல்லாம் கவலை இல்லே... தேசக் கவலை, மாகாணக் கவலை, ஊர்க் கவலை இப்படித்தான் எப்பவும்’

சுபாங்கி அம்மாள் சிரித்துக்கொண்டே என்னை தூக்கித் தூர எறிந்துவிட, நான் பேச்சை ரசிப்பதாகத் தலையை ஆட்டினேன்.

‘பாருங்க, வங்காளத்திலே அரிசி கிடைக்காம, பஞ்சம் வந்துக்கிட்டிருக்காம்... இங்கே உளுத்தம் பருப்புக்கும் கடலைப் பருப்புக்கும் நாம அல்லாடறோம்... எங்கேடா கிடைக்கும் எம்புட்டு கிடைக்கும்னு பக்கி மாதிரி ஓடிக்கிட்டு இருக்கோம். சில பேர் சொல்றதைக் கேட்டா பயமா இருக்கு. இனி இட்லி தோசை செய்யறதுக்கும், துண்ணறதுக்குமே தடை வந்துடுமாமே... இப்போ புதுசா விறகுக்கு ரேஷன்... அதையும் பதுக்கறானுங்க... கட்டை ரேஷனுக்கு அடுத்து என்ன, கரி ரேஷனா...?’

ரத்னா அவசரமாகக் குறுக்கே புகுந்து, ‘இட்லி தின்னாதேன்னு ஒரு நாள் சர்க்கார் சொன்னா அடுத்த நாள் இங்க்லாந்துக்கு இவங்க அத்தனை பேரையும் திரும்ப கப்பலேத்தி அனுப்பிச்சுடுவோம்’ என்று வீரம் மொழிந்தாள்.

‘சும்மா இரு, அதெல்லாம் வேணாம்’, என்று அசல் கவர்மெண்ட் ஊழியனாகச் சொன்னேன். நாளாக நாளாக ஆபீஸ், ப்ரமோஷன், இன்க்ரீமெண்ட் என்று யுத்தகால சூழ்நிலையில் அடிபட்டு அடிபட்டு சர்க்கார் விரோதம் என்றால் ஒரு மைல் அகன்று ஓடச் சொல்லி உடம்பு கெஞ்சுகிறது. மனம் போ போ என்று கடந்து போகச் சொல்கிறது.

ரத்னா அப்படி இல்லை. காந்தி, காங்கிரஸ் ஆதரவை மறைத்துக் கொள்ள அவளுக்குத் தேவையே வரவில்லை. அடுத்த காங்கிரஸ் மகாநாட்டுக்குக் கதர்ப்புடவை உடுத்தி, காந்தி குல்லா வைத்து, சற்றே சரிந்த குழலாட, பிரசங்கம் செய்யப் போனாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன்.

இந்த மாதம் எட்டாம் தேதி பம்பாயில் காங்கிரஸ் மாநாடு கூட்டி ஆகஸ்ட் போராட்டம், வெள்ளையனே வெளியேறு போராட்டம், க்விட் இந்தியா போராட்டம் என்று நாடு முழுக்க காந்தி கட்டளைப்படி போராட வந்தபோது ரத்னா நியூஸ்பேப்பர் படித்துவிட்டுச் சொன்னாள் –

‘நீங்க ஆபீஸ் போறதுக்கு இடைஞ்சலாகக் கூடாதுன்னுதான் போகலே... இல்லேன்னா பம்பாய் மகாநாட்டுலே காந்திக்கு ஆதரவாக பிரச்சாரம்

செய்திருப்பேன்', என்றாள் என்னிடம் அன்றைக்கு.

'பருப்பு, மிளகாய் வத்தல் லைசன்ஸ் மண்டிக்காரர் சளைக்காம பதுக்கிட்டு இருக்காரே தெரியுமா?' சுபாங்கி அம்மாள் காகர்லா பக்தவத்சலம் வீட்டுப் பக்கம் காட்டியபடி ரகசியம் பேசினாள்.

'குமாஸ்தா ஏன் மிளகாய் வத்தலை பதுக்கணும்?' நான் விசாரித்தேன்.

குமாஸ்தா வீட்டுக்கு அடுத்த வீடு தங்கப்பன் முதலாளியின் சின்ன மாளிகை என்பதை ரத்னா எனக்கு ஞாபகப்படுத்தினாள்.

எனக்கு ஊர் உலகமே தெரியாது என்று உறுதிப்பட சுபாங்கி அம்மாள் ரத்னாவைப் பார்த்துச் சொன்னாள் –

'ராத்திரி வரைக்கும் பருப்பு மூட்டைங்களை வீட்டுலே வச்சுட்டு ராத்திரியிலே வேறே எங்கேயோ எடுத்துப் போயிடறார்... அது ஜாஸ்தி விலை படிஞ்சு விற்க ப்ளாக் மார்க்கெட்டுக்குப் போவுது. நீங்கதான் தம்பி இதை என்னான்னு கேக்கணும்.'

சுபாங்கி அம்மாளுக்கு இந்த ஏஆர்பி வார்டன் மேல் இருந்த நம்பிக்கை மெய்சிலிர்க்க வைத்தது. உணவுப் பொருள் கடத்தலையும் கருப்புச் சந்தையையும் வார்டு அளவில் நான் ஒழிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பு இருப்பது புரிந்தது. அமைதியாக நடந்தேன்.

இந்தக் காலம் என்கிற விஷயம் புரிந்துகொள்ளவே முடியாத ஒன்று. சில பொழுது, ஒரு யுகம் போன மாதிரி ஒரு மணி நேரம் மிக மெல்ல ஊர்ந்து போகும். இன்னும் சில நேரம் காலம் முன்னால் போய் சட்டென்று நின்று கொஞ்சம் பின்னால் போய் கண் விழித்துப் பார்ப்பதற்குள் மறுபடி முன்னே போக இதெல்லாம் ஏற்கெனவே நடந்ததே என்று குழம்ப வைக்கும். சில பொழுது இமை நேரத்தில் ஒரு மாசம் போய் விடும். அது போனது கூடத் தெரியாமல் ஏதாவது ஒன்றில் ஈடுபாட்டோடு மூழ்கியிருப்போம்.

அடுத்த ஒரு வாரம் ஆபீசிலும் வீட்டிலும் அப்படித்தான் சொடக்குப் போடுவதற்குள் கடந்து போனது. ரத்னா சொடக்குப் போட மாட்டாள். அவளுக்கு வராது என்பதோடு அவள் குடும்ப நம்பிக்கை அல்லது இச்சல்கரஞ்சி நம்பிக்கைப்படி சொடக்கு போட்டால் துர்தேவதைகள் சுற்றுப்பாட்டில் இருந்து பார்த்து சத்தம் கேட்க எங்கே எங்கே என்று குவிந்து விடுமாம்.

நானும் எத்தனையோ சொடக்கு சின்ன வயசில் இருந்து, இத்தனை வருஷத்தில் போட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் துர்தேவதைகள் வந்திருக்குமானால் என்னைச் சுற்றி நனைந்து வாடையடிக்கும் அழுக்கு தார்பாலின் சிறகுகளோடும், சுத்தி செய்யாமல் பல் காரை அப்பிய வாச்சி வாச்சியான பழுப்புப் பற்களோடும் ஒரு கூட்டமே இருக்குமே.

இதைச் சொன்னபோது ரத்னா என் வாயை அவசரமாகப் பொத்தினாள். இப்படியெல்லாம் சொன்னால் அஸ்து தேவதைகள் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி ஆசிர்வதித்து விடுமாம். இந்தச் சிறிய வீட்டில் நானும் ரத்னாவும் போக இப்படி ஆசிர்வதிக்கும் தேவதைகளும் இருந்தால் இடமும் போதாமல், சத்தமும் கேட்டபடி இருக்கும். அது வேறே சமாச்சாரம்.

சிவராத்திரி, வரலட்சுமி விரதம், ஆவணி அவிட்டம், ஓணம் என்று பண்டிகைகள் ஒவ்வொன்றாகக் கடந்துபோக, ஆபீசிலும் அவ்வளவாக வேலைப் பளு இல்லாமல் போன வாரங்கள் அவை.

திரும்பிப் பார்ப்பதற்குள் ஆகஸ்ட் முடிந்து மழையோடு செப்டெம்பரும் வந்து சேர்ந்தது. முதல் வியாழக்கிழமை பென்ஷன் எல்லாம் கொடுத்துக் கையெழுத்து வாங்கி, வெவ்வேறு டிபார்ட்மெண்ட்களில் செலவுக் கணக்கு எழுதி நான் கொடுத்த தொகையை வாங்கி பைசா சுத்தமாக வரவு வைத்து ஸ்டேட்மெண்டும் அனுப்பி ஓய்வெடுத்துக்கொண்டிருந்த வெள்ளிக்கிழமை சாயந்திரம். இன்றைக்கு வானம் வெளிவாங்கியிருந்தது.

தெலக்ஸ் மனதின் அறைக்கு உள்ளே இருந்து கதவைத் தட்டி வெளியே வரலாமா என்று கேட்டுக்கொண்டிருந்தது உள்செவிக்குள் கேட்டது. சொல்றேன் என்று அடக்கியபோது, பந்துலு வேகமாக என் சீட்டுக்கு வந்தார்.

‘ஓய் ராமோஜி, நாலு மணி ஆகப் போறதே கிளம்பலியா?’

‘இல்லே சார், தினம் சீக்கிரம் போய் என்ன பண்றது? இன்னிக்கு ரத்னா வேறே கோடி வீட்டு அம்மாகூட பேரகன் தியேட்டர்லே மேட்னி ஷோ தசாபதி பார்க்க போயிருக்கா.’

‘ஏன் நீர் அவங்களை ஏற்கெனவே கூட்டிப் போகலியா?வேறே யாரை பின்னே?’

அவர் ராகம் இழுத்ததில் எதிர் வீட்டு விலாசினி டைப்பிஸ்ட் மனதின் இன்னொரு அறைக்குள் இருந்து புன்சிரிப்புப் பொழிந்தது தெரிந்தது.

போன வாரம் ஒருநாள் வீட்டுக்குப் போகும்போது வீரையா தன் மச்சினி என்று கோட்டைக்குள் வாரிப் பெருக்கிப் போன ஓர் இளம் தெலுங்குப் பெண்ணைப் பெருமையோடு அறிமுகப்படுத்தினான். கறுப்பு மின்னல் அவள். பெயர்தான் கொஞ்சம் ராட்சசத்தனமாகத் தெரிந்தது. கம்சலையாம். தளுக்கும் குலுக்குமாக கம்சலையும் வெற்றிலை போட்டுக்கொண்டு என் மனதில் இருந்து எட்டிப் பார்த்தாள். அவள் இங்கே இருப்பது தெரிந்தால் வீரையா என்னைக் கொன்றே போடுவான்.

‘இல்லே சார், ரத்னா அன்னிக்கு சினிமாவுக்கு என்னோடதான் வந்தா. சரியாப் பார்க்க முடியலியாம்.’

எப்படிப் பார்க்கறது? நான்தான் தெலக்ஸ் புவனா பெயரைச் சொல்லி சதா அவளை நச்சரித்துக்கொண்டிருந்தேனே.

மனதில அவளுக்கும் ஓர் இடம், மற்ற அறைகளைவிடப் பெரியதாக, ரொம்ப காற்றோட்டம் உள்ளதாக, பளிங்குத் தரை, மதுரை நாயக்கர் மஹால் போல வழவழத்த சுவர்கள், பிரம்மாண்டமான தூண்கள், சிம்மாசனம்போல பெரிய இருக்கைகள், பூத்தூவிய படுக்கை என்று ஏற்பாடு செய்திருக்கிறேன். மற்றவர்கள் எல்லாம் மனதின் உள்ளே வந்து போகக்கூடும். ரத்னா நிரந்தரமாக அங்கே வசிக்கக் கூடியவளாச்சே. ரெண்டு பேரும் தொண்டு கிழங்களானாலும் அவள் அங்கே.

சொல்லுங்க சார், என்ன செய்யணும்? வேறே லெட்ஜர் டாலி பண்ணனுமா? செய்யலாம்தான். வீட்டுக்குப் போய் சும்மா கூரையைப் பார்த்துக்கொண்டு தனியாக இருப்பது கொடுமை ஆச்சே. ஆபீஸ் ஜன்னல் வழியே ஜிலுஜிலு என்று கடல் காற்று வீசுவதை அனுபவித்துக்கொண்டு இன்னொரு டீ காண்டீனில் சாப்பிட்டுவிட்டு ஒரு மணி நேரம் போக்கி விட்டால் வெள்ளிக்கிழமை சாயந்திர ஆபீஸ் பூஜை. இன்றைக்கு ஜாங்கிரி பிரசாதம். தேங்காய்ப் பத்தையும் வெல்லமும் வேறே. சின்னப்பையன் மாதிரி ஜும்ஜும் என்று ரசித்துத் தின்ற பிறகு வீடு போகத் திட்டமிட்டிருந்தேன். அதற்குள் பந்துலு சார் வேலை சொன்னால் பார்க்கத் தடையேதும் இல்லை.

‘ஓய் சும்மா தானே இருக்கீர்? கூட வாருமே... பேச்சுத்துணையாச்சு... உமக்கும் பொழுது போகும்... அந்தப் பொண்ணு போன வாரம் என் ஒய்ப் போனபோது, மாகாணிக்கிழங்கே கிடைக்கறதே இல்லே. ஊறுகாய் சாப்பிடணும்னு ஆசைன்னாளாம். இவ ஓட்ட ஓட்டமா ஓடி வந்து கொத்தவால் சாவடியிலே மலிவா பத்து படி அளந்து வாங்கி, கூலியை ஏற்பாடு பண்ணி மன இண்டிக்குக் கொண்டுவந்துட்டா. வீட்டு

உபயோகத்துக்கும் தெருவிலே தரவும் அதுலே ரெண்டு படி எடுத்தாச்சு. உமக்கு வேணும்னா சொல்லும் நாளைக்கு எடுத்துண்டு வரேன். அது கிடக்கட்டும்... இப்போ நல்லவேளை நீர் வீட்டுக்கு கிளம்பலே. வாருமே, ஒரு நடை போய் பாத்துட்டு வருவோம்.'

எனக்கு தலையும் புரியவில்லை. வாலும் அப்படியே. நான் நாலு மணிக்கு வீடு போவதற்கும், மாகாணிக் கிழங்கு ஊறுகாய்க்கும், யாரையோ பந்துலு சார் போய்ப் பார்ப்பதற்கும்... சட்டென்று பொறி தட்டியது. பந்துலு சாருக்கு அத்தங்கா என்ற அத்தை மகள் உறவாச்சே தெலக்ஸ்.

கதவை உடைத்துக்கொண்டு வெளியே வந்து ஆபீஸ் மேஜை ஒன்று விடாமல் ஏறி இறங்கிப் பறந்து தெலக்ஸ் அடுத்த நிமிடம் நினைப்பு எல்லாமாகிப் போனாள். எதிர்பார்த்து ஏங்கியிருந்த சந்தர்ப்பம் இது. ஆபீஸ் பூஜை பிரசாதம் ஜாங்கிரியும் தேங்காய்ப் பத்தையும் வாங்கித் தின்னாவிட்டால் போகுது.

'வரேன் சார், நீங்க ஏதாவது கேட்டு, மாட்டேன்னு சொல்லியிருக்கேனா?'

தெலக்ஸ் நடனமாடியபடியே அருகே வந்து கண்ணடித்தபோது சூப்பரிண்டெண்டைக் கட்டிக்கொண்டு ஆடலாம்போல உற்சாகம் பீரிட்டது.

'சரி இன்னும் பதினைந்து நிமிஷத்துலே புறப்படறோம். அந்தப் பேனா வேணாம். அதான் ஜோபியிலே செருகி வச்சிருக்கீரே... கசியறது போல.'

நான் விரல்களை உற்றுப் பார்த்தேன். இங்க் பூசி நீலமாக இருந்த குமாஸ்தா விரல்கள் அவை.

கசியத் தொடங்கிய ப்ளூ பேர்ட் ஃபவுண்டன் பேனாவை மேஜைக்குள் வைத்துப் பூட்டினேன். ராசியான பேனா. அதை சட்டையில் வைத்து எங்காவது போனால் ஆக வேண்டிய காரியம் கட்டாயம் ஆகும். ஆபீசில் முதல் நாள் அந்தப் பேனோவோடுதான் வந்து சேர்ந்தேன். இருக்கட்டும், புளூ பேர்ட் பேனா இல்லாமலேயே போகலாம் இப்போது. இது தெலக்ஸ் நேரம்.

அடித்துப் பிடித்து பாத்ரூமுக்கு ஓடினேன். அங்கே சொட்டுச் சொட்டாகத்தான் வாஷ்பேசின் குழாயில் தண்ணீர் வந்தது. சோப்புத் துண்டையும் காணோம். கைக்குட்டையைக் குழாய் துப்பிய ஈரத்தில் நனைத்து, எலும்பு தெரிகிறவரை சுழற்றிச் சுழற்றித் துடைத்து, கையை

ஏதோ சுத்தம் செய்ய முயன்றேன். போவேனா என்கிறது மைக்கறை. போகலேன்னா இருந்து தொலை, சனியனே.

மற்றபடி வேலையில் எப்போதுமே நான் கை சுத்தம்தான் என்பது பந்துலு சாருக்குத் தெரியும். தெரியாமலா ஒரு படி இறங்கி வந்து பழகுகிறார்?

நாங்கள் பத்தே நிமிடத்தில் புறப்பட்டோம். பந்துலு சார் தன் ஜோல்னாப் பையையும் நான் என்னுடையதையும் எடுத்து மாட்டிக்கொண்டோம்.

சாப்பாட்டு பாத்திரம்? எதுக்கு, இங்கேயே இருக்கட்டும். பெரிய ஸ்டார் வீட்டுக்கு எச்சில் பட்டு கழுவாத அலுமினியப் பாத்திரத்தோடா போவது?

பந்துலு சார் முன்னேற்பாடாக இன்று எலுமிச்சை சாதம் இலையில் பார்சலாகக் கட்டி நியூஸ் பேப்பரில் பொதிந்துகொண்டு வந்திருந்தார். அவருக்கு அத்தங்காளைப் பார்க்கப் போவது ஏற்கெனவே தெரியும். எனக்கும் தெரிந்திருந்தால் அதேபடி செய்திருப்பேன். போகட்டும், புகார் செய்ய நேரமில்லை இது.

எலக்ட்ரிக் ட்ரெயின் கோட்டை ஸ்டேஷனில் பிடித்து மாம்பலம் போகலாம் என்றார் பந்துலு சார். எங்கே அவங்க ஜாகை என்று கேட்டேன்.

‘புது மாம்பலத்துலே. புது மாம்பலம் போயிருக்கீரா?’ புது மாம்பலம் என்ன சந்திரமண்டலத்திலா இருக்கு? மெட்றாஸுக்குள்ளேதானே.

‘போயிருக்கேன் சார், ஸ்டேஷன் பக்கமா, அப்புறம் பனகல் பார்க்.’

‘இது பனகல் பார்க்குக்கு அடுத்து நாராயணசாமி செட்டி தெருவிலே.’

அவர் கையில் கித்தான் பை. தூக்க முடியாமல் தூக்கி வந்த அது கம்மென்று கதம்ப வாடை கிளப்பியது. மண்வாசனை, மண்புழு வாடை, மழைக்காலத்தில் சமுத்திர வாடை, சேறான பாதையில் மெலிசான தாரையாக மழை பெய்யும்போது ஏற்படும் கந்தம், இன்னும் கற்பனை செய்வது எல்லாம் அப்படியே வாடையாக அடிக்கிறது. மாகாணிக் கிழங்கு.

‘நான் எடுத்துட்டு வரேன் சார்.’

கையில் வாங்கிக்கொண்டேன். கையையும் தோளையும் ஒருசேரப் பிடித்து இழுக்கிற சுமை அது. ஐந்து படிக்குக் குறையாமல் இருக்கும்.

தெலக்ஸுக்குத் தர என்று நினைத்தால் சுமை சுகமானது. சுமந்து போகவும், கோவில் திருவிழாவில் புஷ்பப் பல்லக்கு சுமந்து போவது போல் ஆனந்தம்.

எலக்ட்ரிக் ட்ரெயினில் கூட்டம் இல்லாததால் குளிக்காத குழந்தை மாதிரி இருந்த கித்தான் பையைப் பக்கத்தில் வைத்துக்கொண்டேன்.

‘அத்தங்காவைப் பார்க்கப் போறபோது அவங்க வீட்டிலே இருப்பாங்கன்னு எப்படி சார் நிச்சயம்? ஷூட்டிங் இருந்துச்சுன்னா?’

‘அது என் பெண்டாட்டியே அத்தங்காகிட்டே பேசிட்டா. இன்னிக்கு முழுக்க நம்ம ஆபீஸ் மாதிரி சும்மா நாற்காலியைத் தேச்சுண்டு இருக்கறபடி நோ ஷூட்டிங்காம்.’

அவர் ஆபீசில் பெஞ்சைத் தேய்த்து வெட்டியாகப் புல் வெட்டிக் கொண்டிருந்த நேரக் கணக்கில் என்னோடு தன்னையும் சேர்த்துக் கொண்டதால் நான் உள்ளபடிக்கு மும்முரமாக வேலை பார்த்ததைச் சொல்லவில்லை. அந்த லெட்ஜர்கள் எல்லாம் அவருக்கு நாளை இரண்டாம் கையெழுத்துக்குப் போகும். அப்போது தெரியும். இது தெலக்ஸ் நேரம்.

பந்துலு சாரோடு மாம்பலம் ஸ்டேஷன் வந்தேன். இங்கிருந்து நீள நடந்தால் பதினைந்து நிமிடம் கழித்து பனகல் பார்க் வரும். அதுக்கு அருகே எங்கேயோ தெலக்ஸ் மாளிகை.

ரிக்ஷாவில் போயிடலாம் என்றார் பந்துலு சார். எட்டணா கேட்டான் கை ரிக்ஷாக்காரன். அடுத்த பத்து நிமிடம், கல்பகோடி யுகமாகத் தெரிய அவர் பேரம் பேசி அதை ஏழணாவாக்கினார்.

உஸ்மான் ரோடில் கை ரிக்ஷா இழுக்கப்பட்டு ஓடும்போது எனக்கு இறங்கி ரிக்ஷாவோடு நடக்கலாம்போல் இருந்தது. இந்தக் கை ரிக்ஷா எப்போது ஒழியுமோ. பந்துலு சொன்னால் கேட்க மாட்டார். இல்லாவிட்டால் நடந்தே வந்திருப்போம்.

சைக்கிளில் சவாரி செய்கிறவர்கள், நடந்து போகிறவர்கள், அபூர்வமாக மோட்டார்விட்டுப் போய்க்கொண்டிருந்தவர்கள் என்று ரிக்ஷா பக்கத்தில் வர, மாகாணிக் கிழங்கு வாடையில் கிறங்கிய அபிமானிகள் ஆஹா என்று மூக்கு விடைத்து தீர்க்கமாக முகர்ந்தார்கள். பிடிக்காதவர்கள் மூக்கைச் சுருக்கி கடந்து போகிற வரை மூச்சை இழுத்துப் பிடித்து பிராணாயாமம் செய்தபடி போனார்கள்.

‘கருவாட்டுக் கடைக்காரங்க போலிருக்கு’ என்று ஒருத்தன் பின்னால் சொன்னது காதில் கேட்டது. கழுத்தில் ருத்ராட்சம், காதில் கடுக்கன், சின்னஞ்சிறியதாகப் பின்னந்தலை மத்தியில் மிகச் சிறு உச்சிக்குடுமி என்று

இருந்த பந்துலு சாரை கருவாட்டுக் கடைக்காரராகக் கற்பனை செய்யக் கஷ்டப்பட்டேன்.

‘இங்கேதான், நில்லுப்பா.’

அவர் சொல்ல மெல்ல ஜாக்கிரதையாக விழுத்தாட்டாமல் ரிக்ஷாவை தரை நோக்கிச் சாய்த்து இறங்க உதவியாக நின்றான் ரிக்ஷாக்காரன். பந்துலு சார் குடுகுடுவென்று எதிரே ஒரு பங்களா போர்ட்டிகோவுக்கு ஓட, நான் ரிக்ஷாக்காரனுக்கு ஒரு முழு ரூபாயைக் கொடுத்து அவனுடைய நல்வாழ்த்தோடு தெலக்ஸைப் பார்க்க மாகாணிக்கிழங்கு மூட்டையோடு நடந்தேன்.

‘அந்தர் ஜானா மனா ஹ. சலோ சலோ பாஹர் சலோ’

கூர்க்கா குறுக்கே புகுந்து ஹிந்தியில் கர்ஜிக்க, ரெண்டடி முன்னால் போயிருந்த பந்துலு சாரை ஓர் அல்சேஷன் நாயும், கூடவே ஒரு கோம்பை நாயும் வாடா மச்சான் என்று கூப்பிட்டு நலம் விசாரித்துக்கொண்டிருந்தன.

அம்மா நஹி அம்மா நஹி என்று கூர்க்கா சொன்னான். ஆமா என்றன கட்டிப் போட்டிருந்த கோம்பையும் அல்சேஷனும்.

‘அம்மாவுக்கு சொந்தக்காரங்க ஹை, தும் ஜாவ். ஜாவ்’ என்று பந்துலு ஏதோ ஹிந்தி பேசுகிற பாவனையில் சொல்ல, தும் ஜா என்று அவரைப் பிடித்துத் தள்ள பிரம்போடு முன்னால் வந்தான் அந்த இளம் கூர்க்கா. சூப்பரிண்டெண்ட், அத்தங்கா, மாகாணிக்கிழங்கு இதெல்லாம் அவனுக்கு அனாவசியம் என்பதோடு, பந்துலு சாருக்கு இதையெல்லாம் இந்தியில் சொல்ல வராது என்பதும் புலப்பட்டது.

‘க்யா வேர் இஸ் தட் ஓல்ட் கூர்க்கா ஹை?’ அவனுக்கு இதுவும் புரியவில்லை. பந்துலு சார் பயனின்றி உள்ளே நோக்கினார்.

நான் மராத்தியும் இந்தியுமாக பாத் சுனியே என்று ஆரம்பிக்க அவன் ஐந்து நிமிடம் கேட்டுவிட்டு, அந்தர் நஹி ஜா சக்தா என்று பழைய பல்லவிக்கே வந்தான். கோம்பை கட்டறுத்து வந்து பந்துலுவைக் குதறி எடுக்கும் முஸ்தீபுகளோடு குரைத்துக்கொண்டிருந்தது. என்னமோ அவர் மேல் அதற்கு ஈடுபாடு ஜாஸ்தி என்றுபட்டது. என்னை அது லட்சியமே செய்யவில்லை.

உள்ளே கதவு திறக்கிற சத்தம். வாசலில் மின்னல் வெட்டியது. நான் கையில் மாகாணிக் கிழங்கு இல்லாவிட்டால் கை குவித்து நின்ற

இடத்திலேயே தொழுதிருப்பேன். என் கண் முன் றெக்கைகள் இல்லாத தெலக்ஸ். சினிமாவில் பார்த்ததைவிட, மேக் அப் இல்லாமல் நூறு மடங்கு அழகாக கதவில் சாய்ந்தபடி நிலைவாசலில் நின்றிருந்தாள்.

‘சாரி, அம்மாஞ்சி, குளிச்சிட்டிருந்தேன். உங்களை பார்க்கறேன்னு சொன்னது ஞாபகம் வந்தது.’

தெலக்ஸ் தலையில் கைவைத்து சூபரின்டெண்டெண்ட் ஆசிர்வாதம் செய்தபடி அவள் கூடப் படியேற நான் வாடை அடிக்கும் மூட்டையோடு வாசலிலேயே நின்று ஒரு தடவை இருமினேன்.

தெலக்ஸ் திரும்ப, அவள் பார்வை முழுக்க என்னை நனைத்தது. குளிரக் குளிரக் குளித்து நின்றேன். குளித்துவிட்டு வந்த அப்சரஸ். தெலக்ஸ் நீராட தெலக்ஸ் சோப் பூசியிருக்க மாட்டாள். சந்தன வாடை அவளிடமிருந்துதான் புது மாம்பலம் தொடங்கி, பழைய மாம்பலம் வரையான அந்தப் பிரதேசம் முழுக்க அடிக்கிறது. மைசூர் சந்தன சோப்புக்கு நறுமணம் சேர்த்துத் தேய்த்துக்கொண்டிருப்பாள். சோப்பு எதற்கு, கஸ்தூரி மஞ்சள் கலந்த சந்தனப் பொடியை பன்னீரில் குழைத்துப் பூசி மாலை நீராடி வந்திருப்பாள்.

‘சார், வாங்க.’

என்னைத்தான் உள்ளே கூப்பிட்டாள் அவள். மின்னல் மல்லிகைப் பூச்செண்டால் தாக்கியதுபோல் நிலைகுலைந்து நின்றேன். ‘ஐ ஆம் ராமோஜி’ என்று ஆரம்பித்துக் குடல் ஏறி இறங்க, குரல் தடுமாற ஏதோ பதில் சொன்னேன்.

‘என் ஆபீஸ் தோழன், ஜூனியர் அதிகாரி.’

கச்சிதமாக அறிமுகம் செய்து வைத்தார் பந்துலு. தெலக்ஸின் அழகான பல் வரிசை கொடிமின்னல் வெட்டி மறைய, வைத்த கண்ணை எடுக்க முடியாமல் ஒரு புன்சிரிப்பு, ஒரு தடவை எனக்காக மட்டும் மலர்ந்தது.

என் மனசிலிருந்து விடுபட்டு அந்தப் பெரிய வீட்டுக்குள் என்னோடும் மாகாணிக் கிழங்கு மூட்டையோடும் நுழைந்து காற்றில் கலந்தாள் நான் சதா மனதில் சுமக்கும் தெலக்ஸ். பாரமில்லா மனதோடு உள்ளே நுழைந்தேன்.

நானே எதிர்பார்க்காதவிதமாகக் கை குலுக்கக் கை நீட்டினாள் தெலக்ஸ்.

‘என்ன சார், உங்க ஆபீஸ்லே சிறுதொழிலா இங்க் உற்பத்தி பண்றீங்களா?’, சிரித்தபடி அவள் கேட்டாள்.

என் கையைப் பார்த்தேன். அஞ்சு விரலிலும் பேனாவிலிருந்து கசிந்த இங்க். மறைத்துக்கொள்ள மறந்து போயிருந்தேன். கையை சுத்தம் செய்துகொள்ள வாஷ் பேசினைத் தேடிச் சுற்றும் முற்றும் பார்த்தேன்.

‘வாங்க, பாத்ரூம் உள்ளே இருக்கு.’

என்னை, எல்லா வாசனையும் கூட வர தெலக்ஸ் புவனா உள்ளே கூட்டிப் போனாள். விசாலமான பாத்ரூமில் நிறுத்திவிட்டுத் திரும்பும்போது வெளியிலிருந்து சொன்னாள் –

‘கதவு கொஞ்சம் டைட்டா இருக்கும். திறக்க வரல்லேன்னா தட்டுங்க... நான் வந்து உங்களுக்கு சுதந்திரம் கொடுக்கறேன்.’

சொர்க்கம் இப்படித்தான் பாத்ரூமிலும் இருக்கும்.

ஓரளவு சுத்தமான கரங்களோடு நான் வெளியே வந்ததும் கை துடைக்க மரிக்கொழுந்து செண்ட் வாசனையடிக்கும் துவாலை தந்தாள் தெலக்ஸ். விட்டுப்போன கைகுலுக்கலுக்காக மறக்காமல் கை நீட்டினேன். என் விரல்களை நாசுக்காகப்பற்றி அவள் கையசைக்க, பனிச்சாரல் அனுபவப்பட்டது எனக்கு. தெலக்ஸ் புவனா மேல் ஈர்ப்பும் மரியாதையும் வெகுவாக ஏறிக்கொண்டே இருந்தன.

‘என்ன சார் ஒரு பெரிய பையை கட்டித் தூக்கிட்டு வந்திருக்கீங்க? என்ன அது?’

தெலக்ஸ் நான் பக்கத்தில் வைத்திருந்த கித்தான் பையைக் காட்டிக் கேட்டாள்.

‘சரியாப் போச்சு, ஊருக்கே வாடை தூக்குது’ என்று பந்துலு சார் சொல்லியபடி கித்தான் பையை தெலக்ஸ் புவனா பக்கம் நகர்த்தினார். நான் இன்னும் இந்திரலோகத்தில் இருந்தேன். தெலக்ஸ் குலுக்கிய கையை, இங்க் இருந்தாலும் இப்போதைக்கு மறுபடி அலம்பும் உத்தேசம் இல்லை.

‘எனக்கு மூக்கு வீக் சார்... டெட்டால் பாட்டில் உடஞ்சு விழுந்து வீடெல்லாம் ஆஸ்பத்திரி வாடை வந்தாக்கூட நான் பாட்டுக்கு உக்காந்து புஸ்தகம் படிச்சிட்டிருப்பேன்’ என்றாள் தெலக்ஸ்.

இதற்கு அப்படியா என்று ஆச்சரியப்படுவதா, காமெடியாகப் பார்த்துச் சிரிப்பதா என்று தெரியாமல் அவளுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். முகத்தில் ஒரு மாசு, மரு கிடையாது. ரகசியமாக உள்ளங்கையில் கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். கனவில்லை. தெலக்ஸ்தான்

'தேங்க்ஸ் அம்மாஞ்சி. தேங்க்ஸ் ராமோஜி சார்.' அவள் நன்றி சொன்னது மாகாணிக் கிழங்குகொண்டு வந்ததற்கு என்று சொல்ல வேண்டியதில்லை. என் பெயரை நினைவு வைத்திருப்பதை சந்தோஷமாகக் கவனித்தேன்.

உள்ளே இருந்து நடு வயது அம்மையார் ஒருவர், கொஞ்சம் சுபாங்கி அம்மாள் ஜாடையும், அவளைப்போல் மூன்று பேரை ஒரே உடம்பில் அடைத்த பருமனுமாக வந்து ரண்டி ரண்டி என்று வரவேற்க, இந்தியில் இல்லை, தெலுங்கில் என்று மனதில் திடமாகச் சொல்லிக் கொண்டு கைகூப்பினேன். தெலக்ஸ் புவனாவோட சித்தி என்று பந்துலு சார் காதில் சொன்னார்.

கித்தான் பையைப் பிரியத்தோடு தூக்கி பந்துலு சார் சித்திகாருவிடம் கொடுத்தார். அந்த சுந்தரமான வாசனையில் மனம் பறிகொடுத்த மாதிரி ஒரு வினாடி கண் மூடி இருந்துவிட்டு சைட் டேபிள் கீழே எதையோ தேடினாள் சித்திகாரு. அது கிடைத்த சந்தோஷத்தோடு கையை வெளியே எடுக்க, பட்டணம் பொடி அடைத்த சிமிழ். நான் தினசரி வீட்டில் பார்க்கும் லாகவத்தோடு ஒரு சிம்ட்டா பொடியை எடுத்து நாசியில் முகர்ந்து தும்ம, ரத்னா நினைவு வந்தது. தெலக்ஸ் புவனாவும் பொடி போட்டுக்கொண்டிருந்தால் எனக்கு ஆச்சரியம் வந்திருக்காது.

'டிபன் சாப்பிடுங்க அம்மாஞ்சி... சார் நீங்களும்..'

தெலக்ஸ் எழுந்து நின்றபடி சொன்னாள். இந்தத் தரிசனம் இத்தோடு முடிவடைகிறது என்று மனதில் நினைத்துக்கொண்டேன். அவள் என்ன நினைத்தாளோ ஒரு வினாடி நின்றாள். கொஞ்சம் தலை சாய்த்து அன்போடு என்னைப் பார்த்து, 'ராமோஜி சார், மெட்ராஸ்லே எங்கே இருக்கீங்க?' என்று கேட்டாள்.

புரசவாக்கத்தில் என்று சொல்ல, ஆர்வமாக, அங்கே எங்கே என்று கேட்டாள். முத்தியால் நாயக்கன் தெரு எனச் சொன்னதும் திரும்ப உட்கார்ந்து விட்டாள்.

‘உங்க தெருவிலே தானே ராமண்ணா ஜோசியர் இருக்கறது?’ தெலக்ஸ் கேட்க, ஆமாம் என்றேன். எங்கள் தெருவோடு தெலக்ஸுக்கு ஏதோ தொடர்பு இருப்பது மனதுக்கு இதமாக இருந்தது.

‘ஆமா என் வீட்டுக்கு நாலு வீடு தள்ளித்தான். நல்ல பிரண்டு’

‘ரொம்ப நல்லதாப் போச்சு.’ தெலக்ஸ் சொன்னபடி எதிர் சோபா மூலையில் எனக்கு முகத்துக்கு முகம் நெருங்க அமர்ந்தாள். இன்றைக்கு இன்னும் எத்தனை மெய்சிலிர்ப்பு பாக்கி இருக்கிறதோ. வீட்டுக்குப் போகும்போது முள்ளம்பன்றிபோல சிலிர்த்தபடிதான் படி இறங்கப் போகிறேன்.

‘ராமண்ணா ஜோசியர்தான் எனக்கு ஆஸ்தான ஜோசியர்.’ தெலக்ஸ் புவனா அழகாக எனக்காக சிநேகபாவத்தில் புன்னகைத்தாள்.

அவள் வியப்பும் சந்தோஷமுமாக இன்னும் கொஞ்ச நேரம் அப்படியே இருந்தால் இலவம் பஞ்சாக வெடித்து விடக்கூடும். நல்லவேளை மாகாணிக் கிழங்கைக் கொடுத்துத் தகவலை வாங்கிக்கொள்ள நான் வந்து விட்டேன். கூடவே, போனால் போகிறதென்று பந்துலு சாரையும் கூட்டி வந்திருக்கிறேன்.

‘ஃபீல்ட்லே கால் வச்சபோது, அது மூணு வருஷம் முந்தி… முழுப் பெயர் புவனலோசனின்னுதான் டைட்டில்ஸ்லே என் படங்களிலே வரும்… அப்புறம், தசாபதி படத்திலே ரோல் எடுத்துக்க முன்னாடி, புவனலோசனின்னு பெயர் வைச்சுக்கறதா, புவனேஸ்வரின்னு வச்சுக்கறதா, இல்லே எங்க பாட்டி பெயர் புண்யாம்பான்னு போடலாமா… என்ன பெயரா மாற்றிக்கலாம்னு தேடிட்டு இருந்தபோது ஜோசியர் இங்கே டைரக்டர் கன்னய்யா வீட்டுக்கு, அது துளசி குடீரம் ஆயுர்வேத வைத்யசாலை பக்கம் இருக்கு… அங்கே வந்துட்டு கன்னையா கூட்டி வந்தார் இங்கே… சோழி எல்லாம் உருட்டி பாத்துட்டு புவனான்னு மட்டும் பெயர் வச்சா போதும், பெயருக்கு முன்னே இனிஷியலைவிட பிரபலமா நாலு எழுத்து சேரப்போறது… அதிர்ஷ்டம்தான் இனி எப்பவும்னு சொல்லிட்டுப் போனார்…’

ஏற்கெனவே நாலைந்து சினிமாவில் தெலக்ஸ் தலை காட்டியிருந்தாலும், தெலக்ஸ் புவனாவாக அவள் தசாபதி சினிமாவில் வந்ததில் இருந்து தமிழில் எந்த ஹீரோயினையும்விட அதிகமாக பாராட்டும் புகழும் அவளுக்குக் குவித்திருக்கிறது நினைவு வந்தது. எங்கள் தெரு புகையிலைக்கட்டை ஜோசியர்தான் இதற்கெல்லாம் காரணமா? சந்தோஷமாக இருந்தது.

‘ராமண்ணா ஜோசியர் ஊரிலே இல்லியா?’, தெலக்ஸ் என்னைக் கேட்டாள்.

நான், நான் மட்டுமில்லை தெருவில் பொதுவாகவே ஜோசியரைக் கண்டுகொள்வதில்லை. வாயைத் திறந்தால் யந்திரம், பரிகாரம், நாலாம் இடம், ஏழரை, எட்டிலே குரு என்று புரியாத கணக்கெல்லாம் போட்டுக்கொண்டிருப்பவர் அவர். புதுவருஷ பலன் சொல்கிறேன் என்று கோவிலில் கூட்டம் கூட்டி, பெருமழை, பஞ்சம், யுத்தத்தில் இழப்பு என்று பாகற்காயைக் கடித்தமாதிரி மூஞ்சியை வைத்துக்கொண்டு அரை மணி நேரம் பிரசங்கம் செய்ய, இனியும் கேட்டுக் கொண்டிருந்தால் வானம் சரிந்து தலையில் விழுந்துவிடும் என்று பயந்து வெளியே வந்தபிறகு அவரைத் தெருவில் பார்த்தாலும் தலையைக் குனிந்துகொண்டு அவசரமாக நடந்து போகிறேன். இப்போது அவர் தெலக்ஸ் மதிக்கும் ஜோசியர். சுமுகமாக அவரோடு பழக வேண்டிய காலம் வந்திருக்கிறது.

‘அவர்கிட்டே கேட்டுத்தான் தசாபதிக்கு அடுத்து ‘என் புருஷன்’ படமும் எடுத்துக்கிட்டேன். ஜனவரியிலே ரிலீஸ். அதைத் தவிர இன்னும் ரெண்டு படம் கமிட் ஆகியிருக்கு... இப்போ ஏகப்பட்ட பேர் ப்ரொட்யூசர்னு வந்து நடிக்கக் கூப்பிட்டுட்டு இருக்காங்க... ஜோசியர் சொன்னால்தான் எடுப்பேன்... நானும் ஒரு வாரமா ஃபோன் பண்ணி அவரைப் பிடிக்கப் பாக்கறேன்... போன் போவுது... சைலண்ட் ஆயிடுது...’

‘உள்ளபடிக்கே கஷ்டம்தான்... போன் லைன் எல்லாம் இப்படித்தான் இருக்கு... மழைகாலம் வேறே வந்தாச்சா... நல்ல நாள்லேயே டெலிக்ராம் அண்ட் டெலிபோன் ஸ்டாஃப் வரமாட்டாங்க... இப்போ கேக்கவே வேண்டாம்...’

டெலிபோன் உபயோகிக்கிறவர்கள் பேச்சில் நீ என்ன செய்கிறாய் என்று என்னைத் துச்சமாகப் பார்த்தபடி சம்பாஷணையில் ஈஷிக்கொண்டார் பந்துலு சார்.

‘சார் எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணனுமே.’

என்னது, தெலக்ஸ் என்னை யாசிக்கிறாளா? இது நிச்சயம் நடக்கவில்லை. என் கனவு. என் சொப்பனம்கூட இல்லை. பந்துலு சாரின் கனவில் நான் மாகாணிக்கிழங்கு அடைத்த கித்தான் பையோடு கடந்து வந்திருக்கிறேன். சொப்பன சுந்தரியாக தெலக்ஸ் கிழங்கு வாடையோடு என்னிடம் பேசிக்கொண்டிருக்கிறாள். விடியலில் பால்காரன் வந்து கதவு தட்டப் போகிறான்.

‘சார் தயவு செய்து ராமண்ணா ஜோசியர் கிட்டே நான் அவரைப் பார்க்க அடுத்த திங்கள்கிழமை… திங்கள் வேணாம், சதிர்க்கச்சேரி தலைமை வகிக்கணும்… செவ்வாய்க்கிழமை சாயந்திரம் வரேன்னு சொல்றீங்களா? அடுத்த படம் எதை சைன் பண்ணாலாம்னு இன்னும் ஒரு வாரத்திலே முடிவு செஞ்சாகணும்… சரி வாங்க டிபன் சாப்பிடலாம்… பசி உயிர் போவுது… சித்தி.’

தெலக்ஸ் புவனாவின் சித்தி உள்ளே போய் யாரிடமோ ஏதோ சொன்னதைக் கேட்டேன். எங்கள் தலையைக் கண்டதும் கிண்டிய, நெய்யும் டால்டாவும் கசியும் ரவாகேசரியும் சேமியா உப்புமாவுமாகத் தீனி வந்தது. தெலக்ஸ் புவனாவே சிரத்தையாகப் பரிமாறினாள். அதெல்லாம் தேவாமிர்தமாக, அந்த அற்புதமான மாலை நேரம் முடிந்துகொண்டிருந்தது.

வயிறும் மனதும் நிறைய தெலக்ஸ் புவனாவுக்கு நன்றி சொல்லும் போது சட்டென்று பொறி தட்டியது. வரும் செவ்வாய்க்கிழமை ரத்னா எங்கள் வீட்டில் சத்யநாராயண பூஜை வைத்திருக்கிறாள். உடனே ஒரு யோசனை.

‘மேடம், செவ்வாய்க்கிழமை எங்க கிரஹத்துக்கும் நீங்க வந்திருந்து சிறப்பிக்கணும்… என் சார்பிலேயும் என் மனைவி ரத்னாபாய் சார்பிலேயும் கேட்டுக்கறேன்… ஜோசியர் வீட்டுக்கு எதிர்லேதான்… சொன்னேனே… ஒரு நிமிஷம் ஒகடி ஒக நிமிஷமு…’ எனக்குத் தெரிந்த தெலுங்கு அவ்வளவுதான்.

‘ஓ அதுக்கென்ன வரலாமே. இந்த மேடம் எல்லாம் வேணாம் ப்ளீஸ்…’

அந்தப் பெருந்தன்மைதான் தெலக்ஸ் புவனா.

பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டபோது பெரிய தூறலாக விழுந்து கொண்டிருந்தது. நின்றதும் போகலாமா என்று கேட்டார் பந்துலு சார்.

ஒண்ணும் கரைஞ்சு போயிட மாட்டோம் சார் என்று தெலக்ஸ் பார்த்து ரசிக்க டயலாக் அடித்துவிட்டு தெருவோடு போய்க்கொண்டிருந்த கை ரிக்ஷாவைக் கூப்பிட்டு அவரோடு ஏறி அமர்ந்தேன். கை காட்டலாம் என்று திரும்பிப் பார்த்தால் தெலக்ஸ் மாளிகைக் கதவுகள் அடைத்திருந்தன.

எலக்ட்ரிக் ட்ரெயினில் மாம்பலத்தில் இருந்து நுங்கம்பாக்கத்துக்கு வரும்போதே மழை கனமாகப் பொழிய ஆரம்பித்து விட்டது. பந்துலு சார் வீடு அங்கேதான்.

‘நல்ல மழையிலே வந்துட்டோம்... ஒரு குடையாவது அத்தங்கா கிட்டே வாங்கிட்டு வந்திருக்கலாம்...’

பந்துலு சார் மழையில் நனைவதற்கு ஆயத்தமாக மூக்கைப் பொடியில் உறிஞ்சி டப்பாவை கைப்பையில் பாதுகாப்பு, பத்திரமாக வைத்தபடி இறங்கிப் போனார். என் அருகில் தெலக்ஸ் புவனா வந்து உட்கார்ந்துவிட்டு ரயில் முழுக்க ஈரமா இருக்கு என்று திரும்பிப் போய்விட்டாள்.

என் வீட்டில் அவள் வரும்போது என்ன செய்யலாம் என்று நினைப்பில் மூழ்கியிருந்தேன். முதலில் ரத்னாவிடம் இதைச் சொல்லி தெலக்ஸ் வருகைக்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ரத்னா சத்தம் எதுவும் போடமாட்டாள். என்றாலும் சாந்தமாக இருக்கவைக்கவேண்டும். அவள் ஆசையோடு பார்த்து வாங்காமல் வந்த புட்டா புட்டா சில்க் புடவையை நாளைக்கு போகிற போக்கில் வாங்கிக் கொடுத்து மனதைக் குளிர்வித்து சூழ்நிலையில் எந்த இறுக்கமும் வராமல் பார்த்துக்கொண்டால் போதும்.

பார்க் டவுனில் இறங்கி புரசைவாக்கம் போகிற பஸ் பிடித்து வீட்டில் போய் நிற்க ராத்திரி ஏழரை மணி. சொட்டச்சொட்ட நனைந்திருந்தேன். ரத்னா வந்திருந்தாள். என் நீராடி வந்த கோலம் பார்த்துப் பதைபதைத்துப் போனாள் பேதை.

இதமாக அணைத்துத் தலையைக் குனிந்து அவள் மார்பில் தாங்கி துவாலையால் என் தலையை அழுத்தித் துடைத்தபோது அவளை மட்டும் நினைத்தேன். மனதின் எல்லா அறைகளும் அடைத்து இருக்க, ரத்னாவே நிறைந்தாள்.

‘படம் எப்படி இருந்துச்சு?’ என்று கேட்டேன்.

சுபாங்கி அம்மாளுக்கு தசாபதியில் வந்த நடுவயசுப் பெண்களின் ‘மச்சி, தேவடியாக் கச்சேரி நடக்குதா மாடியிலே?’ டயலாக் ரொம்ப பிடித்திருந்ததாம். அச்சு அசல் முதலியார் வீட்டுப் பேச்சாம். நான் தெலக்ஸ் என்று ஆரம்பிக்க நினைத்து அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று சும்மா இருந்தேன்.

‘சாப்பிடலாம் வாங்க’, அன்போடு என்னை சமையலறையில் இருத்தி மல்லிகைப்பூ இட்லியும் சின்ன வெங்காய சாம்பாரும் பரிமாறினாள் ரத்னா.

வயிறு நிறைந்திருந்தாலும் எப்படியோ சாப்பிட்டேன். அவளை ஏமாற்றமடையச் செய்துவிடக்கூடாது. அது முக்கியம்.

‘இன்னிக்கு இம்புட்டுதான் முடிஞ்சது, சாரிங்க’ என்று கெஞ்சுகிற கோலத்தில் சொல்ல, எச்சில் கையும் எச்சில் வாயும் அவளை அணைத்து முத்தமிட்டன.

ஒரு நிமிடம் மின்சாரம் நிற்க வீடெங்கும் இருட்டு. நான் கருப்புக் காகிதம் ஒட்டிய ஜன்னல் பக்கம் போய்த் திரையை விலக்கிப் பார்த்தேன். தெருவும் இருளில்தான்.

ரத்னா மெழுகுவர்த்தி கொளுத்தி அகல்விளக்கு எடுத்துட்டு வரேன் என்று என் காலை மிதித்து உள்ளே போக, நான் பாய்ந்து அவளை இரண்டு கையாலும் தூக்கி நீள சோஃபாவில் இருத்திப் போகாதே என்றேன்.

‘அகத்துக்குத் திரியும் நெய்யும் தேசுறத் தேடவேண்டாம் திருவிளக்கு இவளே போதும்.’

ராமானுஜர் நூற்றந்தாதியில் திருவரங்கத்து அமுதனார் சொல்வதாக ஸ்கூல் தமிழ் வகுப்பில் ராமலிங்கம் பிள்ளைவாள் சொன்னது நினைவு வந்தது. ரத்னாவின் தோளில் கைபோட்டு உட்கார்ந்து சொன்னேன்.

‘அப்போ பொம்பளைங்க இருக்கற வீட்டுலே கரண்ட் செலவு மிச்சம்தானே?’ அவள் கேட்டாள்.

‘ஆழ்வார் காலத்திலே எலக்ட்ரிக் லைட் இல்லே’ என்று விநயத்துடன் அவள் பின் கழுத்தில் மென்மையாக முத்தமிட்டு அவளுக்குத் தெரியப்படுத்தினேன்.

காற்றில் ஜன்னல் சத்தமாக அடித்துக்கொண்டது. மூடி வச்சுட்டு வரேன் என்று ரத்னா எழுந்தாள். நான் போறேன், மகாராணி.

மூடும்போது தெருவை மறுபடி பார்த்தேன். அங்கே இருட்டில் ஒரு விசேஷம் தென்பட்டது.

மேற்கே தங்கப்பன் முதலாளி வீட்டு காம்பவுண்டில் ஏதோ வெளிச்சம் மின்னி மின்னி வந்து போனது. டார்ச் வெளிச்சம். உளுந்து கடத்தல் ஆரம்பமா?

அடுத்த விநாடி விளக்கு வந்தது. தங்கப்பன் முதலாளி வீட்டு காம்பவுண்டில் இரண்டு பேர் சிரமத்தோடு ஒரு சாக்கு மூட்டையை வெளியே சிறு மோட்டார் வேனில் ஏற்றுவது தெரிந்தது. வேன் சத்தமிட்டுக் கிளம்பும் ஓசை. விளக்கை அணைத்துவிட்டு வந்தேன்.

ஒரு மணி நேரம் கழித்து, குளித்து, ராத்திரி ஒன்பதுக்கு, ஏஆர்பி வார்டனாக அரை நிஜார், இறுக்கமான சட்டை, தலையில் ஹெல்மெட், காலில் கேன்வாஸ் ஷூ என்று ரோந்து போகத் தயாரானேன்.

இன்னிக்குப் போய்த்தான் ஆகணுமா என்று ரத்னா கேட்டாள். மழையில் நனைவதுபற்றிய பச்சாதாபம் என்பதோடு பெண்பறவை ஆணைச் சிறகால் அணைத்தபடி அருகில் இருக்க அழைக்கும் வேட்கையும்கூட அதில் பிரதிபலித்தது.

கொஞ்சம் காத்திரு கண்ணே. சீக்கிரம் வந்து விடுவேன். ஒரு குடை எடு.

நான் நேரே தங்கப்பன் முதலாளி வீட்டுக்குள் போக நினைத்தேன். அது சரியாக இருக்காது என்று இரண்டு தடவை எங்கள் தெருவையும் பக்கத்துத் தெருக்களையும் இரண்டிரண்டு தடவை சுற்றி வந்தேன். அப்புறம் தங்கப்பன் முதலாளி வீட்டு இரும்பு கிராதி கதவைத் தள்ளித் திறந்தேன். ஈரக் குடையை உதறி மடக்கிச் சுவரோடு சார்த்தி வைத்துவிட்டு உள்ளே போனேன்.

செடிகொடிகள் அடர்ந்த அவர் வீட்டுத் தோட்டத்தைக் கடந்து நடக்க, இருட்டில் அங்கே நின்ற மூன்று பேரைப் பார்த்து நிற்க வேண்டிப் போனது.

ஏஆர்பி வார்டன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டேன். சொல்லவே தேவையில்லை. அந்த நேரத்தில் நிஜாரும் ஹெல்மெட்டும் ஷூவுமாக வேறே யார் வரப் போகிறார்கள்?

‘ஜன்னல்லே சரியா கருப்பு காகிதம் ஒட்டலியே? கிழிஞ்சிருக்கு... வெளியே இருந்து வீட்டுக்குள்ளே வெளிச்சம் தெரியுது... சட்டப்படி தப்பு இது.’

நான் ஜன்னலை சோதிக்கப் போவது போல் போக்குக்காட்டி உள்ளே நடந்தேன். நீண்ட ஒழுங்கையில் நான்கைந்து மூட்டைகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் போகும்போதே ஈரமண் நெடி தாங்காமல் தும்மல் ஏற்பட்டது. மிளகாய் மூட்டையாக இருக்குமோ? சுபாங்கி அம்மாள், பருப்பு பதுக்கி வைத்து ப்ளாக் மார்க்கெட்டில் விற்பதைப்பற்றித்தானே புகார் சொன்னார்?

நெடி அடித்த மூட்டைக்கு அடுத்து ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு சாக்கு மூட்டைகள். அதெல்லாம் என்ன என்று கேட்டேன்.

‘முதலாளிக்குதான் தெரியுமுங்க’ என்றார் அதைத் தூக்கிப்போக வந்த ஒருத்தர்.

‘முதலாளி எங்கே?’

‘குண்டூருக்கு சரக்கு பிடிக்க போயிருக்காருங்க சார்.’

‘வேறே வீட்டுக்காரங்க யாரு?’

அவர்கள் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றார்கள். வெளியே அடித்துப் பெய்கிற மழையின் சத்தம்.

‘இந்த மூட்டை எல்லாம் எங்கே போவுது?’ நான் நைச்சியமாகக் கேட்டேன்.

‘டவுட்டன் கிட்டே, அய்யா கடைக்கு.’

மனசே இல்லாமல் ஒருத்தன் அரைகுறையாகப் பதில் சொன்னான். ஆக பருப்பு, மிளகாய் கடத்தல்தான். கடையில் இருந்துதானே இங்கே வரணும்? இங்கே இருந்து அங்கே ஏன் போகணும்? புரியவில்லை. யார் கண்டது? ப்ளாக் மார்க்கெட் சுவடுவிட்டுப் போகும் வழி யாருக்குத் தெரியும் அதில் ஈடுபடுகிறவர்களைத் தவிர?

‘சரி, ஜன்னல்லே புதுசா கருப்பு காகிதம் ஒட்டுங்க. நாளைக்கு வருவேன். சரியா இல்லேன்னா அப்புறம் எங்க மேலே வருத்தப்பட்டு ஒண்ணுமாகாது.’

நான் என்ன செய்யப் போகிறேன் என்று கோடி காட்டி – அதெல்லாம் ஒன்றும் இல்லை. ஏஆர்பி வார்டன் ஒரு துரும்பைக்கூட இங்கே இருந்து அங்கே எடுத்துப் போடச்சொல்லி யாரையும் அதிகாரம் பண்ண முடியாது – சும்மா ஒரு பந்தாவுக்கு சொல்லியபடி வாசல் கதவுக்கு பக்கம் வந்து குடையைப் பிரித்தேன். யாரோ சிரிக்கிற சத்தம். பருப்புக் கடத்தலில் வேறு யாரோகூட இருக்கிறார்கள்போல் இருக்கே என்று ஆச்சரியத்தோடு குடையைக் கீழே கொண்டுவந்து பார்க்கும்போது கொடிமின்னல் வெட்டி வானம் அதிரத் தாளம் கொட்டி இடி.... பெருமழை.

இனி ரோந்து புடலங்காய் எல்லாம் எதுவும் இல்லை, வீட்டுக்குப் போகலாம் என்று திரும்பி நடந்தேன். ரத்னாவும் குளித்திருந்தாள்.

அந்த ராத்திரி மழை மத்தளம் கொட்ட எனக்கு இன்னொரு சோபான ராத்திரி.

காலையில் மழைவிட்டு வானம் வெளிறி இருந்தது. கையில் காப்பிக் கோப்பையுடன், தினமணி பேப்பர் படித்தபடி திண்ணையில் உட்கார்ந்திருந்தேன்.

'என்ன சார், உங்க வீட்டுலே ப்யூஸ் போகலியா?' ஓவென்ற இரைச்சலாகப் பேச்சு சத்தம். எலக்ட்ரீஷியன் மணவாள நாயுடுதான்.

அவருக்கும் ரத்னாவிடம் சொல்லி ஒரு காப்பியை வரவழைத்தேன். மகிழ்ச்சியாகக் குடித்துவிட்டு ஊர் வம்புக்குத் தாவினார் மணவாள நாயுடு.

'சார் ஜப்பான் ப்ளேன் குண்டுபோட வந்தா ஓன்னு சங்கு பிடிக்கணும்னு உங்களைப்போல ஏஆர்பி வார்டன்களாக ரோந்துலே போறவங்க, சுவிட்சைப் போடன்னு பேட்டைக்கு பேட்டை சைரன் வச்சுக் கொடுத்திருக்காங்களே... அங்கே எல்லாம் ஒரு தடுப்பு கதவு வைக்கக் கூடாதா? மழைச் சாரலும் தண்ணியுமா சைரன் எல்லாம் முழுக்காட்டிக் கிடக்கு. ஜப்பான் என்ன, ஜர்மனியும் சேர்ந்து வந்து குண்டு போட்டாலும் சைரன் சத்தம் கேட்காது. சர்க்யூட் எல்லாம் ரிப்பேர். அப்படி இல்லேன்னா, மழைக்காலத்திலே ஜப்பான்காரன் குண்டு போடமாட்டான்... போட்டா ஈரத்துலே விழுந்து நமத்துப் போயிடும் அதெல்லாம்னு நம்பிக்கையா?'

தெரியலையே என்றபடி தினப் பத்திரிகையில் மூன்றாம் பக்கத் தலைப்புச் செய்தியைப் படித்தேன் – 'மதறாஸில் ஜலக் கஷ்டம் இந்த வருஷம் ஜாஸ்தி இருக்காது.' என் தமிழே பரவாயில்லைபோல் இருந்தது.

'அது கிடக்கு சார், தசாபதி பயாஸ்கோப் பார்த்தீங்களா? என்னமா நடிச்சிருக்கார் காளிங்க ரத்தினம்', எலக்ட்ரீஷியன் சினிமாவுக்குப் போனார்.

'ஆமாங்க, பார்த்தேன்' என்றேன் பேப்பரை மடக்கி வைத்தபடி.

'அந்த ஹீரோயினிகூட, சோப்புக் கம்பெனியிலே உத்தியோகம் பாக்கற பொம்பளே... துறுதுறுன்னு... பேர் என்ன?'

'சாவகாசமா பேரென்னன்னு பார்த்துக்கலாம், ஆபீஸ் கிளம்பற உத்தேசம் இல்லியா...?'

ரத்னா குரலை உள்ளே இருந்து உயர்த்த எலக்ட்ரீஷியன் ஷாக் அடித்தாற்போல் திண்ணையிலிருந்து ஒரு துள்ளு துள்ளி செருப்பில் கால்

நுழைத்தபடி ஓடியே போனார். அது என் செருப்பு என்று இரைய வேண்டிப் போனது.

குளியல் நேரத்தில் தெலக்ஸ் சோப் டப்பாவை இறுக மூடி வைத்துவிட்டு சுதேசி சோப்பை ரெண்டு தடவை கடமைக்காக வயிற்றில் தேய்த்து ஒரு செம்பு தண்ணீர் ஊற்றிக் கொண்டபின் மைசூர் சாண்டல் சோப் எடுத்து மணக்க மணக்க உற்சாகமாகத் தேய்த்துக் குளிக்கலாம் என்று டப்பாவை எடுத்தால் தேசலாக ஒரு துண்டு சந்தன சோப் மேல் கொழுக் மொழுக் என்று முட்டை வடிவத்தில் காத்ரஜ் சோப். ரத்னா டியூசிஎஸ் போனால் இப்படியான புதுசு புதுசான சரக்குகள் வீட்டுக்குள் சர்வ சுதந்திரமாகப் படி ஏறி விடும்.

கோத்ரஜ் சோப் எடுக்கவேண்டாம் என்றால் சுதேசி. அதுவும் வேணாம் என்றால்... நான் இருக்கேன் என்று மனதில் தெலக்ஸ் எட்டிப் பார்க்க வலுக்கட்டாயமாக அங்கே எல்லா அறையிலும் பூட்டுப் போட்டேன்.

பத்தே நிமிடத்தில் காத்ரெஜ் தேய்த்து நீராட, கொஞ்சம் ஆஸ்பத்திரி வாசனை, கொஞ்சம் டால்கம் பவுடர் வாசனை, இன்னும் கொஞ்சம் கேரம்போர்டில் போடும் வெழுமூனான பவுடர் நெடி இத்தோடு லேசிலும் லேசான ஆபீசர்ஸ் பட்டணம்பொடி நறுமணம்...

கோத்ரஜ் பாஸ் மார்க் எடுத்திருந்ததை நினைத்து சந்தோஷப்பட ரத்னா தோளில் குற்றாலத் துண்டோடு எதிர்ப்பட்டாள். துண்டை நின்றபடி பாத்ரூம் கதவின் மேல் உத்தேசமாக எறிய, நான் உள்ளே இருந்து வெட்கத்தோடு ஒரு வினாடி வெளிப்பட்டுக் கையில் ஏற்று வாங்கி கதவுக்குப் பின் மறைந்தேன்...

‘அய்யே... ஏதோ பத்தினிப்பெண் ரூபசுந்தரி மாதிரி... உங்களை முழுக்க பார்க்கலேன்னா மனசு கேக்காதாக்கும்’ என்று கேலியும் கிண்டலும் வழக்கமாக வருவதுபோல் இன்றைக்கு இல்லை... ஏதோ புகார் செய்ய வந்திருக்கிறாள். அப்படியே துண்டு வீச்சும் நடந்திருக்கிறது.

‘சாப்பாட்டு பாத்திரத்தை ஆபிசிலேயே விட்டுட்டு வந்திருக்கீங்க... இன்னிக்கெதுலே வச்சுக் கொடுத்து அனுப்புவேன்?’

துண்டுடுத்து நின்ற என்னிடம் முறையிட்டாள்.

‘நேத்து பந்துலு சாரோட வெளியே போகவேண்டி...’, நான் பம்மினேன்.

‘எங்கே, தெலக்ஸ் வீட்டுக்கா? கூலிக்காரன் மாதிரி மாகாணிக்கிழங்கு ஒரு மணங்கு கித்தான் பையிலே போட்டு தோள்லே வச்சு எடுத்துப் போய்ப் படைச்சீங்களா அந்த அழகு தேவதைக்கு?’

நான் ஸ்தம்பித்துப் போனேன்.

இதென்ன இட்சிணி வேலையா? அல்லது இந்த மாதிரி விசிட்டுக்கு கண்ணும் மூக்கும் வைத்து வரும் இந்துநேசன் பத்திரிகைச் செய்தியா?

நானே தயங்கித் தயங்கி எங்கே போனேன் என்று ஆரம்பிக்கும் முன்னால் ரத்னா புட்டுப் புட்டு வைக்கிறாள். எனக்கு வேலை வெகுவாகக் கம்மியானதுபோல் ஆசுவாசம்.

‘உங்களுக்கு பந்துலு சார்தான் தெரியும்... எனக்கு அவரோட ஒய்ஃபையே தெரியும்... அந்த பூலோக சுந்தரி, பந்துலு சாரோட அத்தங்கா, மசக்கை வந்த கர்ப்பிணிப் பொண்ணு மாதிரி மாகாணி ஊறுகாய் வேணும்னு பந்துலு சார் வீட்டம்மா கிட்டே ஆசைப்பட, இவங்க என்னை வண்டிச் சத்தம் கொடுத்து கூட்டிக்கிட்டு முந்தாநாள் கொத்தவால் சாவடியிலே காய் வாங்க போனாங்க... நான்தான் செலக்ட் பண்ணி பேரம் பேசி வாங்கிக் கொடுத்தேனாக்கும்...’

அவள் மாடப்புரையிலிருந்து ஒரு சிமிழை எடுத்து சிட்டிகை ஆபீசர்ஸ் பொடியை அள்ளி சாவதானமாக நாசியில் ஏற்றி என்னைத் தும்ம வைத்தாள். நல்லதிலும் நல்லதான மூடில் இருந்தாள் ரத்னா.

வத்தல்குழம்பு பிசைந்து சாதம் சாப்பிட்டு முடிப்பதற்குள் போனேன் வந்தேன் என்று ஜாக்கிரதையாக ஆர்வமே இல்லாமல் பந்துலு கூப்பிடப் போனவனாக தெலக்ஸ் வீட்டு நிலவரங்களை ஏனோ தானோ என்று ஜாக்கிரதையாக விவரித்தேன்.

நேர்லே பார்க்க ரொம்ப சுமார்தான், கொஞ்சம் படகாமணி மூஞ்சி, தேங்காய்துருவி மாதிரி முன்பல்லு என்று நாலைந்து தடவை சொல்ல, கூட ஒரு ஸ்பூன் பசுநெய் அகஸ்மாத்தாக விழுகிற மாதிரித் தட்டில் விழுந்தது.

ரசம் சோறு சாப்பிடும்போது தெலக்ஸ் இத்தனை முட்டாளாக, நம் தெரு ராமண்ணா ஜோசியரிடம் கேட்காமல் பாத்ரூம்கூட போக மாட்டாளாம் என்று எள்ளி நகையாடினேன்.

வயசுப் பெண்ணைப்பற்றி, கௌரவமான உத்யோகத்துலே இருக்கற சர்க்கார் ஆபீசர் விடலைத்தனமா பேசறது தப்பு என்று சேம்சைட் கோல் போட்டாள் ரத்னா. பொறுத்துக்கொண்டு சிரித்தேன்.

தயிர் சாதத்துக்கு ரெகுலர் பரிவார தேவதையான நார்த்தங்காய் ஊறுகாயோடு ஜாடியின் முகத்தில் வெள்ளைத்துணி சுற்றி இறுக்க மூடிய பரணியில் இருந்து கிளைத்துவிட்டு அள்ளிய மாவடு ஊறுகாயும் கிடைத்தது.

'நேரம் ஆகிட்டு இருக்கு, ஆபீஸ் போற உத்தேசமே இல்லியா?' என்று ஊறுகாய் ஜாடியை கட்டவிழ்த்துத் திறக்க ரத்னா வழக்கமாக யோசிப்பதுபோல் இன்று யோசிக்கவில்லை.

சாப்பிட்டு முடித்து ரத்னா கை நீட்ட பற்றிக்கொண்டு எழுந்து கை அலம்பி ஆபீஸ் உடுப்புகளை அணிந்து என்னமோ தோன்ற கோட்டையும் மாட்டிக்கொண்டேன்.

'இன்னிக்கும் சோப்பழகி தரிசன யோகம்னு ராமண்ணா ஜோசியர் உங்களுக்கு சொல்லியிருக்காரா?'

கிண்டலும் இன்னொரு சிட்டிகை பொடியுமாக ரத்னா கேட்டாள். அவளிடம் தெலக்ஸ் நம்ம வீட்டுக்கு வரப்போவதுபற்றிச் சொல்லி விடலாமா என்று யோசித்தேன். வேண்டாம், ரொம்ப சந்தோஷமான மனநிலை ரொம்ப கோபமாக மாற ஒரு நிமிடம்தான் ஆகும். சாயந்திரம் திரும்பி வந்து சொல்லலாம்.

'இந்தாங்க, மூணு பாக்கெட்டா எலுமிச்சம்பழ சாதமும், புளிசாதமும், தயிர்சாதமும் இந்தப் பைக்குள்ளே வச்சிருக்கேன். ஜவ்வரிசி வடகமும் பொறிச்சு கட்டி வச்சிருக்கேன். வேஸ்ட் பண்ணாம சாப்பிடுங்க. சோப்பி நினைப்பிலே திங்க மறந்துட்டு வந்து நிக்காதீங்க... வரும்போது சாப்பாட்டு ஏனத்தை மறக்காம எடுத்துக்கிட்டு வந்திடுங்க, என்ன?'

திடீர் துணிச்சல் வர, நான் செருப்பில் கால் நுழைக்கும்போது சொன்னேன் –

'தெலக்ஸ் புவனா ஜோசியரை பார்க்க செவ்வாயன்னிக்கு வர்றேன்னு சொல்லிச்சு... அன்னிக்கு நம்ம வீட்டிலே சத்யநாராயணா பூஜை நீ வச்சிருக்கியே அதைச் சொன்னேன்... சத்யநாராயண பூஜையா, பாக்கணுமேன்னுச்சு... வாங்களேன்... ஜோசியர் வீட்டுக்கு பக்கம்தான் நம்ம வீடுன்னேன்... சரின்னுச்சு.'

ரத்னா ஏகப்பட்ட வியப்போடு என்னைப் பார்த்தாள். திட்டு நிச்சயம் என்று நான் நினைத்து முதுகைத் திருப்பிக் கிளம்பப் படியில் அடியெடுத்து வைத்தேன்.

‘நம்ம வீட்டுலே சத்யநாராயண பூஜை வர்ற புதன்கிழமைதான் வச்சிருக்கு... செவ்வாயும் இல்லே வெறும் வாயும் இல்லே’ என்று என் வாயில் தாம்பூலத்தைத் திணித்து அனுப்பினாள் அவள்.

தெருமுனையில் ட்ராம் சத்தம். நம்ம தோஸ்த் கோடி வீட்டு கண்ணாயிரம்தான் கண்டக்டர். நிறுத்தி ஏற்றிப் போய்க் கோட்டையில் இதமாகப் பதமாக இறங்க வைத்தார்.

தெலக்ஸிடம் சத்யநாராயண பூஜை சம்பந்தமாக வேறு என்ன சொல்லலாம் என்று யோசித்ததை அப்போதைக்கு மனதில் இருந்து அகற்றி வைத்து ஆபீசுக்குள் நுழைந்தேன். சாயந்திரம் வரும்போது கட்டாயம் ஜோசியர் ராமண்ணாவிடம் தெலக்ஸ் விஜயம்பற்றிச் சொல்லி வைக்க நிச்சயம் செய்து கர்ச்சீபில் முடிச்சுப் போட்டு பாக்கெட்டில் போட்டுக்கொண்டேன்.

சுறுசுறுப்பாக ஆபீஸில் மொத்த வேலையையும் நானே செய்து தீர்க்க வேண்டும் என்று உற்சாகமும், சொல்லொணா வலிமையும் எனக்குள் பிரவாகமாகப் பெருக்கெடுத்தது.

வீரையா கொட்டாவி விட்டபடி வந்து அப்படியே நடை தளர்ந்து சல்யூட் வைக்க, காலை நேரத்திலே என்ன சோம்பல்... சடசடன்னு உற்சாகமா வேலை ஆரம்பிக்க வேணாமா என்று கடிந்துகொண்டேன்.

‘எங்கே சார்... ராப்பூரா தூக்கம் கிடையாது... பக்கத்து வீட்டு நரசய்யா அவசரமா அக்கா வீட்டுக்கு, பெஜவாடா போயிருக்கான்... என் பொண்டாட்டி தனியா இருக்கா... பாத்துக்கடான்னான்...’

நான் கலவரமடைந்து வீரையாவை சுபாவப்படி வேலை செய்யச் சொல்லி அனுப்பினேன்.

அந்த ஞாயிற்றுக் கிழமை வீட்டில் மாங்குமாங்கென்று ஒட்டடை அடித்து, ரத்னாவின் கையிலிருந்து பக்கெட்டைப் பிடுங்கி கார்ப்பரேஷன் குழாயில் தண்ணீர் பிடித்து வீடு நெடுக அலம்பிவிட்டு, ஜன்னல், கதவு எல்லாம் தூசி போகத் துடைத்து வைத்தேன். தாறுமாறாகக் கிடந்த தினப் பத்திரிகை, மாத இதழ்கள், வாராந்தரிகள் என்று எல்லாவற்றையும் எடுத்துக் கண்மறைவாக அடுக்கி வைத்தேன். பாரதியார் கவிதைகள், கவிமணி தேசிகவிநாயகம்

பிள்ளை கவிதைகள், கம்பராமாயணம் என்று புத்தகங்களைப் பார்த்துப் பார்த்துப் பொறுக்கி ஹாலில் புத்தக ஷெல்பில் வைத்தேன். திகம்பர சாமியார் பின் வரிசைக்குத் தள்ளப்பட்டார். கருங்குயில் குன்றத்துக் கொலையும் பின்னால் மறைந்து கொண்டது.

ரத்னாவின் பட்டணம்பொடி அடைத்த ஜாடி, குட்டி ஜாடி, இத்தணூண்டு பீங்கான் செப்பு, தந்தப் பேழை, சந்தனமரச் சிமிழ், தங்கச் சம்புடம், வெள்ளிப் பெட்டி, வாழை மட்டை என்று சகலமான பொடிப் பொக்கிஷங்களையும் அவளிடம் கெஞ்சிக் கூத்தாடி எடுத்துப்போய் பூஜை அறையில் ஓரமாக வைத்தேன்.

பூஜைக்கு வைத்திருந்த சிவன், ராமன், கிருஷ்ணன் எல்லாரும் சரமாரியாகத் தும்ம ஆரம்பித்தார்கள்.

விடிந்தால் செவ்வாய். என் வீடு பத்து நிமிஷத்துக்காவது பிரபலத்தின் வருகையால் பெயர் பெறப்போகிற தினம். நானே எதிர்பாராத விதமாக சத்யநாராயண பூஜையை நாளை மறுநாள் புதனில் இருந்து ஒருநாள் முன்னதாக செவ்வாய்க்கு மாற்றி வைத்தாள் ரத்னா. சுபாங்கி அம்மாள், விலாசினி ஆகிய நிபுணர்கள் ஆலோசித்து, செவ்வாயும் சிலாக்கியம் என்று சொன்னார்களாம்.

ராமண்ணா ஜோசியரும் ஒரு ரூபாய் காணிக்கை வாங்கிக்கொண்டு அப்படியே வைத்துக்கொள்ளலாம் என்று சோழி உருட்டிக் கணக்குப் போட்டுச் சொன்னாராம். தெலக்ஸ் புவனாவுக்கு ஆஸ்தான ஜோசியராக இருந்து நூறு நூறாக சம்பாதிக்கவேண்டிய அந்த ஜோசியக்காரர், அற்பமாக ஒற்றை ரூபாவுக்கெல்லாம் சோழி உருட்டுவதை நினைத்துச் சிரித்தேன்.

செவ்வாய் மாலை ஆறு மணிக்கு டெபுடி கவர்னர் துரை சூப்ரண்ட்டெண்ட்டெண்ட்களையும் இதர மேலதிகாரிகளையும் ஏதோ அவசர மீட்டிங் என்று கூப்பிடாமல் போயிருந்தால் பந்துலு சாரும் வந்திருப்பார்.

‘நமக்கு ஒரு ஆத்திரம் அவசரம்னா அன்னிக்குத்தான் மயிரப் பிடுங்கற மீட்டிங் மண்ணாங்கட்டின்னு எழவெடுப்பான்... இதுக்கே சுதந்திரம் வந்து இவங்களை கப்பலேத்தி துரத்தணும்’ என்று திடீர் 777 பிராண்ட் தேசபக்திப் பிரசங்கம் செய்தார் பந்துலு.

வெய்யில் தாழ ஆறரை மணிக்கு என் வீட்டில் பூஜை தரிசித்துவிட்டு, ரத்னாவிடம் இருந்து மஞ்சள் குங்குமம் பெற்றுக்கொள்ள வருவதாக

தெலக்ஸ் சொன்னதை ரத்னா திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள். பிரபலமான ஒருவர் வீட்டுக்கு வரப்போகும் பெருமையும் பரபரப்பும் விதிவிலக்கில்லாமல் ரத்னாவையும் பீடித்திருந்திருந்தது.

தெலக்ஸின் சித்தியும் அவள் கூடவே வர, 'நேனு கூட ஒஸ்தானு ஒஸ்தானு' என்று ப்ராணனை வாங்கிக்கொண்டிருந்தாள். அவள் இல்லாமல் தெலக்ஸ் எங்கேயும் போகப் படியிறங்க மாட்டாள் என்பதில் ஒஸ்தானம்மாவுக்கு தலை நிறைய கர்வம்.

சாயந்திரம் நாலு மணிக்கு கடை கட்டி வைத்துக் கிளம்ப ஆயத்தமாக முகம் கழுவி வந்தபோது பந்துலு சார் என் நாற்காலிக்கு எதிர் நாற்காலியில் காத்துக்கொண்டிருந்தார்.

'சார், கிளம்பிக்கிட்டே இருக்கேன்' என்று சமாதானமாகச் சொல்ல, அவர் அமைதியாகக் கூறிய பதில் –

'சாரி ராமோஜி, இன்னிலேயிருந்து ஏஆர்பி நாலு மணிக்கு வீட்டுக்குப் போக ஸ்பெஷல் பெர்மிஷன் ரத்தாயிடுத்து... எப்பவும் போல அஞ்சு, அஞ்சரை, ஆறு, ஏழுக்கு போய்க்கலாம்... நான் ரோமாண்டி துரை மீட்டிங்க் போறேன்.'

அவர் சொன்ன பின்குறிப்புகளை ஆராய்ந்தால் தெரிந்தது என்ன என்றால், யாரோ ஜப்பான்காரன் 'குண்டு போட ப்ளேன்லே மெட்றாஸ் போகணும், அப்படியே கொத்தவால்சாவடியிலே மூணு படி மாகாணிக்கிழங்கு வாங்கிட்டு வரணும்'னு ப்ளான் பண்ணினது நடக்கலே போலே இருக்கு.

ஏஆர்பி வார்டன்கள் சீக்கிரமே ஆபீசில் இருந்து கிளம்பி, அரை டிராயர் போட்டு விசில் ஊதிக்கொண்டு கம்பு சுழற்றிக்கொண்டு ஜப்பான் போர் விமானங்களை கடுமையாக எதிர்த்து வெற்றிவாகை சூடுவதில் சென்னை மகாநகரமே நம்பிக்கை வைத்துக் காத்திருந்தது போதும் என்றுபட ஏஆர்பி வார்டன்களுக்கு ஸ்பெஷல் ஆபீஸ் பெர்மிஷன் ஓவர்.

காந்தி பக்தர்கள் எல்லோரும் சப்ஜாடாக ஜெயிலுக்குப் போக, வெள்ளையனே வெளியேறு போராட்டம் சுமார் வெற்றி. ஏஆர்பி வார்டன்கள் ரோந்து வந்து கண்காணிக்க ஆள்படை எதுவுமில்லை. அவர்கள் இனியும் பிற்பகல் நாலு மணிக்கு வீட்டுக்குப் போகவேண்டாம். போய், தனியாக இருக்கும் பெண்ஜாதியிடம் சில்மிஷம், சாயந்திரம் ஆறு மணிக்கு போண்டா, குணுக்கு, தவலவடை என்று சிறுதீனி, ராத்திரி ஒன்பதுக்கு

சப்பாத்தி, அடை, தோசை என்று பெருந்தீனி எனக் கிரமமாகச் சாப்பிட்டு, ரெண்டு பேரும் வயிறு தள்ளவும் வேண்டாம்.

சீக்கிரம் வீடு போக ஸ்பெஷல் பெர்மிஷன் ஓவர் ஆனால் என்ன? மாதம் ஒரு தடவை கிடைக்கும் ரெகுலர் பெர்மிஷனில் ‘வீட்டில், சத்யநாராயண பூஜை’ என்று காரணத்தைப் பதிந்துவிட்டு, மிடுக்காக வீட்டுக்குக் கிளம்பினேன்.

‘அத்தங்காவை நல்லா கவனிச்சுக்கும்... மறக்காம என் பெண்ஜாதி கிட்டே பட்சணம், பலகாரம் எல்லாம் கொடுத்து அனுப்பும்’ என்று கருத்தோடு சொல்லி அனுப்பினார் ரசனைத் திலகமான பந்துலு சார்.

ட்ராம் இறங்கி வீடு திரும்பும்போது எனக்குச் சற்று முன்னால் மிருதங்கம் இடந்தலை மேதை வேலப்ப நாயக்கர் மருமகன்களான ரெட்டையர்கள் தழையத் தழையக் கட்டிய வேஷ்டியோடு ஐயங்கார் ரெமிங்டன் டைப்ரைட்டிங் இன்ஸ்ட்யூட்டுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். சூடு தேடி ஒரு சின்னப் பட்டாளம் யுவன்மார் அந்தத் திசையில் மடித்துப் பிடித்த வெள்ளைக் காகிதங்களோடு நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

எனக்கு முன் எதிர்ப்பட்ட குமாஸ்தாவின் பெண்கள் ஓயிலாக ஏதோ தெருவே நந்தவனமான மாதிரி அன்ன நடை நடந்து என்னைக் கடந்து போனார்கள்.

இவர்கள் எல்லோரிடமும் லவுட் ஸ்பீக்கர் வைத்து இன்றைக்கு நம்ம தெருவுக்கு, எங்க வீட்டுக்கு ஒரு பிரபலம் வருகை தருவதாக இருக்கிறார். எனவே, தெருவில் குப்பை போட வேண்டாம் தயவு செய்து என்று அறிவிக்க மனம் துடித்தது.

என் கைப்பையில் வைத்திருந்த வேகமான நரி – சோம்பேறி நாய் சமாசாரம் டைப் அடித்த காகிதத்தை மிருதங்க இரட்டையர்களிடம் கொடுத்தேன். சுத்தம் சுகம் தரும் என்று சின்னதாக ஒரு பிரசங்கம் ஆரம்பிப்பதற்குள் அவர்கள் காணாது கண்ட மாதிரி சந்தோஷப்பட்டு நன்றி சொல்லிப் போனார்கள்.

நான் வீட்டுக்குள் போவதற்குள் எதற்கும் ஞாபகப்படுத்தின மாதிரி இருக்கட்டும், அதைவிட முக்கியம் ஏற்கெனவே தெலக்ஸ் வந்து போயிருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் வந்ததால் அதையும் நிவர்த்தி செய்யலாம் என்று ஜோசியர் வீட்டுக்குப் போனேன்.

‘யாரு, புவனலோசனிதானே… சாயந்திரம் வரான்னு சொன்னேளே… அதான் பாத்ரூம்கூடப் போகாம உக்காந்திருக்கேன்’ என்று அதீத ஆர்வம் காட்டினார் ஜோசியர். தெலக்ஸ் வரும் நேரம் நெருங்கி வந்துகொண்டிருந்தது.

மக்மல் பூரியும், குலோப்ஜாமுனும், உருளைக்கிழங்கு மசாலா சற்றே எலுமிச்சைச் சாறோடு கலந்து உள்ளே வைத்து, மொறுமொறுவென்று வார்த்த ரவா மசாலா தோசையுமாக அடர்த்தியான சாயந்திர டிபன். குறையே சொல்ல முடியாத பில்டர் காபி. ரத்னா அமர்க்களப் படுத்தியிருந்தாள்.

சுபாங்கி அம்மாளும், பந்துலு சம்சாரமும் அரட்டை அடித்துக்கொண்டு சமையல்கட்டில் உட்கார்ந்திருக்காவிட்டால், ரத்னாவுக்கு அவசரமாக, அழுத்தமாக, உதட்டில் ஒரு முத்தம் வைத்திருப்பேன்.

உடை மாற்றிக்கொண்டு, என்னமோ தோன்ற கதர் சட்டையும் அணிந்து நானும் ஒரு நாற்காலியில் அமர்ந்து கம்ப ராமாயணத்தைப் புரட்டியபடி தெலக்ஸ் வருகைக்காகக் காத்திருக்க, ஆறரை வந்து அதுவும் கடந்து ஏழு மணியானது.

‘என்னாச்சு, அத்தங்கா மறந்துட்டாளா?’ பந்துலு சம்சாரம் தூணைப் பார்த்துக்கேட்டாள். அங்கே பந்துலு இருந்தாலும் மௌனம்தான் பதிலாக வந்திருக்கும்.

எந்த நேரமும் வேட்டியை நனைக்கிற அவசரத்தோடு ராமண்ணா ஜோசியரும் என் வீட்டு வாசலுக்கு வந்து, ‘எங்கே காணோம்? இன்னும் வரல்லியே’ என்று கூப்பாடு போட்டார். நான் என்ன, வந்த தெலக்ஸை பறிமுதல் செய்து வீட்டில் பதுக்கிவிட்டா வரல்லே என்கிறேன்?

ராத்திரி ஏழரைக்கு டெல்லியில் செய்தி அறிக்கை படிக்கிற சத்தம் எல்லா வீட்டு ரேடியோக்களிலும் இருந்து கொர்ர் என்ற கரகரப்போடு ஒலிபரப்பானது –

‘சோவியத் போர்விமானங்கள் ஹங்கேரி தலைநகரான புடாபெஸ்டை குண்டு வீசித் தாக்கின. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் அட்லாண்டிக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது. ரஷ்ய துறைமுக நகரம் நோவராஸிஸ்க், ஜெர்மன் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது… இனி விரிவான செய்திகள்.’

நான் வார்டில் ரவுண்ட் போய் வரலாம் என்று கிளம்பினேன்.

என்ன இருந்தாலும் பிரபலங்களோடு பழகும்போது அவர்கள் சொன்னதை எல்லாம் அப்படியே நம்பி விடக்கூடாது என்று நம்பத் தொடங்கினேன். தெலக்ஸ் வருவதாகச் சொன்னபோது வேறே சினிமா ப்ரட்யூசர் யாராவது புதுப் படத்துக்கான வாய்ப்போடு வந்து இறங்கியிருக்கலாம். அல்லது அவளுக்கு லேசாக ஜலதோஷம் பிடித்திருக்கலாம். அல்லது அவள் வேறு ஜோசியரை ஆஸ்தான ஜோசியராக நியமித்திருக்கலாம். அல்லது அவளுடைய சித்திக்கு றக்கை முளைத்து, பொடிமட்டையோடு பறக்க ஆரம்பித்து, சீலிங் ஃபேனில் அடிபட்டிருக்கலாம்.

நான் புதுக் கைக்குட்டையை எடுத்து செண்ட் அடித்து என் பாக்கெட்டில் வைத்துக்கொண்டேன். ஜலதோஷத்தோடு கொஞ்சம் தாமதமாக தெலக்ஸ் வரக்கூடும். வந்து தும்மக் கூடும். முதலில் வரட்டும்.

மழை இப்போது இல்லை என்றாலும் உள்ளே போய்க் குடையை எடுத்து வாள் போல சுழற்றிக்கொண்டு கிளம்பிவிட்டேன். மழையும் புவனா போலத்தான். வருவதும் வராததும் யார் அறிவார்?

அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் ‘மாதே மலயத்வஜ பாண்ட்ய சம்ஜாதே’ என்று கமாஸ் வர்ணத்தில் தொடங்கி எடுத்த எடுப்பிலேயே களை கட்டத் தொடங்கி இருந்த ரேடியோ கச்சேரியைக் கேட்க முடியாமல் வேலை. தெலக்ஸ் வந்தால் என் கடமை உணர்வைப் பார்த்து மெச்சுவாள்.

மிடுக்காகத் தெருவில் நடந்து போனேன். தங்கப்பன் முதலாளி வீட்டில் ஏனோ அதிகபட்ச அமைதி தட்டுப்பட்டது. முன்ஹாலில் விளக்கு எரிந்து ரெண்டு நிமிஷத்தில் திரைக்குப் பின்னால் நிழலாக அவசர அசைவுகள். அப்புறம் விளக்கு அணைக்கப்படுகிறது.

சந்தேகமே இல்லை. பருப்பு, அரிசி, கோதுமை என்று ஏதோ பதுக்கப் படுகிறது. அத்தன பேரும் ரேஷன் கார்டை எடுத்துக்கொண்டு ரேஷன் கடை வாசலில் மணிக்கணக்கில் நின்று கிடைக்காமல் திரும்ப, யாரோ ப்ளாக் மார்க்கெட்டில் கொட்டிக் கொடுத்து வாங்கி அனுபவிக்க, அதெல்லாம் திசை திருப்பப்படுகிறது.

தெலக்ஸ் ப்ளாக் மார்க்கெட்டில் ஃபாரின் சோப் கூட வாங்குவாள். மொழுமொழு என்று அந்த முழங்கை. இல்லை அவளோடு எனக்கென்ன மனதில் சரசம். வருவதாகச் சொல்லி எல்லோரையும் ஏமாற்றிவிட்டாள்.

முக்கியமாக ரத்னாவை சமையல்கட்டில் மாங்குமாங்கென்று உழைத்து இத்தனை டிபனும் செய்து காத்திருக்க வைத்த கிராதகி அவள். அழகுப்பிசாசு.

கடமை அழைக்கிறது. தெலக்ஸ் எக்கேடும் கெட்டுப் போகட்டும்.

நான் தங்கப்பன் முதலாளி வீட்டுக் கதவைத் தொட அது திறந்து கொண்டது. வாசலில் நின்றிருந்த தங்கப்பன் வாங்க வாங்க என்று வாய்நிறைய வரவேற்றபடி என்னையும் தள்ளிக்கொண்டு வாசலுக்கு வந்தார். உள்ளே ஹாலில் வாசலுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு நாலைந்து பேர் தரையில் உட்கார்ந்து இலை போட்டு சாப்பிடுகிறது தெரிந்தது.

இங்கிருந்தே, விளம்பக்கொண்டுபோன சப்பாத்தியும், வாசனை ரூபமாக வெஜிடபிள் குருமாவும் என் புலன்களுக்குத் தட்டுப்பட்டன.

‘ஒண்ணுமில்லே ராமோஜி சார், நம்ம கடை, தெருவைப் பார்த்து இருக்கறது அவ்வளவு நல்லதில்லேன்னு ஜோசியர் அண்ணன்தான் சொன்னார். முகப்பிலே சின்னதா ஒரு பிள்ளையார் கோவில் கட்டி அதுக்கு சின்னதா இன்னிக்கு கும்பாபிஷேகம்... ரொம்ப நெருங்கிய உறவுக்காரங்க, சிநேகிதங்களுக்கு...’

பார்ட்டி வைக்கிறீங்களா என்று கடமை தவறாத ஏஆர்பி வார்டனாகக் கேட்டேன். பிரசாதம் என்று திருத்தினார்.

எந்தப் பிள்ளையார் சப்பாத்தி – விஜிடபிள் குருமா பிரசாதம் ஏற்றுக்கொண்டு அருள் பாலிக்கிறார் என்று கேட்க நாக்கு நுனிவரை வந்த கேள்வியை அடக்கிக்கொண்டு வெளியே வந்தேன்.

‘பிரசாதம் வாங்கிட்டுப் போங்களேன்’ என்று தங்கப்பன் முதலாளி சொன்னது காதில் விழாததுபோல் மிடுக்காக வாசலுக்குப் போனேன்.

கடமை தவறாத ஏஆர்பி வார்டனாக விசில் ஊதிக்கொண்டு இரண்டு ரவுண்ட் அடிப்பதற்குள் நாலு தடவை ஜோசியர் தட்டுப்பட்டு, ஏதாவது தெரிஞ்சுதா என்று கேட்டார்.

ஜப்பான் விமானம் குண்டு போட வந்தால் கூட அவருக்கு நியூஸ் ஆகாது. அற்ப சங்கைக்குக்கூட ஒதுங்கமாட்டாமல் அவரை புலனடக்கி நிறுத்தி, எதிர்பார்க்க வைத்துக் கட்டிப் போட்டிருக்கிறாள் புவி.

யார் வீட்டு ரேடியோவிலோ அரியக்குடி நேர்த்தியாக ‘எல்லே இளங்கிளியே’ என்று பியாகடை ராகத்தில் திருப்பாவை விஸ்தாரமாகப் பாடும் சத்தம், அமைதியான ராத்திரியில் காற்றில் கலந்து கேட்டது. ‘வல்லை உன் கட்டுரைகள், பண்டே உன் வாயறிதும்’ என்ற வரிகளில் பியாகடை ராக முத்திரையைக் காட்டி, மழைக்கால ராத்திரியில், மார்கழி காலைப் பொழுதைக்கொண்டுவந்து நிறைக்கும் அரியக்குடியின் மாயாஜாலத்தை ரசித்தபடி ரவுண்டில் நடக்கும்போது குடை நினைவு வந்தது.

தங்கப்பன் முதலாளி வீட்டு வாசல் கதவண்டை வைத்ததை எடுக்க எப்படி மறந்து போனேன்? நாளைக்கு சாவகாசமாக எடுத்துக் கொள்ளலாமா?

வேண்டாம், நிறையப் பேர் புழங்கும் இடம். விட்டுவிட்டு வந்தால், கடத்தலுக்கு என் கல்யாணக் காசியாத்திரைக் குடையும் துணை போகலாம்.

உடனே மீண்டும் அங்கே போனேன். ஆள் நடமாட்டம் அதிகமாகத் தெரிந்தது. பிள்ளையார், சப்பாத்தி, பராட்டா என்று கதைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக ஏதோ நடக்கிறது அங்கே.

குடையை விட்டுட்டுப் போயிட்டேன் என்று தங்கப்பனைப் பார்த்து உரக்கச் சொல்லிவிட்டு கதவுப் பக்கம் போக, உள்ளே முன் அறையில் விளக்கெரிந்தது. வரிசையாக நாற்காலி போட்டு பத்துப்பேர் அந்த விஸ்தாரமான ஹாலில் தர்ம சங்கடத்தோடு உட்கார்ந்து கொண்டிருக்க, நாலு பேர் அதிலிருந்து எழுந்து ஹாலுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். அங்கே சாப்பிட்டு முடித்த நாலு பேரும் காப்பி தம்ளர்களோடு வெளியே வந்துகொண்டிருப்பதையும் பார்த்தேன்.

ஹால் விளக்கும் முன்ஹால் விளக்கும் எரியாமல் அணையத் தெருவே இருட்டில். கரண்ட் போயிருக்கிறது.

‘சாரி ராமோஜி சார், கோயில் கட்டினது, எனக்கு அறுபது வயசு நிறைவு, குரோம்பேட்டையிலே இன்னொரு வீடு வாங்கிப் போட்டதுன்னு எல்லாத்துக்கும் சேர்த்து ப்ரண்ட்ஸ் சின்னதா பார்ட்டி கேட்டாங்க. அப்படி இப்படி ஒரு டஜன் நெருங்கின சிநேகிதங்களை அழைக்க வேண்டிப் போச்சு... உங்களை அடுத்த பந்தியிலே...’

அவரைக் கைகாட்டி நிறுத்தினேன். தங்கப்பன் முதலாளி வீட்டுத் தோட்டத்தில் ஏதோ வெளிச்சம்விட்டுவிட்டு வந்தது. தடதடவென்று வாசலில் இருந்த மாடிப்படிக்கட்டு மெல்ல அதிரும் சத்தம்.

நான் குடையோடு வெளியே வந்து பார்க்க, இப்போது பக்கத்து குமாஸ்தா வீட்டு மொட்டை மாடியில் விளக்கு வெளிச்சம். தொப்பென்று இங்கே ஏதோ விழுகிற சத்தம். மூட்டை என்று அனுமானித்தேன். என்ன மூட்டையோ?

ஒன்றல்ல, ரெண்டோ மூணோ விழுந்தது. கீழே மோட்டார் ஸ்டார்ட் செய்யும் சத்தம். மினிவேனோ ட்ரக்கோ டொரடொர என்று கியர் விழுந்து கனைத்துக்கொண்டு ஓடும் சத்தம். நான் குடையோடு மாடிப்படி ஏறி ஓடினேன்.

ஹெட்லைட் இல்லாமல் அந்த வாகனம் இருட்டில் ஓடுவது எந்தப் பக்கம் என்று தங்கப்பன் முதலாளி வீட்டு மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவரைப் பிடித்தபடி எக்கிப் பார்க்க, பிடி நழுவி விழுந்து கொண்டிருந்தேன்.

நினைவு திரும்பிக் கண் திறந்து பார்த்தேன். என் படுக்கைக்கு வலது பக்கம் ரத்னாவும், இடது பக்கம் தெலக்ஸ் புவனாவும் உட்கார்ந்து என்னையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

‘நல்லவேளை அடிபடலே... ஊமைக் காயம்தான்... மயக்கமும் தெளிஞ்சாச்சு... எதுக்கும் இருக்கட்டும்னு ஒரு தூக்க மாத்திரை கொடுத்திருக்கேன்... தூங்கினா விட்டுடுங்க... காலையிலே ஜம்முனு எழுந்திருச்சிடுவார்’

டாக்டர் நாயர் பெரிய மீசையை நீவிக்கொண்டு ரத்னாவையும் தெலக்ஸையும் பார்த்துச் சொன்னார். நான் அவர் மீசை மறைத்ததை எக்கிக் கடந்து ரம்பையையும் மேனகையையும் பார்வையால் அள்ளிப் பருகினேன்.

‘சாரி சார், ஆறரை மணிக்கு உங்க வீட்டுக்கும் ஜோசியர் வீட்டுக்கும் போய்ட்டு வரலாம்னு கிளம்பினா, பெரிய கை ப்ரட்யூசர் ஒருத்தர் பம்பாய்லே இருந்து ப்ளேன் இறங்கி நேரா வந்துட்டார். இந்துஸ்தானி டாக்கி பண்ணு பம்பாய்க்கு வந்துருங்கறார். அவர்கிட்டே நல்ல வார்த்தை சொல்லி, நாளைக்கு தீர்மானம் சொல்றேன்னு வாக்கு கொடுத்து கிளம்பறதுக்குள்ளே எட்டு மணி ஆயிடுச்சு... நாளைக்கு போகலாம்னுச்சு சித்தி. ஐயோ காத்துக்கிட்டிருப்பீங்களே... போய்ட்டு வந்துடறேன்னு கிளம்பி வந்தா இங்கே நீங்க ஒரே களேபரமா காலை முறிச்சுக்கிட்டு கிடக்கீங்க... நாயர் டாக்டர் எங்க டாடிக்கு ப்ரண்ட்... நானும் ரத்னா அக்காவும் கூப்பிட்டதும் வந்துட்டார்...’

தெலக்ஸ் நீளமாகப் பேசினாலும் ஒரு வார்த்தையும் கொட்டாவி வரவழைக்கவில்லை. ரத்னா அக்கா. இது போதும் இப்போதைக்கு எனக்கு.

ரத்னா கரைத்தாற்போல் ரசஞ் சாதம் கொடுக்க, தெலக்ஸ் புவனா ரொம்பப் பழகியவளாக சமையல்கட்டுக்கு நடந்து சுட்ட அப்பளத்தை ரத்னா கையில் இருந்து பறித்து வாயில் திணித்துக்கொள்ள, ரத்னா சிநேகிதத்தோடு முகம் மலர்ந்து சிரித்தாள்.

ரம்பை, மேனகைக்கு சத்யநாராயணா பூஜை பிரசாதமும் மஞ்சள், தேங்காய், வெற்றிலையும் கொடுத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தபடி நான் அடுத்த உறக்கத்தில் ஆழ்ந்தேன்.

விடிந்தபோது எதுவுமே கனவில்லை என்று என் காலில் பேண்டேஜும் கொம்பு உடைந்து கிடக்கும் குடையும் சொல்லிக் கொண்டிருந்தன. ரத்னா குளித்துத் தலையில் வேடு கட்டிக்கொண்டு எனக்கு காபி எடுத்து வந்தாள்.

‘ஒரு சில்மிஷமும் இப்போ செய்ய அனுமதி கிடையாது. செஞ்சே ஆகணும்னா புது மாம்பலத்திலே கோபதி நாராயண செட்டி தெருவுக்குப் போங்க’, என்று பொய்க் கோபத்தோடு சொன்னாள்.

நேற்று என்ன ஆச்சு? நாலு தடவை கேட்டேன். ரொம்ப பிகு பண்ணிக் கொண்டாள் ரத்னா. ‘சரி, சொல்லாட்டா போ, நான் ஆபீசுக்கு கிளம்பறேன்’ என்று எழப்பார்க்க, மீண்டும் படுக்கையில் தள்ளினாள்.

‘நாயர் டாக்டர் இன்னும் ஒருவாரம் ரெஸ்டிலே இருக்கணும்னு மெடிக்கல் சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கார். உங்க ஆபீசுக்கு கேளப்பன் அண்ணன் மூலம் கொடுத்துவிட்டுடறேன்.’

ரத்னா சமையல்கட்டுக்குப் போவதற்குள் ‘ப்ளீஸ், என்ன ஆச்சுன்னு தெரிஞ்சுக்கலேன்னா தலையே வெடிச்சுடும்போல இருக்கு’ என்றேன்.

அவள் திரும்பி வந்து முக்காலியைப் போட்டுக்கொண்டு உட்காந்து, தலை துடைத்தபடி சொன்னதன் சுருக்கம் இது –

தங்கப்பன் முதலாளி கடை வீதியில் அவர் கடை முகப்பில் சிறியதாக கண் திருஷ்டி கணபதி கோவில் ஏற்படுத்தியது உண்மைதான். அதற்கான மணல், சிமிட்டி மூட்டைகளை வீட்டில் இருந்து எடுத்துப் போயிருக்கிறார். சில மணல் மூட்டைகள் இன்னும் அவர் காம்பவுண்டில்தான். மழையில் கொஞ்சம் நனைந்துவிட்டன அவை.

பிள்ளையாரை எங்கேயாவது திருடித்தான் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று ஐதீகம் இருப்பதாக சிநேகிதர்கள் சொல்ல, சோழி உருட்டி ஜோசியரும் ஆமோதிக்க, தங்கப்பன் முதலாளி மாம்பலம் பஸ் ஸ்டாண்ட் பக்கம் தெருவைப் பார்த்துக் கடை வைத்திருக்கிற இன்னொரு நண்பரோடு வாய்மொழி ஒப்பந்தம் போட்டுக் கொண்டாராம்.

அவரும் பிள்ளையார் கோவிலைத் தன் கடை முகப்பில் அமைத்த பிறகு ரெண்டு பிள்ளையார்களையும் ஒருத்தருக்கொருத்தர் 'திருடி' அவரவர் கோவிலுக்கு எடுத்துப் போகத் திட்டமாம்.

தங்கப்பன் முதலில் திருடிய பிறகு போனவாரம் ஒரு ராத்திரி தன் பழைய பிள்ளையாரை மண்டிக்கடை வேனில் மாம்பலம் அனுப்பினாராம். 'தெலக்ஸை நீங்க தரிசனம் பண்ணிட்டு வந்த ராத்திரி அது.' மணல் மூட்டைகள், மேடையும் சுவர்களும் வைத்துப் பூச மாம்பலம் போகவேண்டியது மழை காரணமாக அனுப்ப முடியாமல் தடைப்பட்டதாம்.

தங்கப்பன் முதலாளி, கெஸ்ட் கண்ட்ரோல் சட்டத்தின் மேல் அந்த மண்ணைத் தூவிவிட்டு விருந்து கொடுத்ததும் உண்மைதான். நாலு எட்டு இல்லை, மொத்தம் இருபது பேர். விஸ்தாரமான முன் ஹாலில் நாற்காலி போட்டு எல்லோரையும் உட்கார வைத்து, நாலு நாலு பேராக ஹாலில் சாப்பிட வைத்ததும் அவர் திட்டம்தான்.

காத்திருக்கும் நேரத்தில் சும்மா வாயை மென்று கொண்டிருக்க வேண்டாமே என்று சோடாவும், சும்மா சோடா தர வேண்டாமே என்று கொஞ்சம் பியரும், வெறும் பியர் மட்டும் வேண்டாமே என்று பிராந்தியும் அவர்களுக்கு ஊற்றிக் கொடுத்தாராம். முன்ஹாலில் நடமாட்டம் தெரியாமல் இருக்க விளக்கணைத்திருக்கிறார்கள்.

தோட்டத்தில் தெரிந்த விளக்கு இவர் வீட்டு விருந்துக்கு தொடர்பில்லாதது. இடந்தலை மிருதங்கச் சக்கரவர்த்தி வேலப்ப நாயக்கர் மருமகன்கள் கைவேலை அது. அவர்கள் அடுத்த வீடான குமாஸ்தா வீட்டு மொட்டை மாடிக்குத் தாவிப் போக தங்கப்பன் முதலாளி வீட்டு வாசல் மாடிப்படி அல்வா மாதிரி அமைந்துள்ளது.

மாடியில் மங்கையர் காத்திருக்க, இரண்டு காளையரும் ஜோடியோடு சற்றே இருக்கக், குறுக்கே போய் விட்டார் குடையோடு தங்கப்பன் முதலாளி வீட்டுக் காம்பவுண்டில் ஓடின ராமோஜி...

குமாஸ்தா வீட்டு மாடியிலிருந்து இறங்கி ஓடி, வாசலில் நிறுத்தி வைத்திருந்த, வேலப்பன் செகண்ட் ஹாண்டில் வாங்கி முட்டை மொத்த விற்பனை வியாபாரத்துக்காக பயன்படுத்த உத்தேசித்திருந்த டெம்போவில் இரட்டையர்கள் தப்பிப் போய்விட்டார்கள். போகிற அவசரத்தில் மணல் மூட்டைகள் சரிந்து காம்பவுண்ட் தரையில் விழுந்ததாம்.

‘நீங்க பார்த்தபோது கைப்பிடிச் சுவர் கைநழுவி, கீழே விழுந்த இடத்திலே மணல் மூட்டைகள் உங்களை மெத்தை மாதிரி ஏந்திக்கிட்டதாலே ஓர் அடி கூடப் படாம தப்பிச்சுட்டீங்க...’

அப்புறம் இதுவும் சொன்னாள் –

‘போன வாரம், குமாஸ்தாவின் பெண்கள் டைப் அடித்துப் பழகிய காகிதத்தைத் தரையிலே போட்டதை பொறுக்கி எடுத்துக்கிட்டு வந்து காட்டினீங்களே... அது உங்களுக்கு இல்லே... இன்னிக்கு இருட்டின அப்புறம் சந்திக்கலாம், ரூட் க்ளியர்னு சமிக்ஞை அது, நாயக்கர் வீட்டுப் பசங்களுக்கு.’

யார் சொன்னது?

விலு சொன்ன நம்பகமான தகவல் இது என்று சேர்த்துக்கொண்டு என் முகத்தைப் பார்த்தாள். நான் விலாசினியை ஏற்கெனவே ரூம் நெம்பர் மூன்றில் அடைத்திருந்த இடம் காலியாக இருக்க, அவள் ஆபீஸ் போயிருந்தாள்.

‘தெருவிலே நிறைய நடமாட்டம் இருக்கு... ராத்திரி சந்திக்க வரவேணாம்னு சொல்ல நினைச்சிருக்காங்க அந்தப் பொண்ணுங்க... அதான் நேற்றைக்கு அவங்க டைப் அடிச்ச பேப்பரை நழுவ விடாதது. நீங்க நடுவிலே புகுந்து, ஏற்கெனவே நழுவவிட்ட பழைய காகிதத்தைக் கொடுத்துட்டுப் போக, அவனுங்க குழம்பிப் போய், ஜதையை பார்க்க ராத்திரி போயிருக்காங்க... மீதியை உங்க பேண்டேஜில் காண்க.’

‘அப்புறம்?’, என்று கேட்டேன்.

‘தங்கப்பன் முதலாளி இதுவரை எதுவும் பதுக்கவும் இல்லே. கடத்தவும் இல்லே. ஏஆர்பி வார்டன் ராமோஜி ராவ்சாகேப் கண்ணுக்கு மறைச்சு, ஏகப்பட்ட சிநேகிதங்களுக்கு விருந்து கொடுத்தது தப்புத்தான்னு உங்க உலக மகா ஏஆர்பி வார்டன் தலைவர் ரிடையர்ட் ஹெட்மாஸ்டர் கிட்டே

மன்னிப்பு கேட்டாராம். அவர் ‘என்னை ஏன் கூப்பிடலே’ன்னு கோபப்பட்டாராம்.’

அவளோடு நானும் சிரித்தேன்,

‘சரி, நான் உங்களை ஒண்ணு கேட்கலாமா?’ ரத்னா பயமுறுத்தினாள்.

‘கேளு’ என்று தயக்கத்தோடு சொன்னேன்.

‘தெலக்ஸ் புவனா நேர்லே பார்க்க ரொம்ப சுமார்தான், கொஞ்சம் படகாமணி மூஞ்சி, தேங்காய்துருவி மாதிரி முன்பல்லுன்னு சொன்னீங்களே, அப்படி ஒண்ணும் தெரியலியே?’ ரத்னா கேட்க, சமாதானமாகச் சொன்னேன் –

‘நான் போயிருந்தபோது புது மாம்பலத்திலே கரண்ட் இல்லே. அதான் சரியா பார்க்க முடியலே’

‘நம்பணுமா?’

‘வேணாம்னா விட்டுடு.’ இரண்டு பேரும் சிரித்தோம்.

‘பிறகு?’

‘செய்திகள் முடிவடைந்தன... இனி நிலைய வித்வான் பிடில் வாசிப்பார்.’

ரத்னா என் கையை மடியிலிருந்து தட்டிவிட்டு முக்காலியில் இருந்து சாடி எழுந்திருந்தாள். அவளை வாசிக்க வாரியெடுத்து மடியில் போட்டுக்கொண்டேன். என்ன சத்தம் அங்கே என்று தெலக்ஸ் புவனா, மனதில் அவள் அறையில் இருந்து எட்டிப் பார்த்தாள்.

★★★

ஐந்து

# ஜப்பான் விமானம் குண்டு போட்ட இரவு – 1943 மதறாஸ்

இன்று நியூஸ் பேப்பர் வரவில்லை. இந்தியா முழுக்க ஒரு பத்திரிகையும் நேற்று அச்சாகவில்லை. காலைச் சுற்றின சனி தானே ஒழிந்து போனதாக, பேப்பர் வராத இன்றைய தினம் வெகு அமைதியாக இருந்தது. நான் எசகு பிசகாகப் பிடித்திருந்த ஷேவிங் ரேசரைக் கைதவறித் தரையில் போட்ட சத்தத்தில் பிராணசகி ரத்னாபாயை விழித்தெழ வைத்த சைலன்ஸ் அது.

விடா. பிளேடு பெயரைப் பார்த்தாலே பற்றிக்கொண்டு வருகிறது. சர்ஜிக்கல் எஃ்கு வைத்து செஞ்சது என்று பத்திரிகை விளம்பரம் சொல்லும். என்னமோ சத்ர சிகிச்சை – ஆபரேஷன் – செய்ய உண்டாக்கிய கூர்மையான பரிசுத்தமான கத்தியை உடைத்து உருக்கி அதே கூர்மையான ப்ளேட் பண்ணின மாதிரி பாவ்லா. எனக்கென்னமோ பழைய டிரங்கு பெட்டியை அறுத்து நெருப்பில் வாட்டித் தகடு ஆக்கியிருப்பானோ என்று சந்தேகம்.

ஷேவிங் சோப் இன்னொரு கண்றாவி. சலவை சோப்பால் முகம் அலம்பிய மாதிரி ஷேவிங் சோப் திட்டுத்திட்டாக அப்பும். அதைத் தடவி ரேசரால் இழுத்தால் ரத்தக் காயமும் சொரசொரவென்று பாதி வழித்துப்போட்ட சவரமுமாக முகம் கூடுதலாகச் சகிக்க முடியாமல் போகும்.

இந்த சனியன் சவரமே வேண்டாம் என்று தாடி வளர்த்துப் போனால் வங்காளத் தீவிரவாதிக்கு வால் பிடிக்கும் தமிழ்த் தாடிவாலா என்று ஆபீசில் மெமோ கொடுப்பார்கள். தேவையா?

யுத்தத்தைக் கை காட்டி என்ன எல்லாம் நம் தலையில் கட்டப்படுகிறது! எப்படி எல்லாம் ஆட வேண்டிப் போனது! வெறுத்துப் போய், கை தவறாமல் ரேசரைத் தரையில் வீசினேன்.

‘இத்தனை வயசான அப்புறமும் சரியாக நீட்டிப் பிடித்து ஆன காரியத்தை கவனிக்க முடியாதா?’ அர்த்தம் குழம்பி நான் மருள, தரையில் கிடந்த ரேசரைப் பார்த்தபடி தனக்கும் எனக்கும் முதல் தரமான காப்பி சேர்த்துக்கொண்டு வந்தாள் ரத்னா.

நரசு கம்பெனியார் ஸ்டூடியோ வைத்து சினிமா எடுக்காமல் காப்பிப் பொடி விற்பதிலேயே முழுக் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கிருபை செய்ய காலை நேரத்துக்கான தேவதையை நான் தொழுதேன்.

பேப்பர் வராத நல்ல காலை, நல்ல காப்பி. நல்ல பெண்டாட்டி. இந்த மகிழ்ச்சி நல்ல மனதில் இருந்து வடிவதற்குள் நல்ல ஆபீஸுக்கு நல்ல விதமாகக் கிளம்பவேண்டும் என்ற ஆசையை எல்லாப் பொழுதுக்கும் என் தேவதையான ரத்னாவிடம் சொன்னேன்.

பட்டணம்பொடி வைத்த பெரிய பீங்கான் ஜாடியிலிருந்து சின்ன ஜாடிகள் நாலைந்துக்கு இடம் மாற்றியபடி ரத்னா சொன்னது –

‘பாரத தேசமே வெள்ளையனே வெளியேறு–ன்னு சமுத்திரத்துப் பக்கம் விரல் நீட்டி சகலமான துரை, துரைசானிகளைக் கப்பலேறிச் சொந்த ஊரைப் பார்க்கப் போகச் சொல்லிக்கொண்டிருக்கிற நேரம். அந்தத் தகவலைப் பத்திரிகையிலே பிரசுரிக்கக் கூடாதுன்னு சட்டம் போட்டது சரிதானா? இதைக் கண்டிச்சு தேசத்திலே கன்யாகுமரியிலே இருந்து சிம்லாவரைக்கும் ஒரு பத்திரிகையும் வராத துக்க தினம் இன்னிக்கு. உங்களுக்கு என்ன விபரீத சந்தோஷம்?’

‘மெட்றாஸ் சர்க்கார் சட்டம் போட்டா, சிம்லா பத்திரிகை ஏன் வரக் கூடாது?’ என்று, அவள் மூக்கை நிமிண்டியபடி சும்மா வீம்புக்காகக் கேட்டேன்.

‘தேச துரோகி’ என்று அவள் ஒரு விரல் நீட்டிக் குற்றம் சாட்ட, அந்த விரலை மெல்லக் கடித்தேன். இதெல்லாம் இல்லாமல் இருக்க பத்திரிகை எப்பவும்போல் வந்திருக்கலாம் என்றாள் ஜாக்கிரதையாக விலகி அமர்ந்து.

கன்யாகுமரியிலிருந்து என்ன பத்திரிகை வருதாம்? நான் திரும்பச் சீண்ட சட்டென்று ‘குமரி’ என்று பதிலளித்தாள் அந்தப் பேதை. பேதை நான்தான். உள்ளூர்ப் பத்திரிகையே ஒழுங்காகப் படிக்காத ஞானசூனியம்.

குமரி எங்கே கிட்டியது அன்பே?

மாதர் சங்கத்தில் ஓர் உறுப்பினர் சரோஜினி தங்கம்மா நாஞ்சில் நாட்டுக்காரி. படித்துக் கொடுத்து வாங்கிக் கொள்வது வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி ஆகிய மகா எழுத்தாளர்களின் நாவல்கள் மட்டுமில்லை, குமரி போன்ற பத்திரிகைகளும்தானாம். பேப்பர்

கிடைக்காமல், விளம்பரம் இல்லாமல் வந்தாலும், அடர்த்தியாக ஒரு பக்கம் விடாமல் படிக்க அச்சுப் போட்டு வரும் அபூர்வப் பத்திரிகையாம் அது.

ரத்னா பத்திரிகைத் துறை பிரமுகர்போல் கருத்துச் சொன்னதை ஓரக்கண்ணால் களிப்போடு கவனித்தேன்.

‘புவிக்குட்டி செல்லம் எப்போ பம்பாய்லே இருந்து ஷூட்டிங் முடிச்சு வரா?’ நான் திக்குமுக்காடிப்போக ரத்னா என்னிடம் கேட்டாள்.

‘என்ன கொஞ்சல் பலமா இருக்கு?’ தேன்மழையில் நனைந்தபடி கேட்டேன். ரத்னாவுக்கு புவனா நல்ல அந்நியோன்யம்தான். இருந்தாலும் இத்தனை செல்லம் கொஞ்சி...

‘இது உங்க மனசுலே நீங்க சேர்த்துக்கறது... அதை நானே சொல்லிட்டேன்... சரிதானே?’

ரத்னா சிரித்தபடி என்னைப் பார்த்தாள். நிஜத்தைச் சொன்னால் எப்படி மறுப்பது? சும்மா இருந்தேன். அப்புறம் கூறினேன் –

‘இன்னும் ரெண்டு வாரம் புவனா பம்பாய்லேதான் கேம்ப்... பந்துலு சார் சொன்னது இது.’

ஜப்பான் விமானம் குண்டு வீசுவது இன்னும் மெட்றாஸில் பயமாகக் கவிந்துள்ளதால், சினிமா ஸ்டூடியோக்கள் எல்லாம் வேறே இடங்களுக்குப் போய்ச் சேர்ந்து சினிமா எடுக்கும் காலகட்டம் இது. படப்பிடிப்பைவிட, பிரயாணம் அதிக நேரம் எடுத்துக்கொள்வதாக புவனா சொல்லியிருந்தாள்.

‘வந்ததும் நம்ம வீட்டுக்கு டின்னர் சாப்பிட வரேன்னு சொல்லியிருக்கா புவனா... ஆபீஸுக்கு போன் பண்ணிச்சுன்னா ஞாபகப்படுத்துங்க...’

ரத்னா பெரிய ஜாடியை ஸ்டோர் ரூமில் ஜாக்கிரதையாக வைத்து விட்டு, அதன் குட்டிகள் போல இரண்டு சின்ன ஜாடிகளையும் உக்கிராணத்தில் அலமாரி ஓரமாக பேப்பர் விரித்து வைத்த மூலையில் இருத்தினாள்.

நான் பிரயோஜனமில்லாத சிந்தனைகளில் மனம் ஓட உட்கார்ந்திருந்தேன்.

க்விட் இண்டியா என்று சொல்வதைவிடத் தமிழில் அதை ஒத்துழையாமை இயக்கம் என்று சொல்வது இன்னும் வசீகரமானது. வெள்ளையனே வெளியேறு என்று எதுகை மோனையாக ஒரு வரி சொல்வது இன்னும் நேர்த்தியானது. ‘டூ ஆர் டை’ என்பதைத் தமிழில் ‘செய் அல்லது செத்து

மடி’ என்று ஆக்கினால் அது தடித்தோலையும் துளைத்துச் செயல்பட வைப்பது.

பேப்பர் வராவிட்டால் மனம் எப்படி எல்லாம் விரிவாகச் சிந்திக்கிறது. நாளைக்கும் ஒரு நாள் எல்லாப் பேப்பரையும் அடைத்துப் பூட்டி வைக்கட்டும். ரேடியோ இருக்கும்வரை அச்சுப் போட்டுவந்த வார்த்தையை ஒதுக்கி வைக்கலாம். இன்று ஆபீசுக்கு எந்தப் பரபரப்பும் இல்லாமல் போகலாம். பேப்பர் வராததன் காரணம் இல்லை இது. இன்னும் சுவாரசியமானது. ரத்னாவிடம் இதுவரை சொல்லாதது.

நான் குளித்துக்கொண்டிருந்தபோது வாசலில் பூம் பூம் என்று கார் ஹாரன் சத்தம் காதில் விழ, சாடி நொடியில் குற்றாலத் துண்டை இடுப்பில் சுற்றிக்கொண்டு, வந்தாச்சு என்று குரல் கொடுத்தபடி சொட்டச் சொட்ட நனைந்து ஓடி வந்தேன். ரத்னா, இதேது கோமாளித்தனம் என்று கையில் எடுத்த கீரை கடையும் மத்தோடு ஸ்தம்பித்து நின்று, பக்கவாட்டுத் தோற்றத்தில் அழகாக ஆச்சரியப்பட்டாள்.

‘ஆறுமுக ஆசாரியாரே, வந்தாச்சு. நீர் ஒன்பது மணிக்கு அப்புறமல்லவோ வருவதாகச் சொன்னீர்’ என்று கூறியபடி நான் அவிழத் தொடங்கிய ஈரத் துண்டோடு கிட்டத்தட்ட வாசல்வரை துண்டோடு போக, ஊஞ்சலுக்குப் பக்கம் இருந்து விரைந்து கண் இமைக்கும் நேரத்தில் ரத்னா முன்வாசல் கதவைச் சார்த்தினாள்.

‘என்ன ஆச்சு உமக்கு? குளிக்கப் பிடிக்கவில்லை என்றால் உமது உடம்பு சுபாவமாக எழுப்பும் நானாவித பரிமள கந்தங்களோடு வேலைக்குப் போம்... இல்லையோ, டெட்டால் கரைத்த வெதுவெது ஜலத்தில் கதர்த் துண்டை முக்கி உடம்பு துடைத்துக்கொண்டு கிளம்பும். அதுவுமில்லையோ, பொறுமையாக வேம்பாவிலிருந்து வெந்நீர் சேந்தி ஆனந்தமாக நீராடி வாரும். அதைவிட்டு, வீடு முழுக்க ஈரமாக்கிக்கொண்டு பாத்ரூமில் இருந்து ஆர்கிமிடீஸ்போல கண்டேன் கண்டேன் என்று பாதி நக்னனாக ஓடி வர என்னத்தைக் கண்டுபிடித்தீர்? உடம்பிலே பித்தம் அதிகமாகி ஏதேதோ செய்கிறீர்களோ.’

அரை மரியாதையில் அன்போடு மாதரசி கேட்டாள்.

‘குளியல் அறை தரையில் கஸ்தூரி மஞ்சள் தூளும், அரம்பையரின் ஸ்நானத்துக்கான வாசனைப்பொடியும் கலந்து கிண்ணம் நிறைய வச்சிருக்கே, தண்ணீர் விழுந்து அது முழுக்கத் உபயோகமில்லாத

கரைசலாகி விடுமே என்று உன்னிடம் சொல்லி கிண்ணத்தை அகற்றி தகுந்தபடி வெளியே வைக்கச் சொல்லத்தான் ஓடி வந்தேன்’, என்றேன்.

அது சரி, ஆறுமுக ஆச்சாரியார் நம் குளியலறைக்குள் ஏடாகூடமாக எப்படி வந்தார் என்று ரத்னா உடனே குறுக்கே புகுந்து விசாரித்தாள்.

‘இன்றைக்கு பேப்பர் இல்லையா, எதை எதையோ மனசு, சீட்டுக்கட்டை வைத்து மாளிகை கட்டுவது போல கட்டி நிறுத்துகிறது. இதற்கு நடுவில் ராயர் மிட்டாய்க் கடையும், பட்டணம் பொடிக் கம்பெனியாரும், ஆறுமுக ஆச்சாரியாரும் புகுந்து விட்டிருக்கிறார்கள்.’

நான் சொன்ன பதிலை அவள் கிஞ்சித்தும் ரசிக்கவில்லை.

‘என்னமோ போங்க, பித்தத்தோட ஆபீஸ் போனா, உக்கார்ந்து நாள் முழுக்கக் கணக்கு எழுத உடம்பிலே பலம் இருக்காது. பாதிக் கணக்குலே கோழிக் கிறுக்கலா ஏதாவது செஞ்சு வைக்கப் போறீங்க... சுக்குப்பொடி போட்ட வென்னீர்லே எலுமிச்சம்பழம் பிழிஞ்சு தரட்டா? ஹார்லிக்ஸ் பாட்டில்லே போட்டு எடுத்துப்போய், போக வர ஒரு மடக்கு குடிச்சா எந்தப் பிணியும் அண்டாது.’

அவள் இனிப்பும் உப்புமாக ஆசை காட்டிய எலுமிச்சை பானம் உடனடியாக என்னால் வேண்டாம் என்று மறுக்கப்பட்டது. கவர்னரோ டெபுடி கவர்னரோ சூப்பரிண்டெண்டோ மீட்டிங் என்று வெற்றிலை பாக்கு வைத்துக் கூப்பிட்டால், பாட்டிலோடு போய் நிற்க முடியுமா? அப்பர் டிவிஷன் க்ளார்க் யூ.டி.சி வேறே ஆகியிருக்கிறேன் நான்.

போன மாதம் சூப்பர் நியூமரரி ஆராவமுது, கவர்னர் துரை பார்க்க ஒரு பழைய நன்னாரி சர்பத் பாட்டிலில் திடமான வைக்கோல் நிறம் கொண்டதாக ஏதோ அடைத்துக்கொண்டுவந்து குடித்த மணியமாக இருந்திருக்கிறார்.

இது என்ன சமாச்சாரம் என்று ஆர்வத்தோடு துரை கேட்க, கருங்காலி என்று சொல்லியிருக்கிறார் நம்ம ஆராவமுது. மலையாள உச்சரிப்பில் ‘கரிங்காலி, எ சிம்பிள் டைஜெஸ்டிவ் வித் யூறிண் கொலர்’ என்று அரவிந்தாட்ச மேனோன் என்ற எப்போதும் சந்தனமும் வெற்றிலை பாக்கும் கலந்து வாடையடிக்கும் இன்னொரு சீனியர் குமாஸ்தா விளக்க, என்ன தோன்றியதோ துரை உடனே வேர்ஆஸ் (Whereas) என்று நைச்சியமாகத் தொடங்கும் சர்க்குலர் விடுத்தார். அதன் சாராம்சம் –

‘இதனால் அறிவிப்பது யாதெனில், யுத்த காலத்தில் மன அழுத்தம் குறைய ரோசரி, ருத்ராட்ச மற்றும் துளசி மாலையில் மணி உருட்டுத்தலும், மேஜையில் வைக்கும் சிறிய தெய்வீகத் திருப்படம் எடுத்துக்கொண்டுவந்து அவ்வப்போது தொட்டு நமஸ்கரிப்பதும் உத்தியோக ஸ்தலத்தில் பார்க்கக் கிடைக்கிறது. அதெல்லாம் தாராளமாக அனுஷ்டிக்க அனுமதி உண்டு. இப்படி இருக்க, சிறுநீரைப் பத்திரமாகப் பிடித்துக்கொண்டுவந்து ஆபீஸில் சகலரும் பார்க்கக் குடிப்பது நல்ல பழக்கம் இல்லை என்பதோடு அங்ஙனம் பானம் பண்ணுகிறவர்களுக்கும் அருகில் முகரும் தூரத்தில் இருக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் எண்ணற்ற ரோகங்களை வரவழைக்கக் கூடிய காரியம் இது என்பதையும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். கரிங்காலி என்ற மூத்திர பானத்தை இங்கே உடனடியாகத் தடை செய்கிறேன்.’

ஆராவமுதன் கருங்காலி இல்லாமல் சீரகம் போட்டுக் காய்ச்சிய வென்னீருக்கு இடம் பெயர்ந்திருக்கிறார். எனினும் சமீப காலமாக அவரை துரைகளோ மற்ற உயர் உத்தியோகஸ்தர்களோ காது குடைய குண்டூசி வாங்கக்கூட மீட்டிங் எனக் கூப்பிடுவதில்லை.

நான் எலுமிச்சை நீரோடு ஆபீசில் நுழைந்தால், குந்தி இருந்து கழிக்கும் பாம்பே கக்கூஸ்கள் இல்லாத பூமிக்கு என்னை நாடு கடத்தி விடுவாராக இருக்கக்கூடும். இதை அசங்கியம் கருதி ரத்னாவிடம் சொல்லவில்லை.

புடலங்காய்க் துவட்டல், தேங்காய்த் துவையல், கோதுமைச் சாதம் கொஞ்சம், அரிசிச் சாதம் கொஞ்சம், வீட்டுத் தோட்டக் காய்கறி அரிந்து போட்ட, அரைத்து விட்ட சாம்பார், தக்காளி ரசம், அரிசி அப்பளம், மாங்காய்த் தொக்கு என்று ரத்னா வழக்கம்போல் ஃபுல் பெஞ்ச் கச்சேரியாகச் சமைத்திருந்ததை நிதானமாகச் சாப்பிட்டதை அவள் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

‘இது என்ன மாயம்? என் சமையல் உன்னதமானது என்று உணர்ந்து கொண்டதால் அனுபவித்து சாப்பிட முடிவு செய்ததாக காக்கா வடை கதை எல்லாம் வேணாம். துண்டோடு சாப்பிட உட்கார்ந்து பாதி சாப்பாட்டிலே எழுந்துபோய் பேண்ட் போட்டு வருவீங்களே. அந்த கிறுக்குத்தனம் கூட இன்னிக்கு இல்லையே’ என்பதாக உதட்டோரச் சிரிப்போடு சொன்னாள். அவள் குறிப்பிட்டது கொஞ்சம் சிக்கலான என் சாப்பாட்டு நடைமுறைபற்றி.

முழுக்க அனுபவித்துச் சாப்பிட்டு கால்சராயும் முழுக்கைச் சட்டையுமாக ஆபீசுக்குக் கிளம்பினால், கால்சராயின் இடுப்பு எத்தனை சிரமப்பட்டாலும்,

பொத்தான் போட வளைந்து கொடுக்காது. பேண்ட் இடுப்பை இறுக்குகிறதால் அதாவது இடுப்பு பருத்துப் போனதால் உடுக்கக் கஷ்டம். அதாவது, சற்றே தொந்தி வந்திருப்பதால் சாப்பிட்டதும் பேண்ட்டை இடுப்பைச் சுற்றி வளைத்து உடுக்க பெரும் கஷ்டம்.

அதுவும் சாப்பிட்டவுடன், இரையெடுத்த வயிறு ஒரு மணி நேரமாவது உப்பலும் ஊதலுமாக பருத்திருக்கும்.

திருப்தியாகச் சாப்பிட்டு, சுலபமாக உடை உடுத்தி ஆபீஸ் போக, நான் கண்டுபிடித்த வழி குளித்துவிட்டு இடுப்பில் கட்டிய அதே துண்டோடு சாப்பிட ஆரம்பிப்பது. சாம்பார் சோறோ, மோர்க்குழம்பு பிசைந்த சாதமோ உண்டபின் எழுந்து பேண்ட்டை மாட்டிக்கொண்டு திரும்ப வந்து சுட்ட அப்பளத்தை உடைத்துப் போட்டுக்கொண்டு ரசம் சோறு சாப்பிடுவது, மறுபடி எழுந்துபோய் சட்டையை பேண்டுக்குள் விட்டுக்கொண்டு பொத்தான் போட்டுக்கொண்டுவந்து தயிர் சாதமும் கரகரவென்று ஒரு குத்து கிடாரங்காய் ஊறுகாயும், தொக்கும், ஒரு கரண்டி சந்தேகத்துக்குச் சாம்பாருமாக விழுங்குவது என்று வயிற்றை முறியடிக்கும் வழக்கம்.

அது இல்லாமல் போனால், ஆபீஸ் கிளம்பும் கடைசி நிமிடத்தில் பேண்டோடு தோற்றுப் போகும் யுத்தம் புரிய வேண்டி வரும். சைக்கிள் ஓட்டிப் போவது கடினம். ட்ராமில் குதித்து ஏறி இருந்து குதித்து இறங்குவது இன்னும் கடினம். உண்ட மயக்கம் சின்னத் தூக்கமாக எட்டிப் பார்க்கும் பொழுது அது.

இன்றைக்கு அதெல்லாம் தேவையில்லை. இன்று மட்டுமில்லை. இன்னும் ஒரு மாதமோ இரண்டு மாதமோ, இல்லை ரிடையர் ஆகும் வரையோ, வாகன யோகம் எனக்கு வாய்த்திருக்கிறது. பகார்ட், தல்போட், ஆஸ்டின் கார் அல்லது வில்லி ஜீப் என் வீட்டு வாசலுக்கு வந்து இன்று முதல் என்னைக் கூட்டிக்கொண்டு போகப் போகிறது தினமும். ஹிஸ் மெஜஸ்டி சர்க்கார் எனக்களிக்கும் மரியாதை.

அசோகா பாக்குப் பொட்டலத்தைப் பிரித்து வாயில் போட்டுக் கொண்டபோது ரத்னா கொஞ்சம் வாடிய ஒரு வெற்றிலையில் குல்கந்து வைத்துக் கொடுத்தாள்.

‘கொழுந்து வெற்றிலை விற்ற ராஜாபாதர் பரங்கிப்பேட்டையோட போயாச்சு. இது போன வாரம் வாங்கினது. ஈரத் துணியிலே சுத்தி வச்சிருந்தேன்...

நாளைக்கு போட வேணும்னா ஆபீஸ்லே இருந்து வரும்போது ப்ராட்வேயிலே வெற்றிலை கிடைக்குதான்னு பாருங்க.’

அவள் எச்சரிக்கை மணி ஒலித்தாலும், எப்படியாவது சமாளிப்பேன் என்ற நம்பிக்கையும் சிரிப்பாக வெளிப்பட்டது.

எதெதுக்கோ ரேஷன் வைக்கிற சர்க்கார், வெற்றிலை பாக்கு புகையிலைக்கு ஒரு ரேஷன் கடை திறந்தால் என்ன என்று சிந்தனையில் ஈடுபட்டிருக்க, வாசலில் பாம் பாம் என்று கார் ஹார்ன் சத்தம். எட்டிப் பார்த்தேன்.

ஆறுமுக ஆசாரிதான். ஆஸ்டின் காரில் வந்திருக்கிறார். பிரிட்டிஷ் ராஜாங்க சின்னம் பொறித்த பச்சை நிறம் பூசிய வண்டி அது.

‘ராஜா மாதிரி பின்னாடி உக்காந்துட்டு வாங்க ராமோஜி சார்.’

ஆறுமுகம் ஆசாரியார் சண்டைக்கு வந்த மாதிரி, சத்தம் போட்டார். தெருவில் இன்னும் சில வீடுகள் ஜப்பான் விமானம் குண்டு வீசும் பயத்தில் பூட்டியிருக்க, மற்றவற்றில் யுத்த பயம், சாவு பயம் இல்லாமல் மெட்றாஸ் மனதே என்று ஒட்டிக்கொண்டிருந்த அத்தனை பேரும் என்ன சங்கதி என்று அறிய அவரவர் வாசலுக்கு வந்து விட்டிருந்தார்கள்.

நான் ரத்னாவிடம் சொன்னேன் –

‘ஆறுமுக ஆசாரியார் பிறந்தபோது நல்லா சத்தமா பேச வரணும்னு அவங்க வீட்டுலே ஒரு பலம் கோரோஜனையை பால்லே கரைச்சு கொடுத்தாங்களாம். அது போதாம சுமார் சைஸிலே ஒரு கடப்பாரையும் முழுங்கிட்டாராம். வால்யூம் கண்ட்ரோல் அவுட். அவராலே சத்தத்தை குறைக்கவே முடியாது.’

அவர் கார் ஸ்டீரிங்கில் இருந்து கையை எடுத்து ரத்னாவை நமஸ்கரித்தபடி சொன்னது இது –

‘எல்லாம் சரிதான். பெயரை ராங்கா சொல்லிட்டார் சார். நான் ஆறுமுக ஆசாரி இல்லே. ஆறுமுகத்தா பிள்ளை.’

ஓ சாரி ஆறுமுகம் பிள்ளை என்று ஜகா வாங்கினேன். வண்டியைக் கிளப்பிக்கொண்டே ஆறுமுகம் பிள்ளை இல்லை, ஆறுமுகத்தா பிள்ளை என்றார்.

நான் நிதானமாக சரியான பெயரைச் சொல்லி, பின்னால் ராஜா மாதிரி உட்கார எனக்கு வராது. அவர் பக்கத்திலேயே ஒண்டிக்கொண்டு வருவதில் ஆறுமுகத்தா பிள்ளையாருக்கு பிரச்னை ஏதும் உண்டோ என்று விசாரித்தேன்.

'பாருங்க மறுபடி தப்பா சொல்றீங்க. அது ஆறுமுகத்தா பிள்ளைவாள், பிள்ளையார் இல்லே.'

இன்னிக்குப் பூரா ஆறுமுகம் வகையறா பெயரைச் சரியும் தப்புமாக உச்சரித்தே நாள் நகரப் போகிறது என்ற பயம் பிடித்துக்கொள்ளப் பின்னால் உட்கார்ந்து பேச்சை மாற்றினேன்.

'கார் நல்லா இருக்கு.'

'பின்னே, நல்லா வாட்டர் வாஷ் செஞ்சு, முழு டாங்க் இஸ்பிரிட் போட்டு, விளக்கை, போனட்டை எல்லாம் தகதகன்னு மின்ன வச்சுட்டேன். பத்திரமா இருக்குதான்னு நாம் போய்ச் சேர்றதுக்குள்ளே தெரிஞ்சிடும். போய்ச் சேர்றது என்ன, போறதே இதுவரை காணாத வேறே எங்கேயோ இருக்கும், இல்லையா?'

ஸ்டீரிங் வீலில் இருந்து கை எடுத்து அவசரமாகக் கும்பிடு போட்டு என் வயிற்றில் திகிலைக் கிளப்பினார் அவர்.

எனக்கும் தெரிந்ததுதான் என்றாலும், ஆறுமுகம் பிள்ளை, சரி வேண்டாம், பிள்ளையார் டிரைவர் என்னை தினமும் ஆபீசுக்குக் கூட்டிப் போகப் போவதே கவர்னரும் பிற துரைகளும் இந்த வாகனத்தை உபயோகிக்கும் முன் அதில் எந்த அபாயமும் இல்லை என்று நிச்சயப்படுத்திக்கொள்ளத்தான்.

எப்படி பழங்கால அரசர்கள் சாப்பிடும் முன் சாப்பாட்டை சுவைத்து சாப்பிட்டு கல்லுக் குண்டு மாதிரி உருள ஒருத்தனுக்கு சம்பளம் போட்டுக் கொடுத்தார்களோ அதுபோல இங்கே கார் பாதுகாப்பை உறுதி செய்ய நான்.

இதை ரத்னாவிடம் சொன்னால் முதலில் அந்த கார் உபசாரத்தைத் தூக்கி குப்பையில் எறியுங்கள் என்று சத்தம் போடுவாள். வேண்டாம். ஓடுகிறவரை ஓடட்டும்.

இந்தக் காரை யாரெல்லாம் உபயோகிக்கிறார்கள் என்று பிள்ளை டிரைவரிடம் விசாரித்தேன். கவர்னர் ஆர்தர் ஹோப் துரை எப்பவாவது குஷி

கிளம்பினால் காரை ஓட்டிக்கொண்டு ரேஸ் கிளப் போவார் என்று தெரிந்தது. குதிரை ரேஸில் பைத்தியம் பிடித்ததுபோல் ஈடுபாடு உள்ள மனுஷர் அவர்.

அவரைத் தவிர இன்னும் இரண்டு துரைகளின் பெயர்களைச் சொன்னார். அதில் ஒருத்தர் எவாகுவேஷன் நேரத்தில் மெட்றாஸ் மிருகக் காட்சி சாலைக்கு யமனாகப் போனவர். மிருகங்கள் எல்லாம் எவாக்குவேஷன் நேரத்தில் ஊருக்குள் வந்து வழியோடு போகிற யாரையும் அடித்துத் தின்று விடும் என்ற பயத்தால் அவருக்கு அரசாங்க அனுமதி கொடுத்து ராத்திரியோடு ராத்திரியாக வேலையை முடித்து வர அனுப்பியிருந்தார்கள்.

ரிப்பன் கட்டடத்துக்கு பின்னால் மிருகக் காட்சி சாலையில் வாசல் கதவை அடைத்துப் பூட்டிவிட்டு, டார்ச் விளக்குகளோடு நாலு காவலாளிகள் கூட நடந்து வர, சிங்கம், புலி, சிறுத்தை, கரடி, கொரில்லா இப்படி ஒவ்வொரு விலங்காக கம்பி வழியே துப்பாக்கியால் துடிக்கத் துடிக்கச் சுட்டுக் கொன்ற படுபாவி அந்த வெள்ளைக்காரன்.

காண்டாமிருகத்தையும் நீர்யானையையும் கொல்ல காவல்காரர்களும் துப்பாக்கிகளால் சுட்டார்கள் என்று தகவல். அது மட்டுமில்லை, குட்டி யானையோடு அம்மா யானையையும் சேர்த்து மத்தகத்தில் குறி பார்த்துச் சுட்டுக் கொன்ற பாதகன் அவன்.

மிருகக் காட்சி சாலை உள்ளே இருந்த கவரிமான், புள்ளிமான் என்று அத்தனையையும் வேனில் ஏற்றித் தூக்கிப் போய் அடுத்த ஒரு மாதம் எல்லா வெள்ளைக்காரன் வீட்டிலும் மான்கறி, சமைத்து, கபாலத்திலிருந்து கொம்பு முளைக்கும் அளவு தின்று தீர்த்ததாகத் தகவல் வந்தது.

குரங்குகள் மட்டும் தப்பித்து திருப்பதி பக்கம் ஓடி விட்டதாக நிம்மதி தரும் செய்தியும் வந்தது.

இந்தக் கொலைகாரனுக்குக் கொஞ்சமும் குறையாத இன்னொரு பாபாத்மா காரில் தினசரி வரப் போகிற இன்னொரு தடியன். இவன் மெட்றாஸ் தெருவில் அலைந்த லைசன்ஸ் இல்லாத நாய், கிழட்டு மாடு, வழி தவறிய வெள்ளாடு என்று எல்லா மிருகங்களையும் வர்ஜாவர்ஜமில்லாமல் கொன்று, மிருகக்காட்சிசாலை சிங்கத்துக்கும் புலிக்கும் அந்த மாமிசத்தைச் சாப்பிடப் போட்டவன். நாய் மாமிசம் சாப்பிடுகிற வன விலங்குகள் மதறாஸில்தான் இருந்திருக்கும்.

யானையும் காண்டாமிருகமும் மாமிசம் தின்னாது என்று யாரோ சொல்ல, யுத்தகாலத்தில் கிடைக்கிறதை வைத்துத்தான் ஜீவிக்க வேண்டும் என்று யானைக்கு புத்தி சொன்ன அபூர்வ புத்திசாலி இவன்.

‘சாமிகளே, கோட்டைக்கு வந்தாச்சு. கொடி பிடிச்சு நடந்து போங்க.’

பிள்ளையார் ஓரமாக நிறுத்தினார். ஓரக் கண்ணால் பார்த்தேன். இரண்டு மூன்று உத்தியோகஸ்தர்கள் போகிற போக்கில் அலட்சியமாக என்னைப் பார்த்து மூக்கைச் சிந்தி எறிந்து சுவரில் விரலைத் துடைத்துப் போனமாதிரி இருந்தது. நான் இறங்க முற்பட்டேன்.

‘சாமிகளே, இந்தாங்க, கையெழுத்து போடுங்க’ என்று ஒரு நூறு பக்க நோட்புக்கை நீட்டினார் ஆறுமுகத்தா பிள்ளை.

‘கையெழுத்தெல்லாம் போடணும்னு யாரும் சொல்லலே. தினம் காலையிலே ஆபீஸ் வர கார் அனுப்பறோம்னுதான் பேச்சு அண்ணாச்சி’ என்றேன்.

‘அதை எனக்குச் சொல்லலியே, தம்பியாப்பிள்ளே. துளசிங்க முதலியார்வாள் நேத்து கார் சாவியைக் கொடுத்தபோதே நோட்டுப் புத்தகம் வாங்கி அதையும் சேர்த்துத்தான் கொடுத்தார். தினம் என்ன என்ன செய்யணும்னு வேறே சாங்கோபாங்கமா சொல்லி இருக்கார்’, பிள்ளையார் வெளியே வந்து எனக்கு முன்னால் கொஞ்சம் ஒதுங்கி மரியாதையாக நின்றார்.

‘என்ன என்ன செய்யணும்?’

இன்னிக்கு ஆபீஸ் ஐந்து பத்து நிமிஷம் தாமதமாகப் போனால் பரவாயில்லை. துரை காலைக் கழுவிக் குடிக்கிற இவர்களாச்சு, நானாச்சு... துளசிங்கம் முதலியார் போன ஜன்மத்தில் இருந்து ஜூனியர் குமாஸ்தாவாகவே இருக்கப்பட்டவர். அவர் என்னை அதிகாரம் செய்வதாவது.

‘காலையிலே டெப்போ போகணும், கவுர்மெண்ட் காரெல்லாம் ட்ராம் கார்களோடதான் நிப்பாட்டி வச்சிருக்கு. டிப்போவிலே இருபத்திநாலு மணி நேரமும் காவல் இருக்கும்கறதாலே பாதுகாப்புன்னு இந்த ஏற்பாடு. போய் காரைத் திறந்து சீட், ஸ்டீரிங்க், ப்ரேக் எல்லாம் இருக்கா, அததோட இடத்தில் அதது இருக்கான்னு செக் பண்ணணும். இஸ்பிரிட்டு இருக்கான்னு டேங்கைத் துறந்து பாத்துக்கணும்.’

‘இஸ்பிரிட்டா?’

‘ஆமா இல்லாட்டி பெட்ரோல் ஐயங்கார் பம்புலே போய் போட்டுக்கிட்டு சீட்டு வாங்கிட்டு வந்துடணும். அப்புறம் அதை ட்ரஷரியிலே கொடுத்துட்டு வந்தா போதும். ஐயங்காருக்கு காசு போயிடும்.’

இன்னும் இருக்கிறது என்று கையமர்த்தித் தொடர்ந்தார் –

‘இஸ்பிரிட் இருந்தாலும் இல்லேன்னாலும் சீட் கீழே, பானட் உள்ளே, டாங்கு ஓரம், பின்னாடி டிக்கியிலே எல்லாம் தரோவா செக் பண்ணிடணும். வெடி குண்டு, குடுக்கை ஏதும் இருந்தா உடனே பக்கத்துலே போலீஸ் ஸ்டேஷன்லே சொல்லணும். அவங்க இருக்கட்டும் போய்ட்டு வாங்கன்னு அனுப்பி வைக்கலாம். குண்டு இருந்தா, ஆபீஸ் வாசல்லே நிறுத்தி வச்சு பிகில் ஊதி ஆர்ப்பாட்டம் பண்ணி வெளியே எடுக்கவும் செய்யலாம். குண்டு இல்லேன்னு தெரிஞ்சா கார்லே அன்னிக்கும் அடுத்த நாளும் ஒரு கான்ஸ்டபிள் கூடவே வருவார்.’

இதுலே நான் எங்கே வரேன் என்று குழம்பிப்போய்க் கேட்டேன்.

‘நீர் இல்லாமலா, கல்யாண மாப்பிள்ளையே நீர்தான்... தினம் உங்க வீட்டுக்கு வந்து உம்மை வச்சு ஓட்டிப் போகணும். கார் உள்ளாற குண்டு இருந்து வெடிச்சா நம்ம ரெண்டு பேருக்கும் கைலாச பதவி கிடைச்சுடும்... விஷ வாயு குடுக்கை இருந்தா, எனக்கு ஏதொண்ணும் செய்யாது. மூக்கு வீக்கு எனக்கு. உமக்கு அப்படி இல்லே. ரொம்ப நாசுக்கானது. அப்படித்தான் துரை சொன்னாரு...’

சமய சந்தர்ப்பம் தெரியாமல் எனக்கு பேருவகையும் பெருமையும் ஏற்பட்டது.

பின்னே இல்லேயா? ரத்னா பாய் பொடிபோட்டு பொடி போட்டு என் மூக்கையும் வாசனை பிடிப்பதில் கூர்மையானதாக்கி இருக்கிறாள். ஆனால் இது எப்படி அந்த கேடுகெட்ட ஜூனியர் துரைக்குத் தெரியும்?

‘விஷ வாயு இருந்து மூக்கிலே குத்தினா நீங்க உடனே மயக்கம் போட்டுடுவீங்க... இல்லையோ, நாக்கு தொங்கி மூஞ்சி விகாரப்பட்டு வைகுந்தம் போயிடுவீங்க... அப்போ நான் ஓரம் கட்டி வண்டியை நிறுத்தி...’

போதும் என்றேன். நோட்புக் பத்தி சொல்லலியே என்று பிள்ளையாரே தகவல் பரிமாற முன்வந்தார்.

‘தினம் நீங்க ஆபீஸ் போய்ச் சேர்ந்ததும், வண்டியிலே குண்டு இல்லே, விஷ வாயு இல்லே... நான் இன்னிக்கு சவாரி வந்து இன்னும் உயிரோடு இருக்கேன்னு கையெழுத்து போடணும் தேதி போட்டு. அதைக் காட்டினால்தான் பெரிய துரை, சின்ன துரைங்க வண்டியிலே ஏறுவாங்க.’

எனக்கு வகைதொகை இல்லாமல் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டேன். கோபத்தில் சாமியாடி, நாலு நல்ல வார்த்தையைத் துப்பித் தாண்டவம் ஆடலாம்தான். ஆனால் மாதம் பிறந்ததும் சம்பளம் கிடைக்காது. தடித்தோல் இருந்தால் சம்பளம், ப்ரமோஷன், அந்தஸ்து என்று எல்லாம் தானே வந்து சேரும். ஆறாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி நீடூழி வாழ்க. கழிந்துவிட்டு குண்டி துடைத்துப் போடும் அவருடைய பட்டாளத்தின் கடைக்கோடியில் நிற்கிற இந்த படுபாவிகளும் கட்டுப்பாடில்லாமல் காகிதம் கிடைத்து வாழ்க. இப்படித் துதித்துப் போனால் நானும் ரத்னாவும் திண்டாட்டம் இல்லாமல் ஜீவித்திருக்கலாம்.

பிள்ளையாரே எங்கே கையெழுத்து போடணும்? ஒண்ணு போதுமா?

ஆபீசில் வேறு யாரும் வந்திருக்கவில்லை. இன்றைய கார் சவாரி பற்றிய கிண்டலும், கேலியும், பாராட்டும், அடுத்து என்ன ஆகும் என்ற ஆருடமும், வரப்போகும் புது வருஷ புரமோஷன்கள்பற்றி ஊகங்கள் என்று எல்லாமே கலந்து கட்டியாக மதியச் சாப்பாட்டு நேரத்தில் கேண்டீன் வாசலிலும், பின்னால் நின்று டெனார் சிகரெட் குடிப்பவர்கள் குழுவிலும், வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவுகிறவர்களின் பெருங்கோஷ்டியிலும் பரிமாறப்பட்டு விவாதிக்கப்படும்.

நான் இல்லாதபோது என்னைப்பற்றி என்ன விமர்சித்தார்கள் என்பதை வேறு யாரோபற்றி என் காதில் விழுந்ததை அவரிடம் பண்டமாற்று செய்து பெற்றுக்கொள்ளலாம். அதுக்கு இன்னும் ஆறு மணி நேரம் கடந்து பகல் சாப்பாட்டு வேளை வர வேண்டும்.

ஆபீஸ் ஆரம்பித்ததும் வயசான ஒருத்தர் தனக்குத்தானே பேசியபடி வந்து நின்றார். பென்ஷன் போடுகிற குமாஸ்தா என்பதால் வயதானவர்கள் எப்படி நடந்தாலும், என்ன பேச ஆரம்பித்தாலும், என்னிடம் அனுப்பி விடுகிறார்கள்.

இவருக்கு என்ன கஷ்டமோ? எங்கே இருந்து வந்திருக்கிறாரோ. அவர் பேச ஆரம்பிக்கும் முன் நானே அடியெடுத்துக் கொடுத்தேன்.

‘உடம்பு சௌகரியமா இருக்கீங்களா?’

‘கரகரன்னு போகாம அப்பப்ப மலபந்தம்... அதை விட்டா என் வயசுக்கு நல்லாத்தான் இருக்கேன் தம்பி.’

‘எத்தனை வயசு?’

‘அறுபத்திரெண்டு.’

‘அதெல்லாம் ஒரு வயசா?’

‘சரி அறுபத்து மூணுன்னு வச்சுக்குங்க.’

‘வச்சுக்கலாம். சொல்லுங்க வேறே என்ன விஷயம்?’ ’

‘இந்தாண்டை வந்தேனா சரி பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். இந்த பென்ஷன் இருக்கே?’

‘வரலியா?’

‘இன்னிக்கு கரகரன்னு.’

‘அதைச் சொல்லலே...பென்ஷன் வரல்லியா?’

‘அதெல்லாம் ஈஸ்வரன் கிருபையிலே தானே மாசா மாசம் வந்துக்கிட்டு இருக்கு தம்பி. செங்கல்பட்டுலே இருந்து வர்றேன். பென்ஷன் வந்து நான் வாங்கிக்க வரலேன்னா கூட கூப்பிட்டுவிட்டு கொடுக்கறாங்க.’

அப்ப என்னதான் பிரச்னை? அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். நான் உசிரோட இருக்கேனா என்று என்னைக் கேட்டார். நான் ஸ்தம்பித்துப் போனேன்.

குத்துக்கல்லாட்டம் ஒருத்தர் முன்னாலே உட்கார்ந்து, நான் உசிரோட இருக்கேனான்னு தன்னைப்பற்றிக் கேட்பதற்கு என்ன பதில் சொல்ல?

‘பிரமாதமா இருக்கீங்க. முக சவரம்தான் செஞ்சுக்கலேபோல இருக்கு.’

‘அது இருக்கட்டும்’பா... அடுத்த வாரம் தீபாவளி நேரத்துலே மழிச்சுக்கலாம்.’

‘செய்யுங்க.’

‘செய்ய என்னப்பா இருக்கு. நான் போன வருஷம் நவம்பர் எட்டாம் தேதி உயிரோடு இருந்தேனா? அப்போ என்ன ப்ரூப் அதுக்கு?’

பெரியவர் கேட்டார். நான் சும்மா இருந்தேன்.

‘டிரஷரியிலே நான் போன நவம்பர்லே உயிரோடு இருந்ததா சர்ட்டிபிகேட் கேக்கறாங்கபா.’

நான் அவரை உட்காரச் சொல்லிவிட்டு மேஜை டிராயரில் இருந்து கரகரவென்று கையால் செய்த காகிதத் தாளை எடுத்தேன். மசிப்பேனாவை எடுத்து கொஞ்சம் பெரிய எழுத்துகளில் எழுதினேன் –

‘இந்தச் சான்றிதழ் ஸ்ரீமான் கண்டனூர் ராம.சோம. ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை பென்ஷன் ஆபீஸ் சீனியர் உத்தியோகஸ்தனான பத்மநாப ராவ் ராமோஜிராவ் வழங்கியது. மேற்படி ராம.சோம மதறாஸ் ராஜதானி குடிநீர் விநியோக இலாக்காவில் சீனியர் குமாஸ்தாவாக வேலை பார்த்து 1942 ஜனவரியில் ரிடையர் ஆனவர். அவரை ராமோஜி ஆன நான் அவர் ரிடையர் ஆன டிசம்பர் 31, 1941, நவம்பர் 1, 1941, நவம்பர் 1, 1942, மேலும் அக்டோபர் 11, 1943 ஆன இன்றைய தினம் ஆகிய நாட்களில் நேரில் பார்த்துப் பேசியிருக்கிறேன். அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார். இதற்கு முன்பு நான் சந்தித்தபோதும் உயிரோடு இருந்தார்.’

நான் கையெழுத்தும் தேதியும் போட்டு காகிதத்தில் எழுதித் தந்த சான்றிதழைப் பொன்னேபோல் தன் கைப்பையில் வைத்துக் கொண்டார் ராம.சோம. அதோடுகூட கைப்பையில் இருந்து இன்னொரு காகிதத்தையும் எடுத்து நீட்டினார்.

இது என்னங்க, போன ஜன்ம விவரம் கேக்கறாங்களா? ஜோசியக்காரரைக் கேட்டு எழுதி வாங்கித் தரேன்னு சொல்லிடுங்க என்றபடி வேலையை ஆரம்பித்தேன்.

வேலை பிரமாதமாக வேறே எதுவும் இல்லை. பிரைமரி லெட்ஜர் தொகுதியில் இருந்து ஏழு துணை லெட்ஜர் தொகுதிகளுக்கு பென்ஷன் தொகைகளை இலாகா வாரியாக பிரித்து ஒவ்வொரு தொகையையும் வெவ்வேறு கணக்குத் தலைப்புகளில் கால் பங்கு, காலே அரைக்கால் பங்கு, அரைக்கால் பங்கு, இன்னொரு கால் பங்கு என்று பிரித்து எழுதும் காரியம் அது. இன்னும் இரண்டு நாளைக்கு அது தொடரும்.

மதறாஸ் மாகாணம் முழுக்க மொத்தம் ஏழாயிரத்துச் சில்லறை பென்ஷனர்கள். அத்தனை பேர் விவரமும் எழுதி துணை லெட்ஜர் வாரியாக, பங்கீடு வாரியாகக் கூட்டுத் தொகை கணக்கிட்டுப் போட வேண்டும். பிரைமரி லெட்ஜர் தொகுதிகளையும் சந்தேகத்துக்கு ஒரு தடவை கூட்டிப் போடவேண்டும்.

இந்தக் கூட்டுத் தொகை அந்தக் கூட்டுத்தொகையோடு ஒரு பைசா கூடக் கூடாமல் குறையாமல் இருந்தால் சகலமும் டாலி. பொருந்தி வந்ததற்காக கீழே வேலை பார்க்கும் நாலு ஜூனியர் குமஸ்தர்களுக்கும் டவாலிக்கும் கேண்டீனில் காப்பி உபசாரம் என் செலவில் நடத்தித் தர வேண்டும். கல்பகோடி வருஷக் காலமாக இதுதான் நடைமுறை.

‘தம்பி டோட்டல் அடிக்க உக்கார்ற முந்தி கொஞ்சம் இந்தக் கடுதாசையும் பார்த்துடுங்க. துரை கையெழுத்து போட்டு வந்திருக்கு. போன வாரம் வந்துச்சு’ என்றார் ராம.சோம.

‘உங்களுக்கு குழந்தை பிறந்து தற்போது ஒரு வருடமாகிறது என்றும் ஸ்பெஷல் பிரசவ அலவன்ஸ் தர வேண்டும் என்றும் கோரி நீங்கள் அளித்த மனுவை உதவி கவர்னர் துரையவர்கள் கருணையோடு ஏற்றுக்கொண்டுள்ளார். நீங்கள் எந்தப் பிரசவ ஆஸ்பத்திரியில் குழந்தை பெற்றுக் கொண்டீர்கள், குழந்தை பிறந்த நாள், குழந்தையின் தந்தை பெயர் ஆகிய தகவல்களையும் பென்ஷன் ஆபீசில் கொடுத்து வருடாந்திர ஸ்பெஷல் பிரசவ அலவன்ஸ் ரூபாய் முப்பத்தியேழு மாதாந்திரப் பென்ஷனோடு பெற்றுக்கொள்ளவும்.’

ஒரு வருடத்துக்கு முன் ராம.சோம கர்ப்பமாக இருந்து ஒரு குழந்தையைப் பிரசவித்திருக்கிறார். அதை வளர்க்க சகல அதிகாரமும் வாய்ந்த கவர்னர் தனி ஆபீஸ் ஸ்பெஷல் அலவன்சு தர வேண்டும் என்று கோரி அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வருடம் முப்பதேழு ரூபாய் சாங்ஷன் ஆகியுள்ளது,

இந்தத் தகவல்களை அறிந்து திகைப்பு மிகுந்து வர வேலை செய்யத் தோன்றாமல் கையில் எடுத்த பென்சிலை வைத்துக் காது குடைந்தபடி அப்படியே உறைந்து விட்டேன்.

‘ஐயா, சொல்லவே இல்லியே, கன்கிராஜுலேஷன்’ என்றபடி அவர் கையைக் குலுக்கினேன். அவர் புன்சிரிப்போடு சொன்னது இன்னும் தூக்கிவாரிப்போட வைத்தது.

‘ஏதோ ஃபைல் மாறி நோட் போட்டு எனக்கு பிரசவ அலவன்ஸ் சாங்ஷன் பண்ணினதா லெட்டர் அனுப்பிட்டாங்க... சும்மா விட்டுடலாம்னு திருமலாசாரி சாமிவாள் சொன்னார். பிரசவ ஆஸ்பத்திரி பேரு ஊர் கேட்டு ரெண்டு லெட்டர் வந்து அதுவும் நின்னுடுச்சு. இந்த மாதம் பார்த்தா, பென்ஷன் முப்பத்தேழு ரூபாய் அதிகமா வந்திருக்கு. நீங்கதான் கொடுத்திருக்கீங்க தம்பி’ என்றார் அவர் நைச்சியமாக. அங்கே சுத்தி இங்கே சுத்தி என் மடியில் இந்தப் பலாப்பழம் விழுந்து விட்டிருக்கிறது.

நான் மரபீரோக்களை வரிசையாகத் திறந்து ஐந்து நிமிடம் போராடிய பிறகு ராம.சோம பென்ஷன் ஃபைலைக் கண்டேன். அதற்கே ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

ராம.சோம எனக்கு முன் பொறுமையாக, சுமார் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார். ரிடையர் ஆனதும் கடவுள் கொடுக்கும் கொடை இது – உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தபடிக்கே தூக்கம் போடுதல். பத்து நிமிடமோ ஒரு பகல், ஒரு ராத்திரியோ இந்தத் தூக்கத்துக்கு வரைமுறை இல்லை.

எழுப்பி அவருக்கும் கேண்டீன் சப்ளை காப்பியை சுடச்சுட வாங்கிக் கொடுத்தேன். அப்புறம் வரச் சொல்லி அனுப்பிவிட்டு லெட்ஜர்களின் உலகத்தில் அமிழ்ந்து நாளை நகர்த்த முடிவு செய்தேன்.

‘ராவன்னா மானா, நான் இதெல்லாம் பார்த்து நிதானமா நோட் போடறேன்... நீங்க சமாதானமா வீட்டுக்குப்போய் சௌகரியமா இருந்து வாரும்.’

‘எப்போ நான் திரும்பி வரணும் தம்பி?’ என்று கேட்டார் பெரியவர்.

‘இன்னிக்கு அக்டோபர் பத்தாம் தேதி. அக்டோபர் இருபத்தேழு தீபாவளி... மாசக் கடைசி. அதுக்கு அடுத்து பென்ஷன் பட்டுவாடா. நவம்பர் ஒண்ணும் ரெண்டும் கும்பல் அதிகமா இருக்கும். நவம்பர் மூணு வாங்க. புதன்கிழமை... நீங்க உயிரோடு இருக்கறதா புது சர்ட்டிபிகேட்டும் கொடுத்துடுவேன். வருஷாந்திர சர்ட்டிபிகேட் தொல்லை இன்னும் ஒரு வருஷம் இல்லாம போகும்.’

‘சரி பிரசவ அலவன்ஸ்?’ அவர் விசாரித்தார்.

‘உங்க ஊரோ பக்கத்து ஊரோ கவர்மெண்ட் ஆஸ்பத்திரியிலே பிரசவமாச்சுன்னு லெட்டர் தருவாங்களான்னு கேட்டுப் பாருங்களேன்.’

‘வேணாம் தம்பி. சட்டைப்பையிலே பத்து ரூபா நோட்டு வெளியே தெரியற மாதிரி போனா, கொடுத்தாலும் கொடுத்திடுவாங்க... வாங்கிட்டு வந்தா உங்களுக்குத்தான் கஷ்டம்... நோட்டு போடணும்’ என்றார் சிரிக்காமல்.

‘நோட்டு போடறதுக்கெல்லாம் ராமோஜி என்னிக்கும் அஞ்சினதில்லே ராவன்னா மானா’ என்றபடி பென்சிலை லெட்ஜர் முதல் வரியில் வைத்தேன். அவர் குடையைத் தூக்கி கையிடுக்கில் வைத்தபடி வரேன் என்று போனார்.

மதியம் கேண்டீனுக்கு முழு ஆபீசுமே படை எடுத்திருக்க, நான் எண்களின் பிரவாகத்தில் அடித்துப் போகப்பட்டேன், இலக்கு உணர்ந்த வெள்ளப் பெருக்கு அது. ஒன்றும் மற்றதும் மற்றதும் அடுத்ததும் அடுத்ததும், பிறவும் எல்லாம் ஒருபோல் ஒரே கூட்டுத் தொகையை எடுத்தியம்பி வாழ்க்கையில் களிப்பேருவகைகொண்டு, கூகூவென மகிழ்ந்திருக்க வைப்பதே ஆகும் அது.

மணி பார்த்தேன். பிற்பகல் மூன்று. சாப்பிட்டு வேலை பார்த்த களைப்பு தீர ஒரு கூட்டம் மறுபடி கேண்டீனுக்குக் காப்பியும் டீயும் தேடிப் போய்க்கொண்டிருந்தது. நேரம் போனதே தெரியாமல் நான். இலாகா வாரியாக பென்ஷன் இந்த மாதம் வழங்கியதைப் பங்கு பிரித்து அந்தந்த இலாகாவின் கணக்கில் பற்றெழுதி துரை கையொப்பமிட குறிப்பு அனுப்பியாக வேண்டும்.

இன்னும் இரண்டு நாளில் மொத்தக் கணக்கு எண்கள் ஒன்றோடு ஒன்று மாறுபாடில்லாமல் கை கோர்த்து ஆட, திங்களன்று அந்த யுகப் பிரளய தஸ்தாவேஜ் ஆன மாசாந்திர பென்ஷன் நோட்டை எழுத வேண்டும். வரும் ஜனவரியில் இருந்து குடிநீர் விநியோக இலாகாவுக்கு என்னைப் போகச் சொல்லி இருக்கிறார்கள். அங்கே தண்ணீர்க் கணக்கு எழுதி நோட் போட வேணும். பென்ஷன் கணக்கைவிட அது சிக்கலானது. வாராந்தர பிரளயம்.

மணி? சாயந்திரம் ஆறு. கோட்டையில் நான் மட்டும்தான் நாற்காலியோடு கட்டிப் போடப்பட்ட உத்தியோகஸ்தன். நானும் வீடு போகும் நேரம்.

ட்ராம் பிடித்து வீடு போய்ச் சேர, வாசல் கதவு வழக்கம் இல்லாத வழக்கமாக அடைத்து உள்ளே இருந்து தாழ்ப்பாள் போடப்பட்டுச் சார்த்தி இருந்தது.

ரத்னா, ரத்னா என்று நாலைந்து தடவை அழிக்கதவைத் தட்டிச் சத்தம் உண்டாக்கியும் உள்ளே ஓர் அசைவும் தென்படவில்லை. கம்பி இடுக்கு வழியாக விரலைவிட்டு எனக்கு மட்டும் தெரிந்த ஒரு மாதிரி கையை கோணலாகப் பிடித்து தாழ்ப்பாளைப்பற்றி அழுத்த கதவு திறந்து கொண்டது.

அவசரமாக உள்ளே நுழைந்தேன். சாயந்திரத்துக்கான குத்து விளக்கு ஏற்றி கூடவே ஹாலில் டியூப்லைட்டும் போட்டு வைத்துத்தான் ரத்னா சாயந்திரத்தையும் ஆபீசிலிருந்து திரும்பும் என்னையும் வரவேற்பது வழக்கம்.

எந்த வெளிச்சமும் இல்லாமல் வீடு இருட்டில் கிடந்தது. நான் இதயம் பலமாகத் துடித்துத் திணறி மூச்சு அடைக்கத் தட்டுத் தடுமாறி ட்யூப் லைட்டைப் போட்டேன்.

என்ன சொல்ல? ரத்னா வீட்டு முற்றத்தில் துளசிச்செடி வைத்த சின்ன மேடையின் பின்னால் விழுந்து கிடந்தாள். தொட்டி அவள் கால் பக்கம் செடியோடு உருண்டு கிடந்தது.

முற்றத்துக்குப் பாய்ந்து ஓடினேன். துளசிக்கு நமஸ்காரம் செய்து தொட்டியை நேராக்கிய வினாடிக்கு அடுத்ததில் ரத்னா அருகில் தரையில் உட்கார்ந்து அவள் தலையை மடியில் வைத்துக்கொண்டு உலுக்கி எழுப்பினேன்.

மெல்லக் கண் விழித்தாள். ‘விடிஞ்சுடுத்துங்களா?’

அவள் கேள்விக்குப் பதிலாக நான் தேம்பினேன். உடனே குரலை அடக்கி, அழுகையையும் நசித்து, ‘வா, ஹால்லே போய் உட்கார்ந்து பேசுவோம்’ என்று சகஜ பாவத்தில் சொன்னேன்.

அவள் எழுந்து உட்கார முயற்சி செய்தாள். குழைந்து என் மடியில் கசங்கிய துணிபோல விழுந்தாள்.

அவள் என்னைவிட்டு எந்த வினாடியும் ஒரேயடியாகப் போய்விடுவாள் என்று மனதில் பட, குரல் எடுத்து ரத்னா ரத்னா என்று தீனமான கூக்குரலாகப் பெரும் சத்தம் எழுப்பினேன்.

அடுத்த வீட்டிலிருந்தும், எதிர் வீட்டிலிருந்தும் என்னாச்சு என்னாச்சு என்று குரல்கள். அடுத்த வினாடி என் வீட்டில் தெருவே கூடிவிட்டது.

யாரோ தெரு முனைக்கு ஓடி டாக்சி பிடித்து வந்தார்கள். இரு பெண்கள் கைத்தாங்கலாக ரத்னாவை பின் சீட்டில் மெல்ல இட்டுக் கூடவே சீட் விளிம்பில் அவள் தலையை மடியில் தாங்கி தொடுக்கினாற்போல் உட்கார்ந்தார்கள்.

நானும் டாக்சியில் ஏறிக்கொண்டேன். அவர்கள் டவுட்டன் போகச் சொன்னார்கள். நான் எனக்குப் பழக்கமான மீசை டாக்டரின் பெயர் சொன்னேன்.

‘போய்ட்டிருங்க. நாங்க பின்னாலேயே வரோம்’ என்றனர் கார்க் கதவை அடைத்து.

‘கொஞ்சம் வேகமாப் போங்க’ என்றேன்.

நல்லவேளை, டாக்டர் இருந்தார். ரத்னாவைக் கிடத்திப் பரிசோதித்து என்னைப் பக்கத்தில் கூப்பிட்டு, ‘உடனே ஜெனரல் ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணணும்... நானும் வரேன்’ என்றார்.

அப்போதுதான் எனக்கு நிலைமையின் தீவிரம் உறைக்கத் தொடங்கியது. டாக்சியை அனுப்பாமல் நிற்கச் சொல்ல ஆள் போனது.

‘குடல்வால் வீங்கியிருக்கறாப்பலே தோணுது. எக்ஸ்ரே எடுக்கணும். அதை அங்கேயே எடுத்துடலாம்’ என்றார் டாக்டர்

எனக்கு ஜி எச்லே எந்த டாக்டரையும் தெரியாதே என்று பரிதாபமாகக் கேட்டேன்.

‘ஏன் தெரியாது? அட்லீஸ்ட் ஒரு சீனியர் டாக்டரை உங்களுக்கு ஏற்கெனவே தெரியும்’ என்று என் தோளில் தட்டினார். போன வருடத்திலிருந்து அவரும் ஜெனரல் ஆஸ்பத்திரி சர்ஜனாம்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் என்ன எல்லாம் நடந்தது என்று அதெல்லாம் நடந்த வரிசையில் யோசிக்க முடியாமல், மொத்தமாகத்தான் மனதில் வருகிறது.

ஆஸ்பத்திரியில் நோயாளிக்குப் படுக்கை கிடைக்க சிரமமாக இருந்தது. போன வருஷம் எவாகுவேஷன் நேரத்தில் இப்படிப் பெரிய ஆஸ்பத்திரியில் மொத்தமே பத்து நோயாளிகள்தான் டிஸ்சார்ஜ் ஆகாமல் படுத்திருந்தது. ஜப்பான் விமானத் தாக்குதலுக்குப் பயந்து ஓடிப்போன நோயாளிகள் அப்போது. இடம் கிடைக்காமல் அலைகிறவர்கள் இப்போது.

டாக்டர் கரிசனத்தாலும் வயிற்றில் வலி உயிர் பறிக்கக்கூடும் என்பதாலும், யாரோ காலையில் டிஸ்சார்ஜ் ஆகி சுத்தப்படுத்தாமல் வைத்திருந்த படுக்கையை உடனடியாக சுத்தப்படுத்தி ரத்னாவைப் படுக்க வைத்தார்கள்.

டாக்டர் கொஞ்சமும் அவசரப்படாமல் சில சோதனைகள் செய்து பார்த்து பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றார். மதியம் ரத்னா சாப்பிட்ட ஏதோ பதார்த்தம் வலியை ஏற்படுத்தியிருக்கக் கூடும் என அபிப்பிராயப்பட்டார் அவர். ரத்னா பாய் எழுந்தவுடன்தான் அது என்ன என்று கேட்க வேண்டும்.

நாளைக்கு அறுவை சிகிச்சைக்கு வேறு இரண்டு சர்ஜன்களைப் பங்கெடுக்கச் சொல்லி அழைக்க இருந்த டாக்டர் அதை உடனடியாக ஒத்திப் போட்டதாகச் சொன்னார். ‘இப்போ வேண்டியிருக்காது… அதான் சொல்வேன்.’

சட்டென்று அவர் குரல் உயர்ந்தது –

‘இதென்ன ஒரு பேஷண்டுக்கு பதினைந்து விசிட்டர் இங்கே. ஒருத்தர் வேணும்னா எட்டு மணிவரை இருக்கலாம். போய்ட்டு காலையிலே ஏழு மணிக்கு ப்ளாஸ்கிலே எனக்கும் சேர்த்து காப்பி எடுத்துக்கிட்டு வாங்க .’

டாக்டர் சத்தமாகச் சொன்னபோதுதான் என் புத்தியில் பட்டது. அடுத்த வீட்டு ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் ட்யூட்டிக்குப் போகாமல் என் ஆதிமூலமே குரலைக் கேட்டு ஓடி வந்து அங்கே நிற்கிறார். எதிர் வீட்டு விலாசினி டைப்பிஸ்டும் அவள் வீட்டுக்காரர் கேளப்பன் நாயரும் கையில் ப்ளாஸ்க், பர்சில் பணம் என்று எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டுவந்து எனக்குத் துணையாகக் காத்திருக்கிறார்கள். தெருக்கோடி சுபாங்கி அம்மாள் கந்தர்சஷ்டி கவசத்தைப் பாராயணம் செய்தபடியே ஓர் ஓரமாக நின்றுகொண்டிருக்கிறாள்.

இன்னும் கடைசி வீட்டு ராதாகிருஷ்ண போத்தி, விஷயம் கேட்டு ஓடி வந்த அடுத்த தெருப் பெண்மணி – உதவி அக்ராசனர். கஸ்தூர்பா மாதர் சங்கம் – என்று ரத்னாவுக்காக வந்த கூட்டம் அங்கேதான் இன்னும் நின்று கொண்டிருக்கிறது. நான் அவசரமாக அவர்களை நோக்கி நகர்ந்தேன்.

நான் நன்றி சொல்ல ஆரம்பித்து ஏதோ பிதற்றிக்கொண்டிருக்கும் போது இன்னொரு சர்ஜன் உள்ளே வந்தார். இரண்டு பேரும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, ‘இன்னிக்கு ராத்திரி இங்கே இருக்கட்டும். காலையிலே பார்த்துட்டு டிஸ்சார்ஜ் பண்ணலாம்’ என்றார்கள்.

உடனே விழுங்கவேண்டிய மாத்திரை என்றும், உடனே போட்டுக்கொள்ள வேண்டிய இஞ்செக்ஷன் என்றும் எழுதிக் கொடுத்து உடனே வாங்கி வர வேண்டும் என்றார்கள் அவர்கள்.

‘பெர்மிஷன் வாங்குங்க, பெர்மிஷன் வாங்குங்க’ விலாசினி டைப்பிஸ்டும், அடுத்த வீட்டு போஸ்ட் மாஸ்டரும் என்னிடம் மெதுவாகச் சொன்னார்கள். எதுக்கு பெர்மிஷன் யார் கிட்டே வாங்கணும்? ஒண்ணும் புரியவில்லை.

ரத்னாவுக்கு மருந்து, இஞ்செக்ஷன் வாங்குவதுதான் முதல் வேலை. மற்றதெல்லாம் அப்புறம்தான். ராத்திரி எட்டு மணி அடித்தது. எந்த மருந்துக்கடை திறந்திருக்கும்? சுபாங்கி அம்மாள் விவரம் சொன்னாள்.

‘எங்க வீட்டுலே பிரசவம், ஹெர்னியா ஆப்பரேஷன், விழுந்து அடிபடறது, விஷக் காய்ச்சல்னு யாராவது இங்கே போக்குவரத்தா வந்து தங்கிட்டுப் போறாங்க… ப்ளாஸ்க்லே வென்னீரும் காப்பியும், பாத்திரத்திலே இட்லியும் கொண்டாந்து கொண்டாந்து மருந்துக் கடை, பழக்கடை எங்கே இருக்குன்னு அத்துப்படி’ என்றாள் அவள்.

‘வரும்போது ரெண்டு பாக்கெட் மெழுகுவர்த்தியும் வாங்கிட்டு வந்திடுங்க’,

டாக்டர் சொல்ல, ‘விசிட்டர் எல்லாம் போகலாம்’ என்று ஒரு நர்ஸ் நடந்தபடி ‘விசிட்டர்’ என்பதில் அழுத்தம் கொடுத்துச் சொல்லிக் கொண்டு போனார்.

‘நானும் வரேன்’ என்று கேளப்பன் நாயர் கூடவே கிளம்பினார்.

ஆஸ்பத்திரிக்கு வெளியே வரும்போது சட்டைப்பையில் வைத்திருந்த பர்ஸை எடுத்து அப்படியே கொடுத்து விட்டார் என்னிடம்.

‘சேட்டா, இதுலே நூற்றைம்பது ரூபாய் இருக்கு… வச்சிக்குங்க… மெல்ல கொடுத்தா போதும்.’

நான் அவர் கையைப் பிடித்துக்கொண்டு கண் கலங்க, முதுகில் தட்டிக் கொடுத்து, ‘ஆய்க்கோட்டே’ என்று மேற்கொண்டு செயல்பட ஆதரவு தெரிவித்தார்.

ஜெனரல் ஆஸ்பத்திரியை ஒட்டி பெரிய மருந்துக் கடை இருந்தது. டாக்டர் கேட்டிருந்த மருந்தெல்லாம் வாங்கியானது. மெழுகுவர்த்தி வாங்க பதினைந்து நிமிடம் கடை தேடி அலைந்து ஒரு வழியாகக் கிட்டியது.

கேளப்பன் ‘மெழுரியுண்டோ’ என்று மெழுகுவர்த்தி கேட்டது கடைக்காரர்கள் அப்படி ஏதும் இல்லை என்று கை விரிக்கக் காரணமாக இருந்திருக்கலாம்.

மருந்து, மெழுகுவர்த்தியோடு ஆஸ்பத்திரிக்குள் ஓடினேன். மீசை நாயர் டாக்டர் நல்லவேளையாக இன்னும் அங்கேதான், கைக்கடியாரத்தைப் பார்த்தபடி, நின்றிருந்தார்.

‘ஷி இஸ் ஆல்ரைட்... நாளைக்கு இன்னொரு செக் அப்... ஒண்ணும் இருக்காது... டிஸ்சார்ஜ் செஞ்சுடலாம்.’ இஞ்செக்ஷன் போட்டுவிட்டு அவர் என்னைப் பார்த்து மீசையில் வடிகட்டிய இத்துனூண்டு சிரிப்போடு சொன்னார்.

கொஞ்சம்போல் நிம்மதி மனதில் எல்லையில் எட்டிப் பார்த்தது.

ரத்னா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, ‘வீட்டுக்கு போகலாம்’ என்று என்னிடம் சொன்னாள். ‘சீக்கிரம் போகலாம்’ என்றேன். பக்கத்தில் கூப்பிட்டாள். யார் காலையோ மிதித்துக்கொண்டு அவள் அருகே போய் நின்றேன். குனியச் சொன்னாள். குட்ட மாட்டியே என்றபடி குனிந்தேன்.

‘இவங்க எல்லாம் இங்கே என்ன பண்றாங்க?’ என்று காதில் கேட்டாள். ‘சொல்ல ஆரம்பிச்சா விடிஞ்சுடும்’ என்றபடி திரும்ப, யாரோ தோளில் தட்டினார்கள். டாக்டர்.

‘இந்த மருந்து ஏன் வாங்கிட்டு வந்தீங்க... சரியா படிக்கலியா மெடிக்கல் ஸ்டோர்ஸ்லே’ என்றார்.

கேளப்பன் ‘நீங்க இங்கேயே இருங்க... நான் போய்ட்டு வரேன்’ என்று கிளம்பினார். வேண்டாம் என்று நான் அவசரமாகப் புறப்பட்டேன்.

‘பேஷண்டுக்கு துணையா பெட் பக்கம் ராமோஜி சார் இருக்கலாம் தானே?’

விலாசினி கேட்க, டாக்டர் ரொம்ப யோசித்து, ‘புது ரூல் படி பேஷண்ட் கூட யாரும் ராத்திரி தங்கி இருக்க முடியாது. காலையிலே ஏழு மணிக்கு வந்து ராத்திரி எட்டுவரைதான் இருக்கலாம்’ என்றார்.

அவரிடம் கொஞ்சம் மெய்யும் கணிசமாகப் பொய்யுமாகக் கெஞ்சினேன். ‘டாக்டர், அவளுக்கு ஆஸ்பத்திரி சூழ்நிலை அதுவும் தமிழ் பேசற இந்த இடம் புதுசு. மராட்டி பேசி வளர்ந்தவ... கூட நான் இருந்தா, ராத்திரி விசிட் வர்ற டாக்டர் எதாவது கேட்டா தகுந்த பதில் சொல்ல சௌகரியமா இருக்கும்...’

கூட்டமாக கோரிக்கை விட்டோம். சரி பார்க்கலாம் என்றபடி மறுபடி கைக்கடியாரத்தைப் பார்த்தார் டாக்டர்.

‘பேஷண்ட் முழுப்பேரு?’

நர்ஸ் கேட்க, நான் அவசரமாக ரத்னா பாய் என்று சொல்லும்போது கரண்ட் போய்விட்டது. சட்டென்று இருட்டு சூழ அப்படியே நின்றோம்.

கரண்ட் போன அடுத்த வினாடி எங்கும் நிலவும், பள்ளிக்கூடத்துக்கு திடீர் விடுமுறை என்று அடைத்துப் பூட்டியதில் பசங்களுக்கு ஏற்படும் நிமிஷ நேர சந்தோஷம் சர்வ வியாபகமாக நிலவியது.

‘ஆஸ்பத்திரி, தெரு, பேட்டைன்னு எல்லாம் இருண்டு கிடக்கு. முழுசா கரண்ட் இல்லே’, விலாசினி இருட்டில் என் அருகே வியர்த்து நின்று சொன்னாள். ஒரு வினாடி தாறுமாறாக அலைபாய்ந்த மனதை அடக்கினேன். ரத்னாவைப் பார்த்தேன். அவள் மறுபடி பெட்டில் படுத்திருந்தது தெரிந்தது.

நர்ஸ் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வெளிச்சம்பட ஜன்னல் மேடையில் வைத்தாள்.

நான் இருட்டில் மறுபடி மருந்துக்கடை போய் மருந்தை சரியாக வாங்கிக்கொண்டேன். இருட்டை எதிர்பார்த்தோ என்னமோ மாதாகோவில் மாதிரி அங்கே வரிசையாகப் பெரிய மெழுகுவர்த்தி ஏற்றி வைத்திருந்ததால் எடுத்துத்தர சிரமம் இல்லாமல் போனது.

உள்ளே போகலாம் என்று ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்தபோது கதவு அடைத்து உள்ளிருந்து பூட்டப்பட்டதைக் கண்டு நிலைகுலைந்து போனேன்.

உள்ளே போக வழியே இல்லை.

இருட்டில் இந்த நிதர்சனம் இன்னும் கொடுமையானதாக மேலெழுந்து மருட்டியது.

ரத்னா ரத்னா என்று சத்தம் போட்டு அலறினேன். இன்றைக்கு இரண்டாம் தடவை இப்படி அவள் பெயரை உச்சரித்துக் கையாலாகாமல் அலறுகிறேன். என் கூட வந்தவர்கள் இருட்டில் அருகே வந்தார்கள்.

‘உடனே ஷெல்டர் போகணும்... ஜப்பான்காரன் விமானத் தாக்குதல் நடக்கப் போறதாம்... போலீஸ் கண்ட்ரோல் ஃபோன்லே’ என்று கேளப்பன் சொல்வதற்குள் ஆகாசத்தில் பளிச்சென்று வெளிச்சம் குவிந்து நகர்ந்தது.

அடுத்த எட்டு மணி நேரம் ஜெனரல் ஆஸ்பத்திரி காம்பவுண்ட் வெளியே பள்ளம் தோண்டி ஏற்படுத்தி இருந்த ஷெல்டரில் ஒண்டிக்கொண்டேன்.

★

மன்னிக்கணும். இந்த இடத்திலே இருந்து தொடர்ந்து எழுதறது ஸ்ரீ ராமோஜி ராவ்ஜி இல்லை. அவருடைய சம்சாரம் ரத்னா பாய் ஆகிய நான்.

எங்க ராவ்ஜி தொடர்ந்து எழுதறேன் பேர்வழின்னு நாலஞ்சு தடவை எழுதி, சரியாக வந்ததாக மனசில் படாமல் பக்கம் பக்கமாக குறுக்கே கோடு போட்டு அடிச்சு வச்சிருக்கிறார் நோட்புக்கிலே.

‘இந்த இடத்தை நான் எவ்வளவு கஷ்டப்பட்டு எழுதினாலும் சரியாக வரும்னு தோணலை. இது நீ அனுபவிச்சது ரத்னா. நீ சொன்னாத்தான் அதிலே நிஜம் தெரியும்’னு சொல்லிட்டார்.

இப்படி இதைக் கடந்து மேலே போக முடியாமல் திடுதிப்பென்று அந்தரத்தில் நிற்க வைப்பதை சகிக்க முடியாதுபோய், ‘நான் தொடரட்டுமா’ன்னு அவர் கிட்டே தயங்கித் தயங்கிக் கேட்டேன். எழுதுன்னார்.

நான் சாதாரணமா நாள், நட்சத்திரம் கிரமமாக நினைவு வச்சுக்கறதில்லை. இவரோடு கூட சின்னச் சின்னதா மனஸ்தாபம், திடீர்னு இவர் ஏதாவது சொல்லி அல்லது செய்து ஏற்படுத்தற சந்தோஷம், மனசுக்குப் பிடித்த யாரையாவது ரொம்ப நாள் கழித்து பார்க்கிறது, இப்படி ஏதாவது நடந்தா அந்த நாள் மட்டும் மனசில் பளிச்சுனு பதிவாகி விடும்.

வருஷத்துலே பத்து பதினைந்து நாள்னு எடுத்துக்கிட்டாலே கல்யாணம் ஆகி இந்த ஐந்து வருஷத்திலே எழுபத்தைஞ்சு நாள் பதிவாகி இருக்குங்கறதுலே மகிழ்ச்சி.

இந்த அக்டோபர் பதினொண்ணாம் தேதி 1943–ஆம் வருஷம் இதில் உண்டு. மேலே போகலாமா?

இப்போ ராத்திரி. ஒன்பது மணி இருக்கும். அதுக்கு மேலேயும் இருக்கலாம். நடுராத்திரி இல்லே.

நான் படுத்திருக்கேன். ஒரே இருட்டாக இருக்கறது மனசுக்கு ஏதோ விதத்திலே நிம்மதியாக இருக்கு. இருட்டிலே எங்கே இருக்கறதா வேணும்னாலும் கற்பனை செய்துக்கலாம்.

இப்போ இந்த இருட்டிலே நான் அம்மா வீட்டுலே இருக்கறதா நினைச்சுக்கிட்டா அது உடனே மகாராஷ்ட்ரத்திலே கோலாப்பூர் ஜில்லாவிலே இச்சலகரஞ்சி டவுன்லே ஒரு பெரிய ரெண்டு மாடி வீடு ஆகும். அப்பாவும் அம்மாவும் தம்பியும் குடும்பமும் அங்கேதான் இருக்காங்க.

இருளோ, வெளிச்சமோ, அவங்களைப் பத்தி நினைக்கவே சந்தோஷமா இருக்கு. அவங்களோடு நான் இல்லையேன்னு கொஞ்சம் ஏக்கமும் சேர்ந்து வருது.

இருட்டிலே நான் இருக்கறது எங்க மதராஸ் புரசைவாக்கம் வீட்டுலேன்னு நினைச்சுக்கிட்டா அதுதான் நான் வாழ்க்கைப்பட்ட ஜாகை. இனி என்னிக்கு கடைசி மூச்சு போகுமோ அதுவரை இங்கேதான் இருப்பு. அவர் இருக்கற இடம் இது.

இருட்டும் வெளிச்சமும் வாசனையும் வாடையும் இனிப்பும் கசப்பும் துக்கமும் சந்தோஷமும் இங்கே அவரும் நானும் சேர்ந்து அனுபவிக்கறோம். இனியும் அப்படித்தான்.

மற்றபடி நான் பிரயாணம் போன பம்பாய், கன்யாகுமரி, டில்லி எல்லாம் ஒரு வினாடி நினைச்சுக்கிட்டா அந்தந்த இடமா இந்த இருட்டிலே ஆகிடும். அதெல்லாம் எதுக்கு எனக்கு?

இப்போ நான் படுத்திருக்க இடம் இதுலே எது?

என் ப்ரியமான ராமோஜி ராவ்ஜி குரலும், வாசனையும், மூச்சுக் காற்றும், உடம்பு சூடும் இங்கே எனக்கு கொஞ்சமாகவாவது அனுபவப்பட்டதாலே, வீடுதானா இது?

சுற்றி வர மதறாஸ்லே எங்க வீட்டை ஒட்டி இருக்கப்பட்ட வீடு, எங்க தெரு, அடுத்த தெரு இப்படி சிநேகிதமா இருக்கப்பட்டவங்களோட குரல் எல்லாம் கேட்டபடி இருக்கு. கூடவே மீசை டாக்டர் நாயர் சார் குரலும் மனசுக்கு ஆறுதலா கேக்குது. அவர் யாருக்கோ ஊசி போடறார். இருட்டிலே அது யார்னு தெரியலே. என்னப் போல அச்சு அசப்பிலே இருக்கப்பட்ட ஒரு பெண். அவளுக்கு இஞ்செக்ஷன் போட்டா எனக்கு

எறும்பு கடிச்ச மாதிரி வலிக்குது. இல்லே அங்கே படுத்திருக்கிறது நான்தானா? அப்போ பேசிட்டு இருக்கற நான் யாரு? தெரியலே. அது பெரிய விஷயம் இல்லே.

எங்க ராவ்ஜியை கட்டில் பக்கம் குனியச் சொன்னேன். குட்ட மாட்டியேன்னு கிண்டல் பண்ணிட்டு குனிஞ்சார். மத்தவங்க எல்லாம் இங்கே என்ன பண்றாங்கன்னு கேக்கறேன். சிரிக்கறார்.

இது எந்த இடம்னு கேட்டபடி தளர்ந்துபோய் கண் மூடிக்கறேன். என்ன ஆச்சு அப்புறம்னு தெரியலே.

கண் திறந்து பார்த்தா இருட்டு மட்டும் இன்னும் இருக்கு. என்கூட என்னைச் சுற்றி நின்ற ஒருத்தரையும் காணோம். இவரையும்தான். எங்கே என்னைவிட்டுட்டு எல்லோரும் போயிட்டாங்க?

இருட்டு திடீர்னு பயமுறுத்துகிற விஷயமா போயிருக்கு. நான் உயிரோடு இருக்கேனா? இந்த இருட்டும் தனிச்சு இருக்கறதும் காலடிச் சத்தம் நெருங்கறதும் விலகிப் போறதும், குமட்ட வைக்கும் மருந்து நெடியும், அழுகின ஆரஞ்சுப்பழ வாடையும் எல்லாம் சாவோட இன்னும் பல உருவமா?

நான் ஏன் படுத்திருக்கேன்? கரகரகரகரன்னு எதை இழுத்துப் போறாங்க? யார்? இருட்டுலே என் நெற்றியிலே கை வச்சு பார்க்கறது யார்? அவரா? வளையல் போட்ட கை. அவர் இல்லே. விலாசினியா? தெரியலே.

விலாசினி நல்ல பொண்ணுதான். இவர்தான் அவள் மேலே கொஞ்சம் ஈடுபாட்டோட இருக்கற மாதிரி தெரியறது. மெல்ல அதை மாத்திடலாம். முதல்லே இங்கே இருந்து எழுந்துபோய் அவர் எங்கே இருக்கார்னு பார்க்கணும்.

நடக்க முடியுமா?

என் கன்னத்திலே தட்டி, மெல்ல அறைஞ்சு, தலையை உலுக்கி கேக்கறது விலாசினியா இருக்க முடியாது. யார் இது?

நடக்க முடியுமான்னு சொல்லு. திரும்பவும் யாரோ சொல்றாங்க. தோளிலே தட்டி வேறொரு குரல் அதையே கேட்குது. வயிற்றில் புதுசாக நோவு கிளம்பி வருது. உதட்டைக் கடிச்சுக்கிட்டு வலியைப் பொறுத்துக்கிறேன்.

நான் எழுந்து உட்கார்வேன். அவர் இங்கேதான் ஓரமா உட்கார்ந்திருக்கார். இல்லை, கதவைச் சார்த்தப் போயிருக்கார்.

இது வீடுதானே? நடக்க முடியுமான்னு கேக்கறது யார்? எழுந்திருக்கணும்.

எழுந்து உட்கார்றேன். இன்னும் கொஞ்சம் முயற்சி. தசையையும் சதையையும் கடந்து வலி பரவ, அதை மறக்கப் பார்க்கிறேன். நிற்க வேணும். நிற்கிறேன்.

வளையல் போட்ட ரெண்டு ஜோடிக் கை என்னை இடுப்பிலும் தோளிலும் ஆதரவாகப் பிடிச்சிருக்குது. இருட்டில் அது அர்த்தமாகுது.

‘ஐயோ பக்கத்திலே சத்தம் கேக்குது. ஜப்பான் ப்ளேன் ஆஸ்பத்திரிக்குள்ளே வந்துடுமா?’

‘உள்ளே எதுக்கு வரணும்? மேலே பறந்தே... கடவுளே இதென்ன?’

சத்தம், வெளிச்சம், எங்கேயோ ஒரு ஜனக்கூட்டம் சேர்ந்து அலறிக்கிட்டு ஓடுறாங்க. பிரகாசமான பறவை நகர்வதுமாதிரி ஜன்னல்லே தெரியுது.

‘ஜன்னலை சாத்து. ஜன்னலை சாத்து...’

யாரோ ஓடிப்போய் வாசல் கதவு, ஜன்னல் இப்படி ஒவ்வொண்ணா சாத்துகிற சத்தம். இருட்டு இன்னும் ஆக்ரோஷமாகப் படர்ந்து வருது.

‘இந்த ராத்திரி நாம உசிரோட இருந்துட்டா இன்னும் கொஞ்ச நாள் ஜீவிக்கலாம்’

ஒரு குரல் வருது. நான் ஈன ஸ்வரத்தில் ‘என்ன சத்தம்?’ என்கிறேன்.

‘தீவிளி. பட்டாசு வெடிக்கறாங்க. வெங்காய வெடியை அடிச்சு வேடிக்கை பார்க்கறாங்க. நீயும் பட்டாசு வெடிக்கிறியா?’

முகம் தெரியாத யாரோ கேலி பேச, அபத்தமாக சத்தம் போட்டு வானத்தில் ஏதோ ஒண்ணு நகர்கிற பெரிய சத்தம். ப்ளேனா? ஜப்பான் காரன் இங்கேயும் வந்துட்டானா? சாகப் போறேனா? இவர் எங்கே போனார்? இருக்காரா? ஓ-ன்னு அலருறேன்.

ராவ்ஜி... எங்கே போயிட்டீங்க? எங்கே போனீங்க?

பக்கத்தில் எங்கேயோ பலமான சத்தத்தோடு எதுவோ விழுந்து இன்னும் அதிக வெளிச்சமும் சத்தமுமாக காற்றில் திறந்து மூடற ஜன்னல் வழியே தெரியுது.

‘சும்மா படுத்திரும்மா. எல்லாரும் இங்கேதான் அங்கே இங்கேன்னு இருக்கறாங்க. ஜப்பான்கார ப்ளேன் மெட்றாஸ் மேலே குண்டு வெடிச்சுக்கிட்டிருக்கு. சும்மா கிட.’

‘செஞ்சுலா, பத்து பேஷண்டை ஷெல்டருக்கு மாத்தியாச்சு. இங்கே நாலு மட்டும்தான் பாக்கி. நாலும் நடக்க முடியாத கேஸ்.’

மறுபடி வளைச் சத்தம்.

‘இந்த பேஷண்ட் எப்படி? கைத்தாங்கலா கூட்டிப் போகலாமா?’

‘செஞ்சம்மா, நடக்காதுபோல இருக்கு… இருக்கட்டும்’, ஒரு குரல் சொல்ல, இரண்டு பேரும் விலகி நடக்கிற சத்தம்.

நான் நடந்தா என்ன ஆகியிருப்பேன், நடக்கலை என்பதாலே என்ன ஆகப் போறேன்? இன்னொரு உறக்கம் வருது. கரகரவென்று எதையோ இழுத்து வர்ற சத்தம் கேட்டுக்கிட்டே இருக்கு.

‘காஞ்சம்மா, நீ தானா?’

யார் காஞ்சம்மா? படுக்கை பக்கம் ஏதோ வண்டி வந்து நிற்கிறது.

‘எந்த பெட்?’

‘பெட் எதுக்கு? சும்மா தரையிலே போடு.’

‘என்ன ஆச்சு?’

‘அடுப்பிலே இருந்து தீ மேலே விளுந்து…’

‘பொழைக்க வைக்கலியா?’

‘என்னத்தை? முப்பது வயசுப் பொம்பளை… அய்யோ அதென்னடி ஆகாசத்திலே?’

தொப்புனு எதுவோ என் பக்கம் தரையில் விழறது. ஒரு மெழுகுவர்த்தி இருந்தா என்னன்னு பார்க்கலாம். திரும்பவும் ப்ளேன் சத்தம். ஜன்னலைச் சாத்துங்க. அது திறந்திருந்தா உள்ளே வந்துடும்.

‘நீங்கல்லாம் யாரு? என் வீட்டுக்காரர் எங்கே? இது எந்த இடம்?’

நான் கேட்கிறேன். மறுபடி கேட்கிறேன். பதிலே இல்லை.

வெளியே அமைதியாக இருக்குது. இருட்டாக இருக்குது. தரையிலே, என் படுக்கை பக்கம் நெருங்கி யாரோ அசந்து தூங்கிக்கிட்டிருக்காங்க.

‘யார் அது தரையிலே?’

கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை.

‘வீட்டிலே அடுப்பு பத்த வச்சு... தீ மேலே வந்து... போய்...’

‘போய்... போய்... போய்?’

‘போய்ச் சேர்ந்தாச்சு.’

பக்கத்துலே கிடக்கிறவள் உயிரோடு இல்லை. நிமிஷாம்பா. நிமிஷாம்பா. எனக்கு என்ன ஆச்சு நிமிஷாம்பா?

‘ஒண்ணும் ஆகலே. நீ விடிஞ்சதும் கல்லுக் குண்டாட்டம் எழுந்து உக்காரப்போறே!!!

‘கற்பகாம்பாளே காப்பாத்து...’

‘கற்பகமும் நான்தான் குழந்தே, நிமிஷாம்பான்னு கூப்பிட்டே... ஒரு நிமிஷத்திலே உன் துன்பம் எல்லாம் தீர்த்து வைக்க வந்துட்டேன்.’

மல்லாந்து படுத்து முதுகெலும்பு நோவுது. இடது பக்கமா திரும்பி படுத்தேன். தரையில் கிடந்தது அசைந்த மாதிரி இருந்தது.

‘நிமிஷாம்பா. நிமிஷாம்பா...’

‘எதுக்கு பயப்படறே? அங்கே இருக்கறதும் இங்கே இருக்கறதும் நான்தான்.’

இருந்தாலும் பயமா இருக்கே. இந்தப் பக்கம் புரண்டு படுக்கக் கூடாது. மனசுலே திடமா உறுதி எடுத்துக்கிட்டேன்.

இன்னிக்கு காலையிலே இவள், இந்த உடம்பு பக்கத்துலே கிடக்கே இதுலே உயிரா இருந்தவ, குளிச்சு வீடு பெருக்கி, வாசல்லே கோலம் போட்டு, காலையிலே பசங்க, வீட்டுக்காரன் பசியாற இட்லி செஞ்சு, சட்னி

தொட்டுக்க வச்சுக் கொடுத்திருப்பா, பசங்க பள்ளிக்கூடம், அவன் ஆபீசு, கடை, இரும்படிக்கற இடம் போக புளிசாதம் பண்ணி டப்பாவிலே அடைச்சிருப்பா. போனதும் சாப்பிட்டுட்டு தீயோட ஏதோ விளையாடியிருக்கா. என்னடி விளையாடினே?

'திரும்பு சொல்றேன்... கீழே தரையிலே பாரு... நான்தான் கூப்பிடறேன்.'

'நிமிஷாம்பா திரும்பட்டுமா?'

'நீயே பயம்னு சொல்றே. நீயே திரும்பட்டுமான்னு கேக்கறே.'

'சரி நீ கோவிச்சுக்கிடாதே. இவர் எங்கேயோ போயிட்டார். நீயும் போயிடாதே. நான் திரும்பலே.'

இது என்ன இடம்? ஆஸ்பத்திரியா? பினாயில் வாடை அடிக்கலியே ஏன்? எதுக்காக இருட்டா வச்சிருக்காங்க?

'ஏனா, இங்கே பாரு, இப்படித் திரும்பேன். நான்தான் பேசறேன். உசிர் இல்லாட்ட என்ன மனசுக்குள்ளே பேசக்கூடாதா? எனக்கு மனசு இல்லையா?'

'நிமிஷாம்பா, நிமிஷாம்பா, இது என்ன விபரீதமா...'

'அதுவும் இதுவும் நான்தான்னு சொன்னேனே. விருப்பம் இருந்தா கேளு. இல்லேயா உறங்கப் பாரு.'

'இது என்ன இடம்னு கேட்டியே. இது என் மாதிரி உசிரில்லாத உடம்பை அடைச்சு வைக்கற கிடங்கி. நீ இங்கே என்ன பண்றே ரத்னா?'

'நிமிஷாம்பா, இந்த ஜடத்தை கொஞ்சம் அசங்காம இருக்கச் சொல்லேன். இது சவக் கிடங்காம்மா?'

'சே சே பொய். ஆஸ்பத்திரி வார்டுலே பெட் இதெல்லாம்.'

'திரும்பிப் படுத்துக்கோ. ராப்பூரா பேசிட்டிருக்கலாம். திரும்ப சத்தம் வருது பார். ஜப்பான் ப்ளேன் திரும்பி வந்துடுச்சு. இப்போ இந்த இடமே இடிஞ்சு தீப்பிடிக்கப் போறது. நீ வேணும்னா பாரு. நீயும் கீழே தரையிலே வந்துடுவே. கட்டில் எல்லாம் மூச்சு இருக்கற வரைதான் கொடுப்பாங்க.'

திரும்பவும் ப்ளேன் வருது... தூரத்திலே சத்தம் கேக்குது...

‘செஞ்சுலா… இன்னிக்கு நம்ம கதையை முடிச்சுடுவாங்கபோல இருக்கு… இங்கே இருக்கற பேஷண்ட் பேர் என்ன? ஒண்ணு பொன்னம்மாவோ என்னமோ சொன்னாங்க… ரத்தினா பாய்… இன்னொண்ணு? அதுக்கு பேர் வேறே வேணுமா? சவம்… ஏண்டி இம்புட்டு நெருக்கமா வர்றே… கட்டிக்காதேடி… கையை எடு… எப்படியோ இருக்கு… பயமா? என்ன பயம்? போனா நீ, நான், ரத்னா பேஷண்ட் எல்லோரும் ஒரேயடியா… பேஷண்ட் அழுவுது… விலகு… பார்த்துட்டு வரேன்.’

உதடு உலர்ந்து தாகம் எடுத்தது. மூத்திரம் போகணும்னு உடம்பு யாசிக்கிறது… எப்படியும் போயாக வேணும்… அதைப்பற்றி நினைத்தாலே சொட்டுச் சொட்டாக… ஐயோ… ராவ்ஜி… இருக்கீங்களா? ஏன் என்னைத் தனியா விட்டுட்டு போனீங்க… அம்மா… புண்ணியமா போவுது… எனக்கு ஒண்ணுக்கு போகணும்… கொஞ்சம் கைத்தாங்கலா பிடிச்சு… நான் நடப்பேன்… கால்லே சக்தி இருக்கு…

‘இந்த இருட்டுலே எங்கே கக்கூஸ தேடி உன்னை இட்டுப் போக? உன் படுக்கைக்கு அடியிலே பெட் பான் இருக்கு… அதுலே போ… இல்லே பெட் மேலேயே போ… செஞ்சுலா… பேஷண்டுக்கு பெட் பான் வை…’

‘எப்படி எடுக்க? குனியணுமே… இருட்டிலே எங்கேன்னு தெரியாதே.’

‘இருட்டுலே என்னைத் தடவத் தெரியுது…’

‘ரத்னா… கொஞ்சம் இங்கே இந்தப்பக்கம் புரண்டு படுடீ… காலையிலே நீ என்ன சமையல் செஞ்சே? பணியாரம்? சட்னி? உப்பு போட்டியா ரெண்டிலேயும்? நான் போடலே… அதுக்காக அந்தாள் பண்ணின ரகளை… இப்போ பாரு கரிக்கட்டையா தரையிலே உருண்டு கிடக்கேன்.’

‘நிமிஷாம்பா… நிமிஷாம்பா… நிமிஷாம்பா… எழுந்திருக்கணும்… பெட்பானை வச்சுவிடச் சொல்லணும்… வேணாம்… எங்கே போய் யூரின் போகணுமோ அங்கே வரைக்கும் கூடவே வா… நிமிஷாம்பா… வா..’

வந்தேன்னு சொல்லிட்டு அம்மா வந்தான்னுதான் நினைக்கறேன். எங்கிருந்தோ அசுர பலம் வந்து எழுந்து நின்னேன். வலியே தெரியலை… இனிமேல் வலி வராது… எனக்குத் தெரியும்… ஜன்னல் வழியா புகை சன்னமா வந்துட்டிருந்தது… இருட்டு மாறி ரெண்டு விளக்கு எரிஞ்சுது.

நான் யூரின் போய்ட்டு வரும்போது எல்லா விளக்கும் எரிய வெளியே இருந்து கதவை இடிக்கும் சத்தம். என் படுக்கைக்கு வந்தேன்.

உட்கார்ந்தபடி திரும்பி தரையைப் பார்த்தேன்.

என்னால் பார்க்க முடியாத கோரமாக ஒரு பெண் உடம்பு.

ஓஒன்னு நான் பயந்து அலறும்போது ராவ் சாகிப் குரல்.

‘ரத்னா வந்துட்டேன்... நான் வந்தாச்சுடா..’

எங்க ராவ்ஜி வந்தாச்சு... நிமிஷாம்பா அனுப்பி வச்சிருக்கா... ஒரு நிமிஷம்... நானும் வந்தாச்சு..

ஒண்ணு மட்டும் சொல்லியே ஆகணும். நேத்து ராத்திரி இருந்த பயங்கொள்ளி ரத்னா இல்லே இப்போ நான். அவர் இல்லாம இருந்தாலும் சமாளிக்க முடியும் என்னால். அவரையும் சேர்த்துப் பார்த்துக்கணுமா அதுவும் முடியும். பட்டணம் பொடி போடாமல் ஒரு நாள், ஒரு வாரம் இருக்க முடியுமா, அது கூட முடியும். ஜப்பான்காரன் ப்ளேன்லே வந்து கற்றுக்கொடுத்துட்டுப் போயிருக்கான்.

★

நான் ராமோஜி இதைத் தொடர்ந்து எழுதறேன்.

நேற்றைக்கு ஒரு ராத்திரி என் அருமை ரத்னாவைப் பிரிந்து துடிச்சுத் துவண்டு இருந்தபோது அவள் தனியா என்ன கஷ்டப்பட்டா-ன்னு அவள் சொன்னதைக் கேட்க என் கண்ணுலே ரத்தம் கொட்டறது...

நாங்க, அப்பாவை, அம்மாவை, மகளை, மகனை, பெண்டாட்டியை ஆஸ்பத்திரி உள்ளேவிட்டுட்டு, வாசல்லே பெரிய கதவைப் பூட்டி வச்சதாலே ராத்திரி முழுக்க என்ன ஆச்சுன்னு தெரியாமல் வெளியே துன்பப்பட்டோம்...

ரொம்ப அருகிலே ஆனா நடுவிலே ஒரு கதவு அடைத்து ரொம்ப தொலைவிலே நான் ரத்னாவைத் தொலைச்சேன்...

இங்கே என்னோடு இருந்த ஒவ்வொருத்தரும் நெருங்கிய யாரையோ நேற்று ராத்திரி முழுக்க இழந்து போனோம்...

ஜப்பான் விமானம் ஒண்ணே ஒண்ணு வந்து ஏழெட்டு குண்டு போட்டுட்டு ஓடினதாம்... ஹார்பர்லே ரெண்டு கிடங்குலே தீ பிடிச்சு அணைச்சாங்களாம்...

அந்த எதிரி விமான பசங்க, நாலு பேர் இருப்பாங்களா, அவங்க... பத்து லட்சம் பேர் இருக்கற ஒரு பெரிய பட்டணத்தையே முழங்கால் நடுங்க பயந்துபோய் பேயடிச்ச மாதிரி ஆக்கி வச்சுட்டாங்க..

ஏஆர்பி சைரன் ஏன் நேற்று ராத்திரி ஜப்பான் விமானம் வந்தபோது சத்தம் போடலே... இன்னிக்கு பேப்பர்லே போட்டிருக்காங்க... போன மாசம் வந்த அடைமழையிலே சைரன் எல்லாம் கரண்டு கனெக்ஷன்விட்டுப் போய் ஊமையாயிடுச்சாம்... மழை முடிஞ்சு அதை எல்லாம் செக் பண்ணி தயாரா வைக்கணும்னு கவர்னர், மேயர், ஏஆர்பி வார்டன்கள் யாருக்குமே தோணலியே...

நம்ம பேட்டை எலக்ட்ரீஷியன் மணவாள நாயுடு சொன்னார் –

‘சாதா கனெக்ஷன் பிரச்னைதாங்க... வயரை சீவிட்டு போட்டு திருகியிருந்தா எட்டு ஊருக்கு சைரன் அலறி இருக்கும்.’

சர்க்கார் மேலே சொன்னதுதான் அநியாயம்... ‘ஜப்பான்காரன் குண்டு போட வர்றானான்னு கவர்மெண்ட் சதா பார்த்துட்டிருந்து எச்சரிக்கை தர முடியாது... ஊர் உலகத்திலே அவங்க அவங்க ஜாக்கிரதையா இருக்க வேண்டியது.’

நான் ஏஆர்பி வார்டனாக பதவிக்கு வந்தால் நிச்சயம் நாயுடுவை வைத்து வாராவாரம் சைரனைச் சோதனை செய்ய வைப்பேன்.

மீசை நாயர் டாக்டரை ஆறாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் டாக்டராக அறிவிக்க சிபாரிசு செய்வேன். நிமிஷாம்பாள் கோவிலுக்கு வாராவாரம் தம்பதி சமேதராகப்போய் அம்மாவிடம் பேசிவிட்டு வருவேன்.

அவளிடம் கேட்டிருக்கிறேன் –

இன்னொரு ஜப்பான் விமானம் குண்டுபோட மெட்றாஸுக்கு வர வேண்டாம்.

★★★

ஆறு

# ராமோஜியின் திருப்பதி பாத யாத்திரை – 1944 மதறாஸ்

‘ர த்னா, என் சீமாட்டி, என் சக்ரவர்த்தினி, குட் மார்னிங். உன் பெயர் தினசரி பேப்பரில் வந்திருக்கே. பார்த்தாயோ. க்யாதி மிகுந்து விட்டாயடி பெண்ணே. ஆயிரம் அபிநந்தனம் சொல்லி உன் காலைப் பிடித்து நமஸ்காரம் செய்கிறேன்.’

ஊஞ்சலில் ஜோடியாக அமர்ந்து, கையில் விரித்துப் பிடித்த வாரப் பத்திரிகையோடு ரத்னாவின் இடுப்பை வளைத்த நான், மனம் முழுக்க அடர்ந்து பொங்கிய பெருங் களிப்போடு சொன்னேன்.

‘இது காலுமில்லை, அது டெய்லி பேப்பரும் இல்லை’ என்று நானும் கூடச் சேர்ந்து சொல்லும்படியாக ரத்னா கிண்கிணிச் சிரிப்போடு தொடர, இன்னொரு ஞாயிற்றுக்கிழமை சுப உதயம் ஆனதாக வீட்டுத் தோட்டத்தில் பறவைகள் அறிவித்துப் பாடிக்கொண்டிருந்தன.

‘இதோ பார் பாரதி நினைவு மண்டபத்துக்கு நீ நிதி உதவி செய்த விவரம்’ என்று வாரப் பத்திரிகைப் பக்கத்தில் விரல் ஓட்டிக் காட்டினேன்.

‘நானா, நிதியா? எப்போ? கனவிலா?’ அழகாக ஆச்சரியப்பட்டாள். சுட்டப்பட்ட இடத்தில் அச்சடித்திருந்ததை அவள் சத்தம் கூட்டிப் படித்தாள் – புரசைவாக்கம் கஸ்தூரி மாதர் சங்கத்தின் சார்பாக தலைவி ரத்னா பாய் ஒரு ரூபாய்.

‘இது யார் இன்னொரு ரத்னா பாய்? என் சக்களத்தியா? அவள் ஏன் பாதிரியாருக்கு தானம் தரணும்? அதுவும் முழுசாக ஒரு வெள்ளி ரூபாயை எடுத்து இந்தாரும் வச்சுக்கும் என்று?’

‘இது மாதாக்கோவிலுக்கு பூசை வைக்கப் போகிற பாதிரிகள் யாருமில்லை. இவர் பாரதியார். சுப்பிரமணிய பாரதியார்’ என்றேன். அவள் முகத்தில், இதெல்லாம் எனக்கு ஒண்ணும் புரியறதில்லே எனும் அறியாத களை.

அவளுக்கு வைசிராயைத் தெரிகிறது, மேயரைத் தெரிகிறது, கவர்னரைத் தெரிகிறது. பாரதியாரை ஏனோ அறியாமல் போனாள் என்பது ஆச்சரியம்.

‘பாரதியார் தெரியாதா? நீ வியாசர் அமுதம் படிக்கிற அதே பத்திரிகையில் அவர் கவியே இல்லை என்று அறிவித்து, பிறகு கரணம் அடித்து அவரே மகாகவி என்று விடாமல் எழுதுகிற வழக்கம் உண்டே. அதொண்ணும் நீ படிக்கிறதில்லையா?’ எனக் கேட்டேன்.

‘அவ்வளவு நுட்பமாகப் பத்திரிகை படிக்க நேரம் எங்கே கிட்டுகிறது நாதா’ என்றபடி அச்சடித்த பத்திரிகையின் அச்சுமை வாடை நுகர்ந்து, நாசி சுருக்கி, முகம் சுளித்தாள் ரத்னா பாய். நான் இதற்காகவே காத்திருந்த மாதிரி அவள் மனக் குறிப்பை அறிந்தவனாக, ஊஞ்சலுக்குப் பின்னால் இருந்து பட்டணம் பொடிச் சிமிழை எம்பி எடுத்துத் திறந்து ஒரு சிட்டிகை அள்ளி எடுத்து அந்த அழகான மூக்கின் வெளியே விரலைக் கிடைமட்டத்தில் வைத்தேன்.

ஒற்றை உறிஞ்சில் அதை முகர்ந்து சுகம் கொண்டாடி ஈடுபட்டுத் தும்மி என்மேல் பட்சமாகச் சிரித்தாள் பேரழகி. என் மேல்துண்டால் அந்த நாசியைத் துடைத்து அவளை முஸ்தீபே இல்லாமல் அணைத்துக் கொண்டேன்.

அவளுக்கு பாரதியார் தெரியாவிட்டால் பரவாயில்லை. எனக்குத் தெரிந்தாலே எதேஷ்டம்.

ரத்னா பாய்க்கு மராத்தி அபங்க் தோத்திரப் பாடல்களும், மராத்தி ராமாயணமும், இந்தி ராமன் கதை துளசிதாசரின் ராமசரித மானஸும் கரதலப்பாடமாக புத்தியில் உண்டே, அதொண்ணும் எனக்குப் பாடமில்லையே. இதை முச்சூடும் இத்தனை கோர்வையாக வராமல் துண்டு துணுக்காக வெளிப்படுத்தி அவளிடம் நைச்சியமான குரலில் சொல்ல, உடன் திருப்தியடைந்தாள்.

‘சரி, பாரதியார் சுகமாக ஜீவிக்கட்டும். இந்த இன்னொரு ரத்னா பாய் யார்? அப்புறம், இதென்ன நம் ஆளுகைக்கு உட்பட்ட புரசைவாக்கத்தில் திடுதிப்பென்று ஒரு கஸ்தூரி மாதர் சங்கம்?’

அவள் கேள்விக் கணைகளால் என்னைத் துளைத்தெடுக்க, சமையல் கட்டில் கால் நீட்டி சுவரில் சாய்ந்து ஒரு ஐந்து பத்து நிமிடம் அவளோடு சல்லாபம் செய்தபடி சற்றே நேரம் போக்க உத்தேசித்தேன். இது பழைய தமிழில் வந்து போகும் சல்லாபம். சும்மா பேசிக்கொண்டிருப்பது.

'ஊரோடு, தமிழ் பேசுகிற எத்தனையோ தேசங்களில் இருந்து நிதி வசூல் செய்து பாரதியார் என்ற மகா கவிஞருக்கு நினைவு மண்டபம் எழுப்பப் போகிறது. அறிவாய். அவர் இப்போது உசிரோடு இல்லை. அவர் பிறந்த ஊரில் இந்த மண்டபம் கட்ட, எல்லோரும் நன்கொடை தருகிற மாதிரி, கோட்டை கிளார்க் ராமோஜி ராவும் ஒரு ரூபாய் அன்பளிப்பு மணியார்டர் அனுப்பினேன். என் பெயரில் எதுக்கு என்று உன் பெயரைப் போட்டபோது மாதர் சங்கமும் மனதில் உதிச்சு வந்தது. அதான் கஸ்தூரிபா மாதர் சங்கத் தலைவி ரத்னா பாய். நீயேதான்.'

'கஸ்தூரி மாதர் சங்கம்னு நீங்க சொல்லிக் கேட்ட மாதிரி இருந்துது', அவளுக்குப் பாம்புச் செவி.

'கஸ்தூர்பான்னு போட வேண்டாம், நான் சர்க்கார் உத்தியோகஸ்தன். அதுனாலே சங்கம் பேர் கஸ்தூரி மாதர் சங்கம். பூரணம் எப்படி இருந்தா என்ன, கொழக்கட்டை வெந்திருந்தா சரிதான்.'

நான் பெருமையோடு சொன்னாலும், இந்த வாதம் பொத்தலானது என்று தெரியும்.

'அது கிடக்கட்டும். நீங்க தானே நிதி கொடுத்தது. உங்க பெயர் பத்திரிகையிலே வந்தா கௌரவமா இருக்குமே. நான் எங்கே நடுவிலே வந்தேன்?'

ரத்னா பாய் கேட்க, 'சர்க்கார் உத்யோகஸ்தன் அரசாங்க விரோதமான தாகக் கருதக்கூடிய, சர்க்காரை விழுந்து விடும்படிக்கு அசைக்கப் பார்க்கும் காரியம் எதுவும் செய்யலாகாது பெண்ணே. ஒருவேளை சுதந்திரம் கிடைத்தால் அப்புறம் கஸ்தூரிபா சங்கம்னு மாத்திடலாம். அதுக்குள்ளே கஸ்தூரிபா யார்னு நம்ம ஆளுங்க மறக்காமல் இருக்கணும்' என்று விளக்கம் சொன்னேன்.

'மகாகவி, உலகமே பாராட்டி துதிக்கறாங்கன்னு சொல்றீங்க. அவருக்கு நீங்க ஒரு ரூபாய் கொடுத்தா பிரிட்டிஷ் சர்க்கார் எப்படி ஆட்டம் காணும்? அது எப்படி ராஜதுரோகமாகும்? காசு வசூல் பண்ணிக் கட்டற கட்டடம் எப்படி தேசவிரோதமாகும்? தேசத் துரோகம் என்றால், அதைக் கட்ட கொத்தனார், சித்தாள் எங்கேயிருந்து கிடைப்பாங்க? இங்கிலீஷ்கார துரைகளும் துரைசானிகளும் சாரத்திலே ஏறி சும்மாடு வச்சுக்கிட்டு வேலை பார்ப்பாங்களா? செங்கல் சிமெண்ட் யார் கொடுப்பாங்க?'

வரிசையாக நேர்த்தியாக அடுக்கினாள் அவள்.

அவள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் நகர்ந்தேன்.

‘நம்ம தெலக்ஸ் புவனா கல்கத்தாவுக்கு ஷூட்டிங் போயிருக்காட்டா, அவளையே கஸ்தூர்பா மாதர் சங்கம் ஆரம்பிச்சு வைக்கச் சொல்லியிருப்பேன்’ என்றாள் ரத்னா.

செய்திருப்பாள்தான். அந்த அளவு இந்த அழகிகளின் சிநேகிதம் நாளொரு தெலக்ஸ் மேனியும் பொழுதொரு சினிமா வண்ணமுமாக வளர்வதை நான் பார்த்துப் பெருமூச்சு விடுகிறேன்.

தொடர்ந்து வந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில், அண்டை அயலில் ஏழெட்டு பெண்களை மஞ்சள் குங்குமம் வாங்க அழைத்து ஜமக்காளம் விரித்து உட்கார வைத்து அவல் கேசரி கிண்டி உபசரித்து பத்து நிமிஷம் என் துணையோடு ரத்னா பிரசங்கம் செய்தாள். நான் அவ்வப்போது கைதட்டி கூட்டத்தையும் கைகாட்ட, அந்த மாதர் சங்கம் சுகப் பிரசவம் ஆனது.

மஞ்சள் குங்குமத்தோடு தோட்டத்தில் காய்த்த பச்சுபச்சென்று பிஞ்சு வெண்டைக்காயும் வந்து சிறப்பித்த சகல மாதருக்கும் பிரசாதமாக ஈயப்பட்டது.

வாசலில் சின்னதாக ஒரு தகரப் பலகையில் சங்கம் பெயர் எழுதித் தொங்கவிட்டால் நேர்த்தியாக இருக்கும் என்று கேசரியை ருசித்துச் சாப்பிட்ட ஸ்திரிகள் அபிப்பிராயப்பட, அது அப்புறம் பார்த்துக்கலாம் என்று அவசரமாக ஒத்திவைத்து, சங்கத்தில் என்ன எல்லாம் செய்யலாம் என்று ஆலோசனை தரத் தொடங்கினேன்.

முதல் அட்டவணை ஐட்டம் தேசபக்தி, தெய்வ பக்தி கானங்கள் பாட உறுப்பினர்களுக்கும் சககுடும்பத்தினருக்கும் சொல்லிக் கொடுப்பது.

‘இதுக்கு காசு எதுவும் தரவேண்டியது இல்லையே?’

சுபாங்கி அம்மாள் கேட்டாள்.

‘ஒரு தம்பிடி கூட யாரும் யாருக்கும் தர வேண்டியதில்லை. பாடிப் பாடி தொண்டை கட்டினால் பெப்ஸ் இருமல் மாத்திரை வாங்க ஓர் அணா செலவு பிடிக்கலாம். சும்மா தொண்டை கட்டினாலே அந்தச் செலவு உண்டே.’ என்றேன் சமாதானமாக.

‘பெப்ஸூ எல்லாம் எதுக்கு? சித்தரத்தையைத் தட்டிப்போட்டுக் காய்ச்சி ரெண்டு வேளை அந்த வென்னீர் குடித்தால் போதும்’ என்று விலாசினி சொன்னாள். எதிர் வீட்டு கேளப்பன் நாயர் மனைவி. சொல்லியிருப்பேன் என்று நினைக்கிறேன் – டைப்பிஸ்ட் குடும்பம் அவர்களுடையது.

ஆல் இந்தியா ரேடியோ மதறாஸில் பாடவும் பேசவும் வித்வான்களை யும், பேச்சாளர்களையும் கேட்டுக்கொண்டு அனுப்பும் கோரிக்கைக் கடிதம் கேளப்பன் ரேடியோ காரியாலயத்தில் ஹால்டா டைப்ரைட்டரில் டைப் அடித்துத்தான் போகும்.

மலையாள பூமிக்குச் சொந்தமான அபாரமான வனப்பும் அபரிமிதமான வளமும் கொண்ட விலாசினி ராணுவ ஆபீசில் சாத்வீகமான டைப்பிஸ்ட். அவளுடைய ஆபீஸ் ரெமிங்டன் டைப்ரைட்டரில், பட்டாளத்தில் சேர, ஆன்சிலரி நர்ஸிங் சர்வீஸில் சேர மனுப்போட்டவர்களுக்கு நியமனக் கடிதம் போகும். கடிதத்தில் தொடங்கும் டியர் சாரில் டியருக்கும் சாருக்கும் இடையே நாற்காலி போட்டு உட்காரலாம். யுவர்ஸ் ட்ரூலி என்று இறுதியாகக் கையெழுத்துப் போட இடம்விட்டுப் பெயர் கீழே தரும் இடத்தில் வெற்று வெளியில் படுத்துக்கொள்ளவும் கூடும். அவ்வளவு இடைவெளி ஏன் வந்தது என்று அவளுக்குத் தெரியும். அப்புறம் சாவகாசமாக ரத்னா பாய் பக்கத்தில் இல்லாத நேரம் சொல்கிறேன்.

டைப்பிஸ்ட் உத்தியோகத்தில் பெரும்பாலும் ஆங்கிலோ இண்டியன் மாதர்களே இதுவரை இந்தியா முழுக்கக் கண்ணில் படுகிறார்கள் என்றாலும், விலாசினி டைப் அடிக்கும் முதல் மலையாள, தென்னிந்திய வனிதை. விலாசினி ரத்னா பாய்க்கு உற்ற தோழி என்பதில் எனக்கு சந்தோஷமே. கேளு நாயர் தோளில் சதா மாட்டி இருக்கும் சீலைக் குடை மட்டும் அவரிடம் எனக்குப் பிடித்த அம்சம்.

இது விலாசினி வகையறாக்களின் கதை இல்லை என்பதால், மறுபடி ரத்னா பாய்.

ரத்னா பாய் அக்ராசனரான அதாவது தலைவியான கஸ்தூரி மாதர் சங்கத்தில் என்ன எல்லாம் செய்வது என்பதுபற்றி. பாட்டுச் சொல்லித் தருவதுபற்றிப் பேச ஆரம்பித்தோம்.

‘சரி, பாட்டு சொல்லித் தரலாம். யார் காசு வாங்காமல் பாட்டு சொல்லித் தர வருவாங்க?’

நான் தயாராக வைத்திருந்த அஸ்திரத்தை எய்தேன்.

ஆபீசில் என் செக்ஷன் சூப்பரன்டண்ட்டண்ட் பந்துலு சார்பற்றி ஏற்கெனவே சொன்னேனோ தெரியவில்லை. அவர் என் மேல் பட்சமுள்ளவர்தான். எட்டு வருஷம் முன் சப்ராஸி, பட்லர், டிரைவர், தோட்டக்காரன் இப்படி கவர்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் உத்தியோகஸ்தர்களான ஊழியர்களின் சம்பள விஷயம் கவனிக்கிற ஜூனியர் கிளார்க்காக கோட்டையில் வேலைக்குச் சேர்ந்தபொழுது எனக்கு மேலே ஹெட் கிளார்க்காக இருந்த நல்லவர் அவர். என்னோடு கூட பந்துலு சாரும் ப்ரமோஷனில் குடிநீர் விநியோக இலாக்காவுக்கு வந்தார். நடுவில் பென்ஷன் இலாகாவுக்கு ரெண்டு பேரும் டெபுடேஷன் என்ற தாற்காலிக இடமாற்றத்தில் போயிருந்தோம்.

சூப்ரண்டண்ட் பந்துலு சார் சுமாராகப் பாடக் கூடியவர் என்று கோட்டையில் பரவலாகப் பரவிய தகவல். அவர் பாட்டுப்பாட கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட மாட்டார்.

கோட்டையில் பிரிட்டிஷ் சக்கரவர்த்தி படம் போட்ட உறையில் வந்த சர்க்குலர், பைல்களுக்கு மஞ்சள் குங்குமம் தடவி பூஜையில் வைக்கும் சரஸ்வதி பூஜை கொண்டாட்டத்தில் ஒரு மன்னர் வாழ்த்து, ஒரு தெய்வ வாழ்த்து என்று கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அவர் நின்றபடிக்கே கச்சேரி செய்யும்போது கவர்னர் ஆர்தர் ஆஸ்வால்ட் ஜேம்ஸ் ஹோப் துரை கூட ஐந்து நிமிடம் எட்டிப் பார்த்துவிட்டு, தொன்னையில் கொண்டைக்கடலை சுண்டல் வாங்கிக் கொறித்துக்கொண்டு போகாமல் இருக்க மாட்டார்.

எனினும் பந்துலு சார் சர்க்கார் அதிகாரி என்பதால் தொடர்ந்து சங்கீத சேவையாகப் பாட, பாட்டு கிளாஸ் எடுக்க என்று அவருக்கு வாய்ப்புகள் கிடைத்தால், அவற்றை மடைமாற்றி அவருடைய மனைவி பக்கம் திருப்பி விடக் கூடியவர் என்றும் தெரிந்து வைத்திருக்கிறோம். அந்தம்மா இவரைவிட இசையில் பெரிய கை. கான சரஸ்வதி. ரத்னாவுக்கும் அவளைத் தெரியும்.

காசு எல்லாம் ரெண்டாம் பட்சம், இருபதாம் பட்சம். பெயர் வந்தாலே போதும். பன்னிபாய் என்ற அந்த முப்பத்தைந்து வயது ஸ்திரி பாடினால் உலகமே உறைந்து விடும் என்றும் கேள்வி. மேலும் அவள் கீதம் பாடி சந்தோஷவதியானால், பாட ஏற்பாடு செய்த நல்லோர் மேல் சூபரின்டெண்டெண்ட் கடாட்சம் தற்காலிகமாவது விழ வாய்ப்புண்டு.

எல்லாம் சரியாக ஒன்றோடொன்றாக சங்கிலிப் பிணைப்பில் வந்து சேர, என் வீட்டுக் கூடத்தில் விரைவில் பாட்டு கிளாஸ் ஆரம்பமாகப் போகும் செய்தியை சூப்பரின்டெண்டெண்ட் சாரே எனக்கு அறிவித்தார்.

‘வரும் ஞாயிற்றுக்கிழமை உங்க வீட்டுலே பாட்டு கிளாஸ்னு பன்னிபாய் சொன்னா. உபசாரம்பற்றி எல்லாம் எந்த சந்தேகமும் இல்லே. உங்க கிரஹ மகாராணி ரத்னா பாய் அதுக்கு எல்லாம் குறைச்சலே வைக்க மாட்டாங்கன்னு தெரியும். தெரிவிக்க வேண்டிய சம்பிரதாயத்துக்காக உம்மகிட்டே சொன்னேன்’ என்று அதிசயமாக என் தோளில் தட்டிச் சிரித்தார்.

அவர் தன் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடி பெருமையோடு என்னைப் பார்த்துத் தொடர்ந்தார் –

‘உங்க பேட்டைப் பெண்கள் இன்னும் ரெண்டே மாசத்திலே நந்தன் சரித்திரக் கீர்த்தனை, தியாகராஜ க்ருதிகள், ராம நாடகம் இப்படி பெரிய உருப்படிகளை சுலபமா பாடப் போறாங்க. அப்படியே ஒண்ணு ரெண்டு தேசபக்தி கானங்களும் பாடக் கத்துப்பாங்க.’

எனக்குக் கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. நல்ல நல்ல தேசபக்திப் பாட்டுகள் எத்தனையோ உண்டே. அவற்றைச் சொல்லித் தரலாமே. அதென்ன பத்தோடு பதினொன்றாய் ஒண்ணு ரெண்டு பாட்டு மட்டும்?

பத்துக்கு நாலு பழுதில்லை. கற்றுக்கொள்ளட்டும் ரத்னா பாய். இல்லாவிட்டால் தெருவில் உச்சிப் பகலில் எங்கேயோ கடையில் முழங்கும் ரிக்கார்டில் ‘பண்டித மோதிலால் நேருவைப் பறிகொடுத்தோமே’ என்று கே.பி. சுந்தராம்பாள் தேம்புவது, அவர் கஸ்தூர்பா மரணம்பற்றி, ‘உமை மறந்திடப் போமா’ என்று பிரலாபித்துப் பாடுவது, கதர்க்கொடி கப்பல் காணுதே என்று விஸ்வநாத தாஸ் ஹார்மோனியத்தோடு சேர்ந்து ராகம் இசைப்பது இப்படியானதெல்லாம்கூட தேசபக்தி கானம் என்று ரத்னாவும் இன்ன பலரும் தப்பு அர்த்தம் செய்துகொள்கிறார்கள். நானே இதெல்லாம் தேசபக்தி கானமா என்று அவ்வப்போது குழம்புவது உண்டுதான்.

சூப்பரின்டெண்ட்டெண்ட் என்னை அவர் அறையின் மின்சார விசிறி ஸ்விட்சை போடும்படி சைகை காட்டியபடி தொடர்ந்தார், ‘உங்க வீட்டம்மா சுஸ்வரமா, பாவத்தோடு பாடப் போறாங்க, நீங்க வேணும்னா ஓரமா நின்னு கைத்தாளம் போடலாம். பாடுவீங்களா?’

‘மயில் குயிலாச்சுதடி அக்கச்சி’ என மாண்டு ராகத்தில் சன்னமாகப் பாடியபடி மின்விசிறிக் காற்றில் சுகப்பட்டு அமுத்தலாகச் சிரித்தார். அடுத்த நிமிடம் ‘மயில் குயிலாச்சுதடி அத்தங்கா’ என்று அதையே மாற்றிப் பாடினார். ஏன் மாட்டார்? தெலக்ஸ் புவனா அவருடைய அத்தங்காள் ஆச்சே.

‘பாடுவீரா?’ என்று கண்கள் பிரகாசிக்க என்னைக் கேட்டார்.

‘இல்லே சார், மிருதங்கம் வாசிக்கத் தெரியும். கஞ்சிராவும் மோர்சிங்கும் கூட, சொல்லிக்கறாப்பல பழக்கம் உண்டு’ என்றேன்.

‘அப்படியா, நான் வீட்டுலே ஆராதனை நடத்தறபோது இதெல்லாம் வாசிக்க ஆள் கிடைக்க மாட்டேங்கறது. ஒரு குரல் கொடுக்கறேன். வாசிச்சுட்டு பிரசாதம் வாங்கிப் போம். போக வர டிராம் செலவு நம்ம கணக்குலே. இதர செலவினம் காந்தி கணக்குலே எழுதிக்கும்.’

பந்துலு சார் பலமாகச் சிரித்து அதற்கு முன்னோ பின்னோ பார்த்ததில்லை.

இதேதடா தேவையில்லாமல் வாயைக் கொடுத்து இப்படி மாட்டிக் கொண்டேனே என்று யோசனையோடு அவர் அறையிலிருந்து வெளியே வரும்போது சூபர்நியூமெரரி, அதாவது கூடுதல், அதாவது உபரி, அதாவது எதுக்கும் இருக்கட்டும் என்று போட்டு வைத்த சூபர்நியூமரரி கிளார்க் ஆராவமுது அறை வாசலில் ஃபைலோடு நின்றிருந்தார்.

அவருக்கு முன்னால் பந்துலு சார் தரிசனத்துக்காக வந்த இன்னும் இரண்டு டிபார்ட்மெண்ட் சீனியர் குமஸ்தர்கள், நிற்பதா இருப்பதா என்ற குழப்பத்தோடு அங்கே இருந்த ஒற்றை நாற்காலியைப் பார்த்தபடி இருந்தார்கள்.

மாதம் ஒரு தடவை மெட்றாஸில் இருந்து திருப்பதிக்கு நடந்து, அங்கே போய்த் தரிசனம் செய்து, திரும்பி நடந்தே மெட்றாஸ் வந்து சேர்கிறவர் ஆராவமுதன். மெட்றாஸிலிருந்து திருப்பதி கணிசமான தூரம். இது எப்படி சாத்தியம்?

நான் அவரிடம் ஒருமுறை ஆர்வத்தோடு விசாரித்தேன் இரண்டு வருஷம் முந்தி ஒரு சாயந்திர நேரம் அது.

ஆராமுது என்னைப் பக்கத்தில் உட்கார்த்திச் சொன்னது இது –

‘உமக்கே தெரியுமே மதறாஸில் இருந்து திருப்பதி எண்பது மைல் தூரம். இது ஒற்றைவாடையில் திருப்பதிக்குடை தாண்டும் இடத்திலிருந்து திருப்பதி மலை அடிவாரம் வரைக்கும். போக எண்பது வர எண்பது ஆக நூற்று அறுபது மைல், அப்புறம் தரிசனத்துக்காக திருமலை ஏறி இறக்குதல் இப்படி ரெண்டு நாளில் முழுக்க நடப்பது சிரமம். எங்க அப்பா நடந்து போனார். ஆனால் அவர் போய் அங்கேயே இருந்துட்டார். இப்போ நான் இதை செஞ்சுக்கிட்டிருக்கேன்’ அவர் வெற்றிலை போட்டபடி என்னை ஆர்வமாகப் பார்த்தார்.

‘நீங்க போறதாக சொல்றீங்களா, இல்லேன்னு சொல்றீங்களா?’ குழப்பம் தாங்காமல் கேட்டேன்.

‘வால்டாக்ஸ் ரோடு கடைசி யானைக்கவுனியிலே இருந்து ஐந்து மைல் விடுவிடுன்னு நடப்பேன். ரோட்டுலே பஸ்ஸை நிறுத்தி ஏறிப்பேன். திருப்பதி பஸ் இல்லேன்னா தடா போகிறது. திருப்பதிக்கு ஐந்து மைல் இருக்கும்போது இறங்கிடுவேன். அங்கே இருந்து மலையடிவாரம், மலையேற்றம் எல்லாம் நடந்துதான். திரும்பும்போதும் அதேபடி நடை, பஸ் சவாரி, நடை. இதான் விஷயம்.’

அவர் சொன்னது சுவாரசியமாக இருந்தது. ஆராவமுதுவிடம் சொன்னேன் அதேபடிக்கு.

‘நீரும் என்னோடு ஒரு யாத்திரை வாரக் கடைசியிலே வாரும்; பிடிச்சுப்போனா விடவே மாட்டீர்’ என்று அழைப்புவிட்டு முகத்தை ஏறிட்டுப் பார்த்தார் ஆராவமுது.

‘அதிகாலையிலே கோவிந்த நாமம் முழங்கியபடி காலை எட்டிப் போட்டு நடக்கறது தனி அனுபவம் ஓய். கிட்டினா விட மாட்டீர்.’

எனினும், அப்புறம் கொஞ்சம் நாள் நான் அவரிடமிருந்து தப்பிக்க முனைந்தேன். பல்வலி என்றோ முதுகுவலி என்றோ சால்ஜாப்பு சொல்லித் தப்பித்தது மட்டுமில்லாமல் அவர் திருப்பதி லட்டோடு திங்கள்கிழமை கொஞ்சம் தாமதமாக ஆபீசில் நுழைந்தால் எனக்கான பிரசாதத்தை வேறு யாரையாவது வாங்கி வைத்திருந்து அப்புறம் தரச்சொல்லிவிட்டு வெளியே காண்டீனுக்கு ஓடுவது என் வாடிக்கை.

‘அடுத்த வாரம் சனி, தொடர்ந்து திங்கள் லீவு. ரெண்டு பண்டிகை அடுத்தடுத்து வருதே. திருப்பதி போய்த் திரும்புவோம். வாங்க’ என்று

சொல்லியபடி அவர் சூபரின்டெண்டெண்ட் அறைக்கு முன்னால் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார்.

‘வரும் சனிக்கிழமை வீட்டில் பாட்டு கிளாஸ் சமஷ்டி விருந்தோடு தொடங்கும்’ என்று என்று ரத்னா பாய் அறிவித்திருந்த நினைவு.

‘அவங்க அவங்க வீட்டுலே சாம்பார், அவியல், ரசம், பாயசம், தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம், தயிர்சாதம், சப்பாத்தி, குருமா, அப்பளம், வடை இப்படி வீட்டுக்கு ஒரு பதார்த்தமாக தயார் செஞ்சு எடுத்து வந்து சங்கம் ஆபீஸ்லே சாப்பிட்டு பாட்டு பாடற திட்டம்’ என்று கஸ்தூரி மாதர் சங்கத் தலைவர் முன்கூட்டியே சொல்லிய விஷயம் அது.

அத்தனை வீடு தெருவில் உண்டா என்று சந்தேகத்தைக் கிளப்பினேன். இல்லைதான். ஆகவே அடுத்த தெருக்களையும் சங்கத்தில் சேர்த்தாச்சு என்று போகிற போக்கில் சொல்லிப் போனாள் ரத்னா. இப்படி பாதி புரசைவாக்கம் சனிக்கிழமை என் வீட்டுக்குப் படை எடுக்கும் சாத்தியம். நான் வீட்டிலிருக்கலாமா என்று யோசித்தேன்.

‘ஊர்ச் சாப்பாடுலே உங்களுக்கும் பங்கு உண்டு’ என்று அவள் சலுகை காட்டினாலும், நாலு வீட்டில் வாங்கி ஒன்றாக்கிச் சாப்பிட எனக்கு ஏனோ மனம் வரவில்லை. பேசாமல் ஆராவமுதனோடு திருப்பதி போய்த் திரும்பி வந்தாலென்ன? சனிக்கிழமையும், திங்களும் லீவுநாள் என்பதால் ஆற அமர திட்டம் போட்டுப் போனால் யாத்திரைக்கு யாத்திரை, சௌகரியத்துக்கு சௌகர்யம் என்று மனது சொன்னது.

‘நானும் வரேன்’ என்று ஆராவமுது மேஜைக்குப்போய்த் தெரிவிக்க அவர் கை குலுக்கி சந்தோஷப்பட்டார்.

சனிக்கிழமை அதிகாலை, அதாவது ஐந்து மணி சுமாருக்கு வால்டாக்ஸ் வீதிக் கடைசியில் யானைக்கவுனிக்கு வரச் சொன்னார் ஆராவமுது. அவ்வளவு சீக்கிரம் எழுந்து குளிக்கிறது இருக்கட்டும், யானைக்கவுனி போக கைரிக்ஷா எங்கே கிட்டும்?

‘எந்த கும்பளங்காய் பட்டணத்திலே இருக்கீர்? உங்க பேட்டை வழியாக ஒரு ட்ராம் லைன் நேரே யானைக்கவுனி வருதே. ஏறி உக்கார்ந்தா எலிபண்ட்கேட்.’

வீட்டுக்கு வந்ததும் மறக்காமல் முதல் தகவலாக நான் திருப்பதி போக இருப்பதை ரத்னாபாயிடம் சொன்னேன்.

‘நானும் வரேன். அடுத்த மாதம் போகலாம்’ என்றாள் ரத்னா.

‘போகலாம். அது அடுத்த மாதம். இப்போ நடந்து போகிறதாக ஒரு வேண்டுதல்.’ என் வார்த்தைப் பிரயோகத்துக்கு நானே மனதில் ஒரு பாராட்டு சர்ட்டிபிகேட் எனக்குக் கொடுத்துக்கொண்டேன்.

பிரார்த்தனை, வேண்டுதல் என்று சொல்லி அந்தரத்தில் விட்டால் போதும். பல நாள் முந்தியதோ இப்போது போன நிமிஷம் ஏற்படுத்திக் கொண்டதோ அல்லது வேறு யார் ஏற்கெனவே வைத்திருந்த பிரார்த்தனையை நிறைவேற்றப் போகும்போது துணைக்குப் போகிறதாக அர்த்தமோ இந்த பிரயோகத்தில் தட்டுப்படும்.

நடந்து போகிறதாகவும் சொன்னேன். இங்கே ஆரம்பித்து அங்கே திருமலை வரை நடக்கப் போவதில்லை என்பதைச் சொல்லவில்லை. ஆரம்பத்தில் நடை, அப்புறம் பஸ், இறுதி ஐந்து மைல் நடை என்று யாத்திரை இருக்கும் எனக் கேட்டால் சொல்லிக்கொள்ளலாம்.

‘அதென்ன பக்தி அபரிமிதமா பெருக்கெடுத்துப் போறது?’, ரத்னா என் சட்டையில் கைப்பொத்தானை – கஃப்லிங்கை – பிடித்துத் திருகியபடி சிரித்தாள்.

‘வாரக் கடைசி என்றால் பஜனை கோஷ்டி வாசலில் மட்டுமில்லாமல் வீட்டுக்கு உள்ளேயும் சமையல்கட்டு வரை வந்து மத்தளம் முழக்கி ஆட சலுகை கொடுத்து வகை செஞ்சிருக்கீங்க. இப்போ பாத யாத்திரை. பக்திக்கு மெச்சி பெருமாள் கோவிந்தோன்னு நேரே வந்துடப் போறார்.’

அவள் சொன்ன அழகுக்காகவே அவர் ஒருநடை வந்து போகலாம்.

‘ஆமா, நீங்க ஜாம்ஜாம்னு மாதர் சங்க மகாநாடு, புரசைவாக்கத்தில் வன போஜனம் இப்படி அமர்க்களப்படுத்தப் போகிறபோது நான் தனியாக வாய் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து என்ன செய்யப் போகிறேன் பெண்ணே? ஊருக்குப் போய் நாலு புது முகங்களைப் பார்த்து, சுவாமி தரிசனமும் செய்து வருகிறேன்’ என்றதற்கு அவள் ஒரே ஒரு ஆட்சேபம்தான் தெரிவித்தாள் –

‘முழுக்க நடந்து போக முடியுமா என்ன? கால் யானைக்கால் வந்த மாதிரி முழுக்க வீங்கினால் டாக்டர், ஊசி, களிம்பு, மாத்திரை என்றும், அதிசயமான மெஷினுக்கு முன் நிறுத்தி எக்ஸ் ரே என்றும் டாக்டர் படம்

பிடிக்கச் சொன்னால் எப்படி நகர்வீர்கள்? நடந்தே ஆகணுமா?' என்று அழாத குறையாக வினவினாள் அவள்.

நடைப் பயணத்தின் விரிவான விளக்கம் அடுத்து நான் சொல்ல வேண்டிப் போனது. இதானா உங்க சூரத்தனம் என்று எள்ளி நகையாடுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், பதிவிரதை அடுத்த கேள்வியாகக் கேட்டது –

'அந்த ஐந்தும் ஐந்தும் பத்து மைல் பஸ்ஸுக்குப் பின்னால் ஓடி காசு சேமிக்க வேண்டாமே. முழுக்கவே வாகன சவாரியாக போனால் போகிறது என்று பஸ் ஏறிப் போங்களேன். பஸ் டிக்கெட் பணத்தை வேணும்னா திருமலை மேலே ஆண்டி, தாதன், பரதேசி யாரும் இருந்தா தானம் பண்ணிடுங்க, இல்லே அதுக்கான தொகைக்கு பன்னோ, ரொட்டியோ வாங்கி யாருக்காவது பசிக்கு தின்னக் கொடுத்துடுங்க' என்று யோசனை மழை பொழிந்தாள். சரி என்றேன் இப்போதைக்கு.

'பாத யாத்திரை என்று யாரிடமும் சொல்லவேண்டாம். உங்கள் சிநேகிதருக்கும் அதுதான் என் கோரிக்கை. வழி முழுக்க நடந்து போகும்போது அப்படி சொல்லிக்கலாம்' அவள் திஸ்ர நடையில் முழுச் சாப்பு வைத்துத் தனி ஆவர்த்தனத்தை முடித்தாள்.

ஆக ஐந்து மணி முதல் ட்ராமில் பீச்சில் சுண்டல் விற்கக் கிளம்பியவன் போல ஒரு தூக்குப் பாத்திரத்தில் இட்லி, பாத்திரத்துக்குள் மிளகாய்ப்பொடி எண்ணெய் முழுக்காட்டி, வேர்க்கடலை சட்னி, எட்டு பத்து தோசை என்று சுமந்து வந்திருந்தேன். சகலரும் உறங்கும் ராத்திரி ரெண்டு மணிக்கே எழுந்து உட்கார்ந்து பிரியத்தோடு ரத்னா பாய் அதெல்லாம் செய்து கொடுத்திருக்கிறாள்.

'தேங்காய் இல்லையோ, சட்னிக்கு வேர்க்கடலை எப்படி? மகாத்மா காந்தி ஆகாகான் அரண்மனையில் மலேரியா காய்ச்சலோடு கிடந்தபோது போஸ்ட் கார்ட் போட்டாரா? கூடவே ஆட்டுப்பால் காப்பி போடச் சொல்லியிருப்பாரே!'

'ஆமா, இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே. தேங்காய் சட்னி சேர்க்கை சரியில்லாம கெட்டுப் போயிடும். வேர்க்கடலை ராத்திரி வரை தாங்கும்', அவள் புத்திசாலித்தனம் காலை நாலு மணிக்குப் பிரகாசம்.

'சாமிகளே, திருப்பதி போறீங்க போல', டிக்கெட் கொடுக்க வந்த ட்ராம் கண்டக்டர் விசாரித்தார். எப்படி தெரியும் என்று ஆச்சரியப்பட்டு பர்ஸை திறந்தபடிக்கே உட்கார்ந்திருந்தேன்.

‘இந்த பாத்திரத்துக்குள்ளே இட்லி, தோசை, வேர்க்கடலை சட்னி தானே?’ அடுத்த கேள்வி என்னைக் கிட்டத்தட்ட விழுத்தாட்டி விட்டது.

கடவுளே கண்டக்டராக வந்திருக்கிற நினைப்பில் கொஞ்சம் திளைத்தேன், கை கூப்பலாமா, சல்யூட் அடிக்கணுமா என்று குழப்பம்.

‘நான் உங்க தெருக்கோடி வீடுதானே. ரத்னா பாய் தங்கச்சியோட கஸ்தூரிபாய் சங்கத்திலே என் வீட்டுக்காரி சுந்தரிபாயும் உண்டு சார். இன்னிக்கு தெருவிலே யார் வீட்டிலே என்ன சமைச்சு எடுத்து வந்து கூட்டத்துலே பகிர்ந்துக்கணும் அப்படீன்னு எல்லோருக்கும் தெரியுமே? நம்ம வீட்டு உபயம் மோர்க்குழம்பு’ அவர் ட்ராம் டிக்கெட்டோடு பலமான சிரிப்பையும் கிழித்துக் கொடுத்துவிட்டுப் பின்னால் நகர்ந்தார்.

யானைக்கவுனியில் ட்ராம் நிற்க இறங்கிக்கொண்டேன். முழங்காலுக்கு ஏற்றிக் கட்டிய வேட்டி, லேசான பருத்திச் சட்டை, தோளில் பெரிய துணிப்பை என்று ஆராவமுது காத்திருந்தார்.

‘சாப்பாட்டுப் பாத்திரத்தோட வந்ததென்னமோ சரிதான். ரெண்டு நாள் உடுதுணிக்கு என்னய்யா செய்யப் போறீர் என்று அவர் கேட்கத்தான் எனக்கு உரைத்தது. நேத்து ராத்திரியே உடுப்பு, உள்துணி, டவல், சுதேசி சோப், பல்பொடி என்று பார்த்துப் பார்த்து எடுத்துப் பெரிய ஒரு கதர்ப்பையில் வைத்துக்கொண்டேன். இட்லித் தூக்கைக் கையில் எடுத்ததும் அதை எடுத்துவர மறந்து போயிருந்தேன்.

யாரோ சைக்கிளில் வந்து இறங்கினார்கள். ‘ஆல் இந்தியா ரேடியோ டைப்பிஸ்ட் கேளப்பன் நாயர்தான். ரத்னா பாய் கொடுத்தனுப்பியிருக்கிறாள். நன்றி சொல்லித் துணி மூட்டையை வாங்கிக் கொண்டேன். ‘சுவாமி சரணம்’ என்று மலையாளத்தில் புதுசாக வாழ்த்தினார். நானும் சுவாமி சரணம் என்றேன் குஷியாக.

ஒரு தோளில் கனமான கதர்ப்பை. கையில் தூக்குப் பாத்திரத்தில் பலகாரம். நகரவே கஷ்டமாக இருந்தது. நடக்க வேறேவேண்டும்.

‘விறுவிறுன்னு வாங்க’, ஆராவமுது நடக்க, பின்னால் நான். தண்டியில் உப்புக் காய்ச்ச மகாத்மாகூட இவ்வளவு வேகமாக நடந்திருக்க மாட்டார். இனியும் நடக்க வயது இடைஞ்சல் செய்யும். அறுபது வயதானபோது அவர் நடந்து இப்போது பதினாலு வருஷமாச்சே.

நான் கையில் பிடித்திருந்த தூக்குப் பாத்திரம் லொடலொட என்று ஆடி முழங்காலில் அடித்தது. ஐந்து மைல் மட்டும் நடக்க ஒரு கஷ்டமும் இருக்காது என்று நான் நினைத்திருந்தது தப்பாகி விட்டது.

வீட்டிலேயே இருந்திருக்கலாம். ரத்னா பாய் மணக்க மணக்க ஏதேதோ சமைத்திருப்பாள். ட்ராம் கண்டக்டர் வீட்டிலிருந்து மோர்க்குழம்பு வந்திருக்கும். விலாசனி நாயர், தேங்காய் துருவிப் போட்ட தோசையும், மணக்க மணக்க தேங்காய் எண்ணெய் ஊற்றிச் சமைத்து பலா மூஸ் கறியும் அவியலும் கொண்டுவந்திருப்பாள். கூடியிருந்து கலந்து சாப்பிட்டு முகம் பார்த்து வம்பு கேட்டிருக்கலாம். தூக்குப் பாத்திரம் கையில் ஆட நாமக்காரரோடு நடக்காமல், ரத்னா பாய் கால் மடித்து உட்கார்ந்து சாப்பிடும் அழகைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டிருக்கலாம்.

அவதானம் பாப்பையா சாலை கடந்து ஒரு மைல் நடந்து அப்புறம் வெட்டவெளி. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஆள் நடமாட்டமோ வாகனப் போக்குவரத்தோ இல்லாமல் வெறிச்சென்று தரிசு. ரத்னாபாயை இங்கே கூட்டி வந்தால் அவளுக்குப் பிடித்திருக்கும். பாகவதர் படப்பாட்டு அல்லது பங்கஜ் மல்லிக் பாடிய இந்தி சினிமாப்பாட்டு ‘சுந்தர் நாரி ப்ரீதம் ப்யாரி’ என்று பாட எனக்கு உத்தரவிட்டு அவள் நாட்டியமாடி இருப்பாள்.

செருப்புப் போடாமல் நடக்கவே முடியாது என்கிறபோது நாட்டியம் எங்கே வந்தது? லண்டன் உடுப்பும் மான்செஸ்டர் ஷூவுமாக அவள் ஆடுவதைக் கற்பனை செய்ய சுவாரசியமாக இருந்தது.

விலாசினி ஆடினால்? சே... இது ஏன் பிடிவாதமாக கரடிப்பிடிபோல விலாசினி நினைப்பு. அவள் கல்யாணமான ஸ்திரி. கேளு நாயர் பெண்டாட்டி. அவள் மேல் இச்சை எதுக்கு? காலை. நடந்து போகும் யாத்திரை நேரம் இது. கோவிந்தோ என்று உரக்கக் கூவினேன்.

சட்டென்று பசி உக்ரமாகக் கிளம்பி வயிற்றை ஓலமிட வைத்தது. இது நியாயமான பசி. சாப்பிட முன்னே பின்னே இருந்தால் பரவாயில்லை. நல்ல சூடாக, குடிக்க ஒரு...

‘ஒரு டீ அல்லது காப்பி கிடைச்சா பிரமாதமா இருக்கும்’, நான் சொன்னபோது ஆராவமுதன் சரிதான் என்று தலையசைத்தார்.

‘இங்கே மெயின் ரோடுலே அது ஒண்ணும் இருக்காது. பஞ்சாயத்து பேரெழுதி இருக்கற மைல்கல்லுக்குப் பின்னாடி ஒற்றையடிப் பாதையிலே

அபூர்வமா கண்ணுலே படும் அதுவும் காப்பி ஓவல்டின் எல்லாம் கிடைக்க வழியில்லே. டவுன், கிராமம்னு எங்கேயும் யுத்த நேரத்திலே... டீதான்... தேடினால் டீக்கடை இருக்கக்கூடும்' என்றார் அவர் நடந்தபடிக்கே.

நான் பார்வையை தூரத்தில் வைத்து கொஞ்சம் மெதுவாகப் போனேன். வயிறு மீண்டும் பசிக்க ஆரம்பித்தது. கை நிறைய காலைச் சாப்பாடு இருக்கே என்று தூக்குப் பாத்திரம் முட்டியில் இடித்தது. சாப்பிட்டுவிட்டு நடந்தால் என்ன? மனசு கள்ளத்தனமாக யோசித்தது.

எதிரே கிழக்கில் சின்னப் புள்ளி மாதிரி தெரிந்தது கொஞ்சம் பெரிதாக, கிராமத்துக் கடை என்று புலப்பட்டது.

'கடையிருக்கு சார்' என்றேன் அவசரமாக. 'போய் டீ குடிக்கலாம்.'

ஆசாரக்கோவை படிச்சிருக்கீங்களா என்றபடி தமிழ்ப் புலவர்கள் செய்யுள் சொல்லும் பாட்டுக்கும் பேச்சுக்கும் இடைப்பட்ட மெட்டில் இழுத்துப் பாடினார் –

> கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும் உண்ணார்
> சிறந்து மிகவுண்ணார் கட்டில்மேல் உண்ணார்

'இதுக்கு அர்த்தம் கேட்டுடாதீங்க. அம்புட்டு தெரியாது' என்று ஆரம்பத்திலேயே தப்பிக்க முனைந்தேன். இது என்ன மாதிரி சனிக்கிழமை என்று புலப்படவில்லை.

'இது என்ன?' என்று அவரையே கேட்டேன்.

'வேறே ஒண்ணுமில்லே, படுத்துக்கிட்டு சாப்பிடக் கூடாது நின்னுக்கிட்டு தின்னக்கூடாது வெட்டவெளியிலே ஆகாரம் செய்யக் கூடாது. நல்லா இருக்குன்னு நிறைய எதையும் சாப்பிடாதே. கட்டில்லே உட்கார்ந்து சாப்பிடாதீங்க இப்படி போகுது.'

'டீக்கடையிலே சாப்பிடாதேன்னு சொல்லலியே சார்.'

'ஆசாரக்கோவை எழுதின காலத்திலே டீக்கடை எல்லாம் கிடையாது. சோறு விக்கக்கூட மெஸ் கிடையாது. இலவசமா தர, சத்திரம்தான் இருந்திருக்கும்.'

ஆராவமுதுக்கு நான் எதிர்பார்த்ததை விட விஷயம் தெரிந்திருந்தது. ஆனால் எனக்கும், சூடான டீ–க்கும், ரத்னாவுக்கும் இடையே ஆன பந்தம்

அவருக்குத் தெரியாது. சாவகாசமாக அதைச் சொல்கிறேன்.

‘உங்களுக்கு வேண்டப்பட்ட ஜாதி ஜனமாக்கும்’ என்று கடைப்பக்கம் தலையசைத்து விசாரித்தேன்.

‘ஜனம் மட்டும்தான்’ என்றார். ரொம்ப வேண்டிய இடம் என்று அவருடைய முகத்தில் வந்த புன்சிரிப்பு சொன்னது.

‘நீங்க கூட வராட்டாலும் நான் இங்கேதான் வந்திருப்பேன்’ என்றார். சுவாமி சரணம் என்றேன். ஒரு வினாடி யோசித்து அவரும் அதே சொன்னார்.

‘ஸ்வாமி சரணம் ஐயப்பனுக்குத்தான். இருந்தாலும், கோவிந்தனுக்கும் சொல்லிக்கலாம். பாலாஜியும் மோகினி ஸ்வரூபம் தானே’ என்றார் ஆராவமுதன். எல்லா ரூபத்துக்கும் பொருந்துமே என்று கேட்க நினைத்து வேண்டாம் என்று விட்டேன். ஒரு டீ குடிக்க இத்தனை கவுண்டர் போடுகிறவர் சாப்பிட விடுவாரோ தெரியவில்லை.

ஆராவமுது நெற்றியில் சார்த்தியிருந்த நாமம் இளங்காலை வெய்யிலில் டாலடித்தது. காதில் கடுக்கன் மட்டும் இருந்தால் சங்கீத வித்வான்போல் இருப்பார்.

‘பெரிய தோதிலேதான் இருக்கும்போல.’

ஒரு பெஞ்ச் போட்டு நாலைந்து தார் வாழைப்பழம் மாட்டி சின்ன வேம்பாவில் வென்னீர் சுட வைத்தபடி இருந்த கடையைக் கவனித்துச் சொன்னேன். ஆசாரக்கோவையை அப்புறம் பார்த்துக்கொள்ளும் உத்தேசத்தோடு ஆராவமுதும் என்னோடு கடையை நோக்கி நடந்தார்.

‘வண்ணான் வந்தானே’ என்று கடையில் பழைய ஓடியன் ரிக்கார்ட் பாடத் தொடங்க, முண்டாசுக்காரர் ஒருத்தர் அதை நிறுத்தி தனியாக எடுத்து வைத்தார். ‘இருக்கற தொந்தரவு போதாதுன்னு இது வேறேயா?’ அவர் எங்களைப் பார்த்துச் சிரித்தார்.

கடைக்காரர் இரண்டு கையும் குவித்து நமஸ்காரம் செய்தபடி சொன்னார் – ‘வெங்கட்ரமணா.’ கோஷ்டியாக கோவிந்தாக்கள் உச்சபட்சச் சத்தத்தை எதிரொலிக்க கடை வாசல் களை கட்டி விட்டது.

‘சாமிகளே வாங்க. சின்னச்சாமி யாரோ’ அவர் ஆராவமுதுவைப் பிரியத்தோடு குசலம் விசாரித்தார்.

‘உக்காருங்க, கலர் சாப்படறீங்களா?’, அன்போடு கேட்டார். எனக்குத்தான் அகாலத்தில் கலர் உபசாரம். அது உபசாரங்களில் மிக உயர்ந்தது.

வேண்டாம் எனக் கை கூப்பி மன்னிக்கச் சொன்னேன். அததுக்கு நேரம் உண்டே. சிவப்பும் ஆரஞ்சு நிறத்திலுமாக சோடா கலரை நீளமான பாட்டிலில் நிரப்பி ஏப்பம் வரக் குடிக்க ரத்னா பாய் பக்கத்தில் இருக்கும் பாதி ராத்திரியாக இருக்கவேண்டும்.

‘பார்த்து ரெண்டு மாசமாவது இருக்கும். நல்லா இருக்கீங்களா’ கடைக்காரர் ஆராவமுதிடம் கேட்டார்.

‘ஆமா, வரவே முடியலே. போகணும் போகணும்னு நினைச்சுக்கிட்டே நாள் கடத்தியாச்சு... அப்படி என்ன சோம்பல்... வாடான்னு வெங்கடேசப் பெருமாள் சத்தம் போட்டார்... கிளம்பி வந்துட்டேன்... சகுந்தலா எங்கே திருமலை? உறங்கிட்டிருக்கா? இங்கே வந்தா முதல்லே தங்கச்சிதான் வாங்கண்ணான்னு டீயை வச்சுக்கிட்டு வாசல்லே நிக்கும்... அது படிக்க திருவிளையாடல் புராணம் புஸ்தகம் வாங்கிட்டு வரச் சொல்லி ஏக காலம் ஆச்சு. இப்போதான் முடிஞ்சுது’ கடைக்காரர் கையைப் பிடித்தபடி ஆராவமுது பேசிக்கொண்டே போனார்.

கடைக்குப் பக்கத்தில் போனவர்கள் கூட உள்ளே வந்து ஆராவமுதிடம் நலம் விசாரித்துப் போவதைப் பார்த்தேன். அவர் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை குடிநீர் இலாகா ஆபீஸில் உபரி சீனியர் குமஸ்தன் இல்லை இப்போது. யானைக்கவுனியிலிருந்து நூல் பிடித்த மாதிரி ஐந்து மைல் கோவிந்தோ என்று நடந்து நடந்து அவர் இந்த ஊர் மனுஷராகி விட்டிருந்தார் என்று புரிந்தது.

ஆராவமுது பையிலிருந்து எடுத்துக் கையில் வைத்திருந்த திருவிளையாடல் புராணம் புத்தகத்தை வாங்கிப் புரட்டினேன். கடைக்கு உள்ளே பார்த்தபடி சொன்னார், ‘நம்ம கடைக்கார திருமலை மகள் சகுந்தலாவுக்கு... அப்பப்ப ஏதாவது பட்டணத்துலே வாங்கிவரச் சொல்லும். சகுந்தலாவைப் பார்த்தா அசந்துடுவீங்க ராமோஜி. வேலு நாச்சியார், ஜான்ஸி ராணி மாதிரி கம்பீரம். வரும் பாருங்க’ என்றபோது கடைக்காரர் கசப்பாகச் சிரித்தார்.

‘என்ன கம்பீரம் இருந்தென்ன? தலையிலே எழுதினது சரியில்லயே’ அவர் எங்கேயோ பார்த்தபடி சொன்னார்.

‘பால் வர நேரமாகுமா?’ அடுப்புக்கு அருகே வைத்திருந்த வேம்பாவைப் பார்த்தபடி கேட்டேன்.

‘வந்துடும், போயிருக்காங்க’, கடைக்காரர் உட்காரச்சொல்லிக் கைகாட்டினார்.

டாங்கை ஓரமாக நிறுத்தி, பாதை ஓரத்தில் பால் மாவு உபயோகித்து டீ போட்டு தெம்பாக ஒரு டீ குடித்துவிட்டுத்தான் உக்கிரமாக யுத்தத்தை நேச நாடுகளின் ஐக்கியமான படை தொடரும் என்று டீ போர்ட் வாராவாரம் ஒரு தமிழ்ப் பத்திரிகை விடாமல் விளம்பரம் கொடுத்து வருவது மனதில் அழிக்க முடியாமல் படிந்திருப்பதால், யுத்த நடவடிக்கையாக தேத்தண்ணீர் அருந்த ஆர்வம் காட்டினோம். பால்பொடி இருந்தாலும் பரவாயில்லை.

‘திருமலை, வீட்டு உள்ளே ஒரு அஞ்சு நிமிஷம் உக்காரலாமா?’ ஆராவமுது கடைக்காரரைக் கேட்டார்.

‘தாராளமா, சுணங்காம காப்பித்தண்ணி சுட வைச்சுத் தரேன்’

கடுங்காப்பியோ, கடும் டீயோ நாலு கோப்பை கலந்து எடுத்து வாசலில் ஏற்கெனவே நின்றவர்களுக்கு அவர் கொடுக்க, புரை புரை என்று அவர்கள் பிருபிருத்தது கேட்டது.

நான் இந்த வாழ்க்கையில் இன்னும் சாப்பிடாத சமாசாரங்களின் இலந்தை வடையும் இந்த புரை பிஸ்கட்டும் உண்டு. கடையிலிருந்து கிளம்பும்போது நாலைந்து புரை ஒரு நியூஸ்பேப்பரில் சுற்றி வாங்கிக்கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தேன்.

‘சாப்பிட்டுடலாமா?’ ஆராவமுதன் கேட்பார் என்று எதிர்பார்த்தேன். ஊஹூம் மனுஷர் தப்பித்தவறிக்கூட வாயைத் திறக்கவில்லை.

‘சார் வெய்யில் ஏற முந்தி சாப்பிட்டதா பேர் பண்ணிடலாமா’ என்று நான் அவரை விசாரிக்க, அவர் ஊரையே கூட்டி வெங்கட்ரமணா என்றார். சாப்பிடலாம் என்று கைகாட்டினார்.

வாசல் பெஞ்ச் கடுங்காப்பி, கடைக்காரர், கிராம போஸ்ட் மாஸ்டர், மண்வெட்டியோடு நடந்து போகிற ஒருத்தர், ஏரோடு இன்னொருத்தர், கடந்து போன வேனில் மொட்டைத் தலைக் கூட்டம் என்று சகலரும் சேர்ந்து ‘கோவிந்தா’ என்று பதிலுக்குக் கூவ, ரத்னா பாய் முன்யோசனையோடு தூக்குப் பாத்திரத்துக்கு உள்ளே நடுவிலே ஓர்

எவர்சில்வர் தட்டு போட்டு மேலே வைத்திருந்த பூவரச இலைத் தட்டுகளை வெளியே எடுத்தேன். அப்படியே சட்னி, மிளகாப்பொடி வகையறாக்களும் வெளியே சிந்தாமல் சிதறாமல் வந்தன.

‘திரையை இழுத்து விடட்டா?’ கடைக்கார திருமலை என்னிடம் கரிசனமாக விசாரித்தார். மண் சுவரும் கதவும் கதவை ஒட்டி ஆணி அடித்து காந்தி படம் போட்ட துணித் திரையும் கண்ணில் பட்டன. நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து வாசலும், பின்னால் கடைக்கு வந்து சுற்றிப் போகும் பாதையும் முழுசாகத் தெரிந்தன.

‘திரை வேணாமுங்க. அஞ்சு பத்து நிமிஷம் சாப்பிட்டு எழுந்திடப் போறோம். ஊர் நிலவரம் பார்த்துகிட்டே சாப்பிடறோமே.’

சொன்னபடி ஒரு பூவரசு இலைத் தட்டில் நாலு இட்லி, நாலு தோசை வைத்து அவரிடம் கொடுத்தேன். சங்கோஜத்தோடு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

‘அவரா, ஒழுங்கா சாப்பிட்டு ஒரு மாதம் ஆகப் போறது.’ கடையில் படி ஏறி வந்த யாரோ சொன்னார்கள்.

என்ன நோக்காடோ, இதற்கு மேல் நோண்டிக் கேட்பது சரிப்படாது என்று தோன்ற சாப்பிட ஆரம்பித்தேன்.

‘அழகுக் கோனார் வீடு பக்கத்திலேதானே? என்ன ஆச்சு? மாடு தூங்குதாமா?’

வாயில் இட்லியோடு ஆராவமுது கேட்டார். ‘அழகுக் கோனார் எங்க வகைதான். நாகப்பட்டணம் போனவர் இன்னும் வரல்லே’ என்றார் திருமலை.

கொஞ்ச நேரம் சும்மா இருந்துவிட்டு, ‘நேரமாச்சுன்னா என் மக பால் வாங்கிட்டு வருவா. இப்போ இல்லே... வீட்டைவிட்டுப்போய் நர்சம்மாவா மிலிட்டரியிலே சேர்ந்துட்டா’ என்றார் குரல் தழுதழுக்க.

ஆராவமுது சாப்பிட ஆரம்பித்ததை அப்படியே நிறுத்தி அதிர்ச்சியோடு கடைக்காரத் திருமலையைப் பார்த்தார்.

ஒரு மரப்பெட்டிக்குள் இருந்து பலமுறை திறந்து காட்டப்பட்ட ஒரு கடிதத்தை எடுத்து வெளிச்சத்தில் பிடித்துக் காட்டினார் திருமலை.

‘உங்கள் மகள் சகுந்தலா என்ற கல்பனா, ஆன்சிலரி நர்ஸ் உத்தியோகத்தில் நியமனமானவர், கல்கத்தாவிலிருந்து வேலை நிமித்தம் பயணமாகும்போது காணாமல் போனார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தேடிக் கண்டுபிடிக்க தீவிர முயற்சி எடுக்கப்படுகிறது’

என்று ராணுவ உயர் அதிகாரி கையெழுத்துப் போட்ட கடிதம்.

‘ஆன்சிலரி நர்ஸா? கேட்டபடி ஹெட் கிளார்க் எழுந்தார். வாசல் பக்கம் போய் இரும்பு வாளியில் வைத்திருந்த நல்ல நீரில் சிக்கனமாக கை அலம்பி வாசல் பெஞ்சில் அமர்ந்தோம் நானும் அவரும்.

‘இருபத்திரெண்டு வயசு. கொள்ளை அழகு. இன்னும் புஷ்பவதி ஆகல்லேங்கறதைவிட்டுட்டு பாத்தா, ஒரு குறை கிடையாது... அம்மா இல்லாத பிள்ளைன்னு போற்றி வளர்த்தாருங்க. காந்தி காந்தின்னு ஜபம் பண்ணுவா. இந்த திரையிலே காந்தி படம் வரைஞ்சு வச்சது அவதான். எங்கேயோ இருந்து வந்தாங்க. வீடு வீடா புத்தகம் படிக்கக் கொடுத்தாங்க. ஆளே மாறிப்போயிட்டா. தலைமுடியை தானே வெட்டி கிராப் வச்சுக்கிட்டா... ஒரே மாசத்துலே. பேரையும் கல்பனான்னு மாத்திக்கிட்டா.’ கடையில் படி ஏறிய யாரோ ஆதரவாகச் சொன்னார்கள்.

கடைக்காரர் இனிமேலும் சொல்ல வேண்டாமென்று கை காட்டி நிறுத்தினார். தாயில்லாப் பெண்ணான சகுந்தலா என்ற கல்பனாவுக்கு அரசியல் சொல்லிக் கொடுத்து ஒரே மாசத்தில் மனதைக் கலைத்தவர்கள் நன்றாக இருக்கட்டுமென்று சொன்னார்.

யுத்தத்திலே இங்கிலாந்துக்கு எந்த உதவியும் செய்யக்கூடாது என்று காந்தியும் காங்கிரசும் எடுத்த நிலைப்பாட்டை அடிக்கடி சொல்லி யுத்த எதிர்ப்பு செய்துகொண்டிருந்த அவருடைய மகள், பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் பிறக்க சோவியத் யூனியனும், இங்கிலாந்தும் ஒண்ணா சேர்ந்து பாசிச சக்திகளை எதிர்த்து யுத்தம் செய்யும்போது சும்மா கையைக் கட்டிக்கிட்டுப் பார்த்தபடி இருக்க முடியாது’ என்று கற்பித்து, ஓடிப்போய் ராணுவத்தில் நர்ஸாக சேர வைத்தது அவர்களே தானாம்.

‘ராணுவ நர்ஸ் உன்னதமான ஒரு பதவி’ என்று அவர்கள் சொன்னது என்னமோ சரிதான் என்று ஆராவமுதிடம் சொன்னேன். எங்கே இருந்தாலும் யார் சொன்னாலும் நர்ஸ் எல்லோருக்கும் நல்லவளான வெண்மை உடுத்த தேவதைதானே.

‘சீக்கிரம் ருதுவாயிடுவான்னு கண்டனி ஜோசியன், தாமரப்பட்டு குறிகாரன், கோடாங்கி சுப்புபிள்ளை எல்லாரும் ஒரேமாதிரி சொல்லியிருக்காங்க… அடுத்த ஐப்பசிக்கு கல்யாணம் கட்ட சம்பந்தம் எல்லாம் பார்த்து வச்சிருக்கற நேரமாப் பாத்து இப்படி சொல்லாம கொள்ளாம பட்டாளத்துலே சேர ஓடியிருக்காளே. பயபுள்ளைகளே யோசிப்பாங்க.’

திருமலை குரல் எடுத்து ஒரு வினாடி அழுதுவிட்டு உடனே சுவிட்ச் அணைத்த ரேடியோவாக சும்மா இருந்தார்.

‘எங்கே இருக்காளோ கொழும்போ, மலேயாவோ இல்லே அபிசீனியாவோ. தினம் பேப்பர் வரவழச்சு படிக்கறேன். கல்பனான்னு அவ பெயர் வந்ததில்லே… வராது… வரக்கூடாதுன்னு வேண்டிக்கறேனே. எங்கேயாவது டாங்கைக் கவுத்து போட்டுட்டு டீ போட்டு கூட வந்த நர்சுங்க, டாக்டரம்மா, ராணுவத்தார்களுக்கெல்லாம் கொடுத்துக் கிட்டு இருப்பா. நல்லா இருப்பா.’

வாசலில் சைக்கிளைவிட்டு ஓர் இளைஞன் வந்து இறங்கினான். சைக்கிள் பாரில் கட்டியிருந்த பால் குவளை என்று பரபரப்பாக நுழைந்தான்.

‘சம்பந்தம் செஞ்சதா சொன்னேனே, இவன் தாங்க. அவளுக்கு என்ன குறைபாடு இருந்தாலும் அதெல்லாம் சீக்கிரம் சரியாயிடும். அவளும் முழுகி முழுசாகிடுவா அப்படீன்னு அவ மேலே உயிரையே வச்சிருக்கான்… அழகுக் கோனார் அக்கா மகனுங்க, அப்பப்போ இங்கே வந்து கடை நடத்த எனக்கு சகாயம் பண்ணுவான்’ என்றார்.

அவனுக்கும் இருபது வயது காணும். ஆராவமுதன் தலையை மௌனமாக ஆட்டியபடி எழுந்தார்.

காப்பிக்கு காசு வாங்க மாட்டேன் என்றவரை வற்புறுத்தி வாங்க வைத்துவிட்டு வாசலுக்கு வந்தோம். நடக்க ஆரம்பித்தோம். கோவிந்தாவை மனசில் சொல்லிக்கொண்டோம்.

பத்து அடி நடந்தபோது பின்னால் சார் சார் என்று சத்தம். திரும்பிப் பார்க்க, அந்தப் பையன்தான். கையில் நான் கொண்டுவந்த தூக்குப் பாத்திரம்.

‘கிளார்க் சார், ஒரு நிமிஷம் நிக்க முடியுமா?’, அவன் ஆராவமுதுவைக் கேட்டாலும் என்னையும் பார்த்துக் கண்ணால் விண்ணப்பித்தான்.

‘சகுந்தலா பட்டாளத்துலே நர்ஸாக... பர்மா மாண்டலேயிலே ஆம்புலன்ஸ் விபத்து ஆகி இறந்துட்டா. ரெண்டு நாளைக்கு முந்தி வந்துச்சு...’

சட்டைப் பையில் வைத்திருந்த கடிதத்தைக் காட்டினான். இளம் ஆர்மி நர்ஸ் ஒருத்தி, அமைதியாக அந்திம உறக்கத்தில் இருந்தாள் அந்த ராணுவக் கடிதத்தில்.

அதோடு கூட சென்சார் செய்யப்பட்ட ஒரு கடிதம். அத்தை என்று விளித்து அழகுக் கோனார் மனைவிக்கு எழுதிய அந்த இண்லேண்ட் லெட்டரில் ‘நான் இப்போது இருப்பது’ என்று எழுதியதற்கு அடுத்த வரிகளை சென்சார் கவுன்சில் சிவப்புச் சாயம் பூசி மறைத்திருந்தது. அடுத்த வரியில் அவள் பூப்படைந்த சந்தோஷ சமாசாரத்தையும், உதிரப்போக்கு அதிகமாக இருப்பதால் சோர்வும் பலகீனமும் ஏற்படுவதுபற்றியும் எழுதிய நாலு வரி அப்படியே இருந்தது. நாங்கள் அடுத்த வாரம் இங்கிருந்து போய்ச் சேர இருப்பது என்று தொடங்கி கடைசிவரை பட்டையாக சென்சார் சிவப்புச் சாயம் அடித்திருந்தது.

‘இது ஆர்மி லெட்டர் தேதிக்கு அஞ்சு நாள் முந்தினது சார்’ என்றான் தலையைக் குனிந்தபடி.

‘திருமலைக்கு தெரியுமா?’, ஆராவமுது கேட்டார்.

‘இதை எல்லாம் மனசுலே வாங்கற பதத்திலே மாமா இல்லே. மற்ற விஷயம் எப்படியோ, சகுந்தலா விவகாரத்திலே அவர் மனசு அடச்சு பூட்டிக்கிடுச்சு... எப்போ அவர்கிட்டே தகவல் சொல்லி அவரைப் புரிய வைச்சு... அப்புறம் என்ன ஆகுமோ தெரியலே சார். அதுவரைக்கும் வேங்கட்ரமணாதான், கோவிந்தாதான்.’ அவன் திரும்பும்போது ‘இதை அவர்கிட்டே கேட்க வேணாம் சார்’ என்றான்.

‘வெங்கட்ரமணா’ என்று ஆராவமுதன் குரல் எழுப்ப, அந்தக் காலை நேரத்தில் உலகமே கோவிந்தா என்றது. மெயின்ரோடில் போய்க்கொண்டிருந்த பஸ்ஸைக் கைகாட்டி ஏறிக்கொண்டோம்.

‘சீக்கிரமே இந்தப் பையன் திருமலைகிட்டே எல்லாம் சொல்லி புரிஞ்சுக்க வைப்பான். சீக்கிரமே திருமலையோட கடையை இவன் நடத்துவான். சீக்கிரமே இவன் கல்யாணம் பண்ணிப்பான்.’

ஆராவமுதன் சந்நதம் வந்ததுபோல் சொல்லி உடனே உட்கார்ந்தபடியே உறங்க ஆரம்பிக்க, திருச்சானூர் கடந்து திருப்பதி போய்ச் சேர்ந்தோம்.

திருப்பதி அடிவாரம் தொழுது திருமலை ஏறி தரிசனம் செய்து வரும் போது கடைக்காரத் திருமலைக்கும் பிரார்த்தித்துக்கொண்டோம்.

வீட்டில் ஞாயிறு காலை படி ஏறும்போது ரத்னா பாயைக் கேட்டேன்.

‘எத்தனை தேசபக்தி, தெய்வ பக்தி கானங்கள் நேற்றைக்கு கற்றுக் கொண்டாய் கானக் குயிலே?’

அவள் விநோதப் பிராணியைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தாள்.

‘பாரதியார் தேசபக்தி பாட்டு எல்லாம் அது அச்சடிச்சு வந்த புத்தகம் படிச்சு பிழையில்லாமல் பாடப் போறோம் அடுத்த மாதத்திலே இருந்து. தெய்வபக்தின்னு, ‘தாயே யசோதா உன் தன் ஆயர் குலத்து உதித்த’ இப்படி உருப்படி பாட நாங்க கச்சேரி செய்யப் போறதுமில்லே, இனியொரு கல்யாணத்துக்கு நீங்க சம்பிரதாயத்துக்கு பொண்ணு பார்க்க வந்து, பஜ்ஜி சொஜ்ஜி தின்னுக்கிட்டு பாட்டு கேட்கப் போறதுமில்லே. நாலு பஜனை பாட்டு ராதே ராதே ராதே ராதே, பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார், ஓம் ஓம் சக்தி ஓம், வேல்முருகா ஆடி வா இப்படி குஷியாப் பாடினோம். அருமையா பொழுது போச்சு… அப்புறம் சமையல் குறிப்பு பரிமாறிக்கிட்டோம். ஹரிதாஸ், பர்மா ராணி, பூங்கோதை, ஜகதலப்ரதாபன், ஆர்யமாலா இப்படி சினிமா கதை, அரட்டைன்னு கொஞ்ச நேரம். கருங்குயில் குன்றத்துக் கொலை வழக்கு, மேனகா, மோகனசுந்தரம் இப்படி நல்ல நல்ல தமிழ் நாவல்கள் பத்தி பேசினோம். படிச்சு முடிச்ச நாவல்களை அடுத்த வாரம் ஒருத்தரோடு ஒருத்தர் மாத்திக்க இருக்கோம்…’ என்றாள். இத்தனை சுந்தரிப் பெண்கள் தீவிரமாகப் படிக்கிறார்கள். தமிழ் நாவலுக்கு நல்ல எதிர்காலம் உண்டென்று விளங்கிப் போனது.

கஸ்தூரி மாதர் சங்கம் யுத்த காலத்திலும் கலகலப்பாக மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறது. யுத்தம் முடிகிற அறிகுறிகளே தெரியவில்லை.

★★★

ஏழு

# ராமோஜியும் ரத்னாவும் டெல்லி பயணம் – 1944

டெ ல்லியில் பூப்புனித நீராடல். வந்து ஆசீர்வதித்துப் போகவும்.

இப்படி ஒரு கோரிக்கை வந்தால் என்ன செய்யணும்? அதுவும் ரத்னா பாயின் அருமை அண்ணா மகள் புஷ்பவதியான விசேஷம்.

டெல்லி யாத்திரையும் அதையே கொஞ்சம் நீட்டித்து காசி யாத்திரையும் முடித்துக்கொண்டு வருவோமா என்று ரத்னாவிடம் கேட்டேன்.

‘யுத்தகாலத்திலே பயணத்தை எல்லாம் தள்ளிப்போடச் சொல்லி பத்திரிகையிலே சர்க்கார் மன்னாடுறாங்களே’ என்றாள் அவள்.

‘பரவாயில்லே… நாம இந்த மூணு வருஷமா எங்கேயும் போனதில்லே’ என்றேன்.

‘ரயில்லே போறபோது ஜப்பான்காரன் ப்ளேன்லே வந்து குண்டு போட்டா?’

‘வீட்டுலே இருக்கும்போது குண்டு போட்டா என்ன பண்றோம்… அது போலதான்… ரயிலுக்குள்ளே கப்சிப்புனு உக்கார்ந்திருக்க வேண்டியதுதான்’ என்றேன்.

‘நான் ஆஸ்பத்திரியிலே மாட்டிக்கிட்ட மாதிரியா?’, அவள் என்னைக் கூர்ந்து பார்த்துக் கேட்க, பதில் சொல்லாமல் புன்னகைத்தேன்.

‘சரி, போவோம்… டெல்லி சலோ’ என்றாள் என் அருமைப் பெண்டாட்டி.

இதோ இன்னும் ஒரு மணி நேரத்தில் செண்ட்ரல் ஸ்டேஷனில் இருந்து டெல்லிக்குக் கிளம்பிக்கொண்டிருக்கிறோம். தில்லிக்குப் போய்ச் சேர்ந்து, விசேஷம் நிறைவடைந்தபிறகு அங்கிருந்து இன்னொரு ரயிலில் ஏறி காசிக்குப் போய்ச்சேரணும். இதற்கு இடையிலே டெல்லியிலிருந்து ஹரித்வார் போய்த் திரும்பணும்.

இரண்டு வாரத்தில் இத்தனையும் நல்லபடியாக முடித்து மதறாஸ் புரசைவாக்கத்தில் வீட்டுக்கும், செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் ஆபீசுக்கும்

திரும்ப வேண்டும்.

டெல்லி வழியாக காசி – ஹரித்வார் யாத்திரை ஈசுவர கடாட்சத் தோடும், முன்னோர் ஆசியோடும் போய்வந்து, விருந்தினர் கட்டுப்பாடு சட்டம் அமுலில் இருப்பதால், வீட்டில் ஒரு பத்து பேர் மட்டும் கலந்து கொள்ளும் சமாராதனை வைபவத்தோடு சுபமாக நிறைவேறும்.

இந்தப் பிரயாணத்திற்கான நட்சத்திரம், திதி எல்லாம் பார்த்துப் பயணம் வைக்க நேரம் கிடைக்கவில்லை. என்றாலும் ஸ்வஜாதி புரோகிதர், ‘ரொம்ப பிரமாதமாக எல்லாம் அமைஞ்சு போச்சு. எந்தக் கவலையும் இல்லாம ராஜா மாதிரி போய்ட்டு வரலாம்’ என்று உற்சாகப்படுத்தி அனுப்பினார்.

ராஜாக்கள், ரயிலில் அதுவும் கூட்டம் அலைமோதும் மூன்றாம் வகுப்பில், நெருக்கி அடித்துக்கொண்டு பிரயாணம் போவதில்லை என்பதை புரோகிதர் அறிவார். யார் கண்டது, ராஜாக்கள் முதல் வகுப்பு ரயிலேறிப் போகும்போது நாள் நல்ல நாள் என்று அவரவர்க்கான அரண்மனைப் புரோகிதர்கள் அனுப்பி வைத்திருப்பார்கள் என்றால் அங்கேயும் நெரிசல் அனுபவப்படுமே.

ரெண்டாம் வகுப்பு திரிசங்குவான ஏற்பாடு. முதல் வகுப்பின் சௌகர்யங்கள் சில இருக்க, மூன்றாம் வகுப்பின் நானாவித கல்யாண குணங்களோடு ரெண்டாம் வகுப்பு இருக்க வாய்ப்புண்டு. யார் அதில் ஏறிப் பிரயாணம் செய்து நேரத்தையும் பணத்தையும் வெட்டியாகச் செலவழிக்க? ரயில்வேக்காரர்களுக்கான இலவச பாஸ் கொடுத்து அவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டது ரெண்டாம் வகுப்பு. நம் போன்ற சாதாரணர்களுக்கில்லை.

மூன்றாம் வகுப்பு. எந்த கஷ்டம் இருந்தாலும் பிறந்ததிலிருந்து பழக்கமானபடியால், வீட்டுக்கு அடுத்தபடி சௌகரியமானதாக கருதப்படும்.

மூணாம் வகுப்பு அழுக்குதான். வீட்டில் இல்லாத அழுக்கா. அங்கே கக்கூஸ் வசதிப்படாது. வீட்டில் மட்டும் என்ன வாழ்கிறது? கக்கூசில் என்ன பாய் விரித்துப் படுக்கப் போகிறோமா இல்லை அடுப்பு பற்ற வைத்து சமைக்கப் போகிறோமா? ரெண்டு நிமிஷம் ஒண்ணுக்கு ரெண்டுக்குப்போய் தண்ணீர் இருந்தால் ஊற்றிவிட்டு வந்தால் போதும். வாடையைச் சமாளித்துக்கொண்டு ஒரு ரெண்டு ராத்திரி பிரயாணம் செய்தால் அப்புறம் நாம் யாரோ, கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் ரயில் எதுவோ.

கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ். இந்தப் பெயரைச் சொல்லவே கம்பீரமாக இருக்கிறது. பாரத தேசத்தில் குறுக்கும் நெடுக்கும் சதா ஓடுகிற ரயில்களில், ஜி டி என்று ரெண்டு இனிஷியல் மட்டும் சொன்னால் தடதடவென்று கம்பீரமாக மனசுக்குள் ஓடி வரும் புகைவண்டி. வாரம் மூன்று தடவை மெட்றாஸில் இருந்து டெல்லிக்கும், அதேபோல் மூன்றுமுறை டெல்லியிலிருந்து சென்னைக்கும் ஓடும் மகா பெரிய ரயில். இதெல்லாம் நான் எதுக்குச் சொல்லணும்? டி ஆர் ராஜகுமாரியைத் தெரியாதவர்கள் இருப்பார்கள், ஜி.டி எக்ஸ்பிரஸை அறியாதவர்கள் உண்டோ.

நைனியப்ப நாயக்கன் தெருவில் இரு மத்திய வயசுத் தெலுங்கர்கள் ஒரு கம்பேனியை போன வருஷம் தொடங்கி இருக்கிறார்கள். காசி, ஹரித்வார், வட மதுரை இப்படி புண்ணிய ஸ்தலங்களுக்கு அவரவர்கள் ரயில் டிக்கெட்டு வாங்கி, பிரயாணத்தை அவரவர் மட்டுக்கு சௌகரியமாக்கிக் கொள்வது என்ற நடைமுறை உண்டல்லவா? அதற்கு மாறாக கோஷ்டி அடிப்படையில் ஸ்தல யாத்திரை போவதுபற்றிய பிரஸ்தாபத்தை இந்தக் கம்பேனி செய்கிறது. அதற்கு நிறைய துணிச்சல் வேண்டும்.

யுத்த காலத்தில் பயணத்தைத் தவிர்ப்பீர் என்று சர்க்கார் திரும்பத் திரும்ப ஒரு பத்திரிகை விடாமல் கோரமாக கார்ட்டூன் படம் போட்டுப் பிரச்சாரம் செய்யும்போது, தவிர்க்க முடியாத பயணத்தை ஏன் தள்ளிப்போட வேண்டும் என்று மறைமுகமாகக் கேட்டு கோஷ்டியாக யாத்திரை போய்வர வழி செய்கிறது இந்தக் கம்பேனி.

சாப்பாட்டுக் கவலை இல்லாமல் பிரயாணம் வைக்கவும் இந்த யாத்ரா சர்வீஸ் வழி செய்திருப்பதாக பிரஸ்தாபம். ஒரு ரயில்வே கம்பார்ட்மெண்ட் முழுக்க இவர்கள் வாடகைக்கு எடுத்து சமையல்காரர்கள், சமையல் தளவாடம் சகிதம் யாத்திரா கோஷ்டியோடு அனுப்புகிறார்கள் என்று தெரிகிறது.

ரயில் போகும் வழியில் பெரிய ஸ்டேஷனில் கம்பார்ட்மெண்டைப் பிரித்து ஓரமாக ஒரு ப்ளாட்பாரத்தை ஒட்டி அதை நிறுத்தி விடுவார்கள். சமையல், சாப்பாடு, துணி துவைத்தல், குளித்தல் எல்லாம் நிறைவேறின பிறகு அடுத்து வரும் ரயிலில் கம்பார்ட்மெண்டை இணைத்துப் பயணம் தொடரும்.

சாவகாசமாக காசி, பிரயாக், ஹரித்வார் இத்யாதி. என்ன, மூன்று நாளில் ரெகுலர் ரயிலில் காசி போக முடியும் என்றால் இந்த யாத்ரா சர்வீஸ் ஏற்பாட்டில் அது ஆறு நாள் ஆகக் கூடும். வட இந்திய யாத்திரை என்று

இன்னும் ஸ்தலங்களைப் பிரயாண லிஸ்டில் சேர்த்தால் ஒரு மாதம் பிடிக்கும் போய்த் திரும்பி வர.

‘தீபாவளிக்கு காசியில் இருங்கள், கங்கா ஸ்நானத்தை வீட்டு பாத்ரூமில் நடத்தாமல் புண்யமான கங்கா நதியிலேயே தீபாவளியன்று நீராடலாம் வாருங்கள்’, என்று பத்திரிகையில் வரும் விளம்பரம் எத்தனையோ பேரை ஏங்க வைக்கிறது எனத் தெரியும்.

ஆயிரம் இருந்தாலும் தீபாவளி மாதிரி நல்ல நாள் பெரிய நாளுக்கு, குடும்பத்தோடும் சிநேகிதர்களோடும் வீட்டில் இருந்து கொண்டாடாமல், ஹிந்தியில் மூச்சுவிடும் ஒரு பெரிய கூட்டத்தோடு அடித்துப் பிடித்துக்கொண்டு, அக்குளோடு அக்குள் உரச நின்று, புண்ய நதிக் குளியல் என்று பேருக்கு முழுக்குப் போட்டு ‘கங்கா ஸ்நானம் ஆச்சா’ என்று பரஸ்பரம் விசாரித்து சந்தோஷப்பட்டுக் கொள்வது விநோதம்தான்.

ஒரு மாதம் முழுக்க யாத்திரையில் போனால், ஆபீஸுக்கு எப்படி லீவு சொல்ல?

காசிக்குப் போக லீவு வேணும் என்று கேட்டால் மத்யானம் அரைநாள் எடுத்துண்டு பேஷா போய்ட்டு வந்துடுங்கோ என்று டெபுடி சூப்பரண்டெண்ட் திருமலாசார்யார் ஆசீர்வாதம் செய்து அனுப்புவார். அரைநாளோ ஒரு நாளோ, லீவு கொடுத்தாகி விட்டதா, அதுதான் முக்கியம். அப்புறம் லீவ் எக்ஸ்டென்ஷன் என்று நீட்டித்துக்கொண்டுபோய்விடலாம். ஒரு மாத லீவு சுளுவாக வாங்கும் வழி இதுதான்.

ஆனாலும் மனசு கேட்காது. ஒரு வாரம் லீவு அனுபவித்தபின் குத்திக்காட்ட ஆரம்பிக்கும். நான் போகாததால், கோட்டையிலே சர்க்கார் வேலைக்காக ஏற்படுத்தப்பட்ட குடிநீர் விநியோக இலாகாவே ஸ்தம்பித்துப்போய் நின்றுவிடலாம்.

‘சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம்’ என்று தமிழ்ப் பத்திரிகையில் முதல் பக்கத்தில் சுத்தத் தமிழில் அச்சடித்த அலறல் நியூஸ் வரும்.

ஆறாம் ஜார்ஜ் சக்கரவர்த்திகள் லண்டனில் பக்கிங்ஹாம் அரண்மனையில் தமிழ்ப் பேப்பரில் கே ஆர் செல்லம் போட்டோ பார்த்து சிலாகித்து, எழுத்துக்கூட்டிப் பேப்பர் படித்து, இந்த நியூஸால் மிகுந்த மனக்கிலேசமடைந்து மெட்றாஸுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு நீங்கும்வரை

ராஜாங்க விருந்து ஏதும் அரண்மனையில் நடக்காது என்று அறிவித்துவிடுவார்.

ராஜாங்க உயர் அதிகாரிகள் ராமோஜி என்ற சிப்பந்தி காசிக்குப் போகிறதாக அரை நாள் லீவு வாங்கி அதை ஒரு மாதமாக நீட்டித்திருப்பதால் மெட்றாஸுக்குத் தண்ணீர் கிட்டவில்லை என்பதை இதமாக, பதமாக, பின்னர் பலமாகச் சொல்ல, சக்கரவர்த்திகள் உடனே ராமோஜி வேலைக்குத் திரும்ப அவசரக் கோரிக்கை விடுப்பார்.

வேண்டாம், இன்னும் தூங்கினால் நடுப்பகல் ஆகிவிடும் என்று படுக்கையைவிட்டு எழுந்தேன். அது போன ஞாயிறு காலையில் குழிப் பணியாரமும், இஞ்சித் துவையலும், புளிக்குழம்பும் வயிறு புடைக்கச் சாப்பிட்டு, நேரமில்லா நேரமாகக் காலை எட்டரை மணிக்கு ஊஞ்சலில் படுத்து நித்திரை போன போது.

எது எப்படியோ, காசிக்குப் போகவேணும். தொலைக்க ஏதாவது கர்மம் உண்டா என்று அங்கே போய்ப் பார்த்துக்கொள்ளலாம்.

யாத்ரா சர்வீஸ் மாதிரி ஒரு மாதம் வட இந்தியா முழுக்கச் சுற்றி வராமல், போனோமா வந்தோமா என்று ஒரு பத்து நாள் காணாமல் போய்த் திரும்பிவர உத்தேசித்தேன். ரத்னா? பருப்பில்லாமல் கல்யாணமா? அவளும் உண்டு.

அப்பாஜி, ஒவ்வொரு வருடமும், அவர் இருந்தவரை, காசிக்குப் பிரயாணம் வைக்க திட்டம் போடுவார். பத்து நாள் என் பழைய ஸ்கூல் காம்போசிஷன் நோட்டில் கிழித்தெடுத்த ரூல் போட்ட பக்கங்களில் மராட்டியும் இங்க்லீஷுமாக எழுதி செலவு குறித்திருப்பார். எங்கள் குடும்பம், என் மாமா குடும்பம், அத்தை குடும்பம் என்று யாத்திரைக்கு வர இருக்கிறவர்களின் பட்டியல் நீளமாக ஆக, மொத்தத் தொகை ஓர் ஓரமாக எல்லாம் சேர்த்து வளரும். அது ஐயாயிரம் ரூபாய் அளவுக்கு வரும்போது காசிப் பயணத்தை ஒத்தி வைத்துவிடுவார் அவர். ரொம்ப செலவு பிடிக்கும். இன்னொரு டைம் சாவகாசமாகப் போகலாம் என்று கச்சாலீசுவரரைக் கும்பிட்டு துரை பங்களா வேலைக்குக் கிளம்பி விடுவார்.

அவர் திட்டம்போல் இல்லாமல் நானும் ரத்னாவும் மட்டும் போவதாக ஒரு காசி யாத்திரை. பண விஷயத்தில் அவ்வளவு கடக் ஆக இருக்கத் தேவை இல்லாமல் கோட்டையில் சீனியர் குமாஸ்தா வேலை கணிசமாகத் தருகிறது.

பயணம் போக முடிவு செய்யும் முன், அப்பாஜி பஞ்சாங்கக்கார அய்யரைக் கூப்பிட்டு நாள் நட்சத்திரம் பார்ப்பதாகத் திட்டத்தில் முதல் ஐட்டம் வரும். எனக்கு அந்த மாதிரி ஜோசியத்தோடு கூடிய திட்டம் போட முடியாது. சூப்பரிண்டெண்ட்டெண்ட் அபூர்வமாகப் பத்து நாள் லீவு கொடுத்த சாயந்திரம் வீட்டுக்கு வந்து ரத்னாவிடம் மாதவிலக்கு நேரம் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டேன். அது விஷயத்தில் அவளைவிட நான் அத்துப்படி. பெண்ஜாதிக்கு பால் கணக்கு, தயிர்க்கணக்குதான் பார்த்து உதவ முடியலை. தூரக் கணக்காவது பார்த்து உதவ எவ்வளவோ நிம்மதியாக இருக்கிறது.

ஆக, டெல்லியில் ரத்னாபாயின் அண்ணன் பீமாராவுடைய மகள் புஷ்பவதியானதற்காக வீட்டு மட்டில் சுப நிகழ்ச்சி. டெல்லியில் இருந்து ஹரித்துவார் போய்வந்து காசி என்ற வாரணாசி. காசியில் இருந்து மதறாஸ் திரும்புதல். முதல் கட்டமாக டில்லிக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை சாயந்திரம் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் பயணம் வைத்து நானும் ரத்னாவும் புறப்பட்டாகிவிட்டது. செவ்வாய்க்கிழமை டெல்லி போய்ச் சேர்வோம். அங்கே செவ்வாயும் புதனும், ஜைனர் திருநாள் இன்னும் ஏதோ உள்ளூர் பண்டிகைக்காக அடைத்துப் பூட்டும் விடுமுறை தினங்கள் என்று பீமா எழுதியிருந்தான். போய்ச் சேர்ந்து டெல்லி ரயில்வே ஸ்டேஷனில் தேவாங்கு மாதிரி மலங்க மலங்க முழித்துக்கொண்டு நிற்கத் தேவையில்லை. பீமாராவ் வந்து கூட்டிப் போவான்.

பஞ்சாங்கக்காரர் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் ஆறு மணிக்கு தயிரும் சர்க்கரையும் குழைத்துச் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பச் சொன்னதோடு இன்னொன்றும் குறிப்பிட்டார்.

ஞாயிறன்று வடக்கு நோக்கிப் பயணம். அவ்வளவு சிலாக்கியம் இல்லை. ஒரு லக்கேஜை தெருக்கோடி வீட்டில் இப்பொழுதே வைத்து விட்டால் போதும். பரஸ்தானம் என்று அதற்கு ஜோசியப் பெயர். இப்பொழுது வடக்கே பயணம் போக நல்ல நேரம் என்பதால் இன்று மூட்டை கொண்டுபோய் வைத்தாலே பயணம் கிளம்பிய மாதிரிதான்.

சுபாங்கி அம்மாள் வீட்டில் ரத்னாவின் ரெண்டு ஆறு கஜப் புடவையும் ரெண்டு ஒன்பது கஜமும் வைத்த துணிப்பையை ரத்னா நேற்று சனிக்கிழமை ராத்திரி ஏழு மணிக்கு வைத்துவிட்டு வந்தாள். யாத்திரை சுபமாக ஆரம்பம்.

டவுட்டனில் அரைமணி நேரம் காத்திருந்தும் டாக்சி எதுவும் கண்ணில் படவில்லை. இனியும் டாக்சிக்காக காத்திருக்கவேண்டாம் என்று மந்தகதியில் நடந்துகொண்டிருந்த குதிரை வண்டியை நிறுத்தக் குதிரை பலமாகக் கனைத்து ஆட்சேபித்தது.

கோவிலுக்குப் போய்க்கொண்டிருந்த குஜராத்தி மூதாட்டி, ராமோஜி, வண்டிக்காரன், குதிரை என்று அனைத்து உயிர்களையும் 'ஜீத்தே ரஹோ' என்று வாழ்த்திப் போக, அடியெடுத்து வைத்த சுப யாத்திரை இது.

காசிப் பயணிகளை வழியனுப்ப பாதி தெரு வீட்டு வாசலில். மீதி பூ, பழம், தித்திப்பு என்று கொண்டு வர ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தது. நாலு வீடு தள்ளி இருக்கும் திண்டுக்கல் பூட்டு கடைக்காரர் முதலியார் முதல் ஆளாக வந்து நின்று குதிரைக்கு வாழைப்பழம் கொடுத்துக்கொண்டிருந்தார். காசி போக சரீர ரீதியாக முதல் பிரயத்தனம் அந்த நாலுகால் பிராணியுடையதுதான்.

காசி யாத்திரை போகிறவர்கள் வீட்டிலிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக ஏன் குதிரை வண்டிதான் வேண்டும்? டாக்சி பிடித்துப் போகலாமே

கேளப்பன் நாயர் பூட்டுக்கடை முதலியாரிடம் கேட்டது என் காதில் விழுந்தது. அதற்கு என்ன பதில் சொன்னாரோ, தெரியாது. சம்பிரதாயப்படி என்று ஒரு நறுக்கு மட்டும் காதில் விழுந்தது. ஆக, நான் என்னையறி யாமலேயே பழைய சம்பிரதாயப்படி நடந்துகொள்கிறேன் என்று அறிய சந்தோஷப்பட்டேன்.

தெருக் குழந்தைகள் என், ரத்னாவின் காலைத் தொட்டு நமஸ்காரம் செய்தார்கள். ரத்னா தயாராக எடுத்துவைத்திருந்த ஆரஞ்சு மிட்டாய்களை அவர்கள் வாயில் இட்டாள். சுபாங்கி அம்மாள் காலில் நாங்கள் விழுந்து ஆசி வாங்கிக்கொண்டோம்.

விலாசினி டைப்பிஸ்ட் ஓரமாக ஒதுங்கி நின்று ரத்னாவைத் தவிர்த்து என் காலில் மட்டும் விழ முயற்சி செய்ய, அவள் தோளைப் பிடித்துத் தூக்கித் தடுக்க மனதில் ஆர்வம் புறப்பட்டதை உடனே நிறுத்திப் புன்முறுவலோடு விலகிக்கொண்டேன். காசிக்கு, மனசில் விலாசினி எதற்கு கூடுதல் லக்கேஜ் ஆக? இறக்கி வைத்தேன். காசி போய்த் திரும்பும் வரை, அதற்கப்புறமும் என் ரத்னா என்னை வழிநடத்திப் போகட்டும்.

‘வாங்க, போகலாம், நேரம் ஆகிடப் போறது’ என்றபடி ஒரு சிறுவனுக்கு மிட்டாய் கொடுத்துவிட்டு ரத்னா புறப்பட்டாள்.

‘வாசல் கதவைப் பூட்டியாச்சா, நல்ல பூட்டுதானே போட்டிருக்கீங்க?’

முதலியார் கேட்க, உங்க கடை பூட்டுதான் என்று பதில் சொன்னேன். தெருவே திருப்தியடைந்த பதில் அது.

ரத்னா இருந்ததாலோ என்னமோ, குதிரை உற்சாகமாக ஓட ஆரம்பித்தது. கடல்காற்று புறப்பட்டு மதராஸ் பட்டிணத்தை சந்தோஷமாக இருக்கத் தகுந்த வசிப்பிடமாக அழுத்தந்திருத்தமாக எடுத்துக் காட்டியது. தில்லியில் கடல் காற்று இருக்காது என்று எச்சரித்தபடி குதிரை ஓடி நின்றது. செண்ட்ரல்.

செண்ட்ரல் ஸ்டேஷன் யுத்தகால பயம் காரணமாகவோ ராகுகால, குளிகை பயம் காரணமாகவோ ஆள் அரவம் கம்மியாக, பரபரப்பு அதிகம் தென்படாமல் இருந்தது. சர்க்கார் ரயில்வே போர்ட் பத்திரிகைகளில் செய்யும் விளம்பரங்களில், ரயில் பிரயாணத்துக்குக் கிளம்பினால் ஜட்கா வண்டிக்கு பேரம் பேசும் தகராறும், ஸ்டேஷன் உள்ளே மூட்டை முடிச்சு, குடும்பத்தோடு நுழையச் சங்கடம் தரும் ஜன நெரிசலும் இருக்கும் என்று படித்திருக்கிறேன்.

‘ஆகவே காசியோ, ராமேஸ்வரமோ, ஹரித்வாரோ, யுத்தம் ஓய்ந்து பயணம் சாவகாசமாக மேற்கொள்ளலாம். இப்போது வேணாம்’ என்று ரயில்வே அதிகாரிகள் செண்ட்ரல் ஸ்டேஷன் வாசலில் கூட்டமாக நின்று என் காலைப் பிடித்து மன்றாடுவார்கள் என்று எதிர்பார்த்தபடி நடக்கவில்லை.

கொண்டு வந்த மூட்டை முடிச்சை எண்ணிப் பார்த்தேன். என் உடுப்பு, விடா சவர ப்ளேடு, ரேசர், நஞ்சங்கூடு பல்பொடி, வேப்பங்குச்சி பிரஷ் ஒரு நூறு என்று வைத்த கறுப்பு ட்ரங்க் பெட்டி. ‘புடவை, வேஷ்டி தினுசுகளும், ட்வில், க்ரேப், பாப்ளின், மல், டோரியா, வாயில் துணிகளும் நிர்ணய விலைக்குக் கிடைக்கும்’ என்று எழுதிய புரசை கே எம் ஜவுளிக்கடை மஞ்சள் பை. அதில்தான் யாத்திரைப் பணத்தில் சரிபாதியும் வைத்திருக்கிறேன்.

இன்னொரு ஸ்டீல் ட்ரங்க், பச்சை நிறத்தில் கொஞ்சம் பெரியதாக – ரத்னாவின் உடுப்பு, புடவை, மேட்சிங் ரவிக்கைகள், பழம்புடவை, வடக்கத்திய மோஸ்தரில் சூடிதார், குர்த்தா இச்சலகரஞ்சி மராட்டி

பாணியில், உள்ளாடை, வீட்டு விலக்கு நேரத் துணி மடித்து வைத்த கதர்ப் பை. இதெல்லாம் பச்சை ட்ரங்கில்.

தோல்பை ஒன்றில் பவுடர் டப்பா, கேசவர்த்தினி புட்டி பஞ்சடைத்த மரப்பெட்டிக்குள், பற்பசை, கொத்தாக சணல் கட்டிய வேப்பங்குச்சி என்று கிட்டத்தட்ட முக்கால் பை நிறைத்திருந்தது. உதட்டுச் சாயம், சீப்பு, கத்தரிக்கோல்கூட இந்தக் கைப்பையில் உண்டு.

இதைத் தவிர பெரிய சாக்குப்பையில் இன்று ராத்திரி, நாளை காலை, நாளை மதியம், நாளை ராத்திரி, நாளை மறுநாள் காலை, நாளை மறுநாள் பகல், தேவைப்பட்டால் நாளை மறுநாள் சாயந்திரம் என்று வேளாவேளைக்கு சாப்பிட ரத்னா தயார் செய்துவைத்திருந்த சாப்பாடு. பெட்டியில் வைத்திருந்த காகிதத்தில் இதற்கான அட்டவணை இந்த ரீதியில் –

இன்று ராத்திரி எட்டு மணி – ஆளுக்கு நாலு மிளகாய்ப்பொடி இட்லி, தயிர் சாதம், கொத்தமல்லி தொக்கு, மைசூர்பாகு, பிளாஸ்க்கில் பசும்பால். பிளாஸ்கை அலம்பி வைக்க மறக்கவேண்டாம்.

> நாளைக் காலை ஏழரை மணி – ஆளுக்கு நாலு இட்லி, பூந்தி லட்டு, ரயில் காபி.
>
> நாளைப் பகல் ஒரு மணி– புளியஞ்சாதம், ஜவ்வரிசி வடாம், சப்பாத்தி, உருளைக் கிழங்கு பொடித்தது, மாவடு, தயிர்சாதம், குலோப் ஜாமுன்.
>
> நாளை சாயந்திரம் – பாதுஷா, மிக்சர், தேன்குழல், ரயில் காபி.
>
> நாளை ராத்திரி – பூரி, உருளை காரக்கறி, வாழைக்காய் வறுவல், தயிர் சாதம், எலுமிச்சை ஊறுகாய், ரயில் பால்.
>
> நாளை மறுநாள் காலை – அதிரசம், பிரட் ஜாம், ஜாங்கிரி, மிக்சர், ரயில் காபி.
>
> நாளை மறுநாள் பகல் – சப்பாத்தி, பூரி மசாலா, பிரட், ஜாம், ஜாங்கிரி.
>
> நாளை மறுநாள் சாயந்திரம் [ரயிலில் இருந்தால்] – மீந்த இனிப்பு, மீந்த காரம், ரயில் காபி. ஊர் போய்ச்சேர்ந்திருந்தால் பிளாட்பாரத்தில் யாசகர்களிடம் மிஞ்சியதைக் கொடுக்கவேண்டியது.

அப்புறம், நடுவாந்திர சைஸ் வெங்கல கூஜா நிறைய, பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் சார்பில் மெட்றாஸ் பட்டணம் முழுவதற்கும் நானும் என் இலாகாவும் வினியோகிக்கும் குளிர்ந்த குடிநீர்.

பட்டணம் பொடியை தாராளமாக உள்ளங்கையில் கொட்டி ஓரமாக விரலால் ஒதுக்கி எள்ளுப்பூ மூக்குக்கு தண்டனையோ பாராட்டோ கொடுப்பதாக மூக்கு நுனியில் வைத்து உள்வலித்து ஒரு வினாடி கண்ணை மூடி வேறு சுகம் அனுபவப்பட்டவள்போல் அபிநயித்தவளை மெய்மறந்து பார்த்துக்கொண்டிருந்தேன்.

அடுத்த ஜன்மத்தில் நான் பெண்ணாகப் பிறந்து ஆஃபீசர்ஸ் பட்டணம் பொடி போட்டு, இவள் ஆணாக இருக்க, பொடி சிந்தி வாழ்க்கைப்பட வேண்டும்.

‘இத்தனை பண்ணிட்டு வந்திருக்கியே. வழியிலே வெய்யில் அதிகமாச்சே. புளியஞ்சாதம் ஊசிப்போச்சுன்னா என்ன பண்றது? இட்லி நொசநொசன்னு ஆனாலும் தின்ன முடியாதே’, என்று கரிசனத்தோடு கேட்டேன்.

‘அதெல்லாம் நீங்க சாப்பிடணும். ரயில் ஸ்டேஷன்லே நிக்கறபோது போய் சூடா வாங்கிட்டுவந்து எனக்கு ஊட்டி விடணும் நீங்க.’

சீரியஸாகச் சொல்லி என்னைப் பார்க்க, ‘ஊட்டறதுன்னா இன்னிக்கே ஆரம்பிச்சுடலாமே’ என்றேன் முந்திக்கொண்டு.

‘ஊட்டவும் வேணாம், ஒண்ணும் வேணாம், கெட்டுப்போன சாப்பாடுன்னா முதல்லே அதை குப்பைக்குள்ளே போடறவ நான். கெடாமல் இருக்க மெனக்கெட்டிருக்கேன். சாப்பிடுங்க. உங்களுக்கே புரியும்’ என்று ஆவலைத் தூண்டியிருந்தாள் அவள்.

ஒன்று இரண்டாகத் தெரு சிநேகம், அடுத்த தெரு நட்பு என்று வந்து சேர கேளப்பன் நாயர் யாரையோ தேடிக்கொண்டிருந்தார்.

‘டிக்கெட் வாங்க வேணாமோ?’ என்று நியாயமான சந்தேகத்தை வெளியிட்டார் ட்ராம் கண்டக்டர் கண்ணாயிரம்.

‘டிக்கெட் வந்துட்டிருக்குங்க’, என்று சொன்னேன்.

‘அது எப்படி பாசஞ்சர் மட்டும் வந்து டிக்கெட் வராம?’ என்று குழம்பியவரிடம், அடுத்த வீட்டு ஸ்டேஷன் மாஸ்டர் வருவதைக் காட்டினேன்.

‘அவர் பகல்லே எடுத்து வச்சுட்டார், இப்போ போய் எடுத்தா கூட்டம் அதிகமா இருக்கலாம்’ என்றேன். ‘என் ஆட்களும் வந்துட்டிருப்பாங்க’ என்றார் கேளப்பன்.

எந்த ப்ளாட்பாரம்? ரத்னா கேட்டாள்.

‘ஐந்து. வாங்க, வண்டி வர்ற நேரம்’, என்றார் ஸ்டேஷன் மாஸ்டர். இது என் சாம்ராஜ்யம் என்ற பீடும் பெருமையுமாக நடைபோட்டு வந்தார் அவர்.

ரயில் வந்திருந்தது. இரை எடுக்காத பாம்புபோல் சோர்வாக நின்றிருந்த நீண்டு வளைந்த வண்டி அது.

கேளப்பன் பாதி இருட்டில் நின்றிருந்த ரயில் பெட்டிகளில் எழுதிய வேகன் நம்பரைக் கூர்ந்து படித்து, ‘இந்தப் பெட்டிதான்’ என்று அதன் அருகே போய் நின்றார். உள்ளே முணுக் முணுக் என்று மங்கிய ரயில்வே பல்ப் வெளிச்சத்தில் ஆணும் பெண்ணுமாக இருவர் ஒரு பக்கம் உட்கார்ந்து கேளப்பனையே பார்த்தபடி இருந்தார்கள்.

நம்ம ஆள்தான் என்று கேளப்பன் விவரித்து, எங்கள் சாப்பாட்டு சுமையையும் ட்ரங்க் பெட்டிகளையும் உள்ளே கொண்டுபோய் வைக்க உதவினார். உள்ளே இருந்த இருவரும் எழுந்து நின்றார்கள். ஆளுக்கு ஒரு ரூபா கேளப்பன் கொடுக்க வாங்கிக்கொண்டு போனார்கள் அவர்கள்.

‘இனி இந்த வண்டி டில்லி போறவரை உங்க இடம்தான் இது.’ கேளப்பன் ஆக்கிரமிப்பாளரின் வெற்றியைப் புன்சிரிப்போடு கொண்டாட நானும் ரத்னாவும் அமர்ந்தோம்.

எல்லோரும் கூட்டமாக ஏறி கம்பார்ட்மெண்டை நிறைத்தார்கள். இத்தனை பேர் பெருங்கூட்டமாக இந்த ரயில் பெட்டியில் ஏன் ஏறணும் என்று குழம்பிய ஒரு மூத்த ரயில்வே அதிகாரி ‘வண்டியிலே கூட்டம் இல்லே... உங்க சௌகரியப்படி ஏறி இருங்க... ரயில் பயணத்தை கூடிய மட்டிலும் தவிர்க்கறது நல்லது. ஒரு போர்வீரன் போர்முனைக்குப் போகிறதுக்கான நிலக்கரியை உங்கள் பயணத்திலே நீங்க செலவு செய்துதான் ஆகணுமா?’ என்று சர்க்கார் மற்றும் யுத்த ஆதரவு பிரச்சாரம் செய்வதை எங்கள் அடுத்த வீட்டு ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்து பாதியிலேயே நிறுத்தி, ரயில்வே சகாவான அவருக்கு சல்யூட் வைத்து அப்பால் போனார்.

ரயில் கிளம்ப மணி அடித்தபோது கை கொடுத்து வணங்கி காலில் தொட்டுக் கும்பிட்டு பாத்துப் போய்ட்டு வாங்க என்று கரிசனத்தோடு

சொல்லி எனக்கும் ரத்னாவுக்கும் பிரியாவிடை கொடுத்துப் பூமாலையும் போட்டுவிட்டு இறங்கிப் போனார்கள்.

வண்டி நகரும்போது வயதான ஒரு பெண்மணி கொஞ்சம் தட்டுத் தடுமாறி வந்து எங்கள் எதிர் சீட்டில் அமர்ந்துகொண்டாள். பெரியதாக ஒரு கான்வாஸ் பையைத் தூக்கி வந்தாள் அந்த அம்மாள். அது தவிர மூட்டை முடிச்சு இல்லை.

வண்டி வேகமெடுக்கும்போது இன்னொரு பெரியவர் காக்கி பேண்டும் காக்கி சட்டையுமாக ஒவ்வொரு சீட்டாகப் பார்த்து வந்தவர் எனக்கு எதிரே அந்த மூதாட்டிக்கு அருகே உட்கார்ந்தார்.

சட்டை பாக்கெட்டில் இருந்து ஒரு பாட்டிலை எடுத்துத் திறக்க, பிராண்டியோ விஸ்கியோ என்று கவலையோடு பார்த்தேன். இல்லை, உள்ளே இருந்து சிறு பாறாங்கல்போல பழுப்பு நிறத்தில் ஒரு வஸ்து.

அட, இது இருமல் மாத்திரையாச்சே என்று நினைக்கும்போது எச்சில் ஊற ஆரம்பித்தது. நான் எச்சில் முழுங்கும் முன் தாத்தா ‘பெப்ஸூ’ என்று கேட்டு என்னிடமும் பாட்டிலை நீட்ட, ஒரு மாத்திரை எடுத்துக்கொண்டேன். இனிப்பு, புளிப்பு, காரம் என்று பல சுவையில் பள்ளிக்கூட வாசலில் விற்கும் தின்பண்டம் போன்ற அதை மெல்ல ஆனந்தம் ஆனந்தமே.

பெப்ஸூ? பாட்டிலை முகத்துக்கு நேரே நீட்டியதால் பாட்டியம்மா முகத்தைச் சுளிக்க இவர் என்னையும் ரத்னாவையும் பார்த்துச் சங்கடமாகச் சிரித்தார். பாட்டியம்மாள் அவரை முறைத்துப் பார்த்துவிட்டு ஜன்னல் வழியே இருட்டைப் பார்க்க ஆரம்பித்தாள்.

நான் அவளிடம் இந்தியில் கேட்டேன் – ‘தில்லி போறீங்களா?’

அவள் எனக்குப் புரியாத மொழியில் கடகடவென்று ஏதோ சொல்லி அந்த முதியவரைச் சுட்டிக் காட்டினாள். அவர் சிரித்தபடி மறுபடி பாட்டியம்மா நன்றாக உட்கார இடம் ஒழித்துக் கொடுத்தார். இன்னும் விலகி உட்கார்ந்து கிழவி கண்களை மூடிக்கொண்டாள்.

‘தாத்தா, பாட்டி சண்டை போட்டபடி வராங்கபோல. இன்னும் பாட்டி கோபம் அடங்கலே. தாத்தா உங்க மாதிரி அசட்டுச் சிரிப்போடு அவங்க பின்னாலேயே வந்துட்டிருக்கார், சரியா?’ ரத்னா மெல்லிய குரலில் கேட்டாள்.

‘நான் எதுக்கு அந்தக் கிழவியம்மா பின்னாடி போகணும்?’ என்று விவரம் கேட்டேன். பாட்டி மாதிரி முறைத்துவிட்டு ஜன்னல் வழியே பார்த்து, ‘ஏதோ பெரிய ஸ்டேஷன் வந்திருக்கு’ என்று அறிவித்தாள் ரத்னா. எட்டிப் பார்த்துவிட்டு, கூடூர் ஜங்ஷன் என்றேன்.

ராணுவ உடுப்போடு நடந்துவந்த சிப்பாய்கள் நால்வர் எங்கள் கம்பார்ட்மெண்டில் ஏறிக்கொண்டதைக் கொஞ்சம் கவலையோடு கவனித்தேன்.

பிரிட்டீஷ் ராணுவ வீரர்கள் தனியான கூட்டம். அவர்கள் வெள்ளைக் காரர்களாக இருந்தால் அவர்களைத் தவிர்க்க எல்லோரும் முயற்சி செய்கிறார்கள். இந்திய சிப்பாய்களை ஒரு பரிவோடு, வேறே வேலை கிடைக்காமல் காக்கி யூனிபாரம் மாட்டி உயிரையும் திரணமாக மதித்து ஓடும் விவசாயிகளின் மகன்கள் என்று அனுதாபத்தோடு பார்க்கிறார்கள். அவர்கள் முரட்டுத்தனமாக பழகினால், முதுகுக்குப் பின்னால் சத்தமில்லாமல் காரி உமிழவும் தயங்குவதில்லை சாதாரண பிரஜைகள்.

கம்பார்ட்மெண்டுக்குள் வந்தவர்கள் முரடர்களாக இருக்கக்கூடாது என்று பிரார்த்தித்தேன்.

டீ விற்றுப் போகிற பையனையும் ராத்திரியிலும் கொட்டாங்கச்சி பிடில் விற்கிறவனையும் தவிர ரயில் பக்கம் யாரும் வரவில்லை. தாத்தா எழுந்து தடுப்புக்கு அடுத்த வரிசைகளை நோக்கிப் போனார். அங்கே வெகுவாகக் காலியாக இருந்ததை ரயில் சென்ட்ரலில் புறப்பட்டபோதே கவனித்தேன்.

ரத்னா பாத்ரூமில் பொடி போட்டுவிட்டு உற்சாகமாக வந்தாள். தண்ணீர் கூஜாவை அருகே நகர்த்தி வைத்துக்கொண்டாள்.

‘அடுத்த ஜங்ஷன்லே சாப்பிடலாமா?’ என்று கேட்டாள்.

‘அடுத்த ஜங்ஷன் தெனாலி.’

‘அங்கே என்ன கிடைக்கும்?’ ஆவலோடு விசாரித்தாள்.

‘யானை, குதிரை தவிர என்ன கிடைக்குமோ தெரியலே.’

‘அரை மணி நேரத்துலே வந்துடுமா?’

‘ராத்திரி ஒரு மணிக்கு வரும்.’

‘உங்களுக்காக வேளாவேளைக்கு பலகாரம், கலந்த சாதம்னு பண்ணி, தனித்தனியா பாக்கெட் போட்டு, சாப்பாட்டு அட்டவணையும் போட்டேன் பாருங்க... என் புத்தியை...’ அவள் கோபத்தை ரசித்தேன்.

அவள் ஆதரவு தேடி எதிர் சீட் கிழவியம்மாளைப் பார்த்தாள். முதியவள் கால் நீட்டிப் படுத்து உறங்க ஆரம்பித்தாள்.

ரத்னா எழுந்து அவள் அருகில் குனிந்து, ‘சாப்பிட்டு படுத்துக்கலாம் அம்மா’ என்றதும் கிழவியம்மா ஏதோ சொல்லியபடி உட்கார்ந்தாள். இது தென்னிந்திய பாஷை என்று தெரிகிறது. ஆனால் இதுவரை நான் கேட்காதது. கொஞ்சம் தமிழ், கொஞ்சம் கன்னடம், கொஞ்சம் மராத்தி, கொஞ்சம் மலையாளம் இப்படி இந்த பாஷை பழக்கப்படாத என் காதுக்கு வருகிறது.

ரத்னா இட்லி பொட்டலத்தையும், தயிர் சாதத்தையும் இந்த ராத்திரி போஜனத்துக்காக கொண்டுவரப்பட்ட மற்றவற்றையும் சாக்குப் பைக்குள் தேடி எடுத்து சீட்டில் வைத்தாள். பைக்குள் பையாக ஒவ்வொரு வேளைக்கும் தனித்தனியாக கட்டிக்கொண்டு வந்திருந்தாள் நான் கட்டிய பெண்மணி.

பாட்டி அதற்குள் தன் கான்வாஸ் பையில் இருந்து இரண்டு வாழைப்பழங்களை எடுத்து அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு வேறே எதுவும் வேணாம் என்று கை காட்டினாள்.

அடுத்த தடுப்பிலிருந்து தாத்தா எட்டிப் பார்த்தார். நான் மராட்டியிலும் தமிழிலும் இங்க்லீஷிலும் அவரை எங்களோடு சாப்பிட வரச் சொன்னேன். அவர் பாட்டி முகத்தை நிமிர்ந்து பார்த்தார். பெப்ஸ் இருமல் மாத்திரை பாட்டிலைத் திறந்து ஒரு மாத்திரை எடுத்து மென்றபடி, ‘பெப்ஸ௫?’ என்று பாட்டியிடம் நீட்டினார். அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டாள்.

தாத்தா சிரித்தபடி, பாக்கெட்டிலிருந்து பாட்டிலைத் திரும்ப எடுத்து ரத்னாவிடம், ‘பெப்ஸ௫?’ என்று கேட்டார். அவள் வேண்டாம் என்று புன்னகைத்தாள். ரத்னா கொடுத்த ராச்சாப்பாட்டில் இருந்து தயிர் சாதத்தை மட்டும் ரெண்டு ஸ்பூன் எடுத்துக்கொண்டு மற்றதைத் திருப்பிக் கொடுத்து விட்டார் அவர்.

‘இந்த வயதில் சண்டை போட்டுக்கொண்டு தம்பதிகள் அப்படி என்ன ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல் வீராப்பாக பயணம் வந்தது?’

நான் ரத்னாவைக் கேட்க, ‘அவர்களை மறக்கலாம், நம் யாத்திரைபற்றி சந்தோஷமாக ஒரு நிமிஷம்கூட பேசலே நாம்’, என்றாள். வாஸ்தவம்தான்.

ரயில் அசைவில் பசி கூடுதலாகும். அடிக்கடி வரும். சாப்பாடு அதிகமாக இறங்கும். தூக்கம் நினைத்த மாத்திரத்தில் வரும். நாங்கள் தீவிரமான ஈடுபாட்டோடு சாப்பிட்டு முடித்தோம்.

கை அலம்பி வந்து பிளாஸ்கை எடுத்தபோது வயோதிக தம்பதிகளை பால் குடிக்கிறீங்களா என்று ஒரு தடவை கேட்டேன். அவர்களுக்கு வேண்டாமாம். இன்னும் ஆறு வேளை இவர்களைப் பார்க்க வைத்துக்கொண்டு சாப்பிட்டு வயிற்றுவலி எனக்கு வரும் என்று ரத்னாவிடம் சொன்னேன்.

‘விளையாட்டுக்குக்கூட வலியைக் கூப்பிடாதீங்க’, என்றபடி ப்ளாஸ்கில் இருந்து பாலை டம்ளர்களில் ஊற்றினாள். குடித்துக்கொண்டிருக்கும்போதே எங்கே எங்கே என்று உறக்கம் கண்ணில் மண்டியது.

நெல்லூர் வரும்போது நான் லக்கேஜ் வைக்கும் மேல் தட்டிலும், ரத்னா சீட்டிலுமாகத் தூங்கத் தொடங்கியிருந்தோம்.

விடிவதற்கு முந்திய காலை நாலு மணிக்கு முழிப்பு தட்டியபோது தாத்தா தரையில் நியூஸ் பேப்பர் விரித்துப் பள்ளி கொண்டிருந்ததை மேலே லக்கேஜ் தட்டிலிருந்து கவனித்தேன்.

பரபரப்பாக எழுந்து உட்கார்ந்தார். விஜயவாடா விஜயவாடா என்று நாலு தடவை கேட்க, நான் படுத்திருந்த பலகையில் இருந்து கீழே இறங்கி ஜன்னல் வழியே பார்த்தேன். அவுட்டர் கேபினைக் கடந்து கொண்டிருந்தது ரயில்.

விஜயவாடா வந்து கொண்டிருக்கு என்று தூக்கக் கலக்கத்தோடு, முடிந்த அளவு அபிநயம் பிடித்தேன்.

ஐந்து நிமிடத்தில் விஜயவாடா ஜங்ஷனில் வண்டி வந்து சேர்ந்து நின்றது.

அவர் எழுந்து பையைத் தூக்கிக்கொண்டு இறங்கிப்போக, இதென்ன கண்றாவி என்று மலங்க மலங்க விழித்துக்கொண்டு பாட்டியம்மா வையும், ரத்னாவையும் எழுப்பினேன்.

ரத்னாதான் முதலில் எழுந்தது. எழுந்து பட்டணம் பொடி வைத்த சிமிழோடு உடனே பாத்ரூமுக்கு நடந்தாள். திரும்பி வந்தபோது எந்த நேரத்திலும்

உலகையே தனியாக நின்று சமாளிக்கும் துணிச்சல் அவள் பார்வையிலும், விடைத்த மூக்கிலும் தெரிந்தது.

‘தாத்தா கோபம் ராத்திரி அதிகமாயிடுத்துபோல... விஜயவாடா ஜங்ஷன் இது. அவர் இறங்கிப் போய்ட்டார்.’

நான் பரபரப்பாகக் குரல் உயர்த்த கிழவியம்மா கொடகொட என்று ஏதோ சொல்லத் தொடங்கினாள்.

நானும் ரத்னாவும் கொட்டக்கொட்ட முழித்தபடி நிற்க, கூடூரில் ஏறிய சிப்பாய்களில் ஒருவன் என்ன விஷயம் என்று தமிழில் ரத்னாவைக் கேட்டபடி எட்டிப் பார்த்தான்.

சொன்னாள். சொன்னோம். அவன் கிழவியம்மாவிடம் நிதானமான குரலில் பேசினான். அவள் பேசிய அதே பாஷை என்று புரிந்தது. என்ன அது?

பேசிக்கொண்டிருக்கும்போதே சிரிக்க ஆரம்பித்துவிட்டான் அவன். ஆர்வம் தாங்கமுடியாமல் என்ன என்ன என்று நான் நேரம் காலம் இல்லாமல் அலை பாய்ந்தேன். யாராவது ஓடிப்போய் கிழவரைக் கூட்டி வரலாம் என்று சொன்னேன். வேண்டாம் என்று சிரித்தபடி ராணுவத்தான் கைகாட்டினான்.

‘துளு பாஷை இது. இவங்களுக்கும் அந்த கிழவருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையாம், சொல்றாங்க. சென்ட்ரல்லே டிக்கெட் வாங்கும்போது அடுத்து நின்னவர் இவங்க கூடவே ரயிலேறி ஒரே கம்பார்ட்மெண்ட், பக்கத்து பக்கத்து சீட்–ன்னு ஒட்டிக்கிட்டாராம். பாட்டியம்மா வாராங்கல் போறாங்க. அவர் எங்கே போகறார்னு தெரியாதாம். அவர் பேசாததாலே என்ன பாஷைக்காரர்னும் தெரியாதாம்... புருஷன் பெண்ஜாதி நீங்க, அவங்க ரெண்டு பேரையும் சண்டை பிடிச்சுட்டு ரயிலேற வந்த தம்பதின்னு அனுமானம் செய்து இதைச் சாப்பிடுங்க, அதைச் சாப்பிடுங்கன்னு அன்புத் தொல்லை கொடுத்தீங்களாம்... சனி விட்டாச்சு. கொஞ்சம் தூங்கணுமாம்.’

ராணுவ வீரன் என் தோளில் தட்டிவிட்டு நடந்தான். பாட்டி படுக்க ஆயத்தம் செய்தபோது சீட் ஓரமாக ஏதோ உருண்டு கிடக்க துழாவி எடுத்தாள். பெப்ஸ் இருமல் மாத்திரை பாட்டில். பெப்ஸூ என்று கிழவர் சொல்கிற மாதிரி சொல்லி என் முகத்தைப் பார்த்தாள், அவள் முகத்தில் கரிசனமோ வருத்தமோ ஒரு வினாடி அந்த அரை இருட்டில் மின்னி மறைந்தது. நிம்மதியாக உறங்கத்தொடங்கியிருந்தாள். பெப்ஸூ என்றேன் நானும்.

விஜயவாடாவில் பஞ்ச பஞ்ச உஷத்காலமான காலை நாலு மணிக்குச் செய்ய எதுவும் இல்லாமல் நானும் ரத்னாவும் மறுபடி உறங்க முயற்சி செய்ய ரயில் சக்கட சக்கட என்று தொடர்ந்து ஒரே தாளத்தில் பாடித் தாலாட்டியது.

கண் முழித்தால் வாராங்கல் ஸ்டேஷனில் ரயில் ஏகக் கோலாகலமாக நுழைந்துகொண்டிருந்தது. விடிந்த சுருக்கில், அழகான காலை ஆறரை மணி. பல் துலக்கி வந்தேன். ரயிலுக்குப் பக்கமாக, கம்பார்ட்மெண்டுக்கு எட்டடி தள்ளி ப்ளாட்பாரத்தில், பெரிய மேஜைகள் சேர்த்துப் போட்ட மாதிரி மேடையும், ஷெட் இறக்கி, உள்ளே மேஜை நாற்காலிகளும், வெளியே அடுத்தடுத்து பத்து பேர் நிற்க அரை வட்டமாகப் படி வைத்த இடமுமாக வெஜிடேரியன் போஜனசாலை தென்பட்டது.

அந்தக் காலை நேரத்தில் ஆவி பறக்கும் இட்லிகளோடும், வானளவு உயர்த்தி ஆற்றிய காப்பி டம்ளரிலிருந்து காப்பிக்கான இன்னொரு சுத்த ஆவி எழுந்திருக்கவுமாகப் பார்க்க ரம்மியமாக இருந்தது. ‘சூடா இட்லி காபி’ என்று உள்ளே இருந்து சத்தமாக அழைத்துக் கொண்டிருந்த குரல் பசியைக் களேபரமாகத் தூண்டியது.

கல்லாவில் காசை வாங்கிப்போட்டு ப்ளேட் ப்ளேட்டாக இட்லி கொடுத்துக்கொண்டிருந்த இளம் பெண் தெலுங்கு தேசத்துக்கே சொந்தமான பளிச்சென்ற கறுப்பும், விண்ணென்று மதர்ப்பு தெறிக்கும் உடல் கட்டும், நல்ல உயரமும் மனசைக் கெல்லும் கூர்ந்த பார்வையுமாக இருந்தாள்.

சுடச்சுட இட்லியும் காப்பியும், உபகாரமான உபசாரமாகத் தரப்படத் தயாராக இத்தனை அருகில் இருந்தும், நேற்று மத்தியானம் வீட்டில் வார்த்து மிளகாய்ப்பொடி பூசிய ஆறிப்போன இட்லியை சாப்பிட என் தலையெழுத்து. ஏக்கத்தோடு ரத்னாவைப் பார்த்தேன். பக்கத்தில் வேறே யாருமில்லை என்பதால் அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு சின்னதாகச் சிரித்தாள்.

‘என் ராஜாவுக்கு என்ன வேணுமாம்?’

அந்தக் கேள்விக்காகவே அந்த நிமிஷம் சுற்றி இருந்த எல்லோரையும், எல்லாவற்றையும் மறந்து அதை மட்டும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மாதிரி நான் காத்திருந்தது வீண் போகவில்லை.

உடனே பதிலுக்கு ‘என் ராணி’ என்று பிரியத்தோடு அழைக்க உத்தேசித்திருந்தேன். ஆனால் சொன்னதோ –

‘தெலுங்கர்கள் கூவிக் கூவிக் கூப்பிட்டு சுடச்சுட இட்லி தராங்க... சாப்பிட்டு உனக்கும் வாங்கிட்டு வரட்டா? இன்னும் பத்து நிமிஷம் வண்டி நிற்கும்.’

அவள் தலையில் அடித்துக்கொண்டாள். ‘தெலுங்கர்கள் என்ன? தெலுங்கு பொம்மனாட்டின்னு சொல்லும். அப்படி என்ன தந்த சுத்தி செய்ததும் கட்டுமஸ்தான தெலுங்கச்சி கையால் காப்பி உபசாரம் கேட்குது?’

வார்த்தையால் சுட்டெரித்தாள் விடிகாலை நேரத்தில். சட்டென்று சரியான சாக்கு முன்னால் வந்து நின்றது. ‘ப்ளாஸ்கை எடு, காப்பி வாங்கிட்டு வந்துடறேன்.’

காப்பி என்றால் வேண்டாம் என்று சொல்ல நாரத முனிகூட யோசிப்பாரே. தும்புருவோடு ஓர் ஓரமாக நின்று புது டிகாஷன் காப்பியை அமோகமாக ரசித்துக் குடித்துவிட்டு ஸ்ரீமன் நாராயணன் விஷயமாகப் புதிதாகக் கவனம் செய்து வைத்திருந்த சஹானா ராக தெலுங்கு க்ருதியைப் பாட ஆரம்பிப்பாரே. நாரதர் என்ன தியாகராஜ சுவாமிகளா? தெலுங்கு க்ருதி கவனம் செய்து பாட? காலையிலேயே குழப்பம் ஏன்? தெலுங்குக் காப்பியைக் குடித்தால் எல்லாம் சரியாகி விடும்.

கைத்தறி ஜோல்னாப்பையின் வாரைத் தோளுக்குக் குறுக்காக மாட்டிக்கொண்டு போஜனசாலைக்குப் போக, சூடா பருப்பு வடை, உளுந்து வடை, ரெடி சார் என்று ஆசையைக் கிளப்பி விட்டாள் கடைக்காரி.

பத்து ரூபாய் வள்ளிசாக எடுத்துக் கொடுக்க, நேற்றைய தெலுங்குப் பத்திரிகை காகிதத்தை கூம்பு மாதிரி மடித்து எண்ணெய்ப் பலகாரம் கை நிறையக் கொடுத்ததோடு இன்னொரு ஐந்து ரூபாய்க்கு கள்ளிச்சொட்டாட்டம் காப்பியும் ப்ளாஸ்கில் நிரப்பித் தந்தாள் அவள். வெந்நீர் ஊற்றி ப்ளாஸ்கை அலம்பிக் காபியை நிறைத்ததற்காக அவளுக்கு கூடுதல் நன்றி சொன்னேன்.

இட்லி வேணுமா என்று ஒரு தட்டில் இரண்டு இட்லியை வைத்து நீட்டினாள். தொட்டுப் பார்த்தேன். அசல் பாறாங்கல். மற்ற எது எப்படி இருக்குமோ, இட்லி பாறாங்கல்லாக இருக்கக்கூடாது.

என் ரத்னா பிரியமும் நல்ல மனசும், கரிசனமுமாக வார்த்து, ரெண்டு நாள் வருவதாக நெய்யில் குழைத்த மிளகாய்ப் பொடி தடவி எண்ணெயில்

முழுக்காட்டிக்கொண்டு வந்த இட்லியின் மெத்தென்ற மென்மை எங்கே, அதன் ருஜி எங்கே. இது எங்கே?

ரயில் ஊதுவதற்குள் ஜோல்னாப் பையில் எண்ணெய்ப் பண்டங்களும் ப்ளாஸ்கில் காப்பியுமாக கம்பார்ட்மெண்ட் வந்தடைந்தேன்.

கம்பார்ட்மெண்ட்டும் முழு ரயிலுமே கிட்டத்தட்ட ஆள் அரவமின்றிக் கிடந்தது. இவ்வளவு நேரம் ரயிலில் உட்கார்ந்து வந்தது முழுக்க மெட்றாஸில் புறப்பட்டு வாராங்கல்லில் இறங்க வந்த கூட்டமாக இருக்கலாம். அல்லது பெஜவாடா என்று அப்பாஜி சொன்ன விஜயவாடாவுக்குப் போகக் கிளம்பி வந்ததோ.

ரத்னா, பட்டணம் பொடி அடைத்த அலுமினியம் அடுக்கோடு பாத்ரூம் போய்விட்டு தலையில் குடைச்சல் தீர்ந்த நிம்மதியோடு திரும்பி வந்தாள்.

ஆய்ந்து ஓய்ந்து நின்ற ரயிலில் எங்கள் சீட்களில் இருந்து நானும் ரத்னாவும் காலை பசியாற ஆரம்பித்தோம்.

எண்ணெய்ப் பண்டங்கள், அதுவும் எந்த எண்ணெயில் பொறிக்கிறாங் களோ அது சுத்தமானதா, திருப்பித் திருப்பி உபயோகிக்காததா இதெல்லாம் தெரியாது என்பதால் போஜனசாலையில் வாங்கி வந்த பதார்த்தங்களை உடனே இப்போதும் மதியத்துக்கும் கூடுதல் சாப்பாடாகவும் வைத்துக்கொள்ள ரொம்ப கஷ்டப்பட்டு அவளுடைய அனுமதி வாங்கினேன்.

வீட்டு இட்லியும் கடை வடையுமாக நல்ல ஜோடி அது. சொன்னால் அவள் முறைப்பாள். தெலுங்கச்சியை எனக்கு சமானமாக் கிட்டடீங்களா, ஏன் உமக்கு இப்படி ஒரு சின்ன புத்தி என்று பிரசங்கம் ஆரம்பித்து விடுவாள்.

மௌனமாக பசி ஆறிக்கொண்டிருந்தபோது ஒரு சின்னக் குடும்பம் எங்கள் கம்பார்ட்மெண்டில் நுழைந்தது. அவர்களுடைய மூட்டை முடிச்சுகளை ஒரு போர்ட்டர் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான்.

என் வயதில், எனக்கு ஒண்ணு ரெண்டு வயது சின்னவனாகக்கூட இருப்பான் அந்த பிராமணன். கூடவே வயோதிகத் தாயார். அடுத்து அவன் பெண்டாட்டி சோனியாக மடிசார் புடவையில். அவள் கையைப் பிடித்தபடி மூன்று வயதில் ஒரு பெண் குழந்தை.

பிராமணக் குடும்பம் என்று தெரிந்ததும் ரத்னா கொஞ்சம் முன் ஜாக்கிரதையாக, கையில் எடுத்துக் கடித்த வடையை இலையில் வைத்து விண்டு சாப்பிட ஆரம்பித்தாள்.

நார்மடிப் புடவை என்று மதறாஸ் ராஜ்யத்தில் சொல்லப்படும், பிராமண விதவைகளுக்கான புடவையை மடிசார் போல் அணிந்து, மொட்டைத் தலையைப் புடவைத் தலைப்பால் மூடியிருந்தாள் அந்த முதியவள்.

அவள் கம்பார்ட்மெண்டில் ஏறியதும், 'இங்கேயா போகணும்? யாரோ மீன் மாம்சாதிகள் போஜனம் பண்றாளே' என்றபடி ரத்னாவைப் பார்த்தாள். அவள் கையில் ஒரு சிறு ஸ்தாலி செம்பில் தண்ணீர். மருமகள், பட்டுத்துணி வாய்ப்புறத்தில் கட்டிய ஒரு கூஜாவைக் கையில் பிடித்திருந்தாள்.

'அம்மா, மீன் முட்டை எல்லாம் இல்லே. இட்லிதான். சுத்த சைவம்.'

ரத்னா கொஞ்சம் குரலை உயர்த்திச் சொன்னபோதே அவளுக்கு உள்ளே உயர்ந்து கொண்டிருந்த கோபம் எனக்கு அனுபவிக்கக் கிட்டியது. அவள் என் தட்டில் போட்ட லட்டு உருண்டை பயத்தில் குதித்தது.

'சரிடீ இப்ப என்ன சொல்லிட்டேன் நீ சத்தம் போட?' என்றபடி கூஜாவை சீட்டில் ஓரமாக வைத்தாள் அந்த மூதாட்டி. செம்பு ஜலத்தில் கொஞ்சம் உள்ளங்கையில் எடுத்து அடுத்த தடுப்பில் மர இருக்கை களுக்கு மேல் தெளித்தாள் அவள். சொம்புத் தண்ணீரை எடுத்துக் கொண்டு எங்களை நோக்கித் திரும்ப, அந்தக் குடும்பத்து மருமகள் பயத்தோடு என்னையும் அவள் வீட்டுக்காரனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

'நான் இங்கே இருந்துக்கறேன்' என்று பாட்டியம்மா சத்தமாக என்னைப் பார்த்துச் சொல்லி, எங்களுடைய சீட்களுக்கு எதிர் பெஞ்சில் அலம்பி விடுகிற மாதிரி தாராளமாக தண்ணீரை ஏதோ ஸ்லோகம் முணுமுணுத்தபடி தெளித்தாள்.

'நீ சாப்பிடுடீ'ம்மா. ஏண்டாப்பா, குஞ்சாலாடை கடிச்சுத்தான் திங்கணுமா? அதுவும் இடது கையிலே பிடிச்சுண்டுதான் கடிக்கணுமா? தீட்சிதர் பார்த்தா அன்னத்ரேஷமா இருக்கும்பார்.'

நான் கிழவியைப் பார்த்து ஏதாவது சொல்ல நிச்சயிக்க, அவளுடைய மகன், 'ஏம்'மா அவாளோட சண்டை போடறே. நமக்கு அவா சக ப்ரயாணிகள்தானே.' என்றான். ப்ராணி என்றானா பிரயாணி என்றானா

தெரியவில்லை. அதற்காக வேண்டுமானால் இன்னொரு சண்டை வலிக்கலாம்.

'ஐயோ நான் ஏன் சண்டை எல்லாம் போடறேன். இத்தனை லட்சணமான பொண்ணு பிரியமா தட்டுலே எடுத்து வச்சிருக்கா... ஏண்டீம்மா... ஆத்திலே பூந்தி தேச்சு லட்டு பிடிச்சியா இல்லே கடைச்சரக்கா... போகட்டும்... ஏதோ ஒண்ணு... இந்தப் பிள்ளாண்டான் அதை இடது கையால் சாப்பிடணுமான்னு தாங்கலே. என் பிள்ளை மாதிரித்தான்டாப்பா நீயும்... தீர்க்காயுசா இரு... நீயும் விச்சியாயிருடி அம்மா. சுந்தர கனபாடிகள் மச்சினி பொண்ணு வாலாம்பா ஜாடை உனக்கு' என்றபடி இத்தனூண்டு ஜலத்தை ரத்னாவை நோக்கித் தெளித்தாள். புனிதமாக்கப்பட்ட ரத்னாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. நமஸ்காரம் என்று தலையைக் குனிந்தாள்.

'தீட்சிதர், சாப்டுண்டு நமஸ்காரம் பண்ணக் கூடாதுன்னு சொல்வார்.'

'அவர் வரல்லியா?' ரத்னா சிரிப்போடு கேட்க, பாட்டியம்மா தலையில் சொறிந்தபடி எங்கள் எதிர் சீட்டில் உட்கார்ந்தாள். 'அவரா, வர்ற மாசம் த்ரையோதசி திவசத்துக்கு எள்ளும் தண்ணியும் இரைக்கறதை வாங்கிக்க ஆவி ரூபமா வந்துட்டு போவார்... எங்காத்துக்காரர்தான்.' பாட்டி சொன்னாள்.

பாட்டிக்கு கண்ணீர் வராவிட்டாலும் தலையில் கை வைத்து மடியில் தண்ணீர்ச் செம்போடு உட்கார்ந்திருந்தது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

அவள் மகன் குழந்தையைத் தோளில் சுமந்து எங்கள் பக்கம் வந்தான். 'அம்மா இப்படித்தான் தத்து பித்துன்னு ஏதாவது சொல்லி ரசாபாசம் ஆயிடும். ராமேசுவரத்திலே கோவில் வாசல்லே பூக்காரி ஜவ்வந்திப் பூமாலை கட்டித் தந்தபோது, ஏண்டியம்மா தீண்டலுக்கு ஒதுங்கினியோன்னு கேட்டு தெருவையே ஸ்தம்பிக்க வச்சுட்டா' என்றான்.

அவன் வீட்டுக்காரி, 'ஐயோ, இதை விஸ்தரிச்சு வேறே சொல்லணுமா?' என்று பாதி புகார் சொல்லும் தொனியும் பாதி சிரிப்புமாக எங்களுக்கு முன் நின்றாள். அவள் முந்தானையைப் பிடித்தபடி பெண் குழந்தை வாயில் விரல் போட்டபடி நின்றது.

'வர்த்தினி, உன் பொண்ணு கல்யாணம் ஆறபோதும் விரல் சூப்பறதை விடமாட்டா... எடுடி குஞ்சம்மா... விரலே காணாமப் போயிடும் ஒரு நாள்...'

இரைச்சலாகச் சொல்லிவிட்டுக் குழந்தை மேல் தண்ணீர் தெளிப்பது போல் பாட்டி பாசாங்கு செய்ய, குழந்தை சிரித்தது.

அவர்கள் குடும்பமே எங்கள் எதிர் சீட்டுகளில் அமர்ந்தது. பெண் குழந்தை பாட்டி மடியில் உட்கார்ந்து ‘பாட்டி, பல் தேச்சாச்சு... முட்டாய் கொடு’ என்று கேட்டது.

‘ஏண்டி லண்டி முண்டே, ராத்திரிதானே ஆரஞ்சு முட்டாய் உங்கம்மாவுக்குச் சொல்ல வேண்டாம்னு கேட்டு முழுங்கினே. இப்போ இன்னொண்ணு வேணுமா? வயத்துலே கீரைப்பூச்சி வந்து குண்டி அரிச்சிண்டே இருக்கும். பரவாயில்லேயா?’ தலைமாட்டில் கூஜா பக்கமாக வைத்த துணி சஞ்சியிலிருந்து ஒரு மிட்டாய் எடுத்துக் கொடுத்தபடி பாட்டி சொன்னாள்.

ரத்னா, பாட்டிக்குக் காட்டும் மடி ஆசார சலுகையாக காப்பியை அண்ணாந்து வாயில் விட முயற்சி செய்ததோ, பாட்டி பேசியதோ அவளுக்கு புரையேறி ஒரு வாய்க் காப்பி முகத்தைச் சுற்றிச் சிதறியது.

‘மன்னிச்சுக்கங்க அம்மா...’ ரத்னா பயத்தோடு அவளைப் பார்க்க, ‘நான் ஏண்டியம்மா ஷமிக்கணும்? அண்ணாந்து குடிக்க வராதுன்னா சீப்பிக் குடிக்க வேண்டியதுதானே? எசகுபிசகா காப்பி மூக்கிலே போயிருந்தா?’

பாட்டி ஸ்தாலி செம்பை சீட் ஓரமாக அடைப்புக்குப் பக்கம் தள்ளி உருண்டு விடாமல் பாதுகாத்தாள். உலகம் முழுமையும் அவள் சுத்தப்படுத்த அப்போதைக்கப்போது தேவையான தண்ணீரை அந்தச் செம்பு ஊற்று மாதிரி உற்பத்தி செய்துகொண்டேயிருக்கும் என்று தோன்றியது எனக்கு.

‘டெல்லிக்கு போறீங்களா?’ என்று பாட்டியம்மா மகனிடம் கேட்டேன்.

‘இல்லே சார், ஆக்ராவிலே இறங்கணும்’ என்றான் அவன்.

‘ஜாகை எல்லாம் மெட்றாஸா?’ பாட்டி ரத்னாவைக் கேட்க, என் புரசைவாக்கம் விலாசம் தவிர மீதி எல்லாம் சொல்லப்பட்டது.

‘நாங்க மாம்பல வாசிகள். போன வாரம் ராமேஸ்வரம் போய்ட்டு வந்தோம். இப்போ காசி யாத்திரையா பூர்த்தி பண்றோம்’ என்றான் அந்த பிராமணன்.

‘ஆக்ராவிலே இறங்கணும்னு சொன்னீங்களே?’, ரத்னா மருமகளைக் கேட்டாள்.

‘ஆமா, அங்கே என் தம்பி ஆர்மி கேண்டீன்லே ஆனானப்பட்ட மேஜருக்கெல்லாம் சமையல் பண்ணி போட்டுண்டிருக்கான். அவாத்திலே போய் இருந்து மதுரா, ஹரித்வார் எல்லாம் பார்த்துட்டு காசி போறோம்’ பாட்டி விளக்கமாகச் சொன்னாள்.

‘நாங்களும் டெல்லியிலே இருந்து ஹரித்வார் போய்ட்டு காசிக்கு போறோம்’, ரத்னா சொன்னாள்.

‘நேத்து ராத்திரி மெட்றாஸிலே ரயில் ஏறும்போதே இங்கே வந்திருக்கணும். நாங்க ஏறினது முழுக்க பட்டாளக்காரா இருந்த கம்பார்ட்மெண்ட். ராத்திரி ஒரு க்ஷணமும் தூங்கலே’ என்றான் பாட்டியம்மா மகன்.

ராத்திரி இங்கே இருந்த வேறொரு பாட்டி நினைவுக்கு வரச் சிரித்தேன்.

‘அடுத்தாப்பலே என்ன ஸ்டேஷன் வரும்?’ பாட்டி யாரை என்று இல்லாமல் கேட்டாள்.

ரத்னா ‘பலார்ஷா’ என்றாள். பெண் குழந்தை கன்னத்தை பிரியமாகத் தன் கன்னத்தோடு இழைத்தாள். சந்த்ரபூர் வரும் என்றான் குழந்தைக்கு அப்பா. சிர்ப்பூர் வரும்னு நினைக்கறேன் என்று மெல்லிய குரலில், குழந்தைக்கு அம்மா சொன்னாள்.

‘ஏண்டி உனக்கு சகலமும் தெரியுமா?’ அவள் வீட்டுக்காரன் எகிறினான்.

அவன் போல் நான் இருந்தால் ரத்னா என்னைத் தலைமுழுகி விட்டு இச்சலகரஞ்சிக்கு அம்மா வீட்டுக்கு ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்திருப்பாள்.

போனால்? மனசின் இருண்ட குகைக்கு உள்ளே இன்னொரு குகை அதற்குள் இன்னொன்று என்று எத்தனையோ கடந்து போக, இருட்டில் ஒரு சிலந்திப் பூச்சி மனதில் சொன்னது –

‘ரத்னா போனா, விலாசினி, போஜனசாலை தெலுங்கச்சி மாதிரி உடுத்து, தினம் எண்ணெய்ப் பண்டம் வகைதொகை இல்லாம கொழும்புத் தேங்காய் எண்ணெயிலே பொறிச்சு ஊட்டி விடுவா.’ வேண்டாம் என்று விலக்கினேன்.

வண்டி ஸ்டேஷனில் நுழைவது கண்டு ஜன்னல் வழியே எக்கிப் பார்த்தேன். சிர்ப்பூர் ஸ்டேஷன். நான் அறிவித்ததும் அந்தப் பிராமணப் பெண் முகம் ஒரு வினாடி ஜொலித்து மறுபடி சகஜ பாவம் கொண்டது.

‘சிர்ப்பூரில் என்ன விசேஷமானதா கிடைக்கும்?’ ரத்னா என்னைக் கேட்டாள், என்னமோ நான்தான் உலகத்தில் சகலமான அறிவுக்கும் பிரதிநிதி என்பதுபோல.

‘மண்ணாங்கட்டிதான் இருக்கும்.’ பாட்டியம்மா ஒரு மடக்கு தண்ணீரை ஸ்தாலி செம்பிலிருந்து ஆசமனம் செய்வதுபோல் வாயில் ஊற்றிக்கொண்டு நிஷ்டூரமாகச் சொன்னாள். மருமகள் வாக்கு நிஜமானது அவளுக்கு ரசித்திருக்காதுபோல.

‘சிர்ப்பூர்லே பாலாஜி கோவில் இருக்குன்னு சொல்வா.’

மறுபடியும் மருமகள்தான். நெட்டுயிர்த்து, அபசாரம் அபசாரம் என்று கன்னத்தில் போட்டபடி கிழவிதான் ஈசுவர தூஷணை செய்ததற்கு தண்டனையாகப் புடவை முக்காட்டுக்கு மேல் தலையில் குட்டிக்கொண்டாள்.

நான் ரத்னாவின் அனுமதியோடு கீழே இறங்கிப்போய் ஒரு கோப்பை டீ குடித்துவிட்டு அது மகா கண்றாவி என்று ரத்னாவிடம் பொய் சொல்லத் திரும்பி வந்தபோது, பாட்டியம்மா கண்டிப்பாகச் சொன்னது இது –

‘யாத்திரைகள் நடத்த முன்னாடி நாக்கைக் கட்ட பிடிவாதமா பழக்கணும். என்ன பாலோ, என்ன டீத்தூளோ, பாத்திரம் வருஷா வருஷமாவது கழுவுவானா இல்லையா, அந்த ஜலம் எங்கே இருந்து வருது? இப்படி தெரியாதபோது சீக்கு வரவழச்சுக்கணுமா, டீயும் காப்பியும் வெளியிலே குடிச்சு?’

அவள் சொல்வதில் இருந்த பழைய கால நியாயம் சரிதான் என்றது என் மனது. பாட்டி என்ன சாப்பிடுவாள் என்ன குடிப்பாள்?

நடுப் பகலுக்கு பலார்ஷா ஜங்ஷன் வந்தபோது விடை கிடைத்து விட்டது.

‘ஏண்டி, என்னோட சம்படத்தை எங்கே போட்டே?’ பாட்டியம்மா அதிகாரமாக மருமகளைக் கேட்டாள்.

‘உங்க புடவைப் பைக்குள்ளேதான் வச்சது. எடுத்துத் தரட்டுமா அம்மா?’ பவ்யமாக மருமகள் சொல்ல, மாமியார் தேளாகக் கொட்டினாள் –

‘கிழவிதானே, எத்தைத் தின்னா என்ன, பட்டினி கிடந்தாத்தான் என்னன்னு உதாசீனம். புடவைப் பையிலே கொண்டுபோய் சம்புடத்தை வைக்கறதாவது? அதுலே இருந்தா தூக்கும்போதே தெரியாதா என்ன?’

‘அம்மா நான்தான் தூக்கிண்டு வந்தேனே. இருந்ததுன்னு சொல்லலாம். இல்லேன்னு சொல்ல முடியாது.’

‘ஓ, என் மூட்டையை நீ தூக்கிண்டு வந்தேன்னு சலிச்சுக்கிறியா? என் தலைவிதி... தீட்சிதர் இருந்தா எனக்கு இந்த கதி வந்திருக்குமா? ஊருக்கு கூட்டிண்டு போக, சாப்பாடு கொண்டுவர, இருமினா சித்தரத்தை கஷாயம் வச்சுத் தரன்னு எல்லாம் அவர் கவனிச்சுப்பார். நான் நாய்பட்ட பாடு படவேண்டாம் பாரு.’

சடசடவென்று மிஷின் துப்பாக்கி சுட்ட மாதிரி அவள் சொல்லிக்கொண்டே போக, நான் கீழே இறங்கத் தயாராக நின்றேன்.

கொஞ்சம் நடந்துட்டு வரேன். உட்கார்ந்து உட்கார்ந்து முதுகு வலிக்குது என்று நான் சொல்லி முடிப்பதற்குள், அவள் போதும் என்று கையைக் காட்டி நிறுத்தினாள்.

பட்டணம் பொடி வைத்த அலுமினியம் அடுக்கோடு ரத்னா பாத்ரூமுக்குக் கிளம்பினாள். பொடி கிட்டாத மூக்கு சிவந்து புகார் சொல்லியதைப் பக்கத்தில் யாரும் இல்லாமல் இருந்தால் என் உள்ளங்கையில் பெயர்த்தெடுத்திருப்பேன்.

‘மகாராஷ்ட்ர பொண்ணுக்கெல்லாம் செக்கச்செவேல்னு உதடு... மயங்கி யார் பின்னாலேயும் போயிடாதீங்க.’

மராட்டியில் முணுமுணுவென்று காதில் சொல்லி அனுப்பினாள் என் தேவதை.

போஜன சாலையில் ரயில் கூட்டம் எல்லாம் இருந்தது. வரிசையாக தட்டு வைத்துப் பரிமாறி இருந்தது. ஒரு பந்திக்கான விருந்தைத் தயாராக வைத்து, வருகிறவர்களுக்கு மேலும் பரிமாறக் காத்திருக்கும் சர்வர்கள் அழுக்கு பைஜாவும் குர்த்தாவுமாக, சாப்பாட்டுத் தட்டுகள் இடுப்புக்குக் கீழே இடிக்கும் நெருக்கத்தில் நின்றார்கள். பார்க்க, வேறென்ன, அன்னத்ரேஷமாக இருந்தது.

நான் என் ஜோல்னாபையில் வைத்திருந்த ப்ளாஸ்கை எடுத்து காப்பி டீ தர முடியுமா என்று கேட்டேன். கடைக்குப் பின்னால் கிடைக்கும் என்று அனுப்பி வைத்தார்கள். ரத்னா உடனடியாக நினைவு வந்தாள்.

காபி கலந்து ப்ளாஸ்கில் ஊற்றிய தாட்டியான நடு வயசு மராட்டிப் பெண் பீடா குதப்பிச் சிவந்த உதடும், வெற்றிலைத் துணுக்கு படிந்த பல்லும், அதை எடுத்துக் காட்டும் சிரிப்புமாக, ஓய்வு பெற்ற ரம்பை ஊர்வசிபோல் தென்பட நான் அவசரமாக காசைக் கொடுத்துவிட்டு அங்கே இருந்து நகர்ந்தேன். இருபது வருஷம் முன்னால் இங்கே காப்பி வாங்க வந்திருக்க வேண்டியது.

தெர்மாஸ் ஃப்ளாஸ்கைத் திரும்ப வாங்கும்போது ரிடையர்ட் ரம்பையின் விரல் நகம் என் புறங்கையில் தேய்த்து சின்னதாக ரத்தக் காயம். நம்பவே முடியாத, பொதுவில் சொல்லி அனுபவிக்க முடியாத, தர்க்கத்துக்கு உட்படாத, ரகசியமாக ரசிக்கவேண்டிய இனிப்பான காயம் அது. ரத்னா கேட்பாள். கடை வாசலில் ஆணி கிழித்துவிட்டது என்று சொன்னால் சும்மா இருப்பாள்.

அவள் சிடுசிடுவென்று இருந்தாள். பாட்டியிடமிருந்து ஒட்டுவா ரொட்டியாகப் பரவிய கிருமி அந்தக் கோபம் என்று ஊகித்தேன்.

‘பகல் ஒண்ணரை மணி. சாப்பிடற நேரம், இப்போ எதுக்கு காபி?’ அந்தரங்கமாக மராட்டியில் கேட்காமல் ஊரறியத் தமிழில்தான் கேட்டாள்.

‘கேளுடி அம்மா நன்னாக் கேளு.’ அவளுக்கு ஊக்கம் கொடுத்தபடி பாட்டியம்மா மருமகளிடம், ‘ஆச்சா?’ என்று அதிகாரமாக வினவினாள்.

பதற்றத்தோடு மருமகள் மாவு, தண்ணீர், நெய் என்று எடுத்துக் கலக்க ஆரம்பித்தாள்.

‘வென்னீர் ப்ளாஸ்கை வழியிலேயே மறந்துவிட்டுட்டியா? நாசமாப் போச்சு. பட்டினி போட்டே என்னைக் கொன்னுட்டு காசியிலே கர்மம் தொலைக்கற உத்தேசமா ஆம்படையான் பொண்டாட்டிக்கு?’

பாட்டி குளவியாகக் கொட்டினாள். மருமகள் பதற்றம்போய் நிதானம் கைவர, டப்பாவில் இருந்து ஏதோ மாவைப் போட்டு வென்னீர், வெல்லம், நெய் என்று சேர்த்துப் பிசைந்து கிழவிக்கு நீட்டினாள். நான் ஆர்வத்தோடு பார்த்தேன்.

‘என்ன பாக்கறே? நான் பழைய காலத்து மனுஷி. எங்கே போனாலும் சத்து மாவுதான் சாப்பிட. உடம்புக்கும் நல்லது. அதுவும் என் மாட்டுப்பொண்ணு உருட்டித் தந்தா அமிர்தமா இருக்கும். கைவாகு. இந்தா உன் ஆத்துக்காரி கிட்டே கொடு. சாம்பிள் சாப்பிட்டுப் பார்க்கச் சொல்லு.’

நான் அவள் கொடுத்த சின்ன உருண்டை சத்துமாவை ரத்னாவிடம் கொடுத்தேன். மதியச் சாப்பாடுக்காக துண்டு விரித்து சீட்டில் தட்டுகள் வைத்து புளியஞ்சாதம் இத்யாதி பரிமாறிக்கொண்டிருந்த ரத்னா அதை மரியாதையோடு கோவில் பிரசாதம்போல வாங்கி எச்சில் படாமல் வாயிலிட்டு சாப்பிடும்போதே பாட்டி சொன்னபடி அமிர்தமாக, அமிர்தம் வேண்டாம், அமிர்தா பாய் வாயுத் தொந்தரவோடு ஞாபகத்துக்கு வந்துவிடுவாள்...

அம்பலப்புழை பால்பாயசம் சாப்பிட்டு அனுபவப்படும் தெய்வீகமான இனிப்பை இந்த சத்துமா உருண்டையில் கண்டதாக ரத்னா கொஞ்சம் ஜாஸ்தியாகச் சொன்னதை பாட்டி ரசித்தாள்.

அடுத்த தடுப்பில் இருந்து சத்தமாக ஏதோ வாக்குவாதம் காதில் விழுந்தது.

‘வார்ஸா போலந்து தலைநகரம் மட்டுமில்லே. உலகத்திலே ஒரு புராதனமான பட்டணம். அதை அழிச்சு ஒழிச்சு அங்கே இருந்தவங்களையும் எங்கெங்கேயோ கூட்டிப்போய் கொன்னு குவிச்சிருக்காங்க ஜெர்மனிக்காரங்க... அவங்களோடு ஒத்துப் பாடிட்டு இருக்கு ஜப்பான்... நாம் யார் பக்கம் இருக்கணும்? ஜப்பான் பக்கம்னு நேதாஜி சொல்றார்... இங்கிலாந்து பக்கம் எதுக்கு நிக்கணும், அவங்க இந்தியாவைவிட்டு வெளியே போகட்டும்ங்கறார் காந்திஜி... நாங்க சொல்றோம் யுத்தத்திலே நேச நாடுகள் ஜெயிக்கறது முக்கியம். பிரிட்டனுக்கு எல்லா ஆதரவும் தருவோம்... ஆண்டான்... அடிமை இது எல்லாம் கொஞ்ச நாள். உலகத் தொழிலாளர்கள் ஒன்று கூடற நேரம் வந்தாச்சு..’

‘ஜப்பானுக்கு ஆதரவு கொடுக்கறது தப்புன்னு எப்படி சொல்வீங்க? பிரிட்டன் தோற்கணும் எப்படியாவது... தோத்து நாட்டைவிட்டு ஓடணும்...’ இன்னொரு குரல் தொடர்ந்து இரைந்தது.

‘வரும் 1945 பிப்ரவரியில் கும்பகோணம் மாமாங்கத்துக்குப் போய்வர யுத்தகால நெருக்கடி மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக ஸ்பெஷல் ரயில்கள் விடமுடியவில்லை என்பதைத் தென்னிந்திய ரயில்வே போர்ட் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறார்கள்.’ நேற்றைய சுதேசமித்திரன் பத்திரிகையை உரக்கப் படித்து யாரோ யாரோடோ செய்தி பகிர்ந்துகொண்டிருந்தார்கள்.

‘ஞான் வருவானோ நீ வருவானே’ என்று ஒரு பிச்சைக்காரன் கம்பார்ட்மெண்ட் உள்ளே வந்து நாராசமாகப் பாடினான். மேலே அந்த

அழகான பாடலைச் சிதைக்க விடாமல் காசு கொடுத்து அவனை இறக்கி விட்டேன்.

‘தெலக்ஸ் புவனா சினிமாவிலே பாடின பாட்டுன்னா என்னமா கரிசனம் பொங்கி வருது ராமோஜி சாருக்கு’, ரத்னா காதில் சொல்லிச் சிரித்தாள்.

எனக்குப் பசி கண்ணை மறைத்துக்கொண்டிருந்தது.

‘ஜப்பான் கூட சேர்ந்து சண்டை போடறீங்களா? எங்கே? அவங்க உங்களை உளவு பார்க்கறதுக்குதானே உபயோகப்படுத்திட்டு இருக்காங்க?’

கைகலப்பு அடிதடியில் முடியும் முன் அடுத்த கம்பார்ட்மெண்டில் இருந்து சிப்பாய்கள் அவர்களை பிரித்துவிட்டுப் போனார்கள். அப்புறம் அமைதிதான்.

பிளாட்பாரத்தில் சாயா, காப்பி விற்றுப் போனான் ஒருத்தன்.

‘ஏண்டா அவன்கிட்டே பால் இருக்கான்னு கேட்க மனசு வராதா? கிழவி சத்துமாவை கல்லு மாதிரி தின்னுட்டு தொண்டையிலே அடைச்சு உசிர விட்டுடுவான்னு உன் ஆத்துக்காரி சொன்னாளா?’ பாட்டிதான்.

அந்தப் பிள்ளை உடனே சாயாக்காரனைக் கூப்பிட அவன் பாத்திரத்திலிருந்து எடுத்த பாலில் சுமார் வெள்ளை நிறம் மட்டும் இருந்தது. அரை கிளாஸ் அந்த எடைகட்டின பாலை கிழவியின் வெள்ளித் தட்டில், மாவோடு சேர்த்துக் கொட்டி மருமகள் கலக்க, பாட்டி முதல் காரியமாக சத்துமாவு மேல் செம்புத் தண்ணீர் தெளித்து தீட்டு எல்லாம் விலக்கினாள். ‘பாலுக்கு தோஷம் கிடையாது. எங்கே வேணும்னாலும், யார் கொடுத்தாலும் எந்த நிமிஷமும் வாங்கிக்கலாம்’ என்று விளக்கம் வேறே.

பாட்டிக்கான சிஷ்ருசை எல்லாம் செய்துவிட்டு வீட்டுக்காரன் வாங்கி வந்த சாம்பார் சாதப் பொட்டலத்தைப் பிரிக்கத் தெரியாமல் கஷ்டப்பட்டாள் மருமகள்.

‘ஏண்டி இதென்ன பூண்டுபோட்ட வஸ்துவா திங்கணும்னு ஆம்படையான் கிட்டே சொன்னியா? அவனும் பொசை கெட்டத் தனமா எதையோ வாங்கிண்டு வந்து சாப்பிடுன்னு கொடுத்துட்டான்… சரியான பிரம்மஹத்தி. பிராமணத்தி சாப்படறதுதானா இது?’

அவள் சத்து மாவை உருட்டி உருட்டி வாயில் போட்டுக்கொள்ள, ஒரு வழியாக சாம்பார் சாதத்தை திறந்து அவசரமாக அள்ளிப் போட்டுக் கொண்டாள் மருமகள். இனிப்பு, புளிசாதம் என்று நாங்கள் சாப்பிடுவதை

அந்தக் குடும்பத்தோடு பங்கு வைக்க மனசு விரும்பினாலும் பாட்டியை நினைத்தால் அதெல்லாம் செய்ய பயமாக இருந்தது.

அவளுடைய ராமேஸ்வர தீர்த்தம் வைத்த மடிக் கூஜாவைக் கூர்ந்து பார்த்தேன். எங்கள் கூஜாவுக்கும் அதற்கும் மேலே பட்டுத்துணிதான் வேறுபாடு. அச்சு அசலாக ரெண்டும் ஒரே வார்ப்புதான்.

ரத்னா என் நினைவு ஓட்டம் புரிந்து அதையே சொன்னாள். ராஜாத்தி உனக்கு எப்படி நான் என்ன நினைச்சேன்னு தெரியும் என்று அவளை மனதில் கொஞ்சினேன். ‘விலாசனியை தோள்லே பிடிச்சுத் தூக்கினியே அதைப்பற்றியும் தெரியுமே’ என்றாள் புன்சிரிப்போடு. நான் திடுக்கிட்டு அவளைப் பார்த்தேன். அவள் புன்சிரித்தாள். எல்லாம் என் கற்பனைதான். பிரமைதான்.

‘இன்னொரு கூஜா, கொஞ்சம் உசரமா தண்ணி பிடிச்சுக்கொண்டு வந்திருக்காங்களே அன்னப் பறவை மாதிரி அழகா. அது கும்பகோணத்திலே வாங்கினதாம். நாமளும் ஒரு வாரம் கும்பகோணம் போகணும். எல்லாக் கோவிலுக்கும் போய்... கடைத்தெருவில் எல்லா பாத்திரமும் வாங்கிக்கிட்டு...’

ரத்னா கோபுரங்களும் பாத்திரங்களும் நிறைந்த உலகில் மூழ்கினாள். ரயில் வேகமெடுத்தது.

பாட்டி தலைமாட்டில் ஸ்தாலி செம்பையும் மடி கூஜாவையும் வைத்துக்கொண்டு பகல் நித்திரை போனாள். நான் மேலே லக்கேஜ் வைக்கும் தட்டில் கொஞ்சம் இளைப்பாறலாம் என்று படுத்திருந்தேன்.

எனக்கு நேர் எதிரே லக்கேஜ் பலகையில் அந்த பிராமணன் பகலிலும் குறட்டை விட்டபடி. ரத்னாவும், அவன் பெண்டாட்டியும் பேசிக்கொண்டிருந்தார்கள். பெண்குழந்தை அவளுடைய அம்மாவின் மேல் சாய்ந்து அப்பச்சி அப்பச்சி என்று சொல்லி, பாட்டியின் தலைமாட்டுப் பக்கம் கையசைத்து ஏதோ விளையாடிக் கொண்டிருந்தது.

‘பாட்டி எழுந்து எடுத்துத் தருவா... நீ அங்கே போகாதே...’ அதன் அம்மா சொன்னதைக் கேட்டபடி கண்களை மூடிக்கொண்டேன்.

கண்ணைச் சுழற்றிக்கொண்டு தூக்கம் வர நினைவு கடந்து பகல் கனவில் மூக்குப்பொடி மலைமலையாகக் குவித்து வைத்த தெருவில் வண்டியை உருட்டிக்கொண்டு பொடி வாங்கப் போய்க் கொண்டிருந்தேன்.

சாயந்திரம் அற்புதமாக சூரியன் மறைந்துகொண்டிருந்ததை உடனடியாகப் பார்க்கச் சொல்லி ரத்னா ஏய் ஏய் என்று கையைப் பிடித்து இழுத்து கீழே இறக்கினாள் என்னை.

அற்புதமான காட்சிதான். பக்கத்தில் வேறு யாரும் இல்லாமல் இருந்தால் அவள் அழகுக்கு அழகு செய்வதாக ஒரு முத்தம் கொடுத்திருப்பேன். சிமிழில் புதுப்பொடி அடைத்து அன்போடு நீட்டியிருப்பேன். சும்மா அஸ்தமன சூரியனைப் பார்த்தபடி அவளோடு அமர்ந்திருந்தேன்.

பாட்டியம்மா, பக்கத்தில் பேத்தியைப் படுக்கப்போட்டபடி தூங்கிக்கொண்டிருந்தாள். குழந்தைக்கு அம்மாவான பிராமணப் பெண் எங்கே? தடுப்புக்கு அந்தப் பக்கம் உறங்கப் போனதாகச் சொன்னாள் ரத்னா. மேலே லக்கேஜ் பலகையைப் பார்த்தேன். காலியாக இருந்தது. ரத்னா என் கையைப்பற்றி அழுத்திச் சிரித்தாள். ‘அவங்களுக்கு இப்போதான் நேரம் கிடைக்குதுபோல.’

சாயங்காலச் சூரியன் சிவப்பு பூசிக் காட்ட, வெளியே பெரிய ஜங்ஷன் வந்துகொண்டிருந்தது.

நாக்பூர்.

தடுப்புக்கு அந்தப் பக்கம் இருந்து அந்தப் பெண்ணும் இங்கே ரத்னாவும் ஒரே நேரத்தில் சொன்னார்கள். காபி இங்கே கிடைக்காது என்று தெரியும். கொள்ளை மலிவாக ஆரஞ்சுப்பழம் கிடைக்கும் என்றும் தெரியும்.

ரத்னா அண்ணா வீட்டுக்கு எடுத்துப் போவது சிரமமாக இருக்குமா?

‘மெல்ல எடுத்துப் போயிடலாம், ஒரு கூடை வாங்குங்க. ஐம்பது பழம் இருக்கும்…’, என்றாள் ரத்னா. நான் உள்ளபடிக்கே அரை டஜன் பழம் மட்டும் வாங்க இருந்தவன் உடனே தீர்மானத்தை மாற்றிக் கொண்டேன்.

ஜன்னல் ஓரமாக வண்டியில் வைத்து தள்ளி வந்த ஆரஞ்சு கூடைகளைப் பார்த்தபடி ரத்னா இருக்க, ‘எஜமானியம்மா ரொம்ப மலிவு. இருபத்தைஞ்சு ரூபாதான்’ என்றான் பழ வண்டிக்காரன். ‘எத்தனை பழம்?’ என்று கேட்டேன். ‘ஐம்பது பழம் சாகிப்’ என்றான்,

ஒரு கூடை மேலே மூடிக் கட்டி, இருபது ரூபாய்க்கு வாங்கி மேலே லக்கேஜ் இருப்பில் வைத்தாள் ரத்னா. உடனே சாப்பிட்டால் நன்றாக

இருக்கும். தரமாட்டாளே. அட்டவணைப்படி இது மிக்சர், பாதுஷா, சாயா நேரமாச்சே.

‘ஓ! வாங்கிட்டு வாங்களேன். கிளம்பறவரைக்கும் சும்மா பார்த்துக் கிட்டே உட்காந்திருக்கப் போறீங்களா?’

ரத்னா கேட்டாள். ‘நீயும் வா, கீழே ஜோடியா கை கோர்த்து நடந்து இங்க்லீஷ் பாட்டு பாடலாம்’ என்றேன். ‘டூ ரா லூ ர லூ ரா’ என்று பிங்க் க்ராஸ்பி என்ற புண்ணியவான் பாடிய, எனக்குத் தெரிந்த ஒரே இங்க்லீஷ் கானத்தை ஒரு வரி பாடியும் காட்டினேன். எங்கள் அந்தரங்க நேரத்தில் பாடி அவளுக்கும் பிடித்த பாட்டு அது.

ரத்னா நாக்கைத் துருத்திக் காட்டினாள். ‘பாட்டி இன்னும் கொஞ்சம் தூங்கினா அந்த நாக்குக்கு சரியான தண்டனை கொடுத்துக் கொண்டாடியிருப்பேன்’ என்று மராட்டியில் சொன்னேன்.

‘அதானே, காய்ஞ்சு போயில்லே இருக்கோம்.’ அவள் விளையாட்டுக்காகக் கோபித்தாள் என்றே சரியாக அர்த்தம் செய்தேன்.

டீ வாங்கலாமா? நான் கிளம்பும் முன் பார்த்தேன். என் ஜோல்னா பையில் தண்ணீர் கூஜாவும் இருந்தது.

குழந்தை எழுந்து உட்கார்ந்தது. என்னிடம் வந்து, மாமா, நானும் வரேன் என்றது. கூட்டிட்டுப் போய்ட்டு வாங்களேன். ரத்னா சிபாரிசு செய்தாள். குழந்தைக்கு அம்மாவும் தடுப்புக்கு அந்தப் பக்கத்தில் இருந்து வந்து, ‘உங்களுக்கு கஷ்டம்’ என்றாள். கூட்டிக்கொண்டுபோய்த் திரும்புவதை அவளும் விரும்புகிறாள் என்று தெரிந்தது.

‘சரி, முதல்லே தண்ணி பிடிச்சுக் கொடுத்து கொண்டுவந்துவிட்டுட்டு அப்புறம் சாயாவுக்கு போறேன்’ என்றேன். ரத்னா ஒன்றும் சொல்லவில்லை.

தண்ணீர் பிடிக்கிற இடத்தில் ஆறு குழாய்களுமே யாரும் தண்ணீர் சேந்தாமல் காலியாக நின்றன. மாமா தூக்கு என்று குழந்தை தூக்கி விடச் சொன்னது. கூஜாவைத் திறந்து கொடுத்து மேடைக்கு வெளியே அழகாக நின்றபடி தண்ணீர் நிறைத்தது அது.

கம்பார்ட்மெண்டில் குழந்தையை விட்டுவிட்டு ப்ளாஸ்கை எடுத்துக் கொண்டு சாயா கடையை, போஜன சாலையை, உதட்டழகிகளை எதிர்பார்த்துக் கிளம்பினேன். போஜனசாலை பூட்டி இருந்தது. வடா பாவ்

என்று உருளைக் கிழங்குக் கறி அடைத்த பன் விற்கும் பையன்கள் என்னை மொய்த்தார்கள். வேண்டாம் என்று முன்னால் போனேன். கிட்டத்தட்ட எல்லா பல்லும் விழுந்த, உதடு தொங்கிய கிழவன் வீசி வீசி சாயா ஆற்றிச் சூடாக ப்ளாஸ்கில் ஊற்றினான்.

நாக்பூரைப் பழித்துக்கொண்டு கம்பார்ட்மெண்ட் திரும்பும்போது ஒரு கூட்டம் அணங்குகள் மீன் சந்தைக்குப் போய்விட்டு வந்து கொண்டிருந்தார்கள். மீன் வாடையும், அகன்ற விழிகளும், வனப்பும், மதர்ப்பும், இறுகக் கச்சம் வைத்துக் கட்டிய புடவையுமாக என்னை இடித்துப்போன அந்தக் கூட்டத்தின் மயக்கம் தீராமல் ப்ளாஸ்கை ரத்னாவிடம் நீட்டினேன். 'என்ன மீன் வாடை அடிக்குது சாயா?' என்றாள் அவள்.

'க்ராஸிங் இருக்கு. சரக்கு ரயில் வந்து சேர்ந்துதான் புறப்படணும்... ஒரு மணி நேரம் லேட் ஆகலாமாம்... ரன்னிங்லே சரிக்கட்டிடுவாங்களா இருக்கும்', யாரோ சொல்லிக்கொண்டு போனார்கள்.

பாட்டி எழுந்து உட்கார்ந்து தலையை சொரிந்து உடனே விரல்களுக்கு புண்ணிய முழுக்காட்டி மடி சஞ்சியில் சுருணைத் துணி எடுத்துத் துடைத்துக்கொண்டு, மாட்டுப் பெண்ணிடம் ஒலிபரப்பைத் தொடர்ந்தாள்.

'சிராங்காய் காப்பி கிடைச்சா நன்னா இருக்கும். அவனை எழுப்பேண்டி. எல்லாம் நான் சொல்லித் தரணும். ரெண்டு நிமிஷம் ஓய்ஞ்சு போய்த் தலையை சாச்சா நீங்க அப்படியே போயிட மாட்டாளான்னு பார்த்துண்டு இருப்பேளே தவிர ஆன காரியம் போன காரியம் என்னன்னு கவனிக்க மாட்டேள். ரத்தத்திலே ஊறின உதாசீனம்...'

அந்த சாதுப்பெண் மெதுவாகச் சொன்னாள் –

'அவர் காப்பி கிடைக்குமான்னு தேடி வாங்கத்தான் போயிருக்கார் அம்மா. இதோ வந்துட்டாரே.'

அவள் வீட்டுக்காரன் கனவில் நடக்கிறவனாக கால் பரப்பி, கண் விரிய விழித்தபடி, ப்ளாஸ்கோடு வந்துகொண்டிருந்தான். மீன்காரப் பெண்களின் படையெடுப்பில் சந்தோஷமாக சிக்கிக்கொண்ட இன்னொரு சகபயணி.

காப்பி இல்லேம்மா, பால் வாங்கிட்டேன் என்றான் அச்சாபிச்சு. சாயந்திரம் சாயா தயாரிக்க வைத்திருந்த பால், அதுவும் நிறையத் தண்ணீர் விளம்பிக் காய்ச்சிய பாலை குடும்பமே சுவைத்துக்கொண்டிருக்க நாங்கள் பாதுஷாவும், மிக்சரும், சாயாவுமாக அதகளப்படுத்திக்கொண்டிருந்தோம்.

குழந்தைக்கு பாட்டியின் ஸ்பெஷல் பெர்மிஷன் வாங்கி ஸ்வீட்டும் மிக்சரும் கொடுத்தோம். மருமகளும் அதை ஒரு வினாடி ஆசையோடு பார்த்து பால் குடிக்கக் கோப்பையில் முகத்தைக் கவிழ்த்தாள்.

ஆரஞ்சு விற்கிற வண்டி திரும்பவும் வந்தது. இந்தத் தடவை கூடை கூடையாக இல்லாமல் ஒன்று இரண்டாக வாங்க சௌகரியமாக. அந்த பிராமணனும் பெண்டாட்டியும் கூடவே குழந்தையும் ப்ளாட்பாரத்தில் இறங்கி பழமும், அடுத்து வந்த தள்ளுவண்டியில் புஷ்பமும் வாங்க, நாங்கள் தேங்குழல் மென்றபடி வேடிக்கை பார்த்தோம்.

‘ஏண்டியம்மா நல்லெண்ணெயிலே பொரிச்சியா இல்லே நெய்யா? ஜோரா இருக்கே வாசனை.’ பாட்டிதான்.

‘வெண்ணெயும் கொஞ்சம் நல்லெண்ணெயும் கொஞ்சம் தேங்காயெண்ணெயும் வச்சு ஒரே தடவை பொரிச்சு எடுத்தேன் அம்மா....’

அவள் எதிர்பார்க்காத விதமாக பாட்டி கை நீட்டினாள். ‘ஒரு கம்பி எடுத்துப் போடு. அதாண்டி, ஒரு விள்ளல் கொடு. எப்படி இருக்குன்னு தின்னு பார்க்கறேன். சுத்தமா பொரிச்ச வஸ்துவுக்கு தீட்டு கிடையாது தெரியுமோ.’

பொரித்த வஸ்து மட்டுமிலை, பாதுஷாவுக்கும் தீட்டு கிடையாது என்று தெரிந்துகொண்டோம். ரயில் கிளம்பும்போது ஆரஞ்சுக் கூடையோடும் பூவோடும் ஏறி வந்த தம்பதிகளுக்கு இனிய அதிர்ச்சி காத்திருந்தது.

நாங்கள் பாதுஷாவையும், மிக்சர், தேன்குழலையும் அவர்களுக்கு கொடுத்து, இனித்து இருக்கும் ஆரஞ்சுகளையும் இரண்டு அழகான ரோஜாக்களையும் வாங்கிப் பண்டமாற்று செய்துகொண்டோம்.

குழந்தை அப்பிச்சி என்றபடி ரத்னாவிடம் வந்தாள்.

‘அப்பிச்சி ஏண்டி சதா அம்மாமிகிட்டே கேக்கறே. மடியா நான்கொண்டு வந்திருக்கேன்... தரேன்.’

பழையபடி வேதாளம் வர, யாரும் எதுவும் பேசவில்லை. குழந்தை பாட்டி தலைமாட்டில் காசி கூஜாவோடு வைத்த துணிப்பையை எடுக்கக் கை நீட்டியது.

‘பறக்காதேடீ. அது ராமேஸ்வரம் சர்வ தீர்த்த ஜலம். கங்கையிலே விடறதுக்கும் விஸ்வனாத ஸ்வாமிக்கும் விசாலாட்சி அம்மனுக்கும்

அபிஷேகம் பண்ணவும் இவ்வளவு தூரம் பத்திரமா, தீட்டு விழுப்பு இல்லாம எடுத்துண்டு போறேன். அதைத் தொடாதேன்னு உங்கம்மா சொல்லலியா?’

அவள் ரத்னாவையும் என்னையும் பார்த்தாள்.

‘தண்ணியைத் தூக்கிண்டு கிறுக்கச்சி மாதிரி காசிக்கு போறேன்னு நினைச்சுக்காதீங்கோ... காசியிலே தரிசனம் முதல்லே பண்ணினா அங்கே இருந்து கங்கா ஜலம் எடுத்துண்டு ராமேஸ்வரம் வந்து ராமநாத சுவாமிக்கு அபிஷேகம் பண்ணனும். ராமேஸ்வரத்துலே முதல்லே தரிசனம் செஞ்சு வடக்கே காசிக்கு போனா, ராமேஸ்வரத்துலே இருக்கற புண்ய தீர்த்தங்களோட ஜலத்தை காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் பண்ண எடுத்துப் போகணும்னும் நியமம். கூஜா வாயைக் கட்டி, என் வயத்தை கட்டி சிரமப்பட்டு எடுத்துண்டு போறேன்.’ என்றாள்.

பாட்டி குழந்தைக்கு இனிப்பு கொடுத்துவிட்டு, ஸ்தாலி செம்புத் தண்ணீரால் தன் கையை சுத்தம் செய்துகொண்டு, பட்டு நாடா சுற்றிய காசி கூஜாவைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்ள, ரத்னாவும் எதிர்க் குடும்பப் பெண்ணும், ஒருத்தரை ஒருத்தர் பார்த்து ஒரு வினாடி சிரித்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

ஒரு ரயில் உத்யோகஸ்தன் ஒவ்வொரு தடுப்பாக நின்று, ராத்திரி சாப்பாடு வேணுமா என்று பிரியமாக விசாரித்துக்கொண்டிருக்க, எனக்கு ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

ரயில்வேக்காரர்கள் ரயிலில் ஏற வந்தால்தான் பிரயாணம் செய்யாதே என்று பயமுறுத்தித் துரத்தி விடுவார்கள். எப்படியாவது அடித்துப் பிடித்து வண்டியேறி விட்டால், என்ன கரிசனம். சாப்பாடு வேணுமா? வேணும் என்று சொல்ல வாயைத் திறந்தேன். காலில் பலமாக மிதித்து ரத்னா என்னைப் பேசவொட்டாமல் செய்தாள்.

பாட்டியம்மா மகன், ‘சாப்பாடுபற்றிக் கேட்கிறீங்களே, என்ன விசேஷம்?’ என்று ரயில்வேக்காரனைக் கேட்டான்.

‘அடுத்தாப்பல அம்லா ஜங்ஷன் வருது. அங்கே சமையல் செஞ்சு ரெடியா வச்சிருப்பாங்க. அங்கே இருந்துதான் பலார்ஷா, இடார்ஸி, நாக்பூர்வரை ரயில் சாப்பாடு போறது என்று விளக்கம் சொன்னான் ரயில்வே உத்தியோகஸ்தன். ஒரு சாப்பாடு பனிரெண்டனாதான். சைவம் இது... மதறாஸி சமையல்... இது தவிர அசைவம்...’

‘அசைவம் வேணாம், ரெண்டு சைவம்.’

பர்ஸில் பணம் எடுத்துக் கொடுத்தான். ‘எப்போ வரும் சாப்பாடு?’

‘ரயில் அம்லா போனதும் வந்துடும். உங்க ரயில் டிக்கெட்டை கொடுங்க. குறிச்சுத் தரேன்’ என்று டிக்கெட்டில் எழுதி ரசீதும் கொடுத்துப் போகும்போது சொன்னது –

‘கம்பார்ட்மெண்ட் இதைவிட்டு மாத்திப் போயிடாதீங்க. டெலிவரி கஷ்டமாயிடும்.’

‘எல்லா ரயில்லேயும் சாப்பாடு உண்டா?’ ரத்னா கேட்டாள். அவன் நின்று ஒரு வினாடி யோசித்தான். ‘சில வண்டியிலேதான். முக்கியமா பர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸுக்குத்தான் இந்த சௌகரியம். ஆனா இந்த வாரம் முழுக்க நிறைய மீந்து போறதாலே தேர்ட் க்ளாஸும் சாப்பாடு வாங்கலாம்னு டெம்பரரியா வச்சிருக்கோம்’ என்றான்.

அம்லா ஜங்ஷனை வண்டி நெருங்கியபோது இங்கே என்ன விசேஷம் என்று ரத்னா கேட்டாள். அவள் எல்லோரையும்விட்டு, எதிர் சீட் பாட்டியின் மருமகளிடம் நேரடியாகக் கேட்டது இது.

‘சுல்தான் ஆட்சி காலத்துலே வெடி மருந்து செஞ்ச இடம்.’

அம்லான்னா நெல்லிக்காய் இல்லையோ என்று நான் விசாரித்தேன்.

‘ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு அர்த்தம். இந்தியிலே நெல்லிக்காய்தான். சம்ஸ்கிருதத்திலேயும் அது ஆமலகம். நெல்லிதான்.’

அந்தப் பெண் அடக்கமானவளாக இருந்தாலும், நிறையப் படித்திருக்கிறாள் என்று புலப்பட்டது. என்ன செய்ய, இந்தக் கிழவி சதா பாய்ந்து பிராண்ட முதுகைக் காட்டிக்கொண்டு நிற்கவேண்டிப் போனது அவளுக்கு.

ராத்திரி எட்டு மணியாகும் போது ரயில் அமலா ஜங்ஷனில் பெருமூச்சுவிட்டுக்கொண்டு நின்றது.

ஜங்ஷனில் இரண்டு ரயில்வே உத்தியோகஸ்தர்கள் எவர்சில்வர் தட்டுகளில் சாதம், பருப்புக்கும் சாம்பாருக்கும் இடைப்பட்ட ஒன்று, பூரி, ஊறுகாய், தயிர், மோர் மிளகாய் என்று வைத்த தட்டுகளோடு கம்பார்ட்மெண்ட் உள்ளே வந்தார்கள். தட்டிலேயே குழித்து சாம்பாரும், கூட்டும் வைக்க இடம்,

ஓரமாக சப்பாத்தி, ரொட்டி மடித்து வைக்க இடம் என்று அமைந்த அந்தத் தட்டு எங்கே கிடைக்கும் என்று ரத்னா ரயில்வேக்காரனை விசாரித்தாள்.

நாம் கேட்டால் எரிந்து விழுகிற அந்த மனுஷர்கள் ரத்னாவுக்காக ஏழு மலை, ஏழு கடல் தாண்டி தகவல் அறிந்துவந்து சொல்ல ஓட்ட ஓட்டமாக ஓடி அடுத்த நிமிஷம் திரும்பி வந்து கும்பகோணம் என்றார்கள்.

'கண்றாவி... இது என்ன கொழந்தை வெளிக்கு போனமாதிரி ஒரு வஸ்து, யாரோ பீக்கையாலே வடிச்சு அனுப்பின சாதம், கோழி எச்சம் மாதிரி அதென்ன, ஊறுகாயா... அனாசாரம். இதை எல்லாம் தின்னால்தான் உசிரை உடம்போட பிடிச்சு வைக்க முடியுமா?'

பாட்டி சொன்னபடி சத்துமாவு உருண்டையை எடுத்துப் பிய்த்துச் சாப்பிட்டாள். அவள் மருமகளும் மகனும் வேறு யாரோடோ அந்தக் கிழவி ஏச்சு பேச்சில் இருக்கிறாள் என்பதாக அவளை முழுக்க ஒதுக்கி சாப்பிட ஆரம்பித்தார்கள். நானும் ரத்னாவும் கொண்டுவந்த சாப்பாட்டை ருசித்து உண்டோம். எதுவும் ஊசிப் போகவில்லை. எதுவும் கெட்டுப் போகவில்லை.

'ஜப்பான்காரன் உடம்பு வாகு இருக்கே அபாரம்... ரெண்டு சிராங்கா அரிசி பொங்கித் தின்னா ஒரு நாள் முழுக்க பசியில்லாம உழைப்பான். அவன் ஊர் அரிசியும் அப்படி உபரி சத்து புகுத்தி வச்சிருக்கான்... நம்ம ஊர்லே பாருங்க... ஒரு பானை நிறைய பொங்கி தின்னாலும் இன்னும் கொஞ்சம் பசி வரும். இங்க்லீஷ்காரனும் சாப்பாட்டு விஷயத்திலே பெருந்தீனிக்காரன்தான்... அப்படித்தான். அப்புறம் யுத்தத்திலே ஜப்பானை எப்படி ஜெயிக்கறது?'

அடுத்த தடுப்பில், நாக்பூரில் ஏறிய யாரோ தொரதொரவென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

பாட்டியம்மா, மகன், அவன் மகள், மனைவி என்று அடுத்த மணி நேரத்தில் தூக்கத்தில் ஆழ்ந்தார்கள். ரத்னாவும். ரயிலின் லயம் தவறாத ஆட்டத்தில் தூக்கம் வராமல் இருந்தால்தான் ஆச்சரியம். என் காதில் சதுர்புஜம் சதுர்புஜம் சதுர்புஜம் சதுர்புஜம் என்று தொடர்ந்து ஒலிக்கும் தாளக்கட்டு அது.

எழுந்து மணி பார்த்தேன். ராத்திரி பத்து மணி. சத்தமின்றி வந்து சேர்ந்திருந்த இடம் இடார்ஸி.

ப்ளாஸ்கில் பால் வாங்கப் போனபோது எழுந்த அந்தப் பெண்ணைக் கேட்டேன், அவங்களுக்கும் ப்ளாஸ்கிலே பால் வாங்கி வரணுமான்னு. பெரியவங்களுக்கு வேண்டாம்னாலும் குழந்தைக்கு வேண்டி இருக்குமே. வேண்டாம் என்று சொல்லிவிட்டாள் அந்தப் பெண்மணி.

அவள் ரத்னாவுக்குக் கண் சாடை காட்ட, இவளும் சரி என்று தலையசைத்தாள். ரெண்டு பேரும், ‘போதும் இந்த சம்சாரம்’ என்று ஓடப் போகிறார்களா? அடுத்து வரும் ஸ்டேஷனில் தெலுங்குக்காரி போல இட்லிக்கடை வைத்துப் பிழைத்துக்கொண்டு சுதந்திரமாக இருக்க திட்டமா?

ரத்னா என் தோளில் இருந்து ஜோல்னா பையை வெடுக்கென்று பறித்தாள். பையோடு நானும் இழுக்கப்பட்டு பாட்டி காலடியில் விழப் போகப் பாட்டியம்மாள் கண் விழித்தாள்.

ரத்னா என் பையிலிருந்து தண்ணீர் கூஜாவை வெளியே எடுத்தவள், திரும்ப உள்ளே வைத்து, பையை எனக்கு மாலை போல் மாட்டிவிட்டு, ‘ஜோ தூங்குப்பா’ என்றாள். எதிர்க் குடும்பக் குழந்தை கெக்கே என்று சிரித்தது.

பாட்டி மறுபடி படுத்துக்கொள்ள, பதினொரு மணி சுமாருக்கு போபால் ஸ்டேஷன் வந்தது. உள்ள காரியத்தை பார்க்கலாமா என்று ரத்னாவைப் பார்த்து அபிநயம் பிடித்தாள் எதிரிலிருந்த பிராமணப் பெண்.

சரி என்று தலையாட்டி எழுந்து என் பக்கத்தில் இருந்து ஜோல்னா பையை எடுத்தாள் ரத்னா. எதிர் சீட் மருமகள் பாட்டி தலைமாட்டில் இருந்து காசி கூஜாவை எடுத்தாள். அதன் இடத்தில் ரத்னா அவசரமாக ஜோல்னா பையில் இருந்த எங்கள் கூஜாவை வைக்க, பாட்டி எழுந்திருந்தாள்.

‘கார்சிகன் ப்ரதர்ஸ்’ இங்க்லீஷ் படத்தில் டக்லஸ் ஃபேர்பாங்க்ஸ் ஜூனியர் ரெட்டையராக வருவதுபோல பாட்டியின் காசி கூஜாவும் அருகே எங்கள் தண்ணி கூஜாவும் நெருக்கியடித்து பாட்டிக்குத் தலைமாட்டில் இருந்தன. அடையாளம் கண்டுபிடிக்க பாட்டியின் காசி கூஜா தலையில் பட்டுத்துணி மட்டும்.

எழுந்து, இருக்கும் இடம், காலம் புலப்படாமல் கிழவி ‘சத்துமா’ கேட்டாள். பிசைந்து வைத்திருந்ததை மருமகள் எடுத்து ஒரு தட்டில் வைத்து நீட்ட பால் இல்லையா என்று குற்றம் சொல்லியபடி அதைத் தின்று முடித்தாள் கிழவி. பத்தே நிமிஷத்தில் மறுபடி தூங்க ஆரம்பித்தாள்.

தலப்பா கட்டிடலாம் என்றாள் மராட்டியில் வீட்டுக்கு வந்த மருமகப்பெண். அவளுக்கு மராட்டி தெரியும் என்பது அந்த நடுநிசியில் தெரியவர, சந்தோஷ பரிபூரணன் ஆனேன். கொஞ்சம் வெட்கமும். ரத்னாவிடம் நான் மராட்டியில் பேசிய அந்தரங்கம் கேட்டிருக்குமோ. கேட்டிருந்தாலும் என்ன போச்சு?

ரத்னாவிடம், 'என்ன விஷயம், என் முதுகுக்குப் பின்னால் என்ன நடக்கிறது' என்று கேட்டேன். மராட்டியில்தான். அவள் சொன்ன பதில் நான் பார்க்காத வேறேதோ இங்க்லீஷ் சினிமா போல இருந்தது.

பிற்பகலில் எல்லோரும் தூங்கும்போது அந்தக் குழந்தைப் பெண் பாட்டி தலைமாட்டில் வைத்திருந்த அப்பிச்சியை எடுக்க, என்றால் இனிப்பு பதார்த்தத்தை எடுக்க அவள் அருகில் போய்க் கையை நீட்ட, காசி கூஜா கீழே சரிந்து உள்ளே இருந்த புனித ராமேஸ்வரம் தீர்த்தங்களின் கலவையான தண்ணீர் முழுக்கத் தரையில். இத்தனை விமரிசையாக அதைக்கொண்டு வந்த பாட்டியம்மா சரியாக அதை மூடி வைக்கவில்லை. அல்லது ரயில் ஆட்டத்தில் மூடியின் பிரிகள் கழன்று கூஜா தானே திறந்திருக்கக் கூடும்.

பாட்டி எழுந்தால் பத்ரகாளியாக ஆடுவாள் என்று பயந்து நடுங்கிய மருமகள் ரத்னாவைப் பார்க்க அவள் சற்றும் தாமதியாது என் ஜோல்னா பையில் இருந்து எங்கள் தண்ணீர்க் கூஜாவை எடுத்து பாட்டி தலைமாட்டில் வைத்து பட்டுத்துணி கொண்டையை அதற்கு அணிவித்து விட்டாள். கம்பார்ட்மெண்ட் தரையை நனைத்த கூஜா நீரைப் பழம்புடவை போட்டுத் துடைத்ததும் அவளே. பாட்டியின் கிட்டத்தட்ட காலியான காசி கூஜாவை என் ஜோல்னாவுக்கு இடம் பெயர வைத்தது அவள்தான்.

குழந்தை என்னோடு இறங்கி வந்து நாக்பூரில் நிரப்பியது பாட்டியுடைய காசி கூஜாவை என்று எனக்குத் தெரியாது போனது.

அந்தக் காசி கூஜாவை பாட்டி தலைமாட்டில் திரும்ப வைத்து, எங்கள் தண்ணீர் கூஜாவை ஜோல்னா பைக்குள் திரும்பக் கொண்டுபோகவேண்டும். இதற்கான முஸ்தீபு எடுக்கும்போதெல்லாம் பாட்டி கண் விழித்துக்கொள்கிறாள். ரயில் ஆக்ரா கண்டோன்மெண்ட் போவதற்குள் கூஜா இடமாற்றம் நடத்தி முடிக்கணும். நான் செய்கிறேன் என்று முன்வந்தேன்.

நானும் பரபரப்பானேன். ரயில் வேகமெடுத்திருந்ததால் வலம் இடமாக வெள்ளத்தில் படகுபோல் அலை பாய்ந்தது. மெல்ல மறுபடி இரண்டு ரெட்டைப் பிறவி கூஜாக்களையும் அருகருகே இருத்தினேன்.

பட்டுத் துணியை கூஜாத் தலைக்கு இடம் மாற்ற அவிழ்க்க, கை தவறி அது தரையில் விழுந்தது. அதை எடுக்கக் குனிய ரயிலின் ஆட்டத்தில் இரண்டு கூஜாக்களும் தரையை நோக்கிச் சரிய ரத்னா அவற்றைச் சேர்த்துப் பிடித்து ஓரமாகத் தள்ளினாள். பாட்டி கண் விழித்து எழுந்து உட்கார்ந்தாள். ரெண்டு கூஜா ரயில் சீட்டிலும், பட்டுத்துணி தரையிலும், அவள் கண்ணில் எந்த வினாடியும் படலாம்.

ரத்னா எங்கள் கூஜாவை எடுக்க முயன்று, எது அது என்று புரியாமல் ஒரு வினாடி குழம்பி பக்கத்தில் இருந்த கூஜாவை எடுத்து பின்வலித்து எங்கள் சீட்டில் வைத்தாள்.

பாட்டி, தரையில் பட்டுத் துணியைப் பார்த்தாள். அதை எடுத்து மேலே வைக்கும்போது கூஜாவையும் பார்த்தாள். எங்களுக்கு அது காசி கூஜாவா அல்லது எங்கள் தண்ணீர் கூஜாவா என்று தெரியவில்லை. பட்டுத் துணியைத் தரையிலிருந்து எடுத்து, அந்தக் கூஜாவுக்கு முடிசூட்டினாள்.

‘ஏண்டியம்மா ரத்னா உங்காத்து தண்ணி கூஜாவையும் இங்கேயே இருத்திட்டியா? போறது போ. தீட்சிதர் கோபிச்சுக்க மாட்டார். இது என் ரயிலா அவர் ரயிலா முணுக்குன்னா கோபிக்க?’

இப்போது நான் அடக்க முடியாமல் சிரித்து, நடுராத்திரியிலே சும்மா சிரிக்கற அபிஷ்ட்டுத்தனத்துக்கு பாட்டியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டேன். அவள் என்ன சொன்னாலும் கோபம் ஏனோ வரமாட்டேன் என்கிறது.

ஆக, அந்தக் குடும்பம் காலையில் ஆக்ராவில் இறங்கத் தயாரான போது அவர்கள் எடுத்துக்கொண்டு போகும் புனித நீர்ப் பாத்திரம் எங்கள் தண்ணீர் கூஜாவா, அல்லது பாட்டியின் மடியான காசி கூஜாவா என்று அடையாளம் தெரியாமலே போனது. கூஜாவில் இருந்தது எந்த ஊர்த் தண்ணீர் என்றும் தெரியவில்லை. தெரிந்து என்ன ஆகப் போகிறது?

இந்த தேசத்தில் எங்கே இருந்தும், சுத்த மனசோடும் பக்தியோடும் எடுத்துப்போகும் சுத்தமான தண்ணீரை அபிஷேகத்துக்கு வேண்டாம் என்று காசி விசுவநாதன் ஒருபோதும் சொல்ல மாட்டான்.

பாட்டியின் மருமகள் ரத்னா பக்கம் வந்து, எல்லாத்துக்கும் நன்றி என்று துரைகள் துரைசானிகளின் தேவ பாஷையில் காலை நேரத்தில் கனிவாகச் சொல்லி எனக்கும் காலை வணக்கம் சொல்லிக் கடந்து போனாள். அவளுக்கு பட்டாம்பூச்சி பாஷை, பசுமாடு மொழி தவிர மற்ற எல்லாம் அத்துப்படிபோல.

பாட்டி 'புத்ர ப்ராப்தி ரஸ்து' என்று ரத்னா தலையைத் தடவி என்னையும் சேர்த்துப் பார்த்து ஆசிர்வாதம் செய்து மகன் கையைப் பிடித்துக்கொண்டு இறங்கிப் போனாள். அவள் இதை மராட்டியில் சொல்லியிருந்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன்.

'ஆக்ரா கண்டோன்மெண்டில் நமக்கு சாப்பிட மிஞ்சின இனிப்பு, காரம், சாயா காத்திருக்கு அன்பே', என்று ரத்னாவிடம் யந்திரகதியில் மெனு ஒப்பித்தேன். மீந்தது எதுவும் இல்லை என்றாள் அவள்.

ஒரு மாறுதலுக்காக, போஜனசாலையில் சாண்ட்விச் வாங்கலாம் என்ற நினைப்பு உற்சாகம் தந்தது.

ப்ளாஸ்கோடு இறங்கினேன். சாண்ட்விச் விற்கும் கடை. பக்கத்திலேயே இருந்தது.

'ரெண்டு சீஸ் சாண்ட்விச். சாயா'

'நாலு சீஸ் சாண்ட்விச், காப்பி.' திரும்பிப் பார்த்தேன்.

'டூ ரா லூ ர லூ ரா.' ரத்னா பாடியபடி என்னைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.

போகலாமா என்று ரயில் ஊதியது.

★★★

எட்டு

# பீமாராவ் வீட்டில் விருந்து வந்த ராமோஜி – 1944 டில்லி

'பீ மாராவ்' என்று கூப்பிட்டேன். என்னைக் கடந்து நடந்து ஓடிக்கொண்டிருக்கிறவன் பீமாராவாகத்தான் இருக்கவேண்டும் என்று மனசு சொன்னது.

பீமாராவ் என் மைத்துனன். ரத்னாவுக்கு அண்ணா. எனக்குப் பத்து வயது பெரியவன். நான் வீட்டுக்கு வந்த மாப்பிள்ளை என்பதால் அவன் என்னை கொஞ்சம் மரியாதையாக ஜீஜாஜி என்று கூப்பிடுகிறான். டெல்லியில் இங்க்லீஷ் தினப் பத்திரிகை ஆபீசில் விற்பனைப் பிரிவு அதிகாரியாக இருக்கப்பட்டவன். அவன் வீட்டு விசேஷத்துக்குத்தான் நானும் ரத்னாவும் டெல்லிக்கு வந்திருக்கிறோம்.

ஆனால் பீமாராவ் பெரிய மீசையோடு இருப்பானே. குண்டோதரனும் கூட. அதாவது வயிறு சுமாராக முன்னால் தள்ளி இருக்கும். ப்ராங்க் சினாட்ரா மாதிரி பின்னந்தலைவரை தலைமயிரை வழித்து வாரி இருப்பான்.

என்னைக் கடந்து போகிற இந்த மனுஷன் உடம்பு இளைத்து இருக்கிறவன். மீசையை மழித்து மொழுக் என்று முகத்தை வைத்துக்கொண்டிருப்பவன். தாராளமான முன்வழுக்கை வேறே. பைஜாமாவும் காதி ஜிப்பாவுமாக காங்கிரஸ் சோஷலிஸ்ட் மாதிரி இருக்கும் இவனா பீமாராவ்?

பீமா… பீமா ராவ்… ரத்னா வீட்டுக்காரன்… ராமோஜி .

முன்னால் போனவன் ப்ரேக் பிடித்தமாதிரி நின்றான். என்னைப் பார்த்துவிட்டு பக்கத்தில் வந்தான்.

'ஜீஜாஜி, நீரா… ரெண்டு வருஷத்துலே ரொம்ப மாறிட்டீரே' என்றபடி என் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

'உடம்பு சதை போட்டிருக்கு… மரவட்டை மீசை வச்சிருக்கீர். தலைமுடியை தியாகராஜ பாகவதருக்கும் ரஞ்சனுக்கும் நடுவாந்திரமா

வளர்த்து சீவியிருக்கீர்' என்று ரெண்டு வருட மாறுதல் கணக்கைப் பட்டியல் போட்டான்.

நான் அவனிடம் கண்ட மாற்றங்களை அவ்வண்ணமே பட்டியலிட்டுப் பகிர்ந்துகொள்ள, ரத்னா பொறுமை இழந்து, 'இதைப் பேசிக்கிட்டே இன்னிக்கு பூரா இங்கேயே நிக்கப் போறீங்களா ரெண்டு பேரும்? இவருக்குத்தான் அப்ப அப்ப புத்தி ஸ்லோ ஆகிடும்னா, பீமா தாதா, நீயுமா... கொலைப் பசி எனக்கு இப்போ... அம்புட்டுதான் சொல்வேன்' என்று இரண்டு பேருக்கும் ஒரே நேரத்தில் குட்டு வைத்தாள்.

'இதோ கிளம்பவேண்டியதுதான், ரத்னா... கோவிச்சுக்காதே... ரயில்லே சௌகரியமா வந்தியா? சாப்பிட செலவு பண்ண எங்க ஜீஜாஜி கஞ்சத்தனமே காட்ட மாட்டாரே... தமிழ், தெலுங்கு, மராட்டி, ராஜஸ்தானி, உத்தர பிரதேசம்னு வேளாவேளைக்கு கானா வாங்கிட்டு வந்து கொடுத்திருப்பாரே'

'எங்கே பீமா, உன் தங்கச்சிதான் இன்னும் ஒரு மாசத்துக்கு வர்ற மாதிரி சமைச்சு எடுத்து வந்துட்டாளே. வேளாவேளைக்கு அதான் சாப்பாடு. வேணாம்னா அறை விழும்.'

ரத்னா கையை ஓங்கிக்கொண்டு முன்னால் வர, கூட்டமாகப் போன உத்தர பிரதேச பால்காரர்கள் ஒரு நிமிஷம் நின்று ஆவலோடு அவள் என்னைத் தாக்குவாள் என்று எதிர்பார்க்க, அவள் என் முதுகில் செல்லமாகக் குத்திச் சிரித்தாள். ராம் ராம் பய்யா என்று பார்வையாளர்களுக்கு வணக்கம் வேறு. அண்ணா வீட்டுக்குப் போகிற சந்தோஷம் அவள் முகத்தில் ததும்பி வழிந்தது.

டில்லி ஸ்டேஷன் வாசலில் நின்ற குதிரை பூட்டிய சாரட் வண்டிகளையும், றக்கை விரித்த மோட்டார் சைக்கிள்போல் நின்ற ஃபட்ஃபட் என்ற டெல்லிக்கே உரிய வாகனங்களையும் தவிர்த்து பீமாராவ் எங்களைக் கூட்டிக்கொண்டு நீளப் போனான்.

ஒரு போர்ட்டர் லக்கேஜ்களைச் சுமந்து கூடவே வர, நாங்கள் பீமாராவோடு நடந்து கிட்டத்தட்ட ஆக்ரா கண்டோன்மெண்ட் ரயில்வே ஸ்டேஷனுக்கே திரும்பி விட்ட நேரத்தில் பீமாராவ் விரல் சுட்டி முன்னால் காட்டினான். அங்கே ஒரு மோரிஸ் மைனர் கார் ஒயிலாக நின்றுகொண்டிருந்தது.

'அண்ணா, கார் வாங்கிட்டியா? பிரமாதம்.'

ரத்னா குழந்தைபோல கைதட்டிக் குதூகலப்பட்டாள்.

‘செகண்ட் ஹாண்ட்தான்‘மா’ என்றான் பீமாராவ்.

‘நாங்க இன்னம் செகண்ட் ஹாண்ட் சைக்கிள்லேதான் இருக்கோம்’ என்றாள் ரத்னா. கேட்காததுபோல் பாவனை செய்தேன்.

என் ராலே சைக்கிளுக்கு என்ன குறைச்சல்? இன்னிக்கு பார்த்தாலும் முந்தாநாள் புதுசாக வாங்கிய மாதிரி மினுமினுப்பு, சுத்தமான ஆரங்கள், அதிக பிரகாசமாக வெளிச்சம் பொழியும் டைனமோ லைட். பகலோ, ராத்திரியோ சவாரி செய்ய சௌகரியமான வாகனம் வேறேது.

‘ஜீஜாஜீ நினைச்சா ஒரு கார் என்ன, ஒன்பது கார் வாங்கலாம். மாட்டேங்கறாருபோல இருக்கு.’ என்றான் பீமாராவ்.

எதுக்கு எனக்கு இப்போது கார்? காலையில் வீட்டில் வந்து கூட்டிப் போகக் கார் அனுப்பும் ஏற்பாடு மற்ற சர்க்கார் நடைமுறைகள்போல், ஏற்படுத்தப்பட்ட காரணம் இல்லாமல் போனாலும் இன்னும் நடைமுறையில் இருக்கிறது. சாயந்திரம் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை வாசலில் இறங்கினால் ட்ராம் என்ன, பஸ் என்ன, கொஞ்சம் காலாற நடந்தால் எலக்ட்ரிக் ரயில் என்ன? மதறாஸ் சௌகர்யம் வேறெங்கே வரும்?

‘தங்கச்சி நீ பின்னாடி உக்காரு. கொஞ்ச நேரம் ஜிஜாஜி உன் தொந்தரவு இல்லாம முன்னாடி உக்காந்து வரட்டும்’ என்றான் மச்சினன்.

லக்கேஜ் எல்லாம் சரியா இருக்கா? டிக்கியில் மூட்டை முடிச்சு வைத்த போது பீமா கேட்டான். எண்ணிப் பார்த்தேன். எண்ணிக்கையில் ஒன்று குறைவதாகத் தெரிய நான் ரயில்வே ப்ளாட்பாரத்துக்குத் திரும்பிப் போக அடி எடுத்து வைத்தேன்.

‘எங்கே போகறீர், ஜீஜாஜி? வீட்டுக்குப் போகவேண்டாமா? என் பெண்ஜாதி சுமித்ரா விதவிதமா சமைச்சுட்டுக் காத்திருக்கா’ என்று வழிமறித்தான் பீமா.

‘என்ன ஆச்சு, எதைவிட்டுட்டீங்க?’ என்று உடனே விசாரித்தாள் ரத்னா. சொன்னேன்.

‘என்ன ஆச்சு உங்களுக்கு? சாப்பாட்டு மூட்டையைச் சேர்த்து ஏழு உருப்படி. அதை தின்னு தீர்த்து ஆக்ராவிலேயே பிச்சைக்காரனுக்கு மிச்சம் மீதியோட போட்டாச்சு.’

‘அதைக் கணக்கிலே எடுத்துக்கலே... அப்புறமும்.’

ப்ளாஸ்க் எங்கே?

இங்கே என்று ரயிலில் எங்கள் கம்பார்ட்மெண்டில் வந்த நாலு சிப்பாய்களில் தமிழ் பேசும் ராணுவக்காரன் என் ப்ளாஸ்கை நீட்டினான்.

‘நாங்க கடைசியா இறங்கறபோது பார்த்தோம்... சீட் ஓரமா கிடந்துது... சரி எப்படியாவது பார்த்து கொடுத்திடலாம்னு எடுத்து வந்தேன்’

நான் சொன்ன நன்றியை அப்புறம் ஒருநாள் சாவகாசமாக வாங்கிக்கறேன் என்பதுபோல் சிரித்தபடி கையசைத்துப் போனான் அவன். அவர்.

‘போகலாமா பீமா. ட்ரைவர் எங்கே போனாரு?’ கெத்தாக கார் உள்ளே உட்கார்ந்தேன். ‘நான்தான் ட்ரைவர்’ என்றபடி காரை ஸ்டார்ட் செய்தான் பீமாராவ்.

‘அண்ணா நீ ஊர்லே சைக்கிள் கூட ஓட்ட மாட்டே. இங்கே வந்து கார் ஓட்ட படிச்சுட்டியா?’ ரத்னா அழகாக ஆச்சரியப்பட்டாள்.

‘லைசன்ஸ் எடுக்க என்ன செலவாகும்’ நான் விசாரித்தேன்.

‘கார் படிக்க இருநூறு ரூபாயும் லைசன்சுக்கு இன்னொரு ஐம்பதும் மொத்தம் இருநூற்றைம்பது. ரெண்டு பேர் கத்துக்கிட்டா மொத்தம் நானூறு ரூபாய்லே முடிச்சுடலாம்.’

பீமாராவ் சொல்ல நான் ஆபீசில் யாரோடு போய் கார் கற்றுக் கொள்ளலாம் என்று நினைத்துப் பார்க்க, சம்பந்தமே இல்லாமல் கேளப்பன் எட்டிப் பார்த்தார். விலாசினிக்கு ஜலதோஷம் என்பதால் வர முடியவில்லையாம்.

‘உனக்கு கார் ட்ரைவிங் கம்பெனி கொடுத்தது யார்?’ ரத்னா கேட்க, நானும் சுமித்ராவும் ஜோடியாப் போய் கார் கத்துக்கிட்டோம் என்றான் பீமா.

‘அட, அண்ணியும் கார் ஓட்டறாங்களா? நல்லதா போச்சு. நீ ஆபீஸ் போனாலும் அவங்களோட டெல்லி சுத்திப் பார்த்து, வாங்க வேண்டியதை எல்லாம் வாங்கிடலாம்’ என்றாள் ரத்னா களிப்போடு.

நான் சும்மா வேடிக்கை பார்த்தபடி இருந்தேன். வயிற்றில் அடுத்த வேளை சாப்பாட்டுக்கு மணி அடித்தபடி இருந்தது. பகல் ரெண்டு மணியாச்சே.

சீரான வேகத்தோடு பீமாராவ் கார் ஓட்டிப் போனான். வருடம் முழுக்க, நாள் முழுக்க காரோ ட்ரக்கோ ஏன் டாங்கு கூட ஓட்ட டெல்லி வீதியில் பழகலாம் என்று தோன்றியது. எந்த வீதியிலும் கூட்டம் இல்லாமல் அவ்வப்போது ஒன்றிரண்டு கார்களும் ஒன்றிரண்டு மோட்டார் சைக்கிள்களும் கண்ணில் பட்டுக் கடந்து போயின. கணிசமான சைக்கிள்கள் எங்கும் எல்லாத் திசையிலும் போன மணியமாக இருந்தன.

'பீம் அண்ணா, உங்க ஊர்லே வெய்யில் இதமா இருக்கு. மெட்றாஸ் மாதிரி காயறது இல்லே போலிருக்கு' என்றாள் ரத்னா.

'அக்டோபர்லே அப்படித்தான் அம்மா. அடுத்த மாசம் இந்த வெய்யிலும் காயப். குளிர் ஆரம்பிச்சுடும். ஸ்வெட்டர், கம்பளி, மப்ளர் எல்லாம் லாஃப்ட்லே இருந்து சீதே நீச்சே வந்துடும். ஏ பூரி ஷெகர் பஹுத் குப்சூரத் ரஹேஹா'

பீமாராவ் மிக்சர் செய்வதுபோல் தமிழ், இந்தி, மராட்டி, இங்க்லீஷ், உருது என்று எல்லா பாஷையில் இருந்தும் கொஞ்சம் கொஞ்சம் கிள்ளிப்போட்டு உருவாக்கிய ஒரு பாஷையில் பேசிக்கொண்டே காரின் வேகத்தை சற்றே அதிகப்படுத்தினான்.

ஒரு சைக்கிளின் பின்னால் கார் சற்றே முகர்ந்து பார்க்க, ஓட்டிப் போனவன் காலை ஊன்றித் தலை திருப்பி முறைத்தான். முறைத்தாள். ஆறடி அரம்பை அவள். பஞ்சாபிப் பெண்.

ஆயிரத்து முன்னூற்று எழுபத்துமூன்று மைல் தூரத்துக்குள் விதவிதமான அழகியரைக் கண்ணில் படவைத்த தெய்வத்துக்கு நமஸ்காரம். அதையெல்லாம் நான் ரத்னா கண்ணில் படாது பார்த்து அனுபவிக்க வைத்ததற்கு இன்னொரு ஸ்பெஷல் நன்றி. இந்தப் பெண் யாரோ.

பைசைக்கிள் பெண் கார் ஓட்டி வருவது யாரென்று கண்ணாடி வழியாக உற்றுப் பார்த்தாள். பின், கதவைத் திறக்கச் சொன்னாள். அறையப் போகிறாள் என்று பின் சீட்டில் இருந்து ரத்னா ஆருடம் கூறினாள்.

'மாஃப் கீஜியே' என்று பீமாராவ் கீழே இறங்கி மன்னிப்புக் கேட்க ஆரம்பிக்க, அந்தப் பெண் 'அங்கிள், நான் பூர்ணா க்ளாஸ்மேட்... சஷி பாலா... மறந்துட்டீங்களா' என்றாள்.

பூர்ணா பீமாராவின் மகள். அவள் விசேஷத்துக்குத்தான் நாங்கள் டெல்லி வந்திருக்கிறோம். இந்தப் பெண் வடிவத்தில் அரைப் பங்கு இருப்பாள்.

பூர்ணாவுக்கு பதினான்கு வயசு. இந்தப் பெண்ணும் அதே வயசுதான் இருக்கவேண்டும். பரம்பரை உடம்புவாகுபோல இருக்கிறது, சடசடவென்று அபரிமிதமாக வளர்ந்து உயரமும் கைகூடி நிற்பது.

‘சஷி,… சாரிம்மா நான் கொஞ்சம் பார்க்காம திரும்பிட்டேன் போலே இருக்கு… அடி ஏதும் படலேதானே’, பீமாராவ் சந்தேகத்துக்கு இன்னொருமுறை கேட்டுவிட்டான். விபத்து இல்லை என்று தெரிந்த நிம்மதி அவன் முகத்தில்..

‘இல்லே அங்கிள்… அடி ஒண்ணும் இல்லே… பூர்ணாவை பார்க்க முடியலியே… உடம்பு சரியில்லையா?’

பீமாராவ் இல்லை என்று பலமாகத் தலையசைத்தான். ‘ஷி இஸ் ஆல்ரைட். நீங்க எல்லாம் இன்னும் குழந்தைகள்தான்… திடீர்னு பெரிய மனுஷின்னு சொன்னா கொஞ்சம் சர்ப்ரைஸ் கொஞ்சம் சந்தோஷம்… கொஞ்சம் ஷாக். ப்ரண்ட்ஸோடுகூட கொஞ்சநாள் பேச்சு குறையும்… இட்ஸ் நேசுரல்…’

அவன் சிரித்தபடி காரைக் கிளப்ப, என்னையும் ரத்னாவையும் பார்த்தாள் அவள். ‘வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காங்க போலே இருக்கு… சரி அங்கிள் அப்புறம் பேசறேன்’ என்று சைக்கிளில் ஏறிப் போனாள்.

‘சஷி ரொம்ப அழகான பொண்ணு’ என்றாள் ரத்னா. அவளிடம் சர்டிபிகேட் வாங்குவது ரொம்ப கஷ்டம். என்னைப்போல் இல்லை. பார்த்தவுடன் பட்டம் கட்ட.

‘முனீர்காவிலே இருந்தபோது பக்கத்து வீட்டிலே சஷி குடும்பம் இருந்தது. நம்ம பிள்ளையைப்போல அப்பவே ரெட்டை வளர்த்தி. திரும்பறதுக்குள்ளே பெரிய மனுஷியா சைக்கிள் ஓட்டிகிட்டு வந்து நிக்கறா. அவ அப்பா இன்னும் ஒரு வருஷத்திலே கல்யாணம் வச்சுடுவார்’ என்றான் பீமா வண்டி ஓட்டியபடி.

‘அண்ணா, என்னைத்தான் பாபாஜி ஸ்கூல் ஃபைனலோடு படிப்பை ஏறக்கட்டச் சொல்லிட்டார்… நம்ப பசங்க… பூர்ணா, பெரிய படிப்பு, மெடிக்கல் டாக்டர் மாதிரி, மீசை நாயர் டாக்டர் மாதிரி ஆகணும்… நோ மீசை…’

ரத்னா படபடவென்று சொல்லிப்போக நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன். என்ன ஆச்சு இவளுக்கு? அவள் நம்பிக்கையோடு சிரித்தாள்.

பீமாராவ், இது எந்த இடம்? நான் கேட்டேன். ரத்தன்லால் மார்க்கெட்டாம்.

‘இன்னிக்கு செவ்வாய், ஜெயின் பண்டிகை லீவு. நாளைக்கு குரு ரவிதாஸ் ஜனம் தின் லீவு. ரெண்டு நாள் தொடர்ந்து லீவுன்னா கடையிலே விஸ்கி பிராண்டி வாங்கிக்கிட்டு வீட்டிலே முடங்கிடற வழக்கம்... அதான் கடைத்தெருவிலே கூட்டம் இல்லை’, என்றான் பீமா.

மற்ற நாளாக இருந்தாலும் பம்பாய் தாதர் மாதிரியோ, மெட்றாஸ் பாரீஸ், ப்ராட்வே, மவுண்ட்ரோடு மாதிரியோ கூட்டம் அலைமோதாது என்று சேர்த்துக்கொண்டான்.

‘இந்தத் தெரு திரும்பி நேரே அரை மைல் போனா நம்ம வீடுதான்... கரோல்பாக் வந்துடும்’ என்றான் பீமாராவ்.

‘தமிழ்நாட்டிலே இருந்து யார் ஷார்ட் ஹாண்ட், டைப் ரைட்டிங் ஹையர் இல்லே லோயர் சர்டிபிகேட்டோட வந்தாலும் இங்கே ஏதாவது மினிஸ்ட்ரியிலே வேலை கிடைச்சிடும்... என்னை மாதிரி வாய் வார்த்தை, டைப் ரைட்டிங் கொஞ்சம் தெரிஞ்சிருந்தாலும் அதுக்கு ஏத்த மாதிரி ப்ரைவேட் கம்பெனி உத்தியோகம்... டெல்லியிலே வேலைக்கு பஞ்சமே இல்லை... டைப் ரைட்டிங் எந்த விரல் எந்த எழுத்துக்குன்னு மட்டும் கத்துக்கிட்டு வந்த நம்மாள் ஒருத்தர் இப்போ ஒரு கம்பெனியிலே ஜெனரல் மேனேஜர்னா பாத்துக்க’ என்றான் பீமா.

பேசாமல் டெல்லிக்கு குடித்தனம் மாற்றிக்கொண்டு வந்தால் என்ன என்று ஒரு வினாடி தோன்றியது.

கரோல்பாக் வந்தாச்சு என்றபடி கடைவீதியில் ஜாக்கிரதையாக காரை ஓட்டிப் போனான் பீமாராவ். அது கரோல்பாக் கடைவீதியாகத் தெரியவில்லை. பஞ்சாபிகளும் சிந்திகளும் சர்தார்ஜிகளும் கடை வைத்து காத்திருந்தார்கள். வாங்க வந்திருப்போர்களில் பெரும்பான்மை தென்னிந்தியர்கள். மதறாஸி என்று பிரியத்துடனும் சமயத்தில் இகழ்ச்சியாகவும் கூப்பிடப்படும் இந்த தமிழ், தெலுங்கு, கன்னட மலையாளிகள் தட்டுச் சுத்து வேட்டியோடு திரிந்து கொண்டிருந்த வீதிக்கு அஜ்மல்கான் வீதி என்று பெயராம். மனதில் அதை வாங்கும்போது பீமாராவ் வீடு வந்துவிட்டது.

‘ஜாஃபர் மார்க்கெட்டுக்கு ரொம்ப அருகாமையிலே வீடு கிடைச்சுது. அட்வான்ஸும் ஆறு மாசத்துக்கு கொடுத்தா போதும். சரின்னு வந்து

ரெண்டு வருஷமாறது' என்றபடி கார் டிக்கியைத் திறந்து எங்கள் லக்கேஜ்களை இறக்க உதவி செய்தான் பீமா.

'பாப்பா பள்ளிக்கூடம் மட்டும் மாத்த முடியாம போய் முனீர்கா ஸ்கூல்லேயே அவ தொடர்ந்து படிச்சுக்கிட்டிருக்கா...' என்றபடி வாசலில் அழைப்பு மணியை அழுத்தினான்.

'ஆரிஹூம்' பஞ்சாபிப் பெண் குரல். சுமத்ராதான். பீமா மனைவிக்கு அப்பட்டமான பஞ்சாபி களை. அவள் பிறப்பால் பஞ்சாபி. சுமித்ரா கவுர்.

'அண்ணி, நீங்க வெயிட் போட்டுட்டீங்க' என்று கூவிக்கொண்டு சுமத்ராவை இறுக அணைத்துக்கொண்டாள் ரத்னா. நல்லா சொல்லு என்றான் பீமாராவ். ஆமா அங்கே வடியற வயசான களைக்கு இது பரவாயில்லே என்றாள் சுமத்ரா அவனைக் காட்டி.

'இவளும்தான் கொஞ்சம் பூசினாப்போல இருக்கா' என்று ரத்னாவைச் சுட்டிக்காட்டி சேம் சைட் கோல் போட்டேன். 'ஏன் நீங்களும்தான்... கொஞ்சம் இல்லே முழுக்க பூசி செங்கலும் அடைச்ச மாதிரி தொப்பை வேறே. உசரம் இருக்கோ பிழைச்சீங்களோ.'

யாருக்கும் கோபம் வரவில்லை. யாரும் வருத்தப்படவில்லை. சிநேகிதர்கள். நாலு பேருக்கும் ஆளுக்கு ஐந்து வயசு கம்மியான மாதிரி தோன்றியது.

'ரத்னா, வா, சுடச்சுட சாப்பாடு பண்ணி வச்சிருக்கேன். ஆலு பரட்டா, விஜிடபிள் புலாவ், தயிர் சாதம், பாஸந்தி. அதுக்குள்ளே இதைக் குடியுங்க'

சுமித்ரா வெள்ளைப் பெட்டியைத் திறந்தபோதுதான் ரெப்ரிஜிரேட்டர் அது என்று தெரிந்தது. 'இது செகண்ட் ஹாண்ட் இல்லே, புதுசா வாங்கினது' என்றான் பீமாராவ்.

இஞ்சியும் சீரகமும் மணத்த குளிர்பானம் பானகம்போல வெல்ல ருசியோடு அற்புதமாக இருந்தது. பிரிட்ஜில் வைத்த குளிர்ச்சி வேறு அந்த இனிப்பை அலாதியாக்கிக்கொண்டிருந்தது.

வீட்டுக்குள், தமிழ், மருந்துக்காகக் கூடப் புழங்கவில்லை என்பதையும், பேச்சு வார்த்தை எல்லாம் இந்தியில்தான் முழுக்க இருக்கும் என்பதையும் கவனித்தபோது, என் இந்தியை கொஞ்சம் ஜாக்கிரதையாக்கிக்கொள்ள தீர்மானம் செய்துகொண்டேன்.

இவர்களில் யாரும் என் வீட்டில் போன தலைமுறை வரை புழங்கிய தஞ்சாவூர் மராட்டி பாஷை பேச மாட்டார்கள் என்று நினைக்க ஏனோ கொஞ்சம் வருத்தமாக இருந்தது. எனக்குத் தமிழ் மட்டுமில்லை அந்த பாஷையும்தான் தாய்மொழி.

பம்பாயில் என் இந்திக்கும் அங்கே தலைமுறை தலைமுறையாக இருக்கும் தென்னிந்திய குடும்பங்களின் இந்திக்கும் வேறுபாடு கிடையாது.

ஏ பாஜு, ஓ பாஜு, அப்புன் டீக் போலா, ஏக் தம், அபே சாலா, சீனி கம், இப்படி நாலு வார்த்தைப் பிரயோகம் தெரிந்தால் பரோபர் ஹை, என்றால், எல்லாம் சரியாகப் போச்சு.

இங்கே டில்லியில் பஞ்சாபி இந்தி, இன்னும் வடக்கே லக்னொ போனால் உருது சேர்ந்த இந்தி. காசியில் எப்படி இருக்கும்? பண்டாக்கள் சம்ஸ்கிருதத்தில் கண்டிப்பாக அதிகம் தட்சணை கேட்பார்கள் தெரியும். போய்த்தான் பார்ப்போமே. அந்த நினைப்போடு குளிக்கக் கிளம்பினேன்.

நானும் ரத்னாவும் அடுத்த அரை மணி நேரத்தில் குளித்துவிட்டு சாப்பிடத் தயாராக வந்தோம். ‘திவான்லே இருந்து சாப்பிடலாம்’ என்றான் பீமாராவ்.

‘திவானா இருந்து சாப்பிட எனக்கு பதவி வரல்லேப்பா, இப்போ சீனியர் க்ளார்க் ஆக இருந்து சாப்பிடறேன்’ என்றேன்.

‘திவான் அது இல்லை ஜீஜாஜி... பக்கவாட்டில் பலகை இல்லாத கட்டில் அதோ இருக்கு பாரும், ரொம்ப ஒசரம் இல்லாமே... அதான் திவான்.’

சுமித்ரா அண்ணி வஞ்சனையில்லாமல் ஆளாளுக்கு நாலு துண்டு ஆலு பரோட்டாவும் தயிரும், கத்தரிக்காய் வதக்கல் கறியும், பம்பாய் பேடேகர் ஊறுகாயும் பரிமாற, திவானில் உட்கார்ந்து ரேடியோ கேட்டுக்கொண்டே சாப்பிட நன்றாக இருந்தது.

தயிர் சாதமும், பாசந்தியும், பிரிட்ஜில் வாங்கி வைத்த கரோல்பாக் ஸ்பெஷல் ஐஸ்கிரீமும், வயிற்றில் இடம் இல்லாமல் போனாலும் எப்படியோ உள்ளே புகுந்து உடம்பிலும் மனசிலும் இனிமையையும் குளிரையும் பரப்பின.

‘அண்ணா, பஞ்சாபி, தமிழ், மராத்தின்னு சமையல்லே சுமித்ரா அண்ணியை அடிக்க ஆளே கிடையாது நம்ம வீடுகள்லே... எங்க வீட்டையும் சேர்த்துத்தான் சொல்றேன்.’

ரத்னா மனம் மகிழ்ந்து கொடுத்த நற்சான்றிதழில் சுமத்ரா மகிழ்ந்து போனாள். தில்லிக்கு இரண்டு தலைமுறை முன்னால் வந்து குடியேறி, வீடு கட்ட சிமெண்ட், செங்கல், பளிங்கு இப்படி பெரிய ஐட்டங்களை விற்ற கடைக்காரர்கள் அவள் தாத்தா, அப்பா. சீக்கியர்கள். அவள் தம்பி இப்போது நடத்தும் கடை அது.

பீமாராவ் இங்கே வேலைக்கு வந்து, ஆர் கே புரத்தில் அவர்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் பேயிங் கெஸ்ட் ஆகத் தங்கியபோது காதல் மலர்ந்தது. அவன் சுமித்ராவுக்காக தாடி வளர்த்து சர்தார்ஜியாக தலைப்பாகை கட்டி அவளைக் கல்யாணம் செய்துகொள்ளத் தயாராக இருந்தான்.

பையன் நல்ல டைப் என்று பட, சர்தார்ஜிகள் ஒன்று கூடி அவனுக்கு தடபுடலாக குருத்வாராவில் கல்யாணம் செய்து வைத்தபோது என் மாமனாரும், ரத்னா, பீமாவின் தகப்பனாரும் ஆன பாபுராவ் ஜி மாமியார் துள்ஜா பாயோடு கடைசி ஆளாக நின்று போனால் போகிறது என்று ஆசிர்வாதம் செய்தார்.

சுமித்ரா அண்ணி அழகான துருதுருப்பான குழந்தையாக பூர்ணாவை பெற்றுக் கொடுத்தபோது, பேத்தியைப் பார்த்ததும் அவருடைய வெறுப்பும் வைராக்கியமும் போன இடம் தெரியவில்லை.

இப்போது வருடத்தில் ரெண்டு மாதம் குளிர் காலத்தில் டெல்லியிலும் மீதியில் ஆறு மாதம் இச்சல்கரஞ்சியிலும் ரெண்டு மாசம் மதறாஸில் எங்கள் வீட்டிலும், மற்றபடி தல யாத்திரைக்குமாக டைம் டேபிள் போட்டுக்கொண்டு அவரும் மாமியாரும் ஆனந்தமாகப் போய் வந்துகொண்டு இருக்கிறார்கள்.

வாசலில் நிழலாடியது. ஓர் இருபது மதிக்கத் தகுந்த, கருத்த, கையும் காலும் கரளை கரளையாக பலம் காட்டிய பையன் ஒருத்தன் சைக்கிளில் வந்து இறங்கினான்.

‘என்ன ராஜாராவ், நாளைக்கு இல்லே எடுத்து வருவேன்னு சொன்னே?’ என்று கேட்டாள் சுமித்ரா.

‘அண்ணி, வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்கும்போது தேவைப்படுமேன்னு தான்.’ அவன் பெரிய பையிலிருந்து எடுத்துக் கொடுத்தது கல்லிடைக் குறிச்சி அப்பள பாக்கெட்.

‘லிஸ்ட் படிங்க அண்ணி’ என்று அவன் கொடுத்த சீட்டை ரத்னா வாங்கிப் படிக்க அவன் பையிலிருந்து மளிகை சாமான் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாசிப் பருப்பு என்று ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்தான்.

மராட்டி தெரியுமா என்று ரத்னா கேட்டாள் அவனை. சுமாரான டெல்லி மராட்டியில் ஆமாம் என்று பதில் சொன்னதோடு அரிச்சுவடியும் சொல்ல ஆரம்பித்தான். ரத்னா பயந்துபோய் நிறுத்திக் கொண்டாள்.

‘பையனுக்கு உடம்பு வளர்ந்ததுபோல் மூளை வளரவில்லை, கஷ்டம்’, என்று என்னிடம் முணுமுணுத்தபடி ரத்னா பின்கட்டுக்குப் போனாள்.

ராஜாராவின் அப்பா அடுத்த தெருக்கோடியில் தென்னிந்திய சித்த மருத்துவ மருந்து, மளிகை விற்கும் கடை வைத்திருக்கிறார் என்று பீமாராவ் சொன்னான்.

‘கொஞ்சம் சிரம பரிகாரம் பண்ணிக்கும் ஜீஜாஜி, சாயந்திரம் வெளியே ‘போகலாம்’ என்று என்னை திவானிலேயே படுக்கச் சொல்லி தலையணையும் வைத்துவிட்டு எழுந்து போனான் பீமாராவ்.

ரயிலில் சும்மா உட்கார்ந்து வந்தாலும், தூங்கி விழித்து சாப்பிட்டு மறுபடி தூங்கி ரெண்டு ராத்திரி ரெண்டு பகல் வந்தாலும், ஏதோ சாரத்தில் கல்லும் மண்ணும் சுமந்து எடுத்துப்போய் இடுப்பொடிய வேலை பார்த்த மாதிரி அசதி. சுமித்ரா அண்ணி வேறே வயிறை வஞ்சிக்காமல் சரபோஜி மகாராஜா அரண்மனை விருந்துபோல சமைத்து வைத்து சாப்பிடச் சொன்னாள். மூன்று மணி நேரம் அடித்துப் போட்டதுபோல் தூங்கியிருக்கிறேன்.

சாயந்திரம் ரெண்டும் கெட்ட ஆறேகாலுக்கு எழுந்திருந்த போது ரத்னா பேஸ்ட் வேணுமா பல் தேய்க்கறீங்களா என்று கிண்டல் செய்தாள். அவள் பக்கத்தில் ‘குட் மார்னிங் அங்கிள்’ என்று உரக்கச் சொல்லிச் சிரித்துக்கொண்டு நிற்கிற பெரிய மனுஷி, பூர்ணாதான்.

சொந்தம், நட்பு என்று குடும்பத்துக்கு வேண்டியவர்களில் ஆண்களை அங்கிள் என்றும் பெண்களை ஆண்ட்டி என்றும் கூப்பிடும் டெல்லிப் பழக்கம் அவளுக்குப் படிந்திருந்தது.

‘ராம் அங்கிள், ஆபீஸ்லே இப்படித்தான் தூங்குவீங்களா?’

அவள் ரத்னாவுக்குப் பின்னால் இருந்து எட்டிப் பார்த்துக் கண்ணில் குறும்பு மின்னக் கேட்டாள். ரத்னா அவளை முன்னால் இழுத்தபடி சொன்னாள் –

‘இல்லேடா தங்கம், அங்கே வேறே மாதிரி தூங்குவார்’ என்று மோடாவில் உட்கார்ந்தபடி தூங்கிக் காட்ட, வீடே சிரிப்பில் மூழ்கியது.

மெட்றாஸ் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை வாட்டர் போர்ட் ஆபீஸ்லே இது வரைக்கும் திவான், மோடா எல்லாம் போட்டு தூங்கறவங்க தூங்குங்க, வேலை பார்க்கறவங்க பாருங்க என்று உத்தரவு போடவில்லை என்பதை ரத்னாவிடம் மரியாதையோடு எழுந்து நின்று தெரியப்படுத்தினேன்.

‘பயணம் எல்லாம் எப்படி இருந்துச்சு, அங்கிள்?’ பெரிய மனுஷியாகக் கேட்டாள் பூர்ணா. வழியில் பார்த்த அவள் தோழி சஷிக்கு முக்கால் தரத்தில் வளர்ந்திருந்தாள் எங்கள் வீட்டுச் செல்வி.

‘பூர்ணா, உன்னைப் பார்க்கறதுக்கு முந்தி உன் ப்ரண்டைப் பார்த்தாச்சு’, ரத்னா சொன்னாள். யார் என்று ஆவலாகக் கேட்டாள் பூர்ணா.

‘உன் பிரியமான சிநேகிதியாம்... ஸ்கூல்லே ஒரே க்ளாஸ்லே ஒரு வருஷம் மாத்திரம் இருந்து அடுத்ததுக்கு சேர்ந்து போறீங்களாம்...’ நான் சொன்னேன்.

பூரணா முகம் சட்டென்று மாறியதை நான் கவனிக்கத் தவறவில்லை.

‘யார் டாடி வந்தது?’

பீமா தோள் துண்டால் முதுகு சொறிந்தபடி, ‘சஷிடா. ஸ்கூல்லே உன்னைப் பாக்கலியாமே?’ பூர்ணா தலையைக் குனிந்தபடி இருந்தாள்.

‘அவ லீவிலே இருந்தா எப்படி பார்க்கறது’ என்று முணுமுணுத்தபடி உள்ளே போனாள். நான் அவளை நிற்கச் சொல்லிக் கூப்பிட்டதைக் கூட லட்சியமே செய்யவில்லை.

பெரிய மனுஷி ஆகும்போது இந்த பயமும் எரிச்சலும் கொஞ்ச நாள் வரும். குழந்தை தானே. நாம்தான் கூட இருந்து உற்சாகப் படுத்தணும் என்று சுமித்ராவிடம் ரத்னா சொன்னதை அரைகுறையாகக் கேட்டேன்.

‘உங்களுக்கு இங்கே என்ன வேலை ஜீஜாஜி? போய் மூஞ்சி அலம்பிட்டு வாங்க... பிர்லா மந்திர் போயிட்டு வரலாம்’ என்று சுமித்ரா விளையாட்டுக் கண்டிப்போடு சொல்ல எழுந்து போய் வந்தேன். பீமாராவ் சுடச்சுட காப்பி கொடுத்தான். விடுமுறை தின சாயங்காலம் எல்லா ஊரிலும் ஒரேபோல் அசமஞ்சமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது.

‘வாம்மா, காற்றாட கார்லே போய்ட்டு வரலாம்’, என்று பூர்ணாவைக் கூப்பிட்டுப் பார்த்தேன். வாயேண்டி பொண்ணே என்று ரத்னாவும் அன்போடு அழைத்தாள்.

‘நாளைக்கு வரேன் அம்மா... ஹோம் ஒர்க் பண்ணணும்’ என்று எழுந்துவிட்டாள் பூர்ணா.

ரத்னாவிடம், ‘உங்க கிட்டே நிறையப் பேசணும் அம்மா’ என்று உள்ளே தன் அறைக்குப் போகும்போது சொன்னாள்.

‘என்னோட பேச மாட்டியா?’ என்று கொஞ்சம் ஆதங்கத்தோடு கேட்டேன்.

‘அங்கிள், அம்மா கூட பேசினா உங்க கூட பேசின மாதிரிதான்.’ என்று என்னை துப்பாக்கியால் சுடுவதுபோல் கையை நீட்டிக் காட்டிப் போனாள். அது அவள் மதறாஸ் வந்தபோது நான் சொல்லிக் கொடுத்ததுதான். ஒரு வினாடி அந்தக் குழந்தையைப் பார்த்தேன்.

அப்போதைக்கும் இப்போதைக்கும் நடுவே இரண்டு வருஷம் மட்டும் கடந்து போகவில்லை என்றும் உணந்துகொண்டேன்.

‘சரி நீ டாடி கூட இரு, நாங்க போய்ட்டு சீக்கிரம் வந்துடறோம்’ என்று காரை ஸ்டார்ட் செய்தாள் சுமித்ரா.

சுமித்ரா பீமாராவை விட நேர்த்தியாகக் கார் ஓட்டினாள். பிர்லா மந்திர் காந்திஜி வந்திருக்கும் போது பரபரப்பாகவும், கோவிலுக்கான கூடுதல் பக்தி சூழ்நிலையுமாகவும் இருக்கும் என்றாள் அவள். காந்தி எங்கே? ரத்னா கேட்டாள்.

‘பாவம், கஸ்தூர்பாவும் இறந்து போயாச்சு... தனியாயிட்டார் காந்திஜி... போன மாசம் பம்பாய்க்குப் போய் ஜனாப் ஜின்னாவை சந்திச்சு பேசினது தோல்விதான்... மனம் உடைஞ்சு போயிருப்பார்... வார்தாவிலே சேவாகிராமம் ஆசிரமத்துக்கே திரும்பிப் போய்ட்டார்...’ என்றாள் சுமித்ரா.

பளிங்குத் தரையில் உட்கார்ந்து ராமநாமம் ஜபித்தபோது பக்கத்தில் பார்க்க, சுமித்ரா கண்ணிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. பக்தியால் மட்டும் அது என்று ஏனோ நம்ப முடியவில்லை. அருகில் இருந்த ரத்னாவுக்குக் கண் காட்டி சுமத்ராவைப் பார்க்கச் சொன்னேன். பார்த்தவள், விட்டுடுங்க என்று ஜாடை காட்டினாள்.

தேவையில்லாமல் அடுத்தவர் அந்தரங்கத்தில் தலையிடக்கூடாது என்ற அவள் கண்ணோட்டத்தோடு ஒரு நிமிடம் மாறுபட்டேன். நம்மால் மாற்ற முடிகிற துக்கம் அல்லது குழப்பம் இருந்தால் உதவிக் கரம் நீட்ட என்ன ஏது என்று தெரிந்துகொள்ளவேண்டாமா?

லக்ஷ்மிநாராயண் கோவில் என்ற பிர்லா மந்திரில் இருந்து வெளியே வரும்போது சுமித்ரா அண்ணி பழையபடி கலகல என்று ஆகியிருந்தாள். பீமாராவின் எடுத்தேன் கவிழ்த்தேன் அவசரத்துக்கு நேர் எதிர் எதையும் நிதானமாக சாதக பாதகம் சீர்தூக்கி முடிவெடுப்பவள் அவள்.

கல்யாணம் பண்ணி நாலு வருஷமாகியும் குழந்தை இல்லையே, தத்தெடுத்து வளர்க்கலாமா என்று ரத்னா மனம் ஏங்கி சுமித்ராவும் பீமாராவும் மதறாஸ் வந்தபோது கேட்க, அப்படி செய்தால் என்ன சந்தோஷம், என்ன பிரச்னை பின்னால் வரலாம் என்று சுமித்ரா அலசி ஆராய்ந்ததை நானும் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தேன்.

இன்னும் ரெண்டு, மூணு வருஷம் பொறுங்க என்று அவள் சொல்லி இரண்டு வருஷம் கழிந்திருக்கிறது. அடுத்த வருடம் எங்களுக்கு சந்தானப் பிராப்தி என்று புலியூர் ஜோசியன் சொல்லியிருக்கிறான். அவனுக்கு தந்தத்தில் ஒரு பொடி டப்பி முழுக்க இங்க்லீஷ் பொடி நிரப்பி ரதனா வெகுமதி கொடுத்தது இந்த இடத்தில் சொல்வதற்கானதில்லை.

பூர்ணா அந்த வருகையின் போதுதான் ரத்னாவின் அன்பு மகளாக மாறினாள். அவளுக்கு ரத்னா மௌஸியோ, ரத்னா ஆண்ட்டியோ என்று கூப்பிடவரவில்லை. ரத்னா அம்மாதான்.

திரும்பும் வழியில் பெட்ரோல் பம்ப்பில் நிறுத்தி டாஷ் போர்டில் இருந்து எதையோ எடுத்தாள் சுமித்ரா.

'ரேஷன் கார்ட். பெட்ரோல் மாசத்துக்கு ஐந்து காலன் ஒரு காருக்கு. ரேஷன் கார்டுலே பதிஞ்சு பெட்ரோல் பம்ப்லே கொடுப்பாங்க.'

ரத்னா 'இந்த ரேஷன் வாங்கத்தான் இதுவரை நின்னதில்லே' என்றாள். சீக்கிரம் ராமோஜி நிப்பார் என்றபடி சுமத்ரா பெட்ரோல் போட்ட வண்டியை ஸ்டார்ட் செய்தாள்.

நான் கார் வாங்குவதை ரத்னா தவிர எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள் என்று தோன்றியது.

திரும்பி வந்தபோது வீட்டு வாசலில் விளக்கைப் போட்டுக்கொண்டு நின்றிருந்த பூர்ணாவைப் பார்த்தோம். 'பாவம் நமக்காக காத்துக்கிட்டுருக்கா, இல்லேன்னா சீக்கிரம் தூங்கப் போற பிள்ளை', என்றாள் ரத்னா.

இரண்டு வருஷம் முன்னால் மெட்றாஸ் வந்தபோது ராத்திரி எட்டு மணிக்கே உறங்கப்போய் காலை நாலு மணிக்கு ஊருக்கு முந்தி எழுந்து உட்கார்ந்து, தெருக்கோடி வரை நடந்து திரும்பும் சின்னப் பெண் எனக்கு நினைவு வந்தாள்.

ராத்திரி தனியா நடக்கக் கூடாது என்று அவளிடம் சுமத்ரா கண்டிப்பாகச் சொன்னபோது, 'அதிகாலைன்னா நாலு மணி தானே, அந்த நேரத்திலே என்ன செஞ்சாலும் எளிதாகச் செய்யலாம், சீக்கிரம் செய்யலாம்னு நீங்க தானே சொல்லிக் கொடுத்தீங்க' என்று அவளிடம் சொல்லிச் சிரித்த சின்னப் பெண் இல்லை இப்போது இங்கே இருப்பவள்.

ரத்னாவின் கையைப் பிடித்துத் தட்டாமாலை சுற்றிக்கொண்டே பூர்ணா சொன்னாள் –

'அம்மா, ஜோரா நிம்பு பிழிஞ்சு, கருகப்பிலை, பச்சை மிளகாய், முந்திரிப்பருப்பு எல்லாம் போட்டு ரவா உப்புமா பண்ணிக் கொடுங்க. வேறே எதுவும் வேண்டாம். தொட்டுக்க சர்க்கரையும் மாங்கா ஊறுகாயும் போதும்.'

லங்கணம் பரம ஔஷதம் என்று ராத்திரி பட்டினி கிடக்க உத்தேசித்திருந்த நான் ஒரு ஸ்பூன் மட்டும் சும்மா ருஜி பார்க்க ரவை உப்புமா கேட்டேன். சின்ன தட்டுலே வச்சுத் தரேன் என்று நாலு ஸ்பூன் உப்புமா மேலே தூவலாகக் காராபூந்தி அணிந்துகொண்டு சூடு பறக்க வந்தது. அதைச் சாப்பிட எங்கே இருந்தோ அழிச்சாட்டியமாக ஒரு பசி. ஒரு பெரிய தட்டில் பரிவார தேவதைகளான மத்தியான சாம்பார், அஸ்கா, ரொம்ப கம்மியாகவும் இல்லாமல் பெரியதாகவும் இல்லாமல் ஒரு விள்ளல் ஊறுகாய்த் துண்டு என்று நல்ல சாப்பாட்டு வாடை ஆவி பறக்க வந்த அந்த உணவை காசி விசுவநாதனும், ராமேஸ்வரம் ராமநாதனும் கூட இறங்கி வந்து பாம்பன் பாலத்தில் உட்கார்ந்து ஒரு சிட்டிகையும் வீணாகாமல் உண்டு போவார்கள்.

ரத்னா மற்றவர்களுக்குப் பரிமாறக் கிளம்ப, பூர்ணா அவளை விடாப்பிடியாக திவானில் உட்கார வைத்தாள்.

'நான் போடறேன் நம்ம எல்லோருக்கும்... அந்த நம்கீன் எங்கே இருந்து போட்டீங்க அம்மா?' என்று கேட்டாள் அவள். நாங்கள் மெட்றாஸில்

இருந்து வாங்கி வந்திருந்த ராவ் கடை இனிப்பும், காரமும் சமையலறையில் வைத்திருப்பதாக சுமித்ரா சொன்னாள்.

‘உனக்கு பிடிக்கும்னு மோதிசூர் லட்டு வாங்கி வந்திருக்கேண்டா’ என்று ரத்னா அவளிடம் சொன்னபோது, ‘ஸ்வீட் சாப்பிடற மூட்லே இல்லே அம்மா... சாரி’ என்று பெரிய மனுஷியாக, பூர்ணா போகிற போக்கில் சொன்னாள்.

பீமாராவ் சுமத்ராவை நோக்கி, கண்ணைத் தாழ்த்திக்கொண்டான். சுமித்ரா தலையைக் குலுக்கிக்கொண்டு தரையைப் பார்த்து உட்கார்ந்திருந்தாள்.

சாப்பிட்டுவிட்டு வாசலில் அந்த திவானை இழுத்துப்போட்டு உட்கார்ந்து வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தோம். பூர்ணா ஏதோ பேசணும்னாளே என்று ரத்னாவிடம் ரகசியமாகக் கேட்டேன்.

அவள் நாளைக்கு பேசறாளாம்... கேட்டேன்... உங்களுக்கு அதிலே என்ன அவ்வளவு ஈடுபாடு என்று அடக்கிவிட்டு ஊர் வம்பு பேச ஆரம்பித்தாள் சுமித்ராவோடு.

நான் எத்தனை மணிக்கு படுக்கைக்குப் போனேன் என்று தெரியாது. அரைகுறை தூக்கம் முழுசாகி உறங்கி முடிக்கக் காலை ஆறரை மணி.

சுமித்ரா கொஞ்சம் உரத்த குரலில் யாரையோ ஏதோ கேட்டுக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. அறைக்குள் இருந்து எட்டிப் பார்த்தேன். பீமா தம்பதி திவானுக்குப் பக்கமாக நின்றிருக்க, ஏதோ வாக்குவாதம்.

‘கார் இப்போ ஏன் வாங்கணும்னு கேட்டேன்... இருந்துட்டு போகட்டும்னீங்க... பிரிட்ஜ் ஏன்னு கேட்டேன்... இருந்துட்டு போகட்டும்னீங்க... இந்தப் பணம் எல்லாம் திரும்ப வராது’ சுமித்ரா குரல் அது.

‘அது வரணும்னு நான் எதிர்பார்க்கலே’ என்றான் பீமாராவ்.

‘நீங்க எதிர்பார்க்க மாட்டீங்க... தண்டச் செலவு செய்யற யாரும் அப்படித்தான்... ரத்னாகிட்டே கேட்டு பாருங்க இது அவசியமான்னு..’

அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு நாங்கள் இருந்த அறைப் பக்கம் பார்ப்பதைக் கவனித்துத் தலையை உள்ளே இழுத்துக்கொண்டேன்.

அவள் ரத்னாவைத் தேடுகிறாள். ஏதோ ஒரு விதத்தில் ரத்னாவின் துணை அவளுக்கு வேண்டியிருக்கிறது. ரத்னாவை எழுப்பணும். எங்கே போனாள்?

சமையலறை உள்ளே இருந்து எவர்சில்வர் தட்டில் வைத்த காப்பி டபரா டம்ளர்களோடு வந்து கொண்டிருந்தாள் அவள். தலை குளித்த பெண்.

பாஷாண்டியாக நான் அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்து, வெளியே இப்போது போகவேண்டாம் என்று முடிவு செய்து திரும்பப் படுத்தேன். ஏழு மணிவரை ஒரு நாளாவது தூங்கிப் பார்க்காவிட்டால் அது என்ன லீவ்? கொஞ்ச நேரத்தில் அடுத்த உறக்கம் எங்கே எங்கே என்று வந்து சேர்ந்தது.

‘சீக்கிரம் குளிச்சுட்டு வாங்க, வெளியே போகணும்’ என்றாள் ரத்னா.

என்ன ஏது எங்கே போகணும் யாரெல்லாம் போகணும் என்ற கேள்விகள் எல்லாம் அநாவசியம். ரத்னா கோரிக்கை விடுத்து, கேட்டு, ஆணையிட்டு நான் எப்போது முடியாது என்று சொல்லியிருக்கிறேன்?

அடுத்த ஒரு மணி நேரத்தில் அவல் உப்புமாவும் காப்பியும் வலிமை சேர்க்க நான் வெளியே புறப்படத் தயார்.

வாங்க, நடக்கலாம். ரத்னா சொன்னாள். ஆச்சரியத்தோடு பார்த்தேன். போகலாமா என்றபடி பூர்ணாவும் சேர்ந்துகொண்டான். அதிக ஆச்சரியப்பட்டேன்.

அகலமான தெருக்களும் எல்லாவிதமான சைக்கிள்களும் அபூர்வமாகத் தட்டுப்படும் தெருப்பெயர்ப் பலகைகளுமாக காலை நேரம் என்பதையே மறந்து இன்னும் ஓய்ந்து கிடந்தது கரோல்பாக். ஊரே அப்படித்தான் இருக்கும் என்று தோன்றியது.

இன்னிக்கு குரு ரவிதாஸ் ஜெயந்தின்னு லீவு... இல்லாட்டா இன்னும் நாலைஞ்சு பேர் போய் வந்துக்கிட்டிருப்பாங்க என்றாள் பூர்ணா, சிரிக்காமல்.

இது என்ன இடம்? ரத்னா கேட்டாள். கரோல் பாக் மார்க்கெட் என்று தெரிந்துகொண்டோம்.

கரோல்பாக் மார்க்கெட்டில் சுமங்கலி ஸ்டோர்ஸ் என்று கோணல் மாணலாகத் தமிழிலும், அச்சடித்ததுபோல் இந்தி, இங்க்லீஷிலும் பெயர்ப் பலகை வைத்த கடை வாசலில் நின்றோம் நானும் பூர்ணாவும்.

ரத்னா வழியெல்லாம் பார்த்துக்கொண்டு கொஞ்சம் மெல்ல நடந்ததற்கு புதுசாக வந்த ஊரைக் கவனித்துப் பார்ப்பது மட்டுமில்லை, தேக பலவீனமும் காரணம் என்று எனக்குத் தெரிந்தது.

என்ன செய்ய, என்னிடம் இன்னும் அதிகம் காசு இருந்தால், கவர்னருக்கு டெபுடியாகவோ ஷெரிஃபாகவோ இருந்திருந்தால் ஏரோப்ளேனில் அவளை இங்கே கூட்டி வந்திருப்பேன். ஒரு தடவையாவது ஐந்து பத்து நிமிஷமாவது ப்ளேனில் பறக்க அவளுக்கு ரொம்ப ஆசை என்று தெரியும்.

‘என்னங்க, குடுகுடுன்னு ஓடினா எப்படி நான் கூட வர்றது?’ ஜாக்கிரதையாக என்னை மட்டும் பார்த்துச் சொன்னாள் ரத்னா.

‘அம்மா, அப்பாஜியை ஒண்ணும் சொல்லாதீங்க. நான்தான் எப்பவும் நடக்கறபடி வந்துட்டேன்’ என்றாள் பூர்ணா.

‘நீ நடந்தா கூட நடப்போம், ஓடினா..’ நான் முடிப்பதற்குள் ரத்னா முந்திக் கொண்டாள். ‘கொழந்தை ஏன் ஓடணும், நான் என் புது கெடிலாக் கார்லே கொண்டாந்துவிட்டுடுவேன்… பார்த்துக்கிட்டே இருங்க.’

அவள் என்னைப் பார்த்த பார்வையில் ஏதோ அபத்தமாகப் பேசியிருக்கிறேன் அல்லது ஆரம்பித்திருக்கிறேன், அவள் வழக்கம்போல் தடுத்தாட்கொண்டாள் என்று புரிந்தது.

‘அம்மா, இதான் நம்ம தமிழ்க் கடை’ என்றாள் பூர்ணா.

கரோல்பாக் மார்க்கெட் சுமங்கலி ஸ்டோர்ஸில் முதல் பார்வைக்கு வரிசையாக பிள்ளையார் கோவிலில் நேர்ந்துகொண்டு சூரைத் தேங்காய் போடக்கொண்டுவந்து குவித்தமாதிரி தேங்காய்கள் பெரும் குவியலாகக் கண்ணில் பட்டன. தண்ணீர் வைத்த கும்பாக்களில் வெற்றிலை முழுக்க அமிழ்ந்திருந்தது. தமிழ்ப் பத்திரிகைகள் மெட்ராஸில் இருந்து பார்சலாக அனுப்பப்பட்டு தூசி உதிரும் ஷெல்ப்களில் ஓரமாக வெண்சாமரம் காவலுக்கு இருக்கக் காட்சியளித்தன. மனோன்மணி விலாஸ் தாரண வருஷத்துப் பாம்புப் பஞ்சாங்கம் மஞ்சள் அட்டையோடு அச்சடிக்கப்பட்டு பெரிய எழுத்தில் தென்பட்டது. மண்டை வெல்லம், வட்டுக் கருப்பட்டி, இட்லி மிளகாய்ப்பொடி, மோர்மிளகாய், மிதுக்க வற்றல், பொரிவிளங்காய் உருண்டை, ஸ்நான பௌடர், அரப்புத் தூள், மெட்ராஸ் 777 ரெண்டு நிமிஷ இட்லிக்கான பொடி, ஜாடிகள், தமிழில் வெங்கடேச சுப்ரபாதம் புத்தகம், விசேஷங்களுக்கான மந்திரங்களும் நடைமுறையும் போன்ற

புரோகிதர்களுக்கும், ஆபீஸ் அவசர அந்தண பிரம்மசாரிகளுக்கும் உதவியான கும்பகோணம் பிரசுரம் புத்தங்கள் என்று மெட்றாஸ் மாகாணத்துக்கே உரித்தான பொருள்கள் கம்பீரமாக இடத்தைப் பிடித்துக்கொண்டு இருந்தன. ஓரமாக ‘தேங்காய் அழுகியிருந்தால் பணம் வாபஸ் இல்லை’ என்றும் ‘ஹரித்வார், ரிஷிகேச யாத்திரை இவ்விடம் ஏற்பாடு செய்யப்படும்’ என்றும் ‘எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாடிய ரெகார்டு ‘காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே கிடைக்கும்’ என்றும் அட்டை போர்டுகள் விட்டத்திலிருந்து தொங்கின.

இத்தனையும் வைத்துக்கொண்டு எப்படியோ கடைக்காரர் உள்ளே கல்லாவில் இருக்கவும், வெளியே ஏழெட்டு வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் பிராமணக் கொச்சையில் தங்களுக்குள்ளும் கடைக்காரரோடும் பேசிக்கொண்டு நின்றார்கள். இட நெருக்கடி தெரியாத இடமாக அது இருந்தது. நான் ஷெல்பில் மேல் தட்டிலிருந்த பத்திரிகையை எடுத்தேன்.

செப்டெம்பர் 24 1944 தேதி வெளியான கல்கி கொஞ்சம் தாமதமாக அக்டோபர் பிறந்து கிடைத்தது. ஜி.என். பாலசுப்ரணியம் அட்டையில் இருந்ததைப் பார்த்துவிட்டுப் புரட்ட, கார்ட்டூனில் ஈவெரா பெரியார் திராவிடஸ்தான் திட்டத்தைப் பெட்டியில் வைத்துக்கொண்டு ஜனாப் ஜின்னா வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டிருந்தார்.

‘சார் வாங்கறதுன்னா படிங்கோ’ என்றார் கடைக்காரர் சிரித்தபடி. ‘வாங்கித்தான் படிக்கணும் சார்’ என்றேன்.

‘அங்கிள் சேர்த்தே பில் போட்டுடுங்க... எங்க அங்கிள் ஆண்ட்டிதான், மெட்றாஸ்லே இருந்து வந்திருக்காங்க’ என்றாள் பூர்ணா.

‘ஓ மெட்றாஸ்லேயிருந்து வந்திருக்கேளா, பேஷ் பேஷ் அங்கே என்ன பண்ணிண்டிருக்கேள்?’

பத்து பேருக்கு பொருள் எடுத்துக் கொடுத்து காசு வாங்கிப் போட்டுக்கொண்டு பிசினஸ் மும்முரமாக இருந்தாலும் என்னிடம் ஒரு பத்து வினாடி கேள்வி கேட்டு வரவேற்கிற அவருடைய பாணி பிடித்திருந்தது. கடையில் கூட்டம் குவிய இந்தத் தனிப்பட்ட கவனிப்பும் காரணமாக இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டேன்.

நான் சர்க்கார் சேவகன் என்று சொன்னதை இன்னும் நாலைந்து பேர் சுவாரசியமாகக் கவனிப்பார்கள் என்று நினைத்தேன். யாரும் சட்டை

செய்யவே இல்லை. தடுக்கி விழுந்தால் சர்க்கார் ஊழியர் இருக்கும் பட்டணத்தில் இன்னொரு மதறாஸி சர்க்கார் சேவகன்.

கடைக்காரர் மட்டும் ஊக்கமாக உதிர்த்தது இன்னொரு பேஷ் பேஷ். ரத்னா நீளமாக இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் இடைவெட்டிக் கேட்பது வழக்கம். அவள் பேசாமல் கவனித்துக்கொண்டிருந்தாள். கடையில் கூட்டம் இல்லாத அடுத்த ஐந்தாம் நிமிடம் அவள் கேட்டாள் –

‘சார், மெட்றாஸ்லே இருந்து கிளம்பற அவசரத்துலே ரேஷன் அரிசியும் ரேஷன் கார்டும் கொண்டுவர மறந்து போச்சு. கொஞ்சம் அரிசி கிடைக்குமா?’

அவர் கொஞ்சம் யோசித்தார்.

‘எத்தனை நாள் கெஸ்ட் ஆக வந்திருக்கேள் இவாத்துக்கு?’

‘மூணு நாள். என் தமையன்தான் பீமாராவ்.’

‘ஓ பேஷ் பேஷ்..’

‘இங்கேயும் ரேஷன் கறாரும் கண்டிப்புமாக நடப்பாக்கப்படுகிறதா?’ என்று விசாரித்தேன்.

‘எங்கேயும் அப்படித்தான் சார், லண்டன்லேயே அப்படித்தானாம் அஸ்கா சர்க்கரைக்கும் விஸ்கி ப்ராண்டிக்கும்...’ அவர் சிரித்தார். ‘விஸ்கி எல்லாம் வேண்டாம்’ என்று ரத்னா முகத்தைச் சுளித்தாள்.

‘நான் என்ன சொல்ல வரேன்னா, இங்கேயும் ஸ்ட்ரிக்ட்தான்... விறகு ரேஷன்கூட அப்படித்தான்... மெட்றாஸிலும் உண்டுதானே’

பின்னே இல்லாமலா? ஆனால் நாங்கள் மெட்றாஸில் இருந்து சப்ஜாடாக விறகு வாங்க டெல்லி வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டேன். இதற்கும் பெரிதாகச் சிரித்தார் அவர் ஏதோ காளிங்க ரத்தினம் காமெடி பார்த்த மாதிரி.

‘இங்கே ரேஷன்லே முக்கியமா கோதுமை போடுவா. இது தமிழ்ப் பிரதேசம்னு கோதுமையைக் குறைச்சுண்டு அரிசி தருவா... அரிசி வாங்கினதுலே சில பேர் இந்த அரிசி நம்ம ஊர் ஜீரகச் சம்பா மாதிரி இல்லே... பொலபொலன்னு வராம குழைஞ்சுடறதுன்னு ஏதாவது நொட்டச் சொல் சொல்லி அரிசி இல்லாட்டா பரவாயில்லே, கோதுமையே

எதேஷ்டம்னு இருந்துடுவா... அவா கொடுக்கற அரிசியை அவாளுக்கும் நஷ்டம் கம்மியா, ரேஷன் கார்ட் இல்லாம வாங்க உத்தேசிச்சவாளுக்கும் ரொம்ப செலவு வராமா, கொஞ்சம் மட்டும் கமிஷன் எடுத்துண்டு தரலாம்னு ஏற்பாடு. உங்களுக்கு எம்புட்டு அரிசி வேணும்?'

'ஒரு ரெண்டு இல்லே மூணு படி...' ரத்னா சொன்னாள்.

'அவ்வளவுதானே, இப்பவே வாங்கிண்டு போங்கோ... பத்து படி அதுக்கு மேலேன்னா ஏற்பாடு பண்ணியாகணும்... இது ஒண்ணும் பிரச்னை இல்லே.'

தமிழ்க் கடையிலிருந்து திரும்பும்போது ஸ்ரீவில்லிப்புத்தூர் பால்கோவா, டிஆரெஸ் குல்கந்து, மட்டிப்பால் ஊதுபத்தி வாங்கினேன். கல்கி வேறே.

'வீட்டுக்கு போகலாமா?' என்று கேட்டேன். 'கொஞ்சம் இருங்க, இன்னும் வேலை இருக்கு' என்றாள் ரத்னா.

'அப்பாஜிக்கு எப்பவும் அவசரம். இப்போ என்ன செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலே வேலைக்கா போகப் போறீங்க? வாங்கன்னா வாங்க, நில்லுங்கன்னா நில்லுங்க. இப்போ நடங்கன்னா நடங்க' பூர்ணா சொன்னாள்.

குருத்வாரா வீதி வழியாக நீளமாக ஒரு நடை. சைக்கிள் ரிக்ஷா ஒன்றிரண்டு கூடவே வந்து ரத்னா வேணாம் என்று சொன்னதைக் காதில் வாங்காமல் என்னைப் பார்த்து சாப், வாங்க என்று எனக்கு ஆசை காட்டின.

இந்த மாதிரி நேரங்களுக்கேயான அந்தப் பக்கம் இந்தப் பக்கம் திரும்பாமல், நேர்கொண்ட பார்வையோடு நான் மந்திரித்துவிட்ட ஆடாக இந்தப் பெண்களோடு போய்க்கொண்டிருந்தேன்.

ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறார்கள் இன்று வெளியே போவதையும் நடப்பதையும்.

அரிசி வாங்க இத்தனை சிரமம் எடுக்கவேண்டாம். ரெண்டு நாளைக்கு ரெண்டு விருந்தினர்கள், என்றால் ரத்னாவும் நானும், வந்ததால் வீட்டு அரிசி இருப்பு ஒரேயடியாகக் கம்மியாகப் போகாது. ஒரு சாக்கு அந்த சாக்கைச் சுருட்டி எடுத்து வர ராமோஜி ராவ் தேவை போல,

பூர்ணா நின்றாள். 'பார்க்கிலே கொஞ்சம் உட்கார்ந்துட்டுப் போகலாமா?'

'இது என்ன பார்க்?' 'கொக்கு பார்க்' என்று சிரித்தாள் பூர்ணா.

நான் திரும்பிப் பார்த்தேன். பச்சைப் பசேல் என்று மாம்பலத்தில் பனகல் பார்க் மாதிரி, அதைவிட அழகான மரம் நிறைந்த, புல்வெளி கூடிய, ஒரு பார்வைக்கு முக்கோணமாகத் தோன்றும் பூங்கா. வாசலில் கொக்கு சுதை உருவம் வைத்திருந்தது. சீதோஷ்ண நிலையும் அற்புதமானதாக இருக்க, வியர்ப்பும் குளிருமில்லாத ஸ்திதியில் இங்கே பத்து நிமிடம் உட்கார்ந்து வர மனசு கூப்பாடு போட்டது. அவர்களோடு பார்க்குக்குள் நுழைந்தேன்.

உள்ளே நடைபாதையை ஒட்டிப் போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சுகளை நிராகரித்துவிட்டு நாங்கள் உள்ளொடுங்கிய பாதையில் குழந்தைகள் ஊஞ்சல் அமைத்திருந்த இடத்திற்கு அருகே அமர்ந்தோம். ரத்னா பூர்ணாவின் கையை தன் கையில் வைத்துக் கொண்டு, ‘சொல்லுடா கண்ணா, நீ கேட்டபடி வந்தாச்சு...’ என்றாள். என்ன சொன்னாள் பூர்ணா? எப்போது? வழக்கம்போல் முழித்தேன்.

‘நேற்று பேசணும்னு சொன்னா இல்லையா. ராத்திரி தூங்கிட்டிருக்கும் போது கிட்டத்தட்ட ராத்திரி பனிரெண்டு மணிக்கு கதவிலே மெல்லத் தட்டிக் கூப்பிட்டு, அம்மா நாம் காலையிலே கரோல்பார்க் மார்க்கெட் போய்ட்டு வரலாமான்னு கேட்டா... எம்பொண்ணு கேட்டு எப்படி தட்ட முடியும்?’ ஆதரவாக பூர்ணாவின் தலையைத் தடவினாள் ரத்னா. சுமித்ரா பார்த்தால் என்ன நினைப்பாள் என்று நினைத்தேன்.

‘ஒண்ணும் இல்லே அம்மா, சும்மாதான் கூப்பிட்டேன்... வெளியே போகணும்னு நேத்து தோணிச்சு.’ பூர்ணா அவசரமாகப் பின் வாங்கினாள்.

‘இல்லேடா செல்லம், எதையோ இப்போ நீ மறைக்கறே... எதா இருந்தாலும் அம்மா கிட்டே சொல்லு. உன் வயசுக்கு என்ன பிரச்னை இருக்க முடியும்? ரெட்டை ஜடையா ஒத்த ஜடையா, குடிகூரா பவுடர் போட்டுக்கலாமா, சாண்டல் பவுடர் போடலாமா, வீட்டுலே இருக்கறபோது பாவாடை தாவணியா, சூடிதாரா... இப்படித்தான் வரும்... வேறே என்ன இருக்கமுடியும்?’

நான் பால்கோவா பாக்கெட்டை எடுத்துப் பிரித்தேன். ‘அருவதா சருவதா ஏதாவது அசை போடணும்...’, ரத்னா சொன்னதும் பூர்ணா அடக்க முடியாமல் சிரிக்க, நான் ஒரு பெரிய விள்ளல் பால்கோவா எடுத்து வாயில் போட்டுக்கொண்டு பாக்கெட்டை அவளுக்கும் ரத்னாவுக்கும் கொடுத்தேன்.

‘இது பால்கோவா. அசை போட முடியாது. வாயிலே கரஞ்சுடும், கேர்ள்ஸ்.’

‘எப்படி சின்னச் சின்னதா சண்டை உடனே சமாதானம், எல்லாத்துக்கும் ஓர் அன்பான சிரிப்புன்னு நீங்க ரெண்டு பேரும் இருக்கீங்க... ஏன் டாடியும் மம்மியும் அப்படி இருக்க முடியலே?’

‘அவங்களுக்குள்ள இதே மாதிரி சின்னச் சின்ன சண்டை வந்திருக்கும்... நீ பெரிய யுத்தம்னு தப்பா நினைச்சிருப்பே’ ரத்னா என்னைப் பார்த்தாள்.

‘டாடி வாங்கின காரைப் பத்தி என்ன நினைக்கறீங்க அம்மா?’ எத்தனையாவது தடவையாகவோ, பெரிய மனுஷிபோல் கேட்டாள் பூர்ணா.

‘நல்லாத்தான் இருக்கு’ என்றேன் நான்.

‘அதைச் சொல்லலே அப்பா, நமக்கு கார் வேணுமான்னு கேட்கறேன். பணம் ஏற்பாடு பண்ணி செகண்ட் ஹாண்ட்லே வாங்கிட்டு வந்திருக்கார். ப்ரிட்ஜுக்கு தவணை கட்டறார்... சம்பளத்துலே பாதி இது ரெண்டுக்கும் போகுது... காசு சேர்த்து வைக்க வேணாமான்னு அம்மா தினம் அவர்கிட்டே சணடை...’

நான் காலையில் பார்க்க நேர்ந்த புருஷன் பெண்ஜாதி வாக்குவாதத்தைப்பற்றிச் சொல்ல நினைத்தேன். வேணாம் அதைத் தெரிந்து அவளுக்கு என்ன ஆகப் போகிறது?

‘அப்பா தண்டச் செலவு. அம்மா, பணம் சேர்த்து என் கல்யாணத்துக்கு தயார் ஆகணும்னு நினைக்கறாங்க. ரெண்டு பேரும் நான் படிக்கணும், லைப்லே பெரியவளா வரணும்னு நினைக்கவே மாட்டேங்கறாங்க...’

கேட்டுக்கொண்டிருந்தோம் எதுவும் சொல்லாமல்.

‘போன மாசம் சண்டையிலே என்ன ஆச்சு தெரியுமா? அப்பா சொல்றார்... பணம் சேர்த்து வைக்க இன்னும் காலம் இருக்கு... அதது நேரம் வரும்போது செய்வேன்... அம்மா சொன்னாங்க... உங்களுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டி இருக்கு... நாம மதறாஸி – பஞ்சாபி கலப்புக் கல்யாண ஜோடி. நம்ம பொண்ணுக்கு உங்க வகையில் மாப்பிள்ளை கிடைக்குமா இல்லே சர்தார் மாப்பிள்ளையா ரெண்டும் கிடைக்காட்ட வேறு என்ன ஜாதி பையன்? தெரியுமா ?’

உனக்கு அதுக்குள்ளே என்ன கல்யாணம்? நான் படபடப்பாகக் கேட்டேன்.

அந்தக் குருத்துக்கு கல்யாணம் செய்து மாமியார் வீட்டுக்கு அனுப்பினால் ஆண்டவனுக்கே பொறுக்காது.

‘நீ படிம்மா... நான் படிக்க வைக்கறேன்.’

அவள் என்னை அணைத்துக்கொண்டாள். ‘உங்களை அம்மா அப்பாவா கிடைக்க கொடுத்து வச்சிருக்கணும்...’ அவள் கண்ணில் நீர் வழிந்தது.

‘பீமாகிட்டே நான் பேசட்டா... பீமா படபடன்னு ஏதாவது சொல்லிடுவான்... சின்னப் பிள்ளையிலே இருந்து அப்படித்தான். அப்புறம் தணிஞ்சு வருவான்’ ரத்னா சொன்னாள்.

என்ன இருந்தாலும் தன் தமையனைவிட்டுக் கொடுக்க மாட்டாள் தான்.

‘அம்மா, அவர் சொல்றார்... என்னை கட்டிக்க எத்தனையோ பேர் க்யூவிலே ரேஷன் கடை மாதிரி நிப்பாங்களாம்... சுயம்வரம் பண்ண வேண்டி வருமாம்... யாரும் வரல்லேன்னா மளிகைக்கடை அரைலூஸு ராஜாராவுக்கு என்னைக் கட்டி வச்சுடுவாராம்... அவனுக்கு என்ன குறைச்சல், ராஜா மாதிரி இருக்காங்கறார்...’

நாங்கள் சிரிக்க, அவள் அழ ஆரம்பித்து சட்டென்று அழுகையை நிறுத்தி அவளும் சிரிப்பில் கலந்து கொண்டாள்.

‘இதுதானா உன் பிரச்னை, இன்னிக்கே தீத்துடலாம்... அதுக்கு முன்னாடி இந்த முறுக்கை எடுத்து...’

நான் சுமங்கலி ஸ்டோர்ஸில் வாங்கிய முறுக்கு பாக்கெட்டை வெளியே எடுக்க, ரத்னா வெடுக்கென்று பிடுங்கி காக்கா உஷ் என்று மேலே கையைத் தூக்கி தனக்குப் பின்னால் பாக்கெட்டை மறைத்துக் கொண்டாள். நான் பரிதாபமாக பூர்ணாவைப் பார்க்க அடுத்த சிரிப்பு.

‘வீட்டுலே இருக்கற நேரம் எல்லாம் சண்டை சச்சரவு... சத்தம்... இப்படியே போய்ட்டு இருக்கும்மா... நரகம் மாதிரி தெரியுது. இந்த ராஜாராவ் இடியட் ஸ்கூல் வாசலுக்கு சைக்கிள்லே வந்து பின்னாலே ஏறிக்கோ வீட்டுலே விட்டுடறேன்ங்கறான்... போடா முட்டாளேன்னு திட்டி அனுப்பினேன்...’

‘அவன்கிட்டே பேசி உன் பக்கமே வராம இருக்கச் செய்ய நானாச்சு...’

ரத்னா முறுக்கை ஒரு கடி கடித்து என்னிடம் நீட்டினாள். பூர்ணா பாய்ந்து பிடுங்கிக்கொண்டு கடித்துவிட்டு மிச்சம் ஓர் இழையை என்னிடம்கொடுத்தாள். ‘போதும் அப்பா தொப்பை இன்னும் ஜாஸ்தியாயிடும்’ என்று எச்சரிக்கை வேறு.

‘சீன்னு போய் மெட்றாஸுக்கு உங்க வீட்டுக்கு ரயில் ஏறி வந்து அங்கேயே இருந்து ஸ்கூல் முடிச்சு காலேஜ் முடிச்சு டாக்டர் ஆகி உங்களுக்கு செலவான தொகை எல்லாம் கொடுத்திட்டு சந்தோஷமா மெட்றாஸ்காரியாயிடலாம்னு திட்டம் போட்டேன்... இங்கே முடியலே, மெட்றாசிலேயாவது எனக்கு சைக்கிள்லே ஊர் பூரா போகணும்னு ஆசை... டாடி நான் கீழே விழுந்து அடிபட்டுடுவேன்னு வாங்கித் தரமாட்டேங்கறார்... அம்மா அவரை சப்போர்ட் பண்றது இந்த ஒரு விஷயத்திலேதான்... உங்க வீட்டுக்கு வந்தா வராதேன்னு சொல்ல மாட்டீங்களே?’

பக்கென்று இருந்தது எனக்கு. ரத்னா முகத்திலும் பயம் எட்டிப் பார்த்தது. இந்தப் பிஞ்சு தனியாக ரயிலில் வந்து எங்களோடு...

‘ஏண்டா உன் வயசுக்கு அதிகம்டா... ரயில்லே யார்யாரோ வருவாங்க... உன் மாதிரி ஒரு சின்னப் பொண்ணு தனியாக வரது ரொம்ப ஆபத்தானது...’ என்றாள் ரத்னா.

‘ஆமா, மெட்றாஸிலே எங்க வீட்டுக்கு எப்படி வருவே? ரெண்டு வருஷம் முந்தி வந்திருக்கேதான். ஆனா அப்போ இன்னும் சின்னப் பொண்ணு... எப்படி எந்தப் பேட்டையிலே எந்தத் தெருவிலே எந்த வீடுன்னு தெரியும்?’ நான் கேட்டேன்.

‘அதான் எனக்கு ஏதோ தண்ணி ஊத்தற சடங்குன்னு அப்பா அம்மா இன்விடேஷன் அனுப்பினாங்களே... அதுலே உங்களுக்கு போட்ட கார்டிலே உங்க அட்றஸ் இருந்துச்சு... எடுத்து ஹிஸ்டரி நோட் புக்குலே பின் பக்கம் எழுதிக்கிட்டேன்... அப்போ அப்போ அப்பா பானிபூரி சாப்பிட கொடுக்கற ஒரு ரூபா, ரெண்டு ரூபாயைச் சேர்த்து வச்சு ஐம்பது ரூபா கைச்செலவுக்கு இருக்கு.’

மலைத்துப் போனோம் நானும் ரத்னாவும். அந்தப் பெண் போன வாரம் கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸில் மதறாஸ் வர, பகட்கஞ்சில் டெல்லி ரயில்வே ஜங்ஷனுக்குத் தனியாக வந்திருக்கிறாள்... வாரம் மூன்றுநாள்தான் ரயில் ஓடும் என்றும் அன்றைக்கு கிடையாது என்றும் தெரிந்து ஏமாற்றத்தோடு இதே பார்க்கில் இதே பெஞ்சில் சாயந்திரம் வரை உட்கார்ந்து இருந்துவிட்டு வீடு போயிருக்கிறாள். அவள் சொல்லச் சொல்ல நம்பவே முடியாமல் கேட்டுக்கொண்டிருந்தோம்.

அந்த சஷி, இவள் தோழி, இவள் ஸ்கூல் மட்டம் போட்ட அன்றைக்குத்தான் இவளைத் தேடியிருக்கிறாள் என்று புரிந்தது. நல்ல

வேளை, ரயில் ஓடவில்லையோ இவள் பயணம் வைக்கவில்லையோ... ஈஸ்வரனுக்கு நமஸ்காரம்...

'நான் இன்னிக்கே பேசறேன் சுமித்ரா கிட்டேயும் பீமா கிட்டேயும் என்றாள் ரத்னா.

பூர்ணாவிடம் நான் சொன்னேன் –

'நீ இங்கேயே டாக்டர் படிக்கப் போறே... அதுக்கு நானாச்சு முயற்சி எடுக்கறது... முடியாதுன்னு யாரும் சொல்லட்டும் பார்த்துக்கறேன்...'

'என்ன பண்ணுவீங்க?' என்றாள் ரத்னா கேலியாக.

'நான் இவளைக் கூட்டிப்போய் நம்ம மகளா வளர்த்து காலேஜ்லே எம்.ஏ. இங்க்லீஷ் படிக்க வச்சு, கோட்டையிலே பென்ஷன் இலாகாவிலே சூப்பரிண்டெண்ட்டெண்ட் ஆக்குவேன்.'

'ஐயோ அதெல்லாம் வேணாம் போர்' என்று கலகலவெனச் சிரித்தாள் பூர்ணா.

'சரி, வந்ததுக்கு நல்லதா ஒரு காப்பி குடிக்கலாமா?' ரத்னா கேட்டாள்.

'எங்கே?' என்றேன்.

'என் பின்னாலே வாங்க... கேள்வியெல்லாம் கேட்கப்படாது..' என்றபடி, பூர்ணாவைப் பார்த்துச் சொன்னாள் – 'டாக்டர், கன்னாட்ப்ளேஸுக்கு எங்களை கூட்டிப் போங்களேன், ப்ளீஸ்.'

'இந்த பஸ்தான். வாங்க அம்மா.'

பூர்ணா, வந்துகொண்டிருந்த பஸ்ஸைக் கைகாட்டி நிறுத்தினாள். கன்னாட் ப்ளேஸ் போகும் வண்டி அது என்று எழுத்துக்கூட்டி இந்தி மட்டுமே ஆன அறிவிப்புப் பலகையைப் படிப்பதற்குள் பஸ் கன்னாட் ப்ளேஸ் போய்விட்டது.

மெட்றாஸ் ஹோட்டல் என்று பெயர் பொறித்திருந்த ஹோட்டலுக்குள் போனபோது வலிந்து சென்னை சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சி செய்திருப்பதைக் கண்டேன்.

டி.என். ராஜரத்தினம் பிள்ளை வாசித்த யோசனா கமல லோசனா என்ற தர்பார் ராக க்ருதி நாகஸ்வர சங்கீதமாக கிராமபோனில் கேட்டுக்கொண்டிருந்தது.

வாசலில் வீட்டு விசேஷத்துக்கு வருகிறவர்களை வரவேற்பதுபோல், செண்ட் கொட்டிய சந்தனப் பவுடரை சந்தன பேலாவில் கரைத்து வைத்து, பூசிக்கொள்ளச் சொல்லி அழைத்தவர் முதலாளியாக இருக்கக் கூடும்.

நீர்த்த சாம்பாரை கும்பா கும்பாவாகக் குடித்துக்கொண்டிருந்த சர்தார்ஜிகள் அது அலுக்கும்போது ஒரு விள்ளல் தோசையை ரொட்டி மாதிரி இரண்டு கையாலும் பிய்த்து எடுத்து வாயிலிட்டு மென்றது கண்ணில் பட்டது.

அநேகமாக எல்லோரும் முரட்டு ஜிப்பாவும், பட்டை ப்ரேம் மூக்குக் கண்ணாடியும், அளவாகக் கத்தரித்த தாடியுமாக பத்திரிகைக்காரர்கள் போல் தோன்றிய ஒரு சிறு கூட்டம் சுவாரசியமாக மெட்றாஸ் ரேஷன் நிலைமைபற்றி இட்லி சட்னியோடு நிதானமாக அலசிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது.

ரத்னா ஏற்கெனவே டெல்லியில் இங்கெல்லாம் வந்திருப்பவள்போல் தோன்றியது. அவள் இந்தி என் இந்தியைவிட ஊருக்குப் பொருத்தமான பஞ்சாபி சாயலோடு இருந்ததைக் கவனித்தேன்.

ஆளுக்கு ஒரு சாண்ட்விச்சும் பில்டர் காப்பியும் வாங்கிக் கொண்டோம். ‘அடுத்து என்ன, ஐஸ்கிரீமா?’ என்று சீண்டினேன். ‘ஆமான்னா என்ன பண்ணப் போறீங்க? இல்லேன்னா என்ன பண்ண போறீங்க?’

நானே அவள் பதிலையும் சொல்லிவிட்டேன். பேஷ் பேஷ் என்று இரண்டு பெண்களும் கரோல்பாக் தமிழ்க் கடைக்காரர் குரலில் சிலாகித்தார்கள்.

பூர்ணா தலையை சரியாக வாரிட்டு வரேன் என்று பாத்ரூம் போனபோது ரத்னா என்னிடம் சொன்னாள் –

‘பூர்ணாவுக்கு நாமகொண்டு வந்த ரெண்டு பவுன் செயினோடுகூட வெள்ளியிலே சாமி படம் வாங்கித் தரலாம்னு நினைச்சேன்...’ செய்யலாமென்றேன்.

பூர்ணா வந்தபடி கேட்டாள் – ‘அப்பா குல்ஃபி சாப்பிடறீங்களா?’

‘முதல்லே வெள்ளிப் பாத்திரக்கடை... ராஜாராம் சில்வர்ஸ்பற்றி சுபாங்கி அம்மா சொல்லி விட்டிருக்காங்க...’, ரத்னா கிளம்பினாள்.

பக்கத்திலேயே இருந்த கடை அது. காலை நேரம் என்றாலும் பரபரப்பாக வெள்ளிப் பாத்திரமும் பரிசுப் பொருளும் விற்கும் இடம் என்று தெரிந்தது.

‘என்ன வேணும் மேம்சாப்?’ அந்த இடத்துக்கு அவ்வளவாகப் பொருந்தாத கதர்ப் புடவையில் இருந்த விற்பனைப் பெண் கேட்டாள்.

சரஸ்வதி. ரெண்டு பேரும் ஏக காலத்தில் சொன்னோம்.

‘என்ன விலை?’ என்று கேட்டாள் பூர்ணா. பூஜையில் வைக்கும் படங்கள் ஐம்பது ரூபாய் விலை என்று தெரிய வந்தது. பூர்ணா தன் பர்ஸைத் திறந்து மூடினாள்.

‘குட்டி கிருஷ்ணன் தவழற படமும் ஒண்ணு கொடுங்க... மெட்றாஸ் வீட்டிலே பூஜையிலே வைக்கணும்...’

பூர்ணா சொன்னாள். அவள் சிரிப்பு ரம்மியமாக இருந்தது.

★★★

**ஒன்பது**

# ராமோஜி, ரத்னா காதல் அரும்பிய 1935 கும்பகோணம்

1944 –ல் இது.

எல்லாம் காபி பில்டரில் ஆரம்பித்தது.

போன ஞாயிற்றுக்கிழமை ரத்னாவோடு மாம்பலம் போக வேண்டி வந்தது. அங்கே பாத்திரக்கடையில் புது காபி பில்டர் ஒன்று வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். வைத்துப் புழங்கும் காபி பில்டரில் எந்தக் குறைபாடும் இல்லை என்பதோடு, அந்தப் பித்தளை பில்டர் சேர்த்துத் தரும் காப்பிக்குத் தனியான உலோக ருசியையும் வாசனையையும் கம்பீரமாகக் கலக்கிறது என்பது நிஜம். சுடச்சுட அதிலிருந்து டிகாஷன் வடித்தெடுக்கும்போதே காப்பி மகா உற்சவம் களைகட்டி விடும்.

காபி பில்டரில் இல்லாத பிரச்னை எங்களுக்குத்தான். புருஷன் பெஞ்சாதிக்கு இப்போது காப்பிக்குடி மும்முரம். காந்தியையும் நேருவையும் பிரிட்டிஷ் சர்க்கார் கைது செய்த பிறகு, காங்கிரஸ் கட்சியின் ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டம் எல்லாப் பக்கமும் அலைபாய்ந்து கொண்டிருப்பதுபற்றி ஆதூரப்படவும், யுத்தத்தில் நேச நாடுகள் ஜெயிப்பதற்கான சாத்தியம்பற்றி யோசிக்கவும் கூடுதல் காப்பி குடிக்க வேண்டி இருக்கிறது.

போன காப்பி பால் கொஞ்சம் நீர்க்க இருந்தது… இன்னொன்னு கள்ளிச்சொட்டு பால் வைத்து காபி… இப்படி காரணம். மாதர் சங்க கூட்டத்துக்குப் போவதற்கு முன் முஸ்தீபாக காபி என்ற அளவில் காபி பைத்தியம் முற்றிப் போனது. சங்கக் கூட்டம் என்று ரத்னா தொடங்கும்போது அது பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமையாகத்தான் இருக்கும். நான் அவர்களுடைய கூட்டத்தில் பங்குகொள்வதில்லை என்றாலும் உள்ளே இருந்து ஒருமுறை வெளியே வந்து அனைவரையும் நமஸ்கரித்து காப்பி சாப்பிடறீங்களா என்று கேட்பேன்.

காப்பிக்கு எந்தப் பொழுதும் அகாலம் இல்லை. யாராவது தனியாகவோ, கோஷ்டி சேர்த்துக்கொண்டோ வீட்டுக்கு வந்தால், காப்பி சாப்பிடலாமே

என்று ரத்னா சொன்னால் உடனே சமையல் கட்டில் காபி சேர்க்க அவசரமாகப் போவேன்.

ஆளுக்கு நாலு மிடறு காபி தரும் விதமாக சின்ன தம்ளர்களை வாங்கி வைத்திருக்கிறோம். உபசரித்த மாதிரியும் இருக்கும், வீணாகாமல் சிக்கனம் பாராட்டி யுத்த காலத்துக்கான சர்க்கார் ஆதரவு சேவை புரிந்த மாதிரியும் இருக்கும். இத்தனை பேருக்கு காப்பி விளம்பும் சாக்கில் நானும் ரத்னாவும் இன்னொரு தடவை காப்பி சாப்பிடவும் முடியும்.

ஆனாலும், டிகாஷன் தயாரிக்க எங்களிடம் இருக்கும் நாள்பட்ட பில்டர் போதாது. கப்பியை எடுத்துவிட்டு அலம்பி துடைத்து அடுத்து டிகாஷன் மறுபடி எடுக்க புது காப்பிப் பொடி போட்டு வென்னீர் ஊற்றும் காரியம் ஒரு நாளைக்கு எத்தனை தடவை நடத்துவது?

பில்டரில் தினம் குறைந்தது மூன்று தடவையாவது புதுப்பொடி நிறைத்து முதல் டிகாக்ஷன் காப்பி போட்டுக் குடிக்க வேண்டியுள்ளது. கொஞ்சம் பெரியதாக, ஓட்டல்லே இருக்கறமாதிரி ஒரு பில்டர் வாங்கினால் என்ன?

புது பில்டர் மட்டுமில்லை, பத்திரிகையில் சதா விளம்பரம் வரும் ருக்மிணி குக்கர்கூட என்ன மாதிரி சாதனம் என்று பார்த்து வர இஷ்டம்தான். புது மாம்பலத்தில் கம்பவுண்டரைப் பார்க்கப் போகும்போது நானும் வரேன் என்றாள் ரத்னா. அதேபடி வந்து மருந்து வாங்கியானது. இனி காபி பில்டர்.

கடைவீதியில் இரண்டு கடையில் பில்டர் பார்த்துவிட்டு திருப்திப் படாமல் எலக்ட்ரிக் ரயில் பிடித்து பார்க் டவுன் போக ஒரு குறுகிய தெருவில் நடந்தபோது ரத்னா கண்ணில் பாத்திரக்கடை பட்டது.

புது மாம்பலத்தில் ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே கிட்டத்தட்ட அக்ரஹாரமாக ரங்கநாதன் தெரு என்ற குறுகிய ஒரு வீதி உண்டென்பதை அந்தப் பக்கம் போய்வரும் சிலரும் கூட கவனிக்காது போயிருக்கலாம்.

வரிசையாக சின்னதும் பெரிசுமாக வீடுகள். பழைய மாம்பலத்தை விட கொஞ்சம் நீளமாக, வாசலில் திண்ணை, சைக்கிள் நிறுத்த இடம் என்று வீடு தோறும் இருக்க, வாசலில் கோலம் போடத்தான் இடம் போதாது. ஏழெட்டு பேர் ஒரு வரிசையில் நடந்தால் தெரு அடைத்துக் கொள்ளும் அளவு அகல வாட்டில் சின்னத் தெரு.

ரயிலேற மாம்பலத்தில் இருந்து நடந்துவரும் தெரு முழுக்க காய்கறிக்கடைகள் மும்முரமாக இயங்கும். அதேபோல் இந்த புது மாம்பலத்

தெருவும், சீக்கிரமே, புது மாம்பலத்து வாசிகள் ரயில் பிடிக்க நடந்து போவது அதிகரிக்கும்போது பரபரப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அது சீக்கிரம் நிகழும் என்று அனுமானம் செய்து தெரு வீடுகள் இரண்டில் திண்ணையை இடித்துத் தள்ளி அந்த இடத்தில் ஒரு புத்தகக் கடையும் இன்னொன்றில் பாத்திரக் கடையும் ஆரம்பித்து விட்டார்கள்.

நான் வாரம் ஒரு தடவை புது மாம்பலத்துக்குப் போகிறேன். மீசை டாக்டரின் கம்பவுண்டரைச் சந்தித்து டாக்டர் எழுதிக் கொடுத்தபடி ரத்னா பாய்க்கு மருந்து கலந்து வைத்திருப்பதை வாங்கி வரத்தான் இந்தப் பயணம்.

போகும்போதெல்லாம் இந்தக் கடைகளில் பெருங்கூட்டம் இல்லா விட்டாலும் யாராவது ஒன்று இரண்டு பேராவது நிற்பதைப் பார்த்திருக்கிறேன். ரயில் பிடிக்க புது மாம்பலத்தில் இருந்து போகிறவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறதையும் பார்க்கிறேன்.

ரயிலுக்குப் போகிறவன் இங்கிலீஷ் டு தமிழ் மொழிபெயர்ப்பு டிக்ஷனரி வாங்குவான் என்றோ போகிற வழியில் ஒரு ஜோடுதவலை வாங்கிச் சுமந்து போவானென்றோ எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் எங்கே வாங்கலாம் என்று யாராவது கேட்டால் அவன் நினைவில் நிச்சயம் இந்த வீட்டு முகப்புக் கடைகள் பத்திரமாக இருக்கும்.

புது மாம்பலம் பாத்திரக்கடை வெளியில் இருந்து பார்த்ததைவிட உள்ளே நீளமாக இருந்தது. பெரிய கடைகளைவிடக் குறைவுதான் என்றாலும் கடைக்குள் வைத்திருந்த வெங்கலப்பானை, அடுக்கு, குடம், தவலை, போகிணி, டபரா செட், உருளி என்று பாத்திரங்கள் லட்சுமிகரமாக வீட்டுச் சூழ்நிலையை பிரதிபலித்துக்கொண்டிருந்தன. நவராத்திரி கொலு வைத்தது போல் அவற்றை அழகான மரப்படிகளில் வைத்திருப்பது மனதில் பதிந்தது.

ரத்னா ஒரு கச்சேரி ரசிகனின், ரசிகையின் சங்கீத ஈடுபாட்டோடு, ஒவ்வொரு பாத்திரமாக எடுத்து நோக்கித் திரும்ப வைத்து முன்னே போய்க்கொண்டிருந்தாள். அது அவள் வழக்கம்.

பாத்திரக் கடைக்குள் வந்து ஒரு மணி நேரம் கழித்து தேடி வந்த பாத்திரம் இல்லை என்று திரும்பவும் சங்கடப்பட மாட்டாள் ரத்னா. வந்ததற்காக சின்ன எவர்சில்வர் கிண்ணம், ஸ்பூன் என்று அப்போது ஏதாவது வாங்குவது உண்டு.

ஒரு தடவை திருச்சி மலைக்கோட்டை பிள்ளையார் கோவிலுக்குப் போய்விட்டு சின்னக்கடைத் தெருவில் ‘எவர்சில்வர், வெங்கலம், பித்தளை, அலுமினியப் பாத்திரங்கள், இதர இரும்பு ஜாமான்கள் நயமான விலைக்குக் கிடைக்கக் கூடும்’ என்று எல்லா ரகத்தையும் அடக்கி விளம்பர போர்ட் நிறுத்திய கடையில் பாதாளக் கரண்டி வாங்கவேண்டும் என்று நுழைந்து விட்டாள் ரத்னா. ‘மெட்றாஸிலே கிடைக்கலே, இங்கே இருக்கான்னு பார்க்கலாம்.’

பாதாளக் கரண்டி என்றால் என்ன என்றே, கூட்டம் இல்லாத காலை நேரத்தில் கடையை பத்து நிமிஷம் பார்த்துக்கொள்ள கடைக்காரர் நிறுத்திப் போன கடைப்பையனுக்குப் புரியவில்லை. அவன் இருக்கிற கரண்டிகளை எல்லாம் ஒவ்வொன்றாகக் காட்ட, இதுவும் வேண்டாம் என்று ஒதுக்கினாள்.

‘பாதாளக் கரண்டின்னா கரண்டி இல்லே, பாதாளம் வரை போகவும் போகாது’ என்று விளக்க உரை கொடுத்து அந்தப் பையனை இன்னும் குழப்பினாள்.

‘உங்க வீட்டிலே கிணறு இருக்கா?’ என்று அடுத்து அவள் கேட்க, அவன் ரத்னாவைப் பார்த்த பார்வையில் ‘பார்க்க லட்சணமா இருக்காங்க இந்த அக்கா பாவம் இப்படி’ என்று வருத்தம் தட்டுப்பட, நான் கண்டேன் ஓரமாக ஓய்வெடுத்துக்கொண்டிருந்த பாதாளக் கரண்டியை.

‘இதுவா, கேணியிலே பாத்திரம் விழுந்துச்சுன்னா எடுக்கறதுக்கு’ என்றான் அவன் சுதாரித்துக்கொண்டு. ‘பேரு என்ன இதுக்கு?’ என்று ரத்னா கேட்டாள். ‘தெரியாதுங்க’ என்றான். ‘அப்புறம் எப்படி விக்கறே?’ என்று விடாமல் அடுத்த கேள்வி. ‘தெரியாட்ட உங்க சார் மாதிரி அவங்களே தேடி எடுத்துடுவாங்க’ என்று சாமர்த்தியமான பதிலை அவனும் சளைக்காமல் சொன்னான். ‘இன்னொரு நாள் வந்து வாங்கறேன்’ என்று அவள் கடையைவிட்டு வெளியே வர, சரிம்மா என்று கடைக்காரர் குரல் ஆதுரத்தோடு ஒலித்தது கேட்டது.

இன்னொரு தடவை அடுக்கு செட் வாங்க கூட்டம் அதிகம் மொய்க்கும் மைலாப்பூர் மாடவீதிக் கடையில் நுழைந்து தேடி, அரை மணி நேரம் கழித்து உள்ளங்கையில் வைத்துக்கொள்ளத்தக்க சின்ன எவர்சில்வர் தட்டோடு வந்து பில் போடச் சொன்னாள்.

‘பில் எல்லாம் வேணாம்மா... கடை விளம்பரத்துக்கு தந்ததா இருக்கட்டும்... எடுத்துக்குங்க’ என்றார் கடைக்காரர்.

இப்படி வாழ்க்கையில் சில மணி நேரங்களை பாத்திரம் பண்டம் வாங்குவதில் செலவழித்தாலும் புது மாம்பலம் கடையில் காப்பி பில்டர் வாங்க அவள் ஐம்பத்தைந்து நிமிடம் மட்டும் எடுத்துக் கொண்டது அரிய சம்பவமாகும்.

‘ரொம்ப அழகா இருக்கில்லே’ என்று திருப்பித் திருப்பிப் பார்த்தபடி அதை பேப்பரில் கட்டித் தரவேண்டாம் என்று சொல்லி விட்டாள். என் ஜோல்னாப்பையில்கொண்டு வருகிறேன் என்று சொன்னாலும் கேட்காமல் வேறே துணிப்பையை எடுத்து வந்து அதில் போட்டுக்கொண்டு போக முற்பட்டாள்.

கடைக்காரர் உடனே ரத்னா ஸ்டோர்ஸ் என்று கடைப்பெயர் எழுதிய விளம்பரப் பையை உள்ளே இருந்து எடுத்து பெருமையோடு நீட்டினார்.

‘அட இதுவும் ரத்னாவா!’ என்று நான் கேட்க, ‘வேறே யார் ரத்னா?’ என்று அவர் புரியாமல் கேட்டார். ‘நான்தான்’ என்றாள் உச்சகட்ட பெருமையோடு ரத்னா. ‘நல்லா இருங்கம்மா, நம்ம கடையிலே இன்னிக்கு வியாபாரத்தை ஆரம்பிச்சு வச்சிருக்கீங்க. உங்க கைராசி நல்லா வரட்டும்’ என்று மங்கல வார்த்தை சொல்லி பத்து பெர்செண்ட் தள்ளுபடி செய்து பில் போட்டார். ஒரு சீப்பு மலை வாழைப்பழமும் கூடவே வெகுமதியாகக் கொடுத்து அனுப்பினார் அவர்.

நடக்கும்போது காப்பி ஃபில்டரைக் காட்டிச் சொன்னாள் ரத்னா – ஒவ்வொரு வெட்டிங்டேக்கும் ஒரு பாத்திரம் வாங்கறதை செண்டிமெண்டா வச்சிருக்கேன். இந்த வருஷம் இது. அடுத்த வருஷம் பொழச்சுக்கிடந்தா, ருக்மணி குக்கர்...

நான் சிரித்தபடி நடந்துவந்தேன். ஒரு காப்பி பில்டரை மட்டும் பரிசாகக் கொடுத்துக் கொண்டாடும் சாதாரண தினமா அது?

‘டீயிலே ஆரம்பிச்ச இந்த உறவை காப்பியோடு கொண்டாடறோம் இப்போ’ என்றேன்.

‘ஒரே நேரத்திலே ரெண்டு பேரும் நினைச்சுப் பார்க்கலாம்.’

எலக்ட்ரிக் ட்ரெயினில் போகும் போது அவளிடம் சொன்னேன். ‘அதற்கென்ன’ என்றாள்.

ஸ்டார்ட் சொன்னேன்.

ஒன்பது வருஷம் முந்தி, 1935-இல்...

★

1935-இல் இது

கும்பகோணத்தில் மெட்றாஸ் திருச்சி பாசஞ்சர் ராத்திரி ஒன்பதரை மணிக்கு வந்து சேர்ந்தது. தலையில் ட்ரங்க் பெட்டியைத் தூக்கி வைத்துக்கொண்டு நடந்து போன இரண்டு பேரையும், என்னையும் தவிர கும்பகோணத்தில் உதிர்த்துப்போக ரயிலுக்கு வேறே யாரும் இல்லை.

ஊரடங்கு உத்தரவு போட்ட மாதிரி ரயில்வே ஸ்டேஷன் ஆள் அரவமின்றிக் கிடந்தது. ரயில் விளக்கோடு நீள நடந்து வந்தவர் ஸ்டேஷன் மாஸ்டர்தான்.

'ரயில்வே ஸ்டேஷன்லே கேட்டா சொல்வாங்க, துக்காம்பாளையத் தெருன்னு கேட்கணும்...' எங்கே போகணும் என்று எனக்கு இப்படித்தான் சுருக்கமாகத் தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. 'மகாமகக் குளத்தோடு போய்' என்று கொசுறு.

ரயில் நீளமாக நீராவிப் பெருமூச்சுவிட்டு சிரம பரிகாரம் செய்து கொண்டிருக்க, ப்ளாட்பாரத்துக்கு இரண்டு இளைஞர்கள் ஓடி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

ரயிலுக்குப் பச்சை விளக்கு காட்டிக் கிளம்பச் செய்வதற்கு தயாராக இருந்த ஸ்டேஷன் மாஸ்டரிடம், அவர் ரயிலை வழியனுப்பியதும் துக்காம்பாளையத் தெரு என்று கேட்க நினைத்துக் காத்திருந்தேன். அவர், 'வாங்கோ கோபு அவா வரலை போலிருக்கே' என்றார் வந்தவர்களில் ஒருவரிடம்.

'எப்படி சார் இல்லாமல் போகும்' என்று இரண்டாவது இளைஞன் பரபரப்போடு ரயிலைப் பார்க்க, ஓர் இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்ட் கதவு திறந்தது. பச்சைப் பட்டுப் பாவாடையும், கறுப்பு ரவிக்கையும் மஞ்சள் தாவணியுமாக தலை நிறைய மல்லிகைப் பூச்சரம் அலங்காரமாக அணிந்து, ஓர் இளம்பெண் இறங்கினாள். அடுத்து அவள் ஒரு மத்திய வயதுப் பெண்மணியை ஜாக்கிரதையாகக் கைபிடித்து இறக்கிவிட்டதையும் கவனித்தேன்.

'கோபு வந்துட்டியா, நல்லதா போச்சு... கொஞ்சம் கண் அசந்துட்டேன்... அதுக்குள்ளே கும்மோணம் வந்துடுச்சு.' - அந்த அம்மாள் கொஞ்சம் சத்தமாகச் சொன்னாள்.

‘இதுதான் என் தம்பி மகள்... கங்கா சொல்லியிருப்பாளே... இவங்க வீட்டுக்குத்தான் இச்சலகரஞ்சியிலே ஒரு வாரம் போகவேண்டியிருந்தது...’ அந்தப் பெண்ணைச் சுட்டிக்காட்டிச் சொன்னாள் அவள்.

‘ரத்னாதானே?’ கோபு என்ற இளைஞன் என் பொறாமையைத் தூண்டியபடி அந்த தேவதைப் பெண்ணிடம் விசாரித்தான். ஆமா என்று அவனுக்கு சிறு புன்னகையைப் பதிலாக்கி அவள் நேரே பார்த்தபடி நடந்து போனாள்.

‘என்ன சார் வேணும்?’

ஸ்டேஷன் மாஸ்டர் கொஞ்சம் அயர்வோடு என்னிடம் கேட்க, ‘சார் துக்காம்பாளையத் தெருவுக்கு எப்படிப் போகணும்?’ என்றேன்.

‘வெளியிலே ஜட்கா வண்டிக்காரன் யாரைக் கேட்டாலும் சொல்வானே... எட்டணா கொடுத்தா கொண்டுபோய் விட்டுடவும் செய்வான்... ஒண்ணு செய்யுங்கோ... அதோ போறாளே, அவா கூடப் போங்கோ, அங்கேதான் போறா’ என்றபடி ரயில் விளக்கை வைத்துவிட்டு ஆபீஸ் உள்ளே போனார்.

போகும்போது ஒரு தடவை சார் என்று உரக்கக் கூப்பிட்டு கைகாட்ட, கோபுவோடு வந்த இளைஞர் நின்றார். போங்கோ என்றார் ஸ்டேஷன் மாஸ்டர் என்னிடம். வழி காட்டிய உதவிக்காக அவர் வீட்டுத் தோட்டத்தில் கத்தரி சாகுபடி செய்து களையெடுத்து இலவசமாகப் பறித்துக் கூடையில் நிரப்பிக் கொடுப்பேன், அவர் வீட்டில் தோட்டம் இருந்தால்.

‘என்ன வேணும் சார்?’ அந்த யுவர் என்னிடம் விசாரித்தார்.

‘என் பேரு ராமோஜி.’

‘சொல்லுங்க.’

‘துக்காம்பாளையம் தெருவுக்குப் போகணும். ஸ்டேஷன் மாஸ்டர் கிட்டே கேட்டேன்... அவர் உங்களோடு...’

‘தாராளமா வாங்க... கஷ்டம் ஒண்ணும் இல்லே... லேடீஸ் ஒரு வண்டியிலே போகவும் நானும் கோபுவும் போக இன்னொண்ணுமா ஏற்பாடு செஞ்சோம்... அதை செய்யறதுக்குத்தான் டைம் அதிகமாகி, வந்தவங்க அவங்களே ரயில்லே இருந்து இறங்கிட்டாங்க... வாங்க, போகலாம்.’

அவன் நிறைவான புன்சிரிப்போடு சொல்லி அந்த ராத்திரி ஒன்பதரைக்கு என் நண்பனாகிப் போனான்.

‘என் பெயர் ராஜு.’

கையை நீட்டினான். என் கையில் பிடித்திருந்த பச்சை ட்ரங்க் பெட்டியை இடது கைக்கு மாற்றிக் கைகொடுத்தபோது பெட்டியை அவன் வாங்கிக்கொண்டான்.

‘கனமே இல்லையே’ என்றான் ராஜு.

‘ஆமா ட்ரஸ் மட்டும்தான்... இங்கே டீ போர்ட்லே உத்தியோகமாகி வந்துக்கிட்டிருக்கேன்’ என்றேன்.

கன்கிராஜுலேஷன்ஸ் என்றான் ராஜு. முன்னால் நடந்துபோன இளைஞன் கொஞ்சம் நின்று வாழ்த்துகள் என்றான். கையில் பிடித்திருந்த ட்ரங்க் பெட்டியைக் கீழே வைத்தான். அந்தப் பெண்ணுடையதாக இருக்கவேண்டும்.

‘நான் கோபு’ என்றபடி கைகுலுக்கினான். பார்த்ததுமே பிடித்துப் போன மற்றொரு முகம். இன்னொரு நண்பனை அந்த ராத்திரி கொடுத்து, இன்னும் இருக்குது என்றது.

குதிரைவண்டி ஸ்டாண்டில் வரிசையாக ஏழு வண்டிகள் நின்றன. எங்களைப் பார்த்து முதலில் நின்ற வண்டியைச் சற்றே முன்னால் எடுத்தான் வண்டிக்காரன்.

ஸ்டேஷன் வாசலில் நாலைந்து மங்கிய பல்ப்கள் வெளிச்சம் காட்ட வந்து நின்ற முதல் வண்டியில் ஏற முன்னால் நடந்துபோன ரத்னா என்று அழைக்கப்பட்ட அழகுப் பெண் ஆர்வம் காட்டினாள்.

‘இது கொஞ்சம் சின்ன வண்டியா இருக்குமே’ கோபு சொல்ல, அவள் நிமிர்ந்து பார்த்தபோது அவள் பார்வை வட்டத்தில் முழுமையாக நின்றவன் நான்தான்.

‘நீங்க இந்த வண்டியிலே போங்க.’

ரத்னா என்னிடம் பேசிய முதல் வாக்கியம் இது. கும்பகோணத்தை நேசிக்க, ராத்திரி ஒன்பதரை மணியைப் பிரியமான நேரமாகக்கொள்ள, குதிரையைப் பார்த்தால் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க [எப்படி?] வாத்சல்யம் ஏற்பட அந்த ஒற்றை வாக்கியம் போதும்.

வண்டி இரண்டும் உருண்டோட, வரிசையில் ஒன்றுவிட்டு ஒன்றாக விளக்கு எரியும் வெளிச்சத்தில் பின்னால் வரும் வண்டிக்குள் அழகான ஓவியமாக ரத்னா பிரகாசித்து மறுபடி இருட்டில் கலந்து திரும்ப ஒளியாகத் தெரிந்தாள்.

‘துக்காம்பாளையத் தெருவிலே யார் வீடு?’ கோபு என்னைக் கேட்டான். ‘ராமாராவ் வீடு’ என்றேன். ‘எங்க அப்பாவுக்கு மாமா பிள்ளை அவர். நெஃப்யூ.’ கூடுதல் தகவலும் தந்தேன்.

‘யார், பலசரக்குக்கடை ராமாராவா? கல்யாண ப்ரோக்கரும் கூடத்தானே?’ ராஜு கேட்டான்.

‘ஆமா அப்பா அப்படித்தான் கேட்கச் சொன்னார்’ என்றேன். ‘கேட்டாச்சு இல்லே’ என்று கோபு என் தோளைத் தட்டிச் சிரித்தபடி சொல்ல, ‘கேட்கலே, சொன்னார்’ என்றான் ராஜு.

நானும் சிரித்து வைத்தேன். சிரிக்கத் தெரிந்த இந்த ஊரில் காலம் தள்ளுவது அப்படி ஒன்றும் கஷ்டமாக இருக்காது என்று தோன்றியது.

‘கமலா பாய் அம்மா எப்படி தனியா மகாராஷ்ட்ரத்துக்கு போய்ட்டு வந்தாங்க?’ ராஜு கேட்க, கோபு சொன்னான் – ‘தம்பி வீட்டு விசேஷம்... தட்ட முடியலே... கல்யாண முயற்சிகள் வேறே...’ தந்தி பாஷை செய்தி எனக்கானதில்லை.

‘ஒரு வாரம் கங்கா தனியாகவா இருந்தது?’, ராஜு குரலில் மெல்லிய ஆச்சரியம் தெரிந்தது.

‘தனியா என்ன, அந்தத் தெரு எப்போ ஓஞ்சிருக்கு? எல்லோரும் எப்பவும் கூப்பிடு தூரத்திலேதான்... அடுத்த தெருவிலே அவங்க சொந்தக்காரங்க விட்டோபாவோட பெண்ஜாதி வேறே வந்து ராத்திரி துணைக்கு இருந்துட்டுப் போயிட்டிருந்தாங்க’ என்றான் கோபு.

நான் புது ஊரை இருட்டில் கூடிய மட்டும் வேடிக்கை பார்த்துக் கொண்டு அமைதியாக வந்ததைப் பார்த்து கோபு என்னிடம் சொன்னான் –

‘ஓ! போர்ட் வேலைன்னா மெட்றாஸிலே இல்லே இருக்கணும்? குறைஞ்ச பட்சம் ஜில்லா தலைநகரம்... இஞ்ச தஞ்சாவூர் மாதிரி... நீங்க கும்மோணத்துலே யாருக்கு டீ கொடுக்கப் போறீங்க?’

கோபு திரும்பச் சிரித்தான். ராஜுவும் நானும் அதில் கலந்து கொண்டோம்.

‘சார் என்னமோ தெரியலே... சிலபேரை பார்த்த உடனே பிடிக்கும்... நீங்க அநேகமா அந்த லிஸ்ட்லே வருவீங்க’ என்றான் கோபு.

‘அப்போ சார், மோர் எல்லாம் வேணாமே...’, என்றேன்.

‘ஓகே டீ ஆபீசர்’, ராஜுதான் பெயர் வைத்தது.

‘இதான் துக்காம்பாளையத் தெரு. முதல்லே ராமாராவ் வீடுதான் வரும். நாங்க இறங்கறது கீழண்டைப் பக்கம் ஏழெட்டு வீடு தாண்டி...’

கோபு என்னைப் பார்க்க, ‘நான் இறங்கிக்கலாமா... வண்டிச் சத்தம் எவ்வளவு தரணும்னு சொன்னா...’ என்றேன்.

‘சாவகாசமா ஒரு நாள் எங்களுக்கு உங்க ஆபீஸ்லே நல்ல டீயா போட்டுக் கொடுத்துடுங்க போதும்’, கோபு சொல்ல மூன்று பேரும் சிரித்தோம். பின்னால் வந்த வண்டியில் ரத்னா எங்களைப் பார்த்தபடி வருவது தெரிந்தது. அதைப் பார்க்க எனக்கு சந்தோஷம்.

‘தாங்க்ஸ் ஃபார் த கம்பெனி... டீ கம்பெனி இல்லே’ என்றான் ராஜு.

வண்டியில் இருந்து இறங்கி, உள்ளே இருந்து ட்ரங்க் பெட்டியை கோபு எடுத்துக் கொடுக்க வாங்கிக்கொண்டு அடைத்த கதவுகளைப் பார்த்து நின்றேன்.

ரத்னா வண்டி நான் வந்த வண்டியைக் கடந்து முன்னால் போய்க் கொண்டிருந்தது. அவள் அப்போது தொலைவில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘வாடா ராமோஜி. உங்க அப்பாவுக்கு எங்க வீட்டு டோர் நம்பர் பதினேழுக்கு பதிலா இருபத்தேழுன்னு தப்பா எழுதிட்டேன்... போஸ்ட் பண்ணினதும்தான் உறைச்சது... அது கமலா பாய் வீடாச்சேன்னு. நம்மடவங்கதான்... வண்டி கீழண்டை வேறே போயிட்டிருக்கா, நீ நேரே அங்கே போய் எறங்கப் போறேன்னு நினைச்சேன்... இஞ்ச எறங்கி ஓரமா இருட்டுலே நிக்கறதை பாக்கலே’ என்றபடி வெற்று மேலுடம்போடு, பனைஓலை விசிறியால் முதுகு சொறிந்தபடி ராமாராவ் மாமா வரவேற்றார்.

உள்ளே போனோம். அடுத்த தெருவரை நீளுமாயிருக்கும் அந்த வீடு. தெரு வீடுகள் எல்லாமே அப்படித்தான் இருக்க வேண்டும்.

மாமியோடு மெட்றாஸ் கதை பேசும்போது அம்மா வழியில் அவளும் உறவு என்று தெரிய சந்தோஷமாக இருந்தது. அப்பா வாங்கிக் கொடுத் திருந்த ராயர் கடை அல்வா, காரசேவ், ஜாங்கிரியை அவளிடம் கொடுக்க அதற்குக் குறையாத சந்தோஷத்தோடு வாங்கிக்கொண்டாள் மாமி.

'சாப்பாட்டுக்கடையை முடிச்சு குழந்தைங்க எல்லாம் தூங்கிட்டாங்கோ... நீ வரேன்னுதான் நாங்க ரெண்டு பேரும் உக்காந்திருக்கோம்.'

மாமியிடம் ரயில்வே சார்பிலும் என் சார்பிலும் நேரம் தப்பி வந்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன்.

'வா, சாப்பிட்டுப் படுத்துக்கோ.' ராமாராவ் மாமா விசிறியை இடுப்பில் செருகிக்கொண்டு பிரியமாக அழைத்தார்.

இலை போட்டு உட்கார, மெத்தென்று ஊத்தப்பம். கூட புதினாத் துவையலும், மத்தியான புளிக்குழம்பும் தேங்காய் மிளகாய்ப் பொடியும் மணத்தக்காளி ஊறுகாயுமாக தேவாமிர்தம்தான். மிளகாயைப் பொடியாக அரிந்துபோட்டு, எலுமிச்சை பிழிந்து, தூள் பெருங்காயம் டப்பாவைக் காட்டி எடுத்து, கொத்தமல்லித் தழை தூவிய கெட்டி மோர் மங்களம் பாட, பசி தீர்ந்து உறக்கம் எட்டிப் பார்த்தது.

ராமாராவ் மாமா, வற்றல் மிளகாய் மெட்றாஸில் என்ன விலைக்கு கிடைக்கிறது என்று கேட்டதைக் காதில் அரைகுறையாக வாங்கிக் கொண்டு நான் தலையைக் குலுக்க, 'தூக்கம் வருதாப்பா, இந்தா இங்கே படு' என்று கூடத்தில் பாய் விரித்த இடத்தைக் காட்டினார்.

காலையில், டெல்லியில் இருந்து இரண்டு டீ போர்ட் ஆபீசர்கள் புதுப்பாளையம் தெரு கோவிந்தா லாட்ஜில் இருப்பதாக புறப்படும் போதே தகவல் அனுப்பியிருந்ததால், அங்கே அவர்களைச் சந்திக்கப் போனேன். அவர்கள் என்னிடம் இருந்த வேலை உத்தரவு, என் படிப்பு சான்றிதழ், நன்னடத்தை சர்ட்டிபிகேட் எல்லாம் சரி பார்த்தார்கள்.

அந்த ஆபீசர்கள் நான் தினசரி செய்ய வேண்டியதாகக் கொடுத்த வேலை விவரம் இப்படி இருந்தது –

உத்தியோகம் Tea Propaganda Officer – டீ பிரசாரகர் என்ற பெயரால் அழைக்கப்படும். சம்பளம் மாதம் அறுபத்தைந்து ரூபாய். வருடா வருடம் ஐந்து ரூபாய் இன்க்ரீமெண்ட், திருப்திகரமாக வேலை செய்தால்.

உத்தியோகம் பார்ப்பதற்கான கமாண்ட் ஏரியா – கும்பகோணமும், சுற்றுவட்டாரத்தில் பத்து மைல்களுக்குள் இருக்கும் கிராமங்களும்.

ஆபீஸ் – டீத்தூள், சர்க்கரை, விற்பனைக்கான பாக்கெட்டுகள் இவற்றை வைக்க சிங்கிள் ரூம் மாத வாடகை ரூ 10–க்குள் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். ஒரு மாத வாடகை அட்வான்ஸ் மற்றும் மர ஷெல்ப், பூட்டு இவற்றுக்கான செலவு வகையில் முன்பணம் அனுப்பி வைக்கப்படும்.

கும்பகோணத்தில், தினசரி ஒரு தெருவில் ஒரு வீட்டு திண்ணையில் பால் காய்ச்சி டீ தயார் செய்யவேண்டும். தெருவில் எத்தனை வீடு உள்ளது, அதில் எத்தனை பேர் டீ குடிக்கக் கூடியவர்கள் என்று குத்துமதிப்பாக மதிப்பீடு செய்து டீ போர்ட் விற்பனைக்கு வைத்திருக்கும் தேயிலையைக் கொதிக்க வைத்து டீ டிகாஷன் இறக்க வேண்டும்.

உள்ளூர்க்கார உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். சர்க்கரை வாங்க, பால் நேரத்துக்கு வரும்படிக்கு பால்காரரை மறக்காமல் பின் தொடர, டீ போட உதவ, வீடுகளுக்கு எடுத்துப் போக என்று செயல்பட அவருக்குச் சம்பளம் தரப்படும்.

நான்கு நாளுக்கு ஒரே தெருவில் தொடர்ந்து மதியம் நாலு மணிக்கு டீ போட்டு வீடு வீடாக எடுத்துப்போய் டம்ளர்களோ போகிணியோ வாங்கி ஊற்றிக்கொடுத்து பருகுகிறார்களா என்று உறுதி செய்து கொண்டு அடுத்த வீட்டுக்கு டீ கொடுக்கப் போகவேண்டும். டீ குடிக்காத வீட்டைக் குறித்து வைத்துக்கொண்டு அடுத்த நாளும் டீ தர முயற்சி செய்யவேண்டும்.

நான்கு நாள் டீ கொடுத்த பிறகு அந்தத் தெருவை அடுத்த இரண்டு நாள் விட்டுவிட்டு வேறு தெருவில் டீ தர வேண்டும். அதற்கு அப்புறம் திரும்ப முந்திய தெருவுக்குப் போகவேண்டும். அங்கே வசிப்பவர்கள் காய்ச்சிய பால்கொண்டு வந்தால் டீ டிகாஷன் இலவசமாகக் கலந்து தரப்படும். டீ தூளும் விற்பனைக்கு வைத்து இருபத்தைந்து சதமானம் தள்ளுபடியில் கிடைக்கும் என்று எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஒரு பவுண்ட் டீ பவுடர் வாங்கினால் ஸ்பூன் இலவசம், ஐந்து பவுண்ட் தேயிலை வாங்கினால் ஓர் எவர்சில்வர் சம்புடம் இலவசம் என்ற அறிவிப்பு கோவில் உற்சவம், தர்க்கா விசேஷம், மாதாகோவிலில் கிறிஸ்துநாதர் பிறந்த நாள் என்று கூட்டம் கூடும்போது விளம்பரம் செய்யவேண்டும். பரிசுப் பாத்திரங்களும், தேயிலை பாக்கெட்டுகளும் அவ்வப்போது

மெட்றாஸில் இருந்து உங்கள் உள்ளூர் முகவரியில் டெலிவரி செய்யப்படும்.

தினசரி எந்தத் தெருவில் டீ கொடுத்தது, எவ்வளவு பாக்கெட் விற்றது என்ற விவரங்களை ஒரு லெட்ஜரில் பதியவேண்டும். மாதம் ஒரு தடவை விற்று வந்த தொகையை செலவுகள் போக, மெட்றாஸ் ஆபீசுக்கு மணி ஆர்டர் செய்ய வேண்டும்.

தினசரி தேதி, விற்பனை இனம், வரவுத் தொகை, தினசரி செலவு இனம், செலவுத் தொகை என்று மாதாமாதம் மெட்றாஸ் தலைமை ஆபீசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.

உதாரணம் 17.6.1935 சோலையப்பன் தெருவில் டீத்தூள் விற்பனை ரூ 5 சர்க்கரை செலவு ரூ 4 கையிருப்பு ரூ 1 .

பால் போன்ற மாதாந்திரச் செலவுகளை மாதத்தின் கடைசி தினச் செலவுகளாக அறிவிக்கலாம்.

மாதாமாதம் ரூ 100 மெட்றாஸ் தலைமை ஆபீசிலிருந்து செலவுகளுக்கான முன்பணமாக அனுப்பி வைக்கப்படும். அதையும் வரவு இனமாகக் கணக்கில் காட்டவேண்டும்.

இது தவிர ஒவ்வொரு நாளும் டீ கொடுத்த தெருவில் சாயந்திரங்களில் டீ குடிப்பதன் நல்ல பலன்கள்பற்றி தெருவாசிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். தேக ஆரோக்கியம், சுறுசுறுப்பு, ஜீரண சக்தி போன்றவை கூடுதலாகும் என்பது இவற்றில் சில.

இதற்கான விளக்கப் புத்தகம் மெட்றாஸில் இருந்து விரைவில் அனுப்பி வைக்கப்படும். இலவச விநியோகத்துக்கு சிறு புத்தகங்களும் அனுப்பி வைக்கப்படும். விளக்கப் புத்தகம் வராத காரணத்தால் தெருக் கூட்டம் போடுவதைத் தவிர்க்கக் கூடாது.

இந்தக் கூட்டங்களின் முடிவில் தெருவாசிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவேண்டும்.

டீ குடித்தால் உடம்பு கருத்துப் போகுமா, முகம் வெளுக்குமா, பல் எல்லாம் கொட்டிப் போகுமா, பெண்களுக்கு முடி கொட்டி வழுக்கையாகி விடுமா, டீ குடித்தால் பேதியாகுமா, மலச்சிக்கல் வருமா, பெண்களுக்கு

மாதவிலக்கு சீக்கிரம் வருமா, தாமதமாக ஏற்படுமா, ஆண்களுக்கு மாத விலக்கு ஏற்படுமா, காலில் ஆணிப்புற்று ஏற்படுமா?

இப்படி வரும் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டி இருக்கும். பொதுவாகக் கேட்கப்படும் சில கேள்விகளுக்கான விடைகள் –

டீ குடித்தால் உடம்பு கருத்துப் போகும் என்று நிரூபணமாகவில்லை. இங்கிலாந்திலும், பிரான்சிலும் துரைகளும் துரைசானிகளும் தினசரி பகல் நாலு முதல் ஐந்து வரை இந்தியாவிலிருந்து வந்த டார்ஜிலிங்க் டீ தினசரி சராசரி 13547 கோப்பை குடிக்கிறார்கள். அவர்களில் யாருக்கும் மேனி கறுக்கவில்லை என்பது கண்கூடு.

டீ குடிக்காத கறுப்பர் இனத்து ஆப்பிரிக்கக் கண்ட பிரஜைகள் தினசரி டீ குடிக்கப் பழகினால் அவர்களின் மேல்தோல் வெளுக்கலாம் என்று ஆப்ரிக்காவில் பீதி எழுந்தது. அது தவறான தகவல் என்று அப்புறம் நிரூபிக்கப்பட்டது.

டீ குடித்தால் பல் கொட்டிப் போகாது. டீ குடிக்கும் முன்பு, காலை என்றால் தினசரி தந்தசுத்தி செய்யாமல் இருந்தால் பல் உதிர வாய்ப்பு உண்டு.

டீ குடித்தால் தலைமுடி கொட்டாது. அதிகம் வளரவும் செய்யாது. டீ குடித்தால் பேதியாகாது. பால் கலந்த டீ என்றால், ஒரு நாளைக்கு இருபது கோப்பைக்கு மேல் பருகினால் வயிறு கொஞ்சம்போல் வலிக்க வாய்ப்புண்டு. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம் போன்ற டீயும் நஞ்சாகலாம்.

மலச்சிக்கலுக்கும் டீக்கும் சம்பந்தம் இல்லை. டீ குடிக்கப் பழகி தினசரி டீ குடித்தபின் காலைக் கடன் கழிப்பது என்று வழக்கப்படுத்திக் கொண்டால் தினம் தினம் தேக சௌகர்யம், தேக காந்தி கூடும்.

பால் கலக்காத டீ கருப்பு டீ – ப்ளாக் டீ என்று அழைக்கப்படும். மேற்கத்திய நாடுகளில் இப்படி டீ அருந்துவதும் பழக்கமாகி வருகிறது. எலுமிச்சைச் சாற்றை கருப்பு டீயில் கலந்து குடிக்கலாம். லெமன் டீ என்பது இந்த ரகம்.

நல்ல டீ சாப்பிட்டால் வரவேண்டிய நேரத்தில் மாதவிலக்கு பெண்களுக்கு ஏற்படலாம். மாதவிலக்கு தாமதத்துக்கும் டீ குடிப்பதற்கும் சம்பந்தம் இல்லை.

டீ பருகுவதால் ஆண்களுக்கு மாதவிலக்கு ஏற்படாது என்று மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

காலில் ஆணிப்புற்று வளர, இறந்து போன திசுக்கள் காரணம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள், டீ குடித்தால் கால் ஆணி வலியை மறந்து உற்சாகமாகச் செயல்படலாம்.

கேள்விகள் குழப்புவதாகவோ, வம்பிழுக்க என்றே கேட்டப்பட்டவையாகவோ இருந்தால், 'இதற்கான விடை எங்கள் மதறாஸ் தலைமை அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு தரப்படும்' என்று அடுத்த கேள்விக்குப் போக வேண்டும்.

தினசரி எட்டு மணி நேரம் வேலை. உத்தியோக நேரத்தில் வெள்ளை பேண்டும் வெள்ளை அல்லது நீல சட்டையும் அணிந்திருக்க வேண்டும். கருப்பு ஷூக்கள் இருந்தால் அணிந்துகொள்ளவேண்டும். அப்போது சட்டையை பேண்டுக்குள் நுழைத்து வயிற்றுப் பகுதி இருக்க வேண்டும்.

கருப்பு ஷூக்கள் வாங்க சம்பளக் கடன் ஒரு வருட உத்தியோகம் முடிந்த பிறகு பரிசீலனை செய்யப்படும். ஷூ இல்லாதபோது தூசி படியாத செருப்புகளை அணிந்துகொள்ளலாம்.

டீ தயாரித்து வழங்கிப் பிரசாரம் செய்யும் நேரம் தினசரி பகல் இரண்டு முதல் மாலை ஆறு மணிவரை. அதற்கு மேல் வேலை இருந்தாலும் செய்யவேண்டும். இது தவிர காலை ஒன்பதிலிருந்து ஒன்றுவரை கமாண்ட் ஏரியாவில் இருக்கும் மளிகைக் கடை, ஸ்டேஷனரி கடைகளில் டீ பாக்கெட்களையும், உதிரியாக டீ பொட்டலங்களையும் காட்சிப்படுத்தி விற்க கடைக்காரர்களிடம் பிரசாரம் செய்ய வேண்டும். அவர்கள் விற்பனை செய்து தரும் தொகையில் இருபது சதவிகிதம் அவர்களுக்கான கமிஷனாக விற்பனைத் தொகையிலிருந்து தரப்படவேண்டும்.

விற்பனை அதிகமாகும்போது கடைக்காரருக்கு இருபது சதவிகிதத்துக்கு மேல் டிஸ்கவுண்ட் தர மெட்றாஸ் மாகாண ஆபீஸ் முடிவு செய்யும். கடைகளில் விற்று வந்த தொகை, வீடுகளில் விற்கும் தொகையோடு கலக்காமல் மெட்றாஸ் ஆபீசுக்குத் தனியாக மணியார்டர் செய்யப்படவேண்டும். அதற்கான விவரங்கள் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

பால் காய்ச்ச உருளி, கரி அடுப்பு அல்லது மண்ணெண்ணெய் ஸ்டவ் அடுப்பு, கரி, மண்ணெண்ணெய், டீயில் கலக்க அஸ்கா சீனி, தினசரி பால் இதெல்லாம் வாங்க, தினசரி டீ வழங்கும் நிகழ்ச்சி முடிந்து தளவாடங்களைச் சுத்தப்படுத்த, தினசரி இவற்றை ஏற்றிப் போக மாட்டு வண்டிக் கூலி ஆகிய செலவுகள் ஒவ்வொரு மாதமும் மதறாஸ் அலுவலகத்தில் இருந்து ஒரு வாரம் முன்கூட்டி அனுப்பப்படும்.

செலவுக் கணக்கை, ஏற்கெனவே விவரித்தபடி, ரூபாய் அணா பைசா துல்லியமாக வைத்து, அதிகாரிகள் வரும்போது சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரே நாளில் உலகத்து அறிவை எல்லாம் கரைத்துப் புகட்டப்பட்டவனாக எதுக்களித்து எழுந்து நின்றேன். ஆபீசர்கள் குட் லக் என்று சொல்லிக் கை குலுக்கி கீழே கோவிந்தா லாட்ஜில் சாப்பிடப் போனார்கள்.

நான் அவர்கள் தின்று முடித்துத் திரும்ப வரும்வரை காத்திருப்பதா அல்லது நடந்து ஊரைச் சுற்றிப் பார்ப்பதா என்று முடிவுக்கு வர முடியாமல் நின்றபோது மொழுக்கென்று வயது என்ன என்று தீர்மானிக்க முடியாத ஆகிருதியோடு மனுஷன் ஒருத்தன், குஷியாக கையில் பழுப்பு நிறக் கவரோடு வந்து சேர்ந்தான். சேர்ந்தார்.

என்னைப் பார்த்துவிட்டு நேரே என்பக்கம் வந்தார்.

‘சார் டீ ஆபீசர் நீங்க தானா? உங்ககிட்டே புகார் தரணும்னு லெட்டர் வந்திருக்கு... ஊர்லே தெருநாய், கொசு தொல்லை ஜாஸ்தி, குடிதண்ணீர் சரிவர கிடைக்க மாட்டேங்கறது’, என்று படபடவென்று சொல்லிக்கொண்டே போனார். கையில் வைத்திருந்த கவரை என்னிடம் நீட்டினார். டியர் மிஸ்டர் விட்டோபா என்று தொடங்கிய கடிதம் ப்ளீஸ் ரிபோர்ட் டு என்று முடிந்திருந்தது. சிரித்துவிட்டேன்.

‘விட்டோபா சார், நீங்கதானே அது?’

‘ஆமா, வேறே யார் விட்டோபா எங்க வீட்டிலே?’ என்றார் பெருமையோடு.

‘சரி, விட்டோபா, உங்களுக்கு உத்தியோகம் கொடுத்து டீ போர்ட் உத்தரவு. சேல்ஸ்மேன். நீங்க என்கிட்டே ரிப்போர்ட் பண்ணுவீங்க. புகார் இல்லே. வேலையிலே ஜாயின் பண்ணுவீங்க... அங்கே சாப்பிட்டுட்டு இருக்கற ரெண்டு ஆபீசர்களையும் முதல்லே சந்திச்சுடுங்க. இருங்க, அவங்க சாப்பிட்டு முடிச்சதும் போங்க’ என்று விவரமாகச் சொல்லும்போது

இவரோடுதான் இனி காலம் தள்ள வேண்டும் என்ற நினைப்பு மலைக்க வைத்தது.

விட்டோபா என்ற விற்பனையாளரும், ராமோஜி என்ற விற்பனை அதிகாரியுமாக கும்பகோணம் டீ போர்ட் பிராஞ்சு கோவிந்தா லாட்ஜ் மத்தியான சாப்பாடு வாடையோடு இயங்கத் தொடங்கியது.

விட்டோபா உள்ளூர்க்காரர் என்பதால் அவர் உதவியோடு உத்தியோகத்தில் ஒரு வருஷம் இங்கே குப்பை கொட்டிவிட்டு செங்கல்பட்டோ, காஞ்சிபுரமோ மெட்றாஸுக்கு பக்கமாக ட்ரான்ஸ்பர் வாங்கிக்கொள்ளலாம் என்று மனம் கணக்கு போட்டது. எங்கே டீ ஆத்தினா என்ன என்று இன்னொரு மனம் இடித்தது.

விட்டோபாவிடம் நாளைக்கு சந்திக்கலாமா என்று கேட்டேன். எங்கே என்று எனக்கே தெரியாதுதான்.

‘சார், நாளைக்கு மகாமகக் குளத்தங்கரையிலே உட்கார்ந்து வேலையை ஆரம்பிச்சுடலாம்.’ என்று விட்டோபா உற்சாகமாகச் சொல்ல அவர் செய்ய வேண்டிய வேலை என்ன என்று மனதில் சரியாக வாங்கிக்கொண்டிருக்கிறாரா என்று சந்தேகம் எழுந்தது.

‘நீங்க எங்கே தங்கி இருக்கீங்க?’ கேட்டார். சொன்னேன்.

‘பக்கம்தான். நான் அங்கே இருந்து பத்து நிமிஷம் வேகுவேகுன்னு நடந்தா வரும் பாருங்கோ சோலையப்பன் தெரு அங்கேதான் ஸ்ரீராம பஜனை சபா பக்கம் ஜாகை... எங்க மனுஷா துக்காம்பாளையத் தெருவிலேயும் உண்டு. ராமாராவ் வீட்டுக்கு பத்து வீடு போட்டு கீழண்டை... கமலா பாய் என் ஒண்ணுவிட்ட அக்காதான்.’

என்னமோ எனக்கு ஊரும் மனுஷர்களும் உள்ளங்கை துல்லியமாக அத்துப்படியானதுபோல் விட்டோபா சொன்னார். சரி என்று சும்மா தலையை ஆட்டும்போது நினைவு வந்தது, இவர் சொன்ன வீட்டுக்குள் தானே அந்த அழகுப் பெண் என்னோடு ரயில் இறங்கி வந்து ராத்திரி நடந்து போனது.

புறப்பட்டுப் போய் ரெண்டடி நடந்து சட்டென்று திரும்பி என்னை நோக்கி வந்தார் விட்டோபா.

‘நாளைக்குத்தான் ஆரம்பிக்கணுமா இன்னிக்கே நாள் நல்லா இருக்கே?’ அவர் சொல்ல, ‘நல்லது, இன்னிக்கே ஆரம்பிச்சுடலாம்’ என்றேன்.

சந்திக்க வேண்டிய பிரமுகர்கள், வணிகர்கள், டீத்தூள் விற்க ஏறி இறங்க வேண்டிய மளிகை, மற்றக் கடைகள், பக்கத்து கிராம விவரங்கள் இப்படி ஜாபிதா தயார் பண்ணிடலாம் என்று ஆரம்பித்துக் கொடுத்தேன்.

‘முதல் பெயர் ராமாராவ் – பலசரக்குக்கடை, பச்சையப்பன் தெரு’ என்று ராமாராவ் மாமாவைப் பிள்ளையார் சுழிக்கு அடுத்துப் பதியச் சொன்னேன்.

‘முதலில் ராதாகிருஷ்ண அய்யர் ஸ்டேஷனரி ஷாப்பிலே ரூல் போட்ட ஒரு கொயர் நோட்புக் ரெண்டு வாங்கிடலாம், ஒண்ணு தெருக் கணக்கு, இன்னொன்னு கடைக் கணக்கு’, என்றார் விட்டோபா.

‘ராதா கிருஷ்ண அய்யரையும் பார்த்துட்டு டீ டிஸ்ப்ளே பத்தி பேசிடலாம்’ என்றேன் உற்சாகமாக.

‘அய்யர் பரலோகம் போயாச்சு, கடையை அப்துல் சமத் எடுத்து நடத்திட்டிருக்கார். பெயரை மாத்த வேண்டாம்னு வச்சிருக்கார்.’

பெட்டியில் வைத்திருந்த, அப்பாஜி கொடுத்தனுப்பிய சொந்தப் பணம் நூறு ரூபாயில் இன்றைய செலவைச் செய்து அப்புறம் ஆபீஸ் பணத்தை அதற்கு ஈடாக எடுத்துக்கொள்ளலாம் என்று தீர்மானம் செய்தேன்.

‘வாங்க, துக்காம்பாளையத் தெருவுக்கு ஒரு நிமிஷம் போய்ட்டு வரலாம்.’

விட்டோபாவிடம் சொல்ல, அதிகாரியோடு சிப்பந்தி ஓர் அடி இடைவெளிவிட்டு நடந்து வருவதுபோல் பவ்யமாக நடந்து வந்து, ‘ஆபீசர் சார், போகலாம்’ என்றார் அவர்.

முன்னாலேயும் ஓடவேண்டாம் பின்னாலேயும் தொடர்ந்து வர வேண்டாம், என் கூட பக்கத்துலே பக்கத்துலே வாங்க என்றதும் அவர் முகம் மலர்ந்தது.

உச்சி வெய்யிலை சந்தோஷமாகத் தலையில் வாங்கி துக்காம் பாளையத் தெருவில் நிலா எரிகிற பாவனையோடு விட்டோபா நடக்க நான் அவரோடு நடந்தேன்.

‘சார் சார் மெட்றாஸ் சார்’ என்று பின்னால் இருந்து குரல் கேட்டது. என்னைத்தான் யாரோ கூப்பிடுகிறார்கள்.

சைக்கிளில் வந்து வழி மறித்து நின்றார் போஸ்ட்மேன். ‘ராமாராவ் வீட்டுக்கு விருந்து வந்திருக்கற பையன் நீங்கதானா? சர்க்கார் டீ விக்க மெட்றாஸ்லே இருந்து புறப்பட்டு வந்திருக்கீங்களாமே?’

ஆமா என்று சொல்லும்போது பெண்கள் சிரிக்கும் சத்தம். கண் காணாமல், முதுகுப் பக்கம் இருந்து தென்றல் வீசிய மாதிரி இனிமையாக அனுபவம் அது.

‘வாங்க அந்த வீட்டுத் திண்ணையிலே உக்கார்ந்து கையெழுத்துப் போடுங்க... மணியார்டர் வந்திருக்கு மெட்றாஸ்லே இருந்து... நூறு ரூபா... அதென்ன சம்பள அட்வான்ஸா?’

தபால்காரர் எல்லாத் தகவலையும் எதிர்பார்த்தபடி நடந்தார். அவரைப் பின் தொடர்ந்தோம் விட்டோபாவும் நானும்.

நாங்கள் போனது இடது பக்கம் பத்தடி தூரத்தில் இருந்த வீட்டுத் திண்ணைக்கு. அங்கே பல்லாங்குழி விளையாடிக்கொண்டிருந்த இரண்டு அப்சரஸ்கள்தான் சேர்ந்து சிரித்து இன்னும் ஓயாத கலகலப்பு.

வெய்யில் வட்டத்துக்கு வெளியே நிழலோடு குளிர்ந்திருந்த திண்ணையில், என் பார்வையைச் சந்தித்தவள் ரத்னா. நேற்று என்னோடு ரயில் இறங்கி இங்கே வந்தவள். கண்ணால் சிரிக்கும் பேரழகி.

தபால்காரர் நாலு தடவை எண்ணி என்னிடம் நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு, மணியார்டரில் கையெழுத்து வாங்கிக்கொண்டு, எட்டணா வெகுமதியும் பெற்றுப் புறப்பட்டுப் போனார். பாக்கெட்டில் பணத்தை வைத்தபோது ஏகப்பட்ட தன்னம்பிக்கை மனதில் புகுந்து நிறைந்தது.

‘பசு... வழிச்சு வாரியாச்சு.’

கையில் குவித்துப் பிடித்திருந்த பல்லாங்குழிச் சோழிகளை பிரதட்சணமாகக் குழிக்கொன்றாகப் போட்டு வந்த ரத்னா, வெற்றுக் குழிக்கு முந்தையதில் கடைசிச் சோழியைப் போட்டுவிட்டு, ஹேய் ஹேய் என்று உற்சாகமாகப் பட்டென்று பலகையில் தட்டி, வெற்றுக் குழிக்கு அடுத்த குழியிலிருந்து எல்லாச் சோழிகளையும் வாரி வழித்தெடுத்துத் தரையில் பத்திரமாக வைத்துக்கொண்டபடி கூவினாள்.

சின்னஞ்சிறு வெள்ளைச் சோழிகளை நேர்த்தியாகக் கோர்த்தது போன்ற அவளது பல்வரிசையைப் பார்த்தபடி செவ்விதழ்களில் குவிந்த பார்வையை சற்றுப் பிரயத்தனத்தோடு அகற்றி நிறுத்தினேன்.

சிரிக்கலாமா கை குவிக்கலாமா என்று தெரியாமல் ஒரு வினாடி குழம்ப, விட்டோபா சத்தமாகச் சொன்னார் – ‘கங்கா, சார் டீ போர்ட் சேல்ஸ்

ஆபீசர், நான் சேல்ஸ்மேன்.’

‘மன்னிக்கணும்... என் பெயர் ராமோஜி’ என்று நம்பிக்கையோடு ரத்னாவைப் பார்த்தபடி தொடங்கினேன்.

‘அதுக்கு ஏன் மன்னிக்கணும்?’

கங்கா என்ற அந்த இளம்பெண் சீரியஸாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டுவிட்டு உடனே மறுபடியும் சிரித்தாள்.

‘கங்கா, டீ ஆபீசர் பாவம்,விட்டுடு’ என்றபடி ரத்னா என்னை நோக்கினாள். பகையோடு வரவில்லை, நட்போடு வந்திருக்கிறேன் என்று உணர்த்த, பெருமாள் கோவிலில் கருடாழ்வார் மாதிரி கை கூப்பி நின்றேன். இரண்டு பேரும் சொல்லி வைத்தாற்போல் திரும்பக் கைகூப்பி வணங்கித் திண்ணையில் இன்னொருமுறை சிரிப்பு அலையடித்து நிறைந்து வழிந்தது.

‘சார், இந்தத் திண்ணை சரியா இருக்குமா? இல்லேன்னா அடுத்த வீட்டுக்குப் போயிடலாமா?’

விட்டோபா என்னைக் கேட்டார். புரியாமல் விழித்தேன். அந்தப் பெண்களும் என்ன சமாசாரம் என்று கேள்வியே பார்வையாக, விட்டோபாவை விட்டுவிட்டு என்னைப் பார்த்தார்கள்.

‘எதுக்கு விட்டோபா?’ நான் மெதுவாகக் கேட்டேன். அடுத்த வீட்டுக்குப் போய்விடலாமாமே? ரத்னாவோடு இப்போதுதான் ஒரு வார்த்தை ரெண்டு வார்த்தை என்று பேச்சு ஆரம்பித்திருக்கிறது. இவர் அந்த போக்குவரத்தை நசித்துக் குறுக்கே பாறாங்கல்லைத் தூக்கிப் போடுகிறார்.

‘நாம மொதல்லே இந்தத் தெருவிலேதானே டீ சப்ளை பண்ணப் போறோம். பால் காய்ச்ச, டீ போட இந்தத் திண்ணை சரியா இருக்கும்னு தோணுது’ என்றார் அவர்.

‘எப்படி நமக்கு வேணுமோ அப்படி இருக்குதான் ஆனா, அவங்க கிட்டே அனுமதி வாங்காம நாம்பளா எப்படி முடிவு செய்யறதாம்?’

நான் பொதுவாகப் பார்த்துக் கேட்டேன் என்றாலும் ரத்னா மேல் என் பார்வை நிலைத்தது.

இரண்டு பேரும் எழுந்து அடுத்தடுத்து நின்றார்கள். ரத்னாவைப் பார்க்காமலேயே சொல்லலாம், பதினெட்டு வயது இருப்பாள். அந்த வயது,

உடம்பிலும் முகத்திலும் தன்னைத் தானே அறிவித்துக் கொண்டு விடும்.

கங்கா, ரத்னாவைவிட ஒரு பிடி உயரமாக, நாலைந்து வயசு கூடியவளாகத் தோன்றினாள். இரண்டு பேரும் சேர்ந்து தெருவில் நடந்து போனால் ஊரே ஸ்தம்பித்துப் போகும்.

ரத்னாவையும் கங்காவையும் பார்த்து, 'இவர் தவறாகச் சொல்லி விட்டார், மன்னிக்கவும்' என்று ஜாக்கிரதையான இங்க்லீஷில் சொன்னேன்.

'பரவாயில்லை, விட்டோபா மாமா வெகுளி. மனசுலே ஒண்ணும் வச்சுக்க மாட்டார்' என்றாள் கங்கா.

'நீங்க டீ போர்ட் ஆபீசரா?' கங்கா என்னைக் கேட்க பெருமையோடு ஆம் என்றேன். ரத்னா முகத்தில் அடக்க முற்பட்ட சிரிப்பு முழு முகத்துக்கும் தனி அழகூட்டியது. அவள் சிரிக்கக் கூட வேண்டாம். இதுவே சுவர்க்க அனுபவம்.

'ஆமா, தினம் ஒவ்வொரு தெருவுக்கு போவோம். டீ போட்டு எல்லோருக்கும் அய்யா குடி அம்மா குடின்னு இலவசமா கொடுப்போம்... டீ குடிக்கறதோட பிரயோஜனம், நன்மைபற்றி சார் அங்கங்கே பிரசங்கம் பண்ணுவார். அவருக்கு வாய் வலிச்சா நான் பேசுவேன்.'

ரத்னா சிரித்தபடி உள்ளே ஓடி விட்டாள். அவள் சிரிப்பாள் என்றால் இன்னும் கொஞ்ச நேரம் விட்டோபா என்ன வேண்டுமானாலும் பேசட்டும் என்று தோன்றியது. பல்லாங்குழிப் பலகையை உள்ளே இருந்து சோழிகள் சிதறாமல் ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டு கங்காவும் உள்ளே போனாள்.

விட்டோபா வாசல் கதவைத் தட்டிவிட்டு வீட்டுக்குள் நுழையத் தயாராக இருந்தார்.

'நீங்க போயிட்டிருங்க, வரேன்' என்று அவர் என்னை அனுப்பி வைக்க, ரத்னாவுக்காகத் திரும்பி திரும்பிப் பார்த்தபடி நான் ராமாராவ் வீட்டுக்குப் போனேன். முதலில், ட்ரங்க் பெட்டியில், மணியார்டர் வந்த ஆபீஸ் பணத்தை வைத்தேன்.

அரை மணி நேரத்தில் விட்டோபா வந்து, பேசிட்டேன் சார் என்றார். யாரோடு, என்ன என்று பொறுமையாகக் கேட்டேன்.

'அதான் கமலா பாய், நம்ம ஒண்ணு விட்ட அக்கா கிட்டே... நாளையிலே இருந்து நாலு நாள் அவங்க வீட்டுத் திண்ணையிலே டீ போட்டு

தெருவுக்குக் கொடுக்கலாமாம், சரின்னு சொல்லிட்டாங்க.’

‘அவங்க மகள் கங்கா கிட்டே கேட்டீங்களா?’

‘ஓ அதுதான் முதல்லே சரின்னது. அந்த சிரிப்புக் குப்பச்சிப் பொண்ணு நின்னுச்சே… கமலாக்கா தம்பி மக… இனிமே நல்லா பொழுது போகும்… சர்க்கஸ் கோமாளி வந்த மாதிரி இருக்கும்ன்னு சொல்லிச்சு.’

சர்க்கஸ் கோமாளியா? இரு, உன்னை கவனிச்சுக்கறேன்.

‘குப்பச்சின்னு எல்லாம் சொல்லாதீங்க’ என்று கொஞ்சம் கோபத்தோடு விட்டோபாவிடம் சொன்னேன்.

‘அதனாலே என்ன, சார் வேணுங்கறபடி சொன்னா தீர்ந்தது… வாங்க, பால் காய்ச்ச குமுட்டி அடுப்பு, உருளி, கரண்டி எல்லாம் வாங்கிட்டு வந்துடலாம்’ என்றார் விட்டோபா.

எஸ் எஸ் எல் சி படித்து சுமாரான மார்க்கும் வாங்கி, சர்வீஸ் கமிஷன் எழுதி டெல்லியில் சர்க்கார் வேலைக்குப் போகக் கனவு கண்டதென்ன, இங்கே கும்பகோணத்தில் டீ ஆற்றி வீடு வீடாகக்கொண்டுபோய்க் கொடுத்து பாத்திரம் கழுவி வைக்கும் உத்தியோகத்தில் வந்து சேர்ந்தது என்ன?

ஒரு நிமிஷம் மனமெங்கும் வருத்தம் சூழ்ந்தது. போகட்டும். இதுவும் சர்க்கார் வேலைதான். டீ ஆற்ற இங்கே அனுப்பி இருக்காவிட்டால் ரத்னாவை எப்படி பார்த்திருக்க முடியும்?

அன்று இரவு கனவில் யார் வீட்டுக் கொல்லையிலோ தேயிலை பயிரிட்டு அந்தத் தோட்டத்தில் கையை நீட்டி நீட்டி பெஹாக் ராகத்தில் பாடிக்கொண்டு ரத்னாவோடு திரிந்தேன்.

விடிந்து சுறுசுறுப்பாக கிணற்றுத் தண்ணீர் இரைத்து கிணற்றடியில் குளிரக் குளிர குளியல். ராமாராவின் இரண்டு பிள்ளைகளும் வேண்டாம் வேண்டாம் என்று நான் தடுத்தும் கேட்காமல், ‘அண்ணா, சும்மா இருங்க’ என்று தண்ணீர் இரைத்து ஊற்றினார்கள்.

ராமாராவ் மனைவி ‘தட்டு இட்லி பண்ணப் போறேன் காலை ஆகாரத்துக்கு, சாப்பிட்டுப் போப்பா’ என்று நிற்க வைத்தாள். தட்டு இட்லியாமே, என்ன அது?

இட்லி அடுக்குத் தட்டுக்குப் பதிலாக ஒரு பெரிய தட்டில் நல்லெண்ணெய் தடவி மாவு ஊற்றி இட்லிப் பானையில் வேக வைத்து ஒற்றை இட்லியாகச் செய்திருந்த அந்த தட்டு இட்லி, புதினா சட்னியும், ஒரு சிட்டிகை அஸ்கா தூவிய கார இட்லிப்பொடியும் நட்டுவாங்கம் செய்ய, அமோகமாக நாக்கில் நர்த்தனம் செய்தது.

அருமையான காப்பி வட்டை செட்டில் துளும்பி, பசியாறியதை சம்பூரணமாக்க வந்து சேர்ந்தது. இந்தக் காப்பி தேசத்தில் என்னாத்த டீ விற்றுக் கொழிக்க?

'மாமி, நான் மாசாமாசம் என் வகை செலவுக்காக பத்து ரூபா கொடுத்துடறேன்... வேணாம்னு சொல்லாதீங்க... 'என்று விண்ணப்பித்துக்கொண்டேன். மாமி அதெல்லாம் வேணாம் என்று மறுத்து அப்புறம், 'ரொம்ப ஜாஸ்தியா இருக்கு... அஞ்சு ரூபாய் போதும்' என்று சொல்லிவிட்டாள். அவள் சொன்னால் ராமாராவ் மாமா சொன்ன மாதிரித்தான் என்று தெரியும்.

விடிந்ததும் அந்த சந்தோஷ செய்தி அறிவித்த சந்தோஷத்தில் உத்தியோக உடுப்பான பேண்ட், சட்டை அணிந்து, கொஞ்சம் யோசித்து சட்டையை பேண்டுக்குள் இழுத்துவிட்டுக்கொண்டேன். படிய வாரிய தலையில் இன்னும் கொஞ்சம் குறைவாக முடி இருந்திருக்கலாம். ஞாயிறன்றாவது நாவிதரைப் பார்க்கப் போக வேணும்.

ராமாராவ் வீட்டில் இருந்த சாம்பிள் பவுடர், சோப்புக்குக் கணக்கு இல்லை. எனக்கு மாமி கொடுத்த சாம்பிள்களே இன்னும் ஒரு வருடத்துக்கு வரும் என்று மனசு கணக்குப் போட்டது. கைக்குட்டையில் பவுடர் போட்டு பாக்கெட்டில் பத்திரமாக வைத்துக்கொண்டேன்.

கிளம்பும் நேரம் டை நினைவு வந்தது. அப்பா நல்ல நாள் பெரிய நாள் என்று கிறிஸ்துமஸ் தினத்தில் துரை வீட்டில் வேலைக்குப் போகும் போது கட்டிப் போனது. டபுள் நாட் அவிழ்க்காமலேயே என்னிடம் கொடுத்து உத்தியோகத்துக்குப் போகும்போது கட்டிப் போகச் சொன்னார். இன்னும் டை கட்டக் கற்றுக்கொள்ளாததால், அந்த முடிச்சு அவிழாமல் போட்டது போட்டபடிக்கே கொண்டுவந்தேன்.

டையையும் கம்பீரமாக அணிந்து வாசலுக்கு வரும்போது ஷூவையும் எடுத்துவந்தேன். கொஞ்சம் பழையது. ஒரு ஜதை சாக்ஸ் மட்டும் அணிந்தால் கொடகொட என்று காலில் நிற்காமல் ஷூ கழன்றது. ரெண்டு

ஜதை காலுறைகள் அணிந்து இறுக்கமாகக் காலில் ஷூக்களை இருத்தினேன்.

ரெண்டு அடி எடுத்து வைக்க, காலில் எறும்பு கடித்தது, தேள் கொட்டியது, பூரான் ஊர்ந்தது, மரவட்டை சுருண்டது என்று மனம் ஏகத்துக்குக் கற்பனை செய்து அலுத்து, போடா எக்கேடும் கெட்டு என்று தூங்கப் போனது.

கும்பேஸ்வரர் கோவிலில் ஏனோ கூட்டமில்லை. பத்து இருபது பேர் குளித்துத் தொழ வந்திருந்தார்கள். நான் ஷூக்களை கோபுர வாசல் தேங்காய்க் கடையில் விட்டுவிட்டு அர்ச்சனைத் தட்டு வாங்கிக்கொண்டு உள்ளே போனேன். கும்பேஸ்வரர் சந்நிதியில் கும்பிட்டு எதிரில் நோக்க, பெண்கள் பகுதியில் இரண்டு பேர் – ரத்னாவும் கங்காவும்.

தட்டை அர்ச்சகரிடம் கொடுத்து நிற்க, பெயர், நட்சத்திரம் சொல்லுங்கோ என்றார். லோக க்ஷேமத்துக்காக, எல்லா நட்சத்திரமும் என்று சொல்லிவிட்டு ரத்னாவைப் பார்த்தேன். வினாடி நேரம் திரும்ப நோக்கி, ஒரு குறுஞ்சிரிப்பு அவள் அதரங்களில். கங்கா, கண்களை மூடி தியானத்தில் இருந்தாள்.

இனிமையான நாட்கள் உனக்குக் காத்திருக்கின்றன, வா என்று அன்போடு கோவில் மணிச் சத்தமாகக் கும்பகோணமும் கும்பேஸ்வரனும் அழைக்க, நான் கோரிக்கை ஏதுமின்றிக் கை கூப்பித் தொழுதேன்.

சாரங்கபாணி கோவிலுக்குப் புறப்படும்போது பார்த்தேன், அந்தப் பெண்கள் இருவரும் வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள்.

விட்டோபா மகாமகக் குளத்துப் படித்துறையில் சொன்னபடி காத்திருந்தார். கையில் சுதேசமித்திரன் பத்திரிகை.

‘காய் சமாச்சார்?’ அபூர்வமாக மராத்திக்குத் தாவினேன்.

‘அமெரிக்காவிலே என்ன அது... பண வீழ்ச்சி... டெப்ரஷன் வந்து அங்கத்திய வெள்ளைக்காரன் எல்லாம் வேலை தேடி திருட்டு ரயில் ஏறிப் போறானாம்.’

‘விடுங்க... எங்கே நம்ம வேலையை ஆரம்பிக்கலாம்?’ என்று கேட்டேன்.

‘கடைத் தெரு போவோமா?’ என்றார். ‘ஒரு நல்ல காப்பியா குடிச்சுட்டு ஆரம்பிக்கலாம்’ என்று சொன்னேன்.

மங்களாம்பிகா விலாஸ் போகலாம் என்று தீர்மானமாகச் சொன்னார் விட்டோபா. போனோம். வாழ்நாளில் இவ்வளவு ருசியாக நான் காப்பி குடித்ததில்லை. அரேபிய அமிர்தம்.

பெரிய கடைத்தெருவில் இரண்டு மளிகைக் கடைகளுக்கு விசிட் அடித்து முதலாளிகளிடம் டீ போர்ட் விற்பனை திட்டம்பற்றி முதல் அறிமுகம் நடத்த முற்பகல் நேரம் பரபரப்பாகப் போனது.

விட்டோபா ஆள் அச்சாபிச்சமாகத் தெரிந்தாலும் ஊர் முழுக்க ஒருத்தர் விடாமல் பரிச்சயப்படுத்திக்கொண்டிருக்கிறார். கடைத்தெருவில் நடக்கும்போதே ஒரு பத்திருபது பேருக்காவது சளைக்காமல் டீ ஆபீசரை அறிமுகப்படுத்தினார்.

‘சார், டை கட்டிட்டு வந்திருக்கீங்க... நல்லாத்தான் இருக்கு. ஆனா ஊர்லே இப்படி கோட்டும் சூட்டுமா வந்தா கொஞ்சம் மிரளுவாங்க... பாத்துக்குங்க’ என்று இலவச அறிவுரை வழங்கவும் அவர் தயங்கவில்லை.

பகல் உணவாக ராமாராவ் வீட்டில், சீரகச் சம்பா வடித்து சின்ன வெங்காயம் வேகவைத்துக் கலந்த, அரைத்துவிட்ட சாம்பார், வாழைக்காய் காரக் கறி, புடலங்காய் அரையே அரைக்கால் காரக் கூட்டு, எலுமிச்சை ரசம், ஜவ்வரிசி வடகம், புதுசாக எண்ணெய் காய்ச்சி ஊற்றிய, நாள்பட ஊறிய கிடாரங்காய் ஊறுகாய், கெட்டித் தயிர் என்று அருமையான வீட்டுச் சாப்பாடு.

ஒரு நிமிஷம் தூங்கிவிட்டுப் போகலாம் என்று கண்கள் மூடித் திறந்தாலும் கட்டாயம் வேலை நேரத்தில் தூங்கக்கூடாது என்று தீர்மானித்தேன். சட்டைக் கையை மடக்கிவிட்டுக்கொண்டு முகம் கழுவி, புத்துணர்வோடு கங்கா வீட்டுக்குப் புறப்பட்டேன்.

பல்லாங்குழி விளையாட்டு இன்றி திண்ணை காலியாக இருந்தது. விட்டோபா எனக்கு முன்னாலேயே வந்து பால்காரரிடம் வாங்கிவந்த பாலை உருளியில் வார்த்து வைத்திருந்தார். பக்கத்தில் குமுட்டி அடுப்பு.

‘கொஞ்சம் தண்ணி வேணும்னா சேர்த்துக்கலாமா?’ என்று குரலைத் தாழ்த்தி விட்டோபாவைக் கேட்டேன். முதல் நாள், டீ இல்லாமல் யாரும் திரும்பக்கூடாதே.

‘அதெல்லாம் பால்காரர் பாத்துக்கிட்டார்’ என்றார் அவர்.

‘அடுப்பைப் பற்ற வைக்கலாம், நல்ல நேரம்தான்’ என்றபடி அடுப்புக் கரி கூடையை எடுத்து நான் முன்னால் வைத்தேன்.

‘அடடா பத்த வைக்க காக்கடா வாங்கலியே, தேங்காய் நார்கூட இல்லை.’ என்றார் விட்டோபா, திடீரென்று நினைவுக்கு வந்தவராக.

உடனே பிரச்னைக்குத் தீர்வு கண்டார் அவர். ‘கமலாக்கா கிட்டே கேட்கலாம்... நீங்களே கேளுங்க சார், ஆபீசர் கேட்டா அவங்களுக்கும் கௌரவம் கூடி தெரியும்.’

வாசல் கதவில் தட்டி சார் என்று கூப்பிட்டேன். அங்கே சார் யாரும் இல்லை என்று தெரியும்தான்.

உள்ளே இருந்து குரல், ‘யார் வேணும்?’ என்றது. ரேழிக்கு அந்தப் பக்கம் கூடத்தை மறைத்திருந்த மான் படம் போட்ட திரையை விலக்கிக்கொண்டு வாசலுக்கு வந்தவள் ரத்னா.

‘ஓ ஆபீசர் சார், என்ன வேணும்?’

என்னைத்தான் கேட்கிறாள். கண்ணிலும் குரலிலும் விளையாட்டுத் தனம் மின்னுகிறது. நெற்றியில் கீற்றாக வியர்வை அரும்பி நெற்றிச் சுட்டியாக அழகு சேர்க்கிறது. அடுத்த சிரிப்பை எதிர்பார்த்து துடித்து நிற்கும் சிவந்த உதடுகள். நீலப் பாவாடையைச் செருகிய இடுப்பு மின்னலாகப் பளிச்சிடுகிறது. தரைக்கு ஒத்தடம் கொடுத்துக்கொண்டு மெத்தென்ற அழகான பாதங்கள் கொலுசணிந்து கொஞ்சம் போல் தெரிய கால் நகங்களிலும் பவழ நிறத்தில் சாயம் பூசியிருந்தது.

இருளும் வெளிச்சமும் விளையாட்டுக் காட்டும் ராத்திரியில் பார்த்ததைவிட இன்னும் அழகாக, மனசை பல்லாங்குழிப் பசுவாக வழித்து வாரிக் கொள்ளை கொண்டவளாக ரத்னா நின்றாள். கையில் பிடித்திருந்த வாளியில் அவள் கொடியில் உலர்த்த எடுத்த துணிமணிகள்.

‘கொஞ்சம் தேங்காய் நார் வேணும் ப்ளீஸ்.’

நான் சொல்லி முடிப்பதற்குள் அவள் ஏற இறங்க என்னைப் பார்த்து விட்டு, சலங்கை குலுங்கிய மாதிரி சிரிக்க ஆரம்பித்துவிட்டாள். எனக்கும் சிரிப்பு வந்தது. டை, ஷு, நாகரிகமானது என்று நான் நினைக்கும் தொளதொளத்த பேண்ட், கைப்பக்கம் சுருட்டி [சரியாக்கிக் கொள்ள மறந்து போய்விட்டது], கொஞ்சம் பேண்டுக்குள் விட்ட, மீதி வெளியே

வழிந்துகொண்டிருந்த முழுக்கைச் சட்டை, கிராப்பு காணாத தலையில் வணங்காமுடி என்று நின்றுகொண்டு வீட்டுப் பெண்களிடம் தேங்காய் நார் யாசிக்கிறேன்.

'அடுப்பு மூட்டணும்...' நான் சொல்லிக்கொண்டிருந்தபோதே அவள் வாளியை ரேழியிலேயே வைத்துவிட்டுத் திண்ணைக்கு எனக்கும் முந்தி நடந்து போனாள். பின்னால் இருந்து பார்க்க, ரம்மியமான நடை அது.

'ரத்னா வாம்மா உன் கையாலே அடுப்பை மூட்டி, ஜோரா ஆரம்பிச்சு வை. எங்க ரெண்டு பேருக்கும் வேலை நிரந்தரமாகட்டும்...' என்றார் விட்டோபா.

நான் இதைவிடச் சிறப்பாக இந்த நேரத்தில் ஏதும் பேசியிருக்க மாட்டேன். விட்டோபாவுக்கு மனதுக்குள் நன்றி சொன்னேன்.

ரத்னா முகம் மலர என்னிடம் இருந்து உருளியை வாங்கி பாலை நிறைத்தாள். அவள் அடுப்பு பற்ற வைப்பதற்கு முன், கங்கா கங்கா என்று உள்ளே பார்த்துக் கூப்பிட்டாள். ஓய்வெடுக்கப்போய் பாதியில் திரும்பவந்த நிலவாக கங்கா வாசலுக்கு வந்தாள்.

ரத்னாவை அடுப்பு மூட்டிப் பற்ற வைக்க, கங்காவை பால் காய்ச்சித் தரச் சொல்லிக் கேட்டுக்கொண்டேன். 'என் ராசிக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராது டீ ஆபிசர், ரத்னா ராசிக்கு எல்லாம் அமோகமா நடக்கட்டும்' என்று சிக்கலான வாழ்த்துச் சொல்லி பால் பாத்திரத்தை அடுப்பின் மேல் வைத்தாள் அவள்.

அடுத்து மூடி போட்ட அலுமினிய டப்பாவிலிருந்து ஒரு பாக்கெட் டீ தூளை எடுத்து என்னிடம் கொடுத்தார் விட்டோபா. நான் டீ பாக்கெட்டை கையில் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் அலை பாய்ந்தேன்.

'ஓ! ஆபீசர், என்ன உங்க பிரச்னை?' கங்கா கூர்த்த நாசி முனையில் சிரிப்பு எட்டிப் பார்க்கக் கேட்டாள்.

நான் சொல்லலாமா வேண்டாமா என்று ஒரு வினாடி தயங்கி, 'பால்லே டீதூளைப் போட்டுக் காய்ச்சணுமா, தண்ணீலே டீத்தூளைப் போட்டுக் காய்ச்சணுமா?' என்று கேட்டேன்.

'அதானே, டீ ஆபீசர்னு அனுப்பறவங்க டீ குடிச்சதுகூட இல்லேன்னு அடுத்து வருமோ?' என்று ரத்னா உதட்டைக் கடித்துக்கொண்டு என்னைப்

பார்த்தாள்.

‘சரி நீயே சொல்லேம்மா... எனக்குத் தெரியாது நான் கட்டுப்படியாகறதில்லேன்னு காப்பிகூட அதிகம் குடிக்கறதில்லே...’ என்றார் விட்டோபா.

‘ஓ எப்படிப் போடணும் கங்கா?’, ரத்னா கங்காவிடம் கேள்வியைத் திருப்பியதில் அவளுக்கும் சரியான பதில் தெரியவில்லை என்று புரிந்துகொண்டேன். ஒரே பெஞ்சில் ஏறி நிற்க வகுப்பில் தண்டனை விதிக்கப்பட்ட பசங்கபோல் நானும் அவளும் நிற்பதாகக் கற்பனை செய்யச் சிரிப்பு வந்தது.

கங்கா சொன்னாள், ‘நம்ம பக்கத்திலே, ஏன் மேலண்டை, கீழண்டை பிரதேசத்திலே எல்லாம் கூட டீ இலை, டீதூள் இப்படி தண்ணியிலே கொதிக்க வச்சு டீ டிக்காஷன் இறக்கி, காய்ச்சின பாலோடு அதை சேர்த்து, சர்க்கரை கலந்து டீ போடறது வழக்கமாகிட்டு இருக்கு. வடக்கே பால்லேயே டீத்தூளைப் போட்டு கொதிக்க வச்சு டீ. ரெண்டு பழக்கத்திலே எது நல்ல டீ கொடுக்கும்? அவங்கவங்க ருசியைப் பொறுத்தது அது...’

கங்கா பேசி முடித்ததும் ரத்னா புது விஷயத்தைக் கற்றுக்கொண்ட சந்தோஷத்தில் கை தட்டினாள். நானும் ஹிப்ஹிப்ஹுரே சொல்லிக் கைதட்ட விட்டோபா, என்ன சமாசாரம் அது என்று குழம்பி நின்றார்.

‘கை தட்டு எல்லாம் சரிதான், எப்படி டீ போட்டாலும் டிகாஷனை வடிகட்ட, வடிகட்டி வேணுமே, அது எங்கே என்று கேட்டாள் கங்கா. நான் விட்டோபாவைப் பார்த்தேன். அவர் சங்கோஜத்தோடு சொன்னார் –

‘இன்னிக்கு முதல் நாள் இல்லே... வடிகட்டி இல்லாம அட்ஜஸ்ட் பண்ணிக்கலாமா... வேறே எதிலாவது வடிகட்டி....’

நானும் எதிரொலித்தேன் – ‘வேறே எதிலேயாவது வடிகட்டி.’

அதான் ஜமக்காளம் இருக்குமே என்றாள் கங்கா. ரத்னா ஓவென்று சிரித்தபடி அவள் தோளில் தட்ட, உள்ளே இருந்து கங்காவின் அம்மா என்ன விஷயம் என்று வாசலுக்கு வந்து பார்த்தாள்.

‘ரத்னா, கங்கா உள்ளே போங்க’, என்றபடி அவர்களை மறித்து நிற்க இரண்டு பெண்களும் பக்கவாட்டில் நழுவி அடுப்புக்கு முன்னால் போய் நின்றார்கள்.

‘ஏண்டி பொண்ணுகளா, அடுப்பு பக்கத்திலே நின்னா மேலே பத்திக்கப் போவுது. அது வேறே யார் அப்புறம் வைத்தியம் பார்க்கறது… உனக்குன்னு ஏதாவது சிரிக்கறதுக்கு கிடைச்சுடும்… விட்டோபா தம்பி, டீ போர்ட் உத்தியோகம் போக்குவரத்து எல்லாம் திண்ணையோட வச்சுக்கறது நல்லது.’

என்னை பொதுவாகப் பார்த்து என்னிடம் போய் அழுந்த அர்த்தமாகும்படி சொல்லிவிட்டு உள்ளே போனாள் கமலா பாய். ஒரு நிமிஷம் அங்கே நடுராத்திரி அமைதி.

கங்கா உள்ளேபோய் வடிகட்டியை எடுத்துவந்தாள். நான் நன்றி சொல்லி வாங்கிக்கொண்டேன். ஆல் த பெஸ்ட் என்றபடி குமிழ்ச் சிரிப்போடு ரத்னா வாழ்த்து சொல்ல முதல் ஈடு டீ குடிக்கத் தயாராக பாத்திரத்தில் உருவானது.

‘கங்கா, ஒரு போகிணி எடுத்து வா… உங்க வீட்டுக்குத்தான் முதல் டீ தரப் போறோம்’ என்று விட்டோபா சொன்னார்.

‘ஆபிசர் சார், உங்களுக்கும் எனக்கும் டீ குடிக்க ரெண்டு கப்பும் சாசரும் வாங்கிட்டேன். பாத்திரம் வாங்கினதுலே தள்ளுபடி கிடச்ச பணத்திலே இது வாங்கினதாலே சர்க்கார் பணத்துலே சொந்த செலவுல்லே வராது…’ – என்றபடி விட்டோபா டீயை ஒரு டம்ளரில் நிறைத்து என்னிடம் கொடுத்தார்.

நான் சட்டென்று பக்கத்தில் நின்ற ரத்னாவிடம் அதை நீட்டினேன். ‘ரத்னா ஜி, முதல் டீ நீங்க டேஸ்ட் பண்ணினதா இருக்கட்டும்.’

அவள் கையில் கொடுக்கும்போது அந்த விரல்கள் தண்ணென்று என் விரல்களோடு ஒரு வினாடி உறவாடின. வாழ்க்கை இனிமையானது என்று அந்த வினாடியில் கும்பகோணம் துக்காம்பாளையத் தெரு வீட்டுத் திண்ணையில் மனதிலே மயிலாடியது. இவள் என் மனைவி யாவாள் என்று மனம் திரும்பத் திரும்பச் சொன்னது. எப்படி என்று கேட்டேன். பதில் இல்லை.

ரத்னா டீ குடித்துவிட்டு பிரமாதம் என்று சொல்லும்போது கமலா அம்மாள் போகிணியோடு வாசலுக்கு வந்தவள் பக்கத்தில் பக்கத்தில் நானும் ரத்னாவும் நிற்பதைப் பார்த்து சற்றே கவலைப்பட்ட முகக்குறிப்பைக் காட்டினாள்.

‘ரத்னா உள்ளே போ’, கண்டிப்பும் கரிசனமும் குரலில் காட்டிச் சொன்னாள்.

‘போறேன் அத்தை. டீ டிபார்ட்மெண்ட்காரங்க எப்படி இருக்குன்னு முதல் முதலா டீ போட்டுட்டு அபிப்ராயம் கேட்டாங்க... பம்பாய் டீக்கு இது ரொம்ப சுமார்தான்... ஆனா டீ மாதிரி இருக்கு...’ என்று கொஞ்சம் இகழ்ச்சியாகச் சொன்னது பொய் என்று எனக்குப் புரிந்தது.

துக்காம்பாளையம் தெருவில் எல்லா வீட்டுக்கும் விட்டோபா டீகொண்டுபோய்க் கொடுத்தார். நானும் முதல் நாள் என்பதால் வீடு வீடாக ஏறி நமஸ்காரம் சொல்லி இன்னும் அரை மணி நேரத்தில் கமலா பாய் அம்மாள் வீட்டு வாசலில் கூட்டத்துக்கு வரணும் என்று கேட்டுக்கொண்டேன்.

சாயந்திரம் ஐந்து மணிக்கு கிட்டத்தட்ட எல்லா தெருப் பெண்களும், வேறு வேலை இல்லாத வயசானவர்களும் கூடி விட்டார்கள். டீயின் மகத்துவம்பற்றி நான் பேசியது, எனக்கு டீ போர்ட் கொடுத்த தகவலை முழுக்க கிரகித்துத்தான். பள்ளிப் பிள்ளைகள் யாரோ எழுதிக் கொடுத்ததை நெட்டுருப் போட்டு, ஆண்டு விழாவில் பேசுகிறது போல் இருந்தது அது என்று எனக்கே தெரிந்தது.

ரத்னா மிகுந்த ஆர்வத்தோடு நான் பேசுவதைக் கேட்டபடி வாசலில் நின்றிருந்தது மனதுக்கு சந்தோஷமாக இருந்தது. நான் பேசிய பிறகு பத்து நிமிடம் விட்டோபாவும் டீ போர்ட் ஆபீசரின் பதவி விசேஷம், சலுகை விலைக்கு டீ கொடுக்க இருப்பது என்று நான் அடுத்த கூட்டத்தில் பேச உத்தேசித்திருந்ததைத் தப்பும் தவறுமாகப் பேசி முடித்தார்.

கேள்விகள் சந்தேகங்கள் இருந்தால் கேட்க அடுத்த அரை மணி நேரம் செலவிட்டேன். டீ போர்ட் ஏற்கெனவே எதிர்பார்த்து பதிலும் தயார் செய்து என்னிடம் கொடுத்தவைதான் பெரும்பாலான கேள்விகளும்.

ஒரு கிழவர் விடாப்பிடியாக, ‘டீ குடித்தால் தினசரி வாழ்க்கை நன்றாக இருக்குமா?’ என்று கேட்டார். நான் ஐந்து நிமிடம் டீயின் மகிமையை ஏற்கெனவே பாடிய ராகத்தைவிட்டு இன்னொரு ராகத்தில் வெளிப்படுத்தினேன்.

‘அது இல்லே சார், டீ குடிச்சா ராத்திரி சௌகரியமா இருக்குமா?’

‘ஓ குடிச்சா காலையிலே கலகலன்னு சவுகரியமா இருக்கும்’ என்றார் விட்டோபா.

‘அது இல்லேப்பா, தாம்பத்தியம் மெச்சத் தகுந்த நிலை அடையுமா?’ கிழவர் விடாமல் பிடித்தார்.

இதோடு முடித்து வைக்க, ‘ஆஹா, ரொம்ப பிரமாதமா இருக்கும்’ என்றேன்.

‘அதைத்தான் கேட்கறேன்... அதுக்கு முன்னாடி டீ குடிக்கணுமா பின்னாடியா?’ என்று அதுக்கு என்பதில் அழுத்தம் கொடுத்து அடங்காமல் தொடர்ந்தார் அவர்.

எதுக்கு முன்னாடியா எதுக்கு பின்னாடியா, ஒரு கண்றாவியும் புரியவில்லை. ‘முன்னாடி ஒண்ணு பின்னாடி ஒண்ணு குடிக்கலாம்’, என்று நான் பொதுப்படையாகச் சொல்ல ரத்னாவும் கங்காவும் சிரிப்பை அடக்கியபடி உள்ளே ஓடியது தெரிந்தது. ஏதோ அபத்தமாகப் பேசிவிட்டேன் என்பது மட்டும் புரிந்தது. முன்னாடியா பின்னாடியா? ஹெட் ஆபீசைத்தான் கேட்க வேண்டும்.

★

# காலையில் எழுந்திருக்க



## இன்பமான வழி

நீங்கள் காலையில் சுலபமாக எழுந்திருக்கிறீர்களா அல்லது எழுந்த பிறகு சோம்பலாகவும் மந்தமாகவும் இருக்கிறீர்களா? எழுந்தவுடன் சுறுசுறுப்பாக இருக்க ஒரு கப் டீ அருந்துவதுதான் சிறந்த வழி. இரவின் சோர்வை போக்கி, பகலில் செய்ய வேண்டிய வேலைகளுக்கு உங்களை சுறு சுறுப்பாகவும் சுமுகமாகவும் இருக்கச் செய்வது இந்த ஒரு கப் டீ தான். இதை எல்லோரும் அனுபவிக்கலாம். சூடான டீ மலபந்தத்தை நிவர்த்திக்கும். அருந்தியவுடன் உடலுக்கும் மனதுக்கும் ஒருங்கே உற்சாகமளிக்கும்.

உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் காலையில் டீ அருந்தும் நற்பழக்கத்தை கைக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நல்ல டீ தயாரிக்கும் சில சுலபமான முறைகளை அனுசரிக்கத் தவறுவதால் டீ அருந்துவதின் பூரண பலனை அநேகர் பெறுவதில்லை. நல்ல முறையில் தயாரித்த சிறந்த டீயை அருந்துங்கள்.



### நல்ல டீ தயாரிக்கும் முறை

1. கெட்டிலில் டீ காய்ச்சக்கூடாது. டீ பாத்திரத்தை உபயோகியுங்கள்.
2. உலர்ந்த டீயை பாத்திரத்தில் போடும்போது பாத்திரம் ஈரமில்லாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் நறுமணமுள்ள கஷாயம் கிடைக்கும்.
3. கப்புக்கு ஒரு டீ ஸ்பூன் வீதமும், பாத்திரத்துக்காக ஒரு டீ ஸ்பூனும் டீ போடவும்.
4. புதிதாக காய்ச்சிய நீரையே உபயோக்கிக்கவும். ஒரு தரம் காய்ச்சிய நீரையோ, அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காய்ச்சப்பட்ட நீரையோ ஒருபோதும் உபயோக்கிக்காதீர்கள். தளதளவென்று குமிழியிட்டு கொதிக்கும் நீர் தான் சரியாக காய்ச்சின நீர்.
5. கஷாயம் இறங்க குறைந்தது 5 நிமிஷ கால நேரம் வேண்டும்.
6. பாத்திரத்தில் இருக்கையிலேயே பால் சர்க்கரை சேர்க்காதீர்கள்; கப்புகளில் விட்ட பிறகு சேர்க்கவும்.

**எந்தநேரமும்**

இரண்டே மாதத்தில் ஊரும் ஊர்க்காரர்களும் நல்ல பழக்கமாக விட்டோபா இரண்டாம் காரணம். டீ முதல் காரணம். நான் பேண்ட் சட்டை ஷூவில் இருந்து வேட்டிக்கு மாறி ஊரோடு ஒத்து வாழத் தொடங்கியது மூன்றாம் காரணம். கிட்டத்தட்ட ஊர்ப் பிரமுகர் அந்தஸ்து டீ பீல்ட் ஆபீசருக்கு அங்கே.

பக்கத்தில் சக்ரபாணி கோவிலுக்குப் போனாலோ இல்லை காலை வீசிப் போட்டு ஆதி கும்பேஸ்வரர் கோவில் மொட்டைக் கோபுர வாசலுக்கு வந்தாலோ, இரண்டு கோவிலிலும் நாளைக்கு தரிசனம் செய்து கொள்ளலாம் என்று இன்னும் அருகில் ஏகாம்பரேஸ்வரர் கோவிலுக்குப் போய்ச் சேர்ந்தாலோ, பட்டர்கள், குருக்கள்மார், நாகசுவர கோஷ்டி, ஓதுவார்கள், கும்பிட வந்தவர்கள் என்று பலரும் என்னெதிரே புன்னகையோடு கடந்து போகிறார்கள்.

கடைத்தெருவில் பலசரக்குக் கடை என்றில்லை, ஸ்டேஷனரி கடை என்றில்லை, மருந்துக் கடைக்காரர்களும் ஜவுளிக்கடைக்காரர்களும் கூட கூப்பிட்டு வைத்துப் பேசுகிறார்கள் –

'சாயா சார், அதென்ன நாங்க வியாபாரத்தை கவனிச்சுக்கிட்டு இஞ்ச சிவனேன்னு இருக்கோம்... வீட்டிலே பசங்க, பொண்டாட்டி, அம்மா, மாமின்னு நீங்க எப்போ டீ எடுத்து வருவீங்கன்னு பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க... டீத்தூள் வாங்கணும்னு நச்சரிப்பு தாங்கலே... நாலு பாக்கெட் நம்ம கடையிலும் போடுங்களேன்.'

கேட்டவர் ஜவுளிக்கடை உடமையாளர். இன்னும் சிலர் இதற்கு மேலும் போய், 'வீடு இருக்கற தெருவிலே எல்லாம் காந்தி கணக்குலே டீ கொடுக்கறீங்களே, அது போல கடைத்தெருவிலேயும் கொடுங்க... பின்னாலேயே ஒரு மலையாளத்தாரை அனுப்புங்க... மெட்றாஸ் மாதிரி டீக்கடை போடுவார் வந்தவர்... அப்புறம் என்ன, அவர் கடை டீ இல்லாம இருக்க முடியாதுன்னு ஆகிடும்' என்று யோசனை தெரிவித்தார்கள்.

மலையாளத்து சேட்டன்மார் யாரும் வேலை இல்லாமல் இருக்கிறார்களா என்று விட்டோபா மூலம் விசாரித்தேன். வேலை இல்லாத மலையாளியா, எங்கே போய்ப் பிடிக்க, என்று அவர் நழுவி விட்டார்.

கும்மோணம் முழுக்க ஆள் யாரென்று பரிச்சயமானதில் ஒரே ஓர் இக்கட்டு என்ன என்றால், வந்த நாளில் படியேறி அற்புதமான ஃபில்டர் காப்பி

குடித்த மங்களாம்பிகா ஹோட்டலில் அப்புறம் காப்பி சாப்பிடப் போக முடியவில்லை. ட போர்ட்காரன் காப்பி சாப்பிடுவதாவது! பேசுவார்கள். வாசாலகமாக நொட்டச்சொல் சொல்வார்கள். எதுக்கு அதெல்லாம்?

விட்டோபா தினசரி சுதேசமித்திரன் வாங்கிப் படிப்பதை நிறுத்தி விட்டார். ‘நல்லதா ஒண்ணுமே நடக்குறதில்லேங்கோ... இங்கிலாந்துலே பத்திரிகை தொடர்கதையை பயாஸ்கோப் ஆக்கி ஜனம் கூடி வந்து தினம் பாக்குதாம்... என்னாத்துக்கு? தினம் அத்தப் போய்ப் பார்த்தா, பார்க்கறபோதே காட்டேறி மாதிரி ரத்தத்தை உறிஞ்சுடுமே... பயாஸ்கோப் லேசுப்பட்டதில்லே... கரண்ட் ஆச்சே’

வந்து பத்து நாளில் ரத்னா நெருங்கி வந்தாள். முதலில் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டது, சக்ரபாணி கோவில் இருண்ட பிரகாரத்தில் ஒரு நொடி கைத்தலம் பற்ற, விட மாட்டேன் என்று இறுக்கிப் பிடிக்க, விடுங்க என்று உள்ளங்கையில் பூவாகக் கிள்ள என அந்த சிநேகம் வளர்ந்தது.

ரெண்டு பேரும் ஸ்கூல் பைனல் படித்து முடித்து இருக்கிறோம். காலேஜ் படித்திருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் என்ன, சேர்ந்து வாழ்க்கையில் பிரயாணப்பட பாதுகாப்பாக ஒரு சர்க்கார் உத்தியோகம்.

இதைச் சொல்லாமல் இருக்க முடியாது, ரெண்டு பேரும் வீட்டில் பெரும்பாலும் தமிழும், மராத்தியும் பேசுகிறவர்கள். அசல் தஞ்சாவூர் ஷத்திரிய மராத்தி குடும்பங்களிலிருந்து வருகிறவர்கள். எங்கள் குடும்பத்தில் மூன்று தலைமுறையாக விரதம் எடுத்துக்கொண்டு சைவ உணவு உண்கிறவர்கள். ரத்னா குடும்பத்தில் எப்போவாவது சைவம் சாப்பிடுவதும் உண்டுதான்.

எப்படி நாங்கள் தம்பதிகளாவது?

என்னென்னமோ வழி முறைகளைப் பேசிப் பார்த்தோம். கங்காவுக்கு இந்த சிநேகிதம் தெரிய வர, அவள் முதலில் பயந்து போனதாக ரத்னா சொன்னாள்.

‘இந்த வீட்டு உறவா இருந்து நீயாவது கல்யாணம் கட்டி நல்லா இரு’ என்று அவள் சொன்னபோது அதில் உள்ளூர அடர்ந்த சோகமும் அதை விட ரத்னா மேல் கங்காவுக்கு ஏற்பட்டிருந்த அன்பும் தெளிவாகத் தெரிந்தது.

அவ்வளவு அழகு கங்கா. சொல்லப் போனால் ரத்னாவைவிட ஒரு பிடி உசரம் மட்டுமில்லை, திருத்தமான ஆகிருதி மட்டுமில்லை, முக வசீகரத்திலும் ஒரு துளி கூடுதல் சோபை அவளுக்கு உண்டு என்பதை ரத்னாவே சொல்வாள். எல்லாம் இருந்தும் தமிழ் பிராமணன் அவளுக்கு அப்பா என்பதால் ஸ்வயஜாதி எது என்று தெரியாத குழப்பம். தமிழ் மாப்பிள்ளை, ஷத்ரிய மராத்தி வரன், தேஷஸ்த மராத்தி பிராமண வரன் என்று எது வந்தாலும் ஓர் அளவுக்கு மேல் பேச்சு வார்த்தை முன்னால் போவதில்லையாம். இதுவரை பதினோரு பேர் பெண் பார்த்துவிட்டுப் போனதாக ரத்னா சொல்ல மனதில் கங்காவுக்காக அழுதேன்.

‘அழுவாதீங்க... கண்ணைத் தொடச்சுக்குங்க...’

ஆள் அரவம் குறைந்த மாலை நேரத்தில், சக்ரபாணிப் பெருமாள் கோவில் பிரகாரத் தூணருகே நின்று ரத்னா சொன்னாள். இதுதான் சாக்கு என்று இடுப்பில் அவள் செருகி இருந்த கர்ச்சீபை எடுத்து சட்டை பாக்கெட்டுக்குள் பத்திரப்படுத்தினேன். அந்த வாசனை நாள் முழுக்கக் கூட இருந்தது. ராத்திரியில் தூக்கம் கெடுத்தது.

விட்டோபா கூட ஆச்சரியப்பட்டார் – ‘என்ன சார், வேறே வேலை இல்லேன்னா துக்காம்பாளையத் தெருவிலே டீ போடலாம்னு கிளம்பிடுறீங்க...’

ரத்னாவிடம் சொல்ல அந்த சிரிப்புக் குப்பி இதற்கும் சிரித்தாள்.

‘இப்படி சிரிச்சுச் சிரிச்சு மனசுலே உட்கார்ந்தாச்சு... அடுத்த வாரம் ஊருக்கு போறேங்கறே... அப்புறம் எப்படி நம்ம சிநேகிதம் வளரும்?’

சக்ரபாணிப் பெருமாள் கோவில் பிரகாரத்தில் சுற்றி வரும் கூட்டம் ஓய்ந்த முன்னிரவு சூழும் பொழுதில் ரத்னாவைக் கேட்டேன். அவள் என் உள்ளங்கையில் அவசரமாக ஒரு முத்தம் கொடுத்தாள். அவளைத் தோளோடு அணைக்க நான் முயற்சி செய்ய, பின்னால் ஒரு குரல் – ‘நாளைக்கு ரெட்டிராயர் அக்ரஹாரத்துலே ட்யூட்டி. சர்க்கரை ஓர் ஆழாக்குதான் ஸ்டாக் இருக்கு... ஒரு வீசையாவது வாங்கக் காசு வேணும்... சக்கரை கம்மியா டீ கொடுத்தா டீயும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்னு திருப்பி அனுப்பிடுவாங்க... நாக்கு எல்லாருக்கும் நாலு முழம்.’

விட்டோபா சீரியஸாகச் சொன்னார். எப்போ வந்தாரோ. எல்லாம் பார்த்திருப்பாரோ. அதுக்காக அவருக்கும் தர முடியுமா என்றாள் ரத்னா என் காதில் மட்டும் கேட்க. அது போன வாரம்.

இன்றைக்கு துக்காம்பாளையத் தெருவிலேயே டீ உபசாரத்தை வைத்துக்கொள்ளலாமா என்று கேட்க கங்கா வீட்டுக்குப் போனேன். ரத்னாதான் வாசலுக்கு வந்தது.

'இன்னிக்கு பட்டணத்திலே இருந்து யாரோ ஒரு வெங்கோபராவ் கங்காவைப் பொண்ணு பார்க்க வர்றார்... அதுனாலே இன்னிக்கு திண்ணையிலே டீ போடவோ, அங்கே வச்சு டீத்தூள் விக்கவோ வேண்டாம்னு கமலா அத்தை சொல்லச் சொன்னாங்க... அதுக்குத்தான் வாசல்லேயே நின்னுட்டிருந்தேன்...'

அவள் இப்போது புன்னகைப்பாள் என்று தெரியும். ஏமாற்றவே இல்லை. என்னைப் பார்க்க நின்றிருக்கிறாள் திருடி.

'சார் இங்கே இன்னிக்கு இல்லேன்னு ஆச்சு... நாம காமாட்சி ஜோசியர் தெருவுக்கு விசிட் அடிச்சா என்ன? போய் ரொம்ப நாளாச்சே...' விட்டோபா புறப்பட ஆயத்தமாக இருந்தார்.

காமாட்சி ஜோசியர் தெருவில் டீ உபசாரம் என்று போகிற வழியில் யாதவர் தெருவில் கோனாரிடம் சொல்லிவிட்டுக் கிளம்பவேண்டும்.

பள்ளிக்கூடம் அரைப் பரீட்சை லீவு என்பதால் காமாட்சி ஜோசியர் தெருவில் தெருவை அடைத்து கபடி விளையாடிக்கொண்டிருந்த பையன்கள் எங்களைப் பார்த்து உள்ளபடிக்கு சந்தோஷப்பட்டார்கள்.

'டீ சார், குட் மார்னிங்' என்று பகல் ஒரு மணிக்கு சல்யூட் செய்தவர்கள் 'பிஸ்கட் தருவீங்களா இன்னிக்கு?' என்று ஆர்வத்தோடு கேட்டார்கள். இவர்களுக்கு இத்தனை சீக்கிரம் டீயை, காப்பியை பழகித்தர வேண்டுமா என்று தயக்கமாக இருந்தது.

'கோனார் வந்தாச்சுன்னா பால் காய்ச்சி ஆரம்பிச்சுடலாம்... இன்னிக்கு 'எல்லாருக்கும் இலவசம் நாள்', அப்படித்தானே... இல்லே, 'நீ பால்கொண்டு வா நான் டீ டிகாஷன் தரேன்... ஊதி ஊதி குடிக்கலாம்' தினமா?' என் அன்பான உதவியாளர் பரபரத்தார்.

விட்டோபாவுக்கு சாங்கோபாங்கமாகப் பேசத் தெரியும். அவ்வப்போது விளங்காத்தனமாக ஏதாவது செய்வதை பெரிசாகக் கண்டுகொள்ளாமல் இருந்தால், அவர் டீ போர்டுக்கு வந்து சேர்ந்த விலை மதிப்பற்ற வைரம்.

கோனாரிடம் சொல்ல மறந்து போயிருந்தது. போய்ச் சொல்லி வருகிறதாக விட்டோபா கிளம்பினார்.

'எங்கே போய்ப் பார்ப்பீங்க? துக்காம்பாளையத் தெருவுக்கு கடைசியாத்தானே வருவார்... வேறே எத்தனை தெருவிலே போய் கோபாலகிருஷ்ண கோனாரைத் தேடுவீங்க? சைக்கிள் வேறே ஓட்ட மாட்டீங்க'

'நீங்க ஓட்டுவீங்களா?' என்று எதிர்க் கேள்வி கேட்டார்.

'ஓட்டுவேன்... என்னோட ராலி சைக்கிளை மட்டும்' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு சைக்கிள் வந்து நின்றது. ஆண்கள் சைக்கிள் என்றாலும் நளினமாக ஓட்டி வந்து நிறுத்தியவள் ரத்னா. கோனார் சைக்கிள் அது என்று பின்காரியரில் பால் கேனைப் பார்த்ததுமே தெரிந்தது.

'நீ கோனாராயிட்டியா?' என்று அவள் பக்கத்தில் வந்ததும் கேட்டேன். வியர்த்து இருந்தாள். அப்படியே கட்டி அணைத்து உதட்டு மேல் வியர்வையை இதழால் ஒற்றி எடுக்கவேண்டும் என்று நேரம் காலம் பார்க்காமல் மனசு நச்சரித்தது.

'டீ ஆபீசர், வீட்டு விசேஷத்துக்கு பால் சொல்ல மறந்து போச்சு. கோனார் கையை விரிச்சுட்டார். நான் அவர்கிட்டே சண்டை போட்டு, கங்காவை பொண்ணு பாக்கறதுக்கு கட்டாயம் பால் கொடுத்தே ஆகணும்னு வற்புறுத்திச் சொன்னேன்... உங்க கிட்டே கேக்கச் சொன்னார்... நீங்க காமாட்சி ஜோசியர் தெருவிலே டீ ஆத்தறதை நாளைக்கு வச்சுக்குங்க, நம்ம தெருவிலேயே நம்ம வீட்டிலேயே இன்னிக்கு டீ செரிமனி...'

நீளமாகப் பேசி நிறுத்த அவளுக்கு மூச்சு வாங்கியது. அது பார்க்க, வேறே என்ன சொல்வேன், அழகாக இருந்தது.

என்னிடம் இதைத் தெரியப்படுத்த கோனாரின் 26 இஞ்ச் சைக்கிளைப் பறித்துக்கொண்டுவந்துவிட்டாள். பாலை முன் ஜாக்கிரதையாகப் பறிமுதல் செய்து கங்காவின் வீட்டுக்குள் வைத்திருக்கிறாளாம்.

திண்ணையில் இல்லாமல் எப்படி பால் காய்ச்சி டீ கொடுக்கறது? நான் விழித்தேன்.

‘ஏன், வீட்டுக்குள்ளே டீ போடறது’ அவள் விஷமமாகச் சிரித்தாள்.

‘ஓ ஸ்பெஷலிஸ்ட் விட்டோபா மாமா டீ போடட்டும்... நான் கமலா பாய் அத்தையோட கூட டிபன் பரிமாறறேன்... வடை சுட வேண்டி இருக்கு... அதையும் நான்தான் கவனிச்சுக்கணும்...’ என்று நிறுத்தாமல் பேசினாள்.

‘அப்போ நான்?’ என்று கேட்டேன்.

‘நூறு தடவை துக்காம்பாளையத் தெருவிலே குறுக்கும் நெடுக்கும் போய்ட்டு வாங்க.’

‘அலுத்துப் போனா?’

‘எனக்கு அசிஸ்டெண்டா வடை சுடுங்க.’

அவள் சைக்கிளை ஓட்டிக்கொண்டு போயே போய்விட்டாள்.

‘நாளைக்கு வரேண்டா பசங்களா’ என்று காமாட்சி ஜோசியர் தெரு நண்டு சிண்டுகளிடம் விடைபெற்று வேகமாக துக்காம்பாளையத் தெரு வந்தேன்.

மாலை நாலு மணிக்கு நானும் விட்டோபாவும் கமலா பாய் வீட்டு சமையலறையில் டீ போட்டுக்கொண்டிருக்க, ஹாலில் மதறாஸிலிருந்து வந்த வெல்ல மண்டிக்கார வெங்கோபராவ் அண்ட் பார்ட்டி கும்பகோணத்தில் கொசு அதிகம் என்று கல்யாணப் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருந்தார்கள். ராமாராவ் மாமாவும் கல்யாண ப்ரோக்கர் அவதாரத்தில் எழுந்தருளி இருந்தார்.

வெங்கோபராவுக்கே நாற்பது வயது காணும். கூட வந்த மூன்று பெரிசுகளும் எழுபது வயது யுவர்கள். கமலா பாய் பரிமாறிக் கொண்டிருக்க ஜாங்கிரிகளையும், போளியையும் வந்தவர்கள் ஒரு வழி பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

‘ஓ ஆபீசர், நிஜமாவே வடை சுடுவீங்களா?’, வாழை இலைத் துண்டில் வடை மாவைப் பரப்பி வடை தட்டிக்கொண்டிருந்த ரத்னா கேட்டாள். அவள் பரிமாற வரவேண்டாம் என்று கமலா பாய் சொன்னதற்கு எனக்கு அர்த்தம் புரியாமல் இல்லை. அக்காவைப் பெண் பார்க்க வந்து தங்கையைப் பெண் கேட்கிற உலகம் இது.

வடை தட்டிக்கொண்டே, கங்கா எங்கே என்று ரத்னாவைக் கேட்டேன். முகத்தை அலம்பிக்கொண்டு, அம்மா அழைத்ததும் ஒரு நிமிடம் வெளியே

வந்து நமஸ்காரம் பண்ணிப் போக சலிப்போடு சம்மதித்திருக்கிறாளாம்.

கோபு எங்கே? அவன் இந்தப் பக்கம் வந்தே ரெண்டு வாரம் ஆகிறது நினைவு வந்தது. காலேஜ் மூடி வைத்திருப்பதால் சொந்த ஊருக்குப் போயிருக்கலாம்.

ராமாராவ் மாமா சமையல்கட்டுக்குள் வியர்த்து விறுவிறுத்த என்னையும் பக்கத்தில் அதே ஸ்திதியில் ரத்னாவையும் கொஞ்சம் நெருக்கமாகவே நிற்கப் பார்த்துத் தலையை ஆட்டிக்கொண்டார். தப்பு என்கிறாரா, எப்படி வேணும்னாலும் போங்க என்கிற சைகையா புரியவில்லை.

வெங்கோபராவ் கூட வந்த பெரிசு ஒருத்தர் சத்தமாக ராமாராவ் ராமாராவ் என்று ஹாலில் இருந்து கூப்பிட, வடை எடுத்துப் போக சமையல்கட்டுக்கு வந்த ராமாராவ் அவசரமாக வெளியே ஓட, விட்டோபா டீயை எடுத்து டம்ளர்களில் வார்த்தார். என் கைங்கர்யத்தில் டீ கமகமவென்று ரெடியாகி விட்டிருந்தது. தேயிலையைப் பாலோடு சேர்த்துக் கொதிக்க வைத்து ஏலம், சுக்கு, இஞ்சி தட்டிப் போட்டு வசீகரமான வாடை அடிக்கும் டீ. இந்த டீக்கே இந்த வீட்டில் கண்ணை மூடிக்கொண்டு பெண் எடுக்கலாம்.

விட்டோபா நான் திரும்பிப் பார்ப்பதற்குள் டீயை எடுத்துக்கொண்டுபோய் வந்தவர்களிடம் நீட்டியதை பதைபதைப்புடன் பார்த்தேன். வடை இன்னும் பரிமாறவே இல்லை.

அந்த கோஷ்டி எல்லா பாராட்டோடும் டீயை ருசித்துப் பருக விட்டோபா மனம் குளிர்ந்து, ‘உங்கள் மாலை நேரத்தை இனிமையாக்குகிறது டீ. தேநீர் சைனாவில் முதலில் பழக்கத்துக்கு வந்தது’ என்று விற்பனை பிரசங்கத்தை ஆரம்பிக்க, நான் அவசரமாகப் பின்னால் சென்று அவரைக் கையைப் பிடித்து இழுத்து உள்ளே அனுப்பினேன்.

‘பிள்ளையாண்டன் யாரு குக்கனா, வயசுப் பொண் இருக்கற வீட்டுலே இள வயசு பரிசாரகனை வேலைக்கு ஜாக்கிரதையாதான் வச்சிருப்பாங்க... இன்னிக்கு விசேஷம்னு டெம்பரியா கூப்பிட்டிருப்பாங்க... ‘என்று ஒரு பெரிசு ஊகக் கச்சேரி தொடங்க, கமலா பாய் உள்ளே போனாள்.

இன்னொரு பெரியவர் ‘டெல்லி சுல்தான் அரண்மனை அந்தப்புரத்திலே அழகான பசங்களை அறுத்துவிட்டுட்டு வேலைக்கு சேர்த்துப்பாங்களாம்’ என்று யாரும் கேட்காத தகவல் தந்தார். அது என்னை அதிர்ச்சியோடு புரட்டிப் போட்டது.

ரத்னா கேட்டிருந்தாள். ஆனால் சிரிக்கவில்லை. அவள் இடுப்பை நான் வெறிக்க, போடா என்று தாவணியால் மறைத்துக்கொண்டாள். எந்தக் கிழம் என் ஆண்மையைச் சந்தேகப்பட்டால் என்ன, என் ரத்னா என்னோடுதான் எப்போதும்.

'உருளியை, விட்டோபாகிட்டே கொடுத்துவிட்டுடு...' என்று ரத்னாவிடம் சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டேன்.

'மாட்டோம், பிச்சு தின்னுடுவோம்' என்றாள் குறுகுறுப்பாகப் பார்த்து. இதற்கே அவளைப் பிய்த்துத் தின்னலாம் என்று ரசனை உள்ள காட்டுமிராண்டியாக மனம் சொன்னது.

நான் சக்ரபாணி கோவிலை நோக்கி நடந்தபோது வெங்கோப ராவ் அண்ட் பார்ட்டி வெளியேறிக்கொண்டிருந்தார்கள். ராமாராவ் மாமா பின்னாலேயே போனார்.

கோவிலுக்குப் போய்விட்டு ஏழு மணிக்குக் கிளம்பியபோது, கமலா பாய் பிரகாரத்தில் தூணை ஒட்டி உட்கார்ந்து எங்கோ வெறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவள் பிரமை பிடித்ததுபோல் இருந்தாள்.

துக்காம்பாளையத் தெருவுக்குத் திரும்ப வந்தபோது என்னமோ தோன்ற கங்கா வீட்டுக்குப் படியேறினேன். ரத்னாவும் கங்காவும் சிரித்துப் பேசிக்கொண்டிருக்க, 'வாங்க சார், ரொம்ப நன்றி' என்றாள் கங்கா.

வெங்கோப ராவுக்குப் பெண் பிடித்ததாம். ஆனால் அவளுடைய அப்பா ஒரு தமிழ்ப் பிராமணர் என்பது ஒத்து வராதாம். எதிர்பார்த்ததுதான். அடித்துப் பிடித்துக்கொண்டு பார்ட்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு பாசஞ்சர் பிடிக்கப் போன அவசரத்தில் வடை வந்து சேரும்வரை இருக்க முடியவில்லையாம்.

'வந்ததுக்கு வடை சாப்பிட்டுப் போங்க' என்றாள் கங்கா. வடை பரிமாறுவதற்குள் வெங்கோபராவ் வாக் அவுட் செய்ததால் வடை, சட்னி நிறைய மீந்திருக்கிறதாம்.

'மாமி அரிசி உப்புமா, கத்தரிக்காய் கொத்ஸு ராத்திரி சாப்பாட்டுக்கு செய்யப் போறதா காலையிலேயே சொல்லிச்சு' என்றேன் மன்னிப்புக் கேட்கும் தொனியில்.

'சரியான சாப்பாட்டு ராமன்' என்றாள் ரத்னா. 'இருந்துட்டுப் போறேன்' என்றேன்.

‘போன தடவை வாழைக்காய் பஜ்ஜி, அதுக்கு முந்தி போண்டா… இப்போ மெனுவை மாத்தி உளுந்து வடை… அதுவும் மிச்சமாயிடுச்சு… பேஷ்…’

கங்கா சிரித்தபடி சொன்னாலும் அவள் மனம் புரிந்தது. ரத்னா என்னை இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போய் ஒரு பாத்திரத்தில் நாலு வடை சட்னியோடு வந்தாள். ‘வீட்டுலே போய் தின்னுங்க. ராமாராவ் மாமாவுக்கு தராதீங்க. இனிமே இப்படி மாப்பிள்ளை கூட்டி வந்தால் பாகற்காய் அல்வாதான் அவருக்கு…’

★

ஆகஸ்ட் இரண்டாம் வாரத்தில் பீமாராவ் என்ற தடியனான மராட்டித் தமிழன் டெல்லியில் இருந்து கும்பகோணத்துக்கு வந்தான்.

ரத்னாவுக்குத் தமையன். டில்லியில் பத்திரிகை ஆபீஸ் உத்தியோகம். கூடவே அவனுடைய பெண்டாட்டி சுமித்ரா பாயும் உண்டு. சுமுகமான பெண். சுமித்ரா மராத்தி இல்லையாம். பஞ்சாபி சர்தார்ணி பெண். இந்த தடியனிடம் என்னத்தைக் கண்டாளோ மனதைப் பறிகொடுத்து விட்டாள். காதல், களேபரம், கல்யாணம் என்று சீராகப் போகும் ஜீவிதம் அவர்களுடையது.

கும்பகோணத்தில், தஞ்சாவூர், சீர்காழி, திருவாரூரில் சாமி கும்பிட்டு விட்டு, இச்சல்கரஞ்சிக்கு அவன் பயணம் வைத்திருக்கிறதாகச் சொன்னாள் ரத்னா.

ஆமாம், ரத்னாவை வீட்டுக்குக் கூட்டிப் போகத்தான் வந்திருக்கிறான் தடியன். ஒரு வாரத்துக்கு கமலா அத்தை வீட்டில் டேரா போட உத்தேசமாம்.

துக்காம்பாளையத் தெருவில் டீ வினியோகத்தைக் குறைத்துக் கொண்டேன். அப்படியும் வந்த இரண்டாம் நாள் சனி பகலில் அவன் என்னைப் பிடித்துக்கொண்டான்.

‘நீங்கதான் டீ போர்ட் ஆபீசரா?’

‘ஆபிசர்னா ஆபீசர், ஊழியன்னா சர்க்கார் ஊழியன்’ என்றேன் மிடுக்காக.

என்ன பத்திரிகை ஆபீஸ் மேனேஜராக இருந்தால் என்ன, சர்க்கார் சொன்னதைத்தானே அச்சுப் போடவேண்டும்? கூனிக் குறுகி கை கட்டி நின்று கேட்டு வாங்கி இல்லையா போடுகிறார்கள். சர்க்காரா சும்மாவா?

‘இந்த வேலையிலே என்ன ப்ரமோஷன்?’ என்று கேட்டான்.

‘மெட்றாஸ் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலே...’ என்று கெத்தாக ஆரம்பித்தேன்.

‘அங்கே டீ காபி கொடுக்க கேண்டீன் இருக்குமே.’

அவன் கடகடவென்று சிரிக்க, முறைத்துக்கொண்டு அப்பால் போனேன் என்று எழுதினால் ஜமுக்காளத்தில் வடிகட்டின பொய்யாக இருக்கும் அது. அவன் சொன்னது அந்தக் காதிலும் விழாமல், இந்தக் காதிலும் கேட்காமல், ஆசனவாயில் செருகிக்கொண்டு சுமுகமான முகத்தோடு கடந்து போனேன்.

அவன் என்னோடு விலாவாரியாகப் பேசுகிற முஸ்தீபில் இருப்பதாக சக்ரபாணி கோவிலுக்கு நாங்கள் தினம் எப்படியாவது சந்திக்கும் மாலை ஆறரைக்கு அப்புறமான அந்த ஐந்து நிமிடத்துக்கு வந்து என்னைப் பார்த்துப்போன ரத்னா சமாசாரம் சொல்லியிருந்தாள்.

‘என்ன பேசினாலும் கோபப்பட வேணாம். பீமா நல்லவன். முதலில் கோபப்படுவான்... அப்புறம் வழிக்கு வந்துவிடுவான். திட்டினாலும் பொறுமை காக்கவும்’ என்று ஐந்து நிமிட உபதேசம் செய்து ஓடினாள் என் ரத்னா.

இரண்டு நாள் கழித்து பிடாரிகுளம் தெருவில் சகலமானவர்களுக்கும் டீ உபசாரம் நடத்திக் களைத்து நடந்துவருகிறபோது வாடகை சைக்கிளில் கூடவே வந்தான். ‘வாங்களேன், காத்தாட போய்ட்டு வரலாம், பின்னாலே ஏறிக்குங்க’ என்றான் நைச்சியமாக. விட்டோபாவை போகச் சொல்லிவிட்டு நான் அவனோடு பட்டீஸ்வரம் கோவிலுக்கு தரிசனம் செய்யப் போனேன்.

ஐந்து மைல் சைக்கிள் மிதித்துப் போனான். எதிர்காற்று வேறே. வரும்போது நான் சைக்கிளை ஓட்டி வரவேண்டும் என்று தீர்மானித்தேன், அவன் அனுமதித்தால். ரத்னா பின்னால் இருக்க சைக்கிளில் அவளோடு தள்ளுகாற்றில் போகும் பயணத்தைக் கற்பனை செய்ய சுகமாக இருந்தது.

பட்டீஸ்வரம் என்ற மழபாடியில் பெரிய புராதனமான கோவில். நல்ல தரிசனம். துர்க்கை சந்நிதியில் சீக்கிரம் கல்யாணம் முடிந்து ரத்னாவோடு அம்மனை தரிசிக்க வர அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தேன்.

அங்கிருந்து திரும்ப வரும்போது கோபுரவாசலில் பீமாராவ் என்னிடம் கேட்டான், ‘ரத்னாவை கல்யாணம் பண்ணிக்க உத்தேசமா?’

இத்தனை வெளிப்படையாகக் கேட்டபிறகு பதில் சொல்ல தயக்கம் ஏன்? ‘ஆமா, அப்படித்தான்’ என்றேன். ‘டீ வித்து குடும்பம் நடத்த முடியுமா’ என்று நக்கலாக அடுத்த கேள்வி.

‘சார், நான் டீ சாப்பிடற பழக்கத்தை மகா ஜனங்கள்கிட்டே அதிகப்படுத்த பீல்ட் லெவல்லே வேலை செய்யற சர்க்கார் உத்தியோகஸ்தன். வாழ்க்கை பூரா பீல்ட் ஆபீசரா இருக்கப் போறதில்லே. நீங்க நியூஸ்பேப்பர் ஆபீஸ்லே என்ன தகுதியோட சேர்ந்து என்னவா இருக்கீங்களோ அதை விட மேலே எனக்குத் தகுதி. முழுசா எஸ் எஸ் எல் சி பாஸ் பண்ணியிருக்கேன். சர்வீஸ் கமிஷன் எழுதியிருக்கேன். ரிசல்ட் எப்பவும் வரலாம். அதுக்கு முன்னாடி டீ போர்ட் கவர்மெண்ட் வேலை. இங்கே இருந்தாலும், சர்வீஸ் கமிஷன் பாஸ் பண்ணி, தாசீல்தார் ஆபீஸ்லே குமாஸ்தா ஆனாலும், சம்பளத்துக்கு குறைச்சல் இல்லே. ரத்னாவை, அவளும் நானுமா ஒரு குடும்பத்தை பராமரித்து நடத்த என்னால் முடியும்.’

இந்த நீளமான பேச்சை நானும் ரத்னாவும் கிட்டத்தட்ட பத்து தடவை ஒத்திகை பார்த்திருந்ததால் பேச்சு சீராக வந்து விழுந்தது.

அவன் கொஞ்சம் யோசித்துவிட்டுச் சொன்னான் –

‘ரத்னாவை நான் சுத்த மராட்டிக்காரனுக்கு கல்யாணம் பண்ணித் தரணும்னு மனசிலே நினைச்சிருக்கேன்.’

நான் சிரித்தேன். ‘அண்ணியோட அப்பா பேர் என்ன?’ கேட்டேன்.

‘சுமத்ராவை எப்படி பழக்கம்?’

‘நேற்று காலையிலே சக்ரபாணி கோவிலுக்கு ரத்னா கூட்டி வந்திருந்திச்சு…’

‘நெனச்சேன்… சுமித்ரா ஹர்சரண்பிர் சிங் ரானாவோட மகள். சுமித்ரா கவுர்.’

‘அந்த சர்தார், அவரோட மகளான சர்தாரிணியை இன்னொரு சர்தாருக்குத்தான் கட்டி வைப்பேன்னு சொல்லியிருந்தா?’

‘அதுலே என்ன கஷ்டம். அவர் சொல்லியிருந்தா நான் சர்தார் ஆகியிருப்பேன். பெயர் கூட ரெடியா வச்சிருந்தேன். க்ருபால் சிங்.’

அவனும் ஒத்திகை பண்ணியிருப்பான்போல. என் தோளில் தட்டி அவன் சிரிக்க, இறுக்கம் தளர்ந்து நானும் சிரித்தேன்.

அடுத்த நாள் ரத்னாவை வழக்கம்போல் தனியாகச் சந்திக்க முடியவில்லை. கங்காவோடு அவளும் சுமித்ரா அண்ணியும் கடைத்தெருவுக்கு பாவை விளக்கு வாங்க வந்தபோது ஒரு நிமிடத்தில் ரத்னா தன் இச்சல்கரஞ்சி விலாசத்தை எழுதிய துண்டு சீட்டை கங்கா மூலம் கை மாற்றினாள். நான் அப்போது ராமாராவ் மாமா மளிகைக் கடையில் டீத்தூள் பாக்கெட்கள் சில்லறை விற்பனை கணக்கை சரி பார்த்துக்கொண்டிருந்தேன்.

விடிகாலை ரயிலில் ரத்னா மெட்றாஸ் போனபோது நடுநிசிக்கே ஸ்டேஷனில் போய் உட்கார்ந்துவிட்டேன். கலைந்த தலையும் களைத்த கண்ணுமாக இருந்த என்னைப் பார்த்து ரத்னா கண் கலங்கினாள். பீமா அசந்திருந்த ஒரு வினாடி சுமித்ரா கண்காட்ட அருகில் நின்ற என்னிடம் காதில் சொன்னாள் ரத்னா – ‘என் ராஜா... சீக்கிரம் வந்து என்னைக் கூட்டிப் போயிடு... உன்னையே நினைச்சிட்டிருப்பேன்.’

‘வந்துடறேண்டா. அழாம போ. அப்புறம் அந்த முகம்தான் சதா நினைவிலே எனக்கு வரும்’, என்றேன் கண் நிறைந்து நிற்க.

அபத்தமாகத் தெரியும். ஆனால் இந்த வார்த்தைகளின் ஆத்மார்த்தம் வேறெதிலும் வராது.

ரயிலோடு கிறுக்கன்போல் அவுட்டர் வரைக்கும் ஓடினேன். அன்றைக்கு உடம்பு சரியில்லை என்று விட்டோபாவுக்கும் லீவு கொடுத்துவிட்டு நானும் வேலைக்குப் போகவில்லை.

அடுத்த இரண்டு மாசம், கதைகளில் வருமே, நடைப்பிணம்... அதேதான்... நடைப்பிணமாக கும்பகோணத்தில் டீ போர்ட் பீல்ட் ஆபிசர் உத்தியோகம் பார்த்தேன். துக்காம்பாளையத் தெருவிலிருந்து விட்டோபா வீட்டுப் பக்கம் ஜாகையை மாற்றிக்கொண்டேன். கமலா பாய் வீட்டுத் திண்ணை வெறுமையாக இருந்தது. அந்தத் தெருவுக்குப் போனாலே ரத்னா நினைவு அடர்ந்து கவிவது வழக்கமாகிப் போனது.

ஒன்றிரண்டுமுறை கங்காவை சக்ரபாணி கோவிலில் தொழுதபடி பார்த்தேன். அவளே என்னிடம் சொன்னாள் – ‘ரத்னா சௌகரியமா ஊரு போய்ச் சேர்ந்தாச்சாம்... காய் சமாச்சார்ன்னு கேட்டிருக்கா... ராமோஜிராவ் எப்படி இருக்கார்னு பதில் போட?’

உதடு பிரியாமல் சிரிக்கும் கங்காவையும் அவளைப் படைத்தவனையும் கைகூப்பித் தொழத் தோன்றியது.

1936 புது வருடம் பிறந்தபோது குளிரும் அதிகமாக இருந்தது. ரத்னாவைக் கொஞ்சமாவது மறக்க, திருவையாறில் தியாகராய ஆராதனைக்கு கோபுவோடு போய்க் குளிரில் கச்சேரி கேட்டேன்.

‘நல்ல பனிக்காலம் பார்த்து தியாகையர் சமாதி ஆகிட்டார்’ என்று மப்ளர், ஸ்வெட்டர் என இருந்த என் உடுப்பு அலங்காரத்தை பார்த்து கோபு சிரித்ததை ரசித்தேன்.

புஷ்ய பஹுள பஞ்சமியன்று எல்லா வித்வான்களும் கூடியிருந்து பஞ்ச ரத்ன கீர்த்தனைகளைப் பாட, என் ரத்னத்தை மனதில் ஆராதித்தேன். நானும் அந்தப் பனிக்காலத்தில் முடிந்து போயிருக்கலாம் என்று தோன்றியது.

பொங்கலுக்கு வீட்டுக்குப் போனேன்.

‘ஏதோ கவர் வந்திருக்குடா நேத்திக்கு.’ அப்பாஜி கொண்டுவந்து கொடுத்தது நான் சர்வீஸ் கமிஷன் பாஸ் ஆனேன் என்று அறிவிக்கும் கடிதம்.

கும்பகோணம் திரும்பும்போது நம்பிக்கையும் சந்தோஷமுமாக இருந்தேன். ரத்னா இனி என்றும் என்னுடைய காதலி, அன்பு மனைவி என்று திடமாகத் தோன்ற ஆரம்பித்தது.

அப்பாஜி அடுத்து எனக்கு வந்த சர்க்கார் கடிதாசை எடுத்துக்கொண்டு கும்பகோணத்துக்கே வந்துவிட்டார். செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் வாட்டர் போர்டில் எல் டி சி உத்தியோகம் ஆகியிருந்தது எனக்கு. பிப்ரவரி பத்தாம் தேதி வேலைக்குச் சேரவேண்டும்.

பிப்ரவரி முதல் வாரம் ராஜினாமா கடிதம் எழுதி டீ போர்டுக்கு அனுப்பி உத்தியோகத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன். விட்டோபாவை என் இடத்தில் வேலை செய்ய ஆதரவாக நான் எழுதியதை தலைமை ஆபீஸ் ஏற்றுக்கொண்ட சூசனை தென்பட்டது. எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு கும்பகோணத்தில் இருந்து புறப்பட ஆயத்தமானேன்.

‘ரத்னாவை சீக்கிரம் கட்டிக்கிட்டு கல்யாணச் சாப்பாடு போடுங்க டீ ஆபீசர்’ என்றாள் கங்கா.

‘அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை எங்க வீட்டுலே கேசரியும் சுவியனும் செய்யப் போறோமே... மிஞ்சினா மெட்றாஸுக்கு அனுப்பி வைக்கவா?’

அவள் கூட சிரிக்க மனம் வரவில்லை. கொச்சியில் இருந்து மிலிட்டரி ஓட்டல் தலைமை சமையல்காரர் பெண் பார்க்க வருகிறாராம். ‘கோளி அறுக்கறபோது விரல்லே கத்தி பட்டிடிச்சு ‘என்று அவர் புகார் சொன்னபடி சாயந்திரங்களில் வீட்டுக்கு வர சீக்கிரம் கங்கா கல்யாணமும் நடந்தேறணும் என்று மனதுக்குள் பட்டீஸ்வரம் துர்க்கையை பிரார்த்தித்தேன்.

மெட்றாஸில் வேலைக்குச் சேர்ந்த வாரத்தில் ஒரு வாழ்த்துக் கடிதம் வந்திருந்தது. பீமாராவ்தான் எழுதியிருந்தது. சுமித்ராவும் வாழ்த்து சொல்லி கையெழுத்து போட்டிருந்தாள்.

ரத்னா கடிதம் தனியாகக் கிடைத்தது. அவள் மனதை மாற்ற டெல்லிக்கு கூட்டி வந்தானாம் பீமாராவ். ஆனால் வந்த இடத்தில் சுமித்ரா அண்ணி ரத்னாவுக்கும் எனக்கும் ஆதரவாக இருக்க, பீமா மனம் மாறினானாம்.

அதற்கு இரண்டு காரணங்கள் – எனக்குக் கிடைத்த நிரந்தர கவர்மெண்ட் உத்தியோகம். இரண்டாவது ராமாராவ். அவர் என் ஜாதகத்தை அப்பாவிடம் வாங்கி ரத்னா ஜாதகத்தை பரிமாற்றம் செய்ய ரெண்டு பக்க ஜோசியர்களும் எல்லா பொருத்தமும் 99 சதவிகிதம் வந்ததாக அறிவிக்க கல்யாண நாள் குறிக்கப்பட்டது.

முழுக்க முழுக்க திட்டமிட்டபடி வாழ்க்கை நடக்குமா என்ன?

அப்பாஜி திடீரென்று மாரடைப்பால் காலமானார். என் கனவுகளைத் தூக்கித் தூரவைத்துவிட்டு அவர் நினைவில் துக்கப்பட்டேன். அது தீரும்போது இன்னொரு நல்ல முகூர்த்தத்தில் ரத்னாவைக் கைபிடித்தேன்.

கோபுவும் விட்டோபாவும் ராமாராவ் மாமாவும் கும்பகோணத் திலிருந்து என் கல்யாணத்துக்கு வந்து சிறப்பித்தார்கள். கமலா பாய் இரண்டு மாதம் முன் காலமான செய்தியை விட்டோபா தெரிவித்தார். இருந்தும் எப்படியும் கங்கா வருவாள் என்று நானும் ரத்னாவும் வெகுவாக எதிர்பார்த்தோம். கல்யாணம் முடிந்து இரண்டு நாள் கழித்து துக்காம்பாளையத் தெருவில் கங்கா பாய்க்கு அனுப்பியிருந்த கல்யாண அழைப்பு ‘விலாசதாரர் அங்கு இல்லை’ என்ற குறிப்போடு திரும்பி வந்தது.

எங்கள் கல்யாணம்பற்றியும், ரத்னாவுக்குப் பொடி வாங்க நான் அலைந்ததுபற்றியும் ஒரு விடலைப் பயல் எழுதிய, பொடி என்று தலைப்பு இட்ட விவரணத்தை அடுத்துப் படிக்கத் தருகிறேன். அதில் பாதி கப்ஸா.

இருந்தாலும் படிக்க சுவாரசியமாக எழுதியிருக்கிறான் என்றாள் ரத்னா. அவள் சொன்னால் ஆட்சேபம் ஏது?

★★★

பத்து

# ராமோஜி-ரத்னா கல்யாணம் - 1937 மதறாஸ்

(பத்திரிகைச் சிறுகதையாக வந்த படிக்கு)

**பொடி**

~

ஆ பீஸில் திடீரென்று லீவு விட்டார்கள். இங்கிலீஷ் மண்ணுக்கும் பாரதபூமிக்கும் சகல சௌபாக்கியமும், ஜெயமும், மேழிச் செல்வமும், கோழி இறைச்சியும் தட்டாமல் கிடைத்தபடி இருக்க வழி செய்த விக்டோரியா சக்ரவர்த்தினியும், அவர்தம் மணாளர் ஆல்பர்ட் அரசரும் சந்தோஷமாக இருந்த நாள் இது. விக்டோரியா சக்கரவர்த்தினி பூவுலகில் அவதரித்த ஜன்ம தினம். ரெண்டு பேரும் இப்போது ஜீவித்திருக்கவில்லை. என்றாலும், அவர்களின் பேரன் ஆறாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி எந்தக் குறையுமின்றி அரசாண்டு வரும் பொற்காலம் இந்த 1937-ஆம் வருஷம். அவர் கைகாட்டியபடி, சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டீஷ் சாம்ராஜ்யத்தில் விக்டோரியா ஜெயந்தி தினக் கொண்டாட்டங்கள் தொடங்கியிருக்கின்றன.

ஆக, இன்றைக்கு மே 24-ந் தேதி திங்கள்கிழமை சுபதினமாக விடிந்தது. விடுமுறை என்று தில்லியிலும் கல்கத்தாவிலும் நேற்றைக்கு சாயந்திரமே அறிவித்துவிட்டாலும், ஆந்திராவில் மழை, புயல் காரணம் தந்தி, டெலிபோன் கனெக்ஷன் இல்லாமல் போனதால் மதறாஸுக்கு தகவல் அனுப்ப முடியாமல், ரயில்வே ஃபோனில் இன்றைக்கு ஒன்பதரை மணியோடு சேதி வந்து சேர்ந்தது.

அடுத்த ஒருமணிநேரத்தில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை உத்தியோகஸ் தர்கள் அங்கே தீப்பிடித்த மாதிரி இடத்தைக் காலி செய்து விடுமுறையைக் கொண்டாட ட்ராம் பிடித்து, குதிரை வண்டி பிடித்து, நடந்து, ஓடி வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

உடனுக்குடன் தந்தி அடிக்கப்பட்டு எல்லா ஜில்லா, கஸ்பா, பஞ்சாயத்து ஆபீஸ்களுக்கும் சந்தோஷமாக பூட்டு மாட்டி உத்யோகஸ்தர்கள் நடுப்பகலுக்கு முன் வீடு போய் சுடுசாதம் சாப்பிட வாய்த்தது. பகல் உறக்கமும் அவர்களில் பலருக்கும் ப்ராப்தியானது.

ராமோஜி இந்த ஆபீஸ் லீவு பாக்கியம் பெற எல்லாவிதத்திலும் தகுதியானவன்தான். கோட்டையில் துரைத்தனத்து அதிகாரிகளுக்கு வீட்டுச் சேவகர்களான தோட்டக்காரன், சமையல்காரன், பரிமாறுகிறவன், பங்கா இழுப்பவன், சப்ராஸி என்ற எடுபிடி சேவகன் இப்படியான பேர்வழிகளுக்கு சம்பளமாக ராஜதானி செலவு செய்யும் கணக்கை ஏழெட்டு பேரேட்டில் எழுதி அறிவிக்கும் வேலை ராமோஜிக்கு.

அதையெல்லாம் மூடிவைத்து பெட்டி கேஷ் என்ற சில்லரை செலவினத்துக்கான ராஜாங்கப் பணமான ஒரு ரூபாய் ஆறரையணாவை சரி பார்த்து ஏழு பூட்டு பூட்டி இரும்புப் பெட்டியில் வைத்து அந்த இரும்புப் பெட்டியின் சாவியை அரைஞாண்கொடியில் மாட்டி கீழே அதுவும் லொண்டாவெனத் தொங்க வீடு போகலாம் என்று பார்த்தால் புதுப் பெண்டாட்டி ரத்னாபாய்க்கு மூக்குப்பொடி வாங்க வேண்டிப் போனது.

ராமோஜிக்கு கெட்ட பழக்கமேதும் இல்லை. வருஷம் ஒரு தடவை அவனுடைய சுவர்க்கவாசி பிதா பத்மநாப ராவ் என்ற பத்துராவுக்கு திதி திவசம் பஞ்சாங்கக்காரரை வைத்துக்கொடுப்பான். அவர் சாப்பிட்டுப் போனதும் அப்பாஜியை பிரீதிப்படுத்த அவருக்கு உகந்ததாக ஊகித்திருந்த உறையூர் சுருட்டைப் பற்ற வைத்து சமர்ப்பயாமி சமர்ப்பயாமி என்று இருமலுக்கு நடுவே நாலு தடவை ஊதி சொர்க்கத்துக்கு சுருட்டுப் புகை கடத்துவான். அஃதல்லாமல் பீடி, சுருட்டு என்று ராமோஜி எதுவும் பழகவில்லை.

இப்படி புகையிலை அண்டாத வண்ணார்ப்பேட்டை ராமோஜி வீட்டில் மூக்குப்பொடியாக அது நுழைந்ததாம். அதுவும் கிளிபோல் அழகிய ரத்னா பாய் மூலம். சம்ஸ்கிருதமும், கொஞ்சம் தமிழும், இங்க்லீஷும் படித்த ரத்னா.

போன மாசம் ராமோஜிக்கும் மேற்படி ரத்னாவுக்கும் பந்து மித்ர ஜனங்கள் நாலு நாள் முன்னதாகவே வந்து தின்று தீர்த்து ஏப்பம்விட்டு பதிர்பேணியைக் கொண்டா என்று பந்தியில் காத்திருக்க, லட்டும் பாலுமாக இனிக்க இனிக்க பரிமாறி அந்த இனிப்போடுகூட தாலியும் கட்டிக் கல்யாணம் ஆனது.

ஆபீஸில் இருந்து புறப்பட்டு, இதெல்லாம் மனதில் மென்றுகொண்டு ராமோஜி ப்ராட்வேயில் தன் ராலே சைக்கிளை மெதுவே ஓட்டிப் போனான்.

அப்போது வெங்கட நாயக்கர் ஓட்டி வந்த மைலாப்பூர் போகும் டிராமில் சைக்கிள் மோதப் போக, தவிர்த்து ராமோஜி அந்தாண்டை சாடினான். நாயக்கர் நல்ல வார்த்தை நாலு உதிர்த்துக் கடந்தார். ப்ராட்வே நெரிசலில் ரத்னாபாய்பற்றி யோசித்தபடி சைக்கிள் விடுவது முட்டாள்தனம் அன்றோ.

இந்த ட்ராம் வேண்டியும் இருக்கிறது. நடுத் தெருவில் தடதடவென்று இரும்பு யானைபோல மெல்ல இதுகள் போகிறபோது மேலே மோதுவதை விட, தண்டவாளம்விட்டு இறங்கிக் கவிழ்ந்து விபத்து உண்டாக்குமோ என்று பயமெழுவதும் அதிகமாக இருக்கிறது, ட்ராம் பாதைக்குப் பக்கமாக நடந்தோ சைக்கிள் விட்டுக்கொண்டோ போகிறவர்களுக்கு. அதுவும் ராமோஜிபோல இருபத்தாறு இஞ்ச் உயர சைக்கிள் ஓட்டிப் போகிறவர்களுக்கு சதா பயமே.

ப்ராட்வே நெரிசலுக்கு சம்பந்தமே இல்லாமல் குறுக்குச் சாலில் கிடக்கும் ஒரு முதலித் தெருவில் வண்டியை விட்டான் ராமோஜி. இங்கே இவனாகத் தேடிப்போய் முட்டினால்தான் விபத்து.

மனதில் பெண்டாட்டி சௌந்தர்யத்தை அசைபோட்டபடி இப்படி முற்பகலில் சைக்கிளில் போக சந்தர்ப்பம் பண்ணிக் கொடுத்த விக்டோரியா மகாராணிக்கு பிறந்த நாள் வாழ்த்து சொன்னான்.

சொர்க்கத்தில் நிச்சயம் கொண்டாடுவார்கள் இன்றைக்கு. இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ சுவர்க்கம் எல்லாம் மரத்தடுப்பு எடுத்துவிட்டு ஒன்றாக இருக்கும்.

ராமோஜியின் சைக்கிள் பள்ளத்தில் இறங்கி மெல்லக் குலுங்கி ரதம் போல ஓட்டத்தை மெத்தென்று தொடர்ந்தது.

ராமோஜிக்கு பதினைந்து வயது நிறைந்தபோது அப்பாஜி வாங்கிக் கொடுத்த சைக்கிள் அது. வாங்கிக் கொடுத்த என்றால் புத்தம்புதுசு இல்லை. ஜிம்கானா கிளப் சிப்பந்தி ஷேக் அசன் சாகிபு மூலம் கிட்டியது.

இங்கே வேலை வேண்டாம் என்று வைத்து இங்கிலாந்து திரும்பிய ஒரு துரை ஓட்டிக் களித்த சைக்கிள். துரை அபூர்வமாக ஓட்டியதால் பூ மாதிரி, துரைசானிபோல், புத்தம் புதியதாக இருந்தது.

பதினைந்து ரூபாய்க்கு தருவதாக ஒத்துக்கொண்டாலும் ஊர் போகிற களிப்பில் கடைசி நிமிஷத்தில் அதுவும் வேண்டாம் என்று சும்மாவே கொடுத்துவிட்டுப் போனார் அந்த நல்ல மனசு துரை. அவருடைய பதவிக்

காலத்தை பட்டணத்தில் வெள்ளைக்காரர்களின் சமாதிகளை சிறப்பாக நிர்வாகம் செய்கிறவராகக் கழித்ததாக அப்பாஜி சொல்வார்.

அப்பாஜி சொன்னது எல்லாம் அரைகுறைதான். வாய் வெற்றிலை பாக்கு மென்றபடி இருக்க, அபிநயமும் கண் உருட்டலும் சுழற்றலு மாக கதகளிகாரன் மாதிரி ஆ ஊ அம்ம் என்று பேசியவர் அவர்.

மரணப் படுக்கையில் மெல்வதற்கு தாம்பூலம் கிடைக்காவிட்டாலும் வாய் அதே படிக்கு குவிந்திருக்க, ரெண்டு தடவை உள்மூச்சு, ரெண்டு முறை வெளிமூச்சு விட்டபடி இறந்துபோனார் அப்பாஜி. அவர் காதில் கர்ண மந்திரம் சொல்ல வந்திருந்த ஸ்வஜாதி புரோகிதர், ராமோஜியிடம் அப்போது சொன்னது – 'அப்பாஜி சுருட்டு பிடிக்க ஆசையோட போனார். இனி திவசத்துக்கு சுருட்டு வாங்கிப் படைக்கறதோட அதைப் புகைக்கவும் செய்யணும்.'

அவருக்கென்ன சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஜவுளிக்கடை, இரும்புக்கடை, மிளகாய் மண்டி வைத்து பணம் கொழிக்கும் பெரிய வீடுகளுக்கான புரோகிதர் அவர். கும்பகோணம், தஞ்சாவூர் இப்படி புரோகிதத்துக்காக ரயிலைப் பிடித்துப் போய்வந்து காசை எண்ண அவருக்கு நேரம் சரியாக இருக்கிறது. ராமோஜியின் அப்பாஜியைக் கடைத்தேற்ற அப்புறம் தமிழ் பஞ்சாங்கக்கார ஐயர்தான் வந்தார்.

சுருட்டுப்புகை வாடையும், சம்திருப்தியும் சொர்க்கவாசி அப்பாஜிக்குக் கிட்ட, பஞ்சாங்கர் சுருட்டு பிடிக்கவேண்டும் என்று அப்பாஜியின் மனைவியும் ராமோஜியின் அம்மாவும் ஆன சக்குபாய் விரும்பியபோது சுருட்டு எல்லாம் தன் வைதீகமாகிய தொழிலுக்கு சரிப்படாது என்று பஞ்சாங்கக்காரர் மறுத்துவிட்டார். ஆனாலும் அவர் திதி நடத்திவிட்டுப் போன பிறகு ராமோஜி சுருட்டு சமர்ப்பிப்பான்.

இந்த வருடம் அப்பாஜி திதி அடுத்த வாரம் வெள்ளியன்று வருகிறதாக வந்து சொல்லிப் போயிருக்கிறார் பஞ்சாங்கக்காரர். சுருட்டு வேண்டாம் என்றும், அவசியம் வேண்டும் என்றால் வெள்ளியிலாவது தங்கத்திலாவது சின்ன சுருட்டு போல் நகை ஆசாரியைக் கூப்பிட்டு செய்துவித்து அதைப் படைத்து விடலாம் என்று யோசனை சொல்லிப் போயிருக்கிறார். தங்கச் சுருட்டு அவருக்கு தட்சணையாக வேணுமாம்.

ஒரு நாயக்கர் தெரு முனையில் சைக்கிள் நின்றது. மிட்டாய்க் கடைக்குத் தானே சைக்கிள் வந்து சேர்ந்திருக்கிறது. வேலை கிடைத்ததில் இருந்து

மாதாமாதம் சம்பள தினத்தன்று அல்வாவோ லட்டோ வாங்கிப்போய்ப் பழகிவிட்டது ராமோஜிக்கும். அவனுக்கும் அம்மாவுக்கும் இங்கே வாங்கிப் போவது ஒரு வாரத்துக்கு மேலே வரும். இனி ரத்னா பாய்க்கும் சேர்த்து வாங்கவேண்டும். அவளுக்கு இனிப்போடு மூக்குப்பொடியும் தேவைப்படுகிறது.

மிட்டாய்க்கடையில் ஒரு பத்து நிமிடம் பெஞ்சில் உட்கார்ந்து சுதேசமித்திரன் படித்துக்கொண்டிருந்தால், சுடச்சுட புது அல்வா கிண்டி வந்துவிடும் என்று ஆசை வார்த்தை காட்டி, கொறிக்க தேங்குழல் ஒன்றையும் இலவசமாகக் கொடுத்தார் மிட்டாய்க்கடை கிருஷ்ணராயர்.

சைக்கிளை கண்ணுக்கு நேர் படும்படி நிறுத்திவிட்டு, தேங்குழல் கடித்தபடி சுதேசமித்திரனை படிக்க ஆரம்பித்தான் ராமோஜி. ‘பிரான்ஸ் ஜனாதிபதியை ரஷ்யாக்காரன் சுட்டான்.’

கிடக்குது விடு. தானாகக் கிடைத்த லீவுநாளை இப்படி திராபையாக அல்வாக் கடை பெஞ்சில் கழிக்கணுமா இன்னும் பாதி நாள் கூட பாக்கி இல்லையே என்று மனம் கேட்க, அதற்கு நியாயம் சொல்வதற்குள் அல்வா வந்துவிட்டது.

தெருவோடு போகிற பயல் எவனோ சைக்கிளில் மணியை சத்தமாக அடித்து விளையாடினதைப் பார்க்கப் பொறுக்கவில்லை ராமோஜிக்கு. வீட்டுக்குள் புருஷன் பார்த்தபடி இருக்க, வாசலில் புதுப் பெண்டாட்டி நிற்க, தெருவோடு போகிற விஷமி கண்ட இடத்தில் தொட்டுத் தடவிவிட்டுப் போகிற அநியாயம் அது. கடைக்குள் இருந்து கத்த முடியாது. கையை மட்டும் நீட்டி ஒரு வினாடி ரௌத்ரம் காட்டினான் ராமோஜி. அது ஒரு சுக்கும் பிரயோஜனமில்லாதது.

அல்வா பையை முன்னால் தொங்கவிட்டபடி சைக்கிள் ஓட்டிப் போகும்போது அந்த வாசனை ஆகர்ஷித்து தெருநாய் ஒன்று சைக்கிளோடு கூடவே வாலை ஆட்டிக்கொண்டு ஓடி வந்தது. அதை விலக்கி ஓட்டுகிறேன் பேர்வழி என்று இப்படியும் அப்படியும் வண்டியைத் திரும்ப, திம்சுகட்டைபோல ஒரு தெலுங்கச்சி, ‘ஏன் என் பிருஷ்டத்தில் முட்டுகிறாய்? வேறே இடம் கிடைக்கலை என்றால் வால்டாக்ஸ் ரோடு சுவரில் போய் உன் கள்ளச்சாவியை முட்டு’ என்று தெலுங்கு உச்சரிப்பில் தமிழில் சொல்ல, தெருவோடு போனவன் எல்லாம் ராமோஜி அவிழ்த்துப்போட்டு ஆடுகிறதைக் கண்டதுபோல் சிரித்துப் போனான்கள். சனியன் பிடித்த நாய் போன இடம் தெரியவில்லை.

சைக்கிள் செயின் வேறே நழுவி வந்து கரகரவென்று சைக்கிள் நிற்க தெலுங்கச்சி நெருக்கத்தில் ராமோஜியைப் பார்த்து 'கிட்டப்பா மாதிரி ஷோக்கா இருக்கே' என்றாள். அவளும் அழகுதான். ஆனால் ரத்னாவைத் தவிர யாரையும் அப்படி நினைக்க மாட்டான் அவன். மூக்குப்பொடியும் அல்வாவும் வாங்கித் தந்து சரசமாட வேண்டியவள் அவள்.

செயின் மாட்டி சைக்கிளை அவன் கிளப்பியபோது கையெல்லாம் மசகு. சைக்கிள் ஆசனத்துக்குக் கீழே வைத்திருந்த கிழிசல் துணியில் கறாராகத் துடைத்துக்கொண்டான். இனி நேரே போய் இடது சந்தில் புகுந்தால், பொடிக்கடை வரும். புகுந்தான். எங்கே போனாலும் ரத்னாபாயும், முதல் ராத்திரியும்தான் மனசெல்லாம் .

சோபானம் சோபானம் என்று ராத்திரியில் நான்கைந்து குந்தாணி நடுவயசுப் பெண்மணிகள் அவனையும் ரத்னாவையும் காமிரா உள்ளில்விட்டு கதவை சாத்தி வாசலுக்கு அப்புறம் இருந்து சகிக்க முடியாத குரலில் எல்லா பாஷையிலும் சிருங்காரம் வழியும் பாட்டுபாட, ரத்னா அவனைப் பார்க்கவும் செய்யாமல் படுக்கைக்குக் கீழும் ஜன்னலிலும் அலமாரியில் அலாரம் கடியாரத்துக்குப் பின்னும் ஏதோ தேடிய மணியமாக இருந்தாள்.

'முதல் ராத்திரி அறையில் அலாரம் கடியாரம் எதுக்கு? யார் யோசனை அது?'

ராமோஜி தன் புத்தம்புதுப் பெண்டாட்டி புஜத்தைப்பற்றியபடி அவள் கண்ணில் பார்த்து சோபான ராத்திரியில் முதலில் கேட்ட கேள்வி அதுதான்.

அவள் தலையாட்டிவிட்டு இன்னும் தீவிரமாகத் தேடத் துவங்க, 'ரத்னா பாயி, என் பிரிய சகி, என்னத்தை தேடுகிறாய்? கச்சையா? கீழே அணிகிற சமாசாரமா' என்று அவளது அந்தரங்கத்தைப்பற்றிய பேச்சில் ஈடுபட்டான். படுக்கைக்கு புதுப் பெண்டாட்டியைத் தயார் பண்ணும் விதம் இப்படித்தான் என்று அவன் வாசித்த ஒரு சிருங்கார வழிகாட்டி புத்தகத்தில் போட்டிருந்ததை அவன் கடைப்பிடிக்க, அவள் நாணித் தலைகுனிந்து அவன் நெஞ்சில் தலை வைத்து அணைத்துக்கொள்ளாமல், 'என் பொடி டப்பியை எங்கேயாவது பார்த்தீங்களா?' என்று கேட்டாள்.

பூவுலகில் கல்யாணமாகி முதல் ராத்திரி சேர்ந்திருக்க வந்த புருஷனை பொடி டப்பி விஷயமாக விசாரித்த முதல் பெண் ரத்னாபாயாக இருக்கும்.

அவனுடைய ஆரம்ப சந்தோஷம் ஆரம்ப ஆச்சரியமாக, ரத்னாபாய் தலையணைகளை குப்புறப்போட்டு, அவனை எழுந்திருக்கச் சொல்லி மெத்தையை இழுத்து, ஓரமாக நகர்த்திக் குடைந்தாள். 'கிடைச்சுடுத்து' என்று ஆரவாரம் எழுப்பி, தரையில் மண்டிபோட்டு கட்டிலுக்குக் கீழே இருந்து தந்தத்தில் செய்த ஒரு சிறு பேழையை எடுத்தாள். ராமோஜி திகிலோடு பார்த்துக்கொண்டிருக்க, பேழையைத் திறந்து ஒரு சிட்டிகை தாராளமாக உள்ளே விரல்விட்டு அள்ளி மூக்கில் திணித்துக்கொண்டு 'ஹர்ர்ர்ர்ர்?' என்று ஏதோ மொழியில் ராமோஜியை வினவினாள். அடுத்தநொடி அவனை இறுக்க அணைத்து படுக்கையில் தள்ளி கணக்கற்ற முத்தம் ஈந்து அவன் காதைக் கடித்தாள். மூக்குப்பொடி வாசனையோடு அவனுக்கு முதல் சுவர்க்கம் அனுபவப்பட்டது.

சுபமாக முடிந்தபிறகு தலையணைக்குக் கீழே இருந்து பேழையை எடுத்து பொடி போட்டுக்கொண்டு ஹர்ர்ர் என்று ராமோஜியிடம் சொல்லி பக்கத்தில் கிடந்த அவன் புது பட்டு வேஷ்டியில் மூக்கு சிந்தித் துடைத்துக்கொண்டாள்.

'நாம் கும்பகோணத்தில் இரண்டு வருஷம் முந்தி சந்தித்தபோது நீ எனக்குச் சொக்குப் பொடி போட்டது தவிர சொக்க வைக்கும் உன் எள்ளுப்பூ நாசிக்குள் பட்டணம் பொடி போட்டதில்லையே, எங்கே எப்போது போட ஆரம்பித்தாய்?'

'கடந்து போன ஒரு வருஷத்தில் பொடி போட ஆரம்பித்தேன், என் ராஜா. உங்களைச் சந்திக்காத சோகம் தீரத்தான். அப்புறம் அது பழகிவிட்டது' – ரத்னா அவனை நெருங்கி அணைத்துக்கொண்டாள்.

'கண்ணே, அதென்ன சோபான ராத்திரியில் பொடி போடுவது உங்க வீட்டுப் பழக்கமா? எங்க வீட்டில் அப்பா திவசத்துக்கு சுருட்டு குடிப்பது மாதிரி.'

அவன் கேட்க ரத்னா சட்டென்று எழுந்து உட்கார்ந்து அவன் கையைப் பற்றித் தன் கைகளுக்குள் வைத்தபடி, 'சுருட்டு குடிப்பீங்களா, நிஜமாகவா' என்றாள்.

விடிந்து பட்சிகள் சுகம் சுபம் என்று பாடி எழுப்பிக்கொண்டிருக்க இருவரும் நல்ல துயிலில் ஆழ்ந்தார்கள். உறங்குவதற்கு முன் ராமோஜி அவளுடைய அழகான மார்பில் விழுந்து படிய தங்கச் சங்கிலி வாங்கிப் போடுவதாக சத்தியம் செய்ய, 'முதலில் ஆபீசர் மார்க் பட்டணம் பொடி ஒரு டப்பி வாங்கித் தருவீர்களா?' என்று கெஞ்சுகிற குரலில் அழகி யாசித்தாள்.

பொடி வாங்க இதோ போய்க்கொண்டிருக்கிறான் ராமோஜி. இங்கேதான் ஒரு செட்டித் தெருவில் கடை இருக்கிறது. அவன் ஒற்றைவாடையில் குஸ்திச் சண்டை எப்போதோ பார்க்கப் போனபோது பார்த்திருக்கிறான்.

மூக்குப்பொடி விற்கும் கடையில் என்ன என்று சொல்லி கேட்க வேண்டும்? யாருக்கு வாங்குகிறேன் என்று சொல்லியாக வேண்டுமா? அது எதற்கு? ராமோஜியைப் பார்த்தால் பொடி போடுகிறவன் மாதிரி தெரிகிறதா?

சைக்கிள் ஓட்டியபடியே கடந்துபோன ஜவுளிக்கடை கண்ணாடி ஜன்னலில் தன்னைப் பார்த்தான். சட்டைப்பையில் துருத்திக் கொண்டிருந்த கைக்குட்டை சுத்த வெள்ளையாக மின்னியதைக் காண சந்தோஷமாக இருந்தது அவனுக்கு. வாழைப்பட்டை அல்லது சின்னப் பேழையாக பொடிடப்பி எல்லாம் இல்லாமல் சுத்தமான சட்டைப்பை இதுவரை அது.

உயர ஸ்டூல்களில் வரிசையாக உட்கார்ந்திருந்த கடை. வாசலில் சைக்கிளை வைத்துப் பூட்டிவிட்டு ராமோஜி படி ஏறினான். பொடி விற்கிற கடை இவ்வளவு உயரமான படிக்கட்டுகளும், இத்தனை பேர் வேலை பார்க்கிறதுமாக ஏன் இருக்க வேண்டும் என்று அவனுக்குப் புரியவில்லை.

பொடி மட்டும் வாங்கலாமா அல்லது அடுத்த வாரம் அப்பாஜியின் சிரார்த்தத்துக்காக ஒரு சுருட்டும் வாங்கி வைத்துக்கொள்ளலாமா?

இந்தக் கேள்வி மனதில் எழ, ஒரு வினாடி வாசலிலேயே தயங்கி நின்றான். இவ்வளவு பெரிய கடையில் ஒற்றை சுருட்டு வேண்டுமென்று கேட்டால் அவர்களை, அவர்களுடைய பரபரப்பான வியாபாரத்தை எள்ளி நகையாடுவதாகாதா?

ஒரு சுருட்டு மட்டும் வாங்கி செல்வந்தர்கள் புகை பிடிப்பார்களோ? அவர்களுக்கானது என்று பத்து ரூபாய் விலை வைத்திருந்தால் அது ராமோஜிக்கு வேண்டாம். அப்பாஜி அந்த சுருட்டு இல்லாமலே சொர்க்கத்தில் சௌக்கியமாக இருக்கட்டும். சொர்க்கத்துக்குப் போனாலும் கீழே நிதி நிலைமையை அவரும் கொஞ்சம் கவனித்துப் பரிசீலிக்க வேணும்.

என்ன மாதிரி சுருட்டு வாங்குவது என்று தெரியாததால் அந்த வஸ்துவைக் கேட்கவேண்டாம் என்று தீர்மானித்தான் ராமோஜி. இன்னும் ஒரு வாரம் இருக்கிறது சிரார்த்தத்துக்கு. வீட்டுப் பக்கத்திலேயே ராவுத்தர் கடையில் மலிவு விலைக்கு சுருட்டு கிடைக்கலாம். கூடவே ஊர் வம்பும் கிட்டும். ரத்னாபாய் மூக்குப்பொடி போடுவது அதில் சேர்த்தியாக இருக்கக் கூடாது.

உள்ளே உயர ஸ்டூல்களில் உட்கார்ந்திருந்த ஊழியர்கள் கழுத்துப்பட்டி அணிந்திருந்தார்கள். எல்லாம் ஒரே மாதிரியான நீல டை என்பதால் அவற்றை நிறுவனமே அவர்களுக்கு அன்பளித்திருக்கலாம் என்று ராமோஜிக்குத் தோன்றியது. இவ்வளவு நாகரீகமாக உட்கார்ந்திருப் பவர்களிடம் பொடி என்று பேசத் தொடங்கினால் அச்சான்யமாக இருக்காதோ.

இருந்துவிட்டுப் போகட்டும். அவர்களுக்கு ஒய்யாரமாக வந்து உட்கார இல்லை உத்யோகமும் சம்பளமும். வருகிற போகிற சுப்பிணி, குண்டுணி, குப்புசாமி கேட்கிறது என்ன என்று செவிமடுத்து நாலு சல்லிக்கு வேணும் என்றாலும் எடுத்து மடித்துத் தருவதுதான் வேலை.

ராமோஜி ஒரு தகர டின் ஆபீசர்ஸ் மூக்குத் தூள் என்று சுதேசமித்திரன் விளம்பரத்தில் பார்த்தபடிக்கு கேட்கப் போகிறான்.

‘எஸ் ப்ளீஸ்’ என்றபடி மூக்குக்கு இறங்கிய கண்ணாடியை மேலே இழுத்து விட்டுக்கொண்டு, ராமோஜியை கூர்ந்து பார்த்தார் ஒரு சிப்பந்தி. சர்க்கஸில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் பழகிய கரடி போல இருந்தார் அவர். இவனது பதிலை எதிர்பார்த்து உயரமான ஸ்டூலில் இருந்து குதிக்கலாமா வேண்டாமா என்று முடிவு செய்யப் போகிறார்.

‘ஒரு டின் ஆபீசர்ஸ மூக்குத்தூள் வேண்டும். பெரிய டின் இருக்கும் என்றால் அது சிலாக்கியமானது. சின்னது என்றாலும் விரோதமில்லை. தலைக்குள் குடைச்சல் ஏற்படும் நேரத்தில் பொடி எதில் வந்தால் என்ன? நாசிகா சூரணம் வாங்கிப் போடுவதைவிட வேறே உன்னதமான காரியம் உண்டோ?’

மனதில் சொல்லிப் பார்க்க, தடங்கல் இல்லாமல் வந்தது. கலகலப்பான குரலில், கனவான் தோரணைகளோடு அவன் பேசப் போகிறான்.

வாயைத் திறந்து, ‘மூக்குப்பொடி வேணும்’ என்றான்.

ஸ்டூலில் இருந்து எழுந்த சிப்பந்தி ஓர் வினாடி திகைத்துப் போய் நின்றார். ராமோஜி உலகத்தில் உற்பத்தியான மூக்குப்பொடி எல்லாவற்றையும் ஏதோ வன்மத்துடன் வாங்கி எடுத்துப்போய் நாசமாக்க வந்திருக்கிறான் என்று தோன்றியிருக்கும் அவருக்கு.

‘மன்னிக்க வேணும் ஐயா. இது கே அண்ட் கே கூஷன் ஹோமியோபதி மருந்துக் கடை. அந்தப் பக்கத்தில் கொஞ்சம் ஆயுர்வேதமும் உண்டு.’

ராமோஜிக்கு வெட்கமாகப் போனது. ஹோமியோபதி மருந்துக் கடையில்தான் வந்து புளிமூட்டை மாதிரி நின்று மூக்குப்பொடி வேணுமென்று கேட்டதை இந்த ஊழியர்கள் எல்லாம் ஸ்டூலைவிட்டு இறங்கிக் கூட்டம் போட்டு வயிறு வலிக்கச் சிரித்துச் சிரித்துப் பேசித் தீர்ப்பார்கள் என்று தோன்றியது.

உடனே திரும்பிவிடலாம். ஆனால் அது புத்தியின்மையை தானே பறைசாற்றியதாக ஆகிவிடும். வேண்டாம். அகஸ்மாத்தாக தவறான விலாசத்துக்கு வந்த கனவானாக அபிநயித்துப் பின் திரும்பலாம் என்று கருதி சைக்கிள் சாவியை முகவாயில் தேய்த்தபடி அவன் கேட்டான் –

‘நான் பம்பாய்க்கு இடம் மாறி நிறைய காலம் ஆனதால் இங்கே வரும்போது எல்லாம் மாறி இருப்பதை மலைப்போடு பார்க்கிறேன்’ என்றான்.

‘அப்படியா? ஆனால், இங்கே எங்கள் கடை இருபது வருடமாக இதே இடத்தில்தான் இருக்கிறது’ டைக்கார கட்டேலே போவான் விடாமல் பிடித்தான். படவா, அவனை ஸ்டூலில் இருந்து கொட்டையில் உதைத்து விழுத்தாட்டி அவன் மூக்குக் கண்ணாடியை காலால் நொறுக்கி மேலே சிறுநீர் கழிக்க வேணும் என்று வெறி வந்தது ராமோஜிக்கு. கடைசி விஷயம் கடைக்குள் செய்யக் கூடியதில்லை என்பதால் அதை வாபஸ் வாங்கியபடி சிரித்தான் ராமோஜி.

ரத்னாபாயை அவளுடைய வழுவழுத்த தந்தக் கைகளை வருடி அருகே அழைத்து சுள்ளென்று காதில் சத்தம் எதிரொலிக்க கன்னத்தில் அறைய வேணும் என்று அடுத்த வெறி. எதுவும் செய்ய முடியாது. அடுத்த தெருவில் பொடிக்கடை இருக்கலாம். தேடிப் போவதே ராமோஜிக்கு விதிக்கப்பட்டது.

தேடிப் போனான். சரியான இடத்தில் படி ஏறினான். வாங்க வேண்டியதை வாங்கினான். வீட்டுக்குச் சைக்கிள் போய்ச் சேர்ந்தபோது ரத்னாபாய்க்கு ஒரே சந்தோஷம். சைக்கிளை அன்போடு வருடியபடி அவனைப் பார்த்தாள்.

‘ஐயோ, எனக்கு மூக்குத்தூள் இல்லாம மூச்சு நின்னுடுமா, என்ன? சாயந்திரம் வரும்போது வாங்கிட்டு வந்திருக்கலாமே. பாவம், பாதி வேலையிலே ஓடி வந்து இப்படி.’

அவள் நன்றி பாராட்டிய மோஸ்தார் சிருங்காரத்தில் ஊறிய ஒன்று. அப்படியே அவள் மூக்கில் பொடியைத் திணித்து அவளைத் தூக்கிச் சுமந்து கட்டிலில் போட்டு நட்ட நடுப்பகலில் முதுகு வியர்த்து வழிய சுகம் கொண்டாட ஆசை வந்தது ராமோஜிக்கு.

விக்டோரியா மகாராணிக்கு பிறந்த நாள் வாழ்த்து சொன்னபடி அதேபடிக்கு நடந்து முடித்தது. ஒரு வாரத்துக்கான அல்வா முழுக்க ராமோஜி ஊட்ட ஒரே பகலில் தின்று முடித்தாள் ரத்னா பாய்.

குளித்துவிட்டு சோறும் ரொட்டியும் சாப்பிட உட்காரும்போது மேஜை மேல் இன்னொரு பிரம்மாண்டமான பொடி டின் இருப்பதைப் பார்த்தான். குஜராத்தியில் எழுதிய பம்பாய் பிராண்ட். எங்கே இருந்து வந்தது இது?

‘அப்பா இந்தப் பொடி தலைவலிக்காகப் போடுவது என்று வைத்தியன் சொல்படிக்கு இன்னும் ரெண்டு டப்பி, கிட்டத்தட்ட அடுத்த வருஷம் வரை வரும்படி எனக்குக் கொடுத்தனுப்பி இருக்கிறார். அதில் ஒண்ணை காலையில் எடுத்து வைத்தேன். உங்கம்மா ஒரு சிமிட்டி எடுத்துக்கறேன்னு கிட்டத்தட்ட அரை டப்பாவை காலி பண்ணியாச்சு’ என்றாள் சிரித்தபடி.

‘அம்மா எங்கே?’ அவள் உள்ளறைக்குள் கை காட்ட அங்கே வாயில் ஈறு முழுக்க வர்ணம் அடித்த மாதிரி மூக்குத் தூளை ஈஷி, வாயைப் பிளந்தபடி விநோதமான போதையில் கிறங்கி அம்மா சக்குபாய் உறங்கிக் கிடந்தாள்.

‘உங்க அப்பாவுக்கும் அடுத்த வாரம் சுருட்டு வேணாம். பொடி படைத்தால் போதும். நான் சாஸ்திரத்தை அலசி ஆராய்ந்து நம்ம ஸ்வஜாதி புரோகிதரிடம் சொல்லிவிட்டேன். காலையில் நீங்க ஆபீஸ் போன பிறகு வந்திருந்தார். பொடி தருவதானால், தானே அடுத்த வாரம் திவசத்துக்கு வந்து விடுகிறேன் என்றார். அவருக்கு சின்னதாக லண்டன் பொடி டப்பி ஒண்ணும் வேணுமாம்.’

ரத்னாபாய் முதுகில் அன்போடு தடவித் தட்டினான் ராமோஜி. முதுகு அங்கே இல்லை, ரொம்பக் கீழே இறங்கிட்டீங்க என்று பொய்க் கோபம் காட்டினாள் ரத்னாபாய்.

இன்னொரு தடவை ரமிக்கலாம் என்று தோன்றியது. அப்படியே ஆகட்டும் என்றாள் செல்லப் பெண்டாட்டி. இடுப்பிலிருந்து பெட்டிகேஷ் சாவியை எடுத்துவிட்டு அவள் படுக்கச் சொன்னதை அவன் மீறவில்லை.

சொர்க்க உத்யானவனத்தில் படி ஏறிக்கொண்டிருந்த விக்டோரியா மகாராணி காதில் மெட்றாஸ் வண்ணாரப்பேட்டையில் இருந்து பிறந்தநாள் வாழ்த்துகள் ஜதையாகச் சொல்லும் சத்தம் முக்கல் முனகலுக்கு இடையே கேட்டது.

‘இந்திய ஜனங்கள் வித்தியாசமானவர்கள். அந்தரங்க நேரத்தில் ராணியம்மாவையும், ஆபீஸ் நேரத்தில் கிரீடையையும் நினைத்துக் கொள்வார்கள். சௌக்கியமாக இருக்கட்டும்.’

ஹர்ர்ர் என்று உறிஞ்சி, ஒன்றுபட்டுத் தும்மி கலவி வேகத்தில், கட்டிலில் இருந்து இருவரும் சரியும் சத்தத்தை காதில் வாங்கியபடி, விக்டோரியா மகாராணி புன்னகையோடு அடுத்த படியில் ஏறினாள். அவள் கையிலும் ஒரு சிட்டிகை பொடி இருந்தது.

★★★

பதினொன்று

# ஆறாம் ஜார்ஜ் மன்னருக்கு விட்டோபா லிகிதம் – 1945

விட்டோபாவை நினைவு இருக்கிறதா? ஆமாம், கும்பகோணத்து மனுஷர். நான் அங்கே டீ போர்ட் ஃபீல்ட் ஆபீசராக ஊர் முழுக்க, பட்டி தொட்டிகள் அத்தனையும் பயன்பெற, இலவச டீ பார்ட்டி நடத்தப் போனபோது என்னுடைய உதவியாளராக உத்தியோகத்தில் சேர்ந்தவர்.

அது ஆச்சு பத்து வருஷம் முன்பு. விட்டோபா இப்போது கும்பகோணத்தில் டீ போர்ட் மெயின் ஏஜெண்டாக பரபரப்பாக வியாபாரம் செய்து கமிஷனை அள்ளுகிறார். வேலைக்கு எங்கேயும் போக வேண்டாமல் கமிஷன் பணமே கணிசமாக வருகிறது. நான் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் உதவி சூபரின்டெண்ட்டெண்ட் ஆக வேலை பார்த்துக் கிடைக்கும் மாத சம்பளத்தைவிட அவருக்கு வரும் டீ போர்ட் கமிஷன் அதிகம்.

சும்மா இருக்கும் நேரத்தில், அனேகமாக நாள் முழுக்க, கடுதாசி எழுதுகிறார், சகலருக்கும். இங்கிலாந்து சக்கரவர்த்தி ஆறாம் ஜார்ஜ் அவர்களுக்குக்கூட கடிதாசு போட்டு, விலாசம் முழுக்க இல்லை என்று திரும்பி வந்ததாக எனக்கு எழுதிய கடுதாசியில் குறிப்பிட்டிருந்தார்.

சக்கரவர்த்தி எப்படியாவது படித்துக்கொள்வார் என்று தமிழில்தான் எழுதியிருந்தார். அவர் எழுதிய கடிதத்தையும் எனக்கு அனுப்பியிருந்தார். அதை இங்கே கீழே தருகிறேன்.

★

பூவுலகம் எல்லாம் அரசாளும் மாட்சிமை மிகுந்த சக்கரவர்த்தி அவர்களுக்கு கும்பகோணம் டீ போர்ட் ஏஜண்ட் விட்டோபா எழுதுவது.

Safe. உங்கள், மற்றும் மகாராணியார் சௌக்கியத்துக்கு லெட்டர் எழுதச் சொல்ல வேண்டியது. நாங்கள் இங்கே எல்லாரும் சௌக்கியமாக இருக்கிறோம். இது நிற்க.

இங்கத்திய கவர்மெண்ட், நியூஸ் பேப்பர்களில் தற்காலம் ஒரு விளம்பரம் கொடுத்து வருகிறது – சிக்கனம் பேணுவோம் என்று மேலே எழுதி வரும்

அதனை மகாராஜா அனுமதியோடு அச்சுப்போட அனுப்பியிருப் பார்கள் என்று நம்புகிறேன். இருந்தாலும் சில சந்தேகங்கள் இது விஷயமாக எனக்குண்டு. சக்கரவர்த்தி அவர்கள் உசிதம்போல நேரம் ஒதுக்கி இவற்றை நிவர்த்திக்க முடியுமானால் மிக்க நன்றியோடு இருப்பேன்.

முதல் சந்தேகம் தலைப்பிலேயே உள்ளது. அதென்ன பேணுவோம்? சர்க்காரும் ஜனங்களோடு சேர்ந்து சிக்கனமாக இருக்கும் என்று அர்த்தமா

இதற்கு? சர்க்கார் என்றால் அதை நடத்திப்போகிற வைஸ்ராயில் இருந்து தாலுகா ஆபீசில் டவாலி சேவகன் வரைக்கும்தானே? சர்க்காரும் ஜனங்களோடு செயல்படும் என்றால், அரிசியோ விறகோ வாங்க, ரேஷன் கடை வரிசையில் எனக்கு முன்போ பின்னாடியோ, வைஸ்ராய் ஆர்ச்பால்ட் வேவல் துரை நிற்பார் என்று எதிர்பார்க்கலாமா?

அண்ணல் அக்ரஹாரத்து பலசரக்கு கடைக்கு கேரியரில் டீத்தூள் பெட்டியோடு என் ஆபீஸ் பையன் கரிமாணிக்கம் சைக்கிள்விட்டுப் போகும்போது அகஸ்மாத்தாக வைஸ்ராய் வேவல் துரையவர்கள் காரில் வந்தால், அவன் சிக்கன நிமித்தம் சைக்கிளை வைத்துவிட்டு அவரோடு அவர் காரில் பிரயாணம் செய்ய முடியுமா?

சிக்கன நடவடிக்கையாக வைஸ்ராய் வேவல் துரையை சைக்கிள் கேரியரில் டபுள்ஸ் கூட்டிப் போகவும், கரிமாணிக்கத்துக்கு ஒரு கஷ்டமும் இல்லை. சைக்கிளில் இரண்டு பேர் போவதற்காகப் பிடித்து காற்றை டயரிலிருந்து எடுத்துவிடாமல் இருக்க கான்ஸ்டபிள் அல்லாபிச்சையிடம் சர்க்கார் சொல்லி வைக்க வேண்டும்.

எனக்கு சைக்கிள் ஓட்டத் தெரியாததால் நடந்தே எல்லா வேலையும் முடிக்கிறேன். கரிமாணிக்கத்துக்கு சம்பளம் கொடுக்கக் கட்டுப்படி ஆகாமல் நானே நடந்து பெட்டியை கடைகடையாக டெலிவரி செய்தால் மேன்மை தாங்கிய மதறாஸ் மாகாண கவர்னர் துரையவர்களான ஆர்தர் ஆஸ்வால்ட் ஜேம்ஸ் ஹோப் அவர்கள் ஒரு கை கொடுத்து நாம் சிக்கனம் பேண உதவி செய்வாரா?

சர்க்காரும் பிரஜைகளும் வித்தியாசமில்லாமல் பழகும்போது, ஒருநாள் ஒரு பொழுது உடம்பு சவுகரியப்படவில்லை என்றால், எனக்கு இல்லை மகாராஜா, என் பெண்ஜாதிக்கு, உடம்பு சௌகரியமில்லாமல் போனால் திப்பிலி கஷாயம் வைத்துக் கொடுக்கவோ, மிளகு ரசமும் சாதமும் பண்ணிப் போடவோ கவர்னர் வீட்டம்மா துரைசானி அவர்கள் ஒரு நடை

வந்து போவாரா? டாக்டருக்குக் கொட்டி அழாமல் சிக்கனம் காட்டும் நடவடிக்கை இல்லையா இது?

சவர பிளேடை தீட்டி வைத்து நெடுநாள் உபயோகப்படுத்துங்கள் என்று முதல் யோஜனையாக விளம்பரத்தில் சொல்கிறார்கள். அது என்ன ஆரம்பிக்கும்போது சிக்கனம் பேணுவோம் என்று சர்க்காரும் கலந்துகொண்டு, ஷவர ப்ளேட்பற்றிப் பேசும்போது ப்ளேடைத் தீட்டி உபயோகப்படுத்து என்று எங்களை மட்டும் செய்யச் சொல்லுவது.

கவர்மெண்ட் ஆன வைஸ்ராய், கவர்னர் இவர்களுக்கு ப்ளேடைத் தீட்டத் தேவையில்லாமல் தினம் புது ப்ளேட் யோகம் உள்ளதா? இல்லை அவர்கள் பேனாக் கத்தியை வைத்து சவரம் செய்துகொள்வார்களா அல்லது யாராவது சவரம் செய்துவிடுவார்களா?

ப்ளேடுக்கு சாணை பிடிக்க சாணைக்காரனை எங்கே தேட? சாணை பிடிக்கும் யந்திரத்தில் அதை எப்படிப் பிடித்து உடையாமல் தீட்டுவார்கள்? அரண்மனைக்கு வாடிக்கை சாணைக்காரர் இருந்தால் அனுப்பி வையுங்கள்.

டெல்லி சுல்தான்கள் காலத்தில் சுல்தானுக்கு தொந்தரவில்லாமல் அவர் தூங்கிக்கொண்டிருந்தபோது முகச்சவரம் செய்து விடுவார்களாம். ஒரு நாள் ஏதோ அவசரத்தில் முகச்சவரம் செய்து முடித்துப் பார்த்தால் அது சுல்தானுடைய ஆசைநாயகியாம். பிளேடும் ரேசரும் நமக்கு நாமே ஷேவுக்கான சமாசாரங்கள் என்பதால் இப்படி எல்லாம் சாணை தீட்டிய ப்ளேடாலோ தீட்டாத பிளேடாலோ விபத்து வர சந்தர்ப்பம் இல்லைதான். ஆனாலும் எதற்கு கஞ்சத்தனம்?

சிக்கனம் பேணுவோம் என்று வரும் சர்க்கார் விளம்பரத்தில் அடுத்து சொல்கிறது வீட்டில் நிம்மதியை ஒரு வழி பார்த்து விடும்.

வீட்டில் அதிகமான அறைகளை வாடகைக்கு விடுங்கள். இது அந்த சிக்கன யோஜனை.

என் வீட்டில், கும்பகோணம் தெருவில் பல வீடுகளில் உள்ளதுபோல திண்ணையோடு வாசல், ஒரு ரேழி, அங்கே கேமிரா அறை என்கிற சின்ன ரூம், ஹால், ஹாலுக்கு தெற்காக ஸ்டோர் ரூம், இது தவிர மாடியில் சின்ன ஹால், மாடி ஓரமாக சேந்தி என்ற கண்டாமுண்டா சாமான்கள் போட்டு வைக்கும் இடம், சமையல்கட்டு, ஒட்டி பின்கட்டு நடை, பாத்ரூம், கிணற்றடி, தோட்டம், கக்கூஸ், கொல்லைக்கதவு இப்படித்தான் இருக்கும்.

நான், வீட்டுக்காரி, ரெண்டு மகன், ஒரு மகள், ஒரு வயோதிகத் தாயார் இப்படியான குடும்பத்துக்கு இதில் எதெல்லாம் புழங்குவதற்கு வேண்டியதைவிட அதிகமான இடம்? யார் அதைத் தீர்மானிப்பது?

திண்ணையை வாடகைக்கு விட்டுவிடலாமா? யாருக்கு? அங்கேயும் ஒரு குடும்பத்தைக் குடிவைத்தால் நாம் பால் வாங்க, காய்கறி வாங்க வெளியே போகும்போது அவர்கள் குடித்தனம் நடத்திக்கொண்டிருப் பதைப் பார்த்தால் என்ன சொல்லிக் கடந்து போகவேண்டும்? அவர்கள் குளிக்கக் கொள்ள, காலை விசர்ஜனம் முடிக்க எங்கே போவார்கள்? எங்கள் கக்கூசையும் பாத்ரூமையும் அவர்களோடு பகிர்ந்து கொண்டால், எங்களுக்கு அத்தியாவசியமான இடம் குறையுமே. சமையலை அவர்கள் திண்ணையிலேயே வைத்துக்கொள்வார்களா? செய்தாலும் செய்வார்கள்.

திண்ணைக்குக் குடி வந்தவன் வாசல் படியில்கூட குமுட்டி அடுப்பு வைத்து காப்பி போட்டுக்கொள்வான். வாடகை தருவது முன்னே பின்னே ஆனாலும், திண்ணையைத் தாண்டி உள்ளே போகும்போது காப்பி வாசனை மூக்கில் படும்.

இந்த இடத்தில் தெரிவித்துக்கொள்ள நான் ஆசைப்படுவது, எனக்கே திண்ணையில் டீ போட்ட அனுபவம் உண்டு. அதுவும் ஒரு வீட்டில் இல்லை, தெருத்தெருவாக பல வீட்டுத் திண்ணையிலும். அந்தக் கதையை சாவகாசமாக ஒருநாள் எழுதி அனுப்புகிறேன் சமூகம் படித்து ரசிக்க.

சரி திண்ணைக் குடித்தனத்தார் குடும்பமாக இல்லாமல் தனிநபராக இருந்தால் என்ன செய்வார்? பிரம்மச்சாரிப் பையன் வாசலில் பப்பரப்பே என்று சகலத்தையும் திறந்து போட்டுக்கொண்டு வாளியில் தண்ணீர் வைத்துக்கொண்டு ஸ்நானம் செய்வது நம் வீட்டளவில் மட்டுமில்லாமல் தெருவுக்கும் அபக்யாதி பெற்றுத் தருமே.

வாசல் திண்ணை பிரம்மச்சாரி குளித்துவிட்டு வாசலிலேயே கொடி கட்டி லங்கோட்டை உலர்த்தினால் அதைக் கண்டும் காணாமல் வயசுப் பெண்டுகள் எப்படிப் போகவர?

ரேழியில் ரெண்டு பேர் ஜோடியாக நடந்து வந்தாலே எதிரில் வருகிற யாரும் பின்வாங்கி ஒருக்களிச்சு நிக்க வேணும். இதிலே அங்கே வாடகைக்குவிட சௌகரியப்படாது. ஹால், ஸ்டோர் ரூம், சமையல் கட்டு, பின்கட்டு நடை, பாத்ரூம், தோட்டம் எதுவும் வாடகைக்குவிடத்

தோதுப்படாதே. இப்படி ஓர் உருப்படியில்லாத யோஜனையை இங்கத்திய சர்க்கார் சொல்ல, லண்டனில் சர்க்கார் தூண்டுதல் காரணமா?

இன்றைக்கு என் வீட்டில் தேவையில்லாமல் இருக்கும் இடத்தை வாடகைக்கு விடச்சொல்லி நச்சரிக்கும் குசும்பன்கள் நாளைக்கு உங்கள் மேன்மை பொருந்திய மகாராணியும் நீங்களும் சௌகரியம்போல் எல்லா சௌபாக்கியங்களும் கொண்டு வசித்து வரும் பக்கிங்ஹாம் அரண்மனை என்ற க்ரஹத்தில், இப்படி நூறு பேரை சிக்கன நடவடிக்கை என்று குடியேற்றினால் நீங்கள் என்ன பாடுபடுவீர்கள்.

ராஜாவும் ராணியம்மாளும் காலை பசியாற, அங்கத்திய சாப்பாடாமே, சொல்லக் கேள்வி, பன்றி இறைச்சியை நீள நீளமாகப் பொரித்து வைத்த சாசேசு என்றோ ஏதோ பெயர் உள்ள அந்த காலை ஆகாரத்தை இட்லி தோசை தேடாமல் ரசித்து சாப்பிட்டுக்கொண்டிருக்க, எவன் எவனோ இரும்பு பக்கெட்டும் தாம்புக் கயிறுமாக அண்டர்வேர் வெளியே தெரிய வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு குளிக்க, மலசல விசர்ஜனத்துக்காக என்று அரன்மனைக்குள் திரிந்துகொண்டிருந்தால் எப்படி இருக்கும் சமூகத்துக்கு. அதில் ஒரு குசும்பாதி குசும்பான் உங்ககிட்டேயே கக்கூஸ் போகிற வழி என்ன என்று கேட்டாலோ.

ஆகவே இந்த சிக்கன யோசனையை கைவிடுமாறு பிரியத்தோடும் வந்தனத்தோடும் மகாராஜா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு பயித்தாரத்தனமான யோசனை. பூச்செடிகளைக் களைந்துவிட்டு காய்கறி பயிரிடுங்கள். வீடு வாசல் இருந்து தோட்டம் இல்லாதவர்கள் என்ன செய்ய வேண்டும்? கொல்லையில் சிமிட்டி அல்லது காரை பூசின தரையைத் தோட்டமாக்கி வெண்டைக்காய் பயிரிட வேணுமா?

என் வீட்டில் பூஜைக்கு துளசியும் நந்தியாவட்டையும் பயிரிட்டிருக்கிறேன். இரண்டையும் எடுத்துவிட்டு பாகற்காய் பயிரிட்டால் சாரங்கபாணிப் பெருமாள் கோவிலில்கொண்டுபோய்க் கொடுக்க துளசி இல்லாமல் பாகற்காயையோ சுரைக்காயையோ கொண்டுபோய்த் தரலாமா? பட்டசாரியார் என்ன நினைத்துக் கொள்வார்?

ஒரு துண்டு பாகற்காயை சுவாமி தரிசனத்துக்கு அப்புறம் வாங்கிக் கொண்டு சடாரி சாதிக்க வைத்து இறங்கிப் போகும் பக்தன் பாகற்காயை மென்றால், கசப்பு இல்லையா தட்டுப்படும் நாக்கில்?

அதே போல் கும்பேஸ்வரர் கோவிலில் நந்தியாவட்டைப் பூவுக்குப் பதிலாக புடலங்காயையோ சின்ன சைஸ் பரங்கியையோ தோட்டத்தில் பயிர் செய்துகொண்டுபோய்க் கொடுத்தால் சரிப்படுமா? வாங்கிக் கொண்டுபோய் சாம்பாரில் போடுவார்கள் சிலர். இருக்கத்தான் செய்கிறார்கள்.

மார்கழிக்கு காலையில் கோலத்தில் வைக்க பூசணிப்பூவுக்கு வேணுமானால் பூச்செடியைக் களைந்துவிட்டு காய்கறி பயிரிடுவது சரிப்படலாம்.

மற்றபடி வீட்டில் நான் மல்லிகையோ, தாழம்பூவோ, பயிரிடவில்லை.

அப்புறம் அதென்ன சமையல்கட்டு சம்பந்தமான இந்த யோஜனை? பழைய பாத்திரங்களைப் பழுது பார்த்து உபயோகிக்கவும்.

இந்த யோஜனையைக் கொண்டுவந்தவர்கள் எந்தக் காலத்திலாவது சமையல்கட்டில் புகுந்து பாத்திரங்கள் எதெது, எந்தப் பாத்திரத்தை எந்த காரியத்துக்கு உபயோகப்படுத்துகிறார்கள் என்று பார்த்திருக்கிறார்களா?

பாத்திரத்தில் ரிப்பேர் என்றால் எப்படியான விஷயம் அது? வாலாம்புவில், அங்கத்திய பெயர் தெரியவில்லை, லண்டன் அரண்மனையில் வால் பாத்திரம், டெய்ல் வெஸல் என்று சொல்வீர்களா, தாங்கள் அரண்மனை சமையல்கட்டுக்கு விசிட் அடித்ததுண்டா?

என்ன சொல்லிக்கொண்டிருந்தேன்? வாலாம்புவின் வால் பகுதி அப்பப்ப என்னை மாதிரி லூஸாகி விடும். ஸ்க்ரூ ட்ரைவரை வைத்து ஒரு முறுக்கு முறுக்கி நாலு தடவை மேலே அகப்பைக் கரண்டியாலோ பொடிக்கும் கைக்கு லகுவான சின்னக் குழவியாலோ தட்டினால் அப்புறம் நாலு மாசம் வாலாம்பு வாலை ஆட்டாமல் பால் காய்ச்ச சமர்த்தாக அடுப்பில் உட்காரும்.

மற்றபடி பாத்திரத்துக்கு பழுது என்றால்? அண்டா குண்டா அடுக்குப் பாத்திரங்கள் வீட்டு புருஷன் பெண்டாட்டி யுத்தத்தில் விட்டெறிந்து அங்கே இங்கே நசுங்குவது உண்டுதான். டொக்கு விழுந்தாலும் அந்தப் பாத்திரத்தை யார் எடுத்து அழகு பார்க்கப் போகிறார்கள்?

என்றாலும் கொல்லருக்கு வேறு வேலை இல்லாத பொழுதில் கொண்டுபோய்க் கொடுத்தால் ஒரு தட்டு தட்டிக் கொடுப்பார். அடுத்து நடக்கப் போகிற வீட்டுச் சண்டைக்கு தளவாடம் தயார். சக்கரவர்த்திகளின் அரண்மனையில் இந்த மாதிரி யுத்தமெல்லாம் நடப்பதில்லைபோல. நடந்தால்தான் பத்திரிகைக்காரன் எழுதியிருப்பானே?

எவர்சில்வர் கிண்ணம், டம்ளர், கரண்டி இதெல்லாம் பழுதாவதில்லை. அவ்வப்போது இவை கிணற்றில் தவறி விழுந்து கபால மோட்சம் பெறும். நல்லவேளை பாத்திர சிக்கனம் பேண தினசரி பாதாளக் கரண்டியை உபயோகிக்கவும் என்றோ அதைவிட சிறந்ததாக வாரம் ஒருமுறை கிணற்றில் சாடி பாத்திரம் தேடியோ வரச்சொல்லவில்லை. அதுவரை சந்தோஷம்தான்.

ஓட்டை விழுந்த வெங்கலப்பானையை அடைத்து சாதம் வடிக்கலாம் தான். ஆனால் வெங்கலப் பாத்திரம் போன தலைமுறை மனுஷர்கள் போல் நூறு வருஷம் கல்லுப்போல புழக்கத்தில் இருக்கும். பழுது என்ற பேச்சே கிடையாது.

கல்சட்டி, ஜாடி இதெல்லாம் உடைந்து போனால் ஒட்ட வைக்க யாராவது பசை கண்டுபிடித்தால் பிரயோஜனமாக இருக்கும். ஆனால் அது சாத்தியமில்லை போலிருக்கு. அதுவரை ஜாடி உடையாமல் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்வது தவிர சிக்கன நடவடிக்கை ஏதும் மனதில் வரவில்லை.

ஈயப் பாத்திரத்தில் வருஷம் ஒரு தடவை வாசலில் ஈயம் பூசலியோ என்று வருகிறவன் வாசலில் உட்கார்ந்து தீ மூட்டி ஈயம் பூசித் தருவது தானே நடக்கும் காரியம். அது பழுது பார்க்கிற டிபார்ட்மெண்டில் வராது. ஈயச் செம்பு ரொம்ப நாழி அடுப்பில் இருந்தால் கக்கரபிக்கர என்று வடிவம் மாறிவிடும். அதை அப்புறம் உபயோகிக்க வழி இல்லை. மகா பழுது அது.

அடுத்த சிக்கனம் பேணுவோம் யோஜனை கொஞ்சம் செய்யக் கூடியது போல் தோன்றியது முதலில் படித்தபோது – பழைய துணிகளைத் தைத்துப் பலநாள் வரும்படி பயன்படுத்துங்கள்.

பயன்படுத்தலாம்தான். வேட்டியை எத்தனை தடவை ஊசி வைத்து மூட்டிக் கட்டிக் கொள்வது? அதுவும் எனக்கு, எங்கம்மா சொன்னது போல அருமாமணைக் குண்டி. அஸ்லீல வார்த்தைக்கு வருந்துகிறேன் மகாராஜா. அம்மா சொன்னதை வேறு எப்படியும் சொன்னால் அவளுக்கு மரியாதை இல்லையே. அருமாமணை என்றால் அரிவாள்மனை. நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள் என்றால் இந்தியா விஜயம் பண்ணும்போது காண்பிக்க ஏற்பாடு செய்கிறேன்.

உடம்பே துணி கிழிக்கும் கருவியாவதால், புத்தம்புதுசாக தீபாவளிக்குத் துணி உடுத்தி அடுத்த ஒரு மணி நேரத்தில் அது ஓரத்தில் கிழிய, அல்லது கொளுத்திய கம்பி மத்தாப்புக்கு வெகு நெருக்கமாக நகர்ந்து அது

துணியில் பட்டு நெருப்புப் பொறி பொசுக்க என்று எனக்குத்தான் சின்ன வயசில் தீபாவளி தினத்துக்கான முதல் களேபரம் உண்டாகும்.

இன்றைக்கும் புது வேட்டி கட்டி தரையில் உட்கார்ந்தாலோ பெரியவர்கள் யாரையாவது காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணினாலோ டர்ர்ர் என்று காலுக்கு நடுவில் வேஷ்டி கிழிவது எனக்கு சகஜம்.

அப்படித்தான் ரெண்டு மாதம் முன்பு பாபுராஜபுரத்திலும் தேவனாஞ் சேரியிலும் டீத்தூள் சப்ளை பண்ண அபூர்வமாக மெட்றாஸில் இருந்து வரும் வேனில் போகும்போது சட்டைக் கையில் ஆணி ஏதாவது பட்டு புதுச் சட்டை கிழிந்த அனுபவம் உண்டு.

போன வருஷம் என் பிறந்த தினம் என்று பெண்டாட்டி வாங்கி வைத்திருந்த சீனத்து பட்டுத்துணியில் துக்கோஜி டெய்லர் தைத்துக் கொடுத்த முழுக்கை சட்டை, பத்தே நாளில், வேனில் பிரேக் பிடிக்கும் நேரம் துள்ளி தரையில் விழுந்து, டர்ரென்று கிழிந்து அடுத்த வாரம் சுருணையாகிப் போனது.

சீன சில்க் என்பதால் தரம் அவ்வளவாக இருக்காதுதான். மேலும் பட்டுத் துணியை மூட்டித் தைக்கவோ, தையல் மிஷினில் கொடுத்து தைக்கவோ அத்தனை சரியாக வரவில்லை. கலர் நூலும் கிடைக்காத காலம் இது. சரியாகத் தைக்க முடிந்தால் அது ஓரளவு சிக்கன நடவடிக்கைதான். சீன சில்க் விற்க வேண்டாம் என்று சக்கரவர்த்திகள் தடை போட ஏற்பாடு செய்தால் நல்லது.

பொம்மனாட்டிகள் ரவிக்கை, உள்ளே மாட்டிக்கொள்ளும் உள்பாடி இதெல்லாம் கிழிவது, தைப்பதுபற்றி சர்க்கார் விவாதிப்பது அநாகரீகம். மகாராணி காதில் விழுந்தால், உங்களையும் ஆர்டர் போட்ட சர்க்காரையும் கண்டமேனிக்குக் கடிந்துகொள்வாராக இருக்கும்.

பசங்கள் துணியை எவ்வளவு தடவை தைத்தாலும் அவ்வளவுக்கும் மேல் கிழித்துக்கொண்டுதான் வருவார்கள். கிழிசல் தைக்க செய்யும் மொத்தச் செலவுக்கு ஒரு புது நிஜாரோ சட்டையோ பாவாடையோ தைத்துக் கொடுத்துவிடலாம்.

துணி விஷயத்தில் சிக்கனம் பேணணும் என்றால் வீட்டில் முதல் குழந்தை போட்டிருந்த உடுப்பை அடுத்த குழந்தைக்கும் அந்தக் குழந்தை உடுத்தியதை அதற்கடுத்ததற்கும் போட்டு விடலாம். துணி நிறைய நாள்

வரும். ஆனால் அத்தனை குழந்தை பெற்றால், வீட்டில் சிக்கனம் பேண, சர்க்கார் வளர்க்குமா அதுகளை?

சர்க்கார் கொடுத்திருக்கும் இன்னொரு சிக்கனம் பேணுவோம் யோஜனை – குழந்தைகளின் பொம்மைகளை ரிப்பேர் செய்து பயன்படுத்துங்கள்.

எங்கள் வீட்டுக் குழந்தைகள் மிஞ்சிப் போனால் மரப்பாச்சி பொம்மை நாலைந்தை வைத்து விளையாடும். அதுவும் பத்து வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகள். அதற்கப்புறம் வீட்டிலேயே பல்லாங்குழி, தாயக்கட்டம் ஆட ஆரம்பித்துவிடும். ஆம்பிளைப் பசங்கள் சீசனுக்குத் தகுந்த மாதிரி பம்பரம், கோலிக்குண்டு, கிட்டிப்புள் விளையாடும்.

அதில் சீசன் என்பது திடீரென்று தொடங்கி ரெண்டு மாசம் கோலாகலமாக நடந்து அடுத்த சீசன் தொடங்குவது. யாருக்கும் தெரியாது, எனக்கு இன்றுவரை புரியவில்லை, எப்படி திடீரென்று பம்பரக்குத்து சீசன் தொடங்கும் என்று. எப்படி என்றைக்கு அது முடிந்து கோலிக்குண்டு காலம் ஆரம்பித்தது என்று. உங்களுக்கு அரண்மனையில் அதெல்லாம் விளையாடக் கொடுத்து வைத்திருக்காதுதான். இது எதுவும் பொம்மைப் பிரிவில் வராது. அப்படியே எடுத்துக்கொண்டாலும், எப்படியோ பழைய பம்பரங்களும், கோலிகளும் அநேகமாக எங்கேயோ பத்திரமாக வைக்கப்பட்டிருந்து சீசன் நேரத்தில் கையில் கிடைத்துவிடும். கிட்டிப்புள் என்பது மரக் குச்சியை பேனாகத்தியில் நறுக்கி பெரிய பையன்கள் செய்து விளையாட எடுத்து வருவது. ஒரு காசு செலவில்லை இதில்.

மரப்பாச்சியையும், கோலிக்குண்டையும் பழுது பார்த்து விளையாடச் சொன்னால் குழந்தைகள்கூட சிரிக்கும். ஆக்கர் விழுந்த, அதாவது மற்ற பம்பரங்களால் குத்து வாங்கிய பம்பரத்தை மறுபடி சரியாக்க விஞ்ஞானிகள் வழி செய்து கொடுத்தால்தான் உண்டு.

மற்றப்படி கொலுவுக்கு கொலு மண் பொம்மைகளைப் பரணில் இருந்து இறக்கிப் படி ஏற்படுத்தி இருத்துவோம். அதில் அந்தந்த வருடம் ஒன்று ரெண்டு உடைந்து போகலாம்தான். அதற்காக பின்னமான பொம்மையை படியில் இருத்த முடியாது.

‘எங்கம்மா சீர் கொடுத்த பொம்மையிலே எனக்குப் பிடிச்சது’ என்று தலை உடைந்த ராஜா பொம்மையைப் பார்த்து வீட்டுக்காரி ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட, குறைந்தது நாற்பது வருஷப் பழசான அந்த பொம்மையை அகற்றி வெளியே போடும் அனுபவம் எனக்கு உண்டு.

மண் பொம்மையை ரிப்பேர் செய்து சிக்கனம் பேண வேண்டாமே. வருஷா வருஷம் நாலு புது பொம்மை வாங்கினால் பொம்மை செய்கிற பண்ருட்டி விற்பன்னர்களுக்கு வருமானம் வருமே. என்ன நான் சொல்றது?

விருந்துகளைக் குறையுங்கள் என்று அடுத்த சிக்கனம் பேணுவோம் புத்திமதி. இந்த யுத்தம் வந்தது முதல்கொண்டு விருந்து என்ற ஒரு சமாசாரத்தையே மறந்து போயிருக்கிறோமே. குறைக்க இனி என்ன இருக்கிறது?

எங்கள் மதறாஸ் பிரசிடென்சி மாகாணத்தில் கெஸ்ட் கண்ட்ரோல் சட்டம் போட்டிருக்கிறார்கள். விருந்து என்று முப்பது பேருக்கு மேல் கூப்பிடக் கூடாது. அதில் விருந்து கொடுக்கிறவர்களும் அவர்கள் குடும்பமும் அடக்கம்.

முப்பது பேருக்கும் தலா ஒரு சின்ன பெரி பிஸ்கட், ஆளுக்கொரு வாழைப்பழம், ஒரு துண்டு கேக் இப்படிக்கூட ஒண்ணும் தரக்கூடாது. சாப்பாடு படம் அச்சடித்த காகித நோட்டீஸ் தரலாமா தெரியவில்லை.

காளி மார்க் கோலி சோடா, கலர், எலுமிச்சம்பழ ஜூஸ், நீர்க்கக் கரைத்த பானகம், கெட்டியாகக் கரைத்து சப்ஜா விதை போட்ட ஒண்டிப்பிலி சர்பத், நீர்மோர் இப்படி பானமாகத் தரலாமே தவிர, திட பதார்த்தமாக ஒரு கடலை அச்சும் காக்காக் கடி கடித்துக் கூடக் கொடுக்கக் கூடாதாம்.

பிறந்த நாளுக்கு பத்துப் பேரை அழைத்து பானகம் கொடுத்தால் கேட்பார்களே - இன்னிக்கு ராவ்-நவமியா ராம்-நவமியா என்று. இந்த கஷ்டம் உங்கள் பிரஜைகளான எங்களுக்கு எதுக்கு மகாராஜா?

பகவத் கடாட்சத்தால், கல்யாணத்துக்கு முப்பது பேரை அழைத்து விருந்துச் சாப்பாடு போடலாம் என்று சட்டம் தாராளம் காட்டுகிறது. கல்யாண விருந்துக்கு போகிறவர்கள் அவரவர் ரேஷன் அரிசியை கல்யாணம் நடக்கும் இடத்துக்குக்கொண்டுபோய்க் கூட்டாஞ்சோறு சமைக்க வைத்துச் சாப்பிட்டு தம்பதியை வாழ்த்தவேண்டும் என்று கெஸ்ட் கண்ட்ரோல் சட்டம்.

கல்யாண அழைப்பிதழ்கள் எல்லாம் பயமுறுத்துகின்றன:

முகூர்த்தம் ஒரே நாள்.

சாப்பாடு ஒரே வேளை.

உங்கள் ரேஷனை முன்கூட்டியே அனுப்பி வையுங்கள்.

இதையும் குறைத்தால் என்ன ஆகும்? பெரிய குடும்பங்களில் மூணு வேளை குடும்பத்தில் இருக்கிற எல்லோரும் சேர்ந்து இருந்து சாப்பிடுவது விருந்து என்று கருதப்படுமா? அப்படியானால் தினசரி ஐந்து பத்து பேரை பட்டினி போட்டு முறை வைத்துக்கொண்டு மீதிப் பேர் சாப்பிடணுமா?

லங்கணம் பரம ஔஷதம் என்று எந்த மகானுபாவனோ எந்தக் காலத்திலோ சாப்பிட்டுவிட்டு ஏப்பம்விட்டுக்கொண்டு எழுதி வைத்திருக்கிறான். அதையே கட்டாயமாக்கினால் எப்படி?

வீட்டில் தீபாவளி, பொங்கல் இப்படி விசேஷம் வந்தால் வீட்டுக்குள்ளேயே சிலரை கலந்துகொள்ளச் சொல்லிவிட்டு மற்றவர்களை காலி வயிற்றோடு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கச் சொல்லணுமா?

சக்கரவர்த்திகளின் அரண்மனைத் தோட்டத்தில் தோட்ட விருந்து நடத்தத் தடை கிடையாதா? விருந்துகளுக்கு வருபவர்களுக்கு மொட்டத்தண்ணி டயும் ஒரு துண்டு கேக்கும் தருகிறபடியால் அவனவன் வருந்தி அழைத்தாலும் வரமாட்டேன் என்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். தோட்ட விருந்துகளை இல்லாதாக்கினால் அரண்மனைச் செலவு குறையுமே?

அடுத்த சிக்கன யோஜனை, சிக்கனம் பேண சாப்பாட்டைக் குறைப்பீர். என் பெண்டாட்டி மிசிஸ் அகல்யா பாய் விட்டோபா ராவ் தினசரி சொல்வது இது.

வயிறு பருத்து தொந்தி விழுந்ததால் குறைக்க காலையில் நடக்கச் சொல்லி அலுத்துப்போய், கசரத் செய்யச்சொல்லி அதுவும் நடக்காமல் தீனியைக் குறைக்கச் சொல்கிறாள். ஆனால் சர்க்கார் இதை சிக்கனம் பேணும் நடவடிக்கையாகக் காணுகிறதே. வேடிக்கைதான்.

சர்க்கார் சொல்கிறதே என்று ராத்திரி சாப்பிடாமல் தூங்கப்போய், அரைத் தூக்கத்தில் மங்களாம்பிகா ஹோட்டலில் ஜாஸ்தி தித்திப்பு போடாத அசோகா, பெரிசு பெரிசாக மொறுமொறுப்பாக எண்ணெய் மினுக்கும் தவலை வடை ஒன்றில்லை ரெண்டு, காரமான வத்தல் மிளகாய்ச் சட்னியோடு சாப்பிடுகிறதாக சொப்பனம் கண்டு வெறும் வாயை மென்றபடி ராத்திரி எழுந்திருக்கவும் வேண்டாம். நான் தலகாணியை மென்றபடி எழுந்தேன்.

ராத்திரி கொலைப் பட்டினி கிடந்து, அதிகாலையிலேயே, முந்தாநாள் சாமிராவ் வீட்டு கல்யாண பட்சணமாக கொடுத்தனுப்பியதில் காரல் வாடை

வர ஆரம்பித்திருந்த அதிரசத்தையும், புளிப்பாக கிஸ்மிஸ் திராட்சணாப்பழம் வாயில் தட்டுப்படும் குஞ்சாலாடு உருண்டையையும் [லட்டு தின்னால் கையில் எண்ணெய் மின்னக் கூடாது... இஞ்சே சாமிராவ் வீட்டில் என்ன எண்ணெய் உபயோகமோ லட்டு கூட காரல் வாடை அடிக்கிறது], முள்ளுத் தேன்குழலையும் காணாதது கண்டதுபோல் வாயில் வாரி அடைத்துத் தின்று வயிற்றில் மாந்தம் ஏற்படவும் வேண்டாம். எனக்கு வயிறு பலூன் மாதிரி வீங்க உப்புசம் கண்டது வாஸ்தவம்.

ஜீரணத்துக்கு மிளகு சீரக ரசம் பண்ணித் தந்தாள் வீட்டுக்காரி. கூடுதல் அடுப்புக்கரிச் செலவு, ரசப்பொடி, எண்ணெய், தாளித்துக்கொட்ட பருப்பு, கடுகு செலவு, பிரயத்னம். தேவைதானா?

சரி ரம்ஜானுக்கு அத்தர் கடை காதர் பாய் உபவாசம் இருக்கிற மாதிரி சூரியன் உதித்ததிலிருந்து சாயந்திரம் அஸ்தமனம்வரை லோட்டா தண்ணீரையும் சுக்குப்பொடி கலந்த பானகத்தையும் குடித்து விரதம் இருப்போம் என்று இருந்து பார்த்தேன். சுக்கு ஜீரணத்தைத் தூண்ட, ராத்திரி ராட்சப் பசியோடு ரெண்டு ஆள் சாப்பாட்டை முழுங்கியதுதான் கைமேல் கண்ட பலன்.

சாப்பாட்டைக் குறைப்பதும் கூட்டுவதும் உடம்பு வாகு பொறுத்த விஷயம். சர்க்கார் இதில் தலையிட வேண்டாமே. இதில் சிக்கனம் பேண என்ன இருக்கிறது?

பாடுபட்டு வேலை செய்து வெய்யிலில் அலைந்து மழையில் நனைந்து குளிரில் நடுங்கி பணம் சம்பாதிப்பதே குடும்பமும், எப்போதாவது ரெண்டு பேர் சொந்த பந்தமென்று வந்தால் அவர்களும், நானும் மனசுக்குப் பிரியமானதைச் சாப்பிட்டு ஓய்ந்து கிடக்கத்தானே.

பிரியமான சாப்பாடு எது? அரண்மனையில் பத்து சமையல்காரர்கள் ஊத்துக்குளி நெய்விட்டு அன்னத்தைப் பொறித்து சாப்பிட தட்டில் வைப்பதா?

நான் சாதம் என்ற அன்னத்தைச் சொல்லவில்லை. உங்கள் இங்கிலாந்தில் எங்கேயும் அன்னப் பறவையைச் சுட்டுத் தின்ன தடை இருந்தும், அரண்மனையில் அந்த மாமிசம் பாகம் பண்ணிச் சாப்பிட தடையேதும் இல்லையாமே.

எங்களுக்கு சாப்பிடாமல் இருக்க சர்க்கார் யோஜனை சொல்லாமலேயே சிவராத்திரியும் வைகுண்ட ஏகாதசியும் இன்னும் மாசாமாசம் ஒரு பொழுது வைக்கும் தினங்களும் உண்டு. ஒருபொழுது சாதம் சாப்பிடுவதில்லை, தோசை மட்டும் என்று இதை சாமர்த்தியமாக மாற்றி விரதம் இருப்பதாகப் பெயர் பண்ணுகிறவர்களும் உண்டுதான். சாப்பாட்டு சிக்கனத்தை அவர்களிடம் வேணுமானால் டீத்தூள் விற்கும் போது பிரசாரம் பண்ண நான் ரெடி.

அரண்மனையில் ஒரு வைகுண்ட ஏகாதசிக்கு பட்டினி கிடந்து பரம பத சோபானப்படம் விளையாடிக்கொண்டு கண்முழித்து சூரியோதயத்தில் துவாதசி விடியக் குளித்து, முருங்கைக்கீரை சமைத்து சுடச்சுட வெண்டைக்காய் சாம்பாரோடும், புதுப்புளியும் பச்சை மிளகாயும் இத்தனூண்டு அதிகமாக, வெழுமூணாக ஓட்டி அரைத்த தேங்காய்த் துவையலோடும் அரிசி அப்பளத்தோடும், தேங்காய் சேர்க்காமல் வெறுமனே வேகவைத்த புடலங்காய்க் கறியோடும், எலுமிச்சை ரசத்தோடும் சீரகச் சம்பா பழைய அரிசிச் சாதம் வடித்துச் சாப்பிட்டுப் பார்க்கலாம். அருமையான ரசானுபவமாக இருக்கும். அது வசப்பட சிக்கனம் வேணாம்.

தாது வருஷப் பஞ்சத்தின்போது இந்த பாரத தேசத்தில் லட்சக் கணக்கில், கோடிக்கணக்கில் பட்டினியில் துடித்துச் செத்துப் போனபோது இங்கத்திய சர்க்கார் என்ன செய்தது? ஒரு துரும்பையும் எடுக்கவில்லை. போட்டோ பிடிக்கிற துரைகளை அனுப்பிப் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் பஞ்சை பராரிகளை அண்டக் கொடுத்து உட்கார வைத்துப் படம் எடுத்துப் பரலோகம் போக வைத்தது சர்க்கார். அது என்ன மாதிரி சிக்கனம்?

சாப்பாட்டைக் குறைக்கச் சொல்லி சிக்கனம் பேணுவதை விட சாப்பிடவே ஒண்ணுமில்லாமல் நாள்கணக்காக பசித்து உயிரைவிட்டால் சர்க்கார் சிக்கனக் கணக்கில் எவ்வளவு வரவு வைக்கும்?

காந்திஜி சதா உண்ணாவிரதம் இருந்து தேசத்துக்கு சிக்கனம் பேணி, தன் ஆரோக்கியமும், கஸ்தூர்பாவின் உயிரும் இல்லாமல் போகுமளவு தேசத் தொண்டு செய்து வருகிறார். ரெண்டு வருஷம் முன் நீங்கள் அவரைச் சிறையில் போட்ட 1943–இல் அவர் 21 நாள் உண்ணாவிரதம் இருந்தது ஞாபகம் இருக்குமே. அதற்கு கூடுதலான நாட்கள் சாப்பாடு இல்லாமல் மதறாஸ் மாகாண கவர்னர் மதிப்புகுரிய ஆர்தர் ஆஸ்வால்ட் ஜேம்ஸ் ஹோப் துரையவர்கள் உண்ணாவிரதம் இருந்து, தேசத்துக்காக சிக்கனம் பேண வேண்டும். செய்வாரா?

அடுத்த சிக்கனம் பேணுவோம் யோஜனை ரொம்பவே குடாக்குத்தன மானது என்று சொல்ல அனுமதிக்க வேணும் மகாராஜா. இன்னும் பட்டவர்த்தனமாகச் சொல்லப் போனால், மூத்திரத்தில் மீன் பிடிக்கும் விஷயம் இது. மறுபடி தரக்குறைவான வார்த்தை. தயவுசெய்து மன்னிக்கவும். வேறே எப்படிச் சொன்னாலும் அது சரியாக வராது.

பட்டம்விட்டு நூலை வீணாக்காதீர். இதுதான் அந்த சிக்கன யோஜனை.

சக்கரவர்த்திகள் பக்கிம்ஹாம் அரண்மனை மொட்டை மாடியில் மாலைப் பொழுதில் பட்டம் விட்டு அல்லது ராஜகுமாரர்களும் ராஜகுமாரிகளும் பட்டம் விடுவதை காற்று வாங்கிக்கொண்டு உட்கார்ந்து ரசித்திருக்கிறீர்களா என்று தெரிந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறேன்.

வஜ்ரப்பசையில் கண்ணாடித்தூள் கலந்து காய்ச்சியதை நூலில் பூசி டீல் விட்டுப் போட்டிக்குப் பறக்கும் பட்டத்தையும் சமயத்தில் அப்படி விடுகிறவன் கழுத்தையும் அறுப்பது ரொம்ப நாளாக நடந்து வந்தது. சர்க்கார் நடவடிக்கை எடுத்து அதை ஒழிப்பது சரியானதுதான். அது உயிர் காக்கும் செயல்.

ஆனால், பட்டம் விடாதே, நூலை வீணாக்காதே என்று என்னத்துக்கு சொத்தையாக ஒரு யோஜனை? வீட்டு மொட்டை மாடியில் குழந்தைகள் பட்டம் விட்டு தொம்தொம்மென்று குதிக்க, தலையில் குதிக்கிற மாதிரி சத்தம் வந்து படிப்பு கெடுகிற, அரட்டை கெடுகிற யாரோ மூத்த துரைகளோ துரைசானியோ கூட்டிச் சேர்த்த யோஜனையோ இது?

பட்டம்விட்டு வீணாகும் நூல்பற்றி வீண் கவலை ஏதும் சமூகத்துக்கு வேண்டாம். கொஞ்சூண்டு நூல், நிலையான சந்தோஷம் என்று கணக்கில் கொள்ள வேண்டியது.

மரத்தை வெட்டி கிரிக்கெட் மட்டை செய்து நாலு நாள் முழுக்க இருபது சொச்சம் பேர் விளையாடும் கிரிக்கெட்டை வெறும் நாலே மணி நேரம் விளையாடி, மரம் வளர்த்து சிக்கனம் பேணுவோம் என்று யோசனை சொல்ல சர்க்காருக்கு தைரியம் உண்டா?

நூல் சேமித்து ராணுவத்துக்கு பொத்தான் தைத்துக்கொள்ள அனுப்புவது தான் சர்க்காரின் நோக்கமாக இருந்தால், நூலுக்குப் பஞ்சமே இல்லாத பூமி பாரத பூமி என்று பெருமையோடு அறிவித்துக் கொள்கிறேன்.

மகாத்மா காந்தியும் தேச பக்தர்களும் உங்களுக்கு வேண்டப்படாதவர்கள் பட்டியலில் இருந்தாலும் அவர் லோக ஷேமத்துக்காகச் செய்யும் காரியங்களை உங்களுக்குப் பிடிக்காமல் இருக்குமா? காந்தி சுற்றாத கை ராட்டினமா, நூற்காத நூலா?

காந்தியும் காந்தி அனுதாபிகளும் நூற்றதில் நேர்த்தியான நூல் கதர்த் துணியாகிறது. மற்றது சாயங்காலம் கோவிலிலும் வீட்டிலும் தீபம் ஏற்றத் திரி ஆகிறது. .

மோட்டா நூலை எல்லாம் சர்க்கார் செலவுக்கு பணம் கொடுத்தால் சக்கரவர்த்திகளின் முகவரிக்கு பக்கிங்ஹாம் அரண்மனைக்கே தினம் தினம் அனுப்பித் தருகிறோம். ஓழிந்த நேரத்தில் அதை உருட்டி உசிதம் போல் தாம்புக் கயிறோ கால்மிதியோ ராஜாவும் ராணியம்மாவும் திரித்து மார்க்கெட்டில் விற்கக் கொடுத்தால், ஜனம் ராஜா திரித்த கயறு என்று விரும்பி வாங்கும். கஜானாவுக்கும் அதிக வருமானமாச்சு.

அடுத்த சிக்கனம் பேணுவோம் யோஜனை இது – டெலிபோனில் குறைவாகப் பேசுங்கள். மகாராஜா பாரத தேசத்து ஜனங்களைப்பற்றி என்ன நினைக்கறாப்பலே என்றொண்ணும் விளங்குவதில்லை.

நீங்கள் இங்கே சொத்தை சொள்ளை நீக்கித் தேர்ந்தெடுத்து அனுப்பி வைச்ச நபர்கள் நடத்தும் சர்க்கார். நாங்கள் என்ன செல்வச் செழிப்பில் கொழித்துக்கொண்டு ஆளாளுக்கு பங்களா, கார், வேலைக்கு ஆட்கள், டெலிபோன் என்று சகல வசதியோடு இருக்கிறதாக நினைக்கிறதா?

டெலிபோனே பார்த்திருக்காத கோடிக்கணக்கான ஜனங்கள் உள்ள பூமி இது. அகஸ்மாத்தாகப் பார்த்திருந்தாலும், அதை எப்படி உபயோகிக்கிறது என்று தெரியாது.

நானே ஏழெட்டு வருஷம் முன்பு மெட்றாஸில் இருந்து டீ போர்ட் ஆபீசர், ஆவன்னா மாவன்னா மளிகைக்கடையில் எனக்கு போன் பேசியபோது எந்தக் குழாய் காதுக்கு, எது வாய்க்கு என்று ஒரு நொடி குழம்பிப்போனேன்.

சுதந்திரம் வந்த அப்புறம் எல்லோருக்கும் ஆளுக்கொரு வீடு, அங்கே வீட்டுக்கொரு டெலிபோன், ரேடியோ என்று வசதி வரட்டும். கம்மியாக டெலிபோனில் பேசுவது, அதிகமாகப் பேசுவதுபற்றி அப்போது முடிவு செய்துகொள்ளலாம்.

பழைய செருப்பைத் தைத்துக்கொள்ளுங்கள். இது ஒரு சிக்கனம் பேணும் யோஜனையாம். வேறே என்ன செய்கிறோம் நாங்கள் என்று நினைக்கிறது சர்க்கார். என் செருப்பில் தோலைவிட தைத்த நூல்தான் ஜாஸ்தி. செருப்பு தைப்பவர்கள் எல்லாம் தெய்வங்கள். நாங்கள் காலை வீசி நடக்க வெய்யில் மழை என்று பாராமல் மரத்தடியில் உட்கார்ந்து உடனே பழுது பார்த்துக் கொடுத்து வெறும் ஒரு அணா, ரெண்டு அணா கூலி வாங்கிக் குடும்பம் நடத்துவது இங்கிலாந்தில் இருக்காது மகாராஜா. சிக்கனம் பேணும் சர்க்கார் இவர்களுக்கு ஏதாவது சகாயம் செய்யுமா?

பழைய குடையைத் தைத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு சிக்கனம் பேணுவோம் யோஜனை. நான் கல்யாணம் ஆன நாளிலிருந்து காசி யாத்திரைக்குக் கொடுத்த குடையைத்தான் தைத்துத் தைத்துத் தைத்துத் தைத்து மழையிலும் வெய்யிலிலும் பிடித்துக்கொண்டு போகிறேன். காசி யாத்திரைபற்றி நேரம் கிடைக்கும்போது எழுதுகிறேன். அவசியம் தெரியணும் என்றால் கும்பகோணம் ஆனா மாவன்னா மளிகைக் கடைக்கு ஃபோன் பண்ணி சோலையப்பன் தெருவில் விட்டோபாவைக் கூப்பிட்டுவிடச் சொல்லுங்கள். காசி யாத்திரை ஏற்பாடு செய்து ஜமாய்த்து விடலாம்.

பழைய ஹோல்ட் ஆல், சூட்கேஸை சரி செய்யுங்கள் என்ற ஒரு சிக்கனம் பேணுவோம் யோஜனைக்கு நன்றி பல. நான் ரயில் பயணத்தை தவிருங்கள் என்று ரயில்வே போர்ட் பத்திரிகை விளம்பரம் செய்வதால் (அது இன்னொரு கேலிக்கூத்து; நேரம் கிடைக்கும்போது அதுபற்றியும் எழுதுகிறேன்) எங்கேயும் பிரயாணம் போவதில்லை. தினசரி நாலு திசையும் சூலம்தான். எனவே ஹோல்ட் ஆல் கூடத்துக்கு மேலே சேந்தியில் கிடக்கிறது ஞாபகம் வந்தது. அதை தூசி தட்டி எடுத்து வார் எல்லாம் சரியாக உள்ளதா, ஓட்டை இல்லாமல் உள்ளதா என்று பார்த்து சரி பண்ணிக்கொள்கிறேன்.

அதேபோலத்தான் சூட்கேஸும். அதை சாமண்ணாவிடம் இரவல் வாங்கி நானும் மறந்து அவனும் மறந்து என் வீட்டுக் கூடத்தில் சாமி மேடைக்குக் கீழே சின்ன மர ஷெல்பில் பத்திரமாக இருக்கிறது. எடுத்துத் தூசி தட்டி வைக்கிறேன்.

இந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு மகாராஜா சமூகம் மேற்கொண்டு விவரம் கேட்க லண்டனுக்குக் கூப்பிட்டனுப்பினால் புறப்பட்டு வரத் தயாராக இருக்க வேண்டாமா?

★★★

**பன்னிரெண்டு**

# மதறாஸ் ரேடியோவுக்கு ராமோஜி கடிதம் – 1945

ம திப்புக்குரிய மதறாஸ் ரேடியோ ஸ்டேஷன் டைரக்டர் சார்,

பூரண சௌக்கியம். உங்கள், மற்றும் ஆபீஸில் மற்ற ஊழியர்கள் சௌகர்யம் தெரிவிக்க வேண்டியது.

நேற்று ராத்திரி எட்டு மணியிலிருந்து ஒன்பது இருபதுவரை, மகாவித்வான் டி.என்.ராஜரத்னம் பிள்ளையவர்களின் நாகஸ்வரக் கச்சேரி கேட்பதற்காக ரேடியோவை ஆன் செய்தேன். என் பிரியமான மனைவி ரத்னா பாய் அருகிலேயே வந்து நின்றாள். கச்சேரி கேட்க இல்லை. அவளுக்கு கர்னாடக சங்கீதத்தில் அவ்வளவாக நாட்டம் இல்லை. அபங்க் என்ற மராத்தி பஜனைப் பாடல்களை ரெக்கார்டுகளில் கேட்பதிலும் கூடப் பாடுவதிலும்தான் இஷ்டம். எப்போதாவது ஹிந்துஸ்தானி சினிமா பாட்டுகளையும் கேட்கிற வழக்கம்.

‘எனக்கு ஒரு சந்தேகம். இந்த வாத்தியத்தோட பெயர் நாகஸ்வரமா, நாதஸ்வரமா?’

அவள் எழுப்பிய சந்தேகத்தை, அண்டை வீட்டு ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர், எதிர் வீட்டு கேளப்பன் தம்பதிகள், அடுத்த தெரு மிருதங்க மேதை வேலப்ப நாயக்கர் என்று இன்று ஞாயிற்றுக்கிழமையாக இருப்பதால் வேலை மெனக்கெட்டு வீடு வீடாகப் படி ஏறிக் கேட்டு வருகிறேன். யாரும் சரியான பதில் சொல்லவில்லை.

உங்கள் கச்சேரி ஒலிபரப்புக்கு முன்னும் பின்னும் அறிவிப்பு தருகிறவர்களில் சிலர் நாதஸ்வரம் என்றும் வேறு சிலர் நாதசுவரம் என்றும் உச்சரிப்பதால் குழப்பம்தான் கூடுகிறது. என்னதான் அந்த வாத்தியத்துக்குப் பெயர்?

இருக்கட்டும். நான் சீதோஷ்ண நிலமை திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் திருச்சி வானொலிகூட கேட்பது வழக்கம். போன ஞாயிறன்று பிற்பகலில் இப்படித்தான் திருச்சி ரேடியோவில் பாப்பா மலர்

கேட்டுக்கொண்டிருந்தேன். ஸ்ரீரங்கம் பள்ளிக்கூடத்துப் பையன்கள் பாட்டு, நாடகம் என்று பிரமாதமாக, பெரியவர்களுக்கே சவால் விடும் தரத்தில் அது இருந்தது. என்றாலும், ரங்கராஜன் என்ற பையன் ‘ஆழ்வார்கள் இல்லாத ஸ்ரீரங்கமா’ என்று ஏதோ பேசத் தொடங்கியபோது ரேடியோ அண்ணா அவனை மேலே பேச விடாமல் நிறுத்திவிட்டு வேறொரு சிறுவனைப் பாடச் சொன்னது எதேச்சாதிகாரமாக இருந்தது. ஸ்ரீரங்கம், ஆழ்வார்கள் எல்லாம் பெரியவர்கள் பாட்டும் இல்லாமல் பேச்சும் இல்லாமல் வினோதமான ஒரு மெட்டில் இழுத்து இழுத்து நீட்டி வழங்க வேண்டிய விஷயங்களா?

இருக்கட்டும். நான் கடிதம் எழுதுவது மேலே கண்ட சந்தேகங்களின் நிவர்த்திக்காக இல்லை. ஒரு வாரமாக ரேடியோவைப் போட்டு மதறாஸ் வானொலி நிலையத்துக்கு முள்ளைத் திருப்பினால், அவ்வப்போது ஓர் அறிவிப்பு காதில் விழுகிறது –

‘நேயர்களுக்கு ஒரு கோரிக்கை. உங்களுக்காக மதறாஸ் வானொலி நிலையம் காலை ஆறு மணியில் இருந்து ராத்திரி பத்தரைவரை விதவிதமான நிகழ்ச்சிகளை உருவாக்கி வழங்கிக்கொண்டிருக்கிறது. அவற்றின் தரம், சுவாரசியம், பிரயோஜனம் இப்படி பல விஷயங்களையும்பற்றி உங்கள் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். எழுதி அனுப்பவேண்டிய விலாசம் ஸ்டேஷன் டைரக்டர், மதறாஸ் வானொலி நிலையம், மதறாஸ்–2. இந்த முகவரிக்கு இன்லண்ட் லெட்டரிலோ கவரிலோ எழுதி அனுப்பலாம். ஒருவர் எத்தனை விமர்சனங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். எங்கள் நிகழ்ச்சிகளை இன்னும் மேம்படுத்த அந்தக் கருத்துகள் உதவி செய்யும். முக்கியமான கருத்துகள் வானொலி ஒலிபரப்பு வழியாக நிறைய நேயர்களோடு பகிர்ந்துகொள்ளப்படும். நீங்கள் பெயர் விலாசம் தெரிவிக்க விரும்பவில்லை என்றால் அதையும் குறிப்பிட்டு கருத்துகளை அனுப்புங்கள்.’

இந்த விளம்பரத்தைக் கேட்டுக் கேட்டு எனக்கும் கருத்து தெரிவிக்க மனதில் ஆசை உருவானது. சர்க்கார் உத்தியோகஸ்தன் என்பதால் பெயர், விலாசம் தவிர்க்கிறேன். மன்னிக்கவும். கருத்துகள் உங்களிடம் போய்ச் சேர்ந்தால் மகிழ்ச்சியடைவேன்.

நாமும்தான் விடாது ரேடியோ கேட்கிறோம். அதுவும் ஞாயிற்றுக் கிழமை இது உச்சமாக இருக்கிறது. வீட்டில் சமையல், பெருக்கித் துடைத்தல், துணி துவைத்து மடித்து வைப்பது என்று வீட்டு வேலை அதிகம்

குவிந்திருக்க, லீவு நாளில்கூட அதில் கொஞ்சமாவது செய்து உதவாமல் சதா ரேடியோ கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்று என் மனைவி ரத்னா பாய் புகார் செய்யும் அளவு நான் ரேடியோ பைத்தியம்.

எனவே நான் ஏன் கருத்துகளை எழுதி அனுப்பக்கூடாது என்று கருதி இதை எழுதலானேன்.

காலை ஆறு மணிக்கு மங்கள இசை என்று தினமும் ராத்திரி அடுத்த நாள் நிகழ்ச்சி விவரம் சொல்லும்போது கேட்டிருக்கிறேன். நானும் ஒரு நாளாவது அந்த நேரத்தில் ரேடியோ போட்டு மங்கள இசையைக் கேட்க நினைத்தும் முடியாமல் போகிறது. ராத்திரி கிட்டத்தட்ட பதினோறு மணிக்கு உறங்கி, எழுந்திருக்க காலை ஆறரை மணி ஆகிறது. மங்கள இசை எதிர் வீட்டில் விலாசினி டைப்பிஸ்ட் ரேடியோவை என்றைக்காவது உரக்க வைத்தால் காதுக்குக் கேட்கிறது. யார் வாசிக்கிறது, என்ன ராகம் என்று பக்கத்தில் போய்க் கேட்கலாம் என்றால் விலாசினி வீட்டுக்கு அந்த விடிகாலை நேரத்தில் போய் நிற்பது அத்தனை உசிதமானது இல்லை.

ரேடியோ ஸ்டேஷனில் வித்வான் யாராவது நித்தியப்படிக்கு அதிகாலை புறப்பட்டு வந்து மங்கல வாத்தியம் வாசிக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டு ஸ்டேஷன் மாஸ்டர் சொல்கிறார்; அது அப்படி இல்லையாம். ப்ளேட் சங்கீதத்தை ஒலிபரப்புகிறார்கள் என்கிறார். விலாசினி டைப்பிஸ்ட் சொல்கிறாள், நீங்கள் சங்கீதத்தை டேப் என்ற உருளையில் பதிந்து தினம் அதை சுழல விடுகிறீர்கள் என்று.

எது உண்மை என்று தெரியப்படுத்தினால் நன்றாக இருக்கும். எதுவாக இருந்தாலும் கேட்க ரம்மியமான ஐந்து நிமிஷ பூபாளமும் கேதாரமும் தினசரி எழுந்திருக்கத் தோன்றுகிறது. உலக மகா யுத்த காலத்தில் இப்படி சுப சமிக்ஞைகளோடு உதய நேரத்தில் பிரஜைகளை எழுப்புவது சர்க்காரின் சரியான நடவடிக்கை என்று சொல்ல விரும்புகிறேன்.

மங்கள இசை முடிந்து நிகழ்ச்சிக் குறிப்புகளை உங்கள் அறிவிப்பாளர் யந்திரம் பேசுவது போன்ற குரலில் தருகிறார். குரல் ஒரே தொனியில் ஒலிப்பதால் இரவு எட்டு மணிக்கு சித்தூர் சுப்ரமணியப் பிள்ளை பாட்டுக் கச்சேரி என்று விவரம் சொல்வதையும், ஏழரை மணிக்கு நாட்டு நடப்பு என்று அறிவிப்பதையும் ஒரே மாதிரி கேட்டு ரொட்டீனான அறிவிப்பு என்று சிரத்தை எடுக்காமல் சித்தூர் சுப்ரமணிய பிள்ளையின் அருமையான சங்கீதத்தைத் தவற விட வேண்டி வருகிறது.

முக்கியமான நிகழ்ச்சிபற்றிச் சொல்லும்போது குரலை உயர்த்தி, ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக நிகழ்ச்சி நிரல் படித்தால் சட்டென்று கவனத்தைக் கவர அதிக வாய்ப்புண்டு.

அருள் வாக்கு நிகழ்ச்சியில் மடாதிபதிகளோ, பாதிரியார்களோ, மௌல்விகளோ நல்ல சிந்தனை என்று ஐந்து நிமிடத்தில் சொல்கிறார்கள். போன வாரம் புதனன்று சைவ மடாதிபதிகள் அருள் வாக்கு சொல்லும்போது மாசில் வீணையும் மாலை மதியமும் என்று ரயில் வேகத்தில் சொல்லிப்போய் ஈசன் இணையடி நிழல் அமைதியும் அழகும் மிக்கது என்றார். அந்த வேகத்தில் பேசினால் அப்பர் சுவாமிகளுக்கே அவர் தேவாரம் புதியதாக புரியாததாகக் கேட்கும். என் போன்ற சாமானியனுக்கோ? அடுத்த நிகழ்ச்சிக்காக காத்திருப்பதைத் தவிர வேறே என்ன மார்க்கம் உண்டு?

அருள் வாக்கு சொல்ல பல்லக்கில், ரதத்தில், பிளஷர் காரில், கனவான்கள் ரேடியோ ஸ்டேஷனுக்கு வந்து போவதில்லை என்று நினைக்கிறேன். அவர்களையும் டேப் எடுத்து விடுகிறீர்களா? அப்படியானால் காலை நேரத்தில் அருள் வாக்கு கேட்கவிட்டுப் போனவர்களுக்காக மாலையில் அதைத் திரும்பப் போடலாமே.

எல்லா நல்லோரும் அருள் வாக்கு சொல்ல வருகிறார்களே, காந்திஜியிடம் வாங்கி ஒலிபரப்புங்களேன். அவர் இங்க்லீஷில் சொன்னாலும் இந்தியில் சொன்னாலும் அதை அப்படியே ஒலிபரப்பி கூடவே தமிழிலும் நம் ஊர் காந்தியவாதிகளில் நல்ல குரல் வளம் உள்ளவர்களைக்கொண்டு சொல்லலாமே.

அருள் வாக்குக்கு அடுத்து துதிப்பாடல்கள் என்று ஒரு சங்கீத நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது. தேவாரம், பாசுரம், தேம்பாவணி, சீறாப்புராணம் என்று எல்லா மத நூல்களில் இருந்தும் கலந்துகட்டியாகப் பாடல்களை ஒலிபரப்புவதாகப் புரிகிறது. தெய்வம் ஒன்று என்பது உண்மையாக இருக்கலாம். அதற்காக தேவாரத்துக்கும் தேம்பாவணிக்கும் வித்தியாசம் தெரியாமல் ஒரே மெட்டில் கோஷ்டி கானமாகப் பாட வேண்டிய அவசியம் என்ன என்று புரியவில்லை.

ரேடியோவில் நிலைய வித்வான் என்று ஏழெட்டுப் பேரை நியமித்திருப்பதாக அறிவது, இந்த துதிப்பாடல்கள் நிகழ்ச்சியின் போதுதான். ‘பித்தா பிறைசூடி பெருமானே’ சுந்தரர் தேவாரம் பாடுவது நிலைய வித்துவான்கள் என்று அறிவித்துப் பெண்குரல்கள்’ பாடும். அடுத்து ‘கருப்பூரம் நாறுமோ நாச்சியார் திருமொழி’ என்று கட்டைக் குரலில் பாடுகிற ஆண்களும் நிலைய

வித்வான்கள்தான். ‘கானில் நிலவானேன் கண்ணே ரகுமானே’ என்று குணங்குடி மஸ்தான் சாகிப் பாடல் பாடுவதும் ஆண்களும் பெண்களுமான நிலைய வித்வான் கோஷ்டிதான். இவர்கள் சர்க்கார் சம்பளம் வாங்குவதால் ரேடியோவில் வேலைக்குச் சேர்ந்ததும் பெயரையும் தனிப்பட்ட அடையாளத்தையும் இழந்துவிடுவார்களா தெரியவில்லை.

இந்த நிகழ்ச்சியையும் டேப் எடுக்கிறீர்களா? காலை ஆறரை மணிக்கு போன வாரம் புதன்கிழமை கேட்ட அதே துதிப்பாடல் அதே குரலில் அதற்கு அப்புறம் ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை அதே நேரத்தில் கேட்பதை வைத்துத்தான் கேட்கிறேன். வித்வான்கள் மதறாஸ் நிலையத்தில் வேலை பார்ப்பதால் அவர்கள் பஸ்ஸில், ட்ராமில், எலக்ட்ரிக் ட்ரெயினில் ரேடியோ ஸ்டேஷனுக்கு தினசரி காலை வேலைக்கு வருவார்கள்தானே, அப்போது பாடச் சொன்னால் புதுசாகப் பாடமாட்டேன் என்றா சொல்லப் போகிறார்கள்?

அடுத்து ஏழேகால் மணிக்கு இங்க்லீஷில் செய்திகள். நிறுத்தி நிதானமாக உங்கள் செய்தி வாசிப்பவர்கள் டெல்லியிலிருந்து படிக்கும் செய்தி அறிக்கையை நான் கவனமாகக் கேட்பது உச்சரிப்புக்காகவும்தான். எந்தச் சொல்லை எப்படி உச்சரிப்பது என்று அவர்களிடம்தான் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஆனால் இந்த திறமைசாலிகளும் தென்னிந்தியப் பெயர்களை உச்சரிப்பதில் ஏகப்பட்ட தவறு. அதே நேரம் சர்க்கார் துரைகள் மற்றும் இங்கிலாந்து பிரமுகர்கள் ஒருத்தர் பெயர் விடாமல் அச்சு அசலாக உச்சரிக்க இவர்கள் மறப்பதில்லை. தென்னிந்தியப் பெயர்கள் கொஞ்சம் நாக்கில் சுளுக்கு வரவழைக்கும் என்றாலும் நாலு தடவை சொல்லிப் பார்த்தால் ஷண்முகம் செட்டியாரும், தாங்குதூரி பிரகாசமும், சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியும் வாக்கில் எளிதாக வருமே.

அடுத்து வருவது தமிழ்ச் செய்தி அறிக்கை. தில்லியிலிருந்து வருவதாலோ என்னமோ செய்தி படிப்பவர் குரல் எப்போதும் ஜலதோஷம் பிடித்த மாதிரி கொணகொணவென்று இருக்கும். டெல்லியில் இருந்து குரல் வரும்போது வழியில் சீதோஷ்ண நிலை பாதிக்கப்பட்டு எந்த நிமிடமும் மூக்கைச் சிந்தி ரேடியோ ஸ்டேஷன் சுவரில் பூசி விடக் கூடும் என்று தோன்றுகிறது.

இங்க்லீஷ் செய்தி படிப்பவர்களும் டெல்லியில் இருந்துதான் படிக்கிறார்கள் என்றாலும் அவர்களுடைய குரல் மட்டும் எப்படி தெளிவாக இருக்கும் என்று தெரியவில்லை. ஒருவேளை டெல்லிக்குப் போனதும்

நம்மவர்களுக்கு ஜலதோஷம் பிடித்து அது பெர்மனெண்டாக அவர்கள் மூக்கையும் குரலையும் பாதிக்குமோ என்னமோ.

செய்தி அறிக்கையின் ஆரம்பத்தில் சாலிவாஹன சதாப்தம் சக வருஷம் என்று யாருக்கும் புரியாத, என்ன தேவை இதற்கெல்லாம் என்று தெரியாத தகவல்கள் சொல்லப்படுகின்றன. இந்த நாள் நட்சத்திரம் வகையறா எல்லாம் சொல்லி முடித்து அடுத்து சொல்வார்கள் – அகில பாரத் செய்திகள், வாசிப்பது கமலாம்பாள் அல்லது வாசிப்பது பஞ்சவர்ணம்.

அதென்ன வாசிப்பது? ஆல் இந்தியா ரேடியோவில் வாசிப்பது புது மாதிரி பிராணியா? மனுஷராக இருந்தால் வாசிப்பவர் என்றல்லவா சொல்ல வேண்டும்? அல்லது டெல்லித் தமிழில் மனுஷர், விலங்கு, கல், மண், மலை எல்லாவற்றுக்கும் அது இது என்றுதான் குறிப்பிடுவதோ?

செய்தி அறிக்கை முடிந்து கவர்னர், வைஸ்ராய், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் பிரதமர், அமைச்சர்கள் என்று யாராவது பேசியதன் தமிழாக்கத்தை கர்ம சிரத்தையாக ஒலிபரப்புகிறீர்கள். அதெல்லாம் சுருக்கமாக, சுலபமாகப் படிக்கக்கூடிய நடையில் சுதேசமித்ரனிலும் தினமணி, புதுப் பத்திரிகை தினத்தந்தியிலும் சீராக அச்சடித்து வருகிறதே. எதற்காக நீங்கள் கஷ்டப்பட்டு ஒருத்தரை வேலைக்குப் போட்டுப் படிக்கச் சொல்ல வேண்டும்?

இதை டேப் பண்ணி அடிக்கடி போட்டுக் கழுத்தறுக்காமல் இருப்பதற்கு நன்றி. வேலைக்குப் போட்டவருக்கு வேறு வேலை கொடுக்கவும். நான் சொன்னதே சாக்கு என்று வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட வேண்டாம்.

காலை எட்டு மணிக்கு சங்கீதக் கச்சேரி ஆரம்பித்தால் அது எந்த நிலைமையில் இருந்தாலும், எட்டரைக்கு வித்வான் கச்சேரியை நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்புறம் சாயந்திரம் ஆறு மணிக்கு மீதி அரை மணி நேரம் கச்சேரிக்கு அனுமதிக்கிறீர்கள். எட்டு மணிக்கு கச்சேரி தொடங்கி, ரெண்டு கீர்த்தனை பாடிய பிறகு கமாஸ் ராக வர்ணமாக மாதே மலயத்வஜ பாண்ட்ய சம்ஜாதே என்று ஆரம்பித்து, சிட்டை சுவரம் பாதி பாடும்போது எட்டரை ஆகி கழுத்தைப் பிடித்துத் தள்ளுவீர்கள். வித்வான் தம்பூராவைத் தூக்கிக் கொண்டு லொங்குலொங்கென்று வீட்டுக்குப்போய் சிரம பரிகாரம் பண்ணிக்கொண்டு கச்சேரியை எங்கே விட்டோம் என்று வேட்டியில், துண்டில் முடிச்சு போட்டு வைத்துக்கொள்ள வேண்டும். சாயந்திரம் திரும்பி வந்து அதே இடத்தில் ஆரம்பித்துத் தொடரவேண்டும்.

பிடில்காரருக்கும் மிருதங்கமான பக்க வாத்தியம், கஞ்சிரா இருந்தால் உப பக்க வாத்தியக்காரர்களுக்கும் அவ்வளவாக சிரமம் இல்லை – தனி ஆவர்த்தனத்தின் நடுவே பாதிக் கச்சேரியை நிறுத்திப்போய் சாயந்திரம் தொடர்கிற சூழ்நிலை இல்லாவிட்டால். எனவே, கடியாரத்தைப் பார்த்துக்கொண்டே பாட வேண்டியிருப்பதால் வித்வானின் கற்பனையில் செழித்து வரவேண்டிய வாய்ப்பாட்டு, வாய்ப்பாடு சொல்வதுபோல் யந்திரத்தனமாக மாறி விடுகிறது. இது சரியா?

இப்படி பாதியில் கழுத்தை நெரிக்காமல், முழுக் கச்சேரியையும் ராத்திரி வைத்தால் என்ன? சொல்லப் போனால் காலை எட்டு மணிக்கு அரைக் கச்சேரியோ, காலே அரைக்கால் கச்சேரியோ வைத்தால் யார் அதைக் கேட்கிறார்கள்? ஸ்திரிகள், ஆபீசுக்குப் போகிற வீட்டுக்காரர், ஸ்கூல் போகிற பசங்கள் என்று டிபன் கொடுத்து கையில் மத்தியான சாப்பாடு கட்டிக் கொடுத்து பிசியாக இருக்கிறார்கள். ஆண்களோ ஆபீஸ் நினைவில் அவசரமாக ஷேவ் செய்து கீறிக்கொண்டு ரத்த விளாறாக, குளித்து ஆபீஸ் கிளம்பும் அவசரத்தில் இருக்கிறார்கள். எதிர் வீட்டு விலாசினி டைப்பிஸ்ட் போன்றவர்கள் வீட்டுக் காரியமும் முடித்து ஆபீஸ் வேலைக்குப் போகத் தயார்ப்படுத்திக்கொண்டிருக் கிறார்கள். ஆக எல்லோரும் பரபரப்பில்.

ரிடையர் ஆன பெரியவர்கள் கச்சேரி கேட்கிறார்கள் எட்டு மணிக்கு என்பீர்கள். அவர்கள் நாள் முழுக்க, நடுராத்திரியில் ரேடியோ கச்சேரி, பிரசங்கம் இருந்தால்கூட கேட்பார்கள். பொழுது போகவேண்டுமே.

நாகசுவரக் கச்சேரியில் பாதியில் நிறுத்தி அப்புறம் தொடர்வது எப்போதுமே நடப்பதுதான். பாதி கல்யாணி ஆலாபனையில் இருக்கும்போது கெட்டிமேளம் கெட்டிமேளம் என்று நூறு பேர் கூச்சலிட, கல்யாணியைவிட்டுவிட்டுக் கொட்டி முழக்க நாகசுவர, தவில், ஒத்துக்கார வித்வான்களுக்குப் பழக்கமாகிவிட்டதால் எட்டரைக்கு கொட்டி முழக்கி சாயந்திரம் விட்ட இடத்தில் ஆரம்பிக்க கஷ்டம் இருக்காது. மற்றவர்கள்?

இரண்டு வாரம் முன் திருவானைக்கோவிலில் இருந்து வந்த ஒரு பெண் வித்வான் உற்சாகமாக ஜலதரங்கம் வாசித்துக்கொண்டிருந்தபோது எட்டரை ஆகி பாதியில் நிறுத்த, என் நண்பர் கேளப்பன் நாயர் குறிப்பிட்டது – ‘கார்ப்பரேஷன் குழாயில் வெள்ளம் வரத்து நின்னு போயிருக்குமோ?’

இந்தப் பாதிக்கிணறு தாண்டி கச்சேரி நிற்க எட்டரைக்கு எதற்கு டெல்லி ஒலிபரப்பாக மறுபடியும் இங்க்லீஷில் செய்திகள்? யார் கேட்கிறார்கள்? ரிடையர் ஆனவர்கள் கேட்கிறார்கள் என்பீர்கள். அவர்கள் காலை ஆறு

மணியிலிருந்து பேப்பர் போடுகிற பையன் வீசி எறிந்துவிட்டுப் போன இந்துவையும், சுதேசமித்திரனையும் அதற்குள் பாராயணம் பண்ணி முடித்திருப்பார்கள். இந்த செய்தி அறிக்கையில் புதுசாக என்ன இருக்கப் போகிறது?

செய்தி விமர்சனம் என்று அதற்கப்புறம் பதினைந்து நிமிடம் அதே செய்தியைத் தமிழில் இன்னொரு தடவை வேறு குரலில் சொல்ல வைக்கிறீர்கள். காலை ஒன்பதரைக்கு இந்த வேடிக்கை நடப்பதை நான் சள்ளைக்கடுப்பாக, என்றால் லேசான ஜுரமாக ஒரு நாள் ஆபீசுக்கு மட்டம் போட்டுவிட்டுத் தூக்கம் வராமல் தூங்கிக் கொண்டிருந்தபோது கேட்டேன்.

பகல் பனிரெண்டு மணிக்கு பகல் ஒலிபரப்பு என்று நிகழ்ச்சி அறிவிப்பில் கேட்டுத்தான் பழக்கம். மங்கள இசைபோல இதுவும் விலாசினி டைப்பிஸ்ட் வீட்டு ரேடியோவில் ஞாயிறு மதியம் சூர்யகாந்தி என்ற கதம்ப நிகழ்ச்சியாக ஒலிபரப்பாவதைக் காதில் வாங்கினேன். அப்புறம் போன ஞாயிறு இந்தக் கடிதத்தை எழுதத் தகவல் வேண்டுமென்பதால் வீட்டில் ரேடியோ வைத்துக் கேட்டேன்.

ஞாயிறு பகல் சூரிய காந்தியில் சின்னச் சின்னதாக ரெண்டு நாடகங்களை ஒலிபரப்புகிறீர்கள். விநோதமான உரையாடல் இவற்றில் இருப்பதைக் கவனித்தேன் –

‘கிருஷ்ணசாமி, இப்படி உச்சி வெய்யில்லே நீலச் சட்டை போட்டுக் கிட்டு, எட்டு முழ வேட்டி கட்டிக்கிட்டு, வலது கையிலே புதுக் குடை பிடிச்சுக்கிட்டு வியர்த்து விறுவிறுத்து போஸ்ட் ஆபீஸ் வாசல்லே நின்னுக்கிட்டிருக்கீங்களே, சௌக்கியம்தானா?’

இப்படி ஒருத்தர் பேச இன்னொருத்தர் கிட்டத்தட்ட இதே ரீதியில், ‘கோடு போட்ட வெள்ளை சட்டை, கருப்பு கலர் பேண்ட் போட்டு க்கிட்டு, உயரம் குறைஞ்ச சைக்கிள்லே வந்து காலை ஊணிக்கிட்டு நிக்கறீங்களே சோமு, வேகாத வெய்யில்லே நீங்க எங்கே போறீங்க?’

பதில் வரும். ஐந்து நிமிடத்துக்கு மேல் இதையெல்லாம் கேட்க முடியாது என்பதால் பதினைந்து நிமிடத்தில் நீங்களே ராமு – சோமு சம்பாஷணையை யுத்தகால அரசாங்கப் பிரச்சாரமாக்கி முடித்து வைக்கிறீர்கள்.

இந்த மாதிரியான நடுப்பகல் ஞாயிற்றுக்கிழமை நாடகங்களுக் கெல்லாம் உங்கள் நிலைய நடிகர்களை முழுக்க உபயோகித்துக் கொள்கிறீர்கள் என்று தெரிகிறது. மொத்தம் ஐந்து பேர், மூன்று ஆண், ரெண்டு பெண் என்று ஐந்தே நடிகர்களை வைத்துக்கொண்டு நீங்கள் குறைந்தது நூற்றைம்பது பேர் பங்கு பெறும் மகாபாரதத்தையே சப்த ரூபமாக நடத்திக் காட்டிவிடுவீர்கள் என்று அடக்கமுடியாத ஆச்சர்யத்தோடு சொல்கிறேன். பாராட்டுகள் சார்.

முழுக்க வாயைத் திறந்து வயிற்றிலிருந்து பேசினால் துரியோதனன், நெஞ்சிலிருந்து மென்மையாகப் பேசினால் தர்மபுத்திரன், மூக்கை பாதி மூடிக்கொண்டு பேசினால் அர்ஜுனன், ஹூம் என்று அவ்வப்போது கனைத்தால் நகுலன், நல்லது அண்ணா என்று அவ்வப்போது முணுமுணுத்தால் சகாதேவன், ஆரஞ்சு மிட்டாயை முழுங்கி தொண்டையில் இன்னும் முழுக்க உள்ளே போகாததுபோல் பேசினால் பீமசேனன் என்று உங்கள் நிலைய நடிகர் ஒரே ஒருத்தரே பஞ்ச பாண்டவர்களைக் குரலில்கொண்டுவந்துவிடலாம்.

‘சத்திய சந்தனும், பொன் ஆபரணங்களைப் பூண்டவனும், அத்திமாலை புனைந்தவனும், ஒளி வீசும் விழிகளைக் கொண்டவனும், சிவப்புப் பட்டாடை அணிந்தவனுமான தர்மபுத்ரனே’ என்பதுபோன்ற ரேடியோவுக்கே ஆன வசனங்களை கல்பகோடி வருஷம் முந்தி வியாச முனிவரே எழுதி வைத்திருப்பதால் ரேடியோ நாடகமாக்க எந்தக் கஷ்டமும் படவேண்டாம்.

இந்த நடிகர்களை எல்லாம்விட சிறப்பாக செயல்படுகிற ஓர் அற்புதமான உத்தியோகஸ்தரை உங்கள் ரேடியோ ஸ்டேஷன் சம்பளத்துக்கு எடுத்திருக்கிறது என்பதுபற்றி நீங்கள் நிஜமாகவே பெருமைப்படலாம். ஸ்ரீவில்லிப்புத்தூர் பலவேசம் பிள்ளை அவர்கள்தான் அந்த அற்புதமான கலைஞர்.

காலையில் பெயர் அறிவிக்காமல் நிலைய வித்வான் என்று பொதுவாக அறிவித்தாலும் ஸ்ரீவிலி. பலவேசம் குரல் அல்லா அல்லா என்றோ கிருஷ்ணா கிருஷ்ணா என்றோ, சமயத்தில் அடுத்தடுத்துமோ உச்ச ஸ்தாயியில் ஒலிக்கும். செய்தி விமர்சனத்தில் புதிதாகப் பதவி ஏற்ற பிரிட்டீஷ் பிரதமர் அட்லி சொன்னதாவது என்று உலக அரசியல் அலசும். எட்டரை மணிக்கு கர்நாடக இசைக்கச்சேரியில் கச்சிதமாக எட்டரைக்கு முடிகிற மாதிரி ராக ஆலாபனை, கீர்த்தனை என்று நிலைய வித்வானாக அறிவிக்கப்பட்டு, பாதிக் கச்சேரி முடிக்கும். மதியம் மற்ற நாளில்

எப்படியோ, ஞாயிறன்று சூர்யகாந்தி கதம்ப நிகழ்ச்சியில் பள்ளிக்கூட உபாத்தியாயராக கையில் குடையோடு பள்ளிக்குக் கிளம்பும். சாயந்திரம் நாட்டு நடப்பு நிகழ்ச்சியில் வாங்க கண்ணுச்சாமி, யுத்தம் எப்படி முடிந்ததுன்னு சர்ச்சில் பிரபு சொல்லியிருக்கார், தெரியுமா என்று அரசியல் சொல்லித் தரும். கிராமப்புறப் பாடல்கள் நிகழ்ச்சியில் ‘பொன்னாத்தா நீ முன்னே நடந்தா’ என்று வரப்பில் பாடிக்கொண்டு போகும்... வியாழனன்று நாடக நிகழ்ச்சியில் விபீஷணனாக சரணாகதிக்காக ராமநாடக கீர்த்தனை பாடிக்கொண்டுவரும். ராத்திரி அன்றைய நிகழ்ச்சிகள் முடியும்போது அடுத்த நாளுக்கான நிகழ்ச்சி விவரம் படிக்கும்.

பலவேசம் மட்டும் இல்லையென்றால் உங்கள் ரேடியோ ஸ்டேஷனே இயங்காது என்று தோன்றுகிறது. அவர் நல்ல நாள், வீட்டில் விசேஷம் என்று லீவு எடுத்துப் போனால் எப்படி சமாளிக்கிறீர்கள்?

போகட்டும், மதியம் அதென்ன நிலைய வித்வான் கோட்டு வாத்தியம் வாசிப்பார், நிலைய வித்வான் தில்ரூபா வாசிப்பார், நிலைய வித்வான் சாரங்கி வாசிப்பார் என்று இங்கிலீஷ் நியூஸை இன்னொரு தடவை ஒலிபரப்பி அடுத்ததாக உடனே இசை மழை பொழிவது எதற்காக? உச்சி வெய்யில் நேரத்தில் தில்ரூபா வாத்திய சங்கீதம் கேட்க எத்தனை பேர் ஆர்வமாக இருக்கிறார்கள்? நிலைய வித்வான்தானே, சாயந்திரம் உட்கார்ந்து சூரிய அஸ்தமன காலத்தில் வாசிக்கச் சொன்னால் மாட்டேன் என்று சொல்லப் போவதில்லை. அந்த நேரத்தில் அவரை ‘வாங்க கன்னய்யா வாங்க சின்னய்யா’ என்று நாட்டு நடப்பு பேசச் சொல்லாமல் இருந்தால் சரி.

இப்போது பகல் ஒலிபரப்பில் தண்டபாணி தேசிகர், சுப்புலட்சுமி, வசந்தகோகிலம் என்று பெரிய பெரிய வித்வான்கள் பிளேட் கொடுத்த கானங்களையும் போடுவதாகக் கேள்வி. நான் போன மாதம் இந்த நிகழ்ச்சியைக் கேட்கும்போது, பிரபல பாடகி கே.பி. சுந்தராம்பாள் ‘உமை மறந்திடப்போமா’ என்று கல்லும் உருகப் பாடிய கஸ்தூர்பா இரங்கல் ரெகார்ட் ஒலிபரப்பானது. ஆனாலும், கஸ்தூர்பா காலமாகி ஒரு வருஷம் சென்று இன்னும் துக்கம் அனுஷ்டித்து இப்போது இரங்க வேண்டுமா என்ற கேள்வி எனக்கு இருக்கிறது. தப்பித் தவறி, ‘வண்ணான் வந்தானே’ ரெகார்ட் ஒலிபரப்பி விடாதீர்கள். ரசாபாசமாகிப் போகும்.

சாயந்திரம் ஐந்து மணிக்குத் தொடங்கி ராத்திரி ஒன்பதரை வரையான ஒலிபரப்பு அதிகம் பேரால் கேட்கப்படுகிறது. பார்க்கிலும் மெட்றாஸ்

கடற்கரையிலும் கார்ப்பரேஷன் லவுட் ஸ்பீக்கர் ஏற்பாடு செய்து அதிக ஜனங்கள் கேட்க வசதி செய்திருப்பதற்காக சர்க்காருக்கு நன்றி. இதில் மாலை ஆறு மணிக்கு காலையில் விட்ட குறை தொட்ட குறையாக சங்கீத வித்வான் மீதிக் கச்சேரியை நிகழ்த்தும்போது சில பேராவது ரசிக்க உண்டு. என்னைப்போல நல்ல சங்கீதத்தை விரும்புகிறவர்கள் இதையே தனிக் கச்சேரியாகச் செய்ய வைத்தால் நன்றியுடன் இருப்போம்.

இதைத் தொடர்ந்து நான் ஏற்கெனவே சொன்ன, நாட்டு நடப்பு கொஞ்சம் பழைய செய்திகளை ஊறுகாய் போட்டு பலவேசம் பிள்ளையும் மற்றவர்களும் பரிமாற, அரை மணி நேரம் ஊர்ந்து போகிறது. கேட்டுக் கேட்டு பழகிப் போய் அது நன்றாக இருப்பதாகத் தோன்றுகிறது. தொடர்ந்து அதையே ஒலிபரப்பக் கேட்டுக் கொள்கிறேன். ஸ்ரீவில்லிப்புத்தூர் பலவேசம் பிள்ளைவாளும் சந்தோஷப்படுவார்.

அதற்கு அடுத்து சிலநாள் கிராம நிகழ்ச்சிகள் என்று அறிவித்து பலவேசம் பிள்ளை நாட்டுப்பாடல்கள் பாடுவது ஒலிபரப்பாகிறது. நாட்டுப் பாடல்கள் எல்லாம் புத்தம்புதுசாக யாராவது ரேடியோ ஸ்டேஷனில் எழுதித் தருகிறார்களா? நிலைய வித்வான்போல் நிலையக் கவிஞரும் உண்டா? வாத்திய வ்ருந்தா என்றோ வாத்திய கோஷ்டி இசை என்றோ அடுத்து வரும்.

அபூர்வமாக ராத்திரி ஏழரைக்குப் பிரமுகர்களின் பேட்டி ஒலிபரப்பாகிறது. போன மாதம் கதகளி கலைஞர் அர்ஜுனன் நாயர் பேட்டி என்று கேட்க உட்கார்ந்தால், இந்த ரீதியில் இருந்தது பேட்டி –

> சார், நீங்க 1895இல் சங்கணாச்சேரியில் பார்க்கவன் பிள்ளை – நாராயணி அம்மா தம்பதிக்கு ரெண்டாம் மகனாகப் பிறந்தீங்க.
>
> அதே அதே.
>
> 1920இல் கல்யாண சௌகந்திகம் ஆட்டக் கூத்தில் பீமனாக நடித்தீர்கள்.
>
> அதே அதே.
>
> 1925–ல் மோகினி ஆட்டக்கலைஞர் லட்சுமிக்குட்டி அம்மாளைக் கல்யாணம் செய்துக்கிட்டீங்க.
>
> அதே அதே.

மிக அபூர்வமான தகவல்களைப் பகிர்ந்துகொண்டீர்கள். நன்றி.

அதே அதே.

இந்த அதே அதேயைக் கேட்க ஒரு பேட்டியா, அதுவும் ராத்திரியில்?

எட்டு மணி ராத்திரிக்கு பெரிய வித்வான்களின் கச்சேரி கிட்டத்தட்ட தினமும் ஒலிபரப்பாகிறதைச் சிலாகித்துச் சொல்லியாகவேண்டும். நடுவில் உடைத்து காலையில் கொஞ்சம் ராத்திரி மீதி என்று கச்சேரி செய்ய வேண்டிய கஷ்டம் இவர்களுக்கு இல்லை. இந்தக் கச்சேரிகளில் ஒரே குறை என்ன என்றால் பார்க்கில் அமர்ந்து கச்சேரி கேட்கிறவர்கள், கச்சேரி ஒன்பதே காலுக்கு முடியும்வரை கேட்க முடியாமல் பூங்கா மூடப்படும். கொஞ்சம் முன்னாலேயே கச்சேரி ஆரம்பிக்கலாம். அல்லது மெட்ராஸ் கார்ப்பரேஷனிடம் எடுத்துச் சொல்லி பூங்காக்கள் மூடுவதை தாமதிக்கலாம்.

பகல் கச்சேரியோ ராத்திரிக் கச்சேரியோ, பெரிய வித்வானோ, கத்துக்குட்டியோ ஆல் இந்தியா ரேடியோவில் பரீட்சை வைத்து க்ரேடு வகைப்படுத்தி அவர்களுக்குத் தகுதி அடிப்படையில் கச்சேரி வாய்ப்பும் நேரம் ஒதுக்குதலும் செய்வதாக அறிகிறேன்.

பெரிய வித்வான்களை இப்படிப் பரீட்சை வைத்து பர்ஸ்ட் க்ளாஸ், செகண்ட், தேர்ட் கிளாஸ் என்று பிரித்தால் அது அவர்களுக்குச் செய்கிற மரியாதை ஆகுமா? இது எனக்குமே பதில் சொல்லக் கஷ்டமான கேள்வி.

பல தடவை ராத்திரி பெரிய செட் கச்சேரி களை கட்டிவிடும். ஆனால் சமயா சமயங்களில் உடைத்து ஒலிபரப்பும் இளம் வித்வானின் சங்கீதம் உயர்தரமாக இருக்க, ராத்திரி பாடுகிறவர் இசை சொல்லும் தரத்தில் இருக்காது. அவர் கச்சேரியை அல்லது அவரை பிய்த்துப் போடலாம் போல கோபம் வந்து வினாடியில் அடங்கும். ஆடியன்ஸ் முன்னால் இல்லாமல் சிலருக்குப் பாட வராதுதான். அல்லது அந்தக் கச்சேரி மட்டும் ஏனோ சரியாக வராமல் போயிருக்கலாம். அல்லது, வயசாகி இருக்கலாம்.

இந்த இடத்தில் நீங்கள் ஆற்றுகிற மகத்தான ஒரு சேவைபற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். திருவையாறு தியாகராஜ ஆராதனை சங்கீதக் கச்சேரிகளை, முக்கியமாக ஆராதனை நிறைவு பெறுகிற தினத்தில் பஞ்சரத்ன கீர்த்தனைகள் பாடுவதை 1938 முதல் நீங்கள் நேரடியாக ஒலிபரப்பி வருவது. ஒரு சிறு யோசனை. இந்த ஒலிபரப்புக்கு முன், ‘ஆராதனை நிகழ்ச்சிகளைக் கேட்க நேயர்களை திருவையாறு அழைத்துச்

செல்கிறோம்’ என்று அறிவிக்கிறீர்கள். இதைக் கேட்டுவிட்டு, மூட்டை முடிச்சோடு திருவையாறு போக யாரும் ரேடியோ ஸ்டேஷனுக்கு வந்து நிற்கவில்லையே!

இதேபோல், பெரிய கிரிக்கெட் பந்தயங்கள் நடக்கும்போது ஸ்தலத்துக்கே போய் இன்னார் பந்து வீசினார், இன்னார் அடித்தார், இன்னார் பிடித்தார் என்று நடவடிக்கைகளை கமண்டரியாகத் தரலாம் என்று அன்போடு யோசனை சொல்கிறேன். செய்தி அறிக்கையிலும் விளையாட்டுச் செய்திகள் கூடுதலாக ஒலிபரப்பலாம்.

சென்னை – மீதி இந்தியா அணிகளுக்கு இடையே போன வெள்ளியன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் டெஸ்ட் மேட்ச் நடந்ததை பத்து வினாடிச் செய்தியாக ஒலிபரப்பினீர்களே, தகுமா? அந்தப் பந்தயத்தில் பெரும் கிரிக்கெட் வீரர்கள் ராம்சிங்க், மன்கட், அஷ்கர் அலி, எம்.ஜே. கோபாலன், பாலையா, மெர்ச்சண்ட், அமர்நாத் ஆகியோர் பங்கு பெற்று இந்திய அணி வென்றது குறிப்பிடப்படாமலே போனது. இந்திய அணி இலங்கை அணியை எதிர்த்து விளையாட இலங்கை போகிற செய்தியும் தினமணி படித்துத்தான் தெரியவந்தது.

எனக்கு கிரிக்கெட் அர்த்தமாகிறதில்லை. எனினும் பொதுநலம் கருதி இந்த சிபாரிசைச் செய்கிறேன். உங்களுக்கு கிரிக்கெட் புரியுமென நினைக்கிறேன்.

கச்சேரி இல்லாத ராத்திரிகளில் நாடகமோ இசைச்சித்திரமோ ஒலிபரப்பாகிறது. போன வாரம் கேட்ட நாடகம் ரயில் பிரயாணத்தில் ஏற்படும் சிரமங்களைப்பற்றி ஹாஸ்யமாகச் சொல்வது. ரயில் பிரயாணமாக நான் நிறையப் போய் வந்திருக்கிறேன். அதை நாடகமாக எழுதினால் இன்னும் நிறைய ஹாஸ்யமாக இருக்கும். அந்த நாடக ஆசிரியரின் முகவரி இருந்தால் கொடுங்கள். பேச வேண்டும்.

மற்றப்படி ராத்திரி ரேடியோ நாடகம் வழக்கம்போல் பலவேசம் பிள்ளை கோஷ்டியினரின் ஒரு மணி நேரம் நீண்ட நவரசப் படைப்புகள் தான். இவற்றைவிட எச்.எம்.வி. க்ராமஃபோன் ரெக்கார்டாக வெளியிட்டிருக்கும் ‘சிலப்பதிகாரம் பாண்டியன் அவை’ நாடகம் கேட்க விறுவிறுப்பாக இருக்கிறது. கிராமபோன் ஊசி விலை ஏறி விட்டது. ஐந்து ஊசி விலை பனிரெண்டு அணாவாம். அதனால் ரெக்கார்டை விடுத்து ரேடியோவே சரணமாக இருக்கிறேன்.

நாடகம் முடிந்து நேரம் இருந்தால் திடுதிப்பென்று ஹிந்துஸ்தானியில் ஏதோ பேசுகிறது. அதுவும் டெல்லி பிரதேச பலவேசம் பிள்ளைகளான நிலைய வித்வான்கள் அளிக்கும் ரேடியோ நாடகம் என்று ஊகிக்கிறேன்.

வடக்கத்தி பிரமுகர்களும் ஹிந்திபாஷையை கட்டாயமாகவோ நைச்சியம் செய்தோ தென்னிந்தியாவில் பரப்பத் தலைகீழாக நின்றாலும் எங்களுக்கு அது ரசிக்கவில்லை. இந்தி பிரசார சபா வைத்து மகாத்மா காந்தியையே கூட்டி வந்து ஹிந்தி படியுங்கள் என்று பேசச் சொன்னாலும், காந்திஜிக்கு வணக்கம் சொல்லி ஹிந்தியைத் தள்ளிவிட்டு ஜீவிக்கக் கற்றுக்கொண்டிருக் கிறோம். ஹிந்தி ரேடியோ நாடகமும் தள்ளுபடி கேஸ்தான்.

ராத்திரி ஒரு மணி நேர நாடகம் முடிந்து நேரம் இருந்தால் இசைச் சித்திரம் என்று ஒலிபரப்புகிறீர்கள். அதற்கும், நிலைய வாத்திய கோஷ்டியும், நிலைய வித்வான்களும் அளிக்கும் நிகழ்ச்சிகளுக்கும் காலையில் வரும் துதிப்பாடல்களுக்குமான வித்தியாசம் என் புத்திக்குத் தெரிய மாட்டேன் என்கிறது. இதை ராத்திரி நாடகத்துக்கு அப்புறம் கேட்கிறவர்களுக்கு ராத்திரி தூக்கம் வராமல் இருந்தால் குணமாகலாம்.

இத்துடன் இந்தக் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன். பொறுமையாகப் படித்ததற்கு நன்றி.

★★★

பதிமூன்று

# ராமோஜி, ரத்னா திருக்கருகாவூர் யாத்திரை – 1945

அது ஏன் கல்யாணமான அடுத்த வருஷமே பெண்டாட்டியை வயிற்றைத் தள்ள வைத்து அடுத்த தலைமுறை பிறந்து வர ஆவன செய்ய வேண்டும் என்று புருஷனையும் பெண்ஜாதியையும் மற்றவர்கள் எல்லோரும் மறைமுகமாகவோ நேரடியாகவோ நிர்பந்திக்கிறார்கள் என்று தெரியவில்லை.

சில பேர் இன்னும் மோசம், கல்யாணப் பத்திரிகையைக் கையில் வாங்கிக்கொண்டதுமே பத்து மாதக் கணக்கைப் போட ஆரம்பித்து, ஞாபகமாக விசாரிக்கப் புறப்பட்டு வந்துவிடுகிறார்கள். கல்யாணம் முடிந்து ஒரு வருஷமான நாள், ரெண்டாம் ஆண்டு விழா என்று சகலமானதுக்கும் நாம் மறந்திருந்தாலும் இவர்கள் மறக்காமல் வந்து, ரெண்டு ஆப்பிள், ஒரு காய்ந்து போன ஆரஞ்சுப் பழம் என்று காகிதக் கவரில் வைத்துப் பரிசாக நீட்டியபடி கேட்பது – 'எப்போ எதிர்பார்க்கலாம்?'

இது என்ன முப்பது மதுரமான கானங்கள் கொண்ட தமிழ் டாக்கி படமா அல்லது சிறையில் அடைத்த காந்தி கட்சிக்காரர்களின் ரொட்டீன் சமாசாரமா, எப்போது ரிலீஸ் என்று தேதி குறித்துச் சொல்ல?

'காலாகாலத்திலே எல்லாம் நடந்துடணும், பார்த்துக்கும்.'

இல்லைன்னா என்ன செய்வாங்க தெரியவில்லை. அந்த ஆரஞ்சை வேணுமானால் திருப்பிக் கொடுத்திடலாம்.

பெண் வயிற்றில் கரு உருவாகி வர, ஞாயிற்றுக்கிழமை காலையில் புருஷனும் பெண்டாட்டியும் ஆளுக்கு ஒரு பிடி கொள்ளு பச்சையாகச் சாப்பிடணும் என்று ஒரு யோசனை.

ரொம்ப வற்புறுத்தவே ஒரு ஞாயிறு இட்லி, சின்ன வெங்காய சாம்பார், தேங்காய் சட்னி, தக்காளி சட்னி என்ற அற்புதமான சண்டே வளமுறையைப் புறக்கணித்து, ஒரு பாத்திரத்தில் கொள்ளோடு வந்த ரத்னா, அதிலிருந்து ஒரு டீஸ்பூன் எடுத்து வாயிலிட்டு மெல்ல, நான் திகிலுடன் பார்த்தேன்.

அது பொறுக்க முடியாத ருசி என்று முகம் காட்ட அவள் எழுந்து ஓடிப் போய்த் துப்பிவிட்டு, சமையலறையில் அடுப்பில் வைத்திருந்த சின்ன அண்டாவில் அகப்பைவிட்டுத் துழாவித் தட்டில் ஏதோ இட்டுக் கொண்டு வந்தாள். அவாளுக்கு இவாள் எழுந்துண்பாள் என்கிற மாதிரி, இது அவித்த கொள்ளு.

என்னை எப்பாடு பட்டும் குதிரை ஆக்க யாருடைய துர்போதனையிலோ அவள் எடுத்த நடவடிக்கை வெற்றி பெறும் தருணத்தில், மிருதங்கம் வேலப்ப நாயக்கர் வாசலில் நின்று, ‘வரலாமா? வரலாமா?’, என்று இரைந்தார்.

ரத்னா விதித்த கொள்ளு தண்டனையிலிருந்து இப்போதைக்காவது விடுதலை கிட்டிய சந்தோஷத்தில், வரலாம் வரலாம் என்று நாயக்கரை உற்சாகமாக எதிர்கொண்டேன்.

‘ஒரு சந்தேகமுங்க... இது சங்கீதம் தொடர்பானது... நீங்கதான் அக்கம்பக்கத்திலே சங்கீதம் தெரிஞ்ச இன்னொரு ஆத்மா... நாகஸ்வரமா நாதஸ்வரமான்னு போன மாசம் சங்கீத அஞ்ஞானிகள் கிட்டே கூடக் கேட்டுட்டு, எங்கிட்டயும் வந்தீங்களே நினைவு இருக்கா... நீங்கதான் ஆலோசனை சொல்லணும்.’ நாயக்கர் தீர்மானம் வைத்துச் சொன்னார்.

ரத்னாகொண்டுவந்து வைத்த காப்பியை அரை நிமிடம் கண்ணை மூடிக்கொண்டு வாசனை பிடித்து அனுபவித்து, கண் திறந்து என்னை நோக்கினார் –

‘இந்த அருமையான காப்பியைக் குடிச்சுட்டு ஆபீஸ் போக எப்படி மனசு வரும்? இன்னொன்னு, வேறே ஒண்ணுன்னு கேட்டுக்கிட்டே இருக்குமே!’

மனசெல்லாம் பூவாக மலர்ந்து நின்றிருப்பாள் ரத்னா. இன்றைக்கு அவித்த கொள்ளு கிடையாது.

நான் கணக்குப் போட்டது சரிதான். குளிக்காமல் பசியாற அமர்ந்தேன். வேலப்ப நாயக்கர் வந்த விஷயம் மேலே சொல்லவிட்டுப் போச்சே. இதோ அது.

இதுவரை பெண் பாடகிகள் யாருக்கும் மிருதங்கம் வாசித்ததில்லை யாம் அவர். நாளுக்கு நாள் பெண் பாடகிகள் அதிகமாகிக்கொண்டு போகிறார்கள். வாசிக்க மாட்டேன் என்று மூஞ்சியைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்தால் வருமானம் ஆகக் குறைவாகி விடுகிறதாம்.

வேன் வாங்கி முட்டை மொத்தக் கொள்முதல் விநியோகம் ஆரம்பித்தால் மகன்கள் மற்றும் மருமகன்கள் சிரத்தையே எடுக்காமல் நாடகம், சினிமா என்று அற்ப சந்தோஷத்துக்காக அலைய, பிசினஸ் சோபையின்றி, ஏதோ முதலுக்கு மோசமில்லாது நடக்கிறதாம்.

அதெல்லாம் இருக்கட்டும். நாயக்கரின் சந்தேகம் என்ன? என்றால், பழைய காப்பியம், செய்யுள் எதிலாவது பெண்கள் சங்கீதக் கச்சேரி செய்வதுபற்றி வருகிறதா?

ராமோஜி கொஞ்சம் சிரத்தை எடுத்து உடனே பார்த்துச் சொல்ல முடிந்தால் நல்லது. காப்பியத்தில் இருந்தால், பழைய சம்பிரதாயம் உண்டு என்று சொல்லி அவர் பாடகிகளுக்குப் பக்க வாத்தியம் வாசிக்க ஆரம்பித்து விடுவாராம்.

நான் உடனே எல்லாம் தெரிந்தவனின் வேஷத்தை எனக்கு ஒட்டவில்லை என்றாலும் வலிந்து அணிந்துகொண்டேன். தெய்வாதீனமாக தமிழ்த் தாத்தா உத்தமதானபுரம் சாமிநாதய்யர் பிரசுரித்த சீவக சிந்தாமணியில் காந்தர்வ தத்தையோ இன்னொரு கதாநாயகியோ வீணை வாசிப்பதுபற்றி படித்த நினைவு. கச்சேரி என்பதற்கு வினிகை என்ற விநோதப் பெயரும் உண்டாம்.

சீவக சிந்தாமணிக்கு எங்கே போக? புரசைவாக்கம் லைப்ரரியில் இருக்காது. ஆகச் சிறியது அந்த நூல் நிலையம். ரிடையர்ட் ஹெட்மாஸ்டர் வைத்திருக்கலாம். அவர் இந்துநேசன் உட்பட சகலமானதையும் படிக்கிறார். அதற்காக சிந்தாமணி படித்திருப்பார் என்று எப்படி முடிவு செய்வது?

நான் தொண்டையைக் கனைத்துக்கொண்டு நாயக்கரிடம் கேட்டேன் – ‘உங்கள் அவசரத்திலிருந்து நான் தெரிந்துகொண்டது உங்களுக்கு ஸ்த்ரிகளின் சுஸ்வரமான கச்சேரிக்கு வாசிப்பதில் இஷ்டம்தான். அப்புறம் என்னாத்துக்கு காப்பியம், வெண்பா, வெண்டைக்கா எல்லாம்?’

‘அதென்ன அப்படிச் சொல்லிட்டீங்க? தெருவிலே ஒரு பொண்ணு எதிர்லே வந்தாலே ஒதுங்கி வழிவிட்டுத் திரும்பி சுவரைப் பார்த்துட்டு நிற்பேன்… நமக்கு ஒத்து வர்றதில்லேங்க’ என்றார் நாயக்கர்.

‘ஏன் சார், நேரே பார்த்துட்டு நடந்தா மரியாதையா, திரும்பி பிருஷ்டத்தை காட்டறது நாகரீகமா?’ என்று நான் கேட்க பதிலில்லை.

‘பத்து அடியாவது விலகி இருக்கணும்னு என் கொள்கை.’

அதைத் தூக்கி அடுப்பிலே போடச் சொன்னேன்.

பெண் பக்கத்திலேயே போக மாட்டாதவருக்கு எத்தனை குழந்தைகள் என்று விசாரிக்க ஒன்பது பேர். ஐந்து மகன், நாலு மகள். பத்து அடி தள்ளிப் படுத்துக்கொண்டு இப்படியான சாதனை எப்படித்தான் நிகழ்த்தினாரோ.

இப்போதைக்கு என் கருத்தாக, பெண் வித்வான் கச்சேரிக்கு நாயக்கர் மிருதங்கம் வாசிக்கலாம் என்று சொல்லி, ஒரு வாரத்தில் லைப்ரரி போய் இது சம்பந்தமாகப் பழந்தகவல் கிடைத்தால் குறிப்பெடுத்து வருகிறேன் என்று அவரை அனுப்பி வைத்தேன்.

ரத்னாவிடம் வேலப்ப நாயக்கரின் சந்தேகத்தைக் கேட்டேன். ‘ஏன், ஆண் வித்வான் பாடி, பெண் மிருதங்கமும், கடமும், கஞ்சிராவும், வயலினுமாக பக்க வாத்தியம் வாசிக்கக்கூடாது?’ என்று எதிர்க்கேள்வி கேட்டாள்.

பசியாறும் மும்முரத்தில் அதெல்லாம் யோசனைக்கும் கற்பனைக்கும் இடம் தராத விஷயங்களாக மங்கலாகி நிற்க, ஓர் ஈடு சுடச்சுட உதிர்த்து எடுத்து, கொஞ்சம் போல், லவலேசம், ஒன்றோடு ஒன்று ஒட்ட, கை நீட்டி, சூடு பொறுக்காமல் சின்ன ஊசியாகக் குத்துவதை அனுபவித்தபடி, விரல் முனையால் தொட்டு, மெல்லத் தள்ளப் பிரிந்து, சற்றே நல்லெண்ணெய் வாசம் பூசி, ஆவி பறக்கப் பசுமையான வாழை இலையில் கிடக்கும் இட்லிகளோடு இன்னொரு ஞாயிறு. இன்னொரு காலை விருந்து.

ஆகாரம் நிறைவடையும் நேரத்தில், நேற்றுப் பால் திரிந்து போனதைக் கொட்டாமல் எடுத்து வைத்து, சர்க்கரையும் நெய்யும் ஏலக்காய், முந்திரிப் பருப்பும் கலந்து திவ்யமாக ரத்னா கிண்டி வைத்த பால்கோவா ரெண்டு மேஜைக்கரண்டி இலையின் ஓரத்தில் இட, வாழ்க்கை சுவையானது என்றேன்.

‘அடுத்த ஞாயிறும் இதே மாதிரி’ என்று ரத்னா தொடங்க, எத்தனை ஞாயிறு இனிமேல் பாக்கி இருந்தாலும் இதே மாதிரி இட்லி, வெங்காய சாம்பார்தான்... ரேஷன்லே, வெளியே சொல்லி பருப்பு வாங்கித் தர்றது என் கடமை என்று முடியாத விஷயத்தில் வாக்குறுதி அளித்தேன்.

அடுத்த வாரம் இச்சல்கரஞ்சியிலிருந்து மாமனாரும் மாமியாரும் வரப் போகிற செய்தி மனதில் நிற்கிறது. வெறுங்கையோடா வருவார்கள்? எப்போது வந்தாலும் பருப்பும் உளுந்தும் எடுத்து வராமல் இருக்க மாட்டார்கள். ‘எங்கள் ரேஷனில் வாங்கி சேமித்து வைத்தது’ என்று

யாராவது சோதனைக்கு வந்தால் காட்ட ரேஷன் கார்டு சகிதம் பிரயாணம் வைக்கிற முன் ஜாக்கிரதை உள்ளவர்கள்.

நாயக்கர் புறப்பட்டுப் போன ஐந்தாவது நிமிடம் திரும்பவும் வாசலில் சத்தம்.

வாசல் குறுக்குத் தாழ்ப்பாளை லொடக் லொடக் என்று மெல்லத் திறந்து சாத்தித் திறந்துகொண்டு கவன ஈர்ப்பு நடத்தியபடி அந்தப் பக்கம் விலாசினி டைப்பிஸ்ட் பூத்துச் செழித்த புஷ்பக்கொடிபோல நின்றுகொண்டிருந்தாள். கையில் ஒரு பெரிய கிண்ணம், அதாவது கும்பா.

குளித்துவிட்டுத் தலையாற்றி, கூந்தலில் நுனி முடிச்சுப்போட்டு, வாசலில் என் கவனத்தைச் சிதறடிக்கவே வந்து நிற்கும் அழகான அந்நிய ஸ்திரி.

'உள்ளே வா விலு' என்றாள் ரெண்டு கையிலும் காப்பி டம்ப்ளரோடு வந்த ரத்னா. விலு என்னை ஓரக்கண்ணால் பார்த்தபடி 'ரத்தி, இதையும் சாப்பிட்டு கோப்பி குடிக்கச் சொல்லு' என்று ஒரே வாக்கியத்தில் என் நெஞ்சைக் குளிரச் செய்தாள். கையில் வைத்திருந்த கிண்ணத்தை ரத்னாவிடம் கொடுத்தாள்.

'எங்க அம்மாயி அம்ம, அதான் மாமியார், கருநாகப்பள்ளியிலே இருந்து வன்னு... நெய்யப்பமும் உண்ணியப்பமும் உண்டாக்கி எடுத்து வந்திருக்காங்க... டேஸ்ட் பார்த்து சொல்லுங்க ரெண்டு பேரும்.'

விலாசினி வளரெ பங்கியாயி ஒரு புஞ்சிரி பொழிஞ்சு திரிச்சு நடன்னு. எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் மலையாளம் தெரியுமாக்கும்.

அவள் எடுத்து வந்து கொடுத்துப் போனதைச் சாப்பிட்டுப் பார்த்தேன். மணக்க மணக்க, மிகுந்த ருசியாக இருந்தது. அதோடு, காப்பியை ஒரு மிடறு குடித்துக் கிட்டிய சொர்க்கபோதையில் மிதந்தபடி சொன்னேன் – 'கேரள ஐட்டம்னாலே ஒண்ணாம் க்ளாஸ் தன்னே.'

ரத்னா திரும்பி என்னைக் கூர்மையாகப் பார்த்தபடி சொன்னாள் – 'விலாசினியை ஐட்டம் அது இதுன்னு சொன்னா, வந்து அறைவேன்.'

'சத்தியமா விலுவை இல்லே ரத்து... இந்த ரெண்டுலே எது உண்ணியப்பமோ அதுவும், இன்னொரு அப்பம் பேரு சொல்லிச்சே அதுவும், வாயிலே போட்டா கரையுது... என்ன... நெய்யைவிட தேங்காய் எண்ணெய் வாசனை அதிகம்... ஒரு ஸ்பூன் தேங்காய் எண்ணெய் இல்லே... ஒரு

தென்னை மரத்தையே உள்ளே வச்ச மாதிரி தேங்காய் சூழந்த உலகம் இது.'

'சரி, பேத்த வேணாம்... ஹால்லே ஒட்டடை அடிக்கலாம், அலமாரியிலே புத்தகம் அடுக்கி வைக்கலாம், தோட்டத்திலே செடிகொடிக்கு தண்ணீர் விட்லாம்... எது செய்யப் போறீங்க?' என்று குலை நடுங்க வைத்தாள் ரத்னா.

வாசலில் மறுபடியும் சத்தம். ஓசை எழுப்புகிறவர்கள் வாழ்த்தப்படட்டும்.

தெலக்ஸ் புவனாவின் ஆஸ்தான அறிஞர் ராமண்ணா ஜோசியரும், கூடவே இன்னொரு குடுமிக்காரரும் வாசல் கதவைத் தட்டாமல் தட்டி உள்ளே நுழைந்துகொண்டிருப்பதைக் கவனித்தேன். யாராக இருந்தாலும் வாழ்க. இன்னொரு மணி நேரம் இங்கே என்னோடு பேசிக்கொண்டிருந்தால் போதும்.

தெலக்ஸ் புவனா அவ்வப்போது வந்து போய் எனக்கும் ரத்னாவுக்கும் நல்ல சிநேகிதமாகி விட்டதால் என் மனதின் அறையைக் காலி செய்துகொண்டுபோய்விட்டாள். தேவைப்பட்டால் நேரில் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுவேன். பார்த்தால் ஏற்படும் பரவசம் அடங்கி, பழக்கமான நல்ல சிநேகிதம் அவளோடு ஏற்பட்டிருக்கிறது.

இப்போது அவள் மேல் வைத்தது சகோதரியோடு கொண்ட பிரியமா என்று கேட்டால் நிறைய யோசித்து இல்லை என்றுதான் சொல்வேன். என்ன செய்ய, ஆண்டவன் படைப்பில் ஆண் வர்க்கம் அப்படித்தானே.

'கும்பகோணத்து பக்கத்திலே திருக்கருகாவூர்லே இருந்து என் ஷட்டகர் வந்திருக்கார்.'

ராமண்ணா ஜோசியர் கூடவந்த ரெட்டை நாடி மனுஷரை அறிமுகப்படுத்தி வைத்தார். ஷட்டகர் என்றால் கோ–பிரதராம். சகலபாடி என்று புரிந்துகொண்டேன்.

'திருக்கருகாவூர் கர்ப்பரக்ஷாம்பிகை கோயில் கேட்டிருப்பேளே. கும்பகோணத்துக்கு ரொம்பப் பக்கம். ரொம்ப பிரசித்தமானது. அங்கே ஸ்ரீகார்யம் பண்றார் ஷட்டகர். கோவில் புனருத்தாரணம். நிதி திரட்ட மெட்ராஸ் வந்திருக்கார்' என்று சற்று நிறுத்த, ஷட்டகர் நெருக்கி அச்சிட்ட ஒரு ரோஜா வண்ண நோட்டீசை என்னிடம் மரியாதையோடு கொடுத்தார்.

‘கர்ப்ப ரக்ஷாம்பிகா சமேத முல்லைவனநாதர்’ என்று பெயரே இனிமையும் கம்பீரமும் பாதுகாப்பு தருவதுமாக, படித்ததும் மனம் நிறைந்து போனது.

ரத்னா, வந்தவர்களுக்கும், சேர்ந்து பருக எனக்கும், காப்பியோடு வந்தாள்.

‘குழந்தை வரம் கேட்டு அம்மாவிடம் தம்பதியா யார் வந்தாலும் வெறும் கையா போனதில்லே...’ என்றார் ஜோசியர். ரத்னா முகம் ஆயிரம் தீபம் ஏற்றினதுபோல் ஒளிர்ந்ததைக் கவனித்தேன்.

நோட்டீசில் நெய் பிரசாதம், விளக்கெண்ணெய் பிரசாதம், புனுகு சட்டடம் என்று பிரசாத விவரம் பார்த்து நான் கோவில் குருக்களைக் கேட்டேன் – ‘பொங்கல் பிரசாதம், லட்டு பிரசாதம், பாயசம், பஞ்சாமிர்த பிரசாதம் தெரியும். அதென்ன விளக்கெண்ணெய் பிரசாதம்?’

வந்தவர் கைப்பையில் இருந்து சிறியதாக ஒரு புத்தகத்தை எடுத்தார். கோவில் வழிபாடும் பூஜைகளும் என்று விவரம் தரும் புத்தகம் அது. ரத்னாவிடம் புத்தகத்தைக் கொடுத்துவிட்டுச் சொன்னார் – ‘நீங்களே படிச்சுப் பாருங்கோ. ரொம்ப அபூர்வமானது அதெல்லாம். வேறே எங்கேயும் கேட்டிருக்கமாட்டேள்.’

காப்பி குடித்து, கோவில் நிதிக்கு நூறு ரூபாய் கொடுத்து அவர்களை வழியனுப்ப வாசல்வரை வந்தபோது, ‘மாமியோட கூட எப்போ தரிசனத்துக்கு வர்றதா இருந்தாலும், என் ஷட்டகர்கிட்டே ஒரு வாரம் முன்னாடி சொல்லிடுங்கோ. எல்லா ஏற்பாடும் பண்ணி வைக்கறேன்’ என்று அபயமளித்தார் வந்தவர்.

எல்லா நல்ல நம்பிக்கையும் வேண்டி இருக்க, ‘நிச்சயமா செய்யறேன்’ என்றபடி உள்ளே நடந்தேன்.’

கோயில் நிதிக்கு நூறு ரூபாய் நன்கொடை கொஞ்சம் அதிகமோ? இந்த வருடம் பிறந்து நன்கொடை மயம்தான். கஸ்தூர்பா காந்தி நிதி, பாரதி மணிமண்டப நிதி, தீரர் சத்தியமூர்த்தி நினைவு நிதி, இப்போது இது. பரவாயில்லை. எல்லாம் நல்ல காரியங்களுக்குத்தான்...

எப்போது திருக்கருகாவூர் போகலாம் என்று ரத்னாவைக் கேட்டேன். வழக்கமாக சுறுசுறுப்பு காட்டி பிரயாணத்துக்கு முன்கை எடுக்கும் ரத்னா, இப்போது சிரத்தையே காட்டாதது வியப்பாக இருந்தது.

‘போய்ப் போய் என்ன கண்டோம்? கொள்ளு ஊறப்போட்டு தின்னு, அகத்திக்கீரை மசியல் சாப்பிடு, சந்நிதியை சுற்றி உருண்டு கொடு, மாதா ஸ்வரூபத்துக்கு முன்னாடி ரெண்டு மணி நேரம் ஒருவாரம் தினம் மண்டி போட்டு வேண்டிக்கோ, சாதர் வாங்கித் தலையிலே வச்சு தர்க்காவுக்கு எடுத்துப் போய் சூஃபி மகான் சமாதியிலே போர்த்தி தொழுதுட்டு வா... எல்லாம் செஞ்சாச்சு... இப்ப இதுவா?’

அவள் கண்ணில் நீர் நிறைந்து வழிய என்னை அணைத்துப் பிடித்துக் கொண்டாள்.

‘ராஜா, நீ இன்னொரு கல்யாணம் செஞ்சுக்கப்பா, நான் முழுமனசோட சம்மதிக்கறேன்’ அவள் கேவி அழுது துக்கம் கரைத்தாள்.

‘சும்மா ஏதாவது உளறாதே. எனக்கு நீ, உனக்கு நான். போதும் நமக்கு.’

அவளை நாற்காலியில் உட்கார்த்தி அலமாரியில் மேலே இருந்த புத்தகத்தை எடுத்துக் கையில் கொடுத்தேன். ‘மழலைப் பட்டாளம்.’ தலைப்பைப் பார்த்ததும் ரெண்டு பேரும் சிரிக்க ஆரம்பித்தோம்.

‘இது என்ன அம்மன் கோவில்னு சொன்னாங்க?’ ரத்னாதான் ஆரம்பித்தாள். சொன்னேன். எங்கே இருக்குதாம்? சொன்னேன். கும்பகோணத்திலே இருந்து பத்து, பனிரெண்டு மைல் தூரம்.

கும்பகோணம் என்ற பெயர் நான் எதிர்பார்த்தபடியே அவளை நிமிர்ந்து உட்கார வைத்தது. ‘கும்பகோணம் பக்கத்திலேயா? ஏன் முன்னாலேயே சொல்லலே?’ என்று என்னைக் கோபித்துக் கொண்டாள்.

கும்பகோணம் எனக்கும் பிடித்த ஊர்தான். புது வருஷத்துக்கு சமைக்கும் வேப்பம்பூ சேர்த்த மாங்காய் வெல்லப் பச்சடி மாதிரி இனிப்பும் அல்லாதவையுமாக எத்தனையோ நினைவுகள் அந்த மண்ணைச் சுற்றி, என்னை, ரத்னாவை, எங்களைச் சுற்றிச் சூழ்ந்து, என்றும் வலம் வருகின்றன.

அடுத்த சனிக்கிழமை வச்சுக்கலாமா? நான் கேட்டேன். வேண்டாம் என்று தீர்மானமாக மறுத்துவிட்டாள். நான் மடத்தனமாக மீண்டும் வற்புறுத்த ‘உங்களுக்கென்ன ஆம்பளை... போகலாம்னு நினைச்சா அடுத்த நிமிஷம் மூட்டையைக் கட்டிக்கிட்டு, என்னடா சுப்பான்னு எட்டு மணிக்கு தயார்னு ரெடியாகிடுவீங்க... நாங்கதான் சதா கணக்கு போடணும்... மாசாந்திரச்

சனியன் எப்போ வரும்னு ஞாபகம் வச்சுக்கணும்… மறக்காம துணி எடுத்து வச்சுக்கணும்… என்ன சிரமம் இருந்தாலும் சிரிச்சுக்கிட்டே ஒதுங்கணும்…’

வரும் வெள்ளிக்கிழமைக்கு அடுத்த வார வெள்ளிக்கிழமை ராத்திரி போட் மெயில் என்ற ராமேஸ்வரம் போகும் ரயிலில் கும்பகோணம் புறப்பாடு. பொலபொல என்று அடுத்தநாள் சனிக்கிழமை விடியும்போது கும்பகோணம். அங்கிருந்து திருக்கருகாவூர். தரிசனம் முடித்துத் திரும்ப கும்பகோணம். அங்கேயும் ஆலய தரிசனம். அரட்டை. நினைவு கூர்தல். சாயந்திர நடை. ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் மெட்றாஸுக்கு ரயில் ஏறுதல். பிரயாணப் பட்டியல் ஒருமாதிரி ரெடியானது.

விட்டோபாவுக்குக் கடிதம் எழுதி, வரப்போவதைத் தெரியப்படுத் தினேன். கும்பகோணத்திலிருந்து திருக்கருகாவூர் போய்வர உசிதமான வாகனம் எதுவோ அதை வாடகைக்கு எடுத்து வைக்கக் கோரினேன்.

திங்கள்கிழமை ஆபீசில் வேலை மும்முரத்தில் இருந்தபோது ட்ரங்க் கால் என்று பந்துலு சார் அழைத்தார். அவர் இடத்தில்தான் ஆபீஸ் டெலிபோன் வைத்திருக்கிறோம்.

‘நான் கும்பகோணத்திலே இருந்து விட்டோபா பேசறேன்… அனா மாவன்னா மளிகைக்கடையிலே இருந்து பேசறேன்… ட்ரங்க் கால் புக் பண்ணி பேசறேன்… ராமோஜி ராவ்ஜியை தயவா கூப்பிடணும். நான் அவருக்கு ஆப்த சிநேகிதன். அவர் திருக்கருகாவூர் போக, அடுத்த சனிக்கிழமை…’

என்னைப் பேசவே விடவில்லை விட்டோபா. ராமோஜி பேசறேன் என்று நடுவில் பத்து தடவையாவது சொல்லியிருப்பேன். என்னாச்சு லைன் சரியா இல்லையா என்று பந்துலு குச்சிப்புடி அபிநயம் எல்லாம் பிடித்து என்னை சைகையில் விசாரிக்க ஒரு வழியாக விட்டோபா நிறுத்தி என்னைப் பேச அனுமதித்தார்.

‘சார், ராமோஜி ராவ் ஜி கிட்டே கொஞ்சம் போனைக் கொடுங்கோ’ என்றார் அடுத்து. நாசமாப் போச்சு, நான்தான் ராமோஜி என்று பிரகடனப்படுத்திப் பேச ஆரம்பித்தேன்.

‘கும்பகோணம் டூ திருக்கருகாவூர் டிஸ்டர்பன்ஸ் டுவெல்வ் மைல்’ என்று காலேஜ் புரபசர் மாதிரி விட்டோபா இங்க்லீஷில் எடுத்துவிட, அவர் வேறே கிரகத்தில் இருந்து பேசுகிறதுபோல குரல் போய்ப் போய்த் திரும்பி வந்தது.

விட்டோபா சொன்ன தகவலை மிக கவனமாகக் காதில் வாங்கியதன் சாரம் – கும்பகோணத்தில் இருந்து திருக்கருகாவூர் பனிரெண்டு மைல் தூரம். அங்கே போக பஸ் உண்டு. கும்பகோணத்திலேயே கார் வாடகைக்கு இப்போது கிடைக்கிறது. கருகாவூர் போய், தரிசனம் முடித்து, திரும்பி வர நான்கு மணி நேரமாவது குறைந்தது ஆகும். கார் வாடகை ரூ50. காரில் முன்னால் டிரைவர் தவிர ஒருத்தரும் பின்னால் இரண்டு அல்லது மூன்று பேரும் சௌகரியமாக உட்கார்ந்து வரலாம்... வாடகையில் பெட்ரோல் செலவு சேராது. எல்லாம் முடிந்த பிறகு டிரைவர் பேட்டாவாக ஐந்து ரூபாயோ மேலுமோ கொடுப்பது திருப்தியைப் பொறுத்தது.

‘சரி வாடகைக்கார் தயார்ப் பண்ணி வைங்க ப்ளீஸ். ரொம்ப தேங்க்ஸ்.’ டெலிபோனை வைத்துவிட்டு வியர்த்து விறுவிறுத்து பந்துலு சார் மேஜைக்கு எதிர் நாற்காலியில் அவர் அனுமதி இல்லாமலேயே உட்கார்ந்தேன். அவர் எனக்கு போனில் பேசிப் பழக்கம் இல்லை என்று நினைத்திருக்கக் கூடும்.

போன் திரும்ப அலறியது. பந்துலு சார் எடுத்து ஒரு நிமிடம் கேட்டபடி இருந்தார். நான் நாற்காலிக்குத் திரும்ப நடக்க ஆரம்பித்தபோது சொன்னார் – ‘ராமோஜி, உம்ம பார்ட்டி திரும்பவும் கூப்பிடறார்.’

நான், இதேதடா விடமாட்டேன் என்று அன்புத் தொல்லை தருகிறாரே இந்த மனுஷர் என்று மறுபடி போனை வாங்க, அடியைப் பிடியடா பரதபட்டா என்று திரும்பவும் அறிமுகம் எல்லாம் செய்துகொண்டு, என்னைப் பேச விட்டார் விட்டோபா.

அவர் ரயில் வந்து சேரும் சனிக்கிழமை காலையில் கும்பகோணம் ஸ்டேஷனில் காத்திருப்பார். ப்ளாஸ்கில் வீட்டில் போட்ட காப்பி எடுத்து வரணுமா, டீ வேணுமா?

‘எதுக்கு விட்டோபா உங்களுக்கு சிரமம்? ஜங்ஷன்லேயே பார்த்துக்கலாம்.’

‘இல்லே ப்ளாஸ்க் புதுசா வாங்கியிருக்கேன். எத்தன மணி நேரம் சூடு தங்கும்னு பார்க்கணும்.’

நான் சிரித்தபடி போனை வைத்துவிட்டு வேலையில் மூழ்கினேன். வீரையா நமஸ்காரமு சார் என்று சல்யூட் வைத்தான். வழக்கத்தைவிட அதிகமான சிரிப்பு முகத்தில். சரசு என்று ஆரம்பித்தான். இப்போ வேணாம் என்றேன்.

என்ன விஷயம் என்று விசாரிக்க எனக்கு நேரமில்லை. சரசு ஒற்றைநாடியா?

சாயந்திரம் நாலு மணிக்கு அடுத்த மாதத்தில் இருந்து புதுசாகப் பென்ஷன் தரவேண்டிய ரிடையர்ட் ஊழியர்களின் பைல்கள் பதினேழு வந்து சேர்ந்தன. கையெழுத்துப்போட்டு அவற்றை வாங்கி மேஜையில் வைத்தபோது எல்லா பைலும் அங்கே உட்கார இடம் இல்லை என்று தெரிந்தது. தாற்காலிகமாக மறுபடி பென்ஷன் வேலை.

வேறே பெரிய அகலமான மேஜை வேண்டியிருக்கும் என்று பந்துலு சாரிடம் அறிவிக்கப் போனேன். அவர் தேவலோகத்தில் இருப்பவராக, உற்சாகமாக டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார். என்னைப் பார்த்தபடி போனில் சொன்னது – ‘ராமோஜிக்கு நூறு வயசு. வந்திருக்கார். இரு. தரேன்.’

விட்டோபாவா? அவரை பந்துலு சாருக்குத் தெரியாதே. பின்னே? அத்தங்கா என்றார்.

பந்துலு இன்னும் வெல்ல அச்சாகக் கரைந்துபோக, போனில் தெலக்ஸ் புவனா. ஜோசியர், மாகாணிக் கிழங்கு, ஆவக்காய், சத்யநாராயண பூஜை... ஒவ்வொன்றாகக் கேட்டேன். சத்யநாராயண பூஜைக்கு, கரெக்ட் சொன்னாள்.

‘ஆமா, வரும் வெள்ளிக்கிழமை எங்க வீட்டுலே வரலட்சுமி நோன்பு, பூஜை. ரத்னா அக்காவை கூட்டிட்டு வாங்க. அவங்களையும் நான் நேரில் வந்து அழைக்க ஆசை. ஷூட்டிங் இருந்துகிட்டே இருக்கு. தப்பா நினைக்க வேணாம்னு சொல்லுங்க...’

‘சரி மேடம்... சரி மேடம்...’

‘மேடம்லாம் என்னதுக்கு ராமோஜி சார்... நான் ரொம்ப சின்னவள்... புவின்னே கூப்பிடுங்க...’

விலு மாதிரி இன்னொரு அழகான செல்லப் பெயர்... புவி... சொன்னால் ராத்திரி வீட்டில் புவா கிடைக்காது. ஃபோனில் அப்படி அழைத்தால் ரத்னா கேட்கவா போகிறாள், புவி?

என்ன எல்லாம் செல்லப் பெயர் வைக்கிறார்கள்... விலு புவி... விபு புலி... புலி வீட்டிலே பூஜையாம்...

‘என்ன உளறிக்கிட்டே வர்றீங்க... மறுபடி மோகினிப் பிசாசா?’ என்று ரத்னா கேட்டாள்.

‘என்னமோ ஞாபகம்... ஆபீஸ்லே பந்துலு சார் போன் பேசிட்டு இருக்கறபோது குறுக்கே போனேன். நீயும் பேசுன்னு கொடுத்திட்டார்... அப்புறம் வாங்கின மரியாதைக்காவது ரெண்டு வார்த்தை பேசணுமே.’

‘சரி சரி, தெலக்ஸ் புவனாகூட போன்லே பேசிட்டு வர்றீங்க... அம்புட்டுதானே... நீங்க ஒரு வார்த்தைகூட சொல்லாட்டாலும் துப்பறியும் சாம்பு மாதிரி இப்படி வழிசலா அசட்டுச் சிரிப்பு இருக்கே... இது சொல்லிடும்... ஆனா சாம்புவோட புத்திசாலித்தனத்துலே ஒரு சிமிட்டா உண்டான்னா சந்தேகம்தான்.’

நான் தேவன் என்ற எழுத்தாளரையும் அவருடைய மிடில் க்ளாஸ் ஹீரோ சாம்புவையும் சபித்தேன். கஸ்தூர்பா மாதர் சங்கத்தின் தலைவி, உபதலைவி, அங்கத்தினர்கள் எல்லோரையும் பத்திரிகைக் கதையாக வந்து கட்டிப் போட்டிருக்கிறார்கள் இவர்கள். படிக்க எடுத்தால் உலகமே மறக்கும்.

பாம்பே காஜாவும், கீரைவடையுமாக சாயந்திர டிபன். சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடும்போது, ‘வெள்ளிக்கிழமை உனக்கு வேறே ஏதாவது எங்கேஜ்மெண்ட் இருக்கா?’ என்று தோரணையாக ரத்னாவைக் கேட்டேன்.

‘எங்கேஜ்மெண்டா, ஏழு வருஷம் முந்தி ஒரு அசட்டை எனக்கு புருஷன்னு இச்சலகரஞ்சியிலே எங்க வீட்டுலே நிச்சயம் செஞ்சு, எங்கேஜ்மெண்ட் ஆச்சு... இனிமே இந்த ஜீவிதத்திலே எனக்கு வேறே எங்கேஜ்மெண்ட் கிடையாது.’

செண்டிமெண்ட் ஆன பதிவிரதையை இறுக அணைத்து கண் இமைகளில் மென்மையாக முத்தமிட்டேன்.

‘வெள்ளியா? நாம் போட் மெயில் பிடிச்சு கும்பகோணம் போறோமே’ என்று ஆர்வமாகச் சொன்னாள் ரத்னா. அது அடுத்த வெள்ளிக்கிழமை, அன்பே.

‘சரி இந்த வெள்ளி எங்கே போகணுமாம்? தெலெக்ஸ் தோழியோட அடுத்த படம் – ‘அபூர்வ சூளாமணி’ சினிமாவா, இல்லே, ‘என் புருஷன்’ டாக்கியா?’

‘எதுவும் இல்லே... தெலெக்ஸ் வீட்டு வரலட்சுமி நோன்பு பூஜைக்கு உன்னைக் கூப்பிட்டிருக்கா... கூடவே டவாலி சேவகன் மாதிரி நானும்

வருவேன்.’

ஒரு வழியாக சமாச்சாரம் சொல்லி முடித்தேன்.

‘நேர்லே வந்து கூப்பிட்டிருக்கலாமில்லே’ என்று முகத்தை உணர்ச்சி இல்லாதபடி வைத்துக்கொண்டு கேட்டேன். ‘தப்புதான்’ என்றேன் அடுத்து.

‘என்ன தப்பு? உங்க மாதிரி ஆபீஸ் போய் நாலு பேப்பர்லே கிறுக்கிட்டு வர்ற வேலையா, என்னை மாதிரி வீடு, மாதர் சங்கம்னு நினைச்சபடி பிசியா இல்லேன்னா ஓய்வா இருக்க முடியுமா? ஒரு சின்ன சீன் சினிமா எடுக்க எத்தனையோ மணி நேரம் ஆகுமாம்... பாவம் அவளும் சின்னப் பொண்ணுதானே... எல்லாத்தையும் சம்ப்ரதாயப்படி செய்யணும்னு நாம எதிர்பாக்கறது தப்பு இல்லையா?’

புவனா ஆதரவு பிரச்சாரமாக ரத்னா சொற்பொழிய, இன்பத்தேன் வந்து காது, மூக்கு என்று, வாய் தவிர மற்றாங்கே எங்கும் பாய்ந்தது எனக்கு. இதைத்தானே எதிர்பார்த்துக் காய் நகர்த்தினேன்?

வெள்ளிக்கிழமை சாயந்திரம் சீக்கிரம் ஆபீஸிலிருந்து வந்தேன். காப்பி குடித்துவிட்டு நானும் ரத்னாவும் புறப்பட்டோம். பார்க் ஸ்டேஷன் வரை ட்ராமில் போய், அங்கிருந்து எலக்ட்ரிக் ரயிலில் மாம்பலம் போய்ச் சேர்ந்தோம்.

ஸ்டேஷனில் இருந்து நாராயணசெட்டி தெருவுக்கு ஆட்டோ ரிக்ஷாவில் போக விருப்பப்பட்டாள் ரத்னா. மூன்று ரூபாய் வாடகை.

என்றைக்காவது ஒருநாள், போகட்டும், ரத்னா ஆசைப்படுகிறாள். நாங்கள் தெலக்ஸ் புவனாவின் ‘சுந்தரி’ மாளிகையில் நுழைந்தபோது மாலை ஆறு மணி. கூர்க்கா மரியாதையாக சல்யூட் வைத்து உள்ளே போக வழிகாட்டினான், ரத்னாவுக்கு. கூட வந்தவன் என்று எனக்கும் அனுமதி.

நான் உள்ளே நுழைந்ததும் பெரும் சத்தத்தோடு காம்பவுண்ட் இரும்புக் கதவுகள் சாத்திப் பூட்டப்பட்டதைக் கவனித்தபடி நடந்தேன்.

வாசலை ஒட்டி, காம்பவுண்ட் சுவருக்கு மேலெழும்பி முழுவதும் மறைத்தபடி பெரிய கூடாரம் ஒன்று, வைத்துக் கட்டி உயர்த்தப் பட்டிருந்தது. கூடாரத்தின் உள்ளே, ஜமுக்காளம் விரித்த தரையில் நின்றும், நாற்காலியில் இருந்துமாக ஒரு நட்சத்திரக் கூட்டமே இருந்ததை எந்த

பரபரப்பும் ஆச்சரியமும் இல்லாமல் மகாராணிபோல் கவனித்தபடி ரத்னா நடந்தாள்.

வரலட்சுமி விரதமும் நோன்பும் பெண்களுக்கானது, பெண்களுக்கு மட்டும் ஆனது என்று இத்தனை காலம் நினைத்திருந்தது பிழையாகிப் போக ஆண்கள் மயமாக இருந்தது அந்த இடம். எல்லோரும் அவர்கள் அவர்கள் வீட்டுப் பெண்களுக்குத் துணையாக வந்தவர்கள். வந்த இடத்தில் இன்னும் நாலு ஆம்பளைங்களை பார்த்து ஹலோ சொல்லாமல் போக முடியுமா?

நானும் ரத்னாவோடு நேரே பார்த்தபடி ராணுவ நடை நடக்க முற்பட்டேன். தோளில் யாரோ தட்டினார்கள். பின்னால் திரும்பிப் பார்க்க பந்துலு சார்.

தழையத் தழைய பட்டு வேஷ்டியை பஞ்ச கச்சமாகக் கட்டி, சட்டையில்லாத மேலுடம்பிலும் நெற்றியிலும் துவாதச நாமங்களுமாக ஆளே மாறி இருந்தார் அவர். காப்பி குடிக்கிறீரா என்று கேட்டார் ரகசியம் பேசும் குரலில். குடிச்சுக்கறேன் சார் என்றேன்.

தசாபதி வெற்றித் திரைப்படத்தில் வளைய வந்த இத்தனை பிரபலஸ்தர்கள் இங்கே கூடியிருக்க, இங்கேயும் பந்துலு சார்தான் பேச்சுத் துணை என்றால் ரொம்ப கொடூரமாக இருக்கும்.

நான் ஓரமாக சிவப்பழம் போல செக்கச் செவேலென்று நகர்ந்து வந்த, தசாபதி ஸ்கூல் வாத்தியார் வேஷத்தில் நடித்த சக்ரபாணி அருகே போய் வணக்கம் சொன்னேன்.

‘பார்த்தீங்களா, பிடிச்சிருக்கா?’

அவர் நிறைவாகச் சிரித்தபடி சப்ஜெக்டுக்கு வந்து விட்டார்.

‘சார், நீங்க பாடுவீங்களா?’, என்று சக்ரபாணி சாரை விசாரித்தேன். ‘ஓ, சுண்டல் கிடைச்சா இப்பவே கச்சேரி செய்யத் தயார்’ என்று அறிவித்தார் அவர். ‘நீங்க?’ என என்னைக் கேட்டார், மேலே தொடரும் முன்.

அப்போதுதான் நான் யார் என்று அவரிடம் சொல்லாதது நினைவு வர, குடும்ப, ஆபீஸ் பின்னணியைச் சுருக்கமாகச் சொன்னேன்.

‘தஞ்சாவூர் தமிழ் மராட்டியரா? பலே பாண்டியா. உம்மைத்தான் தேடிக்கிட்டிருக்கேன். எனக்கு உங்க பழக்க வழக்கம் எல்லாம் சொல்லிக் கொடுக்க முடியுமா? ஒரு படத்திலே மராட்டி பேசற தமிழனா வரேன்’ என்றார் சக்ரபாணி.

‘உங்களுக்கு ட்ரெயினிங் எல்லாம் அநாவசியம் சார். கொடுத்த பாத்திரமா மாற உங்களுக்கு ஒரு நிமிஷம்தான் ஆகும், எனக்குத் தெரியாதா?’ என்றேன்.

நிஜமான சந்தோஷம் நான் பகிர்ந்தது. தசாபதியில் தெலக்ஸ் புவனா தவிரவும் நிறைய பேருடைய அற்புதமான நடிப்பு உண்டுதான். இன்னும், திரைக்குப்பின் சவுண்ட் ரெகார்டிங், காமிரா வேலை, செட் போடுதல் என்று ஏகப்பட்ட பேர் திறமையாக வேலை பார்த்திருக்கிறார்கள்.

அதுவும் எம்விளம் செட்டியார், மெட்றாஸே காலி ஆன எவாக்வேஷன் நேரத்தில், சினிமா ஸ்டூடியோவை, மதறாஸில் இருந்து காரைக்குடிக்குப் பக்கம் செம்மண் பூமியான கல்லல் என்ற சிற்றூருக்கு மாற்றி வைத்து, தகரக் கூரை போர்த்தி அவசரமாக எழுந்த சிமிட்டிச் சுவர்களுக்குள், கஷ்டப்பட்டு எடுத்த படம் அது.

அந்தத் திறமைசாலிகள் எல்லாரும் இங்கே, இந்த நிமிஷத்தில்.

சக்ரபாணிக்கு அடுத்து ரெண்டு நாற்காலி காலியாக இருக்க, அதற்கு அடுத்ததில் மொட்டைத் தலையர் ஒருத்தர் தூங்குகிற மாதிரி கண்மூடி இருந்தார். பட்டையாக வீபுதி, பெரிய குங்குமப் பொட்டு. சாதா காடாத் துணி சட்டை, நாலு முழ வேட்டி. இவருக்கும் சினிமாவுக்கும் இருக்கும் தொடர்பைவிட எனக்கும் தமிழ்ப் படத்துக்கும் அதிகம் தொடர்பு… வெயிட்… இது தசாபதியின் முக்கியமான நட்சத்திரம் காளிங்க ரத்தினம் இல்லையோ.

எனக்குள் இருக்கும் ஏஆர்பி வார்டன் விழித்தெழுந்து அந்தப் பந்தலை ஒரு தடவை இடவலமாகச் சுற்றி வந்தார். ‘மிஸ்டர் ராமோஜி’, அவர்தான் அழைத்தார். ‘மிஸ்டர் ராமோஜி, உங்க முத்தியால் நாயக்கன் தெரு தங்கப்பன் முதலாளி, பிள்ளையார் கோவில் கட்டி பத்து இருபது பேரைக் கூப்பிட்டு பிரசாதம் கொடுத்தா, விருந்தாளி கட்டுப்பாடு சட்டத்தைக் காட்டி, தப்புன்னு சொல்வீங்க. இங்கே நூறு பேர், நோன்பு, விரதம்னு சொல்லி சாப்பாடு போடப் போறாங்க… சரி, பிரசாதம் கொடுக்கப் போறாங்க… இதைக் கண்டும் காணாமல் விட்டுடணுமா?’

அந்த மனக்குரலை உள்ளே அனுப்பித் தாழ்ப்பாள் போட்டேன். தப்போ சரியோ, யாருக்கும் இதனால் கெடுதல் இல்லை. நோன்பு, சந்தித்துப் பேச ஒரு சௌகரியமான சாக்குதான். எனில், இது விருந்தும் இல்லை. சர்பத் கூட தரவில்லை. பிரசாதம் மட்டும்தான் விநியோகம். நடக்கும் வருஷமும்,

விருந்தினர் கட்டுப்பாடு சட்டம் கண்டிப்பாக அமுலாக்கப்பட்ட 1942 இல்லை. கொஞ்சத்துக்குக் கொஞ்சம் தளர்த்தப்பட்ட 1945 இது.

சப்பைக்கட்டு கட்டியபடி நானும் கூட்டத்தில் கலந்தேன்.

நான் காளிக்கு அடுத்த நாற்காலியில் உட்கார்ந்து, ரத்னா எங்கே என்று பார்வையால் தேடினேன். இந்தப் பக்கம் தெலக்ஸ் புவனாவும் அந்தப் பக்கம் சி.டி.சந்திரகாந்தமும் கையை விரித்துக் காட்டிக் கொண்டிருக்க, ஏக காலத்தில் அவர்களுக்கு ரத்னா கைரேகை பார்த்துப் பலன் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அவளுக்கு கைரேகை பார்க்கத் தெரியும் என்று எனக்கே அப்போதுதான் தெரியும். இந்த சி.டி. சந்திரகாந்தம்தான் தசாபதியில் தெலக்ஸ்க்கு நிகரான பிரபலம் அடைந்தவள். மூன்று அழகிகள் ஒரே இடத்தில் இருந்து சிரிக்க, சண்டை ஏதும் அதுவரை வரவில்லை என்பதில் நிம்மதிதான் எனக்கு. மூன்றில்லை. நான்கு அழகிகள். இப்போது மேடையில் பாட ஆரம்பித்திருப்பது தசாபதியில் இனிமையாக இசைத்த பி.ஏ.அகிலாண்டநாயகிதான். தமிழில் ரஞ்சனி ராகத்தில் லட்சுமியை அழைக்கும் பாட்டு, ராகமாலிகையாக ஆனந்தபைரவிக்குள் பிரவேசித்துக்கொண்டிருந்தது.

நிமிர்ந்து என்னைப் பார்வையால் சுட்டி, பக்கத்தில் சந்திரகாந்தத்திடம் ஏதோ சொன்னாள் தெலக்ஸ். இப்போது மூன்று பேரும் என்னைப் பார்க்க சந்திரகாந்தம் மெச்சுகிற பார்வையோடு ரத்னாவை நோக்க, என் மனைவி கண்ணில் நிரம்பி வழிந்த பெருமிதம் எனக்குப் புரிந்தது. அவர்கள் என்னைப்பற்றி சிலாகித்து ஏதோ பேசிக்கொள்கிறார்கள். ஆச்சரியம்தான்.

நான் எழுந்து அந்தப் பக்கம் போக நாற்காலியைச் சற்றே தள்ள, பக்கத்தில் கண்மூடி உட்கார்ந்திருந்த காளிங்க ரத்தினம் கண் திறந்தார்.

‘நமஸ்காரம் சார்’ என்றேன். நமஸ்காரம் என்று அவரும் முணுமுணுத்தார். என்னை நிமிர்ந்து பார்த்த பார்வையில், ‘என்ன தசாபதியிலே நடிப்பு நல்லா இருந்ததா’ என்று கேள்வியை எத்தனையாவதோ முறையாக எதிர்பார்த்துக் கிட்டிய அலுப்பு தெரிந்தது.

நான் அவரிடம் சொன்னேன் – ‘இல்லை சார், தசாபதிபற்றி இல்லே. உங்களுக்கு பொய்க்கால்குதிரை ஆடத் தெரியுமாமே? நிஜம்தானா?’

அவர் முகம் மலர்ந்தது.

‘ஆமா யார் சொன்னது அது?’

ஏழு வருஷம் முந்திய பழைய சினிமா பத்திரிகையில் படித்த தகவல் உரிய நேரத்தில் நினைவு வந்ததில் சந்தோஷப்பட்டேன்.

‘சினிமா உலகம்’ அஞ்சு வருஷம் முந்தி தீபாவளி மலர்லே படிச்ச நினைவு.’

‘அட ஆமா, அவரு நல்ல தோஸ்த்... யாரு?’ என்னைக் கேட்டார். ‘பி.எஸ் செட்டியாரா?’ என்று பதிலுக்குக் கேட்டேன். அவர்தான் சினிமா உலகம் பத்திரிகை ஆசிரியர் என்றும் நினைவில் இருந்தது. காளிங்க ரத்னம் கொஞ்சம்போல் சந்தோஷமடைந்தார்.

‘தம்பி நீங்க சினிமாவிலே இருக்கப்பட்டவரா?’ அவர் இத்தனூண்டு புன்சிரிப்போடு வினவினார். சிடுமூஞ்சி இல்லை, நான் நினைத்திருந்த படி. சுமுகமானவரும் இல்லைதான். ஒரு வார்த்தை, ரெண்டு வார்த்தை பேசுகிற இவரா தசாபதியில் நிமிடத்துக்கு ஒரு தடவை சிரிக்க வைக்கிறார்? அதுவும் ப்ளடி ஃஃபூல் என்று அர்த்தம் புரியாமல் வாத்சல்யத்தோடு எல்லாரையும் கூப்பிட்டுக்கொண்டு.

நான் என் ஆபீஸ் பின்னணியும், வழக்கம்போல் இல்லாமல் கும்பகோணம் பூர்வீகமான வீட்டுப் பின்னணியும் சொல்லி, தஞ்சாவூர் மராட்டா சத்ரியன் என்றேன். கும்பகோணம் பெயர் கேட்டதும் அவர் முகம் முழுக்க மலர்ந்தது.

‘அதானே பார்த்தேன். நம்ம ஊர் பிள்ளை. விவரமா இருக்கீர். நானும் கும்மோணம் பக்கத்து கிராமம்தான்’ என்றார் காளி.

ஒரு பதினைந்து வயதுப் பையன் தட்டு நிறைய கலர் ஊற்றிய கிளாஸ் வைத்து எடுத்துவந்து என்னிடமும் காளிங்க ரத்தினத்திடமும் நீட்டினான்.

அவர் மோர் மட்டும்தான் சாப்பிடுவார் என்றேன். காளி என் தோளில் தட்டி, ‘அதுவும் தெரியுமா? எங்க வீட்டுலே பிறக்க வேண்டியவர் நீங்க தம்பி’ என்றார். அவரைப்பற்றிப் படித்தது, கேட்டது எல்லாம் நினைவில் வந்து சரியான நேரத்தில் உபயோகமாகிக் கொண்டிருக்கின்றன.

‘சார், பாய்ஸ் கம்பெனியிலே நடிப்பு சொல்லித்தர நீங்க பையன்களை அடிச்சு உதச்சு கண்டிப்பா இருப்பீங்களாமே? அதோ இருக்காங்களே... பாய் இல்லேதான்... அவங்களுக்கு எப்படி சொல்லிக் கொடுத்தீங்க?’

நான் அவர் மனைவியாகப் போகிற சி.டி. சந்திரகாந்தத்தை சுட்டிக் காட்ட, தன்னை அழைக்கிறதாக ரத்னா துள்ளி, புள்ளிமானாக நான் இருந்த இடத்துக்கு வந்து சேர ஓடி வர, எதிரே நாற்காலியில் மோதி நிலைகுலைந்து நின்றாள்.

அவள் மோதிக் கொண்டது கண் இரண்டும் மொச்சைக் கொட்டை போல் குண்டு குண்டாக நிலைகுத்தி நின்ற டி. டி. ராமசந்தர் மேல். சாட்சாத் தசாபதி சினிமாவின் பிரபலமான ஹீரோ. என்னில் முக்கால் உயரமும் பூஞ்சை உடம்பு வாகும் அவருக்குப் பொருந்தி வந்தன.

‘அந்தப் பொண்ணுக்கு சொல்லியே தரவேணாம். கற்பூர புத்தி’ என்றார் சுருக்கமாக, காளி சந்திரகாந்தத்தை நோக்கியபடி.

‘யுத்தம் வந்ததாலே ஒரே ஒரு நன்மை இப்போ கண்டிப்பா சினிமாங்கற பேர்லே கச்சேரி வச்சு நாற்பது பாட்டோடு இருபதாயிரம் அடிக்கு சினிமா எடுக்கமுடியாது. ஷார்ட் அண்ட் ஸ்வீட்டா பத்தாயிரம் அடி. மேலே சினிமா நீளமா இருந்தா இனி சென்சார் சர்ட்டிபிகேட் கிடைக்காது.’ சொன்னபடி டி.டி. ராமசந்தர் தன் குண்டுக் கண்களால் பார்த்தது என்னை இல்லை. ரத்னாவை.

‘சாரி சார், ஐ கேம் ரன்னிங் லைக் எ டைனி டாட்’ ரத்னா சொல்ல ராமசந்தர் சத்தமாகச் சிரித்தார்.

‘புவனா பிரண்ட்தானே... ஒரே காலேஜா...?’ என்று கேட்க இல்லை என்று சொன்னபோது ‘ஓ ஐ எம் சாரி’ என்று மன்னிப்பு கேட்டார். அதற்கு யாதொரு முகாந்திரமும் இல்லை என்று ரத்னா சொன்னது காதில் விழுந்தது.

காளிங்க ரத்னம், ‘உங்க சம்சாரமா?’ என்று ரத்னாவைச் சுட்டிக் காட்டி என்னைக் கேட்டார். ‘ஆமா’ என்றேன்.

‘பிள்ளைங்க?’ நான் பதில் சொல்ல தடுமாறும் கேள்வி இது. காளிங்க ரத்னம் கேட்டபோதும் அப்படித்தான்.

ரத்னா பின்னாலேயே சந்திரகாந்தமும் எழுந்து நாங்கள் இருக்கும் இடத்துக்கு வந்தானது. காளியும் காந்தமும் என்னிடமும் ரத்னாவிடமும் ஒரே நேரத்தில் சொன்னது, ‘அவசியம் திருக்கருகாவூர் போய் வாங்க. நல்ல திருத்தலம்.’

‘அடுத்த வாரம் அங்கேதான் போறோம் அக்கா’ என்று ரத்னா சொல்ல, காளி அவளையும் என்னையும் ஆசிர்வதித்தார்.

பூஜைக்கு வந்த புரோகிதர் எலக்ஷன் மீட்டிங்போல் பேச ஆரம்பித்தார் – ‘வரலட்சுமி தேவியை கும்பரூபமாக ஆவாஹனம் பண்ணியிருக்கு. இப்போ இவாளுக்கு லக்ஷ்மி அஷ்டோத்ரம் சொல்லி பூஜை பண்ண இருக்கு. அந்த ஸ்லோகம் தெரிஞ்சவா நம்ம மிஸ் பி.ஏ.அகிலாண்ட நாயகி ஸ்ரீமல்லி படத்துலே பாடின மாதிரி வாயைத் திறந்து ஸ்பஷ்டமா கூடவே சொல்லலாம். தெரியாதவா ஜேஜி ருக்மணி அதே ஸ்ரீமல்லி படத்துலே இவா பாட்டுக்கு வாயசைச்ச மாதிரி வாயை அசைத்து ஜாயின் பண்ணிக்கலாம்’ என்றபோது வீடு முழுக்க சிரிப்பு. நடிகை வீட்டு ஆஸ்தான புரோகிதரும் சினிமா முற்றும் தெரிந்த, விவரமானவரே.

‘பாக்யதா லக்ஷ்மி பாரம்மா, நம்ம மன, ஸௌபாக்ய லக்ஷ்மி பாரம்மா.’

பி.ஏ. அகிலாண்ட நாயகி கணீரென்று புரந்தரதாசர் க்ருதியைப் பாடத் தொடங்க, ரத்னா நானும் பாடலாமா என்று சைகையால் அவளைக் கேட்டாள். நிச்சயம் என்று பக்கத்தில் கூப்பிட்டு இருத்திக்கொள்ள இருவர் இசையாகப் பாட்டு தொடர்ந்தது.

அது முடிய அகிலாண்டம் ரத்னாவைக் கேட்டுக்கொள்ள, ரத்னா நல்ல மராட்டி உச்சரிப்போடு அபங்க் பாடினாள் – ‘மாஜெ மாஹெர் பண்டரி.’

‘பண்டரிபுரம் என் தாய்வீடு’ என்று அர்த்தம் சொல்லிப் பாடியதால் அகிலாண்ட நாயகி தொடங்கி மொத்த கூட்டமுமே அபங்கை ரசித்தது.

புரோகிதர் எல்லாரையும் அமைதியாக இருக்கச் சொல்லி சைகை பாஷையில் கேட்டுக்கொண்டார். ‘வாங்கோ, தெலக்ஸ் மகாலஷ்மி, பூஜை உங்க சார்பிலேதான் நடத்தறது’ என்று சொல்ல, பந்துலு மனைவி பன்னிபாய் அம்மாள் அவரிடம் காதில் ஏதோ சொன்னாள்.

‘அதுவும் சரிதான். கன்யாப்பொண்ணு. நோம்பு சரடை கட்டிக்கலாம். பூஜை பண்ண அவா சித்தி வரலாமே’ என்றார். மறுபடி காது கடிபடுதல். ‘ஓ ஆத்துலே இல்லையா’ என்கிறார் புரோகிதர் எட்டு ஊருக்குக் கேட்க.

பன்னிபாயம்மாள் அரைமணி நேரம் தரையில் உட்கார்ந்திருக்க முடியாது. கால் மரத்து கஷ்டப்படுவாள் என்றார் பந்துலு.

‘யார் வர்றது பூஜை பண்ண? பிரசாதத்தைப் பார்க்க பார்க்க பசியெடுக்குதே... சீக்கிரம் வாங்கோ.’ தெலக்ஸின் புதுப்படப் பாட்டை அவர் சந்தர்ப்பத்துக்கு ஏற்றதுபோல் மாற்றிப் பாடி அஷ்டோத்திரத்தைத் தொடர பெரும் சிரிப்பொலி.

‘தம்பி ஒரு உதவி செய்யணும்’ என்றார் காளிங்க ரத்தினம். சொல்லுங்க சார்.

‘திருக்கருகாவூர் நீங்க போகச் சொல்ல, இந்தக் காணிக்கையையும் கருக்காத்த நாயகி அம்மா உண்டியல்லே சேர்த்துடுங்க..’

சட்டைப் பையில் ஒரு பழைய பர்ஸில் இருந்து நூறு ரூபாய் இரண்டை எடுத்துக் கொடுத்தார். இரண்டாக மடித்தே யுகக் கணக்காக சட்டையில் இருந்திருக்கவேண்டும் அந்த நோட்டுகள்.

‘அவசியம் சார், போட்டுட்டு வந்து... வந்து எப்படி உங்ககிட்டே செஞ்சாச்சுன்னு சொல்றது?’

‘நீங்க புவிப் பொண்ணு கிட்டே சொல்லி விடுங்க... போதும்... அது எதையும் மறக்காது... அநேகமா தினம் ஏதாவது செட்டுலே சந்திச்சுக்கறோம்... உங்களுக்கு புவி எப்படி...?’ சொன்னேன்

‘ஓ! சரி, குடும்ப சிநேகிதமா? அது ரொம்ப ஜாக்கிரதையாதான் சிநேகிதம் பாத்துப்பாத்து பண்ணிக்கும்...’

அவர் பக்கத்தில் இருந்த சந்திரகாந்தத்தைப் பார்த்தார் – ‘பூஜை முடிஞ்சுடுத்துன்னு ஐயர் சொன்னாரா? பசிக்குது. சாப்பிட்டுட்டு வீட்டுக்கு நடக்கணும்...’

‘ஏன் சார், கார் எடுத்து வரலியா?’ நான் விசாரித்தேன்.

‘வாங்கவே இல்லே... எதுக்கு? ஷூட்டிங் கூட்டிப்போக டாக்சி அனுப்பிடறாங்க. வேறே எங்கேயும் பக்கத்துலேன்னா நடந்து போயிடறேன்... கொஞ்சம் தொலைவுன்னா பஸ், எலக்ட்ரிக் ட்ரெயின் இருக்கவே இருக்கு... காரைக்குடி, கல்லல்னு ஷூட்டிங்க் போக, செட்டியாரே ரயில்லே டிக்கெட் போட்டு கூட்டிப் போய்க் கொண்டாந்து விடறார்... ஆக, கார் அனாவசியம்தானே?’

அதே என்றேன் பூஜை மேடையைப் பார்த்தபடி.

தெலக்ஸ், ரத்னாவிடம் பேசி, அவளை கூட்டிக்கொண்டு பூஜை மேடைக்குப் போக ரத்னா பூஜை பண்ண உட்கார்ந்திருந்தாள்

அரை மணி நேரத்தில் பூஜை முடிந்து பிரசாதம். எல்லா ஐட்டமும் வரலட்சுமிக்கு படைக்கப்பட்டதால் முழுக்க முழுக்க பிரசாதம்தான்.

ரத்னாவும் தெலக்ஸூம் சந்திரகாந்தமும் பரிமாற, அடுத்த ஒரு மணி நேரம் போனதே தெரியவில்லை. எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து ராத்திரி பத்து மணிவரை பேசிக்கொண்டிருந்தோம்.

பேச்சு சுவாரசியத்தில் கொஞ்சம் குரல் உயர்த்தி டி.டி. ராமசந்தர் பேசினார்–

‘ஒரு ரெகுலர் படம் எடுத்தா, யுத்த ஆதரவு பிரசாரமா ஒண்ணும் எடுக்கணும்னு எழுதாத கண்டிஷன்... சேலம் சுந்தரம் சார்தான் கச்சிதமா ரெண்டும் பொருந்திவர ரங்கூன் ராணி எடுத்து ஹிட் கொடுத்தார்’

அருகே இருந்தவரும் சினிமா நடிகர்தான். நாரதராகவே ஐம்பது படத்தில் தம்புராவோடு வந்து பாடிவிட்டுக் கலகம் செய்து போயிருக்கிறார். பெயர்... நினைவு வந்தது. மகாலிங்கம். நாரதர் மாலி. நல்ல பாடகர். ‘என் புருஷன்’ படத்தில் ஒரு சேஞ்சுக்காக பேண்ட் ஷர்ட் போட்டு வரும் சமூகப்பட ஹீரோ அவர்தான் என்று படித்திருக்கிறேன். கோட், சூட் போட்ட நாரதரைப் பார்த்த மாதிரி இருந்தது என்று ‘என் புருஷன்’ பட விமர்சனம் ஒரு பத்திரிகையில் படித்ததும் நினைவு வந்தது. நாரதர் மாலி டி.டி. ராமசந்தரிடம் சொன்னார் –

எம்.வி.எம் செட்டியார் கல்லலுக்கு ஸ்டூடியோவை மாத்தி ‘என் புருஷன்’ எடுத்திருக்கார். எடுத்ததை எட்டு தடவை எடிட் பண்ணினார்... நீளம் பத்தாயிரம் அடிக்கு உள்ளே இருக்கணுமே... நல்லா வந்திருக்கு.’

சக்ரபாணி பக்கத்து நாற்காலிக்கு இடம் மாறி உட்கார்ந்து சம்பாஷணையில் கலந்துகொண்டார்.

‘வராம எப்படி போகும் மாலி? நீ சிண்டு முடிய நாராயணா நாராயணா சொல்லலியே? சும்மாகாச்சிக்கும் காலை வாரினேன் கண்டுக்காதே... நீ சொல்றது வாஸ்தவம்தான்... படம் எடுக்கறது பலவிதமா கஷ்டத்தோட. அதை ஓட்ட தியேட்டர் தேடறது அடுத்த கஷ்டம்... எவாகுவேஷன்னு மூணு வருஷம் முன்பு அடைச்சதுலே சினிமா தியேட்டர் எல்லாம் நஷ்டத்துலே ஓடிச்சு. இன்னும் முழுக்க மீண்டு வரல்லே... அந்த நேரத்திலே நான் சம்பளத்தைக் குறைச்சுக்கிட்டேன். வேறே வழி? கொஞ்சமாவது லாபம் வராம எப்படி ப்ரொட்யூசர் படம் எடுப்பார்?

ஹாலிவுட்லே எடுத்து வர்ற படத்தைத்தான் கம்மி ரேட்டுலே எடுத்து ரிலீஸ் பண்ணி அக்கடான்னு இருக்கணும் இனிமேலே' என்று என்னையும் பார்த்துச் சொன்னார் சக்ரபாணி.

ராமச்சந்தர் படபடப்பாகப் பேசினார் – 'ஜப்பான் ஹிரோஷிமாவிலேயும் நாகசாகியிலேயும் அணுகுண்டு போட்டு லட்சக்கணக்கான அப்பாவி ஜனங்களை அமெரிக்கா கொன்னு குவிச்ச அப்புறம் ஹாலிவுட்னாலே கோபம் வருது. ஜப்பான்காரங்க யுத்தத்திலே ரொம்ப அநீதியா நடந்துக்கிட்டாங்கதான். அதுக்காக இப்படி பூச்சி அடிக்கற மாதிரி ஓர் இனத்தையே அழிக்கற நாட்டு சினிமா எதுக்கு? அவங்க கலையும் கலாசாரமும்தான் எதுக்கு... சீன்னு வர்றது அண்ணே.'

நாரதர் பேசவேண்டிய தருணம் என்று உணர்ந்து மறுபடி தொடங்கினார் – 'சினிமா எடுக்கறது கஷ்டம், ஓட்டறது பிரச்னை... அதுகூட பரவாயில்லே... ஓடற படத்தை பார்த்துட்டு எடுத்தேன் கவிழ்த்தேன்னு பத்திரிகை விமர்சனம் பண்றாங்களே... என்ன சொல்ல... ஒரு கச்சேரி ரேடியோவிலே கேட்டுட்டு நல்லா இல்லாட்டாலும் 'ஒரு பாட்டு அற்புதமாக அமிர்தவர்ஷிணியிலே வந்தது... தோடியை ஒரு கை பார்த்தார், இவரிடம் உள்ள அதிநாஸுக்குடன் சாஹித்யத்தையும் சற்றுத் தெளிவாக அடுத்த கச்சேரியிலே வழங்குவார் என்று எதிர்பார்க்கறோம்.' இப்படி பிரியத்தோட எழுதறவங்க, இத்தனை கலைஞர்களும் தொழிலாளர்களும் உயிரைக் கொடுத்து உழைச்சு சினிமா எடுத்து வெளியிட்டா பத்திரிகையிலே எழுதறது எப்படி? 'இந்தப் படத்துலே நல்லா நடிச்சது உரல், உலக்கை, விசிறி, பனைமரம்.' நகைச்சுவையாம். இவங்க எழுதற கதையைப்பற்றி, இந்தக் கதையில் சிறப்பானது கடைசியில் வரும் முற்றுப்புள்ளி ஃபுல்ஸ்டாப்–ன்னு நாம் சொன்னா எப்படி இருக்கும்?'

வீட்டுக்குப் போக டாக்ஸி எடுத்தேன். பத்து ரூபாய் ஆயிற்று. என் அரைநாள் சம்பளம். அதற்குப் பார்த்தால் ட்ராமில், எலக்ட்ரிக் ரயிலில் போக சிரமம். அதைவிட பெரிசு, ராத்திரி பத்து மணிக்கு நகைநட்டு போட்ட லட்சணமான பெண்ணை ஆளரவம் ஓய்ந்த தெருவில் கூட்டிப் போவதில் இருக்கும் கஷ்டம்... யுத்தகால ஜப்பான் குண்டுவீச்சு பயத்தைவிட அதிகமும் அபாய சாத்தியமுமானது இது.

அடுத்து வந்த சனிக்கிழமை ஆபீசிலோ வீட்டிலோ விசேஷம் ஒன்றும் இல்லை. விரைவாக வந்த ஒரு ஞாயிறு புதுச் செய்தியோடு பிறந்து

வந்தது. செப்டெம்பர் ரெண்டாந்தேதி ஆன அன்று இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது.

எல்லோரும் ஓய்வு எடுக்கும் அமைதியான ஞாயிறான அன்று மனித குலத்தையே சிதைத்து சின்னாபின்னமாக்கிய, ஆறு வருஷம் நீண்ட ஒரு மகாயுத்தம் முடிவுக்கு வந்து, பூமி இனிச் சமாதானமாகச் சுவடு வைத்து முன்னால் போக வழிவகை செய்யப்பட்டது.

ஆகஸ்டில் கொடூரமான ஹிரோஷிமா, நாகசாகி அணுகுண்டு தாக்குதலுக்கு அப்புறம் போரே வேண்டாம் என்று பிரார்த்தித்தவர்கள் எண்ணிக்கை பெருகியது. இதில் தேசம், பாஷை, மதம் என்று வேறுபாடு இல்லை.

ஞாயிற்றுக்கிழமை வீதி சுற்றி வரும் பஜனையில் புது ஐட்டமாக ‘ஆடுவோமே பள்ளு பாடுவோமே’ என்று பாரதியார் பாட்டை விலாசினி டைப்பிஸ்ட் அடி எடுத்துத் தர ரத்னா இரைந்து பாடினாள்.

யுத்தம் ஓய்ந்தாலும் சர்க்கார் அதே பிரிட்டீஷ் சர்க்கார்தான். பாரதி பாட்டு தடைசெய்யப்பட்டது. சர்க்கார் உத்யோகஸ்தனான நான் ஒதுங்கினேன்.

வெள்ளி ராத்திரி எட்டரைக்கு எழும்பூரில் போட்மெயில் ஏற ஆட்டோ ரிக்ஷாவில் போனோம். கேளப்பனின் நண்பர் மாதவன் அவர் கூப்பிட்டனுப்ப வந்திருந்தார். கொச்சி அருகே லந்தன் பத்தேரி தீவுவாசியாம்.

‘அங்கே எப்பவும் தண்ணிக்கு நடுவே இருந்துட்டு, இங்கே கோடையிலே தண்ணீர் இல்லாம, செப்டெம்பர்லே ஒரே கொட்டாக மழை கொட்டித் தீர்க்க பார்த்துக்கிட்டிருக்கேன்’ என்றார். அவர் சொல்லும்போதே சட்டச்சட சட்டச்சட என்று இடி இடித்து, மழை பொழிய ஆரம்பித்தது.

ராத்திரி எட்டரைக்குத்தானே போட்மெயில்? சாப்பிட்டே போயிடலாம் என்று ரவா உப்புமா செய்ய முற்பட்ட ரத்னாவை வேண்டாம் என்று தடுத்தேன்.

எக்மோர் ரயில்வே ஸ்டேஷன் விஜிடேரியன் போஜனசாலை என்ற கடமுட பெயரில் அங்கே நடக்கும் சாப்பாட்டுக் கடையில் டிபன் சாப்பிட்டதுபற்றி ஆபீஸில் யாராவது பேசிப்பேசி, போயே ஆக வேண்டிய புண்ணியத் திருத்தலங்களில் ஒன்றாக ஆகிவிட்டது அந்த போஜனசாலை. ‘ஸ்டேஷன்லே சாப்பிட்டுட்டுப் போகலாம்’ என்றேன் ரத்னாவிடம்.

‘மெனுகார்டை படித்து முடிக்கவே பத்து நிமிஷம் ஆகுதாம்.’

‘அவ்வளவு பொடி எழுத்திலேயா அடிச்சிருக்காங்க?’ கேட்டபடி இடுப்பில் செருகி இருந்த சுருக்குப் பைக்குள் வைத்த மட்டையிலிருந்து ஒரு சிட்டிகை பொடி எடுத்து முகர்ந்தாள் அவள். அதிர்ஷ்டம் செய்த மட்டை.

பரபரப்பு குறைவான ரயில்வே ஸ்டேஷன். எவாகுவேஷனில் செங்கல்பட்டுக்கும், ஏன் திருச்சி, தஞ்சாவூருக்குமெல்லாம் குடி மாறியவர்கள் திரும்பி வந்திருந்தாலும், ரயில் பயணத்தைக் குறைத்துக் கொள்வீர் என்று சர்க்கார் விளம்பரம் செய்து செய்து, ஊருக்குப் போகாத ஜனத்தொகை அதிகமானது. போஜனசாலையிலும் சுமாரான கூட்டம்தான்.

உயரமும், அகலமும் கூடிய பெரிய மண்டபம்போல, பிரம்மாண்டமாகத் தெரிந்த இடம் அது. பக்கிங்ஹாம் அரண்மனையில் வளைய வரும் சிப்பந்திகள்போல் மிடுக்கான யூனிபார்ம் அணிந்த சர்வர்கள் தேவையில்லாத பரபரப்பை உண்டாக்கும் வண்ணம் குறுக்கும் நெடுக்கும் ஏதோ அவசரமாகப் போய்வந்துகொண்டிருந்தார்கள்.

‘மெனு கார்ட் ப்ளீஸ்.’

நான் சௌகரியமான இரட்டை இருக்கையில் ரத்னாவோடு இருந்தபடி மிடுக்காகக் கேட்டேன்.

‘ரவா உப்புமா இருக்கு, சார்’ என்று நாளை உலகம் முடியப் போகிறது என்று அறிவிக்கும் தேவதூதனாக அறிவித்தார் சர்வர். ரத்னா முகத்தில் தெரிந்த சிரிப்புக்கு எனக்குப் பொருள் தெரியும். விடாது துரத்தும் ரவா உப்புமாவை வீட்டிலேயே சுடச்சுட சாப்பிட்டு வந்திருக்கலாம் அல்லவா?

போகட்டும், இங்கே ரயில்வே ரெஸ்டாரண்டில் ஸ்வீட் நன்றாக இருக்கும் என்றும் எனக்குக் காதில் விழுந்தது. என்ன ஸ்வீட் இருக்கு என்று அடுத்துக் கேட்க, எவாகுவேஷனுக்கு முன்னால் அதுவும் ரொம்ப முன்னால் போட்டு விளம்பரத்துக்கு கண்ணாடி ஷெல்பில் வைத்த இனிப்புகளைக் காட்டினார்.

‘உப்புமா கூட தொட்டுக்க ஏதும் இல்லைதானே?’

‘இல்லாமல் என்ன, சட்னி, சாம்பார், பொரிச்ச அப்பளம்.’

அப்பளம் இங்கே என்ன செய்கிறது என்று புரியாமல் குழம்ப, ‘அது ராத்திரி சாதம் வடித்து, சாம்பார், ரசம், தயிரோடு சாப்பாடு போட்ட பழைய காலத்து மெயின் ஐட்டம். இப்போது உப்புமாவுக்கு உறவாகி இருக்கிறது’ என்றார்.

கேட்டபடி ஐந்து நிமிடத்தில்கொண்டுவந்தும் வைத்தார். சுமார் ரகம்.

ரயிலில் கூட்டம் வந்து சேர ஆரம்பித்திருக்கும் மூன்றாம் வகுப்புப் பெட்டி ஒன்றின் முன் ரத்னா நின்றாள்.

‘இங்கே கொஞ்சம் இடம் இருக்குங்க, ஏறிக்கலாம்.’

நான் வேண்டாம் என்று தலையசைத்து பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடையை எட்டிப் போட்டேன்.

இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்ட்கள் இரண்டு சுமார் சுத்தமும், ஒன்றிரண்டு பேர் மாத்திரம் உட்கார்ந்திருக்க மங்கிய பல்ப் வெளிச்சமுமாக அடுத்து நின்றன.

போட்மெயில் வாங்க என்று ஒரு தடவை விசிலடிக்க, ரத்னா ‘ஏறுங்க. வண்டி கிளம்பப் போகுது’ என்று அந்த விசிலை அவசரமாக மொழிபெயர்த்தாள்.

‘புறப்பட இன்னும் பத்து நிமிஷம் இருக்கு’ என்று அவளை தோளில் தட்டி நடந்தபடி முன்னால் போகச் சொன்னேன்.

‘எங்கே இன்னும் போக, தாம்பரமே வந்துடும் நடந்து நடந்து...’ என்றபடி அவள் முதல் வகுப்பு கம்பார்ட்மெண்ட் பக்கம் நின்று, ‘பர்ஸ்ட் க்ளாஸ்தான் இனிமேல் இருக்கு, எங்கே போறது இப்போ’ என்று குற்றம் சாட்டினாள்.

‘அங்கேயே போகலாம் ஏறிக்க’ என்றபடி சட்டைப்பையில் இருந்து இரண்டு முதல் வகுப்பு டிக்கெட்களை எடுத்தேன். நேற்றே பக்கத்து வீட்டு ஸ்டேஷன் மாஸ்டர் ரிசர்வ் செய்து கொடுத்திருந்தார். ரத்னாவுக்கு சர்ப்ரைஸ் ஆக இருக்கட்டும் என்று சொல்லாமல் வைத்திருந்தது முடிவு பெறும் நிமிடம் இது.

‘கம்பார்ட்மெண்ட் ஜன்னல் பக்கம் ஒட்டியிருக்கற பிரயாணிகள் லிஸ்டைப் படிம்மா’ என்றேன்.

‘பத்மநாப ராவ் ராமோஜி ராவ், ரத்னா ராமோஜி ராவ் கூப்பே ஏ.’

அவள் குரல் கிரீச்சிட்டது ஆச்சரியத்தாலும் மட்டற்ற மகிழ்ச்சிப் பெருக்காலும் என்பதை ரசித்தேன். என் கையை இறுகப்பற்றிக் கொண்டாள் ரத்னா. சின்ன சின்ன சந்தோஷங்கள் இவளை எனக்கு இன்னும் நெருக்கமாக்குகின்றன.

உள்ளே உட்கார்ந்ததும் மெத்தை தைத்த இருக்கையில் படுத்துப் பார்த்தாள். ‘என்னங்க, படுக்க இடம் சரியா இல்லையே.’

நான் அவளை எழுந்து நிற்கச் சொல்லிவிட்டு, பின்னால் தாழ்ப்பாள் போட்டு மாட்டி இருந்த மெத்தைப் படுக்கையை மெல்ல இறக்கினேன். ஓஓஓ என்று குழந்தைபோல் குதூகலித்து, சந்தோஷப்பட்டு, ஒரு நிமிடம் படுத்து எழுந்து, உயரத்தில் உட்கார்ந்து சிரித்தாள்.

ரயில் கிளம்பினதும் இந்த மெத்தையை இறக்கலாம் என்று அதை திரும்பப் பொருத்தி வைத்தேன்.

‘நம்ம ரெண்டு பேருக்கு மட்டுமா இந்த இடம்? கூப்பேன்னு கதவுக்கு உள்ளே கதவா வேறே போட்டு வச்சிருக்கு. பிரமாதம்’ என்று பாராட்டினாள்.

‘எத்தனை பேர் இங்கே இருக்கலாம்?’ விடாமல் கேட்டாள்.

‘இப்போதைக்கு நாம் ரெண்டு பேர் மட்டும்தான் என்று கண்ணைச் சிமிட்டினேன். வேறே யாரும் வராம இருக்கட்டும். வந்தா இன்னும் ரெண்டு பேர் இருக்கலாம்’, என்றேன்.

‘நாலு பேர், ரெண்டு படுக்கையா?’

‘சே சே அப்படி இல்லை... மேலே சீட் இருக்கே ரெண்டு பக்கமும், அது ரெண்டு படுக்கையாக கணக்கு...’

நான் மேலே போக ஏறவேண்டிய சின்ன ஏணியைக் காட்ட அவள் உற்சாகம் எல்லை கடந்தது. அந்த ஏணியில் ஏறி மேலே படுத்து என்னை பார்த்து பதிலுக்குக் கண்ணடித்தாள். போட்மெயில் புறப்பட்டது.

நான் கூபேயின் கதவை இழுத்து அடைத்துவிட்டு ரத்னா பக்கத்தில் உட்கார்ந்தேன். ‘அதுக்குள்ளே என்ன அவசரம், ரயில் எக்மோர் ஸ்டேஷனைவிட்டு வெளியே கூட போயிருக்காது’ என்று ஆட்சேபம் தெரிவித்து விலகி உட்கார்ந்தாள் ரத்னா.

‘டிக்கெட் செக் பண்ண வருவாங்களே...’

‘பர்ஸ்ட் க்ளாஸ் வேறே... செக் பண்ணாம போயிடுமா என்ன?’

அதெல்லாம் வரும்போது வரட்டும் என்று படுக்கையை மலர்த்திப் போட்டேன். தண்ணீர் கூஜாவை பிரப்பங்கூடையில் தேடினேன். காணோம்.

‘எடுத்து வைக்கவில்லையா?’ ரத்னாவைக் கேட்டேன்.

‘நீங்ககொண்டு வர்ரதா சொன்னீங்களே ஆட்டோ ரிக்ஷாவிலே ஏறும்போது?’

யாரிடமோ கொடுத்தேன் கையிலிருந்த கூஜாவை ஆட்டோ ஏறும்போது. ஆமா, லக்கேஜை இருக்கைக்கு பின்னால் வைத்துவிட்டு வாங்கத் திட்டம். வாங்க மறந்து வண்டி போய்விட்டது. யாரிடம்? விலாசினிதான்.

ரத்னாவுக்கு பிரியாவிடை மூன்று நாட்களுக்குத் தர அவளோடு அன்னியோன்யமாகப் பேசிக்கொண்டிருந்த நேரம் கூஜாவைக் கேட்க, கையில் திருப்பித் தர இரு தரப்பிலும் மறந்து விட்டிருக்கிறது.

‘கூஜா பத்திரமாகத்தானிருக்கும்’ என்றேன் ரத்னாவிடம்.

‘என்ன பிரயோஜனம்? தண்ணீர் தாகம் எடுத்தால் என்ன பண்ண?’ ரத்னா கேட்க, ‘நாம் பர்ஸ்ட் கிளாஸில் இருக்கறதாலே கேட்டா, உடனே விழுந்தடித்துப்போய் தண்ணிகொண்டு வருவாங்க, வேணும்னா பார்’ என்று எழுந்தேன்.

வண்டி நின்றிருந்தது. மாம்பலம். கூப்பே கதவு தட்டப்பட்டது. திறந்தேன்.

‘வாட் எ ப்ளஸண்ட் சர்ப்ரைஸ் ராமோஜி சார்’, தெலக்ஸ் புவனா கூப்பே உள்ளே நுழைந்தாள்.

எல்லா தேவதைகளும், டிக்காக உடுத்திய அஸ்து தேவதைகள், சுடக்கு தேவதைகள் உட்பட, கட்டாயமான மெஜந்தா வண்ண உடுப்பணிந்து மிதந்துகொண்டிருந்ததாகவும், சும்மா இருக்காமல் ரோஜாப்பூக்களை வழியெங்கும் உதிர்த்துக்கொண்டிருந்ததாகவும் கற்பனை செய்ய இதமாக இருந்தது.

‘ரத்னாக்கா’ என்று கட்டிப்பிடித்தபடி இருக்கையில் இருவராக வீற்றிருக்க நான் எதிர் சீட்டுக்கு நகர்ந்தேன். பெட்டியை உள்ளே வைத்துவிட்டு தெலக்ஸ் கூடவந்த அவளுடைய ஊழியர்களின் சின்னக் கூட்டம் புறப்பட்டுப் போக ரயில் நகர்ந்தது.

‘ரத்னாக்கா எங்கே ஜோடியா ரெண்டு பேரும் கூப்பேயிலே? செகண்ட் ஹனிமூனா? தேன் நிலவு நேரத்திலே பூஜை வேளை கரடி மாதிரி நான் வந்துட்டேனா?’

புவனா கேட்க, இல்லவே இல்லை என்று மறுத்து, தெலக்ஸோடு கை கோர்த்துக்கொண்டு பிரியம் காட்டினாள் ரத்னா. பெண்ணாகப் பிறக்கக் கொடுத்து வைக்கவேண்டும் என்று தோன்றிய அபூர்வமான நிமிடங்களில் சில இவை.

'எங்கே கிளம்பிட்டீங்க புவி?' என்று கேட்டாள் ரத்னா. புவி என்று புவனா சொல்லியும் அழைக்க எனக்குத்தான் வாய்க்கவில்லை. ரத்னா கூப்பிடட்டும்.

'நானா, திடீர்னு போட்மெயில்லே போகணும்னு ஆசையா இருந்துச்சு..'

'இதானே வேணாங்கறது..' ரத்னா அவள் முதுகில் ஓங்கித் தட்டினாள். எப்படி இந்தப் பெண்களால் இப்படி அந்நியோன்யமாக இழைய முடிகிறது.

'ராமேஸ்வரம் போறாங்களா இருக்கும்' என்றேன் நான். ஏதாவது பேசியே ஆகவேண்டும் என்று பெண்கள் சாம்ராஜ்யத்தில் குரல் ஒலிக்க முயன்றேன்.

'காசி, ராமேஸ்வரம் போகிற வயசா இது?' ரத்னா தெலக்ஸின் தாடையை கையில் ஏந்தி வெளிச்சத்தில் காட்ட, ஆட்டுக்குட்டிபோல தேமேன்னு இருந்தாள் அந்த அழகி. பாராட்டை வாய்க்குள் சொல்லிக்கொண்டேன்.

'ஷூட்டிங்தான், வேறே என்ன'

தெலக்ஸ் தலையைச் சாய்த்தபடி சிரித்தாள். 'எம்.வி.எம். செட்டியார் சார் அடுத்த படம். காரைக்குடி பக்கம் கல்லல்னு ஓர் ஊர். பக்கத்திலே செம்மண் பிரதேசத்துலே அவசர அவசரமா ஸ்டூடியோ டெவலப் பண்ணி அங்கேதான் ஷூட்டிங் எல்லாம்... படிச்சிருப்பீங்களே பத்திரிகையிலே.'

இது என்னைக் கேட்டது. பின்னே இல்லையா? பாராயணமே பண்ணி இருக்கிறேன்.

'நாங்க கும்பகோணம் போறோம்' என்றேன் பெருமையோடு.

'அதான் கேட்டேன், அடுத்த தேன் நிலவான்னு... ரத்னா அக்கா நீங்க ரெண்டு பேரும் அங்கேதான் முதன்முதலா சந்திச்சீங்கன்னு சொல்லியிருக்கா. டீ ஆபீசர் நீங்கதானே?'

ரத்னா முதலிரவில் பொடி டப்பி தேடியது தவிர எல்லாம் சொல்லியிருக்கிறாள் தெலக்ஸுக்கு என்று புரிந்தது. எப்போது சொன்னாள்?

ரயில் நின்றது. கம்பார்ட்மெண்ட் வாசலுக்கு நடந்துபோய்ப் பார்த்தேன். செங்கல்பட்டு சந்திப்பு.

‘உங்க ஃபேமிலி ஹைதராபாத்லே இருக்காங்களா?’ என்று தயக்கத்தோடு கேட்டேன். தெலக்ஸ் தப்பாக நினைக்க மாட்டாள் தான். உங்களுக்கு எதுக்கு அந்தத் தகவல் எல்லாம் என்று வசமாக சிக்க வைக்க, வீட்டு சுகவாச ஞாயிற்றுக்கிழமை வரும். அப்போது ரத்னா கண்டித்தால் என்ன செய்வது?

நல்ல வேளை ரத்னாவும் சேர்ந்துகொண்டாள் – ‘நானே கேட்கணும்னு இருந்தேன். உங்க டாடி, டாக்டர் மீசை நாயருக்கு ப்ரண்டுன்னு தெரியும்… இவர் காலை உடச்சுக்கிட்டு கிடந்தபோது கூட்டி வந்தோமே… உங்க பேமிலியும் இங்கேதான் இருக்கறதா நினைச்சேன்… பந்துலம்மா மாமிதான் இல்லேன்னு சொன்னாங்க’

‘கொய்ட் ரைட். பேமிலி ராஜமுந்திரியிலே இருக்காங்க. அம்மா கிடையாது. அப்பா, ரெண்டு தம்பிங்க, ஒரு தங்கச்சி இதான் குடும்பம்’ என்றாள் தெலக்ஸ்.

‘மாசத்துக்கு ஒரு தடவை போய்ட்டு வருவீங்களா இருக்கும்.’

‘நோ, வருஷத்துக்கு ஒரு தடவை. போய் முசாபரி பங்களாவிலே தங்கி தகவல் அனுப்புவேன். அப்பாவோ ரெண்டு தம்பிகளும் சேர்ந்தோ பார்க்க வருவாங்க. ஒரே ஒருதடவை தங்கச்சி வந்திருந்தா அவங்களோட. கொடுக்க வாங்கிப் போயிருந்த எல்லாத்தையும் வாங்கிக்கிட்டு, முசாபரி பங்களா சமையல்காரன் போட்ட டீயை குடிச்சுட்டு, உடம்பை பாத்துக்கோ, சீக்கிரம் இந்தப் பக்கமா வரப் பாரு என்று சொல்லிவிட்டுப் போவாங்க.’

தெலக்ஸ் கண் நிறைந்தது. ரத்னாவின் தோளில் சாய்ந்து அடக்க முடியாமல் அழத் தொடங்கினாள் அவள். ரத்னா ஆதரவாக அவள் கூந்தலைத் தடவிக்கொண்டிருந்தாள். இந்தப் பெண்கள் எப்படி நொடியில் அந்யோன்மாக சிநேகம் பகிர்ந்துகொள்கிறார்கள்.

கூப்பே கதவில் மெல்லத் தட்டும் ஒலி. புவனா அவசரமாகக் கண்ணைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார, டிக்கெட் பரிசோதகர் பெரிய நமஸ்காரமாக கரங்கள் குவித்து, தெலக்ஸ் புவனாவை வணங்கியபடி உள்ளே வந்தார்.

நான் டிக்கெட்களை எடுத்து நீட்ட, வேண்டாம் என்று ஒதுக்கி, என் பக்கத்தில் உட்கார்ந்து தெலக்ஸ் புவனாவைக் கண்குளிரக் கண்ட பாவத்தில்

நெக்குருகி இருந்தார் அவர். தசாபதியிலே நீங்க என்று ஆரம்பிப்பார் என்று தோன்றியது.

‘தசாபதியிலே நீங்க அருமையா ஆக்ட் கொடுத்திருந்தீங்க மேடம். வீட்டுலே சம்சாரத்துக்கும் உங்களை ரொம்ப பிடிச்சுருக்கு. என் மாமியார், எழுபது வயசு, பிடிவாதம் பிடிச்சு, ஓடியன்லே படம் ஆடுதாமே, போகணும்னு அது நச்சரிச்சுதுன்னு கூட்டிப் போனோம். ஒவ்வொரு சீனுக்கும் ஓன்னு சிரிச்சு... எங்களுக்கு பயமாப் போயிடுச்சு... ஏது சினிமா பார்த்துக்கிட்டே வைகுந்த பதவி வகிக்கப் போயிடுவாங்களோன்னு... குப்குப்குப்னு ரயில் பத்தி வியாசம் எழுதுவாரே ராமசந்தர்... ரயில்வேகாரன்கிற முறையிலே ரொம்ப ரசிச்சேன் நானும். பெறகு ‘க்ராஸ் த பிரிட்ஜ் வென் யூ கம் டு இட்’ அப்படின்னு சிரிச்சுக்கிட்டே எழுதி அனுப்புவீங்களே.’

‘அதை படத்திலே காட்டலீங்களே’ என்று சிரித்தாள் புவனா. இவர், படத்தில் வந்ததைவிட அதிகம் காமெடி பண்ணுகிறார் என்று தோன்றியது. அதுவும், தான் காசு வாங்காமலேயே காமெடியன் ஆனதை அறியாமல்.

‘வராட்டா என்ன, வந்திருந்தா நிச்சயம் அந்த சீன்லேயும் எல்லோரை யும் கவர்ந்து கட்டிப் போட்டிருப்பீங்க’ என்று சமத்காரமாகச் சொன்னார் அவர்.

‘பாபு மோஷாய்’ அடுத்த கூப்பேயில் இருந்து அழைத்த யாரோ அடுத்த வினாடி எங்கள் கூப்பே வாசலுக்கே வந்துவிட்டார்கள். வங்காளிகள் என்று மூலக்கச்ச வேட்டி சொன்னது.

‘டிடிஆர் மோஷய், எப்போ எங்க டிக்கெட் பாத்து முடிப்பீங்க? பீ பாண்ட் டு ஸ்லீப்.’ மனசே இல்லாமல் டிக்கெட் பரிசோதகர் அடுத்த கூப்பேக்குப் போனார்.

போகும்போது தன் கையில் வைத்திருந்த டயரியில் தெலெக்ஸ் புவனாவின் ஆட்டோகிராப் வாங்கிப்போகவும் அவர் மறக்கவில்லை.

‘வங்காளிகள் ரொம்ப அறிவு உள்ளவங்க... இங்க்லீஷ் நல்லா, தமிழர் மாதிரியே எழுதுவாங்க. உச்சரிக்கத்தான் சிரமப்படுவாங்க’ என்றாள் புவனா.

ராத்திரி பத்து மணிக்கு சினிமா தவிர பேச அவளிடம் நிறைய உண்டு என்று அறிய சந்தோஷமாக இருந்தது. ஒரு நிமிடம் மௌனம் அங்கே நிலவியது.

‘கோஷும் வங்காளிதான். என் ஹஸ்பெண்ட்’ என்றாள் புவனா வெளியே இருட்டை வெறித்து. ஹஸ்பெண்டா? இவளுக்கு கல்யாணம் ஆகி விட்டதா?

‘ஆச்சரியப்படறீங்களா ரத்னாக்கா?’ கேட்டபடி அவள்கொண்டு வந்திருந்த பிரப்பங்கூடையிலிருந்து தண்ணீர் கூஜாவை எடுத்தாள். நான் சுபாவமாக அவள் கையிலிருந்து கூஜாவை வாங்கித் திறந்து டம்ளரை உள்ளே இருந்து எடுத்தேன். ஏலம், சுக்கு வாசனையடிக்கும் குளிர்ந்த நீர் அது.

வண்டி நின்றது. ‘அதற்குள் விழுப்புரம் வந்தாச்சா?’ புவனா கேட்டாள்.

‘அதெப்படி, விழுப்புரம் வர நடுராத்திரி ஆயிடுமே’ என்றாள் ரத்னா. நான் வாசலுக்குப்போய் வெளிக்கதவைத் திறந்து பார்த்துவிட்டு வந்து ‘திண்டிவனம்’ என்றேன்.

‘இப்போதான் வண்டி வெகுநேரம் இங்கே நிக்கறதை பார்க்கறேன்’ என்றாள் புவனா.

‘சார், வெளிக்கதவை தாழ்ப்பாள் போட்டே எப்பவும் வச்சுக்குங்க. ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும் பிரயாண நேரத்திலே. தமிழ் பேசற பூமிதான். வடக்கே சம்பல் பள்ளத்தாக்கு மாதிரி கொள்ளைக்காரன் வர்ற இடம் இல்லேதான். ஆனாலும் நம்ம ஆளுங்களே தமிழ்லே பேசிக்கிட்டு கொள்ளை அடிக்க வரலாம். ரயில்லே வருவாங்கன்னு சொல்லலே... பொதுவா மேடம்...’

அவர் திரும்ப தெலக்ஸ் புவனாவிடம் பேச எங்கே ஆரம்பிப்பது என்று புரியாமல் இருக்க நான் சரடு எடுத்துக் கொடுத்துவிட்டேன் என்னை அறியாமலேயே.

‘சரி, சார். ஒரு ஆப்ளிகேஷன்... காலையிலே காரைக்குடி வந்ததும் எழுப்பி விடுறீங்களா?’ என்று புவனா டிக்கெட் பரிசோதகரைக் கேட்க பரவசமடைந்து அவர் ‘கண்டிப்பாக’ என்று சொல்லிப் பறந்து போனார்.

‘சார் எனக்கும் ஒரு ஆப்ளிகேஷன்.’ ரத்னா கூப்பிட உடனே வாயெல்லாம் சிரிப்பாகத் திரும்பினார். ‘மேடம் நீங்களும் சினிமா லைன்லே இருக்கீங்களா?’

‘இல்லே, என் வீட்டுக்காரர் விடமாட்டார்’ என்று என்னைப் பார்த்துக் கை சுட்டிக் காட்டிச் சிரித்தாள் ரத்னா.

‘சார், எங்களை கும்பகோணத்திலே எழுப்பிவிட்டுடுங்க ப்ளீஸ்.’

‘கும்பகோணமா, நடுவிலே கிராஸிங் இல்லாம இருந்தா காலை அஞ்சு மணிக்கு கும்பகோணம். இருந்தா ரயிலோட இஷ்டம்தான்.’

அவர் போன பிறகு கதவு அடைத்து வந்தேன்.

‘புவி, உங்க படம் நான் தசாபதிதான் முதன்முதலா பார்த்தேன். அதுக்கு முந்தி ஆக்ட் கொடுத்திருக்கீங்கன்னு சொன்னீங்களே’, ரத்னா சொன்னாள்.

‘ஓ! நான் நாலு வருஷம் முந்தி, அவன்... கோஷ்... ஏமாத்திட்டுப் போனதுமே நடிக்க ஆரம்பிச்சுட்டேன்.’

‘ராஜ முந்திரியிலேயா?’ நான் கேட்டேன். ‘இல்லை, மதறாஸ். திரும்பி வந்தாச்சு’ என்றாள். புரியாமல் பார்த்தோம்.

‘ராஜமுந்திரிக்கு அஞ்சு மைல்லே கோலமூருதான் என் பூர்விகம். அப்பா பத்து ஏக்கர் நிலம் வச்சிருக்கார். பி.ஏ பி.எல். நான் பிறந்ததும் குடும்பம் மெட்றாஸுக்கு வந்துச்சு. அப்பா ஹைகோர்ட்லே ப்ராக்டிஸ் பண்ணலாம்னு வந்தார். நல்லா பேசுவார். ஆனா நடுவிலே வாய் குழறும். யாரும் கட்சிக்காரன் வராததுக்கு அது காரணமோ என்னமோ. நான் எட்டாம் கிளாஸ் வரை இங்கேதான் படிச்சேன். தமிழ் அத்துப்படி ஆனது அப்படித்தான். மாம்பலத்திலே டாக்டர் நாயர் இருந்த வீட்டுக்கு பக்கத்து வீடு நாங்க.’

‘நான் மெட்றாஸ் வர்றதுக்கு முந்தியே நீங்க வந்தாச்சுபோல, புவி’ ரத்னா சொல்ல, அவள் கையிலிருந்த டம்ளரை வாங்கி ஒரு மடக்கு தண்ணீரைக் குடித்தாள் தெலக்ஸ்.

‘யெஸ்... ரத்னாக்கா, இன்னும் கொஞ்சம்தான் இருக்கு... ஆரம்பிச்சாச்சு, முடிச்சுடட்டா... தூக்கம் வருதுன்னா சொல்லுங்க... புவனா சொன்னாள்.

‘தூக்கமாவது ஒண்ணாவது புவி. உங்களோட இப்படி நெருக்கமா உட்கார்ந்து பேச எனக்கு கொடுத்து வைக்கணும்’ – ரத்னா என் மனதைப் படித்து எழுத்துக்கு எழுத்து சொன்னாள். புவி என்ற அழைப்பு உட்பட.

‘எனக்கு அப்புறம் மூணு பேரை பெத்து வளர்த்துக்கிட்டு இருந்த அம்மா ஷய ரோகத்திலே போய்ச்சேர்ந்ததும் அப்பா குடும்பத்தை ராஜமுந்திரிக்கு இடம் மாத்தினார். லாயர் ஆகாட்டா பரவாயில்லே. விவசாயத்தையாவது கவனிச்சுக்கலாம்னு நினைச்சார். சுமாரா குடும்பம் நடத்த பணம் வந்தது.

வருது இப்போவும். நான் ஸ்கூல் பைனல் முடிச்சு ப்ரீயூ படிக்க பணம் கட்டினார். அப்போதான் கோஷ்னு போட்டோகிராபர் ராஜமுந்திரி வந்தது. என் மனசைக் கவர்ந்துட்டான் பாஸ்டர்ட்... சாரி ராமோஜி சார்... இனிமே சொல்லலே... என் குடும்பத்தை விட்டுட்டு கோஷ்... வெரி ஸ்டைலிஷ் பெர்சன்... ரொம்ப படிச்ச மாதிரி பாவனை... ஹிந்துஸ்தானி சினிமாப்பட ஹீரோ ப்ருத்விராஜ் கபூர் மாதிரி குரல்... அவனை ரகசியமாக கல்யாணம் பண்ணிக் கிட்டேன்... அவன்கூட பம்பாய் போனேன். அவன் சொன்னான்னு இஷ்டமே இல்லாம கருக்கலைப்பு செஞ்சுக்கிட்டேன்... மோகம் கண்ணை மறைச்ச நேரம் அது... இந்துஸ்தானி சினிமாவிலே நடிக்கலாம்னு நைச்சியமா பேசி, பணம் கொட்டும்னு ஆசை காட்டி, அவன் கூட்டிப் போன இடம்...’

புவனா மறுபடி ரத்னா தோளைப்பற்றி அழத் தொடங்கினாள். பெண்ணுக்குப் பெண் ஆறுதலாக இருந்த தருணம் அது. நான் குறுக்கிடாமல் உட்கார்ந்திருந்தேன். வெளியே போயிருக்கலாமோ என்று யோசித்து எழுந்தேன். உட்காரச் சொல்லி சைகை காட்டினாள் தெலக்ஸ் புவனா.

‘என்னை சிவப்பு விளக்குலே வித்துடப் பார்த்தான் ஸ்கவுண்ட்ரல். எப்படியோ தப்பிச்சு மெட்றாஸ் வந்தேன். நாயர் டாக்டர், அம்மாஞ்சி வீரேசலிங்கம், பந்துலு இப்படி பலபேர் உதவி செஞ்சாங்க. நானும் ஸ்கூல் சிநேகத்தை வச்சு ப்ரண்ட்ஸ் மூலமா சினிமா வந்தேன். 1937–இல் இருந்து நாலு வருஷமா சின்னச் சின்ன ரோல்லே நடிக்கற போது தெலக்ஸ் சோப் மாடலிங் அசைன்மெண்ட் வந்துச்சு. அப்புறம் தசாபதி. அதெல்லாம் உங்களுக்கு தெரியும். அது ஊருக்கு தெரிஞ்ச புவனா... உள்ளுக்குள்ளே புவனா வலியோட... மனசுலே ரணம்... சிரிக்கப் பழகியாச்சு... தனியா... அவ்வளவுதான் ரத்னாக்கா’

ரத்னா அவள் தோளில் தலையமர்த்தி விம்மினாள். அரையிருட்டில் ரயில் சத்தத்தைக் கேட்டபடி அவர்களுக்கு அந்நியனாக சும்மா அமர்ந்திருந்தேன். வெகுநேரம் அந்தப் பெண்கள் எதுவும் பேசாமல் நேசம் பகிர்ந்திருந்தார்கள்.

‘ஏன் தனியா சிரமப்படணும்? குடும்பத்தை இங்கே கூட்டி வரலாமே புவி? உங்க அப்பா, தங்கச்சி, தம்பிகள்... போய்ட்டு வாங்க’ ரத்னா வற்புறுத்தினாள்.

‘போனேன். அப்பா துரத்திவிட்டுட்டார். வீட்டிலே இருந்து கழுத்தைப் பிடிச்சு தெருவுக்குத் தள்ளிவிட்டார். அப்போ இருந்து வைராக்கியம். அந்த வீட்டுலே அப்புறம் கால் வைக்கலே.’

‘அப்புறம்?’ ரத்னா கேட்டாள்.

‘இங்கே தனியாகத்தான் மெட்றாஸ்லே ஜி.என்.செட்டி ஸ்ட்ரீட்லே வாடகைக்கு இடம் பார்த்து குடி வந்தேன்… துணைக்கு யாராவது வேணுமே… ராஜமுந்திரியிலே என் வீட்டுலே சுத்துக்காரியம் செஞ்சு சமையல் பண்ணிட்டிருந்த ரத்னம்மாவை இங்கே வரவழைத்து ஒரு சௌகரியத்துக்காக சித்தி ஆக்கிட்டேன்…’

அவள் சிரிக்க ஆரம்பித்து மறுபடி விசும்பினாள். ரத்னா மடியில் தலை வைத்து அவள் உறங்கிப் போனாள். நான் இன்னொரு கீழ் இருக்கையை படுக்கையாக்கி ரத்னாவைப் படுக்கச் சொன்னேன். அதற்கு மேலே ஏணி ஏறி, என் படுக்கைக்குப் போனேன்.

மறக்க முடியாத இரவு அது.

நடு ராத்திரியில் ரயில் எங்கோ நீண்ட நேரம் நிற்க, எந்த ஸ்டேஷன் என்று பார்க்க நான் கீழே இறங்கி வந்தேன். புவனாவின் இருக்கைக்கு ஓரமாக உட்கார்ந்து கீழே என் செருப்புகளைத் தேடும்போது, மெத்தென்று புவனாவின் கை என் கையில் பட்டு இறுகப்பற்றியது. ஒரு ஜோடி உதடுகள் பற்றிய கையை முத்தமிட்டு விலகின. அடுத்த வினாடி புவனா மறுபடி தூக்கத்தில். நான் அதற்கப்புறம் உறங்கவில்லை.

‘சார், கும்பகோணம் வந்தாச்சு.’ டிக்கெட் எக்ஸாமினர் எழுப்பினார். ரத்னா உடனே எழுந்துவிட்டாள். புவனாவும்.

ரத்னாவின் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டு அவளையும் என்னையும் அனுப்பிவைக்க கம்பார்ட்மெண்ட் வாசலுக்கு வந்தாள் தெலக்ஸ் புவனா.

நானும் புவனாவும் வெறும் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டோம். பின் சின்னச் சிரிப்பு இரு வசமும் இருந்து முன் நகர்ந்து போய்க் கலைந்தது.

மணி ஆறரை ஆகியிருந்தது. அந்தக் காலை நேரத்திலும் கும்பகோணம் ரயில் நிலையத்தில் தெலக்ஸ் தெலக்ஸ் என்று பரபரப்பு தெரிந்தது.

போட்மெயில் மெதுவாக நகர்ந்து வந்து நிற்கத் தயாராகிக் கொண்டிருந்தது. ராமு ராமு என்று தீனமான சத்தம். ப்ளாட்பாரத்தில் ரயிலோடு ஓடி வந்துகொண்டிருந்தார் விட்டோபா.

வண்டி நின்றது. நான் இறங்கி ப்ளாட்பாரத்தில் நிற்க என் மேல் மோதி அணைத்துக்கொண்டு நின்றார் அவர் மூச்சு வாங்க. எல்லோருக்கும் நல்லது

மட்டும் நினைக்கும் அந்த அப்பாவி மனுஷரின் பிடியில் கண்கலங்கக் கட்டுண்டு நின்றேன் நான்.

‘ரத்னா, வாம்மா வாம்மா... இளைச்சுப் போயிட்டியே இப்படி.... உங்க ராவ்ஜி மூணு வேளையும் எடை கட்டின பால்லே போட்ட டீ மட்டும் குடிச்சு சிக்கனமா இருந்து பணம் சேர்க்கணும்னு சொல்லி இருக்காரா? கேட்கவே கேட்காதே.’

என் விலாவில் இடிப்பும், ரத்னா தலையில் கை வைத்து இன்னொரு கையால் ஆசிர்வாதமும் செய்துவிட்டு, ஓட்டைப் பல்லோடு சிரித்தபடி நின்றார் அவர்.

தெலக்ஸ் புவனா உள்ளே போவதற்கு முன் எங்களுக்குக் கையசைக்க, கும்பகோணம் ஜங்ஷன் முழுவதும் பதிலுக்கு கையசைத்து அவளை வழியனுப்பியது.

‘பல்லு எங்கே போச்சு, விட்டோபா சார்?’ நான் கேட்டேன்.

‘அதை ஏன் கேக்கறீங்க... சீசந்திக்கு மொறுமொறுன்னு பண்ணியிருந் தாளேன்னு ஏழெட்டு வெல்லச் சீடை தின்னுட்டேன். கடைசியா கடிச்ச சீடை வாயிலே இருந்து கையிலே வந்து விழுந்தது. கடிச்ச பல் வயத்துக்குள்ளே போயிடுத்து. எப்படா விடியும்னு காத்துக்கிட்டிருந்து... காலம்பற பாம்பே கக்கூஸ் வேணாம்னு மெட்றாஸ் கக்கூஸ்லே உக்காந்து வெளிக்கு போகறபோது, ஒரு வேப்பங்குச்சியாலே...’

‘வாங்க, சூடா ஒரு காப்பி சாப்பிடலாம்’ என்று அவரை சரியான இடத்தில் நிறுத்தியிருக்காவிட்டால் அங்கே வேறே வாடை தூக்கலாக அடித்திருக்கும்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். ஏழு வருஷத்தில் கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷன் பெரிதாக ஒன்றும் மாறியிருக்கவில்லை. இந்த விளக்குக் கம்பத்தின் அடியில்தான் கோபுவும், ராஜுவும் ரத்னாவைக் கூட்டிப் போகக் காத்திருந்தது. இதோ இந்த சிமெண்ட் பெஞ்சோடு ஒட்டி நான் நிற்க, புன்முறுவலோடு நேரே பார்த்தபடி ரத்னா என் நெஞ்சில் நடை போட்டு நுழைந்தது.

இங்கேதான் நான் நின்று ஸ்டேஷன் மாஸ்டரிடம் துக்காம்பாளையத் தெருவுக்கு வழிகேட்டேன்.

‘வெளியிலே ஜட்கா வண்டிக்காரன் யாரைக் கேட்டாலும் சொல்வானே... எட்டணா கொடுத்தாகொண்டுபோய்விட்டுடவும் செய்வான்... ஒண்ணு செய்யுங்கோ... அதோ போறாளே, அவா கூடப் போங்கோ...’ – அவா கூடத்தான் வாழ்க்கை முழுவதும் போய்க்கொண்டிருக்கிறேன் சார்.

அந்த ஸ்டேஷன் மாஸ்டர் இல்லை இப்போது கொடி காட்டியவர்.

என் நினைப்பு பின்னால் வந்துகொண்டிருந்த ரத்னாவைப் பாதித்திருக்கக் கூடும். என்னை தீர்க்கமாகப் பார்த்துவிட்டுப் பக்கத்தில் நடக்க ஆரம்பித்தாள்.

விட்டோபா ஒரு பையைத் தூக்கியபடி முன்னால் போக, நான் தவிர்க்க முடியாத ஆர்வத்தோடு ரத்னாவின் கைத்தலம்பற்றி நடந்தேன். இருவரும் எல்லாம் பேசினோம். ஒன்றும் வாய்ச் சொல்லாகப் பேசவில்லை இருவரும். பேசிய, கேட்ட, பாடிய, கூடப் பாடிய, தாளம் தட்டிய, கூடி ஆடிய, ஆட்டத்துக்குத் தாளம் சேர்த்த அனுபவங்கள் சரஞ்சரமாக மனதில் எழுந்து நிறைய, கூட்டம் சற்றே கூடியிருந்த ப்ளாட்பாரச் சிற்றுண்டி சாலை வாசலில் நின்றோம். கைகள் அவசரமாக, தற்காலிகமாக விடுவித்துக்கொண்டன.

நாங்கள் நின்றதைத் திரும்பிப்பார்த்து விட்டோபாவும் திரும்பி வந்தார். ‘கொண்டு வந்திருக்கேனே... கார்லே இருக்கு’ என்று அவர் அபிநயித்தது உருளைபோல், அணுகுண்டு மாதிரி என் கண்ணுக்கு அர்த்தமானது. என்ன என்று வாயைத் திறந்து கேட்டே விட்டேன்.

தர்மோஸ் ப்ளாஸ்காம். உள்ளே காப்பி ஊற்றிக்கொண்டு வந்திருக்கிறாராம். வீட்டில் போட்டதுகூட இல்லை. எனக்குப் பிடிக்குமே என்பதால் மங்களாம்பிகா விலாஸில் வாங்கி எடுத்து வந்ததாம்.

அதற்குள் ரயில்வே சிற்றுண்டிச் சாலை வாசலில் டீ ஆற்றிக் கொண்டிருந்த இளைஞன் ‘சார் வாங்க, சௌக்கியமா, என்னை நினைவு இருக்கா?’ என்று கேட்டபடி டீ கப்பையும் பால் கரண்டியையும் தூக்கிக்கொண்டு என்னை வரவேற்க அருகில் வந்துவிட்டான்.

‘பச்சையப்பன் தெருவிலே நீங்களும் விட்டோபா சாரும் டீ பிரசாரத்துக்கு வந்தபோது ஒருநாளும் எனக்கு டீ தராம போனதில்லே சார்... நீங்க டீ போடுற முறைன்னு கத்துக் கொடுத்தது இப்போ எனக்கு சோறு போடுது’ என்று நெக்குருகினான் அவன்.

நினைவு இருக்கிறது, பச்சையப்பன் தெருச் சிறுவன், பத்து வருஷத்தில் ஆறடிக்கு வளர்ந்து, வரவேற்கிறான். கைகுலுக்கி வாழ்த்து சொன்னேன்.

'நம்ம ப்ராண்ட் டீ நாலு போடு சாருக்கு' என்று உள்ளே யாரையோ உற்சாகமாகக் கூப்பிட்டபடி தன் வேலை இடத்துக்குத் திரும்பினான் அவன்.

'விட்டோபா, காப்பி அப்புறம் குடிச்சுக்கலாம், நீங்களும் வாங்க' என்று அழைத்தேன்.

'ஏம்பா நீ போன வாரம் நான் பார்த்தபோது காப்பி போட்டுட்டிருந்தியே' என்று விசாரித்தபடி திரும்பினார் விட்டோபா.

'ஆமா காப்பி மாஸ்டர் வரலேன்னு முதலாளி அங்கே அந்த மூலைக்கு போகச் சொன்னார். காப்பி மாஸ்டர் போயாச்சு... அட இருக்காருங்க... மெட்றாஸோட போயிட்டார்... எல்லோரும் மெட்றாஸைவிட்டு வரும்போது இவர் அங்கே காபிக்கடை இல்லே டீக்கடை போட்டிருக்கார்... நல்லா போகுதாம்.'

பச்சையப்பன் தெருப்பையன் என் தகவலுக்காகவும் சொன்னான். 'இங்கே காப்பி கோட்டை ஆச்சே... டீ எப்படி போவுது?' என்று கேட்டபடி நான் அவன் போட்டுத் தந்த முதல் டீயை ரத்னாவுக்கு எடுத்து நீட்டினேன். அவள் ப்ளாட்பாரம் வாஷ்பேசினில் பல் துலக்கிவிட்டுச் சுறுசுறுப்பாக ஓடி வந்தாள்.

'சார், இது காப்பி காப்பின்னு காங்கிரஸுக்கு அடுத்தபடி காப்பிக்கும் கோட்டையாத்தான் இருந்துது. இப்போ டீ எதிர்க் கட்சியா அமோகமா வளர்ந்துட்டு இருக்கு... நாளைக்கே ஆட்சியைப் பிடிச்சுடும்... பாருங்க!'

'அதென்னப்பா டீ மேல் அத்தனை ஈடுபாடு கும்மோணம் மகாஜனங்களுக்கு?'

'பின்னே இல்லியா சார்? காப்பியை பீப்ரி, ரோசெட்டான்னு காபிக் கொட்டை வாங்கி வறுத்து பொடிச்சு டிகாஷன் இறக்கணும்... பால் தேடித்தேடி தண்ணீ கலக்காம வாங்கி அதிகமாகவும் இல்லாம குறைவாகவும் இல்லாம காய்ச்சணும். பார்த்துப் பார்த்து சர்க்கரை கலக்கணும். கலந்த காப்பி ஒரு துளி வாயிலே பட்டா கசக்கணும்... அடுத்தது இனிக்கணும்... இப்படி சிரமப்பட்டு போட்டு நீட்டினா, குடிச்சுட்டு வாசல் திண்ணையிலே உட்கார்ந்து, 'என்னடா நேத்து ஏன் வேலைக்கு

வரலே? கட்டி வைச்சு மிலாராலே விளாசணுமா?’ என்று மிரட்டறதுதானே வரும்... கூடவே, காப்பி குடிச்சா இங்க்லீஷ்காரனுக்கு கால் பிடிச்சு விடற அடிமைத்தனம் தோணும்.’

‘டீ குடிச்சாலோ?’ டீ குடித்தபடி நின்ற யாரோ கேட்டார்கள்.

‘ஓ! சாமானியப்பட்டவனோட பானம். காலையிலே எழுந்தோமா, பசியோ பட்டினியோ குடிசையாண்ட டீக்கடையிலே தெம்பா ஒரு டீ சாப்பிட்டு மண்வெட்டியை எடுத்துட்டு கிளம்பினா பத்து மணிவரை வயிறு இரை கேட்காது. கூழோ பழைய சோறோ வந்தா தின்னுட்டு, குடிச்சுட்டு, மறுபடி ஒரு டீ... இன்னும் நாலு மணி நேரம் வேலை... குளிச்சு, கஞ்சி குடிச்சு இன்னொரு டீ... சாயந்திரம் அஞ்சுவரை தெம்பா வேலை. சாயந்திரம் கள்ளுக்கடைக்கு போகலாம்னு உடம்பு கேட்டா, மகாத்மா காந்திக்கு ஜேன்னு சொல்லி இன்னொரு டீ... உடம்பும் மனசும் நல்லா இருக்கும்...’

அவன் டீயின் மகத்துவம் சொல்ல, இத்தனை பேருக்கு டீ பிடிக்க நானும் விட்டோபாவும் விதை போட்ட காலத்தை நினைத்தபடி ஸ்டேஷனுக்கு வெளியே வந்தோம். ‘டீ போட்டுக் கொடுத்து இங்கே ப்ரண்ட்ஸ் தேடிக்கிட்டேன்’ என்று ரத்னாவிடம் சொல்ல அவள் கூறிய பதில் – ‘நீங்க இங்கே போட்டுக் கொடுத்த முதல் டீ உங்களுக்கு பொண்டாட்டியை வாங்கிக் கொடுத்ததை மறந்தாச்சா? இல்லே இன்னமும் தெலக்ஸ் நினைப்பா?’

நான் நாக்கைக் கடித்துக்கொண்டேன். எப்படி இந்த முக்கியமான விஷயத்தை மறந்தேன்.

‘சும்மா கிண்டலுக்காக சொன்னேன்... அந்த தெலக்ஸ் பொண்ணு உள்ள படிக்கே பாவம்தான்... அவளுக்கும் சேர்த்து பிரார்த்திக்கணும்’ என்றாள் ஒரே நிமிஷத்தில் மனம் நிறைய அன்பும் கருணையும் கொண்டவளாக. மனிதர்கள்தானே எல்லோரும். தேவதை ஆவதும் உண்டு.

‘பிரேமா எப்படி உங்களுக்கு ப்ரண்ட்ஸ் ஆனது? அடுத்த வீட்டுலே இருக்காளா? முட்டை ஓடு, மீன் செதில்னு உங்க வீட்டுலே தூக்கிப் போடுவாளா? வீடு முழுக்க டீசண்ட் சவுக்கார சோப் கோடவுனாமே?’

விட்டோபா தன் தமிழ்த் திரைப்பட அறிவைப் பறை சாற்றியதில் பிரேமாவை புவனாவாக்கி, டீசண்ட் சவுக்காரத்தை தெலெக்ஸ் சோப் ஆக்கிப் புரிந்துகொண்டோம்.

இந்த முட்டை ஓடு, மீன் செதிள்பற்றிக் கேட்க ஆசை. ஆனால் விட்டோபா வேறே எங்கேயாவது பேச்சை இழுத்துக்கொண்டு போய் விடுவார். இன்றைக்கு வந்த காரியம் நிறைவேறினால் போலத்தான்.

‘ஊர்லே இன்னிக்குன்னு நாள் வாடகைக்கு பேச ஒரு ஜட்கா கிடையாது. அதான் பஜார்லே சொல்லி காரை எடுத்துக்கிட்டு வந்தேன்.

அவர் காட்டிய திசையில் ஒரு ஆஸ்டின் மைனர் கார் அடக்க ஒடுக்கமாக நின்றுகொண்டிருந்தது. யார் டிரைவர்? வண்டிக்குப் பின்னால் சிகரெட் புகைத்துவிட்டு அசோகா பாக்குத்தூள் பொட்டலத்தைப் பிரித்து வாயிலிட்டு மென்றபடி ஓடி வந்த டிரைவர் பக்கத்தில் வைத்து என்னைப் பார்த்ததும் நின்றார்.

‘டீ சார், நல்லா இருக்கீங்களா? நான் உப்புக்காரத் தெருப்பையன்... உங்களுக்கு நினைவு இருக்குமோ என்னமோ... எனக்கு மறக்க முடியாது... பிஸ்கட்டும் டீயும் எத்தனைநாள் உங்ககிட்டே வாங்கிக்கிட்டிருக்கேன்’ என்றான்.

கும்பகோணம் முழுக்க என் சிஷ்யர்களால் ஆனது.

‘என் வீட்டுக்கு போகலாம் முதல்லே... அதுக்குள்ளே இந்த காபியை குடிச்சுடலாம்... புது ப்ளாஸ்க்... சூடு நிக்குமான்னு தெரியலே.’ விட்டோபா கோப்பையில் ஊற்றி நீட்டிய காப்பி நல்ல சூடாக, வாசனை தூக்கலாக மங்களாம்பிகா ஹோட்டல் காப்பியின் சகல லட்சணங்களும் குணாதிசயங்களும் பொருந்தியதாக இருந்தது. அதை ரசித்துக் குடித்து முடிப்பதற்குள் சோலையப்பன் தெருவில் விட்டோபா வீட்டுக்கு வந்துசேர்ந்திருந்தோம் நாங்கள்.

குளித்துவிட்டு திருக்கருகாவூர் புறப்பட்டோம். விட்டோபா மனைவி மணக்க மணக்க கடப்பாவும் தட்டு இட்லியும் காலை பசியாற செய்து வைத்ததை சாப்பிட முடியாமல் போனது. கோவில் பிரார்த்தனை செய்து முடிந்துதான் இன்னிக்கு ப்ரெக் பாஸ்ட் என்று தீர்மானமாக ரத்னா சொன்னதால், ஒரு டிபன் கேரியரில் கடப்பாவும் இட்லியும் கருகாவூருக்கு எங்களோடு வந்தது.

கடப்பா வாசனையோடு காரே மங்களாம்பிகா ஹோட்டலுக்கு சக்கரம் பொருத்தினதுபோல் உருண்டு போய்க்கொண்டிருந்தது.

ஒரு வருடம் மட்டும்தான், கூட ரெண்டு மாதம், சரி, நான் இருந்த அந்தக் குறுகிய பொழுதில் பிடித்துப்போன ஊர் இது. பிறந்து வளர்ந்த மதறாஸ்கூட

அப்புறம்தான். ஒவ்வொரு தெருவும், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு முகமும் நினைவில் மட்டுமில்லை ஆழ்ந்த உறக்கத்தின் போது கனவிலும் வந்து போகுமளவு என்னை பாதித்த ஊர் இது.

ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தேன். ரத்னா இங்கே வராமல் இருந்தால் நான் மட்டும் வந்திருந்தால் குடந்தை என்னை இத்தனை ஆக்கிரமித்துக்கொண்டிருக்குமா? அல்லது நான் வர முடியாமல், எனக்கு டீ போர்ட் பீல்ட் ஆபீசர் உத்தியோகமே ஆகாதிருந்தால்?

ரத்னாவுக்கு வேறே யாராவது ஒரு ராமோஜி கிடைத்திருக்கலாம் என்று நினைக்கவே கஷ்டமாக இருந்தது. காரின் பின் சீட்டில் நான் அவளுக்கு நெருங்கி உட்கார்ந்து அவள் கையைப் பலமாகப் பற்றிக் கொண்டேன். முன்சீட்டில் விட்டோபா கடப்பா மணக்கும் உறக்கத்தில் இருந்தார்.

பட்டீசுவரம் வந்தது. ‘ஒரு நிமிஷம் உள்ளேபோய் ஒரு கும்பிடு போட்டுட்டு போகலாமா?’ ரத்னாவைக் கேட்டேன்.

‘இல்லீங்க, கர்பரக்ஷாம்பிகை கிட்டே வரேன்னு சொல்லி இருக்கோம். கருக்காத்த நாயகி காத்துக்கிட்டிருப்பா. திரும்பும்போது இங்கே தேனுபுரீஸ்வரரை சாவகாசமா கும்பிட்டுக்கலாம். அவர் கோபிச்சுக்க மாட்டார். அம்பிகையைப் பார்த்தா அப்பனைப் பார்த்த மாதிரிதான்.’

பட்டீசுவரம் துர்க்கைக்கும் காரில் இருந்தபடியே ஒரு நொடி கரம் குவித்து மனம் குவித்து வணக்கம் சொல்லித் தொடர்ந்து போனோம்.

முன்னைக்கு இப்போது கும்பகோணத்தைச் சுற்றி நீண்டு போகும் வயல்பரப்பு செழிப்பாக பசுமையாக இருந்ததாகத் தோன்றியது. வயல்கள் இல்லாத நிலப்பரப்பில் தோப்பும் துரவுமாக அடர்ந்த மரங்கள் நிறைந்து நின்றன. அங்கங்கே தென்னை மரங்கள் நீர்ப்பரப்பை வளைந்து தொடப் பார்த்தும், நிமிர்ந்து வானத்தை விசாரித்தும் அணிவகுத்து நின்றன. கால்வாய் மதகுகளின் வழியே வேகம் கொண்டு பாயும் வெள்ளப் பெருக்கில் நாரைகளும் கொக்குகளும் எவ்விப் பறந்து இறகுகொண்டு தொட்டு உயரம் சென்றன. இதமான காலை வெய்யில் எங்கும் சூழ்ந்திருந்தது.

இந்த வருஷம் நல்ல மகசூல் கிடைக்குமோ? விட்டோபாவிடம் கேட்டேன்.

‘மழை அதிகம் இந்த வருஷம். வெய்யிலும் அதிகம் அதுனாலே பூச்சி பொட்டு அண்டாது’ என்றார்.

டாக்சியை ஓட்டி வந்த ‘உப்புக்காரத் தெருப் பையன்’ டிரைவர் வழியிலிருந்து கண்ணை எடுக்காமலேயே சொன்னது – ‘ஆனா பாதி நெல்லு அரிசியாக்கி ரேஷனுக்குப் போகாமே ராணுவத்துக்கும் அனுப்பாமே எங்கேயோ கருப்பு சந்தையிலே போய் முடியுது... வங்காளத்துக்கு தேவைக்கு வேண்டிய அரிசி போகாம, சர்க்காரே பஞ்சத்தைக் கொண்டுவந்துடுச்சு.’

நான் பேச்சை எப்படியாவது கத்தரிக்கவேண்டிய அவசியத்தோடு, ‘நீங்க எப்போ டாக்ஸி வாங்கினீங்க தம்பி?’ என்று பேச்சை மாற்றினேன். சர்க்கார் உத்யோகஸ்தன், கடப்பா வாடையடிக்கும் டாக்சியில் போனாலும், சர்க்கார் விரோத பேச்சுக்கு துணை போகக் கூடாது. அதைக் கேட்கவும் கூடாது. மேலே பேச்சு வளரவிடவும் கூடாது.

டாக்ஸி தன்னுடையது இல்லை, டிரைவிங் கூலி மட்டும் வரும் என அடக்கமாகச் சொன்ன டிரைவர் பையன் தொடர்ந்தான் – ‘இங்கே இப்போ எல்லாம் மாறிக்கிட்டு வருது... காங்கிரஸ் வந்ததாலே இல்லே... சிகப்புக் கொடிக்காரங்க வரவுக்கு அப்புறம்னு கேட்டிருப்பீங்களே சார்?’

டிரைவர் மேலும் உற்சாகத்தோடு ராஜ விரோத சம்பாஷணையில் முன்னால் போக, ‘தசாபதி பாத்தீங்களா?’ என்றேன். அப்புறம் திருக்கருகாவூர் மூன்று மைல் அறிவிப்புப் பலகை வரும்வரை தெலக்ஸ் புவனாதான், டி.டி. ராமச்சந்தர்தான், காளிங்க ரத்தினம்தான்.

எதிர் திசையில் இருந்து வரிசையாக இரட்டை மாட்டு வண்டிகள் வந்து கொண்டிருந்தன. ‘தாராசுரம் சந்தைக்குப் போய்ட்டு வர்றவங்க’ என்றார் விட்டோபா. ‘நாம் டீ ஆத்தின இடம்தானே அதுவும்?’ என்று கேட்டேன். ‘ஆமாம்’ என்றார்.

கோணல் மாணலாக அசைந்தபடி ஒரு மாட்டு வண்டி எதிரே வருவதைப் பார்த்தோம். வண்டியை வேகம் எடுக்க வைக்க, ஓட்டி வந்த இளைஞன் முயற்சி செய்வதும், மாடுகள் முரண்டு பிடிப்பதும் கண்ணில் பட்டது. அவன் கண்கள் எப்பாடு பட்டும் அந்தப் பிராணிகளை வேகமெடுக்க வைக்கிற தீவிரத்தோடு வெறித்திருந்தன. மாடுகளிலொன்று தீனமாக குரல் எழுப்பி உயிர் பயத்தில்அழைத்தது மனதைப் பிசைந்தது. அது இறந்துவிடக்கூடும். மற்றது ஓவென அலறி பயத்தில் சாணி போட்டபடி நின்றேவிட்டது அவன் கைச்சவுக்கால் அவற்றை விடாமல் அடித்துப் போவென்று கூச்சலிட்டான்.

ரத்னா கோபத்தோடு என்னைப் பார்த்தாள். ‘என்னங்க, மாட்டை இந்த அடி அடிக்கறான். பாவம், வாயில்லா பிராணியை போபோன்னு விரட்டினா, இழுத்துட்டு ஓட சக்தி வேணாமா அதுக்கு. கொஞ்சம் காரை நிறுத்துங்க தம்பி’ என்று குரல் கொடுத்தாள் அவள்.

மாட்டு வண்டிக்கு முன்னால் ரோடு ஓரமாக காரை நிறுத்தினான் தோழன் உப்புக்காரத் தெருப்பையன். ரத்னா சண்டை போடும் உத்தேசத்தோடு எழுந்திருக்க, நான் அவளுடைய தோளைப்பிடித்து உட்கார வைத்தேன்.

‘நீ கோவிலுக்கு வந்திருக்கே. ரௌத்ர பாவம் காட்டற நேரம் இல்லே இது.’ சொல்லிப் புரியவைத்து உட்காரச் செய்தபோது டிரைவர் வண்டிக்காரனின் முண்டாசை எம்பிக் குதித்து உருவி, ‘ஏண்டா மாட்டை அடிக்கறே அறிவில்லாதவனே’ என்று வேகமாக முன்னால் போய் விட்டிருந்தான்.

மாட்டு வண்டிக்காரன் வண்டியைவிட்டு இறங்கி, இரண்டு கையையும் கூப்பியபடி டிரைவரிடம் ஏதோ சொல்ல, அவனும் டிரைவரும் வண்டிக்குப் பின்னால் நடந்து போனார்கள்.

‘சந்தை முடியறதுக்குள்ளே விக்கணும்... காய்கறி, தேங்காய் வச்சிருக்கேன்... அதான் விரசா ஓடப் பண்ணிட்டு இருக்கேன்... இப்படித்தான் சொல்லி சந்தேகம்-னா வண்டிக்குள் பார்னு கூப்பிட்டிருப்பான்’ என்றார் விட்டோபா.

நான் பார்த்தபோது டிரைவரின் கையைப் பிடித்துக் கெஞ்சிக் கொண்டிருந்தான் பையன் என்பதைக் கவனித்தேன். உடனே இறங்கினேன். ‘ரத்னா, நீ விட்டோபா அண்ணாகூட இங்கேயே இரு. ஒரு நிமிஷத்துலே வந்துடறேன்... முடியலேன்னா விட்டுட்டு வர வேண்டியதுதானே நம்மாளு... எதுக்கு சும்மா நின்னு நேரம் கடத்திட்டு இருக்கான்? கூட்டி வரேன்.’

நான் மாட்டு வண்டியை உற்றுப் பார்த்தேன். காய்கறியோ, மீனோ, கருவாடோ, தேங்காயோ ஏற்றிப் போவதாகக் காட்டும் வாடை எதுவும் வண்டிக்குள் இருந்து வரவில்லை. உள்ளே இருந்து முனகல் சத்தம் மட்டும் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது. அது ஒரு பெண் குரலாக இருந்தது.

நான் பின்னால் போக, வண்டிக்காரன் நான் எதிர்பார்க்காதபடி என் காலைத் தொட்டுக் கும்பிட்டான். ‘சார், நான் தப்பு எதுவும் பண்ணலே. மாட்டை

வேகமா போகவைக்க முடியுமான்னு பார்த்தேன். என் பொண்டாட்டி உசிருக்கு போராடிட்டு இருக்கா உள்ளே... ரெண்டு உசிரு... பிரசவ ஆஸ்பத்திரிக்கு போய்ட்டிருக்கேன்... தப்பு எதுவும் பண்ணலே சாமி... வெள்ளாட்டி வரமுடியாம வாந்திபேதியிலே கிடக்கா... யாரும் இல்லே பிரசவம் பார்க்க... என்ன செய்வேன் சாமி...' அவன் அழத் தொடங்கினான்.

உப்புக்காரத் தெருப்பையன் டிரைவர் என்னை ஓரமாகக் கூட்டிப் போனான். 'சார், தப்பா எடுத்துக்க மாட்டீங்களே. இங்கே இருந்து மூணு மைல்தான் கருகாவூர். நீங்க நடையை எட்டிப் போட்டாக் கூட போயிடலாம்... நான் இவங்களை நம்ம கார்லே கும்பகோணம் கொண்டு சேர்த்துடறேன்... அப்புறம் ஆண்டவனோ, பராசக்தியோ, இயற்கையோ, விதிச்சபடி ஆகட்டும்.'

ரத்னா கேட்டபடி பின்னால் நின்றவள் உடனே கூடைகளை விட்டோபா உதவியோடு இறக்கி வைத்தாள். நான் சுருக்கமாக அந்த மாட்டுவண்டி இளைஞனிடம் எல்லாம் சொன்னேன். கை கூப்பி நின்றான் அவன்.

காலம் தாழ்த்தாதே இனிமேலும் என்று மாட்டுவண்டியை ரோடு ஓர டீக்கடையை ஒட்டி நிறுத்தி, மாடுகளை அவிழ்த்து மரத்தில் கட்டிக் கூளமும் தண்ணீரும் போட வைத்தேன். டீக்கடைக்காரர் சாயந்திரம் ஆறு மணிக்கு முன் எப்போது வந்தாலும் இருப்பதாகவும், மாட்டையும் வண்டியையும் பார்த்துக் கொள்வதாகவும் உதவிக்கு வந்தார். கிராமத்து மனிதர்கள்.

அவனும் அவன் மனைவியும் காரில் ஏற, கார் புறப்பட இருக்க, ரத்னா பணம் பணம் என்றாள். என்ன பணம்? பணத்துக்கு என்ன வந்தது?

'இல்லேங்க. பிரசவம்னு போறார். கையிலே பணம் வச்சிருக்காரா?'

அந்தப் பையன் சட்டைப் பையில் தடவிப் பார்த்து ஐந்து ரூபாய் இருக்கு என்று அறிவித்தான். நான் என் கைப்பையைத் திறந்தேன். பிரயாணச் செலவு, டாக்சிக்கு, அபிஷேகம் ஆராதனைக்கு, கும்பகோணம் இதர செலவினங்கள், எதற்கும் இருக்கட்டும் என்று முப்பது ரூபாய் என்று மேலே விவரம் எழுதி பழுப்பு கவர்கள், எட்டணா, ஒரு ரூபாய் காசு நிரம்பிய தோல் பர்ஸ் இப்படி தனித்தனியாக வைத்து எடுத்துப்போவது அப்பாஜி காலத்தில் கற்பித்து ஏற்படுத்திய வழக்கம். இதர செலவினங்களுக்காக என்று எழுதிய கவரை எடுத்து அவனிடம் கொடுத்தேன். வேண்டாம் என்றான். சும்மா

வாங்கிக்கப்பா... கைச்செலவுக்கு வச்சுக்க என்று வற்புறுத்தி வாங்கிக் கொள்ளச் சொன்னோம். கொடுத்த பிறகு அலாதியான ஒரு நிம்மதி வந்தது.

கார் புறப்பட நாங்கள் மூவரும் பேசிக்கொண்டே திருக்கருகாவூர் நோக்கி நடக்கத் தொடங்கினோம்.

‘தம்பி உன் பெயர் என்ன?’ போகும்போது ரத்னா கேட்டாள்.

‘அம்மா, நான் தேவனாஞ்சேரி கந்தன். அவ தேவானை.’

திருக்கருகாவூர் கோபுர வாசலில், என் வீட்டுக்கு வந்த குருக்கள் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தோம். ஜலகண்டேசுவரன் என்று விட்டோபா அவர் பெயர் சொன்னார். கும்பகோணம் சாரங்கபாணி சந்நிதித் தெருவாசியாம். விட்டோபாவுக்குத் தெரியாமல் இங்கே யாரும் மூச்சு விட முடியாது.

‘நடை சாத்தற நேரமா? கொஞ்சம் தாமதமாகிடுத்து.’ நான் மன்னிப்பு கேட்கும் தொனியில் சொல்லியபடி குருக்களை வணங்கினேன்.

‘நீங்க வருவது தெரிஞ்சுதானே இங்கேயே இருக்கேன்... இன்னும் ஒண்ணரை மணி நேரம் இருக்கு நடை சாத்த’ என்று அவர் சொல்லிக்கொண்டிருக்க, இளைய குருக்கள் ராகம் போடுவதுபோல் ஸ்தலபுராணம் தொடங்கினார்.

‘இந்த ஸ்தலத்தை அப்பரும் சம்பந்தரும் பாடியிருக்கா... கோவிலுக்குன்னு தனிப் புராணம் உண்டு. அதன்படி, ரொம்ப பழைய காலத்துலே இதெல்லாம் காடு. காட்டுலே ரிஷி பத்தினி பர்ணசாலையிலே தனியா இருக்கறச்சே யாரோ ஒரு முனிபுங்கவன் யாசிச்சு வந்தானாம். அவள் எழுந்து, பிக்ஷையோடு வர தாமதமாகிடுத்தாம். அவள் பூர்ண கர்ப்பிணின்னு தெரியாம சாபமிட்டான் இந்த முனிவன். அந்த சாபத்திலே கருக் கலைஞ்சு போக, இந்த ஸ்தலத்து கர்ப்ப ரக்ஷாம்பிகை கருக்காத்த நாயகி அதை குடத்திலே ஆவாஹனம் செஞ்சு, பத்திரமா பிறக்க வைத்து, வளர்த்து, ரிஷிபத்னி கிட்டே கொடுத்தா...’ கோயில் நாகசுவரம், அவர் சொன்னதை, வராளி ராகத்தில் அழகாக முடித்து வைத்தது.

இங்கே பூஜை நடைமுறை என்று அவர் மறுபடி தொடங்க, ரத்னா தெரியும் அய்யா என்றாள். நான் ஆச்சரியப்பட்டு பார்க்க, ஜோசியர் வீட்டம்மா ஒரு நாள் முழுக்க கிளாஸே எடுத்திருக்கிறாள் என்று புரிந்தது.

‘சுயம்புவாக புற்று மணல்லே இருந்து முல்லைவன நாதர் வந்ததா ஐதீகம். ஆகவே அபிஷேகம் கிடையாது. புனுகு சாத்தறதுதான் விதிச்சிருக்கு. அதுக்கு முந்தி...’ கொண்டு போயிருந்த பிரப்பங்கூடையில் இருந்து நெய்த் தூக்கை எடுத்தபடி ரத்னா தொடர்ந்தாள் – ‘அம்மா சந்நிதி வாசல் படியை நெய்யால் மெழுகி, அப்புறம் சுவாமிக்கு புனுகு சார்த்தறது காலம் காலமாக இருந்து வர்ற வழக்கம்.’

அங்கேயே பிறந்து வளர்ந்த மாதிரி ரத்னா கடகடவென்று சொல்லியபடி ஆத்மார்த்தமாக அந்த சீலங்களில் ஆழ்ந்து, நெய்யால் சந்நிதிப்படி மெழுகி, அர்ச்சனை, தீபாராதனை எல்லாம் நடக்கப் பங்கெடுத்து நின்றாள்.

குருக்கள் அர்ச்சனைக்கு பெயர் நட்சத்திரம் கேட்க, நான் ராமோஜி அசுவதி நட்சத்திரம், ரத்னா சதய நட்சத்திரம் என்று சொல்ல, தேவனாஞ்சேரி கந்தன், தேவானை என்று சேர்த்தாள் ரத்னா. மாட்டுவண்டியில் வந்த தம்பதி.

‘இது அர்ச்சனை நெய். ஒரு மண்டலம் நாற்பத்தெட்டு நாள் நீங்க ரெண்டு பேரும் தினம் ராத்திரி எடுத்துக்கணும். மாமி ஆத்திலே இல்லாட்ட நீங்க மட்டும். இது விளக்கெண்ணெய் பிரசாதம். பத்திரமா வச்சிருங்கோ. குடிக்க இல்லே. நல்ல நியூஸ் வந்தப்பறம் சுகப் பிரசவம் ஆக தினம் அவா வயத்துலே தடவிவிடணும்... நம்பினா தெய்வீகம், நம்பலேன்னா ஆயுர்வேதம்... நிச்சயம் கெடுதல் ஒண்ணுமில்லை... நல்லதுதான் இது எல்லாம்.’ என்னிடம் நெய் பாட்டிலும், விளக்கெண்ணெய் பாட்டிலும் ஒப்படைத்தார் குருக்கள்.

வெண்பொங்கலும், சர்க்கரைப் பொங்கலும், பழக்கூழும் நைவேத்தியம் செய்ய ஏற்பாடு செய்திருந்தார் ஜலகண்டேஸ்வர குருக்கள். நிதானமான, ஸ்பஷ்டமான அஷ்டோத்திர அர்ச்சனை. கணீரென்று ஓதுவாரின் தேவாரம் –

> கந்தமௌவல் கமழும் கருகாவூரெம்
> எந்தை வண்ணம் எரியும் எரிவண்ணமே

கோவில் வெளிப் பிரகாரத்தில் காளாஞ்சித் தட்டு என்று கோவில் மரியாதையாக மாலை, தேங்காய் மூடி, வாழைப் பழங்கள், கொண்டுபோன தூக்குப் பாத்திரத்தில் பொங்கல், பழக்கூழ் பிரசாதம் எல்லாம் கொண்டுவந்து கொடுத்தார்கள் குருக்கள் இருவரும்.

நான் கொடுத்த பணத்தை வாங்க மாட்டேன் என்றார் பெரியவர். பத்து ரூபாய் போதும் என்றார். வற்புறுத்தி வணங்கிக் கொடுத்தோம் அதற்கு மேலே வைத்து காளாஞ்சித் தட்டைத் திருப்பும்போது அளித்து வணங்கி எழுந்தோம்.

திரும்ப நடக்கும்போது காளிங்க ரத்தினம் சார் கொடுத்தனுப்பிய காணிக்கை இருநூறு ரூபாய் நினைவு வர உடனே நின்றேன். அவசரமாகக் கைப்பையில் தேடினேன். எங்கே போனது அது?

படபடப்போடு கைப்பையைக் கொட்டிக் கவிழ்த்து எடுத்துப் பார்க்க, அந்தக் காணிக்கைப் பணத்தைக் காணவே காணோம். ஆனால், 'முப்பது ரூபாய் இதர செலவினங்கள்' கவர் பத்திரமாக இருந்தது. காளிங்க ரத்தினத்தின் காணிக்கை வைத்த கவரைத்தான் தேவனாஞ்சேரி கந்தனுக்குக் கொடுத்தேன் என்று புரிந்தது.

இருநூறு ரூபாயா? தானம் செய்தாலும் அளவு பார்த்துச் செய்ய வேண்டாமா என்று ரத்னா திட்டுவாள். ஆனால் எதிர்பார்த்தது பொய்யாக அவள் ஒன்றும் சொல்லவில்லை. பெரிய தொகை. பிரசவச் செலவுகளுக்கு அப்புறமும் கையில் கணிசமாக இருக்கும். நான் இன்னும் கவனமாக இருந்திருக்கலாம்.

அதை அப்புறம் பார்க்கலாம், காளிங்க ரத்தினம் சார் காணிக்கை கோவிலுக்குப் போய்ச்சேர வேண்டும்.

குருக்களிடம் விவரம் கூறி, இப்போது முப்பது ரூபாய் தருகிறேன், பாக்கி நூற்றெழுபது, ஊருக்குப் போய் மணியார்டர் அனுப்புகிறேன் என்று சொல்லலாமா?

ரத்னாவிடம் கேட்டேன் – உங்கிட்டே எவ்வளவு இருக்கும்மா? ரெண்டு பத்து ரூபாயும் நாலு ஒத்தை ரூபாயும் அவளுடைய கைப்பையில் ரெமி பவுடர் வாசனையோடு கிடைத்தது. ஐந்து ஒரு ரூபாய் காசும். போதாது.

'என்ன சார் ஆச்சு?' நல்ல வேளையாக விட்டோபா உதவிக்கு வந்தார்.

அவரிடம் வாங்கி விவரம் சொல்லிப் பணம் கொடுக்க, 'உங்களுக்கு எப்படி காளிங்க ரத்தின படையாச்சியைத் தெரியும்?' என்று வியப்போடு கேட்டார் ஜலகண்டேஸ்வர குருக்கள். சொன்னேன். 'அப்போ தெலக்ஸ் புவனேஸ்வரி ஆப்தர் தானா உங்காத்து மாமிக்கு?' என்று முடித்தார் அவர்.

‘நீங்க போய்க்கிட்டிருங்க. வரேன்.’ ரத்னா திரும்ப சந்நிதிக்கு முன் கண்மூடி நின்றாள். அது யாருக்கு உடலும் மனமும் நலம்பெறப் பிரார்த்தனை என்று அவள் சொல்லாமலேயே தெரியும்.

ரயில் பெட்டியில் ஒரு வினாடி என் கையைப்பற்றி முத்தமிட்ட புவியைப் பிடிவாதமாக மனதிலிருந்து விலக்கி நிறுத்தினேன். களைப்பும் தூக்கக் கலக்கமும் பாதித்த அனிச்சையான செயல் அது. மறந்துவிடலாம்.

நிறைவான ஆலய தரிசனம் முடிந்து பட்டீசுவரத்தில் அம்மையை துர்க்கையாகக் கண்டு வணங்கி கும்பகோணம் போய்ச்சேர்ந்தோம். வழியில் இட்லி – கடப்பாவையும் விட்டுவைக்கவில்லை. மதியம் ராமாராவ் மாமா வீட்டில் களைகட்டிய விருந்து.

நாங்கள் மதறாஸ் திரும்பும்வரை உப்புக்காரத் தெருப்பையன் டாக்ஸி டிரைவர் சேதி சொல்ல வரவில்லை. எல்லாம் நல்லபடியாக நடந்திருக்கும் என்று நினைத்து கருக்காத்த நாயகியை வணங்கிப் புறப்பட்டோம்.

காளிங்க ரத்தினம் அவர்களுக்கு தொலைபேசுவதற்குள் நான் – பந்துலு – பன்னிபாய் பந்துலு – தெலக்ஸ் புவனா கம்பியில்லா தந்தி இணைப்பு வழியாக அவருக்கு ஏற்கெனவே என் புனிதப் பயணத்தை பக்கத்தில் இருந்து பார்த்ததுபோல் முழுத் தகவல் தெரிந்திருந்தது.

‘உங்க மேலே ரொம்ப கோவமா இருக்கேன் ஐயா’ என்றார் திடுதிப்பென்று, அவர் அழைப்பின் பேரில் நான் போயிருந்த அவருடைய படத்தின் சிறப்புக் காட்சியில். ‘சார் சார் சாரி சாரி…’ என்று அடைக்கலம் புகுந்தேன் உடனே.

‘என்னத்துக்கு சாரியும் வேட்டியும்… நான் இருநூறு ரூபாய்க்கு ஒரு காணிக்கை வச்சா, நீங்க அதை ரெண்டு இருநூறு ரூபாய் காணிக்கையாக கருக்காத்த நாயகி அம்மாகிட்டே கொடுத்திருக்கீங்க..’

நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். ‘சார் உங்க பாடு, கருக்காத்த அம்மா பாடு… நான் வெறும் கருவிதான்’ என்றேன்.

‘ஒண்ணு செய்யறீரா?’

‘எந்த கோவிலுக்கு சார்?’

‘அதெல்லாம் இல்லே… உமக்கு தமிழ் ஈடுபாடாமே… புவி சொல்லிச்சு… அடுத்த படத்துக்கு நீர்தான் கதை வசனம் எழுதணும்… நான் பேசி

நடிக்கணும்... செட்டியாரை எடுக்கச் சொல்றேன்... பெயர், திருக்கருகாவூர் மகிமை.'

'ஐயோ நான் கவர்மெண்ட் செர்வண்ட். அது மட்டும் செய்யக் கூடாது.'

'ஓடாதீர்... புவி, உன் அக்கா புருஷன் அநியாயத்துக்கு நல்ல மனுஷன்' என்று தெலக்ஸிடமும் சொல்ல மறக்கவில்லை அவர்.

'அந்தக் கந்தன் வேறே யாரும் இல்லே... அம்மா வீட்டுக்கு விளையாட வந்த சுவாமிமலை ஆண்டவன்தான்' என்கிறார் அந்தப் பழுத்த ஆத்திகர்.

★

பின் குறிப்பு 1947

காளிங்க ரத்தினம் சார், நான் அவர் சார்பில், ஒரு கிராமத்துப் பெண்ணின் பிரசவச் செலவுக்கு, கருக்காத்த நாயகிக்கான காணிக்கைத் தொகையை எடுத்துக்கொடுத்ததை இன்னும் நினைவு வைத்துக்கொண்டு என்னைப் பார்க்கும்போதெல்லாம் சொல்லி வருகிறார். பலபேரிடம் இதைச் சொல்லியிருக்கிறார் என்றும், அவர்கள் என்னைப் பாராட்டும் போது அறிகிறேன். முக்கியமாக திராவிட இயக்கத்தில் இருக்கும் சிலருக்கும் கூட. அவருக்கும் எனக்கும் நண்பர்கள் அவர்கள். காளி சாருடைய, தினை அளவு அதுவும், அகஸ்மாத்தாக நற்செயல் செய்தாலும், பனை அளவு அதைப் பெருக்கிப் பார்த்துப் பாராட்டும் நல்ல குணம் எத்தனை பேரிடம் உண்டு?

போன வாரம், அதாவது 1947 ஆகஸ்ட் பதினான்காம் தேதி, ரத்னா கருக்காத்த நாயகி கர்ப்பரக்ஷ அம்மன் அருளோடு ஓர் அழகான பெண் குழந்தையைப் பெற்றபோது, குழந்தைக்கு 'சுதந்திரா' என்று பெயர் சூட்டிய குடும்ப நண்பரான பெரியவர் அவர்தான்.

★★★

பதிநான்கு

# சகலநேசனில் தகவல் வந்த 1946 மதறாஸ்

'ரா மோஜி சார், காப்பி குடிச்சீங்களா?'

சனிக்கிழமை காலை ஓசி காப்பிக்காகவும், அதோடு ஊர் வம்புக்காகவும் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, தோளில் குடையைத் தொங்கவிட்டுக்கொண்டு மெல்ல நடந்து வந்தார் எலக்ட்ரீஷியன் மணவாள நாயுடு. நான் வீட்டுத் திண்ணையில் சுதேசமித்திரன் படித்தபடி இருந்ததைப் பார்த்து அவர் படியேறி வந்தது அரை மணி நேரம் முன்பு.

வந்ததும் குடையை சுவரில் ஒய்வாகச் சாய்த்து வைத்தார் அவர். அப்புறம் 'உங்க வைஸ்ராய் என்ன சொல்றார்?' என்று அக்கறையாக விசாரித்தார். என்னமோ நானும், வைஸ்ராய் வேவல் துரையும், ஒரே ஸ்கூலில், ஒரே கிளாசில், ஒரே மாதிரி, 'ஊசியிலைக் காடுகள் லண்டனில் உள்ளன' என்று பூகோள வகுப்பில் கேள்விக்குப் பதில் சொல்லி, ஒரே பெஞ்சு மேல் ஏறி நின்ற ஆப்த நண்பர்கள் என்பதுபோல் கேட்டார்.

'வேவல் துரை, காப்பி குடிக்காதீங்க, டீ குடிங்கன்னு சொல்றார்' என்றேன் பேப்பரில் இருந்து தலையைத் தூக்கிப் பார்த்து. 'சரி, கொடுங்க, குடிச்சு வைப்போம்... வைஸ்ராய் ஆர்டர் போட்டா வேணாம்னா சொல்லப் போறேன்.'

நாயுடு தலை திண்ணையில் தட்டுப்பட்டதுமே அவருக்கு கிரமமான காப்பி உபசாரம் நடத்திவிட்டாள் ரத்னா. இன்னொரு தடவை எல்லாம் கிடைக்காது.

'ராமோஜி சார், நம்ம சுபாங்கி அம்மா வீட்டுக்கு வடக்கிலே, காகர்லா பக்தவத்சலம் வீட்டுக்கு நேர் எதிரே, கலியுக நளன் அப்புக்குட்டி வீட்டுக்கு குடி வந்திருக்காங்கபோல இருக்கு. உங்க ஆள் தானாம்.'

'கோட்டையிலே சர்க்கார் உத்தியோகஸ்தரா?' என்று கேட்டேன் அவரை. 'ஐயே, அதெல்லாம் ஒரு சமாசாரமா? உங்க ஆள்-ன்னு சொன்னது உங்களை மாதிரி இந்திக்காரங்க....' 'நான் இந்திக்காரன் இல்லே நாயுடுகாரு' என்றேன்.

எலக்ட்ரீஷியன் குரலைத் தாழ்த்தி என்னிடம் கேட்டார் –

‘நீங்க பூணூல் போட்டு பார்த்ததே இல்லியே… வெறும் அய்யர்கூட இல்லியா?’ ‘இல்லை’ என்றேன். அது என்ன வெறும் அய்யர், வெல்லம் போட்ட அய்யர்?

‘அப்போ, கவிச்சி துன்றாப்பலியா?’ இதுதானா?

‘அது கிடையாது… போன தலைமுறையிலே விரதம் எடுத்திருக்கோம்… அதுக்கு முந்தி எல்லாம் சாப்பிட்டுட்டுதான் இருந்தோம்… ஷத்ரியர்கள் நாங்க’ பெருமையாகச் சொல்ல ‘கொஞ்சம் அடக்கி வாசிங்க. சீக்கிரமாகட்டும்’ என்று உள்ளே இருந்து ரத்னா குரலைக் கேட்க முடிந்தது.

‘புதுசா வந்திருக்கறவர், துணியை முறுக்கிப் போட்டுக்கிட்ட மாதிரி, பத்து இருபது பூணூலை ஒண்ணாக்கிப் போட்டுக்கிட்டிருக்கார்… என்னத்துனாலே அப்படி?’, நாயுடு ஆர்வமாக விசாரித்தார்.

‘பூணூல் ஆராய்ச்சி எல்லாம் சாயந்திரம் வச்சுக்கலாமே. ஆபீஸ் இருக்கில்லே’, ரத்னா அந்தச் சந்திப்பை ஈவிரக்கமில்லாமல் துண்டித்துவிட்டாள். அப்புறம் வரேன் என பயமுறுத்தி நாயுடு குடையோடு மறைந்தார்.

‘இனிமே காலையிலே வெட்டி அரட்டை அடிக்கறதை நிப்பாட்டி போடுங்க… நாயுடுகாருவுக்குத்தான் பொழுது போகலேன்னா உங்களுக்கு என்ன சோம்பல்?அப்புறம் பார்க்கலாம்னு அனுப்ப வாயிலே வார்த்தை இல்லையா?’

குளித்துச் சாப்பிட உட்கார்ந்தேன். குழைய வடித்த சாதமும், புளிக்குழம்பும் இலையில் பரிமாறும்போதே, ‘ரொம்ப நாள் கழிச்சு வாழைக்காய்ப்பொடி செஞ்சிருக்கேன்… கொஞ்சம் சாதத்தை இதிலே பிசைஞ்சுக்கங்க’ என்று வேகவைத்து உதிர்த்த வாழைக்காயை ஜாலிக்கரண்டியில் எடுத்து இலையில் இட்டாள் என் செல்லப் பெண்டாட்டி.

‘இது ஏன் வாழைக்காய்ப் பொடின்னு பேர்லே சுத்துது? பொடிமாஸ்னு இதைச் சொல்றது வழக்கம் ஆச்சே?’

‘வாழைக்காய் பொடிமாஸ் வேறே… வாழைக்காய்ப் பொடி வேறே… பட்டணம் பொடி வேறே… ஆபீஸ் போய்ட்டு வாங்க, வித்தியாசம் சொல்றேன்’ என்று குழம்பை இலையில் வார்த்தவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

‘அன்பே, நான் வேட்டி கட்டிக்காம துண்டோட, அல்லது அதுவும் இல்லாமல் மொட்டைக்கட்டையா சாப்பிட உக்காந்துட்டேனா?’

‘இல்லை, நாதா. இது வேறே விஷயம்.’ அவள் திரும்பத் தரையில் உட்கார்ந்து சிரித்தாள். ‘சொல்லு பெண்ணே? நானும் கொஞ்சம் சிரிக்கிறேனே.’

‘எல்லாம் நம்ம ஆளுங்கதான்...’

‘யார், தெலக்ஸ் புவனாவா?’

‘சே... சே...’

‘விலுவா?’

‘என்னது விலுவா? சார் இப்போ அல்லும் பகலும் சதா மும்முரமாக நினைக்கறது கும்மு கும்முனு இருக்கற மலையாளி டைப்பிஸ்டையா?’

நோ... கம்சலையை–ன்னு சொல்லலாம் என்று யோசித்தேன். எதுக்கு வம்பு? நாளைக்கு லகான் மாட்டிவிட்டு ஆபீசுக்கு கூட்டிவந்து விடுவாள் ரத்னா.

‘தெருவுக்கு புதுசா வந்திருக்கறவங்க நம்ம ஆளுதான்... அசல் மராட்டி.... நம்ம மாதிரி ஷத்ரியர் இல்லே... தேஷஸ்தா ப்ராமின்ஸ்... முட்டை கூட நோ.’

‘இதுக்கா சிரிச்சே?’ அவள் திரும்ப சிரிக்க ஆரம்பித்தாள். ‘சொல்லிட்டு சிரிக்கறியா இல்லே வாழைக்காய்ப் பொடி முழுசும் நான் தின்னுடட்டா?’

‘நல்லா சாப்பிடுங்க..அவ்வளவு பிடிச்சிருக்கா?’ இலையில் இருந்து எடுத்து எனக்கு ஊட்டிவிட்டபடி மையல் செய்தாள் மனைவி. ‘சொல்லு ஏன் சிரிச்சே?’

‘நேத்து அவங்க வீட்டுக்குப் போயிருந்தேன்... அவள் என்னைவிட சின்னப் பொண்ணுதான்... சரி அதென்ன பார்வை? புவியை விடவா சின்னவள்? அதானே?’

மௌனம் காத்தேன்.

‘தெரிஞ்சு என்ன ஆகணும்?’

‘சரி நான் குறுக்கே வரல்லே... சொல்லி முடி...’

‘இச்சல்கரஞ்சியிலேருந்து வந்திருக்கேன்னு சொன்னதும் ரொம்ப சந்தோஷப்பட்டா... கோதாவரின்னு பேர்... வீட்டிலே செல்லமா அவளை குண்டின்னு கூப்பிடுவாங்களாம்.’ நாலு தடவை ராகமிழுத்து கூப்பிட்டு வேறு காட்டினாள் ரத்னா. தொடர்ந்து புரையேறும் அளவு சிரித்தாள் இப்போது.

‘மராட்டியில் அந்த வார்த்தைக்கு பூஜாடின்னு அர்த்தம்தான். கவித்துவமாக வைத்த அந்தப் பெயரை மறந்தும் தமிழ் பிரதேசத்திலே சொல்லாதே... இங்கே அதுக்கு அர்த்தம் பிருஷ்டம்னு அவகிட்டே சொல்லிட்டு வந்தேன்... நான் அவளை குந்தின்னு கூப்பிடறேன்... இப்போ ஆரம்பிச்சு வச்சா எல்லாரும் இனிமேல் குந்தின்னுதான் சொல்வாங்க.’

‘அவங்க வீட்டுக்காரர் என்ன பண்றார்?’

‘குந்தி வீட்டுக்காரர் சினிமாவிலே ஆர்ட் டைரக்டராம்...’

‘என்னது, ஆர்ட் டைரக்டரா?’

‘ஆமா, அப்படித்தான் சொன்னா குந்தி.’

பூணூலை கயிறு மாதிரி கனமாகப் போட்டுக்கொண்டு ஆசாரம் கொண்டாடிக்கொண்டு வருகிற சினிமாக்காரரைக் கற்பனை செய்யவே சிரமமாக இருந்தது. எதற்கு சினிமா சான்ஸ் அதிகமான பம்பாயைவிட்டு இங்கே தென்னிந்தியாவின் மூலையில் மதறாஸுக்கு குடும்பத்தோடு வந்திருக்கிறார் அந்த தேஷஸ்த பிராமணர்?

சாயந்திரம் ஆபீஸ்விட்டு வரும்போது அந்தப் பக்கம் இயல்பாகப் பார்க்க, எழுந்து வந்த சிரிப்பை அடக்கியபடி நகர்ந்தேன். உள்ளே இருந்து பட்டை ப்ரேம் மூக்குக் கண்ணாடியோடு ஒருத்தர் வேகமாக வருவதை ஓரக்கண்ணால் கண்டேன். அவரையும் முந்திக்கொண்டு ஒரு கழுதைக்குட்டி வெளியே ஓடி வந்தது.

‘ஆத் ஜா... ஆத் ஜா.’

எனக்கு நமஸ்காரம் சொல்லியபடி, உள்ளே போ என்று மராத்தியில் கழுதைக்குட்டியிடம் இரைந்தார் கண்ணாடிக்காரர். என்னை சந்திக்கத்தான் வீட்டுக்குள்ளிருந்து வேகமாக வந்திருக்கிறார் என்று புரிந்துகொண்டேன்.

‘ஆத் ஜா.’ மராத்தி தெரிந்த அந்தக் கழுதைக்குட்டி மாட்டேன் என்று சமர்த்தாகத் தலையசைத்துவிட்டு, வீட்டுத் திண்ணையில் ஏறிப் படுத்துக்கொண்டது. நான் இதைப் பார்த்தபடி ஒரு வினாடி நின்றுவிட்டேன்.

‘நமஸ்காரம், நீங்க மராட்டிதானே?’ வெடவெட என்று ஆறடிக்கு மேலும் உயரமாக, பூஞ்சை உடம்போடு நின்று கை நீட்டியவருக்கு என் வயது இருக்கும். மேலேயும் இருக்கக்கூடும்.

தலையசைத்து, ‘நான் ராமோஜி ராவ்’ என்றேன். அவர் ‘சாஜுகாந்த் கணிட்கர், சினிமா ஆர்ட் டைரக்டர்’ என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

உள்ளே இருந்து ஊய்ய் என்று சத்தம் கேட்டது. தலைகீழாக நின்று, கையைத் தரையில் ஊன்றியபடி வாசல்படி இறங்கி வந்தான் ஒரு பதினைந்து வயசுப் பையன். அவன் ஊய் ஊய் என்று என்னைப் பார்த்துச் சத்தமிட நடையை எட்டிப் போட்டேன். ஆர்ட் டைரக்டர் வீட்டில் வேறே என்ன எல்லாம் உண்டோ.

‘ஆர்ட் டைரக்டரை பார்த்தேன்.’

கைகால் அலம்பி உள்ளே வந்து, சமையல்கட்டுச் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தபடி, ரத்னாவுக்குக் கைநீட்டிக்கொண்டு சொன்னேன்.

‘யாரு குந்தி புருஷனா?’ அவள் கேள்வி புரிந்தது.

‘அந்தப் பொண்ணு இனிமே குந்திதான்…’ என்றாள் என் அணைப்பில் கட்டுண்டு. பின்னால் இருந்து வெள்ளிப் பொடி டப்பியை லாகவமாக முன்னால் வலித்து, சிட்டிகை உறிஞ்சி, உடனடி உற்சாகம் கொண்டாள் அவள்.

‘டிபனுக்கு என்ன செஞ்சிருக்கே அன்பே?’

‘சட்டியும் பானையும்’ என்றாள். என்னது?

‘புட்டு, கடலை’ என்றாள் ரத்னா. விலு சொல்லிக் கொடுத்த அல்லது கொண்டுவந்து கொடுத்த பலகாரம் என்று தேங்காய் முழுக்காட்டி வந்ததைப் பார்த்தே தெரிந்தது. ஆனால் புட்டு கடலை மலையாளப் பிரதேசத்தில் காலையில் கழிக்கும், சரி, சாப்பிடும் உணவு இல்லையோ.

விலு சமைத்து எடுத்து வந்தால், நடுராத்திரிகூட சாப்பிடலாம்.

‘ஆர்ட் டைரக்டர் வீட்டுலே வேறே என்ன பார்த்தே...?’

கொண்டைக்கடலை காரத்தை நாக்கில் படர்த்தி அனுபவித்தபடி கேட்டேன்.

‘வேறே என்ன, தையல் மிஷின், சைக்கிள், சிமண்ராவ் கதைப் புத்தகம், ரேடியோ மேலே திலகர் காந்தி படம், சுவரிலே பம்பாய் சயான் சித்தி வினாயகர் காலண்டர், குந்தியோட வெள்ளை வெளேர் சோழிப் பல்லு...’

இந்த கடைசி ஐட்டம் எவ்வளவு தூரம் நான் ஸ்த்ரிலோலனாகத் தலைகுப்புற மோகத்தில் விழுந்திருக்கிறேன் என்று சோதிக்க இறக்கப்படும் சீட்டு.

‘அதெல்லாம் யார் பார்த்தா? நான் அவங்க வீட்டுலேயும் அழகான ஒரு கழுதைக்குட்டியைப் பார்த்தேன்’ என்றேன்.

‘அவங்க வீட்டிலேயும்னா, வேறே யார் வீட்டுலே... ராவ்ஜி, இதானே வேணாங்கறது... நான் கழுதையாவே இருந்துட்டுப் போறேன்... டீ போட்டுக்கொடுத்து இந்தக் கழுதையை கும்பகோணத்திலே தெருத்தெருவா துரத்தின ஆண்கழுதை இப்போ இங்கே சில்மிஷம் பண்ணிட்டிருக்கு... ஆனா மனசு எல்லாம் புட்டு பண்ணின கழுதை மேலே... புட்டு தின்னுட்டு எப்படா வேலி தாண்டலாம், எப்படிடா போகலாம்னு ஏங்கிக்கிட்டிருக்கு... புட்டுப்புட்டு வச்சுட்டேனா... போலோ ராவ்ஜி மகராஜ்...’

நான் கவனிக்காததுபோல், ‘கடலையிலே உப்பு கொஞ்சம் அதிகமா இருக்கே டியர்...’ என்றேன்.

‘பரவாயில்லீங்க... உங்க விலு கஷ்டப்பட்டு செஞ்சிருக்கா... வீணாக்க வேணாம்.’ முகம் ஒரு வினாடி மலர, இன்னொரு கரண்டி கடலையைத் தட்டில் போட்டாள் ரத்னா.

‘ஹோய் மாஜ நவரா! அவங்க வீட்டுலே கழுதை வளர்க்கறாங்கதான்... அது சாப்பிட காகிதம் வேணுமாம்... ஐயங்கார் டைப் இன்ஸ்ட்டியூட் வாசல்லே நிறைய கிடைக்கும்னு சுபாங்கி அம்மா சொல்லிச்சு... யாரு தினம் கூட்டிப் போறது?’

ரத்னா என் தட்டிலிருந்து எடுத்துச் சாப்பிட்டபடி உள்ளே போனாள்.

‘இனிமே அந்தப் பக்கம் போகிறபோது என் புஸ்தகம், உன் புஸ்தகம் ஏதாவது எடுத்துக்கிட்டு போ... படிச்சு கிழிச்சாச்சுன்னா ஆர்ட் டைரக்டர் வீட்டுச் செல்லப் பிராணிக்கு அன்பளிப்பாக கொடுத்திடலாம்...’

‘வியாசர் அமுதத்தை போட்டுடாதீங்க’ என்று கையில் காப்பியோடு வந்தபடி சொன்னாள் ரத்னா. அவசரமாக இன்னொரு சிமிட்டா பொடி உறிஞ்சி நிதானமடைந்தாள்.

‘கழுதை கிடக்கட்டும், ஆர்ட் டைரக்டருக்கு இவ்வளவு பெரிய பிள்ளை இருக்கானே... என் ஏஜ்-ன்னு நினைச்சேன்... என்ன வயசு இருக்கும்?’ கரிசனமாகக் கேட்டபடி காப்பியைப் பருக ஆரம்பித்தேன்.

‘அய்யோ, அவன் அவரோட தம்பி, பப்லு. ரொம்ப துறுதுறு... பதினைஞ்சு வயது... இன்னும் ஐந்து வயசுக் குழந்தைதான்.’

‘குழந்தையா, உள்ளே இருந்து தலை கீழா நின்னபடி கையை ஊணி நடந்தே வாசல்படி இறங்கறான்’ என்று என் ஆச்சரியத்தைப் பங்கு வைத்தேன்.

‘தேக்லோ, லோக்கல் பாஷை தெரியாது சரிவர. தொழில்லே பம்பாய் மாதிரி வாய்ப்பு அதிகம் இல்லாட்டாலும் இங்கேயும் போட்டா போட்டி, வாடகைக்கு இடம் கிடைச்சாலும் கழுதை வளர்க்கறான்னு தெரிஞ்சா காலி பண்ணச் சொல்றாங்க... இந்த வீட்டுலே என்னமோ கழுதை வந்தா யோகம் வரும்னு ஆரூடம் இருக்காம்... அதான் ஆறு மாசத்துக்கு மட்டும் கழுதை, குதிரை எல்லாம் வீட்டு வாசல்லே கட்டி வச்சுக்க வீட்டு ஓனர் அப்புக்குட்டி அனுமதி கொடுத்திருக்காராம்... அவர் போகச் சொன்னா, வேறே வீடு பார்க்கற கஷ்டம் திரும்ப வரும்... இந்தப் பையன் வேறே அப்பாவியா குட்டிக் கரணமடிச்சுக் கிட்டு இருக்கான்... எல்லாத்தையும் சகிச்சு, வெள்ளை வெளேர்னு சோழிப்பல்லை காட்டி குந்தி ரம்யமா சிரிக்குது...’ ரத்னா நீளப் பேசி நிறுத்தினாள்.

‘நான் பார்க்கலியே’ என்று சாதுவாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டேன்.

‘ஆமா, புட்டு கடலையை தட்டுலே பாத்தா சிக்குனு விலு ஞாபகம் வந்துடும்... வேறே எதுவும் அப்புறம் கண்ணுக்குத் தெரியாது... வெளியே வாங்க ராவ்ஜி’ என்று கிண்டல் செய்தாள் கட்டியவள். சொல்லிச் சொல்லி விலாசினி முகம் மனதில் இருந்து உடனே மலர்ந்து சிரித்தது.

அநேகமாக வாரம் இரண்டு தடவையாவது சீட் அருகே வைத்த ஆபீஸ் டெலிபோனில் என்னைக் கூப்பிடுவாள் தெலக்ஸ் புவனா. அது ராமண்ணா ஜோசியருக்கு ஏதாவது சொல்லி விடுவதற்காக இருக்கும். அல்லது

அரைக்கீரை விதைக் கூந்தல் தைலமும், சந்தனாதித் தைலமும், ரிண்டான் தாம்பூல மாத்திரையும் வேணும் என்று புவி கேட்டு நான் ப்ராட்வேயில் வாங்கிப்போய்த் தருவதற்காக இருக்கும். 'சும்மாத்தான் கூப்பிட்டேன், என்ன பண்றீங்க'வாக அவளுடைய அழைப்பு இருக்கவும் வாய்ப்புண்டு.

ஜோசியர் வீட்டு டெலிபோன் வேலை பார்த்தாலும் ஏகப்பட்ட பிரச்னை என்பதால் அதைப் பயன்படுத்துவதில்லை. பேச்சு சரியாகக் கேட்பதில்லை. அல்லது பாதியில் நின்று போகிறது. ராமண்ணா ஜோசியரைக் கூப்பிட்டால் டெலிபோன் இணைப்பு, ரஹமத்துல்லா, அவருடைய பேகம் தவ்லத் உன்னிஸாவோடு மனம்விட்டுப் பேசிக்கொண்டு இருப்பதற்குக் குறுக்கே கரடியாகப் புகுந்து சங்கடப்பட, சிரிக்க வைக்கிறது. அல்லது சின்னய்யா பலசரக்கு மளிகையில் அழைப்புபோய் உளுத்தம்பருப்பு கொள்முதல்பற்றி வெள்ளையும் கறுப்புமாகக் கணக்குத் தருகிறது. கிராஸ்டாக்.

அவருடைய அத்தங்காள் புவியின் நிரந்தர தூதுவனாக, ராமண்ணா ஜோசியரின் சோழிகளுக்கு வேலை வைக்க நான்தான் போக்குவரத்து நடத்திக்கொண்டிருக்கிறேன் என்பதை சீஃப் சூப்பரிண்டெண்ட் பந்துலு சார் அறிவார். எந்த வன்மமும் குரோதமும் இல்லாத நல்ல மனுஷர் அவர். அவர் பாதி வேடிக்கையாகவும் மீதி சீரியஸாகவும் சொல்வார் –

'ஓய் ராமோஜி, அந்தப் பொண்ணு என்கூட பேசறதுகூட கம்மியாயிடுத்துங்காணும்... போனை எடுத்தா ராமோஜி சார்தான்... பொண்டாட்டிக்கு தெரிஞ்சு இப்படியான சில்லறை சந்தோஷங்கள் அனுபவிக்க உமக்கு வாச்சிருக்குய்யா, சந்தோஷமா இரும்' என்றார் அவர்.

அது சரி, இத்தனை டெலிபோன் அழைப்பு வந்ததை ரத்னா அறிந்தால் எகிறுவாள். எப்போதாவது பந்துலு சாருக்கு அழைப்பு வரும்போது நானும் பேசுவதாக அவள் நினைத்துக்கொண்டிருப்பதைக் கலைக்க வேண்டாம்.

பந்துலுபோல மனதால் இன்னொரு நல்லவர் காளிங்க ரத்தினம். அவரையும் மாதம் ஒரு தடவையாவது போய்ச் சந்திக்கிறேன்.

காளிங்க ரத்தினம் சாரைப் பார்க்க அவருடைய புதுமாம்பலம் வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை போயிருந்தபோது எங்கள் தெரு மனுஷர்கள் பற்றிப் பேச்சு வந்தது.

காளி வீட்டில் நாய் வளர்க்கிறார். புவியும் கூடத்தான். அடுத்த வீட்டுக்காரர்கள் நாய் இரைச்சல் தாங்கவில்லை என்று புவிக்குச்

சொல்வதில்லை. ஏனென்றால் அவர்களும் வளர்க்கிறார்கள். ஆனால் காளிங்க ரத்தினத்துக்கு அந்த வகையில் சிரமமாம். சமண சந்நியாசிகள் தங்கி இருக்கும் பக்கத்து வீட்டில் சத்தமே எப்போதும் கேட்காதாம். நாய் குரைத்தால் கோபம் வருகிறதாம். கோபம் வந்தால் நல்ல சமணரில் இருந்து அவர்களை கீழே தள்ளிவிடுகிறதாம்.

சந்நியாசிகள் தரும் ஆலோசனை இது – 'நாய்களை வேறு எங்காவது வைத்து வளர்த்துத் தினம் போய் பார்க்கலாமே.'

இப்போது நாய்களுக்குக் குரைக்காமல் முனகக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருப்பதாக காளி சிரிக்காமல் சொன்னார்.

நான் காளி சாரிடம் சொன்னேன் – 'நாய் வளர்க்கறதுக்கு இம்புட்டு பிரச்னையா? எங்க தெருவிலே கழுதை வளர்க்கறாங்க... யாரும் ஒண்ணும் சொல்றதில்லே.'

'அப்படியா?'

'ஆமா சார். உங்க ஃபீல்ட்தான். ஆர்ட் டைரக்டர்' என்றேன்.

காளிங்க ரத்தினம் சாரோடு அரட்டை அடித்துக்கொண்டிருந்த அபூர்வ சூளாமணி ஆர்ட் டைரக்டர் ஜலகம் ஸ்ரீகிருஷ்ணா சாவதானமாகக் கேட்டார் – 'யாரு நம்ம களுதை சாஜுவா?'

ஆக சாஜு கழுதை வளர்ப்பது பழைய இண்டஸ்ட்ரீ ந்யூஸ் என்று தாமதமாக அறிந்துகொண்டேன்.

'அது ஆச்சு ஒரு வருஷமா சாஜு கழுதை வளர்க்கறது...' ஜலகம் சொன்னார்.

'அது என்னய்யா, பம்பாய்லே இருந்து தமிழ் சினிமாவுக்கு வந்து இங்கே கழுதை மேய்க்கறது...?' காளியும் வம்பு கேட்கிற ஓய்வில் இருந்தார்.

'தமிழ்ப் படம் இல்லே... தெலுங்குலே தமிழ்ப்படம்' என்றார் ஜலகம் புரியாத புதிராக. புரியலே ஆண்டவனே.

'அதான் சார், தமிழ் நாய்னா படம்...'

தமிழ்லே ஏது நாய்னா? அத்தா உண்டு தேவாரத்திலே. அப்பா உண்டு திருப்புகழ்லே. இது என்ன புதுசா நாய்னா?

நான் கேட்டேன். அதானே என்றார் காளி.

‘ஒண்ணு ரெண்டில்லே மொத்தம் அறவை மூடு… சிக்ஸ்டி த்ரீ நாய்னா உண்டு தமிழ்லே. தெல்சா?’ ஜலகம் தீர்மானமாக அறிவித்தார்.

ஓ, அறுபத்து மூன்று நாயன்மாரா? விளங்கியது என்று சொன்னோம். திருப்தியோடு ஜலகம் கதையை முன்னால் நகர்த்திப் போனார்.

‘ஒக நாய்னா தோபி. வாளு, சிவபக்துலு துணி கொடுத்தா ஃப்ரீயா வாஷ் பண்ணித் தருவாராம்… பேரு என்னாது அது… திரு… திருக்குரைப்பு ..’

‘திருக்குறிப்பு நாயனாரா?’ காளி விசாரித்தார்.

அவுனய்யா என்றார் கதையைச் சொல்லி முடித்த திருப்தியோடு.

‘திருக்குறிப்புத் தொண்டர் நல்ல சிவபக்தர். சலவைத் தொழிலாளி. சிவனடியார் கட்டிய துணியைத் துவைத்துத் தரணும் என்றால் காசு வாங்க மாட்டார். சிவன் அவரைச் சோதிக்க சிவனடியார் கோலத்தில் வந்து பழைய வேட்டியைக் கொடுக்கிறான். சாயந்திரத்துக்குள்ளே துவைத்து உலர்த்தி மடித்துத் தராவிட்டால் சாபம் தருவேன்… உனக்கு பாவம் வரும் என்று பயமுறுத்துகிறான்… திடீரென்று மழை கொட்டு கொட்டு என்று கொட்ட நாயனார் வாக்குக் கொடுத்தபடி சிவனடியார் உடுப்பைத் துவைக்க முடியவில்லை. அவர் துணி துவைக்கும் கல்லில் தலையை மோதி உயிர் போக்கிக்கொள்ளப் போகும்போது சிவன் பிரத்யட்சமாகிறார்… பக்தா உன் பக்திக்கு மெச்சினேன்… எட்செட்ரா எட்செட்ரா’ காளி, திருவிளையாடல் புராணக் கதைச் சுருக்கம் சொன்னார்.

இதுலே க்ளைமேக்ஸ் வலுவா இல்லியே என்று என் சந்தேகத்தை எழுப்பினேன்.

‘அவுனய்யா… அதான் தமிழ் நாய்னா தெலுகு நாய்னா ஆனபோது அவர் ராஜகுமாரன். சின்னப் பிள்ளையிலே அரண்மனையிலே இருந்து தூக்கி வந்து சலவைக்காரர் வளர்க்கறார்… ராஜகுமாரன்கூடவே ஒரு கழுத இருக்கு. மந்திர தந்திரம் தெரிஞ்ச, பறக்கற கழுதெ அது… சிவனடியார் வேறே யாருமில்லே சிவன்தான்னு தெரிஞ்சு அது எச்சரிக்க வர்றபோது தோபிகாட்டுலே அதைக் கட்டிப் போட்டுடறாங்க… ஈ விதங்க சுவாரசியமா தெலுகு நாய்னா கதை பண்ணினாங்க… சாஜுதான் ஆர்ட் டைரக்டர்…’ ஜலகம் நிறுத்தினார்.

‘ஆக இந்தக் கழுதை, என்னைய மாதிரி இன்னொரு ஆர்டிஸ்ட். அப்படித்தானே ராவு?’

காளி கேட்டதற்கு ஆமாம் என்று பதில் சொன்னால் அவரையும் கழுதையாக்கி விடும் அந்தப் பதில். அதைத்தானே எதிர்பார்த்து இருக்கிறார் அந்தப் பொல்லாத மனுஷர். இல்லை என்று பதில் சொன்னால், பிறகு வேறே என்ன புரிஞ்சுக்கிட்டீங்க என்று கேள்வி வரும்.

சும்மா இருந்தேன். ஜலகம் தொடர்ந்தார் –

‘படம் முடிஞ்சு ரிலீஸ் போய் ரொம்ப சுமாரா ஓடிச்சு… செட் ப்ராபர்ட்டி எல்லாம் திருப்பியாச்சு… கழுதையை என்ன பண்றது? பத்திவிட்டுடலாம்னார் ப்ரட்யூசர். ரங்கீலா கிருஷ்ணாதான் நாய்னா ஹீரோ. மனசு வரல்லே… அவரைவிட நல்லா நடிச்சிருக்கு கஞுதன்னு தெலுங்கு சினிமா பத்திரிகையிலே முள்ளப்பூடி கிண்டல் செஞ்சு வச்சிருந்தார்… அதெல்லாம் வேறே கதை… கழுதையை நான் கூட்டிப் போய் வளர்க்கறேன்னு சாஜு சொன்னாரா, அன்னிலே இருந்து அவர் கஞுதை சாஜு ஆயாச்சு.’

காளி வீட்டில் இருந்து இறங்கும்போது தெலக்ஸ் புவனா நினைவு வந்தது. அவள் சேலத்துக்கு ஷூட்டிங் என்று போய் ரெண்டு நாளானதால் வீடு பூட்டி இருந்தது. இருக்கட்டும், அடுத்த வாரம் ஊர் சுற்றும்போது வரலாம்.

திரும்பி வர மின்சார ரயிலுக்காகக் காத்திருந்தபோது ஞாயிறு என்பதாலோ என்னமோ கூட்டமே இல்லை. அரை மணி நேரம் நின்ற பிறகு ரயில் வந்து அலுப்போடு நின்றது.

எனக்கு முன்னால் நின்ற கம்பார்ட்மெண்டில் ஒரே ஒரு பயணி, விலாசினி.

அவசரமாக ட்ரெயினில் ஏறினேன். கை தலையைத் தடவி, சீவியது கலையவில்லை என்று தன்னிச்சையாக உறுதிப்படுத்திக் கொண்டது. முகத்தில் எண்ணெய் வடிந்திருக்கலாம் என்று தோன்ற, கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டேன். இனி தயக்கமின்றிப் பக்கத்தில் இருந்து பேசி சந்தோஷப்படலாம்.

என்ன சொல்லி கூப்பிடணும்? விலாசினி, விலு… அதெல்லாம் அதிகப் பிரசங்கத்தனம். மேடம்? சர்க்கார் ஆபீஸ் சாயல் அடிக்கிறது. அம்மா? எனக்கு வயசானதாகச் சொல்கிறது இந்த அழைப்பு. ஹலோ. என்ன ஃபோனிலா பேசுகிறேன்? நேரில் தனியாகச் சந்திக்க வாய்ப்பு கிடைத்திருக்க, இந்த அற்பமான சுண்டைக்காய் விஷயத்தை ஏன்

ஆராய்ந்து கொண்டிருக்கவேண்டும்? கையை நீட்டி, குலுக்க ஆயத்தமாகப் போகலாமா? தெலக்ஸ் புவியா இது கை குலுக்க? இன்னொரு அன்பான தோழி. எனக்கில்லை. ரத்னாவுக்கு. என்மேல் மதிப்பு வைத்த கல்யாணமான, அழகான பெண். நான் இவள் மேல் வைத்திருப்பது மதிப்பு. கூடவே வேறேதோ. அது ஆசை இல்லை. அன்பும் இல்லை. மறைவில் ஒளிந்த காமம்தானா, சொல்லத் தெரியவில்லை.

'குட் ஈவினிங்...'

என்னை அறியாமலேயே சரியான வார்த்தையோடு விலாசினியை எதிர்கொண்டேன். குட் ஈவினிங் என்று வரவேற்றாள். அவளுக்கு எதிர் இருக்கையில், நேரில் இருப்பதற்குக் கொஞ்சம் விலகி உட்கார்ந்து சிரித்தபடி அவளை நோக்கினேன்.

கொப்பும் குழையுமாகக் கொழித்து முன்னால் அமர்ந்திருந்தாள் விலாசினி. மை எழுதிய கண்கள் கவிதை சொல்ல, நெகிழ்ந்த கூந்தலோடு என்னையே பார்த்தபடி சிரித்திருந்தாள். இந்த மலையாளப் பெண்கள் ஏன் எப்போதும் அரை மணி நேரம் முன்புதான் தலைக்குக் குளித்து ஆரப்போடுவது போல் அழகாக தழைத்து வாரி சதா ஈரக் கூந்தலோடு மனதுக்குள் வந்து குடியேறிவிடுகிறார்கள்? உதடு சற்றே பெரியது. எனில், அதுவும் ஓர் அழகு.

'கிண்டியிலே ஒரு சிநேகிதி ரொம்ப நாளா கூப்பிட்டுக்கிட்டிருந்தா... இவரானா இந்த சண்டே, நெக்ஸ்ட் சண்டேன்னு பதுங்கறார்... சரின்னு நானே இன்னிக்கு கிளம்பி பார்த்துட்டுவந்துட்டேன்...'

விலாசினி சொன்னதை தேவதை சொன்னமாதிரி ஒரு வார்த்தையும் சிந்திப் போகாமல் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஸ்கூல் ப்ரண்டோ என்று விசாரித்தேன். இல்லையாம்.

'நான் ஸ்கூல் எல்லாம் திருப்புணித்துறையிலேதான்... ஆலப்புழை பக்கம்... போயிருக்கீங்களா?' ஆர்வமாக என்னைக் கேட்டாள்.

எனக்கு அங்கே வேலை இல்லாவிட்டாலும் திருப்புணித்துறை போய் வரவேண்டும். என்னைக் கவர்ந்த ஒரு தேவதையின் அவதார ஸ்தலம் அது. அது ஏன் ஒரு ஐடெக்ஸ் சிமிழ் நிறைய அடைத்த கண்மையை, ஜலதோஷத்துக்கு விக்ஸ் வேபராப் நெஞ்சில் தடவுவதுபோல், முழுசாக வழித்துக் கண்ணில் பூசி வரவேண்டும்? இதுதான் கேரள வழக்கமோ?

‘நான் ஸ்கூல் காலேஜ் எல்லாம் மெட்ராஸ்தான்’ என்று சிரித்தேன். இண்டர்மீடியட் கோர்ஸ்வரை படித்தால் என்ன, காலேஜில்தானே அதைப் படிக்கப் போனது?

‘வேலை அதிகம் இருக்கா? ஞாயிற்றுக்கிழமைகூட ஆபீஸ் போய்ட்டு வரீங்கபோல இருக்கே?’ விலாசினி கண்ணில் கருணை பொங்க விசாரித்தாள். அதில் அனுதாபமும் அன்பும் மேம்பூச்சாக இல்லாமல் உள்ளோடிக் கலந்திருந்ததைக் குழைவான அவளுடைய குரலில் அனுபவித்தேன்.

‘இல்லே இல்லே இன்னும் அவ்வளவு மோசமாப் போகல்லே... பேமிலி ப்ரண்ட்... காளிங்க ரத்தினம் சார் வாங்களேன்னு கூப்பிட்டிருந்தார்... வாரா வாரம் நானும் ஒத்தி வச்சு, இன்னிக்கு ரத்னா மாதர் சங்கக் கூட்டம்னு போனதாலே கிளம்பிட்டேன்...’ பெருமையோடு சொன்னேன்.

‘காளி சாரோடு மீட்டிங்கோ? ஓ! நீங்க ஒண்டர்புள் பெர்சன் ராமோஜி சார்.’

விலாசினி மனம் திறந்து பாராட்டியது என்னையும், சுற்றுப்புறத் தையும் குளிர்விக்க, மழை பெய்யத் துவங்கியது. திடமாக நின்று பெய்யும் வடகிழக்குப் பருவ மழை அது.

‘சார் ஒரு விஷ்... உங்களால் முடியுமா?’

‘சொல்லுங்க விலாசினி... என்ன விருப்பம் அது?’

‘ஒரே ஒருதடவை டி.டி. ராமசந்தரை சந்திக்கணும்... நீங்க போகும்போது கூட வரலாமா? அஞ்சு நிமிஷம் போதும்’

நினைத்துப் பார்க்கவே சந்தோஷமாக இருந்தது. என்னோடு விலாசினி கூட வர, டி.டி. ராமசந்தரை சந்தித்து, ‘என் எதிர்வீட்டு மிசிஸ் விலாசினி... உங்க ரசிகை...’ [நான் அவங்க ரசிகன்] என்று அறிமுகம் செய்துகொண்டு, ரெண்டு வார்த்தை பேசிவிட்டு வரலாம்தான். டி.டி. ஆர் கூட அனாவசியம். விலுவோடுகூட நடந்துபோய்த் திரும்பும் சந்தோஷம் அளவிட அரியது. ரத்னா பார்த்தால் ஊழிக்கூத்தே அரங்கேறும். நடக்கட்டும் பார்த்துக்கொள்ளலாம்.

விலாசினி உட்கார்ந்திருந்த இருக்கை சாரலில் நனைந்து கிடக்க, அவள் என் பக்கத்தில் அமர்ந்தது இன்னொரு சந்தோஷம்.

‘ஸ்திரிகள் டைப்ரைட்டிங்க் படிக்கறது அபூர்வம்… நீங்க எப்படி?’ விலாசினியைக் கேட்டேன்.

‘ஆலப்புழையிலே டைப்ரைட்டர் இன்ஸ்டிட்யூட்டில்… அத்தனையும் பாய்ஸ்… நான் மட்டும் ஒரே கேர்ள் ஸ்டூடெண்ட்… தைரியமாக டைப் படிக்கப் போனேன். மிஷின் தரமாட்டேனுட்டாங்க தெரியுமா?’ என்று சொல்லிக்கொண்டிருக்க, எதிரே இல்லாத டைப்ரைட்டர் விசைகளில் பதிந்து அதிரும் அவளுடைய அளவாக நகச்சாயம் பூசிய நீள விரல்களை ரசித்தபடி அருகில் இருந்தேன். நுங்கம்பாக்கம் வந்தது.

‘வாங்க சார், இறங்கலியா, வேறே எங்காவது போகணுமா?’

‘ஐயோ, வேறே எங்கே போக, நேரே புரசைவாக்கத்துக்கு ட்ராம்தான்.’

நான் குடையை விரித்தபோதுதான் விலாசினி தயங்கியபடி நின்றதைக் கவனித்தேன்.

‘எப்பவும் கைப்பையிலே குடை இருக்கும். இன்னிக்கு பை எடுத்து வரல்லே… உங்களுக்கு ஆட்சேபம் இல்லேன்னா…’

எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே என் காட்டில் மழை என்றது மனது. ட்ராம் வரும்வரைக்கும் ஒரே குடைக்குக் கீழ் டைப்ரைட்டிங்கா, ஷார்ட் ஹாண்டா, வந்தேமாதரம் கோஷமா, ஜெய்ஹிந்தா, நேருஜியா, நேத்தாஜியா என்று விவாதித்துக்கொண்டு அருகருகே நின்றிருந்தோம் என்று சொல்லலாம்தான். ஆனால் அதெல்லாம் பேசவில்லை. நனைந்த வஸ்திரங்களோடு, மழை வலுக்குமோ நிற்குமோ என்றுதான் குளிர நின்று பேசினோம்.

கஸ்தூரி மஞ்சளும், ஸ்வஸ்திக் பரிமள காஸ்ட்ராயில் கூந்தல் தைலமும், டாடாஸ் ஒ டி கோலோனும் மணக்க நின்றாள் அவள். ‘கேளப்பன் சார், சாரி சாரி’ என்று எதற்கோ மனச்சாட்சி மன்னிப்பு கேட்டுவிட்டு மறைந்தது. விலாசினியின் மெய்மணம் மனதில் அழிக்கமுடியாதபடி படிந்து உறைந்தது.

ட்ராமில் இயல்பாக அடுத்தடுத்து உட்கார்ந்து வந்தோம். நான் ஆசைப்பட்டதுபோல் மழை கூடுதலாகியது. புரசைவாக்கம் வந்து தெருமுனையில் இறங்கிக்கொண்டோம். வேறு எதுவும் பேச இல்லாத மௌனத்தோடு அடுத்தடுத்து நடப்பதே மனதுக்கு நிறைவாக இருந்தது.

வீட்டு வாசலில் நின்றிருந்த கேளப்பன் எங்களைக் கண்டதும் அவசரமாக குடையை விரித்தபடி ஓடி வந்தார்.

‘தேங்க்ஸ் சாரே... குடை சூடிப்போ குட்டியென்னு பறஞ்ஞுதும் கேட்டில்ல... ஞான் ட்ராம் ஸ்டோப் வரெ வந்நு நோக்கி... போயாச்சு...’ என்றார்.

என்னிடம் திரும்பத் திரும்ப நாலு தடவை, ‘சாருக்கு வளரெ புத்திமுட்டு... ஷமிக்கணும்..’ என்று சொன்னார். விலாசினியும் அதையே எதிரொலிக்க ‘ஒரு கஷ்டவும் இல்ல’ என்று நான் மறுத்தபடி வீட்டுப் படி ஏறினேன்.

ரத்னா உள்ளே கூட்டிப்போய்த் தலை துவட்டிவிட்டாள், குடையை விரித்து வெராந்தாவில் தண்ணீர் உதிர வைத்தாள். கண்ணீரும் உகுத்தாள்.

அப்புறம் கேட்டாள் – ‘கேளப்பன் அண்ணன் விலுமேல் வச்சிருக்கற நம்பிக்கையிலே பத்துலே ஒரு பங்காவது நான் உங்க மேலே வச்சுக்க ஏன் விடமாட்டேங்கறீங்க?’

‘ரத்னா இது அகஸ்மாத்தாக நடந்தது... நான் மாம்பலத்துலே... நம்பு ப்ளீஸ்.’

‘நம்பிக்கை இல்லேன்னு எப்போ சொன்னேன்... விலு மேலே எனக்கு முழு நம்பிக்கை உண்டு.’

உக்ரமாக என் உதட்டில் முத்தமிட்டாள். ராத்திரி எட்டு மணிக்கே எங்கள் வீட்டில் விளக்கணைக்கப்பட்ட ஞாயிறு அது.

‘நீயும் ஓடிகோலோன் அடிச்சுக்க ஆரம்பிச்சுட்டியா?’ ரத்னாவை கேட்க வாய்வரை வந்த கேள்வியை ஒத்திவைத்தேன். டி.டி. ராமச்சந்தரைப் பார்க்க விலாசினியை எப்போது கூட்டிப் போகலாம் என்று மனதில் எழுந்த கேள்வியும் திரும்ப உள்ளே போக, ஏஆர்பி ரோந்து போகாத ராத்திரி அது.

1946 ஜனவரி 1, செவ்வாய்க்கிழமை புதுவருடம் பிறந்தது. பிறக்கும் போதே போர் இல்லாத இந்த வருஷத்தை எப்படி எதிர்கொள்வோம் என்று இனம் புரியாத பயமோ, சங்கடமோ எட்டிப் பார்த்தது உண்மை.

ஹோ அண்ட் கோ டயரியை எனக்கும் பந்துலு சாருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளோடு தெலக்ஸ் புவனா அனுப்பி வைத்திருந்தாள். அவளுக்கு இந்தப் புத்தாண்டு பம்பாயில் ஷூட்டிங்கோடு பிறந்ததில் எனக்கு மகிழ்ச்சி.

புது வருடம் ரேடியோ செய்தி அறிக்கையோடு தொடங்கியது. ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோ தான் சூரிய வம்சத்தில் பிறந்தவர் இல்லை என்றும் தன்னையும் சராசரி ஜப்பானியனைப் போலவே ஜப்பான் நாடு கருதி நடத்த வேண்டும் என்றும் உலகுக்கு அறிவித்தார். உலக மகாயுத்தத்தில் பிரிட்டன், அமெரிக்கா மற்றும் நேச நாடுகளின் ஐக்கியப்படைத் தளபதியான ஜெனரல் மக் ஆர்தர் ஜப்பான் அரசாங்கத்திலிருந்து நாஜி ஆதரவு இனவாதிகள் கெல்லி எடுக்கப்பட்டு வீசியெறியப்படுவார்கள் என்று அறிவித்தார். மதறாஸ் புரசைவாக்கம் முத்தியால் நாயக்கன் தெருவில் சாஜு என்ற சினிமா ஆர்ட் டைரக்டர் வளர்க்கும் வெள்ளையன் என்னும் கழுதையின் குறும்புகள் சகிக்க முடியாத அளவு பெருகி உள்ளதாகச் சற்றுமுன் வந்த செய்திகள் அறிவிக்கின்றன.

கழுதை கடந்துபோன இந்த ஆறு மாதங்களில் முத்தியால் நாயக்கன் தெருவுக்கே செல்லப் பிராணியாகி இருந்தது. சுபாங்கி அம்மாள் குழம்புக் கருவடமோ, கருவாடோ முறத்தில் இட்டு வாசல் காம்பவுண்டுக்குள் சுக்காக சூரிய வெளிச்சத்தில் காய வைத்தால் எப்படியோ வாசனை பிடித்து காம்பவுண்டுக்குள் நுழைந்துவிடும். வாயில் வடாமோ கருவாடோ பிடித்துக்கொண்டு அது அடுத்து ஓடி நிற்கும் இடம் ஐயங்காரின் ரெமிங்டன் டைப் இன்ஸ்ட்டிட்யூட் வாசல். வெள்ளையனுக்கு இன்ஸ்ட்ட்யூட் வாசலில் நிறைய காகிதம் கிடைப்பதால், வத்தல் வடகத்தை அங்கே யாருக்காவது கொடுத்து காகிதம் கிடைக்க கழுதை பிரயத்னப்படுவதாக எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

சைக்கிள்விட்டுப்போகும் காகர்லா வக்கீல் குமஸ்தா பின் சீட்டில் வைத்திருக்கும் கேஸ்கட்டுகளை ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் வெள்ளையன் பாதாம் ஹல்வாவாக ருசித்துச் சாப்பிடுவதைத் தெருவே எதிர்பார்த்திருந்தது.

அடுத்த தெரு பிள்ளையார் கோவில் அர்ச்சகரான ராஜப்பா குருக்கள் எங்கள் தெரு வழியாக உயரம் குறைந்த சைக்கிளில் வரும்போது அவருடைய உச்சிக்குடுமியைப் பதம் பார்த்தது அது.

பள்ளிக்கூடம்விட்டுப் போகும் கவர்மெண்ட் பாய்ஸ் ஹை ஸ்கூல் பையன்களிடம்தான் வெள்ளையனுக்குக் கொஞ்சம் பயம். அசந்து இருந்தால் வாலில் ஊசிப்பட்டாசைக் கட்டிக் கொளுத்தி திசையறியாமல் மருண்டு தாறுமாறாக ஓடும்போது சாஜுவை மனமுருக அழைக்கும் அந்தக் கழுதை.

மாதர் சங்கத்துக்கு வரும் அங்கத்தினர்களின் பின்னாலேயே நடந்து வந்து தெருவில் பரிகாசம் உதிர்க்க வைப்பதும் வெள்ளையன் திருவிளையாடலே.

ட்ராம் கண்டக்டர் சாமிக்கண்ணுவின் ட்ராம் எதிர்ப்பட்டால், ட்ராம் பாதையைவிட்டு இறங்கி சந்தோஷமாகக் கனைத்து வழியனுப்பு வதால் ட்ராம் கம்பெனி உத்தியோகஸ்தர்களின் சிநேகிதனாகி. அவர்கள் அவ்வப்போது தரும் வாழைப்பழம் போன்ற மனுஷ்ய உணவையும், கொள்ளு போன்ற குதிரை உணவையும் உண்டுவரப் பழகியிருந்தது வெள்ளையனுக்கு.

கண்டக்டர் சாமிக்கண்ணுவின் மாமனார் மதுரையிலிருந்து வந்தபோது வெள்ளையன் என்னைப்போலவே ராஜவிசுவாசி என்று புலனானது. அவர் காலையில் வேட்டி துவைத்து உலர்த்தி துண்டோடு உட்கார்ந்து, சேர வாரீர் சகத்தீரே என்று வாசல் பெஞ்சில் உட்கார்ந்து பேசுவது இப்படி இருக்கும் –

'சாப்பாட்டுக்கு ரேஷன்... ஒழிஞ்சு போகுது... கட்டத் துணிக்கும் ரேஷனா... ஒருத்தருக்கு பத்து கஜம் துணிதானா ஒரு வருஷத்துக்கு... பத்து கஜத்துலே என்ன வரும்? ஒரு வேட்டி, சட்டை, துண்டு இல்லேன்னா ஓர் எட்டு முழப் புடவை. அவ்வளவுதான்... வருஷத்திலே ரெண்டாவது வேட்டி வேணுமா, கிடையாது, ரெண்டாவது புடவை வேணுமா, கிடைக்காது... இந்த வெளுப்பானுங்க மட்டும் ஊரிலே இருக்கப்பட்ட துணியை எல்லாம் வாரி எடுத்துப் போட்டுக்கிட்டு திரிவானுங்க... காங்கிரஸ்காரனும் இதுக்கு காரணம்தான்... அந்நியத் துணி பகிஷ்காரம் எல்லாம் சரிதான்... அந்நியத் துணியை எரி... ஆனா அதுக்கு பதிலா கட்டிக்க வேறே துணி வேணாமா? முண்டக்கட்டையா நின்னுக்கிட்டா கொடியை ஆட்டி வந்தேமாதரம் சொல்ல முடியும்? கொடியை எடுத்து இடுப்பிலே சுத்திக்க வேண்டியதுதான் போலே.'

எல்லாத் தரப்பையும் அவர் வம்புக்கிழுத்துக்கொண்டிருந்தது நிதர்சனம். அவர் வெள்ளைக்காரனை குற்றம் சாட்டி கூண்டிலேற்றி வறுத்தெடுத்துக்கொண்டிருந்தபோது வெள்ளையன் கழுதை அவர் வீட்டு காம்பவுண்ட் உள்ளே நுழைந்து ஐநூத்தொண்ணு பார்சோப் போட்டு பளீர் வெள்ளையில் துவைத்து உலரப்போட்ட வேட்டியை இட்லி சாப்பிடுகிறமாதிரி சுவைத்துக்கொண்டிருந்தது. சாமிக்கண்ணு மாமனார் வெள்ளையனோடு பொருத இயலாமல் மதுரைக்கு பயணம் வைத்தது அப்புறம்தான்.

இன்னும், பாட்டு வாத்தியார் எண்ணப்பாடம் ஈஸ்வரன், தெருவில் மூன்று பெண்களுக்கு கர்னாடக சங்கீதம் சொல்லித்தர அதில் ஒரு பெண் வீட்டு விசாலமான திண்ணையில் உட்காரும்போது, சரளி வரிசையில் தொடங்கி ராரா வேணு கோப பால என்று ஸ்வரஜதி பாடும்போது, நானும் சேர்ந்துகொள்ளட்டுமா என்று கேட்காமலேயே திவ்யமான குரல் உயர்த்திக் கனைக்கத் தொடங்கிவிடும்.

நான் சாஜு வீட்டுக்குப் போய் விசாரித்து வர ஏனோ தள்ளிக்கொண்டு போனது.

இன்றைக்கு முத்தியால் நாயக்கன் தெரு புத்தாண்டு கோலாகலத்தோடு கலகலப்பாகக் கண்விழித்தபோது கழுதை வெள்ளையன் கனைத்துக்கொண்டு யார் கையிலும் பிடிபடாமல் சுற்றிச்சுற்றி ஓடியது. எங்கள் வீட்டு காம்பவுண்டுக்குள் நுழையப் பார்த்து, ரத்னா எவர்சில்வர் தட்டில் சப்பாத்திக் குழவியால் கொட்டி முழக்க வந்தவழியே திருப்பி ஓடியது அது. திண்ணைக்கு காப்பி டம்ளரோடு போனபோது ‘இன்னும் ரெண்டே வாரத்திலே போகியும் பொங்கலும் வந்துடும். கொட்டு எல்லாம் போகிக்கு வச்சுக்க... தட்டு பொங்கலுக்கு வச்சுக்கோ’ என்றேன் ரத்னாவிடம்.

காப்பியும் சுதேசமித்திரனுமாக சாய்வு நாற்காலியில் ஆரோகணித்த போது, கேளப்பன் வீட்டுத் தோட்டத்திலிருந்து கழுதை வெளியே வந்து நின்றதைப் பார்த்தேன்.

‘அய்யய்யே... இந்த சனியன் எதை வாயிலே வச்சுட்டிருக்கு பாருங்க’ என்று ரத்னா நிலைவாசலுக்கு வந்தபோது தலையில் அடித்துக் கொண்டாள். பார்த்தேன். மார்க்கச்சை.

‘இத்தனை பெரிசா... விலுவா இருக்கும்’ என்று நாக்கில் சனி இருக்க, அபஸ்வரமாக ஆரம்பித்தேன்.

காப்பி டம்ளர் எகிறி விழ டபராவை என் கையில் இருந்து பறித்துப் போட்டுவிட்டு ரத்னா உள்ளே போகும்போது சத்தத்தோடு கதவையும் அடைத்துப்போனாள்.

விலாசினி வீட்டுத் தோட்டத்துக்குள் இருந்து நாலுகால் பிராணி வந்ததை ரத்னா பார்த்திருக்கவில்லை என்பதால், கழுதை எடுத்துப் போவது எதிர்வீட்டுத் துணி என்று தர்க்க பூர்வமாக நிரூபிக்க நான் தேர்வு செய்த

வாக்கியத்தை வேறே மோஸ்தரில், கௌதம புத்தர், அசோகர், கேளப்பன் என சாத்வீகமாக ஆரம்பித்திருக்கலாம். கேளப்பன் உள்ளாடை இல்லையே அது.

மெல்ல கதவைத் தட்டித் திறந்து உள்ளே போனேன். ரத்னாவின் சொல் மழை.

‘காலையிலே சுதேசமித்திரன், தினமணின்னு ஊர்ப்பட்ட பேப்பரை படிக்கறதெல்லாம் விலு குளிச்சுட்டு உள்பாடி உலர்த்தறதை ரசிச்சு ரசிச்சு உள்ளே படம் பிடிச்சு வச்சுக்கத்தானே? பெரிசா கச்சு பார்த்த ஷணமே விலாசினியோடதாம்… மனசுக்குள்ளே இது தவிர வேறே எதுவும் காயப் போட்டிருக்காதோ… இப்ப சொல்றேன்… கேட்டுக்குங்க… புது வருஷமோ, பழசோ… உருப்படவே மாட்டீங்க… அது ஒரு கழுதை… நீங்க இன்னொண்ணு…’

‘இல்லே ரத்னா, நான் பேப்பர் படிக்கறபோது அந்தப் பொண்ணு குளிச்சுட்டு தலையாத்திக்கிட்டு நிப்பாங்களே தவிர உள்பாடி எதுவும் அப்போ உலர்த்தறது இல்லை’ என்று மறுபடி அவள் வலையில் விழுந்தேன்.

‘அதானே… கிண்ணுனு ஒரு மலையாளிப் பொண்ணு குளிச்சுட்டு வாசல்லே நின்னு தலையாத்தக் கூடாதே… எப்படியோ புத்தியிலே தந்தி அடிச்சு நாக்கிலே ஜலம் ஊறும்… எல்லா வேலையையும் போட்டுட்டு திடும்னு பார்க்க வந்து நின்னுடுவீங்களே… எனக்கு விலு போல தலைமுடி அவ்வளவு இல்லேதான்… சிடுக்கும் இல்லே… நீளமா தலைமுடி நம்ம தெருவிலேயே ஏன் நம்ம வார்டிலேயே ரெண்டே பேருக்குத்தான் வாய்ச்சிருக்கு… இன்னொண்ணு யாரு தெரியுமா? இங்கே மாதிரி அங்கேயும் போய் நில்லுங்க… போங்க’

சொல்லிக்கொண்டு இன்னொரு முழு டம்ளர் சுடச்சுட காப்பி எடுத்து வந்து தந்தாள் என் மனைவி. வாய் என்னதான் கோபித்தாலும் கையும் மனசும் உபசரிக்க மறக்காது.

நான் காப்பி குடித்தபடி, தெருவில் வேறே யாருக்கு நீளமான தலைமுடி என்று யோசித்தேன்.

‘அதானே யோசனை… சரி தொலையுங்க’ என்றபடி அவள் சொன்ன பெயர் – ராமண்ணா ஜோசியர். இதைக் கேட்டதற்குக் கேட்காமலேயே இருந்திருக்கலாம்.

வாசலில் சத்தம் அடங்கியிருந்தது. கேளப்பன் சாவகாசமாக வெள்ளையனின் வாயில் ஒரு பிடி தோட்டத்து இலை தழையை உருட்டிக் கொடுத்து, கழுதை கவ்விக்கொண்டிருந்த மார்க்கச்சையை வெளியே எடுத்துக்கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும், தோளில் துண்டு போல் கச்சையைப் போட்டபடி ஒரு அடி முன்னால் எடுத்து வைத்து, 'நவ வர்ஷ ஆசம்சகள் ஹெப்பி நியூ இயர்' என்று கைகொடுத்தார். அவர் தோளைப் பிடிவாதமாகப் பார்க்காமல் நானும் வாழ்த்து சொன்னேன்.

'இந்த கழுத சல்யம் தாங்க முடியலே ராமோஜி சார்... மொலக் கச்சை எடுத்துட்டு ஓடுது... கழுத வளர்த்தறவரோடுகூட ஒந்நு சொல்லுங்க...'

அவர் சிரிக்க, எனக்கு தடைவிதிக்கப்பட்ட சொல்லைக் கேட்ட சங்கடம்.

'ஆமாமா, சொல்றேன் சாஜூகிட்டே.'

'நல்லா மராட்டியிலே சொல்லுங்க' என்றபடி கேளப்பன் திரும்பினார்.

சாஜூவும் வீட்டுக்கு வரச்சொல்லிக் கூப்பிட்டுக்கொண்டே இருக்கிறார். ரத்னாவை சந்தித்து கஸ்தூர்பா மாதர் சங்கத்தில் சேர வந்த அவர் பெண்ஜாதி குந்தியும் அப்படியே. அவள் முகத்தில் 'கூடப் பிறக்காத சகோதரி' 'கருப்பு வெளுப்பில் என் தங்கை' என்று சினிமா நோட்டீஸ் பாணி முத்திரை குத்தியிருந்ததால் மனதில் அறை எதுவும் அவளுக்காக ஒதுக்க வேண்டிய சிரமம் இல்லாமல் போனது.

'ஸ்வாகத் ஆஹே பாவு.'

இந்த சகோதரனுக்கு மராட்டியில் நல்வரவு சொல்லி வரவேற்றாள் குந்தி. பின்னாலேயே சாஜூயும் கை கூப்பியபடி வந்தார்.

'துமி சகளே கஸே ஆஹத்?'

அவர்கள் எல்லோருடைய நலமும் – கழுதைக்குட்டி உட்பட – பொதுவாக விசாரித்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். காப்பி, டீ எதுவும் வேண்டாம் என்று முன் ஜாக்கிரதையாகச் சொல்லி வைத்தேன்.

இந்தத் தெருவிலேயே முதல் தரமான காப்பியும் டீயும் ரத்னா கலந்து தருவதுதான். புரசைவாக்கத்திலேயே என்றுகூடச் சொல்வேன்.

சமையல்கட்டில் ஏதோ களேபரமாக சத்தம். அங்கே இருந்து பல்டி அடித்து ஹாலுக்கு வந்துபோகிற போக்கில் தலைகீழாக நின்றபடி எனக்கு குட்

மார்னிங் சொல்லிப் போனான் பப்லு.

பாரதியார் எழுதிய அந்தரடிச்சான் சாகிப் கதையை சினிமாவாக எடுத்தால், தாடி, மீசை ஒட்டி பப்லுவை சின்ன அந்தரடிச்சான் சாகிப்பாக நடிக்க வைக்கலாம். அப்படி குட்டிக்கரணமும், கையால் நடையுமாக அவன் வித்தியாசமானவன்.

'சார், ஹவுஸ் ஓனர் நளமகராஜ் உங்க ஃப்ரண்ட்தானே?'

சாஜு என்னை கவலையோடு பார்த்தபடி கேட்க, குந்தி ஒரு டம்ளரில் பானகத்தோடு வந்து நின்றாள்.

'காப்பி டீ எல்லாம் கெடுதல்... பானகம் எடுத்துக்குங்க அண்ணா, ராமச்சந்திர மூர்த்திக்கு நம்ம வீட்டுலே தினசரி காலையிலே நைவேத்தியம் இது' என்றபடி அவள் கொடுத்ததைத் தட்டாமல் வாங்கிக்கொண்டேன்.

நள மகராஜ் என்ற பட்டப்பெயர் கொண்ட அப்புக்குட்டி, சாஜு இருக்கும் இந்த வீட்டு ஓனர். வீட்டைக் காலி செய்யச் சொல்லி இருப்பார் என்பதுதவிர சாஜு அவர் பெயரை பிரஸ்தாபித்ததற்கான காரணம் வேறு எதுவும் இருக்காது.

என்ன, ஏதாவது வாடகை பிரச்னையா என்று விசாரித்தபடி பானகம் முழுவதையும் குடித்துத் தீர்த்தேன், சுக்கும், மிளகும், வெல்லமும், ஏலப் பொடியும் சரியான விகிதத்தில் கலந்த அந்த இனிப்பு உரைப்பு தூக்கலான பானத்தைக் குடித்ததும் அபங் பிழையின்றிப் பாட வரும். லாவணி ஆடலாம்.

'வாடகை எதுவும் பிரச்னை இல்லேண்ணா. வாடகைக்கு இந்த வீட்டுக்கு வந்தபோதுதான் ஹௌஸ் ஓனர் கல்யாண சமையல்காரர்னு தெரிஞ்சுது. நாங்களும் சமையலை தொழிலா வச்சிருக்கற ஃபேமிலிதான்... ஓனர் கிட்டே ஆதரவு வாங்க, எங்க குடும்பம் நாலு தலைமுறையா புனேயிலே மித்தாய் ஸ்டால் வச்சு நல்ல வியாபாரம் நடக்குதுன்னு சொன்னதை அவர் பிடிச்சுக்கிட்டார்... இங்கே சரிவர தெரியாத, அச்சு அசல் மராட்டி இனிப்பு, காரம் எல்லாம் செய்ய கத்துக்க அவங்க வீட்டம்மாவை அனுப்பறார்... அவங்களுக்கு ஸ்வீட் ஸ்டால் வச்சுக்கொடுக்கற யோசனைபோல... போன ஞாயிறு சிரோட்டி, சுருள் பூரி, வரும் புதவாரம் பூரண் போளி, ஞாயிறு அன்னிக்கு மோதகம், அடுத்த திங்கள் கச்சோடி, அதுக்கு அடுத்த வாரம் பாம்பே காஜா இப்படி அசல் மராத்தி பலகாரமா லிஸ்ட் போட்டு

வீட்டம்மாவை அனுப்ப ஆரம்பிச்சிருக்கார்... வீட்டு சொந்தக்காரர் கேட்டா மத்தவங்க கேட்பதைவிட முக்கியமாச்சே. இந்த வீடு இல்லேன்னா வேறே எங்கே வாடகைக்கு இடம் கிடைக்கும்? இதெல்லாம் செய்யலாம்தான். பருப்பும், எண்ணெய் நெய்யும், ஜீனியும் வாங்க வேணாமா? அடுப்புலே விறகு போடற செலவு வேறே... காசுக்கு எங்கே போறது அண்ணா?'

எர்ரகுண்ட்லாவைக் கடக்கும் மெட்றாஸ் – தாதர் எக்ஸ்பிரஸ் வேகத்தில் குந்தி பேசினாள்.

'பலகாரச் செலவில் பாதிக்கு பாதியாவது வாடகையிலே கழிச்சுக்க முடிஞ்சா இந்த மாசம் கையிலே காசு ரொம்ப கஷ்டப்படுத்தாமே புழங்கும்.' சாஜு கூடவே முறையிட்டார்.

எனக்கு இந்த முறையீட்டில் புரியாத பகுதி உண்டு. அப்புக்குட்டியின் பெண்டாட்டி இறந்துபோய் பத்து வருஷமாகிறது. நான் வீடு விலைக்கு வாங்கி இங்கே குடி வந்ததற்கு ஒரு மாதம் முன்புதான் அந்தம்மா நோய் கண்டு மரித்தது. அவள் எப்படி ஸ்வீட் செய்யக் கற்றுக்கொள்ள வந்தது?

ரத்னா இம்மாதிரி புதிர்களை விடுவிக்கக்கூடியவள். அவளிடம் கேட்கலாம் என்று சமாதானப்படுத்திக்கொண்டு, நான் வந்த விவகாரத்தை ஆரம்பித்தேன். கழுதை கெட்டால் குட்டிச்சுவரோ என்னமோ, கழுதை தெருவிலே ஓடினா ஒரு வீடு, வாசல், கதவு மிச்சமிருக்காமல் தொந்தரவுதான்.

'ராமோஜி சார் கொஞ்சம் அப்புக்குட்டி சார் கிட்டே எடுத்து சொல்லணும். இல்லேன்னா இன்னொரு ஐடியாகூட கைவசம் உண்டு' என்றார் சாஜு.

'அந்தம்மாவும் இந்தப் பொண்ணும் சேர்ந்து மாம்பலத்துலே மராட்டா போளி ஸ்டால் வச்சுடலாம்... அப்புக்குட்டி இடம் பிடிச்சுத் தந்து, கொஞ்சம் முதலீடும் உதவட்டும்... பிசினஸ் நல்லா போகும்... இனிப்பு, கார போளி மட்டும் போதும்...'

'அண்ணா இந்த ஊர்லே போளியை பெயர் சொல்றது கூட பாதாம்லே வர ப மாதிரி boli–யாம். சரியான உச்சரிப்போட ப–வை அழுத்தமா போட்டு சொல்லக் கத்துக்கொடுத்துட்டு சித்திவிநாயக் போளி ஸ்டால்னு பேர்வச்சுடலாம்' என்றாள் குந்தி அழகாகச் சிரித்து.

நான் கழுதை கிடக்கு என்று எழுந்து வந்தபோது சாஜு வீட்டு சமையலறையில் இருந்து போளி கமகமவென்று வாசனையடித்துக்

கொண்டிருந்ததாக நாசி கற்பனை செய்தது.

ரத்னா அப்புக்குட்டியிடம் பேசி கடை போடுவதை முடித்துத் தருவதாகவும் அப்படிச் செய்தால் எவ்வளவு கமிஷன் தருவார்கள் என்றும் கேட்டாள். தினசரி ரெண்டு பேர் சாப்பிடும் அளவு, எட்டு இல்லை பத்து இனிப்பு, கார போளி டெலிவரி வேண்டும் என்று விளையாட்டுக்காகக் கேட்க, அப்படியே ஆகட்டும் என்றாள் குந்தி. போய் வந்து அரைநாளில் விஷயம் முடிந்துவிட்டதாக ஆபீஸ்விட்டு நான் வந்தபோது அறிவித்தாள் ரத்னா. கமிஷன் வேண்டாமென்று பெருந்தன்மையாகச் சொல்லிவிட்டதாகவும் சொன்னாள் அவள்.

அப்போதுதான் எனக்கு அப்புக்குட்டி சம்சாரத்தின் சமாசாரம் நினைவு வந்தது. ரத்னா கண்ணை ஒரு வெட்டு வெட்டி, பொய்க் கோபம் காட்டினாள்.

‘இதெல்லாம் மறக்கவே மாட்டீரே ராவ்ஜி. அப்புக்குட்டி ஒரு குப்புக்குட்டியை கீப்பாக வச்சுக்கிட்டிருந்தா உமக்கு லஹரி ஏற ஆரம்பிச்சுடுமே அவளைப் பார்க்காமலேயே... பார்க்கணும்னு மனசு கிடந்து அடிச்சுக்குதா?’

‘ஆமா, பெரிய கிளியோபாட்ரா... விலாசினிக்கு தங்கச்சி...’ நான் வாசலுக்குப் போனேன்.

அடுத்த ஞாயிறு கழுதை வெள்ளையன் எந்த விஷமமும் யார் வீட்டிலும் செய்யாமல் சமர்த்தாக தன் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தது. அது மட்டுமில்லை, அதன் பக்கத்தில் திண்ணையில் இருந்து காலைத் தொங்கப்போட்டுக்கொண்டு பப்லுவும் சாதுப் பிள்ளையாக, அந்தரடிச்சான் சாகிப் அவதாரமாக இல்லாமல் உட்கார்ந்திருந்தான்.

மாம்பலத்தில் சித்தி விநாயக் போளி ஸ்டால் திறக்கிற நாளாம் அது. குந்தி என்னையும் ரத்னாவையும் கூட்டிப்போய் விளக்கேற்றி ஆரம்பிக்க வைத்தாள்.

மெட்றாஸுக்கு வந்தது நல்லதா போச்சு. ஆர்ட் டைரக்ஷன் வாய்ப்பு கிடைக்காட்டாலும் போளி ஸ்டால் நடத்த முடியுதே என்றார் ஆர்ட் டைரக்டர் சாஜு. பம்பாயில் வடா பாவ் கடை நடத்தினால் வரும் பிசினெஸ் போளிக்கடை, தோசைக்கடை என்று நடத்தினால் வராதாம்.

வார இறுதியில் ரத்னா இச்சல்கரஞ்சி போக வேண்டி வந்தது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கல்யாணமாகி முப்பத்தைந்தாம் வருடம் பூர்த்தியானதைக் கொண்டாட எங்களைக் கூப்பிட்டிருந்தார்கள். ஆபீஸ் மும்முரம் காரணம் ரத்னாவை மட்டும் செகண்ட் க்ளாஸ் டிக்கெட் எடுத்து பூனா அங்கிருந்து இச்சல்கரஞ்சி போக அனுப்பி வைத்தேன். ரொம்ப நாளைக்கு அப்புறம் தனிமையை உணர்ந்த காலம் அது.

'ராமோஜி சார் ராமோஜி சார்.'

நான் ஆபீஸுக்கு போக ட்ராமுக்காக காத்திருந்தபடி மெல்ல நடக்கும்போது சாஜு பின்னால் இருந்து கூப்பிட்டார். என் வீட்டு வாசல் கொஞ்சம் அகலமாக இருந்தால் ட்ராம் கண்டக்டர் சாமிக் கண்ணு வீட்டுக்குள் வந்தே ட்ராமில் ஏற்றிக்கொண்டு போவாராக்கும்.

'என்ன விஷயம் சாஜு?'

அவர் பக்கத்தில் ஓடிவந்து சொன்னார் –

'உங்களுக்கு காளிங்க ரத்தினம் சாரும் தெலக்ஸ் புவனாவும் ஆப்தர்களாமே... கொஞ்சம் எனக்கும் அறிமுகப்படுத்தி வையுங்களேன்.'

ஆகட்டும் என்று சொல்வதற்குள் சாமிக்கண்ணுவின் ட்ராம் என்னை எதிர்கொண்டு நின்றது. நேரே ஆபீஸ்.

பந்துலு சாருடைய நாற்காலி காலியாக இருந்தது. வீரையா என்னைப் பார்த்து ஓட்டமாக ஓடி வந்து, காலையில் பந்துலு சார் வந்து முக்கியமான பைல்களைப் பார்த்துக் கையெழுத்துப் போட்டு, எனக்கு இரண்டு பழுப்பு கவர்களை எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார் என்று அறிவித்தான்

பந்துலு சார் கவர்னரின் செக்ரெட்டரி துரைக்கு ஃபோன் பண்ணி, அந்த துரை சொன்னபடி நடந்ததாம் இது. வீரையா ஒன்பது மணிக்கு ஆபீஸ் வரும்போது வெளியே போய்க்கொண்டிருந்தாராம் பந்துலு. அவர் வீரையாவிடம், 'இந்தக் கடுதாசிகளை அவசியம் ராமோஜி சாரிடம் சேர்த்துவிடு' என்று சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனதாகச் சொன்னான் அவன்.

முதல் கடிதம் என் பெயர் கவரில் எழுதியது. அடுத்தது மிஸ்டர் ஆர்தர் ஆஷ்லே என்று கவர்னரின் செக்ரெட்டரிக்கு விலாசம் எழுதியது.

‘அன்புள்ள ராமோஜி, என் தகப்பனார் வால்ட்டேரில் நேற்று ராத்திரி பரமபதம் அடைந்ததாக தந்தி வந்திருக்கிறபடியால் நான் பத்து நாள் வாய்மொழியாக லீவு வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறேன். லீவ் லெட்டரை மிஸ்டர் ஆஷ்லேயிடம் கொடுக்கவும். டெம்பரரி சூபரின்டெண்டெண்ட் ஆக உம்மை நியமிக்கச் சொல்லியிருக்கிறேன். நான் வரும்வரை நல்லபடி நடத்திக் கொடுக்கவும்.’

நான் இன்னொரு தடவை கடிதத்தைப் படித்தேன். பந்துலு ரயிலிலோ பஸ்ஸிலோ இப்போது பதைபதைப்போடு போய்க்கொண்டிருப்பார். எல்லா பிரயாண சம்பந்தமான கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு பன்னிபாய் பந்துலுவும் கூடவே அடக்க ஒடுக்கமாகப் பிரயாணத்தில் இருப்பார்.

நான் இப்போதில் இருந்து சூபரின்டெண்டெண்ட் ஆக பந்துலுவின் இடத்தில் உட்கார்ந்து சகல உலகமும் அடக்கியாண்டு அதிகாரம் செலுத்த ஆரம்பித்திருக்கிறேன். நான் செக்ரெட்டேரியட் பென்ஷன் செக்ஷன் ஆக்டிங் சூப்பரெண்டெண்ட்.

பந்துலுவின் நாற்காலியில் உட்கார்ந்தபோது டேபிளில் கண்ணாடி ஷீட்டுக்குக் கீழே அவர் வைத்திருந்த தெலுங்கு பிரதேசம், கன்னடம், மலையாளம், தமிழ்தேசக் கோவில்களின் கோபுரங்கள் – ஸ்தல மூர்த்தி படங்களை ஒவ்வொன்றாகத் தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொண்டு வேலையைத் தொடங்கப் பார்த்தால் இன்றைக்கு சாயந்திரம் வரை மேஜைக் கடவுள்களோடுதான் போகும் என்று புரிந்துகொண்டேன்.

ஒரே நமஸ்காரமாக எல்லா அவதாரங்களுக்கும் கை குவித்து, கவர்னர் ஆபீஸ் செக்ரட்டரி என்ற உப தலைமை அதிகாரி துரையைப் பார்க்க அவர் கேபினுக்குப் போனேன். இவருக்கு மேல், கவர்னருக்குக் கீழே இன்னும் ஒரு துரை உண்டு... சீப் செக்ரட்டரி டு கவர்னர்... அவரையும் தரிசனம் செய்ய நாள் நெருங்கி வருகிறது...

நான் இத்தனை வருஷம் கோட்டையில் உத்தியோகம் பார்த்தாலும் ஒரு துரையின் ஆபீசிலும் இதுவரை நுழைந்து பாதம் பணிந்ததில்லை. அதெல்லாம் மாறப்போகிறது பந்துலு அப்பா தயவால்.

‘இருங்க சாமி, தொரை கையிலே சொல்லிட்டு வரேன்.’

டவாலி வீராச்சாமி செட்டியார் என்னை ஒரு பிரம்பு உள்வாங்கிய நாற்காலியில் இருத்திவிட்டுப் போனார். துரையை முதல் தடவையாகப்

பார்த்துப் பேசப்போகிறேன். கையில் எலுமிச்சம்பழம் கூட எடுத்துப் போகவில்லையே என்று மனம் குறைப்பட்டது. எலுமிச்சம்பழம் என்னத்துக்காக எடுத்துப் போகணும் என்று இதுவரை தெரியாமலேயே எட்டு வருஷம் கவர்மெண்ட் சர்வீஸில் உழைத்துத் தள்ளிக்கொண்டிருக்கிறேன்.

துரை தனக்குத்தானே ஏதோ பேசிக்கொண்டு சிரித்துக்கொண்டு இருந்தபோது நான் கதவைத் தட்டிவிட்டு உள்ளே போனேன். உள்ளே நுழைந்து இடுப்புவரை குனிந்து வணங்கவேண்டும் என்று கேட்டிருந்தேன்.

கையில் பந்துலு சார் எழுதிய கவரோடு குனிய, தன்னிச்சையாக வாயுப் பிரிந்தேன். இதேதடா சங்கடம் என்று துரையிடம் மன்னிப்பு கேட்க, ‘எனக்கு ரொம்ப பிடிச்சது சுபாவமா பேசி, சிரிச்சு, வாயு பிரிந்து... நாம் எல்லாரும் மனுஷங்க. கல் சிலை இல்லை’ என்றான் துரை. ‘எஸ் சார்’ என்றேன் உடனே.

‘பந்துலு அதானே உன் பெயர்?’

என்னைக் கேட்டான் துரை. இல்லை என் சூபரின்டெண்டெண்ட் பெயர் என்றேன்.

‘பந்து என்றால் பால்ஸ் தானே?’ என்று என் அரைக்குச் சுட்டி அடுத்த சிரிப்பு.

‘அது இல்லே சார், ஒரு சர்நேம்... துணைப்பெயர்... அதற்கெல்லாம் அர்த்தம் இல்லை’ என்றேன்.

‘உனக்கு பால்ஸ் இல்லை என்கிறாயா?’ என்று அடுத்த கேள்வி. கேணைத்தனமாக சிரித்து நின்றேன்.

‘அப்போ இன்னும் ரெண்டு வாரம் அந்தக் கிழவன் கண்ணிலே படமாட்டானா? ரொம்ப நல்லது. உனக்கு எத்தனை பெண்டாட்டி?

‘ஒன்றுதான்’ என்றேன்.

‘எனக்கு லண்டன்லே ஒண்ணு. இங்கே இன்னொண்ணு. கருப்பு அழகி. கம்சலை மாதிரி’ என்றான். செயிண்ட் ஜார்ஜ் கோட்டை முழுக்க கம்சலை பிரசித்தம். துரைக்கு வீரையாபற்றித் தெரியாது. ரட்சைப்பட்டான் பயல்.

‘உன் பேரென்ன?’, வெளியே வரும்போது கேட்டான். ராமோஜி ராவ் என்றேன்.

‘ஓ நீதான் ராமோஜியா? பெர்மனெண்ட் சூப்பரின்டெண்ட்டெண்ட் போஸ்டுக்கு உன்னைத்தான் சீஃப் செக்ரட்டரி ரெகமெண்ட் பண்ணியிருக்கார்... உனக்கு தெரியாதுன்னா இப்போ தெரிஞ்சுக்க... வெளியே சொல்லிடாதே... சொன்னா உன் பால்லை நெரிச்சுடுவேன்...’

அவன் கையைப் பிசைகிறார்போல, கைகுலுக்குவதுபோல கையசைத்து விடைகொடுக்க, ஆனந்தம், பேரானந்தம்.

நான் வெளியே வந்தபோது டவாலி செட்டியார் ஓடி வந்து துரை கொடுத்ததாகக் கையில் கொடுத்துப் போனான். இன்னும் சீவாத பெருமாள் செட்டி அண்ட் சன்ஸ் பென்சில் அது. அன்பளிப்பு தந்ததாகவாம்.

பந்துலுவின் மேஜை மேல் குவிந்து கிடந்தன பழையதும் புதியதுமாக ஃபைல்கள். நான் தினசரி ஏதாவதுபற்றி அவரோடு பேச வரும் போதும் அதெல்லாம் இருந்தாலும், இந்த நாற்காலியில் உட்கார்ந்ததும் அதிகமாகப் பெருகி எனக்காகக் காத்திருப்பதாக பிரமை. என்னைப் பெருங்காயமாகக் கரைத்து ஒன்றுமில்லாமல் செய்ய இத்தனை ஃபைல்கள். இன்னும் வருகின்றன.

நான் முதல் ஃபைலைத் திறந்தேன். நரசய்யாவுக்கு விஜயவாடா கலெக்டர் ஆபீசுக்கு இட மாற்றம் அனுமதித்து நோட் போட்டிருந்தது. ஆராவமுதன் போட்ட நோட்டு. அவர் தலை கதவுக்கு அந்தப் பக்கம் தெரிந்தது. நான் நிமிர்ந்து பார்த்து வர உத்தரவிடப் பதைபதைப்புடன் அவர் காத்திருந்தார்.

ஆராவமுதனை உள்ளே வரச்சொல்லி வீரையா மூலம் சொல்லி விட்டேன். அதிகாரம் பெண்போதை மாதிரி. அதைவிட அதிகம். வைப்பாட்டியோடு குலாவிக்கொண்டிருப்பதை அடுத்தவன் பார்த்தால் சில பேருக்கு போதையாவதுபோல. அதிகாரத்தோடு உலவிக் கொண்டிருப்பதை இன்னொருத்தன், அதுவும் நேற்றுவரை தோளில் கை போட்டுக்கொண்டு கூட நடந்து வந்தவன் வாயையும் ஆசனத்தையும் பொத்தி ஒதுங்கி மரியாதையோடு நின்று பார்ப்பதை கடைக்கண்ணால் நோக்குவது அதிக போதை தருவது.

எனக்கு அது வேண்டியிருக்க வீரையாவைக் கூப்பிட்டபடி பைலைப் படிப்பதாக திறந்து வைத்துக்கொண்டேன். மே ஐ கம் இன் என்று ஆரம்பித்து பலகீனமாக சார் என்று முடித்து சூபர்ந்யூமரெரி ஆராவமுதன் கேபினின் சிறிய அரைக்கதவைத் திறக்கக் கை வைத்தபடி எட்டி எட்டி உள்ளே பார்த்து நின்றான். கம் இன் கம் இன் என்று பொறுமை இழந்த

வனாகச் சொல்லி ஃபைலில் ஆழ்ந்திருந்ததாகக் காட்டிக்கொண்டேன். ‘அந்த ஃபேன் சுவிட்ச்சை போடச்சொன்னது காதில் விழலியா?’ என்றேன் தலையை ஃபைலில் நட்டபடி.

‘ராம்... சார்... என் கிட்டேயா சொல்றீங்க...’ ஆராவமுதன் குழம்பி நிற்பதை ரசித்தபடி நரசய்யாவை கூப்பிடும் என்றேன் அலட்சியமாக. வீரையாவும் நரசய்யாவும் உள்ளே நுழைந்து ஓரமாக நிற்க, ஆராவமுதன் எனக்கு விசிறி சுற்ற வைக்க ஓடிப் போய் சுவிட்ச் போட, அதிகாரம் மமதையாக கண்ணைக் கிறக்கியது.

‘வாரும் ஆராவமுதன்... ஒரு நிமிஷம்’ என்று அவரை நிறுத்தி ஒரே தட்டில் அவரையும் வீரையா, நரசய்யாவையும் வைத்தேன்.

‘நரசய்யா, உன் டிரான்ஸ்பருக்கு சிபாரிசு வந்திருக்கு... என்ன விஷயத்துக்காக ட்ரான்ஸ்பர் இப்போ கேக்கறே? இங்கே இருந்து அங்கே போக – எங்கே... யெஸ் விஜயவாடா... செலவு ஆகுமேப்பா... எல்லாம் சர்க்கார் தலையிலே போடற உத்தேசமா’ என்று ஈவிரக்கமின்றிக் கேட்டேன்.

‘எவ்வளவு ஆகும் அதுக்கு? தனியா செலவுக் கணக்கு எழுதிக் காட்டியிருக்கணுமே...’

ஆராவமுதன் மரியாதையோடு ஃபைலை வாங்கி நடுங்கும் கைகளோடு இரண்டு பக்கம் தள்ளி விவரம் வாசித்தார் – ‘மூன்றாம் வகுப்பு ரயில் மார்க்கமாக மதறாஸ் விஜயவாடா போக மூணு பேர் – நரசய்யா, பெண்டாட்டி, மகன் மூணு வயசு – செலவு ரெண்டரை டிக்கெட் ஆறு ரூபா, லக்கேஜ் ரெண்டு ரூபா ஆக மொத்தம் எட்டு ரூபாய்...’

‘யுத்த காலத்திலே இருக்கறதைவிட யுத்தம் ஓய்ந்த இப்போ சிக்கனம் கடைப்பிடிக்கணும்னு கவர்னர் கழுதையா கத்திக்கிட்டிருக்கார்... நீங்க பாட்டுக்கு ஊரான் வீட்டு நெய்யே என் பொண்டாட்டி கையேன்னு வாரி வழங்கறீங்களே.’

ஆராவமுதனைப் பார்வையால் எரித்தேன். சூப்பரிண்டெண்ட் நாற்காலியின் விசேஷம் அதில் உட்கார்ந்ததும் மிடுக்கோடு பேசத் தன்னாலேயே வந்தது.

எட்டு ரூபா செலவு தரமுடியாது. அஞ்சு ரூபாய்தான்... ரெண்டரை டிக்கெட் இல்லே ரெண்டு டிக்கெட்... லக்கேஜுக்கு தனியா தரமுடியாது... பட்டவர்த்தனமாக உரைத்து, ‘என்னப்பா நரசய்யா சரிதானே?’ என்று

ஆராவமுதைப் பார்ப்பதைத் தவிர்த்து நரசய்யாவை நோக்கியபடி சொன்னேன்.

அவன் விரைப்பாக நின்று அலட்சியமாக பதில் சொன்னான் – ‘மூணு ரூபா கூட வேணாம் சாமி... சர்க்காருக்கு செலவு நிறைய இருக்கும்... வைப்பாட்டி வீட்டுக்கு மாகாணிக் கிழங்கு ஊறுகா போட்டுத் தூக்கிட்டு போக ரிக்ஷா கூலி எல்லாம் சர்க்காருக்கு முக்கியமான செலவு ஆச்சே... தோள் மேலே காலு... சுளுக்கிக்கப் போவுது... பார்த்து... உடும்புத் தைலம் வாங்கிப் பூசி... அதெல்லாம் கிடக்கட்டும்... கவர்னர் கழுதையா கத்தறாராமே... அடடா... ரொம்ப மருவாதியான விஷயம் ஆச்சே..’

நான் தடாரென்று அதல பாதாளத்தில் கால் இடறி விழுந்த மாதிரி உணர்ந்தேன். கவர்னரையும் கழுதையையும் ஒரே வாக்கியத்தில் சேர்ந்து வரும்படிக்குச் சொல்லியிருக்கக்கூடாது... மாகாணிக் கிழங்கு... வைப்பாட்டி வீடு... ரிக்ஷா கூலி... ஐயோ... என்ன சொல்கிறான் இழவெடுத்தவன்... தோள் மேலே கால்... உடும்பு தைலம்... இதென்ன விஷயம்... வீரையாவும் ஆராவமுதனும் கூட நக்கலாக பார்த்த மாதிரி இருந்ததே... என்ன சமாசாரமாக இருக்கும்..

‘சரி ஐயா, நீங்க உங்க சௌகரியப்படி செய்யுங்க... சார்... உங்களுக்கு கண்வலி வந்திருக்காமே... கம்சலை சொல்லிச்சு... அதைப்பார்த்து கண்ணடிச்சீங்களாம்... நீங்க நாக்கு அழுகின மாதிரி அசிங்க அசிங்கமா, ஆபாசமா பேசினாலும் பேசுவீங்க... ஆனா, சின்னப் பொண்ணைப் பார்த்து காவாலித்தனமா கண்ணடிக்க மாட்டீங்கன்னு அதுங்கையிலே சொன்னேன்... கண் வலியிலே என்ன செய்யறோம்னே தெரியாம போயிருக்கலாம்... போகுது போ... கண்ணுலே உடும்பு தைலம் போட்டுக்க முடியாதுதான்... வேறே மருந்தே இல்லையா என்ன?’

சொல்லியபடி நரசய்யா கைக்குட்டையால் பின்னங்கழுத்தைத் துடைத்துக்கொண்டு போனான்.

சதுரங்கத்தில் செக் வைக்கப்பட்ட ராஜா மாதிரி முழித்துக் கொண்டிருக்க, அந்தப் படையெடுப்பு நரசய்யாவுக்கும் கூடவந்த ஆராவமுதுக்கும் வெற்றிமுகத்தைக் காட்டியதாகத் தெரிந்தது. வீரையா வெளியே போகும்முன் திரும்பி வந்து மெல்லிய குரலில் அதிகாரமாகச் சொன்னான் – ‘சார், தோஸ்த் இல்லியா நீ? கம்சலை புருஷன் ஒரு மாதிரி பட்டவன்... எனக்கு என்னமோ பேச, சிரிக்க சிநேகிதன்னு சலுகை... எல்லோருக்கும் முடியாது... அதும்மேலே அத்தனை இஷ்டம் வேணாம்... சொல்லிட்டேன்...

ஆமா, உடும்பு தைலம் இங்கே இருந்து எடுத்துப் போவியா மாம்பலத்துலே வாங்குவியா?’

அவன் சற்று உரக்க ஏதோ தெலுங்கு பாடலை முணுமுணுத்தபடி, ‘போடா மயிரே’ என்று என்னைப் பார்த்து வெளியே போக, என் முதல் சூப்பரெண்ட்டெண்ட் தினப் பகல் ஊர்ந்து போனது.

கேண்டீனுக்குப் போனபோது எனக்கு அதிகார போதை தலைக்கேறி இருந்ததாக உணர்ந்தேன். எதிர்ப்பட்ட எல்லோரும் மரியாதையாகச் சிரித்து ஒரு அடி விலகி நின்று கைகுவிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

நாலைந்து பேர் அப்படி மனசைக் குளிர்வித்தார்கள்தான். ஆனால் பல பேர், என்னைப் பார்த்ததும் ஒதுங்கி ரெண்டு மூணு பேராக நின்று உற்றுப் பார்த்து ஏதோ தகவல் சரி பார்க்கிறதாகத் தலையாட்டிக் கொண்டிருந்ததாகத் தோன்றியது.

நல்லா வயிறு எரியட்டும்… நான் டெம்பரரி சூபரின்டெண்டெண்ட்… அது நிரந்தரமாக எல்லா சூசனைகளும் உண்டு… ஆகட்டும் இவர்கள் பிருஷ்டத்தில் சூடு வைத்து இழுத்து வரச்சொல்லி மண்டியிட வைக்க மாட்டேனா என்ன?

சாயந்திரம் சீக்கிரம் கிளம்பினால் என்ன? சூப்பரிண்டெண்ட் என்றால் அவ்வப்போது சீக்கிரம் வீட்டுக்குப் போகலாம்தான். வீட்டுக்கு நாலு ஃபைல் எடுத்துப்போய்க் கொண்டுவந்தால், ஆபீஸ் காரியத்தை வீட்டிலும் போய்ப் பார்க்கிற அதிகாரியாக பெயர் வரும் நல்லதுக்குத்தான்.

நாலு மணிக்குக் கிளம்பும்முன்தான் வீட்டுக்கு வேண்டாம் தெலெக்ஸ் வீட்டுக்குப் போகலாமே… அதுவும் என் வீடுதான் என்று மனம் உறவு சொல்லியது…

இன்று காலையில் பம்பாயில் இருந்து பறந்து வந்து மீதி நாள் ஓய்வெடுக்கப் போவதாக புவி சொல்லியிருந்தாளே… போய்ப் பார்த்தால் என்ன…

சூபரின்டெண்டெண்ட் ஆனதும், நிரந்தரமாக ஆகப் போவதும் சொல்லி சந்தோஷம் பகிர்ந்துகொள்ளலாம். பந்துலு அப்பா இறந்தது பற்றி கட்டிப்பிடித்து ஒரு நிமிடம் அழலாம்… கைலாசவாசி சீனியர் பந்துலுவை எனக்குத் தெரியாதே…

புதுமாம்பலம் போக ஒரு சாக்கு வேணும்... ஆர்ட் டைரக்டர் கழுதை சாஜு நினைவு வந்தார். அவருக்கு ஒரு படத்தில் சான்ஸ் வாங்கித் தரும்படி புவியிடம் ஒரு வார்த்தை சொல்லலாமே. உதவிக்கு உதவி, உறவுக்கு உறவு...

நான் கடைசியாக ஒரு புது பென்ஷன் ஃபைலைப் பார்த்து அப்ரூவ்ட் என்று ரெகமெண்டேஷன் எழுதி நீளமாகக் கையெழுத்துப்போட டெலிபோன் அடித்தது.

‘பென்ஷன் சூப்பரிண்டெண்ட் ஆபீஸ்... செக்ரெடேரியட் ஆபிசர் ராமோஜிராவ் ஹியர்...

‘ராமோஜி சார், புவி ஹியர்... குட் ஈவினிங்...’

‘குட் ஈவினிங் புவி... நானே அங்கேதான் கிளம்பி வந்துட்டிருக்கேன்.’

‘பரவாயில்லே சார்... வரணும்னு இல்லே... உங்க சௌகரியப்படி செய்யுங்க...’

‘நோ நோ நேர்லே பார்த்து பேசறதை நேர்லே பேசிடணும்... போன்லே முடிக்க முடிஞ்சாலும் அததுக்கு நடைமுறை உண்டே...’

‘நான் பெரிசாவே எடுத்துக்க மாட்டேன் சார்...’

‘வரலாம்னு புறப்பட்டாச்சு. பெரிசென்ன சிறிசென்ன... அப்படியே இருக்கட்டுமே...’

‘ஓ! எனக்கு ஆப்ஜெக்ஷன் இல்லே...’

‘புவிக்கு இல்லேன்னாலும் ராமோஜிக்கு இது பெரிசாச்சே... இங்கே ஏதாவது வாங்கிட்டு வரணுமா?’

‘நோ தேங்க்ஸ் ராம்... ப்ளீஸ்...’

‘சீ யூ புவி...’ ஃபோனை வைத்தேன்.

உன்னை நயந்து நான் பேசி ஓர் முத்தம். அதென்ன உடும்பு தைலம்... என்ன சமாசாரம் என்று வீரையாவிடம் விசாரிக்கவேண்டும்... வீரையா முறைத்துக்கொண்டே கடந்துபோக, வரச்சொல்லி விரல் சுட்டினேன்... முறுக்காகத் திரும்பி வந்தான்.

‘ஏன் சார் நரசய்யா கூட வம்பு வளர்க்கறே? மூத்திரத்திலே மீன் பிடிக்கற மாதிரி அவன் ஊர் மாறிப் போக எட்டு ரூபா பிசாத்து காசு தர முடியாது, அஞ்சு ரூபா தரேங்கறியே... மூணு ரூபா மிச்சம் பிடிச்சா ஆறாம் ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு ஐஸ்ப்ரூட் வாங்கித் தரப்போறியா, இல்லே அவர் உனக்கு தருவாரா?’

வீரையா என் பக்கத்தில் வந்து காட்டிய சைகைக்கு ஐஸ்ப்ரூட் சாப்பிடுவது தவிர வேறு என்ன வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம்.

நான் ‘எட்டு ரூபாய் இல்லே, பத்து ரூபாய்க்கு பாஸ் பண்ணிட்டேன்’ என்று சொல்ல அவன் முகம் மலர்ந்து, ராமோஜி அண்ணவாரு அண்ணவாருதான் என்று என்னைச் சிலாகித்தான். கம்சலை விஷயம் சும்மா நரசய்யா பேச்சு வாக்கில் நூல்விட்டுப் பார்த்தானாம். நான் அவளைக் கண்டு மெய்மறந்து நிற்பதாக அவளே வீரையாவிடம் சொல்லியும் அவன் நம்பவில்லையாம்.

அதோட அழகு எங்கே... நீங்க எங்கே... உங்க அழகு எங்கே... அது எங்கே...

ஏதோ சொல்ல வந்து ஏதோ சொல்ல, உடும்பு என்று நான் ஆரம்பிப்பதற்குள் அவனைக் காணோம்.

புவனாவின் ‘சுந்தரி’ பங்களா வாசலில் அவளுடைய ஆஸ்டின் கார் சமர்த்துக் குட்டிப்பாப்பாபோல் நின்றுகொண்டிருந்தது. தோட்டக் காரனும், டிரைவரும், சமையல்காரியும் கண்ணில்படவில்லை. பக்கத்து காம்பவுண்டில் அந்த வீட்டு ஊழியர்கள் அவசர மகாநாடு கூட்டி எதையோ விவாதித்துக்கொண்டிருந்ததாகத் தோன்றியது. என்னைப் பார்த்ததும் ஆயியே சாப் என்று கூர்க்கா சல்யூட் அடித்து உள்ளே அனுப்ப அவர்களின் பேச்சு நின்றது.

கூட்டமாக அவர்கள் என்னைப் பார்த்தபடி அடுத்த வீட்டுக்குள் போனார்கள். அவர்கள் போகும்வரை வாசலில் நின்றுவிட்டு, அழைப்பு மணியை அழுத்தினேன்.

உள்ளே சத்தமே இல்லை. ரெண்டு நிமிஷம் பொறுத்துப் பார்த்தேன். மறுபடி அழுத்தினேன். யாரையும் காணோம். அழைப்பு மணி வேலை செய்யவில்லை போலிருக்கிறது.

கதவைத் தள்ளினேன். திறந்துகொண்டது.

என்னைப் பார்த்ததும் ஹாலில் உட்கார்ந்து ஷெர்லாக் ஹோம்ஸ் சிறுகதைத் தொகுப்பு படித்துக்கொண்டிருந்த புவி எழுந்து வந்தாள் என்று சொல்ல நினைத்தேன். அவள் ஹாலில்தான் இருந்தாள். புத்தகம் எதுவும் படித்துக்கொண்டிருக்கவில்லை.

அவளுக்கு முன்னால் டீப்பாயில் ஒரு பகார்டி சுபீரியர் ரம் போத்தல். பக்கத்தில் சின்ன கிறிஸ்டல் கிளாஸ்.

'வாங்க... ரண்டி' என்று வரவேற்றாள் ரம் மணக்க.

'இது... நீங்க... சாரி...' நான் அவளையும் கிறிஸ்டல் கிளாஸையும் பார்த்தேன்.

'என்ன ராமோஜி சார், ஆச்சர்யமா? வேறே ஒண்ணுமில்லே... வயித்து வலி பொறுக்காம போனதுன்னா ஒரு சிப்.'

நான் பதறினேன். 'வயித்து வலியா, வாங்க டாக்டர்கிட்டே போய்ட்டு வருவோம்... மீசை நாயர் சார் போன் நம்பர் என்கிட்டே இருக்கு...'

'ரொம்ப அவசரப்படறீங்க... வயறு வலிச்சா குடிக்க ஆரம்பிச்சது தனியா இருக்கும்போது ஒண்ணு ரெண்டு க்ளாஸ் ஸிப் பண்ற அளவிலே இருக்கு... அதைச் சொல்ல வந்தேன்... இம்போர்ட்டட் ரம்... பம்பாய்லே வாங்கினேன்.'

நான் அவளையே பார்த்தபடி நின்றேன். 'உள்ளே வாங்க ராம்.'

'வீட்டிலே யாருமில்லையா?'

'இல்லேன்னா வரமாட்டீங்களா?'

'அப்படி இல்லே... தனியா நீங்க உக்காந்துகிட்டு...'

'அதான் நீங்க வந்துட்டீங்களே... தனி எங்கே? வேலைக்காரங்களுக்கு கட்டாய அரை நாள் லீவு கொடுத்து ஆளாளுக்கு நூறு ரூபாயும் கொடுத்து காலையிலே வந்தா போதும்னு துரத்திட்டேன்... சித்தி ராஜமுந்திரிக்கு அவங்க வீட்டுக்கு போயிருக்கா... இந்த நேரத்திலே தனியா இருந்தா மனசுக்கு இதமா இப்படி குடிக்கலாம்... சொல்லுங்க... எப்படி இருக்கீங்க?'

'நானும் தனியாத்தான் இருக்கேன்...'

'க்ரேட்... ரத்னாக்கா.?'

‘அம்மா வீட்டுக்கு போயிருக்கா. வாரக் கடைசி ஆகும் வர...’

‘மெவ்விலீஸ்... என்சேண்டிங்...’

அவள் கொஞ்சம் தள்ளாடி என்னருகே வந்து நிற்க, பழங்களின் மயக்க வைக்கும் வாடை... ‘யூ லுக் ஸ்மார்ட்’ என்றாள் என் கன்னத்தைத் தட்டி.

‘கதவை சாத்திடலாமா?’

இருதயம் படபடக்க, தப்புக்காரியம் செய்ய அட்வான்ஸ் வாங்குகிற மாதிரி வாசல் கதவைச் சாத்தித் தாழிட்டேன்.

அடுத்த வினாடி, இதற்குத்தான் இத்தனை நாள் காத்திருந்ததுபோல் எல்லாத் தடைகளும் உடைந்து நொறுங்க, வெள்ளப்பெருக்கில் அலைக்கழிக்கப்பட்டு நகரும் துரும்பானேன்.

‘நான் சூபரின்டெண்டெண்ட் ஆகிட்டேன் புவி’ என்ற அற்ப விஷயம் சொன்னபடி கை நீட்டினேன். ‘கங்கிராஜுலேஷன்’ என்று என்னோடு கை குலுக்கினாள். தோளில் சாய்ந்தவளின் கண் இமைகள்மேல் நான் மெல்ல முத்தமிட்டேன்.

‘ஸ்வீட் எல்லாம் கிடையாதா?’

அவள் கையைப் பற்றி விடாமல் வளையல்களை பின்னும் முன்னும் தள்ளியபடி, ‘நாளைக்கு எடுத்து வரேன்’ என்றேன்.

‘இப்போ கொடுக்க ரத்னாக்கா பெர்மிஷன் தரலியா?’

‘அவ ஊர்லே இல்லேன்னு சொன்னேனே புவி.’

‘வந்ததும் பெர்மிஷன் வாங்கி, இதுக்காக இன்னொரு தடவை வருவீங்க அப்படித்தானே?’

‘இதுக்காக?’ என்று கேட்டபடி இரு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்டேன்.

‘எல்லாத்துக்கும்தான்...’

என் உதட்டைக் கடித்து நாவால் எச்சில் பூசி, விரல்களைத் தன் விரல்களோடு அழுந்தப் பின்னிக்கொண்டாள் புவி.

‘நீங்க கொடுக்கலேன்னா பரவாயில்லே... நான் ட்ரீட் கொடுக்கட்டுமா?’

நான் நிதானமாக அவள் காது மடல்களை முத்தமிட்டுக் காலம் உறைந்து நிற்க, மறுபடி இதழ் பொருத்தியிருந்தேன். கைகள் வரம்பு மீறத் தொடங்கின.

‘எடுத்துக்கறீங்களா ராம்?’ பகார்டி போத்தலைக் காட்டினாள்.

தயங்கிவிட்டுத் தலையசைத்தேன். டீப்பாயின் கீழிருந்து இன்னொரு கிறிஸ்டல் க்ளாஸை எடுத்தாள். போத்தலிலிருந்து அதற்குள் ரம் வார்த்தாள்.

‘அர்ஜெண்டைன் ரம்...’

‘நல்லாயிருக்கு புவி... உன்னை மாதிரி... பார்த்தாலே போதை’ என்றபடி அவள் உதடுகளை விரலால் நீவினேன்.

பேச்சும் மனதும் உடலும் விபரீதமாக சஞ்சரிப்பதாக உணர்ந்து ரெண்டு பேரும் விலகி அமர்ந்தோம். ஒரு வினாடிதான். மறுபடி நெருங்கி இருந்தோம்.

‘பிரிண்ட்லே பார்த்துட்டா இதான் சங்கடம்... நமக்கு அதெல்லாம் இல்லே, அப்படி எதுவும் நடக்கலேன்னு தெரியும்... ஆனா படிச்சதும் இப்படி இருந்தா எப்படியிருக்கும்னு தோண ஆரம்பிச்சுடுது... ஒரு கிளுகிளுப்பு... உடும்பு தைலம் ஒருத்தருக்கு ஒருத்தர்... ஸோ எக்ஸோட்டிக்... ஸ்நேக் ஆயில் மாதிரி என்ன வைல்ட் இமாஜினேஷன்... ட்ரை பண்ணலாமா?’ புவி கொஞ்சினாள்.

தலைகால் புரியாமல் பார்த்தேன்.

‘உங்களுக்கு எப்போ தெரியும்?’

காற்றும் கடந்து போகாமல் நெருங்கி உட்கார்ந்து கேட்டபடி டீப்பாயில் ஏதோ தேடினாள் புவி.

இன்றைக்கு காலண்டரில் என் நட்சத்திர பலன் என்ன என்று பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மனதில் இருப்பது, எப்போதாவது கற்பனை செய்து மயங்கிக் கிடப்பது என்று எல்லாம் பலித்து வருகிற தினமா? சூப்பரிண்டெண்ட் ஆனதில் இருந்து இங்கே புவியோடு... இது என்ன நாள்...

‘எனக்கு காலையிலேயே தெரியும்... டைரக்டர் கன்னையா சம்சாரம் போன் பண்ணிச்சு... ரத்னாக்கா மாதிரி நெருக்கமான தோழி அவங்களும்... இந்த

ஊர்க்காரிங்கறதாலே தமிழும் என்னை மாதிரி சரளமா படிப்பா... ரத்னாக்கா தமிழ் படிக்குமோ? படிச்சிருந்தா நீங்க இன்னிக்கு முழுசா ஆபீஸ் போயிருப்பீங்களோ!'

நான் ஆபீஸ் போறதுக்கும் ரத்னா தமிழ் படிப்பதற்கும் என்ன சம்பந்தம்?

'ரத்னா வியாசர் அமுதமும், துப்பறியும் சாம்புவும் மட்டும் ஒருமாதிரி படிப்பா... மத்தபடி நல்லா பேச வரும்...' என்றேன்.

இந்த சம்பாஷணையில் ரத்னா அவசியம் வந்தாக வேணுமா?

'உங்களுக்கு எப்போ தெரியும்னு கேட்டேன்... பதில் சொல்ல மாட்டீங்களா?'

நான் சுதாரித்துக்கொண்டேன். ஏதோ எனக்குத் தெரியாத ஒன்று. அது என்னைத்தவிர மற்றவர்கள் எல்லோருக்கும் ஊரோடு தெரிந்திருக்கிறது.

'எனக்கு எல்லாம் ஏற்கெனவே தெரியும்' என்றேன் எந்த நிச்சயமும் இல்லாமல்.

அவள் டீப்பாயில் பத்திரிகைக் குவியலுக்கு அடியே இருந்து பழுப்பு நிறக் காகிதத்தில் அச்சான ஏதோ ஒரு நியூஸ்பேப்பரை உருவி எடுத்தாள்.

சகலநேசன்.

இப்படி ஒரு பத்திரிகை இருக்கிறதா என்றேன் புவியிடம். குறும்பு தானே. அவள் என் மூக்கை நிமிண்டியபடி பத்திரிகையை என் கையில் கொடுத்தாள்.

பத்திரிகையில் முதல் பக்கத் தலைப்பு – குமாஸ்தாவோடு குமாரி புவனா கும்மாளம்.

'சத்தமா படியுங்க. உங்க குரல்லே கேட்க கிக்கா இருக்கு' என்றாள் புவி.

நான் படித்தேன்.

'செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உத்தியோகம் பார்க்கும் ராம்ஜி என்ற குஜராத்தி பிராமண குமஸ்தன் கன்னடப் பேரழகியான தெலக்ஸ் புவனாவை பெண்டாண்டு கொண்டிருக்கிறானாம். இவர்கள் அவள் இருக்கும் புதுமாம்பலத்தில் ராப்பகலாகக் கும்மாளம் போட்டு கொட்டமடிப்பது போதாமல், ஆந்திராவில் ராஜமுந்திரி போய், முசாபரி பங்களாவில்

ஜல்சாவுக்காக ரூம் வாடகைக்கு எடுத்து, சமீபத்தில் வெகு உல்லாசமாக இருந்ததாகத் தெரிகிறது. அறுபத்து நாலு கரணமும் செய்து சுகித்தும் திருப்திப்படாமல் பரஸ்பரம் உடும்புத் தைலம் பூசிவிட்டு, தோளில் கால்...'

எனக்குத் தலை சுற்றி வந்தது. புவி என்னை அணைத்து இறுக்கி 'டேக் இட் ஈசி' என்றாள் பகார்டி ரம் மணக்க. அவள் உதட்டில் மெல்லக் கடித்து இன்னும் ஒரு மிடறு ரம் குடித்தேன். அக்னி திராவகம் எரிமலைக் குழம்பாக எனக்குள் மெதுவாக நகர்ந்து, தலைக்குள் ஜிவ்வென்று பாய்ச்சல் கொண்டது.

ரத்னாவை மனதில் அவள் இடத்தில் ஒன்றுக்கு ஒன்பது பூட்டு போட்டுப் பூட்டி வைத்தேன். புவி என்றேன் கிளுகிளுப்பாக அவள் கூந்தலில் முகம் மறைத்துப் பின்கழுத்தில் முத்தமிட்டபடி. என்னடா என்றாள் அவள் என் தோளில் கடித்து.

இதெல்லாம் தசாபதி என்கிற கருப்பு வெள்ளை சினிமாவில் நடக்கிறது. நான் அங்கே அனாவசியமாகப் புகுந்தது தெரியவந்து என்னைத் துரத்திவிடப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தேன்.

'மச்சி, தேவிடியாக் கச்சேரி பார்க்க சூபரின்டெண்டெண்ட் வந்திருக்கார்... காப்பி எடுத்துவரச் சொல்லுங்க' தசாபதியின் அம்மா என்னைச் சுட்டிக் காட்டியதைப் பார்த்தேன்.

ரிடையர்ட் ஹெட்மாஸ்டர் ஏஆர்பி வார்டன் உடுப்பில் நிஜாரோடு வந்து, 'ரோந்து சுத்தப் போ... ஜப்பான் ப்ளேன் வருது... உடுப்பை மாட்டிக்க... இந்தப் பொண்ணு பம்பாய் போகணும்... அவளைத் தொந்தரவு பண்ணாதே' என்று விசில் ஊதி என்னை எழுப்பப் பார்க்கிறார். ஏர் ரைட் சைரன் விடாமல் ஒலிக்கிறது.

எழுந்து ஓடு என்றது ஒரு மனம். இதெதுவும் நான் இல்லை என்றது இன்னொன்று. உடம்பு இரு என்று உத்தரவு போட்டது. சரி என்றேன்.

'புவி, எங்க தெருவிலே ஆர்ட் டைரக்டர் கழுதை சாஜு...'

'ராம், நீ சரியான லூசு...' அவள் அணைப்பில் படுக்கையில் உருண்டேன்.

ராத்திரி ஏழு மணி என்றது சுவர்க் கடியாரம். குளித்து, புவி கொடுத்த புது வேட்டியும், சட்டையும் புது மாப்பிள்ளைபோல் அணிந்து நிலைக்கண்ணாடியில் முகம் பார்த்து நிற்கிறவன் வேறு யாரோ.

புவியோடு உட்கார்ந்து ராச்சாப்பாடு. பரட்டாவும் மட்டன் குருமாவும் தின்னத் தின்ன இன்னும் என்றது களைத்துக் களித்திருந்த உடல். புவி எடுத்து ஊட்டினாள்.

டீபாயில் சகலநேசன் கிடந்தது. எடுத்துப் பார்த்தேன்.

ராம்ஜி என்ற குஜராத்தி பிராமண குமஸ்தன் கன்னடப் பேரழகியான தெலக்ஸ் புவனாவை பெண்டாண்டு கொண்டிருக்கிறானாம்.

நான் ராம்ஜி இல்லை, ராமோஜி. குஜராத்தி இல்லை, மராத்தி. பிராமணன் இல்லை, ஷத்ரியன். குமாஸ்தா இல்லை, சூபரின்டெண்டெண்ட். இவள் கன்னடப் பேரழகி இல்லை. தெலுங்குக் கன்னி. பெண்டாள்கிறேனா, ஆணாள்கிறாளா?

புவியிடம் கேட்டேன். அவளுடைய ஈரத் தலைமுடி கன்னத்தில் படிய இழுத்து அணைத்து, நிறைந்து ததும்பும் மார்பில் முகம் தேக்கி முத்தமிட்டுப் புறப்பட்டேன்.

முன்ஹாலில் தசாபதி நூறுநாள் கொண்டாட்டத்தில் புவனாவுக்குக் கொடுக்கப்பட்ட கேடயம் கண்ணாடி பீரோவுக்குள் தெரிந்தது. மனதில் வெண்திரை நாயகியாக புவி ஓடி வரத் துரத்திப் போனவன் நான்தான். தசாபதி நாட்டியக் காட்சியில் புவி ஆடும்போது நானும் நுழைந்து அவளைப் பாதி ஆட்டத்தில் பூச்சுமையாகச் சுமந்து உள்ளே போனது உறவுகொள்ள.

மறுபடியுமா?

புவி வாசல்வரை போய்த் திரும்பிய என்னை கைப்பிடித்து உள்ளே கூட்டிப்போனாள். புவி என்றேன் தயக்கத்தோடு. கழுதை சாஜுதானே பார்க்கலாம் என்றாள். தைலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்றேன். இல்லாமலும்தான் என்று என்மேல் படர்ந்தாள். அறுபத்து நாலு கரணம். இப்போது ரெண்டு கம்மி என்றாள். சேர்ந்து உறங்கிய நேரம் நினைவில்லை.

காலையில் வீட்டுக்கு வந்தபோது திண்ணையில் எலக்ட்ரீஷியன் மணவாள நாயுடு உட்கார்ந்திருந்தார்.

‘என்ன சார், காப்பி குடிக்கப் போயிருந்தீங்களா? சொல்லியிருந்தா நானும் வந்திருப்பேனே’ என்றார். நாயுடுவோடு போகும் இடமா நான் போயிருந்தது.

உடம்பு கொஞ்சம் ஓய்வெடு என்று முரண்டு பிடித்தது. சூபரின்டெண்டெண்ட் பதவி இல்லாதிருந்தால் ஆபீசுக்கு ஒரு நாள் லீவு சொல்லியிருப்பேன்.

எல்லா அக்கப்போரும் சகித்து, நீள நீளமாகக் கையெழுத்து போட்டு, நிறைய ஃபைல் நோட்டிங்குக்கு ரிடர்ன் என்று சிவப்பு மையில் எழுதித் திருப்பி அனுப்பி, ஓர் ஆபீஸ் நாள் கடந்து போனது.

சாயந்திரம் ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபோது சாஜுவை வீட்டு வாசலில் பார்த்தேன். முகம் மலர்ந்திருந்தார்.

காலையில் எம்.வி.எம். செட்டியார் ஆளனுப்பிக் கூட்டிவரச் சொல்லியிருக்கிறாராம். அடுத்த படத்தின் ஆர்ட் டைரக்டர்களில் இவரும் இருக்கக் கூடுமாம்.

எல்லாம் ஏரோப்ளேன் வேகத்தில் நடந்திருக்கிறது. புவனா அதன் பின்னால் என்று விளங்கியது. அவளோடுகூட இருந்தும், கிடந்தும் நன்றி சொல்லவேண்டும். இணை விழைய ஒரு சாக்கு. உடம்பு துணைக்கு ஏங்குகிறது. ரத்னாவை சௌகரியமாக மறந்தாகிவிட்டது. இன்னும் சில நாட்கள் இந்த நெருக்கமும், புவனாவின் வாய் மணமும் கையிடுக்கு வாடையும், ஏலம் கிராம்பு வாசனையையும், செண்ட் அள்ளி அக்குளில் பூசியதையும் கடந்து, கூடவே வந்து போதையூட்டிக் கொண்டிருக்கும். வரட்டும். அதெல்லாம்தான் காமம்.

அடுத்து வந்த சாயந்திரத்தில் சாஜுவை வாசலில் பார்த்தேன். ‘செட்டியாரைப் போய்ப் பார்க்கலியா’ என்று கேட்டேன்.

‘போனேன், ஒரு மணி நேரம் காத்துக்கிட்டிருந்தேன். நாளைக்கு பார்க்கறாராம்னு அனுப்பிட்டாங்க’ என்றார் ஒரு நைந்த சிரிப்புடன். பெரிய மனுஷர்கள். நம்மைப்போல் இது ஒன்று மட்டும் அவர்கள் கவனிக்க வேண்டியதில்லை. நமக்குக் காரியம் ஆக நாம்தான் அலைய வேண்டும்.

‘பரவாயில்லை. இத்தனை நாள் பொறுத்தாகி விட்டது. இன்னும் ஒரு நாள்தானே’ என்றேன் நைச்சியமாக. புவி கேட்டால் சொல்ல விஷயம் உண்டு. இப்போது போய்ப் பார்த்தால் என்ன? வீட்டில் இருப்பாளா. பிரகதி ஸ்டூடியோவில் ஷூட்டிங் என்றாள். போய்ப் பார்க்கலாமா? வேணாம், சகலநேசன் விசேஷ எடிஷன் போட்டு விடுவான்.

போளிக்கடை அமோகமாகப் போகிறதாக சாஜு சொன்னார். தப்பாக உச்சரித்தால் என்ன, காத்திருந்து வாங்கி சாப்பிட்டு பார்சல் எடுத்துப் போகிறார்களாம். குந்திதான் முழு நிர்வாகமும். அப்புக்குட்டியின் வைப்பு ஒருநாள் போல வந்து நிற்க முடியவில்லை என்று வருவதில்லையாம்.

எங்கோ ஆரம்பித்தது எப்படியோ வளர்ந்து குந்திக்கும் சாஜுவுக்கும் நல்ல வழியைக் காட்டிவிட்டது போளி ஸ்டால். ஆர்ட் டைரக்ஷன் இல்லாவிட்டாலும் போளி கைகொடுக்கும். பப்லு கூட குட்டிக்கரணம் போடுவதை கம்மியாக்கிக்கொண்டு போளி பார்சல் கட்டுவதில் மும்முரமாம். கழுதை வெள்ளையன்? அவன் விஷயம்தான் பிரச்னையாகி விட்டது என்றார் சாஜு.

வீட்டு சொந்தக்காரராக கல்யாண சமையல் மாஸ்டர் அப்புக்குட்டி, கழுதையைத் துரத்தியடிக்கணும் அல்லது வீட்டைக் காலி செய்ய வேணும் என்று சொல்லி விட்டாராம். தெரு முழுக்கப் புகார் சொன்னதன் பலன்.

போளி ஸ்டாலில் முதலீடு போட்டிருப்பதால் அவரால் சாஜுவை முழுக்கப் பகைத்துக்கொள்ளவும்முடியாது என்பது நல்லதாக எனக்குப் பட்டது.

கழுதையை தோபிகானாவில் சலவைத் தொழிலாளி யாருக்காவது கொடுத்துவிடலாம் என்று யாரோ சொன்னார்களாம்.

‘சார், தோபிகானாலே யாரையாவது தெரியும்னா... ப்ளீஸ்.’ சாஜு கெஞ்சினார்

தோபிகானா சேத்துப்பட்டில் இருப்பது தெரியும். அங்கே யாரைப் பிடிக்க?

மணவாள நாயுடு நினைவு வந்தார்.வாக்கிங்க் என்சைக்ளோபீடியா.

நாளைக்கு சொல்கிறேன் என்று சாஜுவிடம் விடை பெற்று வீட்டைப் பார்க்க நடந்தேன்.

வீட்டுக் கதவைத் திறந்தேன். ரெண்டு நாள் பெருக்கித் துடைக்காதது, மேலே லேசாகப் பூசிய தூசியில் தெரிந்தது. துடைப்பத்தைத் தேடி எடுத்து பெருக்கும்போது வாசலில் ரத்னா ரத்னா என்று குரல். விலாசினிதான்.

‘ரத்னா ஊருக்கு... தெரிந்திருக்குமே...’ நான் ஆச்சரியப்படுவதாக நடித்துச் சிரித்தேன். விலாசினியும் சிரித்தபடி உள்ளே வந்தாள். புவியைவிட ஒரு அடி உயரம் கூடுதல் விலாசினிக்கு என்று மனம் உருப்படியில்லாத கணக்குப் போட்டுச் சொன்னது.

‘தெரியும்... அண்ணான்னு கூப்பிடலாம்னா ரொம்ப செயற்கையா இருக்கும்... சார் சார்னு கூப்பிடலாம்னா, சோப் விக்கற சேல்ஸ் கேர்ள் நினைவு வரும்...’

சொல்லியபடி உள்ளே வந்தவள் நான் அவளைக் கண்டதும் கீழே போட்டிருந்த துடைப்பத்தைப் பார்த்தாள்.

‘விளக்கு வைச்ச அப்புறமா பெருக்கறது மகா தப்பு...’ துடைப்பத்தை சமையலறைச் சுவரில் சாத்தி வைத்தாள்.

‘தூசி கொஞ்சம் போலதானே இருக்கு... ஒரு ராத்திரி பொறுத்துக்குங்க நாளைக்கு வரேன்’ என்று சொல்லும்போதே அவள் முகம் குங்குமம் போல் சிவந்துவிட்டதைக் கவனித்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை.

கையில் வைத்திருந்த பாத்திரத்தில் ஆப்பமும் ஸ்ட்யூவும் வழிய வழிய எடுத்து வந்திருந்தாள்.

‘இது ராத்திரி சாப்பாடு காலையிலே டீ எடுத்து வரட்டா...?’

‘உங்களுக்கு சிரமம் வேணாம்... நான் ஹோட்டலுக்குப் போய்க்கறேன்... கம்பெனி கொடுக்க ஆள் ரெடி... எலக்ட்ரீஷியன் மணவாள நாயுடு’ சிரித்தேன்.

‘ஓ! கம்பெனிக்கு ஏற்பாடு செஞ்சாச்சா... பெரிய ஆள் சார் நீங்க... போகட்டே... போன வாரம் ஒரு கும்பாவிலே பாயசம் கொண்டு வந்திருந்தேன்... கிச்சன்லே தேடி அந்தக் கும்பாவை எடுத்துக்கட்டா?’

முன்னால் வைத்திருந்த வலை போட்ட அலமாரியிலேயே கும்பா விலாசினி போல புஷ்டியாக வீற்றிருந்தது. எடுத்து அவளிடம் நீட்டினேன். விலாசினி கை நீட்டும்போது புவனா நினைவு வந்தாள். ஸ்தம்பிக்க வைக்கும் மெல்லிய வியர்வை வாடையின் கிறுகிறுப்போடு வாசலுக்கு நடக்கும்போது சற்றே திரும்பி என்னிடம், பாயசம் எப்படி இருந்தது எனக் கேட்டாள்.

‘கோகனட் பேரடைஸ், மில்க் லாகூன், கேஷ்யு ஹெவன்’ என்றேன். அது ரொம்பப் பிடித்திருக்கும்போல. ‘ஸோ நைஸ் ஓஃப் யூ’ என்று உதடு குவித்துப் பாராட்டி கண்ணால் குளிர்வித்துப் போனாள் விலாசினி.

ரத்னா, புவனா என்று மாறிமாறி நினைவு வர எப்போது உறங்கினேனோ. மணவாள நாயுடு திண்ணையில் என் காலடிப் பக்கம் உட்கார்ந்து சுதேசமித்திரன் படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தபடி கண் விழித்தேன்.

‘நாயுடுகாரு, உமக்கு காப்பி வேணும்னா கழுதைக்கு ஓர் ஏற்பாடு செய்யும்.’ நான் அவரிடம் சொல்ல, ஒரு நிமிடம் என்னைக் கூர்ந்து பார்த்தார்.

‘சார் இன்னும் தூக்கம் முழிக்கலேபோலே இருக்கு… இந்த சீன் கனவு முடிச்சு எழுந்திருங்க… நான் தினமணியும் படிச்சுடறேன் இன்னிக்கு வெள்ளிக்கிழமை… சினிமா மலர் இணைப்பு அமர்க்களமா இருக்கும்’ என்றார் நாயுடு.

அவரையும் கூட்டிக்கொண்டு அடுத்த தெரு பாலாஜி பவனில் காப்பி குடித்து வரும்போது கேட்டேன் – ‘உமக்கு தோபிகானா தெரியுமா?’

‘தெரியுமாவாவது… நான் அங்கே எம்முட்டு துணி தூக்கிப் போயிருக்கேன்…’

‘நாயுடு, குழப்பறீர்’ என்று புகார் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

‘அதில்லே சார், எங்க வீட்டுக்கு சலவைக்காரர் அங்கேதான் இருந்தார்… நானும் சேத்துப்பட்டுக்காரன் சாமி… வளர்ந்ததெல்லாம் தோபிகானாவிலேதான்.’

மறுபடி குழப்பறீங்க நாயுடு… அங்கே துணி வெளுக்கத்தான் இடம் இருக்கு, நாயுடு போன்ற முரட்டுப் பிள்ளைகளை எப்படி, யார் வளர்த்தார்கள் அங்கு வைத்து என்று புரியவில்லை.

‘அது கிடக்கட்டும், எனக்கு அவசரமா ஒரு நல்ல சலவைக்காரர் வேண்டும்…’

‘கால்சராய், சட்டை, வேட்டி தினம் துவைச்சுத் தரவா? ஏற்பாடு செஞ்சுடலாம்.’

‘அதுக்கு இல்லே. நம்ம சாஜுவோட கழுதையை சொந்த மகன் மாதிரி பிரியமா வளர்த்து கரையேத்த ஒரு சலவைக்கார நண்பர் வேணும். கிடைக்கலேன்னா சாஜு வீட்டைக் காலி பண்ண வேண்டி வரும்.’

நாயுடு தெருவில் நடுநாயகமாக நின்று, ‘நாளைக்கு இதே இடத்துலே இதே நேரத்துலே நாயுடு வருவான், கேட்டுக்குங்க’ என்று தன்னை படர்க்கை ஒருமை உயிரினமாக்கிப் போனார்.

அடுத்த நாள் சனிக்கிழமை அவர் முகத்தில்தான் கண் விழித்தேன். கொஞ்சம் நரியின் சாயல் மூக்குப் பக்கம் தெரிந்ததாகத் தோன்றியதை

மறந்துகொண்டேன்.

'தச்சிலா தெரியுமா?' என்றார் நாயுடு. ஒன்றும் புரியவில்லை.

சாஜு சார்பில் நான் கேட்டுக்கொண்டபடி, கழுதையை அன்போடு வாங்கி வளர்க்க தோபிகானாவில் ஒரு சலவைத் தொழிலாளியைச் சம்மதிக்க வைத்துவிட்டார் நாயுடு. தச்சிலா என்ற பெயர் கொண்ட அவர், துணி வெளுக்கும் பெண்மணி. கழுதையை வாங்கவோ, விற்கவோ காசு ஏதும் தரவோ பெறவோ தேவையில்லாத பரிவர்த்தனையாம் இது.

'ஞாயிற்றுக்கிழமை காலை ஆறரைக்கு வெள்ளையனைக் கூட்டிக் கிட்டு தோபிகானா வந்துடுங்க. தச்சிலா ரெடியா இருக்கும்.'

'எழுந்திரிச்சதுமேயா?' என்று கேட்டேன். 'கழுதை ரொம்ப நேரம் தூங்குமா? எழுப்பிவிட்டுடுங்க சீக்கிரம்...' என்றார் நாயுடு. என்னத்தைச் சொல்ல.

'தோபிகாட்லே விடிகாலை நாலு மணியிலேருந்து எட்டு மணிவரை மும்முரமா துணி துவைச்சுக்கிட்டிருப்பாங்க... அப்போதான் நமக்கும் வேலை முடிக்கணும், சரியா சார்?' விஷயம் தெரிந்த பெருமிதத்தோடு அவர் கேட்க, சரிதான் என்றேன்.

நாளை ஞாயிறு. மாலை ஐந்து மணிக்கு இச்சல்கரஞ்சியில் இருந்து ரத்னா வருகிறாள் செண்ட்ரலில் போய்க் கூட்டி வரணும். வெள்ளையனை இடம் மாற்றணும். புவனாவை சந்திக்கவேண்டும். இனிமேல்கொண்டு, ரெண்டு பேரும் இந்த வாரத்து உடல் நெருக்கம் இல்லாமல், பழையபடி சிநேகிதம் மட்டும் முடிந்தவரை கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும். நிரந்தரமாக இல்லை என்றாலும் சில காலத்துக்காவது இது வேண்டியுள்ளது.

நாயுடு இன்னொரு காப்பிக்காக காத்திருக்க, எதிர் வீட்டிலிருந்து கேளப்பன் சேட்டன் வேலை மெனக்கெட்டுக் கூப்பிட்டு சாயா கொடுத்து நாயுடுவை ஷேம லாபம் விசாரித்தார். அவருக்கு ஆபீஸ் லீவு போல.

நான் கேளப்பன், மற்றும் நாயுடுவிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஆபீசுக்குக் கிளம்பினேன். விலாசினி சுடச்சுட வார்த்து எடுத்து வந்த தேங்காய் எண்ணெய் வாசம் மிகுந்த தோசையும், இஞ்சித் துவையலும் தெம்பாக ஆபீஸ் புறப்பட உதவின.

ஒரு துரையும் வராத ஓய்வான சனிக்கிழமை பகல். மதியம் கேண்டீனில் சாப்பிட்டுவிட்டு அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிக்கவிடாமல் மனசு புது மாம்பலத்துக்குப் போ போ என்று நச்சரித்தது.

எலக்ட்ரிக் ரயிலில் போய் இறங்கி கோபதி நாராயணா செட்டி வீதிக்கு நடக்கும்போது கடல் காற்று வீசத்தொடங்கியிருந்தது. இதமான மாலை நேரம் வந்துகொண்டிருக்கும் சூசனை.

புவி வீட்டு வாசலில் கூர்க்கா என்னைக் கூர்ந்து பார்த்து சல்யூட் வைக்காமல் கதவைத் திறந்து அந்தர் ஜாயியே என்று உள்ளே அனுப்பினான். அடுத்த வீட்டு காம்பவுண்டில் இருந்து இரண்டு பேர் என்னைப் பார்த்து ஏதோ பேசிக்கொண்டதை நான் கவனிக்கத் தவறவில்லை.

உள்ளே தோட்டக்காரன் வலிந்து வரவழைத்த சிநேகிதமான சிரிப்போடு 'உள்ளே போங்க சார்' என்றான். அவசரமாக தான் படித்துக்கொண்டிருந்த இந்துநேசனை மறைத்தபடி இருந்த இடத்தில் இருந்தபடியே சல்யூட் வைத்தான் ட்ரைவர்.

நான் படியேறி உள்ளே போகும் போது புவியின் டெம்பரவரி சித்தி, சமையல்கட்டில் சமையல்காரிக்கு உத்தரவு கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது நான் கண்ணில் பட்டேன்.

'ரண்டி ரண்டி பாபு... பாக உன்னாரா..' என்று நைச்சியமாக ரெண்டரை வயசு ஆண் குழந்தையைக் கொஞ்சுகிற தாலாட்டு ராகத்தில் என்னை வரவேற்றாள் சித்தி. அதீதமாகத் தெரிந்த வரவேற்பு அது.

போதும் என்று கையசைத்து புவியைத் தேடினேன். படுக்கை அறைத் திரை அசைய பின்னால் இருந்து குரல் மட்டும் கேட்டது –

'உள்ளே வந்து இருங்க, ராம்... வந்தாச்சு.' புவனா குரல்.

நான் உள்ளே போகும்போது சித்தியும் சமையல்காரியும் என்னையே பார்ப்பது தெரிந்து பார்வையைத் தாழ்த்திக்கொண்டேன்.

'உட்கார் ராம்' என்று அரைகுறையாக உடுத்திக்கொண்டு அல்லது களைந்துகொண்டு புவனா படுக்கையில் உட்காரச் சொன்னாள். குஷன் வைத்த நாற்காலியைத் தேடினேன். எங்கே போனதோ.

'திருநீர்மலை போய்ட்டு வரலாமா?'

திடுதிப்பென்று என்னைக் கேட்டாள் புவி. எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

‘ரத்னா ஊர்லே இல்லாம…’

புவனா சிரித்தாள். ‘அதுனாலேதான் போகலாம்னேன்.’

இந்தப் பேச்சு எங்கோ போய்க்கொண்டிருக்கிறதாக உணந்தேன். எழுந்துகொண்டேன்.

‘என்ன சினிமாக்காரங்கன்னா திடீர் காதல், திருநீர்மலையிலே கல்யாணம், அடுத்த நாள் ஷூட்டிங்லே சாக்லெட் விநியோகம், நிருபர்களுக்கு ந்யூஸ்… இதான் வழக்கம்னு நினைச்சியா ராம்? ஓ, நான் அவ்வளவு செல்பிஷ் இல்லே…’

‘அப்படி நான் நினைக்கவே இல்லை புவி’ என்றேன் சமாதானமாக.

‘ரத்னாக்கா இல்லேங்கறதாலே ஓடிப்போய் கல்யாணம் செஞ்சுக்கிட்டு வந்துடுவோம்னு கூப்பிடலே. நீ கவர்மெண்ட் சர்வெண்ட். ஹிந்து. ஒரு பெண்ஜாதிக்கு மேலே இருந்தா வேலை போயிடும், ஜெயில்லே போட்டுடுவாங்கன்னும் தெரியும்… சும்மா திருநீர்மலையும் மகாபலிபுரமும் திருக்கழுக்குன்றமும் ஊர் சுத்திப் பார்த்து வரணும்னு எனக்கும் ஆசை இருக்காதா? ரிலாக்ஸ்.’

படுக்கையில் என் அருகே அமர்ந்து தோளில் கைபோட்டுக் கொண்டாள்.

‘நல்லா இருக்கு இல்லே?’

டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடியில் இரண்டு பேருமாகத் தெரிந்ததைச் சுட்டிக்காட்டிக் கேட்டாள்.

‘போட்டோ கிராபரை வரச்சொல்லட்டா?’ அவள் இன்னொரு தடவை சிரித்தாள்.

‘உடும்புத் தைலம் எடுத்துட்டு வந்திருக்கியா?’ சிரிப்பு இன்னும் அதிகமானது.

‘புவி, காலையிலே ஏதாவது எடுத்துக்கிட்டியா?’

‘நிச்சயமா இல்லை.’

‘அப்புறம்?’

‘இன்னிக்கு பேப்பர் பார்க்கலியா?’

‘எங்கே பார்க்க? மணவாள நாயுடு சுருட்டி குடையோடு எடுத்துப் போய்ட்டாரே.’

‘அவருக்கு ஏன் கொடுத்தே? யாரது?’

எலக்ட்ரீஷியன் என்று சொன்னபோது இந்த உரையாடலின் அபத்தம் எனக்குப் புரிபட்டது. ‘தினமணி, சுதேசமித்திரன், ஹிந்து எதுவும் இன்னிக்கு படிக்கலே. என்ன விசேஷம்‘’ என்று புவியையே கேட்டேன்.

‘தெலக்ஸ் புவனாவின் காதல் லீலை. குமாஸ்தாவோடு ஜல்சா. தி நகர் முழுக்க உடும்புத் தைல வாடை.’

புவனா தலையணைக்குக் கீழே இருந்து எடுத்துக் கொடுத்தது சகலநேசன் இல்லை. சினிமாநேசன் என்று பெயர் போட்டு பழுப்புக் காகிதத்தில் அச்சடித்த இன்னொரு நேசன்.

‘இது கொஞ்சம் அட்வான்ஸ் ஆக நியூஸ் போடற பத்திரிகைபோல இருக்கு. நீ ஆபீஸ் நேரத்துலே காமக் களியாட்டம் போடுறவனாம். உனக்கும் எனக்கும் ஒண்ணரை வயசுலே ஒரு பிள்ளை இருக்கானாம். நாக்பூர்லே அவனை உங்க அப்பா வீட்டுலே விட்டுட்டு இங்கே குடித்து, கும்மாளம் போடறோமாம். உன் பெண்டாட்டி லட்சுமிகரமா இருந்தும் குரங்கைக் கட்டிக்கிட்டு கூத்தாடறியாம். அதென்னமோ சரி. ரத்னாக்கா மகாலட்சுமிதான். நான்.’

டிரஸ்ஸிங் டேபிள் மிரரில் கண்ணடித்து, என் காதை மெல்லக் கடித்து நெஞ்சில் பிராண்டினாள் புவி.

‘காளிங்க ரத்தினம் அண்ணன்கிட்டே உன் பெண்டாட்டி பஞ்சாயத்துக்குப் போயிருந்தாங்களாம். நாம் அவர் சொல்லியும் கேட்காமல் அம்மணமா ஆடிட்டிருக்கோமாம்... வா ஆடலாம்’ என்றாள்.

‘எப்படி ஆடறோம்?’ பத்திரிகையை என் முகத்துக்கு நேர்பிடித்தாள்.

எனக்கு எல்லாம் பழகிவிட்டிருந்தது. சகல நேசனின் உடும்புத் தைலமும், அறுபத்து நாலு கரணமும் நிஜமாகவும் கிட்டத்தட்ட அதே நிலைக்குக்கொண்டுபோய்விட்டதைப்போல் அம்மணமாக ஆடுவது

கிளர்ச்சியூட்டவில்லைதான். எழுதட்டும். இனி இதுபற்றி எழுத ஒன்றுமில்லை என்று நிறுத்திவிடுவார்கள். நாலு பேர் அடுத்த வீட்டு காம்பவுண்டில் இருந்து பார்த்தால் பிரபலமானேன் என்று அர்த்தம். தலையைக் கண்டதும் டிரைவரும், தோட்டக்காரனும், சமையல்காரியும் குசுகுசுவென்று பேசினால் மேல்தட்டு பிரஜையாகி விட்டேன் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

‘நீ ஷூட்டிங் ஷூட்டிங்னு ராப்பகலா போய் ரொம்ப பலகீனமா களைப்பாயிருக்கே… இன்னிக்கு பூரா தூங்கி ரெஸ்ட் எடு. நான் பக்கத்திலே உக்காந்து, தூங்கறவரை மகாபாரதம் கதை சொல்றேன்…’ என்றேன்.

அவள் புருவம் உயர்த்தி வியப்போடு பார்த்தாள். ‘ஓ! பாரதக் கதை சொல்வியா? சல்லியன் யார் சொல்லு. அம்பாலிகை? உதங்கர்? புரூ?’ விசாரித்தாள்.

‘வேணாம், ராமாயணமே சொல்றேன்’ என்று அவசரமாகச் சொன்னேன்.

‘திருநீர்மலை வரல்லேன்னா பரவாயில்லே. நாளைக்கு ஞாயித்துக் கிழமைதானே. மகாபலிபுரம் போய்ட்டு வரலாமா? காரை நானே ஓட்டறேன்… என்கிட்டே ட்ரைவிங் லைசன்ஸ் இருக்கு.’ புவி முறையிட்டாள்.

அவள் விளைவித்த வியப்பை ஓரங்கட்டினேன். அது இல்லாமல் புவி இல்லை.

‘நாளைக்கா?’

‘ஏன் ராகம் இழுக்கறே?’ மடியில் உட்கார்ந்து கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சினாள்.

‘இல்லே… நாளைக்கு ரத்னா வரா. சென்ட்ரல் போய் கூட்டி வரணும்…’

‘நினைச்சேன். இது டெம்பரவரி சந்தோஷம்தானே… ரத்னாக்கா வந்தா நீ முழுக்க அங்கேதான் சரணாகதி. இந்தப்பக்கம் இருக்கறவளை மறந்துடுவியே. ஒரு மணி நேரம் கூட வர முடியாதா? உன் வீட்டுக்கு வந்து கோனை அருவி கூட்டிப் போறேன்… இல்லே நிம்மதியா பீச்சுலே கார் சவாரி. ரத்னாக்காவையும் கூட்டிப் போகலாம்.’

‘எதுவுமே முடியாது புவி. நாளைக்கு ரத்னா வந்ததும் வீடு சுத்தமா இல்லைன்னு சுத்தப்படுத்த உக்காந்துடுவா. அவ ப்ரண்ட் எதிர்வீட்டு

விலாசினி ஹெல்ப் பண்றேன்னாங்க... நேத்து நாங்க ரெண்டு பேரும் வீட்டை பெருக்கி மெழுகிடலாம்னு சொன்னாங்க... எனக்கும் பிடிச்சிருந்தது அது... சாப்பாடும் கொடுத்து, வீடு சரியாக்கித் தரவும் விலாசினி வேணுமா... அந்தப் பொண்ணுக்கு ஏன் கஷ்டம் தரணும்னு... வேணாம்னுட்டேன். அதுலே விலாசினிக்கு ரொம்ப வருத்தம்... புவனா புவி மாதிரி விலாசினி விலு... எனக்கு, பொய் சொல்ல மாட்டேன்... விலு மேலே ஒரு க்ரஷ் இருக்குதான்... ரெண்டு பேரும் கல்யாணம் ஆனவங்க... ஆனா என்ன... க்ரஷ்ஷூம் இன்பாசுவேஷனும் யாரையும் கேட்டுக்கிட்டும் வர்றதில்லையே...'

'ஓ இப்படி ஸ்பெஷல் ஷோ ஒரு படம் ஓடிட்டு இருக்கா? தெரியாதே' என்று கண்ணை அகல விரித்து வியந்தாள் புவனா.

'புவி, விலாசினி பேமிலி ப்ரண்ட்.'

'நான் உங்க பேமிலி. எனக்கும் ப்ரண்ட்தானே.'

'அப்படின்னா அப்படித்தான்' என்று அவள் தலையை வருடினேன். இங்கே இருந்தால் நாளைக்கு செண்ட்ரல் போகமுடியும் என்று தோன்றவில்லை.

'நல்ல உயரமா, எடுப்பா மாநிறமா அந்தப் பொண்ணுதானே... ரத்னாக்காவுக்கு ப்ரண்ட் எல்லாம் அவங்க மாதிரியே அழகழகா வந்துடறாங்க.'

நான் குந்தி என்று ஆரம்பித்து சிரித்தேன். ஊஹூம், இது இங்கே சரிப்படாது.

'சரி, நான் புறப்படறேன்... இன்னும் ஒரு வாரம் வரமுடியும்னு தோணலை... நான் வராட்டாலும் ஃபோன்லே அடிக்கடி பேசிப்போம்' என்றேன்.

'உங்க வீட்டுக்கு ஒரு லைன் வாங்கிடலாமா?' புவி கேட்டாள்.

'நான் ஏற்கெனவே அப்ளை பண்ணிட்டேன்' என்று கெத்தாகச் சொன்னேன்.

'சாப்பிட்டுப் போ ராம். இட்லி, வடைகறி. கவிச்சி சாப்பிடுவியா?'

'மாட்டேன்' என்றேன்.

'ஏன் உடம்பு பெருத்துடுமா? நான் படிக்கறபோது எல்லாம் ஸ்ட்ரிக்ட் வெஜிடேரியன். தெலுங்கு ப்ராமின்ஸ்... பந்துலு அம்மாஞ்சி அளவுக்கு இல்லேன்னாலும் வீட்டுலே வெங்காயம்கூட அண்டாது... சினிமாவுக்கு வந்து சுறா, புறா, மீன், ஆடுன்னு சகலமும் பழகியாச்சு..'

சித்தி என்று கூப்பிட்டு ரெண்டு பேருக்கும் காப்பி எடுத்துவரச் சொன்னாள்.

'நரசூஸ் பொடி வாங்கினீங்களே போட்டு புது டிகாஷன் இறக்கி கொடுங்களேன்' என்று சித்திக்கு அன்புக் கட்டளை இட்டாள். சித்தி, பெட்டில் உட்கார்ந்திருந்த என்னை தேவடியானே என்று பார்த்து விட்டுப் போனாள்.

சித்திகொண்டுவந்துவைத்த காப்பியை ஒரு மிடறு குடித்தேன். சர்க்கரையே போடலியே என்று எழுந்து அவளைக் கூப்பிட முனைந்தேன். வேண்டாம் என்று புவனா நெருங்கி அமர்ந்தாள்.

'இங்கே இருந்து எடுத்துக்கோ.'

அவள் இதழ்களைச் சுவைத்தேன். சர்க்கரை அதிகம்.

நான் வீடு போகும்போது இருட்டு கவிந்துகொண்டிருந்தது. இன்றைக்கு சனிக்கிழமை கச்சேரி ஆலந்தூர் சகோதரர்கள் என்று நினைவு வந்தது. 'பித்தம் தெளிய மருந்தொன்று இருக்குது' என்று செஞ்சுருட்டியில் பாடுவதைக் கேட்க இன்று எனக்குக் கொடுத்து வைத்திருக்கிறதா, தெரியவில்லை.

பித்தம் எப்போது தெளியுமோ, அது தெளியும்போது நானிருப்பேனோ?

ரொம்ப நாளாக ஏஆர்பி வார்டன் ட்யூட்டிக்குப் போகவில்லை என்று ஏனோ நினைவு வந்தது. போர் முடிந்ததும் ஏஆர்பி வேண்டாம்தான். ஆனால் அதை அதிகாரபூர்வமாக அறிவிக்கவேண்டாமா?

காம்பவுண்டுக்கு வெளியே கழுதை சாஜு நின்றுகொண்டிருந்தார். எம்.வி.எம். ஸ்டூடியோவில் உத்தியோகம் பார்க்கத் தொடங்கி இருந்தால் அவர் சாயந்திரம் ஆறு மணிக்கு வீட்டில் எப்படி இருக்க முடியும்?

அவரைத் திண்ணையில் இருத்தினேன். விலாசினி எதிர் வீட்டில் இருந்து எட்டிப் பார்த்துவிட்டு இரண்டு சிறிய டம்ளர்களில் சாயாவோடு வந்தபோது இனிமையான மாலை என்று முகமன் கூற மனம் நச்சரித்தது. சொன்னேன்.

‘இன்னிக்கும் வீடு சுத்தம் பண்ண முடியலே. நாளைக்கு ரத்தி வந்து எல்லாம் செஞ்சுப்பா... நீங்க அப்படியே விட்டுடுங்க... என்ன சரிதானே?’

விலாசினி சொல்ல, நான் ஆடுபோல் தலையாட்டினேன்.

சாஜுவுக்கு எம்.வி.எம்மில் வேலை கிடைக்கவில்லையாம். அவர் கொண்டுபோயிருந்த பம்பாயில் வேலை பார்த்திருந்த பட செட்களின் புகைப்படங்கள் அவர்களை அதிர்ச்சியடைய வைத்தனவாம்.

‘ஒரு முப்பது வருஷம் கழிச்சு வர முடியுமா? ரசனை அப்போ மாறியிருக்கும், இதெல்லாம் ரசிகர்களுக்கு இப்போ பிடிக்காது, சாரி’ என்றார்களாம்

விலாசினி வந்து ஹாலில் விளக்குப் போட்டுவிட்டு, பூஜை அலமாரியில் தீபம் கொளுத்தி, அச்சுதம் கேசவம் என்று நாமம் சொல்லி, வரேன் என்று கிளம்பிப் போனாள், மனதைவிட்டுப் போகாமல்.

சாஜு கையில் வைத்திருந்த ஆல்பத்தை என்னிடம் நீட்டினார். வாங்கிப் பிரித்துப் பார்க்க, முக்கோணமும், வட்டங்களும், நீள் செவ்வகமாக நிழலும் படிகங்களும், முனை திருகிய தூண்களும், கரடுமுரடான தரையில் கிடத்திய சுவர்க்கடியாரங்களும், தலை விரித்ததுபோல் கிளைகள் எல்லாத் திசையிலும் நீண்ட மரங்களுமாக இருந்தது. தான் புது அலை இந்திப் படத்துக்குப் போட்டது என்றார். பால்ராஜ் சஹானிக்கு பிடித்த ஓட்டல் நடன மண்டபம் செட் அது என்றார். ‘கேபினட் ஆப் டாக்டர் கலிகரி’ என்ற ஜெர்மன் படத்தால் பாதிக்கப் பட்டு உருவாக்கிய செட்டில் நடனம் நடத்தாமல் வில்லனின் பயங்கர வசிப்பிடமாக மந்திரவாதப் படத்தில் பயன்பட்டதாம்.

‘ஆர்ட் டைரக்ஷன்ங்கிறது அச்சு அசலா இருக்கறதை காப்பி அடிக்கறதில்லே சார். எழுத்திலே, ஓவியத்திலே சிற்பத்திலே இருக்கும் புனைவும் நிஜமும் ஆர்ட் டைரக்ஷனிலும் இருக்கு என்று ஸ்டூடியோக்காரர்களுக்கு இங்கேயும் புரியலே... இனி ஹாலிவுட் போனால்தான் படம் கிடைக்கும்போல’ என்றார்.

அவரை மறுநாள் ஞாயிறு காலை ஆறு மணிக்கு வேனில் வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். வேலப்ப நாயக்கரின் முட்டை வேன், காதல் வாகனமாகவும், கோழிமுட்டை ஊர்தியாகவும் இருப்பதோடு கழுதையும் சுமக்கப் போகுது.

சேத்துப்பட்டு புரசைவாக்கத்திலிருந்து ரெண்டு மைல் தூரம் என்பதைக்கேட்ட சாஜு, அப்போ தோபிகானாவுக்கு நடந்தே போயிடலாமே என்றார். அவருக்குப் பழகியிருக்கலாம். கழுதை யோடு தெருவில் இறங்கி நடக்க எனக்கு தைரியம் போதாதுதான்.

விடிந்ததும் வேலப்ப நாயக்கர் மருமகன்கள் இரட்டையர்கள் டரடரவென்று சத்தம்போடும் வேனோடு வந்துவிட்டார்கள்.

‘நீங்க விழுந்தபோது வந்ததுதான் சார்... அதுக்கு அப்புறம் இப்பத்தான்...’ என்றார்கள் என்னிடம். மூன்று வருடத்துக்கு முன்னால், தெலக்ஸ் புவனா வந்த அந்த மாலைநேரத்தை நினைவு கூர்ந்தார்கள்.

காகர்லா பக்தவத்சலத்தின் இரண்டு மகள்கள்? ‘கல்யாணமாகி கர்னூல்லே ஸ்கூல் டீச்சர்களா இருக்காங்க சார்’ என்றார்கள்.

மற்றபடி, டைப் அடிக்கக் கற்கும் வேறே பெண்களோடு, காகிதத்தில் நரியும் நாயும் அடித்து நழுவவிட்டு, வெள்ளையன் பேப்பரைக் கொண்டு போகாமல் விரட்டி, நேரம் போக்கிக்கொண்டிருக்கிறார்கள். டைப்ரைட்டிங் லோயர், ஹையர் என்று எந்தப் பரீட்சையும் பாஸ் பண்ணும் உத்தேசம் அவர்களுக்கு இல்லை. ஐயப்பன் நாடகத்தில் புலிக்கு முன் ஓட இன்னும் வரவேற்பு இருக்கிறதாம். எட்டு தினுசான ஓட்டமும் சாட்டமும் திட்டம் பண்ணியிருக்கிறார்களாம் இதற்காக.

வெள்ளையன் கழுதை விடைபெறத் தயாராக நின்றிருந்தது. அதற்கு இட்லியும் நேற்று மீந்த போளியுமாக குந்தி படைத்து முகத்தைச் சுற்றிக் கையை வீசி திருஷ்டி கழித்தாள். பல காலம் வீட்டில் வளர்த்த கழுதையை தோபிகானாவில் விட்டுவிட்டு வருவது வெள்ளையனை விட கழுதை சாஜுவுக்கு துக்கமானதாக இருந்ததைக் கவனித்தேன்.

தச்சிலா நான் எதிர்பார்த்ததைவிட மெலிந்து, அழகான, முப்பதுக்கு மேலே ரெண்டோ, மூன்றோ கூடுதலான வயதுப் பெண்ணாக இருந்தாள். ஏகப்பட்ட கழுதைகளோடு பழகியும் அவள் குரல் இனிமையாக இருந்ததைக் கேட்டேன்.

தோபிகானா முழுக்க வரிசையாகத் தடுப்பு எழுப்பி நூற்றுக்கணக்கான சலவைத் தொழிலாளிகள் தேக்கி வைத்த சுத்த நீரில் துணி துவைத்துக் கொண்டும், வெள்ளாவி வைத்துக்கொண்டும், இரும்புப் பெட்டியில் தணல்

பரப்பி இஸ்திரி போட்டுக்கொண்டும் கழுதைகளுக்கு காகிதமும் புல்லும் போட்டுக்கொண்டும் பரபரப்பாக இருந்தது.

தச்சிலா ஜெனரல் ஆஸ்பத்திரி துணிகளை வெளுக்கும் பெண்ணாம். இது செய்யவே நேரம் இல்லாததால் வீடு எதற்கும் சலவை செய்து தருவதில்லையாம். நாலு தலைமுறையாக சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு பெட்ஷீட், போர்த்தும் துணி, ஆபரேஷன் தியேட்டர் துணி, டாக்டர்கள் சோப்புப் போட்டுக் கை அலம்பி அலம்பித் துடைக்கும் சுத்தமான வெள்ளைத் துணி இப்படி சகல ஆஸ்பத்திரி துணியும் தச்சிலா துவைத்துத் தருவதுதானாம்.

'நானும் என் வீட்டுலே எல்லோரும் என் கழுதைகளும் எப்போவும் டெட்டால் வாசனையோட இருக்கோம்' என்றாள் ரத்னச் சுருக்கமாக. பத்து கழுதை வைத்திருக்கிறதாகவும், எந்தக் கழுதையையும் அதன் இஷ்டத்துக்கு மாறாக அழுக்குத்துணி ஏற்ற உபயோகிப்பதில்லை என்றும் தீர்மானமாகச் சொன்னாள்.

கழுதைகள் தோபிகானா முழுக்க துணி சுமந்து போய்வருவதைப் பார்த்த வெள்ளையன் இப்படி வேலையும் செய்யவேண்டும் என்று தெரியவர, மாட்டேன் மாட்டேன் என்று அழிச்சாட்டியம் செய்தது. தச்சிலா அதை மெதுவாக அணைத்துப் பிடித்துக் கூட்டிப் போவதை கண்ணீர் திரையாகக் கண்ணை மறைக்க சாஜு பார்த்தபடி நின்றார்.

செண்ட்ரலுக்குப் போய் ரத்னாவை அழைத்து வரவும் நாயக்கரின் டெம்போவைப் பயன்படுத்தலாம் என்று தோன்றியதை உடனே மாற்றி வைத்தேன். கழுதையைக் கூப்பிட்டுப் போகும் வாகனத்திலா என் சக்ரவர்த்தினி ரத்னாவை அழைத்து வருவது?

ரெட்டையர்கள் கழுதை விஷயமான பயணத்துக்குக் காசேதும் வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்.

மூன்று மணி நேரம் தாமதமாக வந்து செண்ட்ரலில் பூனா எக்ஸ்பிரஸ் இரவு எட்டு மணிக்கு நின்றதும் ரெண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்டில் தேட ரத்னா மிஸ்ஸிங். பதறிப்போய்ப் பார்க்க சாவகாசமாக முதல் வகுப்பு கம்பார்ட்மெண்டில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் அவள். அவளுடைய அப்பா கூடுதல் பணம் கட்டி, முதல் வகுப்பாக மாற்றிக் கொடுத்தாராம்.

பேகம் அக்தார் என்ற அற்புதமான ஹிந்துஸ்தானி சங்கீதப் பாடகி கூட வந்ததால் பயணம் முழுக்க தும்ரியும் அபங்கும் கஸலும்தானாம். அக்தருக்கு அடுத்த கூப்பேயில் மகா ஜோதிடர் ஒருத்தர் வந்தாராம். ரத்னாவுக்கு நான்கு பேர் அடங்கிய குடும்பம் என்று பார்த்ததுமே சொன்னாராம். புவி நினைவில் நான் திடுக்கிட்டேன். இன்னொருத்தர் யார்?

‘இதுதான் மூணாவது’ என்றபடி ரத்னா கைப்பையில் ஓர் உடுப்பி கிருஷ்ண விக்ரகத்தைக் காட்டி என் கன்னத்தில் தட்டினாள். அவளை அணைத்துக்கொள்ள நினைத்தேன். போர்ட்டர்களும் பயணிகளும் மொத்த உலகமும் எங்களையே பார்த்துக்கொண்டிருந்ததால் அதைக் கைவிட்டேன்.

‘அத்தர் போட்டிருக்கீங்களா?’

அவள் கேட்க, பேகம் அக்தர்தான் தும்ரி வாடை அடிக்க அடிக்க பாபுல் மோரா பாடியபடி அவள் பெட்டியில் வந்திருப்பதாகச் சமத்காரமாகச் சொல்லித் தப்பினேன். புவியிடம் வாசனை செண்டை மாற்றச் சொல்லவேண்டும்.

வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தபோது தெருவில் சிறிய கலவரம் நடப்பதன் அறிகுறிகள் தட்டுப்பட்டன. ஜோசியரும், ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக சுபாங்கி அம்மாளுடைய புருஷனும், டைப் இன்ஸ்டிட்யூட் ஐயங்காரும் சேர்ந்து நின்று பேசிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். விலாசினி சாஜு வீட்டுத் திண்ணையில் நின்றபடி எல்லோரையும் போகச் சொல்லிக்கொண்டிருந்ததும் கண்ணில் பட்டது. அந்தரடிச்சான் சாகிப் சுற்றி வந்து குட்டிக்கரணம் அடித்துக் கொண்டிருக்க, வெள்ளையன் கழுதையின் கனைப்பு திண்ணையிலிருந்து கேட்டது. அது எப்படியோ, தானே வழி கண்டு, சாஜு வீட்டுக்கு நேரே வந்து சேர்ந்துவிட்டது என்று புரிந்தது.

‘வெள்ளையன் இங்கேயே சமர்த்தாக இருக்கட்டும். போளி ஸ்டால்லே வேணும்னாலும் வாசல்லே கட்டி வைச்சுடலாம். படுத்திருக்கட்டும்... நாங்க சாப்பிடற சப்பாத்தியும், வெல்லப் பூரண போளியும், உப்பு கார போளியும், மோதகமும் அதுக்கும் உண்டு’ என்றாள் குந்தி ரத்னாவிடம்.

‘ஒரே ஒரு தடவை பல்டி அடிச்சுக்கறேன்’ என்று அந்தரடிச்சான் சாகிபு குட்டிக்கரணம் அடித்து, கழுதை கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்கினான். அது செல்லமாகக் கனைத்தபடி நின்றது.

‘குந்தி, சாப்பிடலாமா?’ என்றார் சாஜு குந்தியிடம் அசல் தமிழில்.

‘ஹோய், மாஜா சாம்ராட்’ என்று பதில் குரல் கொடுத்தாள் சோழிப்பல் சுந்தரி.

‘மீ பண் ஏத் ஆஹே’ என்று தானும் வருவதை அறிவித்தான் பப்லு.

குடும்பம் என்றால் எல்லாம்தான், எல்லோரும்தான் என்றாள் ரத்னா.

★★★

**பதினைந்து**

# ராமோஜி ஆங்கரே – சுவர்ணதுர்க்கம் – 1698

**க** டல் அமைதியாக இருந்தது.

பிற்பகல் நேரக் கடல் இது. வேளைக்கொரு குணம் இதற்கு உண்டு. மகிழ்ச்சியோ, துக்கமோ கொண்டிருக்கும்போது இது ராமோஜியோடு பேசும். அவனை அதிகாரம் செய்யும். உற்ற தோழனாக, செவி மடலைச் சிலிர்க்க வைக்கும் உப்புக் காற்றோடு ரகசியம் சொல்லும். கடல் கோபித்திருந்தால் ஓவென்று இரைந்து யாரை என்றில்லாமல் வைது திட்டும். அல்லது அழும்.

உறங்கப் போகும் நேரத்தில் கடல் தனக்குத்தானே தாலாட்டுப் பாடிக் கொள்வதையும் ராமோஜி கேட்டிருக்கிறான். காற்றின் கூக்குரல் அதிகமாகும் நேரங்களில் கடலுக்கு ஊடே தூரதேச ஒலிகள் ஒன்றிரண்டாக சப்திக்க ஆரம்பித்து, மெலிந்து இழைந்து, உயர்ந்து, காத்திரமான குரல்களாகும்.

மகாராஷ்டிரத்தில், கொங்கணக் கடல் பிரதேசத் துறைமுகமான டபோலியில் இருந்து ரத்னா, ராமோஜியை அழைக்கும் ஓசை, கடல் அலை மேலேறி வந்து இங்கே அவனுக்குக் கேட்கும். அவன் பதில் சொல்வதையும் ரத்னா சிரிப்பதையும் கடல் சேதியாகக்கொண்டு போகும், வரும்.

ரத்னா என்ன செய்துகொண்டிருப்பாள்? இன்றைக்கு என்ன தினம்? கிறிஸ்துநாதர் வருஷம் 1698 என்பது மட்டும் நினைவு இருக்கிறது. நாளும் நட்சத்திரமும் தெரியாவிட்டாலும், இது கோடை காலம். கடலிலே கோடை உச்சத்தில் தகிக்கிறது.

டபோலி நகரிலும், மிக அருகே ஹர்னாய் கிராமக் கடற்கரையிலும், அதை அடுத்து கடலுக்குள் ஒரு மைல் தூரத்தில் சுவர்ணதுர்க்கம் கடல் கோட்டையிலும் இப்போது கோடையாகத்தான் இருக்கும். இங்கே பிற்பகல் நேரம் என்றால் அங்கே சாயந்திரம் இரவைச் சந்திக்கும் அந்திப்பொழுதாக இருக்கக்கூடும்.

ரத்னா அந்திக்கான தலைக் குளியல் நடத்தி முடித்து மாளிகை உப்பரிகையில் நின்று தலையாற்றிக்கொண்டிருப்பாள். மாலை நேரக் குளியல் விஸ்தாரமான ஒன்று.

காலை நேரத்தில் குளித்து, ஹர்னாய் துர்க்கை கோவிலுக்கு ஓடி, உதயகால ஆராதனை தொழுது திரும்பவே நேரம் சரியாகிவிடும். வீட்டில் சின்னதாக ஒரு அபங், ஒரு பஜன் பாடி பூஜை. அது கழிந்துதான் காலை பசியாறுதல்.

ராமோஜி கடலில் இருந்து கரை இறங்கி வீட்டுக்கு வரும்போது காலைச் சிற்றுண்டியோடு அவித்த முட்டையும், மட்டன் குருமாவும் வழக்கமான மல்லிப்பூ இட்லிக்கும், பௌர்ணமிச் சந்திரன் போன்ற தோசைக்கும் கள்ளத் துணையாகும். இஞ்சித் துவையலுக்கும், சாம்ராட் சாம்பாஜி பெயர் கொடுத்த சாம்பாருக்கும் நாவின் சுவை நாளங்களுடைய பின்வரிசையில் இடம் ஒதுக்கிவிட்டுக் கும்மாளம் இடும், பொறித்த கோழிமுட்டையும் குருமாவும்.

சாயந்திரக் குளியலை உத்தேசித்து, ராமோஜி ஊரில் இருக்கும்போது வேலைக்காரர்கள் எல்லோரும் காலை ஆறு மணிக்கு வந்து பகல் நான்கு மணிக்கு வேலை முடிந்து அனுப்பிவைக்கப்படுவார்கள்.

ராமோஜி வீட்டிலிருக்கும் தினங்களில் மாலைநேரக் குளியல் சேர்ந்தே நடத்தப்படும் கேளிக்கைச் சடங்காகும். அதன் முன்னும் பின்னும், சில தடவை இரண்டு நேரமும், இன்னும் சில பொழுதுகளில் நீராடும்போதும் கலவி மணம், சாப்பாட்டில் வெங்காயம், பூண்டு வாடைபோல், சூழலில் அடர்த்தியாகக் கவியும்.

இப்போது தனியாக ரத்னா அந்த நீண்ட, நல்ல பகல்களைப் பற்றிய இனிய நினைவுகளில் மூழ்கியிருப்பாள். ராமோஜிக்குத் தெரியும் அது. எட்டு வருடம் முன், கல்யாணம் ஆனபோதே தொடங்கியவை அந்த நினைவுகள்.

ராமோஜியை தஞ்சாவூரிலோ, டபோலிலோ, சுவர்ணதுர்க்கத்திலோ யாரும் பெயர் சொல்லிக் கூப்பிடுவதில்லை. முன்பெல்லாம் எலிப்பொறி ராமோஜி என்று கூப்பிடுவார்கள். அப்புறம் அவனை ராமோஜி ஆங்கரே என்று அழைப்பவர்களின் எண்ணிக்கை பெருகியது. அது ராமோஜி கடற்படையில் சேர்ந்த பிறகு.

சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் புதல்வர் ராஜாராம் போன்ஸ்லே நாடாளும் இந்தக் காலத்தில் மராட்டி கடற்படை சகல வலிமையோடும் முன்னேறத் தொடங்கியுள்ளது. அவரைத் தெரியாதவர்கள்கூட அபூர்வமாக அங்கங்கே இருக்கலாம். ஆனால் மராட்டி கடற்படைத் தலைவர் கனோஜி ஆங்கரேயைத் தெரியாதவர்கள் இந்துஸ்தானத்தில் எங்கும் இருக்க முடியாது.

எனினும், தஞ்சாவூர் மராட்டியர்களில், ஆங்கரேயின் கடற்படையில் சேர்ந்தவர்கள் அதிகமில்லை. அவர்கள் பெரும்பாலும் தஞ்சை அரண்மனையில் சின்னச் சின்னதாக உத்தியோகம், மற்றும் வாழைப்பழமும், வெற்றிலை, பாக்கு சீவலும் விற்பது, இப்படிக் குற்றேவலும் சிறு வர்த்தகமும் செய்வதல்லாமல் பெரியதாக எதற்கும் முனைவதில்லை. ராமோஜி ஆங்க்ரே அந்த விஷயத்தில் முற்றிலும் வித்தியாசமானவன்.

ரத்னாவைக் கல்யாணம் செய்து புனேக்கு அடுத்து ஒரு சிறு நகரத்திலிருந்து கூட்டிவந்த பிறகுதான் அவனும் மாறிப் போனான். பத்தோடு பதினொன்றாக இருந்தவன், ஆயிரத்தில், பத்தாயிரத்தில் ஒருத்தனானது ரத்னா இச்சல்கரஞ்சியில் இருந்துவந்த முகூர்த்தம்தான்.

தஞ்சாவூரில், புனேயும் நாகபுரியும் பிரசித்தமான அளவு மராட்டிய பட்டணம் வேறெதுவும் அதிகமாகத் தெரிய வந்திருக்கவில்லை. இச்சல்கரஞ்சி என்ற ரத்னாவின் ஊர்ப் பெயரையே பஜனை மடத்தெரு சாமண்ணா எச்சில்காளாஞ்சி என்றுதான் ஆரம்பத்தில் ராமோஜியை கிண்டல் செய்யும் விதமாகச் சொல்லி வந்தார். அது ராமோஜி ஆங்கரே எலிப்பொறி ராமோஜியாக இருந்த காலத்தில். இப்போது எச்சில் கரஞ்சி என்று சொன்னால், சாமண்ணா வாயில் பல் இருக்காது. அது ஏற்கெனவே இல்லைதான்.

எலிப்பொறி ராமோஜி என்று சொப்பனத்தில்கூட யாரும் அழைக்காமல் இந்த எட்டு வருடம் போயிருக்கிறது.

பத்து வருடம் முன்பு, ராமோஜியின் தினசரி வேலை மெல்லிசான மரப் பலகை கிடைக்க, மரம் அறுக்கும் மரவாடிப் பட்டறைகளை தினசரி ஒரு தடவை சுற்றி வருவது. அதற்கு நிறைய நேரம் செலவாகும்.

எலிப்பொறி செய்ய அப்படி மரம் வாங்கி எடுத்துப் போகும்போது ஏற்கெனவே அவனிடம் வாங்கிய யாராவது வழியில் பிடித்து நிறுத்துவார்கள்.

‘எலியை வைத்தால் மூஞ்சூறு மாட்டுகிறதே... சித்தி புத்தி சமேத கணபதி பகவான் வாகனமன்றோ மூஷிகம். அதை ஏன் பிடிக்க வேண்டும்? உன் எலிப்பொறி ஒன்றும் சரியில்லை’ என்றோ, ‘உப்புக்கண்டம் மாட்டி வைக்க எலிப்பொறிக்குள் வசதிவேண்டும்’ என்றோ குறைச்சல், புகார் என்று சொல்ல, ராமோஜி அதை எல்லாம் சாந்தமாக ஏற்று வாங்க வேண்டி வரும்.

அபூர்வமாக, 'உன் எலிப்பொறியை வைத்து ஒரே நாளில் நாலு எலி பிடித்தேன்' என்று பாராட்டு வருவதும் உண்டு. எலிப்பொறியில் எலி மாட்ட, பொறியை நன்றாக அலம்பிவிட்டு காய வைத்து அப்புறம் வெங்காய பஜ்ஜியோ வடையோ, முடிந்தால் புதிதாகச் செய்து மாட்டி வைக்கணும் என்று சொல்லிக் கொடுத்தாலும் அதில் சிரத்தை இல்லாதவர்களோடு அல்லாடிக்கொண்டிருந்தபோதுதான் இச்சல் கரஞ்சியில் இருந்து ரத்னா பாய் என்ற அழகான கன்யகையை அவன் கல்யாணம் செய்துகொள்ள ஏற்பாடானது.

அவள்தான் ராமோஜி பிழைப்புக்காக மேற்கொண்ட தொழிலைப் பற்றி அவனிடம் முதல் தடவையாகப் பேசியது.

'வாழ்க்கை முழுக்க எலிப்பொறி செஞ்சு ஒண்ணும் ரெண்டுமா விற்கப் போறீங்களா?' அவள் கேள்விக்கு அவன் பதில் வெகுளித்தனமாக இருந்தது.

'இன்னிக்கு ரெண்டு பொறி, அடுத்த வாரம் நாலு, அடுத்த மாதம் பத்து, அடுத்த வருஷம் நூறு இப்படி வியாபாரம் செழிக்கும்' என்று அவன் கணக்குப் போட்டுக் கனவு கண்டுகொண்டிருந்தபோது ரத்னா கேட்டாள் – 'தஞ்சாவூர் முழுக்க எலியே இல்லாமல் போச்சுன்னா?'

'கும்பகோணத்திலே இருக்குமே.'

'அங்கே வேறே யாராவது எலிப்பொறி வித்துக்கிட்டு இருக்க மாட்டாங்களா?'

ரத்னாதான் ராமோஜியை சத்ரபதி ராஜாராம் போன்ஸ்லேயின் சமுத்திர சேனையில் சேர வைத்தது.

'தரையில் நகரும் காலாட்படை என்றால் அடிதடி, உடம்புக்குக் காயம், கைகால் ஒடிந்து போவது என்று நிறைய வரும். சமுத்திரத்தில் கப்பலேறி விதம்விதமாக தேசம் போகும் கடல் படைக்காரன் ஆகலாமே. உத்தியோகம் வேகமாக விருத்தியாகும். கடல், பழகினால் நிலத்தைவிடப் பத்திரமானதில்லையா?'

அவள் அடி எடுத்துக் கொடுக்க, அவனுக்கு எல்லாமே புதுசாக இருந்தது. முக்கியமாக கடலில் கப்பல் பயணம். அவன் கடலையும் கப்பலையும் தன் வாழ்க்கையில் பத்தாவது வயசில் அப்பாஜி நாகைப்பட்டிணத்தில்

கொண்டுபோய்க் காட்ட ஒருதடவை பார்த்திருக்கிறான். நாகையில் யாருக்கோ கல்யாணம் என்று அப்பாஜி கூட்டிப் போனபோது அது.

கடற்படையில் சேர ராமோஜிக்கு விருப்பம்தான். சாப்பாடு போட்டு சம்பளமும் தருவார்களாம் என்று ரத்னா சொன்னபோது நியாயமான ஒரு சந்தேகத்தைக் கிளப்பினான் அவன்.

‘எனக்கு நீச்சல் தெரியாதே. கடல் படையில் நான் எப்படி சேர முடியும்?’

கடல்படையில் சேர ஒழுங்கும், சொன்னபடி கேட்கும் உடம்பும், வலிமையும் வேண்டுமே தவிர, நீச்சல் தெரிந்திருக்கவேண்டாம் என்று ரத்னா சொல்லி அவன் தெரிந்துகொண்டது அப்போதுதான்.

ரத்னா சொல்லிக் கொடுத்தபடி கடற்படையில் சேர சம்மதம் என்று ராமோஜி எழுதிய லிகிதத்தை, அவள் புனேயில் யார் மூலமோ கனோஜி ஆங்கரேவுக்குச் சேர்ப்பித்தாள். சுவர்ணதுர்க்கத்தில் தன்னைச் சந்திக்கச் சொன்னார் ஆங்கரே.

ராமோஜி சுவர்ணதுர்க்கத்துக்கு, ரத்னாவோடு வேடிக்கை பார்க்கும் உத்தேசத்தோடு போனான். ஆங்கரே உற்சாகமும் சந்தோஷமுமாக இருந்த நாள் அது. ராமோஜியைப் பார்த்ததுமே ஆங்கரேக்குப் பிடித்துப் போனது. வெகுளியான முக பாவமும், சதா அங்கே தவழும் சிரிப்பும், வாழ்க்கையை சுவாரசியமாகப் பார்க்கிற மனோபாவமுமாக ராமோஜியின் விசேஷங்கள் கனோஜி ஆங்கரேக்கு ரசிக்கக்கூடியதாக இருந்தன.

‘ராமோஜிக்கு அடுத்து?’

கனோஜி ஆங்கரேயின் கேள்வி புரியவே நேரம் எடுத்தது ராமோஜிக்கு.

‘துணைப் பெயர் பத்மநாபராவ்ஜி என்று கேட்க சாதாரணமாக இருக்கு’ என்றார் கனோஜி. குறை காண்பதாக இல்லை அது.

‘ஆங்கர்வாடி என்னும் புராதன செம்படவ கிராமத்துப் பெயரில் இருந்து, ஆங்கரே என்ற துணைப்பெயரை, எனக்கு கடல் கற்பித்த கோலி இனத்துக்கு நான் செய்யும் மரியாதையாக வைத்துக் கொண்டேன்’ என்றார் அவர்.

‘நானும் ஆங்கரே ஆகட்டுமா?’ கனோஜி புன்சிரிப்போடு தலையசைக்க, அடுத்த நிமிஷம் ராமோஜி ஆங்கரே ஆனான் எலிப்பொறி ராமோஜி.

வாழ்க்கை பூரா கோலி என்ற செம்படவ இனத்து மக்களோடு சேர்ந்து இருந்தும், விளையாடியும், கடலோடியும், மீன் பிடிக்கவும், துஷ்ட ஜந்து விலக்கவும் பயின்றும், கடல் போர் தந்திரம் கற்றும், சர்கேல் என்ற கடல் மகா அதிகாரி ஆகியிருந்தார் கனோஜி. 'கடல் சிவாஜி' என்று அவர் பட்டப்பெயர்.

'என் அப்பா சுவர்ணதுர்க்கக் கோட்டைத் தலைவராக படகிலோ, கப்பலிலோ போகும்போது பையைத் தூக்கிக்கொண்டு நானும் கிளம்பி விடுவேன். கடல்தான் எனக்கு ஆசானாக எல்லாம் கற்றுத் தந்தது' என்று கனோஜி சொன்னபோது தன் பாலியத்தை நினைத்துப் பார்த்தான் ராமோஜி.

எலிகளோடும் எலிப்பொறிகளோடும் தஞ்சாவூர்த் தெருக்களை ஓட்டி ஓடும் சாக்கடைகளோடுமான ஒரு வாழ்க்கை அது. ரத்னா வந்து உலுக்கி எழுப்பியிராவிட்டால் எலியாகவே முடிந்திருப்பான் அவன்.

ராமோஜியை அவன் ஆகிருதி திருப்திகரமாக இருந்ததால், கடல்படையில் கீழ்நிலை அதிகாரியாக கப்பல் முகப்பையும், பின்பகுதியான அமரத்தையும் சுத்தம் செய்யும் ஐந்து பேருக்குத் தலைவனாக நியமித்தது நேற்றுத்தான் நடந்ததுபோல் இருக்கிறது.

'ராமோஜி ஆங்கரே, வேலையில் எப்போது சேருவீர்?' என்று கனோஜி கேட்க, இதோ இன்றைக்கே என்று ரத்னாவிடம் பிரியாவிடை பெற்று கடலோட வந்து நின்றான் ராமோஜி. அவனை இன்னும் அதிகமாகப் பிடித்துப்போனது கனோஜிக்கு.

'ராமோஜி ஒரு ஆறு மாதம் நீர் சுவர்ணதுர்க்கத்திலேயே வேலை செய்யும். தஞ்சாவூரில் இருந்து குடித்தனத்தையும் டபோலியிலோ, ஹர்னாயிலோ, சுவர்ணதுர்க்கத்துக்கு வெகு சமீபமாக மாற்றி, வைத்துக் கொள்ளும்' என்று சலுகை கொடுத்தார் அவர். அடுத்த மாதம் ரத்னா டபோலி வந்தானது.

எட்டு வருடம் ஓட்ட ஓட்டமாகக் கடந்து போய்விட்டது. ராமோஜி இப்போது கனோஜி ஆங்கரேயின் நம்பிக்கை பெற்ற, அவருக்கு அடுத்த நிலை அதிகாரிகளில் ஒருவன்.

'ராமோஜி, நீர் இங்கே வரும் முன்னால் பிழைப்புக்கு என்ன செய்து கொண்டிருந்தீர்?' என்று ஒருநாள் கேட்டார் கனோஜி.

'நானா, எலிப்பொறி தயாரித்து தஞ்சாவூரிலும் கும்பகோணம், ஒரத்தநாடு, திருச்சிவரைபோய் அதை விற்றேன்' என்றதும் 'ரொம்ப சுவாரசியமாக

இருக்கே, எலிப்பொறி எப்படி செய்கிறது?' என்று ஆர்வமாக விசாரித்தார் கனோஜி. நிதானமாக எடுத்துச் சொன்னான் ராமோஜி.

கடற்படையில் பதினெட்டு மராத்திக் கப்பல் இருப்பதாகவும் எல்லா கப்பலிலும் எலித் தொல்லை சகிக்க முடியாமல் இருக்கிறது என்றும் குறைப்பட்டுக்கொண்டார் கனோஜி. 'எலிபாஷாணம் வைத்தால் எலி சாகிறதுக்குப் பதில் படை வீரன் உயிர் போகிறது' என்றார் அவர்.

கனோஜி ஆங்கரே கேட்டுக் கொண்டபடி ராமோஜி இருபது எலிப் பொறிகளை அடுத்த மூன்று மாதத்தில் செய்து தந்தது மட்டுமில்லை, மொத்தம் அறுபத்தேழு எலிகளை அவற்றைக்கொண்டு பிடிக்கவும், கொன்று கடலில் வீசி எறியவும் வழிசெய்து தந்தான். அவற்றில் பல எலி இல்லை, பழம்பெருச்சாளிகள். எலிப்பொறியையே தகர்க்கும் வலிமையோடு போராடிய அவற்றைக் கொல்ல மனதுக்குக் கஷ்டமாக இருந்தது ராமோஜிக்கு. அவன் அதுவரை எலிப்பொறி விற்றிருக்கிறான். எலி பிடித்துக் கொடுத்ததில்லை. கொன்றதும் இல்லை. அதுவும் பழக வேண்டி வந்தது.

மராத்தா கப்பல்களிலும் படகுகளிலும் எலித்தொல்லை ஒழிந்தது பற்றி சத்ரபதி ராஜாராம் போன்ஸ்லே மகராஜ் காதுக்கும் போக, கனோஜி ஆங்கரேக்குப் பாராட்டு. ராமோஜி ஆங்கரேயையும் சதாராவில் அரண்மனைக்குக் கூப்பிட்டு மரியாதை செய்தார் போன்ஸ்லே மகாராஜ்.

'உம் தஞ்சாவூர் சகோதரனா இந்தப் பையன்?' என்று பாதி கிண்டலும் மீதி விஷமமுமாகக் கேட்டார் போன்ஸ்லே. ராமோஜிக்கு இன்னும் ஏறுமுகம்தான்.

கடற்படையில் தமிழ் தெரிந்த ஓர் அதிகாரி ராமோஜியைப் பாராட்டிப் பாட்டுக் கட்டினான் இப்படி –

> எலி பிடித்தான் ஓர்தமிழன் அன்று
> கடல் கொண்டான் நிலம்சிறக்க இன்று
> ஏழாம் பெருங்கடலும் ஏறிப்போர் வெல்லும்
> ஊழித்தீ கப்பலென உருவெடுக்கக் காணீர்

அந்தப் பாட்டு இன்னும் ராமோஜியின் பிரதாபம் சொல்லி அங்கங்கே போர்க் கப்பல்களிலும் சரக்குக் கப்பல்களிலும், ராத்திரி நேரத்தில் பணியாளர்களும், பயணிகளும், படை வீரர்களும் ஓய்வெடுக்கும் போது பாடப் படுகிறது.

விஜயசந்திரிகா என்று பெயர் வைத்த ராமோஜிக்குப் பிடித்தமான இந்தக் கப்பலில்கூட அவன் இல்லாவிட்டால் பாடுவது வழக்கம்தான்.

எலி பிடித்ததோடு தொடங்கி, பத்து கடல் கொள்ளைக்காரக் கப்பல்களை அடுத்தடுத்து வென்ற கோலியில்லா கோலியிவன் [செம்படவ இனத்தில் பிறக்காத சிறந்த மீனவன் இவன்], கனோஜி நண்பன் இவன் என்று ராமோஜியின் பராக்கிரமம் சொல்வதாக அந்தப் பாடல் நீளும். வார்த்தைகள் இன்றி தாளம் மட்டும் கொட்டி சொற்கட்டு உதிர்த்து அலைகள் அதிர முடியும்.

தனனான தன்னான தானா
தனனான தனனான தானா

அந்தத் தத்தகார மெட்டை முணுமுணுத்தபடி கப்பல் மேல்தளத்தில் மெல்ல உலவினான் ராமோஜி ஆங்கரே.

பலமான ஒரு காற்று வீச ஆரம்பித்தது. கப்பல் குசினியில் இருந்து ராச்சாப்பாட்டுக்காகக் கருவாடு பொறிக்கும் வாடை காற்றோடு பரவி வந்தது.

கடல் பரப்புக்கு மேலே உயர்ந்து துள்ளிக் கடலுக்குள் நேர்குத்தலாக மறையும் அபூர்வ மீன்கள் காணப்படும் பகுதி இது. போன மாதம் இந்தக் கடல் பரப்பில் ஒரு பிரம்மாண்டமான சுறா மீன் கடல்நீரை அருவியாக எடுத்துப் பீச்சியடித்து, கூர்மையான பல்வரிசை வெளியே தெரியப் பயங்காட்டி, விஜயசந்திரிகா கப்பலின் முகப்புக்கட்டையை யும், சீப்போம்பையும்பற்றியபடி மணிக்கணக்காகத் தொடர்ந்து வந்தது. ராமோஜிக்கு மறக்க முடியாத காட்சி அது.

'படகை இறக்கலாமா?' விட்டோபா கோலி சுக்கான் அறையிலிருந்து வெளிப்பட்டுப் பணிவோடு வந்து நின்று ராமோஜியைக் கேட்டார்.

கோலி என்ற துணைப் பெயரைச் சொந்தப் பெயரோடு இணைத்துக்கொள்ள தயக்கம் காட்டிய கடலோடும் செம்படவ இனத்தில், பெருமையோடு கோலி என்று தம்மை அடையாளம் காட்டிக்கொண்ட விட்டோபா, ராமோஜியைவிட பத்து வயதாவது மூத்தவர்.

விட்டோபா என்ற பெயர் வேதாள அரசனுக்கு உரியது என்று அவர் மூலம் ராமோஜிக்குத் தெரியவந்தது. சாத்தையா என்று அந்தப் பெயரைத் தமிழில்

சொன்னான் அவன். விட்டோபாவுக்கு தமிழ்ப் பெயர் பிடித்துப் போனது. என்ன எளிமை, இனிமை என்று சொல்லிக்கொண்டே இருந்தார் அவர்.

சுவர்ணதுர்க்கத்தில் ராமோஜிக்கு வேலைக்கு நடுவே சுரைக்குடுக்கை மாட்டி, நீச்சல் சொல்லிக் கொடுத்தவர் விட்டோபாதான். ராமோஜி இன்னும் கரைகாணாத திறமை அது. நேரமும் காலமும் இனியும் வாய்க்குமென்று தோன்றவில்லை. பதினெட்டு வயதுக்கு மேல் நீச்சல் வராதாமே என்று விட்டோபாவைக் கேட்டான் ராமோஜி. உங்களுக்கு பதினெட்டு கடந்துவிட்டது என்று நினைக்கத் தொடங்கும்வரை வரும் என்று திருத்தினார் அவர்.

‘ஏணியை இறக்கிவிடலாமே. ரங்கீலாவையும் ஒரு தடவை நடந்து பார்த்தபின் அதிகாரிகளோடு சந்திப்பு ஆரம்பிச்சுடலாம். சீக்கிரம் முடிக்கணும்னு தோணுது… ஏனோ உடம்பு வலிக்குது… சள்ளைக்கடுப்பு போல…’

‘இன்னிக்கு முடியலேன்னா நாளைக்கு போகலாமே பாவு’ என்று விட்டோபா மெல்லிய குரலில் பணிவு அடர்த்திச் சொன்னார். ‘பரவாயில்லை பாவு’ என்றான் ராமோஜி.

ராமோஜி தன் கப்பல் அறைக்குப்போய், தொளதொளத்த பைஜாமாவையும் குப்பாயத்தையும் விடுத்து, இறுக்கிய கால்சராயையும் கமீசையும் அணிந்துகொண்டு புறப்பட்டான்.

‘தீத்தாங்கியை மாற்றணும்போல இருக்கே… கயிறு அங்கங்கே நைந்திருக்கு பாரும்’ என்று விஜயசந்திரிகா கப்பலின் நைந்த அடிதாங்கியைச் சுட்டிக் காட்டியபடி ஏணியை நோக்கி வேகமாக நடந்தான் ராமோஜி.

‘மோதல் ஏதாவது இருந்தா, பக்கவாட்டிலே கப்பலை அடிபடாமல் வச்சுக்க அந்தக் கயிறு வேணுமே’, அவன் கடல் இரைச்சலை மீறிக் குரல் உயர்த்திச் சொன்னான்.

‘மோத யார் இருக்காங்க பாவு?’

விட்டோபா பதில் சொல்லியபடி நடையின் வேகத்தை அதிகப்படுத்தினார்.

மராட்டா சமுத்திர சேனை இதுவரைக்கும் இல்லாத அளவு பெரிய, வலிமை வாய்ந்த, தேவையானால் போர்க் கப்பலாக வடிவமெடுக்கும் கப்பல்களின் நீண்ட தொகுப்பாக அமைந்தது. எவ்வளவு கப்பல்கள் மொத்தம் என்று

எண்ணிக் கணக்கெடுத்தாலும் வாய்விட்டுச் சொல்லக் கண்டிப்பாகத் தடை உண்டு.

‘நம்ம கண்ணே, நம்ம வாயே கொள்ளிக்கண்ணாக, அஸ்து சொல்லும் வாயாகக் கொட்டி நல்லது நடக்க சின்னதாகவாவது விக்னம் தந்துவிடும்’ என்று பயம். வரும் விக்னம் எல்லாம் நீக்க பாபா விக்னாச்சி, விநாயகரை ஒவ்வொரு கப்பலிலும் மனதிலும் சதா வழிபடுகிற கடற்படை இது.

மகா சர்கேல், மகா சத்ரப், மகாவீரர் கனோஜி ஆங்கரே தலைமையில் அத்தனை போர்க் கப்பலும் இயங்கிக்கொண்டிருந்தன. அதில் ஐந்து கப்பல் ராமோஜி ஆங்கரே தலைமையில்.

ராமோஜிபோல் கவனமாகப் பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடற்படை உப தலைவர்கள் சிலர் உண்டு. ஒவ்வொருத்தர் கட்டுப்பாட்டிலும் மூன்று முதல் ஐந்து சிறிய கப்பல்களோ, ஒன்று அல்லது இரண்டு பெரிய நாவாய்களோ உண்டு. இந்த உபதலைவர்கள் கனோஜியின் கண்காணிப்புக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டவர்கள்.

இருபத்தாறு கோட்டைகளும் இன்னும் வந்துகொண்டிருக்கும் கோட்டை கொத்தளங்களும் மொத்தமாக கனோஜியின் அதிகாரத்தில் வரும்.

ராமோஜியின் ஐந்து கலங்களில் இரண்டு நடுக் கடலில் இப்போது – இந்த நடுத்தர அளவுக் கப்பலான விஜயசந்திரிகாவும், கூடவே நிழல் போல் தொடரும் சிறு கப்பல் ரங்கீலாவும்.

ரங்கீலா மராட்டிய கடல் படை கட்டமைத்தது இல்லை. கடல் கொள்ளைக்காரர்களிடமிருந்து கனோஜி ஆங்கரே ஐந்து வருடம் முன் கைப்பற்றியது. விட்டோபா, ரங்கீலா கப்பலின் தலைமை மாலுமி.

படகு இறங்கட்டும் என்று எக்காள இசை இனி கேட்கும். விஜயசந்திரிகா வின் உயர்ந்து நின்று காற்றில் மடங்கித் திரும்பி நீளும் பாய்களைச் சுமந்து நிமிர்ந்த பாய்மரத் தாங்கிக்குக் கீழே இருந்து வரும் ஒலி அது. அங்கே மரக்கூரையும் சுற்றிலும் கீற்றுத் தடுப்பும் வைத்த ஒரு சிற்றிடம் உண்டு. எக்காளம், தம்பூர் [முரசு] போன்ற கட்டளை ஒலிபரப்பும் சிறு வாத்தியங்களும், அருகாமையில் வரும் கப்பல்களுக்கும் பெரும் படகுகளுக்கும் சமிக்ஞை தர வாணவெடிகளும் அங்கே பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்துதான் எக்காள ஒலி இப்போது புறப்பட்டு வெளியை நிறைக்கும்.

ராமோஜி தலையைப் பார்த்ததும், அவ்விடத்தில் வேலையில் நின்ற சிப்பாய் நிமிர்ந்து நின்று, மூன்று சிறு அழைப்புகளாகப் படகை இறக்கச் சொல்லி வாசித்தான். அடுத்து ராமோஜி ஆங்கரேக்கான அதிகார ஒலியையும் வாசித்தான். தொடர்ந்து நூல் ஏணியை இறக்க இசை உத்தரவும் வந்தது.

முதலில் விட்டோபா நூலேணியில் கால் வைத்து கீழே கடலில் மிதந்து கொண்டிருந்த படகில் லாகவமாக வந்துசேர்ந்து எல்லாம் சரியாக இருக்கிறது என்று வலது கையைத் தூக்கித் தலைக்கு மேல்காட்டினார்.

அடுத்து ராமோஜி பக்கம் நூலேணி கடியார ஊசல்போல் அசைந்து வந்தது. அதைத் தொட்டுப் பிடிப்பதற்குள் கை பற்றும் எல்லையைக் கடந்து திரும்பிவிட்டது ஏணி.

'ஏய் நல்ல பிள்ளை இல்லே நீ... வா வா 'என்று ராமோஜி அதை அழைக்க அடுத்தமுறை வந்தபோது இறுக்கமாக அதைப்பற்றி ஏணியோடு ஆடினான் ராமோஜி.

கடல் காற்று வலுத்து, 'என்ன ராமோஜி, ரத்னா நினைவுதானா எப்பவும்' என்று கிண்டல் பண்ணியது. 'ரத்னா இல்லாவிட்டால் ஒரு பொன்னி, இன்னொரு மரகதம்' என்று சேர்ந்துகொண்டது கடல்.

கடல் எல்லாம் ஆதிசேஷன். காற்றெல்லாம் அனுமன். அந்த நைஷ்டிக பிரம்மச்சாரிகளுக்கு ராமோஜி என்ற கிருஹஸ்தன் கிண்டல் செய்து விளையாட நல்ல நண்பன்.

'ஹனுமன் ஜி மகராஜ், இப்படி ஆட வைச்சுட்டீங்களே, தயவு செய்து படகுலே தூக்கிப் போடுங்களேன் இந்த பக்தனை... ஊர்லே குடும்பம் உண்டு. உங்க கருணை இருந்தாத்தான் போய்ச்சேர்ந்து கூட இருக்க முடியும்.'

'ஸ்வர்ணதுர்க்கம் போக என்ன அவசரம் ராமோஜி, ரத்னாவை பிரிந்து இருக்க முடியாதா... கவலைப்படாதே... ரத்னா இப்போ என் கோவிலுக்குத்தான் வந்திருக்கா. நானாச்சு கவனிச்சுக்க... ஆசிர்வாதம் பண்ணச் சொல்லிக் கேட்கறா... இதோ போறேன்... ஜாக்கிரதையா இருந்துக்கோ... மனசை நிலையா வச்சுக்கோ... அலைக்கழிக்க ஆயிரம் சந்தர்ப்பம்... ஒவ்வொரு அலை மேலும் ஏறி ஓடினா அக்கரை போக முடியாது... இந்தா உன் நூலேணி...'

வாயு புத்திரன் சொல்லிக் கையசைத்துப்போக காற்று மறைந்து நூலேணி படகுக்கு அருகே ஊசலாடி நிற்க, ராமோஜி இறங்கினான். விட்டோபா, படகு போகலாம் என்று உத்தரவிட்டார். படகு இருநூறு அடி கடல் பரப்பின் குறுக்கே செலுத்தப்பட, இரண்டு வீரர்கள் துடுப்பு வலித்துப் போனார்கள்.

ரங்கீலா கப்பலின் சிறு எக்காளம் முழங்க, அங்கே விட்டோபா இல்லாத நேரத்தில் தலைவனாக இருந்த சுபேதார் பதவி துறக்க, விட்டோபா கப்பல் நாயகனாக ராமோஜியை வரவேற்று கப்பலின் முகப்பை அடுத்துக் கிடந்த நீலத்தரை பாவிய உலவுதளத்துக்கு அழைத்துப் போனார்.

உற்சாகமாக வரவேற்ற இருபது வீரர்கள் பெயரையும் வரிசை எண்ணையும் சொல்லி ராமோஜிக்கு இரு கரம் குவித்து வணங்கி, பாதரட்சை அணிந்த காலை கப்பலின் மரத்தரையில் ஓங்கி அறைந்து ஹாங் ஜி என்று அசையாமல் நின்றனர். இன்னும் இரண்டு பேர் மட்டும் பாக்கி. புதிதாகப் படையில் சேர்ந்த இளைஞர்கள். வயிற்றுப் போக்கும் வாந்தியுமாக அவதிப்பட்டுக்கொண்டிருப்பதாக விட்டோபா சொல்லும்போதே ராமோஜி அவர்கள் படுத்திருந்த நோய்ப் படுக்கை அறைக்குள் நுழைந்து விட்டான்.

இற்றுப்போன பட்டுத்துணிபோல் படுத்திருந்த முதல் இளைஞன் ராமோஜியைப் பார்த்ததும் எழுந்து உட்கார முயன்றான். ‘மஹா ப்ரபு’ என்று தீனமாக விளித்தான் அவன்.

‘ஷ்... மோட்டா பாவுன்னு கூப்பிடச் சொல்லியிருக்கேன் இல்லே, நான் சோட்டா பாவு...’ விட்டோபா கண்காட்ட, கூடவே வந்த மற்ற வீரர்கள் சிரித்தார்கள்.

‘குறை தீர்க்கும் நேரம்’ என்று எக்காளம் வாசிக்கப்பட்டது. மௌனம் நிலவியது அடுத்த சில நிமிடங்களுக்கு. குறையே இல்லை என்று இரண்டு பேர் சொல்ல தம்பூர் அடியுங்கள் என்று குரல்கள்.

தம்பூர் என்று முரசைச் சொல்வது புரியாமல் ராமோஜி வந்த புதிதில் தம்பூரா மீட்டியபடி வரும் நங்கையை எதிர்பார்த்திருந்த பழைய காலத்தை நினைத்தபடி புன்சிரித்தான்.

படுத்திருந்த பையன்கள் எழுந்து உட்கார்ந்து ‘ராத்திரி வேலைக்கு வந்துடறோம் பெரியண்ணா’ என்றார்கள். அவர்களைப் படுத்திருக்கச் சொல்லிக் கைகாட்டினான் ராமோஜி.

‘நாளைக்கு வாங்க’ என்றான் அவர்கள் தோளில் தட்டி. ‘இதிலே ஒரு பையன் தெலுங்கு, இன்னொருத்தன் கன்னடம்’ என்றார் விட்டோபா ஒரு தகவலுக்கு.

‘ராத்திரி நெல்லுச்சோறு குழைய வடிச்சு சமையுங்க. சாம்பாஜி மகராஜை கௌரவப்படுத்த மராட்டா சமையல் சக்கரவர்த்திகள் உண்டுபண்ணின வெங்காய சாம்பாரும் செஞ்சு எல்லோருக்கும் சாப்பிடக் கொடுங்க. அதிலே ஒரு கும்பா நெறைய மிளகாய் போட்டு இந்த ஆந்திரவாடுவுக்கு, இன்னொன்னு நிறைய வெல்லம் போட்டு நம்ம கன்னட தம்பிக்கு. எனக்கும் ஒரு கும்பா கொடுத்தனுப்ப மறக்காதீங்க, விட்டோபா.’

தம்பூரும் எக்காளமும் முழங்க ராமோஜி நூலேணிக்கு வந்தபோது தூரத்தில் வானில் அமிட்டு தொடர்ந்து ஏழெட்டு தடவை சீறிப் பாய்ந்தது தெரிந்தது. அங்கே நகர்ந்து வரும் ஒரு சிறு கப்பல் அலையேற்றத்தில் விட்டுவிட்டுத் தெரிந்தது.

பாய் கிழிந்து அல்லது சுக்கான் பழுதாகி அபாயத்தில் மாட்டிய கப்பலாக அது இருக்கக்கூடும். சமயங்களில் பிரச்னை அதுவே தீர்ந்து விடலாம். அல்லது கப்பலிலேயே தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கலாம். சில தடவை தீர்வு கிட்டாமல் பிரச்னை நீளலாம். அல்லது கப்பல், ‘இங்கே நானுமுண்டு’ என்று தன் இருப்பைச் சொல்லும் வெடிக்கொட்டாக இருக்கக்கூடும் அந்த ஓசை.

தூரதர்சினியை ஒரு வீரன் ராமோஜியிடம் கொண்டுவந்து கொடுத்தான். இருட்டு கவியத் தொடங்கும் நேரத்தில் தூரத்தில் தெரிந்த கப்பலை அந்தத் தொலைநோக்கி வழியே பார்த்து ராமோஜி சத்தமாகச் சொன்னான் – ‘ஏதோ பிரச்னையோடு மிதக்கிற கப்பல் அது. வேறென்ன, கடல் கொள்ளைக்காரங்களாக இருக்கக்கூடும்.’

பிரச்னைன்னு எப்படி தெரியும்? விட்டோபா விசாரித்தார். அது படையில் சேர்ந்த புதியவர்கள் அறிந்துகொள்வதற்காக.

‘அமிட் நிறம் சமிக்ஞையிலே தொடர்ச்சியா இல்லே... திடீர்னு சிவப்பு, பச்சை, நீலம்னு வரிசை தவறி வருது... கவனிக்கலியா? அனுபவம் இல்லாத யாரோ சமிக்ஞை கொடுத்திட்டு இருக்காங்கன்னு தோணுது.’

‘வாஸ்தவம்தான்’ என்றார் விட்டோபா.

‘அங்கே போய்ப் பார்க்கலாமா?’

விட்டோபா இடுப்பிலிருந்து குறுவாளை எடுத்து விரலில் கூர்மை தீட்டிப் பார்த்து, சிவப்பு துளிக்க மறுபடி உறையில் இட்டபடி ராமோஜி ஆங்கரேயிடம் கேட்டார்.

'இன்னும் முப்பது கடல் கல் தொலைவிலாவது இருக்கும் அந்தக் கப்பல் என்று தோணுது. நாம் அங்கே போனாலோ அவர்கள் இங்கே வந்தாலோ இன்னும் மூன்று மணி நேரத்துக்குக் குறைவில்லாமல் ஆகும்... இப்போ மணி என்ன?'

மணல் கடிகையை ஜாக்கிரதையாக சுமந்து வந்து ராமோஜியிடம் ஒரு வீரன் காட்ட, மாலை ஆறேகால் மணி என்று அவன் கடிகைக்குள் விழுந்துகொண்டிருக்கும் மணல் பார்த்து நேரம் கணக்கிட்டுச் சொன்னான்.

ராமோஜி அறிவித்தார் – 'இன்னிக்கு ராத்திரி ஹர் ஹர் மகாதேவ் சிவராத்திரி நமக்கு.'

படகு திரும்ப விஜயசந்திரிகாவுக்குப் போகும்போது ரங்கீலாவில் ஹர ஹர மகாதேவ் திரும்பத் திரும்ப முழங்கியது.

★

ஒன்பது மணிக்கு அந்த மற்றொரு கப்பலை நோக்கி விஜயசந்திரிகா விரைந்துகொண்டிருந்ததைப் பார்த்தபடியே ராமோஜி கப்பலின் மேல் தளத்தில் தாம்பூலம் மென்றபடி இருந்தான்.

விஜயசந்திரிகாவின் சமையல்காரர்கள் இனிப்பு செய்வதில் சாமர்த்திய சாலிகளான கன்னட பிராமணர்கள். காரசாரமாக ஒருவேளை சாப்பிட ராமோஜி முடிவு செய்தால் அவர்களுக்கு விடுமுறை கொடுத்து, கூடவே நிழல்போல வரும் ரங்கீலாவின் ஒரிய குசினிக்காரர்களை இரண்டு கப்பல்களின் வீரர்களுக்கும் சேர்த்துச் சமைக்கச் சொல்வது வழக்கம்.

அதுவும் கமகமவென்று மணமும் காரமுமாக கோலா உருண்டை, தம் பிரியாணி, கடல்பாசி களி என்று விதவிதமாகச் சமைத்து அசர வைக்கக்கூடிய அந்த சமையல் அணியினரில் பலரும் அடிமைகளாக இரண்டு வருடம் முன்னால் கடற்கொள்ளையர்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்தவர்கள்.

கனோஜி ஆங்கரே மீட்ட அவர்கள் ஒரியாவுக்குத் திரும்பாமல் மராட்டா ராணுவத்தில் நிரந்தரமான சமையல்காரர்கள் ஆகி விட்டிருந்தார்கள்.

ராமோஜி விட்டோபாவைப் பார்த்து சிரித்தான்.

‘என்ன ஆங்கரே பாவு?’ ஆதரவாகக் கேட்டார் அருகே நின்றிருந்த விட்டோபா.

‘இப்படி நாக்கு ருசிக்கு நம்மை வளைச்சுப் போடறாங்களே உங்க சமையல்காரங்க... முகலாயர் அனுப்பிச்சவங்க இல்லையே?’

ராமோஜி சொல்லிவிட்டுப் புன்னகைத்தாலும் விட்டோபா மனதில் சமையல்காரர்களுக்கான சமீபத்திய ஒற்றாய்வு நடத்தாதது நினைவு வந்தது. ராமோஜி சொன்னால் வேடிக்கையிலும் விநோதம் இருக்கும், விநோதத்திலும் வேடிக்கை உள்ளூர நுழைந்திருக்கும்.

தூரதரிசினியை திரும்பவும் எடுத்து கண்ணில் வைத்துப் பார்த்த ராமோஜி விட்டோபாவிடம் சொன்னான் –

‘உதவி கேட்கிறாங்க... அமிட் தொடர்ந்து சிவப்பு நிறத்திலே வருது...’

‘ஆமா எனக்கு மொண்ணையா தெரியுது’ என்றார் விட்டோபா.

‘ஒரிய சமையல் சாப்பிட்டு சாப்பிட்டு உங்க கண்ணு மங்கிட்டு வருது விட்டோபாஜி...’

விட்டோபா மடித்து அன்போடு கொடுத்த வெற்றிலை பீடாவை மென்ற படி, ‘ஆட்டத்துக்கு உடுப்பு அணிஞ்சுக்கலாமா?’ என்றான் ராமோஜி.

தட்டுகளையும் பாத்திரங்களையும் எடுத்துப்போக ரங்கீலா சமையல் குழுவில் அனுப்பி வைத்தவர்கள் எங்கே என்று விட்டோபா தேடியபடி நூலேணிக்குக் காத்திருந்தார். அவர்கள் வந்தால் இன்னொரு தடவை நூலேணியைக் கூப்பிட வேண்டியதில்லை.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் இரண்டு சாதாரண நிகழ்ச்சிகள் நடந்தன.

விஜயசந்திரிகாவிலும் ரங்கீலாவிலும் விளக்குகள் பெரும்பாலும் அணைக்கப்பட்டன. இங்கிலாந்து கப்பல்களுக்கே உரிய யூனியன் ஜாக் கொடிகள் ஒளிவட்டத்தில் அசைவதாக ஏற்றப்பட்டன. ராமோஜி முதல் புதியதாகச் சேர்ந்த சமுத்திர சேனை வீரன்வரை ஆங்கிலேய வணிகக் கப்பல் பயணிகளின் உடுப்பு அணிந்து நின்றார்கள். ரங்கீலாவிலும் அதே படிதான். நிலவு வெளிச்சத்தில் குளித்து நகர்ந்தன ராமோஜியின் கப்பல்கள்.

‘விட்டோபா, உங்களைப் பார்த்தால் பாதிரியார் வேஷம் கட்டிய மாதிரி இருக்கு’ என்று பலமாக நகைத்தான் ராமோஜி. அந்த உடுப்புகள் போன வாரம்தான் தைத்து வந்தவை. உடுத்துவது முதல்முறையாக இப்போதுதான்.

இங்கிலீஷ் கடலோட்டத்துக்கு பலகீனமான காலம் இப்போது நடப்பது. இங்கிலீஷ்காரக் கப்பல் பயணிகள்போல் உடுத்து, கப்பல் கொடியும் விளக்குகளும் அதே ரீதியில் இருந்தால்... மோதிப் பார்க்கலாமே, ஜெயித்துவிடலாம் என்று நம்பிக்கையோடு எதிர்பார்த் திருப்பார்கள், வருவது கடல் கொள்ளைக்காரர்கள் என்றால்.

ஒரு அமிட்கூட பதிலுக்குக் கொளுத்தி சமிக்ஞை அனுப்பவில்லை ராமோஜி. பதில் சொல்லாமல் வேட்டை வைத்து சங்கேதம் தராமல் சும்மா இருப்பதைப் பயத்தினால் நிலைகுலைந்து போனதாக நினைத்து இன்னும் மெத்தனமாக இருக்கட்டும் அந்தக் கப்பலில் வந்தவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும்.

அந்த கப்பலுக்குள் ராமோஜி போவதைவிட இந்தக் கப்பலில் அவர்களை ஏற வைத்துச் சுற்றி வளைப்பது ராமோஜியின் தந்திரம். மிகப் பெரிய எலிப்பொறி விஜயசந்திரிகா. கடல் எலிகளே, வாருங்கள், ராமோஜி காத்திருக்கிறான்.

எதிரே மெல்ல மிதந்துகொண்டிருக்கும் கப்பலின் பெயரை வாசித்தான் ராமோஜி. தமிழில் எழுதியிருந்தது அது – வண்ணமயில்.

ராமோஜியின் பத்து வருடம் கடற்படை வாழ்க்கையில் தமிழில் பெயர் வைத்த கப்பலை இப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறான். அந்த மொழியைப் பேசுகிற மற்ற பிரதேசங்கள் கடல் கடந்து இருக்கும் என்று படித்ததெல்லாம் உண்மைதான் போல.

வண்ண மயிலுக்கு கிடைமட்டமாக அகலவாட்டில் விஜயசந்திரிகா நெருங்கியது. ஓ என்று ஆரவாரம் கேட்டது. ராமோஜியின் கப்பல்கள் அமைதியாக கடல் பரப்பில் அசைந்து நின்றன. வண்ண மயில் கப்பல் மேல் தளத்தில் நீள கால்சராயும், அரபு கம்மீஸும் அணிந்த உருவங்கள் அவசரமாக நூலேணி இறக்கிக்கொண்டிருந்தன. படகை இறக்காமல் எப்படி இந்த எலிகள் விஜயசந்திரிகாவுக்கு வந்து சேரும் என்று ராமோஜி சுவாரசியமாகப் பார்த்திருக்க, அந்த எலிகள் நூலேணியில் இருந்து கடலில் சாடி விஜயசந்திரிகாவை நோக்கி நீந்தி வந்தன.

‘கடல் பழகியவர்களாம். படகுகூட வேண்டாமாம். நீந்தியே எங்கும் திரிவார்களாம்... வலிமை காட்டி நம்மைப் பயப்படுத்துகிறார்களாம். முட்டாள்கள்.’

ராமோஜி பலமாகச் சிரித்தான். ‘இப்போ பயணிக் கப்பல்னு அடையாளம் சொல்ற சமிக்ஞையும் தொடர்ந்து சமாதான சமிக்ஞையும் வாசிக்கணும்... படகும், நூலேணியும் இறக்கலாம்... அந்தக் கப்பலுக்கு என்னோட ரெண்டு பேர் வரணும்... நான் புறப்பட்டாச்சு. விட்டோபா இங்கேயே இருக்கலாம்.’

நொடியில் போர்த் தந்திரதைச் சற்றே மாற்றிவிட்டிருந்தான் ராமோஜி. அவர்கள் இங்கே வரட்டும். அவன் வண்ண மயிலுக்குப் போகிறான். அவன் ஊகித்தது சரியென்றால், அங்கே இப்போது பாதுகாப்பு பெயருக்குத்தான் இருக்கும். கப்பலைப் பிடித்தெடுக்க நல்ல சந்தர்ப்பம்.

கனோஜி ஆங்கரேயின் சமுத்திர யுத்த வழிமுறையில் இப்படி வினாடியில் தந்திரம் மாற்றுவதும், மறைந்து தாக்குதலும், போருக்கான நேரமில்லாத நடு இரவிலும், அதிகாலையிலும் படை குவித்து, உறங்கும்போது உயிர் நீக்கப் பண்ணுவதும் அடக்கம்.

ராமோஜி பயின்றுவந்த கடற்போர்க் கலாசாலை இந்த அரபிக்கடல்.

விஜயசந்திரிகா, நூல் ஏணி இறக்குவதாகவும், சமாதானத்தை விரும்புவதாகவும் பெரும் சத்தமாகத் தம்பூரும் எக்காளமும் முழக்கியது. தண்ணீரில் இருந்த எலிகள் ஓவென்று கூச்சலிட்டன. வண்ண மயிலின் கொம்மையில் இருந்து வெளிப்பட்ட மற்ற ஓரிரு கொள்ளைக்காரர் களும் குதித்து நீந்தி அவர்களோடு கடல் பரப்பில் சேர்ந்து கொண்டார்கள். அந்தக் கூட்டம் விஜயசந்திரிகா கப்பலை நோக்கி நீந்தத் தொடங்கியது.

இருட்டை விதைத்து ராமோஜியின் அனுபவம் மிக்க கடல்வீரன் ஒருவன் படகில் அலைகளோடு மிதந்து, இரும்புக்கொண்டி ஒன்றைப் படகில் இருந்தபடியே வண்ண மயிலின் இருட்டுப் பக்கமான இடந்தலையில் ஆழப் பதித்து ஊன்றினான். அதில் இறுகக் கட்டிய கடினமான நூல் பாலத்தை படகின் முகப்புக் கட்டையோடு வலிந்து கட்டினான் அவன்.

படகிலிருந்து ராமோஜியும் இரண்டு வீரர்களும் அந்த உடனடி நூலேணியில்பற்றி ஏறி, வண்ண மயிலுக்குள் நுழைந்தார்கள். கடல் எலிகள் அதே நேரத்தில் வெற்றி முழக்கத்தோடு விஜயசந்திரிகாவில் நுழைய ஒரு

வினாடியில் அவர்கள் எல்லாரையும் வேகமும் வலிமையும் கொண்ட மராட்டிய கடற்படை தாக்கி வீழ்த்தியது.

கப்பல் கொட்டடியில் வரிசையாக அமைந்த கொழுக்களில் இரும்புச் சங்கிலிகொண்டு பிணைக்கப்பட்ட அவர்கள் இனி ஹர்னாய் துறைமுகத்துக்குக் கொண்டுபோகப்பட்டு மராட்டா நீதிசபையில் விசாரிக்கப்படுவார்கள். விரிவான விசாரணையாக அது இருக்கும். கடல் கொள்ளையர்களுக்கான தண்டனைகள் மராட்டா பிரதேசச் சட்டமாக உருவெடுத்து இருக்கின்றன.

இரண்டு ஆங்கிலேய பயணிக் கப்பல்களை சிரமப்படாமல் ஜெயித்து குவியலாக தங்கமும், வெள்ளியும் கவர்ந்துவிட்டு வரலாம் என்ற ஆசை கண்ணை மறைக்க வண்ணமயிலில் இருந்த கிட்டத்தட்ட எல்லா கொள்ளையரும் விஜயசந்திரிகாவுக்குப் போவது ராமோஜி எதிர்பார்த்ததுதான். அவர்கள் தவிர வண்ண மயிலில் வேறு யார் உண்டு? தமிழ் பேசுகிறவர்களா அவர்கள்?

அவன் இருட்டுக்குள் வண்ண மயில் கப்பலுக்குள் நுழைந்ததும் மேல் தளத்திலிருந்து படிக்கட்டு கீழே நீளும் வழியில் நடந்தான். நான்கு மெழுகுவர்த்திகள் ஒளியூட்டிய அறை கண்ணில் பட்டது. பயணிக் கப்பல் இது. எத்தனை நாள் கடல்கொள்ளைக்காரர்களின் பிடியில் துன்பப்பட்டார்களோ?

ராமோஜி உள்ளே எட்டிப் பார்த்தான். புன்னகையோடு ஓர் அழகான இளம் பெண், ‘வருக, உங்களை வண்ணமயில் வரவேற்கிறாள்’ என்று கப்பல் அறை வாசலில் நின்று சொன்னாள். அது தமிழில் என்று அவனுக்கு போதமானது.

அந்த வினாடியில் அவனுடைய வலது தோளை ஓங்கிக் கிழித்து ஒரு சுருள்கத்தி சதையில் தைத்து நின்றது. யாரோ ஓடும் சத்தம். ராமோஜி மயங்கிச் சாய்ந்தபோது அந்தப் பெண் அவனைத் தாங்கினாள் என்பதை அவன் உணர, ராமோஜியுடைய நினைவு தப்பியது.

★★★

**பதினாறு**

# காரைக்கால் புவனியின் அற்புத சரித்திரம் – 1698

பு வனி என்னும் காரைக்கால் பட்டணத்துத் தாசிப்பெண் நான். நிகழும் தமிழ் வெகுதானிய வருடம், ஆவணி எட்டாம் தேதி, கிறிஸ்துநாதர் வருஷமான 1698–இல் எனக்கு பதினெட்டு வயதாகிறது.

நான் மூன்று வருடம் முன், பவ வருடம் தை மாதம் மூன்றாம் நாள் வயதுக்கு வந்தேன். அப்போது, கணிகைத் தொழிலில் ஈடுபட நான் தயார் என்று அறிவிக்க என் தாயார் தாசி ரஞ்சிதம்மாள் எனக்குக் காரைக்கால் கைலாசநாதர் கோவிலில் பொட்டுக் கட்டுதல் என்ற சடங்கு செய்வித்து, என்னைக் கைலாசநாதருக்கே மனைவியாக்கி னாள். பொட்டுக் கட்டிக்கொண்டபின் ஜமீன் வாரிசு, மிட்டாதார், ராஜ குடும்பம் என்று அடுத்தடுத்து ஆறு சம்பந்தங்கள் எனக்கு ஏற்பட்டன. ஆனால் எதுவும் நிலைக்கவில்லை. படிப்பறியாத முழு முட்டாள் களான அவர்களோடு உறவை நானே விலக்கிக்கொண்டேன். என் தாயாருக்கு அது பிடிக்கவில்லை என்றாலும், எனக்கான துணை தேடும் விஷயத்தில் அவள் குறுக்கிடவில்லை.

ரஞ்சிதம்மாள் என்ற என் தாயார் எனக்கு ஆங்கிலம் பேசவும், எழுதவும், பிரஞ்சு பேசவும், எழுதவும், பரத நாட்டியம் என்ற சதுர் நடனமும், சங்கீதமும், தமிழ் இலக்கிய இலக்கணங்களும், காப்பியங்களும், கணிதமும், சரித்திரமும், பூகோளமும் கற்பிக்கச் சிறந்த உபாத்தியாயர்களை நியமித்து அவர்கள் வீட்டுக்கே வந்து கல்வி புகட்ட வழி செய்தாள்.

விக்ஞானம் மட்டும் அவள் எவ்வளவோ முயன்றும் எனக்குச் சரிவரக் கற்பிக்கப்படவில்லை. இதன் காரணம் யாதெனில், அந்தப் பாடம் சொல்லித்தர வந்த மாத்யூ தரக்கன் என்ற மலையாளி உபாத்தியாயர் என் தாய் ரஞ்சிதம்மாளோடு நெருங்கிய சிநேகிதம் கொண்டு அவளுக்கு கர்ப்ப தானமும் நல்கி, ஊரைவிட்டு பிரான்சுக்கு, ஓர் இருட்டு நேரத்தில் சவாரி மேற்கொண்டுவிட்டார்.

என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிக் கலவரமடைந்தாள் என் தாய் ரஞ்சிதம்மாள். ‘கலவரமடையத் தேவை இல்லை. நான் விக்ஞானம் படிக்காவிட்டால் ஒன்றும் தாழ்வில்லை’ என்று அவளிடம் சமாதானம் சொன்னேன். எனினும் அவள் கவலைப்பட்டது அவளுடைய கர்ப்பம் குறித்து என்பதால், ரஞ்சிதம்மாளுக்கு, கர்ப்பக் கலைப்புபற்றி எடுத்துரைத்து அதை நடத்தித்தர அவளுடைய தோழிப்பெண் ஒருத்தி வழிவகை செய்தாள். ஆனால் அது முதலுக்கே மோசமாக முடிந்து என் தாயார் ரஞ்சிதம்மாள் இறைவனடி சேர்ந்தாள். இது நடந்து போன ஈஸ்வர வருடம் வைகாசி எட்டாம் தேதி சம்பவித்த ஒன்று. அப்போது அவளுக்கு முப்பத்தெட்டு வயது. அவளுடைய காதலனும் என் விக்ஞான உபாத்தியாயருமான தரக்கனின் வயது தெரியவில்லை.

என் தாயாருடைய மறைவுக்குப் பிறகு எனக்குப் பாத்தியமாக அவளுடைய சொந்த ஆர்ஜிதமான சொத்துக்கள் எதுவும் இல்லை என்று தெரிந்துகொண்டேன். அவள் தன் உழைப்பாலும், முயற்சி யாலும் காரைக்கால் பெருமாள் கோவில் தெருவில் இரண்டு மாடி காரைக் கட்டிட வீடு, காரைக்காலுக்கு அடுத்த நல்லழுந்தூர் கிராமத்தில் ஓட்டு வீடு, நெடுங்காடு கிராமத்தில் ஐந்து வேலி நஞ்சை, நெரவி கிராமத்தில் ஏழு வேலி நஞ்சை, போலகம் கிராமத்தில் பத்து வேலி புஞ்சை, நாலு பெரிய தோட்டம், கிணறுகள் என்று சம்பாதித்திருந் தாலும் அவை எதுவும் என் தாயாரின் பெயரில் இல்லை. என் தாயாரின் இளைய சகோதரியும், என் சித்தியுமான தாசி புஷ்பலதை என்ற பெயருள்ள பெண்மணி அவற்றைக் கையகப்படுத்திக் கைவிரித்து விட்டாள். என் தாயார் ரஞ்சிதம்மாளுடைய நூறு பவுன் நகைகளும் அவள் காலமான பிறகு எனக்குக் கிட்டாமல் போய்விட்டன.

மாரியம்மன் கோவில் பூசாரிக்கு எதையோ காட்டி மயக்கி அவனைக் கைக்குள் போட்டுக்கொண்டு எனக்கு அந்திச் சாத்தான் என்ற குறளிப் பிசாசு பிடித்திருப்பதாகப் பொய்யைப் பரப்பிவிட்டாள் என் சித்தி. எனக்குச் சரியாக சோறிடாமலும், என் சிநேகிதிகள் யாரையும் என்னைச் சந்திக்கவிடாமலும், கோவிலுக்குப் போகவும் அனுமதிக்காமலும் என்னைப் பாடாகப் படுத்தினாள் மேற்படி புஷ்பலதை.

மூத்திரம் போக ஒரு நாளைக்கு மூன்று தடவையும், மலம் கழிக்க ஒரு நாளில் ஒரே தடவையும் பயன்படுத்தலாம் என்று விதித்து கக்கூசைப் பூட்டி சாவி எடுத்து வைத்துக்கொண்ட துராத்மா அவள். எனக்குக் கல்வி போதிக்க

என்னைத் தேடி வந்த ஆசிரியர்களையும் அவமானப்படுத்தி அனுப்பினாள் அந்த ராட்சசி.

அந்த நேரத்தில்தான் காரைக்கால் கைலாசநாத ஈஸ்வரர் அருளால் எனக்குச் சில சித்து வேலைகள் படிந்து வந்தன. சில நேரம் ஆழ்ந்து கவனித்துப் பார்த்தாலே அந்தச் செயல் நிகழ்ந்தது தெரிய வரும். மற்றும் சில நேரம் வெள்ளிடை மலையாக அவை புலப்படும். மற்ற சில சமயங்களில் திடீரென்று கவனத்தைக் கவரும்.

அவையாவன – சர்க்கரையை கரிக்கச் செய்தல், உப்பை இனிக்கப் பண்ணுதல், கதவுகளில் கருந்தேளும் செந்தேளும் ஊர்வதுபோல் தோன்றச் செய்தல், ஜன்னலில் கருஞ்சிலந்தி வலை பின்னுவதாகத் தோன்றச் செய்தல், சாப்பிட்ட உணவை வாய்க்குள் இருந்து அசல் ரூபத்தில் எடுத்தல், ஓவியத்தில் மனிதத் தலையை மிருகத்துக்கும், மிருகத் தலையைப் பறவைக்கும் மாற்றி இடல் இன்ன பிற.

உற்றுநோக்கி, உடம்பில் கொப்புளங்களை உண்டாக்குவது, அத்தருக்குப் பதிலாக சாக்கடை நீரை மேலே தெளித்துக்கொள்ளச் செய்தல் போன்றவற்றை நானே நிகழ்த்தக் கற்றுக்கொண்டேன்.

இந்த சித்திகளைக்கொண்டு அந்த சித்தியை சித்ரவதை செய்வது எனக்குப் பிடித்தமான பொழுதுபோக்காக அமைந்து போனது. முக்கியமாக உப்பையும் சர்க்கரையையும் இடம் மாற்றி ருசிக்கத் தருவதும், அவள் உண்ட கோழி மாமிசத்தை அவளே வாயில் இருந்து தன்னிச்சையாக எடுத்தலும், கதவில் மிகப் பெரிய தேளும் ஜன்னலில் கருஞ்சிலந்தியுமாக அவளை நோக்கி ஊர வைத்தலும், அவளை ஓவியக்காரன் வரைந்த ஓவியத்தில் அவள் தலைக்குப் பதிலாகக் காண்டாமிருகத் தலையை வைத்தலுமாக நான் நடப்பித்து, அவளுடைய அழுகையையும் பயத்தையும் ரசித்துப் பார்க்க ஆரம்பித்தேன்.

அவளுடைய வாடிக்கையாளரான நாகூர் ஜமீன் நாலாம் பாத்தியக்காரனோ, பண்ணையாரின் வைப்பாட்டி மகனோ வரும்போது சாக்கடையை மேலே தெளித்து அவர்களோடு முயங்கிக் கிடக்க வைத்தது மட்டும் எக்குத்தப்பாகி விட்டது. மூக்குச் செத்த அந்த தேவடியாப் பிள்ளைகள் அந்த வாடையே காமத்தை வர்திப்பதால் தினமும் புஷ்பலதை துர்நாற்றம் பூசி வரணும் என்ற நிபந்தனையோடு கலவி செய்த சத்தம் என்னை வெறுப்படைய வைத்தது.

எனினும் நான் எதிர்பார்த்தபடி என் வழியில் குறுக்கிடுவதை நிறுத்தினாள் என் சித்தி புஷ்பலதை. எப்படியாவது என்னைக் காரைக்காலில் இருந்து அகற்ற அவள் எத்தனையோ பிரயத்தனப்பட்டாள்.

போன வருஷம் ஆவணியில் கோகுலாஷ்டமிக்கு அடுத்த நாள் அவள் யாரும் அவளிடம் சொல்லாமலேயே என் கல்யாணத்துக்காக முயற்சி செய்ய ஆரம்பித்தாள். இங்கே கல்யாணம் என்பது நீண்ட சம்பந்தம் எனப் பொருள்படும். அதாவது, கணிசமான ஒரு காலத்துக்கு, மூன்று வருடம், ஐந்து வருடம், ஏழு வருடம் இப்படி என்னை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டிருக்க எழுதிக் கையெழுத்திட்டு ஒப்பந்தம் போடுவதைக் குறிக்கும்.

தாசிப்பெண் காலாகாலத்தில் எவனாவது மிட்டா மிராசு, பட்டாமணியத்துக்கு வைப்பாட்டி ஆகாமல் கிழவியாகிறதுவரை சில்லறை ஆட்டம் ஆடிக் காசு சம்பாதிக்கப் பார்க்கிறாள்போல என்று ஊர் பேசிக் கொள்வதாக புஷ்பலதை என்னிடம் புகார் சமர்ப்பித்தாள். எல்லாம் புஷ்பலதையின் கற்பனையில் உருவான சொந்த சாகித்யமாகும்

எனக்கு பதினைந்து வயதுதான் ஆனதாகவும், இன்னும் படித்து, காஞ்சி கலாசாலையில் தனித்துப் போய் பரீட்சை தந்து ஜெயித்த பின்னரே என் கல்யாணம்பற்றி யோசிக்கலாம் என்றும் சொல்லும்போது மறக்காமல் ஜன்னலில் கருஞ்சிலந்தி கருப்பு வலை பின்னச் செய்தேன். பயப்படட்டும். நல்லதுதான்.

பிரியமும், பாசமும், கைலாச பதவி அடைந்த அக்காளின் ஒரே புத்ரி என்று என்மேல் பச்சாதாபமும் நிறைந்தவளாக புஷ்பலதை முழுக்க முழுக்க மாறி ஒரு வசந்த காலம் வந்து போனது. சித்தி மடியில் நான் படுத்திருக்க அவள் எனக்குப் பேன் பார்த்த அந்நியோன்யம் வெளிப்பட்ட தினங்கள் அவை.

பேனைப் பெருக்கி அட்டைப் பூச்சியாக்கி அவள் அலறுவதைப் பார்க்கவேண்டும் என்று ஒரு மனம் ஏங்கினாலும், அவ்விதம் செய்வதைத் தவிர்த்தேன். எனினும், முழுக்க நல்லவளான சித்தி அலுப்படைய வைத்தாள்.

அரேபியாவிலிருந்து அரண்மனைகளுக்கும், பிரபலஸ்தர் மற்றும் கணிகையர் வீடுகளுக்கும் பித்தளையிலும், வெங்கலத்திலும் வார்த்த கோல் விளக்குகளும், பாவை விளக்குகளும், அன்னப் பறவை விளக்குகளும்

விற்றுப்போக வயதான ஓர் அரபு வியாபாரி காரைக்காலுக்கு வந்திருந்தபோது அவனுக்கு புஷ்பலதை வீட்டில்தான் விருந்து.

‘விளக்கை அணைத்துக் காசு பார்க்கும் தாசி வீட்டில் விளக்கு விற்க நீர் மிகுந்த துணிச்சலோடுதான் வந்திருக்கீர்’ என்று புஷ்பலதை அந்தத் தாடிக்காரக் கிழவனின் கையைத் தன் மார்பில் வைத்தபடி பகடி செய்தபோது நான் அடுத்த நாள் அதிநூதனமாகக் குருகுலக் கலாசாலையில் தனி இடத்தில் படுதா கட்டி சமஸ்கிருதப் பரீட்சை கொடுத்து ஐயிக்கப் படித்துக்கொண்டிருந்தேன். அந்தப் பரீட்சை அப்புறம் நான் தரவே முடியாமல் போனது.

அரபு வியாபாரியின் கையிடுக்கு அத்தரும் ஜவ்வாதும் புஷ்பலதையின் தாடையில் வாடையடிக்க அரபி, சீன மதுவகைகளை அவர்கள் குடித்துக் களிக்க, நான் சமஸ்கிருத வியாகரணப் பாடத்தில் மூழ்கி இருந்தேன்.

கோழிக்கறியும், முகலாய பாணி பிரியாணியும் எனக்கு சாப்பிட வேலைக்காரி மூலம் கொடுத்துவிட்டாள் புஷ்பலதை. நான் அவ்வளவு கனமாக உணவு கழித்தால் உறங்கிவிடுவேன் என்ற பயத்தால் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

புதுப் பழங்கள் மாதுளை, பலா, மா, கருப்பு திராட்சை, பச்சைப் பசேல் என்று கொடி முந்திரி என வரிசையாக அரபிக் கிழவன்கொண்டுவந்து நிறைத்திருந்ததைக் கூழாக்கி எனக்கு ஒரு சிறு கும்பாவில் வைத்து புஷ்பலதையே எடுத்து வந்தாள். அதுகளைக் குடித்தும் உண்டுமான பிறகு தெம்பாகப் படிக்கலாம் என்றாள் அவள்.

நான் பழ உணவு செய்ததும், ஒரே மட்டாக கிறங்கித் தலை சாய்த்ததும், எங்கே எப்போது யாரோடு என்ற போதமே இல்லாமல் சுருண்டு படுத்து நித்திரை போனதும் நினைவில் பதியவில்லை.

ஆடி ஆடிப் போகும் கப்பலும், பக்கத்தில் அரபுக் கிழவனின் தாடி நாற்றமுமாக கண் விழிக்க, அவன் பழச்சாறு எனக்கு ஒரு மடக்கு பருகத் தந்தான். மறுபடி உறங்கிப் போனேன்.

விழித்துக்கொண்டு பார்க்க, அடக்க முடியாமல் மூத்திர உபாதை எனக்கு. எதிர்பார்க்காதபடி, என் அருகில் புஷ்பலதையின் தோழிப்பெண் மரதகதத்தாள். மரகதம் இல்லையாம் அவள். மரதகம். அப்படித்தான் சொல்லிக்கொள்வாள். அவள் இங்கே எங்கே வந்தாள், தேவிடிச்சி?

‘புஷ்பாம்மா என்னையும் சீதன வெள்ளாட்டியாக ஓங்களோடு அரபுநாட்டுக்கு அனுப்பியிருக்காங்கள்’ என்றாள் கிழட்டுக் கழுதையோடு சுகம் அனுபவிக்கிற அந்தக் கேடுகெட்டவள்.

என்றாலும் கப்பலில் கக்கூஸ் என்பது எங்கே இருக்கிறது என்று காட்டி அற்பசங்கை முடித்து வர துணையாக வந்தாள் மரதகம். நல்ல பசி என்பதால் அவள் சுட வைத்துக் கொடுத்த ரொட்டி, பழக்கூழ், வெண்ணெய், பேரீச்சம்பழ இனிப்பு உருண்டை, கோழிக்குஞ்சு அல்வா என்று அவள் ஊட்டிவிடப் பசித்திருந்து விழுங்கினேன்.

‘ஏடி, என்ன ஆச்சு நான் எப்படி இந்தக் கேடு கெட்ட கப்பலில் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறேன்? அரபுக் கிழவன் என் இடுப்பைக் கோர்த்து தூங்கியிருந்த விஷமம் எப்படி நிகழப் போச்சு?’

என்னைக் கிழவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருக்கிறாளாம் புஷ்பலதை. இதை மட்டும் மரதகம் முழுக்கச் சொன்னாள்.

என் கேள்விகளில் சிலதுக்கு ஆ ஆ என்றும், இன்னும் சிலவற்றுக்கு புதுசாகக் கேட்கிறபடி ஓ ஓ என்றும், இன்னும் சிலதுக்கு மௌனமாக இருந்தும் மரகதத்தாள் சீலம் கொழித்தாள். அவளை அந்தரங்கமான இடத்தில் எலி கடிக்க சாபமிட்டேன். துள்ளிக்குதித்து அவள் அரபு ஆடைக்கு உள்ளே இருந்து ஒரு பெருச்சாளி ஓடிக் குதித்துப் போக அவள் கூக்குரலிட்டதில் என் இட்சினி சக்தி இன்னும் என்னுள் நிறைந்து நிற்பதை அவதானித்தேன்.

புஷ்பலதைக்கு உடல் முழுக்கக் கொப்புளம் புறப்பட்டு நாலு நாள் சோறு, தண்ணீர்கூட கொள்ள முடியாமல் பட்டினியில் சாகவும் சாபமிட்டேன். செத்திருப்பாள் கேடுகெட்ட முண்டை. அவளுடைய வாடிக்கையாளர்கள் எல்லோருக்கும் நோய் பிடித்து அல்லாடி உயிரை விடட்டும்.

நான் ஏதோ சாதித்ததுபோல் கப்பலில் சுற்றி வந்தேன். தாடிக்கிழவன் புவிஸி புவிஸி என்று பிதற்றியபடி பின்னாலேயே வந்தான். அவன் கைகள் நண்டுபோல் முன்னால் நீண்டு என் தோளை அணைக்க வந்தன.

பின்னால் திரும்பிப் பார்த்தேன். மரதகத்தை அணைத்தபடி அவன் சொன்னதை அந்த வேசி தமிழில் சொன்னது – ‘புவிசி உன் புதுப் பெயர் பெண்ணே… உன்னை ஆகமட்டும் மாற்றி பெயர், ஊர், அடையாளம் எல்லாம் வேறே இப்போ… நேற்று ராத்திரி பூரா உன் பக்கத்தில் கிடத்தி

புவிசி என்றழைத்து உடம்பெல்லாம் தடவிக் கொடுத்தேன்... நினைவிருக்கிறதா.'

அந்த அயோக்கியன் சொன்னதாக மரதகம் இன்னமும் நிறையக் கூறினாள். அசங்கியம் என்பதால் அவற்றை இங்கே குறிப்பிடாமல் தவிர்த்தேன்.

நானதைக் கேட்ட அடுத்த வினாடி என் சாபம் புறப்பட, அவன் அழுகிப் புழுத்த பெருச்சாளியை எலிப்பொறியோடு அணைத்து முகர்ந்தபடி சொர்க்கம் கண்டதாக ஆர்ப்பரித்தான். அவனைச் சுற்றி எழுந்த துர்க்கந்தத்தை மேலும் அதிகப்படுத்தும் விதமாக கப்பல் சமையல்காரர்களான பாலித்தீவு பையன்களோடு சுகிக்க அவர்களைத் துரத்திப் போனான். அவனுடைய காதல் கூப்பாடுகள் பொறுக்க முடியாமல் கப்பல் தலைமை மாலுமி அவனை உள்ளே கப்பல் கொட்டடியில் தனியாக அடைத்துப் போட்டதாக என்னிடம் சொன்னான். பெரும் பணக்காரனான அரபிக் கிழவனை அப்படித் தண்டிக்க முடியாது என்பதால், ஒரு மணி நேரத்தில் அவன் வெளியே வந்துவிட்டான் என்றாள் மரதகம்.

அடுத்த தினம் கப்பல் அரேபியா வந்து சேர்ந்தது. என்னை கூட்டமாக வேலைக்காரிகளும் சிப்பந்திகளும் வந்து கூட்டிப் போனார்கள். யாருக்கும் நான் பேசிய தமிழோ, இங்கிலீஷோ, இந்துஸ்தானியோ புரியவில்லை. அவர்கள் பேசிய சீன, பாரசீக மொழிகள் எனக்குப் புரியவில்லை.

நானும் என் சித்திகளை உபயோகித்து, அவர்கள் பேசியது எனக்கு உடனே அர்த்தமாகவும், நான் பேசுவது ஒரு நிமிடம் கழித்து அவர்களுக்குப் புரியவுமாக, ஒரு மூங்கில் குழலின் இரண்டு வசமும் கேட்கவும், பேசவுமாக ஒரு கருவி செய்தேன். அதற்கு அப்புறம் பேசுவது புரிய ஆரம்பித்தது. கொஞ்ச நாளில் குழலுக்குத் தேவையே இல்லாமல் நாங்கள் நேரடியாகப் பேச, கேட்க, பதில் சொல்ல, உரையாட ஆரம்பித்தோம்.

இதற்கிடையில் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரமும் புதன் நடுராத்திரியிலும் என்னை அவனோடு சுகித்திருக்கக் கிழவன் கூப்பிட்டு அனுப்புவான். கப்பலில் எனக்கு கப்பல் நோய் கண்டதால் என்னை வருடி மட்டும் சுகம் கண்டு இன்னும் அதிகமாகச் சுகிக்கக் காத்திருந்தான் அவன்.

வந்துபோன ஒரு ஞாயிறு சாயந்திரம் என்னை இழுத்துவர நான்கைந்து முரட்டு காப்பிரிச்சிகளையும் அரபுக் கிழவன் அனுப்பி வைத்தான். அவன் ரத்தினக்கற்கள் மற்றும் வைரங்களை வாங்கி அழகாகச் செதுக்கி மினுமினுக்க வைத்து விற்பனை செய்து பெரும் பணம் ஈட்டுகிறவன்

என்றும் அரேபியா மட்டுமின்றி, ஜாவா, சயாம், பாலி, சாவகம் எங்கும் பெயர் பெற்ற வியாபாரி என்றும் என் உடம்பு சல்லாபம் கேட்டு பிச்சைக்காரனாக நிற்பது அவனளவில் அரிதான ஒன்று என்றும் காப்பிரிச்சிகளும் அரேபிய பணிப்பெண்களும் என்னிடம் சொன்னார்கள்.

என்றாலும் என்னைத் தூக்கிப்போக வலுக்கட்டாயமாக முயன்ற காப்பிரிச்சிகளின் உடம்பில் பெரும் கொப்புளங்களை உருவாக்கி விட்டேன். அவர்கள் அலறிப் பயந்து தரையில் உருண்டு என்னைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக்கொண்டு விழுந்து வணங்கிப் போக மற்றத் தோழிகளும் கலபிலவென்று சத்தமிட்டு ஓடிப் போனார்கள்.

அவர்கள் ஒவ்வொருவர் உடலில் இருந்து கொப்புளங்கள் அடுத்த இரண்டு மணி நேரத்திலோ அல்லது அடுத்த நாளோ நான் நிச்சயித்தபடி காணாமல் போக, அவர்களுக்கு என் மேல் இரண்டு விதமாக பயம் உண்டானது.

என்னோடு வம்பு வளர்த்தால் சுகக்கேடு உண்டாகலாம் என்பது முதல் பயம். அப்படி ஏற்பட்டால் எப்போது அது நீங்கும் அல்லது அப்படியே ஆயுளுக்கும் இருந்துவிடவேண்டுமா என்பதும் தெரியாது. இது அடுத்த பயம்.

அவர்களுடைய பயத்தை அடிப்படையாக வைத்து சதா என்னை ஆராதிக்கும் மனநிலையில் அவர்களை வைத்திருக்க முடிந்தது.

அரபிக் கிழவனைத் தவிர எல்லோருக்கும் ஏதோ சந்தர்ப்பத்தில் கொப்புளங்களைப் பரிசளித்தேன். அரபு வீட்டு மாமன் உறவில் ஒரு கேணன் என்மீது இத்தனைக்கும் மேல் காமம்கொண்டு ஆலிங்கனமும் வாய் உபசாரமும் வேண்டுமென்று கோரிக்கை வெளியிட அவன் குறியின் மேல் கொப்புளங்கள் உருவாகச் செய்து அந்த எரிச்சலில் உடை எல்லாம் களைந்து எரியும் உடல் பாகத்தைக் கையில் எடுத்தபடி ஓட வைத்து அரபுக் கிழவனுக்கும் மற்ற ஆண்களுக்கும் சங்கடத்தை உருவாக்கினேன். பெண்கள் வெகுவாக ரசித்த காட்சி அது.

அரபுக் கிழவனுக்கு நான் பெரிய இடைஞ்சலாகப் போனது அப்படித்தான். என் பக்கமே வராமல், வந்தால் எங்கே தனக்கும் கொப்புளங்கள் அனுபவப்படுமோ என்று பயந்து ஒளிந்தான் அவன். எனக்கு உண்டு, உறங்கி, பேசி இருக்க நிறைய நேரம் கிடைத்தது. நான் இதுதான் சாக்கென்று அரபு மொழியையும், பாரசீக மொழியையும் படித்துத் தேர்ச்சி அடைந்தேன். கணிதத்திலும் அரபு எண்கள் அடிப்படையில் கணக்கு எழுதுவதில் தேர்ந்தேன்.

அரபிக் கிழவனின் வியாபார ஸ்தலத்தில் கோணாமாணா என்று எழுதி வைத்த கணக்குகளை சீர் செய்து, கிழவனின் சொந்தக்காரர்கள் அவனிடம் பொய்யாக கணக்கு காட்டி பதினாயிரக் கணக்கில் மதிப்புள்ள தொகையை அவர்கள் உபயோகத்துக்கு எடுத்துப் போனதை அவனுக்குக் காட்டினேன்.

அவர்களை சிறைக்கு அனுப்பி, வராதது என்றிருந்த தொகையை வசூலித்து அவன் என்னைக் கையுயர்த்தித் தொழ, செழிப்பையும் நன்மையையும் கொண்டு வந்தேன். அதற்கு அப்புறம் அவன் மனதில் கூட என்னோடு இணை விழையவில்லை என்று தோன்றுகிறது.

நான் ஊருக்குத் திரும்பப் போகணும் என்று சொன்னபோது மனதே இல்லாமல் சம்மதித்தான். என் மேல் கொண்ட மையல் காரணமில்லை அதற்கு. அவன் கொண்டாடும் தெய்வமாக நான் அப்போது மாறியிருந்தேன்.

எனக்குக் காணிக்கையாக விலையுயர்ந்த நவரத்தினக் கற்களையும், தங்க நகைகளையும், உலர் திராட்சை, பாதாம், அக்ரூட் போன்றவற்றையும் நல்ல சீனப் பட்டு வஸ்திரங்களையும், பாரசீகக் கம்பளங்களையும் அளித்தான். என் சித்தி புஷ்பலதை கையகப்படுத்திக்கொண்ட என் தாயாரின் சொத்தை விட மூன்று மடங்கு எனக்கு இங்கே கிடைத்தது.

நாகைத் துறைமுகத்திலிருந்து வந்திருந்த வண்ண மயில் என்ற வர்த்தகக் கப்பலில் என்னை அவன் ஏற்றி விட்டபோது அவன் கண்கள் கலங்கித்தான் இருந்தன. அந்த அரபுக் கிழவன் என்னை உறங்க வைத்து உடல் முழுக்கத் தடவிய குற்றத்துக்காக அவன் பற்கள் இரண்டை என்றென்றைக்குமாக விழ வைத்ததை அவனிடமோ வேறு யாரிடமுமோ நான் என்றும் சொல்லப்போவதில்லை.

நான் தேவையானபோது பனிக்கட்டி தரும் யந்திரம் ஒன்றை உருவாக்கி அவனுக்கு அளித்தேன். அது சித்து வேலை இல்லை. விக்ஞான பூர்வமாக அமைக்கப்பட்ட சக்கரங்களும், நீர் நிறைத்து வைக்கப் பித்தளை உருளைகளும், துடிக்கும் இயக்கமும் கொண்ட யந்திரப் பெட்டியாகும். என்னை விடுவித்ததற்காகவும், வலுக்கட்டாயமாக உறவு கொள்ளாததற்குமான நன்றியாக கிழவனின் மாளிகையில் ஓர் அறையையே குளிரூட்ட வைத்துக் கொடுத்திருப்பேன், நான் தகுந்த விக்ஞான அறிவு பெற்றிருந்தால். விக்ஞானம் படிப்பிக்க வந்திருந்த வாத்தியார் என் அம்மாமேல் மையல்கொண்டு அவளைக் கர்ப்பிணி யாக்கி ஓடிப் போகாதிருந்தால் அது நடந்தேறி இருக்கக் கூடும்.

வண்ண மயில் கப்பலில் என்னோடு வேலைக்காரி மரதகமும், குஜராத்தி மொழி பேசும் ஓர் ஏலம், கிராம்பு, லவங்க மொத்த வியாபாரியும், சீன பட்டு விற்பனை மொத்தக் கொள்முதலாகச் செய்யும் பெரும் வணிகரும், எங்கள் பாதுகாப்புக்கு எட்டு வீரர்களும் பயணமாகிறார்கள்.

கப்பலை அரேபியக் கிழவர் விலைக்கு வாங்கிவிட்ட விவரம் பயணம் தொடங்கியபோதுதான் அறிந்துகொண்டேன். அரேபியாவில் புறப்பட்ட தினத்துக்கு பதினைந்து நாள் சென்று கப்பல் நாகப்பட்டிணத்தை அடையும் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. அங்கிருந்து காரைக்கால் தரை மார்க்கமாக பனிரெண்டு கல் தொலைவுதான்.

இன்றைக்கு கடலில் மூன்றாம் நாள். காலைச் சாப்பாடாக பாதாம் பருப்பு, அரிசி ஏடு என்று போட்டுக் காய்ச்சிய பாயசம், தீயில் வதக்கிய குப்பூஸ் என்ற அராபிய ரொட்டி, தேனும் சர்க்கரையும் கலந்து வைத்த மாம்பழக்கூழ், கோதுமையும் ஜீனியும் பசுநெய்யும் இட்டுக் கிண்டிய அரேபியா ஹல்வா என்று இன்றும் சாப்பிட்டு, காரசாரமான காரைக்கால் உணவுக்கு நாக்கு ஏங்குகிறது. சிறு மீன்களை வறுத்து வைத்தது சாப்பிட அவ்வளவு சுவையாக இல்லாமல் போய்விட்டது.

கப்பல் மேல்தளத்தில் யாரோ ஓடும் சத்தம் கேட்கிறது. என்ன என்று பார்த்துவிட்டு மேல்தளத்தில் காற்று வாங்கிவரக் கிளம்புகிறேன். திரும்பி வந்து, இந்த எழுத்து – யாருக்கென்றில்லாத லிகிதத்தைத் தொடர ஆசை.

★

கப்பல் மேல்தளத்தில் ஓடிக்கொண்டிருக்கிற சத்தம். பார்த்துவிட்டு வந்து எழுதுவதைத் தொடரலாம் என்று நினைத்தது பூர்த்தியாக ஒரு வாரம் ஆனது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகப் போனது.

வந்தவர்கள் கடற்கொள்ளைக்காரர்கள். கப்பலில் புகுந்த அந்த சண்டாளர்கள் இந்தப் பகுதி கடலில் சுற்றிவந்து கொள்ளையடிப்பவர்கள். பெரும்பாலும் இவர்கள் நீளமாக தாடி விட்ட, அழுக்கும் குமட்டும் துர் நாற்றமும் வீசும் வெள்ளைக்காரர் களாக இருப்பார்கள்.

கருப்புக் கடல் கொள்ளைக்காரர்கள் உக்கிரமானவர்கள். இவர்கள் பிடித்தெடுத்த வியாபாரக் கப்பல்களில் இருக்கும் பொருளை மட்டும் தங்களுடையதாக்கிக் கொள்வதில்லை. பிரயாணிகளில் ஆண்கள் எல்லோரையும் குற்றேவல் செய்யும் அடிமைகளாக்கி விடுவது சகஜமாக

நடப்பது. பெண்களை பெண்டாள சர்வ சுதந்திரமாக வயது, இனம் வேறுபாடு இல்லாமல் எடுத்துக்கொண்டு விடுவார்கள். பயணிகளில் குழந்தைகள் இருந்தால் அவர்களைக் கடலில் தோணியில் வைத்து இறக்கி, ஒரு போத்தல் குடிநீரும் இரண்டு துண்டு ரொட்டியுமாக விட்டுவிட்டு வந்துவிடுவார்கள். கடவுள்தான் அந்தச் சிறுவர், சிறுமியரை ரட்சிக்க வேண்டும்.

‘புவியம்மா, கதவை அடைச்சு வச்சுக்குங்க... அடைச்சுக்குங்க..’

மரதகம் அலறியது காதில் கேட்க, மேல் தளத்தில் இருந்து சிறிய படிக்கட்டில் இறங்கிக் கீழே போனேன். என் அறைக்குள் புகுந்து கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்ளும் முன்பு உள்ளே இருந்து என் தோளை அணைத்து ஊஊ என்று மிருகம் போல் ஊளையிட்ட வெள்ளைக்காரனை முன்னுக்கு இழுத்து நிறுத்தினேன். காப்பிரி இல்லை என்பதில் சற்றே நிம்மதி ஏனென்று புரியவில்லை.

அவன் காமம் கட்டுமீறிய விலங்குபோல் இடுப்பை அசைத்து என்னைத் தன்னோடு சேர்த்து நிறுத்தி ஊஊ என்று மறுபடி சொறி நாயாக ஊளை இட்டான். போதுமடா பன்றியே என்று என் சித்துவேலையை உடனே அவன் மேல் பிரயோகித்தேன். அந்த வெள்ளைத் தேவடியாள் மகனுக்கு உடம்பெங்கும் உடனடியாக கொப்புளங்கள் கண்டன. அவன் மயங்கி வீழ்ந்து இறந்தும் போனான்.

என் பின்னால் கனமான காலணிகள் அணிந்த கால்கள் எழுப்பிய நாராசமும் பயம் விளைப்பதுமான சத்தம். திரும்பிப் பார்த்தேன். இன்னும் பத்துப் பனிரெண்டு கடல் கொள்ளைக்காரர்கள் அங்கே என்னைப் பார்த்தபடி திகிலோடு நின்றார்கள்.

கொப்புளம் கண்டு இறந்தவன் அவர்களுக்குத் தலைவனாக இருக்கக் கூடும். நான் என் முன்னால் பயந்து நின்ற ஒருவனைச் சிலைபோல் உறைந்துபோய் நிற்க வைத்தேன். பின்னால் இன்னும் பனிரெண்டு பேர், உலகமே அவர்கள் பயப்படும் விதத்தில் மாறியதாக தலைமுடி சிலிர்த்து நின்று ‘போதும், போதும், விட்டுவிடு’ என்று என்னிடம் மன்றாடினர்.

நான் அவர்களை உடனடியாக மண்டியிட வைத்துவிட்டு சுக்கான் அறைக்குப் போனேன். என் பாதுகாப்புக்கு வந்த எட்டு வீரர்களும், சக பயணிகளான வியாபாரிகளும், மரதகமும் சோளக்கொல்லை பொம்மைபோல் ஆகியிருந்த அவர்களில் ஆறுபேரை வலிமையான கயிறுகளால் பிணைத்துக்

கப்பல் அடித்தளத்து ஈரத்துக்கும் நாற்றத்துக்கும் மண்டிக் குடியேறிய புழு பூச்சிகளுக்கு இடையே கட்டி உருட்டிக் கல்லில் பிணைத்ததாக அறிவித்தார்கள். மற்ற ஆறு பேர் இன்னும் பயத்தில் நடுங்கி, மண்டி போட்டு நின்றிருந்தார்கள்.

நான் சுக்கான் அறையில் போய்ப் பார்க்க ஒரு மீகாமன் இறந்து போயிருந்தார். அவர் முதுகில் கொள்ளைக்காரனின் கட்டாரி பாய்ந்திருந்ததை ஒரு ஐந்து நிமிடம் முன்பு வந்திருந்தால் எடுத்துவிட்டு ரத்தப் பெருக்கை நிறுத்தி, உயிர் பிழைப்பித்திருப்பேன். என்ன செய்ய? எது விதிக்கப்பட்டதோ அதுவே நிகழும்.

மண்டியிட்டிருந்த வெள்ளைக்காரர்களை எனக்கு அடிமையாக்கி உத்தரவு போட்டபோது அவர்களில் ஒருவன் அசிங்கமாகச் சிரித்தான். உடனடியாக அவனுடைய அரையில் தீபற்றி உடுப்பு எரிந்துபோக கூக்குரலிட வைத்தேன்.

மண்டியிட்ட அந்த ஆறு கொள்ளைக்காரர்களையும் கப்பலின் அடியில் ஏராப்பலகையை சுத்தம் செய்யக் கட்டி இறக்கிப் பயந்து அலற வைத்தேன்.

அது முடிந்து, பூஞ்சைக்காளான் படர்ந்த ரொட்டியை உண்ண வைத்து, கக்கூசிலிருந்த அசுத்த வஸ்து கலந்த திராட்சை ரசத்தை வலுக்கட்டாயமாகக் குடிக்க வைத்தேன்.

என் சினம் அந்த அளவில் ஆற, அந்த அடிமைகளுக்கு உயிர்ப் பிச்சை ஈந்து, கப்பலில் குற்றேவல் பணி கொடுத்து உத்தரவு பிறப்பித்தேன்.

கொள்ளையர் தலைவனின் கொப்புளம் கண்ட உடலைக் கடலில் தள்ளிவிடச் சொன்னேன். அந்த உடல் கப்பலுக்குப் பின்னாலேயே ‘நானும் வரேன், நானும் வரேன்’ என்று காற்றில் மிதந்து வந்து, கடல் ஆழத்துக்குள் மூழ்கியது.

அடுத்து, வாய் வார்த்தையாக சமர்ப்பிக்கப்பட்ட சகல மரியாதை களோடும் இறந்த மீகாமனின் உடலைக் கடலுக்குள் இறக்கிப் பிரார்த்தனை செய்து, கப்பலில் இருந்து இணைப்பைத் துண்டிக்க வைத்தேன்.

மீகாமன் உடலும் கொள்ளைக்காரன்போல் கப்பலோடு சற்றுத் தூரம் வந்து, இருகை கூப்பி நமஸ்காரம் செய்து அலையில் மறைந்து போனது.

கப்பல் முழுவதையும் கடல் நீரும் கொஞ்சம் போல் நல்ல நீரும் இட்டு கழுவித் துடைக்கக் கட்டளையிட்டேன்.

உறைந்துபோய் நின்றிருந்த அடிமையை அசைய வைத்தேன். அவனுக்குக் கப்பல் செலுத்தி அனுபவம் உண்டு என்று அவனும், மற்ற கொள்ளைக்காரர்களும் உறுதிப்படுத்தியதால், இறந்துபோன மாலுமியின் இடத்தில் ஆனால், சங்கிலியால் கால் பிணைக்கப்பட்டு, அவனை மீகாமன் ஆக்கினேன்.

நானே கப்பலின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டேன். நாகப்பட்டிணம் இன்னும் பனிரெண்டு அல்லது பதிமூன்று நாளில் நங்கூரமிடும் தூரத்தில் இருந்தது என்று சுக்கான் அறைச் சுவரில் தொங்கிய வரைபடத்தில் விரலோட்டித் தெரிந்துகொண்டேன். கடல் கல் தூரக் கணிப்புமுறையும் நான் படித்திருந்ததால் எளிதாகக் கணக்கிட முடிந்தது.

நான் நேற்று இந்தக் குறிப்பை எழுதத் தொடங்கியபோது கடலில் இரண்டு கலங்களைக் கண்டேன். இரண்டும் மங்கிய வெளிச்சத்தில் சரியாகத் தெரியாவிட்டாலும் இங்கிலாந்து கொடி போட்டவை என்பதை அறிந்து நிம்மதி கைவந்தது.

என் மாலுமியிடம் அந்த இங்க்லீஷ் கப்பல்களை இங்கே நம் கப்பல் பக்கம் வரவழைக்கச் சொன்னேன். முக்கியமாக மாலுமி தேர்ச்சியடைந்தவனாக இங்கே இல்லை. சாப்பாட்டுக்கு எடுத்து வந்ததும் பாதி கெட்டுப்போய் இன்னும் மூன்று அல்லது நான்கு நாளைக்கு வருவதாக மட்டும் இருந்தது.

அந்தக் கப்பலில் நிச்சயம் கப்பலோட்டத் தெரிந்தவர்கள் இருக்கலாம். சாப்பாடு குறையின்றி இருக்கக்கூடும்.

இங்கிலீஷ்காரர்கள் தின்று கெட்டவர்கள். மூச்சு விடாமல்கூட இருப்பார்கள். சாப்பிடாமல் இருக்க மாட்டார்கள். மேலும் ஒன்றுக்கு இரண்டாக ரெண்டு கப்பல்கள் வருவதால் இங்கே உடம்பு நோய் கண்டவர்களைக் கவனிக்க நோய்ப் படுக்கைப் பகுதியும் மருத்துவரும் அங்கே இருக்கக் கூடும்.

நான் நேசத்தையும், ‘அபாயத்தில் இருக்கிறோம், காப்பாற்றுங்கள்’ என்று அவசரக் கோரிக்கையையும் சொல்லும் வர்ணங்களிலான அமிட்டுகளை மேல்தளத்தில் இருந்து அனுப்பச் சொல்ல, பழக்கமில்லாத காரணத்தால் ஏதோ தம் போக்கில் அனுப்பியதோடு இல்லாமல் தம்பூர் அடிக்கவும் செய்தார்கள் அவர்கள்.

எனக்குத் தெரியாமல் போன ஒன்றைப்பற்றியும் சொல்லியாக வேண்டும். கைகால் கட்டி கப்பல் தரையில் உருட்டி விட்ட கைதிகளுக்கு சாயந்திரம் போதம் தெளிந்து போனது. அவர்களை எனக்கு நேரே கட்டி உருட்டியிருந்தால் அதை நான் கண்டு, மறுபடி மயக்கத்தில் ஆழ்த்தியிருப்பேன்.

இல்லாது போனதால், அந்த ஈனப் பிறவிகள் தாமே கட்டவிழ்த்துக் கொண்டதோடு இல்லாமல், கப்பல் தரையைவிட்டு வெளியே வந்து சுங்கான் அறையிலும் என் அறையிலும், ஏன், வந்துகொண்டிருக்கும் ஆங்கிலேயக் கப்பல்கள் மேலும் தாக்குதல் நடக்க இருட்டோடு இருட்டாக ஒளிந்து காத்திருந்ததையும் நான் அப்போது அறிந்திருக்கவில்லை.

நான் குற்றேவலுக்கு நியமித்த கொள்ளைக்கார அடிமைகளும் அவர்களோடு சேர்ந்துவிட்டிருந்தார்கள் என்பதையும் நான் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

இங்க்லீஷ் கப்பல்கள் அருகே வந்ததும் பெரிய கப்பல் விஜயசந்திரிகா என்று பெயர் கொண்டது என்று புலனானது. சிறியது ரங்கீலா என்று தெரிந்தது. அவை இங்கிலீஷ் கப்பல்கள் இல்லை. மராட்டிய கடல் படையைச் சேர்ந்தவை.

என் கப்பல் அறையில் இருந்து வெளியே வந்தபடி விருந்தாளி களுக்காக நூலேணி இறக்கச் சொன்னேன். ஆனால் அதற்குத் தேவையின்றி எப்படியோ பற்றி ஏறி, விஜயசந்திரிகா கப்பலிலிருந்து வண்ண மயிலுக்குள் வந்துகொண்டிருந்தார் ஒரு கம்பீரமான ராஜகுமாரர். அவரையே வைத்த விழி வாங்காமல் பார்த்தேன்.

அவரும் என்னையே பார்த்தபடி நிற்க, ஆங்கிலத்தில் முகமன் கூறத் தொடங்கினேன். என்னமோ தோன்ற அதைத் தமிழில் சொன்னேன். அவர் முகத்தில் மகிழ்ச்சியும் வியப்பும் மின்னலிட்டு மறைந்தன. தமிழன் தானோ.

அவர் பேசுவதற்குள் இடது பக்கம் இருளிலிருந்து ஒரு கட்டாரி பறந்து வந்து அவரைத் தோளில் காயப்படுத்தி கீழே சரிய வைத்தது.

கட்டாரி வீசிய கொள்ளைக்காரனையும் அவனோடு மறைந்து நின்ற இருவரையும் கப்பலுக்குள் வந்தவர்கள் பிடித்துக் கைகால் கட்டி எலியை அடித்துப் போடுவதுபோல் கப்பலில் இருந்து உருட்டி விட்டார்கள். அப்படி அவர்கள் உயிர் போகாதிருந்தால், நான் கொப்புளங்களை உடல் முழுக்கக்

கொடுத்து நடுக்கடலில் சுராமீன்களுக்கு உணவாகும்படி தூக்கி வீசியிருப்பேன்.

என் சித்துவேலைகளை என் கப்பலுக்கு வந்திருக்கும் இவர்களிடம் காட்டவேண்டாம், முக்கியமாக காயமுற்றுக் கிடக்கும் இந்த ஆஜானுபாகு ஆன கடற்படை மேலதிகாரி முன்.

ஒரு மணி நேரத்தில் போர் ஓய்ந்த நிலமாக ஆனது வண்ண மயில் கப்பலின் மேல்தளமும் உள்ளும். விஜயசந்திரிகா கப்பலில் இருந்து வந்து சேர்ந்த வைத்தியர் கெட்டியாக ஒரு மெழுகை அதிகாரியின் கையில் வைத்துத் தேய்த்து, மேலே பொதிய சுத்தமான துணி கேட்டார்.

என் பெட்டியில் இருந்து அதி வெண்மையாக மஸ்லின், பருத்தி, பட்டு, அரபுத்துணி என்று அவசரமாக எடுத்து நீட்ட, இரண்டாம் அதிகாரியாக என் கப்பலில் பிரவேசித்திருந்த சற்று வயதான மராட்டியர் புன்முறுவல் பூத்தார்.

பருத்தித் துணியால் கட்டுப் போட்டபின் வைத்தியர் சொன்னார் –

‘நாளை சாயந்திரம் சமுத்ரநாயகரின் பிரக்ஞை திரும்பிவிடும். கட்டாரி சற்று ஆழப் பதிந்ததால் ரத்தப் போக்கு அதிகமாகி இருந்தது. விட்டலன் அருளால் அது இப்போது கட்டுக்குள் வந்தது. மகா அதிகாரி இன்னும் இரண்டு நாள் இங்கேயே இருக்கட்டும். கையில் காயம் அதற்குள் உலர்ந்து விடும். நான் இங்கே இருந்து கண்போல் பார்த்துக் கொள்கிறேன்.’

என் அறையில் காற்று ஓட்டம் சீராக இருப்பதால் இங்கேயே அவரைத் தங்க வைக்க முடிவாயிற்று. நான் இன்னொரு இடத்துக்கு மாறிக்கொள்ள நினைத்தபோது இரண்டாம் அதிகாரி சொன்னார் –

‘எங்கள் மகா சமுத்ர சராப் ராவ்ஜிக்கு அருகிலேயே இருந்து நேரப் பிரகாரம் மருந்து கொடுக்க, கேட்டபோது தண்ணீர் கொடுக்க, மற்ற பணிவிடை செய்ய இங்கே தேவை உண்டு. அவரை உடனே விஜயசந்திரிகா கப்பலுக்குக் கூட்டிப் போக முடியாத காரணத்தால் அவர் இங்கே இருக்க, நடுவில் துணித் திரை கட்டி விசாலமான இந்த அறையில் இன்னொரு பக்கம் தேவியாரும் இருக்கச் செய்யலாம். நான் அவ்வப்போது வந்து பார்த்துக்கொள்கிறேன்.’ [‘தேவியாரும் இருக்கச் செய்யலாம்’ என்றுதான் எழுதினேன். ஆனால் கை தன்னிச்சையாக ‘தேவிடியாளும் இருக்கச் செய்யலாம்’ என்று எழுதிப் போனது.] உடம்பு, மனசின் பிடியிலிருந்து விலகி நின்று ஏதோ விளையாடுகிறது!

நான் குறுகுறுப்புடன் இந்த ஏற்பாட்டுக்குச் சரி என்று சம்மதித்தேன். கம்பீரமான இந்தக் கனவான் இருக்கும் ஒரே அறையில் நானும் இருப்பது மட்டுமில்லாமல், அவ்வப்போது அவரோடு தனியாக செலவழிக்கவும் நேரம் கிடைக்கும். இந்தப் புவனிக்கு அந்த முகத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றுகிறதே. பார்த்ததும் ஒரு பரவசம். நீண்ட காலம் பழகியதுபோல் மனம் இவர் மேல் லயிக்கிறது ஏன் என்று தெரியவில்லை.

இங்கே சரியாக நேரம் காட்ட கடியாரம் இல்லாததால் விஜயசந்திரிகா கப்பலில் இருந்து மணல் கடிகையை இங்கே கொண்டுவந்து வைத்தார்கள்.

எங்கள் முதல் ராத்திரியும் பகலும் இப்படி சோபனமாக நகர்ந்தன.

அதிகாலை நான்கு மணி – அவருக்கு நினைவு திரும்பியது. ‘நீ யார்?’ என்று கேட்டார். ‘புவனலோசனி’ என்று சொன்னேன். ‘என் கனவில் நீ என்ன செய்கிறாய்?’ என்று கேட்டுவிட்டு மறுபடி உறங்கத் தொடங்கிவிட்டார். வாசலில் காத்திருந்த வைத்தியர் என்ன சங்கதி என்று வந்து கேட்டார். ‘ஒன்றுமில்லை, நீங்கள் இளைப்பாறுங்கள்’ என்றேன்.

விடிகாலை ஐந்து மணி – சிறுநீர் கழிக்க வேண்டும் என்று தெரிவித்தார் இவர். வெளியே மருத்துவர் உறக்கத்தில் இருந்தார். வேறு ஆண்கள் யாரும் அருகில் இல்லை. நான் மறுபடி உள்ளே வந்தேன். இது மருத்துவம் என்று எனக்காகச் சொல்லிக்கொண்டு கடைகாலை எடுத்து படுக்கைக்குக் கீழ் வைத்தேன். அவர் உடுப்பைத் தளர்த்தினேன். அதிகாரியவர்களுக்கு எப்போதும் பெண்ஜாதியாக இருந்த, இருக்கிற, இருக்கப் போகும் பிரமை. நினைவாகிறதோ அது.

காலை ஏழு மணி – பாலை உலர்த்தி எடுத்த பொடியோடு அரிசி, வெல்லப்பொடி கலந்து வைத்த சத்துமா உருண்டையை வென்னீரில் கரைத்தேன். அவரைத் தோளில் தாங்கி உதடுகளை ஒரு விரலால் பிரித்து கொஞ்சம் வாயில் இட்டேன். மறுபடி நினைவு வந்தது. ‘நீங்கள் யார்?’ என்று என் தோளில் சாய்ந்த தலையை ஆதரவாகத் தாங்கிக் கேட்டேன். ‘ராமோஜி ராவ்’ என்றார். எத்தனையோ யுகங்களாக அவரோடு சுகித்திருந்த நினைவு. அவர் என் மடியில் தலையை வைத்துக்கொண்டு வலியால் சற்று முனகினார். உடன் உறக்கத்தில் ஆழ்ந்தார்.

காலை எட்டு மணி – நல்ல நினைவு வந்தது. எல்லாம் ஞாபகம் வந்ததும் என் பெயர் மட்டும் மறுபடி மறந்துபோய் யாரென்று விசாரித்தார். எத்தனை முறை கேட்டாலும் அலுக்காதே. புவனலோசனியென்றேன் மகிழ்ந்து.

முற்பகல் பதினொரு மணி – அரிசிச் சாதமும், மிளகு ரசமும், அவித்த கோழி முட்டையும் அவருக்கு ஊட்டி விட்டேன். உண்ட மிச்சம் எச்சில் சோற்றை சந்தோஷமாக உண்டேன். நான் குடித்து மிச்சம் வைத்த திராட்சை ரசத்தை அவருக்கும் புகட்டி மகிழ்ந்தேன்.

நடுப்பகல் – அவர் நல்ல உறக்கத்தில் இருந்தார். ஒரு தடவை திரும்பிப் படுத்தார். கண் திறந்து பார்த்துக் கேட்டார் – ‘நீ யார், யட்சியா?’

‘நான் புவனலோசனி’ என்றேன். கேட்கவில்லை என்றார். குனிந்து காதருகில் பெயர் சொல்லும்போது கட்டவிழ்த்திருந்த கூந்தல் அவருடைய முகத்தை மறைத்தது. கட்டு இல்லாத அவருடைய இடது கரம் என்னை அவருடைய நெஞ்சில் இருத்திக்கொண்டு கூந்தலைத் தடவியது. என் ஈர இதழ்களை அவருடைய கடல் காற்றில் காய்ந்த உதடுகள் ஸ்பரிசிக்க, வந்த காற்றில் ஊதுபத்தி சந்தன கந்தம் பரப்பியது.

உப்பும் சுவைதான். இனிப்பை விட பெரும் சுவை அதுவென்று ருசி கண்ட என் உதடுகள் என் நாவுக்குச் சந்தேசம் அனுப்ப, போய்ச் சேர்ந்தது அவருடைய நாவுக்கு.

என் உதடுகளையும் அடுத்துத் தோளையும் கடித்த அவருடைய பற்கள் கழுத்தில் பட, ‘யட்சனா நீங்கள்? என் உயிரைக் கவர்ந்து எங்கேகொண்டு வைத்தீர்கள் என் ராஜா?’ என்று பிதற்றி அந்த மார்பில் கவிழ்ந்து படுத்தபடி நானும் நித்திரை போனேன். அவரது இடதுகை என் முதுகில் அமர்ந்திருக்க அவரும் உறக்கத்தில்தான்.

பிற்பகல் நான்கு மணி – ‘புவனலோசனி எழுந்திரு.’ அவர்தான். தமிழில் சொன்னார். என் காதுகளையே நம்பாமல் நான் அவர் நெஞ்சில் கை ஊன்றி அந்தக் காந்தக் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தேன்.

‘தமிழ் தெரியுமா?’

‘தெரியாமல் என்ன, தஞ்சாவூர்காரனுக்கு மூச்சுக் காற்றுக்கு அடுத்தது பேசுகிற பாஷை தானே.’

நான் எழ முற்பட்டேன். அவருடைய இடது கரம் திரும்ப அழுத்தமாக என்னை அவர் நெஞ்சில் பரவிக் கிடக்க வைத்தது. இன்னொரு கரம் காயப்படாமல் இருந்தால் என்ன செய்திருக்குமோ. அவர் நெற்றியில் முத்தமிட்டு எழுந்து கூந்தலை முடித்துக்கொண்டு வெளியே போனேன்.

மாலை ஐந்து மணி – தயாராக வென்னீர் சுடவைத்து கப்பல் சமையல்காரர் எடுத்து வந்திருந்ததில் அஸ்கா ஜீனியும், சத்துமாப் பொடியும் கலந்து சூடான பானமாகக் கரைத்துக் குவளையில் ஊற்றி திரைக்கு அப்புறம் எடுத்துப் போனேன்.

படுக்கையில் அமர்ந்திருந்த அவர், நன்றி சொல்லி என் கையில் இருந்து குவளையை வாங்கிக்கொண்டார். வாசலில் விளக்கு நிழலாடியது.

இரவு எட்டு மணி.

ரங்கீலா கப்பல் அதிகாரி வந்திருந்தார். கூடவே ராத்திரி முழுக்க கப்பல் தளத்தில் உறங்காமல் உட்கார்ந்திருந்த கப்பல் மருத்துவர். அவர்களோடு, வென்னீரும், காடியும், சுட்ட ரொட்டியும், பாடப்படுத்தி வைத்த கிழங்கு உணவுமாக இரண்டு சிப்பாய்கள் என்று கூட்டமாக நுழைய நான் விலகி நின்றேன்.

வந்த அதிகாரி சத்தமாக என்னிடம் மேட்டிமையோடு சொன்னது –

‘பெண்ணே, சற்று விலகி, இந்த அறையை முழுக்க ஒழித்து சேனாதிபதிக்குக் கொடுத்துவிட்டு நகர்ந்து இரு. அதிகாரிகளோடு சேனாதிபதி ஆலோசனை நடத்தும் நேரம் இது.’

‘அப்படியே ஐயா, என் துணிகள் இங்கே உண்டு, காலை எழுந்த அரை மணி நேரத்தில் நான் குளித்து பூஜைக்கு இருப்பேன். பூஜை முடிந்தாலே காலை உணவு. நான் சாப்பிடாவிட்டாலும் சரிதான், பூஜைக்கு வைத்த சாளகிராமங்களையும், தெய்வ சக்தி ஆவாஹனமான ஸ்படிக எண்கோணத் திருவுருவத்தையும் பூஜிக்க எனக்கு அனுமதி அளித்தால் நன்றியுடையவளாக இருப்பேன்.’

இதை இந்துஸ்தானியில் சொன்னேன்.

‘அதெல்லாம் உன் பிரதேசத்துக்குப் போய் வைத்துக்கொள்’ என்றார் அந்த மூத்த அதிகாரி.

‘விட்டோபா, அந்தப் பெண்ணுக்கு அவளுடைய நம்பிக்கையும் உபாசனையும் பெரிய விஷயங்கள். உங்களுக்கும் எனக்கும் எப்படி நம் ஆலோசனை நேரமும், திட்டமிடும் நேரமும் இருக்கிறதோ, அது போல.’

இதை மராட்டியில் சொல்லி அடுத்து என்னிடம் தமிழில் சொன்னது – ‘காரைக்கால் பெண்ணே, நீ இந்த மூலையில் உன் அறைக்குள் இருந்து

உன் காரியங்களைக் கவனி. நானும் இங்கிருந்து படை நடத்துகிறேன்.’

இரவு பதினோரு மணி.

எதுவும் நடக்கவில்லை. ராவ்ஜி களைப்போடு உறங்கிவிட்டார்.

அடுத்து வந்த நாள் காலை – பூஜை நேரத்தில் சிறு மணி அடித்ததும் பேசிக்கொண்டிருந்த சேனாதிபதியே எழுந்து வந்துவிட்டார். கூடவே அடுத்த நிலை அதிகாரி என்று நான் அவதானித்திருந்த விட்டோபா ராவ்ஜி என்ற முதிர்ந்து வரும் அதிகாரியும். அவருக்குப் பின்னால் உலர்ந்த திராட்சை, முந்திரி, பாதாம், அக்ரூட், கற்கண்டு என்று தாம்பாளத்தில் வைத்து எடுத்துக்கொண்டு படை வீரர்கள்.

தண்ணீரும், பன்னீரும் பொழிந்து அபிஷேகம் செய்து என் விக்கிரகங்களைப் பூத்துவாலைகொண்டு ஈரம் ஒத்தியெடுத்து தூபக்காலில் சாம்பிராணி போட்டு வட இந்தியக் கோவிலாக்கி வழிபட்டேன்.

கண் திறந்தபோது தாம்பாளங்கள் எல்லாம் வரிசையாக பூஜைக்கு நைவேத்தியமாகப் படைக்கப்பட்டிருந்தன. என்னோடு விட்டோபாவும் அவற்றை வினியோகித்தார்.

ராமோஜி என்ற என் எஜமானர், என் ராஜா, என் சர்க்கரை பொம்மை, என் ஆராதனாமூர்த்தியான இவர் எழுந்து ஆடும் கப்பலின் பக்கவாட்டு மூங்கிலைப் பிடித்துக்கொண்டு நின்றார்.

நான் தீப ஆராதனை காட்டும்போது அந்த சுடரில் ஒரு சுந்தரியைப் பார்த்தேன். இவருக்கு வேண்டியவள் என்று அந்தச் சுடர் சொல்லி அணைந்தது. பூஜை முடித்து வரும் மன சாந்தியை மீறி அந்தப் பெயர் தெரியாத பெண்மேல் சொல்ல முடியாத பொறாமை ஏற்பட்டது. துளசி மாலை உருட்டி அந்த எண்ணங்களை அப்பால் போக்கினேன்.

‘சரி, யோசித்து வைத்தபடி செய்யுங்கள். நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் விஜயசந்திரிகாவுக்குத் திரும்பிவிடுவேன்’ என்றார் ராமோஜி மகராஜ்.

‘சேனாதிபதி அவர்கள் மன்னிக்கணும். இன்னும் ஒரு பொழுதாவது, இந்த ராத்திரி விடிந்து காலை ஆவது வரையாவது சேனாதிபதி அவர்கள் இங்கே இருக்க வேண்டியது அவசியமானது. நாளை விடிந்து கட்டைப் பிரித்துக் காயத்தைப் பார்த்துக்கொண்டு குணமான நிலைமை உறுதிப்படுத்தி சமூகம்

இடமாற்றம் செய்யலாம்' என்று பணிவோடு அறிவித்த கப்பல் மருத்துவரை அன்போடு நோக்கினேன்.

இந்த இரவும் இவர் இங்கேதான் என்று அறிய மனம் றக்கை கட்டிப் பறந்தது. அவரிடம் யார் என்ன என்று என்னைப்பற்றி முழுவதும் சொல்லவேண்டும். அவரையும் ஓர் அங்குலம் விடாமல் தெரிந்து கொண்டுவிட வேண்டும்.

உடலும், மனமும், பிறந்த கதையும், வளர்ந்ததும், கற்றதும், அனுபவித்ததும், இழந்ததும், ஏங்குவதும் எல்லாம்தான். தெரிந்து கொள்ள, தெரியப்படுத்த. ஒரு ராத்திரி போதுமா இதற்கெல்லாம்?

வந்தநாள் முற்பகல் – அவருடைய கையில் கட்டைப் பிரிக்காமலேயே நீங்கிவிட்டது. அறை வாசலில் உட்கார்ந்திருந்த வைத்தியர் நல்ல உறக்கத்தில் இருந்தார். கப்பல் உயர்ந்தும் தாழ்ந்தும் ஆடுவது அவருடைய உறக்கத்தை ஆழத்திற்குக்கொண்டு போயிருக்க வேண்டும்.

பெண்ணே. ராவ்ஜி அழைத்தார்.

ஒரு சித்துவேலை செய்தால் என்ன? செம்பருத்திப் பூக்களை அவர் கைக்கு ஒத்தடமிட்டதுபோல் அடுக்கி அழகு பார்த்தேன்.

'இந்தப் பூவை எல்லாம்விட மாயம் செய்யும் உன் கன்னங்களை இங்கே சேர்த்துப் பிடித்துக் கொஞ்ச இடம் தருவாயா?'

அவர் பிரியமும் காதலும் காமமும் ததும்பக் கேட்டார். நான் அந்தப் பூக்களை மறையச் செய்து அவரைச் சுற்றிச் சந்தன கந்தத்தைப் பரவச் செய்தேன்.

'இன்னும் குளிக்கவில்லையா, அழகியே இந்த வாசனை உன் உடம்பிலிருந்து வருவதுதானே மோடி கிறுக்குதடி தலையை' என்றவர், 'உன் உடல் கந்தங்கள் என் மேலும் பரவட்டும். என்னோடு இருக்க வா' என்றார்.

நீராடி பூஜை செய்து வந்தேனே என்று தயக்கம் காட்டினேன். 'உனக்கு நான் பூஜை செய்கிறேன். பிறகும் நீராடலாம்' என்றார்.

'ஒரு ராத்திரிதானே உங்களோடு இருந்தேன், தாசி என்பதால் தானே உரிமை வந்ததா?' என்று கிண்டலும் கேலியும் கொஞ்சம் உண்மையுமாகக் கேட்டேன்.

‘நீ சித்தினி. தாசியும் தாசனும் நாம் இப்போது ஒருவர்க்கொருவருக் குத்தான். வா, கூடி இருந்து மகிழ்ந்திருப்போம்’ என்றார் என் ராஜா.

‘கழிவறை போக துணை வேண்டுமா?’ என்று குறுகுறுப்போடு விசாரித்தேன். அந்த உடல் எனதாகட்டும்.

திரும்பியபோது அவர் அணைப்பில் விழுந்தேன். வியர்வையும், குருதியும், அந்த தேக்குமர உடலின் சுபாவமான கந்தங்களும் தலையில் நேற்றுத் தடவிய கொழும்புத் தேங்காய் எண்ணெய்யின் மாறாத நறுமணமுமாக அவர் என்னை ஆக்கிரமிக்கக் காத்திருந்தேன். கண்களை அந்தத் திவ்விய நிமிடத்துக்காகக் காத்திருக்க மூடினேன். இல்லை, நான் கண் மூடியபடியே இருந்தேன். என்ன ஆனதோ, அந்தக் கணம் வரவேயில்லை. மயக்கத்தில் வீழ்ந்திருந்தார் என் அரசர் மறுபடியும். பொறு, இது பகல்தானே என்று உடல் கடிந்து கொண்டது.

வந்த நாள் பிற்பகல் – குழைய வடித்த அன்னமும், எளிதாக சீரணமாகும் உணவு என்று அரேபியாவில் என் வீட்டில் சிப்பந்திகள் கொடுத்திருந்த உலர் திராட்சையும் பாதாம் பருத்துத் தூவலும் தேனும் கலந்து பிடித்த சிறு உருண்டைகளும், மராட்டி சாம்பார் என்று உலகை எல்லாம் மயக்கும் காரமான பருப்புச் சாறுமாக அவருக்கு என் தோளில் தலை சாய்த்து வைத்து ஊட்டினேன். தோளைவிட என் நிறைந்த மார்புதான் அவருக்கு சுகமாக இருந்ததாக இறங்கிய தலை தெரிவித்தது.

அவருக்கு அளித்த அதே எச்சில் தட்டில் நானும் உண்டேன். பொழுதுபோக எங்கள் படுக்கைக்கு மேலே குளிர்ந்த காற்று சுற்றிவர சித்து வேலை ஒன்று செய்ததில் திருப்தியடைந்தேன். அவரை உறங்கவிட்டு வெளியே வந்து பார்த்தேன்.

விஜயசந்திரிகா, மகாராணிபோல கம்பீரமாக அசைந்து முன்னால் போக, தொடர்ந்து சேடிப்பெண்போல் ரங்கீலாவும், தொடர்ந்து வண்ண மயிலும் அலைகளோடு பேசிக்கொண்டுபோய்க் கொண்டிருந்தன.

உள்ளே வந்தபோது புன்சிரிப்போடு ராவ்ஜி படுக்கையை அடுத்து நின்றிருந்தார்.

‘புவனலோசனி மகாராணியார் விஜயம் முடித்தானதா? உங்கள் கப்பலை நல்லவிதமாகப் பராமரித்து, காவல் செய்து, இயந்திரங்களைச் செப்பனிட்டு சீராக்கி எங்களோடு சீராக மிதந்து வர அழைத்துக்கொண்டு வருகிறோமா?’

‘ஆம் கடல் அரசரே, எல்லாம் தங்கள் சித்தம். உங்களுக்கு என் நன்றிகள்.’

‘அது போதாது தாசிப் பெண் அணங்கே.’

‘வேறென்ன வேணும் பிரபோ. நான் வேணுமென்றால் இந்த உடல் எப்போதும் உங்களுக்கு உண்டென சொல்ல எனக்குப் பெருமிதமே தவிர வெட்கமில்லை.’

‘பாதுகாப்பு மற்ற உதவிப் பணிகளுக்காக, ஒரு நாளைக்கு நூறு பொன் சிவாஜிப் பணம் நீ எனக்குக் கூலி தர வேண்டும் புவனிப் பெண்ணே.’

‘மன்னிக்கவும் அதைத் தர முடியாது.’

‘ஏன்?’ என்றார் என் ராஜராஜஸ்ரீ மகாராஜர்.

‘என்னைக் கொள்ளையடித்து என்னோடு பேசிக்கொண்டிருக்கும் பெருங்கொள்ளையருக்கு இன்னும் பணமும் வேண்டுமோ.’

‘பெண்ணே நான் கொள்ளைக்காரனில்லை. எலி பிடிப்பவன். எலிப்பொறி உருவாக்கி தெருத்தெருவாக விற்றுத்தான் பிழைக்க ஆரம்பித்தேன்’ என்றார் அவர் என் காது மடலை வருடியபடி. ‘இங்கே நான் எலியா, பொறியா...?’ என்று அவரைக் கேட்டேன்.

அவர் என்னை இழுத்து அணைத்துக்கொண்டார். நான் எழுந்து போய் என் அறையின் கதவைத் தாழிட்டு வந்தேன். இணைவிழைய முற்பட்டபோது கதவு பலமாகத் தட்டப்பட்ட ஓசை. இருவரும் சிரித்தபடி விலகினோம்.

அவர் படுத்தபடி இருக்க, நான் மருந்துகளைத் தட்டில் வைத்து அவற்றை அவருக்கு ஊட்டுகிறவளாக கதவை திறந்து கொஞ்சம் போல் மூடி வைத்து சேனாதிபதி மருந்து உட்கொள்கிறார். கொஞ்சம் பொறுங்கள் என்றேன்.

‘ஒன்றுமில்லை, கப்பல் போகவேண்டிய பாதையை தேர்வு செய்ய வேண்டும். அதுவரை இங்கேதான் மூன்று கப்பல்களும் சுற்றிச்சுற்றி வரவேண்டும். மகா சேனாதிபதி அவர்களுக்கு உடல் நலமில்லாமல் இருந்ததால்...’

‘இருந்ததால்?’

ராமோஜி ராவ்பகதூர் குரல் உயர்ந்து உள்ளிருந்து ஒலிக்க, வந்தவர்கள் அமைதியாக நின்றார்கள். ‘அரபுக் கடலில் செல்லலாம்’ என்றார். அவர்கள்

புறப்படுவதற்கு முன் சேனாதிபதியைத் தொந்தரவு செய்ததற்காக மன்னிக்கக் கோரினார்கள்.

ராமோஜி ராவ்பகதூர் அவர்கள் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தார். ‘சரி, வாருங்கள், நானும் அங்கே இருக்கவேண்டும்’ என்று கிளம்பி விட்டார்.

மருத்துவனும் விட்டோபாவும் இருந்துபோகலாமே என்று கோரினாலும் அவர்கள் அவர் வருவதை ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்தது போல் தெரிந்தது.

அவர் போகும்போது சமூகத்துக்கு நேரம் இருந்தால் இதைப் படித்துப் பாருங்கள் என சிறு மரக் குழலில் இந்த யாருக்கென்று விலாசமிடாத லிகிதத்தை எழுதியவரைக்குமாகக் கொடுத்தேன்.

வந்த நாள் இரவு – சலிப்போடு ஊர்ந்து போனது சாயந்திர வேளை. எதிர்பார்க்க வைத்துவிட்டு ஏமாறுவதாகவே எனக்கு அனுபவமானது. ஆக்கிரமித்து அதிகாரம் செய்யும் கொள்ளையர்போல் இரவு நுழைந்த போது சிநேகத்தோடு ராவ்ஜியும் எங்கள் கப்பலுக்குள் வந்துவிட்டார். வரும்போதே இதழ்க் கோடியில் ஒரு புன்னகை. பாலை எதிர்பார்த்து வரும் பூனை முகத்தில் தென்படும் விஷமச் சிரிப்பு அது.

‘இன்றும் இங்கே சற்று நேரம் இருந்து போகலாமா தாசிப் பெண்ணே’ என்று விசாரித்தார் அவர்.

‘இந்தா உன் எழுத்ததிகாரம். படித்துவிட்டேன். மிகப் பிடித்துப் போனதடி பெண்ணே. அங்கே எடுத்துப் போய்ப் படித்ததை எல்லாம் இனி இங்கேதான் சரிபார்க்க வேண்டும்’ என்று இழுத்து என்னைப் படுக்கையில் கிடத்தினார்.

‘என்னைப்பற்றித் தெரிந்தும் என்னைப் பிடிக்கிறதா?’ கேட்டேன்.

‘உன்னைப்பற்றித் தெரிந்ததால்தான் உன்னைப் பிடிக்கிறது’ அவர் கண் சிமிட்டிச் சொன்னார்.

‘அப்புறம் வேறென்ன பிடிக்கிறது?’ ஒன்றும் தெரியாதவளாகக் கேட்டேன்.

‘நீ கற்பனை செய்த உன் கண்கட்டு வித்தைகள்…’

‘அதெல்லாம் கண்கட்டு இல்லை… சித்து வேலை’

‘அப்படியா, உன் சித்து வேலையால், எங்கே, என் கையை மறையச் செய், பார்க்கலாம்’

‘நான் மாட்டேன்’ என்றேன் அவசரமாக.

‘சரி கையைவிட்டுவிடலாம்... வேறு அவயம்...’ வலித்து இழுத்துக் காதில் வேறேதோ சொன்னார். அவரோடு நானும் சிரித்தேன். இப்படியுமா பேசுவார்!

‘வேண்டாம் மகராஜ். உங்கள் உடல் உங்களுக்கு சொந்தமானதில்லை. என்னுடையது. முழுசாக இருக்கட்டும் அது.’

அவர் திருப்பிக் கொடுத்த லிகிதக் குழலை பத்திரமாக என் பெட்டியில் வைத்துவிட்டு நானும் அவரருகே வந்தேன்

‘உனக்கு ரத்னாபாய் தெரியுமா?’ என்றார். ‘சொன்னால் தானே தெரியும்.’ ‘உனக்கு முன் என் பிரியத்தை என்னோடு என்றும் பங்கு போட வந்திருப்பவள்’ என்றார்.

‘ரத்னா எப்படி இருப்பாள்?’

‘அழகாக இருப்பாள். அன்பாக இருப்பாள். அவளாக இருப்பாள். நானாகவும் இருப்பாள்.’

கவிதை மொழிந்தார்.

‘என் சக்களத்தியா அவள்?’

துணிந்து கேட்டதை அவர் ரசிக்கவில்லை என்று முகக் குறிப்பு சொன்னது. ‘அவள் என் மனைவி’ என்றார் பெருமையோடு.

ரத்னாவிடம் இவ்வளவு உரிமை எடுத்து எப்போது வேண்டுமானாலும் இணை விழையக் கூப்பிடுவீர்களா என்று கேட்க நினைத்தேன். செய்திருப்பார்தான்.

என்னமோ, அவரை, அவருடைய ஆகிருதியைப் பார்த்ததும் அவருக்கு இப்போதோ, இதற்கு முன்போ, இனி வரும் காலத்திலோ கூட இருந்து சுகம் தர நிறையப் பெண்கள் வந்து போவார்கள் என்று தோன்றியது. புணர்ச்சி மட்டுமா வாழ்க்கை? தாசிப்பெண்ணுக்கு வேறேதும் கனவும் நினைவும் விதிக்கப்படவில்லையோ.

‘ராவ்பகதூர், வெறும் வயிற்றோட விளையாடப் போக வேணாம். கொஞ்சம் உணவருந்திப் போகலாம்’ என்று அழைத்தபடி பழங்களையும் இனிப்புகளையும் சித்தம் செய்து வைக்க மரதகத்திடம் சொன்னேன்.

உலர்ந்த பழங்களும், ஜிலேபி, பூந்தி லட்டு, அரேபிய கோதுமை அல்வா, கோழி அல்வா, பாதாம் அல்வாவும் எடுத்துவந்து தட்டுகளில் வைத்து நீட்டும்போது காரமான முறுக்கு, தட்டையும் கார பூந்தியும் வெவ்வேறு தட்டுகளில் வைத்து அளித்தார்கள், மரதகத்தின் நேர்ப்பார்வையில் சேவகர்கள்.

எதிர்பார்த்தபடி கோழி அல்வா வேண்டாம் என்று முகம் சுளித்து ஒதுக்கி விட்டார். கோழிக்கோடு பட்டணத்திலிருந்து வருவது அது. கோதுமை அல்வா கிண்டும்போது கோழிச்சாறு கலந்து செய்யப்படும் இனிப்பு. மிட்டாயில் அசைவம் எந்த நாளும் வரக்கூடாது என்று தீர்மானமாக மறுத்துவிட்டார்.

கூடவே அரேபிய திராட்சை மதுவும், ஐரோப்பிய துருக்கி மதுவும் சிறு பீங்கான் குவளைகளில் வந்தது.

அந்த ரத்னா பீங்கான் குவளையில் துருக்கி மது விளம்புவாளா என்று கேட்க நினைத்தேன். அழகியாக இருப்பாள். என்னைவிட நல்ல நிறமாக, உயரமாக, மெலிய வேண்டிய இடங்களில் மெலிந்தும் பருத்திருக்கும் அங்கமெல்லாம் பருத்தும், என்னைவிட வயதில் குறைந்தவளாக இருப்பாள்.

அழகு என்னத்துக்கு? உடல் சுகம் கேட்கும்போது, இருளில் முயங்கும் போது அழகை மனதில் கற்பனை செய்து அனுபவிப்பது ஆணும் பெண்ணும்தானே, சொல்லுங்கள் ராமோஜி ராவ்ஜி.

இனிப்பும், வாயில் காரமான சுவை அனுபவப்படும் பொறித்த பலகாரங்களும், பழக் கூழும், உலர் திராட்சையும் திராட்சை மதுவுமாக வயிற்றுப்பசியைத் தீர்த்துக்கொள்ள, உடற்பசி நானுமுண்டு என்று முன்னால் வந்து கானகப் பெருந்தீயாக அடர்ந்து வெப்பம் கூடி நிலம் கடந்து நின்றது.

கையசைத்து சித்துவேலையாக படுக்கையில் புத்தம்புது ரோஜா மலர் இதழ்களைத் தூவினேன். சந்தனத் துகள்கள் பன்னீரில் கலந்து வெள்ளிக் கிண்ணத்தில் வைத்ததை நான் கை நிறைய எடுத்து அவருடைய விரிந்த மார்பில் தடவினேன். அவரும் எனக்கு சந்தன அபிஷேகம் செய்யப் பின்வாங்கவில்லை. இந்தக் கேளிக்கையை ரத்னாபாய் பார்த்திருக்க நடத்தவேண்டும் என்று எனக்கு விநோதமான ஆசை ஏனோ எழுந்தது.

புலிகள் பொருதுவதுபோல் சிறு உறுமலோடு இன்பம் சுவைக்கத் தொடங்கினோம். ஒரே நிமிடத்தில் அவரை புவி புவி புவி என்று என்னை

என் உடலை என் மணத்தை, என் நாற்றத்தை, என் தூய்மையை, என் அழுக்கை, என் கண் இமையை, கண்ணில் பீளையை, நாவை, நாவில் படிந்த இனிப்பு மிச்சத்தை யாசிக்கும் பசி மிகுந்த யாசகனாக, எனக்கு மட்டும் சொந்தமான ராவ்பகதூராக நான் ஆக்கினேன்.

விரித்த கையால் மூடியும், தரையில் கவிழ்ந்து படுத்தும், திரும்பிப் படுத்தும் என் உடலை அவருக்குத் தராமல் போக்குக்காட்டி, வேட்கை மிகுந்து ஏங்கி இரைஞ்ச வைத்தேன். கட்டிலின் முகப்பில் மண்டியிட்டு தா தா என்று என் முகவாயைப்பற்றி வேண்டினார் மகாசேனாதிபதி. என் பாதங்களை முத்தமிட்டார். வா என்றார்.

அவர் என்னில் எந்த நிமிடமும் வரலாம். இரண்டு உடல்களும் உயிர்களும் ஒன்றாகலாம். ரத்னாபாய், என் சித்து வேலை கடல் கடந்து போக முடியும் என்றால் உன் கண் முன் நாங்கள் ரமிப்பதைப் பார்த்து நீ இன்பமடையச் செய்ய முடியும். பார்க்கிறாயா? நான் காமுறுவதைக் கற்றுத் தெளிந்தவளடி. உன்னைப்போல் இன்னும் கற்றுக்கொள்ள நிறைய உள்ள மாணவி இல்லை.

ராவ்பகதூர் ராமோஜி ராவ் கரங்களைப்பற்றி நான் அவர் கண்களுக்குள் மெழுகுவர்த்தி ஒளியில் நோக்க அவர் கண்களுக்குள் காமம் கனல் வீசி எரிந்தது. அடுத்த வினாடி அவர் உடல் தளர்ந்ததை முகக் குறிப்பு காட்டியது. அதீத சுகம் கொண்டாடிப் புறப்பட அவருடைய புலன்கள் அடுத்த வினாடி சட்டென்று அடங்கி, அவரை ஆடாமலே அடங்கிய வெற்றுடலாக, மனம் முந்தி உடல் பிந்தி ஒரே வினாடியில் வேகமற்றுப் போன சோகத்தை அவர் கண்கள் தாழ்ந்து பார்த்திருந்து ரகசியம்போல் கூறின.

‘நீங்கள் மிக்க களைப்பாக இருக்கிறீர்கள். அதனால் இது நிகழ்ந்திருக்கலாம் மகாபிரபு. நான் இருக்கிறேன் இணையாக கூட வர. ’

நான் பேசுவதை நிறுத்தச் சொல்லிக் கைகாட்டினார். கட்டிலில் இருந்து இறங்கிப் போனார்.

நான் கப்பலின் மேல்தளத்துக்கு ஓடிப்போய்ப் பார்க்க, சிறு விளக்கொன்று துணையாக ஒரு சிப்பாய் நூலேணியையும் படகையும் இறக்கி விட, விஜயசந்திரிகா கப்பலின் நூலேணி கீழே வர அமிட் போடப்பட்டதைக் கவனித்தேன்.

ஏணியில் தொங்கியபடி அவர் கடல் பரப்பில் இறங்கும்போது மற்ற ஏணி இருட்டில் தெரிந்து மறைந்தது.

கடல் வெகு கோபமாக இருந்த ராத்திரிப் பொழுது அது. இவரும்தான். இயலாமை ஏற்படுத்திய சினம் அது என்று சொல்லாமலேயே புரிந்தது.

ஏமாற்றமும் வருத்தமும் கோபமுமாக அந்த இரவு அனுபவப்பட்டுக் கடந்து போனது என்று இங்கே எழுதி முடித்திருப்பேன். அது நடக்கவில்லை.

அரைமணி நேரம் சென்றபிறகு மணல் கடிகையில் நேரம் ஊர்ந்து இறங்கி மறைந்துகொண்டிருந்தபோது ஜல்ஜல் என்று சங்கிலிகள் சப்திக்க விஜயசந்திரிகாவின் படகும் அடுத்து நூலேணியும் இறக்கப்பட்டதைக் கேட்டும் கண்டும் உறைந்துபோய் இருந்தேன்.

வேறே கொள்ளைக்காரர்கள் வந்திருக்கிறார்களா? ராமோஜி ராவ்சாகிப் சந்தோஷப்படுத்திய காலம் இத்தனை விரைவாக முடியப் போகிறதா?

மீகாமன் அறைக்கு ஓடிச் சென்று பார்க்க, ரங்கீலாவின் அதிகாரி விட்டோபா ராவ்ஜிதான் கப்பலைச் செலுத்திக்கொண்டிருந்தார்.

‘என்ன விசேஷம் நூலேணி இருட்டில் இறக்கப்பட்டிருக்கிறது’ என்று கேட்டேன்.

‘சேனாதிபதி வருகிறார்’ என்றார் அவர் என் முகத்தைப் பார்த்தபடி. எதற்கு என்று சொல்லி உடனே மாற்றிக்கொண்டேன்.

‘என்னாச்சு, எதையாவதுவிட்டுப் போய்விட்டாரா?’

‘அதை அவரும் சொல்லவில்லை. நீங்களும் சொல்லப் போவதில்லை.’

விட்டோபா சிரித்தபடி சுக்கானை வலித்தார்.

மீகாமன் அறை வாசலில் கால் சத்தம். நான் போய்ப் பார்க்க ராமோஜி.

‘தாசிப்பெண்ணுக்கு அர்த்த ராத்திரியில் தரிசன யோகம் என்று எந்த ஜோசியனும் சொல்லவில்லையே’ என்றேன் அவரை இறுக அணைத்து கால்கள் மேல் கால் வைத்து உயர்ந்து அவர் உதடுகளைச் சுவைத்துவிட்டு.

அவர் ஏதும் பேசவில்லை. என்னை அப்படியே அள்ளியெடுத்துச் சுமந்து அறைக்குள் தூக்கிப்போய்ப் படுக்கையில் போட்டார். அடுத்த நொடி அங்கே

இரண்டு மிருகங்கள் சீறிச் சினந்து மகிழ்ந்து நெருங்கி விலகிப் பாய்ந்து சுருண்டு பசியாறின. மறக்க முடியாத காதல் களியாடிய இரவு அது.

அந்த ராத்திரியும் அதற்கடுத்ததும், அதற்கு அடுத்து வந்ததும் ராமோஜிராவும் நானும் கணவன் மனைவியாக, அதைவிட நெருக்கமாக உறவுகொண்டு சுகித்திருந்தோம்.

'நாளை நான் விலக்காகி இருப்பேன்' என்று பொய் சொன்னேன். 'அதனால் என்ன?' என்றார் மெல்ல நகைத்து' இது அறியா வினாவா அறிந்த வினாவா?

அந்தப் பகலிலேயே என்னை ஆக்கிரமித்தார் என் பேரரசர். 'வீட்டு விலக்கு வந்தாலும் உன்னோடு கட்டிக்கொண்டு கிடந்து உறங்கினாலே போதுமடி' என்றார் ஒருமுறை. செய்யக் கூடியவர்தான். 'உன் உடலும் மனமும் அனுமதிக்காமல் அது நடக்காது' என்றார் மறந்துவிடாமல்.

ரத்னா, நீ எங்கே இருக்கிறாய்? இப்படி நீ இவரைப் படுக்கையில் திருப்திப்படுத்தியதுண்டா? இங்கே காண வா. கண்ணை விரித்துப் பார். கற்றுக்கொள். நான் சங்கடப்பட மாட்டேன். சந்தோஷத்தோடு வரவேற்கிறேன். ராவ்ஜியை நான் முந்தானையில் முடித்து வைத்திருக்கிறேன் தெரியுமாடி மேனாமினுக்கி? நீ என் அடைப்பக்காரியாக தீபமும் தூபமும் பிடித்து நில். வா, உன் ராவ்ஜியின் ஆசைநாயகி நான். என் எச்சில் படிக்கத்தோடு வந்து ஓரமாக நில்.

★

ஐந்து நாளாக இந்த நாட்குறிப்பை எழுத நேரம் இல்லை. இருந்தாலும் எழுத என்ன இருக்கிறது? அதெல்லாம் முழுக்க முழுக்க நானும் ராமோஜி ராவ்பகதூரும் மட்டும் பங்கு போட்டுக் கொண்டது.

ஒருநாள் போல் அடுத்தநாள் இல்லை, ஒரு காலை நேரம் போல் அடுத்த காலை இல்லை. பகலிலும் முயங்கிக் கிடந்து ராத்திரி சதுரங்கம் விளையாடினோம். இது நிஜ சதுரங்க விளையாட்டுதான்.

அறுபத்து நாலு கரணம் சொன்ன வாத்சாயனனின் கலையை அபூர்வமான கையெழுத்துப் பிரதியாக வழவழத்த சீனக் காகிதத்தில் மசக்கொட்டை மசிகொண்டு எழுதியதை எல்லாம் ஒவ்வொன்றாக மேற்கொண்டு இன்பம் துய்த்தோம். வாத்சாயனனுக்கே இன்னும் நாலைந்து சொல்லித் தருவார் என் ராவ்ஜி.

‘நீ என்ன குறைந்தா போனாய், துய்க்கத் துய்க்க உன்னோடு அனுபவித்துக் கிடக்க வெறி மூண்டெழுகிறது தாசிப் பெண்ணே’ என்று ராவ்ஜி முத்தங்களுக்கிடையே சொல்வது வாடிக்கையாகிப் போனது.

ஒவ்வொரு ராத்திரியும் நான் ரதிதேவிக்கு நன்றி சொன்னேன். விலக்காகி வெளியே நிற்கும் அந்த நாட்களுக்கு முந்தியே இந்த இரவுகள் எனக்கு, எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

‘இப்படி புவி புவி புவி என்று தவிட்டுக்குருவி மாதிரி நொடிக்கு நூறு தடவை படுக்கையில் பெயர் சொல்கிறீர்களே, கரை போனதும் புவிக்கு என்ன வைத்திருக்கிறீர்கள்?’

‘என்ன வேண்டும் என் கண்ணாட்டிக்கு?’ என்று உதடு வலிக்கத் திருகி விளையாடியபடி கேட்டார்.

‘ரத்னாவோடு என்னையும் கல்யாணம் செய்துகொண்டு இரண்டாவது மனைவி என்று ஊர் அறிய வீடு ஏற்படுத்திக் கொடுத்து, வந்து போவீர்களா?’

‘நிச்சயம் உன்னை மறக்க மாட்டேன்.’

அதைத் தவிர அவர் வேறேதும் சொல்லவில்லை.

‘ஒரு நாளைக்கு காவல் செலவு நூறு ஹொான் தரவேண்டும் என்றீர்களே. இன்று பதின்மூன்றாம் நாள். இதுவரை நான் காவலுக்காகக் கொடுக்க வேண்டிய தொகை ஆயிரத்து முன்னூறு ஹொான், சேனாதிபதி ராவ்பகதூர் அவர்களே.’

வாத்சாயனன் புத்தகம் கடைசி அத்தியாயத்தில் இருந்தபோது பகல் நேரத்தில் அவர் வந்தார். மனிதர் நல்ல உற்சாகத்தோடு இருப்பதாக முகம் சொன்னது.

‘நீ என்ன கன்னடத்துப் பச்சைக்கிளியாகி விட்டாயா? ப வராதா உன் சிவந்த நாக்கில்’ என்றார். பொன் என்ற தமிழ்ச் சொல்தான் ஹொான் ஆனதாம். அவர் சொன்னால் சரிதான்.

‘புவிச் செல்லப்பெண்ணே, உன்னோடு நல்ல சேதி பகிரத்தான் வந்தேன்.’

கல்யாணம் செய்துகொள்ள முடிவு செய்து விட்டாரா?

மூச்சை அடக்கி அடுத்த வார்த்தைக்காக நின்றபோது ரத்னா என்றார். ரத்னா நான் வந்தபோது இரண்டு மாதம் கருவுற்றிருந்தாள். இப்போது வைத்தியன் அதை உறுதிப்படுத்தி இருக்கிறான். நான்காம் மாதம் தொடங்கிவிட்டதாக லிகிதம் கொடுத்துவிட்ட ரோந்துப் படகை சற்றுமுன் எதிர்கொண்டோம்.

எனக்கு ஓர் ஏமாற்றமும் இல்லை. அவருடைய சந்தோஷத்தை நானும் கொண்டாடினேன். முந்திரியும் உலர்ந்த திராட்சையும் கல்கண்டும் விஜயசந்திரிகையிலும் ரங்கீலாவிலும் வண்ண மயிலிலும் எல்லோருக்கும் கொடுத்தேன். அவர் வாயிலும் ஒரு பிடி சர்க்கரையை எடுத்துப் போட்டேன்.

'தலைச்சன் பிள்ளையா, ராவ்ஜி?'

'ஆமடி புவனிப் பெண்ணே! மகளோ, மகனோ தெரியாது.'

'கணித்துச் சொன்னால், எனக்கு என்ன பரிசு தருவீர்கள் ராவ்ஜி?' என்று கேட்டேன்.

'எப்போதும் போல் நான்தான்.'

வேறென்ன வேண்டுவேன் பேதை நான்?

ரத்னா என்ற, நான் சந்தித்திருக்காத அந்தப் பெண் மேல் வைத்திருந்த வன்மம் எல்லாம் கரைந்து போக, என் ராமோஜியின் உயிர்த்துளி உருவாக்கிய கருவைச் சுமக்கிறவள் என்று அவள்மேல் பரிவும் பாசமும் அந்தக் கணத்தில் ஏற்பட்டன. அவளை இனி இகழ மாட்டேன். சிறுமைப்படுத்தி வார்த்தை சொல்ல மாட்டேன்.

அடுத்த நாள் பகல் இரண்டு மணிக்கு என்னைத் தயாராக இருக்கும்படி ராமோஜி ஆங்கரே மகராஜ் சொல்லிவிட்டுப் போனார். நாகைப்பட்டிணத்துக்கு அதிகத் தொலைவில் இல்லாத அந்தக் கடல் பரப்பில் வரப்போகும் பெரிய படகு ஒன்றில் நான் வீட்டுக்குப் பயணப்படலாம் என்றும் எடுத்து வந்த பொன், வைரம், நவரத்தினக் கற்கள், கம்பளங்கள் இவற்றை வீடுவரை வந்து கொடுத்துவிட்டுப் போக நான்கு சிப்பாய்கள் கூடவே வருவார்கள் என்றும் தெரிவித்துப் போனார் அவர்.

வண்ணமயில் கப்பல்? அது தாற்காலிகமாக மராட்டி கடற்படைக் கப்பலாக ராமோஜி ஆங்கரே மகாராஜின் கட்டுப்பாட்டில் இருக்கும். அரேபியாவில் இருந்து யார் உரிமையாளர் என்ற தகவல் பெறப்பட்டு கப்பல் அவர்கள் வசம் விடுவிக்கப்படும்.

‘ஓய் ராவ்ஜி, என்னையும் பிடித்து உங்கள் கட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்களேன்’ என்றேன்.

‘அரபுக் கிழவர் உரிமை கோரி வந்தால் கொடுத்துவிடலாமா?’ என்றார் கண் சுழற்றி.

‘கொடுப்பீர், கொடுக்க மாட்டீர்?’

அவரைத் கட்டித் தூக்க முயற்சி செய்து கீழே விழுந்தேன். மறுபடி கிடந்தோம் என் தனியறைத் தரையில்.

‘இன்றைக்கு இறுதித் தழுவலா?’

ராத்திரி வந்த ராமோஜித் திருடனைக் கேட்டேன். அவன் இரக்கமே இல்லாமல் அக நெருப்பை ஊதிப் பெரிதாக்கிப்பற்றி எரிய வைத்தான்.

தப்பு தப்பு என் ராஜாவே. கணக்கு சொல்லுங்கள்.

‘பதிமூன்று நாள், ஒரு நாளைக்கு நூறு ஹொான் என்றபடி ஆயிரத்து முன்னூறு பொன். நாளை நாகை செல்ல சிப்பாய்க் காவலுக்கு இன்னொரு ஐம்பது பொன். ஆயிரத்து முன்னூற்றைம்பது பொன் மொத்தம். எப்போது வாங்கிக்கொள்ளட்டும்?’

அவர் என் முகவாயை நிமிர்த்தி முத்தமிட்டபடி கேட்டார்.

‘காலம் வரும்போது வட்டியும் முதலுமாகக் கிட்டும்’ என்று நான் அவரைக் கீழே கிடத்திக் காதல் செய்தேன் அந்த ராத்திரி.

பகல் ரெண்டு மணிக்கு கப்பலில் இருந்து நாகை செல்லும் படகில் இறங்கியபோது விஜயசந்திரிகாவை பார்த்தேன். மேல் தளத்தில் யாரும் இல்லை. பறந்து வந்த ஒற்றைக் கடல் காகம் தனியாகக் கரைந்துவிட்டுத் திரும்பிப் பறக்க நான் வெறுமையை நோக்கிக் கையாட்டினேன். படகு நகர்ந்தது.

★★★

பதினேழு

# ராமோஜி ஆங்கரே – எலிப்பொறிச் சத்திரம் – 1707

இ ரண்டு ஒட்டகங்கள். ஒரு மட்டக்குதிரை. ஒரு பல்லக்கு. பல்லக்குத் தூக்கிகளாகவும், ஒட்டகம் நடத்திக் கூட்டிப் போகிறவர்களுமாக மொத்தம் பனிரெண்டு காலாட்கள். மட்டக்குதிரையில் ஆரோகணித்து கெச்சலாக ஒரு காரியஸ்தன். கூடவே மூங்கில் கடகங்களைத் தலையில் சுமந்தபடி ஓடும் இரண்டு பேர். ஆக பதினைந்து பேர் சேர்ந்து வர சுவர்ணதுர்க்கத்தில் இருந்து புறப்பட்டது போன ஞாயிற்றுக்கிழமை காலையில், மராட்டிய சமுத்திர சேனையில் படைத் தளபதியான ராமோஜி ஆங்கரே யாத்திரையில் இருக்கிறான்.

மனைவி ரத்னா பாய் ஆங்க்ரேயும் பிரிய மகள் ஸ்வதந்த்ரா ஆங்க்ரேயும் ராமோஜியோடு வருவதாக இருந்தது, ரத்னா பாய்க்கு ஜுரம் கண்டதால் நிகழாமல் போனது. அவள் இன்னும் ஒரு மாதமாவது எந்த அலைச்சலும் இல்லாமல் ஓய்வெடுத்துக்கொள்ளவேண்டும் என்றார் மருத்துவர். ஆக, ராமோஜி மட்டும் யாத்திரை போயாக வேண்டும். ஜோசியர்கள் பரிகாரங்கள் கற்பித்து அவற்றை நிறைவேற்றி ராமோஜி தனியாகப் போய்வர அனுமதித்தார்கள்.

தஞ்சாவூரில் நிசும்பசூதனி காளிமாதா கோவிலில் பிரார்த்தனையும் வழிபாடும் குலதெய்வம் கொண்டாடுதலும், தேவிபட்டிணம் வழியே திருப்புல்லாணியும், ராமேசுவரமும் தொழுது வருவதும் தவிர ராமோஜிக்கு கனோஜி ஆங்கரே சேர்ப்பித்த இன்னொரு காரியமும் உண்டு.

வழியில் இருக்கும் சத்திரங்களிலும் சாவடிகளிலும் தங்கி இருந்து நாட்டுநடப்பையும், ஜனங்களின் பேச்சையும் கவனிக்கவேண்டும். மராட்டா ஆட்சி கலகலத்துப் போய்க்கொண்டிருக்கும் நேரம். சத்ரபதி சிவாஜியின் மகன் சாம்பாஜி போஸ்லே மறைவுக்கு அப்புறம் தொடங்கிய சிவாஜியின் இன்னொரு மகன் ராஜாராம் போஸ்லே ஆட்சி எல்லா சிரமங்களோடும் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் எத்தனை நாள் தாக்குப்பிடிப்பார் என்பது தெரியவில்லை.

ராஜாராம் போன்ஸ்லே ஆட்சி விழுந்தால், தெற்கே கடலோடு நகர்ந்து வந்து நாகைப்பட்டணம் கடந்து தஞ்சாவூரில் மையம் கொள்ள கனோஜி ஆங்கரே நினைப்பது பகிரங்கமானது இல்லை. தஞ்சாவூரில் சத்ரபதி சிவாஜியின் சகோதரரான வெங்கோஜி போன்ஸ்லே அரசாண்டு முடிந்து, அவருடைய மகன் சாஹூஜி போன்ஸ்லே பட்டத்துக்கு வந்திருக்கிறார். நல்ல பெயர் எடுத்திருக்கிறார் என்றும், மதுரை நாயக்கர் அரசு தொல்லை கொடுத்தாலும் நிலையான ஆட்சியைத் தர சாஹூஜி எல்லா முயற்சியும் எடுப்பதாகவும் கேள்விப்பட்டார் கனோஜி. அது எவ்வளவு உண்மை என்று நம்பகமான தகவலாக ராமோஜி வழியே கேட்க நினைக்கிறார் அவர்.

இது தவிரவும், ஔரங்கசீப்பின் முகலாயப் பேரரசு, முதியவரான அவருக்கு அப்புறம் என்ன ஆகும் என்றோ, ஔரங்கசீப் சிறையில் வைத்திருக்கும் சிவாஜியின் பேரன் போஸ்லே சாஹூ விடுவிக்கப் படுவாரா என்றோ யாருக்கும் தெரியவிலை.

பேரரசுகள் நிலை குலையும்போது அங்கங்கே அதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்வதே ஆங்கரே போன்ற திறமைசாலிகள் வகுத்த வாய்க்கால்களாகும் என்பதை ராமோஜி அறிவான். எல்லா துறைமுகங்களிலும் நிச்சயமற்ற தன்மை தென்படும்போது கனோஜி நிலத்துக்கு வந்து ஆட்சி ஏற்படுத்த ராமோஜி போன்ற மற்ற இளம் தளபதிகளை நம்பி இருக்கிறார் என்பது ராமோஜிக்குப் புரியும்.

அவனுடைய ஒரு மனது கனோஜி ஆங்கரேயோடு போகச் சொல்கிறது. மற்றது, பிறந்த தஞ்சைக்குத் திரும்பி சாஹூஜியோடு இருக்கச் சொல்கிறது. இந்தப் பயணம் அதை ஓரளவுக்கு முடிவு செய்யவும் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கிறான் அவன்.

மராட்டிய கடற்படை அதிகாரியாக இல்லாமல் மராட்டிய யாத்திரைக் காரனாக ராமோஜி இந்தப் பயணம் புறப்பட்டிருக்கிறான்.

அரசியல் ஆலோசனைகளை இந்த யாத்திரைக் காலத்தில் கைக்கொள்ள மாட்டார் ராமோஜி என்று ஒற்றர்கள் மூலம் தகவல் பரப்பியதோடு, விட்டோபா கோலி மூலம் யாரார்ரோ அரசியல் பேச வந்ததாகவும் ராமோஜி மறுத்துத் திருப்பி அனுப்பியதாகவும் சொல்ல நாலைந்து பேரையும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ராமோஜியின் உடுப்பும் அதிகார மிடுக்கு இல்லாமல் கைத்தறியில் நெய்த பருத்தித் துணி வேஷ்டியும், முகலாய பாணி குப்பாயமுமாக இருந்தது.

தலையில் அலங்காரங்களோடு வீற்றிருந்த வண்ணத் தலைப்பாகை போய், சாதாரணக் கைத்தறித் துணிக் குல்லாயானது தலையலங்காரம். கடலோடும்போது அணிந்த கெட்டியான தோல் பாத அணிகளின் இடத்தில் மர ஜோடுகளும், மெல்லிய தோல் செருப்புகளும் அணி செய்தன. கையில் குரல் வீசிப் பாடும்போது முழக்கக் கைத்தாளமும் தானே ஏறியது.

பாடிப் பரவி ஆண்டவனைத் துதித்துப் போகும் யாத்ரிகன் ராமோஜி. கனோஜி ஆங்கரே ஏற்பாடு செய்த ஒற்றர் குழு இவர்களுக்கு ஐந்து கல் இடைவெளிவிட்டுத் தொடர்கிறது.

ராமோஜி பாதை மாறிவிடத் தீர்மானித்து தஞ்சை மராட்டிய ஆட்சியை ஆதரிக்க முனைந்தால் அந்தத் தகவல் மராட்டியப் பேரரசின் கடற்படைப் பெருந்தலைவன் கனோஜி ஆங்கரேவுக்கு உடனடியாக ஒற்றர்களால் அறிவிக்கப்படும். எல்லோருடைய எல்லாத் திட்டங்களும் மாறுதலுக்கு உட்பட்டவை, எப்போதும்.

இரண்டு ஆட்சிகளுமே மராத்திய அரசின் இரு வடிவங்கள்தான் என்பதால் யாரும் யாரையும் எதிரிகளாகக் கருத இடமில்லை. எனினும் இந்தக் காலகட்டத்தில் ராமோஜி போன்ற இளைய படைத் தலைவர்கள் மராத்தியப் பேரரசோடு இல்லாமல் தெற்கே தஞ்சைக்கு குடிபெயர்வது சிவாஜி ஸ்தாபித்த அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்தலாம்.

ஆறு நாளில் ஸ்வர்ணதுர்க்கத்தில் இருந்து திட்டமிட்டபடி மந்திராலயம் வந்தாகிவிட்டது. அடுத்து, காரைக்காலில் தங்கிப் போகவேண்டும். ராமோஜி காரைக்கால் போவதை எதிர்பார்த்திருக்கிறான்.

தாசிப்பெண் புவனலோசனி அவருக்கு நெருங்கியணைத்த நெருப்புக் கனலாக உடலையும் உள்ளத்தையும் ஒரு பத்து நாள் மீட்டி ஏதும் சொல்லாமல் மறைந்து போனதை அவன் ஆயுள் இருக்கும்வரை மறக்க மாட்டான்.

புவி என்ற புவனலோசனியைக் கல்யாணம் செய்துகொள்வதாக அவளுக்கு வாக்குறுதி கொடுத்ததாக அவன் நினைவில் இல்லை. வந்தால் பேருக்குத் தாலி கட்டி, ஒரு வைப்பாட்டியாக வைத்திருப்பான். ரத்னா பாய் இதை எல்லாம் ஒரு விஷயமாகக் கருதுவது எப்போதோ நின்று போயிருக்கிறது.

ஒரு லிகிதம் எழுதியிருந்தால் அவளுக்குத் தன்மீது இருந்தது இன்னும் வடியாத காதலும் மோகமும் என்று உறுதியாகி இருக்கும். தாசிப்பெண்

தாசிப்பெண்தானே. காரைக்கால் போனதும் கப்பல் களியாட்ட தினங்களை மறந்து போனாளோ.

பல்லக்கோடு கூட நடந்துகொண்டிருந்த ராமோஜி பின்னால் திரும்பி ஒரு குவளை தண்ணீர் கேட்டான். குளிர்ந்த நீராக பல்லக்கின் முன்பகுதியில் மண்பானைக்கு மேல் ஈரமான கனத்த துணி கட்டி வெட்டிவேரும் ஏலப் பொடியும் சீரகப் பொடியும் கலந்து சற்றே பழுப்பு நிறத்தில் இருந்த தண்ணீரை ஓடி வந்து ஒரு சிப்பந்தி கொடுத்தான்.

தண்ணீரை நின்றும் நடந்தும் குடிக்கக்கூடாது என்று எந்தக் காலத்திலோ தஞ்சையில் திண்ணைப் பள்ளியில் சொல்லிக் கொடுத்த சீலம் நினைவில் எப்போதும் இருப்பதால், அவன் நின்றான். மடக்கி வைத்திருந்த மர நாற்காலியைச் சுமந்து ஓடும் ஒருத்தன் வந்து மரியாதையாக நாற்காலியை மண்ணில் இட, இன்னொருவன் குளிரக் குளிரத் தாழங்குடை பிடித்தான்.

ஓஓஓ என்று முண்டாசை அவிழ்த்து வியர்வையைத் துடைத்தபடி பல்லக்குத் தூக்கிகள் சத்தமிட, பல்லக்குகள் தரையிறக்கப்பட்டு தாங்கிகளில் தரைக்கு இரண்டு அடி மேலே இருக்கும்படி இருத்தப் பட்டன.

பக்கத்து மாந்தோப்பில் தோப்புக்காரர் அனுமதியோடு பகல் உணவு சமைக்கத் தீமூட்டினார்கள். ராமேஸ்வரம் யாத்திரையாக மேற்கிலிருந்து வரும் யாத்திரிகர்கள் என்று தெரியவர, மாந்தோப்புக்காரரும், பக்கத்து தென்னந்தோப்பு, அருகே காய்கறித் தோட்டம், சுற்றிப் பரந்த நெல்வயல் இப்படி வளமான நிலங்களின் உடமையாளர்களும், அங்கே எல்லாம் உழைப்பவர்களும் இவர்களை கும்பிட்டு விழுந்து நல்ல வார்த்தைகளைப் பாட்டாகக் கேட்க சிரத்தை காட்டினார்கள்.

பல்லக்குத் தூக்கிகளில் நாலு பேர் நன்றாக விட்டல பஜனை செய்யக் கூடியவர்கள். அவர்கள் இருவர் இருவராக பக்திமயமான அபங்குகளை குரலெடுத்து, கைத்தாளம் தட்டிப் பாட, மொழி தெரியா விட்டாலும் ஊரே கூடப்பாடியது. ராமோஜியும் ரசித்தபடி அரிசி வெந்ததையும், சாம்பார் கொதித்துப் பொங்குவதையும் மேற்பார்வை செய்து சுற்றி வந்துகொண்டிருந்தான்.

‘எஜமான் அதெல்லாம் செய்யவேண்டாம், இருந்து கட்டளை பிறப்பித்தாலே போதுமானது’ என்று சகயாத்ரீகர்கள் முறையிட்டாலும் அவன் அதையெல்லாம் கேட்கும் நிலையில் இல்லை.

தோப்புக்கு அடுத்த கிராமத்துப் பெண்கள் சுடச்சுடச் சமைத்த சோறும் புளிக்குழம்பும் எடுத்து வர, கூடவந்த சிறுவர்கள் கவிச்சி கவிச்சி கவிச்சி என்று விசாரித்தபடி நின்றார்கள்.

அது என்ன மாதிரியான சமாசாரம் என்று புரியாமல் வந்தவர்கள் நிற்க, சுற்றி வரும்போது காதில் விழுந்த ராமோஜி, 'கவிச்சிக்கு என்ன போச்சு, மாடு தவிர சகலமும் சாப்பிடப்படும்' என்று நல்ல தமிழில் சொல்ல அந்தப் பெண்களும் சிறுவர்களும் ஓவென்று ஆரவாரம் செய்தார்கள்.

அரை மணி நேரத்தில் அந்த இடம் முழுக்க கவிச்சி வாடை வீசியது. விரதம் இருக்கிறபடியால் ராமோஜிக்கும், அந்த கூட்டத்தில் இரண்டு பிராமணர்களுக்கும் மாமிசம் விலக்கி சர்வ ஜாக்கிரதையாக மற்ற உணவு சமைத்ததும், செய்து எடுத்து வந்ததுமாக போதும் போதும் என்று கை உயர்த்தும்வரையும் வந்துகொண்டே இருந்தது.

தமிழ்ப் பிரதேச விருந்து உபசாரத்துக்கு வேறே எந்த ராஜ்யத்திலும் ஒப்பில்லை என்று ராமோஜி சொன்னபோது அந்த யாத்திரீகர் குழு ஆரவாரம் செய்தது.

பெரிய மரக் குடுவைகளில் கள் நிறைத்துக்கொண்டுவந்து கொடுத்தார்கள். அதை பத்திரமாக ராமோஜியின் நேர்காவலுக்கு உட்படுத்தி நன்றி சொல்லிப் பிரயாணத்தைத் தொடர்ந்தது அந்த யாத்திரீகர் குழு.

காரைக்கால் கால் காதம் என்று கல்லில் கொத்தி வைத்த சுமைதாங்கி ஒன்று கண்ணில் பட்டது. சுமைதாங்கிகளில், தலைச்சுமைக்காரர்கள் சுமை இறக்கி ஓய்வுகொள்வது இந்தமாதிரி யாத்திரைகளில் அனுமதிக்கப்பட்டது. அங்கே சுமை இறக்கி நிற்க யார் அனுமதியும் அவர்கள் வாங்க வேண்டியதில்லை.

நாகேந்து என்ற சுமைக்காரன் ராமோஜியைத் தயக்கத்தோடு பார்த்தான். இது அனுமதி சம்பந்தமான ஒன்றில்லை என்று தெரியும் ராமோஜுக்கு.

'என்ன,சுருட்டு வேணுமா?' என்று அவன் கண்ணைக் குறுக்கி பகடி செய்து பார்த்தபோது, 'ராஜா சாகேப், நீங்க நினைச்சால் தப்பாகுமா என்ன' என்றான் உடலே குழைந்து வளைந்து நின்ற நாகேந்து.

'புதுச் சுருட்டு தரட்டா' என்று கேட்டான் ராமோஜி. 'அய்யோ அது எதுக்கு? நீங்க பிடிச்சு பாதியிலே அமர்த்தி வச்சது போதும்' என்று அவசரமாகச் சொன்னான் அவன்.

காலே அரைக்கால் மீதி உறையூர் சுருட்டு மீதமிருக்கும் புகையிலைச் சுருட்டை அவனுக்கு ஈந்தான் ராமோஜி. ஓரமாகப்போய் பற்ற வைத்து ஓரமாகவே உட்கார்ந்து புகை விட்டான் அவன்.

ராமோஜி ஒரு புதுச் சுருட்டை உறையிலிருந்து எடுத்துப் பற்றவைக்க சிக்கிமுக்கிக் கல் தேட, மட்டக் குதிரையில் வந்த காரியஸ்தன் ஓடிப்போய் எடுத்துவந்து தந்தான்.

'ஒரு காதம்கிறதை வெள்ளைக்காரன் மைல்னு சொல்றான்... ரெண்டும் ஒண்ணுதான்.'

நாகேந்து குரல் பலமாக ஒலிக்க, போனால் போகட்டும் என்று ராமோஜி எல்லோருக்கு அனுமதித்த ஒரு மடக்கு கள். அதற்கு மேல் வழியில் வைத்துக் குடித்து போதையேறித் தள்ளாட அவன் அனுமதிக்க மாட்டான்.

புகையும் சுருட்டோடு பல்லக்குத் தூக்கிகளின் பேச்சில் புகுந்து கொண்டான் ராமோஜி. அவர்களோடும் அந்நியோன்யம் வேண்டி இருக்கிறது. பேஷ்வாவிடம் வேலை பார்த்துவிட்டு சொந்த ஊரென்று சுவர்ணதுர்க்கம் அருகே துறைமுக நகருக்கு வந்த நாகேந்து, பேஷ்வாபற்றி வேறே யாருக்கும் தெரியாத சமாசாரம் அவ்வப்போது ராமோஜிக்குத் தெரிவித்திருக்கிறான். இன்னும் சொல்ல அவனிடம் உண்டு என்று ராமோஜி அறிவான்.

'நாகேந்து, மைலும் தூரத்தை அளக்க ஓர் அளவைதான். ஆனா, ஒரு மைல் ஒரு காதம் இல்லே. ஒரு காதம் என்பது பதினாலு மைல் சரியா நூல் பிடிச்சா பதிமூணே கால் மைலா இருக்கலாம்... தமிழ்ப் பிரதேசத்துலே மைலை கல் அப்படீன்னு சொல்றாங்க... வெள்ளைக்காரன் புழங்கி வரதாலே, மைல் தூரத்தை அளந்து கல் நாட்டி வைக்கறதாலே, ரெண்டு கல் தூரம், பத்து கல் தூரம் எல்லாம் பேச்சுலே, எழுதி வைக்கறதுலே வந்துட்டிருக்கு...'

பல்லக்கோடு நடந்தும் ஓடியும் வந்தபடி ராமோஜி சொன்னான்.

'மகராஜ் எதுக்கு உடம்பை வருத்தி பல்லக்கோடு ஓடி வரணும்? நீங்க ஏறி வந்ததைவிட கூடவே ஓடி வர்றதுதான் அதிகம்...' உரிமையோடு கோபித்துக்கொண்டான் நாகேந்து.

'சரி, நீ வேணும்னா பல்லக்கு உள்ளே உட்காரு... தூக்கிக்கிட்டு ஓடி வரேன்' என்றான் ராமோஜி.

‘அய்யோ அய்யோ’ என்று கன்னத்தில் போட்டு பாவம் விலக்கிக் கொண்டு நாகேந்து சொன்னான் –

‘மகாராஜா, விளையாட்டுக்குக்கூட அப்படி எல்லாம் சொல்லாதீங்க... விட்டலன் கிருபையிலே நீங்க இன்னும் பல வருஷம் பல்லக்கிலே யும், குதிரை, யானையிலேயும், சமுத்திரத்துலே கப்பல், படகிலேயும் விஜயத்தோடு பவனி வரணும்... ஜெய் விட்டல்...’

எல்லோரும் ஜெய் ஜெய் விட்டல் சொன்னார்கள்.

நல்ல வேகமாக ஓடி வந்திருக்கிறார்கள் யாத்திரா கோஷ்டி முழுவதும். காரைக்கால் சத்திரம் ஒரு கல் என்று அடுத்த சுமைதாங்கி தகவல் சொல்ல, நேரே நேரே என்று சுமைதாங்கியைக் கடந்து சுமட்டுக்காரர்கள் ஓடினார்கள்.

அவங்க அளவை வேறேயா இருக்கே... இன்னொரு பல்லக்குத் தூக்கி மரியாதையோடு புக, சூரியன் அஸ்தமித்து அடிவானத்தில் சிவப்புப் பூசிய தருணத்தில் மேற்கிலிருந்தும் தெற்கில் இருந்தும் தொடர்ந்து இதமான கடற்காற்று வீசிக்கொண்டிருந்தது.

ஒரு மைல்தானாம் பாக்கி மகாராஜா! நாகேந்து புதியதாக அறிந்ததைப் பயன்படுத்தும் சந்தோஷத்தோடு பல்லக்குக்கு அருகே ஓடியபடி சொன்னான்.

பல்லக்குத் திரையை ஒதுக்கியபடி உள்ளே சிறிது கண்ணயர்ந்திருந்த ராமோஜி கழுத்தில் மாட்டியிருந்த தூரதரிசினி வழியாக முன்னால் பார்க்க இடப்புறம் ஒரு கல் தூரத்தில் நேர்த்தியான கல் கட்டுமானமும் வேலைப்பாடும் அருகில் என்பதுபோல் தெரிந்திட ராமோஜி திருப்தி தெரிவிக்கும் வகையில் தலையை அசைத்தான்.

தாசிப்பெண் உழைத்திருக்கிறாள். அவள் ஏற்படுத்தப் போகும் சத்திரத்தைப்பற்றி, போகம் மீறாமல் இருக்க கலவியின் இடையே பிரஸ்தாபித்திருக்கிறாள். இதோ அவள் சொன்ன நான்கு வாசல்படிகள் கல்லில் அமைத்து காரை இடையிட்டு. முன்வரிசையில் இரு பெரும் தூண்கள் புவியின் தொடைகள்போல் அடர்ந்து விரிந்து அழகாக நிற்பது கண்ணை நிறைத்தது ராமோஜிக்கு. பின்வரிசையில் நான்கு துணைத் தூண்கள் அழகு சேர்த்தன. மண்டப முகப்பில் இரண்டு பக்கமும்

சேர்ந்தெழுந்து நிற்கும் யாளிகளும்கூட அவளுடைய திண்ணென்ற மார்பகத்தை நினைவுபடுத்தின.

புவிப்பெண்ணே, ஏன் தொடர்புவேண்டாம் என்று துண்டித்து விட்டாய்? ராமோஜிபோய் ஒரு சோமோஜி கிடைத்தானா இங்கே?

'இது எலிப்பொறிச் சத்திரம்' என்று காரியஸ்தன் வணங்கிச் சொன்னான். ராமோஜியின் புன்சிரிப்பு சந்தோஷமாக ஒரு நிமிடம் விரிந்தது.

யாத்திரை கோஷ்டி உள்ளே நுழையும்போது சத்திரத்தின் முன்வாசலில் மாலை மரியாதைகளும் பன்னீர்ச் செம்புமாக இரண்டு அதிகாரிகளும், ஆட்டக்காரிகளும், மிழவு வாசிக்கிறவர்களும் நிற்பதை ராமோஜி கண்டான். 'அட, அடா, நாம் வரும் நேரத்தில் யாரோ உள்ளூர்ப் பிரமுகரோ, வடக்கில் இருந்து தனவந்தரோ ராமேஸ்வரம் யாத்திரையாக இங்கே ராத்தங்க வருகிறார்கள் போலிருக்கே' – என்று சிந்தனை ஓட்டம் அவனுக்குள். வேறு சத்திரம் தேடிப் போய்விடலாமா என்றுகூடத் தோன்றியது. ராத்திரி இருட்ட ஆரம்பித்த இந்த நேரத்தில் வேறு இடம் தேடிப் போவது உசிதமில்லைதான்.

பல்லக்கு தரை இறக்க சமிக்ஞை செய்தான் ராமோஜி. வெளியே வந்தபோது மரியாதையோடு வணங்கியபடி நின்ற குழுவினரை பதிலுக்கு வணங்கினான் அவன். 'சுவர்ணதுர்க்கத்திலிருந்து யாத்திரை வரும் அடியார் கோஷ்டி இது. வருடா வருடம் விட்டல மகாராஜ் தரிசனத்துக்கு பண்டரிபுரம் கால்நடையாகப் போகிற அடியார்கள் நாங்கள். இந்த வருஷம் அமைதியும் சுபிட்சமும் ஆனந்தமும் பாதுகாப்பும் இங்கே நிலவுவதால் தெற்குப் பகுதிக்கு சேது நோக்கிப் பயணம் மேற்கொண்டோம்.'

அவன் பேசி நிறுத்த, கையில் பிடித்திருந்த ரோஜாப்பூ மாலையைத் தோளில் போட்டவர், 'நான் சத்திரத்தின் பேஷ்கார். உங்களுக்கு மாலை மரியாதை அளித்து வரவேற்க அரண்மனை உத்தரவு வந்திருக்கிறது' என்றார்.

'தவறாக அடையாளம் கண்டிருப்பீர்கள். நாங்கள் எளிய யாசகர்கள். இந்த மாலையும் பரிவட்டமும் பட்டும் பெறத் தகுதியானவர்கள் அல்லர் நாங்கள்' என்றான்.

'நிச்சயம் உங்களுக்கு எல்லாத் தகுதியும் இருக்கிறது சமுத்திர சேனாதிபதி ராமோஜி ஆங்க்ரே ராவ்பஹதூர் மகராஜ்.'

பேஷ்காரை அடுத்து நின்ற கம்பீரமானவர் கை கூப்பி வணங்கிச் சொன்னார். இவரை எங்கோ பார்த்த நினைவு ராமோஜிக்கு. பதிலுக்குக் கை கூப்பி வணங்கியபோது நினைவின் அறைகளை ஒவ்வொன்றாக அடுத்தடுத்துத் திறந்து தேட, சட்டென்று மனதில் பட்டது. இது சத்ரபதி சிவாஜி மகாராஜின் முகச்சாயல். அவர் எங்கே இங்கே? எனில் அவருடைய சகோதரர் வெங்கோஜிராவ் என்ற ஈகோஜிராவ் முந்தைய தஞ்சை மராத்தி மன்னர். இப்போது அவருடைய மூத்த புதல்வர் சாஹூஜி போன்ஸ்லே அரசர். அவரா? அவர்தான் இவர்.

‘மாமன்னர் அவர்களே, இந்த எளியோன் ராமோஜி உங்களை வணங்குகிறான்’ என்று அடிபணிந்து வணங்க மண்டியிட்டான் ராமோஜி.

மன்னர் சாஹூஜி போஸ்லே குனிந்து ராமோஜியைத் தடுத்து நிறுத்தி அணைத்துக்கொண்டார்.

‘மகாராஜா சமூகம் இந்த எளியோனை எலிப்பொறி ராமோஜி ராவை எப்படி பொறி வைத்துப் பிடித்தது?’

‘இது எலி இல்லை, சிங்கமாச்சே. பிறந்த இடத்துக்குத் திரும்பி வரும் சிங்கராஜனுக்கு எங்களின் எளிய மரியாதை இது. ஏற்றுக்கொள்ளும்’ என்றார் அரசர் சாஹூஜி போன்ஸ்லே.

ராமோஜி ஸ்வர்ணதுர்க்கத்தில் இருந்து புறப்பட்டபோதே இந்தப் பயணம்பற்றிய முழுத் தகவலும் வந்தாகிவிட்டது என்றார் மகராஜா. அந்த நேரத்தில் யாத்திரைபற்றித் தெரிந்தவர்கள் கனோஜி ஆங்கரேயும், ராமோஜியும், விட்டோபாவும்தான்.

விட்டோபாவா தகவல் கசிய வைத்தது? தஞ்சை மன்னருக்கு அவர் எப்போது வேண்டியவரானார்?

கடலில் தொடர்ந்து இருந்து தரையில் நடப்பதை அறியாமல் இருந்து விட்டேனா என்று ராமோஜியின் மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

தஞ்சையில் வரவேற்பும், அன்பும் மரியாதையும் நெஞ்சை நிறைக்க, சொந்த ஊரோடு இருந்துவிட்டால் என்ன என்று மனம் கேட்க ஆரம்பித்து விட்டது. கொஞ்சம் பொறு என அடக்கி வைத்தான்.

கனோஜி ஆங்கரேயின் ஒற்றர் படைக்கும் அவர்களிடமிருந்து கனோஜிக்கும் இந்நேரம் செய்தி போய்க்கொண்டிருக்கலாம். திரும்பும்போது ராமோஜி

அவன் வேடமிட்டதைப்போல் வெறும் யாத்திரைக்காரனாக மட்டும் இருப்பானோ?

இங்கு வர முடிவெடுத்தால், தஞ்சைக்கு ரத்னாவையும், மகள் ஸ்வதந்திராவையும் இடம் மாற்ற எவ்வளவு நாள் பிடிக்கும்? சாஹுஜி மன்னர் பரிவோடு இருப்பாரா இனி என்றும்? மராத்திய மண்ணில் மராத்திய ஆட்சியைவிட தமிழ் பேசும் தஞ்சையில் மராத்திய ஆட்சி ஆண்டாண்டாகத் தொடருமா?

போன்ஸ்லே மகாராஜா உள்ளே அழைத்துப்போய் தனியறையில் ராமோஜிக்கு பழரசம் கொடுத்து ஷேமலாபம் விசாரித்தபிறகு சுருக்கமாக ராமோஜியின் கடற்படை நடவடிக்கைகள்பற்றிக் கேட்டதை உறுதிப்படுத்திக்கொண்டார்.

அப்படியே அரசர் ராஜாராம் போஸ்லே மற்றும் கனோஜி ஆங்கரே பற்றியும் பேச்சு நீண்டது. கனோஜி ஆங்கரே அகண்ட பாரதத்துக்கு சொந்தமான மகாவீரன் என்று இரண்டு மூன்றுமுறை குறிப்பிட்டார் சாஹுஜி போன்ஸ்லே அரசர்.

முகலாய மாமன்னர் ஔரங்கசீப் முதுமையினாலும் நோயினாலும் வாழ்க்கையின் அந்தத்தை நோக்கிச் செல்வதாக நேற்றுச் செய்தி வந்திருப்பதைக் குறிப்பிட்டார். அவர் நீண்ட காலமாகச் சிறைப் பிடித்து வைத்திருக்கும் சத்ரபதி சிவாஜி மகாராஜின் பேரர் சாஹு மகராஜ் ஔரங்கசீப் மறைவுக்குப் பிறகு சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டால், இந்துஸ்தான அரசியல் சமன்பாட்டு நிலைமை மாறலாம். எல்லா நிகழ்வுகளையும், ஊகங்களையும். எதிர்பார்ப்புகளையும் குறித்துத் தெளிவாகப் பேசினார் தஞ்சை மன்னர்.

‘நீங்கள் சொந்த ஊரைவிட்டு, அது என்னதான் இந்துஸ்தானத்தின் இன்னொரு பகுதி மண்ணாக இருந்தாலும், கடலாக இருந்தாலும், அங்கே புறப்பட்டுப்போய் யாரோடோ கோபித்துக்கொண்டதுபோல் முகம் திருப்பி உட்காரலாமா? கனோஜியோடு இருந்தால் என்ன, தஞ்சை வரக்கூடாதா? நீங்கள் எங்களுக்கெல்லாம் ராமோஜி ஆங்கரே இல்லை, ராமோஜி பத்மனாப ராவ்ஜிதான்.’ பேச்சுக்கு நடுவே குறிப்பிட்டார் அவர்.

ராமோஜி இருகை குவித்து வணங்கினான்.

‘இது உங்கள் நண்பர்களின் ராஜ்ஜியம். உங்களைப்போல தஞ்சாவூர் மண்ணின் புதல்வர்களுடைய அரசு. தமிழும் மராட்டியும் தழைக்கும்

சூழ்நிலை இது. இசையும் காவியமும் நடனமும் செழிக்கும் காலம்... தஞ்சைக்கு வாருங்கள் நண்பரே.’

சாஹூஜி மன்னரின் குரல் நேசத்தோடும், பரிவோடும் ஒலித்தது.

‘நாளை சந்திக்கிறேன்... உங்களுக்கான உணவு தயாராக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏழைகள் நாங்கள் எங்களால் முடிந்த அளவு...’ அவன் கைகளைப்பற்றியபடி சொன்னார் அரசர் சாஹூஜி போன்ஸ்லே.

இலக்கியத்திலும் இசையிலும் தோய்ந்த அந்த நல்ல மனம் கருணையும் அன்பும் குடிமக்களிடம் கொண்டது. தெருவுக்கு இறங்கி வந்து நடக்கும் ஆட்சி இது. கோட்டை கொத்தளங்களில் அமர்ந்து கையசைத்து ஆணையிடுவதில்லை.

ராமோஜி சகல மரியாதையோடு மனதில் இருந்து இதையெல்லாம் வெளிப்படுத்தி போன்ஸ்லே அரசரை வணங்கி வழியனுப்பினான்.

காலை விடிந்ததும் இங்கிருந்து புறப்பட்டு நாகப்பட்டிணம் அடைந்து அங்கிருந்து திருமையம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருப்புல்லாணி வழியே ராமேஸ்வரம் போக ஏற்பாடு. அது ஓரிருநாள் சுணங்கக் கூடும். என்ன செய்ய?

ராமோஜியின் அடுத்து வரும் எதிர்காலமும், வரக்கூடிய வருடங்களின் போக்கும் தீர்மானிக்கப்படும் தினங்களாக இன்றும் நாளையும் இந்த யாத்திரை முழுவதுமே இருக்கலாம். நீரோட்டத்தோடு போக வேண்டும். எங்கே சாட வேணும், எங்கே ஒதுங்க வேணும், எங்கே திரும்ப வேணும் என்பதெல்லாம் தானே தீர்மானமாகும். ரத்னாவிடம் என்ன சொல்லலாம்? உறங்கி இருப்பாள்.

நான் விழித்திருக்கிறேன்.

மனதுக்குள் புவனலோசனி கண்கள் விரியச் சொன்னாள்.

‘உங்களுக்கு உலுப்பை மானியம் தரவேண்டும் என்று நியதி உள்ளது. எல்லா பெரிய மனுஷர்களுக்கும் அப்படித்தான். சமூகம் கட்டளையிட்டால் உங்கள் காரியஸ்தர் வசம் ஒப்படைத்துவிடுவேன்’, என்றார் பேஷ்கார் அறை வாசலில் நின்று. ராமோஜிக்கு அது என்ன மாதிரி விஷயம் என புரியவில்லை.

‘சத்திரத்துக்கு வரும் பெரிய மனுஷர்களும் யாத்திரை கோஷ்டியும் இங்கே தங்கியிருக்கும் மாணவர்களுக்காக சமைக்கப்படும் உணவையே உண்ணலாம். அல்லது அரிசி, புளி, உப்பு, எண்ணெய் என்று எல்லாம் உலுப்பை மானியமாகப் பெற்று அவர்களே சமைத்துக்கொள்ளலாம். உங்களுக்கு ராஜபோஜனம் வர ஏற்பாடாகி இருப்பதால் மானியத்தை கொடுத்துவிடவேண்டும் என்று நியதி. நீங்கள் சத்திரத்தின் போஷகருமல்லவா? மேலும் கொஞ்சம் நேரம் ஒதுக்கி சத்திர வரவு செலவுக் கணக்கையும் அங்கீகரித்தால் மிகுந்த நன்றி பாராட்டுவேன்’ என்றார் அவர்.

நான் எப்போது போஷகர் ஆனேன்? ராமோஜி ஆச்சரியப்பட்டான்.

அவர் சிறிய அறை ஒன்றுக்குள் காடா விளக்கோடுபோய் ஒரு காகிதத்தை எடுத்துவந்து கொடுத்தார். தாசிப்பெண் புவனலோசனி என்று தொடங்கிய ஆவணம் அது.

ராமோஜி அதைப் படிக்கலானான்.

‘காரைக்கால் பட்டணத்தைச் சேர்ந்த தாசிப்பெண் புவனலோசனி ஆகிய நான், நகர் எல்லையில் கைலாசநாதர் கோவிலுக்கு மேற்கே நான்கு கல் தூரத்தில் ஸ்தாபித்த இந்த எலிப்பொறிச் சத்திரத்தில் நடத்த வேண்டிய நற்செயல்களுக்காக மஹாவீரன் ராமோஜி அங்காரே கட்டளை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் அன்றாட நடைமுறை விஷயங்கள் –

‘கலாசாலையில் பயிலும், பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கிய பதிமூன்று மாணவர்களுக்கு குறைந்த பட்சம் ஒரு வருடமும் அதிக பட்சம் மூன்று வருடமும் தராதரம் நோக்கி எலிப்பொறிச் சத்திரத்தில் இலவசமாக தங்கியிருக்க இடமும், உணவும் தரவேண்டியது.

‘இவர்களுக்கு வாராவாரம் ராத்திரியில் விளக்கு கொளுத்தி படிக்க, பித்தளை விளக்கும், திரியும், ஒரு சேர் இலுப்பை எண்ணெயும் தரவேண்டியது.

‘வாராவாரம் எண்ணெய்க் குளிக்காக அரைக்கால் சேர் நல்லெண்ணெயும், ரெண்டு துட்டு சீயக்காய்ப்பொடியும் குளித்து வந்தபிறகு சுக்கும் வெல்லமும் தரவேண்டியது.

‘மாதம் ஒருமுறை வேப்பிலைக் கொழுந்து வெறும் வயிற்றில் பூச்சித் தொல்லை இல்லாமலிருக்கத் தரவேண்டியது.

‘காலையில் பழையதும், பச்சை மிளகாயும், வெங்காயமும் தர வேண்டியது. பகலில் அரிசிச் சாதமும், காய்கறிப் பொரியலும், சாம்பாரும், இஞ்சித் துவையலும், மாங்காய் ஊறுகாயும், புளிக்காத தயிரும் தரவேண்டியது. ராத்திரி உணவாக அரிசிச் சாதமும், காய்கறிக் கூட்டும், கடைந்த பருப்புச் சாறும், மோரும் தரவேண்டியது. ராத்திரி ஆளுக்கொரு வாழைப்பழமும் தரவேண்டியது. ஞாயிற்றுக்கிழமை காலை நேரம் வெண்பொங்கல், இட்லி, தோசை போன்ற சிற்றுண்டிகள் தரவேண்டியது.

‘இவர்கள் தவிர தினம் நூறு ஏழைப்பட்ட மாணவர்களுக்கு பகல் உணவு கொடுக்கவேண்டியது. தினம் ராமேஸ்வரம் யாத்திரையாக வரும் வழிப்போக்கர்களுக்கு அவர்கள் யார் எங்கிருந்து வருகிறார்கள் என்ற விவரம் பதிந்து ஒரு பகலுக்கு உட்கார வைத்து ஆளுக்கு ஒரு பட்டை சோறும், குழம்பும், காய்கறிக் கூட்டும், மோரும் தர வேண்டியது. அவர்களுக்கு ஒரு ராத்திரிக்கு அரிசிக் கஞ்சியோ மோர் சோறோ பசி போக்கத் தர வேண்டியது. அவர்கள் ஓர் இரவு மட்டும் இங்கே உறங்கிப் போக இடமொழித்துத் தரவேண்டியது.

மேலே விவரிக்கப்பட்ட செலவினங்களுக்காக வருடம் ஆயிரத்து நூற்று எழுபது பொன் ராமோஜி ஆங்கரே கட்டளை மானியமாக சத்திர நிர்வாகம் பெற வேண்டியது.

‘சத்திரத்தின் ஒவ்வொரு அறையிலும் ஓர் எலிப்பொறி வைத்து அது காரிய சாதகமாக இருக்கிறதா என்று மாதம் ஒரு முறையாவது சோதித்துப் பார்க்க வேண்டியது. சேர்ந்து இருந்து சாப்பிடும் இடத்திலும் சமையல்கட்டிலும் எலிப்பொறிகள் வைக்க வேண்டியது. எலித் தொல்லை இல்லாமல் இருந்தாலும் எலிப்பொறிகள் வைத்திருக்கவேண்டியது அவசியம். வருடத்துக்கு மொத்தமாக எலிப்பொறிகள் வாங்க, எலி பிடிக்கிறவர்களுக்குக் கூலி தர என்று ஐம்பது பொன் தரப்படும்.

‘பதிமூன்று அறைகளில் தங்கும் மாணவர்களுக்கு வருடம் ஆளுக்கு பத்து பொன்னாக நூற்று முப்பது பொன் கட்டளை மானியம் தரவேண்டியது. இந்த பதிமூன்று அறை – பதிமூன்று மாணவர்கள் – மொத்த மானியமாக ஆயிரத்து முன்னூறு பொன் கணக்கில் தொகை குறைத்து எந்த மாற்றமும் வரக்கூடாது. எலிப்பொறி மானியமும் சேர்த்து ஆயிரத்து முன்னூற்றைம்பது பொன் ராமோஜி கட்டளைக்கான மொத்த வருட மானியமாகும்...’

ராமோஜிக்குப் பழக்கமான பதிமூன்று தினம் – பாதுகாப்பு கூலி தினம் நூறு பொன் –மொத்தம் ஆயிரத்து முன்னூறு பொன் காவல் பணம் கணக்கு.

கூடவே, நாகப்பட்டணத்தில் படகு மூலம் கொண்டுபோய் விட ஐம்பது பொன் கட்டணம். ஆக மொத்தம் ஆயிரத்து முன்னூற்று ஐம்பது பொன். அவன் புவனலோசனியிடம் விளையாட்டாகச் சொன்னதுதான் இந்தத் தொகை. எப்படியும் கொடுத்து விடுவதாகச் சொன்னாள். எலிப்பொறி சத்திரத்தில் மஹாவீர் ராமோஜி அங்கரே கட்டளை என்று அவன் பெயரை காலகாலத்துக்கு, சத்திரம் இருக்கும்வரை சொல்ல ஏற்பாடு செய்துவிட்டுப் போயிருக்கிறாள்.

புவி, என் கண்ணே, எங்கே போனாயடி? கணக்கு எல்லாம் சரிதான். இன்னும் நமக்கு வரவு செலவு முடியவில்லை பெண்ணே...

கண்களில் நீர் திரையிட்டிருக்க, பேஷ்காரிடம் கேட்டான் ராமோஜி – 'தாசிப்பெண் எங்கே போனாள்?'

பேஷ்கார் தலை குனிந்து இருந்தார். பின் தயங்கித் தயங்கிச் சொன்னார் – 'யாரோ அவள் மேல் குறளி வேலை ஏவி அல்லது செய்வினை செய்து, அவள் உடம்பெல்லாம் கொப்பளம் எழுந்து கடலில் விழுந்து இறந்து போனாள் பிரபோ. அது இந்த நாளுக்கு சரியாக ரெண்டு வருடம் முன்பு. அவள் கணக்குகளை சரிபார்க்க ராவ்ஜி வருவார் என்று இங்கே மாதம் மூன்று நாள் நீங்கலாக தினம் வந்து காத்திருந்தாள் பிரபோ.'

ராமோஜி ஆங்கரே யாத்ரிகனின் மோனத்தை அடர்ந்து பகரும் கருந்தாடி மண்டிய கன்னங்களில் கண்ணீர் நனைக்கக் கைகூப்பி இருந்தான். சில்வண்டு ஒன்று எங்கிருந்தோ 'போனால் போகுது' என்று தொடர்ந்து சிலுப்பிக்கொண்டிருந்தது. இருளைக் கிழித்துக்கொண்டு ஏதோ ராப்பறவையோ, கூடு தொலைத்த நாள் பறவையோ தனித்து வட்டமிட்டு சிறகடித்துப் போனது.

'வருடா வருடம் அவள் ஏற்படுத்திய மானியம் கிடைக்கிறதுதானே?'

பேஷ்கார் அமைதியாக இருந்தார். கடல் காற்று சத்தமிட்டு ஜன்னல் சாத்திப் போனதைக் கேட்டபடி ராமோஜி அவருடைய பதிலுக்காகக் காத்திருந்தான். 'அது வந்துகொண்டிருந்தது. நடுவில் பஞ்ச காலத்தில் விளைச்சல் பொய்த்துப் போனதால் மானிய நிலத்திலிருந்து பாதி நெல்தான் தர முடிந்தது. மழை பெய்து நிலம் விவசாயத்துக்குத் தயாராக இருந்தபோது நிலத்தில் வேலை செய்தவர்கள் எல்லோரும் பஞ்சம் பிழைக்க எங்கெங்கோ போய்விட்டார்கள். இன்னும் பாதி மானியம்தான் வருகிறது.'

ராமோஜி கணக்குப் புத்தகத்தைப் பார்க்க, ஆயிரத்து முன்னூற்றைம்பது பொன் இந்த வருடக் கணக்கில் ராமோஜி கட்டளைப் பணமாக வந்திருப்பதைப் பார்த்தான். இது எப்படி?

‘சாஹூஜி போன்ஸ்லே மகராஜின் கொடை அது. இந்த சத்திரம் உங்களுக்கு நெருங்கிய தொடர்பு உடையது என்று அவருக்குத் தெரியும். புவனலோசனி அம்மாள் அரசரோடு உங்களைப்பற்றி சர்வ உயர்வாக நிறையப் பேசியதாகத் தெரிகிறது. இல்லாவிட்டாலும் உங்களை இங்கே ஆராதனை செய்கிறவர்கள்தான் நாங்கள் எல்லோரும். புவனலோசனி தாசி சார்பில் துண்டு விழும் சத்திர மானியப் பணத்தை யாரிடமும் கேட்காமல் அரசு மானியம் கொடுக்க மன்னர் சாஹூஜி ஏற்பாடு செய்திருக்கிறார். இதேபோல் திருநள்ளாறு அருகே இன்னொரு சத்திரத்தையும் புவனலோசனி பெயரில் போன்ஸ்லே மன்னர் ஏற்படுத்தி இருக்கிறார். அதையும் உங்கள் மானியமாகக் காட்ட உத்தரவு உண்டு’ என்றார் பேஷ்கார்.

ராமோஜி எலிப்பொறிச் சத்திரத்தின் வரவு செலவுக் கணக்கைப் புரட்டிப் பார்த்துவிட்டு, சரியாக உள்ளது என்று கையெழுத்திட்டு எழுந்தான்.

அதே ராத்திரியில் அதே நேரத்தில் ரங்கீலா கப்பலில் துயில முயற்சி செய்த விட்டோபா கனவா நினைவா என்று சொல்ல முடியாத நிலையில், உடலெங்கும் கொப்புளங்களோடு வந்த புவனலோசனி யைக் கண்டார்.

‘பிரபோ, சேனாதிபதிக்கு நான் எழுதிய லிகிதம் ஒன்றுகூட அவரிடம் போய்ச் சேரவில்லையே. நீங்கள் அவற்றைப்பெற்று என்ன செய்தீர்கள்?’ அவள் விட்டோபாவைக் கேட்டாள். அவளுடைய புண்கள் நிணம் கசிந்திருந்தன.

‘கனோஜி ஆங்கரே’ என்றார் விட்டோபா. ராமோஜி பெண்பித்து பிடித்து காரைக்கால் தாசி பின்னால் போகாமல் இருக்கக் கண்காணிக்கும்படி அவர்தான் விட்டோபாவுக்குச் சொன்னது. காரைக்கால் என்று இலச்சினையோடு எந்தக் கடிதம் வந்தாலும் அதைக் கீறிக் கடலில் எறிந்து வந்தார் விட்டோபா. அப்புறம் கடித வரவு நின்று போனது

கனோஜி ஆங்கரே சொன்னதற்காக மற்றவரின், அதுவும் ஒரு நல்ல நண்பரின் அந்தரங்கத்தில் தலையிட்டது தவறென்று அந்த நொடியில் வருந்தினார் விட்டோபா.

‘புவனலோசனி, மன்னித்து விடம்மா.’

அவர் எழுந்து உட்கார்ந்து சொல்லச் சுற்றிலும் அலையடித்திருந்த கடல் ஆமோதித்து அலைபாய்ந்தது. புவனியைத்தான் காணோம்.

புவனியை நினைத்தபடி விளக்கு அமர்த்தித் தன் அறைக்கு உறங்கச் சென்றான் ராமோஜி. மணல் கடிகையைக் கைப்பையில் இருந்து மேஜையில் எடுத்துவைத்தான். பைஜாமாவை எடுத்து உடுத்தப்போய் வேண்டாம் என்று வைத்து, எட்டு முழ வேட்டியைத் தட்டுச்சுற்றாக உடுத்திக்கொண்டான்.

நாளை எழும்போது அவன் ராமோஜி ஆங்கரேயாக இருப்பானா, ராமோஜி பத்மநாப ராவ்ஜியாக ஆகிவிடுவானா? அது நாளைக்குத் தெரியும். அதுவரை, மணல் கடிகையில் சன்னமான தாரையாக மணல் விழுந்து கொண்டிருக்கட்டும்.

அறையில் வைத்திருந்த எலிப்பொறியில் எலி விழும் ஓசையைக் கேட்டபடி உறங்கிப் போனான் அவன்.

★★★

பதினெட்டு

# துபாஷ் ராமோசி ராயன் 1745 புதுச்சேரி – சில குறிப்புகள்

மு ரட்டாண்டி சாவடி என்று சொல்லாதே என துரை கட்டளையிட்டால் கேட்டுவிட்டுப் போகவேண்டியதுதானே. வீட்டுக்குள் வேணுமானால் முரட்டாண்டி, வரட்டாண்டி, பரட்டாண்டி எதுவும் சொல்லிக்கொள்ளட்டும். வெளியே வந்து, ஊர்ப் பெயரைத் துரை கேட்டால் அவன் ஆணைப்படி தியூப்ளே பேட்டை என்று சொல்ல மாட்டேன் என்றால் என்ன அர்த்தம்?

அந்த மனுஷனைப் பாவம் வாரம் முழுக்க, நாள் முழுக்க மதாம் தியூப்ளே துரைசானியம்மாள் கையில் கொட்டையை வாகாகப்பற்றி நெறித்து 'ஆடுறா ஆடு, கிழட்டு குரங்கே ஆடு, தியூப்ளே குரங்கே ஆடு' என்று ஆட்டுவித்துக்கொண்டிருக்கிறாள். அதிலெல்லாம் இருந்து தப்பித்து, கொஞ்சம் தென்னங்கள்ளு, கொஞ்சம் ஓய்வு, கொஞ்சம் அதிகார ஆர்ப்பாட்டம் என்று பொழுது போக்கிவிட்டுத் திரும்ப, தியூப்ளே துரை முரட்டாண்டி சாவடிக்கு வந்து விடுவது வழக்கம். ஊர் ரொம்ப இஷ்டமாகி, அதன் பெயரையே தியூப்ளே பேட்டை என்று தனதாக மாற்றினார் அவர்.

தோப்பு மண்ணும், மர நிழலும், பறவைகளின் சத்தமும், பக்கத்தில் சிறிய நீர்த்தடமாகச் சுற்றி நடக்கும் ஓடையும், கடலில் இருந்து புறப்படும் காற்றும், சுத்தமான சூழ்நிலையுமாக அவருக்கு மிகவும் பிடித்துப்போன பிரதேசம் அது. அதை அசுத்தப்படுத்த அவரால் முடிந்ததனைத்தும் செய்வார், ஆமாம்.

இந்த வாரக் கடைசி சனிக்கிழமை இது. இன்று காலை ஏழு மணிக்கு மதாம் அசதியோடு தூங்கிக்கொண்டிருக்கும்போதே, துரை சாரட்டை சித்தம் செய்து வைக்க ஏற்பாடு செய்துவிட்டார். ஆனால் நாம் நினைப்பதுபோலவா நாள் நடக்கும்? பிரஞ்சு கவர்னர் தியூப்ளே துரைக்கு எத்தனை பிரச்னைகள்!

துபாஷ் ஆனந்தரங்கப்பிள்ளை உடம்பு சரியில்லாமல் போன பிறகு துரையின் பிரதான வேலையான கபுறு கேட்டல் என்ற தகவல் கேட்பது தடைப்பட்டுப் போயிருக்கிறது.

பிள்ளைவாள் பார்த்துப் பார்த்து கவர்னர் துரை உத்தியோக ரீதியில் தெரிந்துகொள்ள வேண்டிய பிரத்தியேக கபுறு, மற்றபடி உளவு வார்த்தை, ஊர் வம்பு, ஹேஷ்யம், அனுமானம், ஹாஸ்யம் எல்லாம் அனுதினமும் வந்து இருந்து விஸ்தாரமாக முகவார்த்தை சொல்லி, அனுப்பிவித்துக்கொண்டு போவார். லிகிதமாகவும் சிலதை எழுதி அனுப்பி வைப்பார். அது பிள்ளைவாள் சுகவீனம் அடைந்த பிற்பாடு, எப்போதும் போல் தியூப்ளே துரைக்கு கிடைக்க மாட்டேன் என்கிறது. கிடைத்தாலும் உடனடியாக வந்து சேர்வதில்லை.

ஆனந்தரங்கம்பிள்ளை ஒற்றை மனுஷ்யராக ஆள் அம்பு குதிரை நிர்வகித்து இத்தனையும் திரட்டுகிறதை மற்றவர்கள் செய்தால் பல பேர் அதுக்கு வேண்டியிருக்கும்.

சர்க்கார் கபுறுக்கு ஒருத்தன், ஊர் வம்புக்கு ஒருத்தன், உளவு வார்த்தைக்கு ஒருத்தன், உளறுமொழிக்கு இன்னொருத்தன் இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒருத்தனாக நியமித்தால் புதுச்சேரி பிரஞ்சு சர்க்காரின் கஜானா காலியாகி விடும்.

மேலும், எவனுக்கும் சர்வ வியாபகமான அறிவோ, சமத்காரமாகவும், சட்டென்று பதில் சொல்வதாகவும் மதிநுட்பமோ கிடையாது. வெற்றிலையும் பாக்கும் நாள் முழுக்க மென்று மென்று அசமஞ்சமாகத்தான் அரையில் சொறிந்தபடி அவனவன் வேலைக்கு வரான். பல் துலக்கும் நேரம் தவிர, அப்படி ஒன்று இருந்தால், பல் துலக்கும் நேரம் தவிர, சம்போக நேரம் அடங்கலாக இவர்கள் வெற்றிலை பாக்கு மெல்லாத பொழுது இல்லை.

ஈதெல்லாம் சேர்ந்து தியூப்ளே துரையின் சனிக்கிழமை விடுமுறை நாளைப் பாழ் பண்ணுவதாக ஆக்கியது. புறப்பட்டதுமே அவருக்கு நிலைமை சரியில்லாமல் போனது. சாரட் ஓட்டுகிறவனும் கூடவே லொங்குலொங்கென்று கையில் ஈட்டியோடு ஓடி வரும் நாலு பயல்களும் நவாப் மோஸ்தரில் சலாம் செய்து, அதிலே ஒரு முட்டாள் ‘முரட்டாண்டி சாவடிக்கு போக எல்லாம் துரை சித்தப்படி தயார்’ என்றபோதே அவருக்குக் கட்டோடு பிடிக்காமல் போனது.

இந்த கிராமத்துப் பெயர் முரட்டாண்டி சாவடி என்று இந்தப் பயல்கள் சொல்வதை இன்னும் நிறுத்தவில்லை. தியூப்ளே பேட்டை என்று ஒரு வருடம் முன்னால் ஊர்ப் பெயரை மாற்றி கவர்னர் துரை தன் பெயரைச் சூட்டினாலும் அதை ஒருத்தனும் லட்சியம் செய்வதில்லை.

சொல்லக் கஷ்டமாக இருப்பதாக அவனவன் சலித்துக் கொண்டபோது தியூப்ளெக்ஸ் பேட்டை, தியூப்ளே பேட்டை, தூப்ளே பேட்டை, துப்ளேப் பேட்டை என்று கொஞ்சம் அங்கே இங்கே தட்டிக்கொட்டி மாற்றிப் பெயரை உச்சரிக்கவும் அனுமதி கொடுத்தாகி விட்டது. இருந்தும் இன்னும் நீட்டி முழக்கி மொரட்டாண்டி சாவடி என்றுதான் சொல்கிறான்கள்.

நிகழ்ந்துபோன குரோதன வருடம் வைகாசி மாதத்தில் ஒருநாள் சாயங்காலம் முனிசிபல் கவுன்சிலில் இருந்து கவர்னர் அவரது மாளிகைக்கு வந்தார். அலமுசு பண்ணிவிட்டு [காப்பி குடித்து] கவர்னர் துரை இருந்துகொண்டு துபாஷ் ஆனந்தரங்கப் பிள்ளையிடம் சொன்னது என்னவென்றால் –

'ரங்கப்பா இதொண்ணும் சரியில்லை, கேட்டாயா... இந்த சாமானிய ஜனங்களுக்கு பெரிய இடத்து வார்த்தை ஏதும் அர்த்தமாகுவதில்லை. எனவே கடுமையான நடவடிக்கை எடுத்து அதைப் புரிய வைக்கப் போகிறோம் இனி.'

உத்தரவாகணும் என்று பிள்ளையவர்கள் வாய் பார்த்திருக்க துரை சொன்னது – 'இந்த நாள் தொடங்கி இனி எப்போதும் முரட்டாண்டி சாவடி என்று யாரும் பழைய பெயரைச் சொல்லக்கூடாது என்று உத்தரவு போடுவோம். பிடிவாதமாகவோ, வாய் மறதியாகவோ முரட்டாண்டி சாவடி என்று சொன்னவன், சொன்ன ஸ்த்ரி காதை அறுத்து, நாக்கில் மாட்டுச் சாணத்தைத் தடவி புதுச்சேரி பட்டண எல்லையில் விடுத்து, மறுபடி உள்ளே வரவொட்டாமல் செய்யவேண்டியது.'

அந்த யோசனைக்கு ஆனந்தரங்கம்பிள்ளையவர்கள் இருந்துகொண்டு தகுந்த உத்தரமாகச் சொன்னது – 'மெத்தவுஞ்சரி. கவர்னரவர்கள் இந்த விஷயத்துக்காக காதை அறுப்பது என்று புறப்பட்டால் அறுந்து விழுகின்ற காதுகளை எடுத்து அகற்றி வைக்க சிப்பந்தி, தொட்டி வகையறா என்று நிறையத் தேவைப்படும். இன்னொன்று யார் இப்படிச் சொல்கிறான் என்று கேட்டுக்கொண்டு சுற்றிவர அதிகாரிகளை நியமிக்கவேண்டும். ருசுப்பிக்க சாட்சிகளை தயார் செய்யவேண்டும். இந்த சின்ன காரியத்துக்கு அத்தனை பிரயத்தனம் தேவை இல்லையே.'

அந்த மட்டில் அங்கே வந்த மதாம் துரைசானியம்மாள் துரைக்கும் தனக்கும் கபேகொண்டு வர குசினிக்கார குப்பையா செட்டியிடம் உத்தரவிட்டுவிட்டு இருந்துகொண்டு, ஆனந்தரங்கப் பிள்ளையிடமும், அவர் முகாந்திரம் கவர்னரிடமும் மொழிந்ததோ இந்த விதத்தில் இருந்தது –

'காலையில் சாவடியிலோ நெல் விளையும் வயலிலோ, கள் இறக்கவும், குடிக்கவும் போகும் தென்னந்தோப்பிலோ ஜனங்கள் கூடும்போது சுவாமியை ஸ்மரிக்கிறதுபோல் பத்து தடவை எல்லோரும் சேர்ந்து 'தியூப்ளெக்ஸ் பேட்டை, தியூப்ளெக்ஸ் பேட்டை' என்று உச்ச ஸ்தாயியில் சொல்லி அதன்பிறகு அவனவனுக்கான கிரமத்தில் புத்தி செலுத்த வேண்டியதென்று சட்டம் போடலாம். வீடுகளிலும் காலையில் உலையேற்றும்போது இதேபடி ஸ்திரிகளும், வயசு ரொம்ப ஆகி வீட்டோடு கிடக்கிற கிழங்களும் ஓசை எழுப்பப் பண்ணலாம்.

'இதற்கு அப்புறமும் முரட்டாண்டி சாவடி என்று உச்சரிக்கிறவன் பல்லை ஒருதடவை சொன்னதற்கு ஒன்று வீதம் உடைத்துப் போடலாம்.

'ஷாம்பினா பாதிரியார் இந்த மாதிரி தண்டனைகளை அவிசுவாசிகளுக்கு அளிக்க பரீஸிலிருந்து தளவாடம் வாங்கி வந்திருக்கிறார். பல் உடைக்கும்போது சத்தத்தை பெருக்கி கேட்க நன்றாக உள்ளது. பல் உடைபட்டவன் தீனமாக அலறுவதும் கேட்க நேர்த்தியாக உள்ளது.'

அப்போது துரையவர்கள் இருந்துகொண்டு சொன்னது – 'பெயரை மாற்றிச் சொல்வதில்தான் நாம் கருத்து செலுத்த வேண்டுமே தவிர, பழைய பெயரைச் சொல்லுவான் என்று எதிர்பார்த்து தண்டிப்பதில் நேரம் செலுத்தினால், நமக்கு சித்திரவதையில்தான் நாட்டம் என்று புலனாகிவிடும். ஏற்கெனவே பாதிரியார் அவிசுவாசிகளுக்கு இதுபோல் தண்டனை தர ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனையில் பிரசங்கித்தது ஊரில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாம். இதிலே முரட்டாண்டிச் சாவடிக்காகப் பல் உடைப்பதையும் சேர்த்து இன்னும் கஷ்டமாக்கவேண்டாம். என்ன ரங்கப்பா நீ நினைப்பது என்ன?'

ஆனந்தரங்கம் பிள்ளை அதற்கு பதிலாகச் சொன்னது – 'நானும் அதுதான் சொல்ல உத்தேசித்தேன். வேலியில் போகிற ஓணானை எதுக்கு இடுப்பில் எடுத்துவிட்டுக்கொள்ளவேணும் என்று இங்கே பழமொழி ஒன்று உண்டு. மதாமுக்கு தமிழ் புரியுமென்பதால் தெரிந்திருக்கக்கூடும்.'

மதாம் அபூர்வமாக தே [டீ] வேணாமென்று வைத்து கபே பருகியபடி இருந்துகொண்டு இதுக்கு உத்தரமாகச் சொன்ன யோசனை பின்வருமாறு இருந்தது – 'அங்கங்கே தெருவிலே கூட்டம்போட்டு பெயர் மாற்றத்தை ஜனங்களின் புத்திக்குக்கொண்டு போகணும் ரங்கப்பா. அப்படியே பயப்படுத்தணும்.'

அந்த யோசனை இன்னும் நடப்பாக்கப்படவில்லை. நேற்றுக்கூட மதாம் ஞாபகப்படுத்தினாள். கவர்னர் துரைக்கு ஆயிரம் ஜோலி. முரட்டாண்டி சாவடி புத்தியில் முன்னால் வந்து நிற்கவில்லை நேற்று வரை. காரணம் இதுதான் – கிறிஸ்துவ மதப் பிரசாரம்போல் தெருக்கோடியில் கூட்டம் கூட்டிப் பேச ஆட்கள் வேண்டும். கவுன்சில் உத்தியோகத்தில் இப்படி யாரும் இல்லாத காரணத்தால் வெளியே ஆட்களைத் தேடவேண்டும். குறைந்த செலவாக ஆளுக்கு நாலைந்து துட்டு, ஒரு தினத்துக்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இலவசமாகக் கொடுத்துவிடலாம்.

அது ஒரு பிரச்னையைத் தீர்க்கிற வழிமுறையாக இருக்கும்.

மற்றபடி சில லிகிதங்களை இங்க்லீஷில் எழுதுவிக்கவும், கபுறு வந்ததில் தமிழை, வேறே அந்நிய பாஷையை கவர்னரிடம் பிரஞ்சில் சொல்லவுமாக, துவிபாஷி தேவை. ஆனந்தரங்கம் பிள்ளை மறுபடி ஆரோக்கியம்கொள்ள இன்னொரு மாதமாவது ஆகும் என்றார்களாம் பிள்ளையின் வைத்தியர்கள். தாற்காலிகமாக ஒரு துபாஷை வேலைக்கு தயார் பண்ண வேணும். பிள்ளைக்கு வேண்டியவர்களில் யாரையாவது அவரே ஒரு மாதம், பத்து நாளுக்கு விரல் சுட்டலாம்.

துரை இளநீரை ஒவ்வொன்றாக சீவித்தரச் சொல்லி குடிக்க தொண்டையும் கழுத்தும் கண்ணும் குளிர்ந்ததாக தோன்றியது. பின்னால் பூட்ஸ் அணிந்த கால்களின் சத்தம். இளநீரைத் தரையில் தவறவிடாமல் இறுகப்பற்றி மடியில் இருத்தியபடி திரும்பிப் பார்த்தார் அவர். வந்தவன் மெய்க்காப்பாளன் ஆன முசியெ அந்த்வான் மொர்சேன். தமிழ் கற்ற கும்பினி பிரஞ்சுக்காரன் அவன்.

‘என்ன மொர்சேன், கள்ளு எடுத்து வரவா என்று கேட்கிறான்களா? வேணாம். இவ்வளவு சீக்கிரம் கள்ளு குடித்தால் அப்புறம் எனக்கு தூக்கம் வந்துவிடும். மதியத்துக்கு நண்டும், இறாலும் சமைத்து அனுப்பச் சொல்லியிருக்கிறேன். தூங்கினால் அதெல்லாம் வீணாக, பசியும் அசதியுமாக சாயந்திரமே ஆகிவிடும்... கள்ளை பகலுக்கு ஒரு மணி நேரம் தள்ளி எடுத்துவரச் சொல்.’

‘மன்னிக்க வேணும் முசியே கவர்னதோர், கவர்னர் அவர்களே, உங்களைப் பார்க்க ஒரு துபாஷி வந்திருக்கிறார். தமிழ்க்காரர். சோமாசி ராயரென்றோ ராமோசி ராயர் என்றோ பெயர் சொன்னார்.’

தியூப்ளே நெஞ்சுக்குக் குறுக்கே பூணூல் தரிப்பதுபோல் அபிநயம் செய்து காட்டி, வந்தவன் பிராமணனா என்று விசாரித்தார். நூல் எதுவும் கண்ணில்படவில்லை என்றான் எய்ட் தெ காம்ப் அந்த்வான் மொர்சேன்.

‘நிம்மதியாக ஓய்வெடுக்கலாம் என்று வந்த இடத்திலும் தொல்லை தானா? நாளைக்கு... நாளைக்கு வேண்டாம், ஞாயிற்றுக்கிழமை. கோவிலுக்குப் போக, பூசை வைக்க நேரம் போய்விடும். பனிரெண்டு மணிக்கு மறுபடி முரட்டாண்டி... நாசம்... தூப்ளெக்ஸ் பேட்டைக்கு வருவேன் மிச்சமீதி ஓய்வெடுக்க. அவனை திங்கள்கிழமை என் பீரோவுக்கு [ஆபீசுக்கு] வரச் சொல்லு.’

கவர்னர் துரையவர்கள் சலித்துக்கொண்டார். முரட்டாண்டி நாக்கை விட்டு இறங்க மாட்டேனென்கிறது.

‘மன்னிக்கணும் முசியே, இந்த துபாஷ் முசியே ரங்கப்பிள்ளே அனுப்பி வச்சவராம். அவரை முரட்டாண்டி சாவடியில் வந்து பார்க்கச் சொன்னீர்களாம் ப்ரபோ.’

திரும்பவும் முரட்டாண்டி. எய்ட் தெ காம்ப் அனர்த்தம் விளைவித்ததை உணர்ந்து உடனே பேச்சை நிறுத்தினான்.

இப்படி தன் சொந்த நாக்கே, பக்கத்தில் இருந்து குற்றேவல் செய்கிறவர்களே, சொன்ன பிரகாரம் கேட்காதபோது ஊர்க்காரன் காதை எங்ஙனம் அறுப்பது? தியூப்ளே துரை முகம் சுளித்துக் கொண்டார்,

அவர் இன்னொரு இளநீரை எடுத்தபடி, அந்த மனுஷரை வரச்சொல்லு என்று சொல்லி, சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டார். துணிக் கூடாரத்து நீலத் துணி படுதாவாகவும் சுவராகவும் கூரையாகவும் காற்றில் சலசலத்தது.

‘உம் பெயர் என்ன?’

கவர்னர் தியூப்ளே துரை வடக்கு பிரான்சில் லாந்த்ரொசி பிரதேசத்தில் பேசப்படும் பிரெஞ்சு மொழி உச்சரிப்பில் ராமோஜியைக் கேட்டார்.

‘ராமோஜி பத்துஜி ராவ்.’

‘ரொம்ப பெரிசா இருக்கே’ என்றார் ழோசப் பிரான்ஸ்வா தியூப்ளே.

தன்னை ராமோஜி அல்லது ராமோ என்று கூப்பிடலாம் என்று அடக்கத்தோடு பதில் சொன்னபோது சர்வ ஜாக்கிரதையாக அவனும் வடக்கு பிரான்ஸ் உச்சரிப்புக்கு மாறினான். துரை முகம் துளி சந்தோஷத்தைக் காட்டியது.

‘குடும்பம் எப்படி? கல்யாணம் ஆனவரா நீர்?’

‘ஆம்’ என்று பணிவோடு சொன்னான் ராமோஜி.

‘பெண்டாட்டியையும் ரெட்டை பிறவிகளான எட்டு வயது மகள்கள் இருவரையும் ஆறு வருஷம் முன் படகுப் பிரயாணத்தின்போது பறி கொடுத்தவன் நான். தனியனாக என் வாழ்க்கை போகிறது பிரபோ.’

தியூப்ளே தலையைக் குலுக்கியபடி துக்கம் அபிநயித்தார். தேவனுக்கு மகிமை என்று அவருடைய கரங்கள் யந்திரமாக விரிந்து வானத்தைப் பார்த்து நொடியில் தாழ்ந்தன.

‘வெனீஸ் நகர் காணக் கூட்டிப் போயிருந்தீரோ?’

‘இல்லை மகாப்ரபு, சந்திரநாகூர் காட்டுவதற்காகக் கூட்டிப் போனபோது படகு மூழ்கி...’

ராமோஜி தரையைப் பார்த்தபடி நின்றிருந்தான். துரை அவனை நோக்கினார்.

‘நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?’

துரை விசாரித்தார். இன்னொரு இளநீர் வெட்டப்பட்டு அவர் வாய்க்குள் தாரையாக வழிந்துகொண்டிருந்தது. மரியாதைக்குக் கூட இரும் என்றோ இளநீர் குடிக்கிறீரோ என்றோ விசாரிக்கவில்லை துரை.

அது கிடக்குது. வந்தது வந்தாய், நான் கேட்கக் கேட்கப் பதில் சொல்லிக்கொண்டு என் காலைப் பிடித்து விடு என்று சொல்லாமல் இருந்தாரே, அதுவரை விசேஷம்தான்.

‘புடவைக் கிடங்கு வைத்து சாயம் தோய்த்து அந்நிய நாடுகளில் விற்கிறவர்களில் நானும் ஒருவன், ஐயா’

‘பிரஞ்சு எங்கே பயின்றீர்?’

‘நான் காரைக்கால்காரன். காரைக்காலை துமா துரை மராத்தி மன்னரிடம் இருந்து விலைக்கு வாங்கியபோது அங்கே ப்ரஞ்சு கலாசாலையும்

நாகரிகமும் பரவிவந்தது. நான் அப்படி ஒரு கலாசாலையில்தான் பிரஞ்சு படித்தேன்' என்றான் ராமோஜி.

'ராமோசி ராயர்... ராமோசி இது போதும் உம்மைக் கூப்பிட.'

'உத்தரவு முசியே' என்று வணங்கினான் ராமோஜி. அப்போதிருந்து அவன் ராமோசி ராயன் ஆனான்.

'ரங்கப்பிள்ளை வரும்வரை அவர் வேலையில் கொஞ்சம் பங்கு போட்டுக்கொள்ளும். அவரால் செய்ய முடியாமல் போகிறவற்றை அனுமதி பெற்று நீர் எடுத்துப் பாரும்.'

'யார் அனுமதி, கடவுளே?'

'ரங்கப்பிள்ளைதான், வேறு யார்? நீர் முதல் நாள் என்பதால் என்னோடு இவ்வளவு நேரம் நின்று பேச முடிகிறது. சரி வேலைக்கு வந்தீர். முதல் வேலை இது... இன்னும் ஒரு மாதத்தில் நாட்டியம், பாட்டு, பேச்சு மூலமாக தியூப்ளே பேட்டை பெயரை பிரபலமாக்கணும். நீர் என்ன செய்வீரோ தெரியாது. ஊர்ப் பெயரை முரட்டாண்டி என்று யாராவது சொன்னால் காது அறுபடும் என்பதையும் புரிய வைக்கணும். இன்னும் முப்பது நாளில் உம்மைக் கேட்பேன். இதெல்லாம் நடக்க முடியாமல் போனால் உம் காதையும் அறுத்து பட்டணத்துக்கு வெளியே துரத்தி விடுவேன்.'

கிராதக துரை.

'உமக்கு சம்பளம் எல்லாம் முசியே பிள்ளை மூலம் தெரியப்படுத்தப்படும்.'

'உத்தரவு முசியே துரையவர்களே.'

வேலை பார்த்துக் கிட்டும் பணம் ராமோஜிக்குத் தேவையில்லை. ஆஸ்தி உண்டு. அது போதும். ஆனால் வேலையில் வரும் பெயர் அவனுக்கு வேண்டியுள்ளது. ஒரே ஒருநாள் பிரஞ்சு ராஜாங்க உத்தியோகம் என்றாலும்.

'கேட்கவிட்டுப் போச்சே. உமக்கு எப்படி முசியே ரங்கப்புள்ளே பரிச்சயம்? அவர் மராத்தி ராயர் இல்லையே. தமிழராச்சுதே.'

'ஐயா, அவர் என் காலம் செய்த தந்தையாருடைய நல்ல சிநேகிதர். இரண்டு பேரும் ஆரம்ப நாட்களில் கூட்டு வியாபாரமாக புடவைக் கிடங்குவைத்து சாயமேற்றி விற்பனைக்கு வெளிதேசம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.'

‘நல்லது. நீர் சரியாக காரியம் செய்யாவிட்டால் முசியே ரங்கப்புள்ளே மூலம் தண்டனை தருவோம். போய் நாளைக்கு வாரும்.’

அப்படி ராமோஜி அனுப்பிவித்துக்கொண்டு போனான். போகும் போது மனசு தியூப்ளே சொன்னதை அசை போட்டது.

என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார் துரை? நாட்டியத்தையும் சங்கீதத்தையும் ராமோஜியே ஒரு மாதத்தில் கற்றுக்கொண்டு பாடி ஆட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரா? இது ஆடிப் பாடினதோடு முடிவடைகிற சமாச்சாரம் இல்லையே. சாகித்தியம் வேறே வேண்டி இருக்கிறது. அதைக்கேட்டு, ஆட்டம் பார்த்து ஜனங்கள் முரட்டாண்டிச் சாவடி என்ற பெயரையே மறந்துவிடவேண்டும். கோஷ்டியாக, அல்லது தனித்து, தியூப்ளே பேட்டை என்று ராகமாலிகையில் பாட வேண்டும். தில்லானா ஆட வேண்டும். எல்லாம் ஒரே மாதத்தில் நடந்து விடணுமாம்.

இதை அப்படியே ராமோஜியின் குருநாதர் ஆனந்தரங்கம்பிள்ளை அவர்களுக்குச் சொல்லவேண்டியிருப்பதால் அவர் வீட்டுக்குப் போனான் ராமோஜி. உப்பரிகையில் கடற்காற்று ஏற்று மெல்ல உலவிக்கொண்டிருந்தார் அவர். ரொம்பவும் தளர்ந்திருந்தார். அவர் நடைக்குப் பாந்தமாக பின்னால் வெற்றிலைப் படிக்கத்தோடு ஒரு சிப்பந்தி போய்க்கொண்டிருந்தான்.

பிள்ளைவாள் உடம்பு என்ன வந்தாலும், ஒரு வெற்றிலையும், கொஞ்சம் பாக்கும் மென்றால் மெச்சப்பட்ட நிலைமை அடைந்து விடுவார். இரண்டு வாரமாக வெற்றிலையைக் கண்ணில் காணாமல் ஆக்கி விட்டான் வைத்தியன். அது அவரை சாய்ந்துவிட்டது.

ராமோஜி வணங்கியபடி நின்றான். உள்ளே வாரும் என்று தலையை அசைத்தார் பிள்ளைவாள்.

மாடிக்குப் போவதில் ராமோஜிக்கு மனதில் ஓர் இடைஞ்சல் இருந்தது. பிள்ளைவாள் என்னதான் தனவந்தரும், பெரிய உத்தியோகஸ்தரும், அப்பாவின் அத்யந்த சிநேகிதரும் ஆனாலும், வாரக் கணக்கில் குளிக்காத மனுஷர். பக்கத்தில் போனால் வாடை அடிக்கத்தான் செய்யும்.

அதுவும், சுரமும் வேறே என்னவோ ரோகமுமாக இருக்கக்கூடியவர் என்பதால், பக்கத்தில் போனாலோ அல்லது அவருக்கு பின்னால் நின்றாலோ தொற்றுநோயாக அது நம்மையும் பீடிக்கக்கூடும். அப்புறம்

ராமோஜி இடத்துக்கு துபாஷியை எங்கே தேட? காது அறுக்க கம்பியோடு தியூப்ளே துரை வேறே பின்னால் நிற்கிறார்.

அதைச் சொல்லணுமே ரங்கப்பிள்ளைவாளிடம். மேலே போகாமல் கீழேயே நின்று வர்த்தமானம் எல்லாம் சொன்னால் தெருவில் போகிறவனும், வீட்டுக்குள் குற்றேவல் செய்கிறவளுமெல்லாம் இதைக் காதில் வாங்கி வேறெங்காவது யாரோடாவது பகிர்ந்து கொள்ளக் கூடும்.

‘நான் மேலே வரலாமா?’ என்று பிள்ளைவாளிடம் பணிவோடு கேட்டான் ராமோஜி.

‘வேணாமய்யா, நானே கீழே வருகிறேன்… அங்கே என் குரிச்சியில் இருந்தால்தான் ராஜாங்க விஷயம் வகையறா நினைக்கவும் எழுதவும் தோதுப்படும்.’

ராமோஜி வாசலில் போட்டிருந்த பிரம்மாண்டமான நாற்காலிக்கு முன்னால் நிலைக் கண்ணாடியை ஒட்டி ஓரமாக நின்றான். பிள்ளை கீழே வர பத்து நிமிஷமானது. தளர்ந்த உடம்பு ஒத்துழைக்கா விட்டாலும் அவரே படி இறங்கினார். அலமுசு பண்ணிக் கொள்கிறீரா என்று ராமோஜியைக் கேட்டார். அவர் காப்பி குடிக்கிறாயா என்று விசாரித்தால் நிறைய நாட்குறிப்பாக எழுத வேண்டி இருக்கும். சில சமயம் பிரதி எடுக்கவும் நேரும்.

‘வயணங்கள் சொல்லும், முரட்டாண்டி சாவடிக்குப் போயிருந்தீராமே.’

பிள்ளைவாள் விசாரித்தார். அவர் முரட்டாண்டி சாவடி என்று சொல்ல, ராமோஜி சிரிப்பை அடக்கிக்கொண்டான்.

‘எதற்கு சிரிக்கிறீர் என்று தெரியும்’ என்றபடி அவரும் அடக்க முடியாமல் சிரித்தார்.

துரைத்தனத்து கபுறு எல்லாம் பிள்ளைவாளுக்குக் கூறினான் ராமோசி ராயன் என்ற ராமோஜி.

‘இதென்ன ஆரியக்கூத்து? பெயரை இஷ்டத்துக்கு மாற்றி வைப்பார் களாம். அதை ஜாக்கிரதையாக அதேபடிக்கு புதுப் பெயரில் சொல்லாவிட்டால் கசையடியாம், அபராதமாம், காதறுப்பாம். ஒவ்வொருத்தர் பின்னாலேயும் கவர்னர் மாளிகை, காதறுக்கக் கத்தியோடு சேவகர்களை அனுப்புமா?’

‘பெரியவர்கள் மன்னிக்கணும். இந்த பெயர் விஷயத்தில் துரை உறுதியாக இருக்கறபடியால்தான், நானும் கொஞ்ச நாள் உங்கள் பெயரைச் சொல்லி தற்காலிகமாக சர்க்கார் உத்தியோகஸ்தனாக இருக்கேனே’ என்றான் ராமோஜி.

‘அதுவும் மெத்தச் சரிதான்’ என்றவர் போன வாரம் விட்ட இடத்திலிருந்து நாள் குறிப்பு எழுதலாமா என்று கேட்டார். ‘ஒரு வாரம் எழுதலியே’ என்றான் ராமோஜி.

‘அது ரொம்ப இல்லை, ராஜாங்கம் இல்லாத சம்பவங்கள்தான் எழுத வேண்டியது. ஒரு மணி நேரத்தில் முடிந்துவிடும்’ என்றார் அவர்.

இந்த வாரத்தில் ராஜாங்கமாக இல்லாமல் என்னவெல்லாம் நடந்தது இந்த நாள் குறிப்பில் எழுதி வைக்க என்று புரியாமல் ஆனந்தரங்கம் பிள்ளையைப் பார்த்தான் ராமோஜி.

‘கள்ளுக் குடித்துவிட்டு கும்பினி ஒஃபிசியே [ஆஃபீசர்] ஒருத்தன் நல்ல மீனாக பத்திருபது வாங்கி வா என்று சிப்பந்தியை சந்தைக்கு அனுப்பிச்சு வைத்து, அவன் வாங்கி வந்த மீன் நல்லதாக இல்லையென்று அடித்து உதைத்த விஷயம் அய்யா’ என்றார் பிள்ளைவாள்.

இதென்ன கூத்து என்று முக வார்த்தையாக அவர் சொல்வதை எதிர்பார்த்திருந்தான் ராமோஜி. இது அவனுக்குக் கதை சொல்ல மட்டும். எழுத வேறே மாதிரி தமிழில் நீளநீளமாக வாக்கியங்கள் அமைத்து அவர் சொல்வதை அதே வேகத்தில் எழுத வேண்டியிருக்கும். எழுதினதைப் படிக்கச் சொல்லி அங்கங்கே அவர் திருத்தம் இருந்தால் சொல்வதால், எழுதிய பிரதி ஏறக்குறையப் பிழை இன்றி அமைந்து போகும்.

‘அப்புறம் இந்த லச்சை கெட்ட சோல்தாத்து விவகாரம். கேட்டீரோ’, பிள்ளை உற்சாகமாகத் தொடர்ந்தார்.

‘புலோ தோன் என்றோ என்னமோ பெயர் விளங்கான். பரீசில் இருந்து வந்தவனில்லை. காப்பிரி. தீவில் இருந்து வந்தவன். அவன் என்ன செய்தானா, நேற்று சாயங்காலம் வாணரப்பேட்டை தோப்பில் தென்னங்கள் மாந்தி அதே படிக்கு தியாகு முதலியார் தெருவில் திறந்து கிடந்த ஒரு வீட்டில் நுழைந்திருக்கிறான். பதினைந்து வயசு சொல்லத்தக்க ஒரு பெண்ணுக்கு அவளுக்கு தாயார் வயதில் இன்னொரு ஸ்திரி தலைமயிரில் பேன் பார்த்துக்கொண்டிருக்க இவன் குடிபோதையிலே உடுப்பை

களைந்துவிட்டு, சாடி விழுந்து அந்தப் பெண்பிள்ளைகள் ரெண்டு பேரையும் முத்தமிட்டு சந்தோஷமாக இருப்போம். ரெண்டு பேரும் வாங்களடி என்று ஆரம்பித்து இன்னும் அசங்கியமானதாக வார்த்தை எடுத்துவிட அவர்கள் கூகூ வென்று கூக்குரலிட்டு வாசலுக்கு ஓடி வந்தார்களாம். வந்து, திரும்ப அங்கே கதவை சாத்தி, வெளியில் இருந்து பூட்டும் இட்டார்கள். பக்கத்து வீடுகளில் இருந்து ஆண்கள் திரண்டு வந்து காப்பிரி சொலுதாதுவை [சிப்பாய்] அடித்து, இரண்டு பல்லையும் உடைத்து, கிரிமாசி பண்டிதன் அதிகாரத்தில் இருக்கும் சாவடியில்கொண்டுபோய்த் தள்ளி விட்டார்களாம். கும்பினி சொலுதாதுக்கு இனியும் இங்கே காவல் இருக்க சந்தர்ப்பம் தராது அடுத்த கப்பலில் கோலனிக்கு திரும்ப அனுப்பும் முன்பு அவனுக்கு பத்து சாட்டையடியாவது தரணும் என்று தெருக்கார மனுஷர்கள் என்னிடம் முறையிட வந்து, நான் உடம்பு சரியில்லாமல் போனதால் வீட்டில் சொல்லிப் போனார்கள். துரைக்கு சமாசாரம் தெரியுமோ என்னமோ. இதை மட்டும் இன்று எழுதினால் போதும்.'

அவர் நிறுத்தாமல் பேசியதால் களைப்படைந்து காணப்பட்டார்.

'தோசை சுட்டு எடுத்து வரச் சொல்லட்டா?'

பிள்ளையவர்களின் மனைவி காமிரா அறைக்குள் வராமல் வாசலிலேயே நின்றபடி அவரிடம் கேட்டாள்.

'இந்த வேலையை முடித்துவிட்டு சாப்பிடுகிறேன் மங்கா' என்றார் பிள்ளைவாள். 'ராமாசி ராயனுக்கு வேணுமானால் ரெண்டு வார்த்துப் போடச் சொல்லேன்' என்றார் பிறகும், ராமோஜி பக்கம் கை காட்டியபடி.

'ராயர் நம் வீட்டில் எல்லாம் போஜனம் செய்வாரா என்ன?' என்று பிள்ளைவாள் மனைவி நகைத்தாள்.

'ஏன், ராமோசி பண்டிதர் இல்லையே அவர். ராமோசி ராயர்தானே? அவர் பிதா காலம் பண்ணிப் போகச்சே அவரை நம் வசம் ஒப்புவித்துப் போட்டுப் போனார். அப்படி அவர் நம் வீட்டு மனுஷரான படியினாலும் இவ்விடத்தில் போஜனம் செய்ய ஏது தடை' என்று பிள்ளையவர்கள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவருக்கு நெஞ்சில் வலி கண்டிருக்கும்போல.

நெஞ்சைப் பிடித்தபடி ஒரு நிமிடம் அவர் அப்படியே இருக்க, ராமோஜி சத்தமிட்டு வேலைக்காரர்களை வரவழைத்து ரேக்ளாவில் போய்

வைத்தியரைக் கூட்டி வரச் சொன்னான். பிறகு என்னவோ தோன்ற, பிள்ளைவாளின் சாரட்டையும் சித்தம் பண்ணச் சொன்னபோது ரேக்ளாவில் வைத்தியர் வந்துவிட்டார்.

நாடி பிடித்துப் பார்த்து அவர் சொன்னது –

'ரத்தம் கொஞ்சம் கொதிப்பு ஸ்திதியில் அதிக அழுத்தத்தோடு ஓடுது போல. என்ன உண்டீர்கள் ஆண்டவரே?'

'ரெண்டே ரெண்டு பலாச்சுளை தேனில் குழைத்து வைத்து உண்டேன் ஐயா. பண்ருட்டியில் இருந்து ஒரு குடியானவன் காணிக்கை வைக்க காலை முதலே காத்திருந்து கொடுத்துப் போனான். குதம்பைச் சித்தர் பாட்டு, பாம்பாட்டிச் சித்தர் பாட்டு என்று நாலஞ்சு பாட்டை நல்ல குரல் எடுத்து பாடினான். அதைக் கேட்டபடி சுளை தின்ன நெஞ்சு நிறைஞ்சு போச்சோ தெரியலியே' என்று சகஜமாக மறுபடி பிள்ளைவாள் எழுந்து உட்கார்ந்தார். கண்டம் தப்பிப் பிழைத்தவர்கள் முகத்தில் தவழும் திகில் கலந்த மந்தகாசத்தை ராமோஜி அவர் வதனத்தில் கண்டான்.

இரண்டு குளிகைகளைத் தேனில் கரைத்துப் பிள்ளையவர்களுக்குக் கொடுத்துவிட்டு, உடனடியாக சுவஸ்தமாகும் என்று உறுதி சொன்னபடி வைத்தியர் புறப்பட்டார். ராத்திரிக்கு ஏதாவது ஆகாரம் பண்ணிக்க வேண்டியது. வெறும் வயிறாகக் காயப் போட வேணாம் என்றார் அவர்.

இன்னும் ஒரு வாரம் ராமோசி ராயனைத் தவிர யாரையும் பார்க்கவோ, கண்டு முக வார்த்தை சொல்லவோ வேணாம் என்று தோணுகிறதாகப் பிள்ளைவாள் சொல்ல, அப்படியே இருக்கட்டுமே என்றாள் அவருடைய மனைவி. ஊர்வம்பு இல்லாமல் பிள்ளையவர்கள் ஜீவிப்பதாவது என்று ராமோஜி நினைத்துக்கொண்டான்.

'நாள் குறிப்பை எல்லாம் நாளைக்கு எழுதலாம், இப்போது மொறுமொறுவென்று ரெண்டு தோசை தின்னலாமே' என்று பிள்ளைவாள் பெண்ஜாதி சொல்ல அதுவும் சரிதான் என்று அவர் ராமோஜியிடம் சொல்லி, பிறகும் சொன்னார் – 'முரட்டாண்டிச் சாவடி வயணம் சொல்லும். அப்படியே நீரும் ரெண்டு தோசையும் துவையலும் ருசிபாரும். அரிசி நம்ம வயலில் விளைந்த நெல்லைப் புழுக்கியது. உழுந்தும் நம் தோட்டம் துரவில் வளர்த்து அறுவடை செய்தது. துவையலுக்கான தேங்காய் நம் தோப்பில் இருந்து வந்தது. பச்சை மிளகாய் நம் தோட்டத்துக் காய். உப்பு நம் உப்பளத்தில் காய்ச்சியது. ஆக எல்லாமே பெருமாள் தயவில் நம்

இடத்திலேயே தோன்றி வளர்ந்து நம் இடத்தில் உபயோகமும் ஆகிறது. நாராயணாய நம.’

அவர் சொல்ல ராமோஜியும் ஓம் நமோ நாராயணாய நம என்று கிழக்குப் பார்த்து முழங்கினான். அவருக்குக் கொஞ்சம் இடம் தள்ளி பின்னாலும் நகர்ந்து ராமோஜி தோசை சாப்பிட்டபடி, காதறுத்தல்பற்றிச் சொன்னான்.

ராமோஜி, வைசியாள் தெருவிலிருக்கும் தன் வீட்டுக்குக் கிளம்பிய போது கையைக்கூட அலம்பாமல் பிள்ளைவாள் நித்திரை போயிருந்தார்.

இப்படி திடீரென்று எழுந்துகொள்ள, திடீரென்று சாப்பிட, திடீரென்று நித்திரைபோக கொஞ்ச நாளாக அவருக்கு அனுபவமாகிறதாக பிள்ளைவாள் மனைவி சொன்னாள். நடுராத்திரியில் எழுந்திருக்கிற கஷ்டம் எதுவும் இல்லையே என்று ராமோஜி கேட்க இல்லை என்றாள். இருந்தாலும் சொல்வாளோ.

விளக்குகளைத் திரி தாழ்த்த ஆரம்பித்து வாசல் கதவை சாத்தும்போது ஒற்றை மாட்டுவண்டி ஒன்று ஆனந்தரங்கம் பிள்ளையவர்களின் மாளிகை வாசலில் வந்து நிற்பதை ராமோஜி கவனித்தான்.

நீளத் தலைப்பாகையும், சீராக வெளுத்து உடுத்த பாளைத்தார் வேட்டியும் காதில் கடுக்கனுமாக நடுவயது ஆடவர் ஒருத்தர், வைத்தியர் மாதிரி தெரிந்தவர், வீட்டுக்குள் போக அவசரம் காட்டினார்.

‘ஐயா, பிள்ளையவர்கள் உடல் நலம் சற்றே குன்றி ஓய்வில் இருக்கிறார்கள். இப்போது அவரை சந்திக்க ஏலாது. எப்போது அவர் சுபாவமாக ஆரோக்கியம் கொண்டு இருப்பாரோ அப்போது வந்து சந்திக்கலாம்’ என்றான் ராமோஜி.

வந்தவர் சங்கடத்துடன் நிற்க, ‘சந்தர்ப்பம் கிட்டுமா என்று சந்தேகமே படவேண்டாம். என்னை வந்து பார்த்தால் நான் அனுமதி வாங்கித் தருவேன்; ராமோசி ராயன் என்றால் எல்லோருக்கும் தெரியும். பிள்ளைவாளுக்கு அணுக்கத் தொண்டன். நானும் புடவைக் கிடங்கு வைத்து சாயம் தோய்த்து பல தேசத்துக்கு அனுப்பி வியாபாரம் செய்கிறேன்’ என்றான் அவன்.

வந்தவர் மேல், ராத்திரியிலும் குளிரக் குளிர ஐவ்வாது வாடை அடித்தது. அவர் ராமோஜியிடம் சொன்னார் – ‘ஐயா நானும் ராயன்தான். கவிராயன். அருணாசலக் கவிராயன் என்று என்னை அழைப்பார்கள். பிள்ளைவாள்

அவர்கள் ஊக்கம் கொடுத்த படி ராமநாடகக் கீர்த்தனைகள் என்று முழு ராமாயணத்தையும் தனித்தனி ராகத்தில் அமைந்த பாடல்களாகப் பாடி இருக்கிறேன்.’

இங்கே நிறுத்தினார். பிள்ளைவாள் வீட்டு விளக்குகள் அணைக்கப் பட, அவர் பெயர் கொண்ட அந்தத் தெரு முழுக்க இருட்டிலும் மௌனத்திலும் ஆழ்ந்தது.

‘நல்லது, தெய்வானுக்ரஹம் இருந்தால் சீக்கிரம் மீண்டும் சந்திப்போம்’ என்று சொல்லி ராமோஜி நடக்க ஆரம்பிக்க கவிராயர் அவனை நிறுத்தினார்.

‘வாருங்கள், நீங்கள் போகுமிடத்துக்கு உங்களைக்கொண்டுபோய் விட்டுப் போகிறேன்’, கவிராயர் வண்டிக்குள் உட்கார இடம் ஒதுக்கிக் கொடுத்தார்.

‘நீங்கள் வில்லியனூரில் இருந்து வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்’, ராமோஜி வண்டியில் போனபடி அவரிடம் விசாரித்தான்.

‘நான் இந்தப் பக்கமே இல்லை. தென்காசியில் வசித்து வருகிறேன். பிள்ளையாரிடம் நூலை வாசித்துக்காட்டி, இயன்றால் சில கீர்த்தனை களைப் பாடிக்காட்டிப் போகலாம் என்று வந்தேன்.’

ராமோஜிக்கு பொறி தட்டியது. முரட்டாண்டிச் சாவடி. ராம நாடகம். இரண்டும் எங்கோ சந்திக்கின்றன. அவனுக்கு மனதில் விளக்கும் எரிந்தது.

‘கவிராயரே தாங்கள் எங்கே ராத்தங்கி இருக்கிறீர்கள்? சௌகரியங்கள் நல்ல வண்ணம் உள்ளனவா?’

‘அம்பலத்தாடியார் மடத்தெரு சத்திரத்தில் ஒரு ரூபாய் கொடுத்து தனியாக இருக்க ஓர் அறை கொடுத்திருக்கிறார்கள். பிள்ளையவர் களைக் கண்டபிறகுதான் ஊர் திரும்ப வேண்டும்.’

ராமோசி ராயன் தன்னைப்பற்றியும் சுருக்கமாகச் சொன்னான் – ‘மூன்று தலைமுறை முன் தஞ்சாவூரிலும் மேற்கு கடற்கரையில் சுவர்ணதுர்க்கத்திலும் வசித்திருந்த குடும்பம் என்னுடையது. கனோஜி ஆங்கரே என்று கேட்டிருப்பீர்களே. அந்த கடற்படை மகா அதிகாரிக்கு நேர்கீழ் ராணுவ உத்தியோகம் செய்த தளபதியின் வாரிசு நான். காரைக்காலில் பிரஞ்சு தேர்ந்து, அதோடு கூட தமிழ், இங்க்லீஷ் என்று மூணு மொழியில் பரிச்சயம் உள்ளதால் பிள்ளையவர்கள் அனுமதிப்படி

அவருக்கும் கவர்னர் துரைக்கும் கபுறும் கடுதாசியும் மொழிபெயர்த்துத் தருகிறேன். என்னை பிள்ளைவாள், பிள்ளைமாராக ஜாதியில் இல்லா விட்டாலும், தாயாதி பங்காளி சம்பந்தம் இல்லாவிட்டாலும், உறவாகக் கண்டு தக்க தருணத்தில் வழிகாட்டிக்கொண்டிருக்கிறார். கல்யாணம் ஆகி, ரெட்டைப் பெண் குழந்தைகளும் பெற்று வளர்த்து மனைவியையும், குழந்தைகளையும் எட்டு வருஷம் முன் படகுப் பயணத்தில் ஏற்பட்ட பெரும் விபத்தில் பறிகொடுத்தேன். என் துன்பம் என்னோடு இருக்கட்டும். நீங்கள் ஓய்வெடுங்கள்' குரல் கம்ம, ராமோஜி பேசி நிறுத்தினான்.

கவிராயர் நான்கு தலைமுறையாக குற்றாலத்திலும் மேலகரத்திலும் தென்காசியிலும் நெல்லையிலும் வசிக்கும் சிறு நிலச்சுவான்தார்களின் குடும்பம். அவர் குடும்பத்தில், நாலு தலைமுறையாகக் கவிராயர்கள் உண்டு. இசையிலும் ஈடுபாடு உள்ள குடும்பம் அது.

நிறைய அந்தாதிகளும், கோவையும், கலம்பகமும், பிள்ளைத் தமிழும், தல புராணங்களும் பாடியிருக்கிறாராம் கவிராயர். 'தற்போது, ராமாயணத்தை கீர்த்தனங்களாக யாத்திருக்கிறேன்' என்றார் அவர்.

'மிக்க சிறப்பாக இருக்கும். நான் அதில் ஒன்றிரண்டு கேட்க முடியுமா? என் வீட்டுக்குப்போய் ராப்போஜனம் முடித்து அம்பலத்தாடியார் மடம் போவோமே. நான் இருக்கும் வைசியாள் தெருவிலிருந்து நடந்து போகிற தூரம்தான்.' ராமோஜி ஆர்வத்தோடு கவிராயரைக் கேட்டான்.

கவிராயர், வரலாமே என்று சொல்லிவிட்டார். அவருடைய கீர்த்தனங்களைப்பற்றி ஈடுபாட்டோடு கேட்கிறவர்கள் குறைவு என்பதை அறிவார். கேட்கப் பிடிவாதமாக முன்வந்தால், அதுவும் அதிகார பீடத்துக்கு அருகே இருக்கக்கூடிய இந்த ராமோசி ராயர் போன்றவர்கள் கேட்க விழைந்தால், நல்ல காலம்தான் வந்து கொண்டிருக்கிறது.

வீட்டுக் கதவைத் திறந்தான் ராமோஜி. ஓரிழை தூசி வாடை வீசியது உள்ளே. சுவாமி இடத்தில் காலையில் வைத்த தீபம் எப்போதோ அணைந்து இலுப்பெண்ணெய் நெடி சூழ்ந்திருந்தது. அந்த விளக்கை ஒளிரவிட்டான். நான்கு மெழுகு திரி விளக்குகளை மாடங்களில் சுடர் கொளுத்தி வைத்தான்.

'தயக்கம் ஏதுமின்றி உள்ளே வாருங்கள். தனியாகத்தான் இருக்கிறேன். இது பரம்பரையாக வரும் வீடு. என் குடும்பம் கப்பலில் துணி அனுப்பி வியாபாரம் செய்ததை இந்தத் தலைமுறையில் நான் தொடர்ந்து

செய்கிறேன். நஷ்டம் இல்லை. பெரிய லாபமும் இல்லை. சராசரி வருமானம். அவ்வளவுதான்...'

ராமோஜி வீட்டுக் கூடத்தில் கவிராயரை இருத்திவிட்டு ஜன்னல் எல்லாம் விரியத் திறந்து வைக்க கடல்காற்று வீட்டை நிரப்பியது. அவன் தோசை வார்த்துக்கொண்டு வந்ததும், எள் எண்ணெயில் குழைத்த மிளகாய்ப்பொடி தொட்டுக்கொண்டு இரண்டு பேரும் இருந்து கடல் வாசனையோடு உண்டதும் அடுத்து நடந்தது.

அம்பலத்தாடியார் மடத்தெருச் சத்திரத்தில் நள்ளிரவுவரை ராகத்தோடு பாட்டுச் சத்தம் கேட்டது. கணீரென்ற குரலில் 'ராமனுக்கு மன்னன் முடி தந்தாலே' என்று ஹிந்தோளமும் 'ஆரோ இவர் ஆரோ' என்று பைரவியும், 'ராகவனே சரணம், ரகுராமா உன் சரணம்' என்று புன்னாகவராளியும், 'அக்னி பகவானே, வருத்தாதே அனுமனை' என்று ஆனந்த பைரவியும் கவிராயர் குரலாகப் பரவ, அந்த இசையிலும் தமிழிலும் மூழ்கி தன்னை மறந்து அமர்ந்திருந்தான் ராமோஜி.

'ராமநாடக கீர்த்தனைகளை ஒரு குழுவாக அமர்ந்து பாடிப் பிள்ளையவர்களிடம் இருந்து பரிசும், சாற்றுகவியும் வாங்க உத்தேசம்' என்றார் அருணாசலக் கவிராயர்.

'இத்தனை அற்புதமாக எழுதிவிட்டுப் பாடினால் மட்டும் போதுமா?' என்று கேட்டான் ராமோஜி.

'இந்த ராம நாடகம் தமிழ் பேசும் பிரதேசம் எங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் போய்ச் சேரணும் ஐயா. ஆயிரம், லட்சம் ஜனத்துக்கு இது கிடைக்கணும்.'

அவன் சொல்ல, வார்த்தை தடுமாறி உணர்ச்சிவசப்பட்டு கவிராயர் அவனைக் கட்டிக்கொண்டார்.

'சகோதரரே அது நடக்குமா? கண் இல்லாதவன் ராஜபார்வை பார்க்க ஆசைப்படுவதுபோல் இல்லையா?' என்றார்.

'நடக்கும். நான் இந்த வாரத்தில் ஒரு தீர்வு தருகிறேன்... கொஞ்சம் பொறுமை காக்க முடியுமா?' என்றான் ராமோஜி. கவிராயரும் தஞ்சை போய் மராட்டா அரசரைக் கண்டு ராம நாடகம்பற்றி எடுத்துச் சொல்லி வர திட்டம் போட்டிருந்தார். அவர் புதுவை வந்துதான் தென்காசிக்குத் திரும்பப் போக

இருந்தார் என்று அறிய ராமோஜிக்கு ஆறுதலாக இருந்தது. அதற்குள் நல்லதாக ஏதும் நடக்கலாம் என்று தோன்றியது அவனுக்கு.

வீட்டுக்கு வந்து வெகுநேரம் 'ஆரோ இவர் ஆரோ' என்று மனதில் யாரோ பைரவி பாடிக்கொண்டிருந்தார்கள். கூடத்துச் சுவரில் ராமோஜியின் மனைவியும், புதல்விகளும் சிரித்தபடி அமர்ந்திருக்கும் ஓவியத்தில் இருந்து அந்தக் குரல் வருவதாகக் கற்பனை செய்தான் அவன். கண்ணில் நீர் திரையிட, ஓவியத்தைக் கையிலெடுத்துத் தடவிவிட்டு, 'சீக்கிரம் வந்துடறேன்' என்று சொல்லி திரும்ப வைத்து உறங்கப் போனான் ராமோஜி.

விடிந்ததும் ஒரு குதிரை வீரன் ராமோஜி வீட்டு வாசலில் பரபரப்போடு குதிரை வண்டியை நிறுத்தி குதிரையைக் கனைத்துச் சத்தமிட வைத்தான்.

என்ன கூச்சல் என்று ராமோஜி பார்க்க, கவர்னரின் உத்தியோகஸ்தன் சொன்னான் – 'பண்டிதரே, உங்களை துரை உடனே கூட்டி வரச் சொன்னார். முரட்டாண்டிச் சாவடியில்தான் இருக்கிறார். வாரும், நேரம் தப்பினால் அவருக்கு கோபம் வரும்.'

அவசர அவசரமாக ராமோஜியை வண்டியில் அடைத்துக்கொண்டு அவன் புறப்பட்டுப் போனான்.

கவிராயரிடன் சொல்லிக்கொள்ளாமலேயே புறப்பட்டாகிவிட்டது. அத்தனை அவசரம் என்னமோ. தாற்காலிக துபாஷாக இருக்கும் போதே இப்படி அடித்துப் பிடித்து ஓட வேண்டியிருக்குமானால், நிரந்தர ஸ்தானம் வகிக்கிற பிள்ளையவர்கள் நாளும் பொழுதும் சதா அழைப்புக்காக எதிர்பார்த்து இருப்பார் இல்லையோ.

இந்த அவசரத்திலும் பரபரப்பிலும் அவருக்கு நாட்குறிப்பு எழுதவும் சங்கீதம் கேட்கவும் செய்யுள் சிலாகிக்கவும் வசதிப்படுகிறது. மெல்லிய புடவைத்துணியும், முரட்டுத் துணியும் சாயம் தோய்த்து அவருடைய கப்பலான ஆனந்தப் புரவியில் கொண்டுபோய், பிரான்சுக்கும் வேறு நாடுகளுக்கும் கடலோடிப்போய் விற்க நடவடிக்கை எடுக்க முடிகிறது.

நேற்று ராத்திரி அருணாசலக் கவிராயர் சொன்ன பாடல்களுக்கு ராமோஜி இன்னும் கூடுதல் தனவானாக இருந்தால் பாட்டுக்கு ஒரு வராகன் தங்கம் அன்பளிப்பாகக் கொடுத்து மரியாதை செய்திருப்பான்.

‘பாமரமே உனக்கென்னடி பேச்சே...’ அடடா கூனியை இதைவிட இனிமையாக யார் திட்டுவார்? கைகேயியின் இந்தோளம் கேட்டால் ராமன் காட்டுக்குப் போனால் போகட்டும் என்று விட்டுவிட்டு கேட்டுக்கொண்டே இருக்கத் தூண்டுமே. அந்தப் பாடலை தோடியில் தான் பாடினார் கவிராயர். இந்தோளம் இன்னும் பொருத்தமாக இருக்குமே என்று ராமோஜி சொன்ன யோசனையை உடனே நடப்பாக்கிக் கொண்டார் அவர்.

முரட்டாண்டி சாவடி வந்தாகிவிட்டது. அடங்கொப்... துயுப்ளே பேட்டை வந்தாச்சு.

‘துரை உங்களை உக்கார சொன்னார்’ என்று பாரா காவல் வீரர்களின் தலைவன் கிரிமாசி பண்டிதன் சொல்லிவிட்டுத் திரும்பிப் போனான்.

துரை விடிகாலையிலேயே இங்கே கிளம்பி வந்துவிட்டார்போல. கோயிலுக்குப் போய் பூசை வைக்கிற சீலத்தை என்ன காரணமோ இந்த வாரம் வேண்டாம் என வைத்திருக்கிறார். அவரா வந்தார்? வைகாசி மாத வெய்யில் விரட்டி அடித்திருக்கிறது அவரை தோப்பையும் துரவையும் தேடி.

நடுப்பகலுக்கு துரைசானி ஆகாரமும் குடியும் எடுத்துக்கொண்டு, கூடவே தோழிப் பெண்டுகளான நான்கைந்து துரைசானிக் குரங்குகளோடு வந்து சேர்வாள். அதுவரை துரைக்கு தனியாட்சிதான்.

ராமோஜி போய்ச் சேர்ந்தபோது, தியூப்ளே துரை உள்ளே இருந்து ரொட்டியைக் கடித்துக்கொண்டு திரை விலக்கி எட்டிப் பார்த்தார். வாய் நிறைய ஆகாரத்தை வைத்துக்கொண்டு ராமோஜியைப் பார்த்து இரு வந்துடறேன் என்று சைகை காட்டினார். முழுக்க முழுங்கிய பிறகு கூடாரத்துக்குப் பின்னால் கை காட்டினார். அசிங்கம், ஆபாசம் என்றார், பிரஞ்சு மொழியில். அங்கே என்ன இருந்தது அப்படிக் குமட்டலெடுக்க? கிழிந்து ஒட்டுப்போட்ட கூடாரத் துணிதான் ராமோஜிக்குக் கண்ணில் பட்டது.

கிரிமாசி பண்டிதன் ஓரத்தில் கைகட்டி நின்று முக வார்த்தையாகச் சொன்னது – ‘துரையவர்களே, காலையில் நீங்கள் வந்த வழியிலே ஓரமாக குத்த வச்சிருந்த எட்டு பேரையும் கையும் காலும் விலங்கு போட்டு கூடாரத்துக்குப் பின்னால் உட்கார்த்தி வைத்திருக்கிறோம். குண்டி உலர்ந்து போச்சு. தண்ணீர் கொடுத்தால் கழுவிக்கொண்டு இன்னும் காத்திருக்கிறோம் என்கிறார்கள் அவர்கள். பக்கத்தில் போக முடியலை. நரகல் வாடை.’

கிரிமாசி பண்டிதனின் கண்ணில் புன்சிரிப்போ விஷயத்தின் கோமாளித்தனம் படிந்த பெருஞ்சிரிப்பை அடக்கிய பிரயத்னமோ தெரிந்தது.

துரையின் புகார் இது – அவர் காலையில் நிம்மதியாக பொழுது போக இங்கே வந்தபோது, பிருஷ்டத்தைக் காட்டிக்கொண்டு இத்தனை பேர் வெட்டவெளியில் குத்த வைத்திருந்தால், அவர் இல்லாத நேரத்தில் இந்தப் பாதை முழுக்க குதங்கள்தானே கண்ணில் படும்? அதுவும் அவருக்குப் பிரியமான தியூப்ளே பேட்டையில் இந்த விபரீதம் நடந்தால், மற்ற இடங்களில் எப்படி இருக்கும்?

‘முசியெ பெனுவா பியெ தூமா என்ற நம் மரியாதைக்குரிய தூமா துரை கவர்னராக இருந்த காலத்தில் இப்படி கடற்கரையில், சம்பா கோவிலுக்குத் தெற்கே உப்பாற்றங்கரையிலே மலஜலம் கழித்தால் ஆறு பணம் அபராதம் என்று சட்டம் போட்டது என்ன ஆச்சு?’ துரை ஆவேசத்தோடு கேட்டார்.

ராமோஜிக்குப் புரியவில்லைதான் – அவனவன் குந்தாணி குந்தாணியாக பேண்டு வைக்கவா ராஜபாட்டை போட்டு வில்லியநல்லூருக்கும் பாகூருக்கும் ஏன் கடலூருக்கும்கூட எந்தச் சிரமமும் இல்லாமல் போகவர வசதி செய்து கொடுத்தது? இவன்கள் தெருவில் குத்த வைக்காமல் தினசரி வெளிக்கு இருக்க வீட்டில் கக்கூசு அமைத்துக்கொள்ள என்ன தடசம்பற்றியது?

தியூப்ளே துரை ராமோஜியை துச்சமாகப் பார்த்துக் கையை தூரத்தைச் சுட்டி அசைத்துச் சொன்னார் – ‘போய் அவங்ககிட்டே எடுத்துச் சொல்லிட்டு வாரும்... இந்த தடவை மன்னிச்சுவிட்டுடறேன்... அடுத்த தடவை இந்த பிருஷ்டங்களை காட்டினால் ஆளுக்கு பத்து கசையடி, ஐம்பது பணம் அபராதம்... இதை புதுச்சேரி பிரதேசம் முழுக்க நியமமாக ஏற்படுத்தினேன்.’

தன் அதிகார எல்லைக்குள் புதுசாக ஒருத்தன், தற்காலிகம் என்றாலும் சாமர்த்தியமாக ஆனந்தரங்கம் பிள்ளை பெயரைச் சொல்லிக்கொண்டு நுழைந்து அதிகாரம் செலுத்தலாச்சே என்ற கோபமும், வெறுப்பும் கிரிமாசிப் பண்டிதனின் பார்வையில் தெறித்துக் கடந்து போயின.

துரை அடுத்த வேகவைத்த முட்டையில் மிளகு கலந்தபடி இருக்க, ராமோஜி கூடாரத்துக்குப் பின்னால் போனான். கிரிமாசி பண்டிதன் உன்னத உத்தியோகஸ்தனாக அவனுக்கு முன் மேட்டிமையோடு நடந்து போனான்.

‘நானே சொல்கிறேன். நீர் இதெல்லாம் பழகாதவர். அதுவும் ஒருநாள் கூத்துக்கு குண்டி அலம்பிவிட வந்தவர். சும்மா இரும். நான் பார்த்துக்கறேன்.’

‘சிவசிவ. நான் பேசுகிறேன் என்று எங்கே சொன்னேன். துரை ஆக்ஞை பிறப்பிச்சார். நான் தலையாட்டினேன். அவசரம் என்று அடித்துப் பிடித்து ஓடி வரச் சொன்னதால் அல்லவோ வந்தேன்’ என்றான் ராமோஜி.

கூடாரத்துக்குப் பின்னால் நின்றபடிக்கும் தரையில் உட்கார்ந்த படிக்கும் பதினைந்து பேராவது இருந்தார்கள். அத்தனை பேருமா துரைக்கு பிருஷ்ட தரிசனம் செய்வித்தது? இல்லையாம், துரை புது உத்தரவாக யாரும் வெளிக்கு போகக்கூடாது என்று கிரமம் செய்த அரை மணி நேரத்தில் அங்கங்கே பிடிபட்டவர்களாம். கிரிமாசி பண்டிதனின் காலாள் காவல் படை அதிரடியாக அவர்களைப் பிடித்த வேகத்தை அவன்தான் மெச்சிக்கொள்ள வேண்டும்.

பிடிபட்ட எல்லோரையும் ஏன் முரட்டாண்டி சாவடிக்குக்கொண்டு வரணும் என்று அங்கே யாரும் கேட்கவில்லை. யாருக்குமே ஏனென்று தெரியாது.

‘கேளுங்க. துரையோட உத்தரவு’ அவர்களுக்கு முன்னால் நின்று கிரிமாசி பண்டிதன் பேசத் தொடங்கினான். தமிழ் சனங்களின் அசிங்கமான பழக்கம் எதெல்லாம் என்று என்று பட்டியல் போட ஆரம்பித்து பாதியில் மேலே எப்படி பேச என்று நிச்சயமாகத் தெரியாமல் நிறுத்திப் போட்டு ராமோஜியைப் பார்த்தான். நீ பேசு என்று அதற்கு அர்த்தம்.

தியூப்ளே துரை கருணை காட்டி அவர்களைத் தண்டனை இல்லாமல் விட்டுவிட்ட நல்ல செய்தியில் ஆரம்பித்தான் ராமோஜி. ஆசனம் நனைந்திராத மற்ற சந்தர்ப்பமாக இருந்தால் அவர்கள் தகவலை ஏற்று வாங்கி கரகோஷம் செய்திருப்பார்கள்.

அந்தப் பதினைந்து பேருடைய பெயரும், நடந்ததற்கு மன்னிப்பு கேட்டு ஒரே லிகிதமாக எழுதி, விலாசமும் தொழிலும் பதிந்து வைக்கலாம் என்று கிரிமாசி பண்டிதன் சொன்னபோது, காகிதம் இருந்தால் துடைத்து சுருட்டிப் போட்டு போயிருப்போமே என்றான் அவர்களில் ஒருத்தன்.

அதுவும் நியாயம்தான் என்று ராமோஜி ஒவ்வொருத்தருக்கும் முக வார்த்தையாக இனி இப்படி செய்யாதீர் என்று சொன்னபோது அதில்

ரெண்டு பேர் கூத்துக்கு மத்தளமும் மிருதங்கமும் இசைக்கிறவர்கள் என்றும் இன்னொருத்தன் புல்லாங்குழல் வாசிக்கிறவன் என்றும் தெரிந்தது.

அரியாங்குப்பம் பட்டாமணியக்காரர் மகளுக்குத் திரண்டுகுளி வீட்டு விசேஷத்தில் நேற்று ராத்திரி வினிகை [கச்சேரி] நடத்தவந்து திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்களாம். தடபுடலான நேற்றைய ராத்திரி விருந்து இந்தக் காலை நேரத்தில் வயிற்றோடு பிரியாவிடை பெற்று வெளியேற அவசரப்பட்டதால் உடனடியாகச் சாலையோரமாகக் குத்த வைத்ததாகச் சொன்னார்கள் அவர்கள் எல்லோரும்.

இன்னும் இரண்டு நாள் முதலியார்பேட்டை டேராவாம். பக்கத்தில் பாலையர் மட சத்திரத்தில் ஜாகையாம். சரி சந்திக்கிறேன் என்றான் ராமோஜி. எதற்கு சந்திக்கணும் என்று கேட்கவில்லை யாரும்.

அதற்குள் நாலு கடைகால் நிறைய தண்ணீரைக்கொண்டுவந்து பித்தளைச் சொம்போடு வைத்துவிட்டுப் போக ஏற்பாடு செய்தான் ராமோஜி. அவர்கள் கால் கழுவிச் சுத்தப்படுத்திக்கொண்டு, கொஞ்ச நேரம் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்புறம் அனுப்பிவித்துக்கொண்டு போனார்கள்.

அதில் ஒருத்தன் மட்டும் இவ்வளவு தூரம் தண்ணியும், சொம்பும், தோப்பு நிழலும், வெற்றிடமும் இருக்கே, நான் போய்விட்டு வரட்டுமா என்றபடி தூரத்தில் மூலையில் உட்கார எழுந்து போனான்.

ராமோஜி திரும்ப கூடாரத்துக்கு வந்தான். கபே குடித்துக் கொண்டிருந்தார் தியூப்ளே.

‘நீர் ஊர்ப்பெயரை சொல்ல பாட்டு கட்டி, புதுசாக சதுர் செய்வித்து ஊரோடு பாட ஆட வைத்து தெரிஞ்சதாக்கும்போது, இப்படி கண்ட இடத்தில் குத்த வைத்து மூத்திரமும் நரகலும் போவதும் உசிதமானதில்லை என்று அதிலே இன்னொரு பாட்டாக எழுதிப் போடும். ஆட்டமும் உசிதம்போல வரட்டும்.’

துரை மகா பெரிய விஷயத்தைத் தீர்மானித்த திருப்தியோடு காலை ஆகாரம் முடித்து அலமுசும் செய்தபின் புகைச் சுருட்டு பற்ற வைக்க, ராமோஜி கூடாரத்துக்குக் கணிசமான தூரத்தில் உத்தியோகஸ்தர்கள் நின்றும், ஜமுக்காளம் விரித்தும் உட்கார்ந்திருந்த மரநிழலுக்குப் போனான்.

துரை வெளியே கிளம்பினால் நமக்கும் வேலை பார்க்கும் நாள்தான். இப்படி அலுத்தபடி சில ஒபிசியேக்கள் அடுத்து துரை கூப்பிடுவாரா என்று பார்த்தபடி

உட்கார்ந்திருக்க, அவனும் அந்தக் கூட்டத்தில் கலந்தான்.

எங்கிருந்தோ கலகல என்று சிரிப்பும் வளையல் குலுங்குகிற சத்தமும் கேட்டது.

தலை நிறைய அடர்ந்த குடுமி வைத்த, காதுகளில் தங்கக் கடுக்கன் அணிந்து மீசை மழித்திருந்த ஒரு மனுஷனும், கூடவே நல்ல யௌவனமும் சௌந்தரியமுமாக ரெண்டு கன்யகைகளும், கொஞ்ச தூரம் தள்ளி நின்று கொண்டிருந்தார்கள். ராமோஜியின் பார்வை விழுந்ததும் அந்தப் பெண்டுகள் ஒரே நேரத்தில் முகவாயைத் தோளில் இடித்துக்கொண்டு பழிப்புக்காட்டி ஒருத்தி மற்றொருத்தியைக் கன்னத்தில் தட்டிச் சிரித்தது அதிசுந்தரமாகத் தெரிந்தது ராமோஜிக்கு. அவன் மகள் ரெண்டு பேரும் இப்போது இருந்தால் இந்த வயசாகத்தான் இருக்கும். கண்கள் கண்ணீரால் நிறையப் பார்வையைத் திருப்பிக் கொண்டான் ராமோஜி.

பெண்டுகள் கூட வந்திருந்த குடுமிக்காரன் ஒரு வினாடி ராமோஜியை உற்று நோக்கி பக்கத்தில் வந்தான். தணித்த குரலில் கேட்டான் – ‘பத்துஜி ராயரின் புத்திரன் ராமோஜி ராயரில்லையோ நீங்கள்?’

‘ஆமாம்’ என்றான் ராமோஜி ஆர்வமாக. இந்தப் பெண்டுகள் யார் எங்கிருந்து வருகிறார்கள் என்று தெரிந்துகொள்வது ரசமாகவிருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது.

‘நான் விட்டோபா ராவ். இவர்களுக்காக விட்டல ராயன் ஆகியிருக்கிறேன். சதிராட்ட நட்டுவன். பெண்டுகளுக்கு சதிரும் பாட்டும் வீணை மீட்டவும் கற்பித்து வருகிறேன். புதுச்சேரி நீடாராஜப்பய்யர் தெருவில் ஜாகை. உங்களைச் சந்தித்ததில் மெத்த சந்தோஷம்’ என்றான் வந்தவன்.

அதெல்லாம் சரிதான், இந்தப் பெண்டுகளோடு முரட்டாண்டி சாவடி வந்த நோக்கம் என்னவோ என்று ராமோஜி கேட்க அவன் மந்தமாகப் புன்னகைத்தான்.

‘துரைக்கு உல்லாச வேளைகளில் பாடி ஆடப் பெண்டுகள் வரணும். வேறே எந்த தப்பு தண்டாவுக்கும் போகிற மனுஷர் இல்லை அவர். துரை முரட்டாண்டி சாவடி வரும்போதே ஒரு சிப்பாய் வந்து நாலு பொண்ணு ரெண்டு மத்தளம் என்கிற மாதிரி அதிகாரமாகச் சொல்லிவிட்டுப் போவான். நான் இவர்களில் யார் வீட்டுக்கு விலக்காகாமல் இருக்கிறார்கள் என்று

அறிந்து மற்றவள் ரெண்டு மூணு பேரைக் கூட்டி வரணும். மற்றபடி இது தாய்மாமன் வேலை எல்லாம் இல்லை', – விட்டல ராயன் சொன்னான்.

ராமோஜியோடு விட்டல ராயனும் சிரித்தான். ரெண்டு பேரும் விட்டல ராயன் கொண்டுவந்த அடைப்பத்திலிருந்து புகையிலை உருட்டிப் போட்டுக்கொண்டார்கள். வெற்றிலை வேணாமென்று விட்டான் ராமோசி ராயன். அது கிருஹஸ்தர்களுக்கானது. பாக்கோடு சேர்ந்து ஒரு லகரியை உண்டாக்கி மற்ற லகரிகளையும் தேடி ஓடச் செய்யும். ராமோஜி இல்லறத்தான் இல்லை. எதுவும் இல்லாதவன். புகையிலை போதும் அவனுக்கு.

'நான் நாலு பாஷை தமிழ், தெலுங்கு, மராட்டி, இந்துஸ்தானி, ஏன் பிரஞ்சும் படித்திருக்கேன். அந்தப் பெண்டுகளுக்கும் தமிழும் தெலுங்கும் இங்க்லீஷும் நல்ல பழக்கம். அவ்வப்போது பட்டணம் போக வேண்டி இருப்பதால் இங்க்லீஷ் கற்பிக்க ஏற்பாடு செய்தேன். சங்கீதத்திலும் சதிரிலும் கடுமையான பயிற்சி ஐந்து வயதில் இருந்தே பெற்று வருகிறவர்கள். இந்த கிறுக்கன், குரங்கு மூஞ்சி துரைக்காக லெச்சை கெட்ட கூத்தாக அதுகள் ஆடவும், நான் அப்படிப் போடு – போடு என்று வினோத ஜதி சொல்லவும், சீழ்க்கை அடிக்கவும், காவாலித்தனமாக பாடவும் வேண்டிய கட்டாயம்.'

விட்டலராயன் சிரித்துக்கொண்டே கண்கலங்க, அவன் தோளில் தட்டினான் ராமோஜி. அவனுக்கு இன்னொரு பொறி தட்டியிருந்தது.

அந்தப் பெண்டுகளை பக்கத்தில் அழைத்து விட்டல ராயன் யார் இன்னார் என்று சொன்னபோது ராமோஜி முகத்தில் வாத்சல்யம் தோன்றியது. அவனுடைய புத்ரிகள் இன்னும் உயரமாக இருப்பார்கள். பாடுவார்கள், ஆட்டத்தை ரசிக்கத் தெரிந்திருக்கும். அவர்களுக்குக் கல்யாண ஆலோசனை வந்திருக்கும். இந்தப் பெண்களுக்கு நித்திய கல்யாணமன்றோ பாவம்.

அதில் கொஞ்சம் பெரிய பெண் ரத்னா என்றும், குழந்தைத்தனம் போகாத முகக் களையோடு இருந்தவள் புவி என்ற புவனலோசனி என்றும், சன்னியாசிப்பேட்டை தேவதாசி லட்சணம்மாள் குடும்பத்தில் பட்ட பெண்கள் ரெண்டு பேரும் என்றும், காரைக்கால் கைலாசநாதன் கோவிலிலும் வேதபுரீஸ்வரர் கோவிலிலும் ஆட சன்னத்து வாங்கியவர்கள் இவர்கள் என்றும் ராமோஜியிடம் விட்டல ராயன் சொன்னான்.

‘ராமோஜி அண்ணார் காலைத் தொட்டு ஆசிர்வாதம் வாங்கிடுங்கோ குமர்களா.’ விட்டல ராயன் சொல்ல அந்தப் பெண்டுகள் குனிந்து வணங்கினார்கள். பிரியத்தோடு வாழ்த்தினான் ராமோஜி.

துரை, வந்திருந்த அதிகாரிகளை முகம் சுளித்துப் பார்த்தார்.

‘என்ன எழவுக்கு இங்கே கூட்டமாக வந்தது? வீட்டுக்குப்போய் அவனவன் பெண்டாட்டியோடு சுகித்துக்கிடந்து நாளை வரச் சொல்லு.’

அவர் அங்கே வெட்டியாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்த உத்தியோகஸ்தர்கள் எல்லோரையும் திருப்ப அனுப்பச் சொன்னதாக கிரிமாசி பண்டிதன் வந்து சொன்னான். ஆக, கிட்டத்தட்ட கூடாரம் காலி என்ற நிலையில் ஆகாரம் வந்து சேர்ந்தது.

துரை உட்கார்ந்தபடிக்கே தூங்கி ஓய்வெடுத்துக்கொண்டிருந்தபோது, கிரிமாசி பண்டிதன்போய் வணங்கி நின்றான்.

‘ஆகாரம் வந்தாச்சு, அதானே?’

துரை புகைக் குழாயை சித்தம் செய்ய ஒரு சிப்பாயை ஏவியபடி விசாரித்தார்.

‘ஆமாம், அது தவிரவும் கபுறு உண்டு மகாப்ரபோ.’ எய்ட் த காம்ப் வந்திருந்து கொண்டு சொன்னான்.

‘என்னவோ அது, சொல்லிப்போடு’ கவர்னர் அவனை நோக்கினார்.

எய்ட் த கேம்ப்பை முந்திக்கொண்டு கிரிமாசி பண்டிதன் கபுறு சொன்னான் – ‘துரைசானி வர முடியவில்லையாம். கான்சொலர் முசியெ தொத்தல் துரைகளோட பெண்ஜாதி மதிய விருந்துக்கு வரச்சொல்லி அழைத்திருப்பதாக கடிதாசு அனுப்பி இருக்கிறார்கள்.’

சொன்னபோதே அபத்தம்பற்றியதாக கிரிமாசி பண்டிதனுக்கு புலப்பட நடுநடுங்கி நின்றான். அது அரசாங்க காகித உறையில் வந்தாலும் துரைக்கு துரைசானி எழுதின அந்தரங்கக் கடிதாசு ஆச்சே. எப்படி மற்றவர்கள் படிக்கலானது?

துரை வேறே தினுசாகக் கேட்டார் – ‘ஏனடா கிரிமாசி பண்டிதனே. மூளையை அரைக்குக் கீழே வைத்து அனுப்பி விட்டானா உன்னைப் படைத்தபோது? என் பெண்டாட்டி எனக்கு ரகசிய சந்தேசம்

அனுப்பியிருந்தால் அதையும் படித்துவிட்டு என்னிடமே அது சாதாரணமான கபுறு என்ற தரத்தில் சொல்வாயா. சரி தொலைந்து போகட்டும், இனி அம்மாள் பெயரைக் கண்டால் கடிதாசைப் பிரிக்காமல் அப்படியே என்னிடம் சேர்ப்பித்துவிடு. போய் சாப்பிடு. அளவாகக் குடி.'

துரை நல்ல சந்தோஷத்தில் இருந்ததால் கிரிமாசி பண்டிதன் பிழைத்தான். அதைத் தவிர அவர் மகிழ்ச்சியடைய இன்னொரு காரணமும் உண்டு. துரைசானி வரப் போவதில்லை என்பதால் கிட்டத்தட்ட முழு பிற்பகலும், அந்திப் பொழுதும், முன்னிரவும் துரைக்கு தனியாக நிம்மதி தேடி இருக்கக் கிடைக்கிறது.

சிப்பாய்களில் சுத்தமாகத் தெரிந்த இரண்டு பேர், கையில் விரல் காணாமல் போகும் அளவு கை அலம்பிக்கொண்டார்கள். பிறகு கோழியும், மீனும், பிரியாணி சோறும் இன்னும் பெயர் விளங்காத கும்பினி ஆகார தினுசுகளும் வந்த பாத்திரங்களை எடுத்துப் போனார்கள். துரைக்கு முன் மேஜை போட்டு, எதிரில் சுகமாக வீற்றிருக்க ஒரு நாற்காலியும் இட்டு, விருந்து சாப்பிட ஏற்பாடு செய்தார்கள்.

'நீங்களும் ஆகாரம் செய்யுங்கள்' என்றபடி அவர் கையில் முள் கரண்டியும் கத்தியும், கழுத்தில் துவாலையுமாக உட்கார்ந்தார்.

'போன் அபிதெ.'

அவருக்கு நல்ல பசி உண்டாகட்டும் என ராமோஜி பிரஞ்சு மொழியில் வாழ்த்த, அவர் மெர்சி சொல்லி ராமோஜிக்கும் போன் அபிதெ சொன்னார்.

சிப்பாய்கள், காரியதரிசி, கிரிமாசி பண்டிதன், ராமோசி ராயன், நட்டுவன் விட்டல ராயன், தாசிப் பெண்கள் என்று இருபது பேர் இருக்க, ஆகாரமோ முப்பது பேர் தாராளமாக உட்கார்ந்து சாப்பிட அனுப்பியதாக இருந்தது.

கூடாரத்துக்குப் பின்னால் மரத்தடியில் எல்லோரும் சாப்பிட உட்கார, சோறும், மற்றதும் சமைத்த பாத்திரங்களை கவர்னர் மாளிகையிலிருந்து வந்தவர்கள் அங்கே கொண்டு வந்தார்கள். எல்லோரும் சிறு கூட்டங்களாக அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள்.

கூட இருந்து உண்ண யாருமின்றி, நட்டுவன் விட்டல ராயன் தனியாகக் கோழிக்கால் கடித்துக்கொண்டிருந்தான். ராமோஜி பக்கம் வந்தான் அவன்.

ராமோஜி அந்த ரெண்டு பெண்கள் அருகில் பேசிச் சிரித்தபடி இருந்தான். அவர்களுடைய இருப்பு அவன் மனதை இதமாக நிறைத்திருந்தது.

ஏதோ ஒரு யுகத்தில் அவன் ஞாயிற்றுக்கிழமை பகல் உணவை இந்த புத்திரிகளோடும், பெண்டாட்டியோடும் வார்த்தை சொல்லி இருந்து உண்டிருக்கிறதாக நினைவு. எல்லா நாற்காலிகளும் காலியாக நிற்க, மேலே சாப்பாட்டு ஏனங்கள் ஏதுமின்றி அவன் வீட்டில் தீனிமேசை இன்னும் தூசி படிந்து இருக்கிறது.

அந்தச் சிறு பெண்களுக்கும் அவனுடைய அண்மை பிடித்திருந்தது என்று தோன்றியது ராமோஜிக்கு. அவன் குரலும் செயலும் அவனை ஒரு பிரியம் மிகுந்த தகப்பனாகக் காட்டட்டும் என்று ராமோஜி பிரார்த்தித்தான்.

‘பியென் மாஷே… எல்லோரையும் நிறைய சாப்பிடச் சொல்றார் துரை’

கிரிமாசிப் பண்டிதன் முக்கிய செய்தியாக, தாம்பாளத்தில் கரண்டியால் தட்டிச் சொன்னான். ராமோஜி பக்கத்தில் ரத்னா ரகசியம் பேசும் குரலில், ‘நீ தின்னு. மல்லாக்கொட்டை தலையா. துரைக்கு ஆசனத்தை அலம்பிவிட பெலம் வேணும்’ என்றாள்.

அவர்களோடு ராமோஜியும் புன்னகைத்துக் கலந்துகொண்டான்.

‘முசியே, நீர் என்ன சொல்றீர்… சகலரும் அந்த சேவை பண்ணத்தான் வந்ததா?’

புவி என்ற மற்றவள் நட்டுவனாரைத் துடுக்காகக் கேட்க, இரு பெண்களும் ஒருத்தரை ஒருத்தர் மடியில் தட்டிச் சிரித்தார்கள்.

இப்படியே இன்று பொழுது கழிந்துவிடட்டும் என்று இருந்தது ராமோஜிக்கு. கிரிமாசி லொங்கு லொங்கென்று ஓடி வந்தான்.

‘துரை கூத்து பாக்கணுமாம். போடுங்க… சீக்கிரம்’

அவன் சொன்னபோது கை கழுவி வந்த இரண்டு பெண்களும் பின்னால் இருந்த நட்டுவனாரைக் கூப்பிட்டார்கள். சீக்கிரம் ஆகட்டும் என்றான் கிரிமாசி பொறுமை இழந்து.

‘ஓய் பண்டிதரே, சலங்கை கட்டி வரவாவது நேரம் குடும். கண்மை எழுதலே, தலை வாரலே, சதுர் உடுப்பு போட்டுக்கலேனாலும்

பரவாயில்லையா? நட்டுவனார் வந்து உக்கார்ந்து தாளக்கட்டு ஜதி சொல்ல வேணாமா?’

ரத்னா சீறினாள். அவளுக்குள் இருந்த சந்தோஷமான சிறுமி போன இடம் தெரியவில்லை.

‘ஒரு மண்ணும் வேணாம். துரை வான்னு கூப்பிட்டா வந்து நிக்கணும். ஆடுன்னா ஆடணும். நிறுத்துன்னா நிறுத்தணும்.’

எய்ட் தெ காம்ப் மறுபடி துரை பக்கம் இருந்து கூப்பிட இரண்டு பெண்களும் துரை இருந்த கூடாரத்துக்குள் போனார்கள். மேஜையில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தான் துரை. பக்கத்தில் ராமோஜி மரியாதையாக நின்றுகொண்டிருந்தான்.

‘ஆடுங்கடி’ என்றான் ஒரு சோல்தாது.

‘அடி புடின்னா பல்லு எகிறுடும்’ என்றாள் புவி. ராமோஜிக்கு அவளுடைய கோபம் ரொம்பப் பிடித்துப் போனது.

அழகாக நின்று துரைக்கு சதுர் பாணியில் வணக்கம் சொன்ன பெண்கள் புடவைத் தலைப்பை இடுப்பில் செருகிக்கொண்டார்கள். சாணி வரட்டி தட்டுகிற மாதிரி சொலுதாதுகள் சொத்தென்று கைதட்ட, ஆடத் தெரிந்த இரு பெண்களும் கள் புகட்டப்பட்ட குரங்குகளாகக் குதிக்க ஆரம்பித்தார்கள்.

துரைக்கு பிடிக்கணும்னா பாவாடையை மேலே தூக்கி கால் தெரியணும் என்றான் ஒரு சொலுதாது. ரத்னா அவனை நிமிர்ந்து பார்த்துச் சொன்னாள் – ‘மயிரைப் பிடுங்கச் சொல்லு.’

ராமோஜிக்கு அந்தப் பெண்ணின் கண்ணில் உக்கிரம் தகித்து கூடாரத்தையே எரிச்சுப் போடும் என்று தோன்றியது. ஆடத் தெரிந்தவளையும் பாடத் தெரிந்தவளையும், அதெல்லாம் இருக்கட்டும், ஒரு பெண்ணை, இதைவிடக் கேவலமாக யாரும் அவமானப்படுத்த முடியாது.

தியூப்ளே துரை கைதட்டி நிறுத்தினார்.

நிப்பாட்டு என்று கிரிமாசிப் பண்டிதன் சொல்லியபடி கைவிரித்து நிற்க, துரை அவன் மேல் எச்சில் படிக்கத்தை விட்டெறிந்தார். வடக்கு பிரான்சு கொச்சை பிரஞ்சில் அவர் சொன்ன புழுத்த வசவு ராமோஜிக்குப் புரிந்தது தொடர்ந்து துரை பேசியதும்.

‘என்ன கூத்துடா போடறாளுங்க... தாளம் இல்லே... பாட்டு இல்லே... ஆளுக்கு இருபது கசையடி கொடுக்கச் சொல்லு. இவளுகளோட வாத்தியார் எங்கே? அவனுக்கு பத்து கசையடி தரச் சொல்லு.’

துரை மர்மஸ்தானத்தில் மிளகாய்த்தூள் விழுந்தது போல கத்தினார்.

சிப்பாய்கள் முகத்தில் உடனடியாக சந்தோஷத்தைக் கண்டான் ராமோஜி. இந்தக் களவாணிப் பயல்கள் பார்த்து ரசிக்கவுமாக கவர்னர் சவுக்கடி தண்டனை எல்லாம் வைத்துப் பார்க்கிறார் என்று அவனுக்குத் தோன்றியது. அடுத்தவர்கள், அதுவும் பெண்கள் அடி வாங்குவதில் இந்தப் புடுங்கிகள் பார்த்து மகிழ என்ன உண்டு?

அவன் குரல் உயர்த்தாமல், அதே நேரம், திடமாகப் பேசத் தொடங்கினான் – ‘ப்ரபோ, இவர்கள் எந்தப் பாடலுக்கு ஆடினால் சிறப்பாக வரும் என்பதை தீர்மானம் செய்துகொண்டிருக்கும்போது சமூகம் கூப்பிட்டனுப்பியதால் அதை தேர்வு செய்ய நேரம் கிடைக்காமல் ஆளுக்கு ஒரு பாட்டை நினைத்திருக்க நட்டுவனும் வந்து சேர முடியலை. ஒரு ஐந்து நிமிடம் சிப்பாய்களும் மற்ற அதிகாரிகளும் இவர்களை நிதானமாக வரச் சொல்லியிருந்தால் மனம் கவரும் பாட்டும் ஆட்டமும் அமர்க்களப்பட்டிருக்கும். இப்படி சும்மா குதிக்க அவர்கள் படிக்கவில்லை. நாட்டியத்தை நுட்பமான அபிநயத்தோடு கதை சொல்லும் கலையாகத்தான் எங்கள் மக்களுக்குப் பழக்கம்.’

வடக்கு பிரான்ஸில் வழங்கும் பிரஞ்சு உச்சரிப்பில் ராமோஜி இதைச் சொல்ல, தலையசைத்துக் கேட்டபடி இருந்தார் தியூப்ளே.

துரை சரிதான் என்று சொல்லி ‘இந்தக் குட்டிகளை திடுமென வரச்சொன்ன சிப்பாய்களும் உத்தியோகஸ்தர்களும் ஆளுக்கு நாலு சாட்டையடி வாங்கட்டும்’ என்று புது உத்திரவு போட அவர்கள் எல்லோரும் அந்த ஷணம் நெடுஞ்சாண்கிடையாக துரை காலில் விழுந்து நெற்றியால் நிலத்தை முட்டி சிரமம் காட்டி, பிழைத்துப் போகிறோம் மன்னியுங்கள் என்று மன்றாடினார்கள்.

இந்த காட்சிகளை ரசித்து துரை மதிய உறக்கம் சியஸ்டாவுக்கு கிளம்பிவிட்டார். போகும்போது ராமோஜியைப் பார்த்து நீர் போய் வாரும். முரட்டாண்டி சாவடி விஷயமாக நாளைக்கு தொடரலாம் என்றார்.

நல்லது என்று ராமோஜி அனுப்பிவித்துக்கொண்டு புறப்பட்டு வரும்போது அவன் புத்தியில் புது திட்டம் உருவாகி இருந்தது.

கிராமத்திலிருந்து இரண்டு மாட்டு வண்டிகளைச் சித்தம் செய்து ராமோஜியும் நட்டுவனாரும் ஒரு வண்டியிலும், ரத்னாவும் புவியும் இன்னொன்றிலும் பயணப்பட்டார்கள். வழியில் அருணாசலக் கவிராயரையும் அம்பலத்தாடியார் மடத்துத் தெருவில் பார்த்தார்கள். நல்லவேளை அவர் வேறெங்கும் பயணப்பட்டிருக்கவில்லை. பக்கத்து வைசியாள் தெருவில் ராமோஜி வீட்டுக்கு வர முடியுமா என்று கேட்க அவர் வந்தேன் என்றார் சந்தோஷமாக. அவ்விதமே அவரை வண்டியில் ஏற்றிக்கொண்டு, ராமோஜி வண்டிக்குப் பக்கத்தில் வார்த்தை சொல்லியபடி நடந்து வர, எல்லோருமாக வந்து சேர்ந்தார்கள்

ராமோஜி கவிராயரிடம் சொன்னான் – 'நீங்கள் உங்கள் மகத்தான படைப்பை பாட்டுகளாக பாடி அரங்கேற்ற உத்தேசித்துள்ளீர்கள். அதற்கு முன் பரம ரசிகரான பிள்ளைவாளிடம் பாடிக் காட்டலாம் என்று வந்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு இதை இன்னும் பெரியதாக, நாட்டிய நாடகமாகவே நடத்த பிள்ளைவாள் மூலம் ஏற்பாடு செய்ய முயல்கிறேன். இது பாடியும் ஆடியும் நிறையப் பேரை அடைய வேண்டியது. சங்கீதம் தெரிந்த சிலரை மட்டும் எட்டினால் போதவே போதாது.'

ராமோஜி சொல்லச் சொல்ல, கவிராயர் முகத்தில் பரவசமும் சந்தோஷமும் போட்டியிட்டன.

கவிராயர் காகிதக் கட்டுகளாகவும் ஓலைச் சுவடிகளாகவும் கொண்டு வந்திருந்த கீர்த்தனைகளை அங்கிங்கு இருந்து அவர் எடுக்க, முதலில் வந்தது சரணாகதி கேட்டு வந்த விபீஷணனிடம், தந்தேன் தந்தேன் தந்தேன் என்று ராமபிரான் சரணாகதி அளித்ததாகச் சொல்லும் பரஸ் ராகப் பாடல் –

> கார் உள்ள அளவும் கடல் நீர் உள்ள அளவும் ஈரேழ்
> பார் உள்ள அளவும் என்றன் பேர் உள்ள அளவும்
> தந்தேன் தந்தேன் தந்தேன் தந்தேன்

நட்டுவன் காட்சியை வர்ணித்தான். கவிராயரும் தன் பங்குக்கு விபீஷண சரணாகதியை வார்த்தைகளாகச் சித்தரித்தார்.

சிஷ்யைகள் உடனே சுவரக் குறிப்புகள் பார்த்து தத்ருபம் அவர் நினைத்தபடியே பாடினார்கள். மேடை நிகழ்ச்சியில் இதைப் பாட வேண்டிய பாட்டுக்காரப் பெண்கள் இனி வருவார்கள். குழலும் வீணையும் கூடச் சேரும்.

ரத்னாவும் புவனாவும் ஆட ஆரம்பிக்கும்போது வாசலில் நிழலாடியது. காலையில் குத்த வைத்ததாக சிறைப்பிடிக்கப்பட்ட மிருதங்கக் காரரும், தபலை மிழவு வாத்தியக்காரரும் நின்றிருந்தார்கள்.

‘பிள்ளையவர்களை மரியாதை நிமித்தம் கண்டு வரப் புறப்பட்டோம். அவர் வீட்டில், பிள்ளையவர்கள் மிகத் தளர்ந்து இருப்பதால் இன்று சந்திக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படியே உங்களைப் பார்க்கலாம் என்றும், பார்த்துவிட்டு வேதபுரீஸ்வரர் கோவிலில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து வாசித்து வரலாம் என்றும் புறப்பட்டோம்’ என்றார்கள் அவர்கள்.

‘நல்ல நேரத்துக்குத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள். மிருதங்கத்தையும் தபலையையும் இறக்கி உள்ளேகொண்டு வாருங்கள்’ என்றான் ராமோஜி.

அவர்கள் அவ்வண்ணமே எடுத்து வர அடுத்த பத்து நிமிடத்தில் மிருதங்கம் சித்தமாகி தாளத்தை கிண்ணென்று அறையில் பரப்பியது. தபலா தளுக்கோடும் குலுக்கோடும் அதைப் பின் தொடர்ந்தது. முகத்தை அலம்பிப் பொட்டு வைத்துக்கொண்டு லட்சணமாக வந்தார்கள் ரத்னாவும் புவனாவும். பாட்டு இசைக்கும் பெண்களும் வந்திருந்தார்கள்.

‘ஆரோ இவர் ஆரோ பார்க்கலாமா?’ ராமோஜி ஆர்வத்துடன் கேட்டான். அப்படியே ஆகட்டும் என்று கவிராயர் வரிசையில் பிணைத்து வைத்திருந்த, அந்தப் பாட்டு எழுதிய காகிதத்தை விட்டல ராயன் நட்டுவனிடம் எடுத்துக் கொடுத்தபடி சொன்னார் –

‘மிதிலையில் அரண்மனை கன்னிமாடத்தில் நிற்கும் சீதையை, வீதியில் தம்பி லட்சுமணனோடு நடந்து வரும் ராமபிரான் பார்க்கிறான். அப்போது சீதை நினைப்பதாக வரும் பாட்டு இது.’

நட்டுவன் தட்டவாடியை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டு முன்னால் வைத்தபடி சொன்னான் – ‘ரத்னா ராமனாக இருக்கட்டும். புவி கன்னிமாட சீதை.’

குழலும் வீணையும் பைரவி ராகத்தை இனிமையாக எடுக்க, ராமன் மிதிலை நகர்த் தெருவில் விநோதம் எல்லாம் பார்த்து நடந்து வருகிறான். தெருவைத் தன் பார்வையால் குளிர்வித்தபடி சீதை கன்னிமாடத்தில் நிற்கிறாள். அந்த அற்புதமான கணத்தில் இரண்டு ஜோடி கண்கள் சந்திக்கின்றன. ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவது போல் நோக்க, பார்வையை வேறு திக்கில் திருப்பி மறுபடி சீதையைப் பார்க்கிறான் ராமன்.

சீதை தலைகுனிந்து நின்று அடுத்த வினாடி அவளும் மறுபடி நிமிர்ந்து ராமனைப் பார்க்கிறாள். பாடல் ஒலிக்கிறது –

ஆரோ இவர் ஆரோ என்ன பேரோ அறியேனே
காருலாவும் சீருலாவும் மிதிலையில்
கன்னிமாடம் தன்னில் முன்னே நின்றவர்
ஆரோ இவர் ஆரோ...

அழகான அந்தச் சித்தரிப்புக்கு, நிருத்தம் குறைவாக, உடல் அழகாக வளைந்தும், நிமிர்ந்தும், கண்களும் உதடுகளும் சற்று துடித்தும், இமைகள் கொட்டியும் அந்தப் பெண்கள் அபிநயிக்க, மிதிலை நகரில் ஒரு மாலை நேரக் காட்சி அங்கே நேர்த்தியாக விரிந்தது. ராமோஜி கண்ணிமை கொட்டாமல், மனமுருகக் கை குவித்து நின்றான்.

கரகரவென்று கண்ணீர் விட்டபடி அருணாசலக் கவிராயர் குரல் நடுங்கச் சொன்னார் – ‘ஒரு கவிஞனுக்கு வேறென்ன வேண்டும்? எழுதினது யாருக்கு எப்படி யாரால் போகணுமோ அது நடக்கத் தொடங்கிவிட்டது. இசை நிகழ்ச்சியாக திருவரங்கன் சந்நிதியில் ராம நாடகம் அரங்கேற ஆண்டவன் அருள் செய்தான். அவன் கருணையால் நாட்டிய நாடகமாக இந்தக் குழுவோடு ராம நாடகக் கீர்த்தனைகளை பகிர்ந்து கொள்ள, மேலெடுத்துச் சென்று அரங்கேற்றம் நிகழ என்னாலான எல்லாம் செய்யச் சித்தமாக இருக்கிறேன், ராமோசி ராயரே.’

அவன் கைகளைப் பிடித்தபடி உருகி நின்றார்.

அடுத்த இரண்டு வாரங்களில் ஏகப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் அரங்கேறின.

அருணாசல கவிராயரின் கீர்த்தனைகள் படியெடுக்கப்பட்டு ராமோஜியிடம் வழங்கப்பட்டன.

ஆனந்தரங்கம் பிள்ளை கவர்னரை வந்து பார்க்கவும் கபுறு சொல்லவும் கேட்கவும் நேரம் செலவழித்தாலும் துரைக்கு உடம்பு சுகவீனம் கண்டதால் அதெல்லாம் மறுபடி நிறுத்திப் போடப்பட, வேண்டிய ஓய்வு பிள்ளைவாளுக்கும் கிட்டியது.

கபுறு கேட்பது, பதிவது, ரொம்ப முக்கியமானதை துரைக்கு லிகிதமாக எழுதி ராமோஜி மூலம் சேர்ப்பித்து பதிலையும் அதேபடிக்கு வாங்கி வருவது என்று ஒரு சீலம் கடைப்பிடிப்பானது.

ராமோஜி ராமநாடகக் கீர்த்தனைகள்பற்றி பிள்ளைவாளிடம் சொல்ல அவருக்கும் சுவாரசியமேற்பட்டு கவிராயரைப் பார்க்கணுமே என்றார். அவர் தென்காசி போனார் என்று ராமோஜி அறிவிக்க வரச் சொல்லணுமையா என்றார் பிள்ளைவாள். அதேபடிக்கு கவிராயர் வந்து ஒரு மணி நேரம் ஒரு கீர்த்தனை என்று படித்துப் பாடி இருந்து, பிள்ளைவாளுக்கு களைப்பு தட்டும்போது ஓய்ந்து உட்கார்ந்து என்று இப்படி கிட்டத்தட்ட முழு நூலையும் இசைக்கக் கேட்டாகிவிட்டது.

நாட்டிய நாடகமாக இதை நிகழ்த்தப் பொருளுதவி செய்வதாக பிள்ளையவர்கள் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார். அவருடைய நண்பர்கள் சிலரும் இந்த விஷயத்தில் உதவிக்கரம் நீட்ட முன்வந்தார்கள்.

நாட்டிய நாடகமாக ராமநாடக கீர்த்தனைகளை நடத்திப் பார்க்கும் போது, நடுவிலே சுத்தமாக வீட்டையும் வெளியையும் வைக்க வேண்டியதன் அவசியத்தை தனியாக குறுக்குச்சால் வெட்டாமல் பாட்டோடு அதை சொல்லி முடிக்க முடிந்தது. ராமோஜி வழி செய்தது தான் இந்த நடவடிக்கை. கவிராயரும் கூடிய மட்டும் ஒத்துழைத்தார்.

தொடக்கத்தில் கணபதி கவுத்துவமாக மணக்குள விநாயகரை வழிபட்டுப் பாடி ஆட புதுசாக ஓர் உருப்படியை அவர் எழுதிக் கொடுத்தார்.

முரட்டாண்டி சாவடிபற்றி பாட்டிலோ ஆட்டத்திலோ பெரியதாக எதுவும் குறிப்பிட வேண்டாம் என்று சொல்லிவிட்டார் பிள்ளையவர்கள். எதற்கும் இருக்கட்டும் என்று முரட்டாண்டிச் சாவடி வர்ணம் ஒன்றை சஹானா ராகம், மிஸ்ரஜாதி அட தாளத்தில் இயற்றித் தந்தான் ராமோஜி.

> ‘சொல்லுவோம் தியூப்ளே பேட்டையென்றே பெயர்
> பல்லுடையும் மற்றெதும் பகன்றால் காதறுந்து’

என்று தொடங்கும் அது.

விட்டல ராயன் நட்டுவன் ஆட்டக்காரிகளாக இன்னும் எட்டு பேரை ஏற்பாடு செய்தான். எல்லோரும் ரத்னா, புவனா வயசுப் பெண்கள்.

ராமோஜி தினம் சாயங்காலம் இந்தப் பெண்களும் நட்டுவனாரும் தாளக்காரர்களும், குழல், வீணை வாசிக்கிறவர்களும், பாட்டுக்காரி களும் பயிற்சி செய்வதை தவறாமல் வந்து பார்த்து உற்சாகப்படுத்தி வந்தான்.

அவன் இப்போது வாரம் ஒரு தடவை மட்டும் துரையைப் போய்க் கண்டு ஆசாரம் செய்து [மரியாதை செய்து] வரணும் என்று விதிக்கப்பட்டது.

அதே படி இரண்டு வாரம் திங்கள்கிழமை மதியம் நாலு மணிக்கு துரையின் கவர்னர் மாளிகையில் போய்ப் பார்த்து, ஆட்ட பாட்டம் தயாராகி வருவதை ஆனந்தரங்கப் பிள்ளை நிர்தேசம் செய்தபடி சொல்லி வந்தான்.

முரட்டாண்டி சாவடி பெயர்பற்றி ரொம்ப வற்புறுத்தினால் கடைசி நிமிடத்தில் அவன் இயற்றிய வர்ணத்தைப் பெண்கள் ஆடி அறிவிப்ப தாக நாட்டியத்தில் சேர்த்துவிடலாம் என்று தீர்மானித்திருந்தான்.

துரைக்கு முன்னால்கூட அந்த வர்ணத்தை ரெண்டு வரி பாடிக் காட்டினான். போதும் என்று சொல்லிவிட்டார்.

துரை இதெல்லாம் ரொம்ப கவனம் எடுத்துக் கேட்கவில்லை. அவருக்கு ஆட்டமோ பாட்டோ நடந்து, கூடவே அவர் பெயர் நாலு பேர் மனசில் தங்கினால் பெரிய சந்தோஷம். அது மதறாஸ்வரை பரவி இங்கிலீஷ்கார கும்பினி துரைகள் உட்காரும் இடத்தில் எரிய வைக்க உற்சாகம் காட்டினார்.

இன்றைக்கு முதல் ஒத்திகை – முழுக்க தொடக்கத்தில் இருந்து மங்களம் பாடும்வரை. வெள்ளிக்கிழமை அரங்கேற்றம் வேதபுரீஸ்வரன் கிருபையிலே.

பிள்ளைவாள் கருணையாலும், அவருடைய மற்றும் அவருக்கு ஆப்தர்களின் தன சகாயத்தாலும் ஈஸ்வரன் தர்மராஜா தெருவில் ஒன்றும், அம்பலத்தாடியார் மடத்து தெருவில் இன்னொன்றுமாக வீடுகளை வாடகைக்குப் பிடித்திருந்தார்கள்.

தர்மராஜா தெரு வீட்டு உப்பரிகையில் தனி கமரா [அறை] கொடுத்து கவிராயரை இருக்கவும் பண்ணியானது. அந்த வீட்டில் சங்கீதக்காரர்கள் எல்லோரும் தங்கியிருந்தார்கள்.

அம்பலத்தாடியார் தெரு வீட்டில் நாடகத்தில் ஆடப்போகும் அரம்பையர்களும் பாடப் போகும் வனிதைகளும் தங்கிக் கொண்டார்கள்.

இரண்டு வீட்டுக்கும் சேர்த்து அம்பலத்தாடியார் தெரு வீட்டில் மூன்று வேளை சமையல் செய்து பரிமாற ஒரு கோஷ்டி சமையல்காரர்கள் ஏற்பாடு செய்யப்பட்டார்கள். அலமுசு அலமுசு என்று எல்லோரும் நச்சரித்தபடியால்

தினம் காலை, மாலை காப்பி உபசாரம் எந்தக் குறைவுமில்லாமல் நடத்திக் கொடுக்கப்பட்டது.

புதன் கிழமை பகல் நேரம். ராமோஜி காலையிலேயே கிளம்பிப்போய் புடவைக் கிடங்கில் சாயம் தோய்த்து அனுப்ப வைத்திருந்த துணி விபரம் சரி பார்த்து, சிப்பந்திகள் அவரவர்க்கு பொறுப்பு ஒப்படைத்து தேவையான காசும் அவரவருக்குத் தந்து கணக்கெழுதி வீட்டுக்கு வந்தான்.

வந்ததும் ராமோஜி வீட்டு சமையல்காரன் அவன் ஏற்கெனவே சொல்லியிருந்தபடிக்கு அம்பலத்தாடியார் தெரு வீட்டில் சமைத்ததை எடுத்து வந்து ராமோஜிக்குக் கொடுத்தான். அவன் தலைமையில்தான் இந்த இரண்டு வாரமாக அம்பலத்தாடியார் தெரு வீட்டுச் சமையல் நடக்கிறது.

தோசைகளையும், அரிசி வேகவைத்து வெல்லம் கலந்துச் செய்த மோதகங்களையும் வயிறு நிறையச் சாப்பிட்டுக் கையில் சீலைக் குடையோடு அம்பலந்தாடியார் தெரு வீட்டுக்கு நடந்தான் ராமோசி ராயன்.

நாட்டியக்காரிகள் எல்லோருமே அழகான பதின்ம வயதுச் சிறுமிகள் என்று அவன் மனம் சொன்னாலும் ரத்னாவையும் புவனலோசனி யையும் அவனுக்கு நிறையப் பிடித்துப் போயிருந்தது. அவர்கள் உருவில் அவனுடைய இறந்துபோன இரண்டு புதல்விகள் வந்திருப்பதாக அவ்வப்போது தோன்றிக்கொண்டிருந்தது.

இரண்டு பேரையும் தத்து எடுக்க அறிவிப்பு கொடுத்து தேவையானதை செய்தால் என்ன என்று தோன்றியது அவனுக்கு. மாட்டேன் என்றா சொல்லப் போகிறாள்கள் அந்தப் பெண்களின் தாயார்கள்?

ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் பரிச்சயம் உள்ளவர்கள் என்பதால் சகோதரிச் சண்டை எதுவும் வராது. ராமோஜியின் ஜாதி ஜனம் இதைப் பொருட்படுத்த மாட்டார்கள். படுத்தினாலும் அவனுக்குக் கவலை இல்லை.

பிரஞ்சு சட்டத்தில் தத்தெடுக்க வழியில்லை. இங்கத்திய நடைமுறையிலும் பெண் குழந்தையை வாரிசாக அறிவிக்க முடியாது. ஆனால் என்ன, ராமோசி ராயன் இதைத் தீர்க்க வழி காணுவான்.

எப்படியும் அரங்கேற்றத்தோடு எல்லாம் முடியப் போகிறதில்லை. இந்த ஆட்டமும் பாட்டும் வேறு ஊர்களிலும் மேடையேறும். அவ்வப்போது அவர்களோடு ராமோஜியும் சென்று பார்ப்பான். இந்த ரெண்டு பெண்களோடு இன்னும் கூடுதலாகப் பழக, பரஸ்பரம் புரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிட்டும்.

வருஷம் திசம்பர் மாதத்தில் கிறிஸ்து பிறப்போடு முடியும்போது ராமோஜி மறுபடி ரெண்டு புதல்விகளோடு சந்தோஷமாக வீட்டிலிருந்து கொண்டிருப்பான். அந்தத் தீனிமேசையில் சூடான சுவையான உணவோடு, சிரிப்பும் கலகலப்பும் வளைய வந்து கொண்டிருக்கும்.

அம்பலத்தாடியார் மடத்துத் தெரு வீட்டில் அவன் நுழையும்போதே வீணையின் நாதம் அவனை வரவேற்றது. மோகனம் என்ற மோகம் தரும் அதிகாரத் தொனியில் நடைபோடும் ராகம் அது. ஏன் பள்ளி கொண்டீரய்யா என்று திருமாலைத் துதிக்கும் அந்தப் பாடலை கவித்துவம் முடிந்து, ரத்னாவும், புவியும் சேர்ந்து ஆட, ராமோஜியின் மனதை அள்ளியது.

ஆரண்ய காண்டம் தொடங்கியிருக்கிறது. ராமன் கானகம் போகப் புறப்படும்போது சீதை தன்னைவிட்டுத் தனியாகப் போவது முறையா என்று விம்மும் உருக்கமான உசைனி ராகப் பாடல் தொடர்ந்தது.

> எப்படி மனம் துணிந்ததோ சாமி வனம்போய்
> வருகிறேன் என்றாலிதை ஏற்குமோ பூமி

சீதையாக முகத்தில் சோகமும், இரைஞ்சுதலுமாக புவனா உருக்கமாக அபிநயித்து ஆட, ராமன் ஆட்டக்காரி ரத்னா கம்பீரம் குறையாமல் சீதையை தன்னோடு கூட்டிப் போக மாட்டேன் என்று சொல்லும் காட்சியை இரு பெண்களும் உயிர்பெற்று நிகழ வைத்தார்கள்.

பாடகி இந்திராளும் தேவகியும் உசைனி ராகத்தை ஆலாபனம் செய்ய, குழலில் அதைக்கொண்டு தருகிறான் சேஷாசலமய்யன் என்ற வயதான புல்லாங்குழல் கலைஞன்.

குழலில் அப்படிப் பொங்கிப் பிரவகித்து வழிந்த இசையின்பத்தை வீணையில் தேன் திட்டாகக்கொண்டு வந்தவன் தஞ்சாவூர் குப்பண்ணா. விட்டல ராயன் நட்டுவனாரின் சிநேகிதன். அவன் சொல்வதற்கு முன் அந்த சங்கதி நினைத்தபடி வந்து விழும், வீணை நரம்புகள் அதிர.

நட்டுவாங்கம் செய்ய அமர்ந்த விட்டல ராயன் நட்டுவனாரின் வாயிலிருந்து மத்தாப்பு பூ உதிர்ப்பதுபோல் ஜதிப் பிரவாகம். அதற்கு மென்மையாக ஈடுகொடுத்து தட்டவாடிக் கோல்கள் அவன் கைகளில் உயிர்கொண்டு துடித்தன

யுத்த காண்டம். போருக்கு வந்த இளம் இந்திரஜித்தாக கூட்டத்திலேயே சிறிய பெண் ஒருத்தி தொம்மென்று ஒலி எழுப்பிக் குதித்து ஜதியோடு ஆடி

வரும்போது குறுக்கே வந்த லட்சுமண வேடப் பெண் – அவளும் பனிரெண்டு வயது இருப்பாள் அதிகம் போனால் – பாதம் முன்பின்னாகப் போய் இடற, இந்திரஜித் ஆட்டப்பெண் தரையில் விழுந்தாள்.

அவள் முகம் வலிக் குறிப்பைக் காட்ட ராமோஜி முன்னால் ஓடினான். இந்திரஜித்தின் காலைத் தன் மடியில் வைத்து நீவி விடும்போது வலியின் உச்சத்தைத் தொட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்ததை அவள் உணர, ராமோஜி மனதில் தனக்குப் பிறந்த மகளுக்கு வலி நீக்க முன்செல்லும் தந்தையாக, அபூர்வமான அந்த கணத்தில் தன்னை உணர்ந்தான்.

அவன் மனைவி தங்கம்மாகூட இருந்தாலும் அவளுக்கும் இதே அனுபவப்பட்டிருக்கும்.

அன்பு புத்ரிகள் சுந்தரி, சௌந்தரி! ரெண்டு பேரும் தெய்வத்தின் நந்தவனத்தில் பூப்பந்து விளையாடுங்கள் என் கண்மணிகளே. விரைவில் வந்துவிடுகிறேன்.

ராமோஜிக்கு கண்ணில் நீர் மறைக்க மெல்ல எழுந்தான். போய் ஆடு என்று அந்தச் சிறுமியை அனுப்பி வைத்தபடி நட்டுவனார் அருகே உட்கார்ந்தான் ராமோஜி.

சுந்தர காண்டத்தில் சீதா பிராட்டியை அனுமன் ராவணனின் சிறையில் சந்தித்து கணையாழி தரும் அபூர்வ காட்சி அடுத்து ஒத்திகையில். கணையாழி தருவதாக அபிநயிக்கும் அனுமன் வேடமிடும் சிறுமி ஜதியோடு கணையாழியை சீதாபிராட்டியிடம் எடுத்து நீட்டுகிறாள். ஒரு வினாடிதான். அதைத் திரும்பப் பின்வலிக்கிறாள். சீதையின் முகத்தில் ஒரு வியப்பு தோன்றி மறைகிறது. அனுமன் தன் கையில் எடுத்த சிறு பட்டுத் துணியில் அந்தக் கணையாழியைத் துடைத்துச் சுத்தம் செய்து மரியாதையோடு அதை சீதை பிராட்டியிடம் நீட்டுகிறான்.

சபாஷ் என்றான் ராமோஜி. விட்டல ராயன் நட்டுவனார் சொல்லிக் கொடுத்த சீலத்தை அவன் பாராட்டும் முன் விட்டல ராயன் சொல்கிறான் – ‘இந்தக் குழந்தைகளே கற்பனை செஞ்சது. ரத்னாவும் புவியும்.’

நாளை முழு ஒத்திகை. உடுப்பும் ஒப்பனையுமாக கடைசி ஒத்திகை. வெள்ளிக்கிழமை சாயந்திரம் ராமபிரான் அருளோடு வேதபுரீஸ்வரன் கோவிலில் அரங்கேற்றம்.

ராமோஜி செய்யவேண்டிய காரியங்கள் என்னென்ன உண்டு என்று யோசித்தான்.

கோவில் வெளிப் பிரகாரத்தில் மேடை அமைத்து முன்னால் பந்தல் போடும் வேலை நடந்து வருகிறது... இன்றைக்கு முடித்துக் கொடுப்பதாக பந்தல்காரர் சீராமுலு நாயக்கர் சொல்லியிருக்கிறார். விசாரிக்கவேண்டும்.

சான் பால் சம்பா கோவில் சின்ன பாதிரி ஒருத்தர் நாட்டியம், நாடகம் இதற்கெல்லாம் ராஜாங்கம் ஏன் செலவு செய்யணும் என்று ஞாயிற்றுக் கிழமை பூசை நேரத்தில் சத்தமாகப் பேசியதாக கபுறு வந்தது. ஆனந்தரங்கம் பிள்ளைவாளிடம் சொன்னபோது ‘நான் கவனிக்கிறேன். நீர் மனசை அலட்டிக்கொள்ள வேணாம்’ என்று சொல்லிவிட்டார். அது எந்த நிலையில் இருக்கிறது என்று பிள்ளைவாளிடம் விசாரிக்கணும்.

நான் கவனிக்கிறேன் என்று சொல்லி அவர் ஏதும் செய்யாமல் போனதால் புராதனமான வேதபுரீஸ்வரர் கோவிலை இடித்துத் தள்ளுவதை பார்த்துக்கொண்டிருக்க நேர்ந்து போச்சே.

ராஜாங்கப் பணம் ஒரு துட்டுகூட ராம நாடகக் கீர்த்தனை நாட்டிய நாடகத்துக்கு வரவு கிடையாது என்பதை ஊரே அறியும். அறியாதது போல் நடித்தவர்களை பிள்ளையவர்கள் தட்டிக் கேட்கவேண்டும். கேட்பாரா?

நாட்டியம் பார்த்து யாரும் அங்கிருந்து இங்கே வந்து வீபுதி தரித்து சிவசிவ சொல்லப் போவதில்லை. பண்ணினாலும் என்ன மோசம் போச்சு? கேட்பாரா?

கோவிலில் இந்த நாட்டிய நாடகம் அரங்கேற்றத்தை உத்தேசித்து லட்சார்ச்சனையும் சகல தீப தரிசனமும் ஏற்பாடு ஆகியுள்ளது. திருமுறை சொல்லும் ஆறு ஓதுவாரமூர்த்திகளும் நாள் முழுக்க தேவாரம் பாடிப் பரவவும் வகை செய்திருக்கிறது.

ஆனந்தரங்கர் பரிவட்டமும் புஷ்பமாலையும் பொன்னாடை வஸ்திரமும் கொடுத்து அருணாசல கவிராயருக்கு மரியாதை செய்யவும் ஆவன செய்யப்படுகின்றன.

அதெல்லாம் எப்படிப் போகிறதென்று ராமோஜி தெரிந்துகொள்ள வேணும்.

பொற்கொல்லர் தங்கப்பனாசாரி கவிராயருக்கு மரியாதை செய்ய அளிக்க, மூணு பவுன் தங்கத்தைத் தட்டித்தட்டி நெளிமோதிரமாக்கி வருகிறார். கூடவே ஒரு பவுனில் ரத்னா, புவனா என்ற இந்த ஆட்டக்கார

பெண்களுக்கு ஆளுக்கொரு கழுத்துச் சங்கிலியும் தர ஏற்பாடு ஆகிறது. மற்ற ஆட்டக்காரிகளுக்கும், பாட்டுக்காரிகளுக்குத் தலைக்கு முக்கால் பவுனில். வாத்தியக்காரர்களுக்கு தலைக்கு அரைப்பவுன். நட்டுவனாருக்கு ரெண்டு பவுனில் கடுக்கன் கொடுக்கவும் அவருடைய மனைவியைக் கூட்டி வந்து ஒரு பவுன் மோதிரமும் தரவும் திட்டம் செய்திருக்கிறார்கள். நகை வேலை எல்லாம் முடிந்ததா? பாட்டும் ஆட்டமும் பார்த்தபடி இங்கேயே இருந்தால் அதெல்லாம் கிரமமாக எப்படி நடக்கும்?

முழு ஒத்திகை பிரச்னை எதுவும் இன்றிக் கடந்து போனது. வெள்ளிக்கிழமை சாயந்திரம் ஆறரைக்கு வேதபுரீஸ்வரர் சந்நிதியில் அர்ச்சனை செய்தபிறகு நட்டுவன் விட்டல ராயன் மரியாதை செய்யப்பட்டான். மணக்குள விநாயகப் பெருமான் கோவிலிலும் பெருமாள் கோவிலிலும் அர்ச்சனை செய்து தேங்காய் பழ காளாஞ்சியும், மாலை மரியாதையும் அவனுக்கும் கவிராயருக்கும் தரப்பட்டது.

மிருதங்கமும் தபலை என்ற மிழவும் சுருதி சேர நிறைய நேரம் எடுத்துக் கொள்ளும் என்பதால் அந்த வாத்தியக்காரர்களை சாயந்திரம் ஐந்து மணிக்கே வந்து மேடையில் உட்கார்ந்து சுருதி சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. இருந்தாலும் நாட்டியம் ஆரம்பமானபோது மற்ற வாத்தியங்களோடு சேர்ந்து சுஸ்வரமாக ஒலிக்க வாத்தியத்தின் வாரை இன்னும் கொஞ்சம் இறுகக் கட்டி சிரமப்பட்டார்கள்.

சாயந்திரம் நாலு மணிக்கே நாட்டிய கோஷ்டி கோவில் பிரகாரத்துக்கு வந்துவிட்டது. தினசரி அந்த நேரத்துக்கு காப்பி கொடுத்துப் பழக்கப் படுத்தப்பட்டதால் ஒரு பெருங்கூட்டமே காப்பி காப்பி என்று அலைய கோவில் பிரகாரத்துக்கே காப்பி கலந்த தவலையோடு வந்து விட்டான் ராமோஜியின் சமையல்காரன்.

‘கோவில் காப்பி குடிக்கவோ, கள்ளூ மாந்தவோ ஆன இடம் இல்லை, இங்கே இதெல்லாம் அனுமதிக்க முடியாது. வெளியே சாப்பிட்டுக் கொள்ளணும்’ என்று அர்ச்சகர்கள் சத்தம் போட, ராமோஜி அவசர அவசரமாக கோபுர வாசலில் தவலை வைத்து வெளியே நின்றபடி அலமுசு பண்ண வழியுண்டாக்கி வைத்தான். அப்படியாவது அந்த கண்றாவியை குடித்தே தீருவேன் என்று அந்தப் பெண்கள் எல்லோரும் சாட்டியமாக நிற்க, கபேயின் பிராபல்யம் பிரசன்னமானது. இன்னும் இவர்களுக்கு தே [டீ] அறிமுகமாகவில்லை. அது இன்னொரு சிறு புரட்சியையே கிளப்பும் என்று ராமோஜி அறிவான்.

பிள்ளைவாளுக்கும் அவருடைய பாரியாளுக்கும் சௌகரியமான ஆசனங்கள் போட்டு ஆளுக்கொரு பனை ஓலை விசிறியும், கூடவே மண்பானை தண்ணீர் கொடுக்க சிப்பந்தியுமாக சௌகரியப்படுத்தி இருந்தான் ராமோஜி.

அவன் மேடைக்குப் போகும்போது, ராத்திரி வெகு நாழிகைவரை தீபங்கள் எரிய இலுப்ப எண்ணெய் இன்னும் நாலு படி வேண்டியிருக்கிறதென்று யாரோ வந்து நின்றார்கள். எண்ணெய் வாணியர் கடையை எடுத்து வைத்துவிட்டு நாட்டிய நாடகம் பார்க்க இங்கே வந்துவிட்டதால் எண்ணெய் வாங்க வேறு உபாயமில்லை.

ராமோஜி உடனே எண்ணெய் வாணியரின் காலைப் பிடித்துக் கெஞ்சாத குறையாக நல்ல வார்த்தை சொல்லி, கெஞ்சி, வண்டி ஏற்பாடு செய்து கொடுத்து கடையைத் திறந்து எண்ணெய் தர ஆனபடிக்கு எல்லாம் செய்தான். நல்ல நேரம் பார்த்து வேதபுரீஸ்வரர் கோயில் குருக்கள் ஆரம்பிக்கலாம் என்று கையசைக்க, திரை உயர்ந்தது. கணபதி கவுத்துவத்தைப் பாடி ஆட, ராம நாடகம் தொடங்கியது அடுத்த நிமிடம்.

கவுத்துவத்தில் நான்கு பெண்கள் மட்டும் பங்கு பெற்றார்கள். நாடகம்பற்றி ராமோஜி சுருக்கமாகப் பேசினான். அருணாசல கவிராயரும் தன் நாட்டிய நாடகம்பற்றியும், எத்தனை பாடல்கள் நாடகத்தில் பயன்படுத்தப்பட்டன என்றும் விவரங்கள் கொடுத்தார். நட்டுவனார் பெயர், கல்வி விசேஷம் எடுத்துச் சொல்லப்பட்டதும் நாட்டியம் தொடர்ந்தது.

சீதா கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தேறியதும் எல்லா விளக்குகளையும் ஜகஜ்ஜோதியாக ஏற்றி வந்திருந்தவர்களுக் கெல்லாம் கல்கண்டும், இனிப்பும், பானகமும் வழங்கப்பட்டன.

அப்போது அருணாசலக் கவிராயருக்கும் விட்டோபா நட்டுவனாருக்கும், நாட்டிய, பாட்டு, வாத்திய கோஷ்டிக்கும், அரிதாரம் பூச உதவினவர்களுக்குமெல்லாம் பொன், மற்றது, வராகன் என்று ஏற்கெனவே சொல்லியிருந்தபடி மரியாதை செய்யப்பட்டது.

அருணாசல கவிராயர் மரியாதை ஏற்று ஆனந்தரங்கம் பிள்ளைக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். கவிராயரின் மனைவி வராமல் போனதால் அவரே துணைவிக்கு தங்கச் சங்கிலியைப் பெற்றுக் கொண்டார்.

கவர்னர் தியூப்ளே சொன்னபடி, அயோத்யா காண்டத்திலும், ஆரண்ய காண்டத்திலும், சுந்தர காண்டத்திலும், யுத்த காண்டத்திலும் சுற்றுப்

புறத்தை அசுத்தம் செய்யாமல் இருப்பதின் முக்கியத்துவம்பற்றி வர்ணத்தோடு வரும் குழு நடனமாக அமைக்கப்பட்டிருந்தது விமர்சையாக அரங்கேறியது. பலத்த கரகோஷம் செய்து நாட்டிய நாடகம் காண வந்த அனைவரும் அதை வரவேற்றார்கள்.

முரட்டாண்டி சாவடி தியூப்ளே பேட்டை ஆனதை மட்டும் விடுவானேன். அதையும் வைத்துக்கொள்ளலாம் என்று பிள்ளைவாள் சொல்ல, அப்படியே ஆகட்டும் என்று விட்டல நட்டுவன் கைகாட்டினான். அது நன்றாகவே இருந்தது எனினும், பாடி ஆட வேண்டிய சிறுமிகளுக்கு பாட்டு மறந்து போய் தியூப்ளே பேட்டை என்று பெயர் சொன்னால் பல்லுடைப்போம் என மகிழ்ச்சியாகப் பாடிப் போனார்கள். இதற்கு வலுவான கரகோஷமிருந்தது.

மிகச் சிறப்பாக அரங்கேறி, சகலருக்கும் சந்தோஷமாக, மரியாதைகள் பலருக்கும் செய்யப்பட்டு, ஆனந்தரங்கம் பிள்ளை புரவலராக இருப்பதால் இந்த மாதிரி நல்ல முயற்சிகள் நடப்பதை எல்லோரும் சிலாகிக்க, நல்ல விதமாக நாடகம் ஜெயமங்களம் சுபமங்களம் பாடி முடிவடைந்தது. அப்போது ராத்திரி பதினொரு மணி ஆகியிருந்தது.

ராமோஜி என்ற ராமோசி ராயனுக்கு ஒரு கதம்ப மாலையோ, ஓர் எலுமிச்சம் பழமோ, ரோஜாப்பூவோ மரியாதை செய்ததாகத் தர வேண்டும் என்று ஏனோ யாருக்குமே தோன்றவில்லை.

அடுத்தநாள் எல்லோரும் ஓய்வில் இருக்க, கவிராயர், ஆனந்தரங்கம் பிள்ளைவாள் வெளியே தெரியாத அளவுக்குக் கொடுத்த தனத்தோடும் மனைவிக்கான சங்கிலியோடும் தென்காசி பயணம் வைத்தார்.

‘ராம நாடகம் புதுவையில் சிறப்பாக நடக்க நீங்களே காரணகர்த்தா. ராமோசி ராயரே, நீர் தமிழ் இருக்கும்வரை நூறுநூறு ஆண்டு இரும்’ என்று அருணாசல கவிராயர் ராமோசி ராயன் மேல் முப்பது பாடல்களில் ஓர் வெண்பா மாலை எழுதியதை அவனுக்கு முதல் பாவையும் இறுதிப் பாடலையும் உரக்க வாசித்து அளித்தார். ராமோஜி தெருவில் உலா வரும்போது எல்லாப் பருவப் பெண்களும் கண்டு மோகிப்பதாகச் சொல்லும் சிறு காப்பியம் அது. நன்றி சொல்லி வாங்கிக்கொண்டான் ராமோஜி. வெண்பாவை வைத்து வேறென்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை.

நட்டுவனார் விட்டோபாவிடம் நாட்டிய நாடகம் நடத்த கேட்டுக் கொண்டு ஏழெட்டு கோவில்களின் அறங்காவலர்கள் கோரிக்கை வைத்தார்கள்.

ஆயுசுக்கும் இது அவனுக்குப் பெயர் தரும் என்பதோடு அந்தப் பெண்கள் எல்லோருக்கும் பல வருடம் ஜீவனோபாயமாக இருக்கக்கூடும் என்றும் ராமோஜிக்குத் தெரியும்.

ரத்னாவும் புவியும் அடுத்தநாள் அவன் வீட்டுக்கு வந்தார்கள். கார சோமாசியும், லட்டு உருண்டைகளும், பாரசீக ஷெர்பத்தும் தந்து அந்தச் சிறுமியர்களை உள்ளன்போடு உபசரித்து அவர்கள் மேடையில் முந்திய நாள் நிகழ்த்திய அற்புதமான நடனம்பற்றி ராமோஜி மனமாறப் பாராட்டினான். அவர்கள் நன்றி சொல்லி, மேலும் கூறியது என்னவென்றால் –

‘ஐயா, நட்டுவனாரிடம் எங்களை தத்தெடுத்துக்கொள்வதுபற்றிப் பேசினீர்களென்று சொன்னார். எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். எனினும், நீங்களும் மத்திய வயசு எட்டாதவர். நாங்கள் பதினான்கு வயது கன்யகைகள். நட்டுவனார் யோசிப்பது எங்கள் தாயார்கள் சம்மதித்தாலும் இது வேறே மாதிரி பார்க்கப்படும் என்பதுதான்.’

ராமோஜியை வேதனைப்படுத்திய, விசித்திரமான விஷயம், இனி வருங்காலத்தில் அந்தப்படி வேறு மாதிரியான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளக்கூட அந்தப் பெண்கள் தயாராம். அவர்களைப் பெற்றவர்களும். ஆனால் தத்தெடுப்பது, அதுவும் உடனே இப்போது, மட்டும் வேணாமாம்.

‘நாங்கள் ரெண்டு பேரும் இன்னும் நாட்டியத்தில் தேர்ச்சி பெற வேண்டி இருக்கிறது. ஆகவே, வேண்டாம்,விட்டுவிடுங்கள் என்று கோருகிறோம்.’

அவர்கள் ராமோஜி காலில் விழுந்து வணங்கி அப்பால் விலகி நிற்க, ராமோஜி ஒரு வினாடி யோசித்தான்.

‘பரவாயில்லை, நான் என் இழந்த வாழ்க்கையை இன்னொரு தடவை போலியாக நகல் எடுக்க ஏதும் இனி செய்ய மாட்டேன். நீங்கள் சந்தோஷமாகப் போய்வாருங்கள்’ என்று அனுப்பி வைத்தான் அவர்களை.

ஊரில் நாட்டிய நாடகம் பார்த்த ஒபிசியேக்கள் மற்றும் சிப்பாய்கள் மூலம், கவர்னர் சொன்னபடி, நாட்டியத்தோடு கூட மறக்க முடியாதபடி நல்ல சேதி சொல்லப்பட்டது தியூப்ளேயை எட்டியது. அவருக்கு நல்ல மகிழ்ச்சி.

ஆனந்தரங்கம்பிள்ளை அதற்கப்புறம் ராமோஜியை தன் அரசாங்கக் காரியங்களில் உதவி செய்யக் கேட்கவில்லை. நாட்டியம், பாடல், கவிதை, ஸ்தல புராணம் இப்படியாக அவரை அணுகி நிதி கேட்கிறவர்களிடம் ராமோஜியைக் கைகாட்டி விடுவதைத் தொடர்ந்தார் அவர். புலவனுக்கும்

புரவலனுக்கும் இடையிலான, பணம் வாங்காத தொடர்பாக அவன் செயல்பட்டான்.

ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பை அவர் சொல்லச் சொல்ல எழுதுவதில், அவருக்கு வந்த பிரஞ்சும் தமிழுமில்லாத பிறமொழிக் கடிதங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதில், படி எடுப்பதில் அவனுடைய நேரம் பெருவாரியாகக் கழிந்தது.

நாட்டிய நாடக அரங்கேற்றம்பற்றிப் பிள்ளையவர்கள் சொல்லி, ராமோஜி எழுதிய நாட்குறிப்பு விவரமானதாக, சுவாரசியமானதாக இருந்தது. எனினும் பிறகு ஏதோ ஒரு தினத்தில் அதை எடுத்து விட்டார் பிள்ளையவர்கள். ராமோஜிக்குக்கூட அது ஏனென்று தெரியாது.

குடும்பத் தொழிலான துணிகளுக்கு சாயம் ஏற்றி வெளிநாட்டில் விற்பதை அவன் தொடர்ந்து செய்து வந்தான். லாபமும் அதிகமின்றி நஷ்டமும் இல்லாத தொழிலாக அதை நடத்தி வந்தான் ராமோஜி.

இரண்டே வருடத்தில் தமிழ் பேசும் ஊர், நகரம் எல்லாம் கல்யாணங்களிலும், அவ்வப்போது கோவில்களிலும் அந்த நாட்டிய நாடகம் நடந்தேறியது. இரண்டு வருஷத்தில் பாட்டு மட்டும் பிரபலமாகி நிற்க, நடனத்தை, நடனப் பெண்களை, நட்டுவனாரை மெல்ல மெல்ல மறக்க ஆரம்பித்தார்கள்.

விட்டல ராயன் நட்டுவனார் காலம் சென்றபிறகு ரத்னாவும் புவனாவும் அந்த கோஷ்டிக்கு தலைமை வகித்து நடத்திச் சென்றதுபற்றி ராமோஜி கேட்டறிந்தான். ஒருத்தருக்கொருத்தராக அவர்களின் உறவு புதியதாக இருந்ததாக உலகம் சங்கடப்பட்டதை அந்த இரண்டு பெண்களும் லட்சியம் செய்யவில்லை என்பதையும் அறிந்தான்.

நாட்டிய ஒத்திகைக்காக ரத்னாவோ, புவனியோ தாளவடி தட்டும் சத்தம் எங்கிருந்தோ காற்றில் கலந்துவரும் இந்த சந்தர்ப்பத்தில் நாமும் இந்தப் புதுச்சேரி வர்த்தமானத்தை நிறைவு செய்கிறோம்.

★★★

**பத்தொன்பது**

# ராமோஜி கண்ட ‘இது முடிவு இல்லை’ – கும்பகோணம் 1947

‘போ ஸ்ட் ஆபீசிலிருந்து கூப்பிடறாங்க, என்னவா இருக்கும்?’

ரத்னா நான் ஆபீஸ் வேலைகளில் மும்முரமாக இருந்தபோது ஜோசியர் வீட்டிலிருந்து போன் பேசினாள்.

அவள் இதற்கு முன் ஃபோனில் என்னோடு பேசியதே இல்லை என்பதால் குரல் வித்தியாசமாகக் கொஞ்சம் கிரீச்சிட்டு ஒலித்ததாகத் தோன்றியது. பதட்டத்தோடு அவள் நேரில் பேசுவதே இல்லை என்பதால், என்ன அவசரமோ, சொல்ல முடியவில்லையோ என்று எனக்கும் படபடப்பு ஏற்பட்டது.

‘புரசைவாக்கம் போஸ்ட் ஆபீஸ்தானே?’ என்று கேட்டேன். ‘ஆமாம்’ என்றாள்.

‘நான் அவங்க கிட்டே பேசிட்டு உன்னை கூப்பிடறேன்… எதுக்கு பதட்டம் எல்லாம்? சாதாரணமா இரு.’

‘இல்லேங்க, அப்பா, அம்மாவுக்கு ஏதாவது…’

‘யாருக்கும் எதுவும் இருக்காது… எல்லாரும் நல்லாத்தான் இருப்பாங்க’

அவள் பயம் நியாயமானது. வீட்டில் போன் இல்லை என்றால் போஸ்ட் ஆபீசுக்கு போன் செய்து வீட்டிலிருந்து போஸ்ட் ஆபீசுக்கு வரவழைத்துப் பேசவேண்டும். பெரும்பாலும் பிறப்பு, இறப்பு போன்ற முக்கியமான விஷயங்களுக்கே இந்த பிபி கால் என்ற பர்டிகுலர் பெர்சன் அழைப்பு அவசர அவசரமாக வரும்.

போஸ்ட்மேன் கடிதம் எதுவும் டெலிவரி கொடுக்க இல்லாமல் சும்மா வந்து இறங்கி ‘கூப்பிடறாங்க’ என்று சொல்லிப் போவது அவ்வளவு நல்ல அனுபவமாகக் கருதப்படுவது இல்லை.

புரசைவாக்கம் போஸ்ட் ஆபீசுக்கு ஃபோன் செய்தேன். நான் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை செக்ரெடேரியட் டிபார்ட்மெண்டில் இருந்து பேசுகிறேன் என்றதுமே கிரமமாக எல்லாத் தகவலும் சொல்லப்பட்டு விட்டது.

இச்சல்கரஞ்சி, மகாராஷ்டிரத்தில் இருந்து ரத்னாவுக்கு ஒரு பாபுராவ் ஆம்தே ஆயிரம் ரூபாய் பணம் அனுப்பி இருக்கிறாராம். அடையாளம் காண ரேஷன் அட்டை, பேங்க் பாஸ் புத்தகம், பாஸ்போர்ட் இப்படி ஏதாவது எடுத்துவந்து நேரில் புரசைவாக்கம் போஸ்ட் ஆபீசில் கையெழுத்துப்போட்டுக் காலை பத்து மணியிலிருந்து பிற்பகல் இரண்டு மணிக்குள் பணத்தை வாங்கிப் போகலாம்.

'ரத்னா என் மனைவி சார். ஆம்தே என் மாமனார்.'

'ரொம்ப சந்தோஷம் சார். நீங்க கவர்மெண்ட் ஆபீசர்தானே, ஒரு சர்ட்டிபிகேட் மட்டும் அவங்க உங்க ஒய்ப்னு வாங்கிட்டு வந்துடுங்க...'

ரத்னாவுக்கு அடுத்த வினாடி தொலைபேச ஜோசியர் வீட்டுக்குக் கூப்பிட்டால் லைன் டெட்.

சாயந்திரம் ஐந்து மணிக்கே ஆபீஸ் ஓய்ந்து போயிருந்தது. மதறாஸ் மாகாண சர்க்கார், உலகத்தில் இதுவரை எந்த கவர்மெண்டும் செய்யாதபடி, அடிப்படை ஊழியர்களுக்கு ஒரு மாத போனஸ் கொடுக்க இருப்பதாக வந்த தகவலை அங்கங்கே எல்லோரும் சர்ச்சை செய்துகொண்டிருந்தது ஓயவில்லை.

சீக்கிரமாக ஆபீசிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டேன். வெள்ளிக்கிழமை சாயந்திர ஆபீஸ் பூஜைக்கும் தேங்காய்ச் சில்லு, வெல்லம், லட்டுக்கும் ஆஜர் கொடுக்க முடியாமல் போனாலும் ரத்னாவை சந்தோஷப்படுத்த சந்தர்ப்பம் என்பதால் புறப்பட்டு விட்டேன்.

வீடு போய் சமாசாரம் எல்லாம் சொல்லி முடிக்க, ஆனந்த வாரிதி அடுத்து. ரத்னா என்னைக் கட்டிக்கொண்டு தம் பிடித்து ரெண்டு அங்குலம் தூக்கித் தட்டாமாலை சுற்றி ஆடினாள்.

அவளுடைய அப்பா பூர்வீக சொத்தாக இருந்த நிலத்தை விற்ற பணத்தை அவளுக்கும் அவள் அண்ணன் பீமாராவுக்கும் பிரித்துக் கொடுத்த பணமாம் அது. திடீர் பண வரவுக்கு வழி செய்யும் மாமனார்களை வாழ்த்தினேன்.

அடுத்த நாள் சனிக்கிழமை அன்று மத்தியானம் ஆபீஸில் இருந்து பெர்மிஷனில் வந்து போஸ்ட் ஆபீஸுக்கு தம்பதி சமேதராகப் போய் பணத்தை வாங்கிவந்து விட்டோம்.

வாசல் கதவைத் தாழ்போட்டு படுக்கை அறையில் பெட் மேல் அந்தப் பணத்தைப் பரத்தி வைத்து ரெண்டு பேரும் பார்த்துக்கொண்டே நின்றோம். ஆயிரம் ரூபாயை ஒருசேரப் பார்த்தது ரத்னாவுக்கு இதுதான் முதல் தடவை.

'நான் இந்தப் பணத்தை என்ன பண்ணனும்னு எதிர்பார்க்கறீங்க?'

ரத்னா கேட்டாள்.

'உன் பணம். என்ன பண்ணவும் உனக்கு உரிமை இருக்கு. ஆனா பெட்டுலே போட்டு அப்படியே வச்சிருக்க வேணாம். ராத்திரி இதும்மேலே படுத்தா தூக்கம் வராது' என்றேன்.

அவள் சொன்னது – 'ரொம்ப நாளா ஆசைங்க... நகை எதுவும் வேணாம். ஒரு ருக்மணி குக்கர், ஓர் எலக்ட்ரிக் குக்கர் ரெண்டு மட்டும் வாங்கிக்கலாம். நூறு ரூபாய்க்குள்ளே வரும். மீதிப் பணத்தை பேங்குலே போட்டு வச்சிடலாம். வேணுங்கறபோது எடுத்துப்போம்.'

நகை எதுவும், புடவை எதுவும் கேட்காமல் இப்படி வீட்டு உபயோகத்துக்காக பாத்திரம் வாங்க நினைக்கும் அவளுடைய நிறைந்த மனசு எனக்கு எப்போதோ பிடித்துப் போயிருந்தது. அது கல்யாணத்துக்கு வெகுமுன்.

புவி என்ற புவனலோசனி என்ற தெலக்ஸ் புவனா என் வாழ்க்கையில் வந்தபின்னும் அதில் எந்த மாற்றமும் இல்லை.

ராத்திரி கச்சேரி தண்டபாணி தேசிகர் என்று காலையில் பத்திரிகையில் பார்த்த நினைவு. ரேடியோவை ஆன் செய்ய செய்தி அறிக்கை – 'இடைக்கால சர்க்காரில் மௌலானா அபுல் கலாம் ஆசாத் மந்திரியாகப் பதவியேற்றார்.'

'என்னங்க, வாங்கிட்டு வரலாமா?' ரேடியோவின் சத்தத்தைத் தணித்துவிட்டு ரத்னா கேட்டாள்.

'வரும் அடுத்த வெள்ளி பிற்பகல் அரை நாள் லீவு எடுக்கிறேன். இந்த இரண்டையும் வாங்கிவிடலாம்' என்று சொன்னேன்.

யோசித்து சரி என்றவள் தொள்ளாயிரம் ரூபாயை பேங்கில் போடக் கொடுத்தாள். மீதி நூறும் சாமி அலமாரிக்குள் பத்திரமாகப் புகுந்து கொண்டது. ருக்மணி குக்கரும் எலக்ட்ரிக் குக்கரும் வாங்க அது.

இந்த இரண்டில், ருக்மிணி குக்கர்பற்றி பத்திரிகை எதிலும் விளம்பரம் காணவில்லை. பத்து வருஷம் முன்பு பிரபலமான இது இப்போதும் இருக்கிறதா என்று தெரியவில்லை.

ருக்மிணி குக்கரோடு கூடவே ஒரு பத்து தடவையாவது விடாமல் சொல்லியிருப்பாள் – ‘விடா எலக்ட்ரிக் குக்கர் வேணும். எப்படியாவது வாங்கிடணும்.’

விடா குக்கர்பற்றிப் பத்திரிகையில் வசவச என்று படிக்க எந்த உந்துதலும் தராத படிக்கு காமா சோமா என்று வாக்கியங்களோடு ஒரு விளம்பரம் ரெண்டு மாதம் தொடர்ந்து வந்து அதுவும் காணோம். ஆனாலும் ரத்னா கேட்டால் வாங்கித் தராமல் இருப்பேனோ. அதுவும் இந்த சந்தர்ப்பத்தில்.

அவள் கேட்ட இரண்டு குக்கர் சமாசாரங்களையும்பற்றி ஆபீசில் சக ஊழியர்களிடம், தெரு நண்பர்களிடம் விசாரித்தேன். ருக்மணி குக்கர் பற்றி வாய்சாலகமாக நிறையப் பேர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். மின்சார குக்கர்பற்றி யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

நண்பர் கேளப்பனைக் கேட்டேன். அவர் பிரபல இந்தி நடிகர் – பாடகர் குந்தன்லால் சைகாலின் மரணத்துக்காக துக்கம் அனுஷ்டிப்பதாக எழுதிக் காட்டினார். ‘சோஜா ராஜ குமாரி’ என்று சைகால் பாட்டின் ஒற்றை வரியை நான் பாட, கூடவே பாடிவிட்டுச் சொன்னார் –

‘எலக்ட்ரிக் குக்கர் விலை 43 ரூ 12 அணா என்று மலையாள தினப் பத்திரிகை மாத்ருபூமியில் பார்த்த நினைவு.’

தொடர்ந்து நான்கு நாள் திங்களிலிருந்து வியாழன்வரை ஒரு மணி நேரம் ஆபீசில் இருந்து முன்னால் வந்தேன். எலக்ட்ரிக் குக்கரே மனதிலும் புத்தியிலும் திடமாக உட்கார்ந்திருந்தது. எனக்குத் தெரிந்து புவனா வீட்டில்கூட எலக்ட்ரிக் குக்கரோ ஹீட்டரோ, அவ்வளவு ஏன், தண்ணீர் சுட வைக்கும் மின்சார கெட்டிலோகூட கிடையாது.

எலக்ட்ரிக் ஹீட்டர் என்றும் எலக்ட்ரிக் குக்கர் என்றும் அழைக்கப் பட்ட அந்த சாதனம் அரையடிக்கு கனமான பிளாஸ்டிக்கோ ரப்பரோ போட்டு அமைத்த மேடையும் நடுவில் பத்து வட்டமாக மின்சாரம் பாய்ந்து சிவப்பாக

ஒளிவீசும் மின்சார காயிலுமாக விளம்பரப் புகைப்படத்தில் இருந்தது. குருணையாக அரிசி திரிக்கிற கல் யந்திரம் அளவு சுற்றளவு, உயரம். மின்சாரச் சுருளின் மேல் சிறியதாக கருப்பு வட்டம் போட்டு மேலே பாத்திரத்தை ஏற்றி வைக்க ஏற்பாடு. அது வெங்கலப்பானையிலிருந்து பித்தளைவரை இருக்கலாம். பீங்கான், அலுமினியம், ஈயம், மரம் இத்யாதி தடைசெய்யப்பட்டவை.

இந்த அடுப்புக்குக் கீழ்ப் பிரதேசமாக ஒன்றன் மேல் ஒன்றாக இடம் விட்டு செருகப்பட இரண்டு உலோகத் தட்டுகள். பொறிக்க, வறுக்க இவற்றின்மேல் வாணலியை வைத்தால் போதும். மாமிசத்தை அப்படியே இவற்றின்மேல் வைத்துச் சுடலாம்.

'இந்த சமாசாரம் என்னன்னு சொல்றேன். வாங்கப் போறபோது என்னையும் கூப்பிடுங்க' என்றார் எலக்ட்ரீஷியன் மணவாள நாயுடு. அது முடியாமல் போகவே, வாங்கி வந்த பிறகு வந்து பார்க்கச் சொல்லி காபி கொடுத்து அனுப்பினோம்.

திங்கள், செவ்வாய், புதன், வியாழன் நான்கு நாளும் புரசைவாக்கத் திலும், மயிலாப்பூரிலும், மாம்பலத்திலும் எலக்ட்ரிக் குக்கரைத் தேடினோம். கடை கடையாக ஏறி கால் வலித்ததுதான் மிச்சம்.

எலக்ட்ரிக் உபகரணம் ஆனதால் சீலிங் ஃபேன் விற்கும் கடைகளில் கிடைக்கும் என்று யாரோ சொன்னார்கள். அந்தக் கடைகளுக்குப் போய் குத்துமதிப்பாக எலக்ட்ரிக் குக்கரைப்பற்றிக் கேட்க அதென்ன என்று என்னிடமே திருப்பிக் கேட்டார்கள்.

யாரோ சொல்ல, ரேடியோ விற்கும் கடைகளில் கிடைக்கும் என்று நானும் ரத்னாவும் படையெடுத்தோம். அங்கெல்லாம் அழகான ரேடியோக்கள் எட்டு வால்வ், ஐந்து வால்வ், ஐந்து நிமிடத்தில் சார்ஜ் ஆகி கரண்டே அதற்கு அப்புறம் தேவைப்படாதவை என்று நானாவித மான சிறப்புகளோடு, மார்க்கோனி, ரேடியோலா, பீப்பிள்ஸ் செட் என்று விதவிதமான பெயர்களில் கொரகொரத்துக்கொண்டிருக்க, எலக்ட்ரிக் குக்கரைக் காணோம்.

'வரும் வாரக் கடைசி சனிக்கிழமை ஆபீஸ் லீவு. திங்கள்கிழமை வேறே உள்ளூர் விடுமுறை. நீங்களும் நானும் மூணு நாள் கொட்டுகொட்டுன்னு சும்மா உட்கார்ந்திருப்பதைவிட உருப்படியா என்ன செய்யலாம்?'

ரத்னா வியாழக்கிழமை இரவு இடியாப்பத்தை எனக்கு சகலவிதமான குருமா, சட்னி வகையோடு சமர்ப்பித்துக்கொண்டு கேட்டது இது.

மனதில் தோன்றி வெளியே பகராமல் வைத்துக்கொண்ட என் பதில் – இலங்கை போய்விட்டு வரலாம்.

இலங்கை போனால் புவியைப் போய்ப் பார்க்கலாம். அவள் இந்திப் படத்தில் நடிக்க ஆரம்பித்து அதுவும் இப்போது ஒரு முழு ஷெட்யூல் இலங்கையில் ஷூட்டிங், ஒண்ணரை மாதத்துக்கு.

ஆக, வார இறுதி விடுமுறைக்கு புவி வரப் போவதில்லை. நானும் அவளைச் சந்திக்கப் போவதில்லை. வேறென்ன செய்ய?

'எங்கேயாவது போய்ட்டு வரலாமா?' நான் ரத்னாவை மெல்ல விசாரித்தேன்.

'எங்கே?' பட்டணம் பொடியை உறிஞ்சாமல் முகர்ந்து டப்பாவை மூடி வைத்தபடி கேட்டாள் அவள். டாக்டர், அவள் பட்டணம் பொடி போட வேண்டாம் என்று விதித்து ரத்னாவும் அதைக் கடைப்பிடிக் கிறாள். வீட்டில் பொடிமட்டை, டப்பா, பெட்டி என்று எல்லாமும், அடுக்குத் தும்மலும் போன இடம் தெரியவில்லை. பொடி துறந்த இந்த சுய கட்டுப்பாட்டுக்காகவே அவளுக்கு மிகப்பெரிய வெகுமதி தரலாம். எங்கே கூட்டிப் போகலாம் ரத்னாவை?

'லண்டன், நியூயார்க், பெர்லின், புடாபெஸ்ட்…' சந்தோஷமாக அடுக்கினேன்.

'அடுத்த வாரக் கடைசிக்கு அந்த பட்டிதொட்டி எல்லாம் போகலாம்… வேறே பக்கத்திலே பெரிய பட்டணமா சொல்லுங்க டியர் ராவ்ஜி' கன்னத்தில் முத்தமிட்டுக் கொஞ்சினாள் ரத்னா.

'தஞ்சாவூர் போய்ட்டு வரலாமா?' அவள் அணைப்பில் சுருண்டு சொன்னேன்.

'போன வருஷம்தான் போனோம்' ரத்னா கையை உதறினாள்.

'சிதம்பரம்?'

'கும்பாபிஷேகம் வருது சிதம்பரத்திலே. கூட்டம் அதிகமா இருக்கும்.'

'மதுரை?'

‘மூணு மாசம் முந்திதான் போனது’ ரத்னா புறக்கணித்தாள்.

‘அப்ப கும்பகோணம் போனா என்ன?’ நான் ஹிப்னடிஸத்தில் கட்டுண்ட குரங்குமாதிரி தாடையைச் சொரிந்துகொண்டு சொன்னேன்.

ரத்னா பழைய நினைவுகளை மீட்ட கும்பகோணம் போக ஆசைப்படுகிறாள். அதை என் வாயால், என் ஆசையாகச் சொல்ல வைத்தது அவளுடைய அசாத்திய புத்திசாலித்தனம்.

‘ரயில்வே ஸ்டேஷனுக்கு நாளைக்கு போய் டிக்கெட் வாங்கிக்கலாமா இல்லே பஸ்ஸிலே போயிடலாமா?’ ரத்னா ஆர்வத்தோடு கேட்டாள்.

‘அதை நான் பார்த்துக்கறேன்...’

‘ஏற்கெனவே நீங்க பார்த்துக்கறதா சொன்ன இன்னொண்ணு இருக்கு.’ ரத்னா நினைவு படுத்தினாள்.

ருக்மணி குக்கர்.

‘நாளைக்கு வெள்ளிக்கிழமை. நீங்க அரைநாள் லீவு போட்டுட்டு வந்து ருக்மணி குக்கர், எலக்ட்ரிக் குக்கர் ரெண்டும் வாங்கலாம்னு சொன்னீங்க...’

எலக்ட்ரிக் குக்கர் நாளைக்கு வாங்கிடலாம். நம்பிக்கையோடு சொன்னேன்.

ருக்மணி குக்கர்?

‘பத்திரிகையிலே ருக்மணி குக்கர்பற்றி ஏதும் இருக்கான்னு பார்த்தேன். ஒண்ணையும் காணோமே. அது இப்ப வருதா?’ என்று கேட்டேன்.

‘வராமலா நான் கேக்கறேன்?’ மூக்கு நுனியில் கோபம் தெரிந்தது.

‘ஊரறிஞ்ச பிராமணனுக்கு பூணூல் எதுக்குன்னு சுபாங்கி அம்மாள் சொல்வாங்க. ருக்மணி குக்கர் ஜகப் பிரசித்தம். எதுக்கு பத்திரிகையிலே போடணும்? விளம்பரம் இல்லாமலேயே கணிசமா வித்துக்கிட்டிருக்கு.’

சுபாங்கி அம்மாள் பழைய ருக்மிணியைப் போட்டுவிட்டு புதுசு வாங்கினதாகச் சொன்னதால்தான் இத்தனை நாள் கழித்துத் தானும் அதை வாங்க ஆசைப்படுவதாகச் சொன்னாள் ரத்னா.

கட்டாயம் ருக்மிணி குக்கர் வாங்கணும். இன்னொரு தடவை வலியுறுத்தினாள்.

காபி பில்டர் வாங்கணும், வடகம் பிழியவும் ரிப்பன் தேங்குழல் பொறிக்கவும் பித்தளைச் செப்பு வாங்கணும், இட்லிப் பானை பழசைப் போட்டுவிட்டு புதுசாக வாங்கணும் இப்படியான கோரிக்கைகள் அவ்வப்போது வருவது வாடிக்கைதான். அதெல்லாம் என்ன மாதிரி உபகரணங்கள் என்று தெரிந்ததால் மாம்பலத்தில் கடை கடையாக ஏறி இறங்கி வாங்க எவ்வளவு நேரம் செல்லும் என்பதுகூட அனுபவத்தால் ஏறக்குறைய சரியாகச் சொல்லமுடியும்.

ஆனால் இந்த ருக்மிணி குக்கர் என்பது என்ன மாதிரியான தளவாடம் என்று எனக்குத் தெரியாததால் அடங்கி வாசிக்க வேண்டிப் போனது.

‘பித்தளையிலே ஒரு உருளை ஒரு முழம் நீளத்துக்கு கற்பனை செஞ்சுக்குங்க. அது உள்ளே கூடு மாதிரி இருக்கும். ஒரு பக்கத்திலே அடைச்சு வைக்க மூடி போட்டுக்க வசதி. அப்புறம் அந்தப் பெரிய உருளைக்குள்ளே போட கொஞ்சம் சின்ன உருளை, அப்புறம் டிபன் பாக்ஸ் அடுக்குப் பாத்திரம் மாதிரி மூணு சம்புடம். அதற்கு ஒண்ணொண்ணுக்கும் மூடி. குழிஞ்சு ஒரு தட்டு. முதல் உருளைக்குள்ளே மீதி ஐந்துமோ அல்லது அதிலே சிலது மட்டுமோ, என்ன வரிசையாக இருந்தாலும் உள்ளே போகும். இதெல்லாம் சேர்த்தால் ருக்மணி குக்கர்.’

ரத்னா என்னைப் படிப்பித்த தோரணையில் உற்சாகத்தோடு அப்போது சொல்லி முடித்தது –

இந்த உபகரணங்களை மயிலாப்பூரிலும் மாம்பலத்திலும் கடை கடையாக நேற்றும் இன்றும் என்றும் விற்றுக்கொண்டிருக்கிறார்களாம். அதெல்லாம் பாத்திரக் கடை என்பதைச் சொல்லியாக வேண்டும்.

ஊரோடு பார்டர் இல்லாத புடவை அணிகிற பேஷன் வந்து ஸ்திரிகள் எல்லோரும் அவ்வண்ணமே ஆன புடவைகளைத் தேடியலைந்த மாதிரி, வீடு வீடாக ருக்மணி குக்கர் வாங்க சதா ஆர்வம் காட்டுகிறார்களாம்.

படித்துவிட்டு உத்தியோகத்தில் வந்த, இன்னும் கல்யாணம் ஆகாத இளைஞர்கள்கூட இந்த ருக்மிணி குக்கரைத் தேடிப்போய் வாங்குகிறார்களாம்.

‘சாதமும் வியஞ்சனங்களும் உள்ளே வைத்து அடுப்பில் தணித்து நெருப்பு வைத்து ருக்மிணி குக்கரை ராத்திரி தூங்கப் போகும் முன் இருத்தினால் காலையில் எட்டு மணிக்கு குளித்துவிட்டு சுடச்சுட ஃபுல் மீல்ஸ் சாப்பிடத் தயாராகி இருக்கிறது என்ற திருப்தியாம் அவர்களுக்கு.

இந்த நைஷ்டிக பிரம்மசாரிகளில் இன்னும் கூடுதல் சாப்பாட்டு லயம் வாய்த்தவர்கள் காலையில் ஆபீசுக்குப் போகும்போது இப்படி குக்கரை சித்தப்படுத்தி வைத்துவிட்டுப் போனால், சாயந்திரம் வரும்போது ராத்திரி சாப்பாடு தயார் என்பதில் சந்தோஷமாம்.

சுடச்சுட சாப்பாடு சரி. அதுக்காக பீடி பற்ற வைக்க தாடியைக் கொளுத்தின கதையாக நெருப்பை வீட்டுக்குள் வைத்துவிட்டு ராத்தூக்கத்தில் அமிழவோ, ஆபீஸ் களேபரத்தில் காலையில் வைத்துப் போன நெருப்பை பகலில் மறந்துவிடுவதோ உசிதமில்லை என்று நான் ரத்னாவுக்கு பதமாக எடுத்துக் காட்டினேன்.

‘நான் ஆபீசுக்கும் போவதில்லை. இப்படி முழுச் சோம்பேறியாக குக்கரை அடுப்பில் வைத்துவிட்டு கதைப் புத்தகம் படித்துக்கொண்டும் இருக்கவும் என்னால் முடியாது. எப்போதாவது உடம்பு வழங்காத போது ருக்மிணி கைகொடுத்தால், ஒரு சாதம், ஒரு பருப்பு இப்படி குக்கர் சமைத்தால் போதும்.’

அதற்கு அப்புறம் என் தரப்பில் எந்த விவாதமும் இல்லை.

மாம்பலத்தில் எல்லா கடைகளிலும் பத்து வருஷமாக பிரபலமாக இருக்கிறதாம் இந்த ருக்மிணி குக்கர். அதாவது சரியாக எங்கள் கல்யாணம் நடந்த 1937-இல் தொடங்கி ருக்மிணி எங்கும் கிடைத்தாலும் எங்கள் வீட்டில் இந்த நூதன வஸ்து இனிமேல்தான் உள்ளே வர வேண்டும்.

சொன்னபடி வெள்ளி பகலுக்கு அப்புறம் அரைநாள் லீவு சொல்லி விட்டு வீட்டுக்கு வந்தேன். மாம்பலம் போகலாமா என்றாள் தயாராக இருந்த ரத்னா.

முதல்லே ருக்மிணி குக்கரை முடிச்சுடலாம். ரத்னா சொன்னாள்.

மாம்பலம் உஸ்மான் ரோடில் இருந்த பாத்திரக் கடைகளை ஒன்று விட்டு ஒன்று என்று உள்ளே போய்ப் பார்க்க முடிவு செய்திருந்தாள் ரத்னா.

முதல் கடையில் இவளைப் பார்த்ததுமே டெலிபதி தெரிந்ததுபோல் கடைக்காரர் ‘ருக்குமணி குக்கரு தானுங்களே? நுப்பதிலேருந்து பத்து ரூபா

வரைக்கும் இருக்கு' என்று தெக்கத்தி தமிழில் கூறினார்.

'இன்னிக்கு நீங்க நாலாவது. சர்க்கார்லே ஏதாவது சட்டம் போட்டிருக்காங்களா எல்லா வீட்டிலேயும் ருக்குமணி இருக்கனும்னு?' சகஜமாகக் கேட்ட அவர் நாக்கில் சனி வந்து உட்கார்ந்தது.

ரத்னா ஒருமுறை முறைத்தாள். 'நான் என்ன பத்தோடு பதினொண்ணா? என்னைப் பார்த்தா கவர்மெண்ட் சொன்னா உடனே 'சரி எஜமானர்களே உங்கள் சித்தம் என் பாக்கியம்'ன்னு சலாம் போட்டு அதை நிறைவேற்றும் அடிமை மாதிரியா இருக்கேன்?' தீபாவளிக்குக் கொளுத்திய ஏராப்ளேன் வாணம் எதிர் வீட்டுக் கூரையில் புகுந்த மாதிரி சீறினாள் அவள்.

'ஐயோ நான் உங்களை அப்படி எல்லாம் சொல்வேனா... மெட்றாஸ் நல்லா இருக்கவே தெலுங்குகாரங்கதானே காரணம்... தாங்குதூரி பிரகாசம் மாதிரி ஒரு தலைவர் கிடைக்கணுமே... அவர் பிரதமரா இருக்கற சென்னை சர்க்காரை காங்கிரஸ்காரங்களே கவிழ்க்கறது என்ன நாயம்.' கடைக்காரர் சினம் காட்டினார்.

'நீங்க தெலுகுவா?' ரத்னா அதிகாரமாகக் கேட்டாள்.

'இல்லேங்க நல்ல தமிழ்... சிவேங்க... சிவகங்கை செம்மண்.'

'செம்மண்லே பிரகாசம் எங்கே வந்தார்?'

'இல்லீங்க... அவர் தெலுங்கு மண்ணுன்னு சொல்ல வந்தேன்... உங்களை மாதிரி.'

'நான் அப்படிச் சொன்னேனா?'

'பழனியாண்டி!!!!' என்று பிற்பகல் நான்கு மணிக்கு உச்சிவெய்யிலில் வத்தலாகக் காயப்போட்ட மாதிரி கடைக்காரர் வியர்த்து விறுவிறுத்துப் போனார். பரிதாபமாக என்னைப் பார்த்து, 'வந்தே மாதரம்தான் சார் நானும்' என்றார் என்னிடம் அடைக்கலத்தை எதிர்பார்த்து.

'சர்க்கார் உத்தியோகஸ்தன் கிட்டே வந்தேமாதரமா, வேணாம்', என்று நானும் கழன்றுகொண்டேன் உடனடியாக.

இன்னொரு தடவை இருகரம் உயர்த்த, 'பழனியாண்டியை ருக்மணி குக்கர் காட்டச் சொல்லுங்க' என்று சாதாரணமாகக் கேட்டாள் ரத்னா.

கடைக்காரருடைய உதவியாளன் துறுதுறுப்பாக ருக்குமணி குக்கர் இதாங்க என்று ருக்மணி தேவி அருண்டேலை அறிமுகப்படுத்திய மாதிரி பெருமையோடு ஒரு குவியல் பித்தளைப் பாத்திரங்களை கைசுட்டிக் காட்டினான்.

இது பித்தளையிலே ஆறு பாத்திரம் என்று அவன் ஆரம்பித்ததுமே போதும் அதெல்லாம் தெரியும் என்றேன்.

‘பாத்திரத்துக்குள்ளே பாத்திரத்தை போட்டு அடுப்பிலே வச்சு சூடு பண்ணினா, உள்ளே எதையாவது அடச்சிருந்தா கருகிப் போயிடாதா’ என்று என் புத்திசாலித்தனத்தைப் பறைசாற்றிக்கொண்டேன்.

‘சார், இப்படி எல்லாம் பயமுறுத்தக்கூடாது. ருக்குமணி குக்கருக்குள்ளே ஊருணித் தண்ணி ஊத்தணும்.’ கடைக்காரர் ஆர்வமாகச் சொன்னார்.

‘ஊருணி மெட்றாஸ்லே ஏதுங்க?’ ரத்னா என்னை முந்திக்கொண்டு கேட்டாள்.

‘அட குடிதண்ணி ஊத்தணும்கிறதை சொல்றேன்...’

கடைக்காரர் ருக்மிணி குக்கரின் முக்கிய கதாபாத்திரமான பெரிய பித்தளை உருளைக்குள் கிட்டத்தட்ட முழுக்கத் தண்ணீர் ஊற்ற வேண்டும் என்று சைகையால் ஊற்றிக் காட்டினார்.

‘சின்ன உருளைக்குள் கொஞ்சம் தண்ணீர்விட்டு அரிசி, மற்றும் டிபன் பாக்ஸ் அடுக்குச் சம்புடங்களில் காய்கறி நறுக்கியது, குழித்த தட்டில் தண்ணீர்விட்டு பருப்பு இப்படி வைத்து அததன் மேலே மூடியை மூடி, பெரிய உருளையின் மூடியையும் பத்திரமாகப் பொருத்தி வைத்து அடுப்பில் நேராக இதை ஏற்றி வைத்தால் உங்க சாப்பாடு உங்களுக்கு.’

குறைந்தது மூன்று மணி நேரமாவது குக்கருக்குள் வைத்த சாதமும் மற்றதும் வெந்து தயாராக நேரம் பிடிக்கும் என்றார் கடைக்காரர்.

நம்ம வீட்டுலே ஒரு மணி நேரத்திலே சாப்பாடு ஆக்கி, ரெண்டு மணி நேரத்திலே சாப்பிட்டு, மூணு மணி நேரத்திலே சீரணமாயிடுமே என்று ரத்னாவிடம் கேட்டேன்.

‘அதேதான். இப்படி நேரம் செலவழிக்கணுமான்னுதான் இத்தனை நாள் வேணாம்னு வச்சிருந்தேன். ஆனா இப்போ வேண்டியிருக்கே.’

அவள் சொன்னபோது எனக்கு நிதானமாக நினைவு வந்தது.

அது போனவாரம் மீசை நாயர் டாக்டர் சொன்னது. அவர் மூலம் பரிச்சயமான, பெண்கள் நல கைனகாலஜிஸ்ட் டாக்டர் லட்சுமி மூலம் உறுதியானது.

'உண்டாயிருக்காங்க' என்றாள் லட்சுமி டாக்டர் ரத்னாவை சோதித்துவிட்டு. ரத்னா வரும் ஆகஸ்டில் எதிர்பார்க்கலாம் என்று சந்தோஷ சமாசாரத்தை ரத்தினச் சுருக்கமாகச் சொல்லி, எக்சர்சைஸ், சாப்பாடு, மற்றபடி லௌகீக வாழ்க்கைபற்றி எல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னபோது நான் பாதிவரைதான் அனுமதிக்கப்பட்டேன். ஆனாலென்ன, ரத்னா ஒரு வார்த்தை விடாமல் காதில் கேட்டதை மனதில் இருத்தியதால் எனக்கு வேலை கம்மி.

சமையலறையில் ஒரு மணி நேரம் நின்று சமைக்க முடியுமா இனி நாட்கள் போய்க்கொண்டிருக்க என்று ரத்னா டாக்டர் லட்சுமியைக் கேட்டபோது அவள் சொன்ன பதில் இது – 'சமையலோ மையலோ உடம்பு ஒத்துழைக்கறவரை ஜாக்கிரதையா செய்யணும். முடியலேன்னா முடியலேதான்... இன்னிக்கு வேண்டாம்னு வச்சா வேண்டாம்தான். இது போதும்னு வச்சா அதுக்கு மேலே கிடையாதுதான்...'

'வீட்டிலே முடியலேன்னா வெளியே போய்க்கலாம்தானே?' என்று நான் அரையும் குறையுமாகக் காதில் வாங்கி, என்னைக் கேட்காத கேள்விக்கு பதில் சொல்ல, டாக்டர் லட்சுமி சிரித்தாள். ரத்னா முறைத்தாள்.

'பட்டணம் பொடி போடலாமா டாக்டர்?' ரத்னா சர்வசாதாரணமாகக் கேட்க, டாக்டர் லட்சுமிக்கு ஒன்றும் புரியாமல் ஒரு நொடி பார்த்து, 'அவர் பொடி போட்டா அவருக்கு மட்டும் தும்மல் வரட்டும்... உங்களுக்கு என்ன போச்சு' என்று என்னைக் காட்டிச் சிரித்தாள்.

'இல்லே டாக்டர் நான் ஆபீஸர்ஸ் பட்டணம் பொடி போடலாமா?' ரத்னா சாதுவாகக் கேட்டாள்.

'நோ பொடி... ஆபிசர்ஸ், கிளார்க், டவாலி..' கண்டிப்பாகச் சொன்னாள் டாக்டர்.

வேண்டாம் வேண்டாம் என்று தலை ஆட இருந்த, லட்சுமி டாக்டரை வேறு யாரும் இவ்வளவு ஆச்சரியப்படுத்தியிருக்க முடியாது.

அது இரண்டு வாரம் முந்தி. இடையில் ருக்மணி குக்கர் உள்ளே புகுந்து மாம்பலத்துக்கு இப்படித் துரத்திவிட்டது. பாத்திரக்கடைக்காரருக்குத் துன்பம் இன்னும் தீரவில்லை.

‘டென்மார்க்லேருந்து வந்த பாத்திரத்திலே நெய் வச்சா துரும்பு வராதுன்னு ரோஜா மார்க் நெய் விளம்பரத்துலே பார்த்தேன். டென்மார்க் பாத்திரம் காட்டுங்க’

ரத்னா ருக்மணி குக்கர் தளவாடங்களை அணைத்தாற்போல் வைத்துக்கொண்டு அடுத்த அஸ்திரத்தைப் பிரயோகித்தாள்.

‘ஐயோ டென்மார்க் எங்கே இருக்குன்னு பூகோள உருண்டையிலே கூட காட்டத் தெரியாதுங்க அங்கிட்டு என்ன பாத்திரம்னு சத்தியமாத் தெரியாது.’

‘நீங்க எங்கே பாத்திரம் வாங்குவீங்க??

‘இது செய்ய ஃபேக்டரி இருக்குங்க அங்கேதான்.’

‘டென்மார்க் பாத்திரத்திலே என்ன விசேஷம்னு பார்த்து அங்கே செஞ்சு தர முடியாதா?’

‘கேட்டுப் பாக்கணுமுங்க’

‘கேட்டு வையுங்க... அடுத்த வாரம் வரேன்’

கடைக்காரர் குழைந்து அழும் பதத்தில் வந்து சேர, கடைசியாக ரத்னா என்னிடம் சொன்னாள்,

‘சரி, நாம ருக்மணி குக்கர் வாங்கிக்கலாம்ங்க.’

பச்சைக்கொடி காட்டி அரை மணி நேரத்தில் ருக்குமணி குக்கரும் கூட சின்னச் சின்னதாக இலவச இணைப்பு பாத்திரங்களுமாக நான் சுமந்து போகக் கணிசமாகக் கிடைத்தது.

வெள்ளிக்கிழமை ஒழுங்காக, உபயோகமாகப் போன மகிழ்ச்சியில் டாக்சி பிடித்து புரசைவாக்கம் திரும்பி வந்தோம்.

‘எலக்ட்ரிக் குக்கர் நாம கும்பகோணத்திலே இருந்துவந்ததும் வாங்கலாம் ராவ்ஜி’, ரத்னா என் தோளில் தட்டிச் சொன்னாள்.

நான் பழநியாண்டவா என்று கை கூப்பினேன். நுப்பது ரூபாய்க்கு எலக்ட்ரிக் குக்கர் கிடைக்குமா தெரியவில்லை.

ஏழு மணிக்கெல்லாம் வீடு. சாப்பிட்டுவிட்டு எட்டரைக்கெல்லாம் உறக்கம். விடிந்து சனிக்கிழமை காலை ஏழரை மணிக்கு கும்பகோணம் போக பஸ்ஸைப் பிடிக்கலாம் என்று ரத்னாவிடம் சொல்லியிருந்தேன்.

காலையில் எஸ்பிளனேடில் வெளியூர் பஸ் ஸ்டாண்ட் போகத் தயாராக ரத்னா வீட்டுக் கதவைப் பூட்டப் போனபோது நான் என்ன அவசரம் என்று கேட்டுக் கையமர்த்தினேன்.

‘உங்களுக்கென்ன சாவகாசமா அடுத்த பஸ்ஸிலே போகலாம்னு சொல்லுவீங்க. எந்த பஸ்ஸுனு திட்டம் பண்ணி வச்சிருக்கமோ, அதிலே போகாட்ட கஷ்டமாயிடும்’ என்றாள் அவள்.

‘வா, போகலாம். வாசலுக்கு வண்டி வந்தாச்சு.’ நான் கூற, புரியாமல் பார்த்தாள் ரத்னா. நான் சுற்று முற்றும் பார்த்து யாருமில்லை என்று உறுதிப்படுத்திக்கொண்டு அவளை அணைத்து உதட்டில் முத்தமிட்டு, அந்த அறியாப் பேதையின் மருண்ட விழிகளை விரல்கொண்டு மூடி, காதில் முணுமுணுப்பாகச் சொன்னேன் –

டாக்சி.

டாக்சியா? அவள் இன்னொருமுறை மருண்டாள். இன்னொருமுறை நானும் சளைக்காமல் முத்தமிட்டேன். அது உதடு இல்லை என்றாள் வழக்கம்போல்.

அம்பாசடர் டாக்சி மெல்லப் புறப்பட்டு வேகம் கொண்டது.

சிதம்பரம் வழியாகப் போக வழியில் மராமத்து நடந்து கொண்டிருப்பதால் நேரம் அதிகம் ஆகுமே, பரவாயில்லையா என்றார் டிரைவர். கோவில் கும்பாபிஷேகத்துக்கு கணிசமாக அதிகரித்த போக்குவரத்து வேறே.

‘வேறே என்ன வழி இருக்கு?’ என்று ரத்னா ஆவலாகக் கேட்டாள். அவள், ஏன் நான்கூட இவ்வளவு பெரிய சுற்றுப்பயணம் காரில் இதுவரை போனதில்லை.

கொஞ்சம் சுற்று வழியில், பிரதான சாலைபோலவே சௌகரியமாகப் போகலாம் என்று வண்டி ஓட ஆரம்பித்த பிறகுதான் தெரிந்தது.

பண்ருட்டி உள்ளே நுழையும்போதே பலாப்பழ வாடை மூக்கைத் தொட்டது. நான் இரண்டு பலாப்பழம் வாங்கி காரின் பின்னால் டிக்கியில் போட்டு வைக்கலாமா என்று யோசித்தேன். பலாப்பழத்தைக் கட்டித் தூக்கிக்கொண்டு அதன் ஆளை அடிக்கும் வாசனையோடு கும்பகோணத்தில் சுற்றிவர முடியாது என்று புலப்பட, அந்தத் திட்டத்தைக் கைவிட்டேன்.

கார் போன பாதையில் பண்ருட்டி பொம்மைக்கடை ஏதும் திறந்திருக்க வில்லை. இருந்தால் ரெண்டு கிருஷ்ணன் பொம்மை வாங்கியிருப்பேன். அதில் ஒன்று புவனாவுக்கு.

மீன்சுருட்டி, சேத்தியாதோப்பு என்று விரியும் பாதை வெய்யில் ஏறிவர வெளியில் விரிந்துகொண்டிருந்தது.

ரயிலில் போகும்போது மனதுக்கு இதமான ஓவியமாகக் கண்ணில் படும் பசுமையான நஞ்சை நிலப்பரப்பு, திரைப்படம் ஒன்று எல்லையில்லாமல் அதிவேகமாக விரிவதுபோல் கார் ஜன்னலுக்கு வெளியே நீட்சி கொண்டது.

காருக்கு வெளியே கடைத் தெருக்களில் மிட்டாய்க்கடைகள் காலையில் கடை விரித்துக் காத்திருந்தது எந்த மாதிரி வாடிக்கையாளர் களுக்காக என்று எனக்குச் சரியாகப் புரியவில்லை. விருந்தாடப் போகிறவர்கள் வாங்கிப்போகப் படியேறுவார்கள் என்ற நம்பிக்கையாக இருக்கலாம். அல்லது நேற்று ராத்திரி கூடலின்போது கொடுத்த நானாவித வாக்குறுதிகளில் நிறைவேற்ற எளிதான, 'நாளைக்கு கோதுமை அல்வா வாங்கி வருகிறேன், போதும் என்று தோன்றும் வரை உண்ணலாம்' என்பது மனதின் முன் தளத்தில் வர குடும்பஸ்தர்கள் மிட்டாய்க்கடைப் படி ஏறி வர எதிர்பார்த்து இருக்கலாம். அது இந்த நாளுக்கான முன்னறிவிப்புமாகலாம்.

அல்லது நேற்று நடு இரவில் தூக்கக் கலக்கத்தில் காரசேவு கேட்ட குழந்தையின் பெற்றோர் இனிப்புக் கடையில் படியேறி வரலாம். விடிந்ததும் கண்விழிக்கும் குழந்தை, படுக்கைக்கு அருகே தின்பண்டத்தைப் பார்த்து அடையும் மகிழ்ச்சியைப் பிரதானமாக நினைப்பவர்களாக அவர்கள் இருக்கலாம்.

இனிப்புக் கடைக்கு நேர் எதிரே, முடிவெட்டும் நாவிதர் கடைகளில் சோப்பு கன்னத்தில் பூசி முகம் மழிக்கப்பட உட்கார்ந்து இருப்பவர்கள் மனதில் மைசூர்பாகு சாப்பிட நேரம் கெட்ட நேரத்தில் ஆசை உருவாக, அந்த மிட்டாய்க்கடை கண்ணாடி பீரோக்களில் அடுக்கி வைத்த இனிப்புகள் தூண்டியிருக்கலாம்.

வடலூர் கடந்து போகும்போது ரத்னாவுக்கு வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் எனக் கவிதையாக மனதில் நிறுத்தியிருந்ததைச் சொன்னேன்.

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டி சுவைக்கட்டி செய்யும் திருவருட்பா ரெசிப்பெ சொன்னேன். கடவுளை ருசித்த கதை அது.

கடை விரித்தேன் கொள்வாரில்லை கட்டிவிட்டோம் என்ற விரக்தியையும் நான் சொல்லியபடி இருக்க, கும்பகோணத்துக்குப் பகல் ஒண்ணேகால் மணிக்கு வந்து சேர்ந்தோம்.

ஏற்கெனவே, காமாட்சி ஜோசியர் தெருவில் வசதியான லாட்ஜ் ஒன்றில் இரண்டு நாள் வாடகைக்கு, ஆபீஸ் நண்பர் மூலம் ஏற்பாடு செய்திருந்தேன்.

விட்டோபா குடும்பத்தோடு ஹரித்துவார், ரிஷிகேசம், வாரணாசி யாத்திரை போயிருக்கிறார். அவருடைய பயணத் திட்டத்தை போன வாரம் அறிந்து கொண்டபோது நான் வருவதைச் சொல்லாமல் விட்டேன். சொல்லியிருந்தால் வட இந்தியா யாத்திரையை அவர் ஒத்தி வைத்திருப்பார். எப்படி இருந்தாலும், நாளை ஞாயிறு காலை அவர் திரும்ப வந்து சேர்வதாகத் தகவல் வந்தது.

மங்களா ஓட்டலில் திருப்திகரமாக, திருப்திகாரமாக பகல் சாப்பாடு. கும்பகோணம் ஆந்திரப் பிரதேசமாகி விட்டதா அல்லது ஓட்டலை மனவாடு சகோதரர்கள் உரிமை கொண்டாட வந்திருக்கிறார்களா தெரியவில்லை, பரிமாறும் பாணியில் கூட வித்தியாசம் தெரிந்தது. கோங்குராவும், பருப்புப் பொடியும், உருக்கின நெய்யும், ஆவக்காயும், கோவைக்காயும் மெனுவிலும் நாக்கிலும் முதலில் நின்றன.

மிளகாய்ச் செடியில் ஒட்டுப் பதியன் வைத்து தக்காளி விளைந்து ரசத்தில் விழுந்ததுபோல் காரசாரமான தக்காளி ரசம் வேறே. புலுசு என்று சொல்லாவிட்டாலும் தமிழ் ஒப்பனையில் ஆந்திரப் புளிக்குழம்பு சாப்பிடு சாப்பிடு என்றது.

திருப்தியாக உண்டு எழுந்து விடுதியில் அறைக்கு வந்தபோது பிற்பகல் மூன்று மணி. வெய்யில் இன்னும் பளீரென்று அடித்துக் கொண்டிருந்தது. காற்று மேலைத் திசையிலிருந்து அடர்த்தியாகத் தொடர்ந்து வீச,

அறையின் ஜன்னல்கள் எல்லாவற்றையும் திறந்து காற்றுக்கட்டை போட்டு வைத்தேன்.

நாங்கள் சிறு நித்திரையாகப் போனது விழிப்புத் தட்டும்போது மாலை ஐந்தேகால் மணி. நேரத்துக்குப் பொருத்தமாகக் கீழே யாரோ செம்பை வைத்தியநாத பாகவதர் கொடுத்த கொலம்பியா ரிக்கார்டில், ராகமாலிகையாக 'சாயங்காலே' கிருதி சத்தமாக வைத்துக்கொண்டிருந்தார்கள்.

பொடிநடையாக நடந்து, மங்களாம்பிகா காப்பியை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது பின்னால் இருந்து பெருஞ்சத்தம் – 'என்ன டீ ஆபீசர், காப்பி குடிக்க ஆரம்பிச்சாச்சா?'

பனிரெண்டு வருடம் காலச் சக்கரத்தில் யாரோ வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்துப்போய் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தைந்தாம் வருடத்து சாயந்திரத்தில் இறக்கிவிட்டார்கள்.

யாரோ அது என்று பார்க்க பின்னால் திரும்ப உடனே நினைவுக்கு வந்த முகம் – சக்ரபாணி கோவில் பட்டாசாரியார்.

குடும்பமே டெல்லியிலும் பம்பாயிலும் இருப்பதாக சந்தோஷமும் பிரமிப்பும் விளைவிக்கும் தகவல் சொன்னார் அவர்.

'மாமி கூட பம்பாயில்தான் பிள்ளை கூட. நான் பெருமாள் துணைக்கு இருக்கார்னு இஞ்ச இருந்திண்டிருக்கேன்.விட்டுட்டுப் போக மனசு வரலை. சாயந்திர பூஜைக்கு சின்ன பட்டாசாரியாரை நியமிச்சிருக்கு. நான் மெல்ல ஆறு மணியைப்போலத்தான் போறேன். எழுபது வயசாச்சு. இன்னும் நாலஞ்சு வருஷம் வண்டி ஓடினா போதும்... வரட்டா... கோவிலுக்கு வாங்கோ.'

சரமாரியாக எண்களை வீசிப்போன அவருடைய சைக்கிள், மினுமினுப்பு குறையாமல் விண்ணெண்று இருந்தது. அவர் அதில் ஏறி உட்கார்ந்த கம்பீரம், விண்ணென்று இப்போதைக்குக் கிளம்ப மாட்டார், மண்ணில் கணிசமான நாள் பாக்கி உண்டென்று சொன்னது.

கோவிலில் எட்டுக்கால் வட்ட மண்டபத்தைச் சுற்றிப் புல்பூண்டுகள் நீக்கி சுத்தமாகப் பெருக்கிக் கோலமிட்டு வைக்கப்பட்டிருந்தது. சிமெண்ட் காணாத கோவிலாகப் பத்து வருடம் முன் பார்த்தது இப்போது அங்கே இங்கே ஒட்டு வேலையும், ஓரமாகச் சின்ன மேடையும், நடைக்கு ரெண்டு

பக்கமும் ஒற்றையடியாக சிமிட்டித் தரையுமாக பளிச்சென்று வித்தியாசம் தெரிந்தது.

வட்ட மண்டபம் கடந்து உள்ளே போனோம். பிரகாரத் தூண்களைச் சுற்றிப் பழைய காரையும் சுண்ணாம்பும் பூசிய சிறு மேடைகள் பழைய நண்பர்களாக அந்நியோன்யத்தைச் சொல்லாமல் சொல்லின.

நான் ரத்னாவை எதுவும் பேசமால் இடப்புறத் தூண் ஒன்றின் முன் கொண்டுபோய் நிறுத்தினேன்.

அவள் உதடுகள் துடித்து விம்ம ஆரம்பித்தாள்.

‘இங்கேதான் இங்கேதான்...’ அவளுக்கு வார்த்தை வரவில்லை.

அங்கேதான் முதன்முதலாக அவளைத் தொட்டு அவள் கையை எடுத்து முத்தமிட்டேன். அந்த கணத்துக்கு இனி எப்போதும் போக முடியாது. எங்கள் இருவருக்கும் ஒரே ஒருமுறை வாழ்வில் நேர்ந்த அபூர்வமான கணமும், யுகமும் அது.

அதற்கு அப்புறம் பங்கு போட்டுக்கொண்ட வினாடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், வருடங்கள் எல்லாம் அந்த மாயமான கணத்தை விட ஆகச் சிறியவையே. காதலும், காமமும், நேசமும், அன்பும் இன்னும் வளர்திசையில் என்றும் இருக்கட்டும்.

பெருமாளையும் தாயாரையும் தரிசித்து வெளியே வந்தோம். சாரங்க பாணி கோவிலுக்கும் கும்பேஸ்வரர் கோவிலுக்கும் நாளைக்குப் போகலாமென்று ஒத்தி வைத்தோம்.

அடுத்து? இரண்டு பேருக்கும் நினைவில் வந்தது துக்காம்பாளையத் தெருதான்.

இருட்டிக்கொண்டு வரும் நேரத்தில் துக்காம்பாளையத் தெரு அதனுடைய தனித்தன்மை எல்லாம் இழந்து நகரத்தின் இன்னொரு வீதியாக ஒப்பனை அணிந்திருந்தது. எல்லா வீடுகளும் ஒருபோல இருட்டும் வெளிச்சமும் கலந்து பூசி நின்றன.

பழைய நினைவுகளைத் தேடி இங்கே இப்போது வந்திருக்கக்கூடாது. வழியோடு போகும்போது எதிர்ப்படும் ஏதோ ஒரு நீளமான தெரு இது. அவ்வளவுதான். நடந்து பார்ப்போம் என்று ஜோடியாக நடந்தோம்.

‘மாமா வீடு ஞாபகம் இல்லையா? போய்க்கிட்டே இருக்கீங்க.’ ரத்னா நினைவுபடுத்தினாள்.

வீட்டு வாசலில் இத்தனைக்கும் பளிச்சென்று டியூப்லைட் எரிந்து கொண்டிருந்தது. வாசலில் வைத்திருந்த பெயர்ப்பலகை வீட்டு முகப்பை ஏதோ ஆபீஸ் முகப்பாக்கி விட்டிருந்தது. வாசல் பழைய உருவத்தில் இல்லாமல் இடித்துக் கட்டப்பட்டு, இரண்டு கதவுகளும் நிலைகளும் அடுத்தடுத்து இருந்தன. இரண்டு கதவும் மூடப்பட்டிருந்தன.

வலதா இடதா?

ரத்னா கதவைத் தட்டுவதற்கு முன் எந்தப் பக்கம் என்று என்னிடம் கேட்டாள். நான் இடது என்றேன்.

தட்டி இரண்டு நிமிடம் கழித்து வலது பக்கக் கதவு திறந்து, ராமாராவ் மாமா.

‘யாரு, ஏ ரத்னாவா, என்ன ஆச்சரியமா இருக்கே... ரத்னா இல்லையா நான்தான் கண்ணு சரியாத் தெரியாம யாரையோ ரத்னானு சொல்றேனா... அதானே ரத்னான்னா, கூட ராமோஜி வந்திருப்பானே.’

‘ராமோஜி வந்திருக்கேன்.’

நான் குரல் கொடுக்க, கொஞ்சம்போல் தலையைச் சாய்த்து என் பக்கமாக குழிவிழுந்த கண்கள் நிலை கொண்டன.

பனிரெண்டு வருடத்தில் ராமாராவ் மாமா ரொம்பக் கிழண்டு போயிருந்தார். குரலும் நடுங்கிக்கொண்டிருந்தது.

உள்ளே கூட்டிப் போனார். அவரும் மாமியும் மட்டும் இருக்கக் கண்டோம்.

மகளுக்கு மூன்று வருஷம் முந்தி கல்யாணம் நடத்தி நானும் ரத்னாவும் தஞ்சாவூர் போயிருந்தோம். அது பூர்வீக வீடாம் அவருக்கு. அவருடைய இரண்டு மகன்களும் எங்கே?

‘பொண்ணும் மாப்பிள்ளையும் பாம்பேயிலே செட்டில் ஆயாச்சு. ரெண்டு பேரும் லீவர்லேயும், பாமாலிவ்லேயும் டைப்பிஸ்ட் ஸ்டெனோகிராபரா இருக்காங்க... மூத்த பிள்ளையும் போன மாதம் பாம்பே போய்ட்டான். கால்கேட் கம்பெனியிலே ஸ்டெனோ. சின்னவன் பிசினஸ் பண்றான்.

ஹார்லிக்ஸ், போர்ன்விட்டா ரெண்டும் ரெண்டு ஏஜன்ஸி அவனுக்கு. அதுதான் கோடவுண்.’

அவர் கையைச் சுட்டிய அடுத்த கதவுக்குப் பின் கமகமவென்று கோக்கோ வாடையோடு போர்ன்விடா, பால் மணக்கும் ஆர்லிக்ஸ். வேறே என்ன எல்லாம் இருக்கோ.

‘சாயந்திரமே தஞ்சாவூர் போனான். அங்கேயும் இவன் ஏஜென்ஸிதான் டெலிவரி. ராத்திரி வர பதினொண்ணு மணி ஆயிடும். வர்ற வரைக்கும் எங்களுக்கு தூக்கம் வராது,’ மாமி சொன்னாள்.

‘ஊரோட ஒத்துப்போய் டைப், ஷார்ட் ஹாண்ட் படிச்சுட்டு பம்பாய் போகலாமில்லேன்னு கேட்டா, பம்பாய் வருமானத்துக்கு மேலே உள்ளூர்லேயே கிடைக்குதுங்கறான்’பா. அப்படியும் இருக்குமா?’ ராமாராவ் மாமா என்னைக் கேட்டார்.

நான் பம்பாயும் போனதில்லை. டைப் ஷார்ட் ஹேண்டும் படித்த தில்லை. ஸ்டெனோ வருமானம்பற்றி எல்லாம் விலாசினியிடம் கேட்க வேண்டும். இப்போது என்ன செய்து கொண்டிருப்பாள்? துர்நினைப்புகளை தூர விரட்டினேன். போகும் இடத்தில் எல்லாம் புவி வருகிறாளோ என்னமோ விலு நிச்சயம் உண்டு.

எதிர்பார்த்தபடி மாமி ‘என்ன சாப்பிடறீங்க, ஹார்லிக்ஸா போர்ன்விடாவா ஆல்விடோனா?’ என்று கேட்டாள். அது என்ன ஆல்விடோன் என்று அவளைப் பார்க்க ராமாராவ் மாமா பொக்கைவாய்ப் புன்னகையோடு கட்டை குட்டை மகாத்மா காந்தியாக இருந்து சொன்னார் – ‘அது நான் எடுத்த ஏஜென்சி. கல்யாண அலையன்ஸ் அரேஞ்மெண்ட் ஓட மாட்டேங்குது. பசங்க எல்லாம் டைப், ஷார்ட் ஹேண்ட் படிச்சுட்டு பம்பாயிலே வேலைக்கு ஓடறதிலேயே குறியா இருக்காங்க… பலசரக்குக்கடையை எடுத்தாச்சு. நின்னு வியாபாரம் பண்ண முடியலே. சும்மா இருக்கவும் முடியாம முதல்லே ஸ்டேன்ஸ் காப்பிக்கொட்டை வாங்கி விற்க ஆரம்பிச்சேன்… அதுலே பாரு… எல்லாம் நல்லா இருக்கு, காலி காபிகொட்டை டின்னை திரும்பித் தரணுமாம்… நம்ம ஊர்லே காப்பிக்கொட்டை, பொடி வாங்கறபோதே காலி டின்னு உனக்கு எனக்குன்னு ரிசெர்வ் பண்ணிட்டுப் போயிடுவாங்க… வீண் சண்டை வரும்… அதான் அடுத்து சாதுவா ஆல்விடோன் காண்ட்ராக்ட் எடுத்தேன். எல்லாம் ஒரே சமாசாரம்தான். பால் பவுடர், கோக்கோ. உள்ளூர் சரக்கு… கமிஷன் நிறைய தர்றாங்க… கல்யாணம், சீமந்தம் இப்படி

நிகழ்ச்சியிலே எவ்வளவு கேட்டாலும் கொடுக்க சாப்பாட்டு காண்ட்ராக்டருக்கு கட்டுப்படியாறது.'

மாமா இன்னும் அரை மணி நேரம் பேசியிருந்தால், நானும் அவரிடமிருந்து ஒரு டஜன் ஆல்விடோன் டின்கள் வாங்கி இருப்பேன்.

ரத்னா கொண்டுவந்த மதறாஸ் ராமகிருஷ்ணா லஞ்ச் ஹோம் ஸ்வீட்ஸ் அட்டை டப்பாவை அவர்களிடம் கொடுத்தாள். மாமிக்குப் பிடித்த பாதுஷா. வாங்கிக்கொண்ட அவள் சிரிப்பு மனதுக்கு இதமானது.

'உனக்கு ரத்தத்திலே ஷுகர் கம்மி. ஜமாய். நான் ஒரு ஸ்வீட் தின்னா ஒன்பது மாத்திரை முழுங்கணும்' மாமா லேசான அசூயையோடு சொன்னார்.

குடிக்கலேன்னா மாமா வருத்தப்படுவார் என்று ஆல்விடோன் சூடாகக் கலந்து தரச்சொல்லிப் பருக, அற்புதமாக இருந்தது.

போர்ன்விடா விளம்பரத்திலே, 'ரபீந்தரநாத் தாகூர் போர்ன்விடாவை பாராட்டினார்'னு போடற மாதிரி ஆல்விடோனை தேசிக விநாயகம் பிள்ளை பாராட்டினார்னு போட முடியும்னா நிறைய விற்குமோ எனக் கேட்டேன்.

யாரு அந்தப் பிள்ளை என்று மாமாவும் மாமியும் சேர்ந்து கேட்க, அந்த ஐடியாவை அந்தரத்தில் விட்டேன்.

ரவா உப்புமா சாப்பிட்டுப் போங்க என்று மாமி அழைத்ததை அன்போடு மறுத்து நாளைக்கு வரோம் என்று சொன்னோம்.

நாளை பகல் விருந்து இங்கேதான் என்றாள் மாமி. ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க் குளியல் தினம். பசங்களுக்காக சமையல் பண்ணிப் பண்ணி, ஞாயிறு இப்போதும் காலையிலே கடப்பா நாள் தானாம். மதியத்துக்கு அது பிரியாணி தினம். மட்டன் குருமாவும் வெங்காயப் பச்சடியும் எட்டு ஊருக்கு வாசம் அடிக்கும். மாமி தன் விரல்களை முகர்ந்தபடி ஆனந்தமாகச் சொன்னாள்.

'ரத்னா, நீ கவிச்சி சாப்பிடுவே இல்லே?' மாமி கேட்டாள்.

ரத்னா என்னைப் பார்த்தாள்.

'பிள்ளைத்தாச்சி ஆசைப்படறா, வேணாம்னு சொல்லாதே ராமோஜி.'

மாமி எப்படித்தான் கண்டுபிடித்தாளோ. சரி என்றேன் புன்னகை யோடு. ரத்னா மாமியை அணைத்துக்கொண்டாள்.

‘தேங்க்ஸ் மாமி.’ ரத்னா மாமிக்குச் சொன்னாள்.

‘ஏண்டி தங்கக்குடமே, இந்த நியூசுக்கு ஸ்வீட் கிடையாதா?’ மாமி கேட்டாள்.

‘எல்லாம் ஒரே பாக்கெட்தான்,’ மாமா கண்டிப்பாகச் சொன்னார்.

‘நான் சாப்பிடறேன், நீங்க சாப்பிட முடியாது… பொறாமை’ மாமி சிரித்தாள்.

‘எனக்கு தேங்க்ஸ் கிடையாதா?’ நான் கேட்டேன்.

‘தனியா வாங்கிக்கோ’ என்றாள் மாமி.

‘எங்கே வாங்கறது, மாமாதான் பலசரக்குக் கடையை எடுத்து வச்சுட்டாரே’ என்றேன் செருப்பில் காலை நுழைத்துக்கொண்டு.

கங்கா வீட்டு வாசலில் ஒரு நிமிடம் நின்றோம்.

கங்கா நினைவில் ரெண்டு பேரும் மௌனமாக இருந்தோம். அந்த தேவதை உடலை உதிர்த்துவிட்டு தேவலோகம் பறந்துபோய் ஏழு வருடமாகிறது. ராத்திரி படுத்தாள், காலையில் எழுந்திருக்கவில்லை. அநாசாயச மரணம். தந்தி அடித்துத் தகவல் வந்தது. நானும் ரத்னாவும் உடனே வந்து போனோம். கங்கா ஒரு மராட்டி அபங்க், தெய்வ சங்கீதம் மாதிரி இனிமையாக பிரவாகம் எடுத்து முடிஞ்சு போய்ட்டாள் என்றாள் அப்போது ரத்னா. உண்மைதான்.

கமலா பாயும், தொடர்ந்து கங்காவும் மனதில் முடிந்துபோன அத்தியாயங்களாகி, தேங்கிய நினைவுகளாக வளைய வருவதைப் பழகிக்கொண்டிருக்கிறோம். காதல் பூத்த அந்தக் காலத்தின் இனிமையான நினைவுகளை நாங்கள் அந்தரங்கமான பொழுதுகளில் மறுபடி உயிர்ப்பிக்கிறோம்.

துக்காம்பாளையத் தெருவிலிருந்து காந்தி பூங்கா திருப்பத்தில் பரபரப்பாக ஓர் இட்லிக்கடை பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. வரிசையாக அடுப்பில் வைத்த இட்லி கொப்பரைகளைத் திறக்க நீராவி வாடையோடு, கமகமவென்று உளுந்தும் அரிசியும் கலந்து மல்லியப்பூ இட்லி வாசம். வயிற்றையும் வாயையும் நாசியையும் சுண்டி இழுத்தது அது. கடை நடத்தும் இடம் வெகு சுத்தமாக இருந்தது. தட்டுகளும் பாத்திரங்களும்கூட.

‘சாப்பிட்டுப் போகலாமா?’ ரத்னாவைக் கேட்டேன். ‘வாங்கிட்டுப் போயிடலாமா?’ என்று அவள் கேட்டாள்.

‘தெருவிலே ஓரமா பெஞ்ச் போட்டு உட்கார்ந்து சாப்பிட கஷ்டமா இருக்கா?’

‘ஹய், எனக்கென்ன கஷ்டம். நம்ம ஊரு நம்ம பசங்க.’ அவள் எனக்காக இப்படி ஓர் இடத்தில் ராச்சாப்பாடு சாப்பிட வருவது இதுவே முதல் தடவை.

‘சைவம் தானே?’

அடுத்த பெஞ்சுக்கு இட்லிகொண்டுபோன பையனைக் கேட்டேன். ‘சந்தேகமே வேணாம் சார், முழு சைவம்தான்’ என்றான்.

ரத்னாவும் நானும் லாட்ஜ் அறைக்குத் திரும்பி ராத்திரி வெகு நேரம் எங்கள் கும்பகோண நினைவுகளைப் பகிர்ந்துகொண்டிருந்தோம். அடுத்து சாவகாசமாக ஒன்றுகலந்து சேர்ந்திருந்தோம்.

வீட்டில்கூட அபூர்வமாக வாய்க்கிற நிதானமான, இயற்கை கற்பித்தபடி இயங்கும் கூடல் அது. ரத்னாவை டாக்டர் லட்சுமி சொன்னபடி ஜாக்கிரதையாகக் கையாண்டேன். ரொம்ப பயப்பட வேண்டாம் என்று ரத்னாவே சொன்னாலும் என் ஜாக்கிரதை உணர்ச்சி எனக்கு. நடுராத்திரிக்கு கூர்க்கா விசில் கேட்டபடி உறங்கப் போனோம்.

காலை ஆறரை மணிக்கே மங்களாம்பிகாவில் வெண்பொங்கலும், தோசையும், உளுந்து வடையும், காரமான மிளகாய்ச் சட்னி முதல் சாதுவான பருப்புத் துவையல் வரையும், அடர்த்தியான சின்ன வெங்காய, தக்காளி சட்னி ரகங்களும், கூட அதிரடியாக, ஈடு இணையில்லாத ஒரே ஒரு வெங்காய சாம்பாருமாக தெருவே அதிர ஞாயிற்றுக்கிழமை சாப்பாட்டுக் கூட்டம்.

‘கோவிலுக்கு போய்ட்டுவந்து சாப்பிடலாம்’ என்றாள் ரத்னா.

‘வயித்தை காயப்போட வேணாம்னு டாக்டர் லட்சுமி சொல்லியிருக்காங்களே, நினைவு இருக்கில்லே?’ என்று கேட்டேன்.

சாப்பிட்டுவிட்டு கும்பேசுவரர் கோவிலுக்குப் புறப்பட்டோம். தெருக்கள் எல்லாம் காலை நேரத்துக்கான இயல்பான தோற்றம் திரும்பி வர, ராத்திரி செய்துகொண்ட அழகான, குரூபமான ஒப்பனைகள் கரைய வந்த மாற்றம்

அது. எல்லாத் தெருவும் அழகாக இருந்தது. எந்தத் தெருவும் எங்களுக்குப் பழக்கமானதாக இல்லை.

‘குட் மார்னிங் டீ சார்.’

மடத்துத் தெருவில் குழந்தையைத் தோளில் சுமந்து எதிர் வீட்டுச் சுவரில் வரிசையாக வந்தமர்ந்த மைனாக்களை வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தவன் என்னைப் பார்த்துக் கையசைத்தான்.

அவன் பெயர் எனக்குத் தெரியாது. என் பெயர் தெரிந்திருக்கா விட்டாலும் என்னைப் பார்த்தால் நிஜமான சந்தோஷத்தை அடைகிறான் அவன். அவனுடைய பிள்ளைப் பிராயத்தின் ஒரு கணத்தை மீண்டும் வாழ்ந்து மகிழும் நிலை அது. பள்ளிக்கூட ப்யூனை, ஸ்கூலில் சொல்லிக் கொடுத்த வாத்தியாரை பார்க்கிற மகிழ்ச்சிபோல இது. நல்லவிதமாக எழுந்து வருவது. நல்லது நினைக்கச் செய்வது. நினைவுகளை ராமோஜியும் போற்றுவான்.

‘தம்பி, நல்லா இருக்கீங்களா? சாரி பெயர் மறந்துட்டேன்.’

பெயர் சொன்னான். கை குலுக்கினோம்.

‘ஹைஸ்கூல்லே ஹையர் செகண்டரி டீச்சரா இருக்கேன்... அதே கோடி வீடுதான் சார்... வாங்க’

இன்னொரு தடவை பயணம் வைக்கும்போது வருவதாகச் சொன்னேன். எப்போதோ அடுத்த விசிட்.

‘டீ சார் எப்படி இருக்கீங்க?’

பட்டை ஃப்ரேம் மூக்குக்கண்ணாடி போட்ட லுங்கிக்காரன் வழிமறித்தான். ஒல்லியான உருவம். நல்ல உயரம்.

‘ஓ பிரமாதம்... நீ... நீங்க?’ வழக்கம்போல் குழம்பி நின்றேன்.

‘ரொம்ப நல்லா இருக்கேன். நான் ராஜு. கோபுவோட பிரண்ட். மறந்துட்டியா ராமோஜி?’

தூக்கி வாரிப்போட்டது. நன்றாக உற்றுப் பார்த்தேன். ராஜுவேதான். பனிரெண்டு வருஷ காலம் அவன் முகத்தில் எந்த மாறுதலையும் உண்டாக்கியதாகத் தெரியவில்லை. எனக்காவது அங்கங்கே தலையில் இளநரை கண்டிருந்தது. இவன் தலை கருகருவென்று இன்னும். உடம்பு

என்னமோ அன்று கண்ட மேனிக்கு, காலேஜ் படிக்கிற பையனாக பூஞ்சையாகத்தான் இருந்தது. எப்படி இவன் காலத்தை நிறுத்தி வைத்தான்?

‘சிதம்பரத்திலே இருந்து குடும்பத்தை இங்கே குடியமர்த்தியாச்சு. குடும்பத் தொழில்தான் செஞ்சிக்கிட்டிருக்கேன்..’

என்ன குடும்பத் தொழில் என்று அவன் சொன்னதாக நினைவு இல்லை. குடும்பம்பற்றி கோபு பேசியதில் நூறில் ஒரு பங்கு கூட ராஜு பேசியதில்லை. ராகம், இசை, இலக்கியம் இதுதான் பேசப் பிடித்த விஷயங்கள் ராஜுவுக்கு.

‘இன்னும் அப்படித்தான் இருக்கு. என்ன, கல்யாணம் பண்ணி வைச்சுட்டாங்க... எழுத, படிக்க, கச்சேரி ரேடியோவிலே கேட்கக் கூட நேரம் கிடைக்க மாட்டேங்குது... தொழில் மும்முரம்... வேலை பார்க்கறவங்களை கண்கொத்தி பாம்பாக கண்காணிக்கணும். ஆமா, பட்டுத் தறி நாலு போட்டு ஓடிட்டு இருக்கு... குலத்தொழில் கல்லாமல் பாகம் படும்னு பழம்பாட்டு இருக்கு... எனக்கு பட்டு நெசவு குலத்தொழில்... நீ மராட்டித் தமிழன்னா நான் சௌராஷ்ட்ர தமிழன்.’

ரத்னா கேட்டாள் – ‘ஏன் அண்ணா, வீட்டிலே எங்கே இருக்காங்க? பெயர் என்ன? கோவிலுக்கு போய்ட்டு வரும்போது வந்து பார்க்கலாமா? சும்மா அஞ்சு நிமிஷம்...’

‘தங்கச்சி நீ கேட்டு நான் மாட்டேன்னா சொல்வேன்... ஒரே சங்கடம்... அவ... என் ஒய்ஃப்... ரோகிணின்னு பேரு... அம்மா வீட்டுக்கு போயிருக்கா... நாலாவது பிள்ளை பிரசவ நேரம்...’

நான் அந்தக் குடும்பஸ்தனை ஆச்சரியத்தோடு பார்த்தேன்.

ராஜுவுக்கு என்னைப்பற்றி, புவிபற்றித் தெரிந்திருந்தால் என்னையும் ஆச்சரியத்தோடு பார்த்திருப்பான்.

‘கல்லுளி மங்கன் மாதிரி இருக்கான், சினிமா ஸ்டாரோடு ரிலேஷன்ஷிப் வச்சிருக்கான்... நல்லா இருடா.’ என்னைப்பற்றி எல்லாம் தெரிந்திருந்தால் மனதுக்குள் சொல்லியிருப்பான்.

கோபு எங்கே இருக்கான் என்று கேட்டேன். பம்பாயிலே ஒரு கம்பெனியிலே அசிஸ்டெண்ட் ஜெனரல் மேனேஜராக இருக்கிறானாம். ஒரு

பெண்குழந்தை. மனைவி ஸ்டெனோகிராபராக ஆபீஸ் போகும் கன்னடத்துப் பெண்ணாம்.

ஒரு வினாடி மௌனமாக இருந்துவிட்டு ராஜு சொன்னான் –

‘சொன்னா நம்ப மாட்டே... கங்கா சாயல்லே அச்சு அசலா அப்படியே இருக்கா தேஜஸ்வி, கோபு பெண்டாட்டி.’

இதற்குத்தான் ஆசைப்பட்டானா கோபு?

‘கல்யாணம்னு நான் பத்திரிகை வச்சா வரமாட்டீங்க ரெண்டு பேரும், உங்க கல்யாணத்துக்கு அழைக்க மாட்டீங்க... நல்லா இருங்கப்பா.’ நான் ராஜுவிடம் சொன்னேன்.

‘சே அப்படியெல்லாம் இல்லே... நீ வீடு மாத்தி யாருக்குமே புது அட்ரஸ் சொல்லலியே...’

‘சரி, சண்டை அப்புறம் வச்சுக்கலாம்... கோவிலுக்குப் போய்ட்டு வந்துடறோம்’ என்று நானும் ரத்னாவும் கிளம்புவதற்குள் ராஜு வீட்டுக்குள் ஓடிப்போய் தன் விசிட்டிங்க் கார்டை எடுத்து வந்து கொடுத்தான்.

குடந்தை என்று தமிழிலும் கும்பகோணம் என்று இங்கிலீஷிலும் ஊர்ப்பெயர் சொன்ன விசிட்டிங் கார்ட் அது. சட்டை இல்லாமல் துண்டைப் போர்த்திக்கொண்டு ஆலய தரிசனத்துக்குப் போவதால், ரத்னாவின் கைப்பையில் பத்திரமாக அதை வைத்தேன்.

‘நேரம் இருந்தா சாயந்திரம் வா’ என்று கூப்பிட்டான் ராஜு.

‘நீ தனியா அங்கே இருக்கறதைப் பார்க்கறதைவிட, துக்காம்பாளையத் தெரு வந்துடு, ராமாராவ் மாமா வீட்டுலே சந்திக்கலாம்’ என்றேன். ‘பார்க்கலாம்’ என்றான்.

‘பட்டுக்கோட்டையிலே பத்து மணிக்கு ஒரு கூட்டம் இருக்கு’ என்றான் அடுத்து.

‘இலக்கியக் கூட்டமா?’

‘இது வார்த்தை நெசவு இல்லே. பட்டு நெசவு.’

‘நீ நெசவு செய்யற எழுத்துக்காரனா, எழுதற பட்டு நெசவாளனா?’

‘அது தெரிஞ்சா, ரெண்டுலே ஒண்ணை விட்டுடுவேனே…’

ராஜு உருவம் மட்டுமில்லை, சட்டென்று எழுத்து பிறந்து வருவது போல பேசுவதிலும் பத்து வருடம் பின்னால்தான் உறைந்து போயிருக்கிறான்.

வழியில் தரையில் இருபுறமும் பரவி மணத்துக்கொண்டு மருக்கொழுந்து கொத்துக்கொத்தாகக் கிடந்தது. பூஜைக்கான தாமரைப் பூக்களும் துளசியும் குவித்து வைத்த குன்றுகள்போல். பொலபொலவென்று துளசிக் கற்றை ஒன்று தரையில் உருள, அதைக் காலில் படாமல் ஜாக்கிரதையாக எடுத்து ஓரமாக வைத்தேன்.

துளசியையோ மருக்கொழுந்தையோ மிதிக்காமல் ஈரம் பூண்டு கிடக்கும் மண்ணையே பார்த்து மயங்கியபடி நடந்தேன்.

சுருதியோடு இழைந்து ‘கொண்டல் வண்ணனை கோவலனாய் வெண்ணெய்’ என்று முதல் வரியை ஒருவர் பாட, ‘உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை’ எனக் கூட்டமாக அடுத்த வரியைப் பாட, பாசுர இசை காற்றில் மிதந்து வந்தது.

‘இதென்ன சிவன் கோவில்லே இருந்து பாசுரம் கேக்கறது?’

பக்கவாட்டில் ரத்னாவைப் பார்த்தேன். அவள் முகத்தில் அபூர்வமான ஒரு முழுச் சிரிப்பு. கொஞ்சம் கள்ளத்தனம் கலந்ததோ அறியேன்.

‘பாசுரம் கேட்டால், சிவன் கோவிலுக்குப் போகல்லேன்னு அர்த்தம். பெருமாள் கோவிலுக்குப் போய்க்கிட்டிருக்கோம்னும் அர்த்தம்.’ நடந்தபடி சொன்னாள்.

கும்பேஸ்வரர் கோவில்தானே போகப் புறப்பட்டோம்?

முதல் டிகாஷன் இறக்கிக் கலந்த பில்டர் காபி வாசனை, பூ வாடையோடு போட்டி போட்டுத் தெருவில் கவிந்தது.

‘சக்ரபாணிப் பெருமாள் கோவிலுக்குப் போய்ட்டு கும்பேசுவரர் கோவில் போகலாம். மைத்துனனை முதல்லே பார்த்தா சிவன் கோபிச்சுக்க மாட்டார்.’ ரத்னா கோவில் கோபுரத்தைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள்.

‘கும்பகோணம் உன்னோட ஊர். நீ சொல்றதுதான் இப்போ நான் கேக்கறது.’ அவள் விரலைப்பற்றிக்கொள்ள முயன்று தோற்றுப் போனேன்.

செல்லமாக விடுவித்துக்கொண்டு புடவைத் தலைப்பில் கையை மறைத்து மெதுவாக, கம்பீரமாக நடக்கிறாள் ரத்னா. கூடவே காவலனாக நானும்.

‘ஏன் திடீர்னு வீபுதிப் பட்டையை நாமமாக்கிட்டே?’ கேட்டேன். அறியா வினா.

ரத்னா பதில் சொல்வதற்குள் உள்ளே போய்க்கொண்டிருந்த பட்டாசாரியார், ‘பின்னே, பெருமாளா சும்மாவா? இந்த ஊரே முன்னூறு வருஷம் முந்தி பட்டை நாமத்தை பரக்க சாத்தி போய்ண்டு வந்துண்டிருந்த ஊராக்கும்’ என்று உற்சாகமாகக் கூறியபடி போனார்.

‘ஆமா நீங்க விட்டா பேனையே பெருக்கி பெருமாளாக்கிடுவீங்களே.’ பூக்கடைக்காரர் சிரித்தபடி பட்டாசாரியாரிடம் உடனடி பதில் தந்தார்.

கும்பகோணத்தில் அழகான ஒரு காலை நேரம். நெருங்கி வந்து கொண்டிருக்கும் ஏதோ ஒரு தினத்தில் தேச சுதந்திரம் கிடைக்கப் போகிற நல்ல நேரம் இது. பலநூறு வருஷம் முந்தைய சைவ வைணவ மோதலை உலையூதி இப்போது இங்கே நெருப்புப் பூக்க வைக்கக்கூடாது. இரண்டு உள்ளங்கையாலும் வாயைப் பொத்திக் கொண்டு பட்டாசாரியாரிடம் ஜாடை காட்டினேன். ஓ மீதி ரெண்டும் நாங்கதானா என்று குரங்கை அபிநயித்துச் சிரித்தார் அவர்.

‘நன்னா இருங்கோ. நன்னா இருங்கோ.’

பெரியவங்க ஆசிர்வாதம் என்று கை கூப்பினேன்.

‘சாமி, நீங்க போங்க, நாங்க வந்துக்கிட்டே இருக்கோம்’ ரத்னா குரல் அவரைப் பின் தொடர்ந்தது.

வட்ட மண்டபம் கடந்து பெருமாள் சந்நிதி போகும் பிரகாரம். மேலே இருந்து சக்ரபாணி சாவி கொடுத்து இயக்கியதுபோல் கால்கள் தன்னிச்சையாக நகர்ந்தன. நான் நேரே நடக்க, ரத்னா புறங்கையை மறித்து நீட்டினாள்.

‘நம்ம இடத்துக்குப் போக வேண்டாமா?’ கெஞ்சுதலும், பிடிவாதமுமான குரல் அது.

‘நீ கேட்டு வேணாம்னா சொல்லப் போறேன்? வா.’

எனக்கு முன்னால் அங்கே வந்து ஓரமாக அமர்ந்து என் கையைத் தன் கையில் பிடித்து இரு கரங்களாலும் மூடி வைத்துக்கொண்டாள் ரத்னா.

‘அவ்வளவு பத்திரமா நீ வச்சுக்க வைர மோதிரம் வரிசையா போட்டிட்டிருக்கலே, வெறும் கைதான் இது ரத்னா. திருத்துழாய் வாசனை லேசா வரும்... கடைத்தெருவிலே துளசியை ஓரமா எடுத்துப் போட்டது.’

‘துளசி வாசம் எப்பவும் அடிக்கட்டும். கோவில் வாசனை வரட்டும். என் வாசமும் இருக்கட்டும். வேறே எதுவும் வேணாம்.’ அவள் கெஞ்சுவதுபோல், ஆனால் தீர்மானமாகச் சொன்னாள்.

‘இந்தக் கைக்கு வேறே வாசம் தெரியாது... பெருமாள் சொல்லலியா?’ செல்லமாகக் கன்னத்தில் தட்டிக் கேட்டேன்.

‘புவனாவை இப்படிச் செல்லமா தட்டி ரத்னா பாவம், அவ வழியிலே போக வேணாம்னு சொல்ல மாட்டீங்களா ராவ்ஜி?’

உறைந்து நின்றேன்.

சட்டென்று விஷயத்துக்கு வந்துவிட்டாள். தினமும் எதிர்பார்த்திருக்கும் பேச்சு இது. என்றாவது வெடிக்கும் என்று எதிர்பார்த்தேன். இன்றைக்கு கும்பகோணத்தில் நான் ரத்னாவின் நீதிமன்றத்தில் நிற்கிறேனா?

கும்பகோணத்துக்கு, சக்ரபாணிப் பெருமாள் கோவிலுக்கு அவள் என்னைக் கூட்டிவந்தது இதற்குத்தானா? அவளுக்கு என்ன தெரிந்திருக்கும்? யாரெல்லாம் சொல்லி இருப்பார்கள்? எதை எல்லாம் கற்பனை செய்துகொண்டிருக்கிறாள்? என்னை என்ன செய்யப் போகிறாள்?

வயிற்றில் என் குழந்தையைச் சுமந்திருக்கிறவள், நெஞ்சில் என் செயலால் மாறாத துக்கத்தையும், அதிர்ச்சியையும், வேதனையையும் சுமந்து இருப்பாள். அவளை எத்தனை நாள் மனம் நோக எல்லாம் உள்ளே புதைத்து வைத்து இயல்பாக நடமாட வைத்தேன், இனியும் எத்தனை நாள் இப்படி வைப்பேன்? தப்பு செய்தவன் நான். என் தலை குனிந்தே இருந்தது.

‘துக்காம்பாளையத் தெருவிலே ரெண்டு பேரும் இருந்தபோது முதல்லே பார்த்து பேச இடம் கொடுத்தவர் இந்த சக்ரபாணிப் பெருமாள். அதுவும் இந்தத் தூண். நம்ம காதலையும், எதிர்பார்ப்பையும் ஒரு சொல், ஒரு முணுமுணுப்பு, ஒரு சிரிப்பு, ஒரு மௌனம்விடாம கேட்டு, சத்தமில்லாமல் நம்ம சந்தோஷத்திலேயும் துக்கத்திலேயும் பங்கெடுத்த நம்ம சகா.

பெருமாள் நம்மோட பேசணும்னா, நம்ம பிரச்னையிலே தீர்ப்பு சொல்லவோ, சாட்சிக்கு நிற்கவோ செய்யணும்னா, இந்தத் தூண்லேதான் வருவார். அதுலே உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?' அவள் விசாரித்தாள்.

'இல்லை' என்றேன் அவசரமாக. அவள் தூணையே பார்த்தபடி இருந்தாள்.

'உள்ளே இருக்கறவர் நரசிம்மர் இல்லையே?' நான் சிரிக்க முயற்சி செய்தபடி கேட்டேன். பரிதாபமாகத் தோற்றேன்.

'நீங்க ஹிரண்யகசிபுவாங்கறதைப் பொறுத்து அது, கண்ணா. சொல்லுங்க...'

'என்ன சொல்லணும் அன்பே?'

'எப்போ இருந்து இதெல்லாம்?'

'எதுன்னு சொன்னா, எல்லாம் தெரிஞ்சா, எப்போன்னு சொல்லலாம் செல்லம்.'

'இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே... கொஞ்சல்லாம் இங்கே. மிஞ்சல் அந்தப் பொண்ணு கிட்டேயா?'

'நான் எப்பவாவது... அவ... அவங்க வீட்டுக்கு பந்துலு சார் கூட போய் பேசிட்டு இருப்பேன்...'

'மாகாளிக்கிழங்கு...'

'அவ்வளவுதான்... நீ வாங்கிக் கொடுத்ததை கொண்டுபோய்க் கொடுத்தோம் பந்துலு சாரும் நானும். அவரோட அத்தங்கா அந்தப் பொண்ணு தெரியுமோ?'

'பந்துலு சார் கூட வராம எங்கேயும் போக மாட்டீங்களோ? முக்கியமா மாம்பலம். அதுவும் புது மாம்பலம்...'

'இல்லேம்மா, எப்பவாவது நம்ம கம்பவுண்டர் கிட்டே நாயர் டாக்டர் சொன்னபடிக்கு மருந்து வாங்கிட்டு வர்றபோது அந்தப் பொண்ணுக்கு... அம்மாவுக்கு... மூட்டு வலிக்கு... கம்பவுண்டர் கிட்டே கேட்டு...'

'உடும்புத் தைலமா?'

'அப்படின்னா என்ன தைலம்னே தெரியாது.'

‘தெரியாமலா தியாகராய நகர் முழுக்க உடும்புத் தைல வாசனையை பூசி வச்சுட்டு வந்தீங்க? ஏன் இப்படி அல்பமா நடந்துக்கறீங்க?’

‘இல்லேம்மா...’

‘ஓ! திரும்ப அம்மா... வயசாயிடுச்சு எனக்கு... சின்னப் பொண்ணு, சினிமாக்காரி, பளிச்சுனு இருக்கா... திருவிளக்கு வேண்டாம் சரவிளக்கு இவளே போதும்னு இடம் மாறியாச்சா...’

தலையைக் கவிழ்ந்து நின்றேன். ஏதாவது மலைமேல் இந்தக் கோவில் இருந்தால் சாடிப் பாய்ந்து கீழே குதித்திருப்பேன்.

‘அப்படி என்ன உடம்பு கொண்டா கொண்டான்னு கேக்குது? அந்த சதை அவ்வளவு பிடிச்சு, இந்த உடம்பு வேண்டியிருக்காம போச்சா? அந்த எச்சில் இதைவிட இனிக்க ஆரம்பிச்சுதா? அந்த உடம்பு நாத்தம் லகரி ஏத்தி பிடிச்சுப்போய், இது வேண்டாம போச்சா?’

தன் இடுப்புக்குக் கீழே அவசரமாகக் கைசுட்டிக் காட்டி, கண்ணில் வழிந்த கண்ணீரை உடனே துடைத்துக்கொண்டாள்.

நான் பேசாமல் நின்றேன். அவமானத்தோடு நின்றேன்.

‘காலையிலே... மத்தியானம்... சாயந்திரம் நாலு மணிக்கு... உடம்பு கேக்கறது எல்லாம் உடனுக்குடன் கிடைக்கும் ஒரே இடம் புது மாம்பலம். அப்படித்தானே? கேட்டுத் தொலச்சிருந்தா நான் மாட்டேன்னா சொல்லியிருக்கப் போறேன்... இல்லே சொல்லியிருக்கேனா எப்பவாவது?’

‘மஞ்சள் பத்திரிகைன்னா கொஞ்சம் இருந்தாலும் ரொம்ப பெரிசா பூதக்கண்ணாடி வச்சு பெருசாக்கி எழுதிடுவான்... அதை எல்லாம் நம்பிக்கிட்டு உட்கார்ந்திருந்தா...’

‘அப்போ கொஞ்சம் இருக்குதானே. எவ்வளவு அந்தக் கொஞ்சம்னு தயவு செய்து சொன்னா, அதிகம் என்னன்னு கணக்கு போட்டுப் பார்த்துக்கலாம்.’

‘ஒரு பேச்சுக்காக சொன்னேன் ரத்னா... அதைப்போய்..’

‘ராவ்ஜி, ஓய் ராவ், சக்ரபாணி கோவில் பிரகாரத்துலே அவர் வந்து இருக்கற தூணோடு தூணா இருக்கோம்... பொய் எதுவும் சொல்லாதீங்க... உங்களுக்கும் தெலக்ஸ் புவனாவுக்கும் உங்களுக்கும் புவனிக்கும் உனக்கும் புவிக்கும் என்னடா உறவு? எத்தனை நாளா இந்த அசிங்கம்

நடக்குது? என்ன செய்ய உத்தேசம் இனிமேலே? உன்னைப்பற்றி நினைக்கலேன்னா சரி, அவளைப்பற்றியும் நினைக்க வேண்டாம்... என்னைப்பற்றி நினைச்சீங்களா?'

நான் தூணை வெறித்துப் பார்த்தபடி இருந்தேன். நரசிம்மம் வரட்டும்.

'அவளுக்குத்தான் புத்தி இல்லே, உனக்கு எங்கடா போச்சு? இதுக்கா இந்த கும்பகோணம் மண்ணுலே என்னைச் சுத்தி சுத்தி வந்து காதலிச்சே? எங்கிட்டே என்ன இல்லேன்னு அவகிட்டேபோய் நின்னே? சொல்லுங்க ராவ்ஜி.'

தப்புதான் தப்புதான் தப்புதான்

சட்டென்று என் கையைப்பற்றி அவளுடைய அடிவயிற்றில் வைத்தாள். உள்ளே அசைவைக் கற்பனை செய்து மெய்மறந்தேன்.

'போய பிழையும் புகுதருவான் நின்றனவும் இந்த வயிற்றுச் சூட்டினில் தூசாகும். தூசாகட்டும்.'

அவள் குரல் பிரகார விதானத்தைத் தொட்டுக் கீழே இறங்கிக் கவிந்தது.

'இவள் மேலே சத்தியமா சொல்லுங்க ராவ்சாகிப்... என்ன பார்க்கிறீங்க? இது நம்ம மகள்தான்... என் வலியை இவளும் வாங்கிக்கறா. ரொம்பப் புரண்டு கஷ்டப்பட்டு கஷ்டப்படுத்தறதில்லே என் பொண்ணு... ஆனா இந்த மனசோட துன்பத்தை அவ வாங்கிக்க முடியாதே... சொல்லுங்க...'

நான் தூணைப் பிடித்தபடி சக்தியெல்லாம் இழந்த பேடியாக நின்றேன்.

'சொல்லுங்க ராவ்ஜி... இனிமேல், இந்த நிமிடத்தில் இருந்து நான் என் ரத்னாவைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் தொட மாட்டேன்... ரத்னாவுக்கு மனசாலேகூட துரோகம் நினைக்க மாட்டேன்... என் மகள் மேல் சத்தியம்...'

நான் அதேபடி சொல்லத் தொடங்க, என் மனைவி பிரகாரத் தூணை அணைத்துப் பிடித்தபடி அடக்க முடியாமல் அழுதாள்.

பிரகாரம் சுற்றி வந்த வடக்கத்திய கோஷ்டி ஒன்று கொஞ்சம் தொலைவும் அண்மையுமாக நின்று பார்த்தது. அந்தக் குடும்பத்தில் ரத்னா வயதுப் பெண் ஒருத்தி இன்னொரு தூணைக் கட்டிப் பிடித்து அழத் தொடங்கினாள்.

நான் நிதானமாக ரத்னா சொன்னதைத் திரும்பச் சொல்லி முடிக்க மனம் லேசானதாக இருந்தது. இனி அது அப்படியே இருக்கட்டும். இரண்டு பேருக்கும்.

நாங்கள் சந்நிதிக்குள் நுழைகிறவரை புதுசாகக் கல்யாணம் ஆனபோது இருந்ததுபோல் கைகளைப்பற்றிக்கொண்டிருந்தோம். முகத்தில் முறுவலும், சந்தோஷமும், பரஸ்பர அன்பும், நேசமும், நம்பிக்கை யும் குடிகொண்டிருந்ததை நான் அவள் முகத்திலும் அவள் என் முகத்திலும் கண்டு பரவசப்பட்டோம்.

‘வரல்லே போலேருக்கு... அப்படியே போய்ட்டேளோன்னு பாத்தேன்’, பட்டாச்சாரியர் வெளியே வந்தபோது கோவில் மணி முழங்கியது.

நான் ‘ரத்னா சதயம்’ என்று சொல்ல, ரத்னா ரகசியமாக என் பெயரை ‘ராமோஜி ராவ் அச்வதி’ என்று சொன்ன இனிமைக்கு ஈடேது.

வேண்டாம் வேண்டாம் என்று அன்போடு மறுத்தாலும் அதை விடக் கூடுதல் பிடிவாதத்தோடும் பிரியத்தோடும் பட்டாச்சாரியார் மடைப்பள்ளியில் இருந்து, நைவேத்தியமான மிளகுப் பொங்கலையும் தோசையையும் வாழை இலைக் கீற்றில் வைத்து மேலே சுதேசமித்திரன் பேப்பரால் பொதிந்து கொடுத்தார். தேங்காய், பழம் பிரசாதம் வேறு.

‘பெருமாள் பிரசாதம். சர்க்கார் பத்து அவன்ஸை எட்டு அவன்ஸா குறைச்ச அரிசி ரேஷன் அவருக்கு அப்ளை ஆகாது... உலகளந்த பெருமாள்... கெஸ்ட் கண்ட்ரோலும் நோ... தாராளமா சாப்பிடுங்கோ.’

பட்டாசாரியார் சர்க்கார் ஊழியனை சஞ்சலப்படுத்தினார். ஒரு வார்த்தை என்றால் ஒரு வார்த்தை நான் பேசவில்லையே. பேசுகிற மாதிரியா நான் நடந்துகொண்டிருக்கிறேன்? ரத்னா இன்னம் கொஞ்சம் வைதிருக்கலாம்.

கும்பேசுவரர் கோவிலும் அங்கிருந்து சாரங்கபாணி கோவிலும் போனோம். வழியில் ஒரு கடையில் நன்னாரி சர்பத் சாப்பிட்டோம். அந்தக் கடையைக் கவனித்து வந்த இளைஞன் எந்த நிமிடமும் டீ ஆபீசர் சார் என்று கையசைத்து அருகில் வருவான் என்று ரத்னாவிடம் ஒரு ரூபாய் பந்தயம் கட்டினேன். கடைசி வரைக்கும் வரவே இல்லை. பொறுக்காமல் ‘தம்பி எந்த ஊர் நீங்க?’ என்று கேட்டே விட்டேன்.

‘புதுக்கோட்டை சார்.’

நான் ரத்னாவிடம் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு நகர்ந்தேன். ரெண்டு அடி போயிருக்க மாட்டோம், பின்னால் குரல். அந்தப் பையன்தான் – 'ஓ! சார்... சௌக்கியமா இருக்கீங்களா? ஞாபகம் இருக்கா? பத்து வருஷம் முன்னாடி துக்காம்பாளையத் தெருவிலே டீ கொடுத்து... நான் துரைசாமி...' ஓடி வந்து, என் கையைப்பற்றிக்கொண்டு வாத்சல்யத்தோடு சொன்னான்.

'சந்தோஷம்... ஏம்பா இது நினைவு வர கொஞ்சம் நேரம் ஆச்சுபோல.'

'யார் சொன்னது? நீங்க கோவில்லே இருந்து வரும்போதே யார்னு தெரிஞ்சுடுத்து. அக்காதான் ஜாடை காட்டி அப்புறம் பேசுன்னுட்டாங்க... உங்களுக்கு தெரியாது... பனிரெண்டு வருஷம் முந்தி... அப்போ தெருவிலே எங்க எல்லோருக்கும் நீங்க ஹீரோ, அக்கா ஹீரோயின்...'

ரத்னா அடக்க முடியாமல் சிரிக்க அவனும் நானும் கையோடு கை என்று உயர்த்தித் தட்டிக்கொண்டோம்.

இந்த மகிழ்ச்சியைக் கொடுத்த துரைசாமிக்கு நன்றி சொல்லிக் காசு கொடுக்க, வாங்கமாட்டேன் என்று அவன் உறுதியாகச் சொல்லிவிட்டான்.

இந்தக் கணங்கள் எனக்கும் ரத்னாவுக்கும் சொந்தமானவை. அவள் இல்லாமல் இதெல்லாம் நடந்திருக்குமா? ரத்னா இல்லாத கும்பகோணத்தில் எனக்கு என்ன வேலை? ஒரு பலகீனமான நேரத்தில் அவளை எப்படி மறந்தேன்? ஒரு நேரமா, எத்தனை தடவை வேலி தாண்டியிருக்கிறேன்.

பகல் பனிரெண்டு என்று கடியாரம் கையில் நேரம் சொல்ல, ராமாராவ் மாமா வீடு. ரத்னா மட்டன் பிரியாணியை ஒரு கை பார்க்க, நான் எதிரே உட்கார்ந்து தேங்காய்ச் சாதத்தை சாம்பார் தோய்த்து உண்டு கொண்டிருந்தேன். கோவில் பிரசாதமாகக் கொண்டுவந்தது எல்லாம் ராமாராவ் மாமாவுக்கு.

சாப்பிட்டுவிட்டு சர்வே எடுப்பு, மாமாவோடு. உதாரணம்,

'டீ போட பால் தினம் சப்ளை செய்த கோனார் எப்படி இருக்கார்?'

'அவர் பாம்பேயிலே பிள்ளையோட சௌகரியமா இருக்கார்.'

'அவர் பையன்?'

'பாம்பேயிலே டைப்பிஸ்டா இருக்கான்.'

'எதிர்வீட்டு மாமா, மாமி?'

‘மூணு பெண்ணையும் பாம்பேயிலே கல்யாணம் செஞ்சு கொடுத்திருக்கா. வருஷத்துலே மூணு மூணு மாசம் ஒவ்வொருத்தி வீட்டிலேயும், அக்டோபர்லே இருந்து டிசம்பர் இங்கே சொந்த வீட்டுலே… ஒவ்வொருத்தியும் கம்பெனி உத்தியோகம் ஸ்டெனோவாக, மாப்பிள்ளைகள் பெரிய கம்பெனிகளிலே ஆபீசர்கள்…’

‘கிழக்கே அடுத்த வீட்டில் ரிடையர்ட் போஸ்ட் மாஸ்டர்?’

‘ஜாகை எல்லாம் பம்பாய்லே. அவர் பிள்ளை…’

‘ஸ்டெனோ, டைம்ஸ் ஆஃப் இந்தியாவிலே.’ நான் நடுவில் புகுந்தேன்.

‘கரெக்டா சொன்னியேடாப்பா’ என்று மாமா அவரை விடப் பழைய பனை ஓலை விசிறியால் காற்றை விரட்டிக்கொண்டு சொன்னார்.

பம்பாய்க்கும் கும்பகோணம் துக்காம்பாளையத் தெருவுக்கும் காலம் காலமாக ஓர் உறவு இருக்கிறது. இங்கே குழந்தையாக ஜனிக்கும் போதே பிட்மனின் ஷார்ட் ஹேண்ட் புத்தகத்தைக் கையில் தொட வைத்துத்தான் பெயர் வைக்கிறார்கள். இந்தத் தெருவிலிருந்து பச்சை ட்ரங்க் பெட்டிக்குள் வைத்த டைப்ரைட்டிங் ஹையர், ஷார்ட் ஹாண்ட் லோயர் சர்ட்டிபிகேட்களோடு பம்பாய் போனவர்கள் பலருக்கும் விக்டோரியா டெர்மினஸை அடுத்து, ஃபோர்ட் பகுதியில் கம்பெனி உத்தியோகம். தாதர், மாடுங்காவில் ஒற்றை அறை குடித்தனம். அப்படித்தான் விதிக்கப்பட்டிருக்கிறது போல.

நானும் ரத்னாவும் கல்யாணம் ஆனதுமே பம்பாயில் குடித்தனம் வைத்திருந்தால் எனக்குப் புவனாவைத் தெரிந்திருக்காது. குற்ற உணர்ச்சி அவ்வப்போது எட்டிப் பார்க்கவும் வழியில்லாமல் போயிருக்கும். .

திங்கள்கிழமை காலையில் டாக்சி எடுக்கலாம் சென்னை போக என்று சொன்னால் அதெல்லாம் வேஸ்ட், ரயில் காத்தாடிட்டுப் போறது என்று அதைப் புறம் தள்ளி விட்டார் ராமாராவ் மாமா. காற்றாடிப் போவது என்றால் காலியாகப் போவது என்று அர்த்தம் கொள்ள வேணும்.

சாயந்திரம் அறையில் இருக்கும்போது ரத்னா கேட்டாள், ‘கும்பகோணத்தில் சினிமாவுக்கு போய்விட்டு வந்தால் என்ன? நாம் இங்கே மாய்ந்து மாய்ந்து காதலித்துக்கொண்டிருந்தபோது சினிமா எதுவும் போனதில்லை. அப்போது தியேட்டர் இருந்ததாகக்கூட நினைவு இல்லை. இப்போது ஒன்றுக்கு

ரெண்டாக தியேட்டர் இங்கே உண்டாம். சினிமா பார்த்து வரலாம், வாங்க ராவ்ஜி. எனக்கு சினிமா போகணும். முறுக்கு திங்கணும்...'

குழந்தை போன்ற இவளையா நான் ஏமாற்றி வேறு சம்பந்தம் வைத்துக்கொண்டேன்? யார் தவறு அது? புவனாவிடம் நான் இது தப்பு என்று எடுத்துச் சொல்லியிருக்கவேண்டாமா?

லாட்ஜ் பையனிடம் என்ன சினிமா ஆடுது என்று நான் கேட்க ரத்னா சிரிக்க ஆரம்பித்தாள்.

'ஆடலேன்னா பார்க்க மாட்டீங்களா? நடந்தா, உக்கார்ந்தா, பேசினா சினிமா இல்லையா?'

பையனுக்கு எதுவும் புரியாமல் விழிக்க, இன்னொரு லாட்ஜ் பையன், 'சார் டிக்கெட் வாங்கிட்டு வந்து தரட்டா?' என்று உதவிக்கு வந்தான்.

'டயமண்டு கொட்டகையிலே வசந்தா நடிச்ச படம் வளையாபதி.'

ரத்னா என்னைப் பார்த்து சிரித்து, ராவ்ஜி, வசந்தாவாம் என்றாள்.

'வசந்தாவுக்கு என்மேல் பயம் உண்டாகி இருக்கும். ஒரு தெலக்ஸ் புவனாவே ஆயுசுக்கும் போதும்' என்றேன் அவளிடம் மராட்டியில்.

'ரொம்ப நல்லது சார்' என்றாள் அவள்.

'இன்னொரு தியேட்டரில் விகட யோகி ஆடுது.' பையன் சொன்னான்.

'அதையே பார்ப்போம்' என்றேன்.

முகம் அலம்பி பளிச்சென்று உடுத்தி வெளியே வந்தபோது பையன் டிக்கெட்களோடு வந்திருந்தான்.

'பர்ஸ்ட் க்ளாஸ்தான் சார், துண்டு எடுத்துப் போங்க...'

'எதுக்குப்பா துண்டு? பிழியப் பிழிய அழப் போறோமா? விகட யோகி அழ வைக்க மாட்டாரே?'

'இல்லே சார், மூட்டைப் பூச்சி இருந்து உக்கார்ற இடத்திலே கடிக்கும். ரொம்ப இல்லே... ஒரு குஷன் சேர்லே ஒண்ணு ரெண்டு... சேர்லே துண்டை போட்டுட்டு உக்காரணும்...'

மூட்டைப்பூச்சிகளின் இனப் பெருக்கம், பெருகுதல்பற்றி தெரிந்தவனாக அந்தப் பையன் ‘நான் மூட்டைப் பூச்சி தொந்தரவே இல்லாமத்தான் சினிமா பார்க்கிறது’ என்றான். ஆமா, தரை டிக்கெட்டு எடுத்து மணல்லே உட்கார்ந்து பார்த்தா எந்தப் பூச்சி வரும்?

தியேட்டருக்கு நேரத்தில் போய்ச் சேர்ந்தோம். பக்திப்பாடல்கள் வரிசையாகப் போட்டார்கள். அதிலும் ஏ.டி.சுல்தான் பாடிய ‘சிந்தானந்தத்தை நேசி’ இஸ்லாமியப் பாடல் மூன்று முறை போட்டார்கள். நம்ம கரீம் பாய் தியேட்டர் என்று பக்கத்து சீட்டில் இருந்த பெரியவர் சொன்னார்.

என்னோடு டீ கொடுத்த பையன்கள் அல்லாத நடுவயது ஆசாமிகள் ஆப்பரேட்டர், தியேட்டர் மேனேஜர், டிக்கெட் கிழிப்பவர்களாக இருந்த தியேட்டர் அது. கரீம் பாய் படம் ஆரம்பித்தபோது உள்ளே ஒரு ரவுண்ட் வந்து ‘எல்லோரும் சௌக்கியம்தானே... படத்தை சந்தோஷமா பாருங்க’ என்று வாழ்த்துகிறவராக அரையிருட்டில் நகர்ந்து போனார்.

என்னை மட்டும் ‘நீ செஞ்ச காரியத்துக்கு உனக்கு சினிமா ஒரு கேடா?’ என்று முறைத்துப் போனார் அவர்.

ராச்சாப்பாடாக மங்களாம்பிகாவில் சப்பாத்தி குருமா. அந்த ருசிக்கு அடிக்கோடிட்டுக் காட்ட ராத்திரி பத்து மணிக்கு அருமையான பில்டர் காபி.

ராத்திரி, நான் தப்பு செய்து மன்னித்து விடப்பட்டவன் மனநிலையில் சும்மா கட்டிலில் உட்கார்ந்து கதவையே பார்த்துக்கொண்டிருந்தேன். ரத்னாவைத் தொடக்கூட எனக்கு அருகதை உண்டா என்று கூசினேன். எவ்வளவு பெரிய குற்றத்தை எப்படி எளிதாக எடுத்து, அதையும் கடந்து அடுத்த வினாடிக்குள் போய் விட்டாள். என்ன தேடி நான் புவனாவைத் தொட்டு அவள் உடலோடுகூட இயங்கினேன்? விலக்கப்பட்ட கனியை அனுமதி இல்லாத தோட்டத்தில் புகுந்து உண்ணும் குறுகுறுப்புக்காகவா? ரத்னாவை எப்படி படுக்கையில் இனி சந்திப்பேன்? நின்றும் அமர்ந்தும் நடந்தும் சந்திப்பதைவிட கிடந்து சந்திப்பது சிரமமானது என்று பட்டது.

அவள் ராத்திரியில் பல் துலக்கிக்கொண்டிருந்ததைப் பார்க்க மனதில் ஓர் இன்ப அதிர்ச்சி. அந்த சமிக்ஞை எனக்குப் பத்து வருடப் பழக்கம். நானும் பல் துலக்க அவள் எதிர்பார்த்ததைப் பார்வை கட்டளையிட்டது. அப்புறம்? காலையில் புத்துணர்ச்சியோடு எழுந்திருந்தோம்.

கும்பகோணம் ஸ்டேஷனில் போய் நேரே ரெண்டு செகண்ட் கிளாஸ் டிக்கெட் வாங்கினேன். ஃபாஸ்ட் பேசஞ்சர் ரயில் கிட்டத்தட்ட காலியாகவே வந்தது. ரெண்டாம் வகுப்பில் எங்களைத் தவிர யாருமில்லை.

ஃபாஸ்ட் பேசஞ்சர் என்றால் என்ன என்று டிக்கெட் சோதிக்க வந்த டிக்கெட் இன்ஸ்பெக்டரைக் கேட்டேன்.

'ஒரு ஸ்டேஷன்விட்டு ஒண்ணு இப்படி நின்னு போனா ஃபாஸ்ட் பேசஞ்சர் சார், எல்லா ஸ்டேஷன்லேயும் நின்னா வெறும் பேசஞ்சர். எங்கேயும் நிக்க மாட்டேன்னு சொல்லிட்டு கிராசிங்க், செக்கிங், ட்ராக் ரிப்பேர்னு எல்லா ஸ்டேஷன்லேயும் நின்னு, நடுவிலே அங்கங்கே பொட்டல்லேயும், அத்துவானக் காட்டிலும் நின்னு நின்னு வந்தா எக்ஸ்பிரஸ்' என்றார் அவர்.

சாயந்திரம் ஐந்துக்கு மறுபடி சென்னை எழும்பூர்.

சொல்லவிட்டுப் போனது. வண்டி புறப்படும்போது விட்டோபா அவசரமாக வண்டியோடு ஒரு நிமிடம் ஓடிவந்து அவுட்டரில் வண்டி சிக்னலுக்கு நிற்கத் தாவி ஏறி ஒரு நிமிடம் பேசி இறங்கிப் போனார். ஏப்ரலில் மகனுக்குக் கல்யாணத்துக்கு அழைக்க மெட்றாஸ் வரும்போது மீதி பேசலாமென்றார்.

'நாளைக்கு எலக்ட்ரிக் குக்கர் வாங்கலாமா?' ரத்னாவைக் கேட்டேன்.

'செவ்வாய்க்கிழமை வேண்டாம். நாளை மறுநாள் வாங்கலாம்' என்று சொல்லி விட்டாள் ரத்னா.

புதன்கிழமை.

ஃபோர்ப்ஸ் அண்ட் கேம்பெல் கம்பெனிக்கு ஃபோன் செய்தால் எங்கே கிடைக்கும் என்று தெரியும் என காலை ஆபீசுக்குக் கிளம்பும் அவசரத்தில் கேளப்பன் சொன்னார். அப்படியே பேசலாம் என்று தீர்மானித்தோம்.

ஜோசியர் வீட்டில் டெலிஃபோன் லைன் சரியில்லாவிட்டால் டெலிபோன் பூத்தில் போன் செய்து தகவல் கேட்க ரத்னா ஆவலாக இருந்தாள்.

ஆபீஸ் போய் வேலையை ஆரம்பித்திருக்க மாட்டேன். அதற்குள் என் சூப்பரிண்டெண்ட்டெண்ட் மேஜையில் ஃபோன் அடித்தது. நான் எடுக்க, ரத்னா.

‘டெலிபோன் டிபார்ட்மெண்ட்காரங்க வந்திருக்காங்க. உடனே வந்துட்டு போங்க... ஜோசியர் வீட்டிலே இருந்துதான் பேசறேன்.’

‘நான் சூபரின்டெண்ட்டெண்ட்’மா... சும்மா வரமுடியாது’

‘இதை வந்தவங்ககிட்டே சொல்லுங்க... ஃபோன் வைக்க முடியாதுன்னு போயிட்டா என்னை குற்றம் சொல்லக்கூடாது அப்புறம்’ ரத்னா பயமுறுத்தினாள்.

வீட்டுக்கு அவசரமாகத் திரும்பி வந்தேன்.

‘சார் ராமோஜி ராவ் புத்து ராவ்...’ கொண்டு வந்த காகிதத்தை என்னிடம் கொடுக்கும்போது டெலிபோன்காரர்களில் ஒருத்தர் கேட்டார்.

‘புத்து ராவ் இல்லேப்பா... பத்து ராவ்..’

‘நீங்க ஒரு ராவோ பத்து ராவோ, ஒரே ஒரு டெலிபோன் கனெக்ஷன் சாங்க்ஷன் ஆகியிருக்கு சார்... எங்கே வைக்கணும் சொல்லுங்க.’

அடுத்த அரை மணி நேரத்தில் ஒரு நான்கு இலக்க எண்ணை எனக்குச் சொந்தமாக்கி, டெலிபோனை இயங்க வைத்து, கையில் பத்து ரூபாயும் பெற்று டெலிபோன் டிபார்ட்மெண்ட்காரர்கள் போனார்கள்.

ரத்னா முதல் டெலிபோன் செய்ய உத்தேசித்தது மயிலாப்பூர் கபாலீஸ்வரன் கோவிலுக்கு. கோவிலில் டெலிபோன் இருக்குமா என்று எனக்கு சந்தேகம் வரவே, அடுத்து ஜோசியர் வீட்டுக்கு ஃபோன் செய்ய உத்தேசித்தாள். அங்கே லைன் டெட் ஆக இருக்கக் கூடும்.

‘வேறு யாருக்கு போட?’ ரத்னா கேட்டாள்.

‘எங்கள் ஆபீஸ்.’ அமுத்தலாகச் சொன்னேன்.

நான் டெலிபோனில் பேசி, ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டேன். சௌகரியமாக டெலிபோன் வேலை முடிந்தால் போதுமா. டெஸ்ட் பண்ண வேண்டாமா?

‘எலக்ட்ரிக் குக்கர் கம்பெனி போர்ப்ஸ் அண்ட் கேம்பெலுக்கு போன் பண்ணலாமே’ என்றேன் ரத்னாவிடம். புது டெலிபோன் வந்தவர்களுக்கு ஐந்து நிமிடத்துக்கு ஒருமுறை யாருக்காவது நம்பர் சுழற்ற அடங்காத ஆர்வம் வருவதுபோல் ரத்னாவும் உடனே தொலைபேச முற்பட்டாள்.

நிசப்தம் அந்தப் பக்கம். இரண்டு நிமிடம் பொறுக்கச் சொல்லி இரண்டு டெலிபோன் எண்களைக் குறித்துக்கொள்ளச் சொன்னதை உடனே கடைப்பிடித்தாள் ரத்னா.

மவுண்ட் ரோடில் ஆயிரம் விளக்கு மசூதி பக்கம் ஒரு கடையும், ஹிக்கின்பாதம்ஸ் அருகே இன்னொன்றும் ஹீட்டர் விற்கின்றனவாம். ரட்டன் பஜாரில் இன்னொன்று உண்டாம்.

‘அது ஏன் பத்திரிகையிலே எலக்ட்ரிக் குக்கர் விளம்பரத்தை இவ்வளவு கோரமா படம் போட்டு வெளியிடறீங்க? வாங்கணும்னு நினைக்கறவங்களையும் வாங்க விடாம துரத்திடும்... அதுக்கு பதிலா புதுசா சினிமா ஸ்டார் படமும் பக்கத்திலே குக்கர் படமும் போட்டுப் பாருங்க... நம்ம தெலக்ஸ் புவனா மாதிரி அழகான நடிகை படம் போட்டா விற்பனை பிச்சுக்கிட்டு போகும்... செய்யறீங்களா?’

இலவச விற்பனை ஆலோசனை தந்த மனநிறைவோ, அல்லது பக்கத்தில் நின்ற என்னைக் கிண்டல் செய்த நிறைவோ, அவள் கண்கள் சிரித்தபடி இருந்தன. இருக்கட்டும். ரத்னா மகிழ்ச்சியாக இருந்தால் போதும்.

டாக்சி வைத்துக்கொண்டு மவுண்ட் ரோடு கிளம்பி விட்டோம். வாசல் கதவைப் பூட்டி, ஒரு தடவைக்கு நாலு தடவையாக நான் பூட்டை சரிபார்த்துவிட்டு வந்தபோது, கதவையே தூக்கிப் போயிடலாமே என்றாள் ரத்னா.

ஹிக்கின்பாதம்ஸ் பக்கத்துக் கடையில் எட்டு குக்கர்கள் வைத்திருந்தார்கள். நிறைய விற்கிறது என்றார்கள். இது ஒரு குக்கர் இருந்தால் போதும், விறகு, மண்ணெண்ணெய், ரம்பத்தூள் என்று எந்தச் செலவும் இல்லை என்று விளம்பரம்போல் சொன்னார்கள். ‘விறகு லாபம், சமய லாபம், பண லாபம், வறுக்கிறது வேகவைக்கிறது பொறிக்கிறது எதுவும் ஒரு செகண்டில் செய்யலாம்’ என்று விற்பனையாளரான பாதித் துரைகள் நாட்டியமாடினர்.

‘விலை நாற்பத்து மூணு லெஸ் இருபது பெர்செண்ட் டிஸ்கவுண்ட் போக முப்பத்துநாலரை ரூபாய்தான்... கொள்ளை மலிவு... போனால் வராது...’ கொத்தவால் சாவடிக்கு டை கட்டிக் கூட்டி வந்தமாதிரி ரெண்டு கடையிலும் எலக்ட்ரிக் குக்கருக்கு கூவல்.

வீட்டுக்கு கொஞ்சம் போல பக்கம் என்று ஹிக்கின்பாதம்ஸ் கடையில் குக்கர் வாங்கியானது.

‘சார், டெஸ்ட் பண்ணி வீட்டுலே டெலிவரி பண்றேன். நாளைக்குக் காலை பத்து மணிக்கு மேலே ஆளனுப்பறேன். அவர் எலக்ட்ரிக் குக்கர்லே சமைக்க டெமான்ஸ்ட்ரேஷன் கொடுப்பார்.’

பணம் கட்டிய ரசீதோடு வீடு வந்தபோது, ‘இதில் எத்தனை கலர் வரும் என்று கேட்க மறந்து போச்சே’ என்றாள் ரத்னா. ஃபோன் எதுக்கு இருக்கு?

இரண்டு பேருக்கும் ஒரே சமயத்தில் நினைவு வர, ரசீதில் ஷோரூம் டெலிபோன் நம்பர் பார்த்து டெலிபோன் செய்யும்போது, அமர்க்களமான மேட்டிமைக் களை ரத்னா முகத்திலும் குரலிலும் வந்திருந்தது.

‘ஒரே கலர்தான் இருக்கு மேடம், நீலமும் வெள்ளையும் கலந்தது. ஓகே மேடம், காலையிலே போன் பண்ணிட்டு வரோம். சரி மேடம், உங்க டெலிபோன் நமபர் கொடுங்க. சரி மேடம், தேங்க்ஸ் மேடம்.’

இத்தனை ‘மேடம்’ அவளுக்கு மரியாதை சூட்ட டெலிபோனில், அதுவும் ரெண்டே நிமிடத்தில் வந்து சேர்ந்ததை ரத்னா வெகுவாக ரசித்தாள்.

நான் நாளைக்கு குக்கரை இயக்கி வைக்கும்போது எலக்ட்ரீஷியனை வரச் சொல்லணுமா என்று கேட்க போன் செய்தபோது, ‘வேணாம்யா நாங்களே பாத்துப்போம்’ என்று யாரோ என்னை அய்யா விளியில் குறிப்பிட்டது நெஞ்சை ரணமாக்கியது. ரத்னாவுக்காகப் பொறுத்துக் கொண்டேன்.

என்னமோ நினைத்துக் கொண்டதுபோல புவனி வீட்டுக்கு சும்மா போன் செய்து பார்க்கச் சொன்னேன் ரத்னாவை. ஒரு புன்சிரிப்பு. நளினமாக விரல்களை நீட்டி எண்ணைச் சுழற்ற அவள் முகத்தில் பெரிய சிரிப்பு.

‘புவனா... நல்லா இருக்கீங்களா?... நம்ம வீட்டுலே இருந்துதான் பேசறேன்... புது டெலிபோன் வந்திருக்கு நம்பரை குறிச்சுக்குங்க... எட்டு ஆறு... சிங்கப்பூர் எல்லாம் எப்படி இருக்குது? நம்ம சாப்பாடு கிடைக்குதா? கும்பகோணம் போய்ட்டு வந்தோம்... ராவ்ஜி கிட்டே பேசறீங்களா?’

ஃபோனை என்னிடம் கொடுத்துவிட்டு ஒரு வினாடி என்னையே பார்த்திருந்தாள். நான் ஹலோ என்று சொல்ல, அவள் உள்ளே போனாள். அந்த நாகரிகம் என்னை நெகிழச் செய்தது.

‘புவனி... சிங்கப்பூர் என்ன ஆச்சு?’ புவியை விசாரித்தேன்.

‘பாதி ஷெட்யூல் முடிச்சாச்சு. ஹீரோவுக்கு காய்ச்சல் வந்து... அது டைபாயிட்னு இப்போதான் தெரிஞ்சுது. பம்பாய்லே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் அட்மிட் பண்ணியிருக்காங்க... ஷூட்டிங் கான்சல். இன்னிக்கு மதியம்தான் வந்தேன்.’

சட்டென்று குரல் தாழ்த்தினாள். ‘ராம், ஒண்ணு பேசலாமா?’

‘நானே பேசணும்னு இருந்தேன்...’ என்றேன்.

‘ராத்திரி பத்து மணிக்கு ஃபோன் செய்யட்டா...?’ எனக் கேட்டாள்.

‘இல்லே நாள் நாளைக்கு...’ மென்று முழுங்கினேன்.

போன் அந்தப் பக்கம் டொக்கென்று வைத்த சத்தம்.

‘என்ன, புவி பேச மாட்டேனுடுத்தா ராஜா?’ ரத்னா தோசை வார்த்த படியே கேட்டாள். ‘பாவம், அலைச்சல்லே இருந்திருப்பா... ரெஸ்ட் எடுக்கட்டும்...’

‘ஜோ பஜோ ஹரி கோ சதா’ என்று சமையலறையில் இருந்து ரத்னா குரலில் மராத்தி அபங்க் பொங்கிப் பிரவகித்து வீட்டை நிரப்ப, எல்லாம் மறந்தேன்.

காலையில் குக்கரை எடுத்து வரும்முன் குடையைத் தோளில் மாட்டியபடி வந்த எலக்ட்ரீஷியன் மணவாள நாயுடு, ‘வீட்டுக்குள் எர்த் செக் பண்ணிட்டீங்களா? ப்ளக் பாயிண்ட் எல்லாம் சரியா இருக்கா? பவர் சாக்கெட் லோடு தாங்குமான்னு பார்த்தாச்சா? பார்க்காம குக்கரை ஆன் பண்ணினா ப்யூஸ் போயிடுமே’ என்று தொழில் வார்த்தைகளை சரமாரியாக உதிர்த்தார்.

‘நாயுடு, அதெல்லாம் ஷோரூம்காரங்க பார்த்துப்பாங்க. வந்து பார்த்துட்டு ஏதாவது சொன்னா நாம மாத்திக்கலாம்’ என்று நைச்சியமாகச் சொன்னேன்.

‘சரி என்னமோ சொல்றீங்க... நல்லா நடக்கட்டும்... தச்சிலாவை பார்த்தேன்... உங்களை ரொம்ப விசாரிச்சதா சொல்லச் சொன்னா’ என்று ரத்னா முன்னிலையில் சகஜமாகச் சொல்லி காப்பி குடித்துப் போனார். ஒரு வழியாக உருவாகவிருந்த சிறு சூறாவளியைச் சமாளித்தேன்.

பத்தரை மணிக்கு ஷோரூம்காரர்கள் வந்து எலக்ட்ரிக் குக்கரை எங்கே வைக்கிறது என்று கேட்டது முதல் ஆபீஸில் எனக்கு ஃபோனில் தொடர்ந்து நியூஸ் வந்துகொண்டே இருந்தது.

சமையல்கட்டில் நிறுவ கஷ்டம் என்பதால் கூடத்தில் புத்தக அலமாரியை நகர்த்தி வைத்துவிட்டு அங்கே எழுதும் மேசையைப் போட்டு அதன்மேல் குக்கர் அமர்ந்ததாகத் தகவல்.

‘ப்ளக் பாயிண்ட் சரியா இல்லையாம். இப்போதைக்கு போட்டிருக்காங்க. நாளைக்கு வந்து வேறே ஒண்ணு மாட்டிடுவாங்களாம்.’

‘பத்து நிமிஷத்திலே அரிசி வெந்துடுத்து... சாம்பார் அஞ்சு நிமிஷத்திலே ரெடி. அப்பளம் பத்து நிமிஷத்திலே ரெடி.’

கிண்டி ரேஸில் முந்தி வரும் குதிரைபற்றி மைக்கில் அறிவிக்கிறது போல் தகவல் தொடர்ந்துகொண்டிருந்தது. ஆபீஸில் மின்சாரம் இல்லாமல் வியர்த்து விறுவிறுத்து, தலைவலிபற்றிப் படர்ந்து கொண்டிருந்தது எனக்கு.

சாயந்திரம் வீட்டுக்கு வந்தபோது வாசலில் புவனாவின் கார் நிற்பதைக் கண்டேன். என்னைப் பார்க்க வந்தாளா? ரத்னாவையா?

ரத்னாவும் புவனியும் சகல சந்தோஷத்தோடும், நிம்மதியோடும், ஆர்வத்தோடும் கதவைச் சார்த்தி வைத்துவிட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

‘என்னங்க, புவி எனக்கு சிங்கப்பூர்லே என்ன வாங்கிட்டு வந்திருக்காங்க பாருங்க...’

பார்த்தேன். புடவைகள். செண்ட். சாக்லெட்.

‘ரொம்ப நல்லது மை டியர் லேடீஸ். புவனா தேங்க்ஸ் அண்ட் வெல்கம் ஹோம்... எனக்கு தலைவலி அதிகமா இருக்கு... கொஞ்சம் காப்பி கிடைக்குமா?’

யாரோடும் பேசாமல் ஒரு முப்பது நிமிடம் படுத்து எழுந்திருக்க வேணும்போல் இருந்தது.

‘இப்போதான் காப்பி போட்டேன். நாங்க குடிச்சு, பாக்கி இருக்கு. கொஞ்சம் ஆறிப் போயிருக்கு. ஹீட்டர்லே சூடாக்கித் தரேன்.’

ரத்னா பெருமையோடு காட்டிய ஹீட்டரை அல்லது குக்கரை பார்த்தேன்.

அவள் உள்ளே போனபோது புவனியின் கண்கள் என்னை ஊடுருவிப் பார்த்தன. எனக்கு அதன் அர்த்தம் தெரியும். அந்த உறவு இனி இல்லை என்று அவளிடம் எப்படிச் சொல்லப் போகிறேன்? எப்போது சொல்லப் போகிறேன்?

‘அப்புறம் முக்கியமான விஷயம் ஒண்ணு..’

சொல்லியபடி அவள் மறுபடி என்னைப் பார்த்தாள். உள்ளே இருந்து காபிப் பாத்திரத்துடன் வந்த ரத்னாவையும் அவள் பார்வை ஆட்கொண்டது.

‘சுவிட்ச் போடணுமா? நான் போடறேன் அக்கா.’

கைப்பையில் இருந்து எதையோ எடுக்கப்போன புவனா அதை மீண்டும் உள்ளே வைத்தபடி எழுந்தாள். அவளைக் கையமர்த்தி நான் பண்றேன் என்று நடந்தாள் ரத்னா.

குக்கர் மேல் காபி பாத்திரத்தை ரத்னா வைத்து ப்ளக்குக்கு அடுத்திருந்த சுவிட்சை ஆன் செய்தாள்.

ஓவென்று பெருஞ்சத்தம். ரத்னா தலை சுவரில் பலத்த சத்தத்தோடு முட்ட விழுந்து கிடக்க, ப்ளக் பாயிண்டில் வெளிச்சம். ஃப்யூஸ் போய் வீட்டில் இருட்டு.

ரத்னா ரத்னா என்று சாவி கொடுக்கப்பட்ட பொம்மைபோல் பிதற்றியபடி நின்றேனே தவிர அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை.

அடுத்த பத்தாம் நிமிஷம் கேளப்பன் ஃபோனில் பேசி நாயர் டாக்டரை உடனே வரச் சொன்னார். தொடர்ந்து, ஆம்புலன்சுக்கு ஃபோன் பண்ண, ப்யூஸ் போனதை சரியாக்க மின்சார இலாகாவுக்கு ஃபோன் பண்ண என்று அவரும் விலாசினியும் பரபரப்பாகச் செயல்பட, நானும் புவனாவும் மலங்க மலங்க விழித்தபடி ரத்னா பக்கத்தில் நின்றோம்.

அவளுக்கு நினைவு இருந்தது. என்றாலும் தலையில் இருந்து ரத்தம் பெருக்கெடுத்துக்கொண்டிருந்ததைத் திகிலுடன் பார்த்தோம்.

‘ரத்னாக்கா கண்ணைத் திறந்து பாருங்க...’ புவனா திரும்பத் திரும்ப கூப்பிட்டாள்.

நாயர் டாக்டர் வந்து உடனே ஆம்புலன்சும் வர, அடுத்த பத்து தினம் ஆஸ்பத்திரி, வீடு, ஆஸ்பத்திரி, வீடு என்று பரபரப்பாகப் போனது.

ரத்தச் சேதம் என்பதால் ரத்னாவின் ப்ளட் க்ரூப் ரத்தமான ஏபி பாசிடிவ் உடனே வேணும் என்று ஆஸ்பத்திரியில் சொல்லிக் கேட்டார்கள். ஏபி பாசிடிவ் அங்கே யாருமில்லை என்று ஒருவர் ஒருவராக டெஸ்ட் பண்ணித் தெரிந்தது.

நிமிஷாம்பாளையும், கற்பகாம்பாளையும், கருக்காத்த நாயகியையும் ரத்னாவுக்கு உடனே குணமடைய ஆஸ்பத்திரியில் ரத்னா பெட் பக்கம் நின்று நான் உருகிப் பிரார்த்தனை செய்தபோது புவனாவும் சேர்ந்து கொண்டாள்.

கூட்டம் போட வேண்டாம் என்று டாக்டர் என்னை மட்டும் வெளியே போகச் சொன்னார். கேளப்பனும் விலாசினியும் அங்கே பொறுமையாகக் காத்திருந்தார்கள். மனிதர்கள். மனதில் கசடில்லாதவர்கள்.

ஓ பாசிட்டிவ் ஆன நான் ரத்தம் தர முன்வந்தேன்.

'கொஞ்சம் வெயிட் பண்ணலாம் சார்... ரத்தப் போக்கு நின்னிருக்கு... ஏபி பாசிடிவ் அதுக்குள்ளே கிடைக்குதான்னு பார்க்கலாம்... மத்த ஆஸ்பத்திரிகளுக்கும் ஃபோன் போட்டிருக்கார் டாக்டர் நாயர்.'

அப்போது லாபரட்டரியில் புவனாவும் ஏபி பாசிடிவ் என்று அறிவித்தார்கள். 'நான் ரத்தம் தர்றேன் ரத்னா அக்காவுக்கு...' என்று உடனே முன்வந்தாள் புவனா.

அந்த நீண்ட இரவு முடியும்போது ரத்னா ரத்தம் செலுத்தப்பட்டு, ரத்தப்போக்கு நின்றுபோய், இனி அபாயமில்லை கட்டத்துக்கு வந்திருந்தாள். அந்த ராத்திரியிலும் டாக்டர் லட்சுமி வந்து பார்த்து விட்டு கவலைப்பட ஒன்றுமில்லை என்று நல்ல வார்த்தை சொல்லிப் போனாள்.

ரத்தம் கொடுத்துவிட்டு ஓய்வெடுத்துக்கொண்டிருந்த புவனா, ரத்னா கர்ப்பம் தரித்ததை டாக்டர் லட்சுமி சொல்லக் கேட்டு நிறைவாகச் சிரித்தாள். என் கையை ஆதரவாகப் பிடித்துக் குலுக்கி கைசேர்த்து வைத்துக் கண்களை மூடிக்கொண்டாள். மெல்ல விடுவித்துக் கொண்டு வாசலுக்கு வந்தேன்.

ரத்னாவுக்கோ, வயிற்றில் கருவுக்கோ எந்த பிரச்னையுமில்லாமல் அவள் ஒரு வாரத்தில் படிப்படியாகக் குணம் அடைந்தாள்.

முத்தியால் நாயக்கன் தெரு முழுக்க, கஸ்தூர்பா மாதர் சங்கத்தில் எல்லோரும் என்று ஆஸ்பத்திரிக்கு வந்து ரத்னாவின் நலம் விசாரித்துப் போனார்கள். சீஃப் சூபரிண்டெண்டெண்ட் பந்துலு சார் கூட வந்திருந்தார்.

வந்தவர்களில் ஒருவர் மணவாள நாயுடு.

'ஏன் சார் கழுதையா கத்தினேன் எர்த் சரியாக்கணும்... ஒழுங்கா கனெக்‌ஷன் கொடுக்கணும்னு... யாரோ உட்டாலக்கடி வேலை பார்த்து தங்கச்சி

உசிரையே வாங்கறமாதிரி போச்சு பாருங்க...' என்றார் நாயுடு. அவர் டை கட்டி பேண்ட் போட்டு, இப்படி வேட்டி சட்டையில் வராமல் இருந்தால் அவர் சொன்னதைக் கேட்டிருப்பேனோ என்னமோ.

ரத்னா டிஸ்சார்ஜ் ஆகி வருவதற்குள் புவனாவிடம் என் முடிவைச் சொல்ல மாம்பலம் போனேன். அவளிடம் நான் எதுவும் சொல்வதற்குள், 'எல்லாம் அக்கா டிஸ்சார்ஜ் ஆகறபோது பேசலாம்' என்று சொல்லிவிட்டாள்.

டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தது புவனாவின் காரில்தான். ஓட்டி வந்தவள் புவிதான்.

வீட்டுக்குள் ரத்னாவை இன்னும் ஒரு வாரம் படுக்கையில் இருக்கச் சொல்லிக் கட்டுப்பாடு உள்ளதால், கவனித்துக்கொள்ள டெல்லியில் இருந்து பீமாராவும், சுமித்ராவும் நாளை வர இருக்கிறார்கள்.

இன்று ராத்திரி நானும் இருப்பேன் என்று பிடிவாதம் பிடித்தாள் புவனா. பலகீனமான ரத்னாவும் நானும் அவளைக் கட்டாயப்படுத்தி அனுப்ப முற்பட்டோம்.

'இருங்க... ஏன் ராம் என்னை அனுப்பறதிலேயே இருக்கே... நான் ஒண்ணு கொடுக்கவேண்டியிருக்கே...'

அவள் கைப்பையில் இருந்து ஓர் உறையை எடுத்தாள்.

'அடுத்த மாசம் எனக்கு கல்யாணம்... பம்பாய் படம் சிங்கப்பூர்லே ஷூட் பண்றோமே அந்தப் படத்தோட டைரக்டர்தான் ப்ரைட் க்ரூம்... அவசியம் ரத்னாக்காவோட வரணும்... நான் கொடுக்கற முதல் இன்விடேஷனே இதுதான். அடுத்துதான் பந்துலு அம்மாஞ்சிக்கும் காளிங்க ரத்னம் சாருக்கும் தரணும்...'

பத்திரிகையை எடுத்து என்னிடம் நீட்டினாள். ரத்னா படுக்கையில் உட்கார்ந்தபடியே பத்திரிகையை வாங்கிப் படிக்க முற்பட்டவள் உறங்கிப்போனாள்.

'அப்போ அப்போ தூங்கிடுவாங்க... ப்ராப்ளம் இல்லே... சரியாயிட்டிருக்காங்கன்னு அர்த்தம்' என்று சொல்லியிருந்தார் டாக்டர்.

புவனா வெளிநடையில் எனக்காக நின்றாள்.

‘ராம், ரத்னாவோட அந்தரங்கமா இருக்கறபோது இதை நினைச்சுக்க. என் ரத்தம் அவளுக்குள்ளே ஓடுறது... அந்த வேளையிலே நினைவு வந்துட்டே இருக்கட்டும்... இது நிலையான உறவா இருக்கட்டும்... நம்ம மாதிரி திடீர்னு வந்து திடீர்னு உச்சம் தொட்டு திடீர்னு ஒண்ணும் இல்லாம போயிடாது... எனக்கும் நம்ம ஒரு வருட உறவு மறக்காது... நடுவிலே உன்கிட்டே சொல்லாமலேயே உன்னோட மகனையோ மகளையோ கலைச்சுட்டேன்... பம்பாய் போய்ட்டுவந்துட்டிருக்கறது இதுக்கெல்லாம் சௌகரியமா இருக்கு... போகட்டும், அதோட தம்பியோ தங்கச்சியோ இங்கே ரத்னாக்கா வயித்திலே நல்லா இருக்கட்டும். நல்லா பிறந்து விழுந்து நல்லா வளரட்டும்... இனிமேல் கலைக்க எல்லாம் தேவை இல்லே... இனி ரவீந்தர், அதான் என் உட் பி கணவர் மட்டும்தான், நான் மட்டும்தான்... அவனுக்கு உன்னை பாக்கணும்னு ஆசை... சீக்கிரம் ஒருநாள் கூட்டி வரேன்... ரத்னா அக்காவை பார்க்க வருவேனில்லே...’

எனக்கு பதில் பேச நேரம் கொடுக்காமல் புவனா வாசல் படிக்கட்டு இறங்கினாள்.

‘புவி புவி புவி...’ நான் அவள் பின்னால் போனேன்.

‘ஆமா, புவி புவி புவி இல்லே ரத்னா ரத்னா ரத்னா இதைத் தவிர வேறே எப்படி ரியாக்ட் பண்ணுவே நீ? சந்தோஷமா இரு... நல்லா சாப்பிடு... நல்ல ஃபில்டர் காப்பி குடி... சதா கிண்டலும் கேலியுமா பேசு... நல்லா இரு... வரட்டா...’ காரைக் கிளப்பினாள்.

தௌலக்ஸ் புவனா போய்விட்டாள்.

தொலைபேசி மணி அடிக்கும் சத்தம். எடுத்து ஹலோ என்றேன். அந்தப் பக்கம் யாரும் பேசவில்லை. மனக் குமைச்சலோடு ரத்னா என்று அழைத்தபடி உள்ளே போனேன்.

★★★

**இருபது**

# பின்கதை

'இன்னும் இருக்கா, இவ்வளவுதானா?' யட்சன் கேட்டான்.

'எழுதிக்கொண்டே போனால் நிகழ்ந்துகொண்டே இருக்கும். எங்கேயாவது முற்றுப்புள்ளி வைக்கவேண்டாமா?' நான் பதிலுக்குக் கேட்டேன்.

'எழுத ஆரம்பித்த ராமோஜி இல்லையே முடிக்க வந்திருப்பது?' நியாயமான கேள்வி அவன் பின்னும் கேட்டது.

ஏற்கெனவே சொன்னேனே.

இருநூறு வருஷத்தில் பத்து ராமோஜிகளாவது பிறந்து சுவாசித்திருக்கலாம். அடுத்த ராமோஜிகள் வந்துகொண்டிருக்கலாம். எல்லோருடைய ராமோஜி கதைகளும் ஒன்றாக, இது என் ராமோஜியம்.

நான் கேட்டது, பார்த்தது, கேட்டவர்களும் பார்த்தவர்களும் சொல்லக் கேட்டது என்று கலந்துவந்தது ராமோஜியம். சரித்திரப் புத்தகம் மாதிரி காலம் வரிசையாகக் கடந்துபோகும் வருஷங்களாக வரவில்லை இது.

நடந்ததும் நடக்காததும் எதெல்லாம் எனக் கேட்டால் எதுவும் தீர்மானமாகச் சொல்ல முடியாது. ஆனாலும் ஆரம்பம் முதல் கடைசி வரை ஒரு ராமோஜி உண்டு.

அப்படியே ஆகட்டும், பின்கதை சொல்லும் நேரம் இது. வா.

யட்சன் நாவல் மரக் கிளையில் ஆடியபடி அழைத்தான். கையில் பளபளவென்று நேர்த்தியான ஆரன்முள உலோகக் கண்ணாடி ஒன்றைப் பிடித்திருந்தான் அவன். காலக் கண்ணாடியாம். என்ன ஆனது என்று ஊகம் செய்யவேண்டாமாம். கண்ணாடி சொல்லி விடுமாம் ஒரு நொடியில்.

தேவைப்பட்டால் கண்ணாடி பார்க்கலாம் என்று பிடுங்கி வைத்தேன். நினைவை அசை போடுவதைவிடவா கண்ணாடியில் காலம் பார்ப்பது சுவாரசியமானது?

பட்டணம் பொடி ராமோஜி ராவ் தமிழக மாவட்டம் ஒன்றுக்கு உதவி மாவட்ட ஆட்சியாளராக உத்தியோகம் பார்த்து, இந்திரா காந்தி எமர்ஜென்சியை பிரகடனம் செய்த அதே தினம் ரிடையர் ஆனார். நெருக்கடி நிலைமையை எதிர்த்து யாராவது பேசிவிடுவார்கள் என்ற பயம் காரணமாகத் தனக்கு வழியனுப்பு விழா எதுவும் நடத்த வேண்டாம் என்று சொல்லிவிட்டார் அவர்.

சர்க்கார் மாறலாம், சர்க்கார் உத்தியோகஸ்தர் எப்போதும் சர்க்காரின் பிரதிநிதி. சர்க்காரை எதிர்க்கும் பேச்சு, எழுத்து, செயல் எதையும் ஆதரிக்கக் கூடாது என்பதில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்த ராமோஜி ராவ்ஜி 1997–நவம்பர் மாதத்தில் தன் எண்பதாம் வயதில் லண்டனில் இயற்கை எய்தினார். முதுமை சம்பந்தமான நோய்க் காரணங்களால் நிகழ்ந்த மரணம் அது.

ராமோஜி ராவ் தன் நாற்பத்தைந்தாம் வயது வரை பல இடங்களில் தொடுப்பு ஏற்படுத்தி வைத்திருந்ததாக ரகசியம் பகிரும் நண்பர்கள் கூட்டத்திலும், ஆபீசில் மதிய உணவு முடிந்து கடலை உருண்டை சாப்பிட்டபடி நிற்கும் முன்னாள் சக அதிகாரிகள் கூட்டத்திலும் கிசுகிசுக்கப்பட்டார்.

அதில் சரிபாதி உண்மையும் மீதி பொய்யும். உதாரணம் லண்டன் ஹைட் பார்க்கிலும் பிக்கடெலியிலும் ராமோஜி ராவ், மாஜி நடிகை தெலக்ஸ் புவனாவோடு கை கோர்த்துக்கொண்டு சுற்றித் திரிந்ததாக வந்த செய்திகள்.

ராமோஜி ராவின் பிரியத்துக்குரிய மனைவி ரத்னா பாய் தன் கணவர் இறப்பதற்கு நான்கு மாதம் முன் தன் எழுபத்தேழாவது வயதில் லண்டனில் மாரடைப்பால் காலமானார்.

ராமோஜி ராவ் – ரத்னா பாய் தம்பதிகளின் ஒரே மகள் சுவதந்திரா தேவி. மகளோடு அவர்கள் லண்டன் நைட்ஸ்பிரிட்ஜ் பகுதியில் வசித்து வந்தார்கள்.

சுவதந்திரா தேவி பிரபல பிரிட்டிஷ் டெலிவிஷன் நட்சத்திரம் சர் ஜேம்ஸ் ராபர்ட்சனின் மனைவியாவார். ‘நிமிஷா’ என்ற பெயரில் டார்ஜிலிங் டீ இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் நிறுவனத்தை லண்டனில் நடத்தி வருகிறார்.

சுவதந்திரா தேவியின் குடும்ப நண்பரும் பழம்பெரும் தென்னிந்திய சினிமா நடிகையுமான தெலக்ஸ் புவனி பங்கு பெற்று வெற்றிகரமாக நடந்து வரும் பிரிட்டிஷ் வர்த்தக நிறுவனம் நிமிஷா.

தமிழிலும் இந்துஸ்தானியிலும் தலா பத்து சினிமா படங்களில் கதாநாயகியாக நடித்துப் புகழ் பெற்ற புவனலோசனி என்ற புவனா தன் கணவரோடு பிரிட்டனுக்கு குடிபெயர்ந்தது இங்க்லீஷ் படத்தில் நடிக்க இல்லை.

சினிமா அலுத்துப் போச்சு என்று ஃபிலிம் ஃபேர் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்த ஜனவரி 1949-இல் லண்டனில் அவளுக்கு ராயல் ஆல்பர்ட் ஹாலில் பொறுப்பாளராக உத்தியோகம் கிடைத்தபோது.

தெலக்ஸ் புவனாவின் கணவன் முன்னாள் சினிமா டைரக்டர். லண்டன் செளத்ஹாலில் இந்தியக் கைவினைப் பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டிருந்த அவன், புவனிக்கு விவாகரத்து அளித்துவிட்டு வேறு கல்யாணம் செய்துகொண்டு மேன்செஸ்டரில் செட்டில் ஆகிவிட்டான்.

புவனி தாம்பத்தியம் அலுத்துப் போனதாகப் பேட்டி அளிக்கவில்லை என்று யட்சன் அறிவிக்கிறான்.

விலாசினி நாயர், கேளப்பன் நாயர் தம்பதிகள் மத்திய அரசு தொல்பொருள் இலாகாவிலும், தில்லி வானொலி நிலையம் மலையாள ஒலிபரப்பு பகுதியிலும் அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெற்று தில்லிக்குக் குடிபெயர்ந்தது சுதந்திரம் கிட்டியதற்கு அடுத்த ஆகஸ்டில். கேரள சமாஜத்தில் 1997 வரை சுறுசுறுப்பாக இயங்கிய இந்தத் தம்பதி அதற்கடுத்த ஆண்டு கேரளத்தில் குட்டநாடு பிரதேசத்தில் அம்பலப்புழைக்கு வெகு அருகே உள்ள ரம்மியமான கிராமமான தகழிக்குக் குடிபெயர்ந்ததாக யட்சன் அறிவித்தான்.

புரசைவாக்கத்தில் பிரசித்தி பெற்ற இடந்தலை மிருதங்க வித்வான் வேலப்ப நாயக்கர் பெண் பாடகிகளுக்கு மட்டும் பக்க வாத்தியம் வாசிப்பதாக உறுதி செய்துகொண்டு ஒரு இருபது வருஷம் சிறப்பாக டிசம்பர் சங்கீத சீசனில் மின்னி, சினிமாவிலும் இசை அமைப்பாளர்கள் கேட்டுக்கொண்டபடி அடக்கியும் குமுறியும் வாசித்து கலைமாமணி விருது வாங்கினார். பத்மஸ்ரீ விருதுக்கு சிபாரிசு அனுப்பப்பட்ட வருடம் அதற்கு முன் இயற்கை எய்தினார். அவருடைய முட்டை ஏஜன்சி இரண்டே வருடத்தில் ஊற்றி மூடப்பட்டது என்று யட்சன் அறிவித்தான்.

சீஃப் சூப்பரிண்டெண்ட்டெண்ட் பந்துலு ராஜமுந்திரியில் ரெவின்யூ டிவிஷனல் சீஃப் ஆபீசராக பதவி வகித்து ஓய்வு பெற்று சென்னை தியாகராய நகரில் சிருங்கேரி மடம் அருகே வீடு வாங்கி செட்டில் ஆனது

1962–ஆம் வருடம் பக்தவத்சலம் முதலமைச்சரான காங்கிரஸ் அரசு வந்தபோது.

அதற்கு இரண்டு வருஷம் கழித்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது அவர் வீட்டில் கல் வீசப்பட்டது. அப்போது அவர் இந்திப் பிரசார சபையில் இந்தி பிரசாரகராகக் கௌரவப் பணி புரிந்து வந்ததாகவும், அதை அப்புறம் நிறுத்தி வைத்ததாகவும் யட்சன் அறிவித்தான்.

ரத்னா பாயின் சகோதரன் பீமா ராவும் மனைவி சுமித்ராவும் கொழும்புவுக்கு இடம் மாற்றிவிட்டார்கள். அங்கே ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் பொறுப்பாசிரியராக பீமா பதவி ஏற்றபோதே எண்பது வயதில் விருப்பமிருந்தால் பதவி ஓய்வு பெறலாம் என்று சொல்லிவிட்டார்களாம். சுமித்ரா இலங்கை வானொலியில் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டாள். எண்பது வயதுக்கு மேல் இன்னும் தினமும் ஆபீஸ் போகிறார் பீமாராவ் என்று யட்சன் அறிவிக்கிறான்.

அவர்களின் மகள் பூர்ணா, டாக்டர் பூர்ணா ராவ் – சாட்டர்ஜி ஆனாள். குழந்தை மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்று கரோல்பாகில் குழந்தைகள் மருத்துவமனை திறந்திருக்கிறாள் அவள். கைராசி டாக்டர் என்ற பெயர் வாங்கிய பூர்ணாவின் மருத்துவமனையில் கூட்டம் அலைமோதுகிறது. அவளுடைய கணவர் டாக்டர் ரோபின் சாட்டர்ஜி பெயர் பெற்ற நுரையீரல் சிகிச்சை நிபுணர். யட்சன் அறிவிப்பது இது.

விட்டோபா 1960–இல் டீ ஏஜென்சியை நிர்வகித்தபடி, தொண்டையில் புற்றுநோய் கண்டு காலமானார். குடும்பம் பம்பாய்க்கு, அவர் மகனோடு குடிபெயர்ந்தது என்று யட்சன் அறிவிக்கிறான்.

முத்தியால் நாயக்கன் தெரு ஐயங்கார் டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் 1980–களின் நடுவாந்திரம்வரை சக்கைப்போடு போட்டது. அப்புறம் உலகம் முழுக்க, புரசைவாக்கம் முழுக்க, பெர்சனல் கம்ப்யூட்டர் வந்து டைப்ரைட்டர்களுக்கும் பிட்மென் சுருக்கெழுத்துக்கும் நிரந்தர ஓய்வு கொடுத்துவிட்டது.

டைப் பழக யாருமின்றி, தூசி படிந்த டைப் ரைட்டர்களின் முன்னே உட்கார்ந்து டைப் படிக்கப் போட்டிருந்த மர ஸ்டூல்கள், உடம்பு சூடு இல்லாமல் குளிர்ந்து போயிருந்தன.

பழைய ஹால்டா, ரெமிங்க்டன் டைப்ரைட்டர்களை இன்ஸ்டிட்யூட்டில் இருந்து வாரி எடுத்துப்போட்டு ஒரு மாட்டு வண்டி ஊர்ந்து போனதைத் தெருவில் யாரும் கவனிக்கவே இல்லை என்று யட்சன் அறிவித்தான்.

ராமோஜி ராவ் சென்னையில் வசித்த முத்தியால் நாயக்கன் தெருவில் மார்கழி மாதக் காலை திருப்பாவை அனுசந்தான பஜனை கோஷ்டி நாலு வீதி பாசுரம் பாடிச் சுற்றிவருவது நின்றுபோய் ஐம்பது வருடத்துக்கு மேலாகிவிட்டது. தெருவெல்லாம் குழி வெட்டி கேபிள் பதித்துக்கொண்டிருப்பதால் நடக்கவே கஷ்டமாக இருப்பதாகத் தெரிகிறது என்றான் யட்சன் காலக் கண்ணாடியைப் பார்த்தபடி.

விருந்தினர் கட்டுப்பாடு சட்டம், ஊரடங்கு உத்தரவு, உணவுப்பொருள் ரேஷன் எல்லாம் சரித்திரப் புத்தகத்துக்குள் போனதாக எழுத ஆரம்பித்தபோது யட்சன் கையைப் பிடித்து இழுத்து, பொறு என்றான்.

எழுது என்று யாராவது சொல்லக் காத்திருக்கிறேன்.

★★★

# அருஞ்சொற்பொருள்

**கப்பல் குறித்த சொற்கள்**

| | | |
|---|---|---|
| அமரம் | - | கப்பலின் பின் பகுதி |
| இடந்தலை | - | கப்பலின் இடது புறம் |
| உலவு தளம் | - | கப்பல் மேல் தளத்தில் உலவும் இடம் |
| கடல் கல் | - | கடலில் தூரக் கணக்கீட்டு அளவு (Nautical Mile) கடலில் 1 கடல் கல் = நிலத்தில் 1.15078 கல் (mile) |
| கப்பல் அறை | - | கப்பல் உயர்வகுப்பு பயணிகள் வசதியோடு தங்குமிடம் |
| கொட்டடி | - | கைதிகளை அடைத்து வைக்க ஏற்படுத்திய சிறிய சிறை |
| கொண்டி | - | கப்பலில் பொருத்தப்பட்ட கூ-வடிவ உலோக அல்லது மரத்துண்டு. கயிறுகள் இங்கே பிணைக்கப்படும் |
| கொம்மை | - | கப்பல் மேல் தளத்தின் நீட்சியான கட்டமைப்பு |

கொழு – நீட்டிக் கொண்டிருக்கும் உலோகத் துண்டு

சீப்போம்பு – கப்பலின் பாய்மரத்தின் கீழே பிணைக்கப்படும் நீளமான, கழி போன்ற அமைப்பு. கப்பலைத் திசை திருப்ப இது பயன்–படுத்தப்படும்

தீத்தாங்கி, அடிதாங்கி – சிறு கப்பல், படகுகளில் கப்பல் சுவரில், வெளியே பிணைத்த வலிமை வாய்ந்த கயறு. கப்பலுக்கு மோதல் ஏற்பட்டால் சேதம் குறைக்கும்

நோய்ப் படுக்கை – கப்பலில் நோய் கண்டவர்களை சிகிச்சைக்காக இருத்தும் இடம்

முகப்பு – கப்பலின் முகப்பு

முகப்புக்கட்டை – கப்பலின் முகப்பிலிருந்து தொங்கும் கழி போன்ற அமைப்பு. கப்பலின் பாய்–மரத்தைத் தாங்கும் கயிறு இதோடு பிணைக்கப்படும்

**பிற அருஞ்சொற்கள்**

அலமுசு – காப்பி உபசாரம்

எய்ட் த கேம்ப் – மெய்க்காப்பாளன்

ஓபிசியே – ஆபீசர் (பிரஞ்சு)

கபுறு – செய்தி, தகவல், தாக்கல்

கபே – காப்பி (பிரஞ்சு)

குரிச்சி – நாற்காலி

சியஸ்டா – சிறு பகல் உறக்கம் (ஸ்பானிய மொழி, பிரஞ்சு)

சோல்தாது – சிப்பாய் (பிரஞ்சு)

தே – டீ (பிரஞ்சு)

பான் அபிதி – நன்கு பசிக்கட்டும் (பிரஞ்சு மொழி வாழ்த்து)

பியென் மாஷெ – நிறையச் சாப்பிடுங்கள் (பிரஞ்சு)

பீரோ – அலுவலகம் (பிரஞ்சு)

முக வார்த்தை – நேரே பேசுதல்

முசியெ – திருவாளர் (பிரஞ்சு)

வயணம் – விவரம்

ராமோஜியம் / Ramojium
இரா. முருகன் / Era.Murukan ©

First Edition
ISBN: 978-81-947330-5-8
Title No: Kizhakku 1203-E

This digital edition is published in 2020 by

Kizhakku Pathippagam
177/103, First Floor, Ambal’s Building, Lloyds Road,
Royapettah, Chennai 600 014, Tamil Nadu, India.

Email: kizhakku@nhm.in | WhatsApp: 95000 45609

All rights reserved.
Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.
This is a work of fiction. Names, characters, business, events and incidents are the products of the author's imagination. Any resemblance to actual persons, living or dead, or actual events is purely coincidental.
This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher’s prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.
All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.